சிவஞான போதச்

சிற்றுரை விளக்கம்

தூத்துக்குடி

பொ. முத்தையா பிள்ளை

சைவ சித்தாந்தப் பெருமன்றம்

4, வெங்கடேச அக்கிரகாரம் சாலை,

மைலாப்பூர், சென்னை-600 004

தென் இந்தியா

உ

சிவமயம்

சிவஞான போதச்
சிற்றுரை விளக்கம்

—: :—

இதனுள்

ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனார் அருளிச்செய்த

சிவஞான போதமூலமும்

வார்த்திகப் பொழிப்புரையும்,

இவற்றிற்குத்

திருக்கைலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனத்து

மாதவச் சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த

சிற்றுரையும்

அவ்வுரைக்கு

ஷை ஆதீன சைவப்பிரசாரகர்

தூத்துக்குடி

பொ. முத்தையபிள்ளை எழுதிய

விளக்கமும் உள்ளன.

—x—

இந்நூல்

சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றச் சார்பில்

கோலாலம்பூர், சித்தாந்தப்புரவலர்,

சித்தாந்த கலாநிதி சைவபூஷணம்

திரு. R. V. கந்தையா அறநிலை

ஆதரவில் புதுப்பிக்கப்பெற்றது.

1989

விலை ரூ. 50

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

''சிவஞான போதச் சிற்றுரை விளக்கம்'' என்னும் இந்நூல் கோலாலம்பூர், சித்தாந்தப் புரவலர், சித்தாந்த கலாநிதி, சைவ பூஷணம் திரு. ஆர்.வி. கந்தையா அவர்கள் நிறுவிய அறக்கட்டளை யின் கீழ் வெளியிடப்படுகிறது.

திரு. ஆர்.வி. கந்தையா அவர்கள் மலேசியா, கோலாலம்பூரில் மிகச் சிறந்த சிவப்பணி செய்து வருகிறார். இவர் இலங்கை, யாழ்ப்பாணத்தில் காரைநகர் என்ற ஊரில் பிறந்தவர். அங்கு பரம்பரை சிவபூசை செய்யும் நற்சைவக் குடும்பத்தில் வேலுப் பிள்ளை என்பவரின் மகனாகத் தோன்றினார். காரை நகரில் ஆரம்பக் கல்வியும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் உயர்தரக் கல்வியும் பெற்றார். சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் அவர் களுடன் இளமையிலே தொடர்பு கொண்டு சைவ சித்தாந்தத்தில் ஆர்வங் கொண்டார். அன்று முதல் சமயப் பணியில் ஈடுபட்டார்.

இவர் 1918 ஆம் ஆண்டு மலேயா சென்றார். 1919 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை அரசாங்க மருத்துவமனையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார். பின்னர் சைவப் பெரியார் திரு. கா. இராமநாதன் செட்டியார், பி.ஏ.பி.எல்., அவர்கள், மலாக்கா தமிழ் அறிஞர் திரு. உ. அருணாசலம் செட்டியார், சுவாமி ஆத்மராம் அவர்கள் ஆகிய அறிஞர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும்பணி செய்தார். இளைஞர்களுக்கும் முதியோர்க்கும் சமயப் பாட வகுப்புகளை நடத்தி வருகிறார்.

அவர் கிள்ளான் அருள்மிகு சுப்பிரமணி சுவாமி ஆலயத்தின் நிருவாகக் குழுவின் தலைவராகப் பல்லாண்டுகள் பணிபுரிந்து அங்குத் தமிழ் வித்தியா சாலை நிறுவவும், ''நாவலர் மண்டபம்'' அமைக்கவும் ஆவன செய்தார்.

கோலாலம்பூரில் இலங்கை திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிக் குழுவில் 1949 ஆம் ஆண்டிலிருந்து உறுப்பினராயும், துணைத் தலைவராயும் பல்லாண்டுகள் இருந்து தற்போது தலைவராகப் பணிபுரிகிறார்.

கோலாலம்பூரில் மலாயா அருள் நெறித்திருக்கூட்டம் நிறுவிய உறுப்பினர்களில் ஒருவராக இருந்து 1967 ஆம் ஆண்டு முதல் அதன் தலைவராகத் தொடர்ந்து சிறப்புறத் தொண்டாற்றி வருகிறார். சமயச் சொற்பொழிவுகள், அந்தர்யோகங்கள், குருபூசைகள், சைவ சித்தாந்த வகுப்புகள் நடத்துவதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார்.

இவரது தொண்டைப் பாராட்டித் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ''சைவசீலர்'' என்ற பட்டத்தையும், சைவப் பெரியார் கா. இராமநாதன் செட்டியார், பி.ஏ.பி.எல்., அவர்கள் ''சைவ பூஷணம்'' என்ற பட்டத்தையும், கோலாலம்பூர் அருள்மிகு மகாமாரியம்மன் கோயிலார் ''சித்தாந்த கலாநிதி'' என்ற பட்டத்தையும் வழங்கியுள்ளனர்.

இவரது அயரா முயற்சியால் மலேயா அருள் நெறித்திருக் கூட்டம் மூன்று லட்சம் ரூபாய் நிதித்திரட்டி மதுரைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த வளர்ச்சிக்கென்று ஒரு துறை நிறுவியது.

1986 ஆம் ஆண்டு மலேயாவில் இரண்டாவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடு நடைபெறுவதற்கு அமைந்த குழுவின் தலைவராக இருந்து அரும்பணியாற்றினார். இதனைப் பாராட்டி தருமபுர ஆதீனகர்த்தா பொன்னாடை போர்த்தி ''சித்தாந்தப் புரவலர்'' என்ற பட்டம் வழங்கினார்.

இவர் தொண்டுகளுக்கு முத்தாய்ப்பு வைத்தது போல் 1987 ஆம் ஆண்டு, சைவ சித்தாந்த நூல்களை வெளியிட ஒரு இலட்சம் ரூபாயை சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றத்திற்கு வழங்கி ஓர் அறநிலை ஆவணம் பதிவு செய்துள்ளனர். இந்த ஆவணத்தின் படி அச்சில் வெளிவந்து இன்றைக்குக் கிடைக்காமல் இருக்கும் சைவசித்தாந்தத் தொடர்பான அரிய நூல்களை மறுபடியும் அச்சிட்டு வெளிக்கொணர வேண்டும். இந்நூல்களை அச்சிட்டு வெளிக்கொணரும் பணி சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றத் திற்கு அளிக்கப்பெற்றுள்ளது. சென்னை சைவ சித்தாந்தப்பெரு மன்றத்தின் தலைவர், துணைத் தலைவர்கள், செயலாளர், பொருளாளர் ஆகியோர் இந்த அறநிலையின் அறங்காவலர்கள் ஆவர். இவ்வறங்காவலர் குழு 10–5–1987 ல் கூடி திரு. பொ. முத்தைய பிள்ளை அவர்கள் இயற்றிய ''சிவஞான போதச் சிற்றுரை விளக்கம்'' என்ற நூலை அச்சிடுவது என்று முடிவெடுத்தது.

இம்முடிவை இவ்வறநிலையை நிறுவிய சைவபூஷணம் திரு. ஆர்.வி. கந்தையா அவர்களும் ஏற்றுக் கொண்டனர். அதன்படி இந்நூல் வெளிவருகிறது.

சித்தாந்தப் புரவலர், சித்தாந்தக் கலாநிதி, சைவ பூஷணம் திரு. ஆர்.வி. கந்தையா அவர்களுக்குச் சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றம் ஆழ்ந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாருக்கு நீண்ட ஆயுளையும் மற்றும் எல்லா நலன்களையும் அருளக் கூத்தப் பெருமான் திருவடிகளை வாழ்த்தி வணங்குகின்றோம். இந்நூலைக் குறுகிய காலத்தில் நல்ல வகையில் ஆப்செட் பிராசஸ் முறையில் அச்சிட்டுத்தந்த அலமு அச்சகத்தார்க்கும் நன்றி உரித்தாகுக.

இங்ஙனம் :

கோலாலம்பூர் சித்தாந்தப் புரவலர் சித்தாந்த கலாநிதி சைவபூஷணம்
திரு. ஆர்.வி. கந்தையா அறநிலையின் அறங்காவலர்கள்.

திரு. கி. இல. பழநிசுவாமி	:	தலைவர்
திரு. கொ. நீ. சிங்காரவேலு திரு. க. வடிவேலாயுதம்	:	துணைத்தலைவர்கள்
திரு. ந. ஒளியரசு	:	செயலாளர்
திரு. பி. கே. கௌரிசங்கர்	:	பொருளாளர்

சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை—4.

சிவமயம்.

சைவ சித்தாந்த நூல்கள் வெளியீட்டு அறக்கட்டளை விவரம்

மலேசியாவைச் சேர்ந்த கோலாலம்பூர், டாமன்சாரா ஹைட்ஸ் (Damansara Heights), லோரோங் காசா டாலம் (Lorong Kasah Dalam) 16 எண், கட்டிடத்தில் வசிக்கும், சித்தாந்தப் புரவலர், சித்தாந்த கலாநிதி, சைவ பூஷணம் ஸ்ரீ R. V. கந்தையா (R. V. Kandaiah) அவர்கள் முதலாவது தரப்பாகவும்,

தமிழ்நாடு சங்கப் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு பெற்றுள்ள "சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றம்" (அதன் தலைவர், துணைத் தலைவர்கள், செயலாளர், பொருளாளர் ஆகிய ஐவர் மூலம்) இரண்டாவது தரப்பாகவும் இருந்து எழுதி வைத்த அறநிலை ஆவணம் :—

1. மேற்சொல்லிய முதலாவது தரப்பினரான ஸ்ரீ R.V. கந்தையா அவர்கள் இந்த அறநிலையின் ஸ்தாபகர் (Founder) ஆவர்

மேற்சொல்லிய இரண்டாவது தரப்பினரான, சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சார்பில் அதன் சட்ட திட்டங்களின்படி அவ்வப்பொழுது தலைவர், துணைத் தலைவர்கள், செயலாளர், பொருளாளர் ஆக பதவி வகிக்கும் ஐவரும் இந்த அறநிலையின் அறங்காவலர்கள் (Trustees) ஆவர். தற்பொழுது மேற்சொல்லிய பதவி வகிப்பவர்களும் இந்த அறநிலையின் அறங்காவலர்கள் பதவியை ஒப்புக் கொண்டிருப்பவர்களுமான ஐவரின் பெயர்கள் பின்வருமாறு:—

தலைவர் : கி.இல. பழநிசுவாமி, இலட்சுமணப்பிள்ளை மகன்,
43, 5-வது குறுக்குத் தெரு, டிரஸ்ட்டபுரம்,
சென்னை-24.

துணைத் தலைவர் : கெ.நீ. சிங்காரவேலு, நீலகண்டமுதலியார் மகன், 31, இரண்டாவது குறுக்குத்தெரு,
மேற்கு சி.ஐ.டி. நகர், சென்னை-35.

துணைத் தலைவர் : க. வடிவேலாயுதம், மு.கா.சு. கணேசபிள்ளை மகன், 10, கற்பக விநாயகர் தெரு,
கிழக்கு தாம்பரம், சென்னை-59.

செயலர் : ந. ஒளியரசு, ஆர். நடராசன் மகன், 17, ரசாக் தோட்டம், சைதை, சென்னை-15.

பொருளாளர் : பி.கே. கௌரிசங்கர், ப. கண்ணப்பமுதலியார் மகன், 62, K.R. கோவில் தெரு, சென்னை-33.

2. இந்த அறநிலைக்கு "கோலாலம்பூர் சித்தாந்தப் புரவலர், சித்தாந்த கலாநிதி, சைவ பூஷணம் ஸ்ரீ R.V. கந்தையா அறநிலை" என்று பெயர் வழங்கி வருதல் வேண்டும்.

3. இந்த அறநிலையின் நோக்கங்கள் :—

அ. அச்சில் வெளிவந்து இன்றைக்குக் கிடைக்காமலிருக்கும் சைவ சித்தாந்தத் தொடர்பான அரிய நூல்களை மறுபடியும் அச்சிட்டு வெளிக் கொணர்தல்.

ஆ. அச்சிடவேண்டிய நூலைத் தேர்ந்தெடுப்பது. அந்நூலை அச்சிட அச்சகங்களில் இருந்து மதிப்பீடு பெற்று அவற்றை ஒரு குறிப்பிட்ட அச்சகத்தில் அச்சிடுவதற்கு ஏற்பாடு செய்வது. அச்சிட்ட நூலை விற்பனை செய்வது. மேற் சொல்லிய காரியங்களுக்குத் தகுதி வாய்ந்தவர்கள் அடங்கிய குழு அல்லது குழுக்களை நியமிப்பது.

இ. மேற்சொல்லிய வண்ணம் வெளியிடப்பெறும் நூல்கள் கையிருப்பாகத் தங்கிப்போய்விடாத வண்ணம் விற்பனையாகும் அளவுக்கும், குறைந்தபட்சம் எத்தனை பிரதிகள் அச்சிட்டால் வெளியீட்டு அடக்க விலையைப் பொறுத்த வரையில் சிக்கனமாக இருக்குமோ அந்த அளவுக்குத்தான் வெளியீடு செய்தல்.

ஈ. இந்த திட்டத்தின் கீழ் வெளியிடப்பெறும் நூல்களை இலாபமின்றி அடக்க விலைக்கு விற்பனை செய்வது.

உ. இந்த அறநிலையின் நோக்கங்களைக் கொண்டு தொண்டு செய்துவரும் மலாயா அருள்நெறித் திருக் கூட்டத்தினரை இந்த அறநிலையைப் பரிபாலனம் செய்யும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றம் அதன் சார்பில் இந்த அறநிலையின் அறங்காவலர்களாக இருப்பவர்கள் அரசினர் சட்ட திட்டங்களுக்குள்பட்டு முக்கிய விஷயங்களில் கலந்தும், ஆலோசித்தும் ஆவன செய்தல்.

ஊ. பின்வருமாறு ஆரம்ப மூலதனமாக இந்த அறநிலைக்கு அளிக்கப்பெற்றிருக்கும் தொகையையும் மற்றும் இனி அளிக்கப்பெறும் தொகையையும் மேற்சொல்லிய நோக்கங் களுக்காக அடியிற் குறித்த நிபந்தனைகளின்படி உபயோகித்து வருதல்.

அறநிலையின் ஆஸ்தி

இந்த அறநிலையின் நோக்கங்கள் ஈடேற ஸ்தாபகர் ஸ்ரீ R.V. கந்தையா அவர்கள் 1987 மார்ச் 31ம் தேதியில் சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றத்துக்குக் கோலாலம்பூர் யுனைட்டெட் ஏஷியன் பாங்க் டிராப்ட் மூலம் அனுப்பி வைத்து, இரண்டாவது தரப்பு டிரஸ்டிகள் பெற்றுக்கொண்ட தொகை ரூபாய் 1,000/- ஒரு ஆயிரமும் இந்த அறநிலையின் ஆரம்ப மூலதனமாகும். இனிமேல் ஸ்தாபகரும், அவரைச் சார்ந்தோரும் இந்த அறநிலைக்காகச் சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றத்துக்கு அவ்வப்பொழுது நன்கொடை யாக அளிக்கும் தொகைகளும் அவற்றின் விருத்தியாம்சங்களும் இந்த அறநிலையின் ஆஸ்தியாகும். அவை இந்தியாவில் ஸ்டேட் பாங்கி களிலோ அல்லது தேசியமயமாக்கப் பெற்ற வங்கிகளிலோ முதலீடு செய்யப்படல் வேண்டியது. இவ்விதம் அளித்திருப்பதும், இனி அளிக்கப் பெறுவதுமான தொகையிலும் அதன் விருத்தியாம்சத்தில் இருந்தும் முதல் வெளியீட்டிற்குத் தேவைப்படும் தொகையை மட்டும் வங்கிகளில் ஒரு சேவிங்ஸ் கணக்கில் வைத்துக் கொண்டு, பாக்கித் தொகையை மேற்சொல்லிய வங்கிகளில் நீண்ட காலத் தவணைக் கணக்கில் (Long Term Deposit or Fixed deposit) வைத்துவர வேண்டும். நிர்வாகப் பொறுப்பேற்றுக் கொண்ட சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் தலைவர் / பொருளாளர் ஆகிய இருவரும் மேற்சொல்லிய வங்கிக் கணக்குகளில் பற்று வரவு செய்யவும், செக்குகளிலும் டிராஃப்ட்டுகளிலும் கையெழுத்திடவும், டிபாசிட்டு களைவாங்கவும், திரும்ப முதலீடுகள் செய்யவும், அதிகாரம் இருந்துவரத்தக்கது.

முதல் வெளியீட்டுப் பிரதிகளை விற்று வரும் தொகையையும், வைப்பு நிதியின் வட்டி வருமானத்தையும் கொண்டு அடுத்த வெளி யீட்டைச் செய்வதும், வைப்பு நிதியில் இருந்து வரும் மூலதனத்தை நிரந்தரமாக வைப்பு நிதியிலேயே வைத்திருப்பதும் இந்த நூல் வெளியீட்டுத் திட்டம் என்றென்றும் நடைபெற்று வருவதற்கு

அடிப்படையானது என்பதை ஸ்தாபகரும் டிரஸ்டிகளும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

இந்த அறநிலேயில் ஒவ்வொரு ஆண்டுக்கும் உரிய தணிக்கை செய்யப்பட்ட கணக்கு நகலும் அறிக்கையும் இதன் அறங்காவலர்கள் மலேயா அருள்நெறித் திருக்கூட்டத்துக்கு அனுப்பி வரவேண்டும்.

அறநிலே காவலர்

ஸ்தாபகர் ஸ்ரீ R.V. கந்தையா அவர்கள் இந்த அறநிலையின் நோக்கங்களே நிறைவேற்றவும், பரிபாலனம் செய்யவும், இரண்டாவது தரப்பினரான சென்னே சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சார்பில் அதன் தலேவரையும், துணைத் தலேவர்களேயும், செயலாளரையும், பொருளாளரையும் அறங்காவலர்களாக (டிரஸ்டிகளாக) நியமித்து அதை மேற்படி மன்றத்தின் சார்பில் இந்த அறநிலேக்கு அறங்காவலர்களாக நியமிக்கப்பெற்ற ஐவரும் மேற்சொல்லிய மன்றத்தின் 1987ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22ஆம் தேதி கூட்டத் தீர்மானப்படிக்கு ஏற்றுக்கொண்டும் இருக்கிருர்கள்.

பொது

1. நூல் வெளியீட்டின் ஒரு சிறிய சதவிகிதப் பிரதிகளே மலேயாவில் விற்று அதில் இருந்து வரக்கூடிய தொகையைச் சென்னே சைவ சித்தாந்தப் பெருமன்றத்துக்கு இந்த அறநிலேக்காக அனுப்பி வைக்க மலேயா அருள் நெறித் திருக்கூட்டம் இசைவு தந்துள்ளது.

2. இந்த அறநிலேயையும், நோக்கங்களேயும், பணி செய்து பரிபாலனம் செய்வதையும் சென்னே சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் விதிகள் நடைமுறைகளில் சேர்த்தும், பொருத்தியும் பரிபாலனம் செய்துவரவேண்டும்.

3. இந்த அறநிலேயின் ஸ்தாபகரோ அல்லது டிரஸ்டியோ இந்த அறநிலேயை எக்காரணத்தைக் கொண்டும் ரத்துச் செய்யவும் அல்லது வேறு நோக்கங்களுக்கு ஈடுபடுத்தவும் அதிகாரம் இல்லே. ரத்துச் செய்யப்பட முடியாதது இந்த அறநிலே.

4. இந்த அறநிலேயின் நோக்கங்களுக்கு விரோத மன்னியிலும் மேற்கண்ட நிபந்தனேகளுக்கு மீருமலும் சென்னே சைவ சித்தாந்தப் பெருமன்றம் தேவையான அனைத்து காரியங்களேயும் செய்து வரலாம்.

5. அச்சிடவேண்டிய நூலைத் தேர்ந்தெடுப்பதிலும் ஒரு குறிப்பிட்ட அச்சகத்தின் மதிப்பீட்டை ஏற்றுக்கொண்டு அந்த அச்சகத்தில் அச்சிட ஏற்பாடு செய்வது விஷயமாயும், சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றம் மலேயா அருள் நெறித் திருக்கூட்டத்தை அவ்வப் பொழுது கலந்து கொண்டு செய்தல் வேண்டும்.

இங்ஙனம் சம்மதித்து இந்த ஆவணத்தில் ஸ்தாபகர் 1987 அக்டோபர் 20ம் தேதியிலும் சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சார்பில் அதன் தலைவர் / துணைத் தலைவர்கள் / செயலாளர் / பொருளாளர் ஆகிய ஐவரும் 1987 டிசம்பர் 2 ஆம் தேதியிலும் கையெழுத்திட்டிருக்கிறோம்.

ஸ்தாபகர் : (*Sd.*) R.V. Kandaiah


சாட்சிகள் : (*Sd.*) M.S. Sundaram
(*Sd.*) S.D. Namasivayam

அறங்காவலர்கள் : ,, கி.இல. பழனிசுவாமி
,, கொ.நீ. சிங்காரவேலு
,, க. வடிவேலாயுதம்
,, ந. ஒளியரசு
,, பி.கே. கௌரிசங்கர்

சாட்சிகள் : 1. (*Sd.*) C. Dhanakoti
2. ,, P. அருள்ராஜ்

உ

திருச்சிற்றம்பலம்



அறக்கட்டளையை நிறுவிய
கோலாலம்பூர் சித்தாந்தப் புரவலர்,
சித்தாந்த கலாநிதி, சைவ பூஷணம்,

திரு. R. V. கந்தையா

அவர்கள்

பொருளடக்கம்.

க—முகவுரை.

உ—உரிமையுரை.

ங—நூல்வரலாறு.

ச—நூலாசிரியர்வரலாறு.

ரு—உரையாசிரியர் வரலாறு.

சா—அதிகரணத்தொகை வெண்பாத்தொகை.

எ—வடமொழிச் சிவஞானபோதமூலமும் தமிழுரையும்.

அ—சூர்ணிக்கொத்து.

கூ—சிவஞானபோதச் சிற்றுரைவிளக்கம்.

க0—செய்யுள் முதற்குறிப்பு அட்டவணை.

கக—சூத்திரத்திற்கும் வார்த்திகப் பொழிப்புரைக்குஞ் சொல்அட்டவணை.

கஉ—இருமுறைவந்த தொடர்மொழி அட்டவணை.

கங—மதங்களின் அட்டவணை.

கச—மேற்கோள்விளக்க அட்டவணை.

கரு—முன்னோர்மொழி அட்டவணை.

கசா—வழக்கச்சொற்கள் அட்டவணை.

கஎ—அலங்கார அட்டவணை.

கஅ—இலக்கண அட்டவணை.

ககூ—தருக்க அட்டவணை.

உ0—நியாய அட்டவணை.

உக—உத்திஅட்டவணை.

உஉ—அருஞ்சொற்பொருள் அட்டவணை.

உங—அரியவிஷய அட்டவணை.

உச—பிழைதிருத்தம்.

சிவமயம்.

முகவுரை.

கடல்சூழ்ந்த இந்நில உலகின்கண் வாழும் மனிதர்கள், கடவுள் உண்டென்பாரும் இல்லை என்பாருமாக இருதிறத்தர். கடவுள் உண்டென்று சொல்கின்றவர்களும் கடவுளை நேரேகண்டு சொல்வதில்லை. அனுமானப் பிரமாணத்தால் அறிந்து சொல்லுகின்றனர். பிரத்தியட்சத்தில் அறியப்படாமையினால் கடவுள் இலக்கணத்தில் தத்தம் அறிவுக் கெட்டியவாறு பலதிறப்பட ஒவ்வொருவருங்கூறி மாறு படுகின்றனர். அதனால் சமயங்களும் அச்சமயங்களைவிளக்கும் நூல்களும் பலவாயின. பிரத்தியட்சத்தால் அறியப்படாமை கொண்டே கடவுள் இல்லையென்பார் உளராகி இல்லையென்றுவது கடவுளைப்பற்றிப் பேசவந்தமையால் உண்டென்பவரோடு ஒப்ப அவரும் ஒருசமயியென எண்ணப்படுகின்றனர். அவருக்கும் நூல் உண்டு.

இவ்வாறு பலதிறப்பட்ட சமயங்களுள், மெய்ச்சமயம் எது பொய்ச்சமயம் எது என ஆராயப் புகின், ஒவ்வொரு சமயநூல்களும் தத்தம் சமயமே மெய்ச்சமயமெனவும் ஏனைய பொய்ச்சமயமெனவுங் கூறும். இனி உண்மை உணர்தல் எவ்வாறு கூடுமெனின்,

தம் எண்ணத்திற்கு மாறுபட்ட அனுபவம் நிகழக்காண்கின்றமையால், அதனைச் செய்யும்பொருள் ஒன்று தம்மின் வேறாய் இருக்கவேண்டும், அதுவே கடவுள் என்று கடவுள் இல்லையென்பார் மதம் பொய் யென மறுத்துவிடலாம். கடவுள் உண்டென்று ஒப்புக்கொள்ளுஞ் சமயங்களுள், யாது மெய்ச்சமயமெனின்,

ஒருபொருள் தன்னை உள்ளவாறுணர்த்தச் சிறப்பாக ஒரு தன்மைஉடையதா யிருக்குமன்றிப் பலதன்மைகள் உடையதாயிராது. பொதுத்தன்மைகள் பலவாய் இருக்கலாம். அவை, தம்முள் ஒன்றோடொன்றும் சிறப்புத்தன்மையோடும் மாறுபடா.

உதாரணம்:—அக்கினிக்குச் சூடுஒன்றே சிறப்பானதன்மை. செம்மையும் தகதக என்னும் சத்தமும் பொதுத்தன்மைகள். அவை ஏனையபொருள்கட்கும் உளவாதலின் பொதுவெனப்பட்டன. அப்பொதுத்தன்மைகள், சிறப்புத்தன்மையான சூட்டோடு மாறுபடா. சூட்டிற்கு மாறுபட்டதன்மை தட்பம். அது தண்ணீருக்குச்சிறப்பு. சிறப்புத்தன்மை வேறொருபொருளில் இராது. இவ்வாறு ஒவ்வொரு பொருள்களினும் சிறப்புத்தன்மை பொதுத்தன்மையென இருதன்மைகள் உண்டு. அவற்றுள், பொதுத்தன்மைபற்றி அக்கினி செம்மையைஉடையது என்றாவது தகதகவென்னும் சத்தத்தைஉடையது என்றாவது ஒருவர்கூறின், ஏனையவற்றிற்கும் அவை பொதுவாதல்பற்றி மறுத்துவிடலாம். பொதுத்தன்மையை மாத்திரம் அறிந்தோர் சிறப்புத்தன்மையைக் கொள்ளார். அவ்விரண்டையும் அறிந்தோர் பொதுத்தன்மையை மறுக்கார்.

கடவுளுக்கும் சிறப்புத்தன்மை பொதுத்தன்மைகள் என இருதன்மைகள்உண்டு. ஏனைய பொருள்களுக்குரிய சிறப்புத்தன்மை பொதுத்தன்மைகள் வேறு; கடவுளுக்குரிய சிறப்புத்தன்மை பொதுத்தன்மைகள் வேறு. இதனை இந்நூல் ௧௭, ௪௮ ம்பக்கங்களிற்காண்க. கடவுளின் சிறப்புத்தன்மையை அறிந்தனுபவிக்கும் ஆற்றலில்லாதார் உய்தற்பொருட்டு, அவர் கருணையால் அருவம், அருவுருவம், உருவம் என்னுந் திருமேனிகள் தோன்றின. இத்திருமேனிகள் வகையால் மூன்றாயினும், உயிர்களின்பக்குவத்திற்கேற்றவாறு பலதிறப்படும். இத் திருமேனிகளெல்லாம் கடவுளுக்குப் பொதுத்தன்மை யெனப்படும். இத்திருமேனிகளையும் அறிந்து வழிபடமாட்டாதார்க்கு ஆன்மாக்களிடமாக நின்றனுக்கிரகிப்பர். அதுவும் பொதுத்தன்மையேயாம். அறிவுத் திருமேனி யொன்றே கடவுளுக்குச் சிறப்புத்தன்மை. இதுபற்றியே, “வாலறிவன்” என்றார் திருக்குறளாசிரியரும். எண்குணம் சிறப்புத்தன்மை யென்றது, சித்துத்தன்மையின் வியாபாரபேதம் பற்றியேயன்றிப் பிறிதில்லை. பொதுத்தன்மையான திருமேனிகளுள், ஒவ்வொன்றே கொள்ளுவோர் ஒருவரோடொருவர் மாறுபடுவர். சிறப்புத்தன்மையைக் கொள்ளுவோர், பொதுத்தன்மைபற்றி ஒவ்வொன்றே கொள்வானை மறுக்காது அதனையும் என்றுசொல்வர்.

ஆகவே, எந்தச் சமயமானது பிறசமயக்கொள்கைகளை இகழாது அவையெல்லாம் உயிர்களின் பக்குவத்திற்கேற்றவாறு இறைவன் கருணையினால் அமைந்துள்ளன ஆதலின் வேண்டப்படுவனவேயாம் என ஏன்றுகொண்டு அவற்றிற்கு வேறான சிறப்புத்தன்மையினையுங் கொண்டிருக்குமோ அந்தச்சமயமே மெய்ச்சமயமாம். அந்த மெய்ச்சமயந்தான் யாதெனின், சைவசமயமேயாம். அந்தச் சமய நூலே மெய்ந்நூலாகும். இக்கருத்துப்பற்றியே, "ஓதுசமயங்கள்பொருளுணருநூல்களொன்றோடொன்றொவ்வாமலுள்பலவு மிவற்றுள்-யாதுசமயம்பொருணூல் யாதிங்கென்னி னிதுவாகுமது வல்லதெனும்பிணக்கதின்றி-நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காண நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூல்" என அருணந்திசிவாசாரியரும், "இராஜாங்கத்தமர்ந்தது வைதிகசைவம் அழகிதந்தோ" எனத் தாயுமானசுவாமிகளும் அருளிச்செய்வாராயினர்.

சைவம் என்பது, சிவாத்துவிதசைவம் சிவசமவாதசைவம் முதலியவற்றிற்கெல்லாம் பொதுவாயினும், சிறப்பாகச் சித்தாந்த சைவத்தையே குறிக்கும். இச்சித்தாந்த சைவத்தின் உண்மையை இனிதுவிளக்குவது சிவஞானபோதமே.

நந்திபெருமானுக்கு ஆகமங்களிற்கூறும் பொருள் வேற்றுமை பற்றி ஐயம் நிகழ்ந்தவிடத்து அவ்வையத்தை நீக்குதற்பொருட்டுச் சிவபெருமானால் உபதேசித்தருளப்பெற்றதும் சிவஞானபோதமே. ஆகமங்களிற்கூறும்பொருள் வேற்றுமையை எ-அம் பக்கங்களிற் காண்க.

சனகாதி நால்வருக்கும் வேதவேதாந்தங்களால் தீராதமலை வைத்தீர்த்தற்பொருட்டு உபதேசிக்க எழுந்தருளிவந்த தக்ஷிணாமூர்த்தி திருக்கரத்தில் தரிக்கப்பெற்றதும் சிவஞானபோதமே.

மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அனுக்கிரகஞ் செய்தற்பொருட்டுச் சிவபெருமான் மானுடச்சட்டை தரித்துக் கைலையினின்றும் எழுந்தருளிவந்து திருப்பெருந்துறையிற் குருந்தமரத்தின்கீழ் வீற்றிருந்தருளியபோது தமது திருக்கரத்தில் தாங்கப்பெற்றதும் சிவஞானபோதமே.

சிவஞானமென்பது ஆகமத்தால் நிகழும் ஞானத்தை உணர்த்தி, ஆகமங்களின் பொருளொற்றுமையை நிர்ணயித்து உணர்த்துங் காரணத்தால் சிவஞானபோதமெனப் பெயராயிற்று. இதனை எம்பக்கத்திற்காண்க.

மாணிக்கவாசக சுவாமிகள் "செங்கைமீது - பொருத்தமுறும் புத்தகமேதையா" என்று சிவபிரானை வினவ, அப்பிரானார் "பொய்ம்மையிலாச் சிவஞானபோதம்" என்று விடையிறுக்கப்பெற்றதூஉம், "என்றலுமேசிவமேதுஞானமேதிங்கிலங்கியிடும்போதமேது" என்று வினவ, "நின்றசிவ மொன்றதனைத்தேர்தல் ஞானம் நிகழ்போதந் தேர்ந்ததனை த்தெளிதலாம்" என்று சிவபெருமான் அருளிச்செய்த பொருளோடு இங்கேகூறிய பொருள் முரணாதோஎனின், முரணாது எவ்வாறெனிற்கூறுதும்:—

சிவமாகிய ஒருபொருளைத் தேர்ந்து தெளிதல் என்பதே சிவஞானபோதம் என்பதற்குச் சிவபிரான் அருளிச்செய்தபொருள். சிவம் என்பது உபலக்கணத்தால் சிவபிரானைவிட்டுத் தனித்து நில்லாத அடிமையும் உடைமையுமாகிய பசுபாசங்களையுந் தழுவும். தேர்தலாகிய ஞானம் ஆகமங்களினாலேதான் நிகழும். தெளிதல் என்றதனாலேயே தெளியாமைக்குரியமலவு உண்டென்பது பெறப்படும். ஆகவே, பதிபசுபாசமென்னும் பொருள்களை ஆகமங்களினால் தேர்ந்து அத்தேர்ச்சியால் உண்டாகும் மலவைத்தெளிவிப்பது சிவஞானபோதம் என்றவாறாயிற்று. எனவே, சிவஞானபோதம் என்பதற்கு ஆகமங்களின் பொருளொற்றுமை உணர்த்துதல்என்று இங்கே கூறியபொருளும், சிவம் முதலியபொருள்களைத் தேர்ந்து தெளிதல் என்று திருவாதவூரடிகள் புராணத்திற்கூறிய பொருளும் ஒன்றோடொன்று முரணாமைகாண்க.

இச் சிவஞானபோதம் அனாதியே வடமொழியில் உள்ளது. இதனைத் தமிழ்நாட்டார் உய்தற்பொருட்டு அவதரித்த ஸ்ரீமெய்கண்டதேவ நாயனார் தமிழில் மொழிபெயர்த்துச் சூத்திரத்திற்குக் கருத்துரையும், சூத்திரத்தைப் பதச்சேதஞ்செய்து மேற்கோள், ஏது, உதாரணங்களும் அருளிச்செய்தனர்.

வடமொழிச் சிவஞானபோதம் இரௌரவ ஆகமத்துள் ஓர் பகுதியாதலின், மங்கலம், அவையடக்கம், அதிற்கிடையா. மூலத்

தைத் தமிழில் மொழிபெயர்த்த ஆசிரியர் அவ்விரண்டுஞ் செய்த னர். மொழிபெயர்த்துக் கருத்துரை முதலிய உரையுஞ்செய்தவர் ஸ்ரீமெய்கண்டதேவரே யென்பது, நூலின் இறுதியில்உள்ள பாயிரத் தால் இனிதுபுலனும். அப்பாயிரத்தில் மொழிபெயர்த்தாரென்பது எதனாற் பெறப்படுகின்றதெனின், நூல்உரைத்தான் என்றதனால் பெறப்படுகின்றதென்க. அதனால், தாமே புதுவதாய்ச் செய்தா ரென்று கொள்ளக்கூடாதோ எனின், கூடாது. எதனாலெனின், "எந்தைசனற்குமரனேத்தித்தொழவியல்பாய் - நந்தி யுரைத்தருளு ஞானநூல்" என்றதனாலென்க. இப்பாயிரம் செய்தவர் யாரோ எனின், ஸ்ரீமெய்கண்டதேவரேயாம். அதுஎதனாற்பெறுதுமெனின், நூலாசிரியரும் உரையாசிரியரும் இறுதியில் இன்னார்செய்த இன்ன நூல் முற்றுப்பெற்றது, இன்னநூலுக்கு இன்னார்செய்த உரை முற்றுபெற்றது எனத்தாமேகைச்சாத்திட்டுவைப்பது முற்காலத்து வழக்கம். அவ்வாறுசெய்து வைக்கவில்லையாயின், இன்னார்செய் தாரெனப் பிற்காலத்துள்ளார் அறிதல்அரிது. அவ்வாறே ஸ்ரீமெய் கண்டதேவ நாயனாரும் செய்யுளால் அருளிச் செய்திருக்கின்று ராதலானும், ஏனையோர் செய்த பாயிரம் நூலின்முகப்பிலிருப்பதே யன்றி இறுதியில் நூலுடன் சேர்ந்திருப்பதில்லை; இதுசேர்ந்திருத்த லானும், இறுதியில் இருப்பினும் பலபாயிரம் இருப்பின் எல்லாம் ஒருசேரத்தொகுத்து வைக்கப்பட்டிருக்குமேயன்றி நூலுக்கு முன் னும் பின்னுமாக வைப்பதில்லை யாதலானும், உரையாசிரியர், நூலின் இறுதிவெண்பாவின் உரையில் இப்பாயிரத்தை மேற்கோ ளாக எடுத்துக்காட்டுதலானும் பெறுதும்என்க.

மெய்கண்டதேவர் அருளிய கருத்துரை முதலியவற்றானும் நூற்பொருளை உள்ளவாறு உணர்ந்துகொள்ளுதல் அரிது ஆதலின், சிவஞானபோதப்பொருளைத் தெளிவாய் உணர்த்துதற்கென்றே அவதரித்த திருவருட்டோன்றலாகிய மாதவச் சிவஞானசுவாமி கள், சூத்திரத்திற்குப் பிண்டப்பொழிப்புரையும், மெய்கண்டதேவ நாயனார் அருளிய கருத்துரை முதலிய உரைக்குஉரையும் அருளிச் செய்தனர். இவ்வுரை சிவஞானபோதச் சிற்றுரையென வழங்குகின் றது. அஃதன்றோ பேருரையாகிய பாஷியமும் அருளிச்செய்த னர்.

வடமொழிச் சிவஞானபோதத்திற்கும் தமிழ்ச் சிவஞானபோதத்திற்கும் வேறு பலஉரைகளும் உள. அவற்றுள், தமிழ்ச் சிவஞானபோதத்திற்குப் பாண்டிப்பெருமாள் உரைஒன்றும், வடமொழிச் சிவஞானபோதத்திற்கு ஏகான்மவாதபரமானபிற்காலத்து உரைஒன்றும் அச்சில் வந்திருக்கின்றன. அச்சிற்குவாராத உரைகள்பல. அவ்வுரைகள் எல்லாம் திட்பநுட்பங்கள் செறிந்து விளங்காமையோடு பொருந்தாமையும் உடையன என்பது, சுவாமிகள் உரையில் மறுத்திருக்கின்றமைபற்றி அறியக்கிடக்கின்றது.

உரையாசிரியரென்பார், பஞ்சஇலக்கணம் தருக்கம் நியாயம் இலக்கியம் ஞானநூல் பிறமதக்கோட்பாடு முதலாயின நன்குதெரிந்தவராயிருத்தல் வேண்டும். அவ்வாறில்லாதவர் உரையாசிரியராய் வந்து உரைசெய்யினும், அவ்வுரை சிறக்காது. இதனை ஒருஉதாரணத்தில் வைத்துக்காட்டுதும் :—திருக்குறளுக்குப் பலவுரைகள் உள்ளன. அவ்வுரைகளுள், பரிமேலழகர்உரை யொன்றே இலக்கணமுதலியஎல்லாம் நிறைந்திருக்கின்றமைபற்றிச் சிறந்துவிளங்குகின்றது. ஏனையஉரைகள் அவ்வாறு திட்பநுட்பச்செறிவில்லாதன என்பது, இப்பொழுது அறத்துப்பாலுக்கும் பொருட்பாலுக்கும் அச்சில்வந்திருக்கின்ற மணக்குடவர்செய்த உரையால் இனிதுவிளங்கும். பரிமேலழகர் உரையின் சிறப்புநோக்கியே சுவாமிகள் தம் உரையில் அவ்வுரையை மேற்கோளாக எடுத்தாண்டனர். இதனை ௪0நும் பக்கத்திற்காண்க. திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரைபோலவே, சிவஞானபோதத்திற்குச் சிவஞானசுவாமிகள் அருளிய உரை எல்லாநலன்களும் சிறந்து விளங்குகின்றது. இவ்வுரைஒன்று இன்றேல், சைவசித்தாந்திகள் தம் சமயஉண்மையின் மேம்பாடும், பிறசமயங்களின் குறையும் வரையறுத்து உணரமாட்டாது மயங்குவரென்பது திண்ணம்.

இச் சிவஞானபோதம் பன்னிருசூத்திரங்களை உடையது. அவற்றுள், முன்னாறுசூத்திரம் முப்பொருள்களின் பொதுஇலக்கணங் கூறுதலின் பொதுஅதிகாரம் எனவும், பின்னாறுசூத்திரம் முப்பொருள்களின் சிறப்பிலக்கணங்கூறுதலின் சிறப்பதிகாரம் எனவும், பொதுஅதிகாரத்துள், முன்மூன்றுசூத்திரம் முப்பொருள்களின் உண்மைகூறுதலின் பிரமாணஇயல் எனவும், பின்மூன்றுசூத்திரம் அவற்றின் இலக்கணங்கூறுதலின் இலக்கணஇயல் எனவும், சிறப்

பதிசாரத்துள், முன்மூன்று சூத்திரம் அதிகாரிபும் சாதனமும் சாதிக்கு முறையுங்கூறுதலின் சாதனஇயல் எனவும், பின்மூன்று சூத்திரம் பாசவிடுதி சிவப்பேறு அப்பேறுபெற்ற சீவன்முத்தர் இயல்பு கூறுதலின் பயன்இயல் எனவும் பெயர்பெறும். இவ்வாறு இரண்டு அதிகாரங்களையும், நான்கு இயல்களையும் உடைய இந்நூலுள்,

முதற் சூத்திரம்

கண்ணாற்காணப்பட்ட உலகந்தோன்றி நின்று ஒடுங்குதலைக் கொண்டு, கண்ணாற்காணப்படாத கடவுள் உண்டென்று சாதிப்பது. இது மூன்றுஅதிகரணங்களை உடையது. அவற்றுள், முதலதிகரணம், உலகந்தோன்றி நின்று ஒடுங்காது நித்தமாய் உள்ளது எனக்கூறும் மீமாஞ்சகரையும் உலகாயதரையும் மறுத்து உலகம் முத்தொழில்உடையது எனவும், இரண்டாம் அதிகரணம், உலகம் இல்பொருளாதலின் முத்தொழிற்படுமாயினும் அதுதானே முத்தொழிற்படும்; அதுஇயல்பு; ஆதலின் அதுகொண்டு கருத்தாஉண்டென்றல்கூடாது என்னும் புத்தரையும், மாயையில்நின்று தானே தோன்றி யொடுங்குமாதலின்கருத்தா வேண்டாமென்னும் சாங்கியரையும், கருத்தாஉண்டெனினும், அக்கருத்தாவிட்டுணு பிரமன் முதலியோரில் ஒருவராதல் கூடுமென்னும் பாஞ்சராத்திரி முதலியோரையும் மறுத்து, உலகம் உள்பொருள், ஒருகருத்தாவை உடையது, அக்கருத்தா சங்காரக்கடவுள்எனவும், மூன்றும் அதிகரணம், சங்காரக்கடவுள் கருத்தாஎனினும், அக்கடவுளும் பலராதல்வேண்டுமன்றி ஒருகடவுளாதல் செல்லாதுஎன்னும் அநேகேசுரவாதிமுதலியோரை மறுத்துச் சங்காரக்கடவுள் ஒன்றேயெனவும் சாதித்தன. இச்சூத்திரத்தில், உலகம்ஒடுங்கி மீளத்தோன்றுதற்கு ஆணவமலம் நீங்காமையே ஏதுவாதலின், ஆணவமலத்தின் உண்மையும், ஒடுங்கின அவத்தையில்உள்ள சூக்குமத்தன்மைபற்றி மாயை உண்மையும்பெறப்பட்டவாறு காண்க. இதனை சக, எசம் பக்கங்களிற் காண்க.

இரண்டாஞ் சூத்திரம்

உலகத்தை இறைவன் தோற்றுவிக்குங்காலத்து எவ்வாறு நின்று தோற்றுவிப்பன் என்னும் ஆசங்கையை நீக்கும்முறையில்,

உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று தனதுசத்தியால் அவ்வுயிர்களின் இருவினைகட்கேற்பப்புதுச் சிருட்டியைச்செய்வன் எனக்கூறி, உலகத்திற்கு முதற்காரணமாகியமாயையும், துணைக்காரணங்களாகிய கன்மமும் திரோதானமாகிய திருவருளும் உண்டெனச் சாதிப்பது. முதற்சூத்திரத்தினாலேயே மாயாமலம் உண்டென்பது பெறப்படினும் அநுமானப்பிரமாணம்பற்றி இச்சூத்திரத்தும் மாயை உண்மை கூறப்படுகின்றது. இதனை அங்கம் பக்கத்திற்காண்க. இது நான்கு அதிகரணங்களை உடையது. அவற்றுள், முதலதிகரணம், உயிர்களும் முதல்வனும் அபேதம் என்னும் ஏகான்மவாதிகளையும், பேதம் என்னும் மாத்துவரையும், பேதாபேதம் என்னும் பாஞ்சராத்திரிகளையும் மறுத்து, மூன்றுமாய் நிற்பன், அவ்வாறு நிற்றலே அத்துவிதம், அத்துவிதம் என்பது இருபொருள்களின் அநன்னியம் எனவும், இரண்டாம் அதிகரணம், உலகத்தைத் தோற்றுவிப்பதற்கு மாயைகன்மங்கள் வேண்டப்படுமாயின் முதல்வன் சுதந்திரத்திற்குக் குறைவுண்டாகுமாதலால், முதல்வனே உலகமாய்த்தோன்றுவன் என்னும் பரிணாமவாதிகளை மறுத்து, மாயை கன்மங்கள் வேண்டப்படும், அதுபற்றிச் சுதந்திரத்திற்கு இழுக்கில்லையெனவும், மூன்றாம் அதிகரணம், குடம் உடைந்தவிடத்துக் குடாகாயம் மகாகாயத்தோடு கூடுமாறுபோல, உடம்பு நீங்கியவிடத்து உயிர் பிரமத்தோடுகூடுமாதலால் உயிரின்பொருட்டுப் புதுச்சிருட்டி கூடாதென்னும் கிரீடாப்பிரமவாதிகளை மறுத்து, இறந்த உயிர் மீளப்பிறக்கும், குடாகாயமகாகாயவுவமை சூக்குமதேகநீக்கத்திற்கேயன்றித் தூலதேகநீக்கத்திற்கன்று எனவும், நான்காம் அதிகரணம், வினைப்பயனை உயிர்களுக்குக் கூட்டுவிக்கும் சத்தி, முதல்வனின்வேறு என்னும் மீமாஞ்சகரையும், முதல்வனே என்னும் நையாயிகரையும் மறுத்து, முதல்வன் சத்தியுடன் ஒன்றாதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்ச் சூரியனும் அதனொளியும்போலப் பொருளால் ஒன்றாயும் தன்மையால் இரண்டாயும் நிற்பன் எனவும் சாதித்தன.

மூன்றாஞ் சூத்திரம்

உலகந்தோன்றி நின்று ஒடுங்குதல் உயிரின்பொருட்டெனக் கூறும் முறையில் காணப்பட்ட உடம்பைக்கொண்டு காணப்படாத

உயிர் உண்டென்று சாதிப்பது. இது ஏழு அதிகரணங்களை உடையது. அவற்றுள், முதலதிகரணம், இது ஆன்மா அன்று இது ஆன்மா அன்று என ஒவ்வொன்றையுங்கண்டு கழித்தவிடத்து, ஒன்றுங் காணாமையால் சூனியமே ஆன்மாஎன்னும் சூனியான்மவாதிகளையும், இரண்டாம் அதிகரணம், உடம்பின்றி அறிவு நிகழாமையால் தூலஉடம்பே ஆன்மா என்னுந் தேகான்மவாதிகளையும், மூன்றும் அதிகரணம், ஐம்பொறிகள் உடல்போற்சடமின்றி அறியுந்தன்மை உடைமையால் ஐம்பொறிகளே ஆன்மாஎன்னும் இந்திரியான்மவாதிகளையும், நான்காம் அதிகரணம், இந்திரியங்கள் ஒடுங்கின சொப்பனத்தில் அறிவு நிகழ்கின்றமையால் சூக்கும உடம்பே ஆன்மாஎன்னும் சூக்குமதேகான்மவாதிகளையும், ஐந்தாம் அதிகரணம், சுழுத்தி துரியங்களினும் பிராணவாயு இயங்கிக்கொண்டிருத்தலால் பிராணவாயுவே ஆன்மாஎன்னும் பிராணான்மவாதிகளையும், ஆறும் அதிகரணம், பிரமம் அறிவுடைப்பொருளாதலின் பிரமமே ஆன்மாஎன்னும் விஞ்ஞானான்மவாதிகளையும், ஏழாம் அதிகரணம், உடம்பு இந்திரியம் முதலியவற்றுள் ஒன்றுகுறையினும் அறிவுநிகழாமையால், யாவுங்கூடிய சமுதாயமே ஆன்மாஎன்னும் சமுதாயான்மவாதிகளையும் மறுத்துச் சூனியத்தை அறிதலினாலும், உடம்பைஎனதென வழங்கலானும், இந்திரியங்கள் ஒன்றறிந்ததை ஒன்றுஅறியாமையானும், சொப்பனத்திற்கண்டவற்றை நனவில்மயங்கி அறிதலானும், சுழுத்திதுரியங்களில் விடயங்களிடமாகவரும் இன்பத்துன்ப அனுபவம் இல்லாமையானும், உணர்த்த உணர்தலானும், யாவுங்கூடிய சமுதாயம் உடம்பெனப்படுவதேயன்றி உயிரெனப்படாமையானும், சூனிய முதலியவற்றின்வேறாய் உடம்பினுள் உயிர் உண்டென்று சாதித்தன.

நான்காஞ் சூத்திரம்

மூன்றுஞ் சூத்திரத்தால் உண்டென்று சாதிக்கப்பட்ட உயிருக்கு இலக்கணங்கூறுவது. இது மூன்று அதிகரணங்களை உடையது. அவற்றுள், முதலதிகரணம், சூனியம் முதலியன ஆன்மா அன்றாயினும், "சிந்தையைச் சீவனென்றுஞ் சீவனைச் சிந்தையென்றும்" கூறுதலால், மன முதலிய கரணங்களே ஆன்மாஎன்னும் அந்தக்கரணான்மவாதிகளை மறுத்து, அங்ஙனங்கூறுதல் உபசாரமேயன்றி உண்மையன்று ஆதலின், அந்தக்கரணங்களின் வேறாய் உயிர்

உண்டு, அவற்றேடுகூடி ஐந்தவத்தைப்படுதலே உயிருக்குத் தடத்த இலக்கணம் எனவும், இரண்டாம் அதிகரணம், உயிர், அந்தக்கரணங்களின் வேறுயின் அவற்றேடுகூடி நிற்றற்குக்காரணம் என்னையென அவர்வினவ, சகசமலத்தோடு நிற்கையில் உணர்வு நிகழாமையே காரணமெனவும், மூன்றும் அதிகரணம், அவ்வாறுயினும், அந்தக்கரணங்களைக் கூடினவிடத்து ஓரவத்தைப்படாமல் ஐந்தவத்தைப்படுதற்குக் காரணம் என்னையென அவர்வினவ, கருவிகள் கூடிப் பிரிதலேகாரணம் எனவும் சாதித்தன.

ஐந்தாஞ் சூத்திரம்

உயிரால் இந்திரியம் விடயங்களை அறிவதுபோல, முதல்வனுல் உயிர்விடயங்களை அறியும் என்றுகூறும் முறையில் பாசஇலக்கணங்கூறுவது. இது இரண்டு அதிகரணங்களை உடையது. அவற்றுள், முதலதிகரணம், புத்திதத்துவமே இந்திரியங்களால் விடயங்களை அறிந்து ஐந்தவத்தைப்படுமென்னும் சாங்கியரை மறுத்து உயிரே இந்திரியங்களால் விடயங்களையறிந்து ஐந்தவத்தைப் படுமெனவும், இரண்டாம் அதிகரணம், உயிர் முதல்வனுல் அறியுமாயின் முதல்வனும் பிறிதொன்றுல் அறியவேண்டுமாதலின், உயிர் தானே அறியும் என்னும் ஈசுரஅவிகாரவாதி முதலியோரையு மறுத்து உயிர் முதல்வனுலே அறியும் எனவும் சாதித்தன. கன்மத்திற்கேற்றவாறு உயிர்கட்கு அறிவித்தல் திரோதானசத்தியின் இலக்கணமும், கன்மத்திற்கேற்ப விபரீதவுணர்வைப் பயத்தல் ஆணவமலத்தின் இலக்கணமும், விருப்பு வெறுப்புக்களைச்செய்தல் கன்மமலத்தின் இலக்கணமும், மயக்கத்தைச் செய்தல் மாயையின் இலக்கணமும், கருவியாருயிருத்தல் மாயாகாரியத்தின் இலக்கணமும் என, அறிவிக்க அறியும்முறையில் ஐவகைப் பாசஇலக்கணங் கூறியவாறு காண்க.

ஆருஞ் சூத்திரம்

முதற்சூத்திரத்தால் உண்டென்று சாதிக்கப்பட்ட பதியின் சொரூபம் சித்து சத்து எனப் பதிக்குச் சிறப்பு இலக்கணங்கூறுவது. இது இரண்டு அதிகரணங்களை உடையது. அவற்றுள், முதலதிகரணம், பிரபஞ்சம்போல முதல்வனும் அளவைகளால் அறியப்படும் பொருளென்னும் நையாயிகரையும், அளவைகளால் அறியப்படும் பொருளும் சத்தேயென்னும் சாங்கியரையும்மறுத்து,

அளவைகளால் அறியப்படும் பொருள் அசத்தெனவும், இரண்டாம் அதிகரணம், முதல்வன் இயல்பு அறியப்படும் என்றாவது அறியப் படாதென்றாவது கூற முடியாத அநிர்வசனம் என்னும் மாயா வாதிகளை மறுத்து, அவனருளால் அறியப்படும் சித்துச் சத்து எனவும் சாதித்தன.

ஏழாஞ் சூத்திரம்

மேல் ஆறுசூத்திரங்களாற்கூறி முடித்த முப்பொருள்களுள், பதிப்பொருளை அடைதற்குரிமையுடைய அதிகாரியின் இயல்பு கூறுவது. இது மூன்று அதிகரணங்களை உடையது. அவற்றுள், முதலதிகரணம், பிரபஞ்சம் இறைவனாற் சுட்டி அறியப்படும் என்னும் சிவாத்துவிதசைவரை மறுத்துச் சத்து அசத்தை அறியா தெனவும், இரண்டாம் அதிகரணம், மனம் முதலிய கரணங்கள் சிவ கரணமாய் நின்று சிவனை அறியும் என்னும் சிவசங்கிராந்தவாத சைவரைமறுத்து, கரணத்திற்கு உள்ளதுபோலத் தோன்றும் அறிவு அதன்கண் உண்மையில் இல்லாமையால் அசத்துச் சத்தை அறியாதெனவும், மூன்றாம் அதிகரணம், ஒன்றனை ஒன்று அறியாத சத்து அசத்து இரண்டனையும் அறிவது சதசத்தாகிய உயிரெனவும் சாதித்தன. இது உயிரின் சிறப்பியல்பு உணர்த்தும் முறையில் அதிகாரியின் இயல்பு உணர்த்தியதாம். இதனை ௩௩௬ம் பக்கத் திற் காண்க.

எட்டாஞ் சூத்திரம்

பதிப்பொருளை அடைதற் குரிமையுடைய அதிகாரி செய்ய வேண்டிய சாதனமும், அதுவருவழியும், அதனாற் பெறப்படும் பயனும் இவையெனக் கூறுவது. இது நான்கு அதிகரணங்களை உடையது. அவற்றுள், முதலதிகரணம், பதிஞானமே சிறந்த சாதனம், அது சரியை கிரியை யோகங்களின் முற்றுதலானேவரும் எனவும், இரண்டாம் அதிகரணம், அந்த ஞானத்தை நம்மில் ஒருவரே குருவாய்வந்து உணர்த்துவர் என்னும் சாங்கியர் நையாயிகரை மறுத்து, முதல்வனே குருவுமாய்வந்து உணர்த்துவன் எனவும், மூன்றாம் அதிகரணம், ஐம்பொறிகளே பதிஞானத்தை விளக்கும் என்னும் சிவசங்கிராந்தவாத சைவரை மறுத்து, அவை பதி ஞானத்தை விளக்காஎனவும், நான்காம் அதிகரணம், கருவிகள் நீங் கினவிடத்து ஒருசெயலும் செய்யமுடியாது ஆதலால் அந்நிலையில்

மெய்ப்பொருளுக்கு உயிர் அடிமையாதல் இல்லையென்னும் பேதவாதசைவரை மறுத்து, அடிமையாதல் கூடும், அதுவே ஞானத்தின் பயன் எனவும் சாதித்தன.

ஒன்பதாஞ் சூத்திரம்

முத்திக்குச் சாதனமாகிய பதிஞானத்தை அநுட்டிக்குமுறை கூறுவது. இது மூன்று அதிகரணங்களை உடையது. அவற்றுள், முதலதிகரணம், பசுஞானத்தால் முதல்வனை அறிதல்கூடும் என்னும் சிவசமவாதசைவரை மறுத்து, பசுஞானத்தால் அறியமுடியாது; பதிஞானத்தினாலேயே அறியவேண்டும் எனவும், இரண்டாம் அதிகரணம், பதிஞானத்தை அடைதற்கு உபாயம் பிரபஞ்சத்தை அசத்தென்று கண்டு கழித்தலே யெனவும், மூன்றாம் அதிகரணம், பதி ஞானத்தைப்பெற்றவிடத்தும் பழையவாசனை தாக்காதிருத்தற்பொருட்டு ஸ்ரீபஞ்சாக்கரத்தைச் செபிக்கவேண்டுமெனவும் சாதித்தன.

பத்தாஞ் சூத்திரம்

ஞானசாதனத்தால் உண்டாம் பாசவிடுதியும் சிவப்பேறும் என்னும்பயன் இரண்டனுள் பாசவிடுதி கூறுவது. எட்டாஞ்சூத்திரத்துள் பயனைத்தொகுத்துக் கூறி, இச் சூத்திரத்தும் அடுத்த சூத்திரத்தும் வகுத்துக் கூறுகின்றாராதலின் கூறியது கூறலின்மையறிக. இது இரண்டு அதிகரணங்களை உடையது. அவற்றுள், முதலதிகரணம், ஞானக்கண்ணால் பதியைக்காண்டலே முத்தியென்னும் சிவசமவாதசைவரை மறுத்து, சிவபெருமானோடு ஏகமாய் நிற்கவேண்டும் எனவும், இரண்டாம் அதிகரணம், உடம்பு நிற்கும் அளவும் வினைப்பயனையும் முயற்சியினையும் நீக்குதல் கூடாமையின், அவ்விரண்டும் ஏகனாய் நிற்றற்குத் தடையாகும்; அத்தடையைக் கடக்கமுடியாது என்னும் சுத்தசைவர் முதலாயினாரை மறுத்து, இறைபணியாகிய அருள்வழி நிற்கில் அத்தடையைக்கடத்தல் கூடுமெனவும் சாதித்தன.

பதினோராஞ் சூத்திரம்

பாசம் நீங்கினும் பாசப்பற்று நீக்கத்தின்பொருட்டு இடையறாது சிவபெருமான் திருவடியைப் பற்றுதலாகிய சிவப்பேறு கூறுவது. இது இரண்டு அதிகரணங்களை உடையது. அவற்றுள், முதலதிகரணம், முதல்வன் உயிர்கட்கு அறிவிக்கும் உபகாரமேயன்றி

அறிதல் உபகாரம் செய்வதில்லை யென்பாரை மறுத்து, இரண்டு உபகாரமுஞ்செய்வன் எனவும், இரண்டாம் அதிகரணம், பாமுத்தி யில் அறிவிச்சை செயல்களின்றொழிற்பாடு இல்லை யென்பாரை மறுத்து, பெத்தமுத்தி யிரண்டினும் அத்துவிதமாய் நின்று அறி வித்தும் அறிந்தும் வரும் பேருபகாரத்தை மறவாது பத்திசெய்தலி னாலேயே நிட்டைகூடுமாதலின், முத்தியில் அம்மூன்றிற்கும் தொழிற்பாடு உண்டெனவும் சாதித்தன.

பன்னிரண்டாஞ் சூத்திரம்

சிவப்பேறுபெற்ற சிவஞானிகளாய் உடம்போடு கூடியிருக் கும் சீவன்முத்தரெனப்படுவாரது இயல்புகூறுவது. இது நான்கு அதிகரணங்களை உடையது. அவற்றுள், முதலதிகரணம், சீவன் முத்தர் முதலாவதாகச் செய்யவேண்டுவது மும்மலங்களையுங் களை தல்எனவும், இரண்டாம் அதிகரணம், இரண்டாவதாகச் செய்ய வேண்டுவது களைந்தமலங்கள் மீளப்பற்றுதவண்ணம் சிவனடியா ரோடு இணங்குதல் எனவும், மூன்றும் அதிகாணம், மூன்றுவதா கச் செய்யவேண்டுவது சிவனடியார் இணக்கம் நிலைபெறுதற் பொருட்டுத் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவன்எனவே கண்டு வழிபடுதல் எனவும், நான்காம் அதிகரணம், மேற்கூறிய வாறு செய்தல் அவசியம் எனவும் சாதித்தன.

இவ்வாறு பன்னிரண்டு சூத்திரங்களினும் அமைந்துகிடக்கும் பொருள்களைஒட்டி விரிந்துகிடக்கும் பொருள்கள்பல. அவற்றை யெல்லாம் ஆண்டாண்டு இனிதுவிளக்கி அருளிய உரையாசிரியர் சிவஞானசுவாமிகளே. வேறு எந்தஉரையினும் இந்நலங்கள் காண் டல் அரிது. இவ்வுரை திட்பநுட்பஞ்செறிந்த மதுரமான செஞ் சொற்களால் ஆக்கப்பட்டுள்ளது. இச்செஞ்சொல்நடையைக் கடுஞ் சொல்நடையெனக் கருதிப் பலர் இந்நூலாராய்ச்சியிற் பிரவேசியா திருக்கின்றனர். யாவரும் படித்து உய்தற்பொருட்டு அருளிச்செய்த இவ்வுரை, யாவருக்கும் பயன்படுதற்பொருட்டுத் தற்காலத்திற் கேற்ற எளியநடையில் அவ்வுரைக்கு உரையாக விளக்கம் ஒன்று எழுதி முடித்தேன். இவ்விளக்கத்துள், சிற்றுரையிற் சுருக்கிக் காட் டிய பலவிஷயங்களை, என்சிற்றறிவிற் கெட்டியவாறு விரித்திருக் கின்றேன். என்னுடைய சொற்களினும் விஷயங்களினுங் காணும் பிழைகளைச் சித்தாந்த சைவசீலர்களாகிய சிவனடியார்கள்,என்னைத்

தமது அடிமையாகக்கொண்டு பொறுத்து நான் திருந்துதற் பொருட்டு அவற்றை எனக்குத் தெரிவிப்பராதலானும், ஏனையோர் நான் பிரார்த்திக்கினும் புறங்கூறுதலையே மேற்கொள்வராதலானும், பிழைகளைப் பொறுக்கவேண்டுமென்று பிரார்த்தித்தல்மிகை. "அற்றமறைக்கும் பெருமை சிறுமைதான் குற்றமேகூறிவிடும்" என்பது திருக்குறள்.

செய்ந்நன்றியறிதல்.

இதனைப் பரிசோதனைசெய்து அச்சிடவேண்டுமென்றெண்ணினேன். பரிசோதனை செய்பவர்மேலே உரையாசிரியருக்குக் கூறிய இலக்கணம்முற்றும் நிரம்பினவராய் இருத்தல்வேண்டும். இன்றேல் முற்றும் பரிசோதித்தல் கூடாது. இதனையுன்னிப் பலநாள் வருந்தினேன். பின்னர், முதலாவதாக என்னோடு அளவளாவி இலக்கணவிஷயத்தில்மட்டும் பலபாகங்களைப் பரிசோதித்தவர்கள், என்னுடைய ஆப்தரும் தமிழ்க்கல்வியிலேயே தம்முடைய வாழ்நாளை அவகாசங்கிடைத்தபோதெல்லாம் உபயோகப்படுத்துகின்றவர்களுமாகிய வக்கீல் ஸ்ரீமாந், சோமசுந்தரபாரதி யவர்களே. அதன் பின்னர், இதனை அச்சிடுங்காலத்தில், இலக்கணம் முதலிய எல்லாவிஷயங்களையும் ஒருங்கே நன்குணர்ந்தவர்களும், சிவபெருமான் திருவடியில் இடையறாது கசிந்த சிந்தையையுடைய சிவனடியாரும், திராவிடமாபாடியத்தைச் செப்பமாக அச்சிட்டு உதவினவர்களும், கனவினும் பிறர்கேடு எண்ணாத பரிசுத்தமனமுடையவர்களுமாகிய ஸ்ரீமத் சுவாமிநாதபண்டிதரவர்கள், இரவும் பகலும் என்னுடன் அளவளாவி எல்லாவிஷயங்களையும் பரிசோதனைசெய்து உதவினார்கள். நாங்கள் இருவரும் எவ்வாறு ஆராயினும் சொற்பிழைபொருட்பிழை நேரக்கூடுமென்றெண்ணி, இன்னும் ஒருவர் பரிசோதித்தல் நலமாகுமென்று கருதினேன். என்கருத்திற்கிணங்கிச் சைவசமய பரிபாலனத்திற்கென்றே தோன்றிச் சித்தாந்தசைவசீலராய்வாழும் சித்தாந்தசரபம், அஷ்டாவதானம் சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள், ஒவ்வொரு பாரத்தையும் நன்குபரிசோதித்து உதவினார்கள்.

இந்நூலுக்கு இம்மூவர்செய்த உதவிகள் இந்நாடு பெரியாரை உடையது என்பதை வலியுறுத்தும். இம்மூன்று பெரியார்செய்த நன்றியை நான் என்றும் மறவேன்.

கவனிக்க வேண்டியவை.

அச்சிடுவதில் உண்டாஞ் சிரமத்தைப்பற்றி நான் எழுதுதல் மிகை. எத்தனைபேர் எத்துணைமுறைபார்க்கினும் பின்னும் பிழை இருத்தல்கூடும். ஆதலால் பிழைதிருத்தத்திற் கண்டவாறு திருத்திக்கொண்டு படித்தல்நலம். பிழைதிருத்தத்தினும் காணப்படாத பிழைகள் இருத்தல்கூடும். அவையெல்லாம் மெய்யன்பர்கள் பொறுப்பார்களாதலின் அதுபற்றியும் பிரார்த்தித்தல் மிகை.

சிற்றுரையை விளக்கி யெழுதியிருக்கின்றமையால் இதற்குச் சிவஞானபோதச் சிற்றுரைவிளக்கம் என்னும் பெயரிடப்பட்டது. இதனுள், ஸ்ரீமெய்கண்டதேவ நாயனர் அருளிய உரையாகிய கருத்துரை, மேற்கோள், ஏது, உதாரணங்களை அவ்வத்தலைப்பின்கீழும், சிவஞானசுவாமிகளருளிய உரையைச் சிற்றுரையென்னுந் தலைப்பின்கீழும், நான் எழுதியதை விளக்கம்என்னுந் தலைப்பின்கீழும் அமைத்திருக்கின்றேன். சிவஞானசுவாமிகள்வெளிப்படையென்று அருளியதற்கு ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் அருளிய உரையை அவ்வங்கே அத்தலைப்பின்கீழ் அமைத்துள்ளேன். இவ்வுரையின் கீழ் வரும் சிவஞானசுவாமிகள் உரையைச் சிற்றுரையென்னுந் தலைப்பின்கீழாக அமைக்க எண்ணினேன். கஎசு-வது பக்கம்வரை அவ்வாறு செய்ய மறந்துவிட்டமையால், கஎஎ-வது பக்கம்முதல் அவ்வாறு செய்திருக்கின்றேன். இரண்டாஞ்சூத்திரம் முதல், சூத்திரத்திற்கு அவதாரிகையும், இறுதியில் தொகைப்பொருளும், மேற்கோள் முதலியவற்றிற்கு முதற்சூத்திரம் முதல் அவதாரிகையும் எழுதியிருக்கின்றேன்.

உரிமையுரை, நூல்வரலாறு, நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறுகளும், வடமொழிச் சிவஞானபோதத்திற்குத் தமிழுரையும், நூலாசிரியர் அருளிய சூத்திரம் முதலியவற்றிற்குச்சொல் அட்டவணையும், இந்நூலில்வந்த மதங்கள், மேற்கோள்கள், அருஞ்சொற்கள், அரியவிஷயங்கள், இலக்கணம், தருக்கம், நியாயம், அலங்காரம், உத்தி, வழக்கச்சொற்களாகிய இவற்றின் அட்டவணைகளும் இத்துடன் சேர்த்திருக்கின்றேன்.

உரிமையுரையால், ஸ்ரீமாந், மெ,அரு,நா, இராமநாதஞ் செட்டியார் அவர்கள் பெருமையும், நூல்வரலாற்றால், திருவாவடுதுறை ஆதீனத்து அருளுபதேசமகிமையும், நூலாசிரியர், உரையாசிரியர்

வரலாற்றால், அவ்வாசிரியர்களின் அற்புதச்செயல்களும், வடமொழிச் சிவஞானபோதத்தமிழுரையால், ஸ்ரீமெய்கண்டதேவநாயனார் தமிழில்மொழிபெயர்த்த அருமையும் முறைமையும், ஏகான்மவாதிகள் கூறும் உரையின்தப்பும், சொல் அட்டவணையால், என்ன என்னசொற்கள் வந்திருக்கின்றன,என்பதும், ஒருசொல் பலஇடங்களில் வந்திருந்தால் அதுவும், மதஅட்டவணையால், மதங்களின் கோட்பாடுகளும், மேற்கோள் அட்டவணையால் இன்னின்ன நூல்களில்உள்ள இன்னின்ன செய்யுட்கள் வந்திருக்கின்றன என்பதும், இலக்கணம் முதலிய அட்டவணைகளால், இலக்கணம், தருக்கம், நியாயம், அலங்காரம், உத்தி முதலியவைகளும், அருஞ்சொற்பொருள் அட்டவணையால், சொல்இலக்கணம் தருக்கம் முதலியவைகளுள்வரும், அருமையான சொற்கள் தொடர்மொழிகளுக்குப் பொருளும், விஷய அட்டவணையால் அரியவிஷயங்களும், வடமொழி முதனூலை எடுத்தாண்டஇடங்களும், வடமொழி மதத்தை உபயோகப்படுத்தின இடங்களும், பிறஉரையை மறுத்த இடங்களும் இனிதுவிளங்கும்.

கடிதவிலை அதிகமான இக்காலத்தில் படிப்பவர்கட்கு உபகாரமாக இவ்வட்டவணைகளையுஞ் சேர்த்திருக்கின்றேன். அட்டவணைகள் அமைப்பதில் உண்டாம் சிரமம் இத்துணைத்தென அன்பர்கள் நன்கறிவார்கள்.

இவ்வரும் பெருங்காரியத்தைச் செய்துமுடிக்கும் ஆற்றலில்லாத சிற்றறிவுடைய சிறியேனைக் கருவியாகக்கொண்டு திருவருள் இக்காரியத்தைச் செய்து முடித்தமையால், இவ்விளக்கத்தில் நலன் காணில், அதனைத் திருவருளின்பாலும், குறைகாணில், அதனைச் சிறியேனுடைய சிற்றறிவின்பாலும் ஏற்றிப்,பெரியோர்கள் ஆதரிப்பார்களென்று நம்பிச் செய்வித்த திருவருளைச் சிந்திக்கின்றேன்.

வாழ்த்து.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

முகவுரை முற்றிற்று.

பொ. மு.

சிவமயம்.

உரிமையுரை.

பாண்டிவளநாட்டிலே, தேவலோகத்தினுஞ் சிறந்து விளங்கும் தேவகோட்டையின்கண், வைசிய குலத்தில், சிவபத்தி அடியார் பத்திகளினும், கல்விச்செல்வம் பொருட்செல்வங்களினுஞ் சிறந்து இன்சொல்லும், மலர்ந்தவதனமும், எளியார் வலியார் எவருக்கும் எப்பொழுதுந் தடையில்லாத செவ்வியும் உடையராய் வாழ்கின்ற ஸ்ரீமாந் மெ அரு. நா. இராமநாதன்செட்டியாரவர்கள், சைவாபிமானம் மிக்குடையவர்கள்; பன்னிருதிருமுறையும் தினம் பாராயணஞ்செய்யும் பாக்கியம் உடையவர்கள்; இலக்கண இலக்கியங்களை முறையாக நன்குபயின்றவர்கள்; ஒழுக்கத்திற் சிறந்தவர்கள், என்னிடத்தில் அதிகவிசுவாசம் உடையவர்கள்.

இச்சிற்றுரை விளக்கம் எழுதி முற்றுப்பெற்றதும், இவர்களைத் தேவகோட்டையில் பார்க்கும்படி திருவருள் கூட்டுவித்தது. பார்த்தபொழுது விளக்கத்தை வைத்துக்கொண்டு சிவஞானபோதச்சிற்றுரையை ஆராய்ச்சிசெய்ய விரும்பினார்கள். அவ்வாறே அவர்கள் இல்லத்தில்வைத்து ஆராய்ச்சிசெய்யத் தொடங்கினோம்.

ஆராய்ச்சி செய்யுங்காலத்து, பன்னிருதிருமுறையின் பயிற்சி விசேடத்தால், அருமையான கருத்துக்கள் வரும்பொழுது, இது இன்னதிருமுறையில் இவ்வாறு அருளிச்செய்யப்பட்டுள்ளது; இது இன்னதிருமுறையில் இவ்வாறு அருளிச் செய்யப்பட்டுள்ளது என்று அவ்வருமைத் திருவாக்குகளை எடுத்துக் காட்டுவார்கள். ஆராய்ச்சி தொடங்கிவிட்டால் பூர்த்தியாகும்வரை வியாபார சம்பந்தமான அவசரத் தந்தியைக்கூடப் பார்க்கமாட்டார்கள்.

இவ்வாறு அருமையாக ஆராய்ச்சிசெய்து பூர்த்தியானபின்னர், சிவஞானபோதத்தையும் பாராயணத்தில் வைத்துக்கொண்டு, விளக்கத்தை அச்சிடுதற்கு வேண்டும் பொருளையும் பூரணமாக உதவினார்கள். அப்பொருட்டொகை ஆயிரத்து முந்நூறு ரூபா.

இக்காலத்தில் டம்பநிமித்தமாகப் பசுபுண்ணியம் பாசபுண்ணியங்களைச் செய்யும் பிரபுக்களே மிகுதியும் உள்ளார். பதிபுண்ணியத்தைச் செய்யும் பிரபுக்கள் சிலரேயாவர்.

இப்பதிபுண்ணியமும், சிவாலயப் பிரதிட்டை, சிவாராதனை, சிவத்தியானம், சிவஞானம் என நான்குவகைப்படும். இப்பெரியார், ஸ்ரீகாளத்திநாதர்கோயிற் றிருப்பணியாலும், அப்பெருமான் ஆராதனத்திற்கு வேண்டும் நியமனத்தாலும், கலங்காத சிந்தையாற் செய்யும் நலம்பெறு தியானத்தாலும், பன்னிருதிருமுறைப் பாராயணத்தாலும் பதிபுண்ணியம் நான்கும் ஒருங்குடையவர்களாதலின், இச்சிவஞானபோதச் சிற்றுரைவிளக்கம் வெளிவரச்செய்யும் பதிபுண்ணியத்தையும் பெற்றார்கள். இச்சிவஞானதான மகிமையும், அதனைச் செய்தோர் மகிமையும், அதனாலாகும் பெரும்பேறும் சிவதருமோத்தரம் என்னும் உபாகமத்தில் விரித்துக் கூறப்பட்டுள்ளன. ஈண்டு விரிப்பிற் பெருகும். ஆண்டுக் காண்க.

ஆராய்ச்சித்திறமும், அதிதீவிரதர அன்பும், நல்லொழுக்கமும், பதிபுண்ணியச்செயலும் ஒருங்குவாய்ந்த சிவஞானச்செல்வராகிய இப்பிரபு அவர்கள் என்றும் என்னுள்ளத்திலிருக்கும் பாக்கியத்தை யான் பெற்றேனாதலின், அப்பேறுகருதி இவ்விளக்கத்தை அவர்கட்கு உரிமையாக்குகின்றேன்.

பொ. மு.

உரிமை உரை முற்றிற்று.

சிவமயம்.

நூல் வரலாறு.

வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் றிறம்.

அகண்டாகார சச்சிதானந்தப்பிழம்பாகிய சிவபெருமான் திருமேனி கொண்டு வேதாசமங்களை அருளிச் செய்யவில்லையாயின் ஆன்மாக்கள் உய்யுமா றில்லை. ஆதலின் ஆன்மாக்கள்மீதுவைத்த பெருங்கருணையினாலே சிவபெருமான் சகளீகரித்துச் சதாசிவ மூர்த்தியாய் நின்று தற்புருடமுதலிய நான்கு முகங்களினால் இருக்கு முதலிய நான்கு வேதங்களையும் ஈசானமுகமாகிய உச்சி முகத்தினால் காமிக முதலிய இருபத்தெட்டுச் சிவாகமங்களையும் பிரதம மகாசிருஷ்டி ஆரம்ப காலத்திலேயே தோற்றுவித் தருளினார்.

வேதம் என்னுஞ் சொல் அறிதற்கருவி எனப் பொருள்படும். படவே, பதி, பசு, பாசம் என்னு முப்பொருள்களையும் அறிதற்குக் கருவியாயுள்ளது என்பது கருத்து.

ஆகமம் என்பது பரமாப்தரினின்றும் வந்தது எனப்பொருள் படும். இன்னும், ஆ என்பது பாசம் எனவும், க என்பது பசுவெனவும், ம என்பது பதிஎனவும் பொருள் படுதலால் ஆகமம் என்பதற்குத் திரிபதார்த்த இலக்கணத்தை உணர்த்தும் நூல் என்பதே சிறந்தபொருள் என்க. ஆ என்பது சிவஞானமும், க என்பது மோக்ஷமும், ம என்பது மலநாசமும் எனக்கொண்டு ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணிச் சிவஞானத்தை உதிப்பித்து மோக்ஷத்தைக் கொடுத்தல்பற்றி ஆகமம் எனப் பெயராயிற்று எனக் கூறுதலும் ஒன்று.

அவ்வேதாகமம் முறையே உலகர்க்கும், சத்திநிபாதர்க்கும் உரித்தாய பொதுநூலும் சிறப்புநூலு மாம். வேதம் கன்ம

காண்டம், ஞானகாண்ட மென இரண்டு காண்டங்களை யுடையது. ஞானகாண்டம் வேதாந்தமெனவும், உபநிடதமெனவும் பெயர் பெறும். உபநிடதம் பல. அவற்றுள் சிலஉபநிடதம் அக்கினியையே பிரமம் எனவும், சில உபநிடதம் சந்திரனையே பிரமம் எனவும், இவ்வாறே பல உபநிடதங்களும் ஒவ்வொரு தெய்வத்தையும் பிரம மெனக்கூற, சுவேதாசுவதரம் முதலிய சில உபநிடதங்கள் சிவபெரு மானையே பிரமமெனக் கூறும். இவ்வுபநிடதங்களெல்லாம் வேதாந் தம் எனவே வழங்குதலின், இவற்றுள் உண்மையான வேதாந்தம் யாதோவென்னும் ஐயம்நிகழாமையின் பொருட்டுச் சிவபரம்பொரு ளையே பிரமமெனக்கூறும் தெளிவான வேதாந்தப்பொருளைச் சிவா கமங்கள், தனித்தெடுத்துக்கூறும். ஆதலின், "சிவாகமங்கள் சித் தாந்தமாகும்" என அருணந்தி சிவாசாரியர் அருளிச்செய்வாராயி னர். சிவாகமங்களிற்கூறப்படும் முடிவும், சுவேதாசுவதரம் முதலிய உபநிடதங்களிற் கூறப்படும் முடிவும் ஒன்றே. இக்கருத்துப்பற் றியே "யாம் வேதசிவாகமங்கட்குப் பேதம் காண்கின்றிலம், வேத மும் சிவாகமமாம்" என நீலகண்ட சிவாசாரியரும் "வேதமொடா கம மெய்யா மிறைவனூ - லோதும் பொதுவுஞ் சிறப்புமென்றுன் னுக - நாத னுரையிவை நாடிலிரண்டந்தம் - பேதம தென்னிற் பெரி யோர்க் கபேதமே" எனத்திருமூல நாயனாரும், "வேதாகமத்துணி பிரண்டில்லை யொன்று" எனத் தாயுமானசுவாமிகளும் அருளிச் செய்வாராயினர்.

வேதத்தின் கன்மகாண்டத்தில் யாகாதி கன்மங்களை பெரும் பான்மையும் விரித்துக் கூறப்படும். அக்கன்மத்தின் பயன் சுவர்க் காதி போகங்களே ஆதலானும், பலகடவுளர்க்கும் பரத்துவங் கூறு தலானும் வேதம் உலகர்க்கே உரிய பொதுநூல் எனப்பட்டது.

சிவாகமம் தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை என மூன்று கலைகளாகப் பிரிக்கப்பட்டு, தந்திரகலையில் சிவாலய நிர்மாணம், விக்கிரக அமைப்பு முதலியவற்றையும், மந்திரகலையில் பிரதிஷ்டை பூசை முதலியவற்றையும், உபதேசகலையில் சிவபெருமானோடு இரண்டறக்கலத்தற் கேதுவாகிய ஞானமார்க்கத்தினையும் கூறும். இம் மூன்றுகலைகளும் சிவபெருமானைப் பற்றியே கூறுதலின் சிவா கமம் சத்திநிபாதர்க்கு உரிய சிறப்புநூல் எனப்பட்டது.

இக்காமிகாதி ஆகமங்களின் உபாகமங்கள் இருநூற்றேழு. இவ்வாகமங்களெல்லாம் வேதசாரமாயுள்ளன வென்பது மேற்கூறியவாற்றால் நன்கு புலப்படும். இவாகமங்களேயன்றி வேதபாகியமான வாமாதியாகமங்களும் உள. அவ்வாகமங்கள்தான் தாந்திரீகம் என்று ஓதுக்கப்படுவன. இவ்வுண்மை அறியாத சிலர் வேதசாரமாயுள்ள காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களையும் அவ்வாகமங்களின் உபாகமங்களையும் வேதபாகியமென்றும் தாந்திரீகம் என்றும் கூறுவர். இவர் தங்கருத்தை சாதித்தற்குச் சிவபுராணம், வாயுசங்கிதை, இருபத்தெட்டாம் அத்தியாய வாக்கியத்தையும் எடுத்துக் காட்டுவர். அவ்வாக்கியத்தின்பொருளைக் கொள்ளும்முறையில் கொள்ளாமையினால் இவ்வாறு மயங்குகின்றனர். வாயுஸங்கிதை வாக்கியத்தின் பொருள் வருமாறு:—

"சைவாகமமும் சிரௌதம், அசிரௌதம் என இருவகையாகக் கருதப்படுகின்றது. சுருதிசாரமயமானது சிரௌதமாம். சுவதந்திரமானது அசிரௌதமாம். சித்தாந்தப் பெயரினதாகிய சுவதந்திரம் பூர்வம் பத்துவகையாகவும், மறுபடியும் பதினெண்வகையாகவும் காமிக முதலிய பெயர்களாற் சித்தித்துள்ளதாம். சுருதிசாரமபம் எதுவோ அது நூறுகோடி விஸ்தாரமுள்ளதாம்" என்பதே.

இங்கே சுவதந்திரம் என்பது வாமம் முதலியவற்றிற்கு வேதபாகியமாய்த் தனித்துநிற்றலைக் குறித்தும், காமிக முதலியவற்றிற்கு வேதம்போலப் பலகடவுளர்க்கும் பரத்துவங்கூறாது சிவபெருமான் ஒருவர்க்கே பரத்துவங் கூறுஞ் சித்தாந்தத்தைக் குறித்தும் வந்தவாறுகாண்க. பூர்வம் பத்து, மறுபடியும் பதினெட்டு என்றது பிரணவர் முதலிய சிவன் பதின்மருக்குப் பத்து ஆகமங்களும், மகாருத்திரர் முதலிய உருத்திரர் பதினெண்மருக்குப் பதினெட்டாகமங்களும் சிவபெருமான் அனுக்கிரகஞ்செய்த முறைமை பற்றியேயன்றிப் பிறிதில்லை.

இவ் விருபத்தெட்டு, ஆகமங்களையும் சீகண்டருத்திரரிடத்து நந்திபெருமான் கேட்டருளினார். அவற்றைக் கேட்டருளிய நந்திபெருமான் சீகண்டருத்திரரை வணங்கிநின்று சிவாகமந்தோறும் சரியையாதி நாற்பாதப்பொருள்களும் சிறுபான்மை வெவ்வேறாகக் கூறப்படுகின்றனவே? அவற்றுள் உண்மையாவ திதுவென்று அருளிச்செய்ய வேண்டுமென இரந்து விண்ணப்பஞ் செய்தனர். சீகண்ட

பரமேஸ்வரர் கருணை மீக்கூர்ந்து "அநந்ததேவர் எமக்கு அருளிச் செய்தவாறே கூறுகின்றோம், கேட்பாயாக" என்று அருளிச்செய்து "கற்பந்தோறும் படைப்பு வேறுபாடும், கேட்போர் கருத்து வேறு பாடும்பற்றி அவற்றிற்கேற்றவாறு சரியை முதலிய மூன்றுபாதப் பொருள்களும் ஆகமங்களில் வெவ்வேறாகக் கூறப்பட்டன. ஆத லான் அவற்றுள் எவ்வாகமத்தின் முறை யார் யார் தீக்கை பெற் றார் அவரவர் அவ்வாகமத்தின் முறை அனுட்டிக்க; எக்கோயில் எவ்வாகமத்தின் முறை பிரதிஷ்டை செய்யப்பட்டது; அக்கோ யிற்கு அவ்வாகம முறையே பூசை, விழா முதலியன நடாத்துக; மாறிச்செய்யிற் குற்றமாம்; இனி ஞானபாதமாவது பொருட் டன்மை புணர்த்துவ தாதலின் அதுவேறு படுதல் பொருந்தாமை யான் வேறுபடுவதுபோலத் தோன்றுவன வெல்லாம் தூலாருந்ததி நெறிபற்றிக் கூறப்பட்டன வன்றி மாறுகொளக் கூறப்பட்டனவல்ல வென்பதை வகுத்துணர்த்து நற்பொருட்டு அவ்விருபத்தெட்டு ஆகமங்களுள் ஒன்றாகிய இரௌரவ ஆகமத்துட் பன்னிரு சூத்தி ரத்தாற், கூறப்பட்டது சிவஞானபோத மென்பதோர் படலம்; அது கேட்டார்க்கு எல்லா ஆகமப்பொருளும் வேறுபாடின்றி இனிதுவிளங்கு" மெனக்கூறி அச்சிவஞானபோதத்தை நந்தி பெரு மானுக்கு அருளிச்செய்தனர். இதனைப் பாசவிமோசனப் படலம் என்றுங் கூறுவர். சிவஞானத்தாலன்றிப் பாசவிமோசனஞ் சித்தி யாது. பாசவிமோசனத்தாலன்றிச் சிவஞானஞ் சித்திபாது. இவ் விரண்டும் இருள்நீக்கமும் ஒளிவிளக்கமும் போலாம். ஆதலின் பாசவிமோசனப்படலம் எனினும், சிவஞானபோதப்படலம் எனி னும் இழுக்கில்லை.

நந்திபெருமானும் சிவஞான போதத்தைக் கேட்ட துணை யானே எல்லா ஐயமும் நீங்கி மெய்ப்பொருள் தெளிந்து பின்னர் அதனைத் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ்சிறந்த சனற்குமார முனி வர்க்கு அருளிச்செய்தனர். அவர் தம்மாணாக்கர் பல்லோருள் ளுஞ் சிறந்த சத்திய ஞானதரிசனிகளுக்கு அருளிச் செய்தனர். அவர் தம் மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த பரஞ்சோதி முனி கட்கு அருளிச் செய்தனர். அவர், தமிழ்நாடு செய்த தவத்தானே முற்பிறப்பிலே சரியை, கிரியை, யோகங்களைச் செய்து முற்றுப் பெற்று ஞானநிலையில் முற்றுப்பெறாது அங்க ஞானத்தோடு சாமு

சித்தராய் அவதரித்து மெய்புணர்வின் முதிர்ந்தவராய்த் திருவெண்ணெய் நல்லூரில் நன்மாமனார் வீட்டில் வீற்றிருந்த ஸ்ரீமெய்கண்ட தேவர்பால் எழுந்தருளி வந்து சிவஞானபோதத்தைக் கொடுத்து "இதனை ஈண்டுள்ளோர் உணர்ந்து உய்தற்பொருட்டுத் தமிழில் மொழிபெயர்த்துச் செய்து பொழிப்புரைக்க" என்றருளிப் பொழிப்புரைக்குமாறும் சத்தியஞான தரிசனிகள்பால் தாம் கேட்டவாறே உபதேசித்தருளினர். ஸ்ரீமெய்கண்டதேவரும் அவ்வாறே மொழிபெயர்த்துக் கருத்துரை, மேற்கோள், ஏது, திருட்டாந்தமாகிய வார்த்திகப் பொழிப்புரையுஞ் செய்தருளித் தம் மாணாக்கர் பல்லோருள்ளும் சிறந்த அருணந்தி சிவாசாரியருக்கு அருளிச் செய்தனர். அவர் தம் மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த மறைஞானசம்பந்த சிவாசாரியருக்கு அருளிச்செய்தனர். அவர் தம் மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த உமாபதி சிவாசாரியருக்கு அருளிச் செய்தனர். உமாபதி சிவாசாரியர் அருணமச்சிவாய தேசிகருக்கும், அவர் சித்தர் சிவப்பிரகாச தேசிகருக்கும், அவர் நமச்சிவாயமூர்த்திகளுக்கும் உபதேசித்தனர். அவருக்குப் பின் திருவாவடுதுறை ஆதீனத்துக் குருமூர்த்திகள் ஒருவர்பின் னொருவராக உபதேசிக்கப்பெற்று இந்நூல் வருகின்றது. மெய்கண்டதேவர் முதலிய நால்வரும் சந்தானாசாரியர் எனப்படுவர். இந்நால்வருடைய சமாதிகளுள் உமாபதி சிவாசாரியர் சமாதிமட்டும் வீரசைவரிடமும், ஏனைய மூன்று சமாதிகளும் திருவாவடுதுறை ஆதீனத்தாரிடமும் இருக்கின்றன. வீரசைவரிடமிருக்கும் ஒரு சமாதியும் ஒருகாலத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தாரால் கொடுக்கப்பட்டதே யாகும். ஆதலால் இச் சிவஞானபோதத்திற் குரிமையுடைய பரம்பரை ஆதீனம் திருவாவடுதுறை ஆதீனமேயாம்.

நூல்வரலாறு முற்றிற்று.

சிவமயம்.

நூலாசிரியர் வரலாறு.

பண்டைமறை யெண்டரற்றப் பசுந்தேன் ஞானம் பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக், கண்டவிருதயகமல முகைகளெல்லாங் கண்டிறப்பக் காசினிமேல் வந்தவருட் கதிரோன், விண்டமலர்ப் பொழில் புடைசூழ் வெண்ணெய்மேவு மெய்கண்டதேவன் மிகு சைவ நாதன், புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும் பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம்.

பொன்னாடதனினுஞ் சிறந்த தென்னாடதனுள் நடுநாட்டிலே திருப்பெண்ணாகடத்திலே பரம்பரைச் சைவ வேளாள குலதிலகரும், சிவபத்தி அடியார் பத்திகளினும் கல்வி செல்வங்களினுஞ் சிறந்தவரும், அச்சுதர்களப்பாளர் என்னும் பெயருடையவருமாகிய ஒருவர் இருந்தார். அவர் நெடுங்காலம் பிள்ளைப் பேறின்மையால், அதற்குரிய அரிய விரதாதிகளை யெல்லாம், ஆதிசைவரும் சகலாகம பண்டிதருமாகிய தம்முடைய குலாசாரியர் உணர்த்த உணர்ந்து அநுட்டித்து வந்தனர். வந்தும் சித்திபெறாது வருந்தி, பின்னுஞ் சகலாகம பண்டிதரிடத்தில் விண்ணப்பஞ் செய்தனர். அதனை உணர்ந்த சகலாகம பண்டிதர் உற்றுநோக்கித் தமிழ்வேதமாகிய தேவாரத்தை விதிப்படி அருச்சித்து வணங்கி, அச்சுதர்களப்பாளரைக் கொண்டு அத்திருமுறையிலே கயிறு சாத்தும்படி அருளிச் செய்தனர். சாத்திய விடத்துத் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவெண்காட்டுப் பதிகத்துள்,

“பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.”

என்னும் திருப்பாசுரம் உதயமாயிற்று. அப்பாசுரத்தின் பொருளைச் சகலாகம பண்டிதர் உற்றுநோக்கி மிகமகிழ்வெய்தி அச்சுதர்களப்பாளரைத் திருவெண்காட்டில் வசிக்கும்படி கட்டளை செய்தருளினர்.

அச்சுதர்களப்பாளர் ஆசிரியரிடத்தே விடைபெற்றுக்கொண்டு தம்முடைய மனைவியாரோடு திருவெண்காடு என்னும் திருப்பதியை அடைந்து அங்கேயுள்ள சோம சூரிய அக்கினி என்னும் முச்சுடரின் திருநாமம்பெற்ற முக்குளத்தில் விதிப்படி முழுகிச் சுவேதாரணியரையும் பிரமவித்தியாநாயகியாரையும் தரிசித்து வழிபடுவாராயினர்.

அவ்வாறு வழிபடும் நாளிலே ஒருநாள் அச்சுதர்களப்பாளருக்குச் சொப்பனத்திலே சுவேதாரணியர் தோன்றி "உனக்கு இப்பிறவியிலே பிள்ளைப்பேறு அரிது. ஆயினும் சர்வாபீஷ்டமும் தாத்தக்கதாய் நமக்கு மிக்க பிரீதியுடையதாயுள்ள தேவாரத்தைப் பரமப் பிரமாணமாகக்கொண்டு நீ ஒழுகுகின்றமையால் அத்தேவாரத்தைப் பாடிச் சைவஸ்தாபனஞ் செய்த ஞானசம்பந்தன் என்றே சொல்லும்படி நமது திருவருளினாலே இன்னும் தமிழ்நாடு உய்யும் வண்ணம் அத்தேவாரத்தின் மெய்ப்பொருளை உள்ளடக்கிய சைவ சித்தாந்த சாஸ்திரத்தை வெளிப்படுத்திச் சைவஸ்தாபனம் செய்யத் தக்கவனாக உன்னிடத்தில் ஒரு சற்புத்திரன் அவதரிப்பான்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார். உடனே விழித்தெழுந்த அச்சுதர்களப்பாளர் பெருமகிழ்ச்சி கொண்டு மனைவியாருக்கு அச்சந்தோஷ சமாசாரத்தைத் தெரிவித்து, அவரோடு தாமும் பேரன்புடன் சுவேதாரணியரையும் பிரமவித்தியாநாயகியாரையும் வழிபட்டு வசித்தார். அவ்வாறு வசிக்கும் நாளிலே சுவேதாரணியருடைய பெருங்கருணையினாலே உலகமெல்லாம் உய்யும்படி அவர் மனைவியாரது அருமைத் திருவயிற்றிலே கருப்போற்பத்தியாகிய பெரும்பேறு உளதாயிற்று.

அச்சுதர்களப்பாளர் அதனையுணர்ந்து திருவருளைத் துதித்து உள்ளத்தின் மூளுகின்ற பெருமகிழ்ச்சியோடு சிவாகம விதிப்படி செய்யவேண்டும் சடங்குகளைப் பத்து மாசங்களினுஞ் சிறப்பாகச் செய்து பேரின்பத்தை நுகரும் நாளிலே, மிகமேலாகிய சுபதினத்திலே, பரசமயத்தருக்கு நீங்கவும், அத்துவிதத்தின் உண்மைப் பொருளை எல்லாரும் அறிந்து உய்யவும், வடமொழிச் சிவஞான போதம் தென்மொழியிலும் வழங்கவும், சிவனடியார் எஞ்ஞான்றும் பேரானந்தம் பெற்றோங்கவும், பலவுலகங்களுள்ளும் பூலோகமும்

அப்பூலோகத்துள்ள எந்நாடுகளுள்ளும் தென்னாடுமே சிறக்கவும் ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ் செய்தார்.

அவதார மென்பது மேலிருந்து கீழிறங்குதல் எனப் பொருள் படும். அதாவது சிவபெருமான் திருவருள் ஒரு உயிரை அதிட்டிக்க அவ்வுயிர் பிறத்தலாம். அவ்வாறு பிறப்பது இன்றியமையாத காலங்களிற்றான் நேரும். ஸ்ரீமெய்கண்டதேவர் அவதாரத்துக்கு முன்னரே தேவார முதலிய திருமுறைகள் தோன்றிச் சைவசித்தாந்தப் பொருளை எல்லாரும் இனிது உணர்ந்து வாழ்ந்தனர். காலம் மாறிக்கொண்டே வருவதுபோல மனிதர்களுடைய எண்ணங்களும் அடிக்கடி மாறிக்கொண்டேவருமாதலால் சைவசித்தாந்தப் பொருளை எல்லாரும் நன்குணர்ந்து வருநாளில் அத்துவிதம் என்னுஞ் சொல்லுக்கு மாறுபட்ட பொருள்கள் கூறச் சிலர் தோன்றினர். தோன்றி அத்துவிதச் சொற்குப் பொருந்தா உரையைப் பலர்க்கும் புகட்டினர். அந்நாளில் அத்துவிதத்தின் உண்மைப்பொருளை இனிது விளக்கவேண்டுவது அவசியமாதலின் அதன்பொருட்டுச் சிவபெருமான் திருவருளினாலே இச்சற்புத்திரர் அவதாரஞ் செய்தார். இக்கருத்துப் பற்றியே "பொய்கண்டார் காணப் புனிதமெனு மத்துவித மெய்கண்டநாதன்" என்றார் ஸ்ரீதாயுமான சுவாமிகளும்.

இச்சற்புத்திரர், உரிய பருவத்திலே அச்சுதர்களப்பாளருக்குச் சுவேதவனப் பெருமான் திருவருளாற் பிறந்தமையின் அவருக்குச் சுவேதவனப் பெருமாள் என்னுந் திருநாமஞ் சாத்தினர்.

அதன்பின்பு அச்சுதர்களப்பாளரும் அவர் மனைவியாரும் சுவேதாரணியரையும் பிரமவித்தியாநாயகியாரையும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு தமது அருமைத் திருக்குமாரரோடு தங்கள் ஜநநபூமியாகிய திருப்பெண்ணாகடத்தை அடைந்தார்கள். அச்சமாசாரத்தைக் கேள்வியுற்ற அந்நகரவாசிகள் எல்லாரும் அத்திருக்குமாரரை நாடோறும் வந்து தரிசித்துப் பெருமகிழ்ச்சி யடைவாராயினர். சுவேதவனப்பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமமுடைய அவர் பிறைமதிபோல வளரும் நாளிலே திருவெண்ணெய்நல்லூரில் வசிக்கும் அவரது நன்மாமனார் மிக்க பிரியத்தோடும் அவ்வரைத் தனது இல்லத்துக்கு எடுத்துக் கொண்டுபோய்ப் பேரன்

போடு வளர்க்க வளர்ந்து இரண்டு பிராயத்திற்றனே மெய்யுணர்வின் முற்றுப் பேறுடையராய் எழுந்தருளியிருந்தார்.

இருக்கும் நாளிலே பரஞ்சோதிமுனிவர் திருக்கைலாசமலையினின்றும் நீங்கித் திருவெண்ணெய் நல்லூரை யடைந்து, அம்மெய்யுணர் வுடையாரைச் சந்தித்து, சிவஞானபோதத்தை உபதேசித்து "இதனை ஈண்டுள்ளோர் உணர்ந்து உய்தற்பொருட்டு மொழிபெயர்த்துப் பொழிப்பும் உரைக்க" என்றருளிச், சத்தியஞானதரிசனிகள்பால் தாம் கேட்டவாறே பொழிப்புரைக்குமாறும் அருளிச்செய்து, பொய்ச்சமயங்களின் பொருள் இது இது என்று கண்டு கழித்து மெய்ச்சமயமாகிய சைவத்தின் உண்மை உணர்ந்து அதனை ஸ்தாபனஞ் செய்யுங் காரணத்திற்கும், தம்முடைய ஆசிரியர் சத்தியஞானதரிசனிகள் திருநாமத்திற்கும் இணங்க, அம்மெய்யுணர்வுடையார்க்கு மெய்கண்டதேவர் எனச் சிறப்புத் திருநாமஞ் சாத்தி நீங்கினார்.

பின்பு ஸ்ரீமெய்கண்டதேவர் அத் திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளி யிருக்கின்ற சுயம்பு மூர்த்தியாகிய பொல்லாப் பிள்ளையாருடைய சந்நிதியில் சிவஞானபோதத்தைச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடிச் சிவபிரான் திருவருளும் ஆசிரியர் பரஞ்சோதிமுனிவர் கருத்தும் நோக்கித் தமிழ்நாடு உய்யும் வண்ணம் வடமொழிச் சிவஞானபோதத்தைத் தமிழில் மொழிபெயர்த்து, வார்த்திகம் என்னும் பொழிப்புரையுஞ் செய்து, பல அற்புதங்களை விளக்கி, சைவஸ்தாபனஞ்செய்து, பலர்க்கும் சிவஞானபோத உபதேசம் செய்து வருவாராயினர்.

வருநாளிலே சகலாகம பண்டிதர் அவ்வரலாற்றைக் கேள்வியுற்று நம்முடைய மாணக்கராகிய இவர் நம்மை வந்து பார்க்கவில்லையே என்று எண்ணி, ஆயினும் நாமே அவரைப் போய்ப் பார்ப்போம் என்று கருதி அவர் இருக்கும் இடஞ்செல்ல விரும்பி அக்கருத்தைத் திருவெண்ணெய் நல்லூர் வாசிகளாகிய தம் மாணக்கர்கட்குத் தெரிவித்தனர்.

அதனைக்கேட்ட திருவெண்ணெய் நல்லூரார் தம் குலகுருவின் வரவுக்காக மிகமகிழ்வெய்தி நகரமெங்கும் அலங்கரித்தனர். ஆகமங்கள் ஏற்றிய சகடைகளுடனும் விருதுகளுடனும் சகலாகம பண்டிதர் திருவெண்ணெய் நல்லூரை நோக்கிச் சென்றனர். நகரை

அடுத்து வரும்பொழுது அங்குள்ளார் அனைவரும் எதிர்வந்து வணங்கிச் சிவாகமப்பொருளை உபதேசிப்பதற்காகத் திருவவதாரஞ் செய்தருளிய எம் குருநாத! தேவரீரது நல்வரவால் நாங்கள் உய்ந்தோம் உய்ந்தோம் என்று பலவாறு துதித்துத் திருவெண்ணெய் நல்லூருக்கு அழைத்துச் சென்றனர். சென்றதும் வீதிவலம்வந்து திருக்கோயிலை அடைந்து சுவாமிதரிசனஞ்செய்து திருமடம் போய்ச் சேர்ந்தனர். சேர்ந்த பின்னர் மாணாக்கர்கள் அனைவரும் வணங்கித் திருவமுது செய்வித்தனர். சிவபெருமான் திருவடிக் கமலத்திற் பதிந்த சிந்தையையுடைய ஸ்ரீமெய்கண்டதேவர் சகலாகம பண்டிதரை வந்து பார்க்கவில்லை.

சகலாகம பண்டிதர் ஸ்ரீமெய்கண்டதேவர் வராமையை உணர்ந்து நாமே போய்ப் பார்ப்போமென்று எண்ணி அவர் இருக்குமிடஞ் சென்று உலாவிக்கொண்டு நின்றார். நிற்குங்கால் ஸ்ரீமெய்கண்டதேவர் தம் மாணாக்கருக்குச் சிவஞானபோதம் பாடஞ்சொல்லிக்கொண்டிருக்கின்றார். பாடத்தில் ஆணவமலத்தின் தன்மையைப்பற்றி ஆராயத்தொடங்குஞ் சமயமாயிருந்தது. உலாவிக்கொண்டிருந்த சகலாகம பண்டிதர் ஸ்ரீமெய்கண்டதேவரை நோக்கி "ஆணவமலத்தின் இலக்கணம் என்னை?" என்று வினவினர். ஸ்ரீமெய்கண்டதேவர் சட்சுதீக்கையாகிய கிருபாநோக்கத்துடன் தம்முடைய சுட்டுவிரலால் சகலாகம பண்டிதரைச் சுட்டிக் காட்டினர். கையிலமர்ந்திருக்கும் ஐந்து விரல்களுள் பெருவிரல் பதியையும், சுட்டுவிரல் பசுவையும், ஏனைய மூன்று விரல்களும் முறையே ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் உணர்த்துமாதலின், மும்மலங்களும் நீங்கிச் சிவபெருமான் திருவடியில் உயிர் அடங்கி நிற்கவேண்டும் என்பது தோன்ற மூன்று விரல்களைப் பிரித்துச் சுட்டுவிரலைப் பெருவிரலுள் அடக்கி, தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளிய சிவபெருமான் சின்முத்திரை செய்தருளினர். சிவபெருமான் திருவடியில் அடங்கி வாழ்பவர் சிவனடியார்க்கும் அடங்கி வாழ்வார். இவ்வுண்மைகளெல்லாம் ஸ்ரீமெய்கண்டதேவர் சுட்டிக் காட்டிய அவ்வளவிலே சகலாகம பண்டிதருக்குத் தோன்ற, அவர் நான்என்னும் முனைப்போடு வணங்காதிருக்கும்படி செய்வதே ஆணவமலத்தின் இலக்கணம் என உணர்ந்து ஸ்ரீமெய்கண்டதேவரை வணங்கினர்.

வணங்கவே, ஸ்ரீமெய்கண்டதேவர் தம் குருமரபிற்கு முதற் குருவாகிய நந்திதேவர் திருநாமத்தையே இச்சகலாகம பண்டிதருக்குச் சூட்ட எண்ணி 'அருணந்தி' என தீட்சாநாமஞ் சூட்டிச் சிவஞானபோதத்தையும் உபதேசித்து மனவாசகங்கடந்தார் சிற்றம்பல நாடிகள் முதலான நாற்பத்தொன்பது மாணாக்கருள் அவர் முதல்மாணாக்கராக ஏற்றருளப்பெற்றனர்.

இவ்வாறு ஸ்ரீமெய்கண்டதேவர் பல அற்புதங்களைச் செய்து நெடுங்காலம் சிவயோகத்திலமர்ந்து திருவெண்ணெய் நல்லூராகிய அத்திருப்பதியிலே ஐப்பசிமாதச் சுவாதி நட்சத்திரத்திலே அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் திருவடியில் இரண்டறக்கலத்தலாகிய சுத்தாத்துவித முத்தியை அடைந்தனர்.

இவர் காலம் இற்றைக்கு ஏறக்குறைய சுஎ௦ வருடங்களுக்கு முன்னென்ப.

நூலாசிரியர் வரலாறு முற்றிற்று.

சந்தானகுரவர் நால்வர் திருநக்ஷத்திரம்.

சித்திரை யத்த முமாபதி யாவணித் திங்கடனி
லுத்திரஞ் சீர்கொண் மறைஞான சம்பந்த ரோதுகன்னிச்
சுத்தமெய்ப் பூர மருணந்தி யைப்பசிச் சோதிதனில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

சிவமயம்.

உரையாசிரியர் வரலாறு.

தென்மொழியும் வடமொழியுந் தேர்ந்து பரம் பொருள்சிவ மென் றதனைச்சாரு, நன்மையெனும் வீடருளுந் துறைசைசமச் சிவாயகுரு நற்றாள் பேணி, வன்மலவே ரைக்கெடுத்துச் சிவஞான பாடியஞ்செய் தருளும் வள்ளல், சின்மயமாஞ் சிவஞான முனிவரிரு திருவடிகள் சிந்தை செய்வாம்.

பாண்டிவளநாட்டிலே, பொதியமலைச் சாரலின்கண், பர்வநாச மென்னுந் திருப்பதியைச் சார்ந்த விக்கிரமசிங்கபுரத்தில், அகத்திய மகாமுனிவரிடத்தே எழுதலை முறைபளவும் அருட்புலமை நிரம் பும் வண்ணம் வரம்பெற்ற பாம்பரைச் சைவவேளாளர் குலத்திலே, சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்தவரும் கல்வி செல்வம் என்னும் இரண்டும் ஒருங்குடையவரும் ஆகிய ஆனந்தக்கூத்தர் என்பவ ரொருவர் இருந்தார். அவர் மனைவியார் கற்பிலே தமக்கு உயர் வொப்பில்லாத மயிலம்மையாரென்று எவராலுஞ் சிறப்பித்துச் சொல்லப்படுபவர். அவரது திருவயிற்றிலே, எழாவது தலைமுறை யாகத் தமிழ்நாடு செய்த தவத்தானே, ஒரு சற்புத்திரர் திருவவதா ரஞ்செய்து முக்களாலிங்கர் என்னும் பிள்ளைத் திருநாமம் சாத்தப் பெற்று ஒழுக்கம் அன்பு அருள் முதலிய நற்குணங்களோடு வளரு வாராயினர்.

பின்பு முக்களாலிங்கர் ஐந்து பிராயத்திலே, பிதாவினால் வித்தி யாரம்பஞ் செய்விக்கப்பெற்றுப் பள்ளிக்கூடத்தில் அமர்ந்து கற்பா ராயினர். அங்ஙனம் கற்குங் காலத்திலே, திருவாவடுதுறை ஆதீ னத்திலிருந்து சிவஸ்தலயாத்திரையாகப் புறப்பட்ட சிலமுனிவர் கள் விக்கிரமசிங்கபுரத்து வீதியிலே சென்றார்கள். பள்ளிக்கூடத் தினின்றும் வந்த முக்களாலிங்கர் அம்முனிவர்களைச் சந்தித்துத் தரிசித்து வணங்கி, "சுவாமிகாள்! அடியேன் வீட்டிற்கு எழுந்தரு ளித் திருவமுதுசெய்து, பின்பு சென்றருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்க, அம்முனிவர்கள் ஆண்டின் இளையரும், அறிவின்

முதியருமாகிய முக்களாலிங்கர் பிரார்த்தனைக்கு இரங்கி, விருப்பத்தோடு உடன்பட்டு அவருடன் அவரது வீட்டுக்குப் போயினர். அங்கே தமது புத்திரர் அருமைக் கருத்தையுணர்ந்து அருந்ததியினுஞ் சிறந்த மயிலம்மையார் அன்போடு உபசரிக்கத் திருவமுது செய்து சென்றருளினார்கள். முக்களாலிங்கர் தமது கருத்தின்படி அடியாரை உபசரித்த தாயாரைப்பற்றி "அருந்ததியென் னம்மை யடியவர்கட் கென்றுந்-திருந்த வமுதளிக்குஞ் செல்வி-பொருந்தவே-யானந்தக் கூத்த ரசமகிழத் தொண்டுசெயு - மானந் தவாத மயில" என்னுஞ் செய்யுளை இயற்றி அருளினர். அதன்பின்பு புறத்தே போயிருந்த ஆனந்தக்கூத்தர் வீட்டிற்கு வந்தபோது நிகழ்ந்த அரிய செயல்களைக் கேள்வியுற்றுப் பேரின்பக் கடலிலே முழுகினர்.

பின்னர் ஆனந்தக்கூத்தர், புத்திரராகிய முக்களாலிங்கரோடு ஆதீனமுனிவர்களிடத்தே போய் வணங்கியவழிச் சத்திநிபாத முடைய புத்திரர், பிறவிப் பெருந்துன்பக் கடலினின்றுங் கரையேறக் கருதி, அம்முனிவர்களோடு தாம்செல்லவேண்டு மென்னுங் குறிப்பினைத் தந்தையாருக்கு உணர்த்த, அவர் புத்திரரைப் பிரியச் சிறிதும் மனமில்லாதிருந்தும் ஒருவாறிசைந்து அவரை அவர்களோடு விடுத்து வீட்டுக்குத் திரும்பினர்.

தந்தையார் நீங்கியபின்பு, முக்களாலிங்கர் ஆதீனத்து முனிவர்களோடு வழிக்கொண்டு மார்க்கங்களிலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, சோழநாட்டிலுள்ள திருவாவடுதுறையை அடைந்து, மடாலயத்தினுள்ளே புகுந்து, ஆதீன பரமமுதற்குரவாகிய நமச்சிவாயமூர்த்திகளைத் தரிசித்துத் திருவருணோக்கம் பெற்றுக்கொண்டு, அப்பொழுது சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருக்க, ஞானசாரியராகிய பின்வேலப்பதேசிகரை ஒடுக்கத்திலே போய்த் தரிசித்துப் பேரன்போடு வணங்கினர்.

வணங்கிய முக்களாலிங்கர் ஞானதேசிகரிடத்தே சைவசந்நியாசமும் சிவதீக்ஷையும் சிவஞானயோகிகள் என்னுந் தீக்ஷாநாமமும் பெற்று மெய்கண்டசாத்திரம் பண்டார சாத்திரங்களைக் கேட்டருளினர். சிவஞான முனிவர் அகத்திய மகாமுனிவர் வரத்தால் அவதரித்தருளியவராதலின், எளிதிலே வடமொழிக்கடலும் தென்மொழிக்கடலும் முற்றுருங்குணர்ந்து மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையராய் அமர்ந்தருளினர். வேலப்பதேசிகர் சிவஞான

யோகிகளுக்கு மெய்யுபதேசஞ் செய்தருளிய ஞானசாரியர் என்பது "எவ்வெவகோட் படுபொருளு மஞ்செழுத்தி னடக்கியவற் றியல்பு காட்டி-மெய்வகைபஞ் சவத்தைமினு நிற்குமுறை யோது முறை விளங்கத்தேற்றி - யவ்வெழுத்தி னுள்ளீடு மறிவித்துச் சிவ போகத் தழுத்திநாயேன் - செய்வினையுங் கைக்கொண்ட வேலப்ப தேசிகன்றாள் சென்னி சேர்ப்பாம்" எனக் காஞ்சிப் புராணத்துட் கூறியவாற்றால் இனிதுவிளங்கும்.

சிவஞானயோகிகள் ஜமதக்கினி முனிவருடைய புத்திரரும், அகத்திய மகா முனிவருடைய முதன்மாணக்கரும், இடைச்சங்கப் புலவர் ஐம்பத்தொன்பதின்மருள் ஒருவருமாகிய திருணதூமாக்கினி என்னுந் தொல்காப்பியமுனிவர் அருளிச்செய்த இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்கு உரையாசிரியராகிய இளம்பூரணர் செய்த உரையாகிய இளம்பூரணமும், சேனாவரையர் செய்த உரையாகிய சேனாவரையமும், நச்சினார்க்கினியர் செய்த உரையாகிய நச்சினார்க்கினியமும் எனப்படும் மூன்றுரைகளினுமுள்ள ஆசங்கைகளை நீக்கித் தெளிவிக்கும்பொருட்டு அத்தொல்காப்பியத்தின் பாயிரத்திற்கும், முதற்சூத்திரத்திற்கும் சூத்திர விருத்தியெனப் பெயரிய பாடியமும், வடமொழித் தருர்க்கசங்கிரக அன்னம்பட்டீயங்களின் மொழிபெயர்ப்பும், நன்னூலுக்குச் சங்கர நமச்சிவாயப் புலவர் செய்த புத்துரையாகிய விருத்தியுரைத் திருத்தமும் செய்தருளினார். இவை மூன்றும் திராவிடமாபாடியத்திற்கு அங்கங்கள் எனப்படும்.

பின்பு சர்வாத்ம சம்புசிவாசாரியர் அருளிச்செய்த சத்திய ரூபச் சித்தாந்தப் பிரகாசிகையின் மொழிபெயர்ப்பும், மெய்கண்ட தேவர் மொழி பெயர்த்தருளிய சிவஞானபோதத்திற்கு ஆசிரியர் அமைத்தருளிய மெய்ப்பொருள் விளங்கும்வண்ணம் திராவிடமகா பாடியமெனப் பெயரிய விருத்திபுரையும், இலகுவியாக்கியானமாகிய சிற்றுரையும், அருணந்தி சிவாசாரியார் அருளிச்செய்த சிவஞான சித்தியார் சுபக்கத்திற்குப் பொழிப்புரையும், காஞ்சிபுராணத்தின் முதற்காண்ட மொழிபெயர்ப்பும், சிவாக்கிய சோழமகாராஜா காலத்திலே கஞ்சனூரிலே அவதரித்தருளிய ஆசாரிய சரணராகிய அரதத்த சிவாசாரியர் வைணவமதத்தை நிராகரித்துச் சைவமத ஸ்தாபனஞ் செய்யும்பொருட்டு, நெருப்பிலே பழுக்கக் காய்ச்சிய

இருப்பு முக்காலியிலே எழுந்தருளியிருந்து, சிவபெருமானே பரம் பொருளென இருபத்திரண்டு ஏதுக்களாலே நாட்டியருளிய சுலோக பஞ்சகத்தின் மொழிபெயர்ப்பும், அப்பயதீக்ஷிதர் அருளிச்செய்த சிவதத்துவவிவேக மூலசுலோகங்களின் மொழிபெயர்ப்புஞ் செய்தருளினர்.

பின்பு பெரும்பாலும் உண்மை நாயன்மார் சரிதம் முதலியவற்றைத் தழுவிப் பூருவார்த்தமும் அதற்கு எடுத்துக்காட்டாகத் திருவள்ளுவநாயனர் திருக்குறள் உத்தரார்த்தமுமாகக்கொண்டு சோமேசர்மீது முதுமொழிவெண்பா, யமகரூபமான திருவேகம்பரந்தாதி, திருக்குரூபமான திருமுல்லைவாயிலந்தாதி, குளத்தூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி, கலைசைப்பதிற்றுப் பத்தந்தாதி, இளசைப்பதிற்றுப் பத்தந்தாதி, கச்சி ஆனந்தருத்திரேசர்பதிகம், திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு, செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், செப்பறைப்பதி அகிலாண்டேசுவரி பதிகம், மார்கழிமதித் திருவாதிரை யுற்சவத்திலே தேவாரம் முதலிய அருட்பாக்கள் ஐந்தும் திருக்காப்பிடப்பட்டுத் திருவெம்பாவை யென்னுந் திருவாசகத் திருப்பதிகம் ஒன்றுமே ஆன்மார்த்த பரார்த்த சிவபூஜாகாலங்களில் ஓதப்பெற்றுவருஞ் சம்பிரதாயத்தால் நித்த நியம மந்திரமாகத் திருத்தொண்டர் திருநாமத்தை ஓதியுய்ய வேண்டுவோர் கருத்துத் தடையுறுவண்ணம் திருத்தொண்டர் திருநாமக்கோவை, ஆதிபரமாசாரியராகிய நமச்சிவாய மூர்த்திகண்மீது மாலை முதலிய பிரபந்தங்களைச் செய்தருளினர்.

பின்பு மரபட்டவணை எனப் பெயர்பெற்ற திருவாவடுதுறை ஆதீன சாம்பிரதாயக் கட்டளையைத் தருமபுர ஆதீனத்தார் மறுத்தெழுதியதற்கு "மறுப்பின் மறுப்பு" என ஓர்கண்டனமும், காஞ்சீபுரத்தில் யாத்திரையாக வந்தருளிய திருவண்ணாமலை ஆதீனத்துப் பண்டாரச் சந்நிதிகள், சிவஞானசித்தியாரில் "என்னையீப் பவத்திற் சேராவகையெடுத்து" என்னுஞ் செய்யுளில் "எடுத்து" என்னுஞ் சொல்லுக்குப் பொருள் என்னை? என்று தம்மாதீனத்து ஞானப்பிரகாசமுனிவர் இயற்றிய சிவசமவாதவுரையின் உயர்வு தொனிக்கும் வண்ணம் சிவஞானயோகிகளிடத்தே வினவுவித்தபொழுது "எடுத்து" என்னுஞ் சொல்லுக்குச் "சிவசமவாதவுரை மறுப்பு" என ஓர்கண்டனமும், அதன்மேற் பிரதிகண்டனம் உண்டாயவழி மேன்

மறுத்த மறுப்பு, குதர்க்கவுரையாளராற் போழப்படாதவாறு "எடுத்து என்னுஞ் சொல்லுக்கிட்ட வயிரக்குப்பாயம்" என ஓர் கண்டனமும், சிவஞான சித்தியாருக்கு ஞானப்பிரகாசமுனிவர் இயற்றிய உரைமுற்றும் போலியுரை என விளக்க "சிவசமவாத வுரை மறுப்பு" என ஓர்கண்டனமுஞ் செய்தருளினர்.

பின்பு கம்பராமாயணகாவியம் ஒன்றுமே தமிழிற் சிறந்திருப்ப தெனச் செருக்கோடு கூறிய காஞ்சீபுரத்து வைணவர்கள் வாயை அடைக்கக்கருதி அக்கம்பராமாயணத்து நாந்திச் செய்யுளாகிய "நாடியபொருள் கைகூடும்" என்னும்பாட்டு முற்றுங் குற்றமே எனச் சங்கைசெய்தவழி, அவ்வைணவர்கள் அச்சங்கைக்கு உத்தாஞ்சொல்ல இயலாமல் வருந்தித் தெரியாது பிதற்றினேம் எனச் சொல்லி வணங்கித் துதித்தவழி, சிவஞானயோகிகள் மகிழ்ந்து உத்தரங்கூறி, அவ்வைணவர்களை உவப்பித்தருளினர். அச்சங்கை யுத்தரங்களை வரைந்த நூலுக்கு, "கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி" என்று பெயர் வழங்கி வருகின்றது.

பின்பு திருவாரூர் வைத்தியநாத நாவலர் இயற்றிய இலக்கண விளக்கத்தில், எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் முதலியவற்றிலுள்ள வழுக்களை வெளியிடக்கருதி இலக்கணவிளக்கச் சூறாவளிஎன ஒன்று செய்தருளினர்.

பின்பு சிவஞானசுவாமிகள், திருநாவுக்கரசு நாயனர் கடலி னின்றுங் கரையேறிய திருப்பாதிரிப்புலியூரில் யாத்திரையாக எழுந் தருளியிருக்கும் காலத்திலே சிவாலயத்தின் கண்ணே, சில வித்து வான்களும் பிரபுக்களுங் கூடிய சபையில் ஒருபிரபு நூறுபொன் னைக் கிழியாகக் கட்டிவைத்து, "கரையேறவிட்ட முதல் வாவுன்னை யன்றியுமோர் கதியுண்டாமோ" என்று ஈற்றடிஎடுத்துக் கொடுத் துச் "செய்யுளைப் பூர்த்திசெய்பவர் இப்பொற்கிழியை எடுத்துக் கொள்ளலாம்" என்றுசொன்னர். அந்நிகழ்ச்சியைச் சுவாமி தரிச னத்தின்பொருட்டுச் சிவாலயத்துக்கு எழுந்தருளிய சுவாமிகள் அறிந்து, ஒரு ஏழைப்பிராமணனை நோக்கி அப்பொற்கிழியை எடுத் துக்கொள்ளும்படி கட்டளையிட்டு, "வரையேற விட்டமுதஞ் சேந் தனிட வருந்தினைவல் வினமென்றூலு-முறையேற விட்டமுத லாகு மோ வெனச்சித்தென் றுரைக்கிலென்னா - நரையேற விட்டமுத னானவனைக் கொண்டுநறும் புலிசை மேவுங் - கரையேற விட்டமுதல்

வாவுன்னை யன்றியுமோர் கதியுண் டாமோ" என்று செய்யுளைப் பூர்த்திசெய்தருளினர்.

இங்ஙனம் உலகோபகாரமாகப் பலவுரைகளையும் பல நூல்களையும் பலகண்டனங்களையுஞ் செய்து பல நன்மாணுக்கர்களுக்குப் போதித்து, வடமொழியினுந் தென்மொழி சிறந்ததென்னும்படி அபிவிருத்திசெய்து, தவமே திருவுருக்கொண்டாற்போல விளங்கிச் சிவப்பேற்றிற்குக் காரணமாகிய நிட்டையில் வீற்றிருந்தருளிய திராவிடமகாபாடிய கர்த்தராகிய சிவஞானயோகிகள் திருவாவடுதுறையிலே சித்திரைமாசத்து ஆயிலிய நக்ஷத்திரத்திலே சிவபரிபூரணதசையை அடைந்தனர்.

இவர்காலம் இற்றைக்கு ௱௫0 வருடத்திற்கு முன்னெனப.

சிவஞானசுவாமிகளுக்கு இலக்கணம் சிதம்பரநாதமுனிவர், கச்சியப்பமுனிவர், தொட்டிக்கலைச் சுப்பிரமணியமுனிவர், காஞ்சீபுரம் சரவணபத்தர், இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளை முதலிய பன்னிரு மாணுக்கர் உளர்.

உரையாசிரியர் வரலாறு முற்றிற்று.

சிவஞானசுவாமிகள் திருநக்ஷத்திரம்.

மன்னும் விசுவா வசுவருட மேடமதி
யுன்னிரவி நாட்பகலோ தாயிலியம்—பன்னுந்
திருவாள னெங்கோன் சிவஞான தேவன்
றிருமேனி நீங்கு தினம்.

அதிகரணத் தொகை, வெண்பாத் தொகை.

	அதிகரணம்	வெண்பா
அவையடக்கம்		௧
முதற்சூத்திரம்	௩	௫
இரண்டாஞ் சூத்திரம்	௪	௧௦
மூன்றாஞ் சூத்திரம்	௭	௭
நான்காஞ் சூத்திரம்	௩	௭
ஐந்தாஞ் சூத்திரம்	௨	௪
ஆறாஞ் சூத்திரம்	௨	௬
ஏழாஞ் சூத்திரம்	௩	௫
எட்டாஞ் சூத்திரம்	௪	௯
ஒன்பதாஞ் சூத்திரம்	௩	௮
பத்தாஞ் சூத்திரம்	௨	௬
பதினொராஞ் சூத்திரம்	௨	௬
பன்னிரண்டாஞ் சூத்திரம்	௪	௮

ஆக அதிகரணம் ௩௯ வெண்பா ௮௨

உ

சிவமயம்.

வடமொழிச்
சிவஞானபோதம்
மூலமும் தமிழுரையும்.*

இந்நூல் நந்திபெருமானுக்குக் காமிக முதலிய இருபத்தெட்டு ஆகமங்களின் பொருளொருமை உணர்த்துதற்கு எழுந்ததாகலின் அவ்வாகமங்களின் சாரமாயுள்ளதாம். பன்னிரண்டு சூத்திரங்களையுடையது. இதிற் கூறப்படும் பொருள் பதி பசு பாசம் என்னும் திரிபதார்த்தங்களாம்.

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍁𑌂𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌾𑌦𑌿𑌭𑌾𑌵𑌾𑌜𑍍𑌜𑌗𑌤𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 ।
𑌅𑌸𑍍𑌤𑌿𑌕𑌰𑍍𑌤𑌾𑌸𑌹𑍃𑌤𑍍𑌵𑍈𑌤𑌤𑍍𑌸𑍃𑌜𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍍𑌹𑌰𑌃 ॥

ஸ்திரீபும்நபும்சகாதித் வாஜ்ஜகத: கார்யதர்சநாத் ।
அஸ்திகர்த்தாசகிருத்வைதத் சிருஜத்யஸ்மாத் பிரபுர்ஹர: ॥

(இ-ள்) 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍁𑌂𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌾𑌦𑌿𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 = பெண் ஆண் அலி என்னும் பகுப்பு முதலிய உண்மையால், 𑌕𑌾𑌰𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 = காரியத்தன்மை கரணப்படலால் (அதாவது தோன்றி நின்று ஒடுங்குதல் காணப்படலால்,) 𑌜𑌗𑌤𑌃=உலகத்திற்கு, 𑌕𑌰𑍍𑌤𑌾=ஆக்கியோனொருவன், 𑌅𑌸𑍍𑌤𑌿=உளன், 𑌸𑌃= அவன், 𑌏𑌤𑌤𑍍 = இப்பிரபஞ்சத்தை, 𑌹𑍃𑌤𑍍𑌵𑌾=ஒடுக்கி, 𑌸𑍃𑌜𑌤𑌿=மீளப்படைக்கிறான், 𑌅𑌸𑍍𑌮𑌾𑌤𑍍= இக்காரணத்தால், 𑌹𑌰𑌃 = சங்காரத்தைச் செய்யுங் கடவுளே, 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃=உலகத்தைத் தோற்றுவிக்கும் முதற்கடவுள் என்றவாறு.

* இவ்வுரை, . உபமந்யு பக்தவிலாசத்தை மூவர்பதிகங்களுடன் அச்சிட்டவர்களாகிய பிரம்மஸ்ரீ, சுந்தரேசுவர சாஸ்திரிகளால் பரிசோதிக்கப்பெற்றது.

முதலிய என்றதனுல், பல வேறுவகைத்தாய்ச் சடமாதலும், சுட்டியறியப்படுதலுங் கொள்ளப்படும். இதனை உடம்பொடு புணர்த்தலென்னும் உத்தியால் மெய்கண்டதேவர் பெறவைத்தனர்.

ஒடுக்கி மீளப்படைத்தல் எதன் பொருட்டு என்னும் வினு நிகழும் ஆதலின் அதுபற்றி ஆணவமலம் நீங்காமையால் என்பது சூத்திரத்தில் தொக்குநின்றது. இதனை, தொகுத்துச் செய்தல், விரித்துச் செய்தல், தொகுத்தும் விரித்தும் செய்தல், மொழிபெயர்த்தல் என்னும் நால்வகை நூல் யாப்பினுள் விரித்தல் யாப்பின்படி "மலத்துளதாம்" என மெய்கண்டதேவர் விரித்தருளினர்.

இச் சூத்திரம் காணப்பட்ட உலகத்தைக் கொண்டு காணப்படாத கடவுள் உண்டென்று அனுமானப் பிரமாணத்தால் சாதித்தது. இவ்வாறு சாதிக்கப்பட்ட காரணத் தன்மை நிமித்தகாரணத் தன்மையேயாம். எனவே, முதற்காரணம் துணைக்காரணங்கள் வேறுள என்பது இனிது விளங்கும். இவ்வுண்மை அறியாத தத்துவப்பிரகாசிகை உரையுடையார் நிமித்தகாரணமாயும், முதற்காரணமாயும் இறைவன் விளங்குகின்முன் என்பர். இவர் கூற்றுப் பொருந்தாமையை ருடு-ருசு-வது பக்கங்களிற் காண்க. இக் காரணத் தன்மையைத் தடத்த லக்கணம் என்றும் அவர் கூறுவர். தடத்தமாவது இலக்கியத்தில் ஓர் காலத்திருப்பது. குயவனிடத்தில் குடத்திற்குக் காரணமாந்தன்மை என்றும் உள்ளதாய், அதனைக் காரியப்படுத்துந் தன்மைமட்டும் ஒவ்வோர் காலத்திருத்தல்போல, முதல்வனிடத்தில் உலகத்தைக் காரியப்படுத்துந் தன்மைமட்டும் ஒவ்வோர் காலத்திருப்பதாம் என்பதும், அது இரண்டாஞ் சூத்திரப்பொருளாம் என்பதும், காரணத்தன்மை என்றும் உள்ளதாம் என்பதும் அவர் அறிந்திலர். அவ்வாருயின், முன்னுறுசூத்திரமும் தடத்தலக்கணங் கூறுதலின் பொது அதிகாரம் என்றதன் கருத்தென்னையெனின், அநுபவ அறிவால் அறியப்படாது ஆராய்ச்சி அறிவால் அறியப்படுவதுபற்றியேயன்றிப் பிறிதில்லையென்க.

𑌅𑌨𑍍𑌯𑌸𑌨𑍍𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌤𑍋𑌽𑌨𑌨𑍍𑌯𑌃 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑌤𑌃 ।
𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑌂𑌸𑍃𑌤𑌿𑌂 𑌪𑍁𑌂𑌸𑌾 𑌮𑌾𑌜𑍍𑌞𑌯𑌾 𑌸𑌮𑌵𑍇𑌤𑌯𑌾 ॥

அங்ய: சங் வியாப்திதோ நங்ய: கர்த்தா கர்மாநு சாரத: ।
கரோதி சம்சிருதிம் பும்ஸா மாஞ்ஞயா சமவேதயா ॥

(இ-ள்.) 𑌕𑌰𑍍𑌤𑌾 = மேற்கூறிய மகாசங்காரக் கடவுளாகிய சிவபிரான், 𑌅𑌨𑍍𑌯𑌸𑌨𑍍𑌅𑌪𑌿 = (பொருட்டன்மையால் உயிர்களுக்கு) வேருயினும், 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌤𑌃𑌅𑌨𑌨𑍍𑌯𑌃 = வியாபித்திருத்தலால் (கண்ணொளியும் ஆன்மபோதமும் போல) உடனுமாய் (நின்று), 𑌕𑌰𑍍𑌮

வெ தயா=தன்னைவிட்டு நீங்காத, ஆஜ்ஞயா = ஆணையெனப்படுஞ் சிற்சக்தியைக்கொண்டு, ப்ராணிநாம்=ஆன்மாக்களுக்கு, கர்மாநு ஸார.தஃ=அவற்றின் இருவினைகளுக்கிடாக, ஸம்ஸ்ருதிம்= இறத்தல் பிறத்தலை, கரோதி=செய்கின்றான் என்றவாறு.

உடனாய்நிற்றல் கூறவே, ஒன்றாய் நிற்றல் பெறப்பட்டவாறு காண்க.

இது பிரிப்பின்றி நிற்கும் சமவேத சத்தியாகிய திரோதானசத்தி உண்மையையும், இருவினை உண்மையையும் கூறுதலால் அத்திரோதான சத்தியால் செலுத்தப்படும் ஆணவமலமும், இருவினைக்குப் பற்றுக் கோடாகிய மாயையும், அவற்றின் காரியமுமாகிய ஐவகைப் பாசங்களின் உண்மையைக் கூறியவாறு காண்க.

இச்சூத்திரத்தில் வேறாயினும் என்பதற்கு உலகத்திற்கு வேறாயினும் என்று, த-பி உரையுடையார் கூறுவர். ஆன்மாக்களுக்கு இறத்தல் பிறத்தல்களைச் செய்கின்றான் என்று சூத்திரத்தில் இருப்பதால், அவ்வான்மாக்களோடு எவ்வாறு நின்று செய்கின்றான் என்னும் வினா நிகழும் என்பதும், அதுபற்றி, ஆன்மாக்களுக்கு வேறாயினும், வியாபித்திருத்தலால் அவற்றோடு கலந்து நிற்பன் எனக் கூறவேண்டுவது அவசியமாயிற்றென்பதும், உயிர்கள் இறைவனோடு கலந்து நிற்றலும், உலகம் இறைவனுள் அடங்கி நிற்றலும் முறைமையாதலின், அநந்யம் என்னுஞ் சொல்லானே உயிர்களென்பது தானே பெறப்படுமென்பதும் அவர் அறிந்திலர்.

இன்னும் அநந்யம் என்பதற்கு இறைவனைவிட வாஸ்தவத்தில் உலகம் என்பது ஒன்றுஇல்லை யென்றும், இருப்பதுபோலக் காண்பது கற்பிதமென்றும், இதற்கு மெய்கண்டதேவர் அருளிய திருவாக்கையும் அவர் எடுத்துக்காட்டுவர். அத்திருவாக்காவது "அத்துவிதம் என்ற சொல்லானே ஏகமென்னின் ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு" என்பதே. இத்திருவாக்கில் 'ஏகமென்னின்' என்றதனால் அத்துவிதத்திற்கு ஏகமென்று கொள்ளுதல் பூர்வபக்கமென்பதும் 'அந்நியநாத்தி' (அதாவது அநந்யம்) சித்தாந்தம் என்பதும், 'ஏகமென்று சுட்டுதல் அச் சித்தாந்தத்தை வலியுறுத்தும் ஏதுவாம் என்பதும, சுட்டுதல் உயிரின் தன்மையென்பதும், ஒரு பொருளாயின் அநந்யம் என்பதற்குப் பொருளே யில்லையென்பதும் அவர் அறிந்திலர்.

ந ததிதோதோ ஸ்ரீகார்யகோவாந்திவாயதஃ ।
ஸர்வெதிஹோர்மதோவாயவாஸ்யகாஸ்வு
ணாந்ஸநள ॥

நேதிதோ மமதோத்ரேகா தக்ஷோபரதிபோதத: ।
ஸ்வாபே நிர்போகதோ போதே போத்திருத்வாதஸ்தி
யணுஸ்தநௌ ॥

(இ-ள்.) நேதித:=(ஆன்மா) இலது என்றலானும், மமதோத்ரேகாத் = (உடம்பை) எனது என (பிறிதின் கிழமைப்பொருள் பட வழங்கும்) மிகுதிப்பாட்டானும்; அக்ஷோபாயத:=ஐம்பொறிகளைக்கொண்டு அறிதலானும்; உபரதிபோதத:=ஒடுக்கத்தை அறிதலானும் (அஃதாவது, கனவின்கண் நிகழ்ந்தவற்றை நனவின் கண்ணே மயங்கி அறிதலானும்); ஸ்வாபே நிர்போகத:=(சுழுத்தி துரியமாகிய) நித்திரையில் (பிராணவாயுவுக்கு) விடயங்களிடமாக வரும் இன்பதுன்ப நுகர்ச்சி இன்மையானும்; போதே போத்ருத்வாத் = (குருமுகமாக) ஞானம் உண்டானபொழுது அறிதலானும்; தநௌ அணு: அஸ்தி = உடம்பின்கண்ணே ஆன்மா என்பது ஒன்றுண்டு (எ-று).

இது சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணான்மவாதி, விஞ்ஞானான்மவாதி, சமூகான்மவாதி என்னும் எழுவரையும் மறுத்து இவற்றின்வேறாய் ஆன்மா எனப்படுவது ஒன்று உண்டு எனச் சாதித்தது.

போதே போத்ருத்வாத் என்பதற்கு ஜாக்கிரத்தில் அறியுந் தன்மை இருத்தலானும் என்று த-பி உரையுடையார் கூறுவர். நேதிதோ முதலிய மூன்றானும் ஜாக்கிரமும் அதன் பின்னர் முறையே சொப்பனமும், சுழுத்தியும் கூறிய பின்னர் மீண்டும் ஜாக்கிரம் கூறவேண்டாமையின் அது உரையன்மை அறிக. போத சப்தத்திற்கு ஜாக்கிரமென்றும் ஞானமென்றும் பொருள் கூறுதல் முறைமையாதலானும், அம்முறைமை நோக்கி முன்னொடு பின் முரணுதவண்ணம் பொருள் கொள்ளவேண்டுவது பொருள்கோள் முறைமையாதலானும், இவ்வுண்மை உணர்ந்த ஸ்ரீமெய்கண்டதேவர் போதே போத்திருத்வாத் என்பதற்கு "உணர்த்த உணர்தலின்" என்று மொழிபெயர்த்தனர்.

இன்னும், அக்ஷோபரதிபோதத: என்பதற்கு "இந்திரியங்களின் ஒடுக்கமாகிய சொப்பனத்தை அறிதலால்" என்றுகூறி இது இந்திரியான்மவாதியை மறுத்தது என்பர் த-பி உரையுடையார். இவ்வாறுகொள்ளின், சொப்பனத்தினை அறியும் சூக்குமதேகம் ஆன்மா என்பாரை மறுத்ததாகுமன்றி இந்திரியான்மவாதியை மறுத்ததாகாது. ஒவ்வொரு இந்திரியமும் தனக்குரிய ஒரு விடயத்தையேயன்றிப்பிறவிடயங்களை அறியாமையானும்,

ஐந்து விடயங்களையும் அறியும் அனுபவங் காணப்படுதலானும், இந்திரியம் ஆன்மா அன்று என மறுப்பதே முறைமை. ஆதலால் இந்திரியான்மவாதி சூக்குமதேகான்மவாதியாகிய இருவரையும் மறுப்பதற்கு, அசேஷாபாதிபோதத: என்பதை இருதொடராகப் பிரித்துப் பொருள் கொள்ளவேண்டுமாதலின் அது உரையன்மை அறிக. மெய்ப்பொருள் அறிந்த மெய்கண்டதேவநாயனார் இதனை "ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின்" என மொழிபெயர்த்து, "ஐம்புலன் அறிதலின், ஒடுக்கம் அறிதலின்" எனக்கண்ணழிவு செய்தனர்.

𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌾𑌦𑌨𑍍𑌯𑍋𑌽𑌪𑍍𑌯𑌨𑍍𑌵𑌿𑌤𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑍂𑌪𑌵𑌤𑍍 ।

𑌅𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌞𑍍𑌚𑌕𑌸𑍍𑌥𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌲𑌰𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌵𑌦𑍃𑌕𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌃 ॥

ஆத்மாந்தஃ கரணாதந்யோப் யந்விதோ மந்திரிபூபவத் ।
அவஸ்தா பஞ்சகஸ்தஸ்ஸயாந் மலருத்த ஸ்வதிருக்கிரிய: ॥

(இ-ள்) 𑌮𑌲𑌰𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌵𑌦𑍃𑌕𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌃 𑌆𑌤𑍍𑌮𑌾 = ஆணவமலத்தினால் மறைப்புண்ட தனது ஞானக்கிரியையுடைய ஆன்மா; 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌾𑌤𑍍 𑌅𑌨𑍍𑌯𑌃 அபி=(மன முதலிய) அந்தக்கரணங்களுக்கு வேறாயினும்; 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑍂𑌪𑌵𑌤𑍍 = (நுண்ணுணர் வின்மையிற் சூழ்ச்சித் துணைவராகிய) அமைச்சரோடு (கூடி நின்று தந்தொழில் நடாத்தும்) அரசன் போல; 𑌅𑌨𑍍𑌵𑌿𑌤𑌃=(அவ் வந்தக்கரணங்களோடு) கூடினவனாகி; 𑌅𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌞𑍍𑌚𑌕𑌸𑍍𑌥𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍= (சாக்கிர முதலிய) ஐந்து அவஸ்தையில் நிற்பவனாவன், (எ-று.)

இது சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்தவத்தையினை ஆன்மா உடையதாய் நிற்கும் என்று ஆன்மாவின் தடத்த இலக்கணம் கூறியவாறும்.

அவத்தை யென்னுஞ்சொல்லிற்குப் பொருள் நிலையென்பதாம். உயிரின்நிலை ஆணவத்தோடுகூடி நிற்றலும், கருவிகளோடுகூடி நிற்றலும், அருளோடுகூடி நிற்றலுமென மூவகையாம். அவை முறையே கேவலம் சகலம் சுத்தம் எனப்படும். அவற்றுள், கேவலம் இச்சூத்திரத்தும், சகலம் ஐந்தாஞ்சூத்திரத்தும், சுத்தம் ஆறாஞ்சூத்திரத்தும் கூறப்படும். இதனை உடுஅ-உடுகூம் பக்கங்களிற் காண்க.

துரியம், துரியாதீதமென்பது பந்தத்தாலாகிய அவத்தையிலும் உள என்பதை அறியாது சாக்கிர முதலிய மூன்றவத்தைகளே பந்தத்தாலாகியதென்றும் ஏனைய இரண்டும் பந்தநீக்கத்தில் உளவாம் என்றும் த-பி உரையுடையார் கூறுவர். சாக்கிர முதலிய மூன்றும் பந்தநீக்கத்திலும் நின்மலசாக்கிரம் முதலியனவாய் பெயர்பெறும் என்பதையும், தொகுத்துக் கூறிய

ஐந்தவத்தையினுள் மூன்று பந்தமாயும், இரண்டு முத்திஹேதுவாயும் அமைதல் பொருந்தாது என்பதையும் அவர் அறிந்திலர். பந்தமாகிய துரியம் துரியாதீதங்களின் இலக்கணத்தை இந்நூல் உடுஅ-வது பக்கத்திலும், சிவஞானசித்தியார் பொழிப்புரை ௬௬-வது பக்கத்திலுங் காண்க.

விதந்த்யக்ஷாணிபும்ஸார்த்தாந் ஸ்வயம் ஸோபி ஸம்புநா ।
தத்விகாரீ ஶிவஶ்சேந் நகாந்தோ யோவத்ஸதம்நயேத் ॥

விதந்தியக்ஷாணிபும்சார்த்தாந் நஸ்வயம் சோபிசம்புநா ।
தத்விகாரீ சிவச்சேந் நகாந்தோ யோவத்சதம்நயேத் ॥

(இ-ள்.) பும்ஸா அக்ஷாணி அர்த்தாந் விதந்தி = ஆன்மாவினலே (செலுத்தப்பட்டு) மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் இந்திரியங்கள் விஷயங்களை அறிகின்றன; ஸ்வயம்ந விதந்தி= தாமே அறியமாட்டா; (அதுபோல) ஸஃஅபி ஶம்புநா வேத்தி= ஆன்மாவும் சிவபெருமானலே (செலுத்தப்பட்டு) அறியும்; ஸ்வயம் நவேத்தி=(அது) தானே அறியமாட்டாது; தத்–அதனல், ஶிவஃ விகாரீ இதிசேத் = சிவன் விகாரியாவானே எனின்; ந = ஆவதில்லை, ஸஃ=அவன், காந்தஃ அயோவத் = காந்தம் (விகாரமின்றி நின்று) இரும்பை (தன் சந்நிதிமாத்திரையின் வலித்துக்கொள்ளுமாறு) போல; தம் நயேத் = அந்த ஆன்மாவைச் (சங்கற்ப மாத்திரையினல் விகாரமின்றி நின்று) செலுத்துவன் (எ-று.)

இது இந்திரியங்கள் உயிரால்விடயங்களை அறிவதுபோல உயிர் சிவனல் விடயங்களை அறியும் எனப் பாசஇலக்கணங் கூறியவாறும். இந்திரியங்களுக்குக் கருவியாயிருந்து அறியுந்தன்மையேயன்றிக் கருத்தாவாயிருந்து அறியுந்தன்மைஇல்லை என்பதும், உயிரைச் சிவபெருமான் செலுத்துதல் திரோதானசத்தியால் ஆதலின் அத்திரோதானசத்தி உயிர்களின் கன்மத்துக்கேற்றவாறு செலுத்தும் என்பதும் இங்கேகூறிய பாசஇலக்கணமாம்.

இதற்கு இந்திரிய வாயிலாகப் புருடன் அறிவதுபோலச் சீவன் வாயிலாகச் சிவனே அறிகின்ருன் என்று த-பி உரையுடையார் கூறுவர். இந்திரியம் உயிரால் அறியும் என்று சூத்திரத்திற் கூறியிருக்கவும் அவ்விந்திரியம் உயிருக்குக் கருவியாய் நின்று அறியும் அநுபவத்தையொட்டிச் சீவன் வாயிலாகச் சிவன் அறிகின்ருன் என்றனர் போலும். இங்கே உயிரால் இந்திரியங்கள் அறிதல்மட்டும் உவமையேயன்றி அறிதலின் பயன் இந்திரியத்திற்கா? உயிருக்கா? என்பது விஷயமன்று. ஆதலின் இதனை ஒருபுடை உவமையாகக் கொள்ளல்வேண்டும். இவ்வாறு கொள்ளாமல் முற்றுவமையாகக்கொள்ளின் இந்திரியங்களையின்றிச் சுதந்திரமாக அறி

யுந்தன்மை உயிருக்கில்லாதவாறு போலச் சீவனின்றிச் சுதந்திரமாய் அறியுந்தன்மை சிவனுக்கில்லை எனப்பட்டுச் சிவன் சுவதந்திரன் என்பதற்கு இழுக்காகும். ஆதலால் அவ்வுரை பொருந்தாமை காண்க.

𑌅𑌦𑍃𑌶𑍍𑌯𑌞𑍍𑌚𑍇𑌦𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑌞𑍍𑌚𑍇𑌜𑍍𑌜𑌡𑌿𑌮𑌾𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌶𑌂𑌭𑍋𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑍇𑌣 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌰𑍂𑌪𑌂𑌵𑌿𑌦𑍁𑌰𑍍𑌬𑍁𑌧𑌾𑌃

அதிர்ச்யம் சேதசத்பாவோ திருச்யஞ் சேஜ்ஜடிமாபவேத் ।
சம்போ ஸ்தத்வியதிரேகேண ஜ்ஞேயம் ரூபம் விதுர்புதா: ॥

(இ-ள்.) 𑌶𑌂𑌭𑍋𑌃𑌰𑍂𑌪𑌂= சிவனுடைய சொரூபமானது; 𑌅𑌦𑍃𑌶𑍍𑌯𑌂 𑌚𑍇𑌤𑍍=(ஒருவாற்றானும்)அறியப்படாததாயின்; 𑌤𑌸𑍍𑌯 𑌅𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑌃 𑌭𑌵𑍇𑌤𑍍=அச்சம்புவிற்கு (முயற்கோடுபோல) இலதாம தன்மை உளதாம்; 𑌦𑍃𑌶𑍍𑌯𑌂𑌚𑍇𑌤𑍍 = (கடமுதலிபபோலச் சுட்டி) அறியப்படுவதாயின்; (𑌤𑌸𑍍𑌯) 𑌜𑌡𑌿𑌮𑌾𑌭𑌵𑍇𑌤𑍍=(யாது சுட்டி அறியப்படுவது அது சடமெனப் படுமாதலின்) அச்சம்புவிற்குச் சடத்தன்மை உளதாம் (ஆதலால்); 𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑍇𑌣=(அறியப்படாமையும் அறியப்படுகையுமாகிய) அவ்விரண்டிற்கும் வேறாய் (பதிஞானத்தினல்); 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 (𑌰𑍂𑌪𑌂) 𑌬𑍁𑌧𑌾𑌃𑌵𑌿𑌦𑍁𑌃=அறியப்படுவது (என்று) ஞானிகள் அறிகின்றார்கள் (எ-று.)

இது சிவசொரூபம் பாசஞான பசுஞானங்களால் அறியப்படாது சிவஞானம் ஒன்றானே அறியப்படும் எனப் பதிக்கு இலக்கணம்கூறியவாறும். இது சொரூபலக்கணம் எனப்படும்.

இச்சூத்திரத்திற்கு "துவம்பதலக்ஷியமான சித்தே தத்பதலக்ஷியமான சிவமென்பதறிவிக்கப்பட்டது" என்று த-பி உரையுடையார் கூறுவர். இவர்கூற்றுக்குச் சூத்திரத்தில் ஆதாரமில்லை. உள்ளபதத்திற்கு வேறு வேறுபொருள் கூறும் உரையாசிரியர்கள் உண்டு. பதம் இல்லாமலே பொருள்கூறும் உரையாசிரியரை இதுவரை கண்டிலம். அன்றியும் சிவத்தன்மையின்வேறாய் சிவனோடு அநந்யமாய் உள்ள உயிர்ப்பொருள் ஒன்று நித்தமாயின்றேல் இன்பஅனுபவமும் அனுபவிக்கப்படும்பொருளும்இல்லையெனப்பட்டுச் சூனியமாய் முடியுமாதலின் அது உரையன்மைஅறிக.

𑌨𑌾𑌚𑌿𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌨𑌵𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌤𑍇 𑌉𑌭𑍇 𑌮𑌿𑌥𑌃 ।
𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌶𑌿𑌵𑌯𑍋𑌰𑍍𑌵𑍇𑌤𑍍𑌤𑌾 𑌯𑌃 𑌸 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌤𑌯𑍋𑌃𑌪𑍃𑌥𑌕𑍍 ॥

நாசிச் சித்சந்நிதௌவேத்தி நவித்தஸ்தே உபே மித: ।
பிரபஞ்ச சிவயோர் வேத்தாய: ச ஆத்மா தயோ: பிருதக் ॥

(இ-ள்.) சித்ஸந்நிதௌ அசித் ந வேத்தி= (சிவனாகிய) சித்தின் சன்னிதியில் (பிரபஞ்சமாகிய) அசித்து (சிவனை) அறியமாட்டாது (விளங்கித் தோன்றாது என்றபடி. ஆதலின்); தே உபே அபி ந வித்த:=சிவம், பிரபஞ்சம் என்னும் இரண்டும் ஒன்றையொன்று அறிய மாட்டா; ய: ப்ரபஞ்சசிவயோ: வேத்தா=எவன் பிரபஞ்சத்தையும் சிவனையும் அறிகின்றானோ; ஸ: = அவன் ; தயோர்வ்யதிரிக்த ஆத்மாஸ்யாத்=அவ்விரண்டிற்கும் வேறாகிய ஆன்மாவாம் (எ-று.)

இது சத்தோடுசேர்ந்து சத்தாயும், அசத்தோடுசேர்ந்து அசத்தாயும் சத்து அசத்து இரண்டனையும் அறியும்பொருள் ஆன்மாஎன ஆன்மாவின் சொரூபலக்கணம் கூறியவாறும். இரண்டனையுஞ் சார்ந்து அதுவதுவாய் நின்று அறியுந்தன்மை உடைமையால் ஆன்மா சதசத்தெனப்படும்.

இதற்கு "அஞ்ஞானதசையில் ஜீவத்துவத்தோடிருத்தலின் ஜீவன் உளன் என்று சத்ரூபனாயும், அஞ்ஞானம் நீங்கிய முத்தித்தசையில் ஜீவத்துவம் நீங்கிச் சிவமாதலின் ஜீவன் இலனென்று அசத்ரூபனாயுமிருத்தலால் சதசத்ரூபனும்" என்பர் த-பி உரையுடையார். இவர் "சார்ந்ததன் வண்ணமாந் தன்மையை யுடையது ஆன்மா" என்னும் உண்மையை உணர்ந்திருப்பரேல் அவ்வாறு கூறார். இன்னும் இதுபற்றிய சங்கை உத்தரங்களும் மற்றும் அவர்கூறும் கூற்றுக்களும் அவை பொருந்தாமையும் ௯௯௮-௯௯௯ வது பக்கங்களிற் காண்க.

ஸ்தித்வாச ஸஹேந்த்ரியவ்யாதைஸ்த்வாம் ந வேத்ஸீதி போதித: ।
முக்த்வைதாந் குருணாநந்யோ தந்ய: ப்ராப்நோதி தத்பதம் ॥

ஸ்தித்வாச ஹேந்த்திரிய வியாதைஸ்துவாம் நவேத்சீதிபோதித: ।
முக்திவைதாங் குருணாநங்யோ தங்ய: பிராப்நோதிதத்பதம் ॥

(இ-ள்.) இந்த்ரியவ்யாதை: ஸஹஸ்தித்வா=(நீ) ஐம்பொறிகளாகிய வேடரோடு கூடியிருந்து; த்வாம் ந வேத்ஸி இதி = உன் பெருமை அறிந்தாயில்லை என்று; குருணா=ஞானசாரியராலே; போதித:=அறிவுறுத்தப்பட்டவனாகிய; தந்ய: =(முன் செய்து கொள்ளப்பட்ட) புண்ணியமுடைய ஆன்மாவானவன்; ஏதாந் முக்த்வா=இவ்வைம்பொறிகளாகிய வேடரைவிட்டு; அநந்ய: தத்பதம் ப்ராப்நோதி = அநந்யனாய்ச் சிவனுடைய திருவடியை அடைகின்றான் (எ-று.)

இது ஞானசாரியனால் உபதேசிக்கப்படும் ஞானத்தால் சிவபெருமான் திருவடியை உயிர் அடையுமெனத் திருவடியடைதற்குச் சாதனங் கூறிய வாறும்.

இதற்குக் "கடமுடைந்தவிடத்து கடாகாயம் மகாகாயமாமாறுபோல ஜீவனே சிவமாயிற்று" என்பதாதியாகப் பலபடக்கூறுவர் த-பி உரையுடையார். கடாகாய மகாகாய உவமை கட்டுப்பட்டிருத்தற்கும் கட்டுப்படாதிருத்தற்குமட்டுமே யன்றி ஒரு பொருளே இருதன்மைப்பட்டு நிற்பதற்கு அன்று. இதுபற்றிய சங்கை உத்தரங்களையெல்லாம் ரகூசு.ரகூஎ-வது பக்கங்களிற் காண்க.

சித்³ருஶாத்மநி த்³ருஷ்ட்வேஶம் த்யக்த்வா வ்ருத்திம் மரீசிகாம் ।
லப்³த்⁴வா ஶிவபத³ச்சா²யாம் த்⁴யாயேத் பஞ்சாக்ஷரீம் ஸுதீ⁴: ॥

சித்திருசாத்ம நித்ருஷ்ட்வே சம்த்யக்துவாவ் ருத்திம்மரீசிகாம் ।
லப்த்வாசிவ பதச்சாயாம் த்யாயேத் பஞ்சாக்ஷரீம் சுதீ: ॥

(இ-ள்.) ஸுதீ⁴: =நற்புத்திமானானவன்; ஆத்மநி ஈஶம் சித்³ருஶா த்³ருஷ்ட்வா=ஆன்மாவாகிய தன் அறிவின்கண்ணே முதல்வனை சிவஞானக்கண்ணினாலே கண்டு; மரீசிகாம் வ்ருத்திம் த்யக்த்வா = கானற்சலம்போலும் (நிலையில்லாத பிரபஞ்ச) வியாபாரத்தை விடுத்து; ஶிவபத³ச்சா²யாம் லப்³த்⁴வா=சிவனது திருவடிநிழலை அடைந்து; பஞ்சாக்ஷரீம் த்⁴யாயேத் = (அன்னிலை வழுவாவண்ணம்) முத்தி பஞ்சாக்ஷரத்தைத் தியானிக்கக் கடவன் (எ-று.)

இது சிவபெருமானைத் தன் அறிவின்கண்ணே தியானிக்கவேண்டுமெனச் சாதிக்குமுறை கூறியவாறும்.

இதற்கு "ஆரோபிதமான தன்னிடத்தில் தனது அதிஷ்டான ஸ்வரூபமான சத்திய சிவத்தினை அறியவேண்டும்" என்று கூறுவார் த-பி உரையுடையார். இவ்வாறு கூறுதற்குச் சூத்திரத்தில் ஆதாரமில்லை. அன்றியும், ஆரோபிதமான தன்னிடத்தில் அறியப்படுவதும் ஆரோபிதமாகுமன்றி உண்மையாகுமா? ஆதலின் அது உரையன்மை அறிக. இன்னும் கானற்சல உவமை. உலகம் பொய்என்பதை உணர்த்திற்று என்பர். அவ்வுவமை நிலை பேறின்மை உணர்த்துதற்கேயன்றி வேறில்லை. இதனை ரூ0டு-வது பக்கத்திற்காண்க.

ஶிவேநைக்யம் க³த: ஸித்³த⁴ஸ்ததா⁴தீ⁴நஸ்வவ்ருத்திக: ।
மலமாயாத்³யஸம்ஸ்ப்ருஷ்டோ ப⁴வதி ஸ்வாநுபூ⁴திமான் ॥

சிவேனைக்யம் கத꞉ சித்கஸ்ததீந꞉ ஸ்வவிருத்திக꞉ ।
மலமாயாத்ப சம்ஸ்பிஷ்டோ பவதிஸ்வாநுபூதிமாந் ॥

(இ-ள்) 𑌶𑌿𑌵𑍇𑌨 𑌐𑌕𑍍𑌯𑌂 𑌗𑌤𑌃 𑌚𑌿𑌤𑍍𑌕𑌃 = சிவனோடு ஒற்றுமைப்பட்டுச் சின்மாத்திரையாக நின்ற ஆன்மா; 𑌤𑌦𑌧𑍀𑌨𑌸𑍍𑌵𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌃 = அச்சிவன் வயத்தனுதலாகிய தன் விருத்தியை யுடையனாய்; 𑌮𑌲𑌮𑌾𑌯𑌾𑌦𑍍𑌯𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌃 = மலம் மாயை முதலியவற்றால்பற்றபடாதவனாய்; 𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌮𑌾𑌨𑍍 𑌭𑌵𑌤𑌿 = சுவாநுபூதியாகிய சிவபோகமுடையனாவன் (எ-று.)

இது பாசவிடுதி, சிவப்பேறு என்னும் பயன் இரண்டனுள் பாசவிடுதியாகிய பயன்கூறியவாறும்.

இதற்கு "சீவன்முத்தன் இயல்பு கூறிற்று" எனக் கூறுவர் த-பி உரையுடையார். அது பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் கூறப்படுகின்றமையால் அவ்வுரை பொருந்தாமை காண்க.

இச் சூத்திரத்தில் ஒற்றுமைப்பட்டு நிற்கும் என்று கூறிய ஐக்கியத்திற்கு இருபொருளுண்மை உண்டென்றல் பொருந்தா உரையெனவும், இரண்டறக்கலத்தல் என்பதற்கு ஒன்றெனப்படுதே பொருள் எனவும் கூறி மெய்கண்டதேவர் "ஏகனாகி" என்றும் "ஏகனாய்நிற்க" என்றும் அருளிய திருவாக்குக்களும் இருபொருள் உண்மையை மறுத்தசென்றும் அவர்கூறுவர். ஒரிபொருளாகவே யிருப்பின் ஐக்கியமென்ற சொல்லுக்குப் பொருளேயில்லை. மாறுபட்ட இருபொருளாகயிருப்பின் ஐக்கியமாதல்கூடாது. ஆகவே ஒருவாற்றால் ஒற்றுமையும் ஒருவாற்றால் வேற்றுமையும் உடைய இருபொருள்கள்தான் ஐக்கியத்திற்கு உரிமையுடையனவாம் ஆதலால் சித்து என்னுஞ் சாதிப்பொதுமையால் ஒற்றுமையும், பேரறிவு சிற்றறிவு என்னுந் தன்மையால் வேற்றுமையும் இறைவனுக்கும் உயிருக்கும் உடைமையால் அவ்விருபொருள்களும் ஐக்கியமாதல் கூடும். சார்ந்ததன்வண்ணமாந் தன்மையுடைய உயிர் இறைவனைச் சார்ந்தவிடத்து இறைவனேயாய் தன் தன்மை ஒரு சிறிதுந் தோன்றாதவாறு நிற்றலே "ஏகனாகி" என்றும் "ஏகனாய்நிற்க" எனறும் மெய்கண்டதேவர் அருளிய திருவாக்குகளுக்குப் பொருள் என்பது "தானென ஒன்றின்றியே தானதுவாய்" என அவர் அருளிய திருவாக்கே நன்கு விளக்கும். ஆதலின் அவ்வுரை பொருந்தாமை காண்க.

𑌦𑍃𑌶𑍋𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑌾 𑌶𑌿𑌵𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌪𑌰𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑍋𑌪𑌕𑌾𑌰𑌕𑍇 ॥

திருசோர் தர்சயிதா சாத்மாதஸ்ய தர்சயிதா சிவ꞉ ।
தஸ்மாத் தஸ்மிந் பராம் பக்திம் குர்யாதாத்மோபகாரகே ॥

(இ-ள்.) 𑌦𑍃𑌶𑍋𑌃 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑌾 𑌚 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾=கண்களுக்கு (உருவத்தைக்) காட்டுபவனும் (அவற்றோடு ஒற்றித்து நின்று) காண்பவனும் ஆன்மாவாம்; 𑌤𑌸𑍍𑌯 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑌾 𑌚 𑌶𑌿𑌵𑌃 = (அதுபோல) அவ்வான்மாவுக்கு (விஷயத்தைக்) காட்டுபவனும், (அவ்வான்மாவோடு ஒற்றித்து நின்று) காண்பவனும் சிவனே, 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 = ஆதலின்; 𑌆𑌤𑍍𑌮𑍋𑌪𑌕𑌾𑌰𑌕𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 = ஆன்மாவுக்கு உபகரிப்பவனான அச்சிவனிடத்தில்; 𑌪𑌰𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 = மேலானபக்தியைச் செய்யக்கடவன் (எ-று.

மேலான பக்தியாவது இடைவிடாத பக்தி. இதனை "அயரா அன்பு" என மெய்கண்டதேவர் மொழிபெயர்த்தனர். இது சிவப்பேறுகிய பயன் கூறியவாறும், பத்தாஞ்சூத்திரத்தில், " ஸ்வாநுபூதிமாந் " என்றுகூறியதைப் பதினொராஞ்சூத்திரத்தில் "அரன்கழல்செலும்" என ஸ்ரீமெய்கண்டதேவர் மொழிபெயர்த்தருளினர். அவ்வாறு மொழியெயர்த்தற்குரியகாரணம் முதலியன, ௩௨அ ௩௨கும் பக்கங்களிற்காண்க.

ஆன்மாவிற்குக் காணும் உபகாரத்தை இறைவன் செய்வன் என்றதனுல் முத்தியிலும் அவ்வாறு செய்வன் எனப்பட்டு அங்கே காணப்படும் பொருள் தானுதலால், தன்னைப்பற்றுதல் என்னும் குற்றம்வாராதோ என்ற சங்கைக்குக் கண் கண்ணுடிக்குள்ளாகத் தன்னைக் காண்டலை எடுத்துக் காட்டிக் குற்றம் ஆகாதென உரையாசிரியர் அருளிச்செய்தனர். இவ்வுண் அறியாதார் விம்பப்பிரதிவிம்பவாதம் சிவஞானசுவாமிகளுக்கும் உடன்பாடென்பர். இதுபற்றிய சங்கை உத்தரங்களை ௩௩௨ம் பக்கத்திற்காண்க. அன்றியும், விம்பப்பிரதிவிம்பவாதத்தில் விம்பம் சிவனும், பிரதிவிம்பம் சீவனும், பிரதிவிம்பத்திற்கு ஆதாரம் அந்தக்கரணமுமாம். இங்கே, விம்பமும் சிவன். பிரதிவிம்பமும் சிவன். பிரதிவிம்பத்திற்கு ஆதாரம் சீவன். இவ்வுணமையினையும் உற்றுநோக்காது சொல்லளவிலே ஒற்றுமைகூறுவது எத்துணைப்பொருத்தமுடைத்தென்பதை அறிஞர்அறிவர்.

𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑍈 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌸𑌤𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌭𑌜𑍇𑌦𑍍𑌵𑍇𑌷𑌂 𑌶𑌿𑌵𑌾𑌲𑌯𑌮𑍍
𑌏𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑌿𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌬𑍋𑌧𑍇 𑌶𑍈𑌵𑌾𑌰𑍍𑌥𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌮𑍍 ॥

முக்தியை பிராப்ய சதஸ்தேஷாம் பஜேத்வேஷம் சிவாலயம் ।
ஏவம் வித்யாச்சிவஞ்ஞாந போதேசைவார்த்தநிர்ணயம் ॥

(இ-ள்) 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑍈 𑌸𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 = முத்தியின்பொருட்டுச் சீவன் முத்தர்களை அடைந்து, - 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌵𑍇𑌷𑌂 𑌶𑌿𑌵𑌾𑌲𑌯𑌂 𑌭𑌜𑍇𑌤𑍍=அவர்களுடைய திருவேடத்தையும் சிவாலயத்தையும் வழி

படேத், - ஏவம் = இவ்வாறே, - ஶிவஜ்ஞாநபோதே = சிவஞானபோதமென்னும் இந்நூலில், - ஶைவார்த்தநிர்ணயம் வித்யாத் = சைவாகமங்களின் பொருள் நிச்சயத்தை அறிக (எ-று.)

இது சீவன்முத்தர் இயல்பு கூறியவாறும்.

இதற்கு ஞானவாயிலாக முத்தியைப் பெறுவதற்கு முக்கிய சாதனங் கூறிற்றெனவும், சீவன்முத்தர் இயல்புகூறிற்றென்றல் அரைத்ததனை மறுபடியும் அரைத்தலாகிய பிஷ்டபேஷணநியாயமாவதோடு முற்சூத்திரங்களிலும் சுருதியாதிகளிலுங் கூறப்பட்டுள்ளவற்றிற்கு விரோதமெனவுங் கூறுவர் த-பி உரையுடையார். முக்கியசாதனம் என்பது முத்திக்கோ? ஞானத்திற்கோ? முத்திக்கெனின், ஞானம் முக்கிய சாதனம் அன்றாகவேண்டும். அன்றியும், ஞானவாயிலாக என்றதனோடும் முரணும், ஞானத்திற்கெனின், "அநேகஜன்மங்களாற்செய்துவந்த சரியாகிரியா யோகங்களால் இருவினையொப்பு மலபரிபாகம்வந்த சத்திநிபாதத்துத்தமன்" என எட்டாஞ்சூத்திரத்திற் கூறுதலினாலேயே,ஞானத்திற்குச் சாதனம்,சரியை கிரியை யோகங்களென்பதூஉம், அவை முன்னரே சித்தித்துள்ளன என்பதூஉம் பெறப்பட்டமையின் மீண்டுங் கூறுதல் பிஷ்டபேஷணநியாயமாம் ஆதலின் அவ்வுரை பொருந்தாமை காண்க.

அவ்வாறாயின், முத்தியின்பொருட்டு என்று கூறுவானேன் எனின், முத்தியின்பொருட்டென்பதற்கு அடைந்தமுத்தி நிலைத்தற்பொருட்டு என்பதேபொருள். முத்தி சித்தித்தற்பொருட்டு எனின், பத்தாம் சூத்திரத்தில் சுவாநுபூதிமான் என்றதனோடு முரணும், சுவாநுபூதிமானினும், உடம்புஉள்ளஅளவும் அதுநிலைத்தற்பொருட்டுச் சாதனஞ் செய்யவேண்டுமென்பதும், இன்றேல் நிலையாதென்பதும், "ஆனாலுந்தடைகளுண்டேல் அநுபவமுறைத்திடாதே" என்பது முதலியனவாய்க் கூறும் கைவல்யச் செய்யுளானும் அறியக்கிடக்கவும், அதனையும் நோக்காது பிஷ்டபேஷணநியாயமென்றது யாதுபற்றியோ. இவ்வுண்மை யுணர்ந்த ஸ்ரீமெய்கண்டதேவநாயனார், முத்தியின்பொருட்டென்றதை, "செம்மலர்நோன்றாள் சேரலொட்டா அம்மலங்கழீஇ" என மொழிபெயர்த்தனர்.

ஏவம்வித்யாச்சிவஞானபோதே சைவார்த்தநிர்ணயம் என்பதை மலைவு இல்லையாகச்செய்தவர் எனமங்கலவாழ்த்தில் ஸ்ரீமெய்கண்டதேவர் மொழிபெயர்த்தவாறு காண்க.

வடமொழிச் சிவஞானபோதம் மூலமும்

தமிழுரையும் முற்றிற்று,

சிவமயம்.

சூர்ணிக்கொத்து.*

முதற்சூத்திரம்.

க—சகம்பிறப்பு இருப்பு இறப்பு ஆகிய முத்தொழிலை உடையது.

உ—அது அரனாலே உடையது.

௩—மற்றிருவரும் முத்தொழிற் படுவர்கள.

இரண்டாஞ் சூத்திரம்.

க—அரன் உயிர்களின் இரண்டற நிற்பன்.

உ—உயிர்களுக்குக் கன்மபலனை அரனே கொடுப்பன்.

௩—உயிர்கள் அச்சுமாறியே பிறக்கும்.

௪—அரன் சருவவியாபகன்.

மூன்றாஞ் சூத்திரம்.

க—இல்லை யென்கிற அறிவுடனே சொல்லுகையினாலே, அறிவுயிர்உண்டு.

உ—எனது உடல்என்று பொருட்பிறிதின் கிழமையாகச் சொல்லுகையினாலே, உடற்குவேறாய் உயிருண்டு.

௩—ஐந்தையும் ஒருவனே அறிதலின், ஒவ்வொன்றை மாத்திரம் அறிகிற ஐந்திற்கு வேறாய் உயிர்உண்டு.

௪—கனவுடலைவிட்டு நனவுடலிலே வருகையினாலே, அக்கனவுடற்கு வேறாய் உயிர்உண்டு.

௫—நித்திரையினும் பிராணவாயுத்தொழில் பண்ணவும் சரீரத்துக்குப் புசிப்புந்தொழிலும் இல்லாதபடியினாலே, பிராணவாயுவுக்குவேறாய் உயிர்உண்டு.

* இது பொல்லாப்பிள்ளையார் அருளியதென்பர். சிவஞானசுவாமிகள் தம் உரையில்யாண்டும் எடுத்தாளவில்லை.

சு—மறந்து மறந்து நினைக்கிறபடியினாலே, மறவாமல் இருக்கிற அரனுக்கு வேறாய் உயிர்உண்டு.

எ—எல்லாத் தத்துவங்களுக்கும் வேறு வேறுபெயர் இருக்கையினாலே, அந்தந்தத் தத்துவங்களுக்கு வேறாய் உயிர்உண்டு.

நான்காஞ் சூத்திரம்

க—அந்தக் காரணங்களுக்கு உயிர் உட்கூடினாலன்றித் தொழில் இல்லாதபடியினாலே, அந்தக்கரணங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.

உ—மலமறைப்பால் உயிருக்கு அறிவில்லை.

ங—உயிர் மூன்றவத்தைப்படும்.

ஐந்தாஞ் சூத்திரம்

—உயிராலே தத்துவங்களெல்லாந் தொழிற்படும்.

—அரனாலே உயிர்களெல்லாம் அறியும்.

ஆறாஞ் சூத்திரம்.

க—உயிர் அறிவினாலே அறியப்பட்டவெல்லாம் அழியும்.

உ—அப்பிரமேயமாக அறியப்பட்டவனே அரன்.

ஏழாஞ் சூத்திரம்

க—அரன்பாசத்தை அநுபவியான்.

உ—பாசம் அரனை அநுபவியாது.

ங—உயிர் *அவ்விரண்டனையும் அநுபவிக்கும்.

எட்டாஞ் சூத்திரம்

க—உயிருக்கு நல்லிவ தவத்தினாலேயேவரும்.

உ—உயிருக்குச் சற்குருவாய்வருவது அரனே.

ங—உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுகையாலே தன்னையும் அறியமாட்டாது.

ச—உயிர் பஞ்சேந்திரியங்களிலே பற்றற்றால் தன்னையும் அறியும்.

* அவ்வரனை அடையும்; அநுபவிக்கும் என்றும் பாடம்.

ஒன்பதாஞ் சூத்திரம்

க—உயிர் அரன் ஞானத்தினலேயே அரனைக்காணும்.
உ—உயிர் பாசத்திலே பற்றற்றால், அரன் வெளிப்படுவன்.
ங—பஞ்சாக்ஷர செபம்பண்ணினல், வாசனைமலம்போம்.

பத்தாஞ் சூத்திரம்

க—அரனுடன் ஒன்றாகிநில்.
உ—உன்றொழிலெல்லாம் அரன் பணியென்றுகொள்.

பதினொராஞ் சூத்திரம்

க—ஞானிக்கு வருகிற விடயங்களை அரனே அநுபவிப்பன்.
உ—அரனை மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத்திலே ஐக்கியமாய்ப்போவன்.

பன்னிரண்டாஞ் சூத்திரம்

க—மும்மலங்களையுங்களைக.
உ—சிவஞானிகளுடனே கூடுக.
ங—சிவஞானிகளையும் சிவலிங்கத்தையும் சிவனெனவே தேறி வழிபடுக.
ச—வழிபடாமையை ஒழிக.

ஆகசூத்திரம் கஉ-க்குச் சூர்ணிக்கொத்து ஙக

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞானபோதச்

சிற்றுரைவிளக்கம்.

மாதவச் சிவஞானயோகிகள் அருளிச்செய்த குருவணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி காட்டும் வெண்ணெய்ப், பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான பானு வாகிக், குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி வாய தேவன், சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி தழைக மாதோ.

சிறப்புப்பாயிரம்.

சிற்றுரை.

சைவாகமங்களினுள்ளவாகிய நாற்பாதங்களுள் வைத்து ஞானபாதத்தோதிய பொருள்களை யாவையும் ஆராய்ச்சி இந்நூலின்கணெடுத்துக் கொள்ளப்பட்டது. இது கேட்டலுறுவார்க்கு இதனாற் போந்த பயன் யாதோவெனவும், இதுகேட்டற்குரியார் யாவரெனவும், இதனானுதலப்படும் பொருள் யாதெனவும், இதனைப் பயப்பிக்குங் கருவியாய் இதற்குமுன் ஒருதலையானுணர்தற்பாலதியாதெனவும், இதனை வழங்குதற்கிட்ட பெயர் யாதெனவும், இஃதியாண்டு வழங்குவதெனவும், இதன் முதனூல் யாதெனவும், இந்நூல் செய்தார் யாவரெனவும் பலவாற்றானுஞ்சங்கை நிகழுமன்றே: அவ்வாசங்கை நீங்கி மனவெழுச்சி சேறற்பொருட்டு இந்நூன்முகத்துரைக்கப்படுவதாகிய சிறப்புப்பாயிரம்.

விளக்கம்.

சைவாகமங்களிற் கூறப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்கு பாதங்களுள் ஞான பாதத்திற் கூறப்படும் பதி, பசு, பாச

மென்னும் முப்பொருள்களை ஆராயும் ஆராய்ச்சி இந்நூலின்கண் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்நூல் கேட்க விரும்புவார்க்கு இதனுட் கூறப்படும் பயன் யாது?, இதனைக்கேட்டற்குரிய அதிகாரி யாவர்?, இந்நூலிற்சொல்லப்படும் பொருள் யாது?, இந்நூலை அறிதற்குக் கருவியாய் இந்நூல் படிப்பதற்குமுன் படிக்கவேண்டும் நூல் யாது?, இந்நூற் பெயர்யாது?, இந்நூல் எவ்விடத்து வழங்குவது?, இந்நூற்கு முதனூல் யாது? இந்நூல் செய்தார் யாவர்? எனப் பல ஆசங்கைகள் நிகழுமன்றே; அவ்வாசங்கைகள் நீங்கினாலன்றி நூலிற் பிரவேசிப்பதற்கு மன எழுச்சி உண்டாகாது. மன எழுச்சி உண்டாதற்பொருட்டு அவ்வாசங்கைகளை இச்சிறப்புப்பாயிரத்தால் நீக்குகின்றார். ஆகவே, அவ்வாசங்கைகளை நீக்குவதான எட்டுறுப்புக்களையுடையது இச்சிறப்புப்பாயிரம் என்றவாறும்.

நேரிசையாசிரியப்பா.

மலர்தலை யுலகின் மாயிரு டுமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போ லீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருடீர்ந்
தருந்துயர்க் குரம்பையி னான்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
வுயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே—எனவரும்.

சிற்றுரை.

(இதன் பொருள்.) மலர் தலை உலகின் மா இருள் துமியப் பலர் புகழ் ஞாயிறு படரின் அல்லதைக் காண்டல் செல்லாக் கண் போல்—விரிந்த இடத்தையுடைய ஞாலத்தின்கண்ணே (துன்னிய) பெரிய புறவிருள் கெடும்படி பலசமயத்தாராலும் புகழப்படுகின்ற பரிதியங்கடவுள் (உதயகிரியினின்றும்) போந்தாலன்றிக் காட்சியெய்தமாட்டாத கண்ணொளிபோல,—அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி—பொறுத்தற்கரிய துயரங்களுக்கெல்லாம் (ஒரு நிலைக்களமாய்ச் சத்த தாதுக்களாற் பொத்திய) குரம்பையாகிய (காணப்பட்ட) உடம்பானே (காணப்படாத) ஆன்மாவையும் பரமான்மாவையும் அநுமானவளவையான் வைத்தாராய்ந்து

(அவற்றது தடத்தலக்கண மெனப்படும் பொதுவியல் புணர்ந்து),— கண் இருள் தீர்ந்து—(அவ்வுணர்ச்சியானே) கருதியுணரப்படும் அகவிருளாகிய ஆணவமலத்தினின்று நீங்கி,—ஈண்டிய பெரும் பெயர்க் கடவுளிற் கண்டு—(அது நீங்கியவழி எல்லா நூல்களும் தன்பொருளேயாகத்திரண்டு) கூடிய பெரும்பெய ரெனப்படும் ஒருவார்த்தையாகிய மகாவாக்கியத்தான் எடுத்தோதப்படும் முதற்கடவுளது திருவருளானே (அப்பொருள்களது சொரூபலக் கண மெனப்படுஞ் சிறப்பியல்பை) அநுபூதியிற் கண்டுணர்ந்து,— மயர்வு அற—(இம்முறையானே) மயக்கவாசனையற்றுச் சிவாநு பவம் பெறுதற்பொருட்டு,—நந்தி முனிகணத்து அளித்த— (சீகண்டதேவர்பாற் கேட்டருளிய) நந்தி பெருமான் சனற் குமாரமுனிவன் முதலிய முனிவர்கணங்கட்கு (முறையானே) அளித்தருளப்பட்ட,—உயர் சிவஞானபோதம்—(சரியைமுதலிய மூன்றுபாதப் பொருள்களை ஆராயு நூல்களின்) மேற்பட்ட சிவ ஞானபோதமென்னும் வடநூலை,—உரைத்தோன்- மொழிபெயர்த் துக்கூறி வார்த்திக மெனப்படும் பொழிப்புரை செய்தோன்,— பெண்ணைப்புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்—பெண்ணையாற் று நீரால் சூழப்பட்ட திருவெண்ணெய்நல்லூரின் அவதரித்தரு ளிய சுவேதவனப்பெருமாளென்னும் பிள்ளைத்திருநாம முடை யான்,—பொய் கண்டு அகன்ற மெய்கண்டதேவன்—பொய்ச்சம யங்களின் பொருள் இதுவிதுவென்று கண்டு கழிப்பித்த காரணத் தாற் பெற்ற மெய்கண்டதேவ னென்னுஞ் சிறப்புத் திருநாமமுடை யான்,—பவம் நனி வன்பகை கடந்த தவர் அடி புனைந்த தலைமை யோனே—பிறவியாகிய மிக்க வலிய பகையினைவென்ற தவத்தோர் தனது திருவடியைப் புனைந்துகோடற் கேதுவாகிய தலைமைப்பாட் டினையுடையோன் என்க.

படரிற் காண்டல் செல்லுங் கண்ணெனற்பாலதனை எதிர் மறை முகத்தாற் கூறினர், இன்றியமையாமை விளக்குதற்கு. இப்பொருள்பற்றிக் கண்மேல்வைத்துக் கூறினாரேனும், உவ மேயப் பொருட்கேற்பக் காண்டல் சேறற்குப் படர்ந்த ஞாயிறு போலவென்பது கருத்தாகக்கொள்க.

இருட்கேட்டிற்கும் நிருவிகற்பஞ் சவிகற்பமென்னும் இரு வகைக் காட்சிக்கும் ஞாயிறு இன்றியமையாச் சிறப்பிற்றாயவாறு போல, மலத்தீர்விற்கும் ஆராய்ச்சி அநுபூதியென்னும் இருவகை

புணர்விற்கும் இன்றியமையாச் சிறப்பிற்றாயது இந்நூலென்பார், துமியப் படரினல்லதைக் காண்டல் செல்லாக் கண்போன்றுத் தீர்ந்து கண்டு மயர்வறவளித்த சிவஞானபோத மென்றார்.

தலைமைபற்றி அருந்துயர்க் குரம்பையி னென்றாரேனும், இனம்பற்றிக் கரணம் புவனமுதலியனவும் உடன் கொள்ளப்படும்.

அருந்துயர்க்குரம்பையி னுடப்படுவதாகிய பொதுவியல்பு முன்னாறு சூத்திரத்தானும், பெரும்பெயர்ப்பொருளிற் காணப் படுவதாகிய சிறப்பியல்பு பின்னாறு சூத்திரத்தானு மோதுப.

நாடியெனவே அநுமானவளவையா னென்பதூஉம், கண் டெனவே அநுபூதியிலென்பதூஉம் தாமே போதரும்.

பொதுவியல்பு அளவைமுகத்தானும் இலக்கணமுகத்தா னுங் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்தல் என்னும் இருதிறத்தா னுணரப்படும்; சிறப்பியல்பு சாதனமுகத்தானும், பயன்முகத்தா னுங் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையென்னு நான்கு திறத்தா னுணரப்படும்.

இஃதென்சொல்லியவாறோவெனின்:—இவ்விருவகை யியல் பும் வேறுவேறு கூறும் ஆகமங்களின் பொருளொருமை உணர மாட்டாது ஒரோவொன்றே பற்றி ஐக்கவாதமுதற் பலதிறத்தான் வேறுபட்டுத் தம்முண் மாறுகொண்டு மயங்குவார்க்கு அங்ஙன மயங்காது அவற்றின் பொருளொருமை யுணர்த்துதற்கு எழுந் தது இந்நூல் என்றவாறாயிற்று. சிவஞானபோதமென்பதூஉம் இக்காரணத்தாற் பெற்ற பெயரென்பது வடமொழிச் சிவஞான போதத்திறுதிச் சூத்திரத்தோதியவாறுபற்றி யுணர்க.

சரியைமுதலிய மூன்றுபாதப்பொருளை ஆராயுநூல்களாவன:— சோமசம்புபத்ததி முதலாயின. அந்நூல்களின் மேற்பட்ட சிவ ஞானபோதமெனவே, அந்நூல்களுணர்ந்தபின்னர் இந்நூல் கேட்கற்பாற்றென்பது பெறப்பட்டது; படவே, முன்னர்த் தீக்கை யுற்றுச் சிவாகமங்களை யோதி அதன்பின்னர்ச் சரியாபாத முத லியவற்றை ஆராயுநூல்களை முறையே கேட்டு அவ்வாறொழுகி மனந்தூயராய் நித்தியாநித்தியவுணர்வு தோன்றிப் பிறவிக்கஞ்சி வீடுபேற்றின் அவாமிக்குடையராய் வந்த அதிகாரிகளுக்கு இந் நூலுணர்த்துகவென்பது போந்ததெனக் கொள்க.

சிறப்புப்பாயிரம்.

உயர்வஞானபோதம் எனவே யாப்பும், கேட்போரும், நுதலியபொருளும், நூற்பெயரும்; நாடித் தீர்ந்து கண்டு மயர்வற வெனவே நுதலியபொருளின்வகையும், பயனும்; நந்தி முனி கணத்தளித்தவெனவே, வழியும்; வெண்ணெய்ச் சுவேதவனன் மெய்கண்டதேவனெனவே ஆக்கியோன் பெயரும், தமிழ் வழங்கு நிலமே இந்நூல் வழங்கு நிலமென எல்லையும் போந்தவாறுணர்க. வடநூலார் யாப்பை ஆனந்தரியமென்றும், நுதலிய பொருளை விடயமென்றும், கேட்போரை அதிகாரிகளென்றும், பயனைப் பிரயோசனமென்றுங் கூறுப. யாப்புச் சம்பந்தமென்பாருமுளர்.

விளக்கம்.

(இச்சிறப்புப்பாயிரத்தின் பொழிப்புரை.) விரிந்த இடத்தையுடைய உலகின்கண்ணே நெருங்கிய பெரிய புற இருள் கெடும்படி பலசமயத்தாராலும் புகழப்படுகின்ற சூரியபகவான் உதயகிரியினின்றும் வெளிப்பட்டுப் பிரகாசித்தாலன்றிக் காணுந் தொழிலைப் பெறமாட்டாத கண்ணொளிபோல, பொறுத்தற்கரிய துயரங்களுக்கெல்லாம் ஓர் இருப்பிடமாய் தோல், இரத்தம், இறைச்சி, நரம்பு, எலும்பு, மூளை, சுக்கிலமெனப்படும் எழு தாதுக்களாற் கட்டப்பட்ட சிறுகுடிலாகிய காணப்பட்ட உடம்பைக்கொண்டு காணப்படாத சீவான்மாவையும் பரமான்மாவையும் அனுமானப் பிரமாணத்தால் ஆராய்ந்து, அவ்விருபொருள்களின் தடத்த இலக்கணமெனப்படும் பொதுவியல்பு உணர்ந்து, அவ்வுணர்ச்சியாற் கருதியுணரப்படும் அகவிருளாகிய ஆணவமலத்தினின்றும் நீங்கி, அவ்வாணவமலம் நீங்கியவிடத்து, எல்லா நூல்களின் பொருளும் திரண்டுகூடிய பெரும்பெயரெனப்படும் ஒரு வார்த்தையாகிய மகாவாக்கியத்தால் எடுத்தோதப்படும் முதற்கடவுளின் திருவருளால், மேற்கூறிய சீவான்மா பரமான்மாவெனப்படும் இரு பொருள்களின் சொரூப இலக்கணமெனப்படுஞ் சிறப்பியல்பை அநுபவ அறிவாற் கண்டுணர்ந்து, இவ்வாறுணர்ந்த முறைமையினால், மயக்கவாசனையற்றுச் சிவாநுபவம் பெறுதற்பொருட்டு, சீகண்டதேவர்பாற் கேட்டருளிய நந்திபெருமானவர் சனற்குமார முனிவன்முதலிய முனிவர்கணங்கட்கு அளித்தருளப்பட்ட சரியைமுதலிய மூன்றுபாதப் பொருள்களை ஆராயும் நூல்களின் மேற்பட்ட சிவஞானபோதம் என்னும் வடநூலை மொழிபெயர்த்துக்கூறி வார்த்திகமெனப்படும் பொழிப்புரைசெய்தோன் பெண்ணையாற்று நீராலே சூழப்பட்ட திருவெண்ணெய்நல்லூரில் அவதரித்தருளிய சுவேதவனப் பெருமானென்னும் பிள்ளைத்திருநாமம் உடையான்; பொய்ச்சமயங்களின் பொருள் இதுவிதுவென்று கண்டு கழிப்பித்த காரணத்தாற்பெற்ற மெய்கண்டதேவன் என்னுஞ் சிறப்புத்திருநாமம் உடையான்; பிறவியாகிய மிக்க வலிய பகையினை வென்ற தவத்தோர் தனது திருவடியைச் சிரமேற் சூட்டிக் கொள்ளுதற்கு ஏதுவாகிய மேம்பாட்டினையுடையோன் என்றவாறு.

(கருத்துரை.) கண்ணுக்கு இருட்கேடும் பொருட்காட்சியும் உதய கிரியினின்று வெளிப்படுஞ் சூரியனால் உண்டாவதுபோல, உயிருக்கு மலத் தீர்வுஞ் சிவப்பேறும் மெய்கண்டதேவன் அருளிச்செய்த சிவஞானபோத நூலால் உண்டாம் என்பதாம்.

சூரியன் தோன்றினாற் காணுந்தொழிலைச் செய்யுங்கண் ணென்று சொல்லவேண்டுவதைச் சூரியன் தோன்றவில்லையானால் கண் காணுந் தொழிலைச் செய்யாது என எதிர்மறை முகத்தாற் கூறியதன் கருத் தென்னையெனின், இன்றியமையாமையை விளக்குதற் பொருட்டு. இன்றியமையாமையாவது இல்லாமல் முடியாதென்பதாம். உடன்பாட்டுச் சொல்லைப் பார்க்கிலும் இன்றியமையாமையைக் குறிக்கும் எதிர்மறைச் சொல் வலியுடைத்து. உதாரணமாக:—தண்ணீர் வேண்டுமென்பது உடன்பாட்டுச்சொல், தண்ணீர் இல்லாமல் முடியாதென்பது எதிர்மறைச் சொல். வேண்டுமென்னுஞ் சொல்லைக்கேட்ட ஒருவன் சிறிதுகாலந் தாழ்த்துக் கொடுக்கவுங் கூடும், இல்லாமல் முடியாது என்னுஞ் சொல் லைக்கேட்டவன் அப்பொழுதே கொடுப்பன்; ஆதலின், எதிர்மறைச்சொல் வலியுடைத்தாத லறிக. இவ்வெதிர்மறைப் பொருள்பற்றிக் காண்டல் செல் லாக் கண்போல் எனக் கண்மேல் வைத்துக் கூறினாரேனும், மயக்கவாசனை யற்றுச் சிவாநுபவம் பெறுதற்பொருட்டு அருளிச்செய்யப்பட்ட சிவஞான போதமென்னும் உவமேயப் பொருட் கேற்ப, இருளைநீக்கிக் காணும் தொழிலைப் பொருந்துதற்குப் படர்ந்த ஞாயிறு போல் என்பது கருத்தாகக் கொள்க. புறவிருளை நீக்குதற்குரிய சூரியர் பன்னிருவருளராயினாற்போல அகவிருளை நீக்குதற்கருளிய இச் சிவஞானபோதசூத்திரங்களும் பன்னி ரண்டாயினவாறுகாண்க.

இருட்கேட்டிற்கும், பொருளைப் பிண்டமாய்க்காணும் நிருவிகற்பக் காட்சி, பெயர், சாதி முதலியவற்றாற் பகுத்துக் காணும் சவிகற்பக்காட்சி யாகிய இருவகைக் காட்சிக்கும் ஞாயிறு இன்றியமையாச் சிறப்பினை உடைத்தாயவாறுபோல, மல நீக்கத்துக்கும், அனுமானப் பிரமாணத்தால் சிவான்மா பரமான்மாக்களின் பொதுவியல்புகளை அறிவதாகிய ஆராய்ச்சி யறிவு, திருவருளால் அப்பொருள்களின் சிறப்பியல்புகளை அறிவதாகிய அனுபவ அறிவு ஆகிய இருவகை அறிவிற்கும் இன்றியமையாச் சிறப்பினை உடையது இந்நூல் என்பது உணர்த்துதற்கு, துமியப்படரின் அல்லதைக் காண்டல் செல்லாக் கண்போல் நாடித் தீர்ந்து கண்டு மயர்வற அளித்த சிவ ஞானபோதம் என்றார்.

தலைமைபற்றி அருந்துயர்க் குரம்பை என உடம்பினைக் கூறினாரே னும், இனம்பற்றிக் கரண, புவன, போகங்களும் உடன்கொள்ளப்படும்.

உடம்பில்வைத்து அநுமானப் பிரமாணத்தால் நாடப்படுவதாகிய பதி, பசு, பாசங்களின் பொதுவியல்பு முன் ஆறு சூத்திரத்தானும், முதற்

சிறப்புப்பாயிரம்.

கடவுளது திருவருளால் அநுபவத்திற் காணப்படுவதாகிய அம்முப்பொருள்களின் சிறப்பியல்பு பின் ஆறு சூத்திரத்தானும் கூறப்படுவனவாம். செய்யுளில் நாடி என்றதனால் அநுமான அளவையான் அறியப்படுமென்பதூஉம், கண்டு என்றதனால் திருவருளால் அநுபூதியில் அறியப்படுமென்பதூஉம் தாமே விளங்கும்.

பொதுவியல்பு பிரமாணவியல், இலக்கணவியல் என்னும் இரண்டியல்களாற் கூறப்பட்டுக் கேட்டல், சிந்தித்தல் என்னும் இருதிறத்தான் உணரப்படும். சிறப்பியல்பு சாதனவியல், பயனியல் என்னும் இரண்டியல்களாற் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையென்னும் நான்கு திறத்தான் உணரப்படும். பொதுவியல்பு கேட்டுஞ் சிந்தித்தும் அறியப்படுமாறுபோல சிறப்பியல்பு கேட்டுஞ் சிந்தித்தும் அறியப்படமாட்டாது. அவ்விரண்டுடனே தெளிதலும் நிட்டைசாதித்தலும் இருப்பின் அறியப்படுவதாம். ஆதலின், பின் ஆறு சூத்திரப் பொருள்கள் சாதனமுடையார்க்கன்றி ஆராய்ச்சிமட்டும் உடையார்க்கு விளங்காவாம்.

இச்சிறப்புப்பாயிரத்தாற் சொல்லிய பொருள் என்னையோ எனின்:—பதி, பசு, பாசங்களின் பொதுவியல்பு சிறப்பியல்புகளை ஆகமங்களிற் கூறுமிடத்து, ஒரு ஆகமத்திற் பொருள்கள் ஏழென்றும், பிறிதொரு ஆகமத்திற் பொருள்கள் ஆறென்றும், இவ்வாறே ஐந்து, நான்கு, மூன்று எனச் சில ஆகமங்களினும் கூறுகின்றமையால், அவற்றின் பொருளொற்றுமை உணரமாட்டாதார் ஒவ்வொரு ஆகமப் பொருளையேபற்றி ஐக்கவாத முதல் பலவாதிகளாக வேறுபட்டுத் தம்முள் மாறுகொண்டு மயங்குவர். அவ்வாறு மயங்காமல், அவ்வாகமங்களின் பொருளொற்றுமை உணர்த்துதற்கு எழுந்தது இந்நூல் என்று கூறியவாறும். சிவஞானபோதமென்பதூஉம் இக்காரணத்தாற்பெற்ற பெயரென்பது வடமொழிச்சிவஞானபோதத்து இறுதிச் சூத்திரத்தில் இந்தப்பிரகாரம் சைவார்த்தநிர்ணயத்தைச் சிவஞானபோதத்தில் அறிகவென்று ஓதியவாறுபற்றி உணர்க. அதாவது:—பரஞானம், அபரஞானம் இரண்டும் சிவபிரானை உணர்த்துதலிற் சிவஞானம் எனப்படும். பரஞானம் அருளால் உண்டாவது; அபரஞானம் நூலால் உண்டாவது. பரஞானமெனினும் அநுபூதிஞானம் எனினும் ஒக்கும்; அபரஞானமெனினும் ஆராய்ச்சிஞானமெனினும் ஒக்கும். அவற்றுள் அபர ஞானமாகிய சிவஞானமென்னும் ஆகமங்களின் பொருளொற்றுமையை நிர்ணயித்து இந்நூல் உணர்த்துதலாற் சிவஞானபோதம் என்றவாறாயிற்று. சிவஞானமென்பது ஆகமத்தையும், போதமென்பது உணர்த்துதலையும் குறித்தவாறறிக. ஆகமங்களிற் கூறும் பொருட் பேதங்கள் முப்பொருளில் அடக்கி இந்நூலிற் கூறப்படுகின்றன எனவறிக. பொருள்கள் ஏழு என்பது சுவாயம்புவம். ஆறு என்பன பௌட்கரமுதலியன. ஐந்து என்பன பராக்கியை முதலியன. நான்கு என்பன சர்வஞானோத்தரமுதலியன. மூன்று என்

பன இரௌரவம், மிருகேந்திரமுதலியன. இது திராவிடமாபாடியத்திற் கண்டது. எழு:—சிவம், பதி, பசு, ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை என்பனவாம். ஆறு:—பதி முதலியனவாம். ஐந்து:—பதி, பசு, ஆணவம், கன்மம், மாயை என்பனவாம். நான்கு:—சிவம், பதி, பசு, பாசம் என்பனவாம். மூன்று:—பதி, பசு, பாசம் என்பனவாம்.

சரியைமுதலிய மூன்றுபாதப் பொருள்களை ஆராயும் நூல்களாவன:—சோமசம்புபத்ததி முதலாயின. உயர்சிவஞானபோத மென்றதனால், அப் பத்ததிகளின் மேற்பட்டது சிவஞானபோதம் என்பது பெறப்படும். படவே, அந்நூல்கள் உணர்ந்தபின்னர் இந்நூல் கேட்கவேண்டுமென்பது பெறப்பட்டது. படவே, முன்னர்த் தீக்கையுற்றுச் சிவாகமங்களை ஓதி அதன்பின்னர்ச் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதங்களை ஆராயும் பத்ததிகளை முறையேகேட்டு அவ்வாறொழுகி மனந்தூயராய் நித்த அநித்தப் பொருள்களின் உணர்வுதோன்றி அநித்தப்பொருள்களின் சம்பந்தமான பிறவிக்கு அஞ்சி நித்தப்பொருளின் சம்பந்தமான முத்தியைப் பெறுதற்கு விருப்பமிக்குடையராய்வந்த அதிகாரிகளுக்கு இச்சிவஞானபோதநூல் உணர்த்துக என்பது முடிபெனக் கொள்க.

இப்பாயிரத்தில் ஆக்கியோன் பெயர்முதலிய எட்டுறுப்புக்கள் வருமாறு:—மெய்கண்டதேவன் என்றதனால் ஆக்கியோன் பெயரும், நந்தி முனிகணத்தளித்த என்றதனால் வழியும், வெண்ணெய்ச்சுவேதவனன் என்றதனால் தமிழ்வழங்கும் நிலமே இந்நூல் வழங்கும் நிலமென எல்லையும், சிவஞானபோத மென்றதனால் நூற்பெயரும், அதனாலேயே ஆகமத்தின்பொருள் ஒருமை உணர்த்துதலாகிய நுதலிய பொருளும், உயர் சிவஞானபோதம் என்றதனால் இந்நூல் கேட்டபின்னர் இது கேட்க வேண்டுமென்னும் யாப்பும், அதனாலேயே முன்னர்க் கேட்கவேண்டிய நூலைக்கேட்டு இந்நூல் கேட்டற்கு உரியார் எனக் கேட்போரும், நாடித் தீர்ந்து கண்டு மயர்வுற என்றதனால் நுதலிய பொருளின் பொதுவியல்பு சிறப்பியல்பு என்னும் வகைகளை யுணர்த்துவதோடு பயனும் கூறியவாறு அறிக. வடநூலார் யாப்பை ஆனந்தரியமென்றும், நுதலியபொருளை விடயமென்றும், கேட்போரை அதிகாரிகளென்றும், பயனைப் பிரயோசன மென்றுங் கூறுவர். யாப்பைச் சம்பந்த மென்பாரும் உளர். ஆனந்தரிய மாவது இன்னது கேட்டபின்னர் இன்னது கேட்கவேண்டுமென்பதாம். சம்பந்தமென்பது தொடர்ச்சியைக் குறிக்கும். இவ்விடத்துச் சரியைமுதலிய மூன்றுபாத நூல்களின் மேம்பட்ட ஞானபாத நூலென்னும் பொருளை உணர்த்தும். யாப்பு என்பதும் சம்பந்தமென்பதும் பொதுவாக ஒரு பொருட் சொற்களேனும், சிறப்பாக நோக்குமிடத்து வேறுவேறு பொருள்கள் தருவனவாம். இவ்வுண்மையை உரையாசிரியர் மாதவச்சிவஞான யோகிகள் அருளிய தொல்காப்பியப்பாயிர விருத்தியுட்காண்க.

இப்பாயிரம் செய்தவர் அருணந்திசிவாசாரியரென்பது கன்னபரம்பரை; அது யுத்திக்கும் பொருத்தமாதல்காண்க.

நூல் இறுதியிற் கூறிய பாயிரப்பொருளையே இவ்விடத்துங் கூறியது குற்றமாகாதோவெனின், ஆகாது; எதனாலெனின், மிருகேந்திரத்து இறுதியிற் கூறிய பாயிரத்தை, நாராயணகண்ட ஆசிரியர் மாணக்கர்க்கு முதற்கண் உணர்த்துதற்பொருட்டு, நூன்முகத்திற் கூறியவாறுபோல இந்நூலினுங் கூறப்பட்டதாகலானெனவறிக.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

மங்கலவாழ்த்து.

சிற்றுரை.

காமிகமுதலிய சைவாகமங்களுண் ஞானபாதத்தினுளதாகிய ஆசங்கை நீக்கி அவற்றின் பொருளுண்மை பொதுவியல்பு சிறப்பியல்பென்று இருவேறுவகைப்படுத்துக் காட்டிப் போதித்தற்கு இரௌரவாகமத்தினெழுந்த சிவஞானபோத நூலினைத் தமிழுலகம் உய்தற்பொருட்டு மொழிபெயர்த்துச்செய்து பொழிப்புரைப்பானெடுத்துக்கொண்ட ஆசிரியர், சாக்கிரத்தே அதீதத்தைப் புரியுந் தமக்கு இடையூறு சிறிது மணுகாமை அறிந்தாராயினும், ஆன்றோராசாரம் பாதுகாத்தற்பொருட்டும், மாணக்கர்க் கறிவுறுத்தற் பொருட்டும் முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய விநாயகக்கடவுளை வாழ்த்துவதாகிய மங்கலவாழ்த்துக் கூறுகின்றார்.

விளக்கம்.

காமிகமுதலிய சைவாகமங்களுள் ஞானபாதத்தின் உள்ளதாகிய பொருள்பற்றிய ஆசங்கையை நீக்கி அவ்வாகமங்களின் பொருளுண்மையைப் பொதுவியல்பு சிறப்பியல்பென்று இருவேறுவகைப்படுத்திக்காட்டிப் போதித்தற்கு இரௌரவ ஆகமத்தின் எழுந்த சிவஞானபோத நூலினைத் தமிழுலகம் உய்தற்பொருட்டு மொழிபெயர்த்துச்செய்து பொழிப்புரையுஞ் செய்யப்புகுந்த ஆசிரியர், இடையூறு புகுதற்குரிய சாக்கிரத்திலேயே இடையூறு புகுதாத துரியாதீதநிலை கைவரப்பெற்றதனால் தமக்கு இடையூறு சிறிதும் அணுகாமை அறிந்தாராயினும், சாக்கிரத்தில் அதீதமாய் நிற்கும் பெரியோரனைவரும் இடையூறு நீக்குதற்குக் கடவுள் வணக்கம் கூறி

வந்துள்ளாராதலின், அவ்வான்றோராசாரம் பாதுகாத்தற்பொருட்டும், தாம் கடவுள் வணக்கங் கூறவில்லையாயின் தம் மாணாக்கரும் அவ்வாறே கொண்டு கடவுள் வணக்கத்தைக் கைவிடுவாராகலான் அது செய்யவேண்டு மென்பதை அவர்க்கறிவுறுத்தற்பொருட்டும் இடையூறு நீக்குதற்குரிய விநாயகக்கடவுளை வாழ்த்துவதாகிய மங்கலவாழ்த்து முதற்கட்கூறுகின்றார்.

வஞ்சித்துறை.

கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே.

சிற்றுரை.

(இ-ள்.) கல்லால் நிழல்—(அருள்வடிவாகிய) கல்லானிழலின் கண்ணே (எழுந்தருளியிருந்து),—மலைவு இல்லார்—(நந்திபெருமானுக்கு இந்நூலான்) மலைவு தீர்த்தருளிய முதலாசிரியர்,—அருளிய—மேன்மேற் கருணைகூர்ந்தருளுதற்பொருட்டு,—பொல்லார் இணை மலர்—பொல்லாதபிள்ளையாருடைய ஞானசத்தி கிரியாசத்தி யென்னும் இரண்டு திருவடித்தாமரைகளை,—நல்லார்—கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்,—புனைவரே—தம்முடைய ஞானசத்தி கிரியாசத்திகட்கு வியாபகமாகக்கொண்டு தாடலைபோல் அடங்கிநிற்பரென்க.

நல்லார் புனைவரெனவே, ஏனையோர்க்கு அது கூடாதென்றவாறாயிற்று.

மூவகை வாழ்த்துள் இது பொருளியல்புரைத்ததெனக் கொள்க.

அருளியவென்பது செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்; அது புனைவர் என்னும் பிறவினைமுதல்வினைகொண்டது.

இல்லார் இல்லாகச் செய்தாரெனப் பண்படியிற் பிறந்த வினைப்பெயர்.

அருளிய பொல்லாரெனப் பெயரெச்ச முடிபாகவைத்துரைப்பினு மமையும்.

மலமில்லா தருளப் பொல்லார்தாள் புனைவரெனவே அவ்விருவருந் தம்முள் வேற்றுமையின்மை பெறும். உலகத்துப் புதல்வர்கண்மாட்டுச் செய்யும் வழிபாடு தந்தையர்க்குக் கழிபேருவகை பயப்பிக்குமாகலின், அந்நயம்பற்றி அங்ஙனங் கூறியதூஉமாம்.

விளக்கம்.

(இம்மங்கலவாழ்த்தின் பொ-ரை.) அருள்வடிவாகிய கல்லால்நிழலின் கண்ணே எழுந்தருளியிருந்து நந்திபெருமானுக்கு இந்நூலால் மலைவு தீர்த்தருளிய முதலாசிரியராகிய சிவபெருமான் மேலும் மேலுங் கருணை கூர்ந்தருளுதற்பொருட்டு, பொல்லாதபிள்ளையாருடைய ஞானசத்தி கிரியா சத்தி என்னும் இரண்டு திருவடித்தாமரைகளை, கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர் தம்முடைய ஞானசத்தி கிரியாசத்திகளினும் வியாபகமாகக்கொண்டு தாடலைபோல் அடங்கி நிற்பர். (எ-று.)

(க-ரை.) சிவபெருமான் அருளுதற்பொருட்டுப் பிள்ளையாருடைய திருவருளில் மெய்யன்பர் அடங்கி நிற்பர் என்பதாம்

தாடலை யுவமையால், தாள்தலை என்னும் இரண்டுசொற்கள், தாடலை யென்னும் ஒரு சொல்லாய் அடங்கி ஒன்றுபட்டு நின்றவாறுபோல, பிள்ளையாருடைய ஞானசத்தி கிரியாசத்திகளில், தம்முடைய ஞானசத்தி கிரியாசத்திகள் அடங்கி ஒன்றுபட்டு நிற்பர் என்பதாம். அடங்கிநிற்றலாவது:— தன்னறிவுக்கு அவர் அறிவையின்றி அறியுந்தன்மை நிகழாதென்றும் தன் கிரியாசத்திக்கு அவர் கிரியாசத்தியையின்றித் தொழிற்பாடில்லையென்றும் கண்டு தற்போதமிழந்து அவர் அருள்வழி நிற்றல். இன்னும் தாடலை உவமை திருவடி தீக்ஷையினையும் குறிக்கும்; குறிக்கவே, சிரத்தானம்போன்ற அவர் மெய்யறிவு இறைவன் திருவடியாகிய அருள் வியாபகத்துள் அடங்கி நிற்கும் என்றவாறும். பொல்லாதபிள்ளையாரென்றது பொள்ளாதபிள்ளையாரென்றதாம். அஃதாவது கருவியால் போழ்க்கப் படாத சுயம்புமூர்த்தி என்றபடியாம். திருவெண்ணெய்நல்லூரிலும் திருநாரையூரிலும் உள்ளன சுயம்புவிநாயகமூர்த்திகளாம்.

நல்லார் புனைவரென்று கூறியதனால், நல்லாரல்லாத ஏனையோர்க்குப் பிள்ளையார் திருவடியில் அடங்கிநிற்றல் கூடாதென்றவாறாயிற்று.

வாழ்த்தாவது:—வாழ்த்து, வணக்கம், பொருளியல்புரைத்தல் என மூவகைப்படும். அவையாவன:— வாழி என்று கூறுதல் வாழ்த்தும், போற்றியென்றும் வணங்குவாமென்றுங் கூறுதல் வணக்கமும், அவ்விரண்டுமின்றி வணங்கப்படும்பொருளின் இயல்பையுரைத்தல் பொருளியல்புமாம். அவற்றுள் இவ்விடத்துக்கூறிய விநாயகவாழ்த்து, பொருளியல்பு உரைத்தலாம்.

எவ்வாறெனின், விநாயகர் பொருள்; சிவபெருமான் அருளியபடி செய்தல் அவரியல்பாதலால் என்க. சிவபெருமான் அருளை உண்டுபண்ணும் திருவடிகட்கு இடையூற்றை நீக்கி இந்நூலை முற்றுப்பெறச்செய்தல் அருமையன்றாதலின், இது இந்நூற்கு மங்கலவாழ்த்தாயிற்று.

அருளியவென்பது செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். அந்த எச்சம் தொல்காப்பியம் வினையியல் கூடு-வது சூத்திரத்தின்படி தன் கருத்தாவினைகொண்டும் பிறகருத்தாவினைகொண்டும் முடியும். உதாரணம், மழைபெய்சற்பொருட்டு முழங்கும், மழைபெய்தற்பொருட்டு வானை வணங்குதும் என்பன. இவ்விடத்தில் அருளிய என்னும் வினைக்குக் கருத்தாவாகிய சிவபெருமான் வினைகொண்டு முடியாது நல்லார் புனைவர் என்னும் பிறகருத்தாவினைகொண்டு முடிந்தது. செய்யியவென்பது செய்தற் பொருட்டு என்னும் பொருளைத்தருதல்போல் அருளியவென்பது அருளுதற்பொருட்டு என்னும் பொருளைத்தந்தது.

மலைவு இல்லாரென்பதில், இல்லாரென்பது இல்லையாகச் செய்தவரென்னும் பொருளைக்குறித்துநிற்றலின் பண்படியிற் பிறந்த வினைப் பெயர். இன்மை யென்பது பண்பு; இல்லையாகச் செய்தல் வினை; செய்தவர் என்பது பெயர்; ஆகவே, இல்லார் என்பது பண்படியாகப் பிறந்த வினைப்பெயராதல் அறிக.

அருளிய என்பதற்கு மேற்கூறியவாறு வினையெச்சமாய்க் கூறாது அருளிய பொல்லாரெனப் பெயரெச்ச முடிபாகவைத்துரைப்பினும் அமையும். அதாவது, சிவபெருமான் தந்தருளிய பொல்லாப்பிள்ளையா ரென்றவாறும்.

சிவபெருமான் அருளுதற்பொருட்டுப் பிள்ளையார் திருவடியில் அடங்கி நிற்பர் என்றதனாலேயே, சிவபெருமானும் பிள்ளையாருந் தம்முள் வேற்றுமையின்மை பெற்றாம்; அன்றியும், உலகத்தில் புத்திரர்மாட்டுச் செய்யும் வழிபாடு தந்தையர்க்கு மிகப்பெரிய சந்தோஷத்தை உண்டு பண்ணு மாதலின் அந்நயம்பற்றி, சிவபெருமான் அருளுதற்பொருட்டுப் பிள்ளையாரை வணங்குவர் என்று கூறியதூஉமாம்.

இம்மங்கலவாழ்த்து, கல், ஆல், நிழல், மலைவு, இல்லார், அருளிய, பொல்லார், இணை, மலர், நல்லார், புனைவர், ஏ என்னும் பன்னிருசொற்களால் ஆக்கப்பட்டிருத்தலின், இந்நூல் பன்னிரு சூத்திரங்களையுடையதென்பதனையும், அப்பன்னிருசொற்களுள், கல்லால் நிழன்மலை வில்லா ரருளிய என்பது ஒருவினைமுடிபாகவும், பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே என்பது பிறிதொருவினை முடிபாகவும், ஆக இருவினைமுடிபாக இருத்தலின், இந்நூல் இரண்டு அதிகாரங்களை யுடையதென்பதனையும், அவ்விருவினைமுடிபுகளுள், முன்னையது இன்னது அருளிய எனச் சிறப்பிக்குத் கூறாமையால் மகலதிகாரம்பொதுவதிகாரமென்பதனையும். பின்

னையது இன்னது புனைவர் என மலரைச் சிறப்பித்துக் கூறியிருத்தலின், இரண்டாவது அதிகாரம் சிறப்பதிகாரமென்பதனையும், அவ்விருவினை முடிபுகளுள் முன்னையதில், கல், ஆல், நிழல் என்ற மூன்று சொற்களும் இடத்தின் உண்மை குறித்தலின், முதலதிகாரத்தில் முதல் மூன்று சூத்திரங்கள் பிரமாணவியலென்பதனையும், மலைவு, இல்லார், அருளிய என்ற பின் மூன்று சொற்களும் செயல் கூறுதலின், முதலதிகாரத்தில் பின் மூன்று சூத்திரங்கள் இலக்கணவியலென்பதனையும், இரண்டாவதுவினைமுடிபாகிய பின்னையதில், பொல்லார், இணை, மலர் என்ற மூன்று சொற்களும் திருவடிகூறுதலின், "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா—ரிறைவனடிசேரா தார்." என்ற திருக்குறளின்படி பிறவிக்கடலைக் கடத்தற்குத் திருவடிசாதனமாதலின், இரண்டாவது அதிகாரத்தில் முதல் மூன்று சூத்திரங்களும் சாதனவியலென்பதனையும், நல்லார், புனைவர், ஏ என்ற மூன்று சொற்களும், திருவடியடைதலாகிய பயன்கூறுதலின் இரண்டாவது அதிகாரத்தில் பின் மூன்று சூத்திரங்களும் பயனியலென்பதனையும் குறிக்கும். இன்னும் நான்காவது சொல்லாகிய மலைவு என்பது, முதலடியையும் இரண்டாவதடியையும் தொடர்ந்து நிற்றலின், பிரமாணவியலில் மூன்றுஞ் சூத்திரமும் இலக்கணவியலில் முதலாவதாயுள்ள நான்காஞ் சூத்திரமும் பொதுவாக ஒரு கருத்துடையன என்பதைக் குறிக்கும். ஆதலினுற்றான் நான்காஞ் சூத்திரத்திற்கு, "இதுவுமது" எனக் கருத்துரை செய்யப்பட்டது. இவ்வாறு நூற்பொருளைத் தன்னகத்தடக்கிக்கூறல் மங்கலவாழ்த்துக்கு இலக்கணமென அறிக.

மங்கலவாழ்த்து முற்றிற்று.

அவையடக்கம்.

நேரிசை வெண்பா.

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா
ரெம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

சிற்றுரை.

இஃது அவையடக்கங் கூறுமுகத்தானே ஈண்டெடுத்துக் கொண்ட சித்தாந்தசைவத்தினுயர்வும் ஏனைச் சமயத்தார்களிழிபுங் கூறுகின்றது.

(இ-ள்.) தம்மை உணர்ந்து தமை உடைய தன் உணர்வார்—(உடைப்பொருளாகிய) தம்மியல்பினை உணர்ந்து தம்மை உடையானாகிய தலைவனை யுணருஞ் சித்தாந்தசைவர்,—எம்மை உடைமை எமை இகழார்—(தமக்குடைப்பொருளாகிய) எம்மை யுடையராகலின் எம்மைக் (குற்றங்கணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டுவதன்றி) இகழ்தல் செய்யார்;-(ஆகலான் எம்மாற் செய்யப்படு நூலையும் அவ்வாறு கைக்கொள்வர்).—தம்மை உணரார் உணரார்—அங்ஙனந் தம்மை யுணராதார் தம்மை யுடையானாகிய தலைவனையுமுணரார்—(ஆகலான்),—உடங்கு இயைந்து தம்மிற் புணராமை—(அவர்) ஒருங்கே குழீஇக்கொண்டு தம்மிற்றாமே சேராது மாறுதலால்,—புறன்கேளாம்—(அவர் எம்மையும் எம்மாற் செய்யப்படு நூலையும் இகழ்ந்துரைக்கும்) புறமொழியை (யாம்) பொருளாகக் கொள்ளாம் என்க.

ஆகலான் எம்மாற் செய்யப்படு நூலையும் அவ்வாறு கைக்கொள்வரென்பது குறிப்பெச்சம்.

தன்னை யென்னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது.

உடைமை புணராமை என்புழி இன்னுருபு விரித்துரைக்க.

தம்மை யுணராரெனப் பொதுப்படக்கூறுதலானே, தாமொரு பொருளுண்டென்பதே உணராத உலகாயதரும், தம்மைக் குணிப்பொருளென்றுணராத புத்தர், சாங்கியர், மாயாவாதிகளும், தம்மை முதல்வனுக்கு உடைப்பொருளென்றுணராத ஏனைச் சமயத்தாரும் அடங்குவர். பாஞ்சராத்திரிகளும், சிவாத்துவித சைவர்களும் தம்மை உடைப்பொருளெனக் கொள்ளினும், அவருட்பாஞ்சராத்திரிகள் உடைப்பொருளாகிய தமக்கு அணு பரிமாணங் கோடலானும், உடையானுக்குப் பரிணாமங் கூறுதலானும், உடையானல்லாதானை உடையானென மயங்கிக் கோடலானும், சிவாத்துவித சைவர் உடையானது சிற்சத்திக்குப் பரிணாமங் கூறுதலானும், பிறவாற்றானும் அவருந் தம்மை உணராரே யென்பது.

புறன் புறச்சமயம்பற்றி இகழ்ந்துரைக்குமொழியும் புறங்கூற்றுமொழியு மென்பது இரட்டுற மொழிதலென்னும் உத்தியாற் கொள்க. புறங்கூற்று மொழியாவது முக்கூற்றுப் புறச்சமயங்களின் வேறான பாடாணவாதசைவர் முதலியோர் முன்னன்றிப் புறத்தே இகழ்ந்து கூறுமொழி என்க.

விளக்கம்.

இவ்வெண்பாவானது அவையடக்கங் கூறு முறைமையில், இந்நூலில் எடுத்துக்கொண்ட சித்தாந்தசைவத்தின் உயர்வும் ஏனைச் சமயத்தார்களுடைய இழிபுங் கூறுகின்றது. உயர்வு—புறங் கூறாமை; இழிபு புறங் கூறுதல்.

(பொ-ரை.) இறைவனுக்கு உடைமைப்பொருளாய் விளங்கும் உயிராகிய தம்மியல்பினை உணர்ந்து, தம்மை உடையானாகிய தலைவனை உணரும் சித்தாந்தசைவர்க்கு, நாம் உடைமைப்பொருளாதலின் தமக்கு உடைமைப்பொருளாகிய எம்மைக் குற்றங்கள் நீக்கி குணங்கொண்டு பாராட்டுவாரன்றி, அவர் இகழ்தல் செய்யார். ஆதலால், எம்மாற் செய்யப்படு நூலையும் அவ்வாறு கைக்கொள்வர். தம்மை உணராதார் தம்மை உடையானாகிய தலைவனையும் உணரார். ஆதலின், அவர் ஒருங்கே கூடிக்கொண்டு தம்மிற்றாமே சேராது முரணுவராதலால், அவ்வாறு முரணும் அவர் எம்மையும் எம்மாற் செய்யப்படும் நூலையும் இகழ்ந்துரைக்கும் புறமொழியை யாம் பொருளாகக்கொள்ளமாட்டேம் என்றவாறு.

(க-ரை.) சித்தாந்தசைவர் எம்மை இகழாராதலின், அவர் எம்மாற்செய்யப்படும் நூலையும் இகழ்தல் செய்யாது கைக்கொள்வர். சித்தாந்தசைவரல்லாதார் உண்மை உணராமையின் இகழ்ந்துரைப்பதைப் பொருளாகக் கொள்ளேம் என்பதாம்.

ஆகலான் எம்மாற் செய்யப்படும் நூலையும் அவ்வாறு கைக்கொள்வரென்பது செய்யுளில் இல்லையாயினும், அது எம்மை உடைமை எமையிகழார் என்றதனுல் குறிப்பாகக் கொள்ளக்கூடிய எச்சமாய் நின்றது.

தன் உணர்வார் என்பதில் ஐ உருபு தொக்குநின்றது. அவ்வுருபை விரித்து; தன்னை உணர்வார் எனப் பொருள்செய்யப்பட்டது. தன்னை என்பது இவ்விடத்தில் தலைவனை என அறிக.

எம்மை உடைமை என்றவிடத்தும், தம்மிற் புணராமை என்றவிடத்தும், இன்னுருபு விரித்து உடைமையின் புணராமையின் என உரைக்க.

தம்மியல்பை உணரார் என்னுவது, தாம் ஒரு பொருள் உண்டென்று உணரார் என்னுவது கூறுமல், தம்மை உணரார் எனப் பொதுப்படக் கூறியதனுல், தாம் ஒருபொருள் உண்டென்பதே உணராத உலகாயதரும், தம்மைக்குணிப்பொருள் என்றுணராத புத்தர், சாங்கியர், மாயாவாதிகளும், தம்மை முதல்வனுக்கு உடைமைப் பொருளென்றுணராத ஏனைச் சமயத்தாரும் அடங்குவர். பாஞ்சராத்திரிகளும், சிவாத்துவிதசைவரும், தம்மை இறைவனுக்கு உடைமைப்பொருள் எனக் கொள்ளினும், அவருள் பாஞ்சராத்திரிகள் உடைமைப்பொருளாகிய தமக்கு, சார்ந்ததன் வண்ணமாழ் வியாபகம் கொள்ளாது அணுபரிமாணங் கொள்ளுதலானும், உடையானாகிய

நாராயணனே பல அவதாரமாக மாறினுன் என அவனுக்குப் பரிணுமங் கூறுதலானும், உடையானல்லாத நாராயணனை உடையானென மயங்கிக் கொள்ளுதலானும், தம்மை உணராதவரேயாவர். சிவாத்துவிதசைவர் உடையானுகிய இறைவனது சிற்சத்தியின் பேதமே பசு, பாசங்களா மெனச் சிற்சத்திக்குப் பரிணுமங் கூறுதலானும், பிறவாற்றுனும் அவருந் தம்மை உணராதவரேயாவர்.

குணியாவது குணத்தையுடையது; உயிர்க்குக் குணம் அறிவிச்சை செயல்கள்; புத்தர் முதலியோர் குணமே உயிரென்பர்.

பாஞ்சராத்திரிகள் இறைவனுக்குப் பரிணுமங் கூறுவது எவ்வாறெனின், இருபத்தைந்தாந் தத்துவம் வாசுதேவனென்றும், அவனே பரம் பொருளென்றும், அவனிடத்தினின்றும், கண்ணன், அநிருத்தன், மகரத்துவசன், இரெளகிணேயன் என நால்வர் உலகங்களைப் படைத்தற்பொருட் டுத் தோன்றினரென்றும், இந்த நால்வகை வியூகங்களால் சடமுஞ் சித்துமாகிய எல்லாவுலகமும் படைக்கப்பட்டனவாதலால், எல்லாம் வாசுதேவன் பரிணுமமே என்றுங்கூறுவர்.

சிவாத்துவித சைவர் சிற்சத்திக்குப் பரிணுமங் கொள்ளுதல் எவ்வாறெனின், பசுபாசங்கள் தனித்த பொருளன்றென்றும், சிற்சத்தியின் பரிணுமமேயென்றும், பதி பசு பாசங்கட்குத் தம்முள் வேற்றுமை, குண குணிகட்குளதாகிய வேற்றுமைபோல, உட்பேதமேயன்றிப் புறப்பேதம் இன்றெனவுங் கூறுவர்.

புறன் என்பது இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் புறச்சமயத்தார் இகழ்ந்துரைக்கும் மொழியெனவும், புறங்கூற்றுமொழியெனவும் கொள்ளப்படும். புறங்கூற்றுமொழியாவது புறப்புறம், புறம், அகப்புறம் என்னும் முக்கூற்றுப் புறச்சமயங்களின் வேருன அகச்சமயிகளாகிய பாடாணவாதசைவர்முதலியோர் சித்தாந்தசைவர் முன்னன்றிப் புறத்தே இகழ்ந்து கூறும் மொழி என்க.

இரட்டுற மொழிதலாவது ஒரு சொல்லை இரண்டு பொருள்படக் கூறுதலாம். உதாரணம் உலகம்; அது இரட்டுறமொழிதலால் பிரபஞ்சத்தையும்உயிரையும் உணர்த்தும்.

அவையடக்கம் முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நூல்.

முதலாவது பொதுவதிகாரம்.

பிரமாணவியல்.

முதற்சூத்திரம்.

சிற்றுரை.

ஈண்டு ஆசிரியர் முதனூலிற் கூறியவாறே சிவாகமங்களி னோதப்படும் ஞானபாதப்பொரு ளெல்லாவற்றையும் பொது உண்மையென்று இரண்டாகத் தொகுத்து, பிரமாணவியல் இலக் கணவியல் சாதனவியல் பயனியலென நால்வகைப்படுத்து, பிரமா ணவியல் மூன்றுபாதத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கண் உல கிற்கு முதற்கடவுள் சிறப்புவகையா னுண்டென்னும் ஆகமப் பிரமாணத்தை வலியுறுத்துவதாய அநுமானப் பிரமாணங்கூறு கின்றார்.

விளக்கம்.

ஆராய்ச்சி அறிவால் அறியப்படுவது பொதுவும், அனுபவ அறிவால் அறியப்படுவது உண்மையுமாம். சிவாகமங்களில் ஓதப்படும் ஞானபாதப் பொரு ளெல்லாவற்றையும் வடமொழிச் சிவஞானபோதத்திற் கூறிய வாறே தமிழினும் பொது உண்மையென இரண்டதிகாரங்களாகக் கூறத் தொடங்கி முதற்கட் பொதுவதிகாரங் கூறுகின்றார்.

பொதுவியலைப்பற்றிக் கூறும் அதிகாரம் பொதுவதிகாரம்; சிறப் பியலைப்பற்றிக் கூறும் அதிகாரம் உண்மையதிகாரம். அளவைநூலார் கூறும் பொதுவியல்பு சிறப்பியல்பு வேறு. ஆகமத்திற்கூறும் பொதுவியல் பு சிறப்பியல்பு வேறு. சொல்லொற்றுமையால் இவ்விரண்டும் ஒன்றெனக் கொள்ளக்கூடாது. அளவைநூலார் கூறும் பொதுவியல்பாவது:—ஒன்றற் குச் சொல்லப்படும் இலக்கணம் பிறவற்றிலுமிருப்பது. சிறப்பியல்பாவது:— ஒன்றற்குச் சொல்லப்படும் இலக்கணம் அதனிடத்தில் மட்டும் இருப்பது. உதாரணமாக, மாமரம் என்றபொழுது பலா முதலியவற்றினின்று வேறுபிரிக்கப்படினும் தேமா, புளிமா முதலியவற்றிற்கெல்லாம் பொது வாய் நிற்றலின், மா என்பது பொதுவிலக்கணம். புளிமாமரம் என்ற

பொழுது தேமா முதலியவற்றிற் செல்லாது தனக்கே உரித்தாய் நிற்றலின் புளிமா என்பது சிறப்பிலக்கணம். ஆகமத்திற்கூறும் பொதுவியல்பாவது:— ஒரு பொருளின் தூலநிலையாம்; சிறப்பியல்பாவது:— ஒரு பொருளின் சூக்குமநிலையாம். தூலநிலையாவது:—பிறபொருளோடு சம்பந்தப்பட்டிருத்தல். சூக்குமநிலையாவது:—பிறபொருளோடு சம்பந்தப்படாது தனித்திருத்தல் - தூலநிலையென்றாலும் தடத்த இலக்கணம் என்றாலும் ஒருபொருளே சூக்குமநிலையென்றாலும் சொரூப இலக்கணம் என்றாலும் ஒருபொருளே. இம்முறைப்படி, பதி பசு பாசங்களின் பொதுவியல்பைக்கூறும் முன்னூறு சூத்திரங்களும் பொதுவதிகாரம் எனவும், அம்முப்பொருள்களின் சிறப்பியல்பைக்கூறும் பின்னூறு சூத்திரங்களும் உண்மையதிகாரம் எனவும் வகுக்கப்பட்டன. பதிக்குப் பொதுவியல்பு உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்றல்; சிறப்பியல்பு சச்சிதானந்தமாய் நிற்றல். பசுவுக்குப் பொதுவியல்பு கருவி கரணங்களுடன்கூடி நிற்றல்; சிறப்பியல்பு கருவிகளினின்றும் நீங்கி உடனாய் நிற்கும் சிவமாய் நிற்றல். பாசத்துக்குப் பொதுவியல்பு காரியரூபமாய் நிற்றல்; சிறப்பியல்பு காரணரூபமாய் நிற்றல். பொதுவியல்பு பிரமாணத்தினாலும் இலக்கணத்தினாலும் அறியப்படுமாதலால் பிரமாணவியல், இலக்கணவியல் இரண்டும் பொதுவதிகாரம் எனப்பட்டன. சிறப்பியல்பு சாதனத்தினாலும் பயனினாலும் அறியப்படுமாதலால் சாதனவியல் பயனியல் இரண்டும் உண்மையதிகாரம் எனப்பட்டன: பொதுவியல்பு ஆராய்ச்சியறிவாலும் சிறப்பியல்பு அநுபவவறிவாலும் அறியப்படும் என்றபடியாம்.

ஆராய்ச்சியறிவால் அறியப்படும் பொதுவியல்பை, பிரமாணவியல் இலக்கணவியலென இரண்டியல்களாக வகுத்துக்கூறத்தொடங்கி, அவற்றன், பிரமாணவியலை பதி உண்மைக்குப் பிரமாணம், பசு உண்மைக்குப் பிரமாணம், பாச உண்மைக்குப் பிரமாணம் என மூன்று சூத்திரங்களாக விரித்து, முதற்கண் காணப்படும் உலகத்திற்குக் கடவுள் உண்டென்றல் பொதுவும் அக்கடவுள் சிவம் என்றல் சிறப்புமாதலால் சிறப்புவகையால் முதற்கடவுளாகிய சிவபெருமான் உண்டென்று கூறும் ஆகமப்பிரமாணத்தை வலியுறுத்துவதாகிய அனுமானப் பிரமாணம் இம்முதற் சூத்திரத்தாற் கூறுகின்றார்.

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்.

கருத்துரை.

என்பது சூத்திரம். என்னுதலிற்றோவெனின், சங்காரகாரணனாயுள்ள முதலையே முதலாகவுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்துதனுதலிற்று.

சிற்றுரை.

இது சூத்திரக் கருத்துரைக்கின்றது.

(இ-ள்.) நிவிர்த்திகலைமுதலிய பஞ்சகலைகளுட்பட்ட ஐவகைச் சங்காரத்துள் இறுதிக்கண்ணதாகிய மாசங்காரத்தைச் செய்யும் வினைமுதலாயுள்ள முதல்வனையே தனக்கு முதற்கடவுளாக வுடைத்து அவனவளதுவென்று இவ்வாறு சுட்டி யுணரப்படுவதாய உலகம் என வேதாகமங்களுட் கூறப்படுவதனை அனுமானவளவையா னுணர்த்துதலைக் கருதிற்று இச்சூத்திரம் என்க.

ஏகாரம், இயைபின்மை நீக்குதற்கும், பிறிதினியைபு நீக்குதற்கும் பொதுவாய்நின்ற பிரிநிலை.

விளக்கம்.

சூத்திரமும கருத்துரையும் சூத்திரப்பொருளை வகுத்துக்கூறும் மேற்கோளும் ஏதுவும் திருட்டாந்தமும் ஆசிரியர்தாமே அருளிச்செய்தனர். அவற்றுள், கருத்துரையும் மேற்கோளும் ஏதுவும் வசனநடையாகவும், திருட்டாந்தம் வெண்பாவாகவும் அருளிச்செய்யப்பெற்றிருக்கின்றன. கருத்துரை முதலியன வசனநடையாக இருப்பினும் செய்யுள்போலவே ஆராய்ந்துணரக்கூடிய ஆழ்ந்தகருத்துடையன. ஆதலின், அவற்றிற்கும் செய்யுளுக்குப்போல உரையாசிரியரால் உரை கூறப்படுகின்றது.

இக்கருத்துரை சூத்திரக்கருத்து இதுவென்று சொல்லிற்று.

(இக்கருத்துரையின் பொருள்.) நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீதகலை யென்னும் ஐந்துகலைகளினும் தத்துவங்களும் புவனங்களும் உள. அவற்றுள், நிவிர்த்திகலையில் அடங்கிய தத்துவபுவனங்களைச் சங்கரிக்குங் கடவுள் பிரமன்; பிரதிட்டாகலையில் அடங்கிய தத்துவபுவனங்களைச் சங்கரிக்குங் கடவுள் விட்டுணு; வித்தியாகலையில் அடங்கிய தத்துவபுவனங்களைச் சங்கரிக்குங் கடவுள் உருத்திரன்; சாந்திகலையில் அடங்கிய தத்துவபுவனங்களைச் சங்கரிக்குங் கடவுள் அனந்ததேவர்; சாந்தியதீதகலையில் அடங்கிய தத்துவபுவனங்களைச் சங்கரிக்குங் கடவுள் சதாசிவர். இந்த ஐவரும் சிவபெருமான் ஆணையினால் சங்காரத்தொழிலைத் தத்தம் எல்லையளவும் நடாத்துவர். இந்த ஐவகைச் சங்காரத்தின் முடிபாகிய மகாசங்காரத்தைச்செய்யும் சதாசிவரை அதிட்டித்து நிற்கும் கருத்தாவாகிய பரமசிவனையே முதற்கடவுளாக அவன், அவள், அதுவென்று சுட்டியுணரப்படுவதாகிய உலகம் உடைத்து என வேதாகமங்களுட் கூறப்படுவதனை அனுமான அளவையால் உணர்த்துதல் இச்சூத்திரத்தின் கருத்து என்பதாம்.

சதாசிவரல்லாத ஏனை நால்வரும் சிவபெருமானால் நேரே அதிட்டிக்கப்படுதலின்றிச் சிவபெருமானால் அதிட்டிக்கப்படும் சதாசிவர் அனந்த தேவரையும், அவர் உருத்திரரையும், அவ்வுருத்திரர் விட்டுணுவையும், அவ்விட்டுணு பிரமனையும் அதிட்டித்து நடாத்துவர். இது இராஜாவானவன் இராஜப்பிரதிநிதியையும், அப்பிரதிநிதி தனக்கடுத்த உத்தியோகத்தினரையும் அவ்வாறே அவர் ஏனைய உத்தியோகத்தினரையும் முறையே செலுத்தி நடத்துதல் போலக்கொள்க. அதிட்டித்தலாவது நிலைக்களமாகக் கொண்டு செலுத்துதல்; வாயிலாகக்கொண்டு செலுத்துதலெனினுமாம்.

இக்கருத்துரையில் முதலையே என்றதிலுள்ள ஏகாரம், சிவபெருமானுக்கு ஏவற்றையுஞ் சங்கரிக்குஞ் சம்பந்தம் இல்லை யென்பதை நீக்குதற்கும், ஏனையோர்க்கு ஏவற்றையுஞ் சங்கரிக்கும் சம்பந்தம் உண்டென்பதை நீக்குதற்கும் பொதுவாய் நின்ற பிரிநிலை.

பஞ்சகலைகளும் சத்திகலையென்றும் சத்தி அதிட்டித்த கலையென்றும் இருவகைப்படும். அவற்றை சிவஞானசித்தியார் அ—ம். சூ—ம். சுூ—வது செய்யுள் விசேடவுரையிற் கூறியிருக்கின்றமையால் அவ்விடத்துக்காண்க.

நூலாசிரியர் அருளியது.

இதன் பொழிப்பு உரைத்துக் கொள்க.

சிற்றுரை.

இஃது இவ்வுரைமுகத்துக் கேட்போரால் உரைவகைபற்றிச் செய்துகோடற்பாலதொன்றனை அறிவுறுத்துகின்றது.

(இ-ள்.) இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு முன்னர்க் கண்ணழித்துரைக்கும் பொழிப்புரைபற்றி உரைத்துக்கொள்க என்க.

எனவே, இங்ஙனம் இருவகைப்படும் பொழிப்புரையுட் கண்ணழித்துக் கடாவிடைகளானுரைக்கும் வார்த்திகமாய பொழிப்புரை மாத்திரையே யாமீண்டுரைக்கின்றும்; பிண்டமாகக்கொண்டுரைப்பதாய பொழிப்புரை இதுபற்றி யுணர்ந்துகோடல் எளிதாகலின், அஃதியாமுரைக்கின்றிலம் என உரைமுகத்து மாணக்கர்க்கு அறிவுறுத்தவாறாயிற்று.

இஃது, ஏனைச் சூத்திரங்களினும் உய்த்துக்கொண்டுணர்தற்பொருட்டு, முதற்கண் வைக்கப்பட்டது.

விளக்கம்.

இதன் பொழிப்பு உரைத்துக்கொள்க என்னும் இவ்வாக்கியம் ஆசிரியர் திருவாய்மலர்ந்தருளியதாகும். இது என்ன சொல்லிற்றோ எனின், முன்னர்க்கூறப்படும் மேற்கோள், ஏது, திருட்டாந்தமாகிய உரைவகையினைக்கொண்டு, படிப்பவர்கள் சூத்திரத்திற்குப் பதப்பொருள் செய்துகொள்ளுமாறு அறிவுறுத்துகின்றது.

இவ்வாக்கியத்தின் பொருள். கண்ணழித்துரைக்கும் மேற்கோள் முதலிய உரைவகைபற்றிப் பிண்டப்பொழிப்புரை செய்துகொள்க என்றவாறு.

முன் என்பது இடம்பற்றியுங் காலம்பற்றியும் இருவகைப்படும். இடம்பற்றிவரும் முன் என்பது பின்னுள்ளதையுங் காலம்பற்றிவரும் முன் என்பது மேலுள்ளதையுங் குறிக்கும். ஆதலால் நூலில் முன் என்பதற்குப் பின்னென்பது பொருளாகக் கொள்க.

பிண்டப்பொழிப்பென்பது பிண்டமாகக் கொண்டுரைக்கும் பொழிப்புரை என்பதாம். கண்ணழித்துரை என்பது கணுக்களை அழித்துச்செய்யும் உரையாம். கணுக்கள் என்பது இவ்விடத்து ஒவ்வொரு பதத்தைக் குறிப்பதாகும். பதங்களைப் பிரித்து ஒவ்வொரு முடிபையும் ஒவ்வொரு அதிகரணமாக வகுத்துக் கூறுகின்றார்; ஆதலின், அவ்வதிகரணம் கண்ணழித்துரை எனப்பட்டது.

இதன் பொழிப்பு உரைத்துக்கொள்க என்ற இதனால் பிண்டப்பொழிப்புரை, வார்த்திகப்பொழிப்புரை என்னும் இருவகைப்படும் பொழிப்புரைகளுள், கண்ணழித்துச் சங்கை உத்தரங்களால் உரைக்கும் வார்த்திகப்பொழிப்புரைமட்டும் யாம் இவ்விடத்து உரைக்கின்றோம்; பிண்டமாகக் கொண்டுரைக்கும் பொழிப்புரை இவ்வார்த்திகப்பொழிப்புரையைக்கொண்டு உணர்ந்துகொள்ளுதல் எளிதாகலின், அப்பிண்டப் பொழிப்புரையை யாம் உரைக்கின்றிலம் என இதனைப்படிக்கும் மாணாக்கர்கட்கு அறிவுறுத்தியவாறாயிற்று.

ஏனைச் சூத்திரங்களினும் இவ்வாறு உணர்ந்துகொள்ளுதற்பொருட்டு இதன் பொழிப்பு உரைத்துக்கொள்க என்னும் இவ்வாக்கியம் முதற்கண் வைக்கப்பட்டது.

சிற்றுரை.

இவ்வாறு ஆசிரியர் ஆணைதந்தமையின், கண்ணழித்துரை பற்றிச் சூத்திரத்துக்குப் பதப்பொருள் கூறுதும்.

(அவன் அவள் அது எனும் அவை—புலவர்.) அவன் அவள் அது.எனும் அவ்வை—அவனென்றும் அவளென்றும் அது வென்றும் இவ்வாறு பகுத்துப் பலவாய்ச் சுட்டியுணரப்படுஞ் சொல்லும் பொருளுமாய இருகூற்றுப் பிரபஞ்சத்தொகுதி,— மூவினைமையின்—தோற்றம் நிலை இறுதி யென்னும் முத்தொழி லுடைமையால்,—தோற்றிய திதியே—ஒருவனாற் றோற்றப்பட்ட தாய உள்பொருளேயாம்,—ஒடுங்கி—அது தோன்றுங்கால் தானொ டுங்குதற்கு ஏதுவாய்நின்ற கடவுளினின்றும்,—மலத்துளதாம்— சகசமல நீங்காமையால், அது நீங்குதற்பொருட்டு மீளத்தோன்று வதாம்,—அந்தம் ஆதி—இவ்வாறாகலின், சங்காரத் தொழிலைச் செய்யுங் கடவுளே உலகிற்கு முதற்கடவுள்; ஏனையோர் அன்ன ரல்லர் எனக்கூறுவர் அளிவை நூலுணர்ந்தோர் என்க.

அவை தொகுதி; சுட்டுப்பெயரெனக்கொள்ளின், உள வெனப்பிரித்துப் பயனிலையாக்கித், தாமென்பதனை அசைநிலை யாக வைத்துரைத்து, ஆக்கச்சொல் வருவித்துக்கொள்க.

வினைமை வினையுடைமை.

தோன்றியவென்னாது தோற்றியவெனப் பிறவினைவாய்பாட் டானோதுதலின், அதற்குரிய வினைமுதல் அவாய்நிலையான் வந் தது. தோற்றியவென்னும் பெயரெச்சந் திதியென்னுஞ் செயப் படுபொருட்பெயர்கொண்டது. திதியா யொருவனாற் றோற்றப் பட்டதென்பார் தோற்றிய திதி யென்றார். திதியென்றது ஈண்டு உள் பொருளென்னுந் துணையாய் நின்றது.

மூவினை யுடைமையான் உள் பொருளாதலும், அவ்விரண்டு முடைமையான் நிமித்தகாரணனை யுடைத்தாதலுந் துணியப்படு மென்பார், மூவினைமையிற் றோற்றிய திதியே யென்றார்.

ஏகாரந் தேற்றம்; ஒடுங்கியென்பது பெயர். உருபுகள் தொக்கு நின்றன.

அந்தத்தைச் செய்யுங் கடவுளை அந்தமென்றது உபசாரம்.

காணப்பட்ட வுலகாற் காணப்படாத கடவுட்குண்மை கூற வேண்டுதலின், தோற்றிய திதியே யெனவும், ஒடுங்கியுளதாமென வும், உலகின்மேல்வைத்துக் கூறினார்; கருத்துரையுட் கூறியதும் அது நோக்கி.

விளக்கம்.

(சூத்திரத்தின் பொழிப்புரை.) அஃன், அவள், அதுவென்று கூறும் சொல்லும் அச்சொல்லுக்குரிய பொருளாம் உரைக்கப்படும் பொருளுமாகச் சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சம் எனப் பிரபஞ்சம் இருதிறப்படும். அவ்விருகூற்றுப் பிரபஞ்சமும் தோற்றுதல், நிலைத்தல், ஒடுங்குதல் என்னும் முத்தொழிற்படக் காண்கின்றமையால் அறிவில்லாத சடமாகிய அப்பிரபஞ்சத்தைத் தொழிற்படுத்துதற்கு ஒரு கருத்தாவேண்டப்படும். படவே, அக்கருத்தாவினால் ஒடுக்கப்பட்ட பிரபஞ்சமே மீளத்தோற்றுவிக்கப்பெறுமெனப் பிரபஞ்சம் என்றும் உள் பொர்ருளாதல் துணியப்படும். அவன் ஒடுக்கிய பிரபஞ்சத்தை ஆன்மாக்களின் மல நிவிர்த்தியின் பொருட்டு மீளத்தோற்றுவிப்பன்; ஆதலால், எவற்றையுந் தன்னுள் ஒடுக்கிவைத்திருக்குஞ் சுதந்தரமுடைய அக்கடவுளே மீளத்தோற்றுவித்தலுஞ் செய்யுமாதலின் சங்காரக் கடவுளே உலகிற்கு முதற் கடவுளாகும். அக்கடவுள் அல்லாத பிரம, விட்டுணு முதலிய ஏனையோர் தத்தம் எல்லையளவும் கடவுளாவரேயன்றி முதற்கடவுளாகமாட்டார். இவ்வாறு பிரமாண நூல் உணர்ந்தோர் கூறுவர் என்றவாறு.

அவனவளது வெனுமவை என்பதில் அவையென்பது, அவன், அவள் அதுவென்னும் மூன்றனைச்சுட்டாது, தொகுதியைக் குறித்து நின்றது; ஆகையால், அவையென்பதற்குப் பிரபஞ்சத்தொகுதி எனப் பதவுரை செய்யப்பட்டது. தொகுதியென்பது ஒருகூட்டம்; ஆகவே, அவன், அவள், அதுவெனும் கூட்டம் என்பதாம். இவ்வாறு கொள்ளாமல் அவை என்பதை அவனவளது வெனும் மூன்றைக் குறிக்கும் சுட்டுப் பெயரெனக் கொள்ளின் மலத்துள்தாம் என ஒருமை வாக்கியங்கொண்டுமுடியாது. அவ்வாறு சுட்டுப்பெயராகக்கொள்ளுங்கால் மலத்து உள எனப் பிரித்து அவை என்பதை எழுவாயாகவும், உளவென்பதைப் பயனிலையாகவும் ஆக்கி, உளதாம் என்பதிலுள்ள தாம் என்பதனை அசை நிலையாக வைத்துரைத்து, ஆம் என்னும் ஆக்கச்சொல் வருவித்து அவை உளவாம் எனக்கொள்க.

மூவினைமை யென்பதில் வினைமை என்பது வினையுடைமை என்னும் பொருளைக் குறிக்கும். தோன்றிய என்று தன்வினைவாய்ப்பாட்டாற் கூறாது, தோற்றியவெனப் பிறவினைவாய்ப்பாட்டாற் கூறினமையின் அப்பிறவினைக்குரிய வினைமுதலாகிய கருத்தா என்பது அவாய்நிலையான் வந்தது. தன்வினை என்பது தானே தெர்ழிற்படுதல்; பிறவினை என்பது பிறரால் தொழிற்படுதல். அவாய்நிலை என்பது ஒருபதம் தன் கருத்தை முடிப்பதற்குப் பிறிதொரு பதத்தை அவாவிநிற்றல். இவ்விடத்துத் தோற்றிய என்னும் பதம் ஒருவனால் என்னும் பிறிதொரு பதத்தை அவாவிநின்றவாறுகாண்க. தோற்றிய என்பதின் கடையிலுள்ள அசரம் பெய

ரெச்சமாதலால், அவ்வெச்சம் திதி என்னும் செயப்படுபொருட்பெயர் கொண்டது. தோன்றியதிதி என்று கூறாது தோற்றிய திதி என்றதனால் திதி செயப்படுபொருளாயினமை யறிக. உள்பொருளாய் ஒருவனால் தோற்றப்பட்டதென்று கூறவேண்டியே தோற்றிய திதி என்றார். திதி என்றது காத்தற்பொருளதாயினும் இவ்விடத்துக் காத்தற்குரிய உள்பொருளைக் குறித்து நின்றது.

அவன், அவள், அதுவெனும் பிரபஞ்சம் மூவினைமை உடைமையால் உள்பொருளாதலும், மூவினையினையும் உள்பொருளாதலையும் உடைமையினால் உள்பொருள் முத்தொழிற்படுதற்கு ஒருகருத்தாவையின்றி முடியாதாதலின் நிமித்தகாரணனை உடைத்தாதலும் துணியப்படுமென்று கூறவேண்டி மூவினைமையிற் றோற்றிய திதியே என்றார். தோற்றிய திதி என்றதனால் தானே தோன்றாமையினையும் உள்பொருளாதலையும், மூவினைமையின் என்றதனால் வினைமுதலாகிய வேறொரு கருத்தாவால் தோற்றப்பட்டதென்பதனையும் உணர்த்தியவாறும்.

தோற்றிய திதியே என்பதிலுள்ள ஏகாரம் என்றும் உள்பொருளே என்னும் பொருளைத்தருதலின் தேற்றம்.

ஒடுங்கி என்பது வினையெச்சமன்று; பிரபஞ்சம் ஒடுங்குதற்கு ஆதாரமாய்நின்ற கடவுளைக்குறித்தலின் பெயர். இது வீங்கி என்பது வீங்குதற்கு ஆதாரமாய் நின்றவனைக் குறிப்பதுபோலாம்.

ஒடுங்கி என்பதில் இன் உருபும், மலத்து என்பதில் ஆல் உருபும் தொக்குநின்றன. தொக்குநிற்றலாவது வெளிப்படாது அடங்கி நிற்றல். தொக்குநிற்கும் அவ்வுருபுகளை விரித்து ஒடுங்கியின் (அதாவது) கடவுளின் என்றும், மலத்தால் (அதாவது) மலம் நீங்காமையால் என்றும் பதவுரை செய்யப்பட்டது.

அந்தமில்லாத கடவுளை அந்தமென்று கூறியது ஏனையவற்றிற்கு அந்தத்தைச் செய்தல்பற்றி வந்த உபசாரம்.

இம்முதற்சூத்திரம் கடவுள் உண்டென்றுகூறுதற் கெழுந்தது. கடவுள் கண்ணினாலும் மனத்தினாலும் காணக்கூடிய பொருளன்று. இவ்விரண்டினாலுங் காணக்கூடாத பொருள் உண்டென்று சாதிப்பது எவ்வாறெனின், பிரத்தியட்சத்தால் அறியக்கூடாத ஒன்றை நம்பப்படத்தக்கவன் வாக்கியத்தாலும் அனுமானத்தாலும் அறியலாம். உதாரணமாகக் குடங்காணப்பட்டுச் செய்த குலாலன் காணப்படாதபொழுது நம்பப்படத்தக்கவன் வாக்காலும், மண் சடப் பொருளாதலால் அம்மண் தானே குடமாகமாட்டாது, மண்ணைக் குடமாகச்செய்தவன் ஒருவன் இருக்கவேண்டுமென்னும் அனுமானத்தாலும் குலாலன் உண்டென்று அறியலாம்; அதுபோல, பிரபஞ்சங்

காணப்பட்டுக் கடவுள் காணப்படாவிடினும் ஆத்தவாக்காகிய ஆகமப் பிரமாணத்தாலும் அனுமானப்பிரமாணத்தாலும் உண்டென்று அறிதல் கூடும். அவ்விருபிரமாணங்களுள், ஆகமப் பிரமாணத்தைச் சமயவாதிக ளனைவரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்; ஆதலின், யாவரும் ஒப்புக்கொள் ளும்படியான அனுமானப்பிரமாணத்தைக்கொண்டு கடவுள் உண்டென்று சாதிக்கிறார். எவ்வாறெனின், காணப்படும் பிரபஞ்சம் சடமாதலானும், தோற்றுதல், இருத்தல், ஒடுங்குதல் என்னும் முத்தொழிற்படுதலானும், அம்முத்தொழில்களுள் தோற்றுதல் இருத்தல் என்னும் இருதொழில் களால் தூலமாய் வெளிப்பட்டும் ஒடுங்குதல் என்னுந்தொழிலால் சூக்கும மாய் அடங்கியும் என்றும் உள்பொருளாதலானும், அறிவில்லாத சட மாகிய பிரபஞ்சம் தானே சூக்குமரூபமாய் ஒடுங்கவும் தூலரூபமாய் வெளிப் படவும் முடியாதாதலானும், உள்பொருளாகிய பிரபஞ்சம் தான் ஒடுங்கு தற்கு நிலைக்களமான கடவுளில் ஒடுங்கி அக்கடவுளால் மீளத்தோன்றும்; ஆதலால், காணப்பட்ட உலகத்தைக்கொண்டு காணப்படாத கடவுள் உண் டென்று கூறினாரென்க. இவ்வாறு உலகத்தைக்கொண்டு கடவுளுண்மை கூறவேண்டுதலினால் தோற்றிய திதியே என உலகத்தை முன்னரும் ஒடுங்கி உளதாம் எனக் கடவுளைப் பின்னரும் வைத்துக்கூறினார். கருத்துரையில் கடவுளை முதலாக உடைத்து இவ்வுலகம் எனக்கூறியதும் காணப்பட்ட உலகத்தைகொண்டு கடவுளை உணர்த்துதலை நோக்கியேயாம். இவ் வாறு கூறினாரேனும் உலகிற்கு முதல் கடவுள் என்பது கருத்தாகக்கொள்ள வேண்டும். உலகு கடவுளை முதலாக உடைத்து என்பதற்கும் உலகிற்கு முதல் கடவுள் என்பதற்கும் வேற்றுமை என்னையோவெனின், கூறுதும். உடைத்து என்றபொழுது உடைமைப்பொருளில் கடவுள் நின்றார். முதல் என்றபொழுது தலைமைப்பொருளில் கடவுள் நின்றார், இதுவே வேற்று மையாம். உடைமை விசேடணம்; தலைமை விசேடியம். உதாரணமாக, செம்மையை உடையது தாமரை என்றவிடத்து, செம்மை விசேடணம்; தாமரை விசேடியம், செந்தாமரை என்றவிடத்து விசிட்டம். செம்மை தாமரையை உடையது என்பதுபோல, உலகம் கடவுளை உடைத்து என்று கூறுதல்; செம்மைக்குத் தாமரை முதல் என்றதுபோல உலகிற்கு கடவுள் முதல் என்று கூறுதல்; செம்மை தாமரையை உடையதெனக்கூறினும், செம்மைக்குத் தாமரை முதலென்பதே பொருளாம். விசேடணம் விசேடி யத்திலிருக்குமன்றி விசேடியம் விசேடணத்திலிராது. ஆதலால், கடவுளை விசேடணமாகவும் உலகை விசேடியமாகவும் கூறினாரேனும் உலகை விசேடணமாகவுங் கடவுளை விசேடியமாகவுங் கொள்ளல் வேண்டும்.

இக்கருத்துப்பற்றியே "ஆதிபகவன் முதற்றே உலகு என உலகின்மேல் வைத்துக் கூறினாரேனும் உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக்கொள்க" எனத் திருக்குறளுக்கு உரைகண்ட பரிமேலழகரும் கூறுவாராயினர்.

சிற்றுரை.

இச்சூத்திரத்துள் அவனவளது வெனுமவை மூவினைமையின் என்பது ஓரதிகரணம்; தோற்றிய திதியே யொடுங்கி யுளதாம் என்பது மூன்றதிகரணத்தை யுள்ளடக்கிநிற்பதோரதிகரணம்; அந்தமாதி யென்மனார் புலவர் என்பது ஓரதிகரணம்; ஆக முக்கூற்றது இச்சூத்திரமென்றுணர்க. இம்மூன்றும் முறையே ஒன்றற்கொன்றேதுவும் பயனுமாய் ஒருபொருண்மேல் வருதலின், ஒரு சூத்திரத்தாற் கூறினார். தன்னாற் கூறப்படும் பொருளும், அதன்கணையப்பாடும், அதற்குப் பிறர்கூறும் பக்கமும், அதனை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபும், இயைபுமென்னும் இவற்றது நிலைக்களம் ஈண்டதிகரண மெனப்படும்.

விளக்கம்.

இச்சூத்திரத்துள் 'அவனவளதுவென்பது முதல், ஆக முக்கூற்றது இச்சூத்திர மென்றுணர்க' என்பதுவரை வெளிப்படை. இம்மூன்று கூற்றையும் மூன்று சூத்திரமாகக் கூறாது ஒரு சூத்திரமாகக்கூறியதன் கருத்தென்னை யோவெனின், இம்மூன்றுகூறும் முறையே ஒன்றற்கொன்று ஏதுவும் பயனுமாய் ஒருபொருண்மேல் வருதலினால் ஒருசூத்திரத்தாற் கூறினார். அதாவது அவனவளது வெனுமவை மூவினைமையின் என்பது ஏது; தோற்றிய திதியே ஒடுங்கி உளதாம் என்பது பயன்; அப்பயன் தோற்றிய திதியே ஒடுங்கி உளதாம் ஆதலால் என ஏதுவாகி, அந்தமாதி யென்மனார் புலவர் என்பது பயனாக நின்றவாறறிக.

அதிகரணம் என்பதும் கூறு என்பதும் ஒரு பொருட்சொற்கள்; இவ்விடத்துத் தன்னாற்கூறப்படும்பொருளும் அப்பொருளின்கண் ஐயப்பாடும், அந்த ஐயப்பாட்டின்கண் பிறர்கூறும் பக்கமும், பிறர்பக்ஷமாகிய அதனை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபும், அத்துணிபுக்கு எடுத்துக்காட்டும் இயைபும் என்னும் இவ்வைந்தினது நிலைக்களம் அதிகரணமாம். அவற்றுள் தன்னாற் கூறப்படும் பொருள் என்பது மேற்கோள்; ஐயப்பாடும் பிறர் கூறும் பக்கமும் மேற்கோளில் அடங்குவன. பிறர்பக்கத்தை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபு ஏதுவாம்; இயைபு திருட்டாந்தமாம்; இவ்வாறு ஒவ்வொரு அதிகரணத்துள்ளும் ஐந்துறுப்புக்களும் அமைந்திருத்தல் அவ்வவ்விடங்களில் விளக்கப்படும்.

முதலதிகரணம்.

*உலகம் முத்தொழில் உடையது எனக்கூறும்
மேற்கோள்.

ஈண்டு உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப் பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்தென்றது.

சிற்றுரை.

என்பது மேற்கோள் எ-னின், மூவினையுடைத்தோ அன்றோவென்னும் ஐயப்பாட்டின்கண் நித்தமாய்க்காணப்படும் பிரபஞ்சத்தை மூவினையுடைத்தென்றல் பொருந்தாது என மீமாஞ்சகரும் உலகாயதருங் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து, மேற்கோடனுதலிற்று.

(இ-ள்.) வெளிப்படை.

சுப்பிரமணியதேசிகர்செய்த உரை.

இ-ள். ஈண்டு - இம்மூன்று அதிகாணங்களின்வைத்து இம் முதல் அதிகாணத்துள்;—ஒருவன் ஒருத்தி ஒன்றென்று உளதாய்ச் சுட்டப்பட்ட பிரபஞ்சம்—ஒருவனென்றும் ஒருத்தியென்றும் ஒன்றென்றும் இவ்வாறு அவயவப்பகுப்புடைத்தாயும் பலவேறு வகைத்தாய்ச் சடமாயும் முயற்கோடு முதலியனபோலத் திரிபையங்களானன்றி மெய்யாகச் சுட்டியறியப்பட்ட பிரபஞ்சம் இம் மூன்று ஏதுவானும்,—உற்பத்தி திதி நாசம் உடைத்தென்றது— தோன்றிநின்று அழிதலையுடைத்து என்க.

ஒருவனென்றும் ஒருத்தியென்றும் ஒன்றென்றும் இவ்வாறு அவயவப்பகுப்புடைத்தாயும் பலவேறு வகைத்தாய்ச் சடமாயுஞ் சுட்டியறியப்படுவதாயுமிருத்தலின் இம்மூன்றேதுவானும் பிரபஞ்சந் தோன்றி நின்றழியுமென்பது துணியப்படுமென்பார், உளதா யொருவ னொருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சமென உடம்பொடுபுணர்த்தோதினர்.

உளதாய்ச்சுட்டப்பட்ட வெனவியையும். உளதாகச்சுட்டப் படுதல் முயற்கோடு முதலியனபோலத் திரிபையங்களானன்றி மெய்யாகச்சுட்டப்படுதல்.

* இதுமுதற் கூறப்படும் அவதாரிகைகளெல்லாம் விளக்கத்தைச் சார்ந்தன.

விளக்கம்.

இம்மேற்கோள் சூத்திரத்தில் உள்ள அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின் என்ற முதற்கூற்றைப் பதச்சேதஞ்செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்னசொல்லிற்றோ எனின், மூவினையுடைமை என்பதில் பிரபஞ்சம் உற்பத்தி, திதி, நாசமென்னும் மூன்றுதொழிலையுடையதோ அன்றோ என்பது ஐயப்பாடு; இவ்வையப்பாட்டின்கண், நித்தமாய்க் காணப்படும் பிரபஞ்சத்தை முத்தொழிலுடையது என்று கூறுதல் பொருந்தாது என்பது பிறர்கூறும் பக்கம். இவ்வாறு கூறுபவர் மீமாஞ்சகரும் உலகாயதருமாம். இவர்கூற்றை ஆசிரியர்தாமே ஆசங்கித்துக்கொண்டு அக்கூற்றை மறுக்கும்முறையில் சூத்திரத்தின் முதற்கூற்றைப் பதச்சேதஞ் செய்து பிரபஞ்சம் முத்தொழிலுடையதெனக் கூறியவாறும்.

(இம்மேற்கோளின் பொருள்.) இச்சூத்திரத்திற்கூறப்படும் மூன்று அதிகரணங்களுள், இம்முதல் அதிகரணத்தில் ஒருவனென்றும் ஒருத்தியென்றும் ஒன்றென்றும் பகுக்கப்படுகின்ற அவயவப்பகுப்புடைத்தாயும், அப்பகுப்பு ஒவ்வொன்றும் வேறுவேறாதலின் பல்வேறு வகையாய்ச் சடமாயும், முயற்கொம்பு முதலியன சந்தேக விபரீதங்களாற் சுட்டியறியப்படுதல் போலன்றி உண்மையாய்ச் சுட்டி அறியப்படுவதாயும் இருத்தலால், இம் மூன்று ஏதுவானும் பிரபஞ்சம் தோன்றிநின்று அழியுந்தன்மையுடையது என்றவாறு.

அவயவப்பகுப்பு உடையதாயும் பல்வேறுவகைத்தாய்ச் சடமாயுஞ் சுட்டி அறியப்படுவதாயும் இருத்தலின், இம்மூன்றேதுக்களானும், பிரபஞ்சம் தோன்றிநின்று அழியுமென்பது துணியப்படுமெனக் கூறவேண்டி, உளதாய்ச் சுட்டப்பட்ட பிரபஞ்சம் எனக்கூறாது, ஒருவன் ஒருத்தி ஒன்று என்று உளதாய்ச் சுட்டப்பட்ட பிரபஞ்சம் என உடம்பொடுபுணர்த்தோதினர்.

உடம்பொடுபுணர்த்தலென்பது ஓர் உத்தி. அதாவது, ஒருவாக்கியத்தில் அதற்குரிய செம்பொருளேயன்றிக் குறிப்பாற் பிறிதொருபொருளைப் புணர்த்திவைத்தல். வாக்கியம் உடம்பும் பொருள் உயிருமாம். இவ்விடத்தில், ஒருவன் ஒருத்தி ஒன்று என்றவாக்கியமாகிய உடம்பொடு ஏதுப்பொருளைப் புணர்த்திக் கூறியிருத்தலால் உடம்பொடுபுணர்த்தலாயிற்று.

உளதாய் என்னும் வாக்கியத்தைச் சுட்டப்பட்ட என்னும் வாக்கியத்தின்மேல் வைத்து ஒருவன் ஒருத்தி ஒன்றென்று உளதாய்ச் சுட்டப்பட்ட எனக்கொண்டு கூட்டுக.

உளதாகச் சுட்டப்படுதலாவது முயற்கோடு, கயிற்றரவு, கிளிஞ்சில் வெள்ளி முதலியனபோலத் திரிபு ஐயங்களாலன்றி மெய்யாகச் சுட்டப் படுதல்.

திரிபு எனினும் விபரீதமெனினும் ஒக்கும். அதாவது ஒன்றை மற்றொன்றாக அறிதல். ஐயமாவது அதுவோ இதுவோ எனச் சந்தேகித்தல். முயலினிடத்துக் கோடு இல்லையாகவும் செவியைக்கண்டு கோடுள்ளதாகக் காண்டல் விபரீதம். கயிற்றினிடத்தில் பாம்பில்லையாகவும் மாலைப் பொழுதில் மயக்கத்தால் வளைந்திருத்தல் முதலியவற்றைக்கண்டு இது கயிறோ பாம்போ என வெண்ணுதல் சந்தேகம். இவ்வாறே கிளிஞ்சில் வெள்ளி முதலியவற்றினிடத்துங் காண்க. கயிற்றைப் பாம்பெனக் காண்டலும் விபரீதம். விபரீதமாய்க் காண்பதும் சந்தேகமாய்க் காண்பதும் ஆராய்ந்தபொழுது இல்லையாய் முடியும். பிரபஞ்சம் அவ்வாறு விபரீதமாதலும் சந்தேகமாதலுமின்றி உள்ளவாறுணரப்படுதலின் உளதாய்ச் சுட்டப்பட்ட பிரபஞ்சம் எனப்பட்டது. முயற்கோடு கயிற்றரவு முதலியன உண்மையிலில்லையாயினும் மயக்கத்தாற் காணப்பட்டுக் கண்டபொழுது துன்பமுற்றுப் பின் ஆராய்ந்தபொழுது முயலினிடத்துக் கோடும் கயிற்றினிடத்துப் பாம்பும் இல்லையென்றறிந்து துன்பம் நீங்கி இன்புறுதல் போலக் கடவுளிடத்துப் பிரபஞ்சம் அறியாமையினாற் காணப்பட்டு அவ்வாறு காணப்படுதலினாற் றுன்பமுண்டாகும்; அறிந்த பின்னர்ப் பிரபஞ்சங் காணப்படாதொழியும்; ஒழியவே, துன்பம் நீங்கி இன்பம் அடைதல் கூடும் எனக் கொள்ளலாகாதோ எனின், ஆகாது; எதனாலெனின், கயிற்றினிடத்து மயக்கத்தினால் பாம்பைக்கண்டபொழுது அப்பாம்பின் வடிவங் கண்டவனைத் துன்பமடையச் செய்வதேயன்றி ஆராயாது நெருங்கினகாலத்தும் பாம்புத் தன்மையோடு தொழிற்படுமாறில்லை; பிரபஞ்சமோ தொழிற்பாட்டுக்கு அகப்படுகின்றது; ஆதலால் கயிற்றரவு முதலியன போலப் பிரபஞ்சத்தைக் கொள்ளுதல் கூடாது. கனவில் பாம்பு முதலியன தொழிற்படக்கண்டும் விழித்தபின் இல்லாமற்போவதுபோல அஞ்ஞான காலத்திற் றொழிற்படும் பிரபஞ்சம் ஞானகாலத்தில் இல்லாமற்போகுமென்று கொள்ளலாகாதோவெனின், ஆகாது; எதனாலெனின், சில கருவிகள் இல்லாதநிலை சொப்பனம்; எல்லாக்கருவிகளோடுங் கூடியநிலை சாக்கிரம்; சொப்பனத்திற் காண்பவற்றைச் சாக்கிரத்திற் காண்பதற்குத் திருட்டாந்தமாகக் கூறுதல் பொருந்தாது. கனவுமுதலிய உவமைகளை இந்நூலினும் பிறநூல்களினும் எடுத்தாண்டிருப்பதன் கருத்தென்னையெனின், பிரபஞ்சம் மாறுதலடையும் முறைமையை யுணர்த்துதற்பொருட்டேயாம். இன்னும் இதுபற்றிய சங்கை உத்தரங்களெல்லாம் முன்னர் ஆறுஞ் சூத்திர முதலதிகரணத்து வெண்பாவினும் மற்றும் வருமிடங்களினுங் கூறப்படுமாதலின் அவ்விடங்களிற் காண்க.

பிரபஞ்சம் முத்தொழிற்படுமென்பதற்கு மூன்றேதுக் கூறுவானேனெனின், கூறுதும். அவயவப் பகுப்புடைத்தாயிருத்தலினால் பிரபஞ்சம் முத்தொழிலுடைத்து என்று கூறின் பிரபஞ்சம் என்னுஞ் சொல் உயிரையும் உலகையுங் குறிக்குமாதலானும் உயிராகிய சேதனப்பிரபஞ்சம் வேறு வேறாதலானும் அச்சேதனப்பிரபஞ்சமுந் தோன்றி நின்றழியுமெனக் கொள்ளவரும்; அவ்வாறு கொள்ளின் சித்துப்பொருள் முத்தொழிற் படாமையால் உயிர்கள் உற்பத்தி உடையதல்லவெனக்கூறும் நூல்களோடு முரணும்; ஆதலின் உயிரை நீக்குவதற்காக அவயவப்பகுப்புடைத்தென்றதோடு நில்லாது பல்வேறுவகைத்தாய்ச் சடமாயென்னும் இரண்டாவது ஏதுவும் சேர்க்கப்பட்டது. அவயவப்பகுப்புடைத்தாயும் பல்வேறு வகைத்தாய்ச் சடமாயும் உள்ள பிரபஞ்சந் தோன்றி நின்றழியுமென்று கூறின், ஆணவம் கன்மம் சுத்தமாயை அசுத்தமாயை என்னுங் காரணப் பிரபஞ்சமாகிய பாசமும் அவயவப்பகுப்புடைத்தாயும் பல்வேறுவகைத் தாய்ச் சடமாயுமிருத்தலின் அதுவுந்தோன்றி நின்றழியுமெனக் கொள்ள வரும்; அவ்வாறு கொள்ளின் ஆணவமுதலியன சுட்டியறியப்படாமையால் உற்பத்தி இல்லாதவை எனக்கூறும் நூல்களோடு முரணும். ஆதலின் ஆணவ முதலியவற்றையும் நீக்குவதற்காகப் பல்வேறுவகைத்தாய்ச் சடமா யென்றதோடமையாது சுட்டி அறியப்படுவதாயென்னும் மூன்றாவது ஏதுவுஞ் சேர்க்கப்பட்டது. உயிரும் ஆணவமுதலியனவுஞ் சுட்டி அறியப்படாவாம்; ஆயினும், உயிர் அவயவப்பகுப்புடைத்தாயும் ஆணவமுதலிய காரண வசேதனப் பிரபஞ்சம் அவயவப்பகுப்புடைத்தாயும் பல்வேறுவகைத்தாய்ச் சடமாயும் இருக்கும். அவயவப்பகுப்புடைத்தாயும் பல்வேறுவகைத்தாய்ச் சடமாயும் சுட்டி அறியப்படுவதாயுமிருப்பது காரியமாகிய அசேதனப் பிரபஞ்சமே. இப்பிரபஞ்சத்தை யுணர்த்துதற்கு மூன்றேதுக்களும் வேண்டப்பட்டன. அவ்வாறாயின், சுட்டப்பட்ட பிரபஞ்சம் முத்தொழிலுடைத்து என்றாற்போதாதோ எனின், அவ்வாறு கூறின் உயிரினாற் காரியப்படும் பிரபஞ்சத்தையுங் குறிக்குமாதலால் அதனை விலக்குதற்கு ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் என்றார். அவயவப்பகுப்பு என்பது இவ்விடத்தில் ஒரு பொருளின் ஏகதேசமன்று, வேறு வேறாதலாம். வேறு வேறாதலும் பல்வேறுவகைத்தாதலும் வேறு. எவ்வாறெனின், அவன் என்பதும் அவள் என்பதும் அதுவென்பதும் வேறு வேறாதல்: அவற்றுள் ஒவ்வொன்றும் பலவாதல் பல்வேறு வகைத்தாதல், இவ்வாறு உயிரினிடத்து வேறு வேறாதல் மட்டும் உண்டு. ஆணவமுதலிய காரண அசேதனப் பிரபஞ்சத்தினிடத்து வேறு வேறாதலும், வேறு வேறாயுள்ள ஆணவம் கன்மம் மாயைகள் ஒவ்வொரு உயிரினிடத்தும் வேறு வேறாய்ப் பல்வகைத்தாதலும் சடமாதலும் உளவாம். பல்வகைத்தாதலென்றதனால் பொருள் பலவென்று கொள்ளக்கூடாது. செயல்பற்றிப் பலவகைத்தாத லென்று கொள்ளல்வேண்டும்.

மூன்று ஏதுக்களை உடைய இவ்வனுமானத்தில் ஆடைபோலும் என்னுந் திருட்டாந்தம் உரைத்துக்கொள்க. ஆகவே பிரபஞ்சம் முத்தொழிலுடைத்து; அவயவப்பகுப்புஞ் சட்முஞ் சுட்டியறியப்படுதலும் உடைமையால்; முத்தொழிற்படும் ஆடைபோலும் என அனுமானப் பிரமாணத்தை முடித்துக்கொள்க. ஆடையில், நூல்கள் அவயவம்; அவை ஒவ்வொன்றும் வேறு வேறாதல் பல்வேறுவகை; சடமாதலும் சுட்டியறியப்படுதலும் வெளிப்படை. இவ்வனுமானத்திற் கூறிய திருட்டாந்தமாகிய ஆடையும் பிரபஞ்சமாதலின், இம்மலை தீயுடைத்து; புகையுடைமையால், அடுக்களை போலெனக் கூறாது அம்மலைபோல் எனப்பக்கத்தையே திருட்டாந்தமாகக் கூறுதல்போன்ற தருக்கவழுவாகாதோ எனின், ஆகாது; ஏதனலெனின் காரியப் பிரபஞ்சம் இறைவனாற் காரியப்படும் பிரபஞ்சமும் உயிராற் காரியப்படும் பிரபஞ்சமுமென இருவகைப்படும். அவற்றுள் இறைவனாற் காரியப்படும் பிரபஞ்சம் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயங்களும் இவற்றின் கூறாகிய உடல், மலை, மரம், கடல். இரும்பு, பொன் முதலாயினவுமாம். இப்பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் மாயையாம். உயிராற் காரியப்படும் பிரபஞ்சமாவது குடம், மாடம், மாளிகை, கோபுரம், ஆடை, எரி, கால், ஆபரணம் முதலியனவாம். இப்பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் இறைவனாலுண்டாகிய காரியப்பிரபஞ்சமாம். ஆகவே முத்தொழிலுடைத்து என்று கூறியது இறைவனாற் காரியப்படும் பிரபஞ்சமும், திருட்டாந்தமாகக்கூறிய ஆடை உயிராற் காரியப்படும் பிரபஞ்சமு மாதலால் தருக்கவழுவாகாமை யறிக. இதனால் பிரபஞ்சம், சேதனம் அசேதனம் என இரண்டாய், அசேதனம், காரணம் காரியம் என இரண்டாய், காரியம், இறைவன்காரியம் உயிர்க்காரியம் என இரண்டாய் விரியுமாறு அறிக. இக்கருத்துப்பற்றியே சூத்திரத்தில் பிரபஞ்சம் மூவினைமையால் எனப்பொதுப்படக் கூறாது அவன் அவள் அது வெனச் சிறப்பாகப் பிரித்துக் கூறினர். அவன் என்பது அவன் என்று சுட்டப்படும் உடலையும், அவள் என்பது அவள் என்று சுட்டப்படும் உடலையும், அதுவென்பது நிலம் நீர் முதலியவற்றையும் மிருகமுதலியவற்றின் உடல்களையுங் குறிக்கும். அதுவென்பது உயிரால் உண்டுபண்ணப்படும் பிரபஞ்சத்தையுங் குறியாதோவெனின், அவன் அவள் என்பன உயிர்களின் உயர்திணையைக் குறித்தவாறுபோல அது என்பது உயிருள்ளனவும் இல்லனவுமாய இறைவன் காரியமாகிய இழிந்த திணையையே குறிக்குமாதலினல் உயிரின்காரியத்தைக் குறியாதெனவறிக.

இம்மேற்கோளுக்கு ஏது வேறுகூறியிருக்கவும், அதனின் வேறாய ஏதுவை மேற்கோளில் உடம்பொடுபுணர்த்திக்கூறிய தென்னையெனின், இங்கேகூறிய ஏது அநுமானப்பிரமாணத்தால் மேற்கோளைச் சாதித்தற்கும், பின்னர்க் கூறும் ஏது பிரத்தியட்சப்பிரமாணத்தால் மேற்கோளைச் சாதித்தற்குங்கூறியவாறென அறிக.

உலகம் முத்தொழிற்படும் என்பதற்குக்காட்டும்

ஏ து.

தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்.

சிற்றுரை.

எ - து ஏது எ-னின், காட்சியளவைக்கு எய்தாதுரைப்பன வெல்லாம் பிரமாணமாகாவென உலகாயதர் கூறுங்கடாவை யாசங்கித்துக் காட்சியளவை பற்றியும் மேற்கோளைச்சாதித்தனுதலிற்று.

(இ—ள்.) உற்பத்தியும் நாசமுங் காணப்பட்ட திதியின் பக்கத்தே காணக்கிடத்தலின் உளதா யொருவ னொருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து என மேற்கொண்டது என்க.

விளக்கம்.

இந்த ஏது என்னசொல்லிற்றோவெனின், மேல் உடம்பொடுபுணர்த்தோதிய அனுமானப்பிரமாணத்தினல் பிரபஞ்சம் முத்தொழிலுடையது எனச்சாதிக்கவே முத்தொழிலுடைய தன்றெனக் கூறிய மீமாஞ்சகர், உலகாயதர் என்னுமிருவருள் மீமாஞ்சகர் அனுமானப்பிரமாணங் கொள்பவராதலால் ஏற்றுக்கொள்வர்; உலகாயதர் பிரத்தியட்சப் பிரமாணமொன்றே கொள்பவராதலின் அனுமானப்பிரமாணத்தால் பிரபஞ்சம் முத்தொழிற் படுமென்றல் பொருந்ாதென்பர். அவ்வுலகாயதர் கூற்றை ஆசிரியர் தாமே ஆசங்கித்துக்கொண்டு பிரத்தியட்சப் பிரமாணத்தினுலும், உலகம் முத்தொழிற்படுமென்னும் மேற்கோளைச் சாதித்தவாறும். ஆகவே இந்த ஏது மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

(இந்த ஏதுவின் பொருள்.) உற்பத்தியும் நாசமும் என்னு மிரண்டும் காணப்பட்ட இருப்பின்பக்கத்தே காணக்கிடத்தலின் உளதா யொருவ னொருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி, திதி, நாசமுடைத்து என மேற்கோள் கூறியதென்க.

தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தல் உண்மையாயின் உள்ளதாகிய கடவுளினிடத்தும் உயிரினிடத்தும் பாசங்களினிடத்துந் தோற்றமும் ஈறும் உளவெனப்படுமோ எனின்; படாது, எதனுலெனின், காரியப் பிரபஞ்சஞ் சுட்டியறியப்படுதல்போலக் கடவுள் முதலியன சுட்டியறியப் படாமையினுலென்க.

பிரத்தியட்சமாய்க் காணப்படும் இருப்பினுலேயே தோன்றுதலும் அழிதலும் எவ்வாறு காணப்படுமெனின், பிரத்தியட்சமாய்க காணப்படுவ

தோன்று என்றும் நிலைத்திருப்பதில்லை. ஆதலால், அழிதலும் அழிந்த வாறே ஒழிந்துபோகக் காணாமையால் மீளத்தோன்றுதலுமாகிய இரண்டும் இருத்தல் ஒன்றேகொண்டு கொள்ளப்படும் என அறிக.

தோற்றமும் நாசமும் உள்ளதன்பாலே
காணப்படுமென்பதற்குக் காட்டும்

உதாரணம்.

பூதாதி யீறு முதலுந் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையி—னோதாரோ
வொன்றேன்றிற் றேன்றி யுளதா யிறக்கண்டு
மன்றேன்று முண்டேன்ன வாய்ந்து.

சிற்றுரை.

என்பது உதாரணம் எ—னின், உள்ளதன்பால் அவ்விரண்டுங் கிடத்தல் யாங்ஙனம் என்னுங்கடாவை யாசங்கித்து ஏதுவை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்.) பேதாய்—காட்சி யளவைகளானும் அறியப்படாத மடவோனே,—பூதாதி—பூத முதற்காரணமாகவுடைய பிரபஞ்சத்திற்கு,—திதி ஈறும் முதலும் துணை ஆக ஆகும்—திதி நிகழ்வுழி, நாசமும் உற்பத்தியுந் தனக்குத் துணைக்காரணமாகக் கொண்டே நிகழாநிற்கும். (அற்றாயினும் ஒன்றுதோன்ற ஒன்று நிற்ப ஒன்று அழிவதன்றி ஒருங்கே தோன்றி ஒருங்கேநின்று ஒருங்கேயழியக் கண்டிலமாலெனின்),—ஒன்று ஒன்றின் பெற்றிமையின் தோன்றி உளதாய் இறக்கண்டும்—ஒவ்வொரு கால விசேடத்திற் சாதிபற்றி ஒருங்கேதோன்றி ஒருங்கேநின்று ஒருங்கே அழிவதனைக்கண்டுவைத்தும்,—என்றும் அன்று உண்டு என்ன ஆய்ந்து ஓதாரோ—என்றாயினும் அதற்குரியகாலம் வருமென்று உலகத்திற்கும் அங்ஙனமாதலுண்டென்று அக்காட்சிபற்றி ஆராய்ந்து சொல்லார்களோ உன்னைப்போலும் மடமையில்லாதோர் என்க.

பூதாதி அன்மொழித்தொகை. பூதத்துக்குமேலுளவாய தத்துவங்கள் உலகாயதருக்கு உடன்பாடன்மையின், பூதமுதலாய தத்துவங்களென வுரைத்தல் ஈண்டைக்கேலாமை அறிக.

பூதாதிக்கென நான்கனுருபு விரித்துரைக்க; அது பின்னருஞ் சென்றியையும். ஆகுமென்பது முற்றுவினை.

ஈண்டுப் பெற்றிமை என்பது சாதியை.

ஓகாரம் எதிர்மறை.

ஒன்றொன்றினென்பது "ஒன்றொன்றுப் பார்த்துணர்வதுள் ளமே" என்றாற்போல அடுக்குமொழி; அது காலவிசேடமாதல் என்று மன்றெனப் பின் வருதலாற்பெற்றும்.

ஒருங்கே என்பது சொல்லெச்சம்.

ஒன்றொன்றிற்றோன்றி யுளதாயிறுதலாவது "பயில்வித்தெல் லாங்—காரிடமதனிற்காட்டு மங்குராங்கழியும்வேனில்" என்பதனு னறிக.

கண்டும் உம்மை சிறப்பு.

விளக்கம்.

(உதாரணத்தின் கொண்டுகூட்டு.) பேதாய் பூதாதி திதி ஈறும் முதலும் துணை ஆக ஆகும். ஒன்று ஒன்றின் பெற்றிமையின் தோன்றி உளதாய் இறக்கண்டும் என்றும் அன்று உண்டு என்ன ஆய்ந்து ஓதாரோ.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், உள்ளதன்பால்தோற் றமும் ஈறுங்கிடத்தல் எவ்வாறென்னும் ஆசங்கையை ஆசிரியர் தாமே எடுத்துக்கொண்டு தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடக்குமென்றற்கு அனுபவங்காட்டி ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) பிரத்தியட்சத்தில் பிரபஞ்சந் தோன்றுதலும் அழிதலும் கண்டுவைத்தும் அந்தப்பிரத்தியட்சத்தானும் பிரபஞ்சம் முத்தொழிற்படு மென்றுணராத அறிவில்லாதவனே! பூதங்களில்நின்றும் தோன்றுவதா கிய பிரபஞ்சத்திற்கு இருத்தல் நிகழும்போதே, நாசமும் உற்பத்தியும் அது தனக்குத் துணைக்காரணமாகக்கொண்டு நிகழும்; எவ்வாறெனின், இருக்கின்றதெனக் காணப்படுவதொன்று தோன்றினலன்றிக் காணப் படாது. தோன்றுவதொன்று தான் தோன்றுவதற்குமுன் தோன்றாது அழிந்திருக்கவேண்டும். ஆகவே அழிதலையுந் தோன்றுதலையுந் துணைக் காரணமாகக்கொண்டு இருத்தலானது காணப்படுதல் அறிக. அவ்வாறாயினும் ஒன்று தோன்றவும், ஒன்று நிற்பவும், ஒன்று அழியவும் காண்பதன்றி, எல்லாந்தோன்றவும் எல்லாம்நிற்கவும் எல்லாம் அழியவும் கண்டில மாதலால், அழியும்போது இருக்கின்றதொன்று பின்தோன்றுதற்குக் காரணமாதல் அமையுமெனின், அவ்வாறு கூறுதல்பொருந்தாது. ஏதனு

லெனின், மழைக்காலமாகிய ஒருகாலவிசேடத்து ஒருசாதிப்பயிர்களும், செந்துக்களும் ஒருங்குதோன்றி வேனிற்காலத்தில் அவையாவும் அழிதல் பிரத்தியட்சமாதலால் அதுபோலப் பிரபஞ்சத்திற்கும் ஒருசேர அழிவதற் குரியகாலம் என்றாயினும் வருமென்று உன்னைப்போலும் அறியாமையில் லாதவர்கள் சொல்லார்களோ? சொல்லுவர் என்றவாறு.

(க-ரை.) பிரபஞ்சம் உள்ளதாய் நிகழுங்கால் நாசமும் உற்பத்தியுந் துணையாகக்கொண்டே நிகழும் என்பதாம்.

வெண்பாவில் பூதாதி என்பது பூதத்தை ஆதியாகவுடைய பிரபஞ்சத் தைக் குறித்தலின் அன்மொழித்தொகை; கூறப்பட்ட மொழிகட்குவேறாய மொழி தொகையாயிருத்தல் அன்மொழித்தொகை யெனப்படும். இவ்விட த்துப் பிரபஞ்சமென்பது வேறாயமொழி; அது பூதாதி என்பதில் தொகை யாயிருத்தலால் அன்மொழித்தொகையாயிற்று.

பூதாதி என்பதற்கு பூதத்தை ஆதியாகவுடையதெனக்கூறாது பூத முதலாக எனக்கொண்டு பூதமுதலாகிய தத்துவங்களை உடைய பிரபஞ்ச மெனக் கூறலாகாதோவெனின்; ஆகாது; எதனாலெனின், இவ்விடத்து உலகாயதர்பக்கம் ஆராயப்படுகின்றது; அவருக்குப் பூதத்துக்குமேலுள வாய தத்துவங்கள் உடன்பாடன்றாதலால் என அறிக.

பூதாதி என்பதில் நான்கனுருபுவிரித்துப் பூதாதிக்கு (அதாவது) பிர பஞ்சத்திற்கு என உரைசெய்யப்பட்டது. பிரபஞ்சஞ்சத்திற்கு என்பது பின்னர் உண்டு என்றதனோடுஞ்சென்று பொருந்தும்; ஆதலால் உலகத் திற்கும் அங்ஙனமாதலுண்டென்று உரைசெய்யப்பட்டது.

திதியாகும் என்பதிலுள்ள ஆகும் என்பது எச்சமன்று; வினைமுற்று.

பெற்றிமை என்பது பெற்றியை உடைமை எனப்பொருள்படுமாயி னும் இவ்விடத்துப்பெற்றியாகிய சாதியினையேகுறித்து நின்றது. சாதி யாவது ஒருகூட்டத்திற்குப் பொதுவாயுள்ளதன்மை; ஆதலால், பெற்றிமை யின் என்பதற்குச் சாதிபற்றியென வுரைசெய்யப்பட்டது.

ஓதாரோ என்றதிலுள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருளில் ஓதுவார் என்பதைக் குறித்துநின்றது.

ஒன்றொன்றினென்பது இந்நூல் கக-வது சூத்திரம் முதல் அதிகர ணத்து "ஒன்றொன்றாப் பார்த்துணர்வதுள்ளமே" என்றாற்போல அடுக்கு மொழி. ஒன்றொன்று என்பதற்கு ஒவ்வொரு காலவிசேடம் எனக்கூறியது, பின்னர் 'என்றும் அன்று உண்டு' என்பதில் அன்று என்பது அதற்குரிய காலம் என்னும் பொருள்பட நின்றமையால் என்க. அன்று இன்று என்

பன அக்காலம் இக்காலம் என வழங்குமாற்றூல் அன்று என்பதற்குக்கூறிய பொருள்பொருந்துமாறு காண்க.

'தோன்றி உளதாயிற' என்பது ஒருங்கேதோன்றி ஒருங்கேநின்று ஒருங்கே அழிவது என்னும் பொருள்தோன்ற நின்றமையின் ஒருங்கே என்பது சொல்லெச்சம். பொருள் கொள்ளுதற்குரியசொல் எஞ்சிநிற்கு மாயின் சொல்லெச்சமெனப்படும்.

ஒன்றென்றிற்றோன்றி யுளதாயிறுதலென்பதற்கு ஒவ்வொரு கால விசேடத்தில் ஒருங்கேதோன்றி ஒருங்கேநின்று ஒருங்கே அழியுமென்ப தைச் சிவஞானசித்தியார் முதற்சூத்திரம் ஒன்பதாவது செய்யுளில் "பயில் வித்தெல்லாங் காரிடமதனிற் காட்டுமெங்குரங்கழியும் வேனில்" என்பதனு னறிக.

உலகம் முற்றும் ஒருகாலத்து அழியுமென்பதை நிர்ணயித்தற்குரிய மூன்று பிரமாணங்களுள் பிரத்தியட்சம் சிறந்தமையால் இறக்கண்டும் என் றதிலுள்ள உம்மை சிறப்பு. காணல் - பிரத்தியட்சம்.

முதலதிகரணம் முற்றிற்று.

இரண்டாம் அதிகரணம்.

உலகம் முத்தொழிற்படுமாயினும் கருத்தா வேண்டாம்
என்பாரைமறுத்து உலகத்துக்குக் கருத்தாவேண்டப்படும் எனக்கூறும்
மேற்கோள்.

இனி இல்லதற்குத் தோற்றமின்மையின் உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் ஒடுங்கின சங்காரத்தி னல்லது உற்பத்தியில்லை என்றது.

சிற்றுரை.

என விங்ஙனஞ் சொற்பல்காமைப்பொருட்டுத் துணிந்ததாக வைத்துரைத்தாராயினும், பொருளியைபிற் கேற்ப இதனை மூன் றதிகரணமாகவைத்துரைப்பது ஆசிரியர் கருத்தெனக் கொள்க; அஃதாமாறு காட்டுதும்:—

விளக்கம்.

முதலதிகாரணத்தால் பிரபஞ்சம் நித்தம் என்றும் முத்தொழிற்படா தென்றும் கூறிய மீமாஞ்சகரையும் உலகாயதரையும் அநுமானப்பிரமாணத் தினாலும், பிரத்தியக்ஷப்பிரமாணத்தினாலும் மறுக்கவே, பிரபஞ்சம் முத் தொழிற்படுமோயினும் அதுகொண்டு கருத்தா உண்டென்றல் பொருந்தா தென்பாரையும் கருத்தா உண்டெனினும் அக்கருத்தா சிவபெருமானே என்றல் பொருந்தாதென்பாரையும் இரண்டாம் அதிகரணத்தால் மறுத் துரைக்கின்றார்.

இம் மேற்கோள் சூத்திரத்தில் தோற்றிய திதியே யொடுங்கியுளதாம் என்னுங்கூற்றைக் கண்ணழித்து மேற்கொண்டதாகும். திதி என்பதை இல்லதற்குத் தோற்றமின்மையின் என்றும், தோற்றிய என்பதை உள்ள தற்குச் செய்வோரின்றிச் செய்வினை யின்மையின் என்றும், ஒடுங்கியுள தாமென்பதை ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை யென்றுங் கண்ணழிவு செய்தவாறு அறிக.

இவ்வாறு கண்ணழிவுசெய்த மேற்கோளில் இல்லதற்குத் தோற்ற மின்மையின் என்பதும் உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினை யின்மை யின் என்பதும் ஏதுவாகவும், ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில் லை என்பது மேற்கோளாகவும் அமைந்து கிடந்தன. ஆகவே, இரண்டே துவிற்குரிய இரண்டு மேற்கோளும், ஒரு மேற்கோளுக்குரிய ஏதுவும் விளங்கும்படி கூறுவதாயின் விரியும் என்றெண்ணி ஆசிரியர் சொற்சுருக்க மாக இவ்வாறு உரைத்தாரென அறிக. ஆதலால் இவ்விரண்டாம் அதி கரணத்தை மூன்று அதிகரணங்களாக வைத்துரைப்பதே ஆசிரியர் கருத் தெனக்கொள்ளல்வேண்டும். அவ்வாறாயின் மூன்று அதிகரணங்களாகவே வகுத்துக்கூறாது ஒரு அதிகரணமாகக் கூறிய கருத்தென்னையெனின், மூன்று அதிகரணங்களும் கருத்தா உண்டென்று சாதித்தலையே மேற் கொண்டனவாதலின் வேறுவேறு கூறாது ஒரு அதிகரணமாகக் கூறினா ரென்க.

ஆசிரியர் கருத்தறிந்த உரையாசிரியர் இவ் விரண்டாம் அதிகரணத் திலுள்ள இரண்டு ஏதுவிற்கு இரண்டு மேற்கோளும், ஒருமேற்கோளுக்கு ஒரு ஏதுவும் வருவித்து மூன்று அதிகரணங்களாக இவ்வதிகரணத்தை வகுத்துக் காட்டுகின்றார். அவைவருமாறு:—

உலகம் உள்பொருள் எனக்கூறும் முதலாவது

மேற்கோள்.

(இனி உலகமுள்ளது என்றது.)

சிற்றுரை.

எ - து மே - ள் எ—னின், உலகும் இல்பொருளாய்த் தத்தஞ் சார்பிலே தோன்றி யழிதல் இயல்பென்றலே அமைவுடைமையின் அது மூவினை யுடைத்தாயினும் தோற்றுவானொருவனை யுடைத் தாதல் செல்லாது எனப் புத்தநூலார் சொல்லுங்கடாவை யாசங் கித்துத் திதியென்னுஞ் சூத்திரக் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

(இ-ள்.) வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ-ள்.) உலகம் - மேற்சாதிக்கப்பட்ட முத்தொழிலுக்குரிய பிரபஞ்சம்,—உள்ளதென்றது - உள்பொருளாம் என்க.

விளக்கம்.

இது திதி என்னும் சூத்திரக் கூற்றைக் கண்ணழித்து ஆசிரியர் கொண்ட ஏதுவிற்கு உரையாசிரியர் கூறிய மேற்கோளாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்விற்றோ வெனின், முதலதிகரணத்தால் உலகந் தோன்றி நின்று அழியுமெனச் சாதிக்கவே, இல்பொருளாகிய உல கம் அவ்வாறு தோன்றி நின்று அழியினும் ஒன்றுநிற்கப் பிறிதொன்று அழியுமாதலின் நின்றதன் சார்பாக மற்றொன்று தோன்றும்; அவ்வாறே ஒன்றன்சார்பில் பிறிதொன்று தோன்றுதல் உலகத்துக்கு இயல்பாக அமையும்; ஆதலின் உலகம் முத்தொழிலை உடைத்தாயினும் ஒரு கருத் தாவை உடைத்தாதல் செல்லாது எனப் புத்தநூலார் சொல்லும் கூற்றை ஆசங்கித்துக்கொண்டு திதி என்னும் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்து உலகம் உள்பொருளெனக் கூறியவாறும்.

(இம்மேற்கோளின் பொருள்.) மேற்சாதிக்கப்பட்ட முத்தொழிலுக் குரிய பிரபஞ்சம் உள்பொருளாம் என்க.

உலகம் உள்பொருள் என்பதற்குக் காட்டும்

ஏ து.

(இல்லதற்குத் தோற்றமின்மையின்.)

சிற்றுரை.

எ—து ஏது எ—னின், உள்ளதாதல் யாங்ஙனம் என்னுங் கடாவை ஆசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) இல்பொருளாகிய முயற்கோட்டிற்கு முக்காலத்து முற்பத்தியின்மையின் ஈண்டுற்பத்தி காணப்படுதலான் உலகமுள் ளது எனமேற்கொண்டது என்க.

விளக்கம்.

இந்த ஏது என்ன சொல்லிற்றுவெனின், உலகம் உள்பொருளென் றல் எவ்வாறு கூடும் என்னும் வினவை யாசங்கித்துக்கொண்டு இல்லாத பொருள் தோற்றுதாதலின் தோற்றப்படும் உலகம் உள்பொருளேயென மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) முயலினிடத்துக் கோடுமுக்காலத்தும் இல்லை; இல்பொருளாகிய அக்கோட்டிற்கு உற்பத்தியுமில்லை. உலகத் துக்கு உற்பத்திகாணப்படுதலான் உலகம் உள்ளது என மேற்கொண்டது என்க.

உலகம் உள்பொருளாயினும் அதனைத் தோற்றுவிப்பதற்கு ஒரு கருத்தாவேண்டாம் என்பாரைமறுத்து கருத்தாவேண்டுமெனக்கூறும்

இ ர ண் டா வ து
மேற்கோள்.

(இன் உலகஞ் செய்வோனையுடைத்து என்றது.)

சிற்றுரை.

ஏ—து மே—ள் எ—னின், உள்பொருளெனப்பட்ட பிரபஞ் சம் தத்தமுதற்காரணத்தினின்றுந் தானே தோன்றியழியும், இதற்கொரு நிமித்தகாரணமாய் ஒருகருத்தாவேண்டாம் எனச் சாங்கியர்கூறுங் கடாவை ஆசங்கித்துத் தோற்றியவென்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ—ள். வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ-ள்.) உலகம்—மேல் உள்பொருளெனச் சாதிக்கப்பட்ட பிரபஞ்சம்,—செய்வோனை யுடைத்தென்றது—தொழிற்படுத்தும் நிமித்தகாரணனாகிய முதற்கடவுளையுடைத்து என்க.

விளக்கம்.

இது தோற்றிய என்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்து ஆசிரியர் கொண்ட ஏதுவிற்கு உரையாசிரியர் கூறிய மேற்கோளாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றேவெனின், உள்பொருளெனச் சாதிக்கப்பட்ட உலகம் அதற்கு முதற்காரணமாகிய மாயையினின்றுந் தானே தோன்றியழியும்; ஆதலின் உலகத்தைத் தோற்றுவிப்பதற்கு ஒரு கருத்தாவேண்டாம் எனச் சாங்கியர்கூறும் கூற்றை ஆசங்கித்துக்கொண்டு தோற்றிய என்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துக் கருத்தா வேண்டு மென்று கூறியவாறும்.

(இம்மேற்கோளின் பொருள்.) மேலே அதிகரணத்தால் உள்பொரு ளெனச் சாதிக்கப்பட்ட பிரபஞ்சம் தானே தோன்றிநின்று அழியாது; ஆத லால் தொழிற்படுத்துதற்குரிய நிமித்தகாரணனாகிய முதற்கடவுளை உடை யது என்க.

உலகத்துக்குக் கருத்தாவேண்டும் என்பதற்குக் காட்டும்

ஏது.

(உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின்)

சிற்றுரை.

எ—து ஏது எ—னின், அதற்குப் பிரமாணமென்னை என் னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) மண் முதலியவற்றி னுள்ளதாகிய கடமுதலிய பொ ருட்குக் குயவன் முதலிய செய்வோரையின்றி வனைதன்முதலிய செய்தொழில் நிகழாமையின் உலகம் இவ்வியல்பிற்றாகலான் இனி இவ்வுலகஞ் செய்வோனையுடைத்து எனமேற்கொண்டது என்க.

விளக்கம்.

இந்த ஏது என்ன சொல்லிற்றே எனின், உலகம் உள்பொருளாயி னும் அவ்வுலகந் தோற்றுதற்கு ஒருகருத்தாவேண்டுமென்பதற்குப் பிரமா ணம் என்னை யென்பார்க்குப் பிரத்தியட்சப்பிரமாணத்தாற் கருத்தா உண் டென்று காட்டி உலகஞ் செய்வோனையுடைத்து என்னும் மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) மண்முதலியவற்றிற் சூக்குமமாயுள்ள கடமுதலிய பொருள்கள் தூலமாய் வெளிப்பட்டுத் தோன்றுதற்கு வனை தல்முதலிய தொழில்கள் நிகழவேண்டும்; குயவன்முதலிய செய்வோ ரையின்றி வனைதல்முதலிய செய்தொழில்கள் தாமே நிகழாவாம். அது போல, மாயையில் அடங்கிக்கிடந்த உலகமுந் தானேதோன்றாது; ஒரு கருத்தாவாற்றோன்றும் இயல்பை உடையது; ஆதலால், இனி இவ்வுலகஞ் செய்வோனையுடைத்து என மேற்கோள் கூறியவாறும் என்க.

உலகத்துக்குக் கருத்தா உண்டாயினும் அக்கருத்தா பிரமன்.
முதலியோராதல் அமையுமென்பாரை மறுத்துச் சிவனே
கருத்தா எனக்கூறும் மூன்றாவது
மேற்கோள்.

இனி ஒடுங்கின சங்காரத்தினலல்லது உற்பத்தியில்லை என்றது.

சிற்றுரை.

எ-து மே-ள் எ-னின், இத்துணையுங் கூறியவாற்றான் உலகத்தைத் தோற்றுவிப்பான் உண்டெனப்பட்டகருத்தா திதிகருத்தா சிருட்டிகருத்தா முதலியோரில் ஒருவனேயாதலமையும் எனப் பாஞ்சராத்திரி முதலியோர்கூறுங் கடாவையாசங்கித்து ஒடுங்கியுளதாமென்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

(இ-ள்.) உலகம் தானொடுங்குதற்கு நிலைக்களமான சங்கார கருத்தாவினின்றன்றி உளதாகாது என்க.

ஒடுங்கினவென்னும் பெயரெச்சஞ் சங்காரமென்னும் இடப் பெயரோடு முடிந்தது. சங்காரம் ஆகுபெயர்.

அல்லதில்லை என்று எதிர்மறை முகத்தாற்கூறியது, ஏனைக் கடவுளரின் உளதாகாமை யாப்புறுத்தற்பொருட்டு.

இதனுள் ஒடுங்கின என்பதனாற் போந்தகுறிப்பேதுவைப் புலப்படக் காணுமாறு.

விளக்கம்.

இம்மேற்கோள் ஒடுங்கியுளதாம் என்னுஞ் சூத்திரக்கூற்றைப் பதச்சேதஞ்செய்து உரைத்தவாறும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோவெனின், இதுகாறுங் கூறியவாற்றால் உலகத்தைத் தோற்றுவிப்பதற்கு ஒருகருத்தா வேண்டப்படுமெனக் கொள்ளினும், அக்கருத்தா திதிகருத்தாவாகிய விட்டுணு, சிருட்டி கருத்தாவாகிய பிரமன் முதலியோரில் ஒருவனே யாதலமையுமெனப் பாஞ்சராத்திரிமதம், இரணியகருப்பமதம் உடையார் கூறுவராதலின் அவர் கூற்றை ஆசங்கித்துக்கொண்டு சங்காரகருத்தாவே முதற்கடவுள் எனச் சாதித்தவாறும்.

(இம்மேற்கோளின்பொருள்.) உலகமானது, தோன்றுதற்கு முன்னர் தானொடுங்குதற் கிடமாயிருந்த சங்காரகருத்தாவினால் அன்றி உளதாகாது என்க.

இம்மேற்கோளில் ஒடுங்கின எனபது பெயரெச்சம்; அவ்வெச்சம் சங்காரமென்னும் இடப்பெயர்கொண்டு முடிந்தது. சங்காரம் என்பது சங்காரத்தைச்செய்யுங் கருத்தாவைக் குறித்தலின் ஆகுபெயர். அக்கருத் தாவை, ஒடுங்குதற்கு இடமாதல்பற்றி இடப்பெயர் என்றார்.

சங்காரத்தினல்லது உற்பத்தி இல்லை என்று எதிர்மறை முகத்தாற் கூறிய கருத்தென்னையெனின், ஏனைக்கடவுளரிடத்து நின்றும் உலகம் உற் பத்தியாகாமையை வலியுறுத்துதற்பொருட்டு என அறிக. அவ்வாறாயின் ஒவ்வொரு கடவுளரிடத்தும் உலகத்துக்கு உற்பத்திகூறும் நூல்களோடு முரணாதோ எனின், முரணாது. என்னை? அக்கடவுளர்தாமே தோற்றுவிக் காது தமக்குமேற்பட்ட கடவுளின் ஆணையாற்றோற்றுவிப்பாராதலால் என்க. ஆகவே, எக்கடவுளர் எச்செயலைச்செய்யினும் அச்செயலெல்லாம் சங்காரக்கடவுளின் ஆணையினாலேயே நிகழுமாதலின் அச்சங்காரக் கடவுளை யின்றி ஏனைக்கடவுளருக்குத் தனித்த செயலின்மையறிக.

இந்த மேற்கோளில் ஒடுங்கின என்றதனால் ஒடுங்குதல் உண்டென் பது பெறப்படும். படவே, சங்காரகருத்தாவின் ஒடுங்குதலால் ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை என்றாகிச் சங்காரகருத்தாவின் ஒடுங் குதலால் என்னும் ஏது குறிப்பாக அடங்கிக்கிடந்ததாகும். அக்குறிப் பேதுவை வெளிப்பட அறியுமாறு உரையாசிரியர் கூறுகின்றார்.

உலகத்துக்குக் கருத்தா சங்காரகாரணனாகிய
சிவனே என்பதற்குக் காட்டும்
ஏ து.
ஆண்டு ஒடுங்குதலின்.

சிற்றுரை.

எ—து ஏது எனி—ன், அதற்குப் பிரமாணமென்னை என் னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) யாது யாண்டொடுங்கும் அஃததனினுற்பத்தியாம் மண்ணிற்குடம்போலும் என்னும் அவினாபாவத்தாற் பிரபஞ்சஞ் சங்காரகாரணன்மாட் டொடுங்குதலின் மீளத்தோன்றுங்கால் ஆண்டுநின்றுந் தோன்றுதலே பொருத்தமுடைமையின் அவ்வாறு மேற்கொண்டது என்க.

இவ்வாறு மூன்றதிகரணப்பொருளும் இதன்கட்போந்தவாறும் இவ்வாறுரையாக்காற் பொருளியைபு படாமையும் நுண்ணுணர்வாற் கண்டுகொள்க.

விளக்கம்.

இந்த ஏது என்ன சொல்லிற்றேவெனின், சங்காரக்கடவுளே முதற் கடவுளென்பதற்குப் பிரமாணம் என்னை என்னும் வினாவை ஆசங்கித்துக் கொண்டு எல்லாஞ் சங்காரக்கடவுளிடத்து ஒடுங்குதலினால் அக்கடவுளே முதற்கடவுளென மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) எது எதனில் ஒடுங்கும். ஒடுங்கின அது, ஒடுங்குதற்கு ஆதாரமான அதனில் நின்று மீளத்தோன்றும்; எதுபோலவெனின்; குடம் உடையுங்கால் குடத்தன்மை மண்ணினிடத்தொடுங்கிக் குடம் மீளத்தோன்றுமிடத்து அம்மண்ணினிடத்தில் நின்றுந் தோன்றுவது போலாம். அவ்வாறேவிட்டுநீங்காமையாகிய அவினாபாவத்தால் உலகம் ஒடுங்குங்கால் தூலமாய்க்காணப்படுவதுகெடடுச் சூக்குமமாகிய அதன்றன்மை சங்காரக்கடவுளிடத்து ஒடுங்கி, மீளத்தோன்றுங்கால் அக்கடவுளினிடத்து நின்றுந்தோன்றும் என்பதாம்.

இவ்விடத்து மண்கருத்தாவிற்கு உவமையாய் நின்றது; மேல், உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினை இன்மையின் என்ற ஏதுவில் மண் மாயைக்கு உவமையாய் நின்றது. இவ்வாறுநின்றதனால் முரணின்று; எதனாலெனின், மேல், கருத்தா உண்டென்பதற்கும் இவ்விடத்து அக் கருத்தா சங்காரக்கடவுளே என்பதற்கும் உவமையாகநின்று கருத்தா உண்டென்பதற்கு மண்தானே குடமாகத்தோன்றாமையினையும், அக் கருத்தா சங்காரக்கடவுளே என்பதற்குக் குடம் ஒடுங்குதற்கும் தோற்றுதற்கும் மண் ஆதாரமாதலையும் விளக்கினமையின் என்க.

அவினாபாவமென்பது விட்டுநீங்காமையாம். உதாரணம், குடம் மண்ணைவிட்டு நீங்காமை. அதுபோலப் பிரபஞ்சம் சங்காரக்கடவுளையின்றித் தனித்து நில்லாதென அறிக. குடமும் அதற்கு ஆதாரமான மண்ணும் ஒருங்கு காணப்படுமாறுபோல உலகமும் அதற்கு ஆதாரமாகிய கடவுளும் ஒருங்கு காணப்படவில்லையே எனின், குடம் முனைத்துத் தோன்றுங்கால் மண் தோன்றாது; மண் முனைத்துத்தோன்றுங்கால் குடம் தோன்றாது. அவ்வாறே பாசபசுஞானங்களால் உலகம் முனைத்துத்தோன்றுங்கால் கடவுள் தோன்றாது; பதிஞானத்தால் கடவுள் முனைத்துத்தோன்றுங்கால் உலகம் தோன்றாது. இக்கருத்துப்பற்றியே "மரத்தை மறைத்தது மாமதயானை, மரத்தின்மறைந்தது மாமதயானை, பரத்தைமறைத்தது பார்முதற்பூதம், பரத்தின்மறைந்தது பார்முதற்பூதம்" எனத் திருமூலநாயனாருந் திருவாய் மலர்ந்தருளினர்.

அவினாபாவத்துக்கு மேற்கூறிய உவமையேயன்றி அக்கினியையும் அவ்வக்கினியை விட்டு நீங்காத புகையினையுங் கூறலாம். அடுக்களையுட் புகைகாணப்படுங்கால் அப்புகைக்கு இன்றியமையாத அக்கினி காணப்பட மாட்டாது. ஆயினும் புகையைக்கொண்டு அக்கினி உண்டென்று நிச்சயித்தல் கூடும்; அதுபோல, உலகம் காணப்பட்டுக் கடவுள் காணப்படாவிடினும் உலகந் தோன்றுதலைக்கொண்டே அதற்கு இன்றியமையாத கடவுள் உண்டென்று அறிந்துகொள்ளுதல் கூடும். இது, கடவுள் உண்டென்னுமளவிற்கே கூறும் அனுமானப்பிரமாணமாகும். சங்கார்க்கடவுளே முதலென்று பிரத்தியட்சப் பிரமாணத்தைக்கொண்டு சாதிக்கவேண்டி அவினாபாவத்தையுடைய மண்ணுங் குடமும் உவமானமாகக் கூறப்பட்டதென அறிக.

இவ்விரண்டாம் அதிகரணத்தில் இவ்வாறு மூன்று அதிகரணப் பொருளும் கிடந்தவாறு காண்க. இவ்வதிகரணத்தை இவ்வாறு மூன்று அதிகரணமாகவைத்து உரைக்கவில்லையாயின் இல்லதற்குத் தோற்றமின்மையின் என்ற ஏதுவும், உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என்ற ஏதுவும், ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை என்னும் மேற்கோளைச் சாதிக்கமாட்டாமையின் பொருள்பொருந்துமாறின்மையை நுண்ணுணர்வாற் கண்டுகொள்க.

இவ்வதிகரணத்தால் இதுகாறுங்கூறிய பொருள் உலகம் உள்ளது, அது செய்வோனை யுடைத்து, அச்செய்வோன் சங்காரக்கடவுள் என்பனவாம். அம்மூன்றற்கும் முறையே உதாரணங் கூறுகின்றார்.

உலகம் உள்ளதென்பதற்குக் காட்டும்

உதாரணம்.

இலயித்த தன்னிலில யித்ததாம லத்தா
லிலயித்த வாறுளதா வேண்டும்.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், உலகம் உள்ளதாயின் உள்ளதற்கு உண்டாகவேண்டுவதில்லை யாகலாற் சற்காரியவாதம் அடாது எனப் புத்தர் கூறுங்கடாவை யாசங்கித்து இல்லதற்குத் தோற்றமின்மையினென்ற வேதுவை வலியுறுத்தனுதலிற்று.

(இ-ள்.) இலயித்தது இலயித்த தன்னில் ஆம்—(உள்ளதாயினுஞ் சங்காரகாலத்தின்) ஒடுங்கிய தாகலான் (அவ்வொடுங்கிய உலகம்) தானொடுங்குதற்கு நிமித்தமான சங்காரகருத்தாவி

னின்றும் படைப்புக்காலத்தின் மீளவுளதாம், (அற்றேல் ஒடுங்கியது ஒடுங்கியவாறே ஒழியாது மீளவுண்டாகவேண்டாம்: வேண்டுமாயின், முன்னொடுங்காது நிலைபெறவேயமையும்; அவ்வாறன்றி ஒடுங்கி மீளவுளதாவது எற்றுக்கெனின்),—மலத்தால்—உள்ளதாகிய உலகம் கருமமலம் பரிபாகமாதற் பொருட்டு ஒடுங்கி ஆணவமலம் பரிபாகமாதற்பொருட்டு மீளவுமுண்டாம். (அற்றேல் முன்னின்ற பிரபஞ்சம் நாசமாக வேறுதோன்றுமென்னுமல் அதுவே ஒடுங்கிநின்று மீளவுளதாமென்றற்குப் பிரமாணம் என்னையெனின்),—இலயித்தவாறு உளது ஆ வேண்டும்—எஃதெவ்வாறு நின்றொடுங்கிற்று அஃதவ்வொடுங்கியவாறே உளதாதல் (எல்லாரானும்) விரும்பப்படும் என்க.

எனவே அந்நியமமில்லையாயின் நெற்கமுகாய் நீளாது நெல்லாய் நீளுதற்கு ஏதுவென்னையென்னுந் தருக்கமே அதனை யறிவுறுத்து மென்றவாறாயிற்று. சற்காரியவாதத்தினியல்பு "தந்து முதல் காரகம்" என்னும் ஞானமிர்தத்தினுங் காண்க.

இதனானே, இல்லது முள்ளதுமல்லாத பொருடோன்றுமென்னுஞ் சூனியவாதிகளும், இல்லது முள்ளதுமாய பொருடோன்று மென்னும் அநேகாந்தவாதிகளும் மறுக்கப்பட்டவாறறிக.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) இலயித்தது இலயித்ததன்னில் ஆம். மலத்தால். இலயித்தவாறு உளது ஆ வேண்டும்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், உலகம் உள்பொருளாயின் உள்பொருட்கு உண்டாகவேண்டுவதில்லையாதலால் ஒடுங்கிய உலகம் மீளத் தோன்றுமென்னுஞ் சற்காரியவாதம் பொருந்தாதெனப் புத்தர் கூறுவராதலின், அவர்கூற்றை ஆசிரியர்தாமே எடுத்துக்கொண்டு உலகம் உள்ளதெனக்கூறி, இல்லதற்குத் தோற்றமின்மையின் என்ற ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ—ரை.) உலகம் உள்ளதாயினும் என்றும் ஒரு தன்மையாயின்றிச் சங்காரகாலத்தில் சங்காரகருத்தாவில் ஒடுங்கிப் படைப்புக்காலத்தில் மீளச் சங்காரகருத்தாவினின்றும் தோன்றுவதாம். அவ்வாறு உலகத்திற்கு ஒடுங்குதலுந்தோன்றுதலும் உண்டென்று கொள்வதாயின் ஒடுங்கிய உலகம் ஒடுங்கியவாறே யொழியாது மீள உண்டாகவேண்டாம்; மீள உண்டாகவேண்டுமாயின், முன் ஒடுங்காது நிலைபெற்றிருக்கலாம். அவ்வாறின்றி ஒடுங்கி மீள

உளதாதல் எதற்காக எனின், உள்ளதாகிய உலகம் உயிர்களின் கருமமலம் பரிபாகமாதற்பொருட்டு ஒடுங்கி ஆணவமலம் பரிபாகமாதற்பொருட்டு மீளத்தோன்றும். அவ்வாறுயினும் முன் காணப்பட்ட உலகம சங்காரகாலத்தில நாசமாக மீளப்படைப்புக்காலத்தில் வேறு உலகந்தோன்றுமென்று சொல்லாமல், முன்னின்ற உலகமே ஒடுங்கி மீளத்தோன்றுமென்ற சொல்வதற்குப் பிரமாணம் என்னையெனின், எந்தப்பொருள் எதனிடத்தில் எவ்வாறொடுங்கிற்றே அந்தப்பொருள் அதனிடத்தினின்றும் அவ்வாறு உளதாமென்பது எல்லாராலும் விரும்பப்படுமோகலின் அந்தத் தருக்கமே பிரமாணமென்றவாறு.

(க-ரை.) உயிர்களின் மும்மலங்களும் பரிபாகமாதற்பொருட்டு உலகம் ஒடுங்கித்தோன்றி நிற்கும் என்பதாம்.

ஒடுங்கியவாறே உளதாம் என்னும் தருக்கங் கூறியதனல் அந்த நியமமில்லையாயின் நெல்லினிடத்துக்கமுகும், கமுகினிடத்தில் நெல்லுந் தோன்றுதல்வேண்டும்; அவ்வாறின்றி நெல்லினிடத்து நெல்லும் கமுகினிடத்துக் கமுகுந்தோன்றுதற்கு ஏது நெல்லின்தோற்றமே நெல்லினிடத்தும், கமுகின்தோற்றமே கமுகினிடத்தும் ஒடுங்கியிருத்தலாம்; ஆதலின் இந்தத் தருக்கமே சங்காரக் கடவுளிடத்து ஒடுங்கிய உலகம் மீளச்சங்காரக் கடவுளில் நின்றுந் தோன்றுமென்பதை அறிவுறுத்துமென்றவாருயிற்று. ஆகவே உலகமானது தோன்றுதல் ஒடுங்குதல் என்னும் வேறுபாடுடன் என்றும் உள்பொருளாயினமை அறிக.

உள்ளது காரியப்படுமென்று சொல்லுதல் சற்காரியவாதம் என்பதன் பொருளாம். இச்சற்காரியவாதமே சைவசித்தாந்தமாம். இச்சற்காரியவாதத்தினியல்பு "தந்து முதல்காரகம்" என்னும் ஞானமிர்த அகவலினுங் காண்க.

உலகம் ஒடுங்குவதனல் கருமமலம் பரிபாகமாதல் எவ்வாறெனின், கருமமலமென்பது நல்வினை தீவினை யென்னு மிருவினையாம். இவைகள் பரிபாகமாதலாவது இவற்றின் காரியமாகிய இன்பதுன்பங்களிற் சமபுத்தி தோன்றுதலாம். அச்சமபுத்தி, இன்பமுந் துன்பமும் நெடுங்காலம் அனுபவித்து அவ்வனுபவத்தால் அவ்விரண்டினுங் கைப்புத் தோன்றுதலாலுண்டாம். இன்பத்துன்ப அனுபவத்திற்குக் காரணமாகிய இருவினைகள் பலனுக்கு வருங்காலத்து அவ்வனுபவத்திற் கேற்றவாறு உடல்முதலியவற்றை மாற்றிக்கொடுக்கவேண்டியது இறைவன் கடமையாதலால் அவ்வாறு மாற்றுங்கால் உண்டாகிய ஒடுக்கம் பக்குவமாயிருக்கும் கன்மபலனை அனுபவித்துத் தொலைப்பதற்கு ஏதுவாதலால் ஒடுக்கம் கன்மமல பரிபாகத்தின் பொருட்டாயிற்று.

தோன்றுதலினால் ஆணவமலம் பரிபாகமாதல் எவ்வாறெனின், ஆணவமலமானது அறியாமையைச் செய்வதாம். அவ்வாறு செய்யுஞ் சத்தி கெடுதல் ஆணவமலபரிபாகமாம். அறியாமையாவது அனாதிகேவலத்தில் அறிவிச்சை செயல்கள் தொழிற்படாது தடுக்கப்படுதல்; சிருட்டியால் அத்தடை நீங்குதல் ஆணவமலபரிபாகமாம்; ஆதலால், தோற்றம் ஆணவமலபரிபாகத்தின் பொருட்டாயிற்று.

ஒடுக்கமுந் தோற்றமும் முறையே கருமமலமும் ஆணவமலமும பரிபாகமாதற்பொருட் டென்றதனால் நிலைத்தல் மாயாமலம் பரிபாகமாதற் பொருட்டு எனக் கொள்ளல் வேண்டும். நிலைத்தலினால் மாயாமலம் பரிபாகமாதல் எவ்வாறெனின், மாயை என்பது மயக்கத்தைச் செய்வதாம்; மயக்கமாவது ஒன்றைப் பிறிதொன்றாக உணரும் விபரீத உணர்ச்சியாம்; அதாவது நித்தமல்லாத உலகத்தை நித்தமென உணர்தலும். இவ்விபரீத வுணர்ச்சியினகேடு மாயாமலபரிபாக மெனப்படும். இது நித்தமென் றெண்ணப்படும் உலகம் அநித்தமாதலை அனுபவத்திற் காண்டலால் உண்டாம்; அவ்வாறு அனுபவத்திற் காண்பதற்குச் சிறிதுகாலமேனும் உலகம் நிலைத்திருக்கவேண்டு மாதலின் நிலைத்தல் மாயாமலபரிபாகத்தின்பொருட்டாயிற்று.

இவ்வாறு ஆணவமலபரிபாகத்தின்பொருட்டு உலகந்தோன்றி மாயாமலபரிபாகத்தின்பொருட்டு நிலைத்துக் கன்மமல பரிபாகத்தின் பொருட்டு ஒடுங்குமாறு அறிக.

உலகம் உள்பொருளெனக் கூறிய இவ்வுதாரணத்தானே இல்லதும் உள்ளதுமல்லாத உலகந்தோன்றுமென்னுஞ் சூனியவாதிமதமும், இல்லதும் உள்ளதுமாய உலகந்தோன்றுமென்னும் அநேகாந்தவாதி மதமும் மறுக்கப்பட்டவாறறிக. அநேக அந்தத்தையுடையது அநேகாந்தம்; அந்தமென்பது முடிபு; அதாவது, உடம்பெடுத்தற்குமுன் சீவன் உண்டோ? இல்லையோ? என்று வினவியபோது, உண்டாம்! இல்லையாம்! உண்டுமில்லையுமாம்! என்றன் முதலிய அனேக முடிபாக விடையிறுத்தல். சூனியவாதி - நால்வகைப் பௌத்தரில் மாத்தியமிகன். அனேகாந்தவாதி - ஆருகதன்.

உலகம் உள்பொருளென்று சாதித்த இதனானே உள்பொருளாகிய உலகம் ஒடுங்கித்தோன்றுதல் ஒருகருத்தாவினாலாகும் என்பதற்குக் காட்டவேண்டிய உதாரணத்தை இதனை அடுத்துக் கூறவேண்டியதாயினும் இவ்வெண்பாத்தொடரை முடித்துக்கொண்டு அதனை யடுத்துக் கூறுகின்றார்.

உலகம் ஒடுங்குதற்கு ஆதாரமாகிய சங்காரக் கடவுளே
உலகத்திற்கு முதற்கடவுள் என்பதற்குக்காட்டும்
உதாரணம்.

இலயித்த
தத்திதியி லேன்னி னழியா தவையழிவ
தத்திதியு மாதியுமா மங்கு.

சிற்றுரை.

எ—து உ—ம் எனின், இனிச் சற்காரியவாதத்தின் அவ்வக் காரியங்கள் தத்த முதற்காரணத் தொடுங்குமெனவே கோடலின் உலகிற்கு முதற்காரணமாகிய மூலப்பகுதி வாசுதேவனுருவாக லான் உலகம் அவன்மாட் டொடுங்குமென்றலே அமைவுடைத் தன்றி முதற்காரணத்தின் வேறாய் நிமித்தகாரணமெனக் கொண்ட சங்காரகருத்தாவின்மாட் டொடுங்குமென்றல் பொருந்தாதெனப் பாஞ்சாராத்திரிகள் கூறுங் கடாவை யாசங்கித்து ஒடுங்கின சங்கா ரத்தின் எனவும் இலயித்ததன்னில் எனவும் கூறிப்போந்த குறிப் பேதுவை வலியுறுத்துத னுதலிற்று.

(இ—ள்.) இலயித்தது அத்திதியில் என்னின்—உலகமொடுங்கியது அந்தமூலப்பகுதிவடிவாய திதிகருத்தாவின்க ணென்பையாயின்,—அவை அழியாது—(நீ அங்ஙனங் கொள்ளினும் மூலப்பகுதிக்கு மேலுள்ள புவனங்கள் அதனல் வியாபிக்கப்படாமையிற் கீழுள்ள வகதேசமாத்திரையே ஆண்டொடுங்குவதன்றி) மாயாகாரியத் தொகுதிமுழுவதும் ஆண்டொடுங்காது. (அற்றேல் மாயாகாரியத் தொகுதிமுழுவதும் யாண்டொடுங்குவதெனின்),— அத்திதியும் ஆதியும் ஆம் அங்கு அழிவது—அந்தத்திதிக் கடவுளும் படைப்புக் கடவுளும் தோன்றுதற்குக் காரணமாகிய அச்சங்காரக்கடவுளிடத் தே (அவ்விருவரோடுங்கூட) அழிவதாம் (அத்தொகுதி) என்க.

இவ்வெண்பாவினைச் "செய்யுட்களோசை சிதையுங்காலீர ளபு—மையப்பா டின்றி யமையுமா—மைதீரொற்—றின் றியுஞ் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு—குன்றுமே லொற்றளபுங் கொள்." என்பதுபோல இரண்டதிகரணப் பொருள்படுமாறு இரு தொடராக வைத்துரையாக்காற் பொருளியைபுபடாமை யறிக.

இலயித்தவென்னும் பெயரெச்சம் தன் னென்னும் இடப் பெயரோடு முடிந்தது.

இலயித்ததென்றது எதுப்பொருண்மையுணரநின்றபெயர். இலயித்ததெனச் சற்காரியவாதங்கூறவே இலயித்தவவத்தையின் அவ்வக்காரியசத்திசமூகமாய்ச் சூக்குமமாய் நிற்பதொன்றுண்டு, அதுவே முதற்காரணமெனப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாகிய மாயையுண்மையும் பெறப்பட்டது.

ஆ வென்பது முதனிலைத்தொழிற்பெயர். வேண்டுமெனச் செயப்படுபொருளைச் செய்ததுபோலக் கூறினர்.

அவை தொகுதி; அஃறிணைப்பன்மைப்பெயரொன்பார்க்கு அழியாது அழிவதென்னும் ஒருமைகளோடியையாமையும் உத்தரமாகாமையு முணர்க.

திதியும் ஆதியும் ஆகுபெயர்; ஆமங்கு பெயரெச்சமுடிபு.

இரணியகருப்பமதத்தையும் மறுத்தற்பொருட்டுப் படைப்புக் கடவுளையும் உடன்கூறினர்.

நிமித்தகாரணனாகிய முதல்வன் உலகிற்கு முதற்காரணனல்லனாயினும் முதற்காரணமாகிய மாயைக்கு ஆதாரமாய் நிற்றலின், உலகம் ஆண்டொடுங்கி ஆண்டுநின்று தோன்றுதல் அமையுமென்பது வருகின்ற வெண்பாவிற் பெறப்படும்.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) இலயித்தது அத்திதியில் என்னின் அவை அழியாது; அத்திதியும் ஆதியும் ஆம் அங்கு அழிவது.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோவெனின், இனி உள்ளது காரியப்படுமென்னுஞ் சற்காரியவாதங்கூறும் மதத்தில் காரியம் ஒடுங்குங்கால் அதன் முதற்காரணத்தில் ஒடுங்குமெனவே கொள்ளுதலின், உலகம் ஒடுங்குங்கால் அவ்வுலகத்திற்கு முதற்காரணமாகிய மூலப்பகுதி வாசுதேவனுருவாகலான், அவ்வாசுதேவனிடத்து உலகம் ஒடுங்குமென்றலே பொருந்தும்; அவ்வாறின்றி அவ்வாசுதேவனின் வேறாய நிமித்தகாரணமெனக் கொண்ட சங்காரகருத்தாவினிடத்தில் ஒடுங்குமென்றல் பொருந்தாதெனப் பாஞ்சராத்திரிகள் கூறுவராதலின், அவர்கூற்றை ஆசங்கித்தெடுத்துக்கொண்டு சங்காரகருத்தாவினிடத்து ஒடுங்குமெனக்கூறி ஒடுங்கின சங்காரத்தின் என்றமேற்கோளிலுள்ள ஒடுங்குதலினால் என்னுங் குறிப்பேதுவையும் இலயித்ததன்றில் என்று மேற்காட்டிய உதாரணத்திலுள்ள இலயித்தவிறுதல் என்னுங்குறிப்பேதுவையும் வலியுறுத்தியவாறும்.

ஒரு காரியத்திற்கு முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரண மென மூன்றுகாரணம் வேண்டப்படும்; காரணமாவது காரியத்திற்குமுன் இன்றியமையாததாய் இருப்பது; காரியமாவது செய்யப்படுவது. உதாரணம் குடம். அதற்கு இன்றியமையாததாய் முன்னிருப்பன மண், தண்டு சக்கரங் கள், குலாலன் என்னு மூன்றுமாம்; அம்மூன்றனுள் மண் முதற்காரணம்; தண்டு சக்கரங்கள் துணைக்காரணம்; குலாலன் நிமித்தகாரணம். இவ்வாறே உலகிற்கு முதற்காரணம் மாயை; துணைக்காரணம் இறைவன் சத்தியும் உயிர் களின் கன்மமும்; நிமித்தகாரணம் இறைவன் என அறிக. இவ்வாறாகவும் பாஞ்சராத்திரிகள் மூலப்பகுதி முதற்காரணம் என்றதன் கருத்தென்னை யெனின், மாயையினின்று காலமுதலிய வித்தியாதத்துவம் ஏழுந்தோன்றி, அந்த ஏழனுள் கலாதத்துவத்தினின்று மூலப்பகுதிதோன்றி, அந்த மூலப் பகுதியினின்று ஆன்மதத்துவம் இருபத்துநான்குந்தோன்றும்; தத்துவம் இருபத்துநான்கே எனக்கொண்ட பாஞ்சராத்திரிகள் மூலப்பகுதியை முதற் காரணமாகக் கொண்டனர். ஆன்மதத்துவத்திற்குமேற்பட்ட வித்தியா தத்துவம் சிவதத்துவங்களை |ங்கூட்டித் தத்துவம் முப்பத்தாறெனக்கொண்ட சைவசித்தாந்திகள் அவ்விருதத்துவங்களுக்கும் ஆதாரமாகிய மாயையை முதற்காரணமெனக் கொண்டனர். மூலப்பகுதி வாசுதேவனுருவென்பது பாஞ்சராத்திரிகள் மதம்; ஆதலால் வாசுதேவனில் உலகம் ஒடுங்குமென அவர் கூறுவர்.

(பொ-ரை.) எது எதனிடத்தில் ஒடுங்கும் அது அதனிடத்தினின் றும் தோன்றுமென்னும் நியாயப்படி உலகம் மூலப்பகுதிவடிவாகிய திதி கருத்தாவினிடத்து ஒடுங்குமாதலால் திதி கருத்தாவாகிய விட்டுணுவே முதற்கடவுளென்பர் பாஞ்சராத்திரிகள். அவ்வாறாயினும் மூலப்பகுதிக்கு மேலுள்ள வித்தியாதத்துவம் சிவதத்துவங்களிலுள்ள உலகங்கள் அம்மூலப் பகுதியினால் வியாபிக்கப்படாமையின் கீழுள்ள உலகங்களே அம்மூலப் பகுதியினொடுங்குவதன்றி மாயாகாரியமாகிய உலகமுழுவதும் அம்மூலப் பகுதியில் ஒடுங்குதலில்லை. உலகம் முழுதும் எவ்விடத்து ஒடுங்கு மெனின், மேற்கூறிய திதிக்கடவுளும் படைப்புக்கடவுளுந் தோன்றுதற் குக் காரணமாகிய அச்சங்காரக்கடவுளிடத்தே அவ்விருவரோடுங்கூட ஒடுங் கும் என்றவாறு.

(க-ரை.) உலகம் முழுவதும் பிரமவிட்டுணுக்களுடன் சங்காரக் கடவு ளிடத் தொடுங்குதலின் சங்காரக்கடவுளே முதற்கடவுளென்பதாம்.

இவ்வெண்பாவினைத் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்து நூன்மரபு க-வது சூத்திரவுரையில் மாபுராணச்செய்யுளென நச்சினார்க்கினியர் எடுத் துக்கூறிய "செய்யுட்களோசை" என்ற செய்யுளின்படி இரண்டதிகரணப் பொருள்படுமாறு இருதொடராக வைத்து உரையாக்கால் உலகம் உள்ளது எனச் சாதித்த முதலாவது தொடரும், சங்காரக்கடவுளே முதற்கடவுளெ

னச் சாதித்த இரண்டாவது தொடரும் ஒரு தொடராகநின்று பொருள் பொருந்தாமை அறிக.

இவ்வெண்பாவின் முதலாவது தொடரினுள்ள இலயித்த என்னும் பெயரெச்சம் தன் என்னும் இடப்பெயரோடு முடிந்தது. தன் என்பது ஒடுங்குதற்கு இடமாகிய தலைவனைக்குறித்தலால் இடப்பெயர்.

இலயித்தது என்றது இலயித்ததாகலான் என்னும் ஏதுப்பொருள் உணர்கின்ற பெயர்ச்சொல். ஆதலான் இலயித்தது என்பதற்கு ஒடுங்கியதாகலான் என உரை செய்யப்பட்டது. இலயித்ததெனக் கூறவே நாசமாகாமல் ஒடுங்கியதென்றாகி, ஒடுங்கியது மீளத்தோன்றுமென்னுஞ் சற்காரியவாதங் கூறியதாகும். ஆகவே ஒடுங்கிய அவத்தையில் ஒடுங்கப்படும் காரியத்தின் சத்திக்கூட்டமாய்ச் சூக்குமமாய் நிற்பதொன்றுண்டு. அவ்வாறு நிற்பதுவே பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாகிய மாயையாம். கருத்தா உண்மைகூறிய இவ்வெண்பாவால் மாயை உண்மையும் பெறப்பட்டது.

முதலாவது தொடரில் உளதாவேண்டும் என்பதிலுள்ள ஆ வென்பது ஆதல் என்னும் பொருளில் நின்றமையால் முதனிலைத்தொழிற்பெயர். ஆதல் என்பதில் ஆ முதனிலை; தல் தொழிலைக்குறிக்கும் விகுதி; தல் விகுதியின்றி ஆ வென்னும் முதனிலை விகுதிப்பொருளைக்குறித்து நிற்றலின் முதனிலைத் தொழிற்பெயராயிற்று. அத்தொடரிலுள்ள வேண்டுமென்பது வேண்டப்படும் என்னும் பொருளில் நின்றது. வேண்டப்படுமென்றிருப்பின் உலகம் செயப்படுபொருளாகும்; வேண்டுமென்றிருப்பின் உலகமே வேண்டுதலைச் செய்வதாகி உலகம் கருத்தாவாகும்; அவ்வாறு கூறுதல் பொருந்தாதாகலின் செயப்படுபொருளைக்குறிக்கும் வேண்டப்படுமென்பதைச் செய்ததுபோல வேண்டுமெனக்கூறினர்; "செயப்படு பொருளைச் செய்ததுபோலத் - தொழிற்படக்கிளத்தலும் வழக்கியன் மரபே." என்பதிலக்கணமாதலின். (தொல்காப்பியம் வினையியல் சூத்திரம். ௪௯)

இரண்டாவது தொடரிலுள்ள அவை என்பது பிரபஞ்சத் தொகுதியைக் குறித்துநின்றது. அவ்வாறன்றி அவை என்பதை அஃறிணைப் பன்மைப் பெயரெனக் கொள்ளின், அழியாது அழிவது என்னும் ஒருமைகளோடு பொருந்தாது. அன்றியும் உலகம் ஒடுங்கியது திதிகருத்தாவின்கண் என்பதற்கு அவை ஒடுங்குமென்பது உத்தரமாகாமையும் அறிக.

இரண்டாவது தொடரிலுள்ள அத்திதியும் ஆதியும் என்பதில் திதி என்பது திதியைச்செய்யும் விட்டுணுவையும், ஆதி என்பது ஆதியைச் செய்யும் பிரமாவையுங் குறித்தலின் அவ்விரண்டும் ஆகுபெயர். ஆதி என்பது தோன்றுதல். அதன் பின்னுள்ள ஆம் அங்கு என்பதில் ஆம் என்பது தோன்றுதற்குக் காரணமாகிய எனப் பெயரெச்சமுடிபாகநின்று

அங்கு என்பதனால் உணர்த்தப்படும் சங்காரக்கடவுளென்னும் பெயர் கொண்டுமுடிந்தது; ஆதலின் ஆமங்கு என்பது பெயரெச்சமுடிபாம்.

பாஞ்சராத்திரமதத்தை மறுப்பதோடு இரணியகருப்பமதத்தையும் மறுத்தற்பொருட்டுப் படைப்புக்கடவுளையும் உடன்கூறினார்.

இவ்வாறு சங்காரக் கடவுளிடத்தே உலகம் ஒடுங்குமெனக் கூறிய விடத்து அக்கடவுள் நிமித்தகாரணமாய் நிற்பதன்றி முதற்காரணமாய் நிற்ற லில்லை; ஆதலால் முதற்காரணமாகிய மாயையினிடத்து உலகம் ஒடுங்கு மன்றி நிமித்தகாரணமாகிய முதல்வனிடத்து உலகம் ஒடுங்குமென்றல் எவ் வாறு பொருந்துமென ஆசங்கைநிகழுமன்றே; அந்நிகழ்ச்சிபற்றி முதல்வன் உலகுக்கு முதற்காரணம் அல்லனாயினும் முதற்காரணமாகிய மாயைக்கு ஆதாரமாய் நிற்றலின் ஆதாரமாய் நிற்கும் அம்முதல்வனிடத்து உலகம் ஒடுங்கித் தோன்றுமென்றது பொருந்துமென்பதை அடுத்துவரும் வெண்பா வினால் கூறுகின்றார்.

உலகம் ஒருகருத்தாவை உடையது என்பதற்குக் காட்டும் உதாரணம்.

வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா
மத்தன்றா ணிற்ற லவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனா மப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், உலகந் தனக்கு முதற்காரணமாகிய மாயையி னொடுங்குவதன்றி நிமித்தகாரணன் ஒருவனுண்டெனக் கொள்ளினும் அவன்மாட்டொடுங்குமென்றல் பொருந்தாமை யின், யாது யாண்டொடுங்கும் அஃததனிலுற்பத்தியாம் என்னும் அவிநாபாவத்தான் மாயையினொடுங்கிய உலகத்தை மாயையே தோற்றுவிக்கும்; இதற்கோரிறைவன் வேண்டா எனச் சாங்கிய நூலார் மதம்பற்றி நிகழுங் கடாவையாசங்கித்து உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என்னுமேதுவை வலி யுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) மண்போல் குளிர்ந்து வித்து உண்டா் மூலம் முளைத் தவா தாரகம் ஆம் அத்தன் தாள் நிற்றல் அவர் வினையால் வித்த கம் ஆம்—(மாயையும் உலகமும் வித்தும் அங்குரமும் போலுமாக்

வின் வித்துக்கு ஆதாரமாகிய) நிலங்குளிர்ந்தவழி (அதன்கண்) வித்துளதாக (அதனினின்றும்) அங்குரந்தோன்றியவாறுபோல (மேலே வெண்பாவின் இலயித்தது என்றதனாற் பெறப்பட்ட மாயை) தனக்காதாரமாய் நின்று தோற்றுவிக்கும் இறைவனது சத்தியின்கணுள்ளதாய் நிற்றலால் (அச்சத்திசங்கற்பித்தவழி) அவரவர்வினைக்கீடாக (அவ்வக்காரியங்களை அவ்வவ்வியல்பிற் பிறழாமற் பயக்குஞ்) சதுர்ப்பாடுடைத்தாம்; (அல்லுழி உடைத்தன்று; நிலங்குளிர்ந்தவழி அதன் கட்கிடந்தன்றி வித்து முளையைத்தோற்றுதவாறுபோலும்; ஆகலான் மாயையினொடுங்கித் தோன்றிய உலகம் அதற்காதாரமாய் நின்ற இறைவன் சத்தியினொடுங்கித் தோன்றியதேயாம்) என்க.

ஆகலானென்பதுமுதல் குறிப்பெச்சம். இது கிழங்கினின்றுந் தோன்றிய தாமரையைப் பங்கயமென்பதனானுமறிக. வழிநூலாசிரியர் "உயிரவை யொடுங்கிப் பின்னு முதிப்பதே னரன்பால்." எ-ம், "உலகவ னுருவிற்றோன்றி யொடுங்கிடும்" எ-ம் ஓதியதூஉம், உலகவனுருவிற்றோன்றி யொடுங்குமாறு வாதுளாகமத்தில் வகுத்தோதியதூஉம் இவ்வியல்பு நோக்கியென்க. இஃதறியாதார் இன்னோரன்னவற்றைத் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப.

உவமவினை பொருளினும் பொருளடை உவமையினுஞ் சென்றியையும்.

உண்டாகவெனச் சற்காரியத்தை வலியுறுத்துதல், வித்தில்வழி நிலத்தினின்றும் அங்குரந்தோன்றுதவாறுபோல மாயையில்வழிப் பிரமத்தினின்றும் உலகந்தோன்றுமெனப் பரிணாமவாதிகளையும், மாயை அநிர்வசனமென்னும் மாயாவாதிகளையும், வித்து நிலனும்போலென்றதனான் மாயை முதல்வனின் வேறு பொருளன்றென்னுஞ்சிவாத்துவிதசைவர் பாஞ்சராத்திரிகளையும் மறுத்தவாறாயிற்று.

முதல்வன் பலவேறுவகைப்படச் சங்கற்பித்தவாறென்னை என்னுங் கடாவை யாசங்கித்து, அவர்வினையாலென்றார்.

வித்தகம் விசித்திரமென் றுரைப்பினு மமையும்.

அற்றேல், தனவயத்தானன்றி வினைவயத்தாற் றோற்றுவிப்பான் இறைவனாகானெனின்,

விளக்கம்.

(கொண்டுகூட்டு) மண்போல் குளிர்ந்து வித்து உண்டா மூலம் முளைத் தவா தாரகம் ஆம் அத்தன் தாள் நிற்றல் அவர்வினையால் வித்தகம் ஆம்.

இவ்வுதாரணம் என்னசொல்விற்றோ வெனின், உலகத்திற்கு நிமித்தகாரணன் உண்டெனக் கொள்ளினும் அவ்வுலகந் தனக்கு முதற்காரணமாகிய மாயையின் ஒடுங்குவதன்றி நிமித்தகாரணனிடத்து ஒடுங்குமென்றல் பொருந்தாது; ஆதலால், எது எதனிடத்தி லொடுங்கும் அது அதனிடத்தில் நின்றும் உற்பத்தியாம் என்னும் அவிநாபாவம் மேல் ஆண்டு ஒடுங்குதலின் என்ற ஏதுவில் சித்தாந்தபட்சமாகச் சாதிக்கப்பட்டவாறு மாயையினொடுங்கிய உலகத்தை மாயையே மீளத் தோற்றுவிக்குமாதலால் இதற்கோர் இறைவன் வேண்டாமெனச் சாங்கியநூலார் கூறுவர். அவர் கூற்றை ஆசிரியர் ஆசங்கித்துக்கொண்டு மாயையினொடுங்கிய உலகம் மீள மாயையினின்று தோற்றுதற்கு ஓர் இறைவன் வேண்டுமெனக்கூறி உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என்னும் ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(இவ்வெண்பாவின் முதற்றொடரின் பொழிப்புரை.) மாயைபோல் வித்தும், உலகம்போல் முளையுமாகலின், வித்துக்கு ஆதாரமாகிய நிலங் குளிர்ந்தவிடத்து அந்நிலத்தின்கணுள்ள வித்தினின்றும் முளைதோன்றுமாறு போல, மேலவெண்பாவில் இலயித்தது என்றதனுல் பெறப்பட்டமாயை தனக்காதாரமாகிய இறைவனது சத்தியின்கணுள்ளதாய்நின்று, நிலங் குளிர்வதுபோல், சத்திசங்கற்பித்தவிடத்து அவரவர்வினைக்கீடாக அவ்வக்காரியங்களைப் பிறழாமல் தோற்றுவிக்குஞ் சாமர்த்தியத்தை உடையதாம். சத்திசங்கற்பியாதவிடத்துக் காரியங்களைத் தோற்றுவிக்குஞ் சாமர்த்தியம் மாயைக்குக் கிடையாது. அது எதுபோலவெனின், நிலங் குளிராதவிடத்து வித்து முளையைத்தோற்றுவிக்காதவாறுபோலும். ஆதலின் மாயையினொடுங்கித் தோன்றிய உலகம் மாயைக்காதாரமாய் நின்ற இறைவன் சத்தியில் ஒடுங்கித் தோன்றியதேயாம் என்றவாறு.

(க - ரை.) நிலங்குளிர்ந்தவிடத்து வித்தினின்று முளைதோன்றுமாறு போல, இறைவன் சத்திசங்கற்பித்தவிடத்து மாயையினின்று உலகந்தோன்றும் என்பதாம்.

இவ்வெண்பாவில் வேட்டுவனும் என்பதுமுதல் கூட்டானே என்பது வரையிலுள்ள தொடர் சுதந்தரத்திற்கு இழுக்கில்லை என்ற பிறிதொரு விஷயத்தைக் குறித்தலால் இவ்வுரையிற் கண்ட குறிப்புக்களைக் கூறிவிட்டு அடுத்து அத்தொடருக்கு உரைகூறுகின்றார்.

இவ்வுரையில் ஆகலான் என்பதுமுதல் தோன்றியதேயாம் என்பது வரை ஆதாரம் என்பதுபற்றிக் குறிப்பாகக் கொள்ளுமாறு எடுத்துச்

கிடத்தலாற் குறிப்பெச்சம். மாயையினின்று தோன்றிய உலகத்தைச் சத்தியினின்றுந் தோன்றியதாகக் கூறும் இது கிழங்கினின்றுந் தோன்றிய தாமரையைச் சேற்றில் நின்றுந் தோன்றியதெனப் பொருள்கொள்ளும்படி பங்கயமென்பதனுனுமறிக. பங்கம் சேறு; ஜம் தோன்றுதல். பங்கஜ மென்னும் வடமொழி தமிழில் பங்கயம் என்ருயிற்று. சத்தியிற்றோன்றிய தெனவே சத்தி இறைவனிற் பிரிப்பின்றிநிற்குமாதலின் இறைவனிற்றோன்றியதெனக் கொள்ளப்படும். அவ்வாறு இறைவனிற் றோன்றும் என்னுங் கருத்துப்பற்றியே வழிநூலாசிரியர், சிவஞானசித்தியார் முதற்சூத்திரம் கூஉ-வது செய்யுளில் "உயிரவை யொடுங்கிப் பின்னு முதிப்பதெ னரன்பால்" எனவும், அச்சூத்திரம் சஅ-வது செய்யுளில் "உலகவனுருவிற்றோன்றி யொடுங்கிடும்" எனவுங்கூறினர். வாதுளாகமத்தில் உலகம் அவனுருவிற்றோன்றி யொடுங்கிடுமாறு வகுத்தோதியதூஉம் இக்கருத்துப்பற்றியென அறிக. இக்கருத்தறியர்தார் இவைபோன்றவற்றைக்கொண்டு மாயையென்பதொன்றில்லை. யெனவும், இறைவனே முதற்காரணமாகவும் நிற்பனெனவுந் தத்தமக்கு வேண்டியவாறே உளரப்பர்.

உலகம் சடப்பொருளாதலால் இச்சடப்பொருளாகிய காரியத்துக்கு முதற்காரணமும் சடமாயிருத்தல் வேண்டுமேயன்றிச் சித்தாயிருத்தல் கூடாது. கடவுளோ சித்துப்பொருள் சித்தினிடத்திலிருந்து சடந்தோன்றுமாயின் நெல்லினிடத்திலிருந்து கமுகு தோன்றல்வேண்டும். அவ்வாறு தோன்றுதல் இன்மையின் உலகத்துக்கு முதற்காரணம் கடவுளென்றல் பொருந்தாது.

சித்தில்நின்று சடமுஞ் சடத்தில்நின்று சித்துந் தோன்றுமென்றல் பொருந்துமெனவும் அதற்கு உதாரணங்கள் உண்டு எனவும் அவர் கூறுவர். அக்கூற்றுவருமாறு:—சிலந்தியாகிய சித்திலிருந்து நூலாகிய சடம் தோன்றுவதும் மனிதனுகிய சித்திலிருந்து உரோமம் நகம் முதலிய சடம் தோன்றுவதும் கோமயமாகிய சடத்திலிருந்து தேள் புழுமுதலிய சித்துத்தோன்றுவதும் பிரத்தியக்ஷமாதலின் கடவுளாகிய சித்துப்பொருளிலிருந்து உலகமாகிய சடப்பொருள் தோன்றுமென்பர். இவர் நுணுகி ஆராயாக் குறையினுல் இவ்வாறு கூறவதேயன்றிப் பிறிதில்லை. எவ்வாறெனின், சிலந்தியின் உடலாகிய சடத்திலிருந்து நூலாகிய சடம் தோன்றிற்றேயன்றி உயிரினிடத்திலிருந்து தோன்றவில்லை. இவ்வாறே மனிதனுகிய உடலினிடத்தினின்று நகமுதலியன தோன்றினவேயன்றி உயிரினிடத்தினின்று தோன்றவில்லை. இனிக்கோமயமாகிய சடத்திலிருந்து தேள் முதலியவற்றின் உடம்பாகிய சடம் தோன்றிற்றேயன்றி உயிர் தோன்றவில்லை; ஆயினும் சடப்பொருளாகிய சிலந்தியுடலினிடத்தும் மனிதவுடலினிடத்தும் முறையே நூலும் நகம்முதலியனவும் தோன்றுதற்கு அவ்வுடலோடு உயிர் இருத்தல்வேண்டும். இன்றேல் அவை தோன்றுமாதில்லை, ஆகவே உயிர் நிமித்தகாரணமும் உடல் முதற்காரணமுமாகும். இவ்வாறே இறைவன் நிமித்தகாரண

மும் இறைவனையின்றித் தனித்துநில்லாத மாயை முதற்காரணமுமாய் நிற்க இறைவன் சிற்சத்தியின் வியாபாரபேதத்தால் முதற்காரணமாகிய மாயையினின்று உலகம் தோன்றுமென்க.

இதன்மேல் தம் கருத்தை நிரப்புதற்கு வழியில்லாதுபோகவே, கடவுட்பொருளோடு உவமித்துச் சொல்லக்கூடியபொருள் வேறுகிடையா தெனவும், கிடைப்பின் இரண்டும் கடவுள் எனவேபடுமெனவும், அதுமிகை யென்னுங் குற்றமாமெனவும், ஆதலால் உவமானத்தில்வைத்து ஆராய்தல் தகுதியன்றெனவும், நூற்பிரமாணமேகொள்ளத்தக்கதெனவும் அதன்படி கடவுளே முதற்காரணமெனவுங் கூறப்புகின்,

நூற்பிரமாணத்தை மதவாதிகள் அனைவரும் ஏற்றுக்கொள்வதில்லை. ஆதலால் எவரும் ஏன்றுகொள்ளுதற்குரிய பிரமாணம் அநுமானமேயாம்; அநுமானமாவது ஏது திருட்டாந்தங்களோடு கூடியது. ஏதுமட்டும் இருந்து திருட்டாந்தம் இல்லையாயின் அவ்வநுமானம் முடிவுபெறுதலின்மையென்னும் ஏதுப்போலியுட்படும். ஆதலால் திருட்டாந்தம் கூறியே அநுமானத்தைச் சாதிக்கவேண்டும். இவ்வாறுகூறும் அநுமானப்பிரமாணமும் சாத்திரப்பிரமாணத்தோடு ஒரு சிறிதும் முரணாது. முரணுமாயின் பிரமாணமாகமாட்டாது. ஆயின் ஒன்றுபோதாதோவெனின், மேற்கூறியவாறு சாத்திரத்தை ஏன்றுகொள்ளாதார்க்கும் அறிவுறுத்துதற்பொருட்டு இரு பிரமாணங்களும் வேண்டப்படுவனேயாம். ஆதலால் கடவுளைப்பற்றிக் கூறுவதற்குத் திருட்டாந்தம் கிடையாதென்றுகூறும் இவர்கூற்றுப் பயன் படாமையறிக. ஆகவே உலகத்துக்கு முதற்காரணம் மாயையேயாம். முதற்காரணம் நிமித்தகாரணம் உண்டென்பதற்கு மேற்கூறிய சிலந்தி மனுடன் முதலிய திருட்டாந்தத்தைக் கூறாமல் சைவசித்தாந்தநூல்களில் மண்ணையும் குயவனையும் கூறியகருத்தென்னையெனின், இரண்டும் ஒன்றேயென மயங்காதிருத்தற்பொருட்டன்றிப் பிறிதில்லையென்க.

இவ்வெண்பாவில் நிலமும், வித்தும், முளையும் உவமானம். இறைவனுடைய சத்தியும், மாயையும், உலகமும் உவமேயப்பொருள். உவமானத்தில் நிலங்குளிர்ந்தவிடத்து வித்தினின்றும் முளை தோன்றுமெனப்பட்டது. குளிர்தலாகிய உவமான வினைபோல் சத்திக்குச் செய்யுளில் வினைகூற வில்லை. சத்தியைத் தாள் என்று கூறிவிடுத்தனர்; உவமானத்திற் கூறிய வினை சத்திக்கும்பொருந்துமாதலால் அவ்வாறு வருவித்து சத்திசங்கற்பித்த வழி என உரைசெய்யப்பட்டது. நிலத்தின்வினை குளிர்தலும், சத்தியின் வினை சங்கற்பித்தலுமென அறிக. உவமேயப்பொருளில் இறைவன் சத்திக்கு அடையாக தாரகமாம் எனக்கூறப்பட்டுள்ளது; அதுபோல உவமானத்தில் நிலம் ஆதாரமென்று கூறப்படவில்லை; உவமேயத்திற் கூறிய

ஆதாரமென்னும் அடை உவமானத்திலும் பொருந்துமாதலால் வித்துக்கு ஆதாரமாகிய நிலமென உரைசெய்யப்பட்டது.

வித்து உண்டாக என்பது உண்டா என ஈறுகுறைந்து நின்றது; அது உள்ளது காரியப்படுமென்னுஞ் சற்காரியவாதத்தை வலியுறுத்துதலாம்.

இச்சற்காரியவாதத்தை வலியுறுத்துதலால் இறைவன் வேண்டாமென்னுஞ் சாங்கியநூலாரை மறுத்ததோடு பரிணாமவாதிகளையும் மாயாவாதிகளையும் பாஞ்சராத்திரிகளையும் மறுத்தவாருயிற்று. எவ்வாறெனின்,

பரிணாமவாதிகள் மாயையில்லையென்றும் பிரமமே உலகமாகத்தோன்றுமென்றுங்கூறுவர்; நிலத்தினின்றும் வித்தில்லாமல் முளை தோன்றுமாயின் பிரமத்தினின்றும் மாயையில்லாமல் உலகந்தோன்று மென்றல் கூடும்; அவ்வாறின்றி நிலத்தில் வித்துக்கிடந்து அதினின்று முளைதோன்றுமாறுபோல பிரமத்தில் மாயை அடங்கியிருந்து அம்மாயையினின்று உலகந் தோன்றுமென்று கூறிய இதனால் பரிணாமவாதிகள் மறுக்கப்பட்டார்கள்.

இனி, மாயாவாதிகள் மாயையை அநிர்வசனமென்பர். அநிர்வசனமென்பது உறுதியாய்ச் சொல்லக்கூடாதது என்பதாம். எவ்வாறெனின், வசனம்—சொல்வது; நிர்வசனம்—நிர்ப்பந்தமென்பதுபோல உறுதியாய்ச் சொல்வது; அநிர்வசனம் உறுதியாய்ச் சொல்லக்கூடாததென அறிக. இவ்வெண்பாவினால் மாயை உள்பொருளென்று உறுதியாகக்கூறினமையால் அது அநிர்வசனமென்னு மாயாவாதிகள் மறுக்கப்பட்டார்கள்.

இனி, பாஞ்சராத்திரிகள் மாயை இறைவனின் வேறில்லை யென்பர். வித்து நிலத்தின் வேருதல்போல மாயை முதல்வனின் வேறென்று கூறியதனால் அவர்கள் மறுக்கப்பட்டார்கள். பாஞ்சராத்திரிகள்போலவே மாயை முதல்வனின் வேறன்றெனக்கூறும் சிவாத்துவிதசைவரும் அதனான் மறுக்கப்பட்டவாறு அறிக.

முதல்வன் சங்கற்பித்தவிடத்து மாயையினின்று உலகந் தோன்றுமென்றதனால் பலவேறுவகையான உலகம் தோன்றுதற்கு முதல்வன் பலவேறு வகைப்படச் சங்கற்பித்தல்வேண்டும்; அவ்வாறு பலவேறுவகைப் படச் சங்கற்பித்தற்கு ஏது என்னையென்னும் வினு நிகழுமாதலின், அவ்வினவை ஆசங்கித்துக்கொண்டு அவரவர் வினைக்கீடாகச் சங்கற்பித்தவாருமென்பது தோன்றச் செய்யுளில் அவர் வினையாலென்றுர்.

வித்தகம் என்பதற்குச் சதுர்ப்பாடு (அதாவது சாமர்த்தியம்) என்று உரைசெய்யப்பட்டது. விசித்திரம் என்று உரைசெய்யினும் அமையும்.

இவ்வாறு உயிர்களின் வினைவயத்தால் மாயையினின்றும் உலகை இறைவன் தோற்றுவிப்பன் என்று கூறவே இறைவனுக்குந் தன்வயத்த

னென்னும் இலக்கணம் இல்லையாய் வினையாகிய பிறவயத்தன் என்பது சித்தித்துப் பிறவயத்தன் இறைவனுகான் என்பது பெறப்படும்; ஆதலால், வினைவயத்தனுயினுந் தன்வயத்திற்கு இழுக்கில்லை என்பதை வெண்பாவின் மற்றொரு தொடரால் எடுத்து விளக்குகின்றார். தன்வயம் என்பது சுதந்தரமுடைமை; அதாவது தானுகவே யாவுஞ்செய்தல். பிறர்வயமென்பது தானுக ஒன்றுஞ்செய்தலின்றிப் பிறர்வழியில் நின்றுசெய்தல்.

வெண்பாவின் பின்தொடர்.

சிற்றுரை.

வேட்டுவன் ஆம் அப்புழுப்போல் வேண்டு உருவைத்தான் கொடுத்துக் கூட்டானே—வேட்டுவனுதலை விரும்பும் புழுவிற்கு வேட்டுவன் விரும்பிய வடிவினைக் கொடுக்குமாறுபோல, இறைவனும் (அவரவர்) வேண்டுமுருவினைக்கொடுத்து (அவ்வினைக்குத் தக்க பயன்களையும்) கூட்டுவன் (ஆகலான் அதுகொண்டு சுதந்தரத்திற்கிழுக்கென்னை) என்க.

ஆகலான் அதுகொண்டு சுதந்தரத்திற்கிழுக்கென்னை யென்பது குறிப்பெச்சம்.

போல் அசை. குளிர்ந்தவழியென்பது குளிர்ந்தெனத்திரிந்து நின்றது.

நிற்றலினென்னும் ஐந்தாவது விகாரத்தாற்றொக்கது. ஏகாரம் எதிர்மறை.

விளக்கம்.

(இரண்டாவது தொடரின் பொ-ரை.) வேட்டைவாளி (குளவிகளிலொருசாதி) யாதலைவிரும்பும் புழுவுக்கு அது விரும்பிய அவ்வடிவினைப்புழுவை எடுத்துவைத்திருக்கும் அக்குளவிகொடுக்குமாறுபோல, அவரவர் விரும்பியவண்ணம் விரும்புதலாகிய வினைக்குத்தக்க வடிவினையும் பயன்களையும் மாயையினின்று இறைவன் தோற்றுவித்துக் கூட்டுவனுதலால் அதுகொண்டு சுதந்தரத்திற்கு இழுக்கில்லை என்றவாறு.

(க-ரை.) உயிர்களின் வினைக்கீடாக உலகத்தை இறைவன் தோற்றுவித்தலால் சுதந்திரத்திற்குக் குறைவில்லை யென்பதாம்.

கூட்டுதலாகிய சுதந்திரம் இறைவனுக்கிருத்தலால் சுதந்திரமுடையனென்பது பெறப்படும். இக்கருத்துப்பற்றியே "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" எனத் திருநாவுக்கரசுசுவாமிகள் திருமறைக்காட்டுத் தேவாரத்தில் அருளிச்செய்வாராயினர்.

உ-வது தொடரிலுள்ள உரையில் ஆகலான் என்பது முதல் இழுக்கென்னை என்பது வரைவேண்டுருவைக் கொடுத்தலென்பதனால் குறிப்பாக எஞ்சி நின்றமையால் குறிப்பெச்சம்.

அப்புழுப்போல் என்பதிலுள்ள போல் என்பது உவம உருபன்று; அசையாம்.

முதலாவது தொடரில் மண்போல் குளிர்ந்தவழி என நிற்கற்பாலது குளிர்ந்து எனத் திரிந்து நின்றது. அத்தொடரில் அத்தன்றூன்நிற்றல் என்பதில் ஐந்தாவதாகிய இன் உருபு விகாரத்தாற்றொக்குகின்றது. அவ்வுருபு ஏதுப்பொருளின் நின்றமையால் நிற்றலால் என உரைசெய்யப்பட்டது.

இரண்டாவதுதொடரில் கூட்டானே என்பதிலுள்ள ஏகாரம் கூட்டுவன் என்னும் பொருளின் நின்றமையால் எதிர்மறை.

இவ்வாறு முதல்வன் உலகைத்தோற்றுவித்து நிலைப்பித்து ஒடுக்குவன் என்பது இவ்வெண்பாவாலும் மேலைவெண்பா முதலியவற்றாலும் பெறப்படவே அத்தொழில் செய்வதனால் இறைவன் விகாரமெய்தானோ என்னுஞ் சங்கையை அடுத்தவெண்பாவால் நீக்குகின்றார்.

இறைவன் முத்தொழில்செய்தும் வேற்றுமையடையான்
என்பதற்குக் காட்டும்
உதாரணம்.

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்
றாக்காது நின்றுளத்திற் கண்டிறைவ—னாக்காதே
கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்
கண்டவனி லிற்றின்றாங் கட்டு.

சிற்றுரை.

எ—து உ-ம் எ—னின். மேலையுதாரணத்திற் கூறியவாற்றான் உலகிற்கு முதற்கடவுள் உண்டெனக் கொள்ளினும், அவன் படைப்புமுதலியன தொழில் செய்வானாயின் விகாரமெய்தி அதனிற் பந்தமுறுவானென்னு மவர்மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து ஏதுவை வலியுறுத்துதலிற்று.

(இ—ள்.) இறைவன்—முதல்வன்,—காலத்தினோக்காது நின்று—(இறப்பு நிகழ்வு எதிர்வு முதலியனவாய் வேறுபட்டு எல்லாத் தொழிலுஞ் செய்துந் தனக்கு விகாரமின்றி நிற்குங்) காலம்போல விகாரப்படாததின்று—ஆக்காதே கண்டு—(பிரபஞ்சத்தைச்) சரணத்

தாற்படையாது சங்கற்பமாத்திரத்தானே படைத்து,—நோக்காது நோக்கி நொடித்து—(அவ்வாறே) காவாது காத்து (அழியா) தழித்தலால்,—அன்றே இன்று ஆம் கட்டு—(இவ்வமலனுக்குப்) பந்தமின்றுதல்,—உளத்தின் கனவு கண்ட கண்ட் நனவு உணர்வில் உணரக்கண்டவனின் இற்று—(கற்றநூற் சொல்லும் பொருளும்) உள்ளத்திற் றோன்றுங்கால் உள்ளம் அவற்றிற் றொடக்குண்ணாதவாறுபோலும் கனவின்கட் கண்டவற்றைப் புறத்து விடயங்களையறிந்து வந்த நனவுணர்வின்கண்ணே விளங்க வறிந்தவன் அப்பொழுது அவற்றிற் றொடக்குண்ணாதவாறுபோலு மித்தன்மைத்து என்க.

எனவே இஃதிவ்வாறாகவென் றெண்ணுதலாகிய சங்கற்ப மாத்திரையாற் செய்வதூஉம், கரணத்தாற் செய்வதூஉமென வினைமுதல் இருவகைப்படுமென்பதூஉம், கரணத்தானன்றிச் செய்யமாட்டாத குயவன் முதலியோர் சங்கற்பமாத்திரையாற் செய்யு முதல்வனுக்கு வினைமுதலாதற் பொதுமைபற்றி ஒருபுடையுவமையாதலன்றி, முற்றுவமையாதல் செல்லாமையானும், சங்கற்பமாத்திரையாற் செய்யுஞ் செய்திக்குக் கட்டுண்டன் முதலிய குற்றங்கள் பகைப்பொருளாகலானும், அவையாண்டுளவாதற்கோரியையின்றென்பதூஉம் கூறி ஏதுவைவலியுறுத்தவாறு காண்க.

ஆக்குதல் படைத்தல்; காண்டலும் அது. நோக்குதல் காத்தல். நொடித்தல் அழித்தல்; அது "நொடித்தான்மலை" என்பதனானுமறிக.

ஆக்காது நோக்காது என்றமையால் நொடியாதென்பது வருவித்துரைக்கப்பட்டது. நொடித்தலானென்பது நொடித்தெனத் திரிந்தது.

அன்றே அசை; அநாதியே யெனினுமமையும்.

இன்மூன்றும் உவம வுருபுகள்.

உளத்திலென்பதற்குச் சங்கற்பத்தாலென் றுரைப்பினுமமையும்.

இன்றாங்கட்டு என்பது "அருங்கேடன்" என்பதுபோல நின்றது.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) இறைவன் காலத்தில் தாக்காது நின்று ஆக்காதே கண்டு நோக்காது நோக்கி நொடித்து அன்றே இன்று ஆம் கட்டு. உளத்தில் கனவுகண்ட கண்டநனவு உணர்வில் உணரக்கண்டவனில் இற்று.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், இலயித்த என்னும் இரண்டாவதுதொடராகிய மேலை யுதாரணத்திற் கூறியவாற்றால், உலகிற்கு முதற்கடவுள் உண்டெனக்கொள்ளினும், அம்முதற்கடவுளாகிய சங்காரக்கடவுள் படைப்புமுதலியதொழில் செய்வாராயின் நிருவிகாரியாகாது வேற்றுமைப்பட்டு அத்தொழிலிற்கட்டுப்படுவர், தொழில் செய்யாரெனக்கொள்ளின் கருத்தாவாதல்கூடாது, என்பாரை மறுத்துத் தொழில் செய்வர், அதனால் விகாரமெய்தார், எனக்கூறி, உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என்ற ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) காலமானது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், நாள், நாழிகை முதலியனவாய் வேறுபட்டு எல்லாத்தொழிலுஞ்செய்தும் தனக்கு விகாரமின்றிநிற்கும். அதுபோல, முதல்வன் விகாரப்படாது நின்று பிரபஞ்சத்தைக் கரணத்தாற்படையாது சங்கற்பமாத்திரத்தானே படைத்து, அவ்வாறே கரணத்தாற்காவாது சங்கற்பமாத்திரத்தாற் காத்து, கரணத்தாலழியாது சங்கற்பமாத்திரத்தால் அழிப்பன். சங்கற்பத்தைத் தடுக்கும் மலமின்மையிற் சங்கற்பமாத்திரத்தாற் செய்தலால் இந்த அமலனுக்குப் பந்தமின்றாம். பந்தமின்றாதல் எதுபோலுமெனின், ஒருவன் கற்றநூலின்கண்ணுள்ள சொல்லும் அச்சொல்லுக்குரிய பொருளும் மனத்திற்றோன்றுங்கால் அம்மனம் அச்சொல்லினிடத்தும் பொருளினிடத்தும் கட்டுப்படாதவாறுபோலும், கனவின்கண் கண்டவை நனவின்கண் வந்தபொழுது கனவிற்கண்டவாறு விளங்க அறியினும் அறிந்தவன் அப்பொழுது அவற்றிற் கட்டுப்படாதவாறுபோலுமாம் என்றவாறு.

(சு-ரை.) இறப்புமுதலிய வேறுபாட்டால் காலம் வேற்றுமையடையாதவாறுபோல, படைப்புமுதலிய வேற்றுமையால் இறைவன் வேற்றுமையடையான், சங்கற்பமாத்திரத்தாற் செய்தலால் பந்தமும் அடையான் என்பதாம்.

இதிற்கூறிய உதாரணம் இரண்டும் சங்கற்பமாத்திரையாற் செய்து பந்தமின்றாதலை வலியுறுத்தியது எவ்வாறெனின், நூலைப்படிக்குங்கால் நரகம், சுவர்க்கம், பூமிமுதலிய சொற்களும் அவற்றிற்குரிய பொருள்களும் உள்ளத்திற்றோன்றினும் அவ்வுள்ளம் நரகமுதலியவற்றைப் பொருந்துதலில்லை. அவ்வாறே கனவில் யானை கரடிமுதலியவற்றைக்கண்ட ஒருவன் நனவில் அவ்வாறு கண்டதாக உணருங்காலத்து உணர்ந்த அவ்வுள்ளம்

யானைமுதலியவற்றால் வருந்துவதில்லை. ஆயின் கனவுகாணுங்காலத்துத் துன்பம் உண்டோ இல்லையோவெனின், உண்டு; உண்டாவதற்குக் காரணம் சூக்குமதேகத்திற்கு அநுபவமாகின்றமையால் என அறிக. நனவின் கண்வந்தபொழுது கனவைநினைத்தல் சங்கற்பம். ஆதலினாற்றான் கனவை நினைக்கும் நனவை உவமைகூறியது. கனவிலும் கண்முதலிய கரணங்கள் சூக்குமமாய் உண்டு. ஆகவே கண்முதலிய கரணங்களோடு காண்பதற்கும் அக்கரணமின்றி உள்ளத்தாற் காண்பதற்கும் வேற்றுமை உண்டென்பது நன்குவிளங்குமாறுகாண்க. ஆதலால் இவ்வுவமைகள் சங்கற்பமாத்திரத்தாற் செய்யும் முதல்வனுக்குப் பந்தமின்மைதலை வலியுறுத்தின.

இவ்வாறு கூறியதனால் சங்கற்பமாத்திரையாற்செய்யுங் கருத்தாவும் கரணத்தாற்செய்யுங் கருத்தாவுமெனக் கருத்தா இருவகைப்படுமென்பதாயிற்று. சங்கற்பமாத்திரையாற் செய்யுங்கருத்தா முதல்வன்; அவன் இது இவ்வாறாகுக என்றெண்ணுதல்மாத்திரையானே எல்லாம் செய்வன். கரணத்தாற்செய்யுங்கருத்தா குயவன் முதலியோர்; இவர்க்கு மண்ணினின்று குடத்தைத் தோற்றுவிப்பதற்குக் கைகால்முதலிய கரணங்களையின்றிமுடியாது. ஆகவே கருத்தாவென்னும் பொதுமையால் முதல்வனுக்குக் குயவனை உவமையாகக்கூறினும், கருத்தாத்தன்மையாகிய ஒருபுடை உவமையாதலன்றிச் செய்யுமுறையும் ஒத்தலாகிய முற்றுவமையாதல் செல்லாது; ஆதலானும், கட்டுண்டல் முதலிய குற்றங்களுளவாயின் எண்ணியவாறு செய்ய இயலாதாதலின் சங்கற்பமாத்திரையாற் செய்யுஞ் செய்திக்குக் கட்டுண்டல்முதலிய குற்றங்கள் பகைப்பொருளாகலானும், அக்குற்றங்கள் சங்கற்பமாத்திரையாற் செய்யுமிடத்துள்வாதற்குச் சம்பந்தமின்றென்பது கற்றனூற்பொருள் கனவு என்னும் உவமையில் வைத்து விளக்கியதனானும், விகாரமும்பந்தமுமெய்தாது செய்வோனாகிய கருத்தா உண்டென்றுகூறி, உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினை இன்மையின் என்ற ஏதுவை வலியுறுத்தியவாறுகாண்க.

செய்யுளில் ஆக்காதே என்பது ஆக்குதல் என்பதற்கு எதிர்மறை. ஆக்குதல் என்பது படைத்தலெனப்படும். ஆக்காதே என்பதை அடுத்து நின்ற கண்ட என்பதும் படைத்தலைக்குறிக்கும். ஆதலால், ஆக்காதே கண்டு என்பதற்குப் படையாது படைத்து என உரைசெய்யப்பட்டது. நோக்காது நோக்கி என்றதில் நோக்குதல் காத்தலாம். ஆதலால், காவாது காத்து என உரை செய்யப்பட்டது. நோக்கி என்பதன் பின்னுள்ள நொடித்தல் என்பது அழித்தலைக்குறித்து நின்றது. நொடித்தல் அழித்தலைக் குறிக்குமென்பதை "நொடித்தான்மலை" என்ற சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிய தேவாரப்பதிகத்தானுமறிக. நொடித்தான் என்பது மகாசங்காரஞ் செய்தவன் என்பதையும், திரிபுரசங்காரஞ் செய்தவன் என்பதையும் குறிக்கும். குறிக்கவே

சங்காரக்கடவுள் என்பது பெறப்படும்; படவே, 'நொடித்தான்மலை'' என்பது சங்காரக்கடவுள் வீற்றிருக்குங் கைலைமலையாம்.

ஆக்காது ஆக்கி நோக்காது நோக்கி என்று கூறினமையால், அவ்வாறே நொடித்து என்பதற்குமுன் நொடியாது என்பது இன்றேனும் உரையிற் கோடல் என்னும் உத்தியால் வருவித்துரைக்கப்பட்டது. நொடித்தலால் என்று இருக்கவேண்டுவது நொடித்து எனத் திரிந்துநின்றது. நொடித்தன்றே என்பதிலுள்ள அன்றே என்பதை அசையாக வைத்து அதற்கு உரை செய்யவில்லை. அன்றே என்பதற்கு அனுதியே என்று கூறினும் அமையும். அவ்வாறு கூறுங்கால் அனுதியே பந்தமின்றாம் என உரைக்க.

காலத்தின் என்பதிலுள்ள இன்னுருபும், உள்ளத்தின் என்பதிலுள்ள இன்னுருபும் கண்டவனின் என்பதிலுள்ள இன்னுருபும் முறையே காலம் போல், உள்ளம்போல், கண்டவன்போல் என்னும் பொருளில் நின்றமையால் அம்மூன்றும் உவம உருபுகள்.

உளத்தில் என்பதற்கு உள்ளமாகிய மனம் என்று உரைசெய்யப்பட்டது; மனத்தின் தொழிலாகிய சங்கற்பத்தால் என்றுரைப்பினும் பொருந்தும்.

இன்றாங்கட்டு என்பது பந்தமின்றாதலைக் குறித்தது; இது எதுபோலவெனின், திருக்குறள் தீவினையச்சம் பத்தாவது செய்யுளில் "அருங்கேட" னென்பதுபோலாம். குறளில் அருமை இன்மைப்பொருளில் நின்றது; கேடில்லை என்று சொல்லவேண்டுவதை இல்லைக்கேடு என்று குறளிற் கூறியது போலக் கட்டு இன்று என்று சொல்லவேண்டுவதை இன்றாங் கட்டு என இந்நூலிற் கூறினர்.

இவ்விரண்டாம் அதிகரணத்தில் உலகம் உளளது, கருத்தா உண்டு, சங்காரக்கடவுளே கருத்தா என்பன தன்னாற் கூறப்படும் மேற்கோள். உலகம் உள்ளதோ இல்லதோ என்பதும், கருத்தா உண்டோ இல்லையோ என்பதும், சங்காரக்கடவுள் கருத்தாவோ அன்றோ என்பதும் ஐயப்பாடுகள். உலகம் இல்பொருளென்பதும், கருத்தா இல்லை யென்பதும், சங்காரக்கடவுள் கருத்தா அன்று என்பதும் பிறர்கூறும் பக்கம். மூன்றேதுக்களும் பிறர்பக்கத்தை மறுத்துரைக்குஞ் சித்தாந்தம். முதலாவது வெண்பாவிலுள்ள இருதொடரும், இரண்டாவது வெண்பாவும் ஏதுவை வலியுறுத்தும் உதாரணம். மூன்றாவது வெண்பா இயைபுபற்றி ஏதுவை வலியுறுத்தும் உதாரணமாயிற்று. இவ்வாறு இவ்வதிகரணப்பொருளை அறிந்து கொள்க.

இரண்டாம் அதிகரணம் முற்றிற்று.

மூன்றும் அதிகரணம்.

சங்காரக்கடவுள் ஒன்றே எனக்கூறும்
மேற்கோள்.

இனிச் சங்காரமே முதலென்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், 'ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை' எனவே சங்காரகருத்தா உலகிற்கு முதற்கடவுளென்பது போந்ததாயினும் தேர் முதலாயின பலர்கூடிச் செய்யக்காண்டலின் அவற்றினும் அதிவிசித்திரமான உலகத்திற்கு மற்றுமத்தன்மையராய முதற்கடவுளர் உண்டெனக்கோடும் என்னும் அநேகேசுரவாதிகண் முதலியோர்மதம்பற்றி நிகழுங் கடாவையாசங்கித்து 'அந்தமாதி' என்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

(இ—ள்) சங்காரகருத்தா ஒருவனே உலகிற்கு முதற்கடவுளென்றது.

சங்காரம் ஆகுபெயர். ஏனையோர் முதல்வராகாரெனப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

விளக்கம்.

சங்காரக்கடவுளே கடவுளென இரண்டாமதிகரணத்தாற் சாதித்தவிடத்து அச்சங்காரக்கடவுளும் ஒன்றோ பலவோ என்னும் ஐயம் நிகழாமைப் பொருட்டு மூன்றும் அதிகரணங்கூறுகின்றார்.

இது சூத்திரத்தில் உள்ள 'அந்தமாதி' என்னுங்கூற்றைக் கண்ணழித்து மேற்கொண்டவாறும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோவெனின், இரண்டாமதிகரணத்தில் ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை எனக் கூறியதனால் உலகிற்கு முதற்கடவுள் சங்காரகருத்தாவெனச் சித்தித்தது; ஆயினும் தேர் முதலாயின பலர்கூடிச் செய்யக்காண்டல்போல, அத்தேர் முதலியவற்றினும் அதிவிசித்திரமான உலகத்திற்கு எவற்றையும் ஒடுக்குந்தன்மையையுடைய சங்காரக்கடவுளர் பலர் உண்டெனக் கொள்வேமென்று

அநேகேச்சுரவாதிகள் முதலியோர் கூறுவர்; பல ஈசுவரர் உண்டென்றமையால் அநேகேச்சுரவாதிகள் எனப்பட்டார். இவர்கூற்றை ஆசிரியர் ஆசங்கித்துக்கொண்டு 'அந்தமாதி' என்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துச் சங்காரக்கடவுள் ஒன்றே எனக்கூறியவாறும்.

(இம்மேற்கோளின் பொருள்.) ஒரு சங்காரகருத்தாவே உலகிற்கு முதற்கடவுள் என்றவாறு.

மேற்கோளில் சங்காரமென்றது சங்காரத்தைச்செய்யுங் கருத்தாவைக் குறித்தலால் ஆகுபெயர். சங்காரமே என்றதிலுள்ள ஏகாரம் பிரம விட்டுணு முதலிய ஏனையோர் முதல்வராகாரெனப் பிரித்தமையின் பிரிநிலைக்கண் வந்தது.

சங்காரகருத்தா ஒருவனே என்பதற்குக்காட்டும்
ஏது.

சுட்டுணர்வாகிய பிரபஞ்சஞ் சுட்டுணர்வின்றிநின்ற சங்காரத்தின்வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான்.

சிற்றுரை.

எ—து ஏது—எ—னின், அதற்குப் பிரமாணமென்னையென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) ஒன்றொன்றாய்ச் சுட்டியறிவதாகிய உருவும் அருவுமென்றிருவேறுவகைப்பட்ட பிரபஞ்சம் அவ்வாறு சுட்டியறிதலின்றி எவ்வுலகும் ஒன்றாயறிந்துநின்ற சங்காரகருத்தாவின் வழிப் பாதந்திரமாய் நிற்பதல்லது தனக்கெனச் சுதந்திரமுடைத்தாய் நிற்பதன்றாகலாற் சங்காரகாரணனொருவனே உலகிற்கு முதற்கடவுளன்றி ஏனையோர் முதற்கடவுளரல்லர் என மேற்கொண்டது என்க.

பிரபஞ்சத்திற்குச் சுதந்திரமின்மையுஞ் சங்காரகாரணனுக்குச் சுதந்திரமுண்மையும் ஏதுமுகத்தாற் காட்டுவார் சுட்டுணர்வாகிய பிரபஞ்சமெனவும், சுட்டுணர்வின்றிநின்ற சங்காரமெனவும், ஈரிடத்தும் உடம்பொடுபுணர்த்தோதினார். சுட்டுணர்வுடையதனைச் சுட்டுணர்வென்றது உபசாரம். ஈண்டுப் பிரபஞ்சமென்றது சேதனப்பிரபஞ்சத்தை; பிரிநிலையேகாரத்தான் விலக்குதற்குரியது அதுவேயாகலின்:

தேர் முதலாயின பலராற் செய்யப்படினும் அப்பலரும் ஒருவனேவல்வழிநின்றே செய்பவாகலானும், வேதத்துட் காரணவாக்கியங்களிற் சுட்டுணர்வினராகிய நாராயணன், இரணியகருப்பன், இந்திரன், அங்கி, சூரியன் முதலியோரைக் காரணமென்றதுகுயவன்போல அவாந்தரகாரணமாதல்பற்றியே யாகலின் அவையெல்லாம் ஆகுபெயராற் சங்காரகாரணனாகிய முதற்கடவுளையேயுணர்த்திநிற்குமாகலானும், செய்துஞ் செய்வித்தும் எல்லாத்தொழிற்கும் வினைமுதலாய்நிற்கு முதற்கடவுள் சங்காரகருத்தாவொருவனே யென்பது கருத்து.

விளக்கம்.

இந்த ஏது என்ன சொல்லிற்றேவெனின், சங்காரகருத்தா ஒருவனே என்பதற்குப் பிரமாணம் என்னையென்பாரை நோக்கிப் பிரமாணங்கூறி மேற்கோளைச் சாதித்தவாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) ஒன்றொன்றாய்ச் சுட்டியறிவதாகிய உருவும் அருவும் என்று இருவேறுவகைப்பட்ட சேதனப்பிரபஞ்சமாகிய உயிர் அவ்வாறு சுட்டியறிதலின்றி எவ்வுலகும் ஒன்றாயறிந்துநின்ற சங்காரகருத்தாவின் வசப்பட்டுப் பரதந்திரமாய் நிற்பதல்லது தனக்கெனச் சுதந்திரமுடைத்தாய் நிற்பதன்று. ஆதலாற் சங்காரகாரண னொருவனே உலகிற்கு முதற்கடவுளன்றி ஏனையோர் முதற்கடவுளரல்லர் என மேற்கோள் கூறியது என்க.

சடப்பிரபஞ்சம் சுட்டியறியப்படுவதாதலின் சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் உயிரெனக்கொள்க. உயிர் உருவும் அருவுமென்றிருவேறுவகைப்படுமெனக்கூறியதன் கருத்தென்னையெனின், உயிர் அருவமேயாயினும் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப்படும். இவ்வாறு மூவகைப்படுதற்குக் காரணமுதலியன சிவஞானசித்தியார் எட்டாஞ்சூத்திரம் உ-வது செய்யுள் உரையில் விளக்கப்பட்டிருக்கின்றமையால் அவ்விடத்துக்காண்க. அம்மூவகை உயிருள் விஞ்ஞானகலரும் பிரளயாகலரும் சகலரில் பிரமவிட்டுணுமுதலிய தேவரும் சூக்குமசரீரமுடையவர். சகலரில் தேவர் நீங்கிய ஏனையோர் தூலசரீரமுடையவர். சூக்குமசரீரம் வெளிப்படத்தோன்றாமையால் அருவமெனப்படும். சூக்குமசரீரமென்பது முப்பத்தாறு தத்துவங்களையன்று; சுத்தமாயை அசுத்தமாயைகளின் காரியமானசரீரமும் பிரகிருதிமாயையின் காரியமான பூதசாரசரீரமுமாம். தூலசரீரம் வெளிப்பட்டுத்தோன்றுதலால் உருவமெனப்படும். ஆகவே தூலசரீரத்தோடுகூடிய உயிரை உருவுயிரென்றும் சூக்குமசரீரத்தோடு கூடிய உயிரை அருவுயிரென்றும் இருவேறுவகைப்படுத்திக் கூறினாரென்க.

சேதனப்பிரபஞ்சமாகிய உயிருக்குச் சுதந்திரமில்லையென்பதைச் சுட்டுணர்வுடைமையால் என்னும் ஏதுவால் வலியுறுத்தவேண்டிச் சுட்டுணர்வாகிய பிரபஞ்சமெனவும், சங்காரகாரணனுக்குச் சுதந்திரமுண்டென்பதைச் சுட்டுணர்வின்மையால் என்னும் ஏதுவால் வலியுறுத்தற்குச் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரமெனவும் கூறினர். பிரபஞ்சம் சங்காரமென்னும் ஈரிடத்தும் விசேடணமாய்நின்ற சுட்டுணர்வு சுட்டுணர்வின்மை என்னும் இரு வாக்கியங்களோடு ஏதுப்பொருள்களைப் புணர்த்திக்கூறியது உடம்பொடு புணர்த்தல். அது மேலுங் காட்டினும். சுட்டுணர்வுடைய பிரபஞ்சம் என்று கூறவேண்டியதைச் சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் என்றது உபசாரம். இவ்விடத்துப் பிரபஞ்சமென்றதற்குச் சேதனப் பிரபஞ்சமாகிய உயிரே பொருளென்பது எதனாற் பெறுதுமெனின், மேற்கோளில் சங்காரமே என்றதில் உயிரைப் பிரித்துநின்ற பிரிநிலை ஏகாரத்தால் பெறுதும் என அறிக.

சுட்டுணர்வாகிய ஏது சுதந்திரமின்மையினையும், சுட்டுணர்வில்லாமையாகிய ஏது சுதந்திரமுண்மையினையும் எவ்வாறு குறிக்குமெனின், சுட்டியுணருங்கால் சுட்டப்படும்பொருளின் வேறாய்நின்றே உணரவேண்டும். அவ்வாறுணருங்கால் ஒன்றைச் சுட்டும்பொழுது பிறிதொன்றைச் சுட்ட முடியாது. பிறிதொன்றினைச் சுட்டவேண்டின் முன் சுட்டப்பட்டதை விடவேண்டும். தனக்கே சுதந்திரமிருப்பின் விடவேண்டுவதை முன் அறியவேண்டாம்; பின் அறியவேண்டுவதை முன் அறியாதிருக்கவேண்டாம்; ஆகவே விடுதல்அறிதலாகிய சுட்டுணர்வினால் சுதந்திரமில்லை யென்பது நன்கு விளங்கும். சுட்டுணர்வின்றி அறியுங்கால் எவற்றுடனுங் கலந்துநின்றே அறியவேண்டும். அவ்வாறு அறியுங்காலத்து ஒன்றொன்றாய் அறிதலின்றி ஒருசேர அறிவதாகும். கலந்துநின்று ஒருசேர அறியுமிடத்து அறியவேண்டுவதும் அறியப்படாததும் இல்லாமையால் அவ்விரண்டுமுடைய பரதந்திரம் ஒழியும். ஒழியவே, சுதந்திரமுண்மை உண்டென்பது விளங்குமாறு அறிக.

தேர் முதலாயின பலர்கூடிச் செய்யப்படினும் அப்பலரும் ஒருவன் ஏவல்வழிநின்றே செய்வர். அதுபோல உலகம் உயிர்வருக்கத்துப் பல கடவுளராற் செய்யப்படினும் அவர் சங்காரகாரணனாகிய ஒருவனேவல்வழி நின்றே செய்வரென அறிக. வேதத்தில் உலகத்துக்குக் காரணங்கூறும் வாக்கியங்களில் சுட்டுணர்வுடைய நாராயணன் இரணியகருப்பன் இந்திரன் அங்கி சூரியன் முதலியோரைக் காரணமென்று கூறியதன் கருத்தென்னை யெனின், மண்ணினின்றுங் குடந்தோன்றுதற்குக் குயவன் காரணமென்றதுபோல அவாந்தரகாரணமாம். அதாவது இடைப்பட்ட காரணமென்றபடியாம். ஆகவே முதன்மையான காரணமென்றும், இடைப்பட்ட காரணமென்றுங் காரணம் இருவகைபபடுமாறு அறிக. அவற்றுள் முதன்மை

யான காரணம் ஏவுதற்கருத்தா; இடைப்பட்ட காரணம் இயற்றுதற்கருத்தா. குடத்திற்குக் குயவன் இயற்றுதற்கருத்தா: இறைவன் ஏவுதற்கருத்தா. இதுபோல உலகத்திற்குப் பிரமன் முதலியோர் இயற்றுதற்கருத்தர்; சங்கார காரணன் ஏவுதற்கருத்தா என அறிக.

அன்றியும் பிரமன் முதலியோரைக் காரணமெனக்கூறிய வாக்கியங்களெல்லாம் ஆகுபெயரால் சங்காரகாரணனாகிய முதற்கடவுளையே உணர்த்தி நிற்கும். இது எதுபோலுமெனின், அரசன் ஆணைவழிநிற்கும் அதிகாரிகளை அரசனெனக்கூறியதுபோலும்; அதிகாரிகளுக்கு அரசனையின்றிச் செயலில்லாதவாறுபோலப் பிரமன் முதலியோருக்கும் சங்கார்க்கடவுளையின்றிச் செயலில்லை. ஆகவே, இயற்றுதற்கருத்தாவாய்நின்று செய்தும் ஏவுதற்கருத்தாவாய்நின்று செய்வித்தும் எல்லாத்தொழிற்கும் வினைமுதலாய்நிற்கும் முதற்கடவுள் சங்காரகருத்தா ஒருவனே என்பது வேதத்தில் பிரமன் முதலியோர் காரணமெனக்கூறும் வாக்கியங்களின் கருத்தாதலறிக.

சங்காரகருத்தா ஒருவனே என்பதற்குக்காட்டும்
உதாரணம்.

ஒன்றலா வொன்று ளதாகி நின்றவா
றொன்றலா வொன்றிலவை யீறுத—லொன்றலா
வீறே முதலதனி னீறலா வொன்றுபல
வாறே தொழும்பாகு மங்கு.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், அங்ஙனமாயினும் சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் பலவாயினுற்போலச் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரமும் பலவுளவெனக்கோடும், ஒன்றே யென்றற்குப் பிரமாணம் என்னை? என்னுங் கடாவை யாசங்கித்து ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) அவை—சேதனப்பிரபஞ்சத்தொகுதி,—ஒன்று அலா ஒன்றால்—(உருவும் அருவுமென்னும் அவ்விருகூற்றுப் பிரபஞ்சத்துள்) ஒன்றல்லாத ஒப்பற்ற பாம்பொருளாலே,—உளது ஆகி நின்றவாறு—சிருட்டிப்பட்டுத் திதிப்பட்டவாறே,—ஒன்று அலா ஒன்றில் ஈறுதல்—அந்தப் பாம்பொருளின்கண்ணே சங்காரப்படுதலால்,—ஒன்று அலா ஈறே முதல்—அச்சங்காரக்கடவுளொருவனே (உலகிற்கு) முதற்கடவுள். (அற்றேல், இவ்வாறு முத்தொழிற்படுஞ் சேதனப்பிரபஞ்சம் வீடுபெற்றவழிச் சுட்டுணர்வின்

றிச் சிவசமமாமென வேதத்தும் ஆகமத்தும் ஓதுதலின் அவ்வழி அவையும் முதற்கடவுளாமென்றற்கு இழுக்கென்னையெனின்),— அதனின் ஈறு அலா ஒன்று—அப்பரம்பொருள்போல் அழிவின்றி நித்தமாய சேதனப்பிரபஞ்சம்,—அங்கு—வீடு பேற்றின்கண்ணும்,—பலவாறே தொழும்பு ஆகும்—பலவாற்றானும் (பரம்பொருளுக்கு) அடிமையாம் என்க.

இது "சொற்பொருட்பின்வருநிலை."

காரியப்பிரபஞ்சஞ் சடமாகலானும், சேதனப்பிரபஞ்சம் அவிச்சையாற் கட்டுற்றுச் சுட்டுணர்விற்றாய் நிற்றலானும், இவற்றைத் தொழிற்படுத்தற்கு இவற்றின் வேறாய் ஒரு முதற்கடவுளுண்டென்பது பெற்றாம். பெறவே, பிரபஞ்சம் விசித்திரகாரியமாய்க் காணப்படுதலின் இவ்வாறு நடாத்தும் முதற்கடவுள் முற்றுணர்வும் அளவிலாற்றலும் பேரருளும் சுதந்திரமும் முதலிய நிரதிசய குணங்களுடையனென்பதூஉம் பெறப்பட்டது; படவே, இத்தன்மையனாகிய முதற்கடவுளொருவனே அமையுமாகலின் வேறு மத்தன்மையருண்டெனக்கொள்ளின் மிகையென்னுங் குற்றமாம்; அல்லதூஉம், இலக்கணத்துள் ஒருவாற்றானும் வேற்றுமையில்வழி இலக்கியம் பலவாதல் செல்லாதென்னுங் கருத்தால், ஒன்றலாவொன்று என வரையறுத்தோதினார்.

ஈறே முதலென்றது முடிந்தது முடித்தல். ஈறு ஆகுபெயர்.

இறந்தது தழீஇய வெச்சவும்மை விகாரத்தாற் றொக்கது.

பலவாறுவன, இருணீங்கியவழியுங் கண்ணுக்குக் காட்சி ஞாயிற்றையின்றி யமையாதவாறுபோல, மலநீங்கிய முத்திநிலையினும் ஆன்மாவுக்கு அறிவு வியஞ்சகமாய் உடனின்றறிவிக்குமுதல்வனையின்றி யமையாதவாறும், கண் படிகம் ஆகாயம்போலச் சார்ந்ததன்வண்ணமாயன்றி முதல்வன்போலத் தனித்துநிற்கு மியல்பில்லாதவாறும், முதல்வன்போல் ஐந்தொழிற்கும் வினைமுதலாமுரிமையின்றிச் சிவாநுபவ மொன்றினுக்கே யுரித்தாயவாறும், சமவியாபகமாயினும் முதல்வனைநோக்கத் தூலவறிவாகலான் விளக்கொளியுட் கண்ணொளிபோல முதல்வனின் வியாப்பியமாயன்றி யில்லாதவாறும் முதலாயின. அற்றேல், முத்திநிலையின் ஆன்மாச் சிவசமமாமென்னுஞ் சுருதிக்குப் பொருளென்னை

யெனின், அஃது உண்மை யதிகாரத்துட் பெறப்படும். இத ஞனே சிவசமவாதி சங்கிராந்தவாதி உற்பத்திவாதி ஆவேசவாதி மதங்களும் மறுக்கப்பட்டன.

பதியுண்மைக்குப் பிரமாணங்கூறுவார் மலத்துளதாம் எனப் புனருற்பத்திக்கேதுக் கூறுமுகத்தான் மலத்துண்மைக்குப் பிர மாணமும் உடன்கூறினுர். அதனை ஈண்டு வேருேரதிகரணமாக வைத்துரையாராயினுர்; அதிகரணத்திற்குரிய ஐயப்பாடு முதலியன வெல்லாஞ் சகசமலத்துணராதென அதனிலக்கணங்கூறும்வழிப் பெறப்படுதலால் ஈண்டு மிகைபடவேறுேதல் வேண்டாமையின்.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) அவை ஒன்று அலா ஒன்ருல் உளது ஆகி நின்ற வாறு ஒன்று அலா ஒன்றில் ஈருதல் ஒன்று அலா ஈறே முதல் அதனின் ஈறு அலா ஒன்று அங்கு பல்வாறே தொழும்பு ஆகும்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றுவெனின், சங்காரகருத்தாவே முதற்கடவுளாயினுஞ் சுட்டுணர்வாகிய உயிர் பலவாயினுற்போலச் சுட்டுணர் வின்றிநின்ற சங்காரகருத்தாவும் பலவுளவெனக் கொள்ளுதலே பொருந் தும்; அவ்வாறின்றிச் சங்காரகருத்தா ஒருவனே என்பதற்குப் பிரமாணம் என்னை? என்பார்க்குப் பிரமாணமுகத்தால் சங்காரகருத்தா ஒருவனே எனக்கூறிச் சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றிநின்ற சங்காரத் தின்வழியல்லது சுதந்திரம் இன்றி நிற்றலால் என்னும் ஏதுவை வலியுறுத் தியவாறும்.

(பொ - ரை.) உருவும் அருவுமென்னும் இருகூற்றுச் சேதனப் பிர பஞ்சத்தொகுதியாகிய உயிர், அவ்விருகூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றல் லாத ஒப்பற்ற பரம்பொருளாலே சிருட்டிப்பட்டுத் திதிப்பட்டு அவ்வாறே அந்தப் பரம்பொருளின்கண்ணே சங்காரப்படும். ஆதலால், அச்சங்காரக் கடவுள் ஒருவனே உலகிற்கு முதற்கடவுளாம். அவ்வாருயினும் இவ்வாறு முத்தொழிற்படும் சேதனப்பிரபஞ்சமாகிய உயிர் வீடுபெற்றவிடத்துச் சுட்டுணர்வின்றிச் சிவசமமாய்நிற்குமென வேதத்தும் ஆகமத்தும் ஓதுத வின் முத்திபெற்ற உயிர் முதற்கடவுளா மெனப்பட்டு முதற்கடவுளர் பல ரென்பதற்கு இழுக்கென்னையெனின், அப்பரம்பொருள்போல் அழிவின் றி நித்தமாயுள்ள உயிர் வீடுபெற்றவிடத்தும் பலவாற்ருனும் பரம்பொருளுக் கு அடிமையாம்; ஆதலால், முதற்கடவுள் ஒன்றே என்றவாறு.

(க - ரை.) உயிர் பரம்பொருளால் முத்தொழிற்படுதலானும் முத் தொழிற்படாது முத்திபெற்றகாலத்தும் அடிமையாதலானும் அப்பரம் பொருளாகிய சங்காரக்கடவுள் ஒன்றே என்பதாம்.

நித்தமான உயிரை முத்தொழிற்படுமெனக் கூறியதன்கருத்தென்னை யெனின், தனுகரணமுதலியவற்றைப் பொருந்துதலையும் அவற்றில் நிலைத் தரித்தலையும் அவற்றினின்று மாறுதலையும் உயிர் பொருந்துதலால் முத்தொழிற்படுமெனக் கூறியவாறாம்.

முத்திபெற்ற ஆன்மாச் சிவசமமென்ற வேதாகமத்தின் கருத்தென்னை யெனின், சிவம் முத்தொழிற்படாதவாறுபோல முத்திபெற்ற ஆன்மா முத்தொழிற்படாமைபற்றியேயாமென்க. இவ்வளவேயன்றிச் சிவம் செய்யும் பஞ்சகிருத்தியங்களையும் முத்திபெற்ற ஆன்மாச்செய்யுமென்பது சிவசமமென்பதன் கருத்தன்று. இவ்வுண்மையினை வழிநூலாசிரியர் சிவஞானசித்தியார் பதினொராஞ் சூத்திரத்துப் பத்தாவது செய்யுளில் "உம்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக் குரிய னுயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக் கு முரித்தே" என அருளியவாற்றானுமறிக.

இவ்வெண்பாவில் 'ஒன்று அலா ஒன்று' என முன்னர்வந்த சொல்லும் பொருளுமே பின்னரும் வருதலால் இது "சொற்பொருட்பின்வருநிலை" யென்னும் அலங்காரமாம்.

உலகமாகிய காரியப்பிரபஞ்சஞ் சடமாகலானும், உயிராகிய சேதனப் பிரபஞ்சம் அறியாமையைச் செய்யும் மலத்தாற் கட்டுப்பட்டுச் சுட்டுணர் வுடையதாய் நிற்றலானும், உலகமும் உயிருமாகிய இவற்றுள் உலகை அசைப்பித்தற்கும் உயிருக்கு அறிவித்தற்கும் இவ்விரண்டின் வேறாய் ஒரு முதற்கடவுள் வேண்டுமென்பது பெற்றாம். பெறவே, பிரபஞ்சம் விசித் திராகாரமாய்க் காணப்படுதலின் விசித்திரமாய் நடாத்தும் முதற்கடவுள் முற்றுணர்வும், அளவிலாற்றலும், பேரருளும், சுதந்திரமு முதலிய நிரதி சய குணங்களுடையவனென்பதும் பெறப்படும். படவே, இத்தன்மைய னாகிய முதற்கடவுள் ஒருவனேயாத லமையுமாதலின் வேறு மத்தன்மை யுடைய கடவுளர் பலருண்டெனக் கொள்ளின் மிகையென்னுங் குற்றமாம். அன்றியும், இலக்கணத்துள் ஒருவாற்றானும் வேற்றுமையில்லாதவிடத்து அவ்விலக்கணத்தையுடைய இலக்கியம் ஒன்றாதலேயன்றிப் பலவாதல் செல்லாது. பலவாயின் இலக்கணத்தில் வேற்றுமையிருக்கவேண்டும். இக் கருத்துப்பற்றியே சங்கரிக்கும் இலக்கணத்தையுடைய கருத்தா ஒருவனே உலகத்திற்கு முதல்வனன்றி அவ்விலக்கணமில்லாத பலர்முதல்வராதல் செல்லாதென்பது தோன்ற, ஒன்று அலா ஒன்று என வரையறுத்தோதி னார். முற்றுணர்தல் முதலிய எண்குணங்கள் முதல்வனுக்கு இன்றியமை யாமை சிவஞானசித்தியார் ஒன்பதாஞ்சூத்திரம் பன்னிரண்டாவது செய்யுள் உரையில் விளக்கப்பட்டிருக்கின்றமையால் அவ்விடத்துக் காண்க.

நிரதிசயகுண மென்பது மாறுதலையடையாத உறுதியான அதிசய குணமாம். நிர் உறுதிப்பொருளைத் தருமென்பதனை நிர்ப்பந்தமென்பதனு

லுமறிக. அதிசயமென்பது புதிதாய்க்காணப்படுவது. சங்காரக்கடவுளி டத்து இயல்பாகவே அமைந்திருக்கும் முற்றுணர்வுமுதலிய குணங்கள் மனி தர் தேவர்முதலிய எவரிடத்தும் இல்லாமையானும் அவனிடத்துமாறுமை யானும் நிரதிசயமெனப்பட்டன.

வெண்பாவில் ஈறே முதலென்றது சங்காரமே முதலென்னும் மேற் கோளை முடித்துக்காட்டினமையின் முடிந்தது முடித்தலாம். ஈறு என்பது ஈறு செய்யுங் கடவுளைக்குறித்து நிற்றலால் ஆகுபெயர்.

வெண்பாவினிறுதியிலுள்ள அங்கு என்பதில் உம்மை தொக்குநின் றது. அவ்வும்மை விரித்து வீடு பேற்றின்கண்ணும் என உரை செய் யப்பட்டது. அவ்வும்மை பெத்தத்தின்கண்ணேயுமன்றி என்னும் பொருள் கொள்ளுமாறு பெத்தத்தையும் தழுவி நின்றமையின் இறந்ததுதழீஇய எச்ச உம்மையாம்.

முத்திபெற்றவிடத்தும் பலவாற்றானும் அடிமை என்பதில் பலவாறு வன யாவையெனின், இருள் நீங்கியவிடத்துங் கண்ணுக்குக் காணுந் தொழில் ஞாயிற்றையின்றி அமையாது; ஞாயிற்றின் ஒளி விளங்கினல்லன்றி இருள் நீங்காதாதலின் இருள் நீக்கத்தில் ஞாயிற்றின் ஒளி உண்டென்பது துணிபாகவும் இருள் நீங்கியவிடத்தும் ஞாயிற்றையின்றி யமையாது என்ற தன் கருத்தென்னையெனின், இருள்நீங்கியவிடத்து நீங்கிய அதனானே கண்ணுக்குக் காணுந்தொழில் உண்டாவதில்லை; ஒளியோடுகூடித்தானுண் டாகவேண்டும்; இக்கருத்துத்தோன்ற அவ்வாறு கூறப்பட்டது. இவ்வாறே உயிருக்கு மலம் நீங்கிய முத்திநிலையினும் இன்பநுகர்ச்சி, துணையாய் உட னின்று அறிவிக்கும் முதல்வனையின்றி உண்டாகாது. கண்ணும், படிகமும், ஆகாயமுஞ் சார்ந்ததன் வண்ணமாய்நிற்கும் இயல்புடையன; அதாவது கண் இருளோடுகூடி இருளாயும் ஒளியோடுகூடி ஒளியாயு மிருக்கும்; படிகம் பற்றப்படும் நிறங்களின் தன்மையதாயிருக்கும்; ஆகாயம் ஒவ்வொருபொருளோடுங் கலந்து அதுவதுவாயிருக்கும். இவ்வா றே ஆன்மாவும் எதனை எதனைச் சார்ந்ததோ அதன் அதன் வண்ணமாய் நிற்கும். ஆதலால் முத்திநிலையினும் முதல்வனைச்சார்ந்து முதல்வனாய் நிற் பதன்றித் தனித்துநிற்பதில்லை. அன்றியும் முதல்வன்போல ஐந்தொழிற் குங் கருத்தாவாதலின்றிச் சிவாநுபவம் ஒன்றற்கே கருத்தாவாகும். ஐந் தொழில் செய்யாது முதல்வனோடு கலந்து நிற்குங்கால் முதல்வனுக்குரிய வியாபகம்போல் சமவியாபகமாய் நிற்பினும் முதல்வனறிவைநோக்க ஆன்ம அறிவு துணைகொண்டறியுந் தாலவறிவாதலின் விளக்கொளியுடன் கலந் திருக்குங் கண்ணொளிபோல ஆன்மா வியாப்பியமாம். விளக்கொளியுங் கண்ணொளியுங் கலந்து நிற்பினும் விளக்கொளி விளங்குமிடமெல்லாம் கண்ணொளி ஒருசேரக் கலந்திருப்பதில்லை; எவ்வாறெனின், விளக்கொளி

முற்பக்கமும் பிற்பக்கமும் விளங்குங்காலத்துக் கண்ணொளி முற்பக்கத்தொளியோடு கூடுங்காற் பிற்பக்கத்தொளியோடு கூடுவதில்லை; அவ்வாறே பிற்பக்கத்துமாம். முற்பக்கத்துங் கண்ணொளி செல்லுமளவன்றி அதற்குமேற் கூடுவதில்லை; செல்லுமளவினும் ஒருபாகமேயன்றி எல்லாப் பாகத்திலுங் கூடுவதில்லை. ஆதலால் விளக்கொளி வியாபகமும் கண்ணொளி வியாப்பியமுமாம். வியாப்பியமென்பது அடங்கியிருத்தல். இவ்வாறே முத்திநிலையினும் முதல்வன் வியாபகமும் ஆன்மா வியாப்பியமுமாம். எதனாலெனின், முதல்வனிடத்துள்ள இன்பத்தை அனுபவித்து அவ்வின்பமயமாய் நிற்றலேயன்றி உயிர்களையும் இறைவன் செயல்களையும் ஆன்மா அறிவதில்லை யாதலால் என்க. "பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்" ஆதலின் ஈண்டு ஏனையவற்றை அறியாமை குற்றமின்மையு முணர்க. ஆகவே முத்திநிலையிலும் ஆன்மாவிற்கு அறிவின்விளக்கம் முதல்வனையின்றி யமையாமையும் முதல்வன் போலத் தனித்து நில்லாமையும் ஐந்தொழில் செய்யாமையும் வியாப்பியமாய் நிற்றலும் முதலாயினவே பலவாறுமென அறிக.

முத்திநிலையில் ஆன்மா சிவசமமென்னுஞ் சுருதிக்குப் பொருள் ஒருவாறு இங்கே கூறப்பட்டிருப்பினும் மலம் நீங்கி முத்தொழிற்படாமையினால் சிவசமம் என உண்மையதிகாரம் அம்-சூத்திரத்துள் விரித்துக் கூறப்படும்.

இவ்வெண்பாவினால் அநேகேசுரவாதிமதமேயன்றிச் சிவசமவாதி, சங்கிராந்தவாதி, உற்பத்திவாதி, ஆவேசவாதி மதங்களும் மறுக்கப்பட்டன. எவ்வாறெனின், ஐந்தொழில்செய்ய இயலாதென்றமையாற் சிவசமவாதி மதம் மறுக்கப்பட்டது. பலவாற்றானும் அடிமையாமென்றதனால் சங்கிராந்தவாதி மதம் மறுக்கப்பட்டது; முடிவில் ஒன்றாய்ப்போதல் என்பது சங்கிராந்தவாதிமதம். பரம்பொருள்போல் அழிவின்றி நித்தமாய ஆன்மா என்றதனால் ஆன்மாவிற்கு உற்பத்திகூறும் உற்பத்திவாதி மதம் மறுக்கப்பட்டது. அடிமையென்றதனாலேயே ஆவேசவாதிமதமும் மறுககபபட்டது; ஆவேசம் என்பது தானென்பதொன்றின்றி ஆவேசிக்கப்பட்ட பொருளாய் நிற்றல்; ஒருபேயால் ஆவேசிக்கப்பட்டவனை நீயாரென்று வினவில் அப்பேயின் பெயரைத் தன் பெயராகச் சொல்வன்; இவ்வாறே சிவனால் ஆவேசிக்கப்பட்டுச் சிவமாய் நிற்குமென்பது ஆவேசவாதிமதம்; இது அடிமையென்றதனால் மறுக்கப்பட்டவாறு அறிக. சித்தாந்தத்தில் சிவனோடு சார்ந்தவிடத்து ஆன்மா சிவமாய் நிற்குமென்று கூறுவதையே இவ்விடத்து ஆவேசவாதிமதமாய்வைத்து மறுத்ததென்னையெனின், சித்தாந்தத்தில் சிவமாய் நிற்றலென்பதற்குப் பொருள் தனக்கென ஒரு செயலின்றிச் சிவன் அருள்வழி நிற்றலேயாம். ஆவேசவாதிமதத்தில் அவ்வாறு அருள்வழி நிற்றலின்றிச் சிவன் ஆவேசித்தலால் தனக்கு எல்லாஞ் செய்தல் கூடுமென்பது

பொருளாம்; இதில் நானென்னும் போதம் நிகழ்தலின் மறுக்கப்பட்டது. சிவனோடு சமமாதலின் எல்லாஞ் செய்வேனென்பது சிவசமவாதிமதம். சிவம் ஆவேசித்தலால் எல்லாஞ் செய்வேனென்பது ஆவேசவாதிமதம்.

பதியுண்மைக்குப் பிரமாணங் கூறுதற்கெழுந்த இச்சூத்திரத்தில் ஒடுங்கிய உலகம் மீளத்தோன்றுதற்கு ஏது மலம் என்பது தோன்ற மலத்துளதாமென மலத்தின் உண்மைக்குப் பிரமாணமும் உடன்கூறினர். அம்மலத்தை இச்சூத்திரத்தில் வேறொரு அதிகரணமாகவைத் துரையாது விட்டனர்; எதனாலெனின், மலத்தைப்பற்றிய அதிகரணத்திற்குரிய ஐயப் பாடு முதலியன எல்லாம் சகசமலத்துணராதென நான்காஞ் சூத்திரத்தில் மலத்தின் இலக்கணங் கூறுமிடத்துப் பெறப்படுதலால் இவ்விடத்திற் கூறுவது மிகையாதலினாலென்க.

இவ்வதிகரணத்தில் சங்காரக்கடவுள் ஒன்றே என்பது தன்னாற் கூறப் படும் மேற்கோள். ஒன்றோ பலவோ என்பது ஐயப்பாடு, பல வென்பது பிறர்கூறும் பக்கம். ஒன்றே என்பதற்குக்காட்டிய ஏது மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபு. உதாரணம் இயைபு. இவ்வாறு அதிகரணப்பொருள் காண்க.

சிற்றுரை.

இச்சூத்திரத்ததிகரணங்களாற் போந்ததொகைப் பொருளா வது:—தோற்றக்கேடுகளதுண்மை காட்சிமுதலிய அளவைகளான் அறியவாராமையிற் பிரபஞ்சம் நித்தப்பொருளேயாம். அன்றித் தோன்றியழியுமெனக் கொள்ளினும், இல்பொருள் தத்தஞ்சார் பிற்றோன்றிநின்றழிதல் இயற்கையெனவமையும்; செயற்கை யென்றற்கு ஓரேதுவின்மையின். மற்றுள்பொருளாயின், அதுவே யமையும் இறைவன்வேண்டா; இரண்டுள்பொருள் கோடல்மிகை யாகலின். வேண்டுமாயினும், மாயோன்முதலிய கடவுளரில் ஒரு வனே யமையும், அவரையொழித்துச் சங்காரகருத்தா முதற் கடவுளென்றற்குப் பிரமாண மென்னை? பிரமாணமுண்டாயினும், அதிவிசித்திரமாய பிரபஞ்சம் ஒருவனாற்செய்தல் கூடாமையின், மற்றும் அவ்வியல்பினராய முதற்கடவுளர் உளராதல்வேண்டு மென உலகாயதர் மீமாஞ்சகர் புத்தர் சமணர் சாங்கியர் பாஞ்ச ராத்திரிகள் அநேகேசுரவாதிகள் மதம்பற்றிப் பூருவபக்கநிகழ்ந்த வழி அவரை மறுத்துச் சித்தாந்தஞ்செய்து முதற்கடவுளதுண்மை பொதுவகையானுஞ் சிறப்புவகையானுங் கருதலளவையின் வைத் துணர்த்தியவாறென உணர்க. இவ்வாறு சூத்திரந்தோறும் உண ர்ந்துரைத்துக்கொள்க.

விளக்கம்.

இம்முதற் சூத்திரத்தானும் அதிகரணங்களானுங் கூறிய தொகைப பொருள்:—உன்பொருளாகிய உலகந்தோன்றிநின்றொடுங்குந்தன்மையுடைமையால் அவ்வாறு முத்தொழில் செய்யுங்கருத்தா ஒன்றுண்டு; அக்கருத்தா சங்காரகாரணன்; அச்சங்காரகருத்தாவில் உலகம் ஒடுங்கித் தோன்றலால் அவனே முதற்கடவுள் எனச் சூத்திரத்தாற் கூறவே, உலகத்தின் தோற்றக்கேடுகள் பிரத்தியட்சமுதலிய பிரமாணங்களால் அறியவாராமையால் உலகம் நித்தப்பொருளேயாமென உலகாயதரும் மீமாஞ்சகருங் கூற, முதலதிகரணத்தால் அவரை மறுத்து உலகம் முத்தொழிலுடையதெனச் சாதிக்கப்பட்டது. படவே, உலகந் தோன்றி அழியுமெனக்கொள்ளினும் உள்பொருளாகமாட்டாது; இல்பொருளாய்த் தத்தஞ் சார்பிற்றோன்றி யழியும்; அவ்வாறு தோன்றியழிதல் இயற்கையேயன்றிச் செயற்கை யென்பதற்கு ஓரேதுவு மின்று; ஆதலின் கருத்தா வுண்டென்றல் பொருந்தாதெனப் புத்தரும், சமணருங் கூற, இரண்டாமதிகரணத்துளடங்கிய முதலதிகரணத்தால் அவரை மறுத்து உலகம் உள்பொருளேயெனச் சாதிக்கப்பட்டது. படவே, உள்பொருளாயினும் முதற்காரணமான மாயையில் ஒடுங்கித் தோன்றுமாதலின் இதற்கோரிறைவன் வேண்டாம்; வேண்டின் மாயையொன்று, இறைவனொன்று என இரண்டு உள்பொருள் உண்டென்றாகி மிகை யென்னுங் குற்றமாமெனச் சாங்கியர்கூற, இரண்டாமதிகரணத்துளடங்கிய இரண்டாமதிகரணத்தால் அவரை மறுத்து மாயைசடமாதலின் தானேதோன்றி ஒடுங்காது, கடவுள் வேண்டுமெனச் சாதிக்கப்பட்டது. படவே, கடவுள் உண்டெனக்கொள்ளினும் அக்கடவுள் விட்டுணு முதலியோரேயாகும், அன்றிச் சங்காரக்கடவுளே முதற்கடவுளென்பதற்குப் பிரமாணம் என்னையெனப் பாஞ்சராத்திரிகள்கூற, இரண்டாமதிகரணத்துளடங்கிய மூன்றாமதிகரணத்தால் அவரை மறுத்துப் பிரமாணங் காட்டிச் சங்காரக்கடவுளே முதற்கடவுளெனச் சாதிக்கப்பட்டது. படவே, அதிவிசித்திரமான உலகத்தை ஒருவன் செய்தல் கூடாமையின் சங்கரிக்குந்தன்மையுடைய முதற்கடவுளர் பலர் உளராதல்வேண்டுமென அநேகேசுரவாதிகள்கூற, சூத்திரத்து மூன்றாமதிகரணத்தால் அவரை மறுத்துச் சங்காரக்கடவுள் ஒருவனேயெனச் சாதித்தவாறும். இவ்வாறு சாதி[illegible]னெல்லாம் அனுமானப்பிரமாணத்தினாலேயாம். இவ்வாறு சூத்திர[illegible]தானும் தொகைப்பொருள் உரைத்துக்கொள்ளுமாறு உரையாசிரியர் ஆணை செய்தனர் என்க.

மூன்றாம் அதிகரணம் முற்றிற்று.

முதற்சூத்திரம் முற்றிற்று.

இரண்டாஞ்சூத்திரம்.

பாசவுண்மை.

முதற்சூத்திரத்தால் உலகத்தைக்கொண்டு கடவுள் உண்டெனக் கூறி அவ்வுலகத்தோற்றத்திற்கு முதற்காரணமாகிய மாயையும் துணைக்காரண மாகிய சத்திவழியாய் வருங் கன்மமும் அனுமானப் பிரமாணத்தால் உண் டென இரண்டாஞ்சூத்திரத்தாற் கூறுகின்றார்.

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே.

கருத்துரை.

எ-து சூ-ம் எ-னின், புனருற்பவம் வருமாறுணர்த்துதனுதலிற்று.

சிற்றுரை.

எ—து க—ரை எ—னின், சூத்திரக்கருத்துணர்த்துத னுதலிற்று.

(இ—ள்.) உலகம் ஒடுங்கியினின்றும் மீளவுளதாமாற்றை வகுத்துணர்த்துமுகத்தானே துணைக்காரண முதலியன இல்வழி இறைவன் உலகிற்கு நிமித்தகாரணனாதல் சாலுமாறு யாங்ஙனம் என்னுங் கடாவை யாசங்கித்து அவற்றதுண்மைக்குப் பிரமாண முணர்த்துதனுதலிற்று இச்சூத்திரம் எ—று.

சூத்திரவினையும் இதனானே விளங்கும்.

ஒடுங்கியுளதாமென்றவழி ஒடுங்கியினின்றும் மீளவுளதாவது எவ்வாறென்று அவாய்நிற்றலின், அவ்வவாய்நிலைபற்றிப் புன ருற்பவமே ஈண்டுக் கூறப்பட்டது.

விளக்கம்.

இக்கருத்துரை என்னசொல்லிற்றோவெனின், சூத்திரக்கருத்து இது வென்றசொல்லிற்று.

(இக்கருத்துரையின்பொருள்.) ஒடுங்கிய உலகம் சங்காரகாரணனாகிய முதற்கடவுளினின்றும் மீளத் தோன்றும் முறைமையினை இச்சூத்திரத் தால் வகுத்துணர்த்தி அவ்வாறு உணர்த்தும்முறையில் உலகந்தோன்று தற்கு முதற்காரணமாகிய மாயையுந் துணைக்காரணமாகிய சத்தியால் வருங் கன்மமும் இல்லாதவிடத்து இறைவன் உலகிற்கு நிமித்தகாரணனா

தல் எவ்வாறு பொருந்தும் என்னும் வினவை ஆசங்கித்துக்கொண்டு அதற்கு விடையாக முதற்காரணம் துணைக்காரணங்களினது உண்மைக்குப் பிரமாணங் கூறுதல் இச்சூத்திரத்தின் கருத்து என்க.

கன்மத்தைச் சத்தியால்வருந் துணைக்காரணமென்றது என்னையெனின், கன்மஞ் சடமாதலால் சத்தியாலன்றித் தானே தொழிற்படமாட்டாது; ஆதலால், சத்தியால்வருந் துணைக்காரண மெனப்பட்டது. படவே, சத்தி ஒரு துணைக்காரணமும் அதனால்வரும் கன்மம் மற்றொரு துணைக் காரணமுமாம். முதல்துணைநிமித்தம் என்னும் காரணமூன்றனுள் முதலும் நிமித்தமும் ஒவ்வொன்றாயும், துணை பலவாயுமிருக்கும். உதாரணம்:—மண் முதற்காரணம்; அது ஒன்றே. குயவன் நிமித்தகாரணன்; அவனும் ஒருவனே. தண்டசக்கரமுதலியன துணைக்காரணங்கள்; அவைபலவாதலறிக. இவ்வாறே உலகத்திற்கு மாயை முதற்காரணம்; திருவருட்சத்தியும் கன்மமுந் துணைக்காரணங்கள்; இறைவன் நிமித்தகாரணமாம். நிமித்தமென்றதன் பொருளென்னையெனின், யாதானும் ஒன்றன்பொருட்டு என்பதேயாம். குயவன் குடத்தைத் தன்பொருட்டுச் செய்தானோ பிறர்பொருட்டு செய்தானோ என ஆராயுமிடத்துப் பிறர்பொருட்டுச் செய்தானென்பது விளங்கும். குடத்தினால்வரும் பொருள்மட்டுந் தனக்கு உபயோகமாகுமன்றிக் குடம் தனக்கு உபயோகமாதலில்லை. அவ்வாறே உலகத்தை இறைவன் தன்பொருட்டுத் தோற்றுவித்தானோ உயிர்களின்பொருட்டுத் தோற்றுவித்தானோ என ஆராயுமிடத்துத் தன்பொருட்டுத் தோற்றுவித்தான் என்று கூறில் பலவேறுவகையாய்த் தோற்றுவித்தற்குரிய கன்மமுந் தானே செய்தானெனப்பட்டு விகாரமுடையவனாவன்; இறைவன் நிர்விகாரியாதலால் அவன் வினைசெய்தலில்லை; அதனால் உலகத்தை அவன் தன்பொருட்டுத் தோற்றுவித்தானென்றல் பொருந்தாது; ஆகவே, உயிர்களின்பொருட்டுத் தோற்றுவித்தானென்பது பெறப்படும்.

முதற்சூத்திரத்தில் உலகம் சங்காரகாரணனிடத்தில்நின்று தோன்றுதலால் உலகத்திற்குச் சங்காரகாரணனே முதற்கடவுளென்றுகூறி இச்சூத்திரத்தில் அவ்வுலகம் சங்காரகாரணனிடத்தில்நின்றுந் தோன்றுமுறையைக் கூறுதலினால் சூத்திர இயைபு பெறப்பட்டது. அன்றியும் முதற்சூத்திரத்தில் நிமித்தகாரணத்தின் உண்மைகூறி இச்சூத்திரத்தில் முதற்காரணம் துணைக்காரணங்களின் உண்மைகூறுதலினாலும் சூத்திர இயைபு பெறப்பட்டவாறுகாண்க.

முதற்சூத்திரத்தில் ஒடுங்கியுளதாம் என்றவிடத்து ஒடுங்கியாகிய சங்காரகாரணனில்நின்றும் மீள உளதாதல் எவ்வாறு என்னும் அவா ஒடுங்கியுளதாமென்னும் அச்சொல்லில் நிலைத்திருக்கின்றது. அந்த அவாய் நிலை பற்றி மீள உண்டாவதாகிய புதுச்சிருட்டியே இச்சூத்திரத்தில் கூறப்பட்டது.

சிற்றுரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. (மேலைச் சூத்திரத்து எடுத்துக்கொண்ட சங்காரகாரணனாகிய முதல்வன் கலப்பினால் உடலின் உயிர்போல்) அவ்வுயிர்களேயாய், (பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல் அவற்றின்) வேறுமாய், (உயிர்க்கு உயிராதற் றன்மையாற் கண்ணொளியின் ஆன்மபோதம்போல் உடனுமாய் நின்று,) ஆணையென்னும் பரியாயப் பெயருடைய தனது சிற்சத்தியான் (வரும்) இருவினைகளான் (அவை) இறத்தல் பிறத்தல்களைப் புரியும்வண்ணம் (அவ்வாணையிற்) பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பன் எ—று.

அவையே தானேயா யென்பதனை இரட்டுறமொழிந்து கொண்டுரைக்க. இக்கருத்தேபற்றி 'உலகெலா மாகி வேறுயுடனு மாய்' என்றார் வழிநூலாசிரியரும்.

மேலைச் சூத்திரத்தின் 'அந்தமாதி' என்புழி விகாரத்தாற் றொக்க பிரிநிலையேகாரத்தான் விலக்கப்பட்டுநின்றசேதனப்பிரபஞ்சத்தை ஈண்டு அவையெனச் சுட்டிக்கூறினார்.

'ஒடுங்கியுளதாம்' என்றதற்கேற்ப ஈண்டும் போக்கினை முற் கூறினார்.

புரிதல் எப்பொழுதும் மேற்கோடல்.

ஆணையினென்பது சிங்கநோக்காய் இருவினையென்பதனோடும் நீக்கமின்றி யென்பதனோடும் இயைந்து பொருடந்து நின்றது; ஆண்டு இன்னுருபு முன்னர் ஏதுப்பொருட்கண்ணும், பின்னர் நீக்கப் பொருட்கண்ணுமாய் நின்றது. இன்னென்பது சாரியையெனக்கொண்டு ஈரிடத்தும் ஏற்குமுருபுகள் விரித்துரைத்தலு மொன்று.

அன்றே அசை; அநாதியே இவ்வாறு நிற்குமெனினு மமையும். ஆய்ப் புரிய நிற்கு மெனவே, அச்செயல்களெல்லாம் முதல்வன் கரணத்தானன்றிச் சங்கற்பமாத்திரத்தாற் செய்வனென்பது பெறப்பட்டது.

இதனானே மேல் 'அந்தம்' என்று உத்தேசமாயெடுத்துக் கொண்ட முதல்வனுக்கு இலக்கணங் கூறியவாறுமாயிற்று, இது தடத்தலக்கணமெனப்படும் பொதுவியல்பு.

ஆணையி னிருவினையினெனவே, தனது சிற்சத்தி துணைக் காரணம், இருவினையும் அதன்வழித்தாய துணைக்காரணம், இரு வினையினெனவே அதற்குப் பற்றுக்கோடுண்டென்பதூஉம், பெற்று மாகலின், அது முதற்காரணமென்பதூஉம், இருவினையிற் போக்கு வரவு புரியவெனவே ஒடுங்கியின் மீளவுளதாங்கால் இருவினைகட் கேற்பப் பலவேறு வகைப்பட்டு விரியுமென்பதூஉம் போந்தவாறு காண்க.

விளக்கம்.

(இச்சூத்திரத்தின் பொழிப்புரை.) முதற்சூத்திரத்தில் எடுத்துக் கொண்ட சங்காரகாரணனாகிய முதல்வன் உயிர்களின்பொருட்டு உலகத் தைத் தோற்றுவிக்குங்கால் அவ்வுயிர்களோடு ஒன்றாய்நிற்பனோ? வேறாய் நிற்பனோ? உடனாய்நிற்பனோ? எனின், உடல் இருத்தற்கு உடலினிடத்து உயிர் கலந்துநின்று அவ்வுடலேயாய் நிற்பதுபோல, உயிர்கள் நிலைத்தற்கு உயிர்களிடத்து இறைவன் கலந்துநிற்றலின் அவ்வுயிர்களேயாய், அதாவது ஒன்றாய்க், கண்ணுக்குக் காணுந்தொழில் நிகழ்தற்குத் துணையாய்நிற்கும் சூரியன் கண்ணினின்றும் வேறாதல்போல் உயிர்கட்கு அறிதற்றொழில் நிகழ்தற்குத்துணையாய்நின்று அறிவித்தலின் இறைவன் அவ்வுயிர்களின் வேறுமாய், கண்ணொளி பொருளைக் காணுதற்கு ஆன்மபோதம் உட னின்று கண்ணொளியோடுகூடப் பொருளிற் செல்லுமாறுபோல உயிர்கள் இன்பதுன்பங்களை அனுபவிப்பதற்கு அவ்வின்பதுன்பங்கட்குமுன்னிலையா கிய விடயங்களில் உயிரோடுகூட இறைவன் செல்லுதலின் உயிர்களோடு உடனுமாய், இவ்வாறு உயிர்களோடு இறைவன் ஒன்றாயும் வேறாயும் உட னாயும்நின்று ஆணையென்னுந் தனது சிற்சத்தியினாற் செலுத்தப்பட்டு வரும் இருவினைகளால் அவ்வுயிர்கள் இறத்தல் பிறத்தல்களை மேற்கொள் ளும்வண்ணம், அவ்வாணையாகிய சிற்சத்தியில் பிரிப்பின்றிச் சமவேதமா கிய திரோதான சத்தி வடிவாய் நிற்பன் என்றவாறு.

சமவேதமாவது சமவாயசம்பந்தத்தானிருப்பது. சமவாயமாவது ஒற் றுமைச்சம்பந்தம். உதாரணம்:—அக்கினிக்கும் சூட்டிற்குமுள்ள சம்பந்தம் சமவாயம். ஆயினும், அக்கினியிற் சமவாயசம்பந்தத்தாற் சூடு இருக்குமே யன்றிச் சூட்டிற் சமவாய சம்பந்தத்தால் அக்கினியிராது. குணத்திற்குக் குணி ஆதாரமாகுமன்றிக் குணிக்குக் குணம் ஆதாரமாகாது. ஆதலால் அக் கினியிற் சூடு சமவேதமெனப்படும். அவ்வாறே, இறைவனுக்குஞ் சிற்சத் திக்குமுள்ளசம்பந்தம் சமவாயம். ஆயினும், இறைவனிற் சமவாயசம்பந் தத்தாற் சிற்சத்தியிருக்குமன்றிச் சிற்சத்தியிற் சமவாயசம்பந்தத்தால் இறை வனிரான். ஆதலால் இறைவனிற் சிற்சத்தி சமவேதமெனப்படும். இவ் வாறாகவும் ஆணையில் நீக்கமின்றிநிற்கும் எனச் சூத்திரத்திற்கூறிய கருத்

தென்னையெனின், இறைவன் ஒன்றினுந்தோய்வின்றிச் சொயம்பிரகாசமாய்நிற்குந் தன்னுண்மையிற் சிவமெனவும், உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்குந்தன்மையிற் சத்தியெனவும், ஐந்தொழில் செய்யுந் தன்மையிற் பதியெனவும் பெயர்பெற்று நிற்பன். இவ்விடத்துச் சத்தியென்றது திரோதானசத்தியை. இத்திரோதானசத்தியும் சிற்சத்தியின் கூறாதலின் இறைவனிற்சமவாய சம்பந்தத்தானிருக்கும் சமவேதமாம். ஆகவே உயிர்களோடு இறைவன் கலந்து நிற்குமிலையில் தன்னோடு சமவாயசம்பந்தத்தாலிருக்கும் சமவேதமாகிய திரோதானசத்திவடிவாய்ச் சிற்சத்தியிற் பிரிப்பின்றி நிற்பனாதலால் அவ்வாறுகூறினாரென்க. இவ்வுண்மையையறிந்த உரையாசிரியர் ஆணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பன் என உரைசெய்தனர். உயிர்களின்பொருட்டு இறைவன் திரோதான சத்திவடிவாகச் சிற்சத்தியிற் பிரிப்பின்றி வெளிப்படாது நிற்பன் என்னும் இவ்வுண்மையை யாவரும் உணர்ந்துகொள்ளுதற்பொருட்டே ஆலயங்களில் அம்பிகை வடிவமாகத் திருமேனிகொண்டருளியிருக்கின்றனர்.

இறைவன் உயிர்களோடு கலந்துநிற்குந் தன்மையிற் சத்தியெனப்பெயர் பெறுவனென்பதைச் சிவஞானசித்தியார் உ - வது சூ - ம் க - வது செய்யுளில் "உலகெலா மாகி வேறா யுடனுமா யொளியாய்" என வழிநூலாசிரியர் அருளியவாற்றானும், அதற்கு உரையாசிரியர் அருளியவாற்றானும் அறிக. ஒளியென்பது சத்தி.

சூத்திரத்தில் அவையேதானேயாய் என்பதனை இரட்டுறமொழிந்து கொண்டு அவையேயாய், தானேயாய், அவையேதானேயாய் என உரைக்க. இவற்றுள் அவையேயாய் என்பது உயிர்களோடு இறைவன் ஒன்றாய் நிற்றலையும், தானேயாய் என்பது இறைவன் உயிர்களின் வேறாய்நிற்றலையும், அவையே தானேயாய் என்பது உயிர்களோடு இறைவன் உடனாய் நிற்றலையும், உணர்த்தியவாறறிக. இக்கருத்தேபற்றிவழிநூலாசிரியர் சிவஞானசித்தியார் இரண்டாஞ் சூத்திரத்து முதற்செய்யுளில் 'உலகெலா மாகி வேறா யுடனுமாய்' என்றருளிச் செய்தனர். 'ஈறாய்முதலொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய், மாறாமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய், யாறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய், வேறாயுட னானானிடம் வீழிம் மிழலையே." என அருளிய திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரமும் இதனை வலியுறுத்துதல் காண்க.

முதற்சூத்திரத்தில் 'அந்தமாதி' என்றவிடத்துப் பிரிநிலை யேகாரம் விகாரத்தாற் றொக்குநின்றது. அந்த ஏகாரத்தை விரித்துச் சங்காரமே முதல் என்று நூலாசிரியர் மேற்கோள் செய்தனர். உரையாசிரியரும் கடவுளே முதல் எனக்கூறினர். அப்பிரிநிலை ஏகாரத்தால் முதல் அன்று எனப் பிரிக்கப்பட்டு நின்றது உயிராகிய சேதனப்பிரபஞ்சமேயாம்; அந்தச் சேதனப்பிரபஞ்சத்தை இச்சூத்திரத்தில் அவை எனச் சுட்டிக்கூறினார்; உயிர்கள் பலவாதலின் அவையெனப் பன்மையாற் சுட்டினர்.

அச்சூத்திரத்தில் உளதாய் ஒடுங்குமெனக் கூறுது ஒடுங்கி உளதாமெனக் கூறினர்; உளதாய் ஒடுங்குமெனக் கூறின் அனுதிசிருட்டியைக் கூறியதாகும்; புதுச் சிருட்டியே கூறப்படும் என்பதற்கு ஒடுங்கி என்பதை முன்னரும் உளதாம் என்பதைப் பின்னரும் வைத்தார். அதற்கேற்ப இச்சூத்திரத்தும் போக்கு வரவு எனப் போக்கினை முன்னரும் வரவினைப் பின்னருமாகக் கூறினர்.

சூத்திரத்தில் போக்கு வரவு புரிய என்பதிலுள்ள புரிய என்பது வினையெச்சம். அந்த எச்சம் நிற்கும் என்னும் முற்றுவினை கொண்டு முடிந்தது. புரிதல் என்பதன்பொருள் எப்பொழுதும் மேற்கொள்ளுதலாம்.

புரிய என்பதன் பின்னுள்ள ஆணையின் என்பது முன்னும் பின்னும் பார்க்கும் சிங்கநோக்குப்போல் நின்று முன்னுள்ள இருவினையிற் போக்கு வரவு புரிய என்பதனேடும் பின்னுள்ள நீக்கமின்றி நிற்குமன்றே என்பதனேடும் பொருந்தி ஆணையின் இருவினையிற் போக்குவரவுபுரிய ஆணையின் நீக்கமின்றி நிற்குமன்றே எனப்பொருள்தந்து நின்றது.

ஆணை அவ்வாறு நிற்கும் முறையில் ஆணையின் என்றதிலுள்ள இன்னுருபு இருவினையென்பதனேடு கூடுங்கால் ஏதுப்பொருளை உணர்த்தும் ஆல் உருபாகவும், நீக்கமின்றியென்பதனேடு கூடுங்கால் நீக்கப்பொருளை உணர்த்தும் இன்னுருபாகவும் நின்றது. ஆதலால் ஆணையால் வரும் இருவினையென்றும் ஆணையின் நீக்கமின்றியென்றும் உரைசெய்யப்பட்டது. இவ்வாறன்றி அந்த இன் என்பதைச் சாரியையாகக்கொண்டு பொருள் கூறுதவிடுத்து ஆணையென்பது இருவினையோடு கூடுங்கால் ஆல் உருபையும், நீக்கமின்றி யென்பதனேடுகூடுங்கால் இன்னுருபையும் விரித்துப் பொருள்கூறுதலும் ஒருமுறையாம்.

சூத்திரத்து இறுதியிலுள்ள நிற்கும் அன்றே என்பதில் அன்றே என்பதை அசையாகக்கொண்டு பொருள்கூறுது விடுத்தனர். இவ்வாறன்றி நிற்கும் அன்றே என்பதற்கு அனுதியே உயிர்களோடு இறைவன் இவ்வாறு நிற்பன் என்றுகூறினும் பொருந்தும்.

அவையே தானேயாய்ப் போக்கு வரவு புரிய நீக்கமின்றி நிற்குமெனக் கூறியதனுலேயே போக்கு வரவு புரிதலாகிய அச்செயல்களெல்லாம் முதல்வன் கரணத்தானன்றிச் சங்கற்பமாத்திரத்தாற் செய்வனென்பது பெறப்பட்டது. எதனுலெனின், கரணத்தாற் செய்வதாயின் செய்யப்படுகின்ற பொருளின் வேருகவும் அப்பொருளைக்கொள்வோரின் வேருகவும் நின்று செய்யவேண்டும்; இதனைக் குடத்தினும் குடத்தினைக் கொள்வோரினும் வேருகநின்று குடத்தைச்செய்யுங் குலாலனில்வைத்து அறிக. இறைவன் செய்ப்படுபொருளாகிய போக்குவரவோடும் அப்போக்குவரவைக்கொள்ளும்

உயிரோடும் பிரிப்பின்றி நிற்றலால் கரணத்தாற் செய்யவேண்டாதாயிற்று; உடலோடு பிரிப்பின்றி நிற்கும் உயிர் உடலின் வேறான பிறிதொன்றை அசைப்பதற்கு உடலாகிய கரணம்வேண்டும்; உடலை அசைப்பதற்குக் கரணமின்றிச் சங்கற்பமாத்திரம் போதும்; அதுபோல, உயிர்களோடு பிரிப் பின்றிநிற்கும் இறைவனுக்கு அவ்வுயிர்களுக்கு வேண்டுவன செய்தற்குச் சங்கற்பமாத்திரமே போதுமென்க. இக்கருத்தேபற்றி "உலகமே யுருவ மாக யோனிக ளுறுப்ப தாக, இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக, வலகிலா வுயிர்ப்பு லன்கட் கறிவினை யாக்கி யைந்து, நலமிகு தொ ழில்க ளோடு நாடக நடிப்ப னுதன்." என்றார் வழிநூலாசிரியரும். (சிவ ஞானசித்தியார் உ - ம். சூ - ம். செ - எ.)

இச்சூத்திரத்தால் புதச்சிருட்டிமுறையும் பாசவுண்மையுங் கூறிய தோடு மேலைச்சூத்திரத்தில் அந்தமென்று உத்தேசமாய் எடுத்துக்கொண்ட முதல்வனுக்கு இலக்கணங்கூறியவாறுமாயிற்று. ஒருபொருளைச்சொல்வ தற்கு உத்தேசம், இலக்கணம், பரீக்ஷை என்னும் மூன்றும் வேண்டப்படும். அவற்றுள் உத்தேசமாவது சொல்லப்படும் பொருளைப் பெயர் மாத்திரை யால் எடுத்துரைத்தல்; இலக்கணம் அப்பொருளின் சிறப்பியல்பை எடுத் துரைத்தல்; பரீக்ஷை அவ்வியல்பு அப்பொருளுக்குண்டோ இல்லையோ வென ஆராய்தல்; உத்தேசத்திற்குச் சொல்லுவோன் இச்சையே காரணம். இச்சையும் சம்பந்தம்பற்றிநிகழும். மேலைச்சூத்திரத்தில் இறைவன் முதல் என்று கூறுதற்கு அந்தம் ஆதி என்றுகூறினர்; இறைவனைக் குறிக்கும் சொற்கள் பல இருப்பவும் அந்தமென்று கூறுவானேன் எனின், ஒடுக்கிவை த்திருக்கும் சம்பந்தம்பற்றி உத்தேசமாய் எடுத்துக்கொள்ளப்பட்டதென்க. அவ்வாறு அந்தமென்று கூறிய இறைவனுக்கு உயிர்களுடன் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்றலும், அவ்வுயிர்கள் போக்குவரவுபுரியச் சத்தியு டன் பிரிப்பின்றிநிற்றலும் இலக்கணமாயிற்று. இவ்விலக்கணம் தடத்த லக்கணமெனப்படும் பொதுவியல்பு. இவ்வியல்புடைய நிலையில் இறைவன் பஞ்சகிருத்திய கர்த்தாவாய் விளங்கும் பதி எனப்படுவன். சொரூபலக்கண மெனப்படுஞ் சிறப்பியல்பு முன்னர் ஆறாஞ்சூத்திரத்திற் கூறப்படும். அவ் வியல்புடைய நிலையிற்றான் சிவம் எனப்படுவன். இறைவனுக்குச் சிறப் பியல்பாவது சச்சிதானந்தமாய் நிற்றல்.

சூத்திரத்தில் ஆணையின் இருவினையின் போக்குவரவுபுரிய என்று கூறியதனால் ஆணையாகிய தனது சிற்சத்தி ஒரு துணைக்காரணம்; அச்சத்தி வழியாய்த் தொழிற்படும் இருவினை மற்றொரு துணைக்காரணம் என்பதூஉம், இருவினையின் என்றதனால் அவ்வினையின் தூலத்தன்மை செய்தபொழுதே கெட்டுப்போதலின் சூக்குமத்தன்மை இருத்தற்குப் பற்றுக்கோடாக ஒன் றிருக்கவேண்டும், அதுவே முதற்காரணமாகிய மாயை என்பதூஉம் விளங் கும். இவ்வாறு முதற்காரணமாகிய மாயையும், துணைக்காரணமாகிய சத்

யும், இருவினையும் உளவென இச்சூத்திரத்தாற் பெறப்பட்டவாறு அறிக. ஆணவமலத்துண்மை மேலைச்சூத்திரத்தில் உலகம் மீளத்தோற்றுதற்குக் காரணங்கூறு மியைபுபற்றிப்பெறப்பட்டது. அச்சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்து 'இலயித்த' என்ற வெண்பாவில் 'இலயித்தது' எனச் சற்காரியவாதங் கூறியதனுல் மாயை உண்மையும் பெறப்பட்டிருக்க, இவ்விடத்தும் வேறு கூறவானேன் எனின், மேல் ஒடுங்கியிருக்கும் அவத்தைபற்றிக் கூறப்பட்டது; இவ்விடத்தில் வினையிருத்தற்கும் வினையின்பயனுகப் போக்குவரவுபுரியத் தனுகரணபுவனபோகங்கள் தோற்றுதற்கும் மாயை வேண்டப்படுமென அநுமானம்பற்றிக் கூறப்பட்டதென்க. இருவினையிற் போக்குவரவுபுரிய என்றதனுல், சங்காரகாரணனிடத்தொடுங்கிய உலகம் மீளத்தோன்றுங்கால் இருவினைகளுக்கேற்பப் பலவேறு வகைப்பட்டு விரியுமென்பதூஉம் விளங்கியவாறுகாண்க.

சிற்றுரை.

இதனுள் அவையே தானேயாய் என்பதோரதிகரணம்; ஆணையினிருவினையின் என்பதோரதிகரணம்; போக்குவரவுபுரிய என்பதோரதிகரணம்; ஆணையினீக்கமின்றி நிற்குமன்றே என்பதோரதிகரணம், ஆக நாற்கூற்றது இச்சூத்திரமெனக்கொள்க.

விளக்கம்.

வெளிப்படை.

முதலதிகரணம்.

இறைவன் உயிர்களோடு பிரிப்பின்றி அத்துவிதமாய்
நிற்பன் எனக்கூறும்
மேற்கோள்.

ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்றானேயாய் நிற்கும் என்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், மேன் முதற்கடவுளல்லவென விலக்கப்பட்டுநின்ற சேதனப்பிரபஞ்சமும் முதல்வனும் பொன்னும் பணியும்போல் அபேதமோ? இருளும் வெளியும்போற் பேதமோ? சொல்லும்பொருளும்போற் பேதாபேதமோ? என்னுமை

மைப்பாட்டின்கண் அம்மூன்றனுள் ஒரோவொன்றேபற்றி அவ்வம் மதத்தார் கூறும் கட்டாவையாசங்கித்துச் சூத்திரத்தின் முதற் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ-ள். வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ-ள்.) ஈண்டு—இவ்வதிகரண நான்கனுள்வைத்து இம் முதலதிகரணத்துள்,—முதல்வன்—கடவுள்,—இவ்வான்மாக்கள் பலவுமாய்—கலப்பினுல் இவ்வுயிர்களேயாய்,—தானேயாய்—பொருட்டன்மையால் அவற்றின் வேறுமாய்,—இவ்வான்மாக்கள் பலவும் தானேயாய்—உடனாய் நிற்றலின் இவ்வுயிர்கள் பலவுந்தானேயாய்,—நிற்குமென்றது—நிற்பன் எ—று.

ஈண்டும் இரட்டுறமொழிந்து கொள்க.

இதனானே, ஒருவிடயத்தைக் காணுங்கால் ஆன்மபோதம் கண்ணொளியெனத் தானென வேறின்றி உடனாய்நின்று காணு மாறுபோல, முதல்வன் புனருற்பவஞ் செய்யுங்கால் உயிர்களோடு உடனாய்நின்று செய்வனென்பதூஉம் பெறப்பட்டது.

விளக்கம்.

இது சூத்திரத்திலுள்ள அவையே தானேயா யென்பதனைப் பதச் சேதஞ்செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்னசொல்லிற்றோவெனின், முதற்சூத்திரத் தில் அந்தமே என்றதிலுள்ள பிரிநிலை ஏகாரத்தால் விலக்கப்பட்டு முதற் கடவுளல்லவெனநின்ற சேதனப்பிரபஞ்சமாகிய உயிரும் முதல்வனும், பொன்னும் ஆபரணமும்போல் அபேதமோ? இருளும் வெளியும்போற் பேதமோ? சொல்லும் பொருளும்போற் பேதாபேதமோ? என்பன ஐயப் பாடு. இவ்வையப்பாட்டின்கண் அபேதமே யென்பதும், பேதமேயென்ப தும், பேதாபேதமே யென்பதும் பிறர்கூறும்பக்கம். அபேதங்கூறுவோர் ஏகான்மவாதிகள்; பேதங்கூறுவோர் மாத்துவர்; பேதாபேதங்கூறுவோர் பாஞ்சராத்திரிகள். இவ்வாறு ஒவ்வொரு சார்புபற்றி ஒவ்வொன்றேகொண்டு வாதிப்பார் கொள்கையை ஆசிரியர் தாமே ஆசங்கித்துக்கொண்டு அக் கொள்கையை மறுக்குமுறையில் சூத்திரத்தின் முதற்கூற்றைப் பதச் சேதஞ்செய்து உயிர்களோடு, அபேதம் பேதம் பேதாபேதம் என்னும் மூன்றுமாய் இறைவன் நிற்பனெனக் கூறியவாறும்.

(இம்மேற்கோளின் பொருள்.) இவ்வதிகரணம் நான்கனுள்ளும் இம் முதலதிகரணத்துள் இறைவன் உயிர்களோடு கலந்துநிற்குந்தன்மையினுல்

இவ்வுயிர்களேயாய், பொருளின்தன்மையால் இவ்வுயிர்களின் வேறுமாய், உயிர்களோடு உடனாய்நிற்குந்தன்மையால் இவ்வுயிர்கள் பலவுந் தானேயாய் நிற்பன் எ-று.

இவ்வதிகரணத்தையும் இரட்டுறமொழிந்துகொண்டு உரைத்து இவ்வான்மாக்கள் பலவுமாய் என்றும், தானேயாய் என்றும், ஆன்மாக்கள் பலவுந் தானேயாயென்றும் உரைசெய்யப்பட்டது.

இறைவன் இவ்வாறு மூன்றுவிதமாய் நிற்றல் எதற்காகவெனின், உயிர்களுக்குவேண்டுவன நிலைத்தல், அறிதல், செல்லுதல் என்னும் மூன்றுமேயாம். ஏனையயாவும் இம்மூன்றனுள் அடங்கும். அவற்றுள், ஒன்றாய் நிற்றலால் நிலைக்கவும், வேறாய்நின்று அறிவித்தலால் அறியவும், உடனாய் நின்று செலுத்துதலால் செல்லவும் செய்யவேண்டுதலின் இம்மூவகை உபகாரமும் உயிர்கட்குச் செய்யவேண்டி மூவிதமாய் நிற்றல் வேண்டப்படுவதாயிற்று.

அபேதம் முதலியவற்றுள் ஒவ்வொன்றே கொள்ளுவதனுலுண்டாகுங் குற்றம் யாதோவெனின், அபேதம் ஒன்றேகொள்ளின் உயிர் நிலைத்தற்கு மட்டும் இறைவன் உபகாரம் வேண்டுமெனப்பட்டு அறிதற்கும் செல்லுதற்கும் உயிர்கள் தாமே சுதந்திரமுடையன எனக்கொள்ளவரும். வருங்கால் நூலோடு பொருந்தாததுமன்றி அறிவித்தாலன்றி அறியமாட்டாத அனுபவத்தோடும் முரணும். சில உயிர்கள் தாமே எண்ணுதலால் எவற்றையும் அறியக்காண்கின்றாமேயெனின், அவ்வுயிர்களிடத்து அறிவுக்கறிவாய் இறைவன் உண்ணின்றுணர்த்த வுணர்வதேயன்றிப் பிறிதில்லையாதலின் அவ்விடத்தும் அறிவிக்க அறிதலுக்கு இழுக்கில்லை. இனி, பேதம் ஒன்றேகொள்ளின் அறிவித்தற்குமட்டும் இறைவன் உபகாரம் வேண்டுமெனப்பட்டு நிலைத்தற்கும் செல்லுதற்கும் உயிர்கள் சுதந்திரமுடையவெனக்கொள்ளவரும். வருங்கால் அவை தனித்திருக்குமெனின், இறைவன் வியாபகத்திற் கிழுக்காகும்; அவை தாமே செல்லுமெனின் அறியவேண்டுவதை அறியினும் அறிந்தவற்றிற் செல்லுதல் இயலாத அனுபவத்தோடு முரணும். இவ்வாறே பேதாபேதம் ஒன்றே கொள்ளின் செலுத்துதல் ஒன்றே இறைவன் உபகாரமெனப்பட்டு நிலைத்தல் அறிதல் இரண்டற்கும் உயிர்கள் சுதந்திரமுடையவெனக் கொள்ளவரும். வருங்கால் மேற்கூறியவாறு குற்றமாம். ஆதலின் மூன்றும் வேண்டப்படுவனவாயின.

பேதாபேதமாவது ஒருவாற்றாற் பேதமும் ஒருவாற்றால் அபேதமுமாம். பேதாபேதத்திற்கும் அபேதத்திற்கும் வேற்றுமை என்னையெனின், பேதாபேதத்தில் உடன் செல்லுமுறையில் உயிரின் வேறாதலும், கலந்துநிற்கும் முறையில் ஒன்றாதலும உளவாம. அபேதத்தில கலந்திருத்தலேயன்றி உயிருடன செல்வதில்லை. இதுவே வேற்றுமையாம்.

இம்மேற்கோளினல் இறைவன் உயிர்களோடு ஒன்ருயும், வேருயும், உடனுயும் நிற்பன் என்றதனேடு இறைவன் புதுச்சிருட்டி செய்யுங்கால் உயிர்களோடு உடனுய்நின்று செய்வன் என்பதூஉம் பெறப்பட்டது. எவ்வாறெனின், உயிரின் அறிவானது கண்ணெளியோடு கூடி ஒருவிடயத்தை அறியும்; அறியுங்கால் தான்வேறு கண்ணெளிவேறு எனப்பிரிப்பின்றி நின்று அறியும். அதுபோல, முதல்வன் புதுச்சிருட்டியைச் செய்யுங்கால் உயிர்களுடன் கலந்து உயிர்வேறு தான்வேறெனப் பிரிப்பின்றிநின்று செய்வன் என்க.

இறைவன் உயிர்களோடு பிரிப்பின்றி நிற்பன் என்பதற்குக் காட்டும்

ஏது.

அத்துவிதமென்ற சொல்லானே ஏகமென்னில் ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந்நியநாத்தியை யுணர்த்துமாயிட்டு.

சிற்றுரை.

எ—து ஏது எ—னின், முதல்வன் அவ்வாறு மூவகையுமாய் நிற்பனென்றற்குப் பிரமாணமென்னை என்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ—ள்.) (அத்துவிதமென்கிறசொல்லின் நகரம் இன்மை அன்மை மறுதலை என்னு முப்பொருளுணர்த்துமன்றே, அவற்றுள் இன்மைப்பொருள்பற்றி) அத்துவிதமென்கிற மொழிமாத்திரையானே ஒருபொருளென்றல் பொருத்தமுடைத்தெனின்,—தானே தன்னையொன்றெனக் கருதல்வேண்டாமையின் அவ்வாறு கருதும் பொருள் வேறுண்டென்பது பெறப்படுதலானும், (எண்ணுப்பெயர்மேல்வந்த நகரம் அன்மைப்பொருண்மாத்திரையே யுணர்த்திப் பொதுமையி னிற்பதன்றி ஏனைச்சொற்களின்மேல்வந்த நகரம் போல இன்மை மறுதலைப்பொருள்களை யுணர்த்துதல் வழக்கின்கணின்மையின்) அத்துவிதமென்கின்ற மொழிதானே (பிறிதுகாரணம் வேண்டாது) வேறன்மையை யுணர்த்தி நிற்குமாகலானும் ஈண்டிவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் ருனேயாய் நிற்குமென மேற்கொண்டது எ—று.

ஆகலானென்பதற்கு ஆயிட்டென்பது அக்கால வழக்குப் போலும்; அற்றாகலினன்றே "நீயோ செய்யாய் நின்மல ஞயிட்டு" என்ருர் வழிநூலாசிரியரும், இனி "மழைபெய்து குளநிறைந்தது"

என்புழிப்போல ஆயிடலானென்பது ஆயிட்டெனத் திரிந்துநின்ற தென்றலு மொன்று.

எண்ணும்மை விரித்துரைக்க.

வேறின்றி உடனாதல் பெறப்படவே, பொருண்மையாற் பேதமென்பதூஉம் கலப்பினால்அபேதமென்பதூஉந் தாமேபோத ருமென்பது கருத்து.

விளக்கம்.

இந்த ஏது என்ன சொல்லிற்றோவெனின், இறைவன் உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பன் என்று மேற்கூறியதற்குப் பிரமா ணம் என்னை என்னும் வினாவை ஆசங்கித்துப் பிரமாணங்கூறி மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த ஏதுவின்பொருள்.) அத்துவிதமென்றசொல்லின்முன் நின்ற நகரம், இன்மை அன்மை மறுதலை யென்னும் முப்பொருளுணர்த்து மாத லால், அவற்றுள் இன்மைப்பொருள்பற்றி அத்துவிதமென்ற மொழிமாத் திரையானே பொருள் ஒன்றே என்றல் பொருத்தமாகுமெனின், ஒன்றா கிய தானே தன்னை யொன்றெனக் கருதல்வேண்டாமையின், அவ்வாறு ஒன்றெனக்கருதும் பொருள் வேறுண்டென்பது பெறப்படுமாதலின் ஒன் றென்றல் பொருந்தாது; அன்றியும், எண்ணுப்பெயர்மேல் வந்த நகரம் அன்மைப்பொருண்மாத்திரையே யுணர்த்தி ஏனையவற்றில் இன்மை அன் மை மறுதலை என்னும் முப்பொருள்களைத்தரும் பொதுமையில் நிற்பதன்றி, ஏனைச்சொற்களின்மேல்வந்த நகரம்போல இன்மை மறுதலைப் பொருள் களை யுணர்த்தல் வழக்கின்கண் இல்லை. ஆகவே, ஒன்றெனக் கருதுதலா னும், எண்ணுப்பெயர்மேல்வந்த நகரம் இன்மைப்பொருளுணர்த்தாமை யானும் அத்துவிதம் என்ற மொழிதானே பிறிதுகாரணம் வேண்டாது உயிர்களோடு பிரிப்பின்றிநிற்றலை புணர்த்திநிற்குமாதலால், ஈண்டிவ்வான் மாக்கள் பலவும் முதல்வன்றானேயாய் நிற்குமென மேற்கோள் கூறியது என்றவாறு.

பிரிப்பின்றி நிற்றலினாலேயே கலப்பால் ஒன்றாதலும், பொருளால் வேறாதலும், உயிர்க்குயிராதற் றன்மையால் உடனாதலும் பெறப்படும்.

அத்துவிதம் என்றசொல் பிரிப்பின்றிநிற்றலை எவ்வாறுணர்த்துமெ னின், கூறுதும்:— நத்துவிதம் என்ற வடமொழிச் சொல்லிலுள்ள நகர மெய்கெட்டு அதன்மேல்நின்ற அகரமுதலாகநின்று தமிழில் அத்துவித மென வழங்கிவருவதாயிற்று.

அத்துவிதம் என்னுஞ் சொல்லில் முன்னின்ற அகரம் அன்மை இன்மை மறுதலை யென்னும் மூன்றுபொருளை உணர்த்தும். உதாரணமாக

அப்பிராமணன் என்றவிடத்து பிராமணனல்லாத க்ஷத்திரிய வைசிய சூத்திரரைக் குறியாது, பிராமணனாயிருந்தும் பிராமணத் தன்மையில்லாமையைக் குறித்தலால் அகரம் அன்மைப்பொருளில் வந்தது. அமலம் என்றவிடத்து மலம் இன்மையைக் குறித்தலால் அகரம் இன்மைப்பொருளில் வந்தது. அநீதி என்றவிடத்து நீதியின் மறுதலையைக் குறித்தலால் அகரம் மறுதலைப் பொருளில் வந்தது. இம்மூன்றனுள்,

இன்மைப்பொருள்கொண்டு இரண்டாவதாகிய பசு பாசப்பொருள்களில்லை, பிரமப்பொருள் ஒன்றே உள்ளது என்பார் ஏகான்மவாதிகள். ஒன்றென்றுணர்வது வேறுண்டாதலால் இவர் கருத்துப் பொருந்தாது.

மறுதலைப்பொருள்கொண்டு நீதியின் மறுதலை கொள்ளவே நீதியும் கொள்ளக்கிடப்பதுபோல இரண்டன் மறுதலையாகிய ஒன்றுகொள்ளவே இரண்டுங்கொள்ளக்கிடந்து நீதியும், அநீதியும் வேறுவேறாதல் போல, ஒன்றாகிய கடவுளும் இரண்டாவதாகிய உயிரும்வேறு வேறாய் நிற்குமென்பர் மாத்துவர். வேறு வேறாயின் கடவுள் வியாபகத்துக்கு இழுக்கும் உயிருக்குத் தனித்து நிற்கும் சுதந்திரமும் உளவெனப்பட்டு நூலோடும் அநுபவத்தோடும் முரணுமாதலின் இவர் கருத்தும் பொருந்தாது.

மேற்கூறிய இன்மைப்பொருளே கொண்டு கடவுள் வியாபகப்பொருளேயெனவும், உயிரும் பாசமும் கடவுளில் அடக்கமெனவும், ஆயினும் உயிரும் பாசமும் பலவாயினாற்போல கடவுள் பலவல்ல ஒன்றே எனவுங் கூறுவர் பாஞ்சராத்திரிகள். ஒன்றென்று கூறுவதற்கு வடமொழியில் ஏகமென்னும் சொல்லிருக்கவும் அதனை விட்டு. அத்துவிதமென்னும் சொல்லால் உய்த்துணர வைக்கவேண்டாம் என மறுத்தவிடத்து, பிரமம் ஏகமென்று ஓரிடத்திலும் பிரமம் அத்துவிதமென்று பிறிதோரிடத்திலுங் கூறுதலால் அத்துவிதமென்பதும் ஏகமென்பதும் ஒரு பொருட்சொற்களாமென்பர். ஏகமேவ அத்துவிதீயம் பிரமம் என ஓரிடத்திலேயே ஏகமெனவும் அத்விதமெனவுங் கூறுதலால் ஏகமென்பதும் அத்துவிதமென்பதும் வேறுவேறு பொருளைக் குறித்ததாமென மறுத்த விடத்து, அவ்வாறு கூறியது உறுதி பயக்கும் அடுக்கு மொழியாமென்பர். அடுக்குமொழியாயின் ஏகம் ஏகம் என்றாவது அத்துவிதம் அத்துவிதம் என்றாவது இருக்கவேண்டுமேயன்றி இருவேறு மொழிகளாயிருத்தல்கூடாது. மற்றென்னையோ? அவ்வாக்கியத்திற்குப் பொருளெனின், ஏகமாகிய பிரமம் பலவுயிர்களோடுங் கலந்து நிற்குமென்பதேயாம். ஆதலின் அத்துவிதமென்னும் சொல்லிற்குக் கடவுள் ஒன்றென்று கொண்ட இவர் கருத்தும் பொருந்தாது.

இனி அத்துவிதச் சொற்குப்பொருள் என்னையோ? வெனின், அகரம் பொருட்பெயர்ச்சொல்லில் வரும்பொழுதுதான் அன்மை இன்மை மறுதலை என்னும் முப்பொருள் பயக்கும் பொதுமையில் நிற்கும். எண்ணுப்

பெயர்ச்சொல்லில் வரும்பொழுது அன்மைப்பொருள் ஒன்றேயன்றிப் பிற பொருள் பயவாது. உதாரணமாக எண்ணுப்பெயர்மேல் ஏகத்தின் முன்னாகவும் துவிதத்தின் முன்னாகவும் அன்றி ஏனைய எண்ணுக்களுடன் அகரம் முன்னிற்பதில்லை. அவற்றுள் ஏகத்தின் முன்னாக நின்ற அகரம் அன்மைப் பொருள்பற்றி அநேகமெனப் பொருள் தருமாறுபோல துவிதத்தின் முன்னின்ற அகரமும் இரண்டன்மையைக் குறிக்கும் என்பதே தேற்றம்.

இக்கருத்தேபற்றி அன்மைப்பொருள்கொண்டு பிராமணனாக விருந்தும் பிராமணத்தன்மை யில்லாதவாறுபோல, கடவுளும் உயிர்களும் பொருட்டன்மையால் இரண்டாயினும் இரண்டின் றன்மையாக வேறு பிரித்தறிய வராது கண்ணொளியும் ஆன்மபோதமும்போலக் கலந்து நிற்குமென்பர் சைவசித்தாந்திகள்.

ஆகவே, அத்துவிதமென்ற சொல்லால் கடவுளும் உயிரும் பிரிப்பின்றி நிற்குமென்பது பெறப்பட்டு அதனால் ஒன்றாய்நிற்றல் முதலிய மூன்றும் பெறப்பட்டவாறு காண்க.

ஏதுவின் இறுதியில் ஆகலானென்று கூறவேண்டியதற்கு ஆயிட்டு என்று கூறியது அக்காலத்து வழக்குப்பற்றிப்போலும்; அவ்வாறு அக்காலத்து வழக்குண்டென்பதுபற்றியே வழிநூலாசிரியர் “இருபாவிருபது” என்னும் நூலில் “நீயோ செய்யாய் நின்மலனாயிட்டு” என்றார். இவ்வாறன்றி மழைபெய்தலால் குளம் நிறைந்தது என்று சொல்லவேண்டுவதை மழைபெய்து குளம்நிறைந்தது என்று சொல்வதுபோல ஆயிடலான் என்று கூறவேண்டுவதை ஆயிட்டு எனத்திரித்துக் கூறினாரென்றலு மொன்று.

ஏதுவில் ஏகமென்று சுட்டுவதன்மையின் என்றவிடத்தும், அந்நியநாத்தியை யுணர்த்துமாயிட்டு என்றவிடத்தும் எண்ணும்மை விரித்துரைக்க. அவ்வாறு விரித்து ஏகமென்று சுட்டுவதன்மையானும் அந்நியநாத்தியை யுணர்த்துமாகலானும் என உரை செய்யப்பட்டது.

அந்நிய நாத்தியை யுணர்த்து மென்றதனால் பிரிப்பின்றி உடனாதல் ஒன்றே பெறப்படுமாயினும், பிரிக்கமுடியாத பொருளின் தன்மைபற்றி வேறென்பதூஉம், பிரிக்கமுடியாத கலப்பின் தன்மைபற்றி ஒன்றென்பதூஉம் தாமே விளங்குமென்பது கருத்தாதலின் அவ்வாறு கூறினார்.

இந்த ஏது அபேதம் முதலிய மூன்றனுள் ஒவ்வொன்றே கூறும் பிறர் பக்கத்தை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று. இத்துணிபாற் பெறப்பட்ட ஒன்றாதல், வேறாதல், உடனாதல் மூன்றற்கும் உதாரணம் முன்னர்க் கூறுகின்றார்.

உயிர்களோடு இறைவன் ஒன்றாய்நிற்றற்குக் காட்டும் உதாரணம்.

கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னென்றாங்—கொட்டி
யவனுளமா யில்லா னுளமவனு மாட்டா
தவனுளமா யல்லனுமா மங்கு.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், ஒருபொருள் மூவகையியல்பை யுடைத்தாதல் யாங்ஙனம் என்னுங்கடாவை யாசங்கித்து அவற்றுள் அவையேயாதலை உவமைமுகத்தான் வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) உள்ளம் கட்டும் உறுப்பும் கரணமுங் கொண்டு— உயிர் (நரம்பு முதலியவற்றாற்) பிணிக்கப்படும் உடம்பினையும் ஐம்பொறிமுதலிய கருவிகளையுங் கைக்கொண்டுநின்று,—இட்டது ஒருபேர் அழைக்க என் என்றாங்கு—சாத்தா கொற்றா என உடம்பிற் கிட்டபெயராற் பிறரழைத்தவழித் தான் என்னையென வந்து நிற்றல் காணுமன்றே, (இருவர் கைகோத்து நின்றுழியும் அவருள் அழைக்கப்பட்டோனேயன்றி ஏனோன் என்னையென்றல் உண்டேத்தின்மையின் அவ்வாறன்றி உடம்பின் பெயரான் அழைத்தவழி உயிர் என்னென்றற்குக் காரணம் பிறிதோராற்றாற் பெறப்படாமையின் அருத்தாபத்தியளவையானே அவ்வுயிர் உடம்பெனத் தானென வேற்றுமையின்றி அபேதமாய்நிற்றல் பெற்றாம்.) அதுபோல,—ஒட்டி—(முதல்வன் உயிர்களின் அபேதமாய்) ஒட்டி நிற்பானும்,—அங்கு அவன் உளம் ஆகில்லான். உளம் அவனு மாட்டாது அவன் உளம் ஆய் அல்லனும் ஆம்—(அவ்வாறொட்டிய வழியும் உயிர் உயிரே, உடம்பு உடம்பே, உயிர் உடம்பாயொழியாது; உடம்பு உயிராகமாட்டாது; அவ்வாறாயினும் உயிர் உடம்பாயும் அதனின் வேறாயுநிற்கும்; உடம்பு அங்ஙனநில்லாது;) அதுபோல (முதல்வன் முதல்வனே, உயிர் உயிரே,) முதல்வன் உயிராயொழியான்; உயிர் முதல்வனாகமாட்டாது; (அவ்வாறாயினும்) முதல்வன் உயிராயும் அதனின் வேறாயுநிற்பன்; (உயிர் அங்ஙனநில்லாது) எ-று.

அவ்னுளமாகில்லா னுளமவனுமாட்டா தவனுளமா யல்லனு மாமங்கு என்றது ஒன்றாயும் ஒன்றன்மைக்கு அநுபவங்காட்டிய வாறு.

உறுப்பு ஆகுபெயர். எவனென்பது என்னென மரீஇயிற்று. ஒட்டியென்பது பெயர்; வினையெச்சமாகக் கொள்ளிற் சிறப்பும்மை விரித்துரைக்க.

ஒட்டுதல் பொருந்துதல். அங்கு அதுபோல.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) உள்ளம் கட்டும் உறுப்பும் கரணமுங் கொண்டு இட்டது ஒருபேர் அழைக்க என் என்றாங்கு ஒட்டி அங்கு அவன் உளம் ஆகில்லான் உளம் அவனுமாட்டாது அவன் உளம் ஆய் அல்லனும் ஆம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், ஒருபொருள் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் இவ்வாறு மூவகை இயல்புடைத்தாய் நிற்கு மென்றற்குத் திருட்டாந்தம் யாதோ என்னும் வினாவை ஆசங்கித்துக் கொண்டு அம்மூவகை இயல்பினுள் ஒன்றேயாதற்கு உவமைகூறிச் சூத் திரத்திலுள்ள அவையேயாதலை வலியுறுத்தியவாறும்.

(பொ - ரை.) உயிரானது நரம்பு முதலியவற்றாற் கட்டப்பட்டிருக்கும் உடம்பினையும் மெய் வாய் கண் மூக்குச் செவி வாக்குப் பாதம் கை முதலிய கருவிகளையும் பற்றிநிற்கும். அவ்வாறு நிற்குங்கால் உடம்பிற்குப் பெய ரிடப்படும். அப்பெயர் உடம்பைக்கண்டு இட்டதேயன்றி உயிரைக்கண்டு இட்டதன்று. அவ்வாறு உடம்பிற்கிட்டபெயரால் சாத்தா கொற்றா எனப் பிறர் அழைத்தவிடத்து அவ்வுடம்போடுகூடிய உயிர் என்னையென்று கேட்கும்; ஏனைய உடம்போடுகூடிய உயிர் என்னையென்று கேட்பதில்லை. அவ்வுயிருக்கு அழைத்தது கேளாமையால் என்னையென்று கேட்கவில்லை என்றல் பொருந்தாது. எதனாலெனின், சாத்தன் கொற்றனாகிய இரு வரும் கைகோத்து நின்றவிடத்தும் சாத்தனையழைத்தபொழுது கொற்றன் என்னையென்று கேட்பதில்லை; இவ்வாறே சாத்தனுமாதலினாலென்க. இவ்வாறு உடலுக்கிட்டபெயரால் அழைக்கும்பொழுது உயிர் என்னை என் றற்குக் காரணம் என்னையென்பதைவிட வேறு தோன்றாமையின், அருத் தாபத்திப் பிரமாணத்தால் அழைக்கப்பட்ட உடம்போடுகூடிய உயிர், அவ் வுடம்புவேறு தான்வேறு என்ற வேற்றுமையின்றிக் கலந்துநிற்றலேயாம் என்க. அவ்வாறே முதல்வனும் உயிர்களுடன் கலந்துநிற்பன்; மேற்கூறிய வாறு உடம்போடு உயிர்கலந்து நிற்பினும் உடம்பு உடம்பே; உயிர் உயிரே; உயிர் உடம்பாகமாட்டாது; உடம்பு உயிராகமாட்டாது. ஆயினும் உயிர்

உடலை நான் என்பதனால் உடம்பாயும், என்னுடல் என்பதனால் உடம்பின் வேறாயும் நிற்கும்; உடம்பு உயிராகவும் நில்லாது, உயிர் பிரிந்தவுடன் உடம்பென்னும் பெயரைமாற்றிப் பிணமென்னும் பெயரிட்டுச் சுடுகோட்டிடப்படுதலே யன்றித் தனித்தும் நில்லாமையறிக. அவ்வாறே முதல்வன் முதல்வனே; உயிர் உயிரே; முதல்வன் உயிராகமாட்டான்; உயிர் முதல்வனாகமாட்டாது. அவ்வாறாயினும், முதல்வன் உயிரோடுகலந்து நின்று உயிர் செல்லவேண்டுவதற்காக உயிருடன் தானுஞ் செல்லுதலால் உயிராயும், உயிருக்கறிவித்தலால் உயிரின் வேறாயும் நிற்பன். உயிர் முதல்வனாகவும் நில்லாது; முதல்வனின் வேறாகத் தனித்தும் நில்லாது. முத்தியில் உயிர் முதல்வனாய் நிற்றலில்லையோவெனின், அவ்விடத்துங் கலந்து நிற்றலேயன்றி தனித்து முதல்வன்போல் நிற்றலில்லை. ஆதலால் உயிர் முதல்வனாய் நில்லாது என்பதனோடு முத்திநிலை முரணாது (எ - று.)

(க - ரை.) உடம்போடு உயிர் அபேதமாய்க்கலந்துநிற்றல்போல உயிரோடு இறைவன் அபேதமாய்க் கலந்துநிற்பன் என்பதாம்.

அருத்தாபத்திப் பிரமாணமாவது:— பொருட்குறிப்புடையது; உதாரணம். பகலுண்ணான் பருத்திருக்கின்றான் என்றவிடத்து, பருத்திருத்தல் உண்ணாது சம்பவியாது என்னுங் குறிப்பைக்கொண்டு இரவிலுண்பானென்று கொள்ளுதலாம். இவ்வாறே உயிர் உடம்பல்லாததாயிருந்தும் உடம்பிற்கிட்டபெயரால் அழைக்க அது என்னை யென்றமையால் என்னை என்றல் கலந்துநின்றாலன்றிச் சம்பவியாதாதலால் கலந்து நிற்குமெனக் கொள்ளுதல் அருத்தாபத்தியாயிற்று.

செய்யுளில் அவன் உளமாகில்லான் உளம் அவனுமாட்டாது அவன் உளமாய் அல்லனுமாம் அங்கு என்றது, இறைவன் உயிர்களோடு ஒன்றாக நிற்பினும் அவன் ஒருபொருள் உயிர் ஒருபொருள் என்பதற்கு அநுபவங் காட்டியவாறு.

உறுப்பு என்றது உறுப்பினையுடைய உடம்பினைக்குறித்து நிற்றலால் ஆகுபெயர். என்னென்றாங்கு என்பதிலுள்ள என்னென்பது எவனென நிற்கவேண்டும்; அவ்வாறு நிற்பின் வெண்பாத் தளைதட்டுமாதலின் எவனென்பது என்னென மரீஇயிற்று. ஒட்டியென்பது ஒட்டிநிற்போனாகிய முதல்வனைக்குறித்தலால் பெயர்; இதனை "விடையேறி" "மதிசூடி" என்பனவாதிய சமயகுரவர் திருவாக்குகளானுமறிக. ஒட்டி என்பதை வினையெச்சமாகக்கொள்ளின் சிறப்பும்மை விரித்து ஒட்டிநிற்பினும் என்றுரைக்க. உரைக்குங்கால் ஒட்டியென்னும் வினையெச்சம் அவனுளமாகில்லான் என்னும் முற்றுவினைகொண்டுமுடியும்.

ஒட்டுதல் என்பது பொருந்துதலாம். செய்யுளினிறுதியிலுள்ள அங்கு என்பது அதுபோல என்னும் பொருளில் நின்றது.

உயிர்களோடு இறைவன் வேருய் நிற்றற்குக்காட்டும்
உதாரணம்.

ஒன்றேன்ற தோன்றேகா ணேன்றே பதிபசுவா
மோன்றேன்ற நீபாசத் தோடுளேகா—ணேன்றின்ரு
லக்கரங்க ளின்ரு மகர வுயிரின்றே
லிக்கிரமத் தேன்னு மிருக்கு.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், வேதத்துள் அத்துவிதமென்றதுஉ மன்றி ஏகமெனவுமோதுதலின் அதற்கு மறுதலையாய் உயிர்களோ டொட்டி நிற்பனெனப் பேதப்படக்கூறுவதென்னை என்னுங் கடா வை யாசங்கித்து அச்சொற்குத் தாற்பரியங் கூறுமுகத்தால் தானேயாதலை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) இருக்கு ஒன்று என்றது ஒன்றேகாண்—வேதம் ஒன்றென்றதற்குப் பொருள் ஒன்றென்பதேயாம்; வேறு பொருள் படாது,—ஒன்றே பதி—(அதற்குத் தாற்பரியம்) பதிப்பொரு ளொன்றே; இரண்டில்லையென்பதாம்,—ஒன்று என்ற நீ பசு ஆம் காண்—இஃதறியாது ஒன்றென்று சொல்லுகின்ற நீ அப் பதிப் பொருளின் வேருய பசுவென்றறிவாயாக. (பதியுஞ்சேதனமாக யானுஞ்சேதனமாக என்னைப் பசுவென்ற தென்னையெனின்),— பாசத்தோடு உளை—நீ மலத்தோடு கட்டுற்று நின்ருயாகலிற்பசுவெ னப்பட்டனை; (அற்றேல், இவ்வாறு வேற்றுமைகூறிற் பிரமமில்லை யாயின் ஒருபொருளு மில்லையென்னும் வேதத்திற்குத் தாற்பரிய மென்னையெனின்),—அகரவுயிர் இன்றேல் அக்கரங்கள் இன்று ஆம் இக்கிரமத்து ஒன்று இன்று என்னும்— அகரவுயிரில்லையாயின் அக்கரங்களில்லையாமென்னும் இம்முறைபற்றி (வேதம் பிரமப் பொருள் இல்லையாயின்) ஒரு பொருளுமில்லையென்ருேதும் அத்தனை எ-று.

ஒன்றின்ரு லக்கரங்களின்ரு மகரவுயிரின்றே லிக்கிரமத்தென் னும் என்றது வேருகியும் வேறன்மைக்கு அநுபவங்காட்டியவாறு.

இக்கிரமத்தாலென உருபு விரித்துரைக்க. இன்றென்னு மொருமை அப்பண்பின்மேனின்றது. காணென்பதனை மேலே கூட்டுக. ஆல் அசை.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) இருக்கு ஒன்று என்றது ஒன்றேகாண் ஒன்றே பதி ஒன்று என்ற நீ பசு ஆம் காண் பாசத்தோடு உளை அகரவுயிர் இன்றேல் அக்கரங்கள் இன்று ஆம் இக்கிரமத்து ஒன்று இன்று என்னும்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றேவெனின், வேதத்துள் பிரமம் அத்துவிதமென்று கூறியதூஉமன்றி, பிரமம் ஏகமெனவும் ஓதுதலின் அவ்வாறு ஏகமென்றதற்கு மறுதலையாக மேலை உதாரணத்தில் இறைவன் உயிர்களோடு ஒட்டி நிற்பனென இறைவன் எனவும் உயிரெனவும் வேறு படக்கூறுதல் எதற்காக என்னும் வினாவை ஆசிரியர்தாமே எடுத்துக் கொண்டு ஏகமென்னும் அச்சொல்லிற்கு அபிப்பிராயங்கூறி அவ்வாறு கூறுமுறையில் முதல்வனும் உயிரும் பொருளால் இரண்டே யென்பதை விளக்கிச் சூத்திரத்திலுள்ள தானேயாதலை வலியுறுத்தியவாறும்.

(பொ—ரை.) வேதத்தில் ஒன்று என்பதற்குப் பொருள் ஒன்றென்பதேயாம்; வேறு பொருள்படாது. பொருள் ஒன்று என்பதற்கு அபிப்பிராயம் பதிப்பொருள் ஒன்றே; அது இரண்டில்லை யென்பதாம். இவ்வாறு இரண்டுபதிப்பொருளில்லை ஒருபதிப்பொருள்தான் உண்டென்பதே ஒன்றென்பதன் கருத்தென அறியாது பதிக்குவேறான பொருளில்லையென்றல் பொருந்தாது. ஏதனாலெனின், ஒன்றாயிருப்பின் அதுதன்னை ஒன்றெனக்கருதவேண்டாம். கருதுமாயின் கருதும்பொருள் கருதப்படும்பொருளின் வேறாகவேயிருக்கவேண்டும்; ஆதலால் ஒன்றென்று கருதுகின்ற நீ அப்பதிப்பொருளின் வேறாகிய பசுவென்று அறிவாயாக. பதியும் அறிவுடையபொருள்; யானும் அறிவுடையபொருள்; அவ்வாறாகவும் என்னைப்பசுவென்றதற்குக் காரணம் என்னையெனின், நீ மலத்தோடு கூடி நின்றாயாதலின் பசுவென்று சொல்லப்பட்டாய். பதிப்பொருள் மலத்தோடு கூடாது நிற்றலோடு மலத்தோடுகூடிய உன்னை அம்மலத்தினின்றும் விடுவிக்குங் கருணையும் ஆற்றலுமுடையதாய் நின்றது. இவ்வாறு பதிக்கும் பசுவுக்கும் வேற்றுமை உண்டென்றுகூறின், பிரமமில்லையாயின் ஒருபொருளுமில்லை என்னும் வேதத்தினோடு முரணாதோவெனின், முரணாது. அவ்வேதவாக்கியத்திற்கு அபிப்பிராயம் பிரமத்தைத் தவிர இரண்டாவது பொருளில்லை என்பதன்று; வேறு என்னையோ அபிப்பிராயமெனின், அகரவுயிர் இல்லையாயின் அக்கரங்களில்லை என்பதுபோலப் பிரமப்பொருளில்லையாயின் ஒருபொருளும் இல்லை என்பதேயாம். இவ்வளவேயன்றி இரண்டாவது பொருளில்லை யென்றல் பொருந்தாது என்றவாறு.

(க—ரை.) வேதத்தில் ஒன்றென்று கூறியதற்குப் பொருள் பதிப்பொருள் ஒன்றென்பதேயன்றிப் பசுவாகிய இரண்டாவது பொருளில்லை என்றல் பொருந்தாதென்பதாம்.

அகரமாவது பரசரீரத்தினின்று சுத்தமாயா விருத்தியாய்த்தோன்றும் நாதத்தின் விருத்தியாய் உந்தியினின்று எழும் உதானன் என்னுங் காற்றானது எழுப்ப எழுந்து கண்டத்தைப்பொருந்தி முயற்சி விகாரமின்றி இயல்பானே செவிக்குக்கேட்கப்படும் ஒலிவடிவினது. அவ்வொலியினாலேயே ஏனைய ஒலிவடிவாய அக்கரங்களெல்லாமியங்கும்; அவ்வொலியின்றேல் ஏனைய அக்கரங்கள் இயங்கா. இவ்வாறே பிரமப்பொருள் இருத்தலினாலேயே எல்லாப்பொருள்களும் இயங்குகின்றன; இன்றேல் இயங்கா; பிரமப்பொருளின்றேல் ஒருபொருளுமில்லையென்பதன்பொருள் இவ்வளவேயாம்.

செய்யுளில் ஒன்றின்றால் அக்கரங்களின்றும் அகரவுயிரின்றேல் இக்கிரமத்தென்னும் என்றது, அகரமும் ஏனைய அக்கரங்களும் வேறாயினும் அகரமாகிய ஒலியைவிட ஏனைய அக்கரங்கள் தனித்துநில்லாதவாறுபோலப் பதிப்பொருளும் பசுப்பொருளும் வேறாயினும் பதிப்பொருளைவிடப் பசுப்பொருள் தனித்து நில்லாமைக்கு அனுபவங்காட்டியவாறு.

இக்கிரமத்து என்றவிடத்து ஆலுருபுவிரித்துரைக்க. அவ்வாறு விரித்து இம்முறைபற்றி என உரைசெய்யப்பட்டது. அக்கரங்கள் இன்று என்பதிலுள்ள இன்று என்னும் ஒருமை அக்கரங்கள் என்னும் பன்மையோடு முடியாது; ஆதலால் இன்று என்பது ஒருமையைக்குறியாது இன்மையாகிய பண்பைக்குறித்து நின்றது.

பாசத்தோடுளேகாண் என்றதிலுள்ள காண் என்பது பசுவாம் என்பதனோடு கூட்டிப் பசுவாம் காண் எனப்பட்டது.

இன்றால் என்பதிலுள்ள ஆல் என்பது அசை.

உயிர்களோடு இறைவன் உடனாய் நிற்றற்குக்காட்டும்

உதாரணம்.

பண்ணையு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா—மண்ணரு
ளத்துவித மாத லருமறைக ளோன்றென்னா
தத்துவித மேன்றறையு மாங்கு.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், வேதம் ஏகமாய பிரமத்தை ஏகமென்றோழியாது பிரமம் அத்துவிதமெனவும் ஓரோரிடங்களின் ஓதுதலின், அத்துவிதம் இருபொருட்கண்ணதென்பார்க்கு ஏகமாய

பிரமத்தை அத்துவிதமென்றல் பொருந்தாதாய் முடியும் என்னுங் கடாவையாசங்கித்து அதனை நீக்குமுகத்தானே அவையே தானேயாதலை வலியுறுத்துதனுதலிற்று

(இ-ள்.) பண்ணையும் ஓசையும்போலப் பழமதுவும் எண்ணும் சுவையும்போல் எங்கும் ஆம் அண்ணல் தாள் அத்துவிதம் ஆதல்—பண்ணும் (அதனின் வேறன்றுயெண்ணப்படும்) இசையும் போலவும், பழமும் (அதனின்வேறன்று) யெண்ணப்படுஞ்சுவையும்போலவும் யாங்கனும் வியாபகமாய முதல்வன் றிருவருள் (உயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதாகலான்,—அருமறைகள் ஒன்று என்னுது அத்துவிதம் என்று ஆங்கு அறையும்—வேதங்கள் ஏகமென்னுது (பிரமம்) அத்துவிதம் என்று அவ்விடங்களிற் கூறும் எ-று.

ஆண்டுப் பிரமம் அத்துவிதமென்றது பிரமம் உயிர்களின் வேற்றுமையின்றிநிற்கு மென்னும் பொருட்டாகலான், அஃது ஏகமென்பதோடு முரணுமாறில்லை என்பதாம்.

பண்ணை யென்னும் ஐகாரம் பகுதிப்பொருள் விகுதி. பண் பாலைப்பண் முதலாயின.

எங்குமா மண்ணருளென விசேடித்தது, குணகுணிகள்போல் உடனுயும், அவ்வாறுடனுகாமைக்கு அநுபவங்காட்டியவாறு. வியாப்பிய வியாபகமாத லொப்புமைமாத்திரையேபற்றிக் குண குணிகளை உவமை கூறினுரென்பது.

விளக்கம்.

வெண்பாவின் இறுதியிலுள்ள என்றறையும் ஆங்கு என்பதை என்று ஆங்கு அறையுமெனக் கூட்டுக.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோவெனின், ஏகம் என்றதன்பொருள் பிரமம் ஏகம் என்பதேயாயின் வேதம் ஏகமாய பிரமத்தை ஏகமென்று கூறியமட்டில் நில்லாமல் பிரமம் அத்துவிதமெனவும் சில விடங்களிற் கூறுதலால் அத்துவிதமென்னுஞ்சொல் இருபொருளின் கலப்பைக்குறிக்கும் என்று சொல்லுதல்பொருந்தாது. எதனலெனின், ஏகமென்று கூறியதனோடு முரணுமல் அத்துவிதமென்றதற்கும் பொருள்கொள்ளின் அத்துவிதமென்றதும் ஒன்றென்றே முடியும். இவ்வாறன்றி அத்துவிதமென்றது இருபொருளின் கலப்பைக்குறிக்குமென்றும் ஏகமென்றது ஒன்றைக்

குறிக்குமென்றுங் கொள்ளில், ஏகமென்றுகூறிய பிரமத்தைப் பிறிதோ ரிடத்து அத்துவிதமென்று கூறுதல் பொருந்தாதாய் முடியும்; இவ்வாறு கூறுவோர் கூற்றை ஆசிரியர் தாமே எடுத்துக்கொண்டு ஏகமென்றதும் அத்துவிதம் என்றதும் முரணுதெனக்கூறிச் சூத்திரத்துள்ள அவையே தானேயாதலை வலியுறுத்தியவாறும்.

(பொ - ரை.) பண்ணும் அதனோடு பிரிப்பின்றி நிற்கும் ஓசையும் போலவும், பழமும் அதனோடு பிரிப்பின்றிநிற்குஞ் சுவையும்போலவும் எவ் விடத்தும் வியாபகமாய முதல்வன்றிருவருள் உயிர்களோடு பிரிப்பின்றி நிற்கும். அவ்வாறுநிற்குமுறைபற்றி வேதங்கள் பிரமம் ஏகமென்றதோடு நில்லாது அத்துவிதம் என்றும் சில விடங்களிற்கூறும் என்பதாம்.

(க - ஸ்ர.) உயிர்களோடு முதல்வன்றிருவருள் பிரிப்பின்றி நிற்பதை யுணர்த்துதற்கு வேதங்களில் அத்துவிதம் என்று கூறியது என்பதாம்.

வேதங்கள் சிலவிடங்களில் பிரமம் அத்துவிதமென்று கூறியது உயிர்க ளோடு பிரமம் வேற்றுமையின்றி நிற்குமென்பதை யுணர்த்துதற்பொருட்டே யாம்; சிலவிடங்களில் பிரமம் ஏகமென்று கூறியது இரண்டு பிரமப்பொ ருள் கிடையாது, ஒரு பிரமமே யுள்ளது என்பதை யுணர்த்துதற்பொருட்டே யாம். ஆதலின் ஏகமென்றதனோடு அத்துவிதமென்றது முரணுதவாறு அறிக.

பண்ணை என்பதிலுள்ள ஐகாரம் பண்ணென்னும் பகுதிப்பொருளையே யுணர்த்தி நின்றமையால் பகுதிப்பொருள் விகுதி. ஆதலால் பண்ணையுமென் பதற்குப் பண்ணுமென உரைசெய்யப்பட்டது. அவ்வாறுயின் பண்ணும் ஓசையும்போல எனவே கூறியிருக்கலாமே எனின், வெண்பாத் தளைதட்டு மாதலின் பண்ணையுமெனக் கூறினரென்க. பண் பாலைப்பண், குறிஞ்சிப் பண்முதலாயின.

எங்குமாம் அண்ணல்தாள் என அண்ணல்தாளுக்கு எங்குமாமென் னும் விசேடணங்கூறினர். அவ்வாறு கூறியது குணமுங்குணியும்போல் உயிருமுதல்வனும் பிரிக்கமுடியாமல் உடனாய் நிற்பினும் உயிர்செல்லுமிட மெல்லாம் இறைவனுஞ் செல்வானெனப்பட்டு உயிரைப்போல இறைவ னும் ஏகதேசமாதல் கூடுமாதலின் அவ்வாறு ஏகதேசமாகாமைக்கு அனு பவங்காட்டியவாறு; அதாவது எங்கும் வியாபகமாயிருத்தலால் அங்கங்கே உயிர்களோடு உடனாய் நிற்கின்றானென்றபடியாம்.

குணமுங் குணியும்போல் என்றதனால் இறைவன் குணியும் உயிர் குணமுமாமென்று கொள்ளலாகாது. குணி வியாபகமாயும் குணம் அக் குணியினுள் வியாப்பியமாயும் அதாவது அடங்கியும் இருக்கும். இவ்வாறே

இறைவன் எங்கும் வியாபகமாயும் உயிர் அவ்விறைவன் வியாபகத்துள் அடங்கி வியாப்பியமாயுமிருக்கும். இவ்வாறு வியாபக வியாப்பியமாய் நிற்கும் முறைமையை யுணர்த்துதற்கே குணகுணியுவமை கூறப்பட்டது என அறிக.

உயிர்களோடு இறைவன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும்
நிற்பன் என்பதற்குக் காட்டும்

உதாரணம்.

அரக்கோடு சேர்த்தி யணைத்தவக் கற்போ
லுருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே யுலகாந் தமியே னுளம்புகுதல்
யானே யுலகேன்ப னின்று.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், இங்ஙனம் வெவ்வேறுவமை யெடுத்துக்காட்டின் அநேகாந்தவாதமாமென்னுங் கடாவை யாசங்கித்து அஃதாகாமை உவமை முகத்தான்விளக்கி மூன்றனையும் ஒருங்கே வலியுறுத்துகனுதலிற்று.

(இ - ள்.) உருக்கி அரக்கொடு சேர்த்தி அணைத்த அக்கற்போல் உடங்கு இயைந்து நின்று பிரிப்பு இன்றித் தானே உலகு ஆம்— அரக்கையுருக்கி அதனோடு சேர்த்து அணைத்த கற்பொடி அவ்வரக்கினோடொன்றாய் ஒருங்கியைந்து நீக்கமின்றி நின்றாற் போல, (முதல்வன் உயிர்களின் ஒருங்குகூடி நின்று) நீக்கமின்றி (உடனாகலால்) தானேயாம், உலகேயாம், (தானே உலகேயாம், அற்றேல் வாமதேவமுனிவன் முதலியோர் யானே யுலகெல்லா மாயினேன் எனக் கூறுதலானும், சர்வஞ்ஞானோத்தரத்தில் யானேயெல்லாமாயினேன் எனக் கூறுதலானும், யானேயெல்லாமாய் அல்லனுமாய் உடனுமாய் நின்றேன் என்று உயிர்கண்மேல் வைத்தோதுதலானும், உயிர்களும் இவ்விலக்கணத்தனவாவான் செல்லும்போதுமெனின்),— தமியேன் உளம் புகுதல்யானே உலகு என்பன் இன்று—(அம்முதல்வன் பாசக்கூட்டத்தினீங்கித்) தனியாய் நின்ற என்னகத்துச் (சோகம்பாவனையாற் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றலான்) யானே யுலகெல்லாமென்பேனாயினேன் இம்முத்திக்காலத்து. (ஆகலின், அதுபற்றிஉயிர்களும் அவ்வாறுவான் சேறலின்று) எ—று.

அதுபற்றி உயிர்களும் அவ்வாறுவான் சேறலின்றென்பது குறிப்பெச்சம்.

இவ்வொற்றுமைபற்றியன்றே அருச்சுனற்குக் கீதைநூல் செவியறிவுறுத்த கண்ணன் யானே யுலகெல்லாமாயினேனென்ற தூஉம், முதல்வனது விச்சுவரூபத்தைத் தான்காட்டியதூஉம், ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுகவென்றதூஉம், அதனை உறுதியாகக்கொண்ட அருச்சுனன் அவன் கூறிய கருத்து நோக்கிச் சாங்காறுஞ் சிவபூசை செய்ததூஉம், கண்ணன்மே விட்ட போதுகள் முதல்வன்றிருமுடிமேற் கண்டதூஉமென்க. கண்ணன் உபமன்னியமுனிபாற் சிவதீக்கையுற்றுத் தன்னையுந் தலைவனையுமுணர்ந்தோனாகலிற் சிவோகம்பாவனையைத் தலைப்பட் டோனுதலறிக.

கலப்பாய் நிற்றலான் உலகேயாமென்பார் உடங்கியைந்து எனவும், பொருட்டன்மையால் வேறு நிற்றலால் தானேயாமென் பார் நின்று எனவும், உயிர்க்குயிராய் நிற்றலால் தானே யுலகா மென்பார் பிரிப்பின்றி எனவுங் கூறினர்.

ஈண்டும் இரட்டுறமொழிந்து கொண்டுரைக்க.

இன்றியென்னுஞ் செய்த னெச்சக்குறிப்பு "மழைபெய்து குளநிறைந்தது" என்புழிப்போலக் காரணகாரியப் பொருட்டாய் நின்றது.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) உருக்கி அரக்கொடுசேர்த்தி அணைத்த அக்கற் போல் உடங்கு இயைந்து நின்று பிரிப்பு இன்றித் தானே உலகு ஆம் தமி யேன் உள்ம்புகுதல் யானே உலகு என்பன் இன்று.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், இவ்வாறு ஒன்றாய் நிற்றல், வேறாய்நிற்றல், உடனாய்நிற்றலாகிய மூன்றற்கும் வேறு வேறுவ மை எடுத்துக்காட்டினால் அநேக முடிபுகளையுடையதென்னுங் குற்றமாமே என்னும் வினாவை ஆசங்கித்துக்கொண்டு அது குற்றமாகாதென வேறு ஓர் உவமையினால் அம்மூன்றனையும் ஒருசேர விளக்கி வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) அரக்கை உருக்கி உருக்கப்பட்ட அவ்வரக்கினோடு கற் பொடியைச் சேர்த்துக்கூட்டினால் அக்கற்பொடியானது அவ்வரக்கினோடு ஒன்றாய்க்கூடி நீக்கமின்றி நிற்கும். அதுபோல, முதல்வனும் உயிர்களோடு

கூடி நீக்கமின்றி உடனாய்நிற்பன். கூடி யென்றதனால் ஒன்றாதலும், நிற்பன் என்றதனால் வேறாதலும், நீக்கமின்றி என்றதனால் உடனாதலும் பெறப்படும். உவமையிலும் இவ்வாறே காண்க. அவ்வாறாயின் வாமதேவ முனிவன் முதலியோர் யானே உலகெல்லாமாயினேனெனக் கூறுதலானும், சர்வஞ்ஞானோத்தரத்தில் சுவாநுபூதியைப்பற்றிக் கூறுமிடத்து "யானே யெல்லாமாய் அல்லனுமாய் உடனுமாய் நிற்பேன்" என்று உயிர் கண்மேல்வைத்து ஓதுதலானும், உயிர்களும் முதல்வன்போல் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்கும் இலக்கணமுடையன என்று கொள்ளவருமே யெனின், வாராது; எதனாலெனின், பாசக்கூட்டத்தினின்றும் நீங்கித் தனியாய் நின்ற உயிரினகத்து அம்முதல்வன் சிவோகம்பாவனையாற் புகுந்து உயிர்வேறு தான்வேறெனப் பிரிப்பின்றி அவ்வுயிரேயாய் நிற்றலால், தன்னகத்தில் முதல்வன் நிற்குமுரிமைபற்றி அம்முத்திக்காலத்து யானே உலகெல்லாமாயினேன் எனப்பட்டது. ஆதலால் அம்முத்திநிலைபற்றி உயிர்களும் முதல்வன்போலும் இலக்கணமுடையனவெனக் கூறமுடியாது. (எ - று.)

(க - ரை.) உருக்கிய அரக்கினோடு சேர்த்த கற்பொடி பிரிக்க முடியாமையால் ஒன்றாயும், பிரிக்கமுடியாதாயினும் கற்பொடி எனத் தெரிதலால் வேறாயும், அரக்குமுழுதுங் கற்பொடி தெரிதலால் உடனாயும் நிற்குமாறு போல, முதல்வன் உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பன் என்பதாம்.

அதுபற்றி உயிர்களும் அவ்வாறுவான் சேறலின்று என்பது செய்யுளில் இல்லையாயினும் சிவோகம்பாவனையால் உலகெல்லாமாயினேன் என்றதனால் குறிப்பாகக்கொள்ளுமாறு எஞ்சி நிற்றலால் குறிப்பெச்சம்.

சிவோகம்பாவனையால் முதல்வன் புகுந்து என்றதனால் முன்னர் முதல்வன் பிரிந்து நின்று பின்னர்ப்புகுந்ததன்று. அநாதியே உயிரோடு முதல்வன் பிரிப்பின்றி நிற்பன்; நிற்பினும், ஆணவமலமும் அநாதியே கூடிநிற்றலால் முதல்வன் விளங்கித்தோன்றுதலில்லை. ஆணவமலம் நீங்கியவிடத்து முதல்வன் உயிருக்கு விளங்கித்தோன்றுவன்; விளங்கித்தோன்றுதலையே புகுந்துஎனக் கூறப்பட்டது.

பாசக்கூட்டத்தின் நீங்கித் தனியாய்நின்ற என்னகத்து என்றதனால், உயிர் தனித்துநிற்றல் கூடுமெனப் பெறப்படுமே. பெறப்படின், உயிர் யாதானும் ஒன்றைச்சார்ந்தன்றித் தனித்து நில்லாது என்னும் நூல்களோடு முரணுமே எனின், தனித்து என்பதற்குப் பாசக்கூட்டத்தில் நீங்கியிருத்தலாகிய அவ்வளவேயன்றிப் பிறிதில்லையாதலால் முரணாதென்க. அவ்வாறு நீங்கிய உயிர் சிவோகம்பாவனையைப்பற்றி நின்றவாறும் அறிக.

அர்ச்சுனனுக்குக் கீதைநூல் உபதேசித்த கண்ணன் சிவோகம்பாவனை-யினால் சிவமாய்நின்ற ஒற்றுமைபற்றியே யானே உலகெல்லாமாயினேன் என்றதூஉம், எல்லாமாய் நின்ற முதல்வனது விச்சுவரூபத்தைத் தான் காட்டியதூஉம், ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுக என்றதூஉமாம். அவ்வாறு உபதேசித்த கண்ணன்மொழியை உறுதியாகக்கொண்ட அர்ச்சுனன் அவன் கூறிய கருத்து நோக்கிச் சாங்காறுஞ் சிவபூசைசெய்தனன். கண்ணன் என்னையே வழிபடுகவெனக்கூற அர்ச்சுனன் சிவனை வழிபட்டது கண்ணன் கருத்தோடு முரணுதோவெனின், முரணாது; எதனாலெனின், கண்ணன் சிவோகம்பாவனையில் நின்றுகொண்டு என்னையே வழிபடுக என்று கூறினதேயன்றித் தானாகநின்று கூறவில்லையாதலினால் அக்கருத்தறிந்த அர்ச்சுனன் சிவனை வழிபட்டது கண்ணன் கருத்தோடு முரணுமாறில்லை. இன்னும் இவ்வுண்மை அர்ச்சுனன் கண்ணன்மேலிட்ட புட்பங்கள் சிவபெருமான்திருமுடிமேற் கண்டதனாலும் நன்கு புலப்படும். சிவோகம்பாவனை செய்தற்குச் சிவதீட்சை பெறவேண்டும். அவ்வாறே கண்ணன் உபமன்னிய முனிவர்பால் சிவதீட்சையுற்றுத் தன்னையுந் தலைவனையும் உணர்ந்தோனாதலால் சிவோகம்பாவனையைச் செய்தோனாதலறிக.

உயிர்களோடு முதல்வன் கலந்துநிற்றலால் உலகேயாம் என்று கூறவேண்டி உடங்கியைந்து எனவும், கலந்து நிற்பினும் பொருட்டன்மையால் வேறு நிற்றலால் தானேயாம் என்று கூறவேண்டி நின்று எனவும், வேறாயினும் உயிர்க்குயிராய் உடன் நிற்றலால் தானே உலகாமெனக் கூறவேண்டிப் பிரிப்பின்றி எனவுஞ் செய்யுளிற் கூறினர்.

இச்செய்யுளிடத்துந் தானே உலகாமென்பதை இரட்டுறமொழிந்து தானேயாம், உலகேயாம், தானே உலகேயாம் என உரை செய்யப்பட்டது.

பிரிப்பின்றி என்றதிலுள்ள இன்றி என்பது செய்து என்னும் எச்சக் குறிப்பு. அது, மழை பெய்தலால் குளம் நிறைந்தது என்று கூறவேண்டியதை மழை பெய்து குளம் நிறைந்தது என்றாற்போலப் பிரிப்பின்மையால் தானே உலகாம் எனக்காரணகாரியப்பொருளில் நின்றது. இன்றியென்ற அது முக்காலத்தையுங் குறிப்பாக உணர்த்தலால் எச்சக்குறிப்பு.

சிற்றுரை.

இவ்வதிகரணத்தானே பேதமென்றும் அபேதமென்றும் பேதாபேதமென்றும் பிணங்குஞ் சமயிகளையெல்லாம் மறுத்து அம்மூவகை யியல்புந் தன்கட்டோன்ற நிற்கும் அத்துவிதத்துண்மை ஏதுக்களானும் உவமைகளானும் உணர்த்தியவாறு. புடைநூலாசிரியரும் இவ்வதிகரணப் பொருளைபற்றி "புறச்சமயத்தவர்க்கிருளாய் *** நெறிக்கனுற்றும்." என வகுத்தோதினார்.

விளக்கம்.

இவ்வதிகரணத்தினால் முதல்வனும் உயிரும் பேதமென்றும், அபேதமென்றும், பேதாபேதமென்றும் பிணங்குஞ் சமயிகளையெல்லாம் மறுத்து அம்மூவகை இயல்பும் விளங்குதற்குரிய அத்துவிதத்தின் உண்மையை ஏதுக்களானும் உவமைகளானும் உணர்த்தியவாறும். உணர்த்துமுறையில் பேதம், அபேதம், பேதாபேதம் என்னும் மூன்றனுள் ஒவ்வொன்றே கூறுவாரை மறுத்ததோடு அம்மூன்றையும் ஒப்புக்கொள்ளுங்கால் அவற்றிற்குப் பிறர்கூறிய உவமைகளையும் மறுத்து வேறு உவமைகொண்டனர். அவ்வாறுகொண்டதன் கருத்தென்னையெனின், கூறுதும்.

அபேதத்திற்குக் கூறிய பொற்பணி உவமையில் பொன்னே ஆபரணமானதுபோல் பிரம்மே உயிராயிற்றென்று கொள்ளவரும்; கொள்ளின் ஆபரணமாய்த்தோன்றுங்காலத்தும் பொன்னின்தன்மை விளங்குதல்போல உயிராகத்தோன்றுங்காலத்தும் பிரமத்தின்தன்மை விளங்கவேண்டும்; பிரமத்தின்தன்மையோ நினைப்பு மறப்புச் சுக துக்க முதலியவற்றிற் கட்டுப்படாதது. உயிரோ அவற்றிற் கட்டுப்பட்டிருப்பதை அனுபவத்திற் காண்கின்றோம். ஆதலால், அவ்வுவமையை ஒப்புக்கொள்ளுமிடத்துப் பொருள் ஒன்றே எனப்பட்டு ஒருபொருளாகிய பிரமமே சுகதுக்கமுதலியவிகாரத்தைப் பொருந்துமெனக் கொள்ளவருமாதலின் அபேதம் என்பதற்கு அவ்வுவமையைக்கொள்ளாது உயிரையும் உடலையும் உவமையாகக்கொண்டனர். இவ்வுவமையில் உயிர்போல இறைவன், உடல்போல உயிர், இவ்விரண்டும் பிரிக்கமுடியாமற் கலந்துநிற்றலால் ஒன்றாதற்கு உவமையாயிற்று. இவ்வுவமையிலுள்ள விசேடங்களெல்லாம் இவ்வதிகரணத்து முதலாவது வெண்பா உரையில் விளக்கப்பட்டிருக்கின்றன. உபநிடதத்தில் பொற்பணி உவமையைக் கூறியதன் கருத்தென்னையெனின், பொன்னென்னுஞ் சொல்லுக்குப் பொருளொன்று, ஆபரணமென்னுஞ் சொல்லுக்குப் பொருளொன்று, ஆபரணம் பொன்னையின்றித் தனித்துநில்லாது, இவ்வாறே இறைவனையின்றி உயிர் தனித்து நில்லாமைக்குக் கூறியவாறும்.

பேதத்திற்குரிய இருளும் வெளியும் என்ற உவமையில் பொருளிரண்டே என்பது ஒப்புக் கொள்ளப்படினும், அப்பொருளின் தன்மைகளோடு முரணும். எவ்வாறெனின், வெளி என்பது இவ்விடத்திற் சூரியனொளியைக்குறிக்கும்; குறிக்கவே சூரியனொளி பிரகாசிக்குங்கால் இருள்தோன்றாது; இருள் தோன்றுங்கால் சூரியனொளி பிரகாசிக்காது. ஆகவே, ஒன்றன் உபகாரம் பிறிதொன்றற்கு வேண்டப்படுவதின்றாய் முடியும். அதுபோல, இறைவனும் உயிரும் இரண்டே எனக்கொண்டு உயிர்தோன்றுங்கால் இறைவன் தோன்றாமலும் இறைவன் தோன்றுங்கால் உயிர்தோன்றாமலும் நிற்குமெனக் கொள்ளவரும். அவ்வாறு கொள்ளுங்கால் உயிருக்கு இறை

வன் உபகாரம் வேண்டப்படுவதில்லையாய்த் தனித்து இயங்குதல் உண்டெனப்படும். ஆதலால், பேதத்திற்குக்கூறிய இருள் ஒளி உவமையைக்கொள்ளாது அகரத்தையும் ஏனைய அக்கரங்களையும் உவமையாகக்கொண்டனர். இவ்வுவமையில் முதல்வனையின்றி உயிருக்கு இயங்குதலில்லை என்பது விளங்கும். இது இவ்வதிகரணத்து இரண்டாவது வெண்பாவில் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது.

பேதாபேதத்திற்குக் கூறிய சொல்லும் பொருளும் என்ற உவமையில் பொருளிரண்டேயாயினும் சொல்லும் பொருளும் கலந்து நிற்றலில்லை. எவ்வாறெனின், சொல் வாக்கிலிருப்பது, பொருள் அவ்வாக்கின் வேறாயிருப்பது. அதுபோல, உயிரிருக்கும் இடமொன்றும் பிரமம் இருக்கும் இடம் ஒன்றுமாயில்லாமல் எங்கும் உயிரும் பிரமமும் கலந்திருப்பதால் சொல்லும் பொருளும் என்ற உவமையைக் கொள்ளாது பண்ணும் ஓசையுமென்ற உவமையைக்கொண்டனர். பண்ணென்பது இசைவிகற்பம்; இசையைவிட ஓசைவேறன்று. ஓசை இசையுமன்று. அதுபோல முதல்வனைவிட உயிர்வேறன்று. உயிர் முதல்வனுமன்று. இவ்வுவமைபோலவே பழமும் சுவையுமாம். இவ்விரண்டு உவமைகளும் இவ்வதிகரணத்து மூன்றாவது வெண்பாவில் விளக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு பேதமுதலிய மூன்றற்கும் பிறர்கூறிய உவமைகளை மறுத்து வேறு வேறுவமை கூறிய இக்கருத்துப்பற்றியே புடை நூலாசிரியர் சிவப்பிரகாசம் என்னும் நூலில்,

"புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப் புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப், பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேத முஞ்சொற் பொருள்போற் பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன, வறத்திறனல் விளைவதா யுடலுயிர்கண் ணருக்க னறிவொளிபோற் பிறிவரு மத் துவித மாகுஞ், சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றும்."

என அவ்வுவமைகளை மறுத்து மூன்றற்கும் வேறு உவமை கூறினர். அந்நூலில் சித்தாந்தபட்சமாக அபேதத்திற்கு உடலையும் உயிரையும் பேதத்திற்குக் கண்ணையும் சூரியனையும், பேதாபேதத்திற்கு உயிரறிவையுங் கண்ணொளியையுங் கூறினர். அகரத்தையின்றி ஏனைய அக்கரங்கள் தொழிற்படாதவாறுபோலச் சூரியனையின்றிக் கண் தொழிற்படாமையினாலும், ஓசையும் பண்ணும் பிரிப்பின்றி நிற்றல்போல உயிரின் அறிவும் கண்ணொளியும் பிரிப்பின்றி நிற்றலானும், பேதத்திற்கும் பேதாபேதத்திற்கும் சிவப்பிரகாசத்திற் கூறிய உவமைகள் இந்நூலிற்கூறிய உவமைகளோடு முரணாதவாறு அறிக.

முதல் அதிகரணம் முற்றிற்று.

இரண்டாம் அதிகரணம்.

உயிர்களுக்கு வினைப்பயனை இறைவன் கூட்டுவேன் எனக்கூறும்
மேற்கோள்.

இனி இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனாணையின் வரும் என்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், முதல்வன் அவ்வாறு உயிர்களோடியைந்து நின்று புனருற்பவஞ் செய்யுங்கால் உலகத்துக்குப்போல அவனுக்குத் துணைக்காரணமுதலியன வேண்டப்படுமோ படாவோ என்னும் ஐயப்பாட்டின்கண் முதல்வனது சுதந்திரத்திற்கும் அளவிலாற்றற்கும் இழுக்காய் முடியுமாகலின், அவனுக்கு அவை வேண்டப்படா எனப் பரிணமவாதிகள் கூறுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

(இ—ள்) வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ - ள்.) இவ்வான்மாக்களுக்கு—முதல்வன் இவ்வாறு மூவகையுமாய் நிற்றற்குரிமையுடைய உயிர்களுக்கு,—இருவினை—முற்பிறவிகளின் ஈட்டப்பட்டு மாயையிற் கட்டுப்பட்டுக்கிடந்த புண்ணிய பாவங்கள்,—முதல்வன் ஆணையின்—இறைவனுடைய சிற்சத்தியால்,—வருமென்றது—வரும். எ—று.

ஈண்டு இருவினையென்றது முற்பிறவிகளினீட்டப்பட்டு மாயையிற் கட்டுப்பட்டுக்கிடந்த புண்ணியபாவங்களை யென்க. எனவே, மாயையினுண்மையும் பெறப்பட்டது. இவை வேண்டப்படுதல்பற்றி முதல்வன் சுதந்திரத்திற்கு இழுக்கில்லையென்பார் முதல்வனாணையின் வரும் என்றார்.

விளக்கம்.

முதலதிகரணத்தால் உயிர்களோடு முதல்வன் ஒன்ருயும், வேருயும், உடனுயும் நிற்பனெனக்கூறி, அவ்வாறு நின்று உயிர்களுக்கு வினைப்பய ஞகத் தனுகரணபுவனபோகங்களைக் கூட்டுமுறையை இரண்டாம் அதிகா ணத்தாற் கூறுகின்ருர்.

இது சூத்திரத்திலுள்ள ஆணையின் இருவினையின் என்பதைப பதச் சேதஞ்செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்ருேவெனின், முதல்வன் ஒன்ரு யும் வேருயும் உடனுயும் உயிர்களோடு பொருந்திநின்று புதுச்சிருட்டியைச் செய்யுங்கால் உயிர் ஒன்றைச்செய்வதாயின் செய்யப்படுகின்றபொருளுக்கு முதற்காரணமுந் துணைக்காரணமும் வேண்டப்படுவனபோல, முதல் வனுக்கும் முதற்காரணம்,துணைக்காரணங்கள் வேண்டப்படுமோ, படாவோ என்பது ஐயப்பாடு. இவ்வையப்பாட்டின்கண் முதற்காரணம் துணைக்கா ணம் வேண்டப்படுமோயின் எல்லாம் வல்லவன் என்னும் சுதந்திரத்திற்கும் அளவிலாற்றற்கும் இழுக்காய் முடியுமாகலின், முதல்வனுக்குப் புதுச் சிருட்டி செய்யுங்கால் முதற்காரணம் துணைக்காரணம் வேண்டப்படா வென்பது பிறர்கூறும் பக்கம். இவ்வாறு கூறுவோர் பரிணுமவாதிகள். இவர் கூற்றை ஆசங்கித்துக்கொண்டு சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைப் பதச்சேதஞ்செய்து முதற்காரணம் துணைக்காரணம் வேண்டப்படுமெனக் கூறியவாரும்.

பரிணுமமாவது ஒன்று பிறிதொன்ருதல். அதாவது பால் தயிராத லாம். இவ்வாறே பிரமமே உலகமாயிற்று என்று கூறுபவர் பரிணும வாதிகள்.

(இம்மேற்கோளின் பொருள்.) மேலே அதிகரணத்திற் கூறியவாறு முதல்வன் மூவகையுமாய் நிற்றற்கு உரிமையுடைய உயிர்களுக்கு முற்பிறவி களிற் சம்பாதிக்கப்பட்டு மாயையிற் கட்டுப்பட்டுக்கிடந்த புண்ணியபாவங்க ளின் பலன்களாகிய சுகதுக்கங்கள் இறைவனுடைய சிற்சத்தியால் வரும் என்றவாறு.

நல்லசெயல்தீயசெயலாகிய இரண்டும் இருவினையெனப்படுமாயினும், இந்த மேற்கோளில் இருவினையென்றது அச்செயல்களையன்று; முற்பிறவி கள்தோறும் செய்யப்பட்ட அம்முயற்சிகள் செய்தபொழுதே அழிந்து, அழியினும் சூக்குமரூபமாக வெளிப்படத்தோன்ருமல் மாயையிற் கட்டுப் பட்டிருக்கும்; கட்டுப்பட்டிருக்குங்கால் புண்ணியபாவமென்று பெயர்பெ றும்; இதுவே சஞ்சிதமாம்; இப்புண்ணியபாவங்களே இம்மேற்கோளில் இருவினையெனப்பட்டது. சூத்திரத்துள் இருவினை யென்றதற்கும் இவ் வாறே கொள்க.

மாயையிற் கட்டுப்பட்டிருக்கும் என்றதனல் மாயை உண்டென்பதும் பெறப்பட்டது. வினையானது மாயையிற் கட்டுப்பட்டிருக்குமென்று கூருமல் செய்த உயிரினிடத்தாவது கூட்டும் இறைவனிடத்தாவது கட்டுப்பட்டிருக்குமெனவும், மாலயயென்பது ஒன்றில்லை எனவும் கொண்டால் என்னையெனின், கட்டுப்பட்டிருக்குமிடம் கட்டுப்பட்டிருப்பதன் பலனைத் தோற்றுவிக்கும் உரிமையும் ஆற்றலும் உடையனவாயிருத்தல்வேண்டும். உயிரினிடத்துக் கட்டுப்பட்டிருக்குமெனின் தனுகரணபுவனபோகமெல்லாம் உயிரினிடத்திலிருந்து தோற்றமென்று சொல்லவேண்டும். இவ்வாறு சொல்லுதல் இந்திரசாலம்போலச் சொல்மாத்திரையேயன்றி உண்மையன்று. உண்மையாயினும் தனுமுதலிய காரியமாகிய சடத்திற்கு முதற் காரணமாகிய உயிரும் சடமெனப்படல்வேண்டும். ஆதலால் வினை கட்டுப் பட்டிருத்தற்குரிய இடம் உயிரென்றல் பொருந்தாது. இக்கருத்துப்பற்றியே வழிநூலாசிரியர் சிவஞானசித்தியார் உ-ம் சூ-ம். உ0-வது செய்யுளில் "இருஞ்சுவர்க்கம், பொய்யர்வாழ் நரகம் பூமி புந்தியிற்கிடந்துபோந்த, தையுனே யழகி துன்சொ லிந்திர சால மாய்த்தே" என்றருளினர். இனி இறைவனிடத்து வினை கட்டுப்பட்டிருக்குமெனின், வினையின் காரியமாகிய சடத்தோற்றத்திற்கு இறைவன் முதற்காரணமெனப்பட்டுச் சடமாதல் வேண்டும்; ஆதலால் அதுவும் பொருந்தாது. அவ்வாருயின் வாதுளாகமத்தில் முதல்வனுடைய ஒவ்வொரு உறுப்புக்களில்நின்று உலகந் தோன்றுமெனவும், இக்கருத்தேபற்றி வழிநூலாசிரியர் சிவஞானசித்தியார் முதற் சூத்திரம் சஅ-வது செய்யுளில் "உலகவ னுருவிற் றோன்றி யொடுங்கிடும்" எனவுங் கூறியவைகளோடு முரணுதோவெனின், முரணுது; எதனலெனின், மாயையினின்றுந் தோன்றிய உலகை மாயைக் காதாரமாகிய இறைவனினின்றுந் தோன்றியதாகக் கூறியதனலென்க. இன்னும் இதன் விரிவை மேல் ௧௩ - ம் பக்கத்திற் காண்க. இவ்வாறு வினை கட்டுப் பட்டிருத்தற்கு ஆசாரம் உயிரும் இறைவனும் இல்லையெனல் பெறப்படவே, மாயையே வினை கட்டுப்பட்டிருத்தற்கு ஆதாரமென்பது பெறப்படும். உதாரணமாக, வித்தானது விதைத்தவனிடத்துக் கட்டுப்பட்டுப் பலன்றருவதில்லை; தண்ணீரினிடத்துங் கட்டுப்பட்டுப் பலன்றருவதில்லை; மண்ணினிடத்திற் கட்டுப்பட்டுக்கிடந்து தண்ணீர் கூடினவிடத்துப் பலன்றரும். மண் மாயைக்கும், வித்து வினைக்கும், தண்ணீர் சிற்சத்திக்கும் உவமைகளாம். பலன்றரும்வரை அழியாமற் காத்தற்பொருட்டு விதைத்தவனும் பற்றுக்கோடாவன். இவ்வாறே செய்தவினையும் செய்தவன் புத்தி தத்துவமும் மாயையும் பற்றுக்கோடாயிருக்கும். விதைத்தவன் பற்றுக்கோடாயிருத்தல் அநுபவித்தற்பொருட்டேயன்றித் தோற்றுவித்தற்பொருட்டல்லாததுபோலச் செய்தவன் பற்றுக்கோடாயிருத்தல் அநுபவித்தற்பொருட்டேயன்றிப் பலனைத்தோற்றுவித்தற்பொருட் டன்று. வித்துப்பலனுக்கு வரும்வரை வித்தையிட்டவன் வேண்டுவன செய்தல்போல வினைசெய்த

வன் மேலுமேலும் அவ்வினையைச் செய்வான்; அவ்வாறு செய்தலைத்தான் பக்குவமாதலென்று கூறப்படும். ஒருவினை மேலுமேலுஞ் செய்யப்பட்டு இனிமேற் செய்யவேண்டியதில்லையென்றபொழுது அனுபவத்திற்கு வரும; இது ஒரு வீடுகட்ட ஆரம்பித்துக் கட்டிமுடிந்தவுடன் அனுபவிப்பதுபோலக் கொள்க. வினை அவ்வாறு பிறவிதோறும் மேலுமேலுஞ் செய்யுங்காலத்து முன்செய்தோமென்ற தொடர்ச்சியறிவு நிகழாவிடினும் வாசனைமாத்திரையான தொடர்ச்சிநிகழ்தல்கூடும். இவ்வாறு மாயை உண்டென்று பெறப்பட்டவாறு அறிக.

இவ்வாறு உலகத்தைத் தோற்றுவிப்பதற்கு முதற்காரணமாகிய மாயையும் துணைக்காரணமாகிய வினையும் வேண்டப்படுதல்பற்றி இவ்விரண்டுமின்றி முதல்வனுக்கு உலகத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றலில்லை யெனப்பட்டு முதல்வன் சுதந்திரத்திற்குக் குறைவுண்டாகாதோ என்னும் ஐயத்தை நீக்குதற்பொருட்டு முதல்வன் ஆணையின்வரும் என்று மேற்கோளிற் கூறினார். முதல்வன் ஆணையின்றி வினைப்பயன்தானே வருமாயின் சுதந்திரத்திற்குக் குறைவுண்டாகும்; எவற்றையுந் தன் ஆணையாற் செய்வித்தல் சுதந்திரத்திற்கு மேம்பாடாவதன்றிக் குறையாகாது.

உயிர்களுக்கு வினைப்பயன் இறைவனாணையால்வரும்
என்பதற்குக் காட்டும்

ஏ து.

ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை அவனதாக்கினையாகலான்.

சிற்றுரை.

எ—து ஏ-து எ—னின், ஆணையே யமையும், இருவினை யெற்றுக்கு என்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) ஒரு பட்டணத்தைப்புரக்கும் வேந்தன் பாடிகாவற்றொழிலைக் (களைகணுவா னொருவன்மாட்டு) வைத்தாற்போல (எல்லாவறிவுமுதன்மை யநுக்கிரகங்களுடைய அம்முதல்வன் புனருற்பவத்தைச் செய்வதாகிய) தனதாணையை அவ்விருவினைகண் மாட்டு வைத்து நடாத்துதலே முறையாகலான், இனி யிவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனாணையின்வரும் என மேற்கொண்டது எ—று.

முதல்வன் செய்யுஞ் செய்தியெல்லாம் உலகத்தோடொப்ப நிகழ்வனவாகலின் ஈண்டைக்கு அரசன் செய்தி உவமையாயிற்று.

பாடிகாவலாவது களைகணுவா னொருவனைக்கொண்டு வேந்தன் செய்விப்பதொரு தண்டத்தொழில் விசேடம். அது "கோடிகாவனைக் கூறுதநாளெலாம்—பாடிகாவலிற் பட்டுக்கழியுமே" என்னுந் திருப்பாட்டானு மறிக. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறெல்லா முரைப்ப.

விளக்கம்.

இந்த ஏது என்னசொல்லிற்றோ வெனின், இருவினை முதல்வன் ஆணையால் வருமென்று மேற்கோளிற்கூறப்பட்டதை மறுத்துப் புதுச் சிருட்டியைச் செய்வதற்கு ஆணையாகிய சத்தியேபோதும், இருவினை வேண்டுவது எதற்காக என்பார் வினவை ஆசங்கித்துக்கொண்டு இருவினை வேண்டுமெனக் கூறி மேற்கோளைச் சாதித்தவாறும்

(இந்த ஏதுவின்பொருள்.) ஒருபட்டணத்தைக்காக்கும் அரசன் பாசறையிற் காவல்வைக்குந் தண்டத்தொழிலை, உரியவனாகிய ஒரு அதிகாரி மாட்டுவைத்துச் செய்வதுபோல, முதல்வன் புதுச்சிருட்டியைச் செய்யுந் தனது சத்தியை இருவினையின் இடமாகவைத்து நடாத்துவனாதலால் இனி இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின் வரும் என மேற்கோள் கூறியது எ-று.

முதல்வன் செய்யுஞ் செய்தியெல்லாம் உலகத்தோடொப்ப நிகழ்வனவாம். எவ்வாறெனின், அரசன்போல முதல்வன். மந்திரிமுதலியோர் போலச் சிருட்டிமுதலிய தொழிலைச்செய்யும் அதிகாரத் தெய்வங்கள். குடிகள்போல ஏனைய உயிர்கள். சட்டம்போல வேதாகமங்கள். குற்றவாளிகளிருக்கும் காராக்கிருகம் (மறியற்கூடம்) போல நாகலோகம். மந்திரிமுதலியோர் பதவிபோலத் தேவலோகம். குடிகள் பதவிபோல மண்ணுலகம். இவ்வாறே பிறவுங்காண்க. ஆதலால் இவ்விடத்து அரசன்செய்தி உவமையாயிற்று.

பாடிகாவல் என்பது ஒருதண்டத்தொழில் விசேடம். அதாவது, பாசறையிற்காவலில் வைத்தலாம். இதனைக் "கோடிகாவனைக் கூறுதநாளெலாம் பாடிகாவலிற் பட்டுக்கழியுமே" என்னுந் திருநாவுக்கரசுசுவாமிகள் திருப்பாட்டானும் அறிக. இத்திருப்பாட்டில் பாடிகாவலென்றது பாசறை போன்ற உடம்பிற் கட்டுப்பட்டிருத்தலைக் குறித்தபடியாம். பாடிகாவலென்பது அரசன் செய்விப்பதொரு தண்டத்தொழில் விசேடமென்றறியாதார் தத்தமக்கு வேண்டியவாறெல்லாம் உரைப்பர்.

இந்த ஏது முதற்காரணந் துணைக்காரணங்கள் வேண்டாமென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபாயிற்று.

வினை உண்டென்பதற்குக் காட்டும்
உதாரணம்.

உள்ளதே தோற்ற வுயிரணையு மவ்வுடலி
னுள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோற்
செய்வன் செயலணையா சென்று.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின். வினை உண்டென்பதற்கும் அதுவே உயிர்க்குப் பயனய் வருமென்றதற்கும் மேல் வினையேறுமாற்றிற்கும் அது முதல்வனையின்றி யமையாமைக்கும் பிரமாணமென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

(இ—ள்.) உள்ளதே தோற்ற - (இல்லது தோன்று தென்பது மேற்கூறிப் போந்தமையான்) முன் உள்ளதாய புண்ணியபாவ மென்னும் இருகூற்றுச் சஞ்சிதவினையே (தன்பயனாகிய இன்பத் துன்பங்களையும் அவை நுகர்தற்குரிய நிலைக்களமாகிய உடம்பினையுந்) தோற்றுவிப்ப,—உயிர் அவ்வுடலின் அணையும் – (அவ்வின் பத்துன்ப நுகர்ச்சி சடத்துக்குக் கூடாமையிற்) சித்தாகிய உயிரே அவ்வுடம்பிற் பொருந்தி அவற்றையநுபவிக்கும். (முன்வினையை ஈண்டநுபவித்தொழிந்தால் மேலைக்கு வினையுண்டாமாறி யாங்ஙனமெனின்),—முன்செய்வினை உள் அடைவே உள்ளதாம்—முன்செய்தவினை அநுபவித்தற்கேதுவான முறைமையிலே மேலைக்கு வினையுளதாம். (அற்றேல், அவ்வினையே பயனாகவருமென வமையும், முதல்வன் எற்றுக்கெனின்),— செய்பவர் செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோல்—உழவர் செய்யுந் தொழிற்குத் தக்கபயனை விளைநிலம் விளைவிப்பதன்றி அத்தொழிலானே விளைவிக்கமாட்டாததுபோல,—வள்ளலவன் செய்வன்—(உணவும் வித்துமாய்த் தொன்றுதொட்டுவரும்அவ்வினைகளை) வள்ளலாகியமுதல்வனே அவ்வுயிர்கட்குக்கூட்டுவன்,—செயல் சென்று அணையா— (அவ்வாறன்றி) வினை (தானே உயிர்கட்குப் பயனாய்) வந்துபொருந்தமாட்டாது எ—று.

வள்ளலென்றார், தற்பயன்குறியாது "வேண்டுவார் வேண்டிய"வாறேநல்கும் அருளுடைமைநோக்கி.

உள்ளடைவு உள்ளுதற்கேதுவாகிய அடைவென விரியும். ஏகாரம் ஏழாவதன் பொருட்கண் வந்தது. உள்ளுதல் ஈண்டநுப வித்தல். அதற்கேதுவாகிய முறைமையாவன அநுபவித்தற்குத் துணைக்காரணமாகிய விருப்பு வெறுப்புக்கள். அவற்றின்கணுண் டாமாறு முன்னர்க்காட்டுதும்.

மேல் முதல்வனுக்கு வினைவேண்டப்படுமென்பதற்கு அரச னை யுவமைகூறினார்; ஈண்டு வினை முதல்வனையின்றி யமையாதென் பது உணர்த்துதற்கு உழவு தொழிலை யுவமை கூறினாரெனக் கொள்க.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) உள்ளதே தோற்ற உயிர் அவ்வுடலின் அணையும் முன்செய்வினை உள் அடைவே உள்ளதாம் செய்பவர் செய்திப் பயன்விளை க்கும் செய்யே போல் வள்ளலவன் செய்வன் செயல் சென்று அணையா.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோவெனின், இருவினை உண் டென்பதற்கும், அவ்வினையே உயிருக்குப்பயனாய் வருமென்றற்கும், மேல் வினை உண்டாகு முறைமைக்கும், அந்த இருவினை முதல்வனையின்றித் தானே பயன்றராமைக்கும் பிரமாணம் யாதோவென்னும் வினாவை ஆசங் கித்துக்கொண்டு இருவினை உண்டென்றும் அவ்வினை முதல்வனாணை யால் வருமென்றும் கூறி இருவினை முதல்வன் ஆணையின் வருமென்ற ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) இல்லது தோன்றாதென முதற்சூத்திரம் இரண்டாம் அதிகரணத்து மேற்கோளிற் சாதித்திருக்கின்றமையால், முன்னுள்ளதா கிய புண்ணியபாவமென்னுஞ் சஞ்சிதவினையே அதன் பயனாகிய இன் பத்துன்பங்களையும் அவ்வின்பத்துன்பங்களை அநுபவித்தற்குரிய உயிர் தங்கும் உடம்பினையுந் தோற்றுவிக்கும். அவ்வாறு தோற்றுவிக்குங்கால் அவ்வின்பத்துன்பங்களைச் சடமாகிய உடம்பு அநுபவித்தல் கூடாமையால் சித்தாகிய உயிரே அவ்வுடம்பைப்பொருந்தி அனுபவிக்கும், இவ்வாறு முன் வினைப்பயனை இப்பொழுது அநுபவித்தொழிந்தால் மேல்வினையுண்டாவது எவ்வாறெனின், முன்செய்த வினையின்பயனை அநுபவித்தற்கேதுவான முறைமையில் விருப்பு வெறுப்புக்கள் உளவாமாதலால் அவ்விருப்பு வெறுப் புக்களால் மேலைக்குவினையுளதாம். அவ்வாறாயின் அவ்வினையே பயனாக வருமென்றல் போதும் முதல்வன் வேண்டுமென்றல் எதற்காகவெனின், உழவர்செய்யுந் தொழிற்குத்தக்க பயனை விளைநிலம் விளைவிப்பதன்றி அத் தொழில் தானே விளைவிக்கமாட்டாது. அதுபோல, முன்வினையின் அநு பவமும் பின்வினைக்குவித்துமாகித் தொன்றுதொட்டுவரும் அவ்வினைப்பயன்

களை வள்ளலாகிய முதல்வனே அவ்வுயிர்கட்குக் கூட்டுவன். அவ்வாறன்றி வினை தானே உயிர்கட்குப் பயனாய்வந்து பொருந்தமாட்டாது. எ - று.

(க - ரை.) உழவர் செய்யுந் தொழிற்கு விளைநிலம் பயன்கொடுப்பது போல உயிர்கட்கு வினைப்பயனை இறைவன் தருவன் என்பதாம்.

இறைவன் தன்பயன் குறியாது "வேண்டுவார் வேண்டியதே யீவான் கண்டாய்" என்னுந் திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பாட்டின்படி அவ ரவர் வேண்டியவாறே கொடுக்கும் அருளுடைமைநோக்கிச் செய்யுளில் அவனை வள்ளல் என்றார். வேண்டுவார் வேண்டுவனவெல்லாந் தடையின் றிக்கொடுப்பது வள்ளலின் தன்மை.

உள்ளடைவு என்பது உள்ளுதற் கேதுவாகிய அடைவு என விரியும். உள்ளடைவே என்பதிலுள்ள ஏகாரம் அடைவின்கண் என்னும் ஏழாம் வேற்றுமைப் பொருளில்வந்தது. அப்பொருள்பற்றி முறைமையிலே என உரை செய்யப்பட்டது. உள்ளுதல் என்பது கருதுதலைக்குறிக்குமேனும் இவ்விடத்து அநுபவித்தலைக் குறித்து நின்றது. அநுபவித்தற்கேதுவா கிய முறைமையாவன எவையோவெனின், அதற்குத் துணைக்காரண மாகிய விருப்பு வெறுப்புக்களாம். முன்வினைப்பயனை அநுபவித்தற்குத் துணைக்காரணமாகிய விருப்பு வெறுப்புக்களின்கண் மேல்வினை உண்டாகு மென்பது முன்னர்க்காட்டப்படும். அதாவது பன்னிரண்டாஞ் சூத்திரத்து முதல் அதிகரணத்துப் புண்ணியபாவம் பொருந்தும் என்ற வெண்பா உரை யின் கீழ், "விருப்பு வெறுப்புக்களால் ஏகதேசக்காட்சியும், அதனால் விப ரீதவுணர்வும் மேம்பட்டுப் பிறவிக்கு வித்தாம்" எனக்கூறியதேயாம். விபரீதவுணர்வு பிறவிக்குவித்தாம் என்னும் இக்கருத்தே பற்றிச் சிவஞான சித்தியார் உ-வது சூ-ம். கஉ-வது "மேலைக்கு வித்துமாகி" என்ற செய் யுளில் நான்செய்தேன் என்னுங் கருத்துவகையால் மேல் ஆகாமியம் உண்டாமென வழிநூலாசிரியர் அருளிச்செய்தனர்.

மேல் ஏதுவில் முதல்வனுக்கு அரசனையும் வினைக்கு அதிகாரியை யும் உவமையாகக் கூறினர். இவ்வுதாரணத்தில் முதல்வனுக்கு விளைநில த்தையும், வினைக்கு உழவு தொழிலையும் உவமையாகக்கூறினர். இவ்வாறு வேறுவேறு உவமை கூறியதன்கருத்தென்னையெனின், முதல்வன் பல வேறு வகைப்படச் சிருட்டிமுதலிய தொழிலைச் செய்வதற்கு வினைவேண் டப்படுமென்பதற்காக அரசனுக்கு மந்திரிமுதலியோர் வேண்டப்படுவதை உவமையாகவும், வினை பலனைத் தருவதற்கு முதல்வன் வேண்டப்படுமென் பதற்காக உழவுதொழிற்கு விளைநிலம் வேண்டப்படுவதை உவமையாகவும் கூறியவாறும்.

வினைப்பயனை உயிர் அறிந்தெடுத்துக் கொள்ளாதென்பதற்குக்காட்டும் உதாரணம்.

அவ்வினையைச் செய்வதனி லவ்வினைஞர் தாஞ்சென்றங்
கவ்வினையைக் காந்த பசாசம்போ—லவ்வினையைப்
பேராம லூட்டும் பிரானி னுகராரே
லார்தா மறிந்தணைப்பா ராங்கு.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், இருவினைசடமாகலிற் சென்றணைய மாட்டாவாயினும் உயிர்கள் சேதனமாகலின் அவையே அவற்றது பயனையறிந்து எடுத்துக்கொண்டு நுகரும் வள்ளல் எற்றுக்கு என்னுங் கடாவையாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ—ள்.) காந்த பசாசம்போல்—(ஒருவனெடுத்து நேரொக்கப் பிடித்தவழி) இரும்பினை (வலித்துக்கொள்ளுங்) காந்தம்போல,— அவ்வினையைப் போமல் ஊட்டும் பிரானின்—அவ்வினைப்பயன் களைப் பிறழாமல் நுகர்விக்கும் முதல்வனால்,—அவ்வினைஞர்தாம்— அவ்வினைகளைச் செய்யும் ஆன்மாக்கடாம்,—அவ்வினையைச் செய் வதனில் சென்று அங்கு அவ்வினையை நுகராரேல் ஆர் தாம் அறிந் து அணைப்பார்—அவற்றைச் செய்தற்குரிய நிலைக்களமாகிய உட ம்பின்கட் பொருந்தி (அவற்றதுபயனை அநுபவிப்பர்) அவ்வாறநு பவியாராயின் வேறே எவர்தாம் அவற்றையறிந்து கூட்டுவார்,— ஆங்கு—(அறிவுஞ் சுதந்திரமுமின்றி மலத்தின் மறைப்புண்டு கிடக் கும்) அப்பெத்தக்காலத்து எ-று.

ஒருவருமில்லை யென்பதாம்.

ஆன்மாக்களுக்குத் தமக்கென அறிவின்மையானும், வினை சடமாகலானும், மாயை தாரகமாமத்தன்றுணிற்றல் எனப் போந்த மையானும், முதல்வனே அறிந்தணைப்பனெனப் பாரிசேடவள வை கூறுவார், பிரானினுகராரே லார்தா மறிந்தணைப்பாரென்றார்.

இது சொற்பொருட் பின்வருநிலை.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) காந்த பசாசம்போல் அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின் அவ்வினைஞர் தாம் அவ்வினையைச் செய்வதனில் சென்று அங்கு அவ்வினையை நுகராரேல் ஆர்தாம் அறிந்து அணைப்பார் ஆங்கு.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோவெனின், இருவினை அறிவில்லாத சடமாதலால் அவ்வினையானது செய்த உயிரைச் சென்று பொருந்த மாட்டாதாயினும் உயிர்கள் அறிவுடைப் பொருளாதலால் அவ்வுயிர்களே தாம் செய்த வினைகளின் பயனை அறிந்து எடுத்துக்கொண்டு அநுபவிக்குமாதலின் வினைப்பயனைக் கூட்டுவதற்கு வள்ளல்வேண்டும் என்பது எதற்காக என்னும் வினவை ஆசங்கித்துக்கொண்டு வள்ளல்வேண்டுமெனக் கூறி மேலை வெண்பாவிற் கூறியதை வலியுறுத்தியவாறும்.

(பொ - ரை.) இரும்பை இழுத்துக்கொள்ளுஞ் சத்தி காந்தத்தினிடத்தில் இருப்பினும்-இரும்பு நேராக இல்லையாயின் இரும்பிருக்கும் இடஞ் சென்று காந்தம் இழுப்பதில்லை. ஒருவன் காந்தத்தின் நேராக இரும்பைக் கூட்டினவிடத்து இழுத்துக்கொள்ளும். அதுபோல, வினைப்பயனை அனுபவிக்குஞ்சத்தி ஆன்மாவிடத்திலிருப்பினும் வினையை எடுத்துக்கொள்ளும் பேறறிவு ஆன்மாவிற்குக்கிடையாது. இறைவன் அவரவர்செய்த வினையை அவரவருக்குப் பிறழாமற்கூட்டும்பொழுது அவ்வினைப்பயன்களை அநுபவித்தற்குரிய உடம்பினை உயிர்கள் பொருந்தி அனுபவிக்கும். இறைவன் கூட்டவில்லையாயின் சிற்றறிவுடைய உயிருக்கு வினைப்பயனை வேறு யாவர் கூட்டுவர். எ—று.

(க - ரை.) இரும்பைக்காந்தத்தின் நேராக ஒருவன் கூட்டினால் அக்காந்தம் இழுக்குமாறுபோல வினைப்பயனை உயிர்கட்கு இறைவன் கூட்டினால் அவ்வுயிர் அனுபவிக்கும் என்பதாம்.

ஆர்தாம் அறிந்து அணைப்பார் என்றதனால் முற்றறிவுடைய இறைவனையின்றிச் சிற்றறிவுடைய உயிருக்கு வினைப்பயனைக் கூட்டுவார் ஒருவருமில்லை யென்றபடியாம்.

ஆன்மாக்களுக்கு இறைவன் அறிவித்தாலன்றித் தாமே அறியுஞ் சுதந்திர அறிவில்லையாதலால் வினைப்பயனைத்தாமே யறிந்து எடுத்துக்கொள்ள மாட்டா; வினை சடமாதலால் செய்த உயிரைத் தானே வந்துகூடமாட்டாது. வினைப்பயனைத் தோற்றுவிக்கும் மாயை தனக்கு ஆதாரமாகிய இறைவனது சத்தியில் நிற்குமென்பது "தாரகமாம், அத்தன்று ணிற்றல்" என்பதனாற் பெறப்பட்டது. (க - ம் சூ - ம் உ - அதி. வெ - உ.) இவ்வாறு பதி பசு பாசம் என்ற மூன்றனுள் பசுவாகிய உயிருக்கும் பாசமாகிய மாயை வினைக

ளுக்கும் வினைப்பயனைக்கூட்டும் உரிமையில்லை என்றல் பெறப்படவே எஞ்சிய இறைவனுக்கே அவ்வுரிமை உண்டெனப் பாரிசேட அளவையாற் கூறவெண்ணி, 'பிரானி னுகராரேல், யார்தா மறிந்தணைப்பார்' எனக் கூறினர்.

பாரிசேட அளவையாவது, மூவரில் இருவர் திருடவில்லையெனின், மற்றவன் திருடினனெனக்கொள்ளுதல். இவ்விடத்தில் பதி பசு பாசம் என்ற மூன்றனுள், பசு பாசங்களுக்கு வினைப்பயனைக் கூட்டமுடியாதென விலக்கவே, பதிக்குக் கூட்டமுடியுமென்றல் பாரிசேடமாயிற்று. அவ் வினைவை என முன்னர்வந்தசொல்லும் பொருளுமே பின்னரும் வருதலால் இது சொற்பொருட் பின்வருநிலை என்னும் அலங்காரமாம்.

(வினைப்பயனை இறைவன் கூட்டுவனென்பதற்குக் காட்டும்)
உதாரணம்.

நெல்லிற் குமியு நிகழ்செம்பி னிற்களிம்புஞ்
சோல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் போன்வா
ளலர்சோகஞ் செய்கமலத் தாம்.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், அவ்வினை ஆதியோ? அநாதியோ? ஆதியெனின் முன்பில்லது இடையே தோன்றுமென்பது சற்காரியவாதத்துக் கேலாது, அநாதியெனின் ஒருவர் கூட்டவேண்டுவதில்லையென்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பினில் களிம்பும் சொல்லின் புதிது அன்று தொன்மையே—நெல்லின்கணுமியும் செம்பின்கட் களிம்பும் எக்காலத்துளவாயினவென்று ஆராய்ந்து சொல்லுங்கால் அந்நெல்லுஞ் செம்பும் உளவாயினவன்றே உள்ளனவன்றி இடையே வந்தனவல்ல; அதுபோல,—வல்லி மல கன்மம் அன்று உளவாம்—மாயை மலம் கன்மமென்னு மும்மலங்களும் அநாதியே யுள்ளனவாம்,—கமலத்து அலர் சோகம் பொன்வாள் செய் வள்ளலால் ஆம்—(முன்னே யுள்ளதாய) தாமரைப்பூ அலர்தலும் கூம்புதலும் ஞாயிற்றினாற் செய்யப்படுமாறுபோல (அவை தத்தங்காரியங்களைச் செய்தல்) முதல்வனாலே யாம்.

புதிதன்றென்பதனைத் தனித்தனி கூட்டுக.

தொன்மையினுள்ளவற்றைத் தொன்மை என்றுபசரித்தார்.

ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

மாயை இறைவனுக்குப் பரிக்கிரகசத்தி யாகலின் வல்லி யென்றார்.

வினைக்குத்தொன்மை கூறுவார் இனம்பற்றி மாயைமலங்களுக்குந் தொன்மை கூறினர்.

மூலமலத்தின் காரியம் மோகம் மத முதலாயின. இருவினையின் காரியம் இன்பத்துன்ப முதலாயின. மாயையின்காரியம் தநுகரணமுதலாயின. வள்ளலாலாமெனவே திரோதானசத்தியது உண்மையும் பெற்றாம். அது பாகம் வருவித்தற்பொருட்டு மலத்தின் வழிநின்று மோகமுதலியவற்றைத் தொழிற்படுத்துவதாகிய சிவ சங்கற்பத்திற் கேதுவாதல்பற்றி மலமென்றுபசரித்துக் கூறப் படும். இவ்வாறு மலகன்மம் மாயை திரோதானம் மாயாகாரிய மென்னும் ஐவகைப்பாசமுங்கண்டு கொள்க.

இவற்றுண் மாயை சுத்தமாயை அசுத்தமாயையென் றிரு வகைப்படும். இவ்விரண்டனுட் சுத்தமாயையின்காரியமே அசுத்தமாயை யென்பாரும், சுத்தமாயைபோல அசுத்தமாயையும் அநாதியேயாமென்பாரும், ஒன்றுதானே ஊர்த்துவமாயை அதோமாயையென் றிருவகைப்படுமென்பாரும் எனப் பலதிறத்தர் ஆசிரியர். இனி முதல்வனது கிரியாசத்தியே சுத்தமாயை யெனப்படு மென்பாருமுளர். அது முதல்வனுக்குத் தாதான்மியசத்தியாகலிற் பரிக்கிரகசத்தியாகிய சுத்தமாயையாதல் யாண்டையதென்றொழிக. சுத்தமாயையினின்றும் பஞ்சகலைகளும் நால்வகை வாக்குஞ் சிவத்த்துவமைந்துஞ் சுத்தகாலமுதற் சுத்தநிலமீறாகிய முப்பத்தொன்றுந் தோன்றும். அசுத்தமாயையினின்றும் அசுத்தகால முதல் அசுத்தநிலமீறாகிய முப்பத்தொரு தத்துவங்களுந் தோன்றும். இந்தத் தத்துவங்களெல்லாம் பொதுவுஞ் சிறப்பும் பொதுச் சிறப்புமெனத் தனித்தனி மூவகைப்பட்டு உயிர்கடோறும் வெவ்வேறுளவாம்.

கன்மமும் "நாசோற்பத்தி பண்ணிவருமாதலா லநாதி" என்பதுபற்றிப் பிரபஞ்சம்போலப் பிரவாகாநாதி யென்பாரும், "ஏக

னநேக மிருள்கரும மாயையிரண் —டாகவினைவ் யனாதியில்" எ-ம், "ஆணவ முதலன் றதுபோற் கருமமும்." எ-ம், ஒப்பவோதுதல் பற்றி மூவகை வினைக்கும் முதற்காரணமாய மூலகன்மமொன்று அநாதிநித்தமா யுண்டென்பாருமென்று இருதிறத்தாசிரியரென்க. இவ்வினை யீட்டப்படுங்கால், மந்திரமுதலிய அத்துவாக்களிடமாக மனம் வாக்குக் காயமென்னும் மூன்றானீட்டப்பட்டு, தூலகன்ம மாய் ஆகாமியமெனப் பெயர்பெற்று, பின்னர்ப் பக்குவமாங்காறுஞ் சூக்குமகன்மமாய்ப் புத்திதத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் கிடந்து, சாதி ஆயுள் போகமென்னும் மூன்றற்கு மேதுவாய் முறையே சனகந் தாரகம் போக்கியம் என்னு மூவகைத்தாய், அபூருவம் சஞ்சிதம் புண்ணியபாவ மென்னும் பரியாயப் பெயர்பெற்று, பின்னர்ப் பயன்படுங்கால் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகம் என்னு முத்திறத்தாற் பலதிறப்பட்டு, பிராரத்தமெனப் பெயர்பெறும். ஆதிபௌதிகமாவது சடவாயிலாக வருவது. ஆத்தியான்மிகமாவது சடத்தோடுகூடிய சேதனம் வாயிலாகவருவது. ஆதிதைவிகமாவது ஒருவாயிலானன்றித் தெய்வந்தானே காரணமாகவருவது. இன்னும் இவ்வினைகள் உலகம் வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம் மாந்திரம் என்று ஐவகைப்பட்டு ஒன்றற்கொன்று ஏற்றமுடைத்தாய், முறையே நிவிர்த்திமுதலிய பஞ்சகலைகளினடங்கி, அசுத்தம் மிச்சிரம் சுத்தமெனப்படும் போகங்களைப்பயப்பிக்குமென்றறிக.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பினில் களிம்பும் சொல்லில் புதிது அன்று தொன்மையே வல்லி மலகன்மம் அன்று உளவாம் கமலத்து அலர் சோகம் பொன்வாள் செய் வள்ளலால் ஆம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், மேற்கூறிய இருவினையானது ஆதியோ? அநாதியோ? அவ்விரண்டினுள் ஆதியென்று கூறின் முன்பு இல்லாதது பின்னர்த்தோன்று மெனப்பட்டு உள்ளது தோன்றும் என்னும் சற்காரியவாதத்திற்குப் பொருந்தாது; அநாதி யென்று கூறின் அநாதியாயுள்ள அதனை ஒருவர் கூட்டவேண்டுவதில்லை என்னும் வினாவை ஆசங்கித்துக்கொண்டு, வினை அநாதியெனவும், ஆயினும் இறைவனே கூட்டவேண்டுமெனவுங் கூறி இறைவன் வேண்டுமென்று மேலை வெண்பாவிற் கூறியதை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) நெல்லினிடத்து உமியும் செம்பினிடத்துக் களிம்புமெக்காலத்து உளவாயின என்று ஆராயுங்கால் அந்த நெல்லுஞ் செம்பும் உள்ள அன்றே உள்ளனவன்றி இடையே வந்தனவல்ல. அதுபோல மாயை ஆணவம் கன்மம் என்னும் மும்மலங்களும் ஆன்மாவுள்ள அன்றே உள்ளன

வன்றி இடையே வந்தனவல்ல; ஆயினும் அமமும்மலங்களும் தத்தங்காரியங்களைத் தாமேசெய்யா. இறைவனாலேயே செய்யும். அவ்வாறு செய்தல் எதுபோலவெனின், முன்னே உள்ளதாய தாமரைப்பூவானது சூரியனால் முன்விரியாததுவிரிதலும், முன்விரிந்ததுவாடுதலும் போலவாம். (எ-று.)

(க - ரை.) மும்மலங்களும் அநாதியேயுள்ளன; அவை முதல்வனால் தத்தங்காரியங்களைச் செய்யும் என்பதாம்.

இச்செய்யுளிற்கூறிய நெல்லுமியுஞ் செம்பிற்களிம்பும் எடுத்துககாட்டுவமை எனப்படும். எடுத்துக்காட்டுவமையாவது உவமேயப் பொருளுக்குக் கூறுந்தருமத்தை உவமையினும் எடுத்துக்காட்டுதலாம். இவ்விடத்தில் அநாதித்தன்மை உவமானம் உவமேயம் இரண்டிடத்துங் காட்டப்பட்டது.

புதிதன்று என்பதை நெல்லினிடத்து உமி புதிதன்று, செம்பினிடத்துக் களிம்பு புதிதன்று, எனத் தனித்தனி கூட்டுக. இவ்வாறு கூட்டவில்லையாயின் உமியும் களிம்புமாகிய ப்ன்மை அன்று என்னும் ஒருமை வினைகொண்டு முடியாது.

தொன்மையின் உள்ளன என்று கூறவேண்டிய உமியையுங் களிம்பையும் தொன்மை யென்று உபசரித்துக் கூறினர்.

தொன்மையே என்றதிலுள்ள ஏகாரம் இடையேவந்தன வல்லவென இடையைப் பிரித்தமையின் பிரிநிலைக்கண் வந்தது.

மாயை இறைவனுக்குப் பரிக்கிரக சத்தியாதலின் அம்மாயையை வல்லி யென்று பெண்பாலாகக்கூறினர். பரிக்கிரக சத்தியென்பது வைப்புச் சத்தியாம். அதாவது வேண்டும்போது உபகாரப்படுவதாய்த் தன்னுள் அடங்கியிருக்குஞ் சத்தியாம். மாயையோ சடசத்தி; சித்துப்பொருளாகிய இறைவனிடத்துச் சடசத்தியிருத்தல் எவ்வாறு பொருந்து மெனின், சித்துப் பொருளாகிய உயிரினிடத்துச் சடசத்தியாகிய மந்திரசத்தி அடங்கியிருத்தல்போல இறைவனிடத்து மாயை அடங்கி யிருத்தல் கூடுமென்க.

வினையைப் பற்றிய சங்கைக்குச் சமாதானங் கூறு முறையில் பாசமென்னும் இனம்பற்றி மாயை ஆணவங்களுக்குந் தொன்மை கூறினர்.

ஆணவமலத்தின் காரியம், மோகம் மதம் இராகம் கவலை தாபம் வாட்டம் விசித்திரம் என எழுவகைப்படும். அவற்றுள்,

மோகம் :—குருவினாலும் நூலினாலுந் தீயன வென்றறிந்தவற்றில் நீங்காமல் நிற்கும் மயக்கம்.

மதம் :—தன்னைப்போல ஒருவரு மில்லை யென்மதித்தல்.

இராகம் :—கிடையாத பொருளினிடத்து ஆசைப்படுதல்.

கவலை :—கிட்டியபொருள் பிரிந்தபொழுது வருந்துதல்.

தாபம் :—சுற்றத்தைவிட்டுப் பிரிந்ததற்கும் பிரிவதற்கும் ஆற்ருமை.

வாட்டம் :—அவ்வாற்ருமையால் மலர்ச்சியின்றி வாடுதல்.

விசித்திரம்,—எச்செயலும் வினையின்வழியாய் நிகழ்வதென்றெண்ணுது தான்செய்ததாகவும் பிறர்செய்ததாகவும் எண்ணுதல்.

இருவினையின்காரியம்.—இன்பத்துன்பங்கள்.

மாயையின்காரியம்:—தநு கரணம் புவனம் போகம் என்பனவாம். தநுவாவது தூல உடம்பு. கரணமாவது இந்திரிய அந்தக்கரணமுதலிய சூக்குமவுடம்பு. புவனமாவது உலகம். போகமாவது உலகத்திலுள்ள அநுபவப் பொருள்கள்.

ஆணவமுதலிய பாசம் அநாதியேயாயினும் அப்பாசத்தின் காரியம் வள்ளலால் ஆம் என்று செய்யுளிற் கூறியதனுலேயே, திரோதானசத்தி உண்டென்பதும் பெறப்பட்டது. எவ்வாறெனின், திரோதானமென்பது மறைத்தல்; உயிர்களுக்குப் பக்குவம் வரும்பொருட்டு அனுபவிக்கவேண்டிய வினைப்பயன்களைக் கூட்டுவித்து அனுபவிக்கச்செய்யும் இறைவனுடைய சத்தியானது அனுபவிக்கவேண்டிய விடயங்களிலுள்ள குணதோஷங்களை அவ்வுயிர்களுக்குத் தெரியவொட்டாமல் மறைக்கும். அதுவே திரோதான சத்தியெனப்படும். குணதோஷங்களை மறைக்கவில்லையாயின் அனுபவங் கூடாது. அனுபவங்கூடாதாயின் மும்மலங்களைக் காரியப்படுத்தியும் பயனின்ரும். ஆதலால், மும்மலங்களைக் காரியப்படுத்துவன் என்றதனுலேயே திரோதானசத்தி யுண்டென்பது பெறப்பட்டவாறு அறிக. இத்திரோதானசத்தி உயிர்களுக்குப் பக்குவம் வருவித்தற்பொருட்டு ஆணவமலத்தின்வழியாய்நின்று மோகமுதலியவற்றைச் செய்விக்கும் சிவசங்கற்பத்திற்கேதுவாம். திரோதானசத்தியின்றேல் மோகமுதலியவற்றை ஆணவமலத்தில்நின்றுங் காரியப்படுத்த முடியாது. ஆதலால் மலத்தின்காரியத்திற் கேதுவாயிருக்குந் திரோதானசத்தி மலமென்று உபசரித்துக் கூறப்படும். ஆகவே, ஆணவம் கன்மம் மாயை திரோதானம் மாயாகாரியம் என்னும் ஐவகைப் பாசமும் உண்டென்பதை இவ்வுதாரணச் செய்யுளாற்கண்டுகொள்க. இருவினையும் அதன் காரியமும், ஆணவமலமும் அதன் காரியமும் வேறுவைத்து எண்ணப்படாமல் மாயையும் அதன் காரியமும் மட்டும் இரண்டுமலமாக வேறுவைத்தெண்ணப்பட்டதன் கருத்தென்னையெனின், ஆணவமும் கன்மமும் தத்தங் காரியத்தின் வேருய் நின்று தொழில்செய்வதில்லை. மாயையோ தன்காரியமாகிய தநுகரணாதிகளைத் தோற்றுவித்து அவற்றின் வேருய்நின்று மயக்கத்தையுஞ் செய்தலின் இருமலமாக எண்ணப்பட்டவாரும்.

இப்பஞ்ச மலங்களையும் மும்மலங்களுள் அடக்கிக் கூறுமிடத்து மாயாகாரியத்தை மாயையினும் திரோதானசத்தியை ஆணவமலத்தினும் அடக்கி, ஆணவம் கன்மம் மாயை யென மூன்றாகக் கூறுவர்.

இம் மும்மலத்துள், மாயையானது சுத்தமாயை அசுத்தமாயை யென் றிருவகைப்படும். இவ்விருமாயையினுள் அசுத்தமாயையைச் சுத்தமாயை யின் காரியமென்று சில ஆசிரியர் கூறுவர். சுத்தமாயைபோல அசுத்த மாயையும் அநாதியேயாமென்று சில ஆசிரியர் கூறுவர். மாயை ஒன்றே யெனவும் அதனுடைய மேற்பாகம் சுத்தமாயை யெனவும் கீழ்ப்பாகம் அசுத்தமாயை யெனவும் வேறு சில ஆசிரியர் கூறுவர். இவ்வாறு பலதிறப் படக் கூறினும் மாயை ஒரு பொருளென்பதில் ஒருவரும் மாறுபடவில்லை. இனி மற்றொருசாரார், முதல்வனது கிரியாசத்தியே சுத்தமாயை யெனப் படு மென்பர். அது பொருந்தாது. எதனாலெனின், கிரியாசத்தியானது முதல்வனுக்குத் தாதாத்மியசத்தியாம். தாதாத்மியமாவது ஒற்றுமையாய்க் கலந்து நிற்றல். மாயையோ பரிக்கிரகம் எனப்படும் அடங்கியிருக்கும் வைப்புச்சத்தியாம். ஆகவே அடங்கியிருப்பதாகிய சத்தியை ஒற்றுமைப் படக் கலந்திருக்குஞ் சத்தியென்று கூறுதல் பொருந்தாதவாறு அறிக.

சுத்தமாயையினின்றும், நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்திய தீதை என்னும் ஐந்துகலைகளும், சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்னும் நான்கு வாக்குக்களும், சுத்தவித்தை ஈசுவரம் சாதாக்கியம் சத்தி சிவம் என்னுஞ் சிவதத்துவம் ஐந்தும், சுத்தகாலமுதல் சுத்தநிலம் முடி பாகத் தத்துவ முப்பத் தொன்றுந் தோன்றும்.

அசுத்தமாயையினின்று அசுத்தகாலமுதல் அசுத்தநிலம் முடிபாக முப்பத்தொருதத்துவங்களுந் தோன்றும்.

முப்பத்தொரு தத்துவங்களாவன :—காலம் நியதி கலை வித்தை அராகம் புருடன் மாயை என்னும் வித்தியாதத்துவம் எழும், ஞானேந்திரிய மைந்து கன்மேந்திரியமைந்து பூதம் ஐந்து தன்மாத்திரை ஐந்து அந்தக் கரணம் நான்கு என்னும் ஆன்மதத்துவம் இருபத்து நான்குமாம். இத்தத் துவங்களின் பெயரும் தொழிலும் இவை ஆன்மாவிற்கு வேண்டப்படு மென்பதுமுதலிய யாவுந் தசகாரியவிளக்கத்து இலக்கண இயலில் தத்துவ ரூபங் கூறுமிடத்துக் கூறியிருக்கின்றமையால் அவ்விடத்துக் காண்க.

சுத்ததத்துவம் முப்பத்தொன்றும் சுத்தமாயாபுவனவாசிகளாகிய விஞ் ஞானகலர் பிரளயாகலர் என்னும் இருவகை உயிர்கட்கும், அசுத்த தத்து வம் முப்பத்தொன்றும் அசுத்தமாயாபுவனவாசிகளாகிய சகலவருக்கத் துயிர்கட்கும் பொருந்துவனவாம். சிவதத்துவத்தில் சுத்தம் அசுத்தம் என்னும்பேதங்கிடையாது. அது சுத்தமாயையின் காரியமேயாம். அசுத்த

மாயாபுவன பிரகிருதி மாயாபுவனவாசிகளுக்கும் சிவதத்துவம் சுத்தமாயா காரியமேயாம். ஏனைத்தத்துவங்கள் சுத்தம் அசுத்தமென இருவகைப்படு தற்கும், சிவதத்துவம் அவ்வாறுகாமைக்குங் காரணம் என்னை யெனின், ஏனைத்தத்துவங்களைத் தோற்றுவித்துத் தொழிற்படுத்துங் கடவுளர் அனந் தேசுவரரும் சிகண்டபரமேசுவரருமாம். சிவதத்துவத்தைத் தோற்றுவித் துத் தொழிற்படுத்துங்கடவுள் சிவபெருமானேயாம். ஏனைக் கடவுளர்போலச் சிவபெருமான் வேறுபடாமையால் அவராற் காரியப்படுஞ் சிவதத்துவமும் வேறுபடாதாயிற்று.

இம் முப்பத்தாறு தத்துவங்களும், புறத்தில் தனித்தனி புவனவடி வாயும் அகத்தில் சூக்குமதேகவடிவாயு மிருக்கும். அம்முப்பத்தாறனுள், பஞ்சபூதத்தின் காரியமே தூலதேகமாகத் தோன்றும். புவனத்தில் பிருதிவி தத்துவ புவனமட்டும் தூலமாய்க்காணப்படும். ஏனைய புவனங்கள் சூக் குமமாயுள்ளன. இந்தத்தத்துவங்களெல்லாம் பொது வெனவும், சிறப்பென வும், பொதுச் சிறப்பெனவும் தனித்தனி மூவகைப்பட்டு உயிர்கள்தோறும் வேறுவேருக விளங்கும். எவ்வாறெனின், புவனவடிவாகிய தத்துவங்கள் எல் லாருக்கும் பயன் தருதலால் பொதுவெனப்படும். சூக்குமதேகவடிவாகிய தத்துவங்கள் தனக்குமட்டும் போகம் அனுபவிப்பதற்குக் கருவியாதலால் சிறப்பெனப்படும். தூலதேகவடிவாகிய தத்துவங்கள் தனக்குப் போக மனுபவிப்பதற்கும் மனைவி முதலியோர் சந்தனம் பூமாலை போல அனு பவிக்கவும் படுதலால் பொதுச்சிறப்பெனப்படும்.

கன்மமும், சிவப்பிரகாச மென்னும் நூலில் “நாசோற்பத்தி பண்ணி வருமாதலா லனுதி” எனக்கூறியிருத்தல்பற்றிப் பிரபஞ்சம்போலப் பிரவாக அனுதியெனச் சில ஆசிரியர் கூறுவர். பிரவாக அநாதியாவது இடையரு தொழுகும் நீரோட்டத்தில் முன்வந்தநீரிது பின்வந்தநீரிது எனப்பிரித் தறியப் படாதவாறுபோல முன் செய்த கன்மமிது பின்செய்த கன்மமிது எனப் பிரித்தறிய வாராது பண்டைக்காலந்தொட்டு அவ்வாறுவருதல். இனி, திருவருட்பயனென்னும் நூலில் “ஏகன் அநேகன் இருள் கருமம் மாயை இரண்டு ஆக இவை யாறு ஆதியில்” எனவும், “ஆணவ முதலன் றதுபோற் கருமமும்” என வேறுநூலிலும், ஆணவத்தோ டொப் பக் கன்மமும் அநாதி யெனவே கூறுதலால், ஆகாமியம் சஞ்சிதம் பிரா ரத்தம் என்னும் மூவகை வினைக்கும் முதற்காரணமாகிய மூலகன்மம் ஒன்று அநாதிநித்தமாயுண்டென்று கூறுவர் சில ஆசிரியர்.

மூலகன்மமாவது:—அநாதியே கூடியுள்ள ஆணவமல சேட்டை யால் உண்டாகும் விருப்பு வெறுப்புக்கள். இதனை “செம்புறு களிம் பென வநாதிமல மூழ்கியிருள் சேருமலர் விழியென்னவே, தெளிவற்ற கேவலத் தசைவற் றிருந்துமல சேட்டையாற் குழவிகுருடர், தம்பிணியி

ஞாலுற்ற பால்கோலை நோக்கவலை தமையளிப் பாரென்னநான், சார்கன்ம மாயையை விரும்பச் தந்திடச் சகலனாய்" என உரையாசிரியர் "செப்பறைஅகிலாண்டேசுவரிப்பதிக"த்தில் அருளியவாற்றானும் அறிக. இன்னும் இதுபற்றிய சங்கை உத்தரங்களெல்லாம் சிவஞான சித்தியார் உ-ம் சூ-ம் கூக-வது செய்யுளில் "கன்மமூ மூலங்காட்டி" என்றதற்குக் கூறிய உரையிற்காண்க.

ஆகாமியகன்மமாவது, மந்திரம் பதம் வன்னம் தத்துவம் புவனம் கலை யென்னும் ஆறு அத்துவாக்களிடமாக, மனம் வாக்குக் காய மென்னும் மூன்றினாலும் செய்யப்படும் நல்வினை தீவினை என்னும் இருவினைகளாம். இவ்வாகாமியம் தூலகன்மம் எனப் பெயர்பெறும்.

சஞ்சிதகன்மமாவது அவ்வாறு செய்யப்பட்ட இருவினைகள் பக்குவமடையும்வரை புத்திதத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் கட்டுப்பட்டுக் கிடப்பதாம். அவ்வாறுகிடக்குங்கால் சூக்குமகன்மமெனப் பெயர் பெறும். இன்னும் இச்சஞ்சிதகன்மம், அபூர்வம் புண்ணிய பாவம் என்னும் பரியாயப் பெயரையும் பெறும். கட்டுப்பட்டிருக்குங் கன்மத்திற்கு முற்பிற்பாடு கூறமுடியாமையால் அபூர்வ மெனவும், இன்பதுன்பங்களைத் தருவதற்குக் காரணமாயிருத்தலால் புண்ணிய பாவமெனவும் பெயர் பெற்றவாறு அறிக. இவ்வாறு கட்டுப்பட்டிருக்குஞ் சஞ்சிதகன்மமானது, உயர்ந்தசாதி தாழ்ந்தசாதி என்னுஞ் சாதிகளிற் சனிப்பதற்கும், ஆயுட்பெருக்கம் ஆயுட் சுருக்கமுடைய சரீரத்தைத் தாரகமாய்ப் பொருந்துதற்கும், இன்பதுன்பங்களை அனுபவிப்பதற்கும் ஏதுவாயிருக்கும்.

பிராரத்தகன்மமாவது, கட்டுப்பட்டிருந்த சஞ்சிதகன்மம் இன்பதுன்பமாகிய பயனைத்தர அனுபவிப்பதாம். அனுபவிக்குங்கால், ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிக மென மூத்திறப்படும். ஆதிபௌதிகமாவது, மின்னல் இடி காற்று மழை தீ முதலிய பூதமுன்னிலையாய்வரும் இன்பத் துன்பங்கள். ஆத்தியான்மிகமாவது, மனுடர் மிருகம் முதலிய ஆன்மாக்கள் முன்னிலையாகவரும் இன்பத்துன்பங்கள். ஆதிதைவிகமாவது சனனம் மரணம் நரை திரை வியாதி முதலியவாய் உயிர்கள் முன்னிலையின்றித் தெய்வமுன்னிலையாக வருவதாம்.

இன்னும் இவ்விருவினைகளுள் நல்வினை, உலகவினை வைதிகவினை அத்தியான்மிகவினை அதிமார்க்கவினை மாந்திரவினை யென்று ஐவகைப்படும். அவற்றுள் உலகவினையாவது, கிணறு தண்ணீர்ப்பந்தல் முதலியன அமைத்தல். வைதிகவினையாவது வேள்வி முதலியன செய்தல். அத்தியான்மிகவினையாவது சிவபூசை முதலியன செய்தல். அதிமார்க்கவினையாவது யோகஞ்செய்தல். மாந்திரவினையாவது மந்திரஞ்செபித்தல் ஞானநூல் ஓதல் முதலியன. இவ்வைந்து வினைகளும் ஒன்றற் கொன்று ஏற்ற

முடையனவாம். அவற்றுள், உலகவினை நிவிர்த்தி கலையினும் வைதிகவினை பிரதிட்டாகலையினும், அத்தியான்மிகவினை வித்தியாகலையினும், அதிமார்க்கவினை சாந்திகலையினும், மாந்திரவினை சாந்தியதீதகலையினும் அடங்குவனவாம். உலகவினையும் வைதிகவினையும் அசுத்தபோகங்களைத்தரும். அத்தியான்மிகவினையும் அதிமார்க்கவினையும் சுத்தமும்அசுத்தமுங்கலந்த போகங்களைத்தரும். மாந்திரவினை சுத்தபோகங்களைத் தரும். இந்நல்வினைகட்கு மாறுபட்டவை தீவினையின் ஐவகைப் பேதமென்றுணர்க.

இரண்டாம் அதிகரணம் முற்றிற்று.

மூன்றாம் அதிகரணம்.

உயிர்கள் மாறிப்பிறக்குமென்று கூறும்.

மேற்கோள்.

இனி இவ்வான்மாக்கள் மாறிப்பிறந்து வரு மென்றது.

சிற்றுரை.

எ—து மே-ள் எ-னின், புனருற்பவம் சடத்துக்கன்றிச் சித்துக்கு முளதாயினன்றே முற்செய்வினையே ஈண்டைக்கு வருமென மேற் கூறியதமையும். அஃதுண்டோ? இல்லையோ? என்னுமையப்பாட்டின்கட் குடமுடைந்தவழிக் குடாகாயம் ஆகாயத்தோடு கூடுமாறுபோல உடம்பு நீங்கியவழி உயிர் பிரமத்தோடு கூடுமென்னுஞ் சுருதிபற்றி இறந்தவுயிர் மீளப் பிறப்பதில்லையெனக் கிரீடாப்பிரமவாதிகள் கூறுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் மூன்றுங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ-ள். வெ-டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ-ள். இவ்வான்மாக்கள்—இருவினைப் பயன்களை நுகர்தற்குரிய உயிர்கள்.—மாறிப்பிறந்து வருமென்றது—இறந்து மீளப் பிறந்து இவ்வாறே வரும் எ—று.

வருதல் தொன்றுதொட் டவ்வாறுதல்.

மாறுதல் ஈண்டிறத்தலென்பது 'போக்குவரவு புரிய' என்னு மூலததானும, ஏதுவுதாரணங்களோடு உளதாகிய இயைபானு

முணர்க. இஃதுணராது அச்சூவேறுபடுதலென்றுரைப்பாருமுளர். அஃதிண்டைக்கியாது மியையாமை யுணர்க.

விளக்கம்.

உயிர்களுக்கு வினைப்பயனாகிய இன்பதுன்பங்களை அனுபவிப்பதற்குரிய தனு கரண புவன போகங்களை இறைவன் கூட்டுவனென இரண்டாம் அதிகரணத்தாற் கூறி, அவ்வாறு கூட்டுங்கால் உயிர்கள் மாறிப் பிறக்குமென மூன்றும் அதிகரணத்தாற் கூறுகின்றார்.

இது சூத்திரத்திலுள்ள போக்குவரவு புரிய என்பதைப் பதச்சேதஞ் செய்து மேற்கொண்டதாகும்.

இம் மேற்கோள் என்னசொல்லிற்றோ வெனின், புதிதாகத் தோன்றுந் தன்மை தனு கரண புவன போகமாகிய சடத்திற்குக் கூடும். சித்தாகிய உயிருக்குக் கூடாதே, உயிருக்கும் புதிதாகத்தோன்றுந்தன்மை உண்டென்றாலன்றோ முற்சென்மத்திற் செய்தவினையே இந்தச் சென்மத்தில் வருமென மேலையதிகரணத்திற் கூறியது பொருந்தும்; ஆதலால், உயிருக்குப் புதிதாகத் தோன்றுதல் உண்டோ இல்லையோ என்பது ஐயப்பாடு. இவ்வையப்பாட்டின்கண் குடமுடைந்த விடத்து குடத்தில் அடங்கியிருக்கும் குடாகாயம் மகாகாயத்தோடு கூடுமாறுபோல உடம்புநீங்கிய விடத்து உயிர் பிரமத்தோடு கூடுமென்று சுருதி கூறுதலால் இறந்தவுயிர் மீளப் பிறப்பதில்லை என்பது பிறர்கூறும் பக்கம். இவ்வாறு கூறுவோர் கிரீடாப்பிரம வாதிகள். இவர்கூற்றை ஆசங்கித்துக்கொண்டு சூத்திரத்தின் மூன்றுங் கூற்றைப்பதச்சேதஞ்செய்து இறந்த உயிர் மீளப்பிறக்குமெனக் கூறியவாறும்.

(இம்மேற்கோளின் பொருள்.) இருவினைப்பயன்களை அனுபவித்தற்குரிய உயிர்கள் இறந்து மீளப்பிறந்து இவ்வாறே வரும். (எ - று.)

வரும் என்று கூறியதனால் அநாதிதொட்டு இவ்வாறு இறந்து பிறந்து வருமென்பது பெறப்படும். எதனாலெனின், வருதல் உள்ளதற்கேயன்றி இல்லதற்குக் கூடாதாதலின் என்க. ஆகவே, என்றும் உள்ள உயிருக்கு மாறிப்பிறத்தல் என்றும் உள்ளதாகும். முத்தியடையுங்கால் மாறிப்பிறத்தல் நீங்கும்.

மாறுதல் என்றது இம்மேற்கோளில் இறத்தலைக்குறித்து நின்றது. அவ்வாறு குறிக்குமென்பதைச் சூத்திரத்தில் போக்குவரவுபுரிய என்றதில் போக்கு இறத்தலைக்குறித்து நின்றதனாலும், இவ்வதிகரணத்து ஏதுவில் ஈறுமெனவும், உதாரணத்தில் கெட்டு எனவும், கூறுவனவற்றோடு பொருந்தும்வழியானும் உணர்க. இவ்வாறு உயிர் இறந்து பிறக்குமென்பதை உணராது மாறு மென்பதற்கு உடல் மாறுமென்றுரைப்பாருமுளர். அவ்வா

ருயின் இறந்த உடலே மீளப்பிறந்து முன்னுடலிற்செய்த வினைப்பயனை அனுபவிக்கவேண்டும். அவ்வாறில்லாமையால் உடல்மாறுமென்றல் வினைக் கீடாய் மாறுமெனக்கூறும் இவ்விடத்துப்பொருந்தாது. உடலைவிட்டு உயிர் மாறுமென்றே கொள்க.

உயிர் மாறிப்பிறக்குமென்பதற்குக் காட்டும்

ஏது.

தோற்றமுமீறும் உள்ளதற்கல்லது உளதாதலின்மையான்.

சிற்றுரை.

எ-து ஏ-து எ-னின், அதற்குப் பிரமாணமென்னையென்னுங் கடாவையாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) உற்பத்தியும் நாசமுந் (தொடர்ச்சியாயுள்ள) பொருட்கன்றி ஏனைப்பொருட்கு உற்பத்திகூடாமையான் இனி இவ் வான்மாக்களே மாறிப்பிறந்துவருமென மேற்கொண்டது எ-று.

தோற்றமும் ஈறுமென்னு மும்மைகளை எதிரதுதழீஇயின வாகக் கோடலிற் றொடர்ச்சியாயென்பது போந்தவாறு அறிக. உளதாதல் ஈண்டுத்தோன்றுதல்

இனி இவ்வாறன்றிக் குடாகாய வுவமையேபற்றி இருவினை யான்வரும் புனருற்பவம் உயிரின்பொருட்டுச் சிவத்துக்கே யாமெனச் சிவாத்துவிதிகள்கூறுங் கடாவை யாசங்கித்தும் மூலபகுதி யிற்றோன்றும் புத்தி தத்துவத்துக்கே அதுவெனச் சாங்கியர் கூறுங்கடாவை யாசங்கித்தும் மேற்கோடனுதலிற்று இவ்வதி காரணமெனக்கொண்டு தோற்றமும் ஈறும் அவ்வுரிமை உள்ளதற் கேயன்றி ஏனையவற்றிற்கு உளதாதலின்மையான் இவ்வான்மாக் களே மாறிப்பிறந்து வருமென மேற்கொண்டதென்றுரைப்பினு மாம். இப்பொருட்கு உரிமையென்பது அவாய்நிலையான்வந்தது.

உளதாதலென்னும் ஒருமை தோற்ற வீறுகளோடு தனித்தனி சென்றியையும்.

ஆன்மாக்களே யென்னும் பிரிநிலை யேகாரம் விகாரத்தாற் றொக்கது.

இனி மாயாவாதி முதலியோர் மதத்தை மறுத்தற்பொருட்டு மேற்கொண்டதென்பாருமுளர். அத்துவிதமென்ற சொல்லானே அவரைமறுத்து ஆன்மாக்களைப் பெறுவித்தமையின் ஈண்டவர் மதம்பற்றிக் கடாநிகழ்தற்கோரியையின்மை யுணர்க.

விளக்கம்.

இந்த ஏது என்ன சொல்லிற்றோவெனின், மேற்கோளிற்கூறியவாறு உயிர் மாறிப்பிறக்குமென்பதற்குப் பிரமாணம் என்னையென்னும் வினாவை ஆசங்கித்துக்கொண்டு பிரமாணங்கூறி மேற்கோளை வலியுறுத்தியவாறாம்.

(இந்த ஏதுவின் பொருள்.) உற்பத்தி நாசமாகிய இரண்டும் தொடர்ச்சியாகவுடைய பொருட்குமட்டுந் தோன்றுதல்கூடும். அத்தொடர்ச்சியில்லாத பொருட்குத் தோன்றுதல் கூடாது. ஆதலால் இனி இவ்வான்மாக்களே மாறிப்பிறந்துவருமென மேற்கோள் கூறியது. (எ - று.)

தனுகரணபுவனபோகங்கள் தோன்றியழியக் காண்கின்றமையால் தொடர்ச்சியில்லாத பொருட்குத் தோற்றக்கேடில்லை என்றது எவ்வாறு பொருந்துமெனின், தனுகரணமுதலியன தோன்றுதலும் அழிதலும் உயிர்களின் வினைகாரணமாக அன்றி அத்தனுகரண முதலியவற்றின் வினைகாரணமாகவன்று. அவை அறிவில்லாத சடமாதலின் வினைசெய்தல் கூடாது. அறிவுடைய உயிரே வினைசெய்தற்குரிமை உடையது. ஆதலால், அவ்வுயிரின்பொருட்டுத் தோன்றி அழியுந் தனுகரணமுதலியவற்றிற்குத் தனிமையாய்த் தோன்றியழிதல் இல்லாமையால் தொடர்ச்சியாயுள்ள உயிருக்கே தோன்றியழிதல் உண்டென்று கூறியதாம். தொடர்ச்சியாயுள்ள உயிரென்றதனாலேயே உயிர் தோன்றியழிதல் இல்லையென்பதூஉம், வினைக்கீடாக உடலை எடுத்தலும் அவ்வுடலினின்று பிரிதலுமே தோன்றியழிதலென்பதூஉந் தானே விளங்கும்.

ஏதுவில் தோற்றமும் என்றதிலுள்ள உம்மை ஈறுமென்பதையும், ஈறுமென்றதிலுள்ள உம்மை பின்வருந் தோற்றத்தையுந் தழுவிநின்றமையால் அவ்வும்மைகள் எதிரதுதழுவினவாம். ஆகவே தோற்றமுங்கேடும் ஒன்றன்பின்னொன்றாய் என்றுந் தொடருமென்பதாம். ஆதலால் உள்ளதற்கு என்றதற்குத் தொடர்ச்சியாயுள்ள பொருட்கு என உரை செய்யப்பட்டது.

உளதாதல் என்றது தோன்றுதலைக்குறித்து நின்றது. ஆதலால் உற்புத்தி கூடாமையாலென உரை செய்யப்பட்டது.

இனி இந்த ஏதுவிற்கு இவ்வாறு பொருள்கூறுவதுமன்றி வேறும் ஒரு பொருள் கூறுதல் கூடும். அதாவது குடாகாய வுவமையேகொண்டு குடத்தில் அடங்கியிருக்கும் குடாகாயம் மகாகாயத்தின் வேறாகாதவாறுபோல் உடலிற் கட்டுப்பட்டிருக்கும் உயிர் சிவத்தின் வேறாகாமையால் உயிரின் பொருட்டு உண்டாகும் தோற்றக்கேடுகள் சிவத்திற்கே யாமெனச் சிவாத்துவிதிகள் கூறுவர். அவர் கூற்றை ஆசங்கித்துக்கொண்டு, தோற்றமும் ஈறும் அவ்வுரிமையுள்ளதற்கேயன்றி ஏனையவற்றிற் குளதாதலின்மையால் இவ்வான்மாக்களே மாறிப்பிறந்துவருமென மேற்கொண்டதென்று கூறுதலாம்.

இன்னுமொரு பொருள்வருமாறு:—மூலப்பிரகிருதியிற்றோன்றும் புத்தி தத்துவத்திற்கே தோன்றியழிதல் கூடுமென்றி, உயிருக்குக் கூடாதென்னுஞ் சாங்கியர் கூற்றை ஆசங்கித்து மேற்கோள் கூறியதாகக்கொண்டு அந்த மேற்கோளைச் சாதிக்கும் ஏதுவென்று கூறுதலுமொன்று. இவ்வாறு கூறுமிடத்தும் ஏதுவிற்குப்பொருள் சிவாத்துவிதிக்குக் கூறியதுபோலக்கொள்க. இவ்வாறு சிவாத்துவிதியையும் சாங்கியரையும் மறுத்து மேற்கோளைச் சாதித்ததாக ஏதுவிற்குக் கொண்டபொருளில் உரிமையென்பது அவாய் நிலையால் வந்தது. அதாவது உள்ளது என்றவிடத்து என்ன உள்ளது என்னும் வினா நிகழுமாதலின், உரிமையென்னுஞ் சொல்லை அவாவி நின்றவாறு காண்க. ஆகவே இந்த ஏது கிரீடாப்பிரமவாதிகள் சிவாத்துவிதிகள் சாங்கியர் என்னு மூவரையும் மறுத்தவாறும். குடாகாய மகாகாய உவமை உபநிடதத்திற் கூறியிருக்கவும் அதனைக்கொண்டாரை மறுத்ததன் கருத்தென்னையெனின், அது இவ்வதிகரணத்து இரண்டாவது வெண்பாவிற் கூறப்படுமாதலால் அவ்விடத்துக் காண்க.

ஏதுவில் உளதாதல் என்னும் ஒருமையைத் தோற்றமும் ஈறும் என்பவற்றோடு தனித்தனிகூட்டித் தோற்றமும் உளதாதலின்மையால் ஈறும் உளதாதலின்மையால் எனக்கொள்ளல்வேண்டும். அவ்வாறு கொள்ளாக்கால் தோற்றமும் ஈறுமாகிய பன்மை உளதாதலென்னும் ஒருமைகொண்டுமுடியாது.

மேற்கோளில் ஆன்மாக்கள் மாறிப்பிறந்துவருமெனக்கூறி ஏதுவிற்குக் கூறிய அநுவாதத்தில் ஆன்மாக்களே மாறிப்பிறந்து வருமெனப்பிரிநிலை ஏகாரத்தை விரித்துத் தனுகரணமுதலியவற்றையும் சிவத்தையும் பிரித்தனர்.

இனி இந்த ஏது மாயாவாதி முதலியோர் மதத்தை மறுத்தற்பொருட்டு மேற்கோள்கூறி அதனை மேற்கொண்டதாகக் கூறுவாருமுளர். இச்சூத்திரத்து முதலதிகரணத்து ஏதுவில் அத்துவிதம் என்ற சொல்லானே மாயாவாதியை மறுத்துச் சிவத்தின்வேறாக ஆன்மா உண்டென்று சாதித்தமையால் இவ்விடத்து அவர் மதம்பற்றிச் சங்கை நிகழ்தற்கு ஒரு சம்பந்தமும் இல்லையென்றறிக. இந்த ஏது உயிர்மாறிப் பிறவாதென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபாயிற்று.

உயிர்மாறிப் பிறந்துவருமென்பதற்குக் காட்டும்

உதாரணம்.

கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து
விண்படர்ந்தத் தூடு வினையினாற் + கண்செவிகெட்
டேள்ளதே தோற்ற வுளமணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழுங்கருவிற் றான்.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், புனருற்பவமாங்காற்படும் இயல்புக ளுணர்த்தி அதனை வலியுறுத்தனுதலிற்று.

கண்செவிகெட்டு உள்ளதே தோற்ற உளம் அத்தூடுவிண் படர்ந்து கண்டநனவைக் கனவு உணர்வின்மறந்து மனம் தள்ள வினையினால் அணுவாய்ச்சென்று கருவில் விழும் எனக் கொண்டு கூட்டுக.

(இ-ள்.) கண் செவிகெட்டு உள்ளதே தோற்ற—கண்செவி முதலிய உறுப்புக்களையுடைய இவ்வுடம்பு கெட்டவழித் (தனக்குக் கேடின்றிப் படைப்புக்காலந் தொடங்கிச் சங்கார காலமளவும்) நிலை பெற்றுள்ளதாகிய சூக்குமதேகம் (பூதசாரவுடம்பமுதலியன வாய்க்) காரியப்பட,—உளம் அத்தூடு விண்படர்ந்து—உயிரானது அப்பூதசார முதலிய உடம்பின்கட் (பொருந்தித்) துறக்க நிரயங் களிற் சென்றனுபவித்து, (பின்னர்),—கண்ட நனவைக் கனவு உணர்வின் மறந்து—நனவின்கட் கண்டவற்றைக் கனுக்காணுங் காலத்து (மறந்து) அறிவு வேறுபட்டாற்போல, (முன்னைக்கண் செவிகெட்டவாறும் உள்ளதேதோற்ற அத்தூடு விண்படர்ந்த வாறும் ஆண்டநுபவித்தவாறுமாகிய இன்னோன்னவற்றை) மறந்து (அறிவு வேறுபட்டு)—மனந்தள்ள வினையினால் அணு வாய்ச்சென்று கருவில்விழும்—(முன்னுடம்பு இறக்குங்கால் அடுத் தவினை காட்டுங்கதி நிமித்தம்பற்றி உயிர் அவாவுமாறு) மனஞ் செலுத்துதலான் (அக்கதிக்கட் சேறற் கேதுவாய் எஞ்சிநின்ற) புண்ணிய பாவசேடத்தாற் சூக்குமதேகமாத்திரையாய்ச் சென்று (அம்மனந் தள்ளிய கதிக்கு அமைந்த) அக்கருவின்கட்படும் எ-று.

இன் உவம உருபு. தான் அசை. மறத்தற்குச் செயப்படு பொருள் அவாய்நிலையான் வந்தது.

விண்படர்ந்தென்னும் உபலக்கணத்தால் நிரயம்படர்ந் தென் பதூஉம் பெறுதும். படர்ந்தெனக் காரியத்தைக் காரணமாக உப சரித்தார்.

அத்தூடென்புழி அன்சாரியை விகாரத்தாற் றொக்கது. பொ ருந்தி யென்பது சொல்லெச்சம். வினை ஆகுபெயர்.

உடம்பு நீங்கிப்போங்கால் முதற்கட் கெடுவன கண்ணுஞ் செவியுமாகலின், அச்சிறப்பு நோக்கிக் கண் செவி கெட்டென்

றுபசரித்தார். கெட்டவழி யென்பது கெட்டெனத் திரிந்து நின்றது.

ஐம்பெரும் பூதத்தின் காரியமெனப்பட்ட தூலவுடம்பு சூக்குமவுடம்பின் காரிய மாமாறென்னையெனனும் ஐயநீக்குதற்கு உள்ளதே தோற்ற வென்றார்.

ஏகாரந் தேற்றம்.

ஆகாயமுதலிய தூல பூதங்கள் சத்தமுதலிய சூக்குமபூதங்களின் காரியமாதலின், அதுபற்றியே தன்மாத்திரைமயமாகிய சூக்குமவுடம்பிற் றோன்றுவதாய தூலவுடம்பு ஐம்பெரும்பூதமய மெனப்பட்டதன்றிப் பிறிதில்லையென்பது, "பூதனு சரீரம்போனாற் புரியட்ட ரூபந்தானே யாதனு சரீ மாகி" எ-ம், "சூக்கும வடிவே தென்னிற் றூலகா ரணம தாகும்" எ-ம், "தூலமா முருவினுக்குச் சூக்கும முதல்" எ-ம், "மாறியிவ் வுருவ மெல்லாம் வருவதெங் கேகின் றென்னிற்—கூறிய சூக்கு மத்தாம்" எ-ம், "விதிப்படி சூக்கு மத்தே யுருவரும்" எ-ம், "மனுதி தருமுடல்" எ-ம், வழிநூலாசிரியரும் இவ்வாறே கூறியவாறு காண்க. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப. அது தோன்றுங்கால் "கால முற்றுநீக்கிட மரம்பின் வேரோர் நீண்மா நிகழ்த்து" மாறுபோலச் சூக்குமவுடம்புகெடாது நிற்பத் தூலவுடம்பு "வேறொரு குறியா மாரம் வீரசங் கிலியுமா" தல்போல வினைக்கீடாக அச்சு வேறுபட்டு "மதிக்கெழு கலைகள் போல வருவது போவதாம்" என்பதூஉம் வழிநூலாசிரியர் கூறியவாற்றானறிக.

அணு சூக்குமவுடம்பு.

தள்ள தள்ளுதலானென்க.

அக்கருவிலெனச் சுட்டுவருவிக்க.

தான் அலைச.

உள்ளதே தோற்றவென்றதனால் உடற்றிரிவும், விண்படர்ந் தென்றதனல் இடத்திரிவும், கண்ட நனவைக் கனவுணர்விற் றான் மறந் தென்றதனுல் அறிவுத்திரிவும் பெறப்பட்டன.

உள்ளதே தோற்ற வென்றதனல் புதிதுபுதிதாய்த் தோன்றுதல்பற்றிச் சற்காரியவாதத்திற்கு இழுக்கின்மையும், அத்தூடு விண்படர்ந்தெனவும் அணுவாய்ச் சென்று கருவில் விழுமெனவுங் கூறியதனுல் போக்குவாவுபற்றி வியாபகத்துக்கு இழுக்

கின்மையும், வினைச்சேடத்தாலென்றதனால் துறக்க நிரயங்களின் அநுபவித்தொழிந்தமைபற்றிப் புனருற்பவகாரணத்திற்கு இழுக் கின்மையும், மனந்தள்ள வென்றதனால் அஃதெஞ்சுதற் கேதுவுங் காட்டியவாறு.

வேதத்துட் கூறப்படும் பஞ்சாக்கினிவித்தையின் இயல் புணர்த்துவார் கண் செவி கெட்டவழி விண்படர்ந்து மறந்தனு வாய்ச் சென்று கருவில் விழுமென்றார். பஞ்சாக்கினிவித்தையி னியல்பு நீலகண்டபாடியத்துட் காண்க.

மறந்து விண்படர்ந்தெனக் கூட்டி யுரைப்பாருமுளர். துறக்க நிரயங்களிற் படர்ந்து அநுபவிப்புழி அறிவு திரியாமை புராணங்க ளுட்காண்க.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோ வெனின், புதுச்சிருட்டி உண் டாகுங்கால் நிகழும் இயல்புகளை உணர்த்தி ஆன்மாக்கள் மாறிப் பிறக்கு மென்பதை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) கண் செவி முதலிய உறுப்புக்களையுடைய இத்தூல உடம்பு கெட்டவிடத்து படைப்புக்காலந்தொடங்கி மகாசங்காரகாலமளவும் நிலைபெற்றிருக்கும் சூக்குமதேகம் தேவலோகத்திற்குரிய பூதசாரவுடம் பாகவும், நரகலோகத்திற்குரிய யாதனாஉடம்பாகவும், மண்ணுலகத்திற்குரிய வேறு பூதவுடம்பாகவும் வினைக்கேற்றவாறு காரியப்பட்டுத் தோன்றும். மகாசங்காரமென்பது இவ்விடத்துச் சூக்குமதேகமும் அழிகின்ற முத்திக் காலத்தைக்குறிக்கும். உயிரானது சூக்குமதேகத்தினின்றுங் காரியப்படுவ தாகிய அப்பூதசார சரீரத்தையும் யாதனாசரீரத்தையும் பொருந்திச் சுவர்க்க நரகங்களிற் சென்று இன்பதுன்பங்களை அநுபவிக்கும். அநுபவித்தபின் னர் நனவின்கண்ணே கண்டவற்றைக் கனாக்காணுங்காலத்து மறந்து அறிவு வேறுபட்டாற்போலச் சுவர்க்க நரகங்களுக்குச் செல்வதற்குமுன்னுள்ள உடல் கெட்டதையும், அவ்வுடல் கெட்டவிடத்தும் நிலைத்திருந்த சூக்கும தேகமே பூதசாரமுதலிய சரீரங்களாய்த் தோற்ற அச்சரீரங்களைப்பற்றிச் சுவர்க்கமுதலியவற்றிற் சென்றதையும், அவ்விடங்களில் அநுபவித்தவற்றை யும் மறந்து அறிவு வேறுபட்டு முன்னுடம்பு இறக்கும்பொழுது பக்குவப்பட் டிருக்கும் வினை காட்டுங் கதியை ஆன்மா விரும்பும்படி மனஞ்செலுத்துத லால் தேவகதி மக்கட்கதி விலங்கின்கதி நரகர்கதி என்னும் நான்கனுள் ஒன் றிலே செலுவுதற்கேதுவாய்ச் சுவர்க்கநரகங்களில் அநுபவித்து எஞ்சிநின்ற

புண்ணிய பாவ சேடத்தால் சூக்குமதேகமாத்திரையாய் இம்மண்ணுலகத்தில் அம்மனந் தள்ளியகதிக்கு ஏற்ற கருவிற் சென்று தங்கும் எ-று.

(க-ரை.) கேவலத்தில்நின்று நீங்கி முத்தியடையும்வரையும் உள்ள சூக்குமதேகத்திலிருந்து வினைக்கீடாகத் தோன்றியழியும் உடம்புகளில் உயிர் பொருந்துதலால் மாறிப்பிறக்கும் என்பதாம்.

கனவு உணர்வின் என்பதிலுள்ள இன் உவம உருபாக நிற்றலால் கனாக்காணுங்காலத்து அறிவு வேறுபட்டாற்போல என உரை செய்யப்பட்டது. அதற்கடுத்து நின்ற தானென்பது அசை; மறந்து என்பது எதனை மறந்து என்னுங் கேள்விக்கு இடமாகநின்றது. அந்த அவாய்நிலை பற்றி மறத்தற்குச் செயப்படுபொருள் வருவித்து முன்னைக் கண் செவி கெட்டவாறும், உள்ளதே தோற்ற அத்தூடுவிண்படர்ந்தவாறும், ஆண்டநுபவித்தவாறுமாகிய இன்னோரன்னவற்றைமறந்து என்று உரை செய்யப்பட்டது.

விண்படர்ந்து என்று கூறிய உபலக்கணத்தால் நிரயம் படர்ந்தென்பதூஉம் கொள்ளப்படும். உபலக்கணமாவது ஒன்று தனக்கினமான பிறவற்றையும் தெரிவித்து நிற்பது. உதாரணம், வெற்றிலை தின்றானென்ற விடத்துப் பாக்கு முதலியனவும் தின்றானெனக் கொள்ளுதல்போல்வனவாம்.

படர்ந்து என்பது சென்று அநுபவித்து என்னும் பொருள்மேல் நின்றது. படர்ந்து என்பதற்குப் பொருள் செல்லுதலேயாம். செல்லுதலினாற்றான் அநுபவங் கூடும். செல்லுதல் காரணம், அநுபவம் காரியம். அநுபவமாகிய காரியத்தைச் செல்லுதலைக்குறிக்கும் படர்ந்து என்னுங் காரணமாக உபசரித்தார்.

அத்தூடு என்றவிடத்து அன்சாரியை விகாரத்தாற் றொக்குநின்றது. ஆதலால் அதனூடு என்னும் பொருள்பட உடம்பின்கண் என உரை செய்யப்பட்டது. உடம்பின்கண் என்பதில் பொருந்தியென்னுஞ் சொல் எஞ்சி நின்றமையால், பொருந்தி யென்பது சொல்லெச்சமாய் வருவிக்கப்பட்டது.

வினையினு லென்பது வினைச்சேடத்தைக் குறித்துநிற்றலால் ஆகுபெயர்.

உடம்பு நீங்கிப் போகுங்கால் முதலாவது கண்ணும் செவியுமே கெடுவனவாம். அச்சிறப்பு நோக்கி உடம்பு கெடுதலைக் கண்செவிகெட்டு என்று உபசரித்தார். கெட்டவழியெனக் கூறவேண்டுவதைச் செய்யுளாதலால் கெட்டு எனத்திரித்துக் கூறினர்.

ஐந்து பெரும்பூதத்தின் காரியமெனப்பட்ட தூலவுடம்புசூக்கும உடம்பின் காரியமாம் என்றது என்னை எனின், பிருதிவி அப்புத் தேயு வாயு

ஆகாயமென்னும் ஐம்பூதங்களும், சத்தம் பரிசம் ரூபம் இரதம் கந்தம் என்னும் ஐந்து தன்மாத்திரைகளின் காரியமாம். தன்மாத்திரைகள் சூக்குமபூதமெனவும், பிருதிவிமுதலிய பூதங்கள் தூலபூதமெனவுங் கூறப்படும். ஐந்து பூதமென்று கூறாது ஐம்பெரும் பூதமென்று உரையாசிரியர் கூறியது தூல பூதத்தை உணர்த்துதற்கு என அறிக. இந்தத்தூல பூதம் அகத்துச் சரீரரூபமாகவும், புறத்து உலகரூபமாகவும் விளங்கும். உலகரூபமாய் விளங்குகின்ற பூதத்தின்காரியங்கள் உலகத்திற் காணப்படும் பொருள்கள், சரீரரூபமாய்க் காணப்படுந் தூலபூதமைந்தும் சூக்குமசரீர தத்துவத்துள்வைத் தெண்ணப்படும். அத்தூலபூதத்தின் காரியமாய்க் காணப்படும் பொருள் பூதசாரசரீரமும் யாதனாசரீரமுந் தூலசரீரமுமாம். அன்னத்தின் காரியமான வீரியம் தூலசரீரத்திற்குத் துணைக்காரணமாவதன்றிப் பிறிதில்லை. ஆகவே தூலபூத மெனப்படுவது சூக்குமதேகம் எனப்பட்டுத் தூலபூதத்தின் காரியமாகிய உடம்பைச் சூக்குமதேகத்தி காரியமெனக் கூறினாராதலின், பூதத்தின்காரியம் சூக்குமத்தின் கா மாதல் கூடுமோ என்னும் சந்தேகத்திற் கிடமில்லை. இச்சந்தேகந் நீக்குதற்கு உள்ளதே தோற்ற வென்றார். என்றதனால் சூக்குமஉ கேவலத்தினின்றும் நீங்கி முத்தியுடையும் வரை யென்றும் ஓர் உடம்பாய உள்ளதாக அச்சூக்கும உடம்பின் ஓர் பகுதியாகிய ஐந்து தூல பூதத்தில் காரியமாகிய பூதசார உடம்பு யாதனா உடம்பு தூலஉடம்புகள் தோன்றி மறையும் என்றபடியாம்.

உள்ளதே என்றதிலுள்ள ஏகாரம் சூக்கும உடம்பின் உண்மையை உறுதிப்படுத்தினமையின் தேற்றம்.

ஆகாயமுதலிய தூலபூதங்கள் சத்தமுதலிய சூக்குமபூதங்களின்காரியமாதலால், தன்மாத்திரைமயமாகிய சூக்கும உடம்பிற் றோன்றுவதாகிய தூல உடம்பு தூலபூதத்திற் றோன்றிய தெனப்பட்டது. இதனை, சிவஞான சித்தியார் ௨-ம் சூ-ம். ௩௯-வது செய்யுளில் "பூதனா சரீரம் போனால் புரியட்டரூபந் தானே, யாதனா சரீர மாகி" எனவும், ஷை ௪-ம் சூ-ம் ௧௦-வது செய்யுளில் "சூக்கும வடிவே தென்னிற் றூலகா ரணம தாகும்" எனவும், ஷை ௨-ம் சூ-ம் ௫௦-வது செய்யுளில் "தூலமா முருவி னுக்குச் சூக்கும முதல்" எனவும், ௪௭-வது செய்யுளில் "மாறிய உருவ மெல்லாம் வருவதெங் கே நின் றென்னிற், கூறிய சூக்கு மத்தாம்" எனவும், ௪௧-வது செய்யுளில் "விதிப்படி சூக்கு மத்தே யுருவரும்" என்வும், ஷை ௧௧-ம் சூ-ம் ௩-வது செய்யுளில் "மனுதி தருமுடல்" எனவும் வழி நூலாசிரியர் கூறியவாற்றானுமறிக. இவ்வுண்மை அறியாதார் தத்தமக்குவேண்டியவாறே உரைப்பர்.

சூக்கும உடம்பினின்றுந் தூல வுடம்பு தோன்றுங்கால் எவ்வாறு தோன்று மென்பதையும் வழிநூலாசிரியரே நன்கு விளக்கி யிருக்கின்றார். எவ்வாறெனின், "கால முற்று - நீக்கிட மரம்பின் வேரோர் நீண்மா

நிகழ்ந்து மாபோல்'' எனச் சித்தியார் ௨-ம் சூ-ம் ௪௮-வது செய்யுளிற் கூறினர். அதன்கருத்து, காலத்தினுல் மரமுழுதுங் கெட்டாலும் மரவேரி லிருந்து பின்னும் மரம் உண்டாகு மென்பதாம். அதுபோல, தூலதேகம் கெட்டாலும் சூக்குமதேகத்தின் கூருகிய பஞ்சபூதத்தினின்று வேறு தூல தேகம் தோன்று மென்றபடியாம். அவ்வாறு ஒரு சூக்கும உடம்பி லிருந்து பல தூல வுடம்பு தோன்றுதலை ஷை ௨-ம் சூ-ம் ௪௭-வது செய்யுளில் ''வெருெரு குறியா மாரம் வீரசங் கிலியு மாகும்'' என உவமை முகத்தால் விளக்கினர். அதாவது செய்பவனுடைய ஆற்றலால் பொன் ஞென்றே ஆரம் வீரசங்கிலி முதலிய வெவ்வேறு ஆபரணங்களாய்த் தோன்றுமாறுபோல, ஒரு சூக்கும தேகத்திலுள்ள பஞ்சபூதமே வினையி னது வல்லபத்தால் பல தூலவுடம்புகளாக வேறுபட்டுத் தோன்றுமென்ற படியாம். இவ்வாறு கூறியதனுல் பொன் முழுதும் ஆபரணமாகமாறியது ால். சூக்குமதேகமுழுதும் தூலதேகமாய் மாறுமோ எனச் சந்தேக ்டயாமற்பொருட்டு ஷை ௨-ம் சூ-ம் ௪௯-வது செய்யுளில் '' மதிக்கெழு கன் போல வருவது போவ தாமே'' எனக் கூறினர். இதன் கருத்து, ரனிடத்து ஒருகலை என்றும் மாருதிருக்க, மற்றக்கலைகள் அந்த ஒரு கலையினிடத்துத் தோன்றி மறைதல் போல ஒரு சூக்குமஉடம்பு கெடாதிருக்க அதனிடத்துப் பல தூல வுடம்பு தோன்றி மறையும் என்றபடியாம்.

அணு வென்றது சூக்கும வுடம்பைக்குறித்து நின்றது.

மனந்தன்ன வென்றது தன்னுதலாலென்னும் பொருளைக் குறித்து நிற்றலால் மனம் செலுத்துதலால் என உரை செய்யப்பட்டது.

கருவில் என்றவிடத்து அகரச்சுட்டு வருவித்து அக்கருவில் என் றுரைகசப் பட்டது.

கருவில் என்றதன் பின்னுள்ள தான் என்பது அசை.

உள்ளதே தோற்ற என்றதனுல் தூலவுடல் வேறுபடு மென்பதும், விண்படர்ந் தென்றதனுல் சுவர்க்க நரக முதலியனவாய் இடம் வேறுபடு மென்பதும், கண்ட நனவைக் கனவுணர் விற்ருன் மறந்து என்றதனுல் உடலுக்கும் இடத்திற்கும் ஏற்றவாறு அறிவு வேறுபடு மென்பதும் பெறப் பட்டன.

உள்ளதே தோற்ற என்றதனுல் தூலவுடல் புதிது புதிதாய்த்தோன்று மென்பது பெறப்படினும் அவ்வாறு தோன்றுதற்குச் சூக்குமதேகம் உள்ளதாயிருத்தல்பற்றி இல்லது தோன்றுதலில்லை யாதலால் உள்ளது தோன்றும் என்னுஞ் சற்காரிய வாதத்திற்கு இழுக்கில்லை.

அந்நூடு விண்படர்ந் தெனவும் அணுவாய்ச் சென்று கருவில் விழு மெனவுங் கூறியதனுல் உயிருக்குப் போக்குவரத்து உண்டென்பது பெறப்

படும். அவ்வாறாயினும் பூதசாரமுதலிய உடம்பின்கண் பொருந்துதற்கும் சூக்குமதேகமாய்ச் சென்று கருவில் விழுதற்கும் வியாபகமா யிருந்தாலன்றி முடியாது. எதனாலெனின், ஏகதேசமான ஓர் இடத்திலிருப்பின் கண்டமாகவே யிருக்கும். அவ்வாறிருப்பது தேவலோக முதலிய எல்லா வுலகத்திற்குஞ் செல்லுதல் கூடாது; கருவில் நுழைதலுங்கூடாது; வியாபகமாயிருப்பின் எங்குஞ் செல்லுதல் கூடும். ஆயினும் இறைவன் வியாபகத்தைப் போல் உயிரின் வியாபகம் பூரணமன்று. தேவ உலகத்தைப்பற்றுங்கால் மண்ணுலகத்தைப் பற்ற முடியாது. மண்ணுலகத்தைப் பற்றுங்கால் தேவவுலகத்தைப் பற்ற முடியாது. இவ்வாறு பற்றுதல் போக்குவரத்தைக் குறிப்பினும் சார்ந்ததன் வண்ணமாம் வியாபகத்திற்கு இழுக்கில்லை.

வினைச்சேடத்தாலென்றதனால், சுவர்க்க நரகங்களில் இன்பதுன்பங்களை அனுபவித்து ஒழிந்தபின்னர்ப் பிறவிக்குக்காரணம் உண்டென்பதற்கு இழுக்கில்லை. அதாவது இன்பத்து மிகுதியையும், துன்பத்து மிகுதியையும் சுவர்க்கத்திலும் நரகத்திலும் அநுபவித்து இன்பமுந் துன்பமுங் கலந்து அநுபவிக்கவேண்டியதாய் எஞ்சியிருக்கிற வினையின் சாரணத்தால் அவ்விரண்டற்குந் தானமாகிய மண்ணுலகத்திற் பிறவி உண்டென்பதாம்.

மனந்தள்ள என்றதனால் தள்ளுதல் வினையின்சேடம் உண்டென்பதற்கு ஏதுவாயிற்று.

வேதத்துட் கூறப்படும் பஞ்சாக்கினி வித்தையினியல்பையும் உணர்த்தவேண்டிக் கண் செவி கெட்டவழி விண்படர்ந்து மறந்து அணுவாய்ச் சென்று கருவில் விழுமென்றார். எவ்வாறெனின், வேள்வி செய்த உயிர் இவ்வுடம்பு நீங்கிய விடத்து வேள்வியின் பயனாகச் சுவர்க்கத்தை யடைந்து இன்பத்தின் மிகுதியை அநுபவித்துப் பின்னர் அவ்வினையின் சேடத்தால் பூமியில் வந்து பிறந்து அப்பிறப்பும் நீங்கியபின்னர் மேகமண்டலத்தை யடைந்து அவ்விடத்தினின்றும் வரும் மழையினோடு கூடி நிலத்தினை யடைந்து நெல் முதலிய பொருள்களிற் கலந்து தந்தைவயிற்றில் உணவாய்ச் சென்று சுக்கிலமாய்ப்பரிணமித்துத் தாய்வயிற்றிற் சென்று கருவிற்பதிந்து தூலதேகத்தோடு நிலத்திற் றோன்றும். ஆகவே சுவர்க்கம், மேகமண்டலம், நிலம், தந்தை, தாய் என்னும் ஐந்திடத்தையும் அக்கினியாகவும், அவற்றிற் பொருந்திய ஆன்மாவை ஆகுதியாகவும் தியானிப்பது ஒரு சாதகமாகலின் இது பஞ்சாக்கினி வித்தை யெனப்படும். இவ்வாறு திராவிடமாபாடியத்துட் கூறப்பட்டது. நீலகண்ட பாடியத்தும் கூறப்பட்டிருத்தல் காண்க.

மறந்து என்பதை விண்படர்ந்து என்பதனோடு கூட்டி மறந்து விண்படர்ந்து என உரைப்பாரும் உளர். அவ்வாறு கூறுங்கால் தூலவுடம்பு

கெட்டவிடத்து உயிரானது அத்தூலவுடம்பை மறந்து அப்பூதசாரவுடம்பு முதலியவற்றைப் பொருந்தும் என்று கூறல் வேண்டும்.

சுவர்க்க நரகங்களில் இன்பதுன்பங்களை அநுபவித்துத் தொலைந்த பின்னர் மண்ணுலகத்திற் பிறக்கும்பொழுது அறிவுவேறுபடும் எனக் கூறியதனால், சுவர்க்கநரகங்களிற் சென்று அநுபவிக்குங் காலத்து அறிவு வேறுபடாதென்பது பெறப்படும். இதனை, மண்ணுலகத்தில் இன்ன நல்வினை செய்ததால் இந்த இன்பத்தை அநுபவிக்க நேர்ந்தது. இன்னதீவினை செய்ததால் இந்தத் துன்பத்தை அநுபவிக்க நேர்ந்தது என்று எண்ணுவதாகக் கூறும் புராண சரித்திரங்களால் உணர்க.

உயிர் மாறிப்பிறத்தல் இல்லையென்பதற்குக்காட்டும் குடாகாய உவமைக்குப் பொருள்கூறி மாறிப்பிறக்கும் என்பதை வலியுறுத்தும்

உதாரணம்.

அரவுதன் றோலுரிவு மக்கனவும் வேறு
பரகாயம் போய்வருமப் பண்பும்—பரவிற்
குடாகாய வாகாயக் கூத்தாட்டா மேன்ப
தடாதுள்ளம் போமா றது.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், உயிருக்குப் புனருற்பவ மாகாமைக்கு வாதிகளான் எடுத்துக்காட்டப்படுங் குடாகாய வாகாயவுவமைக்குப் பொருள்கூறி மேலதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) அரவு தன் தோல் உரிவும் அக்கனவும் பரகாயம் போய்வரும் அப்பண்பும் பரவில் வேறு—(கண் செவி கெட்டவழி உள்ளதே தோற்ற அத்தூடு விண்படர்தற்குப்) பாம்புதோலுரித்துப் புதிதொருதோல் போர்த்துச்சேறலும், புருடன் நனவுடம்பினீங்கிக் கனவுடலிற் சேறலும், யோகிகள் தம்முடம்பு நீங்கிப் பரகாயத்திற் சென்று மீடலுமாகிய இவ்வுவமைகள் மிக்குவழங்குதற்கண் இவற்றிற்கு மாறாக,—குடாகாய ஆகாயக் கூத்தாட்டு ஆம் என்பது அடாது—குடவாகாயங்(குடமுடைந்தவழி) ஆகாயத்தோடு கூடுமாறுபோல்வதோர் கூத்தாட்டாமென்று நீ கூறுதல் பொருந்தாது,—உள்ளம்போம் ஆறு அது—சூக்குமவுடம்பு விட்டுப்போமாற்றிற்கே அவ்வுவமையாகலான் எ—று.

எனவே, உடல்விட்டுப் போமாற்றிற்கு இவ்விருவகை யுவமைகளும் ஆகமங்களிற் கூறுதலின், அவை தம்முண் முரணுத

வாறு, அரவுதன்றோலுரிவு முதலியன தூலவுடல்விட்டுப் போமாற்றிற்கும், குடாகாயவுவமை சூக்குமவுடம்பு விட்டுப்போமாற்றிற்கு மெனக் கோடல் பொருத்தமுடைமையின் அவ்வேறுபாடுணராது குடாகாய வுவமையுந் தூலவுடம்புவிட்டுப் போமாற்றிற்கே போலுமென மலையற்கவென மேலதனை வலியுறுத்தவாறுகாண்க.

மேலை வெண்பாவில் 'கண்ட நனவைக் கனவுணர்விற்றான் மறந்து' என்றது அறிவு வேறுபடு முறைமைக்கு எடுத்துக்காட்டியதெனவும் ஈண்டு அக்கனவும் என்றது அதனையே உடல் வேறுபடுமுறைமைக்கு எடுத்துக் காட்டியதெனவும் தெரிந்துகொள்க.

பரவு முதனிலைத் தொழிற்பெயர். இல்லுருபு தொழினிகழ்ச்சிக்கண் வந்த ஏழாவது.

பரவுதல் எல்லார்க்கும் புலனுமாறு மிக்குநிகழ்தல்.

ஈண்டு உள்ள மென்றது சூக்குமவுடம்பை.

போமாற்றிற்கென்னும் நான்காவது விகாரத்தாற்றொக்கது; "ஐந்தவித்தானாற்றல்" என்புழிப்போல.

குளம் ஆம்பல் குளாம்பலென மரீஇயினாற்போலக் குடம் ஆகாயங் குடாகாயமென மரீஇயிற்று.

ஆகாயக் கூத்தாட்டென்பது உவமத்தொகை. இதனை உம்மைத் தொகையாகக்கொண்டு குடாகாயவாகாயமுங் கூத்தாட்டும் போலென்றுரைப்பாரு முளர்.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) அரவுதன் தோல் உரிவும் அக்கனவும் பரகாயம் போய்வரும் அப்பண்பும் பரவில் வேறு குடாகாய ஆகாயக் கூத்தாட்டு ஆம் என்பது அடாது உள்ளம் போம் ஆறு அது.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், உயிருக்கு உடம்பு நீங்கிய பின்னர்ப் பிறப்பில்லை யென்பதற்கு வாதிகளால் குடாகாய மகாகாய உவமை எடுத்துக் காட்டப்படுமாதலால் அவ்வுவமைக்குப் பொருள்கூறி உயிர் மாறிப்பிறக்குமென மேற்கூறியதனை வலியுறுத்தியவாறும்.

(பொ - ரை.) தூலவுடம்பு கெட்டவிடத்துச் சூக்குமவுடம்பில்நின்றுந் தேவலோகமுதலியவற்றிற் குரிய உடம்புகள் தோன்ற அவற்றை

உயிர் பற்றும். அவ்வாறு பற்றுதற்குப் பாம்பு முன்னுள்ளதோலை யுரித்துப் புதிதொருதோலைப் போர்த்துச் செல்லுதலும், புருடன் நனவுடலை நீங்கிக் கனவுடலைப்பொருந்துதலும், யோகிகள் தம்முடம்பைவிட்டு வேறு உடம்பிற்சென்று மீளுதலும் உவமைகளாம். இவ்வுவமைகள் மிக்கு வழங்கவும் இவற்றைவிட்டுக் குடாகாயம் குடமுடைந்த விடத்து மகாகாயத்தோடு கூடுவதுபோல, தூலவுடம்பு நீங்கியவிடத்து உயிர் பிரமத்தோடு கூடுவதோர் கூத்தாட்டாமென்று நீ கூறுதல் பொருந்தாது. அக்குடாகாயவுவமை சூக்குமவுடம்பை விட்டுப்போதற்கே கூறியதாம். எ - று.

(க - ரை) தூலவுடம்பு கெட்டவிடத்து உயிர் பிறிதொரு தூலவுடம்பைப் பற்றுதற்குப் பாம்பும் புருடனும் யோகிகளும் உவமைகளாகும். சூக்கும உடம்பு நீங்கி உயிர் முத்தியடைதற்குக் குடாகாய மகாகாயம் உவமையாகும் என்பதாம்.

உடலைவிட்டு உயிர்போவதற்குப் பாம்பு முதலிய உவமைகளும், குடாகாய உவமையும் ஆகமங்களிற் கூறப்படுமாதலால், அவ்வுவமைகளுள் ஒன்றோடொன்று மாறுபடாதவண்ணம் பாம்பு தோலுரித்தல் முதலிய உவமைகள் தூலவுடலைவிட்டுப் போவதற்கும், குடாகாய உவமை சூக்குமவுடம்பை விட்டுப்போவதற்கும் எனக் கொள்ளல்வேண்டும். இவ்வேறுபாடுணராது குடாகாய உவமையும் தூலவுடம்பைவிட்டுப் போவதற்கே கூறியதுபோலுமென மலைபவேண்டாம். இவ்வாறு இவ்வுதாரணத்தினுல் உயிருக்கு மாறிப்பிறத்தல் உண்டென்பது வலியுறுத்தியவாறு காண்க.

இன்னும் இவ்வுவமையினுல் மகாகாயமே குடத்தில் அடங்கியபொழுது குடாகாயமெனப்பட்டாற்போல, பிரமமே உடம்பிற் கட்டுப்பட்டபொழுது சீவனுயிற்றென்பர் ஏகான்மவாதிகள். அவ்வாருயின் குடத்தைச் செய்வதற்கு ஆகாயத்தின் வேருய்க் குலாலன் உள்ளுதல்போல, உடம்பைச் செய்வதற்குப் பிரமத்தின் வேருயீ ஒரு பொருளிருக்கவேண்டும். உவமையெல்லாம் ஏகதேசமேயன்றி முற்றுவமையாகாது ஆதலின், பிரமமே உடம்பைச்செய்து அதிற் கட்டுப்பட்டுச் சீவனுயிற்றென்பரேல், எதற்காகச்செய்து கட்டுப்பட்டதென வினவில் என்சொல்வர். இலீலையென்பரேல், உடம்பு நீங்கிப் பிரமமான பின்னரும் இலீலையினுல் உடம்பைச் செய்யவும் அதிற் கட்டுப்படவும் கூடுமாதலின் சாதனஞ்செய்தல் பயனற்ற வீண்செயலாகும். இவ்வாருயின்,

"கடத்திருக்கு மாகாயம் போலச்சீ வான்மா கருதுமகா காயம்போற் பரமான்மா விருக்குங், கடத்திருக்கு மாகாயங் கடமுடைந்தான் முன்னர்க் கருதுமகா காயமா நிறைந்துநின்றூற் போலத், திடத்திலுற பிரகிருதி சம்பந்த மாய தேகவுபா திகண்முழுது நீங்கியபோ தந்தக், சடத்தமர்சீ வான்மாவே பரமான்மா வாகுஞ் சர்வஞ்ஞ ஞமெம்யாற் சொவப்பட்ட திதுவே."

எனச் சருவஞானோத்தரத்திற்கூறிய கருத்தென்னையெனின், கூறுதும்:—கடாகாயமும் மகாகாயமும் ஆகாயமென்னுஞ் சாதிப்பொதுமையால் ஒன்றாயவாறுபோலச் சீவான்மாவும் பரமான்மாவும் சித்தென்னுஞ் சாதிப்பொதுமையால் ஒன்றென்பதூஉம், ஆயினும் மகாகாயம் பற்றின்றியும் குடாகாயம் குடத்தைப்பற்றியும் நிற்குமாறுபோல, பரமான்மா ஒன்றினுந் தோய்வின்றிச் சொயம்பிரகாசமாயும் சீவான்மாயாதானும் ஒன்றைப்பற்றி அதன்மயமாயும் நிற்குமென்பதூஉம், கடமுடைந்த பின்னர்க் கடாகாயம் மகாகாயமாய் ஒன்றுபட்டு நிற்குமாறுபோல, சூக்கும உடம்பு நீங்கிய பின்னர் வேறு பற்றுக்கோடில்லாமையின் பரமான்மாவோடு ஒன்றுபட்டு நிற்குமென்பதூஉம் அச்செய்யுளின் கருத்தாம். இவ்வுண்மையறியாதார் சருவஞானோத்தரமும் தமது ஏகான்மவாதநூலென மயங்கி யிடர்ப்படுவர். லீலையாற் செய்வனென ஆகமங்களிற் கூறியதன் கருத்தென்னை எனின், கரணத்தால் வருந்திச்செய்யாது சங்கற்பமாத்திரத்தால் எளிதிற் செய்வனென்பதுபற்றியே யன்றிப் பிறிதில்லை என்பதாம்.

மேலை வெண்பாவில் கண்ட நனவைக் கனவுணவிற்றான் மறந்து எனக்கூறியது, உயிரின் அறிவு வேறுபடு முறைமைக்கு எடுத்துக்காட்டியதாம். இவ்வெண்பாவில் அக்கனவும் என்று அதனையே கூறியது உடல் வேறுபடு முறைமைக்கு எடுத்துக்காட்டியதாம். இவ்வாறு ஈரிடத்தும் ஓர் உவமை காட்டப்பட்டிருப்பினும் வெவ்வேறு பொருளைக்குறித்து நின்றவாறு காண்க.

பரவில் என்பதிலுள்ள பரவு என்பது தல்விகுதியின்றியும் பரவுதல் என்னும் பொருளைக்குறித்து நிற்றலால் முதனிலைத்தொழிற்பெயர். பரவுதல் எல்லார்க்குந் தெரியும்வண்ணம் மிகுந்து நிகழ்தல்.

பரவில் என்றதிலுள்ள இல்லுருபு தொழில் நிகழ்ச்சியைக் குறித்த ஏழாம் வேற்றுமையாதலால் வழங்குதற்கண்ணென உரை செய்யப்பட்டது.

உள்ளமென்றது இச்செய்யுளில் சூக்கும உடம்பைக்குறித்து நின்றது,

போமாறு என்றதில் நான்காம்வேற்றுமைஉருபு தொக்கு நின்றது; ஆதலால் போமாற்றிற்கு என உரை செய்யப்பட்டது. இது திருக்குறள் நீத்தார்பெருமை ௫-வது செய்யுளில் "ஐந்தவித்தா னாற்றல்" என்றவிடத்து ஐந்தவித்தானாற்றலுக்கு என்பதுபோலவாம்.

குளம்ஆம்பல் குளாம்பல் என மருவி வழங்குவதுபோல குடம் ஆகாயம் குடாகாயமென மருவிநின்றது. ஆகவே குடாகாயமென்பதுதமிழ் நூல் முடிபென்றவாறும். 'குடாகாயம் வடநூல் முடிபென்றுகோடலுமொன்று' என உம்மைகொடுத்துத் திராவிடமாபாடியத்தில் உரையாசிரியர் கூறியவாறும் அறிக.

குடாகாய ஆகாயக்கூத்தாட்டென்பது குடாகாயம் ஆகாயம் போல்வ தோர் கூத்தாட்டென்னும் பொருளைக்குறித்து உவமவுருபு தொகையாய் நிற்றலால் உவமத்தொகை. இவ்வாறன்றிக் குடாகாய ஆகாயக் கூத்தாட் டென்பதை உம்மைத் தொகையாகக்கொண்டு குடாகாய ஆகாயமும் கூத் தாட்டும் போலென்றுரைப்பாரும் உளர். கூர்த்தாட்டாவது ஒருவன் பல வேடங்கட்டி ஆடும் நடனமாம்.

மூன்றும் அதிகரணம் முற்றிற்று.

நான்காம் அதிகரணம்.

இறைவன தனது சத்தியில் பிரிப்பின்றி நிற்பனெனக் கூறும்

மேற்கோள்.

இனி நீக்கமின்றி நிற்குமன்றே யென்றது.

சிற்றுரை.

எ-து மே-ள் எ-னின், அங்ஙனம் புனருற்பவ மாதற்கேது வாய் இருவினைகளைச்செலுத்தி நிற்பதெனப் போந்த ஆணை யெனப்படுஞ் சத்தியாவது முதல்வனின் வேறோ அன்றோவென் னும் ஐயப்பாட்டின்கட் பொருட்குச்சத்தி வேறென்னு மீமாஞ் சகர் முதலியோர் மதமும், அன்றென்னும் நையாயிகர்முதலி யோர் மதமும் பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்தி ரத்தின் இறுதிக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுத லிற்று.

(இ-ள்.) முதல்வன் தனதாணையாகிய சிற்சத்தியோடு சம வேதமாய் நிற்பன் எ-று.

அந்நியயோக வியவச்சேதம் அயோக வியவச்சேதம் என்றற் றொடக்கத்து வடசொற்கள் பிறிதினியைபு நீக்குதல் இயையின் மை நீக்குதல் என்றற்றொடக்கத்தனவாக மொழிபெயர்த்து வழங் கப்படுமாறுபோலச் சமவாயமென்னும் வடமொழி தமிழின்கண் நீக்கமின்றி நிற்றலென மொழிபெயர்த்து வழங்கப்படுமென்றுணர்க. வடமொழி இரண்டாஞ் சூத்திரத்திறுதியின் ஆணை முதல்வனோடு சமவேதமாய் நிற்குமென ஆணைமேல் வைத்தோதியதனை ஈண்டு

முதல்வன்மேல் வைத்தோதினர். கண்ணழிப்புழி இருவினை முதல்வ னாணையின்வருமெனக் கூறிப்போந்த ஆணை, ஈண்டுக் கூறுமைமையே இனிது விளங்குமென்னுங் கருத்தாற் சொற்பல்காமைப்பொருட்டு அதனை யொழித்தெடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பொருள் காணமாட்டாதார் சருவவியாபியாய் நிற்றலாலென்னும் ஏதுவின் பொருளே மேற்கோளுக்கும் பொருளாகக் கொண்டுரைப்ப. அது கூறியது கூறலாதலுமன்றி மொழிபெயர்த்தல் யாப்பிற் கேலாமையுமறிக. ஈண்டுச் சமவாயமென்றது தாதான்மிய சம்பந்தத்தை. அஃதாவது பொருளான் ஒன்றேயாயும் ஒருவாற்றாற் பேதமாதற்கு உரிமை யுடைமை.

விளக்கம்.

உயிர் மாறிப்பிறக்குமென மூன்றும் அதிகரணத்தாற்கூறி அவ்வாறு மாறிப் பிறத்தலை வினைக்கீடாக உயிருக்குக் கூட்டுஞ்சத்தி இறைவனின் வேறன்றென நான்காம் அதிகரணத்தாற் கூறுகின்றார்.

இது சூத்திரத்திலுள்ள ஆணையினீக்கமின்றி நிற்குமன்றே என்பதைப் பதச்சேதஞ்செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்விற்றேவெனின், மேலை அதிகாணத் திற் கூறியவாறு உயிர்கள் பிறப்பிறப்பை யடைவதற்கு ஏதுவாயுள்ள இரு வினைகள் சடமாதலின் அவ்வினைகளை உயிர்களுக்கு ஆணையெனப்படுஞ் சத் தியே கூட்டுவிக்குமென இச்சூத்திரத்து இரண்டாம் அதிகாணத்தாற் கூறப்பட்டது. அச்சத்தியாவது முதல்வனைவிட வேறோ, முதல்வன் றானோ என்பது ஐயப்பாடு. இவ்வையப்பாட்டின்கண் முதல்வனைவிடச் சத்திவேறென்று கூறுவதும், சத்தி முதல்வனே என்று கூறுவதும் பிறர் பக்கம். வேறென்று கூறுவோர் மீமாஞ்சகர் முதலியோர். வேறன்றெனக் கூறுவோர் நையாயிகர் முதலியோர். இவ்விருவர் கூற்றையும் ஆசங்கித்துக் கொண்டு சூத்திரத்தின் நான்காம் கூற்றைப் பதச்சேதஞ்செய்து முதல்வ னுக்குச் சத்திவேறுமன்று முதல்வனுமன்று எனக் கூறியவாறும்.

(இம்மேற்கோளின் பொருள்.) முதல்வன் தனதாணையாகிய சிற்சத்தி யோடு பிரிப்பின்றிச் சமவேதமாகிய திரோதானசத்திவடிவாய் நிற்பன் எ—று.

சமவேதத்தின் பொருள் சூத்திரவுரையிற் கூறப்பட்டிருக்கின்றது.

நீக்கமின்றி நிற்கும் என்னும் தமிழ்மொழிக்குச் சமவேதமாய் நிற்பன் என வடமொழியால் உரைசெய்த கருத்தென்னையெனின், சமவேதமாவது சமவாய சம்பந்தத்தாலிருப்பது சமவாயமென்னும் வடமொழி தமிழில் நீக்க

யின்றி நிற்றலென மொழிபெயர்த்து வழங்கப்படும். படவே, நீக்கமின்றி நிற்றல் சமவாயமும், நீக்கமின்றி நிற்பது சமவேதமுமாம், ஆகவே, சமவேதமென்றவிடத்து நீக்கமின்றி நிற்பதையும் சமவாயசம்பந்தத்திலிருப்பதென்பதையும் உணர்த்தும். நீக்கமின்றி நிற்குமென்பது சமவாய சம்பந்தத்தாலிருப்பதென்றுணர்த்தாது. ஆதலால், முதல்வனுடனும் சிற்சத்தியுடனும் சமவாயசம்பந்தத்தாலிருக்கும் சமவேதமாகிய திரோதானசத்தி வடிவாய் முதல்வன் சிற்சத்தியிற் பிரிப்பின்றிநிற்பன் என்பதுணர்த்துதற்கு அவ்வாறு கூறினரென்க.

வடமொழிச் சிவஞானபோதம் இரண்டாஞ் சூத்திரத்து முடிவில் ஆணை முதல்வனோடு சமவேதமாய் நிற்குமென ஆணைமேல் வைத்தோதியதனை இந்நூலில் முதல்வன் ஆணையோடு சமவேதமாய் நிற்பனென முதல்வன்மேல் வைத்தோதினர். இவ்வாறு ஓதியது முரணாகாது. எதனாலெனின், சத்தி இறைவனிற் சமவேதமாதலின் அம்முறைபற்றி வடநூலிற் கூறினர். உயிர்களோடு கலந்து நிற்கும் இறைவன் நிலை திரோதானசத்தியெனப்படும் என்ற முறைபற்றி இந்நூலில் இறைவன் சிற்சத்தியிற் சமவேதமாய் நிற்பன் எனக் கூறினாராதலின் என்க.

மேற்கோளில், ஆணையில் நீக்கமின்றி யென்று கூறவில்லை. சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைப் பதச்சேதஞ்செய்து கூறிய இரண்டாம் அதிகரணத்தில் இருவினை முதல்வன் ஆணையின்வருமெனக் கூறியிருக்கின்றமையால், இவ்வதிகரணத்துக் கூறாமலே அமையுமென்னுங் கருத்தானும், சொல்லை அதிகப்படுத்தாமல் சுருக்கிக் கூறவேண்டுவதாகிய அழகுபற்றியும், ஆணையென்னுஞ் சொல்லைக் கூறாது நீக்கமின்றி நிற்குமன்றே என்று எடுத்துக்கொள்ளப்பட்டது. நீக்கமின்றி என்பதற்கு ஆணையில் நீக்கமின்றி என இவ்வாறு பொருள் கொள்ளமாட்டாதார், சருவவியாபியாய் நிற்குமென்று பொருள் கூறுவர். அவ்வாறு கூறின், இவ்வதிகரணத்திட்கூறப்படும் ஏதுவின் பொருளே மேற்கோளுக்கும் பொருளாகக் கூறியது கூறலென்னுங் குற்றமாகும். அன்றியும் வடமொழிச் சிவஞானபோதத்து இரண்டாஞ் சூத்திரத்திறுதியில் ஆணை முதல்வனோடு சமவேதமாய் நிற்குமெனக்கூறியதை மொழிபெயர்த்துக்கூறும் விதிக்கும் பொருந்தாதவாறு அறிக.

சைவசித்தாந்தத்தில், சமவாயமென்றது தாதான்மியசம்பந்தத்தையாம். தாதான்மியசம்பந்தமாவது குணத்திற்கும் குணிக்கு முண்டான ஒற்றுமைச் சம்பந்தமெனவும், இரண்டு பொருள்களுக்குள்ள ஒற்றுமைச் சம்பந்தமெனவும் இருவகைப்படும். அவற்றுள், குணகுணிகளுக்குள்ள ஒற்றுமை தாதான்மியமென்றும், இருபொருள்களுக்குள்ள ஒற்றுமை அத்துவிதமென்றும் கூறப்படும். இவ்விடத்துக்கூறிய தாதான்மியம் குணகுணிகளுக்

குள்ள தாதான்மியமாம். சிவம் குணி; சத்தி குணம். சிவமுஞ் சிவனுங் கலந்திருக்குந் தாதான்மியம் அத்துவிதமெனப்படும்.

சத்தியில் நீக்கமின்றி நிற்பன் என்பதற்குக் காட்டும்

ஏது.

அவன் ஏகாநேக மிரண்டுமின்றிச் சருவவியாபியாய் நிற்றலான்.

சிற்றுரை.

ஏ—து ஏது எ—னின், அதற்குப் பிரமாணமென்னை யென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) அம்முதல்வன் ஒன்றே வேறே யென்னும் இரு தன்மையுமின்றி அவ்விரண்டிற்கும் பொதுவாய் எங்கணும் வியாபியாய் நிற்றலான் இனி ஆணையினீக்கமின்றி நிற்குமன்றே யென மேற்கொண்டது எ-று.

அவிநாபாவ முணர்த்துவார் ஏகாநேக மிரண்டுமின்றி யென மேற்கோளிற் போந்தபொருளை அநுவதித்துச் சருவவியாபியாய் நிற்றலானென ஏதுக்கூறினர். சருவவியாபியாய் நிற்றல் அவையே தானேயாயென்னும் அதிகரணத்தாற் சாதிக்கப்பட்டமையின் அதனை ஈண்டேதுவாக வைத்து ஆணையினீக்கமின்றி நிற்குமென்னு மேற்கோளைச் சாதித்தவாறு.

விளக்கம்.

இந்த ஏது என்ன சொல்லிற்றேவெனின், முதல்வன் தனது ஆணையாகிய சத்தியோடு நீக்கமின்றி நிற்பன் என்பதற்குப் பிரமாணம் என்னை யென்னும் வினவை ஆசங்கித்துப் பிரமாணங்கூறி நீக்கமின்றி நிற்பன் என்பதை வலியுறுத்தியவாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) அம்முதல்வன், தானும் சத்தியும் ஒன்றே யென்றாவது வேறேயென்றாவது எண்ணுதற்கின்றி, அவ்விரண்டற்கும் பொதுவாய் எவ்விடத்தும் வியாபியாய் நிற்றலான், இனி ஆணையினீக்கமின்றி நிற்குமன்றே என மேற்கோள் கூறியது. எ—று.

எவ்விடத்தும் வியாபித்தல் சத்தியின் காரியமாதலால், சத்தியில் நீக்கமின்றி நிற்பன் என்பது கருத்து.

மேற்கோளிலுள்ள நீக்கமின்றி . என்றதன் பொருளையே தரக்கூடிய ஏகாநேகம் இரண்டு மின்றி என்ற வாக்கியத்தையும் இந்த

ஏதுவிற் கூறினர். அது கூறியது கூறலென்னுங் குற்றமாகாது. எதற்காக அவ்வாறு கூறினரெனின், சர்வ வியாபியாய் நிற்றலால் என்று மட்டுங் கூறிவிட்டால் நீக்கமின்றி நிற்றல்வேறு சர்வவியாபியாய் நிற்றல் வேறு என எண்ணவரும், அவ்வாறு எண்ணாமல் நீக்கமின்றி நிற்றலை விட்டு நீங்காதிருப்பது சருவ வியாபகம் என்பதை யுணர்த்தவேண்டி மேற்கோளிற் கூறிய பொருளை அநுவதித்துச் சருவ வியாபியாய் நிற்றலானெனக் கூறினர். அநுவாதமாவது முன் கூறியதைப் பின்னும் பிறிதொன்று கூறுவதற்காகக் கூறுதல்.

சருவ வியாபியாய் நிற்றல் எவ்வாறு பெறப்படுமெனின், அவையே தானேயாய் என்னும் இச்சூத்திரத்து முதலதிகரணத்தால் அது சாதிக்கப்பட்டது. ஆதலால் அவ்வாறு நிற்றலை இவ்வதிகரணத்தில் ஏதுவாக வைத்து ஆணையினீக்கமின்றி நிற்கு மென்னும் மேற்கோளைச் சாதித்தவாறும்.

இந்த ஏது முதல்வனைவிடச் சத்திவேறெனவும், முதல்வனே யென வுங் கூறும் பிறர் பக்கத்தை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

நீக்கமின்றி நிற்றலை விட்டு நீங்காதிருப்பது சருவவியாபகம் என்பதற்குக்காட்டும் உதாரணம்.

எங்குமுள னென்றளவை யொன்றன் றிரண்டென்னி
லெங்கு முளனன் றேவற்றேவனு—மங்க
ணவையவ னன்றில்லைப் போன்ஞெளிபேர் லீச
னவையுடைமை யாளாநா மங்கு.

சிற்றுரை.

எ—து, உ—ம். எ—னின் ஏதுவும் மேற்கோளுந் தம்முள் அவிநாபாவமாமாறு யாங்ஙன மென்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ—ள்.) எங்கும் உளன் என்ற அளவை ஒன்று அன்று-யாங்கணும் அவையே தானே யென (மேற்கூறிய) அளவையானே (முதல்வன்) ஒரு பொருளாதல் கூடாது. (ஒன்றாயிற் கங்கைக் கரையினின்ற ஒரு மானுடனே காவிரிக்கரையினும் ஒருங்கு நிற்க மாட்டான். அதுபோல, ஒரு பொருள் ஓரிடத்துளதாதலன்றியாங்கணும் வியாபித்து நிற்கமாட்டாதென்பதாம்),— இரண்டு என்னில் எங்கும் உளன் அன்று—அற்றேல், முதல்வன் இருபொருளாய் நிற்குமெனக்கோடுமெனின், யாங்கணும் அவையே தானேயா

யுளனுதல் கூடாது. (தன்மாட்டே வேற்றுமை யுடையானுக்குப் பிற பொருள்களின்கண் வேற்றுமையின்றி வியாபித்து நிற்றல் சாலாதென்பதாம். அற்றேல், இவ்விரண்டோடு மூரனுதலின் எங்குமுளனல்ல னெனக்கோடுமெனின்),—எவற்று எவனும் அங்கண் அவை அவன் அன்று இல்லை—எவ்விடங்களினுள்ள எத்திறப் பொருளுமாகிய அவ்விடத்து அவைகளெல்லாம் (அகரவுயிரின்றேல் அக்கரங்களில்லையாமாறுபோல) அம்முதல்வனையின்றியமையாவாகலான் (எங்குமுளனல்ல னென்றல் பொருந்தாது. ஆகலான் எங்குமுளனல்லன் என்றல் பொருந்தாதென்பது குறிப்பெச்சம். அற்றேல், வேறு விடுக்குமாறென்னையெனின்),—ஈசன் பொன் ஒளிபோல்—எங்குமுளனுகிய முதல்வன் ஞாயிறும் ஒளியும்போல (ஒன்றாதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியத்தாற் சிவமுஞ் சத்தியுமென்றியைந்து நிற்கும். அற்றேல், பசுபாசங்களும் வியாபகமெனக்கோடலின் அவையும் இம்முறைபற்றி ஏகாநேக மிரண்டுமின்றி முதல்வன்போலத் தத்தஞ் சத்திகளோடு தாதான்மியமாய் நிற்குமென்பது பெறப்படுதலான் முதல்வனேடு சமமாவான் செல்லுமெனின்),—அவை உடைமை (ஆம்) நாம் ஆள் ஆம் அங்கு—(அவ்வாறுயினும் முதல்வனது வியாபகத்தை நோக்கி வியாப்பியமாகலின்) அப்பாசங்கள் உடைமையாம்; பசுக்களாகிய நாம், அடிமையாவேம் அம்முதல்வன் மாட்டு எ-து.

அன்றெனப் பாடமோதுவாருமுளர்.

பாசங்கள் உடைமையாமாறும் பசுக்கள் அடிமையாமாறும் 'தாரகமா மத்தன்றூ ணிற்றல்' எ-ம், 'அதனி னீறலா வொன்று பல வாறே தொழும்பா குழ்' எ-ம், மேற் பெறப்பட்டமையின், அவற்றை ஈண்டெடுத்துக்காட்டி ஆசங்கை நீக்கியவாறு.

என்றவென்னும் பெயரெச்சத்தகரம் விகாரத்தாற் றொக்கது. "புகழ்புரிந்தில்" என்புழிப்போல. அளவையானென ஆனுருபு விரித்துரைக்க.

ஒன்றன்று உளனன்று என்புழி ஒன்று உளனென்னுந் தருமிவாசகங்கள் ஆகுபெயரால் அத்தருமங்களின்மே னின்றனவாகலான் உளனென்பதும் அஃறிணை யொருமையோடு முடிந்தது.

அன்மை கூடாமைப்பொருட்டு.

எவற்றெவனுமென்பது ஏழாம் வேற்றுமைத்தொகை. அஃறிணைக்கண்வரும் எவனென்னும் வினாவினைக் குறிப்புச்சொல் ஈண்டுப் பெயர்த்தன்மைப்பட்டு எவனுமென எஞ்சாப் பொருண்மையுணர்த்தி நின்றது.

அன்றி யென்னும் வினையெச்சம் செய்யுளாகலின் அன்றெனத் திரிந்தது.

இன்மை ஈண்டு அமையாமைப்பொருட்டு.

பொன் ஆகுபெயர்.

ஆம் என்பது உடைமையோடு மியையும்.

பொன்னொளிபோ லீசனென்பது தொகையுவமமாகலிற் பொதுவியல்பு விரித்துரைக்கப்பட்டது.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) எங்கும் உளன் என்ற அளவை ஒன்று அன்று என்னில் எங்கும் உளன் அன்று எவற்று எவனும் அங்கண் அவை அவன் அன்று இல்லை ஈசன் பொன் ஒளிபோல் அவை உடைமை (ஆம்) நாம் ஆன் ஆம் அங்கு.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றேவெனின், எவ்விடத்தும் நீக்கமின்றி வியாபியாய் நிற்றலால் என்னும் ஏதுவும், சத்தியில் நீக்கமின்றி நிற்குமென்ற மேற்கோளும் தம்முள் விட்டுநீங்காமையாதல் எவ்வாறு கூடுமென்னும் வினாவை ஆசங்கித்து இம்மேற்கோளும் ஏதுவும் விட்டுநீங்காமையையுடையன என்பதை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) எவ்விடத்தும் வியாபியாய் நிற்பனென மேற்கூறிய ஏதுவினால் முதல்வன் ஒருபொருளாதல் கூடாது. ஒரு பொருளாயின் கங்கைக்கரையில் நின்ற ஒரு மனுடனே காவிரிக்கரையினும் ஒரேசமயத்தில் நிற்கமாட்டான்: அதுபோல முதல்வன் ஒருபொருளாயின் ஓரிடத்திருத்தலேயன்றி எவ்விடத்தும் வியாபித்து நிற்கமாட்டான். ஆதலால் முதல்வன் இருபொருளாய் நிற்பனெனக் கொள்வோமெனின், அவ்வாறுகொண்டால் எவ்விடத்தும் வியாபித்துநிற்றல்கூடாது. ஏதனாலெனின், தன்னிடத்தே இருபொருளாய் நிற்கும் வேற்றுமையுள்ளபொழுது பிறபொருளோடு வேற்றுமையின்றி வியாபித்துநிற்றல் எவ்வாறுகூடும்? கூடாதென்றபடியாம். இவ்வாறு ஒரு பொருளாதலும் இருபொருளாதலும் ஒன்றோடொன்று முரணுதலால் முதல்வன் ஒருபொருளெனவும் எவ்விடத்தும் வியாபியல்லன் எனவுங் கொள்வேமென்னில், அதுவும் பொருந்தாது. ஏதனாலெனின்,

எவ்விடங்களினுமுள்ள எல்லாப்பொருள்களும் அகரவுயிரில்லையாயின் அக்கரங்களில்லாதவாறுபோல அம்முதல்வன் இல்லையாயின் இருக்கமாட்டாவாதலால் எவ்விடத்தும் வியாபியல்லன் என்றல் பொருந்தாது. ஆதலால் முடிபுதான் என்னையெனின், சூரியனும் அதன் ஒளியும் ஒன்றென்றுவது இரண்டென்றுவது பிரித்தறியவாராது வியாபித்துநிற்குமாறுபோல, முதல்வனும், சிவம் சத்தியென ஒன்றாதற்கும் இரண்டாதற்கும் பொதுவான தாதான்மியசம்பந்தத்தைப் பொருந்திச் சருவவியாபியாய் நிற்பன். அவ்வாறாயின், பசுபாசங்களும் வியாபகமெனக் கூறுதலால் அவையும் இம்முறைபோலத் தத்தம் சத்திகளோடு தாதான்மியமாய் நிற்குமென்பது பெறப்படுமாதலின், முதல்வனோடு சமமென்று கூறலாமோவெனின், கூறலாகாது; என்னையெனின், பசுபாசங்கள் வியாபகமாயினும் முதல்வனது வியாபகத்தைநோக்க வியாப்பியமாம். ஆதலால் அறிவில்லாத பாசங்கள் முதல்வனுக்கு உடைமையும் சிற்றறிவுள்ள பசுக்களாகிய நாம் முதல்வனுக்கு அடிமையுமாவேம் எ - று.

(க - ரை.) முதல்வன் ஒருபொருளென்றும் இருபொருளென்றும் பிரித்தறியவாராது சிவம் சத்தியென்னும் இருதன்மையாய் எவற்றினும் வியாபித்து நிற்பன் என்பதாம்.

இச்சூத்திரத்து முதல் அதிகரணத்தில் முதல்வன் ஒருவனே எனக் கூறியிருக்கவும், இவ்விடத்தில் ஒருபொருளென்றல் கூடாதென்றுகூறிய கருத்தென்னையெனின், பல முதல்வர் அல்லர் ஒருவனேயென மேலே கூறப்பட்டது. இவ்விடத்தில் அம்முதல்வன் ஒரு தன்மையாயிருப்பனோ, இருதன்மையா யிருப்பனோ என்னுஞ் சந்தேகத்தை நீக்குதற்பொருட்டு ஒருதன்மையான பொருள் ஓரிடத்திற்றான் இருக்கமுடியுமாதலானும், இருதன்மையானபொருள் இரண்டாகித் தம்முள் வேற்றுமை உடையதாயிருக்குமாதலானும், அவ்விரண்டுமின்றிப் பொருளால் ஒன்றாயும் தன்மையால் இரண்டாயும் சூரியனும் அதனொளியும்போல நிற்பன் எனக் கூறியவாறாம்.

செய்யுளின் இறுதியில் அங்கு என்றிருப்பதை அன்று எனப் பாடமோதுவாருமுளர். அவ்வாறு ஓதுங்கால், அன்றியே பாசங்கள் உடைமையும் பசுக்கள் அடிமையும் என்பது பொருளாகக்கொள்க.

பாசங்கள் உடைமை என்பது முதற்சூத்திரத்து உ-ம் அதிகரணத்து உ-வது வெண்பாவில் 'தாரகமாம் அ... ன்று ணிற்றல்' எனக்கூறியதனாலும், பசுக்கள் அடிமையாமென்பது அச்சூத்திரத்து ரு-ம் அதிகரணத்து முதல் வெண்பாவில் 'அத்னின் ஈறலா ஒன்றுபல வாறே தொழும்பாகும்' எனக் கூறியதனாலும் பெறப்பட்டமையால் அவற்றை இவ்விடத்து எடுத்துக்காட்டி அவை வியாபகமாயினும் முதல்வனை நோக்க வியாப்பியமாதலின் சமமாகாவென ஆசங்கை நீக்கியவாறாம்.

எங்கு முளனென்றளவை என்றதில் பெயரெச்சத்தைக்குறிக்கும் அகரம்தொக்குநின்றது. ஆதலால் என்ற அளவை எனப்பிரித்து உரை செய்யப்பட்டது. இதனைத் திருக்குறள் வாழ்க்கைத்துணைநலம் என்னும் அதிகாரத்தில் "புகழ்புரிந்தில்" என்புழிப்போலக் கொள்க. புகழ்புரிந்த இல் என்பது புகழ்புரிந்தில் என நின்றது.

அளவை என்பதில் ஆன் உருபு விரித்து அளவையானென உரை செய்யப்பட்டது.

ஒன்றன்று உளன் அன்று என்றவிடத்து, ஒன்று உளன் என்னும் தருமிவாசகங்கள் ஆகுபெயரால் ஒன்றுதல் உளனுதல் என்னும் அத்தருமங்களின்மேல் நின்றன. ஆதலால் உளனென்பது அன்று என்னும் அஃறிணை ஒருமையோடு முடிந்தது, தருமியென்பது தருமத்தை யுடையதாம். தருமம் குணம்; தருமி குணி. இவ்வாறு உளன் என்பதை உளனுதல் எனக் கொள்ளாக்கால் உளன் என்னும் உயர்திணை அன்று என்னும் அஃறிணை கொண்டு முடியாது.

ஒன்றன்று உளனன்று என்பதிலுள்ள அன்மை அவ்வாறிருக்க முடியாது என்னும் பொருளைக்குறித்து நின்றது. அவ்வளவேயன்றி ஒன்றல்லன் உளனல்லன் என்னும் பொருளைக்குறித்து நிற்கவில்லை

எவற்றெவனும் என்பதில் ஏழாம்வேற்றுமை உருபு தொக்கு நிற்றலால், எவற்று என்பதற்கு எவ்விடங்களினுள்ள என உரை செய்யப்பட்டது. இடம் ஏழாம் வேற்றுமை யுருபு.

எவன் என்பது அஃறிணையைக் குறித்து வினவுகின்ற வினைக்குறிப்புச்சொல். அதாவது, என் என்பது வினு; என்னுயிற்று ஆகின்றது ஆகும் எனக்காலங்காட்டாமையால் வினைக்குறிப்பு. இது அஃறிணைக் கண்வரும் என்பதைத் திருக்குறள் அறன்வலியுறுத்தல் என்னும் அதிகாரத்து முதலாவது செய்யுளில் "ஆக்கம் எவனோ" என்றவிடத்து எவன் என்னுஞ்சொல் ஆக்கமாகிய அஃறிணைக்கண் வந்தவாறு காண்க. இச்செய்யுளில் எவனென்னும் வினக்குறிப்புவினைச்சொல் பெயர்த்தன்மைப்பட்டு உம்மைபெற்று எவனும் என நின்று அவ்வும்மையால் பெயர்ச்சொல்லிற்குரிய எல்லாப் பொருளையும் உணர்த்திநின்றது. ஆதலால் எவனுமென்பதற்கு எத்திறப்பொருளுமென உரை செய்யப்பட்டது.

அவனன்றி யென்னும் வினையெச்சம் அவன் அன்று எனத்திரிந்து நின்றது. இது, திருக்குறள் வான்சிறப்பு செ. ௩-ல் "விண்ணின்று பொய்ப்பின்" என்றாற்போல.

அதற்கடுத்து நின்ற இல்லை யென்பது இவ்விடத்து அவனையின்றி இருத்தல் அமையாமையைக் குறித்து நின்றது.

பொன்னென்பது பொன்போன்ற ஞாயிற்றைக் குறித்தலால் ஆகு பெயர். ஆளாம் என்பதிலுள்ள ஆம், உடைமை என்பதனோடும் பொருந்தும். ஆதலால் ஆளாம் உடைமையாம் என உரை செய்யப்பட்டது.

பொன் ஒளிபோல் ஈசன் என்ற உவமானம் உவமேயம் இரண்டினும், அவ்விரண்டற்கும் பொதுத்தன்மமாகிய பிரிக்க முடியாமை தொக்கு நின்றது. இவ்வாறு தொக்கு நிற்றல் தொகை உவமம் என்னும் அலங்காரம். அத்தொகையை விரித்து ஒன்றாதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியமாய் நிற்குமென உரை செய்யப்பட்டது.

சிற்றுரை.

இவ்வதிகரணத்தாற்போந்த தொகைப்பொருள், முதல்வன் வியாபகனாதலின் வியாபகப்பொருட்கு ஒன்றாய் நிற்றல் கூடாது; அது கூடாமைபற்றி இரண்டாய் நிற்பனெனின், வியாபகனாதல் கூடாது; வியாபியல்லனெனின், பசுபாசங்கள் அவனையின்றி யமைதல்கூடாது; ஆகலான், முதல்வனொருவனே ஞாயிறும் ஒளியும் போலச் சிவமுஞ் சத்தியுமெனத் தாதான்மியத்தால் இருதிறப் பட்டுச் சருவவியாபியாய்ப் பொதுமையினிற்பனெனச் சமவேதமாய் நிற்குமாறு தெளிவிக்கு முகத்தானே தாதான்மியசத்தியுண்மைக்குப் பிரமாணங் கூறியவாறு மென்றுணர்க. அஃதாமாறு தன்னை விளக்குவதூஉம் விடயங்களை விளக்குவதூஉந் தானேயாகிய ஞாயிறொன்றுதானே விடயங்களை விளக்குழிக் கதிரெனவுந் தன்னை விளக்குழிக் கதிரோனெனவுந் தாதான்மியத்தால் இருதிறப்பட்டியைந்துநிற்றல்போல, புறப்பொருளை நோக்காது அறிவு மாத்திரையாய்த் தன்னியல்பினிற்பதூஉம், புறப்பொருளை நோக்கிநின்றுணர்த்துவதூஉமாகிய இருதன்மையையுடைய பேரறிவாய சைதன்னிய மொன்றே அங்ஙனம் புறப்பொருளை நோக்கி நிற்கு நிலையிற் சத்தியெனவும், புறப்பொருளை நோக்காது அறிவு மாத்திரையாய் நிற்குநிலையிற் சிவமெனவுந் தாதான்மியத்தால் இருதிறப்பட்டியைந்துநிற்கு மென்றுணர்க.

இனி, தீயின் சத்தியொன்றுதானே சுடுதல் அடுதல் முதலிய தொழில்வேறுபாட்டால் சுடுஞ்சத்தி அடுஞ்சத்தியென்றற்றொடக்கத்துப் பலவேறுவகைப்படுமாறுபோல, சிவசத்தியொன்றே காரிய வேறுபாட்டால் பரை ஆதி இச்சை ஞானம் கிரியையென்று ஐவகைச்சத்திகளாயும், முறையே ஐந்தும் நான்கும் எட்டும் பதின்

மூன்றும் எட்டுமாகிய கூறுபாடுடைய ஈசானிமுதலிய ஐவகைச் சத்திகளாயும், ஆரணி சனனி முதலிய மூவகைச் சத்திகளாயும், நிவிர்த்தி பிரதிட்டை முதலிய ஐவகைச் சத்திகளாயும், வாமை சேட்டை முதலிய அட்டசத்திகளாயும், பராவாகீசுவரி அபராவாகீசுவரி மனோன்மனி மகேசை உமை திரு வாணி யென எழுவகைச் சிவபேதங்கட்கும் முறையே எழுவகைச் சத்திகளாயும், அத்தியான்மிகமெனப்படும் உன்மனை சமனை முதலிய கலைகளாயும், இன்னும் பல வேறு வகைப்பட்டு நிற்கும். அவ்வச் சத்திகளோடு புணர்ந்த சிவமும் அவ்வாறே பலவகைப் பெயர்பெற்று நிற்கும். அவ்வச் சத்திகட்கு இடமாய விந்துவும் அங்ஙனம் பலவேறு வகையான் விருத்திப்பட்டு அப்பெயர் பெறும். இவற்றினியல் பெல்லாம் ஆகமங்களுட் காண்க.

விளக்கம்.

இவ்வதிகாரணத்தாற் கூறிய தொகைப் பொருளாவது :—முதல்வன் வியாபகனாதலின் வியாபகப் பொருட்கு ஒரு தன்மையாய் நிற்றல் கூடாது; அது கூடாமை பற்றி இருதன்மையாய் நிற்பன் என்று கூறில் வியாபகனாதல் கூடாது; வியாபியல்லன் என்று கூறில் பசுபாசங்கள் அவனையின்றி இருத்தல் கூடாது; ஆதலால் முதல்வன் ஒருவனே சூரியனும் அதனொளியும்போல, சிவமுஞ் சத்தியுமெனத் தாதான்மியமாகிய ஒற்றுமையால் இருதிறப்பட்டு, சருவ வியாபியாய் ஒருதன்மை இருதன்மை என்னும் இரண்டற்கும் பொதுமையில் நிற்பன். அவ்வாறு சமவேதமாகிய சத்திசொரூபமாய் நிற்கும் முறைமையை அறிவிக்கும் முறையினாலேயே தாதான்மிய சத்தி உண்டென்பதற்குப் பிரமாணங் கூறியவாறு மாயிற்று என்றுணர்க.

தாதான்மிய சத்தி உண்டென்பது எவ்வாறு பெறப்பட்டதெனின், சூரியனாகிய தன்னை விளக்குவதும் விடயங்களை விளக்குவதும் சூரியனேயாம். அவ்வொரு சூரியனே விடயங்களை விளக்குமிடத்து ஒளியெனவும் தன்னை விளக்குமிடத்துச் சூரியனெனவும் தாதான்மியமாய் இருதிறப்பட்டு நிற்பன். அதுபோலப் புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய்த் தன்னியல்பில் நிற்பதுவும், புறப்பொருளாகிய பசுக்களை நோக்கி நின்று அறிவிப்பதுவுமாகிய இருதன்மையையுடைய பேரறிவாகிய சைதன்னிய மொன்றே மேற்கூறியவாறு புறப்பொருளை நோக்கி நிற்கு நிலையிற் சத்தியெனவும் புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய் நிற்கு நிலையிற் சிவமெனவும் இருதிறப்பட்டு நிற்குமாதலால் பிரிக்க முடியாமற் கலந்திருக்குந் தாதான்மிய சத்தி உண்டென்பது பெறப்பட்டவாறு காண்க.

இச் சிவசத்தி ஒன்றே விருத்தி பேதத்தாற் பலதிறப்படும். எவ்வாறெனின், தீயின் சத்தி ஒன்றுதானே சுடுதல் பாகம் பண்ணுதல் முதலிய தொழில் வேறுபட்டால், சுடுஞ்சத்தி பாகம் பண்ணுஞ்சத்தி முதலிய பல வேறு வகைப்படு மாறுபோல, சிவசத்திஒன்றே தொழில் வேறுபாட்டால் பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தியென ஐவகைச் சத்திகளாயும்; ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தியென்னும் ஐவகைச் சத்திகளாயும்; அவற்றுள், ஈசானியின் கூறுகிய சசுனி, அங்கதை, இட்டை மரீசி, சுவாலினியென்னும் ஐந்து சத்திகளாயும்; பூரணியின் கூறுகிய சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தியென்னும் நான்கு சத்திகளாயும்; ஆர்த்தியின் கூறுகிய தமை, மோகை, சயை, நிட்டை. மிருத்தியு, மாயை, பயை, சரை, யென்னும் எட்டுச் சத்திகளாயும்; வாமையின் கூறுகிய இரசை, இரட்சை, இரதி, பாலி, காயை, சம்மியமினி, கிரியை, புத்தி, காரி, தாத்திரி, பிராமணி, மோகினி, பவையென்னும் பதின் மூன்று சத்திகளாயும்; மூர்த்தியின் கூறுகிய சித்தி, இருத்தி, தியதி, இலக்குமி, மேதை, காந்தி, சுவதை, திருதி என்னும் எட்டுச்சத்திகளாயும்; ஆரணி, சென்னி, இரோதயத்திரியென்னும் மூவகைச் சத்திகளாயும்; நிவிர்த்தி, பிரதிட்டை. வித்தை, சாந்தி, சாந்தியதீதை, யென்னும் ஐவகைச் சத்திகளாயும்; வாமை, சேட்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி, என்னும் எட்டுச் சத்திகளாயும்; நாதம், விந்து, சதாசிவம், மகேசுவரன், உருத்திரன், விட்டுணு, பிரமன் என்னுஞ் சிவபேதம் ஏழற்கும், முறையே பரவாகீசுவரி, அபரவாகீசுவரி, மனோன்மனி, மகேசை, உமை, இலக்குமி, சரஸ்வதி என்னும் எழுவகைச் சத்திகளாயும்; அத்தியான்மிகமெனப்படும் உன்மனே, சமனே, வியாபினி, சத்தி, நாதாந்தம், நாதம், நிரோதி, அர்த்தசந்திரம், விந்து, மகாரம், உகாரம், அகாரம் என்னும் பன்னிரண்டு கலைகளாயும்; இன்னும் பலவேறுவகைப்பட்டும் நிற்கும். அவ்வச்சத்திகளோடுகூடிய சிவமும் அவ்வாறே பலவகைப் பெயர் பெற்று நிற்கும். அவ்வச்சத்திகட்கு இடமாகிய சுத்தமாயையும் அங்ஙனம் பலவேறு வகையால் விருத்திப்பட்டு அப்பெயர்பெறும். இவற்றின் இயல்பெல்லாம் ஆகமங்களுட் காண்க.

இச்சூத்திரத்தினாலும் அதிகரணங்களினாலும் கூறிய தொகைப்பொருள்:— முதற் சூத்திரத்தில் எடுத்துக்கொண்ட முதல்வன், உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று, உயிர்கள் செய்த இருவினையினாலும், அவ்வினையை உயிருக்குக்கூட்டும் தனது சத்தியினாலும் அவ்வுயிர்கள் இறத்தல் பிறத்தல்களைப் பொருந்தும்வண்ணஞ் செய்வன் எனவிச்சூத்திரத்தாற் கூறப்பட்டது. படவே, முதல்வனும் உயிரும் ஒன்றேயென ஏகான்மவாதிகளும், வேறெனமாத்துவரும், ஒன்றும்வேறுமானபொதுவெனப் பாஞ்சராத்திரிகளுங் கூற, முதலதிகரணத்தால் அவரை மறுத்து முதல்

வனும் உயிரும் ஒன்றும் வேறும் ஒன்றும்வேறுமானஉடனும் ஆகிய மூன்று தன்மையுமாய் நிற்கும் எனச் சாதிக்கப்பட்டது. படவே, அவ்வாறு நின்று உயிர்களுக்குப் புதுச்சிருட்டியைச் செய்யுங்கால் அம்முதல்வனுக்கு இருவினை மாயை முதலிய துணைக்காரணங்கள் வேண்டப்படா; படுமாயின் முதல்வனுடைய சுதந்திரத்திற்கும் அளவிலாற்றற்கும் இழுக்காய் முடியுமெனப் பரிணாமவாதிகள்கூற, இரண்டாம் அதிகரணத்தால் அவரைமறுத்து வினையும் மாயையும் துணைக்காரணமாக வேண்டப்படுமென்பதும், அது கொண்டு முதல்வன் சுதந்திரத்திற்கிழுக்கில்லை யென்பதும், வினை சடமாதலால் உயிரைத் தானே வந்து கூடமாட்டாதென்பதும், உயிர் சிற்றறிவுடையதால் தானே எடுக்காதென்பதும், முதல்வனே தனது சத்தியாற் கூட்டுவனென்பதும் வினையும் மாயையும் ஆணவமும் அநாதிப்பொருளாய் முதல்வனாற் காரியப்படுமென்பதும் சாதிக்கப்பட்டன. படவே, குடமுடைந்தவிடத்துக் குடாகாயம் ஆகாயத்தோடு கூடுமாறுபோல உடம்பு நீங்கியவிடத்து உயிர் பிரமத்தோடு கூடுமாதலால் உயிரின் பொருட்டுப் புதுச்சிருட்டி யுண்டென்றல் பொருந்தாதெனக்கிரீடாப்பிரமவாதிகள் கூற, மூன்றும் அதிகரணத்தால் அவரை மறுத்து இறந்த வுயிர் மீளப் பிறக்குமென்பதும் அவ்வாறு பிறக்கு மென்பதற்குப் பாம்பும் கனவும் யோகிகளும் உவமைகளாமென்பதும், குடாகாய உவமை சூக்குமதேகத்தை விட்டவிடத்து இறைவனோடு ஒன்றுபட்டு நிற்பதற்கே கூறப்படுவதன்றித் தூல வுடலைவிட்டுப் போவதற்குக் கூறப்படுவதில்லை யென்பதும் சாதிக்கப்பட்டன. படவே, துணைக்காரணமாய் நின்று வினையைக் கூட்டுவிக்குமென மேற்கூறிய சத்தியானது முதல்வனின் வேறென மீமாஞ்சகரும், முதல்வனின் வேறன்று முதல்வனே யென நையாயிகரும் கூற, நான்காம் அதிகரணத்தால் அவரை மறுத்து முதல்வனுஞ் சத்தியும் பொருளால் ஒன்றாயும், தன்மையா லிரண்டாயும் நிற்றல் கூடுமெனச் சாதித்தவாறும்.

நான்காம் அதிகரணம் முற்றிற்று.

இரண்டாஞ்சூத்திரம் முற்றிற்று.

மூ ன் று ம் சூ த் தி ர ம்.

பசு உண்மை.

உலகத் தோற்றத்திற்குத் துணைக்காரணமாகிய வினைமுதலியன உண்டென்று மேலைச்சூத்திரத்தாற் கூறி, மூன்றுஞ்சூத்திரத்தில் உலகப் பயனை அனுபவிக்கும் உயிர் உண்டென்று அநுமானப்பிரமாணத்தாற் கூறுகின்றார்.

உளதில தென்றலி னெனதுட லென்றலி
னைம்புல னொடுக்க மறிதலிற் கண்படி
லுண்டிவினை யின்மையி னுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவினு ளான்மா.

பிரமாணவியல்மூன்றுஞ்சூத்திரம்.

கருத்துரை.

எ-து சூ-ம் எ-னின் ஆன்மப் பிரகாசமுணர்த்துதனுதலிற்று.

சிற்றுரை.

எ-து க-ரை எ-னின். சூத்திரக் கருத்துணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) மேல் அவையே தானே யென்றெடுத்துக்கொள்ளப் பட்ட உயிர் சூனியமுதலியவற்றுள் ஒன்றாகப்பாற்றென அவ்வம் மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து உயிர் அவற்றிற்கு வேறாயுண்டென்பது கருதலளவையான் விளக்கி மேலைச்சூத்திரத் தின் உயிர்கண்மேல் வைத்தோதிய முதல்வனதிலக்கணத்தை வலி யுறுத்துதல் மூன்றும்சூத்திரத்தின் கருத்து எ-று.

முதன்மையுடைமைபற்றி உலகிற்கு நிமித்தகாரணமாகிய பதிப்பொருளுண்டென்பது முதற் சூத்திரத்துட்கூறி, காரணமாத தற்பொதுமையான் இயைபுடைமைநோக்கித் துணைக்காரணமுதற் காரணங்களது உண்மையும் அவற்றான் உலகங் காரியப்படுமாறும் இரண்டாஞ் சூத்திரத்துட் கூறி, அவற்றானாய பயன் கோடற்குரிய பசுக்களதுண்மைக்குப் பிரமாணம் ஈண்டுக்கூறுகின்றாரென் றுணர்க. இதனானே சூத்திர வியைபும் இனிது விளங்கும்.

விளக்கம்.

இக்கருத்துரை என்ன சொல்லிற்றோ வெனின், சூத்திரக்கருத்து இது வென்று சொல்லிற்று.

(இக்கருத்துரையின் பொருள்) இரண்டாஞ் சூத்திரத்தில் அவையே தானே என்று கூறியதனுள் அவையே என்பது உயிரைக் குறித்தலால் அவ் வுயிர் சூனிய முதலியவற்றுள் ஒன்றாகு மெனச் சூனியவாதி முதலியோர் கூறுவர். அவரவர் மதம்பற்றி அவ்வாறு கூறுதற்கு நிகழும் வினாவை ஆசங்கித்துக்கொண்டு உயிர் சூனிய முதலியவற்றிற்கு வேறாய் உண்டென் பதை அநுமானப் பிரமாணத்தால் விளக்கி இரண்டாஞ் சூத்திரத்தில் உயிர்கண்மேல் வைத்தோதிய முதல்வனது இலக்கணத்தை வலியுறுத்து தல் இம் மூன்றாஞ் சூத்திரத்தின் கருத்து எ-று.

இரண்டாஞ் சூத்திரத்திற் கூறிய முதல்வனது இலக்கணம் உயிர்களு டன் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்றலேயாம். அச்சூத்திரத்தில் உயிரை அவையேயெனக் கூறினும், அது முதற் சூத்திரத்தில் அந்தமே என்றதிலுள்ள பிரிநிலை ஏகாரத்தாற் பெறப்பட்டதே யன்றி அநுமானத்

தாற் பெறப்பட்டதன்று; உயிர் உண்டென்பது அநுமானத்தாற் பெறப் பட்டாலன்றி அதன்மேல் வைத்துக் கூறும் முதல்வனது இலக்கணம் வலி யுடைத்தாகாது. ஆதலால, அநுமானப் பிரமாணத்தால் உயிர் உண்டென்று கூறும் இச்சூத்திரம் இரண்டாஞ் சூத்திரத்திற் கூறிய முதல்வனது இலக கணத்தை வலியுறுத்தியவாறும்.

பதி பசு பாச மென்னு மூன்று பொருள்களுள் தலைமையா யிருத்தல் பற்றி உலகிற்கு நிமித்தகாரணமாகிய பதிப்பொருள் உண்டென்பது முதற் சூத்திரத்தாற்கூறி, காரணம் என்னும் பொதுமையால் நிமித்தகார ணத்தோடு சம்பந்தமுடைய துணைக்காரணமாகிய வினை முதற்காரணமாகிய மாயை என்னும் பாசங்களின் உண்மையும் அவற்றால் உலகந்தோன்றும் முறைமையும் இரண்டாஞ் சூத்திரத்தாற் கூறி, அப்பாசங்களினாலும் அவற் றின் காரியத்தினாலும் உண்டாகும் பயனைப் பொருந்துதற் குரிய பசுக்கள் உண்டென்பதற்குப் பிரமாணம் இம்மூன்றாஞ் சூத்திரத்தால் கூறுகின்றார். மேலைச் சூத்திரத்தில் உலகந்தோன்று முறைகூறி இச் சூத்திரத்தில் அவ் வுலகப்பயனை அனுபவிக்கும் உயிர் உண்டென்று கூறுதலால் சூத்திர இயை பெறப்பட்டது.

சிற்றுரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு.

இலதென்றன் முதலிய அறுவகை யேதுக்களானும் மாயா வியந்திரதனுவென்னும் பெயரடையாற் பெறப்படும் குறிப்பேது வானும் இவற்றின் வேறாய் இவ்வுடம்பினுள் உயிரெனப்படுவ தொன்றுண்டு எ-று.

இது பூட்டுவிற் பொருள்கோள்.

உளதென்றது சாதியொருமை. அறிதலினென்றது ஐம்புல னோடுஞ் சென்றியையும்.

தனுவினுளான்மா வுளதென்றாரேனும், காணப்பட்ட உடம் பாற் காணப்படாத உயிருக்குண்மை கூறவேண்டுதலின் இவ் வுடம்பு சூனியமுதலியவற்றின் வேறாய ஆன்மாவையுடைத்தென உடம்பின்மேல் வைத்தோதுதல் ஆசிரியர் கருத்து. அற்றாகலி னன்றே பதியுண்மை உலகின்மேல் வைத்தோதியதூஉமென்பது.

ஈண்டு மேற்கோள் ஒன்றாயினும் எழுவகைமதங்களை வேறு வேறு மறுக்கு மேதுக்கள் ஏழாகலான் ஆன்மாவுளதென்னு மேற் கோள் அவற்றோடு தனித்தனி சென்றியைதலின் ஏழதிகரணத்த

தாயிற்று இச்சூத்திரமென்றுணர்க. இதனுட் கூறிய வேதுவே யேதுவும் மேற்கோளும் ஆகலான் ஏனைச் சூத்திரங்களுட்போல வேறேதுக் கூறவேண்டாமையின், இவை யேதுவாமாறும் இவற்றுன் மேற்கோளைச் சாதிக்குமாறும் இனிது விளக்கி வலியுறுத்து தன் மாத்திரையே ஈண்டுரைக்கப்படுவதெனக் கொள்க.

விளக்கம்.

(இச்சூத்திரத்தின் பொழிப்புரை.) இலது என்றலினானும், எனது உடல் என்றலினானும், ஐம்புலன்களை அறிதலினானும், ஐம்புலன்களும் ஒடுங்கின சொப்பனத்தை அறிதலினானும், சுழுத்தியில் இன்பத் துன்ப அனுபவமும் உடம்பு சேட்டித்தலும் இல்லாமையானும், அறிவிக்க அறிதலானும், மாயாகாரியமாகிய உடல் முதலியவற்றிற்குக் குறிப்பேதுவால் வேறு வேறு பெயரிருத்தலானும், சூனியம், உடல், ஐம்புலன், சொப்பனம், சுழுத்தி, பிரமம், சமுதாயம் ஆகிய இவற்றின் வேறாய் உடம்பினுள் உயிருண்டு எ - று.

முதற்சூத்திரத்தில் அந்தம் என்றதிலே தொக்கு நின்ற பிரிநிலை ஏகாரத்தினாலும் இரண்டாஞ் சூத்திரத்தில் அவையே என்றதனாலும் உயிர் உண்டென்பது பெறப்பட்டிருக்கவும், இச்சூத்திரத்தினாலும் உயிர் உண்டென்றுகூறுதல் கூறியதுகூற லாகாதோவெனின், ஆகாது. எதனாலெனின், அச்சூத்திரங்களில் நூற்பிரமாணத்தால் உயிர் உண்டென்றுகூறினார்; முப்பொருளும் அநுமானத்தால் உண்டெனச் சாதிப்பது இந்நூற் கருத்தாதலால் இச்சூத்திரத்தில் அநுமானப் பிரமாணத்தால் உயிர் உண்டெனச் சாதிக்கின்றார்; ஆதலின் என்க.

குறிப்பேதுவாவது ஏதுவைக் குறிப்பாக வுடையதாம். சநு என்பதற்கு அடையாக நின்ற மாயா வியந்திரம் என்பது குறிப்பேதுவை உடையதாகும். எவ்வாறெனின், மாயாகாரியங்களுக்கு வேறு வேறு பெயரிருத்தலால் உயிர்வேறு என்பது பொருள். இப்பொருளில் வேறு வேறு பெயரிருத்தலால் என்பது ஏது. அந்த ஏது விரியாமல் குறிப்பாக நின்றபடியால் குறிப்பேது எனப்பட்டது. இந்த ஏதுவினால் உயிர் உண்டென்று சித்திப்பது எவ்வாறெனின், உடம்பு முதலிய வற்றிற்கு வேறு வேறு பெயரிருத்தலால் ஆன்மா உடம்பு முதலியவற்றின் வேறு என்பது நன்கு விளங்கக்கிடத்தலான் என்க. இந்தக் குறிப்பேதுவினால் அனைத்துங் கூடிய சமுதாயமே ஆன்மா வென்பாரை மறுத்தவாறும்.

இச்சூத்திரம் பூட்டுவிற் பொருள் கோள். அதாவது வில்லின் நுனியும் அடியும் நாணினால் சம்பந்தமா யிருத்தல்போல, ஆன்மா வென்னும் முதலும் உளது என்னுமுதலும் சம்பந்தப்பட்டு ஆன்மா வுளது என்னும் பொருளைத் தந்து நிற்றலாம்.

உளது என்றது ஆன்மாக்கள் பலவற்றையும் ஆன்மா வென்னுஞ் சாதியால் குறித்து நின்ற ஒருமை.

அறிதலின் என்றது ஐம்புலனோடும் சென்று பொருந்தி ஐம்புலனறிதலின் ஒடுக்கமறிதலின் எனப்படும்.

தனுவினுள் ஆன்மா உளது என்று கூறினாராயினும், இவ்வுடம்பு, குனியமுதலியவற்றின் வேறாகிய ஆன்மாவை உடையது என உடம்பின் மேல் வைத்தோதுதல் ஆசிரியர் கருத்தாம். எதனாலெனின், உயிர் கண்ணாற் காணப்படும் பொருளன்று. அவ்வாறு காணப்படாத பொருள் உண்டென்று சாதிக்கவேண்டுமாயின் அநுமானப் பிரமாணத்தினாலேயே சாதிக்கவேண்டும். அநுமானப் பிரமாணமாவது காரியத்தைக்கொண்டு காரணம் உண்டென நிச்சயிப்பது. ஆதலால் காணப்படுகின்ற உடம்பின் போக்குவரத்தாகிய காரியத்தைக்கொண்டு இக்காரியங்களின் நிகழ்ச்சிக்குக் காரணம் உடல் என்றல் கூடாது; ஆதலின், காரணமாகிய உயிரை இவ்வுடம்பு உடையதாயிருக்கவேண்டும் என நிச்சயிக்கப்படுமாதலாலென்க. இவ்வாறு உடம்பின்மேல் வைத்து உயிர் உண்டென்று சாதிப்பதே ஆசிரியர் கருத்தென்பதை முதற் சூத்திரத்தில் உலகின்மேல் வைத்துப் பதி உண்டென்று கூறியவாற்றாலறிக.

இச்சூத்திரத்தில் ஆன்மாவுளது என்பதே மேற்கோள். அம்மேற்கோள் ஒன்றாயினும் ஆன்மாவைப்பற்றி வேறு வேறு கூறும் எழுவகை மதங்களை மறுக்கு முறையில் ஏதுக்கள் ஏழாயின. ஆதலால் ஆன்மா வுளது என்னும் மேற்கோள் அந்த ஏழு ஏதுக்களோடும் தனித்தனி சென்று பொருந்தி இச்சூத்திரம் ஏழு அதிகரணத்தை உடையதாயிற்று.

ஒவ்வொரு அதிகரணத்திற்கும் மேற்கோள் வேறு வேறு இல்லாமையால் ஏதுவே மேற்கோளாகவும் ஏதுவாகவும் அமைந்திருக்கின்றது. ஆகவே ஏனைய சூத்திரங்களில் மேற்கோளைச் சாதிக்கும் ஏது வேறு கூறினாற்போலவேறு ஏதுக்கூறவேண்டாதவாறாயிற்று. ஆதலால் இச்சூத்திரத்து மேற்கோளில் அடங்கியிருக்கும் ஏதுவே ஏதுவாம் என்பதையும் அந்த ஏதுவால் மேற்கோளைச் சாதிக்கும் முறைமையினையும் இனிது விளக்கி வலியுறுத்துவதாகிய பொழிப்புரைமாத்திரையே ஆறும் அதிகரணம்வரை நூலாசிரியரால் மேற்கோளுக்கடுக்க உரைக்கப்படுவதாகும். அதாவது மேற்கோள்கூறி அதற்கடுக்க அதன் பொழிப்புரை கூறப்படுமென்பதாம். பொழிப்புரைக்குப் பின்னர் ஏனைச்சூத்திரங்களிற்போல உதாரணங் கூறப்படும்

பிரமாணவியல்மூன்றுஞ்சூத்திரம். க-ம் அதி.

முதலதிகரணம்.

சூனியம் ஆன்மா அன்றெனக்கூறும்

மேற்கோள்.

ஈண்டு இலதென்றலின் ஆன்மா வுளதென்றது.

சிற்றுரை.

எ-து மே-ள் எ-னின், சூனியான்மவாதி தேகான்மவாதி இந்திரியான்மவாதி, அந்தக்கரணான்மவாதி, சூக்குமதேகான்ம வாதி, பிராணான்மவாதி, விஞ்ஞானான்மவாதி, சமுகான்மவாதி என்னுமெண்மருள் அந்தக்கரணான்மவாதிகள் ஆன்மாவின திலக்கணங் கூறும்வழி, அநுவாதமுகத்தான் மறுக்கப்படுதலின் அவ வை யொழித்து ஒழிந்த எழுவர் மதங்களையும் முறையே மறுத்து உயிருண்மை சாதிப்பான் றொடங்கி அவற்றுள் இது சூனியமே யான்மாவென மாத்துமிகர் கூறுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடணுதலிற்று.

இ-ள். வெ-டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ—ள். ஈண்டு—இவ்வேழதிகரணத்துள் வைத்து இம் முதலதிகரணத்துள்,—இல தென்றலின்—இஃதான்மாவன்று இஃதான்மாவன்றென்று சொல்லும் பொருளுண்மையான்,—ஆன்மாவுளதென்றது—இதனின் வேறாயுயி ரெனப்படுவ தொன்றுண்டு எ-று.

ஆன்மாவில தென்றலி னென வருவித்துரைக்க.

விளக்கம்.

இச் சூத்திரத்தில் உள்ள இல தென்றலின் என்ற எதுவையும் ஆன்மா உளது என்னுந் துணி பொருளையும் சேர்த்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோ வெனின், சூனியமே ஆன்மா வெனவும், தேகமே ஆன்மா வெனவும், இந்திரியமே ஆன்மாவெனவும், அந்தக்கரணமே ஆன்மாவெனவும், சூக்கும தேகமே ஆன்மா வெனவும், பிராணனே ஆன்மாவெனவும், விஞ்ஞானமே ஆன்மாவெனவும், யாவுங்

கூடிய சமுதாயமே ஆன்மா வெனவும் கூறும் இவ் வெட்டு வாதிகளுள், அந்தக்கரணமே ஆன்மா வென்னும் வாதிகளை ஆன்மாவின் இலக்கணங் கூறுவதாகிய நான்காஞ் சூத்திரத்தில் அனுவாத முகத்தால் மறுக்கப்படும். ஆகவே அந்தக்கரணம் ஆன்மா என்னும் வாதி நீங்கிய ஏனைய எழுவர் மதங்களையும் முறையே இச் சூத்திரத்தில் மறுத்து உயிர் உண்டென்று சாதிக்கத் தொடங்கி அவ்வேழு மதவாதிகளுள் இம்முதலதிகரணத்தில் சூனியமே ஆன்மா வென்னும் மாத்துமிகர் கூறும் வினாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் முதற் கூற்றைப்பதச் சேதஞ் செய்து சூனியத்தின் வேறாய் ஆன்மா உண்டெனக் கூறியவாறும்.

(இம்மேற்கோளின் பொருள்.) இது ஆன்மா அன்று இது ஆன்மா அன்று என உணரும்பொருள் ஒன்று உண்டாமாதலால், அன்றென்று அறியப்படுவனவற்றின் வேறாய் அவ்வாறு அறியும் ஆன்மா ஒன்றுண்டு எ-று.

ஆன்மா என்னுஞ் சொல் வருவித்து ஆன்மா இலதென்றலின் என உரைக்க. உரையும் அவ்வாறு செய்யப்பட்டது.

இம் மேற்கோளின் பொருளை விளக்குவதாகிய நூலாசிரியர்

பொழிப்புரை.

எவற்றினையும் அன்றன் றெனவிட்டு ஆன்மா இலதென்று நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

சிற்றுரை.

எ-து பொ-ரை எ-னின், ஆன்மா இல தென்றலைபற்றி அஃதுண் டெனக்கோடல் முயற்கோடு இல்லை யென்னு மேதுவால் அஃதுண் டெனச் சாதித்தலோ டொக்கும் என்னுங் கடாவை யாசங்கித்து அதன்றாற்பரிய முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) ஆன்மா இல தென்னுஞ் சூனியான்ம வாதிகளும் இல்லையென வாளா கூறுதலமையாமையின் உடல்பொறி விடயமனைத்தினையும் முறையானே இஃதான்மா வன்று இஃதான்மா வன்றென ஒரோ வொன்றாகக் கழித்து இவ்வாறாகலின் ஆன்மா வென்பது சூனிய மென்று அங்ஙனங் கூறுபவாகலான் அவற்றை ஒரோ வொன்றாகவிட்டு அங்ஙனங் கூறிக் கொண்டு நிற்பதோரறிவுண்மையின் அவ்வறிவே மேல் அவையே தானேயா யென்ப பதனுள் ஆகம வளவையாற் சாதித்துப் போந்த ஆன்மா வென்றவாறும். ஈண்டில தென்றலின் ஆன்மா வுளதென மேற்கொண்டது எ-று.

அவனை மறியு மறிவுஞ் சூனியமே யெனின், அஃது என்னை யீன்றாள் மலடி என்பதனோ டொக்கு மென் றொழிக வென்பது கருத்து.

இன்மை ஈண்டுச் சூனியப்பொருட்டு. சூனியமாவது உள்ளது மன்று இல்லது மன்று இரண்டுமாவது மன்று வேறு மன்றெனப் படும் பாழ்.

ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

விளக்கம்.

இப்பொழிப்புரை என்ன சொல்லிற்றோ வெனின், ஆன்மா இல்லை என்றதே கொண்டு ஆன்மா வுண்டெனக் கொள்ளுதல் முயலுக்கோடு இல்லை என்றது கொண்டு கோடு உண்டெனச் சாதித்தலோடு ஒக்கும் என்பார் வினாவை ஆசங்கித்துக் கொண்டு இல தென்றலின் தாத்பரியங் கூறி ஆன்மா வுளதெனச் சாதித்த வாறும்.

(இப்பொழிப் புரையின் பொருள்.) சூனியமே ஆன்மா வென்று கூறும் சூனிய ஆன்மவாதிகளும் முயலுக்குக் கொம்பு இல்லை என்பது போல் சும்மா சொல்லவில்லை. அதாவது முயலினிடத்துக் கொம்பில்லை யென்பது கண்டு சொல்லப்படுவதாம். அதுபோல ஆன்மா இல்லை என்பது கண்டு அது இல்லை யென்று சொல்லாமல் உடல் பொறி முதலிய வற்றை ஆராய்ந்து இஃது ஆன்மா வன்று இஃது ஆன்மா வன்று என ஒவ்வொன்றாகக்கழித்து இனி இவற்றின் வேறாய் ஒன்றுங் காணப்படாமையால் சூனியமே ஆன்மா வென்பர். ஒவ்வொன்றாகவிட்டு நீங்கியும் நீங்கிய பின்னர் ஒன்றுங் காணவில்லை என்று அறியும் அறிவு ஒன்றுண்டு. அவ்வறிவே இரண்டாஞ் சூத்திரத்துள் அவையே யென்பதனாற் சாதித்த ஆன்மாவாகும். ஆதலால் ஈண்டு இல தென்றலின் ஆன்மா உளதென மேற்கோள் கூறியது எ-று.

அவ்வாறு ஒன்றுங் காணவில்லையென அறியும் அறிவும் சூனியமே என்று கூறின், அவ்வாறு கூறுதல் என்னை ஈன்றவள் மலடி என்பதனோடு ஒக்கும். ஆதலால் அது பொருந்தாது. இவ்வதிகரணத்தில் இலது என்று கூறியது சூனியத்தைக் குறித்து நின்றது.

சூனியமாவது உள்ளது மன்று, இல்லது மன்று, உள்ளது மில்லது மன்று, உள்ளதும் இல்லது மாகிய அவற்றின் வேறு மன்று எனப்படும் வெறும்பாழ் என்பதாம்.

அதுவே என்றதிலுள்ள ஏகாரம் சூனியத்தைப் பிரித்தமையின் பிரிநிலை.

சூனியத்தின் வேறாய் ஆன்மா உண்டென்பதற்குக் காட்டும்
உதாரணம்.

அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்சேழுத்தாய்
நின்றோன் றுளததுவே நீயனைத்து—நின்றின்று
தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பரமு மல்லை தனி.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், அவ்வறிவை உடல்பொறி விடய முதலியவற்றின் வேருகப் பிரித்துக்காணுமாறும் அதுவே உயிராமாறுந் தெரித்துணர்த்தி அதனை வலியுறுத்துத லுதலிற்று.

(இ—ள்.) அனைத்தும் நின்று—உடல் பொறி விடய முதலிய அனைத்தினும் அதுவது தாளுகநின்று,—அன்று அன்று என விட்டு—முறையானே இது நானன்று இதுநானன்றென வொவ்வொன்ருகக் கண்டு நீக்கியவழி,—அஞ்செழுத்தாய் ஒன்று நின்றுளது—(அவ்விடத்து) அகரமுதலிய சூக்கும பஞ்சாக்கர ரூபமாயறிந்துவந்ததோரறிவு நிலைபெற்றுளதன்றே,—அதுவே நீ—(அதுவுநானன்றெனக் கழிப்பின் அங்ஙனங்கழித்த உணர்வு வேறுண்டெனப்பட்டு மேலும் வரம்பின்றி யோடுமாகலிற் சூக்குமபஞ்சாக்கர ரூபமாய் நின்றறிந்துவந்த) அவ்வறிவுதானே நீயென்பதறிவாயாக. (அற்றேல், மாயையமுஞ் சிவமுமுள வென்பது மேலைச்சூத்திரங்களாற் சாதிக்கப்பட்டமையின் அவையே அவ்வறிவினையு மறிந்து நீக்குமென வமையுமாகலான் வரம்பின்றியோடுமாறில்லையாலெனின்,)—சார்மாயை—நின்னாற் சாரப்பட்ட மாயை,—அனைத்தும் நின்று இன்று தர்ப்பணம்போல் காட்டலான் நீ அல்லை—நில முதலிய காரியமனைத்துமாய் நின்ஞெடு விரவி நின்று இப்பெத்த காலத்துக் கண்ணுக்குக் கண்ணுடிபோல் உனக்கறிவை விளக்கி நிற்றன் மாத்திரையே யன்றி அறிவதன்ருகலான் நீ அம்மாயையல்லை, தற்பரமும் அல்லை—(மாயையான் விளங்கி யறியும் நீ)அதற்கு அதீதமாகிய சிவமுமல்லை,—தனி—அவற்றின் வேறு எ—று.

விட்டவழி யென்பது விட்டெனத்திரிந்து நின்றது.

அவ்வறிவாவது இது வென்றுணர்த்துவார் அன்றன்றென நின்றனைத்தும் விட்டவழியென எதுப்பொருளை அநுவதித்து அஞ்செழுத்தா யொன்று நின்றுளதென அடையாளங்கூறினர். அஞ்செழுத்தாய் நின்றறியுமாறு வருகின்ற சூத்திரத்துட் பெறப்படும். இதற்குப் பிறரெல்லாங் கூறியது கூறலென்னும் வழுப்படமேலு மோரியை பின்றி யுரைத்தார்.

அனைத்து நின்றென்புழி முன்னர்க் கண்ணுரும்பும் பின்னர் ஆக்கச்சொல்லுந் தந்துரைக்க. ஏகாரந் தேற்றம். தற்பரமென்றது குறிப்பேதுவாய் நின்றபெயர்.

பிரமாணவியல்மூன்றுஞ்சூத்திரம். க-ம் அதி.

அனைத்து நின்றின்று தர்ப்பணம்போற் காட்டலால் சார் மாயை நீயல்லை தற்பரமுமல்லை தனியென்றதனானே வருகின்ற அதிகாரணங்களுக்கெல்லாந் தோற்றுவாய் செய்தவாறுமாயிற்று.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) அனைத்தும் நின்று அன்று அன்று எனவிட்டு அஞ்செழுத்தாய் ஒன்று நின்றுளது அதுவே நீ சார்மாயை அனைத்தும் நின்று இன்று தர்ப்பணம்போல் காட்டலால் நீயல்லை தற்பரமு மல்லை தனி.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், சூனியமென்று உணரும் அறிவை உடல்பொறி விடயமுதலியவற்றின் வேறாகப் பிரித்துக் காணும் முறையினையும் அவ்வறிவே உயிரெனப்படும் என்பதனையும் விளக்கிக் காட்டிச் சூனியத்தின் வேறாய் ஆன்மா உண்டென மேற்கூறியதனை வலியுறுத்தியவாறாம்.

(பொ-ரை.) உடல்பொறி விடயம் முதலியவற்றோடு கூடி அதுஅது தானாக நின்று பின்னர் அவற்றை இது நானன்று இது நானன்றென ஒவ்வொன்றாகக்கண்டு நீக்கியவிடத்து அவ்வாறு நீக்கியதாயும் அகரமுதலிய சூக்கும பஞ்சாக்கரரூபமாய் நின்று அறிந்துவந்ததாயுமுள்ள ஓர் அறிவு நிலைபெற்றிருக்கும். அவ்வறிவே ஆன்மாவாகிய நீ. அவ்வறிவும் நான் அன்றென நீக்கின் அவ்வாறு நீக்கும் அறிவு வேறுண்டெனப்பட்டு மேலும் அவ்வாறே வரம்பின்றி ஓடும். ஆதலால் சூக்கும பஞ்சாக்கரரூபமாய் நின்று உடல்பொறி முதலியவற்றை அறிந்து வந்த அவ்வறிவுதானே நீயென அறிவாயாக. மாயாகாரியமும் சிவமும் உளவென மேல் இரண்டு சூத்திரங்களால் சாதிக்கப்பட்டமையால் அம்மாயாகாரியமும் சிவமுமே பஞ்சாக்கரரூபமாய் நின்ற அவ்வறிவினையும் அறிந்து நீக்குமென்றல் கூடுமாதலால் வரம்பின்றி ஓடுமாறில்லை என்றுசொல்வாயாயின் அது பொருந்தாது. எதனாலெனின், உன்னால் பொருந்தப்பட்ட மாயையானது நிலமுதலிய காரியங்களாய் நின்னொடு விரவிநின்று கண்ணுக்குத் துணையாய்நின்று விளக்குங் கண்ணாடிபோல் இந்த அஞ்ஞானகாலத்தில் உனக்கு அறிவை விளக்கி நிற்றல் மாத்திரையேயன்றி அம்மாயை தானே ஒன்றையும் அறிவதில்லை. ஆதலால் நீ மாயையன்று, மாயாகாரியத்தால் அறிவு விளங்கப்பெற்று அறியுந் தன்மையுடைய நீ அவ்வறிவுக்கு அதீதமாகிய சிவமும் அன்று ஆதலாலென்க. ஆகவே மாயை சிவமென்னும் இரண்டின் வேறாவாய். எ-று.

(க-ரை.) உடல் முதலியவற்றை நான் அன்றென அறிந்து நீக்கிய விடத்து அவ்வாறு அறிந்து நீக்கிய அறிவே நீ அவ்வறிவு மாயையுமன்று சிவமுமன்று என்பதாம்.

சூக்கும பஞ்சாக்கரமாவது, அகரம், உகரம், மகரம், நாதம், விந்து என்பன. அனைத்தும் விட்டவழி என்றிருக்கவேண்டுவது விட்டு எனத்திரிந்து நின்றது. ஆதலால் நீக்கியவழி என உரை செய்யப்பட்டது.

நீக்கியவிடத்து விளங்கும் அவ்வறிவு இது வென்று உணர்த்தவேண்டி அன்று அன்று என நின்று அனைத்தும் விட்டவழியென, இலதென்றலின் என்ற எதுப்பொருளை அநுவதித்து அஞ்செழுத்தாய் ஒன்று நின்றுளதென அடையாளங் கூறினர். அதாவது இலதென்றலின் என்ற எதுவை மீட்டுங் கூறவேண்டாமாயினும் இன்னசெயலுடைய அறிவென்றுணர்த்த வேண்டி உடல்பொறி முதலியவற்றை நீக்கிநின்ற அறிவு என எதுவை அநுவதித்ததாம். அவ்வறிவிற்கு அஞ்செழுத்தை அடையாளமாகக் கூறினார். அஞ்செழுத்தாய் ஆன்மாநின்று அறியும் முறைமையை வருகின்ற நான்காஞ் சூத்திரத்திற் கூறப்படுமாதலால் அவ்விடத்துக் காண்க.

அன்று அன்று என நின்று அனைத்தும்விட்டு என்பதற்குப் பிறரெல்லாம் மேற்கோளுக்குப் போலவே கூறியது கூறலென்னும் வழுப்படவும் மேலுங் கூறியதற்குச் சம்பந்தமின்றியும் உரைத்தார்.

அனைத்தும் நின்று என்றது இருமுறைவந்திருக்கின்றது. அவற்றுள், முதலாவது அனைத்தும் நின்று என்றதனோடு கண்ணுருபும், இரண்டாவது அனைத்தும் நின்று என்றதனோடு ஆக்கச்சொல்லும் கூட்டி உரைக்க. ஆதலால் கண்ணுருபு கூட்டி அனைத்தினும் எனவும் ஆக்கச்சொற்கூட்டி அனைத்துமாய் எனவும் உரை செய்யப்பட்டது.

அதுவே நீ என்றதிலுள்ள எகாரம் ஐயமறுத்தலின் தேற்றம்.

தற்பரமென்றது ஆன்மாவாகிய தனக்கு அதீதமாய் நிற்றலால் அதீதமாகிய சிவம் என்னும் பொருளில் நிற்றலின் குறிப்பேதுவாய் நின்ற பெயர். தன் - ஆன்மா. பரம் - அதீதம். ஆதலால் தற்பரமுமல்லை யென்பதற்கு அதீதமாகிய சிவமுமல்லை என உரை செய்யப்பட்டது.

அனைத்தும் நின்று இன்று தர்ப்பணம்போற் காட்டலால் சார்மாயை நீயல்லை யென்றதனால் உ, ௩, ச, ரு அதிகரணங்கட்கும், தற்பரமும் அல்லை என்றதனால் ௬-ம். அதிகரணத்திற்கும், தனி என்றதனால் எ-ம். அதிகரணத்திற்கும் தோற்றுவாய் செய்தவாறுமாயிற்று.

இவ்வதிகரணத்தில் ஆன்மாச் சூனியத்தின் வேறென்பது தன்னுற் கூறப்படும்பொருள். சூனியமோ வேறோ என்பது ஐயப்பாடு. சூனியமே என்பது பிறர்பக்கம். இவ்வாறு கூறுவோர் மாத்துமிகர். இவரை மறுத்துச் சூனியத்தின் வேறாய் ஆன்மா உண்டெனச் சாதித்தவாறும்.

முதலதிகரணம் முற்றிற்று.

இரண்டாம் அதிகரணம்.

உடம்பு ஆன்மா அன்றெனக் கூறும்

மேற்கோள்.

இனி எனதுடலென்றலின் ஆன்மா வுளதென்றது.

சிற்றுரை.

எ-து மே-ள் எ-னின், அவ்வறிவு உடம்பின்கண்ணன்றி நிகழக் காணுமையானும் நானுணுகினேன் பருத்தேனென உடம்பினையே நானென்று வழங்கக் காண்டலானும் உடம்பே யான்மா வெனத் தேகான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ—ள். வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ—ள். எனதுட லென்றலின்—நான் பருத்தேன் சிறுத்தேன் கரியேன் மனிதன் பார்ப்பானென உடம்பின் குண விசேடங்களை உபசாரத்தால் உயிருக்கேற்றி வழங்கினும் யான் உடம்பு யான் கை யான் காலென உடம்பை அவ்வாறு வழங்குவாரின்றி எனதென வேற்றுமைப்படவே யாவரும் வழங்கக்காண்டலின், அதனால்,—ஆன்மா வுளதென்றது—இவ்வுடம்பின் வேருய் உயிரெனப் படுவதொன்றுண்டு எ—று.

நான் பருத்தேன் சிறுத்தேன் கரியேன் மனிதன் பார்ப்பானென உடம்பின் குணவிசேடங்களை உபசாரத்தால் உயிருக் கேற்றி வழங்கினும் யானுடம்பு யான்கை யான்கால் எனவுடம்பை அவ்வாறு வழங்குவாரின்றி எனதென வேற்றுமைப்படவே யாவரும் வழங்கக்காண்டலின் அதுவே உயிர் வேறுண்டென்பதனை அறிவுறுக்குமென அவன் வழங்குமுறையையே பற்றி அவனை மறுத்தவாறு.

விளக்கம்.

இது சூத்திரத்திலுள்ள எனதுட லென்றலின் என்ற ஏதுவையும் ஆன்மாவுளது என்னுந் துணிபொருளையுஞ் சேர்த்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோவெனின், 'மேற்கூறியவாறு சூனியத்தை அறியும் அறிவு உடம்பினிடத்து நிகழ்கின்றதேயன்றி உடம்பைவிட்டு நிகழக்காணவில்லை; அன்றியும் நான் நுணுகினேன், நான் பருத்தேன் என உடம்பினையே நானென்று சொல்லக் காண்கின்றோம். ஆதலால் உடம்பே ஆன்மாவெனத்' தேகான்மவாதிகள் கூறுவர். இவர் கூற்றை ஆசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைப் பதச்சேதஞ் செய்து உடம்பின் வேறாய் ஆன்மா உளதெனக் கூறியவாறும்.

(இம்மேற்கோளின் பொருள்.) நான் பருத்தேன் நான் சிறுத்தேன் நான் கரியேன் நான் மனிதன் நான் பார்ப்பான் எனப் பருத்தல் முதலிய உடம்பின் குண விசேடங்கள் உபசாரத்தால் உயிருக்கேற்றி வழங்கப்பட்டு வருகின்றன. வரினும் யான் உடம்பு யான்கை யான்கால் என வழங்கப்படுதலில்லை. என் உடம்பு என வேற்றுமைப்படவே யாவரும் வழங்கக்காண்டலின், அவ்வாறு வழங்கும் அதனால் இவ்வுடம்பின் வேறாய் உயிரெனப்படுவது ஒன்றுண்டு எ-று.

என் உடம்பு என வேற்றுமைப்படக் கூறும் அதுவே உடம்பின் வேறாய் உயிர் உண்டென்பதனை அறிவுறுத்துமென அவன் கூறும் சொல்லைக் கொண்டே அவனை மறுத்தவாறு காண்க.

இம்மேற்கோளின் பொருளை விளக்குவதாகிய நூலாசிரியர்
பொழிப்புரை.

என்பதி என்மனை யேன்றாற்போல என்கை என்காலென நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவா மேன்றது.

சிற்றுரை.

எ-து பொ-ரை எ-னின், எனதுடலென்பது பிறிதின்கிழமைப்பொருள் படாது தலைமாத்திரையாய் நிற்கு மிராகுவை இராகுவினது தலை யென்று வழங்குமாறுபோல அபேதம் பற்றியே வழங்கப்படுமென அமையு மென்னுங் கடாவை யாசங்கித்து அதன்றாற்பரிய முணர்த்தத னுதலிற்று.

(இ-ள்.) இராகுவினது தலையென்றாற் போல்வன சிறுபான்மை வழக்கமாகலின் ஆண்டொற்றுமைப் பொருள் கோடலமையும். ஈண்டவ்வாறன்றி என்பதி என் மனைவி என் பொருளென்று வழங்குமாறுபோல என்கை என்கால் என்கண் என்செவி என்பொறி என் பிராணன் என்னறிவெனப் பல வாற்றானும் பெரும்பாலும் உலகத்து வழங்கக் காண்டலின் இவ்வழக்க மிகுதிப்பாடு

பிறிதின்கிழமைப்பொருட்கணன்றி வாராமையான் அங்ஙனங் கூறிக்கொண்டு நிற்கும் பொருள் வேறொன்றுண் டென்பது பெறப் படுதலின் அதுவே மேலுரையளவைபற்றிச் சாதித்த ஆன்மா வென்றவாறும். எனதுட லென்றலின் ஆன்மா வுள்தென மேற் கொண்ட தென்க.

விளக்கம்.

இப் பொழிப்புரை என்ன சொல்விற்றோ வெனின், என்னுடல் என் பதனுல் உடலின் வேறாய் ஒருபொருளுண் டென்றல் பொருந்தாது. உட லின்றித் தலைமட்டும் தனித்து நிற்கும் இராகுவை இராகுவினுடைய தலை யென்று வழங்கப்படுகின்றது. ஒற்றுமையினுல் உடல் இருப்பதுபோல அவ்வாறு வழங்கப்படினும் இராகுவிற்கு உடல்கிடையாது. அதுபோலப் பிறிதின்கிழமைப்பொருள்பட என்னுடல் என்று வழங்கப்படுவதும் ஒற்று மைபற்றியேயாம். அதுகொண்டு உடலின்வேறாய் என் என்னுஞ் சொல் லுக்குப் பொருள் ஒன்றுண்டு, அது ஆன்மாவென்றல் பொருந்தாதென்பார் கூற்றை ஆசங்கித்துக்கொண்டு எனதுடலென்றலின் தாத்பரியம் இது வெனக் கூறியவாறும்.

(இப்பொழிப்புரையின் பொருள்.) இராகுவனதுதலை என்றதுபோ ன்ற உவமை சிறுபான்மை வழங்கப்படும். ஆதலால் அது பொருந்தாது. என்வீடு என்மனைவி என்றாற்போலப் பெரும்பாலும் தன்னின் வேறான பொருளையே எனதென்னுஞ் சொல்லால் வழங்கக்காண்டலால், என்னுடல் என்கை என்கால் என்பிராணன் என்றது கொண்டு அவற்றின் வேறாய் ஒன்றுண்டு. அதுவே இரண்டாஞ்சூத்திரத்தில் ஆகமப் பிரமாணம்பற்றி அவ்வையே எனக் கூறிய ஆன்மாவாகும். ஆதலால், எனதுடல் என்றலின் ஆன்மா உளது என மேற்கோள் கூறியது எ—று.

உடலின்வேறாய் ஆன்மா உண்டென்பதற்குக் காட்டும்
உதாரணம்.

என்தேன்ற மாட்டி னெனதலா தென்னு
துனதலா துன்கைகால் யாக்கை—யெனதென்று
மென்னறிவ தென்று முரைத்துநீ நிற்றிகா
ணுன்னிலவை வேறு முணர்.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், பதி மனைவிமுதலிய பொருள்கள் தம் மின் வேறுதல் கண்டு பிறிதின்கிழமைப்பொருள்பட எனதென் றாற்போலன்றிக் கை கான்முதலியவற்றைத் தற்கிழமைப்பொருள்

பட எனதென்று கூறிநிற்றலின், அவ்விருவேறு மொழியுந் தம்மு ளொக்குமாறென்னை யென்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) எனது அலாது என்னுது எனது என்றமாட்டின்—(நீ உலகாயதநூல் கேட்கு முன்னெல்லாம் பதி மனைவி முதலிய புறப்பொருளையே உயிரெனக்கொண்டு மயங்கி நின்றாயன்றே, அக் காலத்து அவற்றை) எனதன்றென வேறுகாணாது தனித்தனி எனதென்றே தற்கிழமைப்பொருளாகக் கூறிக்கொண்டு நின்றாற் போல,—உனது அலாது உன் கை கால் யாக்கை எனது என்றும் என் அறிவது என்றும் உரைத்து நீ நிற்றிகாண்—உனதன்றாகிய உன் கை கால் யாக்கைகளைத் தனித்தனி எனதென்றும் அங்ஙன மறிந்த பாசவறிவை என்னறிவதென்றும் தற்கிழமைப்பொருளா கக் கூறிக்கொண்டு நீயொருபொருள் வேறுநிற்கின்றாய் காண்,—உன்னில்—(உலகாயத நூல் ஆராய்ந்த பின்னர்ப் பதிமனைவி முத லிய பொருள்கள் உனக்கு வேறுதல் கண்டாற் போலக் கைகால் முதலியவற்றினியல்புகளையும் ஏதுக்கண் முதலியவற்றான்) ஆரா ய்ந்து பார்த்தியாயின்,—அவை வேறும் உணர்—அக்கைகான் முதலியன உனக்கு அன்னியமாம் அதனை யறிவாயாக எ-று.

இன் உவமவுருபு.

உனதலா தென்பதனைக் கை கால் யாக்கைகளோடு தனித்தனி கூட்டுக.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) எனது அ... து என்னுது எனது என்ற மாட்டின் உனது அலாது உன் கை கால் யாக்கை எனது என்றும் என் அறிவது என்றும் உரைத்து நீ நிற்றிகாண் உன்னில் அவை வேறும் உணர்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோவெனின், வீடு முதலிய பொருள்கள் தம்மின்வேறாய் இருத்தலைக் கண்டு என் வீடு என் மனைவி என்று கூறப்படும். அவ்வாறு தம்மின் வேறல்லாத கைகால் முதலிய வற்றை என் கை என் காலெனக் கூறுவதுமட்டு மன்றி, நான் கொடுத் தேன் நான் அடித்தேன் நான் நடந்தேன் என அவற்றின் தொழில்கள் தன் தொழில்களாக ஒற்றுமைப்பொருள் படவுங் கூறப்படுகின்றன. வீடு இடிந்தால் நான் இடிந்தேனென்றாவது மனைவி மாண்டால் நான் மாண் டேனென்றாவது கூறுவதில்லை. ஆதலால் வீடு முதலியவற்றை என

தென்று கூறுதலும் கைகால் முதலியவற்றை என தென்று கூறுதலுமாகிய இவ்விருவகை மொழிகளும் தம்முள் ஒத்தல் எவ்வாறு கூடும் என்னும் வினவை ஆசங்கித்துக்கொண்டு ஒக்குமெனக் கூறி உடலின்வேறாய் ஆன்மாவுண்டென்பதை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) கண்ணாற் காணப்படும் உலகமும் உடலுமே யன்றி இவ்விரண்டின்வேறாய்க் கடவுளும் உயிரும் இல்லை யெனவும், அவ்விரண்டனுள் உடலே உயிரெனவும், அவ்வுடலாகிய உயிருக்கு உலகம் அநுபவிக்கப்படும் பொருளெனவும் கூறுவர் உலகாயதர். இவர் கொள்கை உலகாயதர் கொள்கை யெனவும் இவ்வாறு கூறும் நூல் உலகாயத நூலெனவுங் கூறப்படும். இவ்வுலகாயதநூலை அறிவதற்கு முன்னர் உலகப் பொருள்களாகிய வீடுமுதலிய பொருள்களையும் உயிரெனவே எண்ணி வீடுகெட்டால் நீ கெட்டதுபோலவும், மனைவி மாண்டால் நீ மாண்டதுபோலவும் இவ்வாறே உனக்கு வேறான பொருள்கள் எவற்றையும் உயிரெனக்கொண்டு மயங்கி நின்றாயல்லவா? அக்காலத்தில் வீடுமுதலியன உயிரன்றெனவும், அவை உயிருக்கு வேறெனவும் காணாமல் ஒவ்வொன்றையுந் தனித்தனி உயிரென்றே கொண்டு அப்பொருள்களின் வேறாக நீ நின்றாற்போல, உண்மை ஞானத்தை அறியாத இக்காலத்தில் நீயல்லாததாகிய உன்னுடைய கைகால் முதலியவற்றை நீ யென்றும் அவ்வாறு அறிந்த பாச அறிவை உன்னறி வென்றும் கொண்டு அவற்றின் வேறாய் நீ நிற்கின்றாய். உலகாயதநூலை ஆராய்ந்த பின்னர் உடலே உயிரெனவும் வீடுமுதலிய பொருள்கள் உனக்கு வேறெனவுங் கண்டாற்போல, வேறாயிருத்தலால் என் கை என் கால் எனப்படுகின்றன என்னும் ஏதுவானும்; வேறாயிருக்கும் வீடு முதலியவற்றை என்வீடு எனக்கூறுவதுபோன்ற திருட்டாந்தத்தானும் அவற்றின் இயல்புகளை ஆராய்ந்து பார்ப்பாயாயின் அக்கை கால் முதலியன உனக்கு அன்னியமாம் என்பதனை அறிவாய். எ-று.

(க-ரை.) உன்னின் வேறான புறப்பொருள்போலவே கைகால் முதலியனவும் உன்னின் வேறாம் என்பதாம்.

தன்னோடு ஒற்றுமைப்பட்ட பொருளைத் தற்கிழமை எனவும், தன்னின் வேறுபட்ட பொருளைப் பிறிதின்கிழமை எனவும் கூறுதல் முறை. தன் என்பதற்கு உடலைப் பொருளாகக்கொள்ளின் கைகால் முதலியன தற்கிழமையாகும்; தன் என்பதற்கு உயிரைப் பொருளாகக்கொள்ளின் கைகால் முதலியன பிறிதின் கிழமையாகும் என அறிக.

மாட்டின் என்றதிலுள்ள இன் உவமவுருபாதலால் நின்றாற்போல எனவுரை செய்யப்பட்டது.

உனதலாது என்பது ஒருமையாதலால், கைகால் யாக்கைகளோடு தனித்தனி கூட்டி, உனதன்றாகிய கை உனதன்றாகிய கால் உனதன்றாகிய யாக்கை என வுரைக்க.

இவ்வதிகரணத்தில் உடம்பின் வேறாய் ஆன்மா உண்டென்பது தன்னாற் கூறப்படும் பொருள். உண்டோ இல்லையோ என்பது ஐயப்பாடு. இல்லையென்பது பிறர்பக்கம். இவ்வாறு கூறுவோர் தேகான்மவாதிகள். இவரை மறுத்து உடம்பின் வேறாய் ஆன்மா உண்டெனச் சாதித்தவாறும்.

இரண்டாம் அதிகரணம் முற்றிற்று.

மூன்றாம் அதிகரணம்.

இந்திரியம் ஆன்மா அன்றெனக்கூறும்

மேற்கோள்.

இனி ஐம்புலனறிதலின் ஆன்மா வுளதென்றது.

சிற்றுரை.

எ-து மே-ள் எ-னின், ஐம்பொறிகள் ஐம்புலன்களை யறியுமென்றல் எல்லார்க்குமொப்ப முடிந்தமையின் அவை உடல்போற் சடமன்மை பெறப்படுதலானும், அவற்றை எனதென்னும் வழக்கம் பெரும்பான்மையன்றாகலானும், அவையே உயிராதலமையுமென இந்திரியான்மவாதிகள் கூறுங் கடாவை யாசங்கித்து மூன்றாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று

இ-ள். வெ-ை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ-ள்.) ஐம்புலன் அறிதலின்—ஐம்புலன்களையும் அறிதலான்,—ஆன்மா வுளதென்றது—இவ்விந்திரியங்களின் வேறாய் உயிரெனப்படுவதொன்றுண்டு. எ-று.

விளக்கம்.

இது சூத்திரத்திலுள்ள ஐம்புலனறிதலின் என்றதனையும் ஆன்மா வுளது என்னுந் துணி பொருளையுஞ் சேர்த்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோவெனின்; சூனியத்தை அறியும் அறிவு உண்டென்றதனால் அவ்வறிவு சூனியமன்றென்றும் கைகால் முதலியவற்றைத் தன்னின் வேறாக அறிதலால் அவ்வறிவு உடல் அன்றென்றும் கூறியனபொருந்தும். சத்தம் பரிசம் ரூபம் இரதம் கந்தம் என்

னும் ஐந்து விடயங்களையும் செவி முதலிய ஐந்து இந்திரியங்களே அறி கின்றன. ஆதலால் அவ்விந்திரியங்கள் உடல்போலச் சடமல்லவென்பது பெறப்படும். அன்றியும் செவிமுதலியவற்றின் தொழில்களை என் செவி கேட்டது என் கண் கண்டது எனச் சிறுபான்மை வழங்கப்படினும், நான் கேட்டேன் நான் கண்டேன் என்று வழங்குவதே பெருவழக்கு. ஆதலால் அவ்விந்திரியங்களே உயிரெனக்கூறுதல் பொருந்துமென இந்திரியான்ம வாதிகள் கூறுவர். இவர் கூற்றை ஆசங்கித்துச் சூத்திரத்தின் மூன்றாங் கூற்றைப் பதச்சேதஞ்செய்து இந்திரியங்களின் வேறாய் ஆன்மா உண் டெனச் சாதித்தவாறும்.

(இம்மேற்கோளின்பொருள்.) ஐந்து விடயங்களையும் அறிகின்ற அநு பவங் காணப்படுதலால் ஒவ்வொரு விடயங்களையே அறியும் இந்திரியங் களின்வேறாய் உயிரெனப் படுவதொன்றுண்டு எ-று.

மேற்கோளின் பொருளை விளக்குவதாகிய நூலாசிரியர்

பொழிப்புரை.

ஐம்புலனாகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாமையின் இவ்வைந்தினும் ஐம்பயனு மறிவ துளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

சிற்றுரை.

எ—து பொ—ரை எ—னின், ஐம்புலனறிதலின் ஆன்மா ஐம் பொறியின் வேறெனச் சாதித்தற் கேதுவாமாறு யாங்ஙனமென் னுங்கடாவை யாசங்கித்து அதன்றூற்பரிய முணர்த்து தனுதலிற்று

இ—ள். வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ-ள்.) ஐம்புலனாகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை—ஐந்து விடயங்களாகிய ஓசை ஊறு ஒளி சுவை நாற்றங்களை,—இந்திரி யங்கள்—சுரோத்திர முதலிய இந்திரியங்களுள்,—ஒன்று—ஒரு விடயத்தை,—அறிந்தது—அறிந்த இந்திரியம்,—ஒன்று—மற்றொரு விடயத்தை,—அறியாமையின்—அறியா தாதலான்,—இவ்வைந் தினும்—இவ்வைந்திந்திரியங்களாலும்,—ஐம்பயனும்—ஐம்புலன் களையும்,—அறிவதுளதாகலின்—அறியும் பொருளுண்டாதலான், அதுவே—அவ்வாறறியும் பொருளே,—அவ்வான்மாவா மென் றது—மேலுரையளவைபற்றிச்சாதித்த ஆன்மா வென்றவாறுப் ஐம்புலனறிதலின் ஆன்மா வுளதென மேற்கொண்டது எ-று.

விளக்கம்.

இப்பொழிப்புரை என்ன சொல்லிற்றோ வெனின், ஐந்து விடயங்களையும் அறிதலினால் இந்திரியத்தின் வேறாய் ஆன்மா உண்டெனச் சாதித்தல் எவ்வாறு கூடு மென்னும் வினாவை ஆசங்கித்துக்கொண்டு ஐம்புலனறிதலின் தாத்பரியம் உணர்த்தி ஆன்மா இந்திரியத்தின் வேறெனச் சாதித்தவாறாம்.

(இப்பொழிப்புரையின் பொருள்.) ஐம்புலனாகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்தது ஒன்று அறியாது. அதாவது செவி சத்தத்தை அறியுமே யன்றி ரூபமுதலியவற்றை அறியாது. கண் ரூபத்தை அறியுமே யன்றிச் சத்தமுதலியவற்றை அறியாது. இவ்வாறே ஒவ்வொரு இந்திரியமும் தனக்குரிய ஒவ்வொரு விடயத்தை அறிவதே யன்றி எல்லா விடயங்களையும் அறிவதில்லை. சத்தத்தை அறிந்தேன் ரூபத்தை அறிந்தேன் பரிசத்தை அறிந்தேன் ரசத்தை அறிந்தேன் நாற்றத்தை அறிந்தேன் என ஐந்தினையும் அறிந்த அனுபவம் காணப்படுகின்றமையால் ஐந்து இந்திரியங்களையுந் துணையாகக் கொண்டு ஐந்து பயனையு மறிவது ஒன்றுண்டு. அவ்வாறு அறிவதுவே இரண்டாஞ் சூத்திரத்தில் ஆகம அளவையாற் பெறப்பட்ட ஆன்மா எ - று.

ஐந்து இந்திரியங்களின் வேறாய் ஆன்மா உண்டென்பதற்குக்காட்டும்

உதாரணம்.

ஒன்றறிந்த தோன்றறியா தாகி யுடன்மன்னி
யன்றும் புலனாயவ் வஞ்சேழுத்தை—யோன்றறித
லுள்ளதே யாகி லதுநீ தனித்துனிகண்
டேள்ளலவை யோன்றல்லை யோர்.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாதென்ற தொக்கும் ஐந்து மைந்துயிரெனக் கோடலின் அதனானெமக்காவதோ ரிழுக்கில்லை. இனி இவ் வைந்தையுங் கொண்டு ஐம்புலனையும் ஒருபொருளே யறியுமெனின் அதற்குப் பிரமாணங் கண்டிலம். 'குடத்தைக்கண்ட யானே அதனைத் தீண்டினே' னென மறித்துணர்வு நிகழ்தல் ஐந்து மோருடம்பின்கண்ணே நிலைபெற்றமையாற்றுமைபற்றி யமையுமெனக் கோடுமென்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துக் கூறுகின்றது.

(இ-ள்.) உடல் மன்னி ஒன்று அறிந்தது ஒன்று அறியாதாகி—உடம்பின்கண்ணே நிலைபெற்று ஒருவிடயத்தை யறிந்த இந்திரியம் மற்றொரு விடயத்தை அறியாதாய்,—அன்றும் புலன் ஆய் அவ் வஞ்செழுத்தை—அங்ஙனந் தம்முண் மாறுபடுஞ் சத்தமுதலிய புலன்களைச் (சூக்குமபஞ்சாக்கரத்தாற் செலுத்தப்பட்டு) ஆராய்ந் தறிகின்ற அவ்வைம்பொறிகளின் தொழிற்பாட்டை,—அறிதல் ஒன்று உள்ளதேயாகில்—கண் உருவத்தையறிவது செவி ஓசை யை யறிவதென்று இவ்வாறுணர்தலை யுடையதோர் பொருள் (இல்லதோ உள்ளதோவென வினாயினார்க்கு இல்லதெனின் அவ் வறிவு நிகழாதாதல்வேண்டுமாகலின்) உள்ளதேயாமெனின்,—அதுநீ—அவ்வாறுணர்வதியாது அதுவே நீயாகிய வான்மா (அவ் வாறுணர்வனவும் அவ்விந்திரியங்களே யென்றுறற்படு மிழுக்கென் னையெனின்),—அவை தனித்தனி கண்டு உள்ளல்—அவ்விந்திரி யங்கள் தத்தம் விடயங்களை வேறுவேறு கண்டறிதன்மாத்திரை யே யன்றி இத் தொழிற்பாட்டையுடையேம் யாமெனவும் அறியு மாட்டாவாகலான்,—ஒன்று அல்லை ஓர்—அவ்வைந்தின் றொழிற் பாட்டையுமறிந்து அவற்றின் வரும் பயன்கொள்வதாய நீ யவற் றின் வேறாவை அதனை யாராய்ந்தறிவாயர்க எ-று.

ஆகி யென்னுஞ் சிறப்புவினை ஆயென்னும் பொதுவினையோடு முடிந்தது; "இவனு மிவளுஞ் சிற்றிலிழைத்துஞ் சிறுபறையறைந் தும் விளையாடுப" என்றாற்போல. ஆயென்பது வினைத்தொகை. அவ்வஞ்செழுத்தென்க. அஞ்செழுத்தாற் செலுத்தப்பட்ட பொறியை ஆகுபெயரான் அஞ்செழுத்தென்றார். அஃதிருமடி யாகுபெயராய் ஐம்பொறியின் றொழிற்பாட்டை யுணர்த்திநின்றது.

உள்ளல் உள்ளலா னென்க.

இம்மூன்றதிகரணங்களாலுஞ் சாக்கிரத்தினிகழு மியல்புபற்றி ஆன்மாவினுண்மை சாதிக்கப்பட்டது.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) உடல் மன்னி ஒன்று அறிந்தது ஒன்று அறியாதாகி அன்றும் புலன் ஆய் அவ்வஞ்செழுத்தை அறிதல் ஒன்று உள்ளதே ஆகில் அது நீ அவை தனித் தனி கண்டு உள்ளல் ஒன்று அல்லை ஓர்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், இந்திரியங்கள் ஒன்று அறிந்ததைப் பிறிதொன்று அறியாதென்றது பொருந்தும்; ஐந்து இந்திரியங்

களும் ஐந்து உயிரெனக் கொள்ளுதலால் எமக்கு இழுக்கொன்று மில்லை; அன்றியும் இவ்வைந்து இந்திரியங்களையுங்கொண்டு ஐந்து விடயங்களையும் ஒரு பொருளே அறியுமென்று கூறின் அவ்வாறு கூறுதற்குப் பிரமாணங் காணவில்லை. "குடத்தைக் கண்ட யானே அதனைத் தீண்டினேன்" னென்றதனால் காண்டல் தீண்டுதலாகிய இரண்டிடனிடத்தும் யானென்னும் உணர்வு தொடர்ச்சியாய் நிகழ்தல்பற்றி இந்திரியங்களின் துணையைக்கொண்டு அறியும் ஆன்மா அவற்றின்வேறாய் உண்டென்னின், ஐந்து இந்திரியங்களும் ஒருடம்பின்கண்ணே நிலைபெற்றிருக்கும் ஒற்றுமை பற்றி இந்திரியங்களே அவ்வாறுணருமாதலின், அது கொண்டு இந்திரியங்களின் வேறாய் உயிரென ஒன்றுண்டு என்றல் பொருந்தாது என்னும் வினவை ஆசங்கித்து இந்திரியங்களின் வேறாய் உயிர் உண்டென்பதனை வலியுறுத்திய வாறும்.

(பொ-ரை.) உடம்பின்கண்ணே நிலைபெற்று ஒரு விடயத்தை அறிந்த இந்திரியம் மற்றொரு விடயத்தை அறியாததாகும். அவ்வாறு தம்முள் வேறுபடுகின்ற சத்த முதலிய விடயங்களையும் ஒவ்வொரு இந்திரியங்கள் தாமாகவே அறிவதில்லை, சூக்குமபஞ்சாக்கரஞ் செலுத்த அவ்விந்திரியங்கள விடயங்களிற் சென்று அறியும்; அறியுங்கால் அறிகின்ற அவ்விந்திரியங்களின் தொழிற்பாட்டைக் கண் உருவத்தை யறிவது செவி ஓசையை யறிவது என இவ்வாறு உணர்வு நிகழக் காண்கின்றமையால், அவ்வாறு உணரும் பொருள் இல்லதோ உள்ளதோ என வினவு மிடத்து இல்லதென்று கூறின் அவ்வறிவு நிகழ்தல் கூடாது; ஆதலால் உள்ளதேயாமென்று கூறின் அவ்வாறுணர்வதாகிய அதுவே நீயாகிய ஆன்மா. கண் உருவத்தை அறிவது, செவி ஓசையை அறிவது என்று உணர்வனவும் அவ்விந்திரியங்களே என்று சொன்னால் என்ன குற்றமெனின், அவ்விந்திரியங்கள் தத்தம் விடயங்களை வேறு வேறு கண்டறிதல் மாத்திரையேயன்றி யாம்அறிந்தேமென்று அறியமாட்டா; விடயங்களால் வரும் பயனையுங் கொள்ளமாட்டா; இவை குற்றமாம். ஆதலால், அவ்வைந்து இந்திரியங்களையுங்கொண்டு ஐந்து விடயங்களை அறிந்தேனென் றுணர்ந்து அவ்விடயங்களால் வரும் பயனைக் கொள்பவனாகிய நீ அவ்விந்திரியங்களின் வேறுமென்பதனை ஆராய்ந்தறிவாயாக எ-று.

(க-ரை.) இந்திரியங்களுள் ஒரு இந்திரியம் அறிந்த விடயத்தைப் பிறிதொரு இந்திரியம் அறியாமையானும் ஒருவிடயத்தைத்தானும் அறிவதேயன்றி அறிந்தேனென அறியாமையாலும் அதன்பயனைக் கொள்ளாமையானும் ஐந்திந்திரியங்களையுங்கொண்டு ஐந்து விடயங்களையும் அறிந்து பயன் கொள்ளும் ஆன்மாவாகிய நீ அவ் விந்திரியங்களின் வேறு என்பதாம்.

அன்றும் என்பதற்கு மாறுபடு மென்பது பொருளாம். இதனை "அன்றினார் புரமூன்றும் பொடியாய் வேவ" என்னுந் தேவாரத்தானு முணர்க.

அறியாதாகி என்பதில் உள்ள ஆகி என்னும் சிறப்புவினை புலன் ஆய் என்பதிலுள்ள ஆய் என்னும் பொதுவினையோடு முடிந்தது. ஒன்றறிந்தது ஒன்றறியாதாகி என்றதனால் அவ்வாறு அறியாமை ஒவ்வொரு இந்திரியத்திற்கும் தனித்தனி உளதாதலின் ஆகியென்பது சிறப்பு வினையாயிற்று. புலனை ஆயுந்தன்மை இந்திரியங்களுக்கெல்லாம் பொதுவாதலால் ஆய்தல் பொதுவினை யாயிற்று. இவ்வாறு சிறப்புவினை பொதுவினையோடு முடிதலை 'இவனும் இவளும் சிற்றில் இழைத்தும் சிறுபறை யறைந்தும் விளையாடுப' என்றாற்போலக் கொள்க. சிற்றில் இழைத்தலென்பது சிறு வீடு கட்டுதலாம். இது மகளிருக்குரிய சிறப்புவினை. சிறு பறை யறைதல் என்பது சிறுகொட்டு அடித்தலாம். இது புருடருக்குரிய சிறப்புவினை. விளையாடுதலென்பது இருவருக்கு முரிய பொதுவினை. ஆய் என்பதில் வினைதொக்கு நின்றமையால் அதனை விரித்து ஆராய்ந் தறிகின்ற என்று உரை செய்யப்பட்டது.

அவ்வஞ் செழுத்தென்றதிலுள்ள அகாரச்சுட்டு முதலதிகாரணத்து வெண்பாவிற்கூறிய சூக்குமபஞ்சாக்கரத்தைச் சுட்டிற்று.

அஞ்செழுத் தென்றது அஞ்செழுத்தாற் செலுத்தப்பட்ட ஐந்து இந்திரியங்களை ஆகுபெயராற் குறித்து அவ்வாகுபெயர் இருமடி யாகுபெயராய் ஐம்பொறிகளின் றொழிற்பாட்டை உணர்த்தி நின்றது. ஆதலால் அவ்வஞ்செழுத்தை என்பதற்கு அவ்வைம்பொறிகளின் றொழிற்பாட்டை யென உரை செய்யப்பட்டது. இருமடியாகுபெயராவது ஒரு சொல்லின் ஆகு பெயர் பிறிதொரு ஆகுபெயர்ப்பொருளை உணர்த்திநிற்றலாம். உதாரணம் கார் வந்தது என்று கூறுமிடத்துக் கார் என்னுஞ் சொல் கரிய நிறமுடைய மேகத்தையும், அம்மேகம் மழையைப்பெய்யுங்காலத்தையுங் குறித்து மழைக்காலம் வந்தது என்பது போல்வனவாம்.

உள்ளலானென்பது உள்ளல் என நின்றது. அல் எதிர் மறைப்பொருளில் நின்றது; ஆதலால் உள்ளல் என்பதற்கு அறியமாட்டா வாகலான் என உரை செய்யப்பட்டது.

இவ்வதிகரணத்தில் இந்திரியத்தின் வேறாய் ஆன்மா உண்டென்பது தன்னாற்கூறப்படும்பொருள். உண்டோ இல்லையோ வென்பது ஐயப்பாடு. இல்லை யென்பது பிறர் பக்கம். இவ்வாறு கூறுவோர் இந்திரியான்மவாதிகள். இவரைமறுத்து இந்திரியத்தின் வேறாய் ஆன்மா உண்டெனச்சாதித்தவாறும்.

இம்மூன்றதிகரணங்களினாலும் சாக்கிரத்தில் நிகழு மியல்பு பற்றிச் சூனியம் ஆன்மாவன்று, உடல் ஆன்மா வன்று, இந்திரியம் ஆன்மா வன்று எனக் கூறி இவற்றின் வேறாய் ஆன்மா உண்டெனச் சாதிக்கப்பட்டது.

மூன்றும் அதிகரணம் முற்றிற்று.

நான்காம் அதிகரணம்.

சூக்குமதேகம் ஆன்மா அன்றெனக் கூறும்
மேற்கோள்.

இனி ஒடுக்கமறிதலின் ஆன்மா வுளதென்றது.

சிற்றுரை.

எ-து மே-ள் எ-னின், "நேசவிந் திரியங் கட்கு நிகழறி விதனாற் காண்டும்" என நீவிருங் கோடலின் அவ்விந்திரியங்களின் வேறாய் அங்ஙன மறிவது புரியட்டகவுடம்பேயா மெனவமையும், அது புறத்து நிகழாதாயினும் அகத்தே நின்று இந்திரியங்களைப் புறத்திற் செலுத்தி யறியுமெனக் கோடுமெனச் சூக்கும தேகான்மவாதிகள் கூறுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தினாலாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

(இ-ள்.) ஐம்பொறிகளு மொடுங்கின சொப்பனத்தானத்தின் நிகழ்ந்தவற்றை யறிதலின் ஆன்மா வேறுண்டு எ-று.

ஒடுக்கம் ஆகுபெயர்.

விளக்கம்.

இது சூத்திரத்திலுள்ள ஒடுக்கமறிதலின் என்ற ஏதுவையும் ஆன்மா வுளது என்னுந் துணிபொருளையுஞ் சேர்த்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோவெனின், "நேசவிந் திரியங் கட்கு நிகழறி விதனாற் காண்டும்" எனச் சிவஞானசித்தியார் உ-ம் சூ-ம். ௬௪-வது செய்யுளிற் கூறியபடி, சத்தாதி தன்மாத்திரைகளால் இந்திரியங்களுக்கு அறிதற்றொழில் நிகழுமென நீவிருங் கொள்ளுதலால், இந்திரியங்களின் வேறாய் அறிந்தேன் என அறிவது சூக்குமதேகமாகிய புரியட்டகவுடம்பேயா மென்பது பெறப்படும்; அச்சூக்குமதேகம் வெளியிற் காணப்படாதாயினும் உள்ளே நின்று இந்திரியங்களை வெளியிற் செலுத்தி அறியுமெனக் கொள்வேமென்பார் சூக்குமதேகான்மவாதிகள். இவர் கூற்றை ஆசங்கித்துச் சூத்திரத்தின் நான்காங்கூற்றைப் பதச்சேதஞ்செய்து சூக்குமதேகத்தின் வேறாய் ஆன்மா உண்டெனக் கூறியவாறும்.

(இம்மேற்கோளின் பொருள்.) கருவிகளில்லாத துரியாதீதமாகிய கேவலத்தில் அறியாமலும் சகலத்தில் கலை முதலிய கருவிகளைக்கொண்டு அறிவதுமாய் நிற்கும் உயிர் என்றும் ஒரு தன்மையாய்த் தானே அறியும் பிரயமாகாது ஆதலின் உயிர் வேறு உண்டு எ-று.

ஒடுக்கம் என்பது ஒடுக்கத்தின் நிகழ்ந்தவற்றைக் குறித்து நிற்றலால் ஆகுபெயர்.

புரியட்டக உடம்பாவது, சத்தம் பரிசம் ரூபம் இரதம் கந்தமென்னும் தன்மாத்திரை யைந்தும் மனம் புத்தி அகங்காரம் மூன்றும் ஆக எட்டுமாம்.

இம்மேற்கோளின் பொருளை விளக்குவதாகிய நூலாசிரியர்

பொழிப்புரை.

நனவின்கட் கனவுகண்டா மென்றுங் கண்டில மென்றும் நிற்பதுளதாகலின் அதுவே யவ்வான்மாவாமென்றது.

சிற்றுரை.

எ—து பொ—ரை எ—னின், சொப்பனத்தி னிகழ்ந்தவற்றை யறிவதுஞ் சூக்குமதேகமே யாகலின் இது சித்தசாதன மாமா லென்னுங் கடாவை யாசங்கித்து அதன் ருற்பரிய முணர்த்துத லுதலிற்று.

இ-ள். வெ-டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ-ள். கனவு—சொப்பனத்தினை,—கண்டா மென்றும்—காணப்பெற்றே மென்றும்,—கண்டிலமென்றும்—காணப்பெற்றிலே மென்றும்,— நனவின்கண்— சாக்கிரத்தின்கண்,— நிற்பதுளதாகலின்—மயங்கியறியும் பொருளுண்டாதலான்,—அதுவே—அவ்வாறு மயங்கியறியும் பொருளே,—அவ்வான்மாவாமென்றது—மேலுரையளவைபற்றிச் சாதித்த ஆன்மாவென்றவாறும். ஒடுக்கமறிதலின் ஆன்மா வுளதெனமேற்கொண்டது எ-று.

இஃதென்சொல்லியவாறோவெனின், ஒடுக்கமறிதலின் என்றது ஒடுக்கத்தினிகழ்ந்தவற்றை நனவின்கண் மயங்கியறிதலென்னும் பொருட்டாதலாற் சித்தசாதனமாதல் யாண்டையதென விடுத்தவாறென்பது. கனவுகண்ட சூக்குமவுடம்பே நனவின்கண் அதனை யறியுமாயிற் கண்டபடி யறியாது மயங்கியறிதல் கூடாமையின் உயிர்க்காயின் அதுபோல் ஒருதன்மைத்தாகலின்றி அகத்துச்சேறலும் புறத்துச்சேறலும் வேறுபாடுடைமையான் அதுபற்றி மயங்கி யறிதல் கூடுமாகலின் அங்ஙனமறியு முயிர்வேறுண்டென்பது கண்டுகொள்க.

விளக்கம்.

இப்பொழிப்புரை என்ன சொல்லிற்றேவெனின், சொப்பனத் தானத்தில் நிகழ்ந்தவற்றை அறிவதும் சூக்குமதேகமேயாகலின், அவ்வாறு சித்திக்கப்பட்டதை மேற்கோளாகக் கூறியது சித்தசாதனமாகிய குற்றமாம் என்னும் வினவை ஆசங்கித்து ஒடுக்கமறிதலின் என்றதன் தாற்பரியம் கூறியவாறும்.

(இப்பொழிப்புரையின் பொருள்.) சொப்பனத்தினைக் காணப்பெற்றே மென்றும் காணப்பெற்றிலே மென்றும் சாக்கிரத்தின்கண் மயங்கியறியும் பொருளுண்டாதலான் அவ்வாறு மயங்கியறியும் பொருளே இரண்டாஞ் சூத்திரத்தில் உரையளவைபற்றிச் சாதித்த ஆன்மா என்றவாறும். ஆதலால் ஒடுக்கமறிதலின் ஆன்மா வுளதென மேற்கொண்டது. எ-று.

இப்பொழிப்புரையினால் கூறி முடித்தது யாதோவெனின், ஒடுக்க மறிதலின் என்றது ஒடுக்கத்தின் நிகழ்ந்தவற்றை நனவின்கண் மயங்கி யறிதலென்னும் பொருளைக் குறித்தலால் சித்தசாதன மென்னுங் குற்றமாதல் இல்லை யென விடைகூறிய வாறும். சொப்பனத்தில் நிகழ்ந்தவற்றைச் சொப்பனத் தானத்தில் உயிருக்குக் கருவியாய் நின்று அறிவது சூக்கும உடம்பேயாம். சாக்கிரத்தின் கண் சொப்பனத்தில் நிகழ்ந்தவற்றைக் கண் டவாறே யறியாமல் மயங்கியறிதல் சூக்கும உடம் பன்று. இவ்விடத்துச் சாக் கிரத்தில் மயங்கி அறிதலையே கூறினபடியால் சித்த சாதனமன்று. சொப்ப னத்தைக் கண்ட சூக்கும உடம்பே நனவின்கண்ணும் அச்சொப்பனத்தை அறியு மென்றல் பொருந்தாது. எதனாலெனின், அச்சூக்கும உடம்பே நன வின் கண்ணும் அறியுமாயின் அவ்விடத்துக் கண்டபடியறியாமல் மயங்கி யறிதல் வேண்டாம். நனவின்கண் சொப்பனத்தை மயங்கியறிதல் காணப் படுதலால் அவ்வாறு மயங்கி அறிதல் உயிரென்றே கூறல் வேண்டும். உயிர் சூக்கும உடம்பு போல் என்றும் ஒரு தன்மையாயிருப்பதில்லை. சிலதத்து வங்களை விட்டு அகத்துச் செல்லுதலும், விட்ட அத்தத்துவங்களோடு கூடிப்புறத்துச் செல்லுதலும் ஆகிய வேறுபாடு உயிருக்குண்டு. அவ்வேறு பாடு பற்றிக் கனவின்கண் கண்டவற்றை நனவின்கண் வேறு சில தத்து வங்களோடு கூடுதலால் உயிர் மயங்கி யறிதல் கூடும். ஆதலால் அவ்வாறு மயங்கியறியும் உயிர் சூக்கும உடம்பின் வேறாயுண்டென்பது கண்டு கொள்க.

சூக்குமதேகத்தின் வேறாய் ஆன்மா உண்டென்பதற்குக் காட்டும்
உதாரணம்.

அவ்வுடலி னின்றுயிர்ப்பு வைம்பொறிக டாங்கிடப்பச்
செவ்விதி னவ்வுடலிற் சென்றடங்கி—யவ்வுடலின்
வேறேன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறலுட னியல்லை மற்று.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், கனவின்கட் செல்லுமாறும் ஆண்டு நிகழுமாறும் மீளவருமாறு முணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) அவ்வுடலின் நின்று உயிர்ப்ப ஐம்பொறிகள் கிடப்ப—(மேல்உயிரன்றெனக் கூறிப்போந்த)தூல வுடம்பினின்று உயிர்ப்பனவாய ஐம்பொறிகள் ஆண்டே உயிர்ப் பொழிந்து கிடப்ப,—அடங்கி அவ்வுடலில் செவ்விதின் சென்று—(அவையங்ஙனங் கிடந்தவழிப்) புறத்து நிகழுந்தொழிற் பாடெல்லா மடங்கி அவ்வுடம்பினுள்ளால் வருத்தமின்றிச் சென்று,—அவ்வுடலின் வேறு ஒன்று கொண்டு விளையாடி—அத்தூல வுடம்புபோல அதனின் வேறாயதோருடம்பை யெடுத்துக் கொண்டு வேறோராற்றாற் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று விளையாடி,—மீண்டு அதனை மாறல்—மீளவதனை மாறி மேற்சேறலான்,—நீ உடல் அல்லை—நீ அச்சூக்குமதேக மல்லை அதனின் வேறாவை எ-று.

உயிர்ப்ப வென்றது அன் பெறாத அகர வீற்றுப் பலவறி சொல். உயிர்த்தல் தொழிற்படுதல்.

தாமும் மற்றும் அசை.

மீண்டு மீள.

மாறல் மாறலானென்க.

இவ்வதிகரணத்தாற் சொப்பனத்தி னிகழுமியல்புபற்றி உயிருண்மை சாதிக்கப்பட்டது.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) அவ்வுடலின் நின்று உயிர்ப்ப ஐம்பொறிகள் கிடப்ப அடங்கி அவ்வுடலில் செவ்விதின் சென்று அவ்வுடலின் வேறு ஒன்று கொண்டு விளையாடி மீண்டு அதனை மாறல் நீ உடல் அல்லை.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோ வெனின், உயிர் கனவினிடத்துச் செல்லு முறைமையினையும், அக்கனவினிடத்து நிகழ்வதனையும், மீளச் சாக்கிரத்திற்கு வரும் முறைமையினையும் உணர்த்திச் சூக்கும தேகத்தின் வேறாய் ஆன்மா வுண்டென்பதை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) மூன்றும் அதிகரணத்தால் உயிரன்றெனச் சாதிக்கப்பட்ட ஐம் பொறிகள் தூல வுடம்பினின்று தொழிற்பட்டுப் பின்னர் அத்

தூல வுடம்பினிடத்தே தொழிற்படாமற் கிடக்க, அவ்வாறு கிடக்குங்கால் புறத்து நிகழும் தொழிற் பாடெல்லாம் அடங்க நீ அத்தூல உடம்பி னுள்ளாக வருத்தமின்றிச் சென்று அத்தூல வுடம்புபோல அதனின் வேறாய சூக்கும உடம்பை எடுத்துக் கொண்டு தூலவுடம்பில் நின்று தொழிற் செய்வது போலல்லாமல் அதிவேகமாய்க் கண்டு கேட்டு உண்டு விளையாடி மீள அச் சூக்கும உடம்பினின்று மாறி தூல உடம்பைச் சேர்கின்றாய்; ஆதலால், தூல வுடம்பைக்கொண்டு புறத்து நிகழ்கின்றவற்றை அறிகின்றவாறு போலச் சூக்கும வுடம்பைக்கொண்டு அகத்து நிகழ்கின்றவற்றை அறியும் நீ அச்சூக்கும தேகமல்லை; அதனின் வேறுவை எ-று.

(க-ரை.) தூல தேகத்தைக்கொண்டு புறத்து விடயங்களையும், சூக்கும தேகத்தைக் கொண்டு அகத்து விடயங்களையும் அறிகின்ற நீ தூல தேகத்தின் வேறுதல் போலச் சூக்கும தேகத்தினும் வேறுவை என்பதாம்.

உயிர்ப்ப என்றது அன் பெறுத அகர ஈற்றுப் பலஅறிசொல்; ஆதலால், உயிர்ப்பன என்று உரை செய்யப்பட்டது; உயிர்ப்பன என்பது பகுதி முதலியனவாகப் பிரிக்கப்படுங்கால், உயிர் ப் ப் அன் அ எனப்பிரிக்கப்படும்.

தாம் கிடப்ப என்றதிலுள்ள தாமும், இறுதியில் உள்ள மற்றும் அசை. மீண்டு என்பது மீள என்னும் எச்சத்திரிபு.

மாறலால் என்பது ஈறுகுறைந்து மாறல் என நின்றது; ஆதலால், மாறி மேற் சேறலால் என உரை செய்யப்பட்டது.

இவ்வதிகரணத்தில் சூக்குமதேகத்தின் வேறாய் ஆன்மா உண்டென்பது தன்னாற்கூறப்படும் பொருள். உண்டோ இல்லையோவென்பது ஐயப்பாடு. இல்லையென்பது பிறர்பக்கம். இவ்வாறு கூறுவோர் சூக்குமதேகான்மவாதிகள். இவரைமறுத்துச் சூக்குமதேகத்தின் வேறாய் ஆன்மா உண்டெனச் சாதித்தவாறும்.

இவ்வதிகரணத்தால் சொப்பனத்தில் நிகழும் இயல்புபற்றி உயிருண்டென்று சாதிக்கப்பட்டது.

நான்காம் அதிகரணம் முற்றிற்று.

ஐந்தாம் அதிகரணம்.

பிராணவாயு ஆன்மா அன்றெனக் கூறும்
மேற்கோள்.

இனிக் கண்படில் உண்டிவினை யின்மையின் ஆன்மா வுள தென்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், சொப்பனத்தானமாத்திரையினன்றித் தொழிற்படாத சூக்குமதேகம்போலன்றிச் சுழுத்தி துரியங்களினுந் தொழிற்படுவதாய பிராணவாயுவே அடங்குதல் விடுதல் செய்தறிவதாகிய ஆன்மா வாத லமையுமெனப் பிராணான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தி னைந்தாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ - ள். வெ - டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ — ள். கண்படில்—துயிலிடத்து,—உண்டி—விடயங்களிடமாகவரும் இன்பத்துன்ப நுகர்ச்சியும்,—வினை—உடம்புசேட்டித்தலும்,—இன்மையின்—இல்லாமைபால்,—ஆன்மா வுளதென்றது—இப்பிராணவாயுவின் வேறாய் ஆன்மாவுண்டு எ-று.

சிற்றுரை.

உண்டிவினை உம்மைத்தொகை. அஃது உண்டியும் வினையுமின்றிக் கிடந்து எனவழிநூலாசிரியர் கூறியவாற்றானுமுணர்க.

விளக்கம்.

இது சூத்திரத்திலுள்ள கண்படில் உண்டிவினை யின்மையின் என்ற ஏதுவையும், ஆன்மா வுளது என்ற துணிபொருளையும் சேர்த்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றேவெனின், சூக்குமதேகம் சொப்பனத்தானத்தில்மட்டுந் தொழிற்படும்; சுழுத்தி துரியங்களில் தொழிற்படாது. ஆதலால், சூக்குமதேகம் உயிரன்றென்பது பொருந்தும். சொப்பனம் சுழுத்தி துரியங்களினும் பிராணவாயு இயங்கிக்கொண்டிருக்கும், அப்பிராணவாயுவே ஐம்புலன்களை அடக்கிக்கொண்டு சொப்பனத்தானத்தினின்றும், அவ்வைம்பொறிகளை வெளிப்படுத்திக்கொண்டு சாக்கிரத்தானத

திற்கு வந்தும் அறியும் ஆன்மாவாகும் என்றல் பொருந்துமெனப் பிராணான்ம வாதிகள் கூறுவர். இவர் கூற்றை ஆசங்கித்துச் சூத்திரத்தின் ஐந்தாங் கூற்றைப் பதச்சேதஞ்செய்து பிராணவாயுவின் வேறாய் ஆன்மா உண்டெனக் கூறியவாறும்.

(இம்மேற்கோளின் பொருள்.) சுழுத்தியாகிய நித்திரையில் பிராண வாயு இயங்கிக் கொண்டிருப்பினும் விடயங்களின் வழியாய்வரும் இன்பத் துன்ப அநுபவமும் உடம்பு தொழிற்படுதலும் இல்லை; ஆதலால், இன்பத் துன்ப அனுபவத்தையும் உடம்பின் றொழிற்பாட்டையும் உடைய ஆன்மா இப்பிராணவாயுவின் வேறாய் உண்டு எ-று.

உண்டிவினை யென்றது உண்டியும் வினையும் என விரிதலால் உம்மைத்தொகை. இதனைச் சிவஞானசித்தியார் சு-ம் சூ-ம் ௩௦-வது செய்யுளில் "உண்டியும் வினையு மின்றிக் கிடந்து" என வழிநூலாசிரியர் உம்மையை விரித்துக் கூறியவாற்றானும் உணர்க.

மேற்கோளின் பொருளை விளக்குவதாகிய நூலாசிரியர்

பொழிப்புரை.

ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பஞ் சீவனம் பிரகிருதிக்கின்மையின் ஒடுங்காதவிடத்து இன்பத்துன்பஞ் சீவியாநிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

சிற்றுரை.

எ-று பொ-ரை எ-னின், கண்படை கொண்டவழி உண்டி வினை யில்லையென்றது உடற்கோ பிராணவாயுவுக்கோவென வினாயினார்க்கு உடம்பு உயிரன்மையான் அதற்கவை யில்லாமைபற்றி ஈண்டைக்காவதோ ரிழுக்கில்லை. இனிப் பிராணவாயுவுக்கெனின், அது துயின்றெழுந்தபின்னர்ச் சுகமாகத் துயின்றேனென் றறிதல் பிறிதோராற்றாற் பெறப்படாதென்னும் அருத்தாபத்தியான் ஆண்டும் இன்பநுகர்ச்சி யுண்டென்பது பெற்றாம். விழித்துழிப்போல உறங்குழியும் பிராணவாயு வியங்குதலான் வினையுண்மையுங் கண்டாமாகலின் அதற்கு அவை யாண்டில்லை யென்றல் மாறுகோள் போலு மென்னுங் கடாவை யாசங்கித்து அதன்றாற்பரிய முணர்த்துதலுதலிற்று.

(இ-ள்) ஈண்டு உண்டியென்றது விடயங்களினிடமாகவரும் இன்பத்துன்ப நுகர்ச்சியை; வினையென்றது உடம்பு சேட்டித்

தலே. ஆகலின், இவ்விரண்டும் பிராணவாயுவையொழித் தொழிந்த கருவிகளெல்லா மொடுங்கிய துயிலிடத்து அஃதியங்காநிற்பவும் உடம்பின்கண்ணே நிகழ்தலின்மையின் அவை யொடுங்காத நனவினிடத்து அவையிரண்டும் அதன்கணிகழ்த லுண்மையின் அவ்வின்மை யுண்மைகட் கேதுவாகக் கருவிகளை யொடுக்கியும் ஒடுக்காதும் நிற்பதியாது அதுவே அவ்வான்மா வென்றவாறும். கண்படில் உண்டிவினையின்மையின் ஆன்மா வுளதென மேற்கொண்டது எ-று.

பிராணவாயுவையொழித் தொழிந்த கருவிகளென்பது ஆற்றலான் வந்தது.

இன்பத்துன்ப நுகர்ச்சியை இன்பத்துன்ப மென்றுபசரித்தார்.

சீவனம் சீவித்தல்; சேட்டித்த லென்றதாம்.

செவ்வெண்டொகை விகாரத்தாற் றொக்கது.

சீவியாநிற்ப தென்பது சீவியாநிற்ற லென்னுந் தொழிற்பெயர்மாத்திரையாய் நின்றது. "உறங்குவதுபோலும்" என்புழிப்போல.

உளதென்றது தனித்தனி சென்றியையும்.

துயின்றுழியும் விழித்துழியுந் திரிபின்றி ஒரு தன்மைத்தாதல்பற்றி உடம்பு பிரகிருதியெனப்பட்டது. பிரகிருதிக்கென்றது உருபுமயக்கம்.

இரண்டுகாலத்து மொப்ப இயங்குதல்பற்றிப் பிராணவாயுவைப் பிரகிருதி யெனக்கொண்டு அதற்கு அவை யின்மையினென் றுரைப்பாரும், பிரகிருதி விகாரமாகிய சித்தத்திற்கு அவை யின்மையினென வுரைத்துச் சுழுத்தியின்கண்ணுந் தொழிற்படுவதாய சித்தமே உயிரென்னுஞ் சித்தான்மவாதிகளை மறுத்தற்கெழுந்தது இவ்வதிகாரணமென் றுரைப்பாரு முளர்.

விளக்கம்.

இப்பொழிபபுரை என்ன சொல்லிற்றோவெனின், நித்திரை கொண்டவிடத்து உண்டியும் வினையும் இல்லையென்றது உடலும் பிராணவாயுவுக்கோ என வினவில், உடம்பு உயிரல்லாதபடியால் அவ்வுடம்பிற்கு உண்டிவினை யில்லாமைபற்றி இவ்விடத்திலுண்டாகும் குறையொ

ன்றுமில்லை; பிராணவாயுவிற்கு உண்டிவினை இல்லையென்று கூறில், நித்திரைவிட்டெழுந்த பின்னர் சுகமாக நித்திரை பண்ணினேன் என்றறிதலால், அவ்வாறு அறிதல் நித்திரையிற் சுகானுபவமில்லாமல் உண்டாகாதென்னும் அருத்தாபத்திப்பிரமாணத்தால் நித்திரையிலும் சுகானுபவம் உண்டென்பது பெறப்பட்டது. விழித்திருக்கும் சாக்கிரத்திற்போல உறங்கும்பொழுதும் பிராணவாயு இயங்குதலால் வினையுண்டென்பதும் கண்டாம். ஆதலால், பிராணவாயுவிற்கு நித்திரையில் அனுபவமும் தொழிலும் இல்லையென்றல் பொருந்தாது என்பார் வினவை ஆசங்கித்து உண்டிவினை யின்மையின் என்றதன் தாற்பரியங் கூறியவாறும்.

(இப்பொழிப்புரையின் பொருள்.) உண்டியென்றது சுழுத்தியில் உண்டாகும் சுகத்தையன்று, விடயங்களிடமாகவரும் இன்பத்துன்ப அனுபவத்தை; வினையென்றது பிராணவாயுவின் இயக்கத்தையன்று, உடம்பு தொழிற்படுதலை. பிராணவாயு நீங்கிய ஏனைய கருவிகள் ஒடுங்கிய சுழுத்தியில் பிராணவாயு இயங்கவும் இவ்விரண்டும் உடம்பின்கண் நிகழாமலும் ஏனைய கருவிகள் ஒடுங்காத சாக்கிரத்தில் அவ்விரண்டும் நிகழவும் காண்கின்றமையால் சாக்கிரத்திலும் சுழுத்தியிலும் வேறுபாடின்றி இயங்கிக் கொண்டிருக்கும் பிராணவாயுவின் வேறாய் உண்டிவினைகளின் இன்மைக் கேதுவாய்ச் சுழுத்தியில் கருவிகளை ஒடுக்கியும் அவ்விரண்டின் உண்மைக் கேதுவாய்ச் சாக்கிரத்தில் கருவிகளை ஒடுக்காமலும் நிற்பது எதுவோ அதுவே உயிர். எ—று.

சாக்கிரத்திலும் சுழுத்தியிலும் பிராணவாயு ஒடுங்காமல் ஒரு தன்மையாய் நிற்பதால், ஒடுங்கினவிடத்து என்பதற்கு ஆற்றலால் அப்பிராணவாயுவை யொழித்து ஒழிந்த கருவிகளென கூறப்பட்டது. ஆற்றல் ஈரிடத்தும் ஒடுங்காவலிமை. இன்பத்துன்ப நுகர்ச்சியை என்று கூறவேண்டியதை இன்பத் துன்பமென்று உபசரித்தார்.

சீவனமென்பது சீவித்தல். அதாவது தொழிற்படுதலாம்.

இன்பத்துன்பம் சீவனம் என்பன எண்ணைக்குறிக்கும் உம்மை பெறாமல் நிற்றலால் செவ்வெண் எனப்படும். உம்மை பெற்றுவருமாயின் செவ்வெண்ணாகமாட்டாது. செவ்வெண் இறுதியில் தொகை பெற்றே வரவேண் இவவிடத்து அத்தொகை தொக்குநின்றது. அத்தொகையை விரித்து ரண்டும் என உரைசெய்யப்பட்டது.

சீவியாநிற்பதென்பதில் நிற்பது ஈண்டு வினைமுற்றாகாது நிற்றல் என்னுந்தொழிற்பெயர்மாத்திரையாய்நின்றது. இது "உறங்குவதுபோலும்" திருக்குறள் நிலையாமை யென்னும் அதிகாரத்திற் கூறியவாறு போலும். குறளில் உறங்குவதுபோலு மென்பது உறங்குதல்போலு மென்னுந் தொழிற்பெயர் மாத்திரையாய் நின்றது.

உளது என்றது இன்பத்துன்பம் உளது சீவியாநிற்பதுளது என அவ் விரண்டினிடத்தும் தனித்தனி சென்று பொருந்தும். இவ்வாறு கொள்ளாக்கால் அவ்விரண்டும் என்றபன்மை உளது என்னும் ஒருமை கொண்டு முடியாது.

நித்திரைசெய்யும் பொழுதும் விழித்துக்கொண் டிருக்கும்பொழுதும் வேறுபாடின்றி ஒருதன்மையாகவே தூலவுடம்பு இருக்கும். ஆதலால் அத்தூல வுடம்பைப் பிரகிருதி யென்று கூறினர். பிரகிருதி—இயல்பா யிருத்தல்.

பிரகிருதியின்கண் இன்மையின் என்று கூறவேண்டியதை பிரகிருதிக் கின்மையின் என்றது உருபுமயக்கம். அதாவது ஏழாம்வேற்மைஉருபு நிற்கவேண்டிய இடத்தில் நான்காம்வேற்றுமை உருபு நின்றபடியால் உருபு மயக்கமாயிற்று.

இனி, சாக்கிரம் சுழுத்தி யென்னும் இரண்டு காலத்தும் பிராணவாயு ஒருதன்மையாக இயங்குதலால் பிரகிருதியென்பது பிராணவாயுவேயாமெனக் கொண்டு அப்பிராணவாயுவிற்குச் சுழுத்தியில் இன்பத் துன்பமும் சீவனமும் இல்லாமையினால் பிராணவாயு ஆன்மாவன்று என்றுரைப்பாரும் உளர்.

இன்னும் இவ்வதிகரணம் சித்தமே ஆன்மா வென்னும் வாதிகளைமறுத்தற்கு எழுந்ததாமென்றுங் கூறுவர். எவ்வாறெனின், பிரகிருதிக் கின்மையின் என்றதற்குப் பிரகிருதி விகாரமாகிய சித்தத்திற்கு இன்பத் துன்பமும் சீவனமும் இன்மையின் என வுரைத்துச் சுழுத்தியின்கண்ணும் தொழிற்படுவதாகிய சித்தத்திற்குச் சுழுத்தியில் அவ்விரண்டும் இன்மையால் சித்தம் உயிராகமாட்டாது என்பதாம்.

இவ்வாறு பிரகிருதி என்பதற்குப் பிராணவாயுவையும் சித்தத்தையும் கொள்ளுதல் பொருந்து மேனும் தூல வுடலென்று கொள்வதே சிறப்பாம். எதனாலெனின், துரியத்திற் சித்தமில்லை; துரியாதீதத்திற் பிராணவாயுவில்லை; தூல வுடம்பு துரியாதீதம்வரையும் ஒரு தன்மையாயிருக்கும் ஆதலால் என்க.

பிராணவாயுவின் வேறாய் ஆன்மா வுண்டென்பதற்குக் காட்டும்
உதாரணம்.

கண்டறியு மிவ்வுடலே காட்டோடுங்கக் காணாதே
யுண்டி வினையின்றி யுயிர்த்தலாற்—கண்டறியு
முள்ளம்வே றுண்டா யோடுங்கா துடனண்ணி
வுள்ளதா முண்டிவினை யூன்

சிற்றுரை.

எ-து உ-ம எ-னின், துயிலிடத்துக் கருவிகளெல்லா மொடுங்குதலின் இன்பத்துன்ப நுகர்ச்சியுஞ் சேட்டையும் பிரகிருதிக்கில்லை யாயின வாகலான் அதுபற்றிப் பிராணவாயுவை யான்மாவென்றற் கிழுக்கென்னை யென்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) கண்டு அறியும் இவ்வுடலே—கண்டறிதற்கு நிலைக்களமான இவ்வுடம்பின்கண்ணே,—காட்டுக் காணாதே ஒடுங்க—காட்டாய கருவிகள் தொழிற்படாதே யொடுங்கவும்,—உண்டிவினை இன்றி—அவை யொடுங்கியவழி உண்டியும் வினையும் பிரகிருதிக்கில்லையாகவும்,—உயிர்த்தலான்—பிராணவாயு நிலைபெற்று இயங்குதலான்,—கண்டு அறியும் உள்ளம் வேறு உண்டு—கண்டறியுமுரிமையையுடைய உயிர் பிராணவாயுவின் வேறாயுண்டு,—ஒடுங்காது உடல் நண்ணில் ஊன் உண்டி வினை உள்ளதாம்—அவ்வுயிரொடுங்காது அவ்வுடலின்கணெய்திற்றாயின் அவ்வுடம்பு கருவிகளின் றொழிற்பாட்டானுய உண்டியும் வினையு முடைத்தாம்,—ஆய்—அதனை யாராய்ந் தறிவாயாக எ-று.

இது அருத்தாபத்தியளவை.

கண்டறிதல் ஒருபொருட்பன்மொழி.

இன்றி யென்னும் வினைக்குறிப்புச் செயவெனெச்சத்திரிபு. சிறப்பும்மைகள் தொக்கன. அவை "அறிந்திடா துடலுறக்கத் தறிவின்மை கரணமின்மை—யறிந்திடு முதலியாகி னதுநிற்கக் காணம் போகாது" என்னும் பொருள் விளைத்து நின்றன.

ஊன் ஆகுபெயர்.

உயிர் வேறுண்டென்றதனை வலியுறுத்துவார் உடம்பாட்டு முகத்தானு மோதினர்.

இவ்வதிகாணத்தானே சுழுத்தி துரியங்களி னிகழு மியல்பு பற்றி உயிருண்மை சாதிக்கப்பட்டது. இதுகாறுஞ் சார்மாயை நீயல்லை யென்றதனை வலியுறுத்தியவாறு.

பிரமாணவியல்மூன்றுஞ்சூத்திரம். ரு-ம் அதி.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) கண்டு அறியும் இவ்வுடலே காட்டு காணதே ஒடுங்க உண்டிவினை இன்றி உயிர்த்தலான் கண்டு அறியும் உள்ளம் வேறு உண்டு ஒடுங்காது உடல் நண்ணில் ஊன் உண்டிவினை உள்ளதாம் ஆய்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோ வெனின், சுழுத்தியினிடத்துக் கருவிகளெல்லாம் ஒடுங்குதலால் இன்பத்துன்ப அனுபவமும் தொழிலும் உடலுக்கில்லையாயின. ஆதலால், அவ்விரண்டும் இல்லாமைபற்றிப் பிராண வாயுவை ஆன்மா வன்று எனக் கூறுதல் பொருந்ாது என்னும் வினவை ஆசங்கித்துப் பொருந்துமெனக்கூறிப் பிராணவாயு ஆன்மா அன்று என்ப தனை வலியுறுத்தியவாறும்.

(பெ-ரை.) விடயங்களைக் கண்டறிதற்கு ஆதாரமான இவ்வுடம்பின் கண்ணே அறிதற்குத் துணையாகிய கருவிகள் தொழில்செய்யாமல் ஒடுங்க வும், அக்கருவிகள் ஒடுங்கிய சுழுத்தியில் இன்பத்துன்ப அனுபவமும் போக்குவரத்தாகிய தொழிலும் உடலுக்கில்லையாகவும், பிராணவாயு நிலை பெற்று இயங்கிக் கொண்டிருக்கும். அப்பிராணவாயுவே உயிராயின் அது நிலைபெற்றிருக்கவும் இன்பத் துன்ப அனுபவமும் செயலும் உடம்பிற்கு இல்லாமல் போகவேண்டாம். ஆதலால் விடயங்களைக் கண்டறியும் உரிமை யையுடைய உயிர் பிராணவாயுவின் வேறாய் உண்டு. அவ்வுயிர் ஒடுங்காமல் தூலவுடலின்கண் பொருந்துமாயின் அவ்வுடம்புங் கருவிகளும் தொழிற் பட்டு அதனால் இன்பத்துன்ப அனுபவமும் தொழிலும் உடையதாகும். அதனை ஆராய்ந்தறிவாயாக எ-று.

(க-ரை) சுழுத்தியிலும் சாக்கிரத்திலும் பிராணவாயு ஒருதன்மை யாய் நிலைபெற்றிருந்தும் சுழுத்தியில் இன்பத்துன்ப அனுபவமும் உடலின் தொழிலும் இல்லாமையால் உயிர் பிராணவாயுவின் வேறு என்பதாம்.

இவ்வுதாரணம் அருத்தாபத்திப்பிரமாணமாம். எவ்வாறெனின், சுழுத்தியில் பிராணவாயு இயங்கிக்கொண்டிருந்தும் இன்பத்துன்ப அனுப வமும் செயலும் நிகழாமையால், அவ்விரண்டும் நிகழ்தற்கு உரிமையுடைய உயிர் எனைய கருவிகளை ஒடுக்கிக்கொண்டு இருந்தாலன்றி அவ்விரண்டும் நிகழாமை சம்பவியாது என்னும் குறிப்பால் உயிர் வேறுண்டு என்பதாம்.

கண்டறியும் என்றதில் காணுதலும் அறிதலும் ஆகிய இரு மொழி யும் ஒருபொருளையே குறித்து நிற்றலால் ஒருபொருட்பன்மொழி.

உண்டிவினையின்றி என்றதிலுள்ள இன்றி என்னும் வினைக்குறிப்பு, செயவென்னும் எச்சத்தின் திரிபு. எவ்வாறெனின், இன்றியென்பது இல்லையாகி என்னும் எச்சப் பொருளைத்தருகின்ற செய்து என்னும் வாய் பாட்டு வினைக்குறிப்புச்சொல். அது செய என்னும் வாய்பாட்டு எச்சப்

பொருளில் இல்லையாக என்னும் எச்சப் பொருளைக்குறித்து நிற்றலால் செயவென்னும் எச்சத்தின் திரிபாயினமை அறிக. காலங்காட்டாமையின் வினைக்குறிப்பு.

ஒடுங்க என்றவிடத்தும் இன்றி என்றவிடத்தும் சிறப்பும்மைகள் தொக்குநின்றன. அவற்றை விரித்து ஒடுங்கவும் இல்லையாகவுமென உரை செய்யப்பட்டது.

அவ்வும்மைகள் "அறிந்திடா துடலுறக்கத் தறிவின்மை கரணமின் மை—யறிந்திடு முதலியாகி னதுநிற்கக் கரணம் போகாது" என்னும் சிவ ஞானசித்தியார் ௩-ம் சூ-ம் ௬-வது செய்யுளின் பொருளை விளைத்து நின் றன. அதாவது பிராணவாயுவே அறியுங்கருத்தாவாயின் அது நிற்கக் கருவிகள் ஒடுங்காது என்பதாம்.

ஊன் என்பது ஊனையுடைய உடம்பைக்குறித்துநிற்றலால் ஆகு பெயர்.

உயிர் வேறுண்டென்பதனை வலியுறுத்த எண்ணிக் கருவிகள் ஒடுங் கியவிடத்து உண்டி வினையில்லாமையைக் கூறியதோடு நில்லாது கருவி கள் ஒடுங்காதவிடத்து உண்டிவினை உண்மையை உடம்பாட்டு முகத்தா னும் ஓதினர். முன்னர் எதிர்மறையைக் கூறிப் பின்னர் அதற்கு எதிர் மறையாகிய உடம்பாடு கூறினமையால் எதிர்மறையே வலியுறுத்துமென்றத னோடு முரணுமை அறிக.

இவ்வதிகரணத்தால் சுழுத்தி துரியங்களில் நிகழும் இயல்புபற்றி உயி ருண்மை சாதிக்கப்பட்டது.

இவ்வதிகரணத்தில் பிராணவாயுவின் வேறாய் ஆன்மா உண்டென்பது தன்னாற் கூறப்படும் பொருள். உண்டோ இல்லையோ என்பது ஐயப்பாடு. இல்லையென்பது பிறர் கூறும் பக்கம். இவ்வாறு கூறுவோர் பிராணான்ம வாதிகள். இவரைமறுத்துப் பிராணவாயுவின் வேறாய் ஆன்மா உண்டெனச் சாதித்தவாறும்.

இரண்டாம் அதிகரண முதல் இவ்வைந்தாம் அதிகரணம்வரையும் மாயாகாரியங்கள் உயிரல்லவென்றமையால் முதலதிகரணத்து வெண்பாவிற் கூறிய சார்மாயை நீயல்லை என்றது வலியுறுத்தப்பட்டது.

ஐந்தாம் அதிகரணம் முற்றிற்று.

ஆறும் அதிகரணம்.

பிரமம் ஆன்மா அன்றெனக்கூறும்

மேற்கோள்.

இனி உணர்த்த வுணர்தலின் ஆன்மாவுளது என்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், பிரமப்பொருள் மேற் கூறிப்போந்த சடப்பொருள்கள்போலன்றிச் சித்தாகலான் அதுவே உயிராதலமையுமென விஞ்ஞானான்மவாதிகள் கூறுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தினாறுங் கூற்றைக்கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

(இ-ள்.) தொழிற்படுங் கருவிக ளொன்றுமின்றிக் கேவலமாய் அதீதாவத்தையினின்றுழி அறியுமாறின்றிப் பின்னர்க் கலைமுதலிய கருவிகளால் அறிவிக்க வறிந்து வருதலுண்மையின் எக்காலத்துந் திரிபின்றி யறிந்தாங்கறிந்துநிற்குஞ் சித்தாகிய பிரமத்திற்கு இது தகாமையான் அங்ஙன முணருமான்மா வேறுண்டு எ - று.

உணர்த்த வுணர்தலெனவே முன் னுணராது கிடத்தல் பெற்றாம்.

விளக்கம்.

இது சூத்திரத்திலுள்ள உணர்த்த உணர்தலின் என்ற ஏதுவையும் ஆன்மாவுளது என்னுந் துணி பொருளையும் சேர்த்துமேற் கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோ வெனின், பிரமப்பொருள் மேலே அதிகாரணங்களிற் கூறிய சடப்பொருள்போலன்றிச் சித்துப்பொருளாதலால் அப்பிரமமே உயிரென்று கூறுதல் பொருந்துமென விஞ்ஞானான்மவாதிகள் கூறுவர். இவர் கூற்றை ஆசங்கித்துச் சூத்திரத்தின் ஆறுங் கூற்றைப் பதச் சேதஞ் செய்து பிரமத்தின் வேறாய் ஆன்மா உளதெனக் கூறியவாறாம்.

(இம்மேற்கோளின் பொருள்.) கருவிகளில்லாத துரியாதீத மாகிய கேவலத்தில் அறியாமலும் சகலத்தில் கலை முதலிய கருவிகளைக்கொண்டு அறிவதுமாய் நிற்கும் உயிர் என்றும் ஒரு தன்மையாய்த் தானே அறிவ மமாகாது ஆதலின் உயிர் வேறு உண்டு எ—று.

சிவஞானபோதச்சிற்றுரைவிளக்கம்.

உணர்த்த உணர்தல் என்றுகூறியதனாலேயே கருவிகளோடு கூடுதற்கு முன் உணராது கிடத்தல் பெறப்படும்; ஆதலால், துரியாதீத அவத்தையில் நிற்குங்கால் அறியுமாறின்றி என உரை செய்யப்பட்டது.

இம்மேற்கோளின்பொருளை விளக்குவதாகிய நூலாசிரியர்

பொழிப்புரை.

அவனறிந்தாங் கறிவனேன்றறிவிக்க வறிந்து உபதேசியாய் நிற்பதுளதாகலின் அதுவே யவ்வான்மாவா மேன்றது.

சிற்றுரை.

எ-து பொ-ரை எ-னின், அறிந்தாங் கறிவதாகிய பிரமப் பொருள் அவிச்சைக்காலத்துக் கருவிகளோடுங் கூடியன்றி யறி யாதெனக் கோடுமாகலின் அதுபற்றி உயிர் வேறுண்டென்றல் பொருந்ாதென்னுங் கடாவை யாசங்கித்து 'அவ்வளவி னவன் மகிழுக' வென்னு நியாயத்தால் வேறு மதன் றுற்பரிய முணர்த்து தனுதலிற்று.

(இ-ள்.) கருவிகளோடு கூடியவழியுந் தன்னியல் புணருமா றில்லாத ஆன்மாவைப்போல அம்முதல்வன் மறந்துமறந் தறித லின்றி அறிந்தவாறே அறிந்துநிற்கும் பேரறிவுடையனென வேதாகமங்களா னறிவிக்க வறிந்து குரவனறிவுறுக்கு முபதேச மொழியைப் பெற்றுடையதாய்நிற்பதொன் றுளதாகலின் அதுவே மேலுரையளவையாற் சாதித்துப் போந்தஆன்மா வென்றவாறும். உணர்த்த வுணர்தலின் ஆன்மாவுளதென மேற்கொண்டது எ-று.

அறிந்தாங் கென்பது அப்பொருட்டாதல் "எண்ணியவெண் ணியாங் கெய்துப" என்பதனானு மறிக. இதற்குப் பிறவாறு முரைப்ப. அவையெல்லாம் பொருந்தாமை யோர்ந்துணர்க.

விளக்கம்.

இப்பொழிபபுரை என்ன சொல்லிற்றோ வெனின், அறிந்தவாறே அறிவதாகிய பிரமப்பொருள் அஞ்ஞானத்தோடு கூடியகாலத்தில் கலைமுத லிய தத்துவங்களைத் துணையாகக்கொண்டு வேறு வேறாய் அறியும். தத்துவங் களைக்கொண்டு அறிதலினாலேயே பிரமத்தின்வேறாய் உயிருண்டென்று கூறுதல் பொருந்ாது என்பார்வினாவை ஆசங்கித்து "அவ்வளவின் அவன் மகிழுக" என்னும் நியாயத்தால் உணர்த்த வுணர்தலின் என்றதன் தாற்பரி யம் வேறுவகையாகவுங் கூறியவாறும்.

(இப்பொழிப் புரையின் பொருள்.) உணர்த்த உணர்தலென்றதற்குக் கருவிகளோடு கூடியபொழுது அறிதலென்று மேற் கூறப்பட்டது. அவ் வாக்கியத்திற்கு வேறும் ஒரு பொருள் வருமாறு :—கருவிகளோடு கூடிய விடத்தும் விடயங்களை அறிவதே யன்றித் தன்னையும் முதல்வனையும் அறி வதில்லை. முதல்வன் பேரறிவுடைய னெனவும் தான் அடிமையெனவும் வேதாகமங்களால் அறிவிக்க அறிந்து அறிந்தவாறே அனுபவமுண்டாகும் பொருட்டு ஆசிரியன் உபதேச மொழியைப் பெறுவதாய் நிற்பது காணப் படுதலால் அதுமுதல்வ னாகமாட்டாது. அவ்வாறு நிற்பதும் முதல்வனே யெனின், அறியாமையிற் கட்டுப்பட்டுத் தன்னை யறியாது பின்னர் அறி விக்க அறியுந்தன்மையுடைய பொருளுக்கு முதன்மை எவ்வாறு சித்திக்கும், அன்றியும், அறியாமையை எதற்காகப் பொருந்திற்று; அநாதியே பொருந் திற்றெனின், அவ்வாறாயினும் முதன்மை சித்திக்காது. இடைப்பட்ட காலத் தில் விளையாட்டாகப் பொருந்திற் றெனின், நீங்கினபின்னரும் பொருந்து மாதலால் நீங்குதற்கு முயலவேண்டுவதில்லை. ஆதலால் அறிவிக்க அறியுந் தன்மை யுடைய அதுவே இரண்டாஞ் சூத்திரத்தில் ஆகமப்பிரமாணத்தால் அவையே யெனக்கூறிய உயிராம் எ-று.

பொழிப்புரையில் அறிந்தாங்கு என்பதற்கு அறிந்தவாறே எனப் பொருள் கூறப்பட்டது. இதனைத் திருக்குறள் வினைத் திட்பம் என்னும் அதிகாரத்தில் "எண்ணிய வெண்ணியாங் கெய்துப" என்பதனானும் அறிக. குறளில் எண்ணியாங்கு என்பதற்கு எண்ணியவாறே என்பது பொருள். அறிந்தாங்கு என்பதற்கு வேறுவிதங்களாகவுங் கூறுவர், அவை யெல்லாம் பொருந்தாமை யோர்ந்துணர்க.

பிரமத்தின் வேறாய் ஆன்மா உண்டென்பதற்குக் காட்டும்

உதாரணம்.

அறிந்து மறிவதே யாயு மறியா
தறிந்ததையும் விட்டங் கடங்கி—யறிந்த
தேதுவறிவு மன்றுகு மேய்கண்டா னென்றி
னதுவதுதா னென்னு மகம்.

சிற்றுரை.

எ—து உ-ம் எ—னின். கருவிகளோடு கூடியவழியும் அவிச்சை நீங்காமையின் விடயங்கண் மாத்திரையே யறியுமன்றித் தன்னியல் பறியுமாறில்லை. அஃதுபதேசத்தாலறியற்பாலதேயா மாகலான் அதுபற்றி இழுக்கென்னை யென்னுங் கடாவை யாசங்கித்து அத னையும் மேற்கூறிய நியாயத்தா னுடம்பட்டு இன்னுமொரு தாற்

பரிய முரைக்கு முகத்தானே விடயங்களை யறிவுழியும்படும் வேறு பாடு கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

அவனறிந்தாங் கறியுமாறும் உயிர் மறந்துமறந் தறியுமாறும் தெரித்துணர்த்தி வலியுறுத்துதனுதலிற்று எனினுமமையும்.

(இ-ள்.) அறிந்தும் அறிவது ஆயும் அறியாது—(கருவிக ளெல்லாவற்றோடுங் கூடிச் சாக்கிரத்தானத்தி னின்று விடயங் களை யறியுமிடத்தும் ஒருங்கேயறியமாட்டாது) ஒன்றனையேயறிந் தும் ஒன்றனை யறியப் புகுவதாயு முன்னறிந்த தொன்றனை அறி யாதொழிந்தும்,—அறிந்ததையும் விட்டு அங்கு அடங்கி—(இங்ங னமொரோ வொன்றாக) அறியப் பட்ட விடயத்தையும் (இடையீ டின்றி அறியமாட்டாது) விட்டு விட்டாங்கே ஐந்தவத்தைப் பட் டடங்கி,—அறிந்தது எது—(மீள வறிந்து வருதல்கண் கூடாகக் காணப்படுதலான்) அங்ஙன மறிந்துவந்த பொருள் யாது அது (சட மன்றென்பதுமேற் காட்டப்பட்டது முன்னருங் காட்டப்படும்),— அறிவும் அன்று—(ஒன்றாக இயல்பாக வுணர்தலே பேரறிவாக லின்) அதுவுமன்றாம்,—மெய் கண்டான் ஒன்றின்—இனி மெய்யா கிய சித்தாந்த நெறியினை யுணர்ந்தோன் வேறென்னையோ வென மன மொருங்கியாராயு மாயின்,—அது அதுதான் என்னும் அகம் ஆகும்—(காட்டு மொளிக்கு வேறாய கண்ணொளிபோல அவ்வறி விற்கு வேறாய்) அதுவதுவே தானெனச் சார்ந்ததன் வண்ணமாய் நின்றறியு மியல்பையுடைய உயிராம் எ-று.

அறிந்தும் அறிவதே யாயும் என்னும் உம்மைகள் எண்ணின் கண் வந்தன. அறியாது மென்னு மெண்ணும்மை விகாரத்தாற் றொக்கது. அறிந்ததையு மென்னு மும்மை இழிவு சிறப்பு. அறிவு மென்னு மும்மை இறந்ததுதழீஇயது. ஏகாரம் அசைநிலை.

அங்கு உணர்த்து முறைமைத் தானமாகிய இலாடத்தினென் றவாறு.

அறிந்ததையும் விட்டங் கடங்கி யறியுமாறு வருகின்ற சூத்தி ரத்திறுதியினும், அதுவது தானெனச் சார்ந்ததன் வண்ணமாமாறு உண்மை யதிகாரத்தும் பெறப்படும்.

அறிந்து மறிவதே யாயு மறியா தறிந்ததையும் விட்டங் கடங்கி யறிந்த தெது என்பதற்கு ஓதியதனை ஓதியபொழுதே

யுணர்ந்தும் பலகாலோதி யுணர்வதாயும் பலகாலோதியு முணர்த வின்றியும் உணர்ந்ததனையும் பின்னர் மறந்தொழிந்தும் இவ்வா றோருதி யுணர்ந்ததியாதென் றுரைத்தலு மொன்று. இப்பொருட்கு அடங்கி யென்புழியும் எண்ணும்மை விரித்துரைக்க.

இங்ஙனம் மூவகைப் படுத்துரைப்பவே, உணர்த்த வுணர்த லென்னு மேதுவான் முறையே அதீதத்தின்க ணிகழு மியல்பு பற்றியும் சுத்தத்தின்க ணிகழு மியல்பு பற்றியும் உணர்த்து முறை மைக்க ணிகழு மியல்பு பற்றியும் உயிருண்மை சாதிக்கப்பட்டது. இது 'தற்பரமு மல்லை' யென்றதனை வலியுறுத்தியவாறு காண்க.

விஞ்ஞானமே ஆன்மா வென்னும் புத்தரின் யோகாசாரன் மதத்தை மறுத்தற் கெழுந்தது இவ்வதிகரண மெனக் கொண்டு அதற்கியைய வுரைப்பாரு முளர்.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) அறிந்தும் அறிவது ஆயும் அறியாது அறிந்ததை யும் விட்டு அங்கு அடங்கி அறிந்தது எது அறிவும் அன்று மெய்கண்டான் ஒன்றின் அது அது தான் என்னும் அகம் ஆகும்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோ வெனின், பிரமப்பொருள் கருவிகளோடு கூடிய விடத்தும் அஞ்ஞானம் நீங்காமையால் விடயங்களை மட்டும் அறிந்து தன்னை அறியாமல் பின்னர் உபதேசத்தால் தன்னை அறியும் ஆதலால், தன்னை யறியாமை குற்றமாகாது என்னும் வினவை ஆசங்கித்து மேற்கூறிய "அவ்வளவினவன் மகிழுக" என்னு நியாயத்தால் தன்னை யறியாமையோடு கூட உணர்த்த வுணர்த லென்றதற்கு இன்னும் ஒரு சாற் பரியங் கூறு முறையில் விடயங்களை அறியுங்காலத்தும் உண்டாம் வேறு பாடு கூறிப் பிரமத்தின் வேறாய் ஆன்மா உண்டென வலியுறுத்தியவாறும்.

இவ்வாறன்றி அவனறிந்தவாறே அறியும் முறைமையினையும் உயிர் மறந்து மறந்தறியும் முறைமையினையும் விளக்கிக்காட்டிப் பிரமத்தின் வேறாய் உயிர் உண்டென வலியுறுத்திற்று இவ்வுதாரணம் என்று கூறினும் பொருந்தும்.

(பொ-ரை.) கருவிகளெல்லாவற்றோடுங் கூடிச் சாக்கிரத்தானமாகிய புருவ நடுவில் நின்று விடயங்களை அறியுமிடத்தும் எல்லா விடயங்களையும் ஒரு சேர அறியமாட்டாது; ஒன்றனையே அறியும். அறியுங்கால் பிறிதொன் றனை அறியச் செல்லும்; செல்லுங்கால் முன்னறிந்து வந்ததை அறியா தொழியும். இவ்வாறு ஒவ்வொன்றாக அறியப்பட்ட விடயத்தையும் விடாம லறிவதில்லை. விட்டுவிட்டு அறியும். அதாவது, சாக்கிரம் சொப்பனம்

சுழுத்தி துரியம் துரியாதீதமென்னும் ஐந்தவத்தைப்பட்டு ஒரு அவத்தை யில் அறிந்ததைப் பிறிதொரு அவத்தையில் அறியாது அடங்கி, மீளத் துரி யாதீதத்தில் நின்று முறையே வெளிவந்து அறியும். இவ்வாறு அறியு மென்பது பிரத்தியட்சமாதலால் அவ்வாறு அறிந்துவந்த பொருள் யாதோ அது சடமன் றென்பது மேல் இரண்டாம் அதிகாணக்தொடங்கிக் காட்டப் பட்டது. இன்னும் வருகின்ற ஏழாமதிகரணத்துங் காட்டப்படும். பேரறி வாகிய பிரமப்பொருளே அவ்வாறு அறியுமென்று கூறில், அப்பொருள் எல்லாவற்றையும் ஒரு சேரத்தானுக அறியுந் தன்மையுடையது. ஆதலால் அதுவும் அன்றாம். இனி மெய்யாகிய சித்தாந்த நெறியினை உணர்ந்தோன் அவ்வாறு அறியும் பொருள் வேறென்னையோ என மனம்ஒடுங்கி ஆராயு மாயின், ஒரு பொருளைக் கண் காணுங்கால் சூரியன் ஒளிகாட்டக் காணும். அவ்வாறு காண்பது காட்டுகின்ற சூரியனொளிக்குவேருய கண்ணொளியே யாம். அதுபோலப் பேரறிவாகிய பிரமப் பொருளிற்கு வேருய்ச் சார்ந்த பொருளின்வண்ணமாய் நின்று அறியும் இயல்புடைய உயிரே அப்பொரு ளாம் என்பது நன்கு விளங்கும். எ—று.

(க - ரை.) கருவிகளோடு கூடி விடயங்களை அறியுங்காலத்தும் ஒன்ற னையே அறிந்தும், அதனையும் விட்டு விட் டறிந்தும் வருதல் பிரத்தியட்ச மாதலால் அவ்வாறு அறியும் பொருள் சடமுமன்று; கருவிகளோடு கூடாது தானுக ஒருசேர அறியும் பிரமப்பொருளுமன்று, ஆதலின் பிரமத்தின் வேருய் உயிர் உண்டு என்பதாம்.

அறிந்தும் அறிவதேயாயும் என்றதிலுள்ள உம்மைகள் அறிந்ததையும் அறிவதையும் எண்ணக்கிடத்தலின் எண்ணின்கண் வந்தன. அறியாது என்றதில் எண்ணும்மை விகாரத்தாற் ருெக்கது. ஆதலால் அறியாதொ ழிந்தும் என உரை செய்யப்பட்டது. அறிந்ததையும் என்றதிலுள்ள உம்மை ஒரோவொன்ருக அறியும் விடயத்தின் இழிவைக்குறித்து நிற்ற லால் இழிவு சிறப்பு. அறிவும் அன்று என்பதிலுள்ள உம்மை சடமுமன்று என மேற்கூறியதைத் தழுவி நிற்றலால் இறந்தது தழுவியது. அறிவதே என்றதிலுள்ள வகாரம் அலசை.

விட்டு விட்டு அங்கு அடங்கி என்றதிலுள்ள அங்கு என்பது சாக் கிரத்தில் உணர்த்து முறைமைத் தானமாகிய இலாடத்தைக் குறித்து நின் றது. உரையில் சாக்கிராதி ஐந்தவத்தை யென்றது சாக்கிரத்தில் நிகழும் ஐந்தவத்தையினையேயாம்.

அறிந்ததையும் விட்டு அங்கடங்கி அறியு முறைமை, வருகின்ற நான் காஞ் சூத்திரத்து இறுதியினும், அதுவதுதானெனச் சார்ந்ததன்வண்ண மாம் முறைமை உண்மையதிகாரம் ஏழாஞ் சூத்திரத்தினும் பெறப்படும். ஆதலால் இவ்விடத்து அவற்றை விரிக்கவில்லை.

அறிந்தும் அறிவதேயாயும் அறியாதும் அறிந்ததையும் விட்டு அங் சடங்கி அறிந்ததெது என்பதற்கு, விடயங்களின்மேல் வைத்து மேற்கூறிய வாறன்றி வேறும் ஒரு பொருள் கூறப்படும். அதாவது ஓதியதனை ஓதிய பொழுதே உணர்ந்தும் பலகால் ஓதி உணர்வதாயும் பலகால் ஓதியும் உணர் தலின்றியும் உணர்ந்ததனையும் பின்னர் மறந்தொழிந்தும் இவ்வாறு ஓதி யுணர்ந்தது யாது என்பதாம். இப்பொருள் கொள்ளின் அடங்கி யென் னுமிடத்தும் எண்ணும்மை விரித்து அடங்கியு மென்றுரைக்க.

இவ்வாறு உணர்த்த உணர்தலின் என்றதற்குக் கலைமுதலிய கருவிக ளால் அறிவிக்க அறிதலென்றும், சருவிகளோடு கூடியவழியும் பிரமப் பொருளை வேதாகமங்களினாலும் ஆசிரியனாலும் அறிவிக்க அறிதலென்றும், கருவிகளோடு கூடியறியும் சாக்கிரத்தின்கண்ணும் விடயத்தை ஒவ்வொன் றாகவும் விட்டுவிட்டும் அறிதலென்றும் மூவகையாக உரை கூறப்பட்டது; படவே, கலைமுதலிய கருவிகளால் அறியும் என்பதனால் அக்கருவிகளோடு கூடாத துரியாதீத நிலையில் அறிவு நிகழாமைபற்றியும், பிரமப்பொருளை உணர்த்த உணர்தலென்பதனால் உயிர் பிரமப்பொருளை அடைதற்கு முயலு கின்ற சுத்தாவத்தையில் உணர்வுநிகழும் இயல்புபற்றியும், சாக்கிரத்திலும் ஒவ்வொன்றாக விட்டு விட்டு அறியும் என்பதனால் உணர்த்து முறைமை யினும் ஒவ்வொன்றாகஉணர்த்த உணர்வு நிகழும் இயல்புபற்றியும், இத்தன் மைகளில்லாத பிரமத்தின் வேறாய் உயிருண்டென்று சாதிக்கப்பட்டது.

இவ்வதிகரணம் பிரமம் ஆன்மாவன்று என்றமையால் முதலதிகா ணத்து வெண்பாவில் தற்பரமுமல்லை என்றது வலியுறுத்தியவாறு காண்க.

இவ்வதிகரணம் விஞ்ஞானமே ஆன்மாவென்னும் புத்தரின் யோகா சாரமதத்தை மறுத்தற்கு எழுந்ததாகக் கொண்டு அம்மதத்திற் கேற்றவாறு உரைப்பாரும் உளர்.

இனி, பிரமமே ஆன்மாவென்னும் ஏகான்மவாதிகள் : ணர்த்த உணர் தலின் என்ற ஏது அஞ்ஞானமே ஆன்மாவென்பாரை மறுத்தற்கு எழுந்த தென்பர். அவ்வாறாயின், உணர்தலின் என்றலே போதும் என்பதும், உணர்த்த உணர்தலென்றது மிகையென்பதும், அஞ்ஞானத்திற்கு அறி யுந்தன்மை யின்மையால் அக்கூற்றுப்பொருந்தாதென்பதும் அவர் அறிந்தி லர். ஆதலின் அது பொருந்தாது.

இவ்வதிகரணத்தில் பிரமத்தின் வேறாய் ஆன்மா உண்டென்பது தன் னாற் கூறப்படும் பொருள் உண்டோ இல்லையோ என்பது ஐயப்பாடு. இல்லை யென்பது பிறர்பக்கம். இவ்வாறு கூறுவோர் விஞ்ஞான ஆன்மவாதிகள். இவரை மறுத்துப் பிரமத்தின் வேறாய் ஆன்மா வுண்டெனச் சாதித்தவாறும்.

ஆறும் அதிகரணம் முற்றிற்று.

ஏழாம் அதிகரணம்.

சமுதாயத்தின் வேறாய் உயிருண்டெனக் கூறும்
மேற்கோள்.

இனி மாயாவியந்திர தனுவினுள் ஆன்மா வுளதென்றது.

சிற்றுரை.

எ-து மேல் எ-னின், உடம்பு முதலியவற்றுள் ஒரோ வொன்றே ஆன்மாவாதல் இன்றென்றதொக்கும், அவற்றுள் ஒன்று குறைந்த வழியும் அறிவு நிகழாமையானும் எல்லாங்கூடிய வழி அது நிகழ்தலானும் அனைத்துங்கூடிய சமுதாயமே உயிராதல மையுமெனச் சமுகான்மவாதிகளாகிய சௌத்திராந்திகர் வைபாடி கர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தினிறுதிக் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட ணுதலிற்று.

(இ-ள்.) மாயாகாரியங்களான் யாக்கப்பட்டியன்ற சூத்திரப் பாவைபோலு முடம்பின்கண்ணே அவற்றிற்கு வேறாய் ஆன்மா வுண்டு எ-று.

எனவே அவையெல்லாம் மாயையின் காரியங்களாய் நிலை பெறுதனவாகலின் நிலைபேறுடைய உயிராகா வென்றவாறாயிற்று.

மாயை ஆகுபெயர். இகரம் விரித்தல் விகாரம்.

விளக்கம்.

இது சூத்திரத்திலுள்ள இறுதிக்கூற்றை மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றேவெனின், உடம்பு இந்திரியம் சூக்குமதேகம் பிராணவாயு ஆகிய இவற்றுள் ஒவ்வொன்றே ஆன்மா வென்றல் பொருந்தாதென்று கூறியது பொருந்தும், அவற்றுள் ஒன்று குறைந்த விடத்தும் அறிவு நிகழாமையானும், அவையெல்லாங் கூடியவிடத்து அறிவு நிகழ்தலானும், அவையனைத்துங் கூடிய சமுதாயமே உயிரென்றல் பொரு ந்துமெனச் சமுகான்மவாதிகளாகிய சவுத்திராந்திகர் வைபாடிகர் கூறுங் கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் இறுதிக்கூற்றைப் பரச்சேதஞ்செய்து சமுதாயத்தின் வேறாய் உயிருண்டெனக் கூறியவாறாம்.

பிரமாணவியல்மூன்றுஞ்சூத்திரம். ஏ-ம் அதி:

இவ்வதிகரணத்தில் சமூதாயத்தின் வேறாய் ஆன்மா உண்டோ இல்லையோ என்பது ஐயப்பாடு. இல்லை யென்பது பிறர்பக்கம். இவ்வாறு கூறுவோர் சவுத்திராந்திகரும் வைபாடிகரும் என அறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) மாயையின் காரியங்களாகிய தத்துவங்ளாற் கட்டப்பட்டுப் பொருந்திய சூத்திரப்பாவைபோன்ற உடம்பின்கண்ணே அத்தத்துவங்களின் வேறாய் ஆன்மா உண்டு. எ-று.

இவ்வாறு கூறியதனுல் உடம்பு ஐம்பொறி முதலியன எல்லாம் மாயையின் காரியங்களாய் நிலைபேறின்றித் தோன்றி யழிவனவாம். ஆதலால் அவை நிலைபேறுடையதாய்த் தோன்றியழியாததாயுள்ள உயிராகா என்றவாறாயிற்று.

மாயை யென்பது மாயையின் காரியங்களைக்குறித்து நிற்றலால் ஆகு பெயர்.

மாயா வென்பதும் யந்திரமென்பதும் வடமொழியாதலால், மாயாயந்திரமெனவே கூறலாம். விரித்தல் விகாரத்தால் இகரத்தை விரித்து மாயா இயந்திரம் என்றார், "ரவ்விற் கம்முத லாமுக் குறிலும், லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற், கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே" என்பது இலக்கணமாதலின்.

சமுதாயத்தின் வேறாய் உயிர் உண்டென்பதற்குக் காட்டும்

ஏது.

அவைதாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலான்.

சிற்றுரை.

எ-து ஏது எ-னின், சித்தமுஞ் சித்தப்பகுதியுமாகிய அகச் சமூதாயமைந்தும் மாயாகாரியமென்பது எம்மனோர்க்கு உடம்பாடன்மையின் அதுபற்றி ஆன்மா வேறுண்டெனச் சாதித்தலமையுமாறென்னை யென்னுங் கடாவை யாசங்கித்து 'அவ்வளவி னவன் மகிழுக' வென்னு நியாயம்பற்றி வேறுமோராற்றாற் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) நீ ஐந்து கந்தமெனக்கொண்ட மாயாகாரியங்கள் ஆன்மாவெனப் பெயர் பெறுமாறின்றி வேறுவேறு பெயர்பெற்று நிற்பனவாகலான் மாயா வியந்திரதனுவினுள் ஆன்மா வுளதென மேற்கொண்டது. எ-று.

வேறு வேறு என்பது வெவ்வேறெனமரீஇயிற்று.

சிவஞானபோதச்சிற்றுரைவிளக்கம்.

விளக்கம்.

இந்த ஏது மாயா இயந்திரதனுவென்றதில் குறிப்பாய் நின்றமையால் விரித்துரைக்கப்பட்டது.

இந்த ஏது என்ன சொல்விற்றோவெனின், சித்தமும் சித்தப்பகுதியுமாகிய அகச்சமுதாயம் ஐந்தும் மாயாகாரியம் என்பது எம்மனோர்க்கு உடம்பாடில்லாமையால், சமுதாயமென்றதுகொண்டு அதற்கு வேறாய் ஆன்மாவுண்டென்றல் பொருந்தாதென்று மேற்கூறிய சௌத்திராந்திகர் முதலியோர் கூறும் வினவை ஆசங்கித்த 'அவ்வளவினவன் மகிழுக' என்னும் நியாயத்தால் சமுதாயத்திற்கு மாயாகாரியமென மேற்கூறிய பொருளேயன்றி வேறும் ஓர் பொருள்கூறி ஆன்மா வேறுண்டெனச் சாதித்தவாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) சித்தமும் சித்தப்பகுதியுமாகிய ஐந்து கந்தமும் மாயாகாரியங்களேயாகும். அல்லவாயினும் அவை ஆன்மாவெனப் பெயர் பெறுமாறின்றி வேறு வேறு பெயர்பெற்று நிற்பனவாகலான் அவை ஆன்மா வல்ல. ஆதலால், மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா வுளதென மேற்கோள் கூறியது. எ - று.

ஐந்துகந்தங்களாவன:— உருவம் வேதனை ஞானம் குறி வாதனை என்பனவாம்.

ஏதுவில் வேறு வேறு என்றிருக்க வேண்டுவது வெவ்வேறென மருவி நின்றது.

இந்த ஏது சமுதாயத்தின் வேறாய் ஆன்மா இல்லை யென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

சமுதாயம் ஆன்மா வல்ல வென்பதற்குக் காட்டும்
உதாரணம்.

கலையாதி மண்ணந்தங் காணிலவை மாயை
நிலையாவாந் தீபமே போல—வலையாமன்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடி 'லதுதனுவாந்
தானத்தின் வேருகுந் தான்.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், அவை தனித்தனி வெவ்வேறு பெயர் பெறினுந் தொக்க சமுதாயத்தின்கண் ஆன்மா வெனப் பெயர் பெறு மெனக் கோடுமாகலின் அதுபற்றி யிழுக்கென்னை யென்னுங் கடாவை யாசங்கித்து அவை வெவ்வேறுபெயர் பெறும்வழியும் அவர் கூறியவாறு பெயர் பெறுதது வேறு பெயர் பெறுமாறும்,

அவை மாயாகாரியங்களே யாமாறும், அவை தொக்க சமுதாயத்தினும் ஆன்மாவெனப் பெயர் பெறாது வேறு பெயர் பெறு மாறு முணர்த்தி அதனை வலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்.) காலிற் கலை ஆதி மண் அந்தம் (ஆம்)—(அங்ஙனஞ் சமுதாயமாதற் குரியவை யாவை யென்று) அளவைகளா னறியப் புகிற் கலைமுதலில மீறாகிய தத்துவங்களேயாம்,—அவை மாயை நிலையாவாம்—அவையனைத்தும் மாயையின் காரியங்க ளாகலின் நிலையுதலின்றிச் சிலகால நின்றழிவனவாம்,—ஞானத்தை அலையாமல் முன் உணர்ந்து நாடில்—(அவை தொக்க சமுதாயத்தின் விளங்கித் தோன்றுவதாய) ஞானத்தினியல்பை அசையாமற்(கருத்தைபொருக்கி) முன்னுணர்ந்து (பின் அச்சமுதாயத்தை) யாதென் றாராயின்,—அது தீபமேபோலத் தனுவாம்—அச்சமுதாயங் (கண்ணுக்கு) விளக்குப்போல (உயிர்க்குத் தூல சூக்கும பரங்களாகிய) உடம்பாம்.—தான் அத்தின்வேறு ஆகும்—(ஆதலாற் கண் விளக்கின் வேறாயினாற் போல) உயிர் அவ்வுடம்பின் வேறாம் எ-று.

ஆமென்பது மேலுஞ் சென்றியையும்.

மாயை ஆகுபெயர்.

தானென்பது முன்னையது எழுவாய்; பின்னையது அசை.

அதனி னென்பது அத்தினென மரீஇயிற்று, "இத்தைமெய் யெனக் கருதி" என்புழிப் போல.

இதனானே தனி யென்றதனை வலியுறுத்தவாறு.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) காணிற் கலை ஆதி மண் அந்தம் (ஆம்) அவை மாயை நிலையாவாம் ஞானத்தை அலையாமல் முன் உணர்ந்து நாடில் அது தீபமே போலத் தனுவாம் தான் அத்தின் வேறு ஆகும்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், அகச்சமுதாயமாகிய பஞ்சகந்தங்கள் தனித்தனி வெவ்வேறு பெயர் பெறினும் அவை யாவுங் கூடிய சமுதாயத்தின்கண் ஆன்மாவெனப் பெயர் பெறுமென்று கொள்வேமாதலான், தனித்தனி வெவ்வேறு பெயர்பெறுதல் பற்றி இழுக்கில்லை யெனக்கூறுவார். அதனை ஆசங்கித்து அவை வெவ்வேறு பெயர்பெறுமிடத்தும் அவர்கூறியவாறு உருவமுதலியபெயர் பெறாது வேறுபெயர் பெறுமென் பதையும், அவை மாயாகாரியங்களே யென்பதையும், அவையாவுங் கூடிய

சமுதாயத்தினும் ஆன்மா வெனப் பெயர் பெறாது வேறுபெயர் பெறுமென் பதையும் உணர்த்திச் சமுதாயத்தின் வேறாய் ஆன்மா உண்டென்பதை வலியுறுத்திய வாறும்.

(பொ-ரை.) மேற் கூறியவாறு சமுதாய மாதற்கு உரியவை யாவை யென்று பிரமாணங்களால் அறியுமிடத்துக் கலாதத்துவமுதல் பிருதிவிதத்து வம் முடிவாகிய தத்துவங்களேயாம். அவை யனைத்தும் மாயையின் காரியங்க ளாதலால் நிலைத்திருப்பதின்றிச் சிலகாலம் நின்று அழிவனவாம். அவை யாவுங் கூடிய சமுதாயத்தில் விளங்கித் தோன்றுவதாய ஞானத்தின் இயல் பை மனதை ஒடுக்கி அசையாமல் முன் உணரின் அதுகருவி ஞானமேயாம். பின் அக் கூட்டத்தை யாதென்று ஆராயின் அக்கூட்டம், கண்ணுக்குவிளக் குக் கருவியாதல்போல உயிருக்குத் தூல சூக்கும காரணமென்னும் உடம் பாகிய கருவியாம். ஆதலால் கண் விளக்கின் வேறாயினாற்போல உயிர் அவ் வுடம்பின் வேறாம் எ—று.

(க-ரை.) சமுதாயம் உடம்பெனப் பெயர் பெறுதலே யன்றி ஆன்மா வெனப் பெயர்பெறுதலில்லை யாதலானும் அவ்வுடம்பு உயிருக்கு அறிதற் றொழில் நிகழ்தற்குக் கருவியாதலானும் சமுதாயத்தின் வேறாய் ஆன்மா உண்டு என்பதாம்.

நிலையாவாம் என்றதிலுள்ள ஆம் என்பது அந்தம் என்பதனோடுஞ் சென்று பொருந்தும். ஆதலால் அந்தம் ஆம் என உரை செய்யப்பட்டது.

மாயை யென்பது மாயையின் காரியங்களைக் குறித்தலால் ஆகுபெயர்.

தான் அத்தின் வேறுகுந்தான் என்பதில் முன்னுள்ளதான் உயிரைக் குறித்து நின்ற எழுவாய்; பின்னுள்ளதான் அசை. அதனின் என்பது அத் தின் என மருவி நின்றது. இதனை "இத்தை மெய்யெனக் கருதி" யென் னுந் திருவாசகச் செய்யுளானும் அறிக. திருவாசகத்தில் இதனை யென்பது இத்தையென மருவி நின்றது.

இவ்வதிகரணம் சமுதாயம் ஆன்மா வல்ல வென்றமையால் முதலதி கரணத்து வெண்பாவில் தனியென்றது வலியுறுத்தப்பட்டது.

இம் மூன்றுஞ் சூத்திரத்தினும் அதிகரணங்களினுங் கூறியதொ கைப் பொருள் :—மேல் இரண்டாஞ் சூத்திரத்தில் அவையே என்று ஆக மப் பிரமாணத்தால் எடுத்துக் கொண்ட உயிரானது அநுமானப் பிரமாணத் தால் சூனியம் உடல் இந்திரியம் சூக்குமதேகம் பிராணன் பிரமம் சமுதா யம் என்னும் இவற்றின் வேறு எனச் சூத்திரத்தாற் கூறப்பட்டது. படவே, உடல் முதலியவற்றை இதுவன்று இதுவன்று என்று நீக்கியவிடத்து அவற் றின் வேறாய் ஒன்றுங் காணாமையால் சூனியமே ஆன்மாவென்று சூனியான் மவாதிகள் கூற, முதலதிகரணத்தால் அவரை மறுத்துச் சூனியம் வன்று அறியும் அறிவு ஒன்றுண்டாதலால் அவ்வறிவே ஆன்மாவெனச் சாதிக்கப்

பட்டது. படவே, அவ்வறிவு உடம்பின் வேறாய் நிகழாமையால் உடம்பே ஆன்மாவெனத் தேகான்மவாதிகள் கூற, இரண்டாம் அதிகரணத்தால் அவரை மறுத்து என் உடல் எனக்கூறும் அநுபவத்தால் உடம்பின்வேறாய் என் என்னுஞ் சொல்லிற்குரிய பொருளாகிய ஆன்மா உண்டெனச் சாதிக்கப்பட்டது. படவே, ஐம்பொறிகள் உடல்போற் சடமின்றி அறியுந் தன்மையுடையன ஆதலானும், அந்த ஐம்பொறிகளை எனதென்று கூறுதல் பெரும்பான்மையன்றாகலானும், அவ்வைம் பொறிகளே உயிரென இந்திரியான்மவாதிகள் கூற, மூன்றாம் அதிகரணத்தால் அவரைமறுத்து ஐம்பொறிகளும் ஒன்று அறிந்ததைப் பிறி தொன்று அறியாமையானும், ஒன்றையும் அறிவதேயன்றி அறிந்தேனென்று உணராமையானும், ஐந்து இந்திரியங்களையுங் கொண்டு ஐந்து விடயங்களையும் அறிந்து அறிந்தேன் என உணர்வது இந்திரியங்களின்வேறான உயிரெனச் சாதிக்கப்பட்டது. படவே, இந்திரியங்கள் ஒடுங்கின சொப்பனத்தானத்தில்அறிவு நிகழ்தலால் சூக்கும உடம்பே உயிரெனச் சூக்குமதேகான்மவாதிகள் கூற, நான்காம் அதிகரணத்தால் அவரைமறுத்து அச்சூக்குமதேகம் சாக்கிரத்தின்கண்ணும் இருத்தலால் சொப்பனத்திற் கண்டவற்றைச் சாக்கிரத்தில் மயங்கி யறியவேண்டாம்; மயங்கி யறிதல் காணப்படுகின்றமையால் சில கருவிகளைவிட்டுச் சூக்குமதேகமாய் நின்று அறிந்ததை, விட்ட கருவிகளோடு மீட்டுங் கூடிச் சாக்கிரத்தில்வந்து மயங்கி யறிவது ஒன்றிருத்தலால் அது சூக்கும தேகத்தின் வேறான உயிரெனச் சாதிக்கப்பட்டது. படவே, சொப்பனமுமில்லாத சுழுத்தி துரியங்களினும் பிராணவாயு இயங்கிக்கொண்டிருத்தலானும், சுழுத்தியில் சுகானுபவம் இருத்தலானும், பிராணவாயுவே உயிரெனப் பிராணான்மவாதிகள் கூற, ஐந்தாம் அதிகரணத்தால் அவரை மறுத்துச் சாக்கிரத்தில் இருந்ததுபோலவே சுழுத்தி துரியங்களினும் பிராணவாயு இயங்கிக்கொண்டிருந்தும் சாக்கிரத்திற்போலச் சுழுத்தி துரியங்களில் இன்பத்துன்ப அனுபவமும் உடம்பு தொழிற்படுதலும் இல்லாமையால், கருவிகளை ஒடுக்கிய பொழுது அனுபவமுந் தொழிலும் இலவாதலும் ஒடுக்கிய கருவிகளோடு மீளக் கூடும்போது அவை உளவாதலும் உண்டாமாதலால் அவ்வாறு நிற்பது பிராணவாயுவின் வேறான உயிரெனச் சாதிக்கப்பட்டது. படவே, பிரமப்பொருள் உடல்முதலியனபோலச் சடமாதலின்றி அறிவுடைய பொருளாதலால் பிரமமே உயிரென்றல் பொருந்துமென விஞ்ஞானான்மவாதிகள் கூற, ஆறாமதிகரணத்தால் அவரை மறுத்துக் கருவிகளோடு கூடி அறிவதாலும், அவ்வாறு அறியுங்காலத்தும் தன்னியல்பை வேதாகமங்களினாலும் ஆசிரியன் உபதேசத்தினாலும் அறிவதாலும், கருவிகளோடு கூடிய சாக்கிரத்தினின்று அறியுமிடத்தும் ஒருசேர அறிவதின்றி ஒன்றனையே அறிவதாலும், அவ்வொன்றனையும் விட்டு விட்டு அறிவதாலும், கருவிகளோடு கூடாமல் எவற்றையும் ஒருசேர் அறிந்தவாறே அறியும் பிரமத்தின்வேறாய் உயிர் உண்டெனச் சாதிக்கப்பட்டது. படவே, உடம்பு முதலியவற்றுள் ஒன்று

குறையினும் அறிவு நிகழாமையால் அனைத்துங் கூடிய சமுதாயமே உயிரெனச் சமூகான்மவாதிகள் கூற, ஏழாம் அதிகரணத்தால் அவரை மறுத்து அச்சமுதாயத்திற்குத் தனித்தனி பெயரிருத்தலானும், அனைத்துங் கூடிய கூட்டத்திற்கு ஆன்மாவென்னும் பெயரில்லாமல் உடம்பென்னும் பெயரிருத்தலானும், அது உயிருக்குக் கருவியாதலானும், சமுதாயத்தின் வேறாய் ஆன்மா உண்டெனச் சாதித்தவாறும்.

சிற்றுரை.

இவ்வாறு மூன்று சூத்திரத்தானும் சைவாகமங்களுட் கூறப்படும் பதிமுதலிய பொருள்களதுண்மை அநுமான வளவையான் வலியுறுத்தப்பட்டது. ஆகம வளவையே யமையுமாகலின் அனுமானவளவை மிகையாம்போலு மெனின், ஆகாது; மந்தவுணர்வுடைய மாணுக்கர்க்கு வேற்றுச் சமயநூல்களை நோக்கிய வழிச் சைவாகமப் பொருளின் மலைவு நிகழாமைப்பொருட்டும் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை யென்னு நான்கு வகையானன்றி ஆகமங்களைக் கேட்ட துணையானே அநுபவங் கூடாமையிற் சிந்தனை செய்து வன்மை மென்மைகளை உணர்ந்துதெளிந்து கோடற் பொருட்டும் கருதலளவையும் வேண்டப்படு மாகலா னென்க.

விளக்கம்.

இவ்வாறு முதற்சூத்திரந்தொடங்கி மூன்று சூத்திரத்தாலும் சைவாகமங்களிற் கூறப்படும் பதி பசு பாசமென்னும் முப்பொருள்கள் உண்டென்பது அனுமானப் பிரமாணத்தாற் சாதிக்கப்பட்டது. ஆகமப்பிரமாணமே போதுமானதாகவும் அனுமானப் பிரமாணம் மிகை யென்னுங் குற்றமாகாதோ எனின், ஆகாது; எதனலெனின், மந்த அறிவுடைய மாணுக்கருக்கு ஆகமப் பிரமாணங்கூறினும் வேற்றுச் சமய நூல்களைப் பார்க்கும்பொழுது சைவாகமப் பொருளில் மலைவு உண்டாகும். அம்மலைவு உண்டாகாமையின் பொருட்டும், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை யென்னும் நான்கு வகையாலன்றி ஆகமங்களைக் கேட்ட மாத்திரையினுலேயே அனுபவம் சித்திக்காதுஆதலால், கேட்டபின்னர் அநுமானத்தால் சிந்தனைசெய்து வன்மை மென்மைகளை யுணர்ந்து தெளிந்து கொள்ளுதற்பொருட்டும் அனுமானப் பிரமாணமும் வேண்டப்படும். ஆதலால் மிகையாகாதென்க. இதனல் அனுமானப் பிரமாணம் புறச்சமயிகள் பொருட்டேயன்றிச் சைவசமயிகளுக்குஞ் சிந்தித்தற் பொருட்டு வேண்டப்படு மென்பதாயிற்று.

ஏழாம் அதிகரணம் முற்றிற்று.

மூன்றும் சூத்திரம் முற்றிற்று.

பிரமாணவியல் முற்றிற்று.

இலக்கண இயல்.

நான்காஞ் சூத்திரம்.

பசு இலக்கணம்.

மூன்றுஞ் சூத்திரத்தால் உண்டென்று சாதிக்கப்பட்ட உயிருக்கு இலக்கணம் இந்நான்காஞ் சூத்திரத்தாற் கூறுகின்றூர்.

அந்தக் கரண மவற்றிஞேன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே.

கருத்துரை.

எ-து சூ-ம் எ-னின், இதுவுமது

சிற்றுரை.

எ—து க—ரை எ—னின், சூத்திரக்கருத் துணர்த்துதனுத லிற்று.

(இ—ள்.) பிரமாணம் இலக்கணமிரண்டானும் பொருளுண்மை பெறற்பாற்றென்னு முறைமைபற்றி மேற் பிரமாணத்தாற் பெறுவிக்கப்பட்ட பதி பாச பசுக்களுக் கிலக்கணம் எதிர் நிரனிறையாக வைத்துக் கூறுவான்றொடங்கி அவற்றுள் இது மேலடுக்க நின்ற ஆன்மாவினிலக்கணங் கூறுதனுதலிற்று. எ - று.

சொற்பல்காமைப் பொருட்டும் ஒத்து வேறுபவழியும் இயை புடைமை புணர்ந்துகோடற்பொருட்டும் ஈண்டு இதுவுமதுவென மாட்டெறிந்துரைத்த ஆசிரியர், இங்ஙன முறைத்துக்கோடற் கேற்பவன்றே ஆண்டு ஆன்மாவினதுண்மை புணர்த்துதனுதலிற் றெனச் சிறந்தெடுத்தோதாது பொதுப்பட ஆன்மப் பிரகாச முணர்த்துத னுதலிற்றென்றதூஉமென்க. இவ்வாறன்றி மேலைச் சூத்திரத்தின் ஆன்மாவினதுண்மை கூறுமுகத்தாற் றொகுத்தோதிய அஞ்சவத்தை ஈண்டிலக்கணங் கூறுமுகத்தான் விரித்தோதப் படுதலின் இதுவுமதுவென்றது மேலைச் சூத்திரப்பொருளோடு மாட்டெறிந்ததென் றுரைப்பினுமாம். இதனானுஞ் சூத்திர வியைபு இனிது விளங்கும்.

சிவஞானபோதச்சிற்றுரைவிளக்கம்.

விளக்கம்.

இக்கருத்துரை என்ன சொல்லிற்றோவெனின், சூத்திரத்தின் கருத்து இதுவென்று சொல்லிற்று.

(இக்கருத்துரையின்பொருள்.) கண்ணுக்குக் காணப்படாதபொருள் உண்டென்று நிச்சயிப்பதற்கு அநுமானப் பிரமாணமும் இலக்கணமும் சாதனமாகும். எவ்வாறெனின், மலையிலுள்ள அக்கினி கண்ணுக்குக் காணப்படாதிருப்பினும் அதன் புகையைக்கொண்டு அக்கினி உண்டென்று நிச்சயிக்கலாம். இது அநுமானப் பிர்மாணம். கண்ணுக்குக் காணப்படாமல் பக்கத்தில் மறைந்திருக்கும் புகையில்லாத அக்கினியை வெப்பத்தால் உண்டென்று நிச்சயிக்கலாம்; வெப்பம் அக்கினிக்கு இலக்கணம். ஆகவே, அநுமானப் பிரமாணத்தினாலும் இலக்கணத்தினாலும் கண்ணுக்குக் காணப்படாத பொருளை உண்டென்று நிச்சயிக்கலாமென்பது பெறப்பட்டது. இம்முறைமைபற்றி மேல் மூன்று சூத்திரங்களால் அநுமானப் பிரமாணத்தால் உண்டென்று சாதிக்கப்பட்ட பதி பாசம் பசு என்னும் முப்பொருளும் இலக்கணத்தினாலும் உண்டென்று சாதிக்கத் தொடங்கி இறுதியை முதலாகக்கொண்டு முறையே மேற்செல்லும் எதிர்நிரனிறைப்படி மேல் அடுக்க நின்ற மூன்றாஞ் சூத்திரத்தால் உண்டென்று சாதிக்கப்பட்ட ஆன்மாவின் இலக்கணங் கூறுதல் இச்சூத்திரத்தின் கருத்து எ - று.

கருத்துரையை விரித்துக்கூறின் விரியுமென் றெண்ணியும், மூன்றாஞ் சூத்திரம் பிரமாண இயலாகவும் இச்சூத்திரம் இலக்கண இயலாகவும் இருப்பினும் மூன்றாஞ் சூத்திரத்திற்கும் நான்காஞ் சூத்திரத்திற்கும் ஆன்மா உண்டெனச்சாதிக்குஞ் சம்பந்தம் உடைமை உணர்ந்துகொள்ளுதற் பொருட்டும், இச் சூத்திரத்திற்குக் கருத்துரை இதுவும் அதுவென மேலைச் சூத்திரத்தோடுமாட்டெறிந்து உரைத்தார். மாட்டெறிதல் ஒருத்தி. இவ்வாறு உரைத்த ஆசிரியர் இக்கருத்துரை செய்து கொள்ளுதற்கேற்ப மூன்றாஞ் சூத்திரத்துக்குக் கருத்துரை கூறுங்கால் ஆன்மாவினது உண்மை உணர்த்துதல் நுதலிற்று எனச் சிறந்தெடுத்தோதாது, பிரமாண இயலுக்கும் இலக்கண இயலுக்கும் பொதுப்பட ஆன்மப்பிரகாசம் உணர்த்துதல் நுதலிற்று எனக்கூறினர்.

இவ்வாறன்றி மூன்றாஞ் சூத்திரத்தில் ஆன்மாவினது உண்மை கூறுமுகத்தால் முதன் மூன்றதிகரணங்களாலும் சாக்கிரமும், நான்காமதிகரணத்தால் சொப்பனமும், ஐந்தாம் அதிகரணத்தால் சுழுத்தி துரியம் துரியாதீதங்களும் தொகுத்தோதப்பட்டமையால், அவ்வாறு தொகுத்தோதிய அஞ்சவத்தை இச் சூத்திரத்தில் இலக்கணங் கூறுமுறையில் விரித்தோதப் படுதலின் இதுவும் அதுவென்று மேலைச் சூத்திரப்பொருளோடு மாட்டிச் சொன்னதென்றுரைப்பினும் பொருந்தும்.

இலக்கணவியல்நான்கா்ஞ்சூத்திரம்.

ஆன்மாவின் உண்மையை மூன்ருஞ் சூத்திரத்தாற் கூறி அதனிலக் கணம் இச்சூத்திரத்திற் கூறுதலினாலும், அஞ்சவத்தையை மூன்ருஞ் சூத் திரத்தில் தொகுத்துக்கூறி இச்சூத்திரத்தில் அதனை விரித்துக் கூறுதலினு லும் சூத்திர இயைபு பெறப்பட்டது.

சிற்றுரை.

இச்சூத்திரத்தின் பிண்டப் பொழிப்பு.

ஆன்மா—ஆன்மா,—அந்தக்கரண மவற்றின்—அந்தக்கரணங் களாகிய மனம் புத்தி அகங்காரஞ் சித்தமென்னு நான்கனுள்,— ஒன்றன்று (ஆயினும்)—ஒன்றன்ருயினும் (நுண்ணுணர்வின்மை யிற் சூழ்ச்சித்துணைவராகிய),—அமைச்சரசேய்ப்பநின்று—அமைச் சரோடுகூடிநின்று(தன்ருெழில்நடாத்தும்) அரசன்போல,—சகச மலத்துணராது—சகசமலத்தினுன் உணர்வின்றிக் (கஞ்சுகம்போ லுங்கலாதிகளாற் பொதுவகையான் உணர்வு நிகழினுஞ் சிறப்பு வகையான் நிகழுமாறு அவற்ருற் பெறப்படாமையிற் சிறப்பு வகையானுணருமாறு தனக்குச் சூழ்ச்சித்துணையாகிய),—அவை சந்தித்தது—அவ்வந்தக் கரணங்களோடு கூடிநின்று,—அஞ்சவத் தைத்தே—சாக்கிர முதலிய ஐந்தவத்தை யுடைத்தாம். எ-று.

எனவே, அங்ஙனநின்று அஞ்சவத்தைப்படுதல் ஆன்மாவுக் கிலக்கண மென்றவாருயிற்று. இஃது உயிருக்குத் தடத்தலக்கண மெனப்படும் பொதுவியல்பு.

ஒன்றன்ருயினும் சகசமலத்துணராது அமைச்சர சேய்ப்ப அவற்ருேடு சந்தித்தது நின்று அஞ்சவத்தைத்தாமென வியையும்.

உணராது சந்தித்ததென்பது காரணகாரியப்பொருட்டாய் நின்றது. சந்தித்தது வினையெச்சமுற்று.

இவ்வாறன்றி ஆன்மா அவற்றினுென்றன்ருயினும் சகசமலத் துணராமையால் அவற்ருேடு சந்தித்தது. சந்தித்தவழி அவை யுந் தானும் அமைச்சரசேய்ப்ப நிற்றலான் அஞ்சவத்தைத்தா யிற்று என அதிகாரணம் பகுத்துக் கோடற்கேற்ப வேறு வேறு வினைமுடிப்பு செய்துரைத்தலு மொன்று.

வடமொழிச் சூத்திரத் தோதுதலின் ஈண்டும் ஆயினுமென வருவித்து ஒரு தொடராக வைத்துரைக்க. அந்தக்கரண மவற்றி

ஞென்றன்றாயினு மெனவே, அவற்றினென்றன்றாதலும் அநுவாத முகத்தால் ஈண்டேபெற்றாம். இஃதுணராதார் அந்தக்கரண மவற்றினென்றன் றென்றதனை வேறு தொடராகவைத் துரைப்ப. அங்ஙன முரைப்பின், முன்வருவனவற்றை அவாய்நின்று ஒரு பொருண்மேல் வாராமையின் ஒரு சூத்திரமாதற்கேலாமை யறிக.

அவை சந்தித்ததென்புழி ஒடுவுருபு விகாரத்தாற் றொக்கது. இரண்டாவது விரிப்பினு மமையும்.

ஆன்மாவென்பது மேலைச் சூத்திரத்தினின்றும் வருவித் துரைக்கற்பாலதாகவும், ஈண்டு வேறோதியது ஒத்து வேறுதல் பற்றி யென்றுணர்க.

ஆன்மா வென்னுஞ் சொற்குப்பொருள் வியாபகமென்ப தூஉம் சித்தசித்தென்பதூஉமாம்.

மலத்து மலத்தாலென விரிக்க.

அமைச்சரசு அமைச்சரோடு கூடிய அரசென உருபும் பொருளும் உடன் றொக்கன.

காரணப் பொருட்டாய நின்றென்னும் வினையெச்சம் அஞ்ச வத்தைத்தென்னும் வினைக்குறிப்புமுற்றோடு முடிந்தது.

விளக்கம்.

(இச்சூத்திரத்தின் பொழிப்புரை.) ஆன்மாவானது அந்தக்கரணங்களாகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தமென்னும் நான்கனுள் ஒன்றன்று ஆயினும் அரசன் தனக்கு நணுகிய அறிவில்லாமையினால் ஆலோசனைத் துணைவராகிய அமைச்சரோடு கூடிநின்று தன்னுடைய அரசகாரியத்தை நடாத்துமாறுபோல, அனாதியே இயல்பாகக் கூடியிருக்கும் ஆணவமலத்தினால் அறிவின்றிக் கிடக்கும் ஆன்மாவிற்குச் சட்டைபோன்ற கலைமுதலிய தத்துவங்களினால் பொதுவகையான் உணர்வு நிகழினும் சிறப்புவகையான் உணர்வு நிகழாமையால் அது நிகழுதற்கு ஆலோசனைத் துணையாகிய அவ்வந்தக்கரணங்களோடு கூடிநின்று சாக்கிரமுதலிய ஐந்தவத்தையைப் பொருந்தும் எ - று.

பொதுவகையால் உணர்வு நிகழ்தலாவது, அறியாமையில் நின்று நீங்கி அறிவு சிறிது விளங்கப்பெற்றுப் பகுத்தறிவின்றி நிற்கும் நிலை. சிறப்புவகையால் உணர்வு நிகழ்தலாவது பகுத்தறிவோடு கூடி நிற்கும்நிலை. உதாரணம்:—நித்திரையில்நின்று நீங்கி விழிக்கும்போதுள்ள அறிவு பொது அறிவு. தொழில் செய்யும் பொழுதுள்ள அறிவு சிறப்பறிவு.

இலக்கணவியல்நான்காஞ்சூத்திரம்.

ஆன்மா ஐந்தவத்தையைப் பொருந்து மெனக் கூறியதனுல் அந்தக்கரணங்களோடு கூடிநின்று அஞ்சவத்தைப்படுதல் ஆன்மாவுக் கிலக்கணம் என்றவாறாயிற்று. இஃது உயிர்க்குத் தடத்த லக்கண மெனப்படும் பொதுவியல்பு.

ஆன்மா அந்தக்கரணங்களில் ஒன்றன்றாயினும் சகசமலத்து உணராது அமைச்சும் அரசும் ஒப்ப அவ்வந்தக் கரணங்களோடு சந்தித்துநின்று அஞ்சவத்தைப்படுமெனச் சூத்திரத்து வாக்கியங்களைப் பொருத்திக்கொள்க.

உணராது சந்தித்த தென்பதில் உணராமை காரணம்; சந்தித்தல் காரியம். ஆகவே சகசமலத்தோடு கூடி உணராமையினுல் அந்தக் கரணங்களோடு சந்தித்தது என்பதாம்.

சந்தித்தது என்பது சந்தித்து என்னும்பொருளைக் குறித்து நிற்றலால் வினையெச்சம்; அந்த எச்சம் அஞ்சவத்தைத்தே என்னும் வினைகொண்டு முடிந்தது. சந்தித்தது என்பது வினைமுற்று. ஆகவே, சந்தித்தது என்பது பொருளால் வினையெச்சமாயும் சொல்லால் முற்றாயும் நிற்றலால் வினையெச்சமுற்று. ஆதலால் சந்தித்தது என்பதற்குக் கூடிநின்று என உரை செய்யப்பட்டது.

சந்தித்தது என்பதற்கு இவ்வாறன்றி ஆன்மா அந்தக்கரணங்களில் ஒன்றன்றாயினும் சகசமலத்தோடுகூடி உணராமையின் அவ்வந்தக்கரணங்களோடு சந்தித்தது என ஒருவினை முடிபாயும், சந்தித்தவிடத்து அவ்வந்தக் கரணங்களுந் தானும் அமைச்சரும் அரசனும்போல் நிற்றலால் அஞ்சவத்தைப்பட்டது என மற்றொருவினை முடிபாயும் இரண்டு முடிபுசெய்து கூறுதலும் ஒன்று. இவ்வாறு இரண்டு முடிபாகவைத்துச் சந்தித்தது என்பது இரண்டாம் அதிகரணமாகவும் அஞ்சவத்தைத்தே என்பது மூன்றாம் அதிகரணமாகவும் வகுத்தவாறு அறிக.

இச்சூத்திரத்தில் ஆயினும் என்பது இல்லையாயினும் வடமொழிச் சிவஞானபோதத்திற் கூறுதலால் இச்சூத்திரத்தும் வருவித்து அந்தக்கரணம் அவற்றினென்று அன்று ஆயினும் என ஒரு தொடராகவைத் துரைக்க. அவ்வாறே உரை செய்யப்பட்டது. அந்தக்கரணங்களாகிய அவற்றின் ஒன்று அன்றாயினும் என்றதனுலேயே ஆன்மா அவற்றின் ஒன்று அன்றாதலும் அநுவாதமுகத்தால் இவ்விடத்திலேயே பெறப்பட்டது. அநுவாதமாவது முன்னர்ப் பெறப்பட்டதொன்றை வேறொன்று விதித்தற்பொருட்டுப் பின்னரும் எடுத்துக்கூறல். ஒன்று அன்றென்பது முன் பெறப்படாதவிடத்து ஒன்று அன்று ஆயினும் எனக் கூறமுடியாது. ஆதலால் ஒன்றன்றாயினும் என்றதனுலேயே ஒன்று அன்று என்பது முன் பெறப்பட்டமை காண்க. இவ்வாறு பொருள் கொள்ளாதார் அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று என்பதை வேறு தொடராகவைத்து ஆன்மாவின் உண்மை கூறியதென உரைப்பர். அதாவது ஆன்மா அவற்றின் வேறென்பதைச் சாதிக்கவந்ததாய்க்

கூறுவர். அவ்வாறு உரைப்பின் அவை சந்தித்தது, அமைச்சரசேய்ப்ப என முன்வருவனவற்றை அவாய்நின்று இலக்கணமாகிய ஒருபொருண் மேல் வாராமையின் ஒரு சூத்திரமாதற் கேலாமை யறிக. ஆதலால் அந்தக் கரணங்களுள் ஒன்றன்று, ஒன்றன்றாயினும் அவற்றைச் சந்தித்தது, சந் தித்து அஞ்சவத்தைப்பட்டது என ஒரு முடிபாகவைத்து இலக்கணங் கூறியதாகக்கொள்வதே பொருத்தம்.

அவை சந்தித்தது என்றவிடத்து ஒடு உருபு விகாரத்தாற் றொக்கு நிற்றலால் அவ்வுருபை விரித்து அவ்வந்தக் கரணங்களோடு என உரை செய்யப்பட்டது. இரண்டாவதாகிய ஐ உருபை விரித்து அவ்வந்தக்கர ணங்களைச் சந்தித்தது எனக் கூறினும் பொருந்தும்.

ஆன்மா வென்பது மூன்றாஞ் சூத்திரத்தில்நின்றும் வருவித்து உரைக் கலாமாயினும் மூன்றாஞ் சூத்திரம் பிரமாண இயலும் இச்சூத்திரம் இலக் கண இயலு மாதலால் அவ்வேற்றுமைபற்றி இச்சூத்திரத்திலும் ஆன்மா வென்றோதப்பட்ட தென அறிக.

ஆன்மா என்னுஞ் சொற்குப்பொருள் வியாபகமென்பதூஉம், சித் தொடு கூடில் சித்தாயும் அசித்தொடு கூடில் அசித்தாயும் நிற்றற்கு உரிமை யுடைமையால் சித்தசித்தென்பதூஉமாம்.

சகசமலத்து என்றவிடத்து ஆல் உருபு விரித்துச் சகசமலத்தினால் என உரைசெய்யப்பட்டது.

அமைச்சரசு என்றவிடத்து ஒடு உருபும் கூடிஎன்னும் பொருளும் உடன் றொக்குநின்றன. அவற்றை விரித்து அமைச்சரோடு கூடிநடாத்தும் அரசன் என உரைசெய்யப்பட்டது.

அமைச்சரசேய்ப்ப நின்று என்பதிலுள்ள நின்று என்பது நிற்றலா லென்னும் பொருளைக் குறித்தலால் காரணம். அது வினையெச்சமாய் அஞ்ச வத்தைத்தே என்னும் வினைக்குறிப்புமுற்றோடு முடிந்தது. அஞ்சவத்தைத்தே என்பது காலங்காட்டாமையின் வினைகுறிப்பு முற்றாயினமைஅறிக.

சிற்றுரை.

இதனுள் அந்தக்கரண மவற்றி னொன்றன்றென்றது ஓரதிகா ணம்; ஒன்றன்றாயினும் சகச மலத்துணராது அமைச்சர சேய்ப்ப அவை சந்தித்தது என்றது ஓரதிகரணம்; அமைச்சர சேய்ப்ப நின்று அஞ்சவத்தைத்தே யென்றது ஓரதிகரணம்; ஆக மூன்றதி கரணத்தது இச்சூத்திர மென்றுணர்க.

விளக்கம்.

வெளிப்படை.

முதலதிகரணம்.

அந்தக் கரணம் ஆன்மா அன்றெனக்கூறும்

மேற்கோள்.

ஈண்டு இவ்வான்மாவாவது அந்தக்கரனங்களா யுள்ள மனோபுத்தி யகங்கார சித்தங்களில் ஒன்றன்று என்றது.

சிற்றுரை.

எ-து மே-ள் எ-னின், ஏனைய வெல்லாம் வெவ்வேறு பெயர் பெற்று நிற்பன வாகலான் உயிராகா; ஆயினும் மன முதலிய அந்தக்கரணங்கள் "சிந்தையைச் சிவனென்றுஞ் சிவனைச் சிந்தையென்றும்" இன்னன முயிரென்னும் பெயரானும் வழங்கப்படுதலுண்மையானும், இந்திரிய முதூ்யவற்றை அவ்வாறு கூறுமையின் அஃதாகு பெயரென்றற் கேலாமையானும், அவையே தனித்தனி ஆன்மாவாமென்றல் அமைவுடைத்தென அந்தக்கரணான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற் கூற்றைக்கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இதுமேலைச் சூத்திரத்துள் ஓதற்பாலதேயாயினும் ஈண்டிலக்கணங் கூறும் வழியும் அவற்றோடு சந்தித்து அமைச்சரசேய்ப்ப நிற்பதென அவத்தைக் கேதுவாக எடுத்தோத வேண்டுதலின் ஈரிடத்து மெடுத்தோதுதல் "சில்வகை யெழுத்தின் செய்யுட் டாகிச்—சொல்லுங் காலையுரை யகத்தடக்கி—நுண்மையொடு புணர்ந்த வொண்மைத் தாகி" என்னு மிலக்கணத்ததாய சூத்திரத்துக் கேலாமையான் அதுபற்றி விதிமுகத்தா னன்றி அநுவாத முகத்தான் ஈண்டுணர்த்தப் பட்டது.

இ-ள். வெ-டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ-ள். ஈண்டு—இம் மூன்றதிகரணத்துள்வைத்து இம்முதலதிகரணத்து,—இவ்வான்மா வாவது—மேற் கூறிப்போந்த உயிரா

வது,—அந்தக்கரணங்களாயுள்ள மனோ புத்தி யகங்கார சித்தங்களில்—புறவந்தக் கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரம் சித்தங்களாகிய இவற்றின்,—ஒன்று அன்றென்றது—வேறும் எ-று.

சிற்றுரை.

ஈண்டு அந்தக்கரண மென்றது உள்ளந்தக் கரணமாகிய கலாதிகளினுஞ் செல்லாமைப் பொருட்டு மனோபுத்தி யகங்கார சித்தங்களிலெனக் கிளந்தெடுத்துரைத்தார். கலாதிகளுண்டெனக் கொண்டோரின் உயிர்வேறுண்டெனக் கொள்ளாதார் இன்மையின் ஆண்டாசங்கை நிகழாமையானும், அமைச்சரோடு உவமிக்கப்பட்டு அவத்தைக் கேதுவாவன அம்மனமாதியே யன்றிக் கஞ்சுகத்தோடு உவமிக்கப்பட்டு அதீதத்தினு நீங்காது உடனிற்பன வாய கலாதிகளன்மையானும், அவற்றை ஈண்டெடுத்தோத வேண்டாமையின் மனமுதலிய புறவந்தக் கரணங்களே ஈண்டுக்கூற நின்றன வென்பது கருத்து.

விளக்கம்.

இது சூத்திரத்திலுள்ள அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்று என்பதைப் பதச் சேதஞ் செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோ வெனின், ஆன்மா அல்லாத இந்திரிய முதலிய வெல்லாம் வெவ்வேறு பெயர் பெற்று நிற்பன வாகலான் அவை உயிராகா; ஆயினும் சிவஞான சித்தியார் ௪-ம் சூ—ம் ௨௪-வது செய்யுளில் "சிந்தையைச் சீவனென்றும் சீவனைச் சிந்தை யென்றும்" கூறியிருக்கின்றமையால் மனமுதலிய அந்தக்கரணங்கள் அவ்வாறு உயிரென்னும் பெயரானும் வழங்கப்படுதலினாலும், இந்திரிய முதலியவற்றையும் அவ்வாறு உயிரென்றுவழங்கப்படாமையால் அந்தக்கரணங்களே உயிரென்று கூறியது ஆகுபெயரினால் என்று கூறுதற்கேலாமையானும், அவ்வந்தக் கரணங்களே தனித்தனி ஆன்மாவாமென்று கூறுதல் பொருத்தமுடைத்தென அந்தக்கரணான்ம வாதிகள் கூறுவர். அவர் கூற்றை ஆசங்கித்துக் கொண்டு சூத்திரத்தின் முதற்கூற்றைப் பதச்சேதஞ் செய்து அந்தக்கரணங்கள்ஆன்மாவன்று எனக் கூறியவாறும்.

இவ்வதிகரணத்தில் அந்தக்கரணங்கள் ஆன்மாவோ அன்றோ வென்பது ஐயப்பாடு. இவ்வையப்பாட்டின் கண் அந்தக் கரணங்கள் ஆன்மா வென்பது பிறர்பக்கம். இவ்வாறு கூறுவோர் அந்தக் கரணான்மவாதிகள் என அறிக.

இலக்கணவியல்நான்காஞ்சூத்திரம். க-ம் அதி.

இவ்வதிகரணம் மேல் மூன்றாஞ் சூத்திரத்துட் கூறவேண்டுவதேயாயினும் இச் சூத்திரத்தில் அவ்வந்தக்கரணங்களோடு சந்தித்து அமைச்சும் அரசும்போல நிற்பதால் அஞ்சவத்தையை உடையதாய் நிற்றல் இலக்கணமெனக் கூறவேண்டுதலினால் இரண்டு சூத்திரத்தினிடத்தும் எடுத்தோதுதல் தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல் ௬௦௦-வது சூத்திரத்தில் ''சில்வகை எழுத்தின் ***வொண்மைத்தாகி'' என்று கூறிய விதிக்கு ஏலாமையால் அதுபற்றி அந்தக்கரணங்கள் ஆன்மா அல்ல என்பது விதிமுகத்தால் மேலைச் சூத்திரத்திற் கூறாமல் இலக்கணங்கூறும் இச்சூத்திரத்தில் அநுவாதமுகத்தாற் கூறப்பட்டது.

(இம்மேற்கோளின் பொருள்.) இம்மூன்றதிகரணத்துள்வைத்து இம் முதலதிகரணத்து மூன்றாஞ் சூத்திரத்திற் கூறிப்போந்த உயிராவது புற அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரம் சித்தங்களாகிய இவற்றின் வேறாம். எ - று.

இவ்வதிகரணத்தில் அந்தக்கரண மென்றது புற அந்தக்கரணமென உணரும் பொருட்டும், உள்ளந்தக்கரணமாகிய கலைமுதலிய தத்துவங்களிற் சேராதிருக்கும் பொருட்டும், மனோபுத்தி அகங்கார சித்தங்கள் எனத் தெரித்தெடுத்துரைத்தார். அந்தக்கரண மென்பது அகத்தேயிருக்குங் கருவியாம். அது உள்ளந்தக்கரணம் புறவந்தக்கரணமென இருவகைப்படும். அவற்றுள் உள்ளந்தக்கரணமாவது கலை, வித்தை, அராகம், புருடன் முதலிய வித்தியா தத்துவங்கள். புறவந்தக்கரணமாவது மனம், புத்தி, அகங்காரம், சித்தங்கள். இந்திரியத்தை நோக்க மனம் முதலியன அகத்திலிருப்பதால் அந்தக்கரண மெனவும், கலைமுதலிய தத்துவங்களுக்குப் புறத்தே யிருப்பதால் புறவந்தக்கரண மெனவும் மனமுதலியவற்றிற்குப் பெயராயிற்று. கலைமுதலிய தத்துவங்கள் மனமுதலிய அந்தக் காரணங்களுக்கும் உள்ளாயிருப்பதால் உள்ளந்தக்கரண மெனப்பட்டது. கலாதி தத்துவங்கள் உண்டெனக் கொண்டவர்களுள் அத்தத்துவங்களின் வேறாய் உயிர் உண்டெனக் கொள்ளாதாரில்லை. ஆதலால் உள்ளந்தக்கரணத்தைப்பற்றி ஆசங்கை நிகழாமையானும், அமைச்சரைப்போல நின்று அவத்தைக் கேதுவாயிருப்பன அம்மனமுதலிய தத்துவங்களேயன்றிச் சட்டையைப்போல் துரியாதீத அவத்தையினும் நீங்காது ஆன்மாவுடன் நிற்பனவாகிய கலாதி தத்துவங்கள் அல்லாமையானும், அக்கலாதி தத்துவங்களை இச்சூத்திரத்தில் எடுத்தோத வேண்டாமையால் மனமுதலிய புறவந்தக்கரணங்களே இவ்விடத்துக்கூற நின்றனவென்பது கருத்து.

மனம் முதலிய அந்தக்கரணங்கள் சுழுத்திவரையுந்தான் தொழிற்படும். துரியந் துரியாதீதங்களில் மனமுதலிய அந்தக்கரணங்கள் தொழிற்படமாட்டா. தொழிற்படாமையே அவ்விரண்டு அவத்தைக்கும் ஏதுவாயிற்று. துரியாதீதத்தில் புருடதத்துவம் இருத்தலால் கலாதிகளும் உண்டென அறிக.

சிவஞானபோதச்சிற்றுரைவிளக்கம்.

அந்தக்கரணங்கள் ஆன்மாவல்ல வென்பதற்குக் காட்டும்

ஏது.

அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்ற லான்.

சிற்றுரை.

எ-து எது எ-னின், "மனமும் புத்தி யகங்காரஞ்சித்த நான்கு—மருவி யான்மாவே யென்னவரும்" என நீயிருங்கோட லின் உயிர் அவற்று ளொன்றுதலைமையு மென்றுற்படு மிழுக் கென்னையென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்த லுதலிற்று.

(இ-ள்.) அவ்வந்தக்கரணங்கடாம் தம்மிற் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாய் நின்றே தம்மைநோக்கி அசித்தாய் நிற்றலால் தன்னை நோக்கியுஞ் சித்தாய் நிற்கும் இவ்வான்மாவாவது அந்தக் கரணங்களாயுள்ள மனோபுத்தி யகங்காரசித்தங்களில் ஒன்றன் றென மேற்கொண்டது எ-று.

எனவே, உயிரான் அதிட்டிக்கப்பட்டு ஐம்பொறிகளறிந்த விடயங்களுள் ஒன்றனை இஃதியாதாகற்பாற்றெனச் சித்தஞ்சிந்தித் தறியும்; யான் சிந்தித்தே னென்றறியமாட்டாது. மனம் அதனை இஃதின்னதாகற்பாற்றெனவும் அஃதாமோ அன்றோ எனவும் இவ் வாறு சங்கற்பவிகற்பஞ் செய்தறியும்; யான் சங்கற்பவிகற்பஞ் செய்தேனென்றறியமாட்டாது. அகங்காரம் அதனை இன்ன தெனத்துணிவேன் யானென்று ஒருப்பட்டெழுந்தறியும்; யானொ ருப்பட்டெழுந்தேனென் றறியமாட்டாது. புத்தி அதனை இன்ன திதுவென நிச்சயித்தறியும். யானிச்சயித்தேனென் றறியமாட் டாது. ஆகலான் அவ்வாறின்றி அவற்றோடு கூடி யான் சிந்தித் தேன் பற்றினேன் எழுந்திருந்தேன் நிச்சயித்தேனென்றும் அதன்பின் அதுவதுவாய்ப் பரிணமித்துச் சுகதுக்கமோகரூப மாய்த் தன்மாட்டு வந்த புத்திதத்துவத்தின் பரிணாமங்களைக் கலாதிகளோடு கூடிநின்று இது சுகம் இது துக்கம் இது மோக மென்றறிந்தும் யான்சுகித்தேன் யான்றுக்கித்தேன் யான்மோகித் தேன் என்றறிந்தும் இங்ஙனம் பிறவற்றை நோக்கியும் தன்னை நோக்கியுஞ் சித்தாகிய ஆன்மாத் தம்மை நோக்கிச் சித்தாகாத அந்தக்கரணங்களின் ஒன்றாமாறியாண்டையதென மறுத்தவாறாயிற்று.

இலக்கணவியல்நான்காஞ்சூத்திரம். க-ம் அதி.

"இவன்றானும் புத்தியுஞ்சித் திவனோமோ புத்தி" என வழி நூலாசிரியர் கூறியதும் இவ்வியல்புநோக்கி.

ஈண்டுப் பிரகாசம் அப்பிரகாசம் என்பன சித்து அசித்தென்னும் பொருளவாம்.

ஏனையோரை நோக்கி அரசனுக்கு அணுக்காதற் சிறப்புப் பற்றி அமைச்சரை அரசரென்று உபசரித்துக் கூறப்படுமாறு போலப் புறக்கருவிகளை நோக்கி ஆன்மாவுக்கு அணுக்கமாய் நிற்றற் சிறப்புப்பற்றி 'மனம் புத்தி யகங்காரஞ் சித்த நான்கு மருவி யான்மாவே யென்ன' உபசரித்துக் கூறப்படு மந்தனை யென்றொழிக. சூழ்ச்சித் துணையாதல்பற்றி அந்தக்கரணங்கள் அமைச்சரை யொக்குமெனவே, ஏனைக்கருவிகள் ஏனைப்பரிசனங்களை ஒக்குமென்பது பெற்றாம். அது ஞானமிர்தத்திற் காண்க.

மேலைச் சூத்திரத்தினோதிய ஏதுக்களே ஈண்டைக்கு மமையுமாயினும், சிறந்தமைபற்றி வேறேதுக் கூறினார்.

விளக்கம்.

இந்த ஏது என்ன சொல்லிற்றோவெனின், சிவஞானசித்தியார் சு-வது சூ-ம் உ-வது செய்யுளின்படி, "மனமும் புத்தி யகங்காரஞ் சித்த நான்கு—மருவி யான்மாவே யென்ன" சைவசித்தாந்திகளாகிய உம்மவரும் கொள்ளுதலால் உயிர் அந்தக்கரண்ங்களுள் ஒன்றாதலே பொருத்தம் என்றால் உண்டாகும் குற்றம் என்னையென்னும் வினாவை ஆசங்கித்து அதற்குச் சமாதானங்கூறி அந்தக்கரணங்கள் ஆன்மாவல்ல வென்னும் மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) அவ்வந்தக்கரணங்கள் தாம், தம்மிற்கீழுள்ள இந்திரியங்களை நோக்கி அவ்விந்திரியங்கள் தம்மைக் கொண்டே யறிதலால் சித்தாயும், தம்மைத்தாம் அறியாமையால் தம்மை நோக்கி அசித்தாயும் நிற்றலால், தன்னை நோக்கியுஞ் சித்தாய் நிற்கும் இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தி யகங்கார சித்தங்களில் ஒன்று அன்றென மேற்கொண்டது எ-று.

கண்ணினால் ஒரு பொருள் காணப்படுங்கால் ஆன்மா மனத்தோடுகூட மனம் கண்ணோடு கூட கண் எதிர்ப்பட்ட பொருளைக் காணும்; இவ்வாறே செவிமுதலிய ஒவ்வொரு இந்திரியங்களுமாம். ஆகவே இந்திரியங்களால் விடயங்கள் அறியப்படும்பொழுது உயிர் அந்தக்கரணங்களைச் செலுத்த அவ்வந்தக்கரணங்கள் இந்திரியத்தின் வழியாக விடயத்தை அறியும் என்ற

படியாம். இவ்வாறு கூறியதனால் இந்திரியங்கள், விடயங்களை அறிவதற்கு வாயிலாக இருந்தனவேயன்றி அவ்விந்திரியங்கள் தாமேயறியவில்லையென்ற வாறாயிற்று. இசனை மனம் ஒன்றைக்கருதிக்கொண் டிருக்கும் பொழுது கண்விழித்துக் கொண்டிருந்தும் முன்னிருக்கும் பொருளைக் காணமாட்டா மையின்வைத்து அறிக. ஏனைய இந்திரியங்களும் இவ்வாறேயாம். அந்தக்கா ணங்களோ இந்திரியங்களை வாயிலாகக் கொண்டு விடயங்களை அறியும். அறியுங்கால் சித்தம் ஒரு பொருளைப் பிண்டமாக யாதோ ஒன்று தோன்று கின்றதெனச் சிந்தித்து அறியும். அறியினும அச்சித்தம் தான் சிந்தித்தே னென்று அறியமாட்டாது. அதன் பின்னர்ப் பிண்டமாக அறியப்பட்ட அப்பொருளை மனம் இது கட்டைதான் எனச்சங்கற்பித்தும், கட்டையோ அன்றோ என விகற்பித்தும் அறியும். அம்மனம் தான்சங்கற்ப விகற்பஞ் செய்தேனென்று அறியமாட்டாது. அதன் பின்னர் இன்னதென்று நிச்ச யிக்கப்படாத அப்பொருளை அகங்காரம் இன்னதென நிச்சயிப்பேனென்று ஒரு வழிப்பட்டு அகங்கரித்து அறியும். அவ்வகங்காரம் தான் அகங்கரித்தே னென்று அறியமாட்டாது. அதன் பின்னர் அப்பொருளைப் புத்தி இன்னது தான் என நிச்சயித்தறியும். அப்புத்தி தான் நிச்சயித்தேனென்று அறியமாட் டாது. ஆகவே ஆன்மாவானது விடயங்களை உணர்வதற்கு இந்திரியங்கள் வாயிலாக இருந்தாற்போல அந்தக்கரணங்கள் கருவியாயிருந்தனவென அறிக. ஆதலால் இந்திரியங்களை நோக்க அந்தக்கரணங்கள் அறிவுடைப் பொருள்க ளாயினும் அந்தக்கரணங்களாகிய தம்மை நோக்க ஆன்மாவிற்குக் கருவியாத லின் அவை அறிவில்லாத பொருளா மென்பது பெறப்பட்டவாறு காண்க.

ஆன்மா, தன்னை நோக்கியுஞ் சித்தாய்நிற்கு மென்றதனால் கீழுள்ள வற்றை நோக்கியுஞ்சித்தாய் நிற்கு மென்பது பெறப்படும். எவ்வாறெனின், அந்தக்கரணங்களோடு ஆன்மாக் கூடாதபொழுது அவ்வந்தக் கரணங்கள் சிந்தித்தல் முதலிய தொழில்களைச் செய்வதில்லை. ஆதலால் பிறவற்றை நோக்கி ஆன்மாச் சித்தாதல் பெறப்பட்டது. இனி அவ்வந்தக்கரணங்கள் தாம் சிந்தித்தேம் சங்கற்பித்தேம் என்று அறியாதிருந்தாற்போலன்றி ஆன்மா அந்தக்கரணங்களோடு கூடி யான் சிந்தித்தேன் யான் பற்றினேன் யான் அகங்கரித்தேன் யான் நிச்சயித்தேனென்று அறியும்; அறிந்தபின் நிச்சயித்த புத்தி சாந்தரூபமான சாத்துவிககுணத்தோடு கூடியிருப்பின் அறியப்பட்டபொருள் சுகரூபமாய ஆன்மாவுக்குத்தோன்றும்; அப்புத்தி பிரவிருத்திரூபமான இராசதகுணத்தோடு கூடியிருப்பின் அறியப்பட்ட பொருள் துக்கரூபமாய் ஆன்மாவுக்குத் தோன்றும்; அப்புத்தி மோகரூப மான தமோகுணத்தோடு கூடியிருப்பின் அறியப்பட்டபொருள் மோகரூப மாய் ஆன்மாவுக்குத் தோன்றும். இவ்வாறு குணத்துக்கேற்ப மாறுபட்டுத் தோன்றுவனவாகிய விடயங்களைக் கலைமுதலிய தத்துவங்களுடன் ஆன்மாக் கூடி நின்று இது சுகம் இது துக்கம் இது மோகமென்றறியும். இவ்வாறு ஆன்மா அறிவதற்குத் துணையாயிருந்த கலாதி தத்துவங்களும் தாம் கருவி

களாயிருப்பனவன்றிக் கருத்தாக்களாயிருந்து தனித்தனியே யான் சுகித்தேன்யான் துக்கித்தேன் யான் மோகித்தேனென அறிவதில்லை. ஆன்மாவே அக்கலாதி தத்துவங்களோடு கூடி யான் சுகித்தேன் யான் துக்கித்தேன் யான் மோகித்தேன் என அறியும். ஆகவே கருவிகளைச் செலுத்துதலினுல் பிறவற்றை நோக்கிச் சித்தாயும் கருவிகளால் யான் அறிந்தேன் என்று உணர்வதால் தன்னைநோக்கிச் சித்தாயும் ஆன்மா நிற்கும். இவ்வாறு நிற்கும் ஆன்மா, பிறவற்றை நோக்கிச் சித்தாயும் தம்மை நோக்கிச் சித்தாகாமலும் நிற்கும் அந்தக்கரணங்களுள் ஒன்றென்று கூறுதல் எவ்வாறு பொருந்துமென இந்த ஏதுவினுல் மறுத்தவாறு அறிக.

சித்தியாரில், "நான்கும் ஆன்மாவே யெனவரும்" என்றதன் கருத்தென்னையெனின், நான்கும் ஆன்மாவோடு ஒன்றுபட்டு நிற்றலால் கருத்தாவென்று சொல்லும்படி நிகழும் என்பதாம். ஆயினுங் கருத்தாவன்று, அன்றென்பது "கருவியாமனமும்" என்று அச்செய்யுளிற் கூறியதனுலேயே விளங்கும். இது அரசனேடு நெருங்கியிருக்கும் மந்திரியை அரசனென்று உபசரித்துக் கூறுதல்போலாம். இக்கருத்துப்பற்றியே, பதினொராஞ் சூத்திரம் பதினொராவது செய்யுளில் 'இவன்றனும் புத்தியுஞ்சித் திவனுமோ புத்தி' என அவ்வாசிரியரே அருளிச் செய்தனர். இதன் கருத்துப் புத்தியும் உயிரும் அறிதல் பற்றிச் சித்துப்பொருளெனக் கூறப்படினும் புத்தி உயிராதல் இல்லை என்பதாம்.

இந்த ஏதுவிற்கூறிய பிரகாசம் என்பது சித்து என்பதையும், அப்பிரகாசமென்பது அசித்து என்பதையும் பொருளாகக்கொண்டு நின்றன. ஆதலால் சித்தாய் நின்றே அசித்தாய் நிற்றலால் என உரை செய்யப்பட்டது.

அந்தக்கரணங்களைச் சித்தென்று கூறுவதெல்லாம் ஏனையோரைவிட மந்திரி அரசனேடு நெருங்கியிருக்கும் உரிமையுடையவனுதலால் அச்சிறப்புப்பற்றி அவனை அரசனென்று உபசரித்துக் கூறப்படுமாறுபோல, புறக்கருவிகளைவிட அகக்கருவிகளாகிய மனம் முதலியன ஆன்மாவோடு நெருங்கியிருக்கும் உரிமையுடையன வாதலால் அச்சிறப்புப்பற்றி மனம் புத்தி அகங்காரம் சித்தம் நான்கும் மருவி ஆன்மாவே யென்ன உபசரித்துக் கூறப்படும். அவ்வளவேயன்றி உண்மையிற் சித்தல்லவென அறிக. இன்னும் இதனுண்மை மேற்கூறியவாறு கருவியாமென்று கூறியதனுலேயே விளங்குவதன்றி, மருவி என்றதனுனும் இனிது விளங்கும். மருவி என்றதனுல் ஆன்மாவோடு மருவியென்றும், மருவாதவிடத்து ஆன்மாவாதலில்லை என்றும் விளங்குமன்றே: இன்னும் அச்செய்யுளில் ஆன்மாவே யாகுமென்று கூருமல் ஆன்மாவே யென்னவரும் என்று கூறியதனுலேயும் ஆன்மாவல்ல என்பதூஉம், உபசாரமாக ஆன்மாவெனக் கூறப்படுமென்பதூஉம் தானே விளங்கும்.

ஆன்மாவாகிய அரசனுக்கு அந்தக்கரணங்கள் ஆலோசனைத் துணையாகிய மந்திரிபோல நிற்கும் என்றதனாலேயே ஏனைக்கருவிகள் ஏனைப்பரிசனங்களைப்போலநிற்கும் என்பதும் பெறப்படும். இவ்வாறு ஞானாமிர்தம் என்னும் நூலிற் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது அந்தக்கரணங்கள் மந்திரியாம்; ஞானேந்திரியங்கள் ஐந்தும், வாயில்காப்பவர் ஒற்றிநின்றறிபவர் தூதர் அத்தானிகர் புரோகிதராகும்; கன்மேந்திரியங்களைந்தும், யானைப்படை குதிரைப்படை தேர்ப்படை காலாட்படை சேனாதிபதிகளாம்; சத்தாதி வசனாதி விடயங்கள்பத்தும் ஏவலாட்களாம்; பிராணவாயுமுதலியவாயுக்கள் உறுதிமொழி கூறுஞ் சுற்றமாம்.

மூன்றுஞ் சூத்திரத்தில் வெவ்வேறு பெயர் பெற்று நிற்றலால் எனவும், உண்டிவினையின்மையின் எனவும், ஒடுக்கமறிதலின் எனவும், ஐம்புலன் அறிதலின் எனவும், எனதுடலென்றலின் எனவும் கூறிய ஏதுக்களே இவ்வதிகாரணத்திற்கும் அமையுமாயினும் இந்திரியமுதலியவற்றைவிட அந்தக்கரணங்கள் சிறந்தமைபற்றிப் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலால் என வேறு ஏதுக்கூறினர்.

இந்த ஏது அந்தக்கரணங்கள் ஆன்மா வென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

அந்தக்கரணங்கள் ஆன்மாவல்ல என்பதற்குக் காட்டும்

உதாரணம்.

மனமாதி யாலுணர்தன் மன்னு புலன்கண்,
மனமாதி மன்புலனி னல்லன்—மனமே
லுதித்தோன்றை யுள்ள முணர்த லதனி
னுதிக்குங் கடற்றிரையை யொத்து.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், அவ்வந்தக்கரணங்கள் தம்மிற்கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாமாயும் தம்மின் மேலுள்ளவற்றை நோக்கியும் தம்மை நோக்கியும் அசித்தாமாயுந் தெரித்துணர்த்தி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) மனம் ஆதியால் உணர்தல் மன்னுபுலன்கள்—மனமுதலிய அந்தக்கரணங்களா லுணரப்படுவன (ஐம்பொறிகளாற் றரப்பட்டுப் புறத்தே) நிலைபெற்றவிடயங்களாம்,—உள்ளம் உணர்தல் மனம்மேல் உதித்த ஒன்றை—ஆன்மா வுணர்வது மனத்துக்கு

மேலெனப்படும் புத்தியிற்றோன்றிய தொன்றனையாம்,—கடற்றி ரையை ஒத்து உதிக்கும்—(அவ்விருவே றுணர்வுங்) கடலிடை யெழுந்து கரைசாருந் திரைபோலப் (பரம்பரையின் ஆன்மாவின் மாட்டு வந்து) தோன்றும்,—அதனின் மனம் ஆதி புலனின் அல் லன்—அதனானே மனமுதலியன அவ்விடயங்களின் வேறாயினாற் போல ஆன்மாவும் அம்மன முதலியவற்றின் வேறாம் எ - று.

உதிக்குமென்னும் பயனிலைக்கு உணர்தலிரண்டும் எழுவாய்.

செவ்வெண்டொகை விகாரத்தாற் றொக்கது.

மன் அசை.

புலனின் இன் உவமவுருபு.

அல்லனென ஆடூஉவறிசொல்லாற் கூறியது வடமொழி மதம் பற்றி.

உதித்தவென்னும் பெயரெச்சவீறு விகாரத்தாற் றொக்கது.

புத்தியிற்றோன்றிய தொன்றாவது சுகதுக்கமோகரூபவிடயம்.

பரம்பரையிற் றோன்றுதலாவது முன்னர் வாயிற்காட்சி யுணர்வுதோன்றி அதன்பின் மானதக்காட்சி யுணர்வுதோன்றி அதன்பின்னர்த் தன்வேதனைக்காட்சி யுணர்வு உயிரின்கண்வந்து தோன்றுதல்.

இதனானே அந்தக்கரணங் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தா மாறும் மேலுள்ளவற்றை நோக்கி அசித்தாமாறும் உயிர் அவ்வா றன்றி யாண்டுஞ் சித்தாமாறுங் கண்டுகொள்க.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) மனம் ஆதியால் உணர்தல் மன்னு புலன்கள் உள் ளம் உணர்தல் மனம்மேல் உதித்த ஒன்றை கடற்றிரையை ஒத்து உதிக் கும் அதனின் மனம் ஆதி புலனின் அல்லன்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், மேற்கூறியவாறு அவ்வந்தக்கரணங்கள் தம்மிற்கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாயும் தம்மை நோக்கியும் தம்மின்மேலுள்ளவற்றை நோக்கியும் அசித்தாயும் நிற்கும் என் பதை விளக்கிக்காட்டி அவ்வாறு நிற்குமென்று கூறிய ஏதுவை வலியுறுத் தியவாறாம்.

(பொ-ரை.) சத்த முதலிய புறத்து விடயங்களைச் செவிமுதலிய இந்திரியங்களும் இந்திரியங்கள் வாயிலாக அந்தக்கரணங்களும் உணரும். அவ்வந்தக்கரணங்களுள் மனத்துக்கு மேலாகிய புத்தியிற்றோன்றிய சுகதுக்காதிகளை ஆன்மா அறியும். இந்திரியங்களின் அறிவும் அந்தக்கரணங்களின் அறிவும் ஆகிய இருவேறு அறிவும் ஒன்றன்பின் ஒன்றாக ஆன்மாவை வந்து பொருந்துதல், கடலின்கண் உண்டாகிக் கரையைப் பொருந்தும் அலைபோலாம். ஆதலால் விடயங்களை இந்திரியங்களால் உணரும் மனமுதலியன அவ்விந்திரியங்களின் வேறாயினாற்போல அந்தக்கரணங்களால் அவ்விடயங்களிலுள்ள சுகதுக்காதிகளை உணரும் ஆன்மா அவ்வந்தக்கரணங்களின் வேறாம் எ-று.

(க—ரை.) இந்திரியத்தின் வழியாக விடயத்தை உணரும் அந்தக்கரணம் இந்திரியத்தினும் விடயத்தினும் வேறாயினாற்போல அந்தக்கரணத்தின் வழியாக விடயத்தாலுண்டாம் சுகதுக்காதிகளை உணரும் ஆன்மா அவ்வந்தக்கரணங்களின் வேறு என்பதாம்.

உதிக்கும் என்றது பயனிலை. அந்தப்பயனிலைக்கு மனமாதியா லுணர்தல், உள்ளம் உணர்தல் ஆகிய இரண்டும் எழுவாய். ஆதலால்அவ்விருவேறுணர்வும் உதிக்குமென உரை செய்யப்பட்டது.

அவ்விடத்தில் செவ்வெண்ணினாற் பெறக்கூடிய இரண்டென்னுந் தொகை விகாரத்தாற் றொக்கு நின்றது. அதனை விரித்து இருவேறுணர்வு என உரை செய்யப்பட்டது. மன்புலன் என்றதிலுள்ள மன்என்பது அசை.

புலனின் என்றதிலுள்ள இன் உவமஉருபு. ஆதலால் விடயங்களின் வேறாயினாற்போல என உரை செய்யப்பட்டது.

புலனின் அல்லன் என ஆண்பாலைக் குறிக்கும் அன் விகுதி புணர்த்திக்கூறியது வடமொழி மதம் பற்றியென அறிக. அதாவது அல்லன் என்னும் பயனிலைக்கு எழுவாய் ஆன்மா. தமிழ் வழக்கின்படி ஆன்மா அன்றெனக் கூறவேண்டும். வடமொழியில் ஆன்மாவை உயர்திணை ஆண்பாலாகக் கூறும் வழக்க முண்டு. அவ்வழக்கின்படி செய்யுள் கூறப்பட்டது. தமிழ் வழக்கின்படி அஃறிணை யாகவைத்து மனமுதலியவற்றின் வேறு என உரை செய்யப்பட்டது

உதித்தொன்றை யென்றதில் பெயரெச்சத்தைக் குறிக்கும் அகரம் தொகையாயிருந்தது. அதனை விரித்து உதித்த ஒன்றை யென உரைக்கப்பட்டது.

புத்தியிற் றோன்றிய தொன்றனை ஆன்மா உண்ரும் என உரையிற் கூறப்பட்டது. அது எதுவெனில், சுகதுக்க மோகமாய்க் காணப்படும் விடயங்கள். அவ்விடயங்கள் மூவகையாய்த் தோன்றுதற்குக் காரணம் சாத்து

விகமுதலிய குணவேறுபா டென்பது மேல் ஏதுவிற்குக் கூறிய உரையிற் பெறப்பட்டமையின் அவ்விடத்துக் காண்க.

அலைபோல் உணர்வு ஒன்றன்பின் ஒன்றாக ஆன்மாவில் வந்துதோன்றுதல் எவ்வாறெனின், முதலாவது இந்திரியத்தாற் காணும் உணர்வுதோன்றும். அதாவது விடயத்தைப் பிண்டமாக அறிதல். அதன்பின் மனத்தாற் காணும் உணர்வுதோன்றும். அதாவது பிண்டமாகக் கண்ட விடயத்தைப் பகுத்து இன்னதெனக் காண்டல். அதன்பின் தன்வேதனையாற் காணும் உணர்வு தோன்றும். அதாவது பகுத்துக்கண்ட விடயத்தைச் சுகதுக்கமோக ரூபமாய்க் காண்டல். விடயம் கடலுக்கும், இந்திரியஉணர்வு மானதவுணர்வு தன்வேதனையுணர்வு மூன்றும் அலைக்கும், ஆன்மா கரைக்கும் உவமைகளாகும். ஆகவே, விடயமாகிய கடலில் இந்திரிய உணர்வாகிய அலை மானத உணர்வாகிய அலையைத்தள்ள மானத உணர்வாகிய அலை தன்வேதனை உணர்வாகிய அலையைத்தள்ள தன்வேதனை உணர்வாகிய அலை ஆன்மாவாகிய கரையைச் சாருமென அறிக. தன் என்பது ஆன்மாவையும், வேதனையென்பது சுகதுக்க மோகங்களையுங் குறித்து தன்வேதனை யெனப்பட்டது. அது நிச்சயத்தினாலேயே உண்டாதலால் தன்வேதனைக் காட்சியை வேறு கூறாது புத்தியிற் றோன்றியதொன்றனை ஆன்மா அறியுமென்றனர்.

இவ்வுதாரணத்தினால் அந்தக்கரணம் தனக்குக் கீழுள்ள இந்திரியத்தை நோக்கிச் சித்தாயும், தனக்கு மேலுள்ள கலாதிகளையும் ஆன்மாவையம் நோக்கி அசித்தாயும் நிற்கும் எனவும், உயிர் அவ்வாறன்றி இந்திரியம் அந்தக்கரணம் கலாதிமுதலியவற்றை நோக்கியும் தன்னைநோக்கியும் சித்தாகவே நிற்கு மெனவுங் கூறியவாறு கண்டுகொள்க.

அந்தக்கரணங்கள் ஒவ்வொன்றின் இயல்பை விளக்கிக்காட்டும் .
உதாரணம்.

சிந்தித்தாய்ச் சித்தந் தெளியாதா யாங்காரம்
புந்தியா யாய்ந்து மனமாகிப்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ள மிவ்வேறு
மவ்வேறும் போதுபோ லாங்கு.

சிற்றுரை.

எ - து உ - ம் எ—னின், மேற்பொதுவகையாற் கூறிப்போந்த அந்தக்கரணங்களினியல்பு சிறப்புவகையாற் கூறுமுகத்தான் மானதக்காட்சியுள்ளுங் கடற்றிரைபோலப் பரம்பரையின் வெவ்வேறுயுணர்வுநிகழுமா றுணர்த்தி உயிர் வேறாதலை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) உள்ளம்—புருடதத்துவமென நின்றவுயிர்,—ஆங்கு—வாயிற்காட்சியாற் கண்ட விடயங்களி னென்றனை மனமாதியா னுணரும் மானதக்காட்சியின்கண்ணும் ஒருபெற்றித்தாதலின்றி,—சித்தம் ஆய்ச் சிந்தித்து—சித்தமாய் (நின்று இஃதியாதாகற் பாற்றெனச்) சிந்தித்தும்,—மனம் ஆகிப் பந்தித்து—(அதன்பின்) மனமாய் (நின்று இஃதின்னதாகற்பாற்றெனப்) பற்றியும்,—ஆங்காரம் ஆய்த் தெளியாது—(அதன்பின்) அகங்காரமாய் (நின்று இஃதாமோ அன்றோ இதனை இன்னதெனத் தெளிவேன் யானெனத்) தெளிவு பிறவா தெழுந்தும்,—புந்தி ஆய் ஆய்ந்து—(அதன்பின்னர்ப்) புத்தியாய் (நின்று இஃதின்னதெனத்) தெளிந்தும்,—வெவ்வேறே துணிந்து இவ்வேறும்—(இங்ஙனம்) வெவ்வேறாகவே யுணர்தலான் (அவ்வாறுணரும் புருடன்) இவ்வந்தக்கரணங்களின் வேறும்,—போது அவ்வேறும் போல்—(ஞாயிறுமுதலியவற்றோடு கூடி நின்று நாழிகை நாள் பக்கந் திங்கள் யாண்டு முதலியன வாய்ப்படும் பாகுபாடு செய்யுங்) காலதத்துவம் அஞ்ஞாயிறு முதலியவற்றின் வேறாயினாற்போல் எ-று.

ஆய்தல் ஈண்டு நிச்சயித்தற் பொருட்டு.

துணிதலென்பது அறிதலென்னும் பொருண்மாத்திரையாய் நின்றது.

தான் அசை. ஏகாரந் தேற்றம்.

இவ் அவ் என்பன வகர வீற்றஃறிணைப் பன்மைச் சுட்டுப் பெயர்.

வேறும்போது போலெனவே, ஆண்டு நீக்கப்பொருள் ஞாயிறு முதலியன வென்பது தானே விளங்கு மென்பது நோக்கி அவ்வெனச் சுட்டி யொழிந்தார். சாரியையும் உருபும் உடன்றொக்கன.

சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. ஆங்கும் வெவ் வேறு தானே துணிந்தெனவே மானதக் காட்சியும் இங்ஙன நால்வேறு வகைத்தாய் ஒன்றற்கொன்று முறைமையே ஏதுவும் பயனுமாய்க்கடற் றிரைபோலப் பரம்பரையிற் றோன்று மென்ற வாறாயிற்று.

செய்யுளாகலின் முறை பிறழவைத்தார்.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) உள்ளம் ஆங்கு சித்தம் ஆய்ச் சிந்தித்து மனம் ஆகிப் பந்தித்து ஆங்காரம் ஆய்த் தெளியாது புந்தி ஆய் ஆய்ந்து வெவ் வேறே துணிந்து இவ்வேறும் போது அவ்வேறும்போல்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோ வெனின், மேலை வெண்பாவில் இந்திரியங்களை வாயிலாகக் கொண்டு அந்தக்கரணங்கள் அறியுமென அந்தக் கரணங்களி னியல்பு பொதுவகையாற்கூறினர். இவ்வெண்பாவில் அவ் வந்தக்கரணங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறுணரு மென்பதைச் சிறப்புவகை யாற் கூறி அவ்வாறு கூறு முறையில் அவ்வந்தக்கரணங்களின் உணர்வும் கடலின்கண் உண்டாம் அலைபோல ஒன்றன்பின் ஒன்றாய் வேறு வேறு விதமாய் நிகழும் முறைமையினை உணர்த்தி உயிர் அவ்வந்தக்கரணங்களின் வேறாதலை வலியுறுத்திற்று.

(பொ-ரை.) கலாதி தத்துவங்களின் உள்ளீடாய் நின்ற காரணத்தால் உள்ள மென்று கூறபபட்ட புருடதத்துவமாகிய உயிர் இந்திரியங்களின் உணர்வாற் கண்ட விடயங்களில் ஒன்றனை மனமுதலிய அந்தக்கரணங்க ளால் உணரும் மானத உணர்வும் ஒன்றுபோலின்றி வேறு வேறு விதமாய் நிகழும். எவ்வாறெனின், சித்தமாய்நின்று ஒருபொருளைப் பிண்டமாகஇஃது யாதோ ஒன்று தோன்றுகின்றதெனச் சிந்தித்து அறியும். அதன் பின்னர் மனமாய் நின்று பிண்டமாக அறியப்பட்ட அப்பொருளை இஃது இன்ன தாகுமெனவும், அவ்வாறாகுமோ ஆகாதோ எனவும் பற்றி அறியும். அதன் பின் அகங்காரமாய் நின்று அதனை இன்னதெனத் துணிவேன் என அகங் கரித்தறியும். அதன்பின் புத்தியாய் நின்று அதனை இன்னதென நிச்சயித் தறியும். இவ்வாறு கடலின்கண் உண்டாம்அலை ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றுமாறுபோல அந்தக்கரணங்களாலுண்டாம் உணர்வும் ஒன்றன்பின் ஒன்றாய் வேறு வேறாகத் தோன்றும். அவற்றையெல்லாம் உயிர் அறியும். அந்தக்கரணங்களுள் சித்தம் மனத்தின் றொழிலைச் செய்யவுமாட்டாது அறியவுமாட்டாது. மனம் சித்தத்தின் றொழிலைச் செய்யவுமாட்டாது அறி யவுமாட்டாது. இவ்வாறே பிறவுமாம். உயிர் அந்நான்கின்றொழிலையும் அறிதலால் அவ்வந்தக்கரணங்களின் வேறாம். அந்தக்கரணங்களோடு கூடி நின்றும் உயிர்வேறாதல் எதுபோல வெனின், காலதத்துவமானது, சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்களோடு கூடி நின்று நாழிகை, நாள், பக்கம், மாதம், வருட முதலியனவாகப் பாகுபட்டு வேறுபடினும் அச்சூரியன் முதலிய வற்றின் அக்கால தத்துவம் வேறாயினாற் போலாம் எ-று.

(க-ரை.) காலதத்துவம் சூரியன் முதலியவற்றின் வேறாயினாற்போல உயிர் மன முதலியவற்றின் வேறு என்பதாம்.

புந்தியாய் ஆய்ந்து என்றதிலுள்ள ஆய்தல் ஆராய்தல் முதலியவற்றை உணர்த்துமேனும் இவ்விடத்து நிச்சயித்தலை உணர்த்தி நின்றது.

துணிந்து எனக் கூறியதிலுள்ள துணிதல் என்பது நிச்சயித்தல் முதலியவற்றை உணர்த்துமேனும் இவ்விடத்து அறிதலென்னும் பொருளை மட்டுங் குறித்து நின்றது.

வெவ்வேறு தானே யென்பதிலுள்ள தான் என்பதுஅசை. அதிலுள்ள ஏகாரம் வெவ்வேறெ்ன உறுதிப்படுத்தலின் தேற்றம்.

இவ்வேறு அவ்வேறு என்பதிலுள்ள இவ் அவ் என்பன வகர ஈற்று அஃறிணைப் பன்மைச்சுட்டுப்பெயர். அதாவது இவற்றின் அவற்றின் எனப் பன்மையைச் சுட்டிய பெயராய் நின்றன. ஆதலால் இவ்வந்தக் கரணங்களின் வேறு அஞ்ஞாயிறு முதலிய வற்றின் வேறு என உரைசெய் யப்பட்டது.

வேரும் போது போலெனக் கூறியதனுலேயே வேருகிய நீக்கப் பொருள் அவ்விடத்து ஞாயிறுமுதலியன வென்பது தானே விளங்குமென் பது நோக்கி அவ்வெனச் சுட்டிவிட்டனர். அதாவது அந்தக்கரணங்களைக் கூறிப் பின்னர் இவ்வென்று சுட்டுப்பெயர் வந்ததுபோல அவ்வென்னும் சுட்டுப்பெயருக்குரிய ஞாயிறு முதலியன மேலே கூறப்படவில்லை. கூரு திருக்கவும் போது அவ்வேரும் என்றதனுல் காலம்வேருதல் சூரியன்முதலி யவற்றின் என்பது சொல்லாமலே விளங்குமாதலால் நீக்கப் பொருளாகிய சூரியன் முதலியவற்றைக் கூருமலே அவ்வென்று சுட்டிவிட்டனர் என் பதாம்.

அவ்வேரும்போல் என்றதிலுள்ள வேரும்போல் என்பதில் இன்சாரி யையும் ஆல் உருபும் உடன் ருெக்கு நின்றன. அவற்றை விரித்து வேருயி னுற்போல என உரை செய்யப்பட்டது.

ஆங்கு என்பதில் சிறப்பும்மை விகாரத்தாற் ருெக்கு நின்றது. அதனை விரித்து மானதக் காட்சியின்கண்ணும் என உரைசெய்யப்பட்டது. ஆங் கும் வெவ்வேறு தானே துணிந்து என்றதனுலேயே மானதக் காட்சியும் இவ் வாறு சிந்தித்துப் பந்தித்துத் தெளியாது ஆய்ந்து என நால்வேறுவகையாய் ஒன்றற் கொன்று முறையே ஏதுவும் பயனுமாய்க் கடற்றிரைபோலப் பரம் பரையிற் ருேன்றுமென்றவாருயிற்று. ஏதுவும் பயனுமாதல் எவ்வா றெனின், சிந்தித்தலினுல் பந்தித்தல் உண்டாயினமையால் சிந்தித்தல் ஏது வும் பந்தித்தல் பயனுமாம். பந்தித்தலினுல் தெளியாமை உண்டாயினமை யால் பந்தித்தல் ஏதுவும் தெளியாமை பயனுமாம். இவ்வாறே பிறவுமாம். சித்தத்தின் காட்சியால் மனத்தின்காட்சியும், மனத்தின் காட்சியால் அகங் காரத்தின் காட்சியும், அகங்காரத்தின் காட்சியால் புத்தியின் காட்சியும்

நின்றன்பின் ஒன்ருய் வேறவேருய்த் தோன்றுதலால் கடலின்கண் அலைபோலத் தோன்றியவாறு அறிக.

சித்தம், மனம், அகங்காரம், புத்தி என முறையாய் வைக்கவேண்டு மாயினும் செய்யுளாதலின் சித்தம், அகங்காரம், புத்தி, மனம் என முறை பிறழ வைத்தார்.

அந்தக்கரணங்களைச் செலுத்தும் அக்கரங்கள் இவையெனக் காட்டும்

உதாரணம்.

அகார வுகார மகங்காரம் புத்தி
மகார மனஞ்சித்தம் விந்துப்—பகாதிவற்றை
நாத முளவடிவா நாடிற் பிரணவமாம்
போதங் கடற்றிரையே போன்று.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், அம்மானதக் காட்சியினிகழுஞ் சவி கற்ப வுணர்விற் கேதுவாய் அவற்றை யுடனின்று செலுத்தும் அக் கரங்களிவை யென்பதும் அவற்ருனுணர்வு மாறி மாறித் தோன்று மாறு முணர்த்துதனுதலிற்று.

இ-ள். வெ-டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ—ள். அகாரம் அகங்காரம்—அகரம் அகங்காரத்திீனயும்,—உகாரம் புத்தி—உகரம் புத்தியினையும்,—மகாரம் மனம்—மகரம் மனத்தினையும்,—விந்து சித்தம்—விந்து சித்தத்தினையும்,—நாதம் உளவடிவு—நாதம் உயிரினையும் (செலுத்துதல் பற்றி),—கடற்றிரை யேபோன்று—சமுத்திரத்தின்கட் புதிது புதிதாய்த் திரைதோன் றியும் ஒடுங்கியும் வருமாறுபோல,—போதம்—(மாசகலத்தின்கட் கணந்தோறும்) உணர்வு,—ஆம்—உதித்தும் ஒடுங்கியும் வரும்,—பகாது இவற்றை நாடில்—பகுக்காது இவ்வக்கரங்களை ஆராயின்,—பிரணவமாம்—பிரணவமாகும் எ-று.

சிற்றுரை.

" மன்னுமகார மனஞ் செலுத்தும்புத்தியினை—யுன்னுமுகார முபகரிக்கு—முன்னகு—மாங்காரந் தன்னை யகாரஞ் செலுத்தியிடு—நீங்காத சித்தம் விந்து நேர்" என்பவாகலானும் ஈண்டோதிய

முறையே முறையெனவும், "அவ்வுட னுவ்வு மவ்வு மனம் புத்தி யகங்கா ரங்கள்" என வழி நூலாசிரியரோதியது எதிர் நிரனிறைப் பொருளெனவுங் கொள்க. "அவ்வுட னுவ்வு மவ்வு மனம் புத்தி யகங்கா ரங்கள்" என்றதே முறையெனக்கொண்டு அதற்கியையக் கொண்டு கூட்டியுரைப்பாருமுளர்.

பகாதிவற்றை நாடிற் பிரணவமா மெனவும், போன்றுமென வுங் கூட்டுக.

அந்தக்கரணங்களைச் செலுத்தும் அக்கரங்களைக் கூறுவார் ஒப்புமை பற்றிப் புருடனைச் செலுத்தும் அக்கரமும் உடன் கூறினர்.

உடனின்று செலுத்துதல் பற்றி அபேதமாக வைத்தோதப் பட்டன.

"நிகழ்ந்திடும் வாக்கு நான்கு நிவிர்த்தாதி கலையைப் பற்றி" அகரமுதலிய பஞ்சகலைவடிவாய் நின்று இவற்றை வேறு வேறு செலுத்துதல் பற்றிக் கணந்தோறும் நினைப்பு மறப்புமாகிய சகல கேவலங்கள் அதிநுட்பமாய்க் கறங்கோலைபோல மாறி மாறி நிகழு மெனவும் மாசகலத்தின்கட் கணந்தோறும் அங்ஙன முணர்வுதித் தும் ஒடுங்கியும் வருதல் சமுத்திரத்தின்கட் புதிது புதிதாய்த் திரை தோன்றியும் ஒடுங்கியும் வருமாறுபோலு மெனவு முணர்க. கடற்றிரை யுவமை மேற் பரம்பரையாய் உணர்வு வருதற் கெடுத் துக் காட்டினர்; ஈண்டுப் புதிது புதிதாய் வருதற் கெடுத்துக் காட் டினர். ஆதலாற் புனருத்தி யன்மை யுணர்க.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) அகாரம் அகங்காரம் உகாரம் புத்தி மகாரம் மனம் விந்து சித்தம் நாதம் உளவடிவு கடற்றிரையே போன்றுபோதம் ஆம் பகாது இவற்றை நாடில் பிரணவமாம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றேவெனின், மேலைச்செய்யுளிற் கூறியவாறு அந்தக்கரணங்களின் உணர்வாகிய மானதக்காட்சியில் நிகழும் சவிகற்ப உணர்வு சடமாகிய அந்தக்கரணங்களால் எவ்வாறு நிகழுமென் னும் ஐயம் நிகழுமன்றே. அந்த ஐயத்தை நீக்கவேண்டி மனமுதலிய அந் தக்கரணங்களுக்கு விகற்பத்தோடுகூடிய சவிகற்ப உணர்வு நிகழ்தற்கு ஏது வாய் அம்மனமுதலியவற்றை உடன்நின்று செலுத்தும் அக்கரங்களிவை யென்றும் அவ்வக்கரங்களால் உணர்வு மாறிமாறித்தோன்றும் முறை இவ் வாறென்றும் கூறியவாறும்.

(பொ - ரை.) அகரம் அகங்காரத்தினையும், உகரம் புத்தியினையும், மகரம் மனத்தினையும், விந்து சித்தத்தினையும், நாதம் உயிரினையும் செலுத்தும். அவ்வாறு செலுத்துதலினால் மகாசகலமாகிய மத்தியாலவத்தையின்கண் கணந்தோறும் மனமுதலியவற்றின் உணர்வு புதிது புதிதாய் உதித்தும் ஒடுங்கியும் வரும். அவ்வாறு வருதல் எதுபோலவெனின், சமுத்திரத்தின்கண் அலை புதிது புதிதாய்த்தோன்றியும் ஒடுங்கியும் வருமாறுபோலாம். அந்த அகாரமுதலிய அக்கரங்களைப் பகுக்காது ஆராயின் பிரணவமாகும். எ-று.

(க - ரை.) அகரமுதலிய ஐந்து அக்கரங்களும் உயிர்முதலிய ஐந்தினையுஞ் செலுத்தும். அவ்வக்கரங்களின் கூட்டம் பிரணவமாகும் என்பதாம்.

சகலம், சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐந்தவத்தையை உடையதாய் கீழாலவத்தை மேலாலவத்தை மத்தியாலவத்தையென மூவகைப்படுமாயினும், அவற்றுள், எல்லாக்கருவிகளுந் தொழிற்படும் அவத்தை மத்தியாலவத்தையாதலால் மகாசகலமென்பது மத்தியாலவத்தையென அறிக.

துகளறுபோதத்தில் உள்ள "மன்னுமகாரம்" என்ற செய்யுளின்படி இச்செய்யுளுக்குக் கூறிய உரையின் முறையே முறையாம். சிவஞான சித்தியார் ௪-ம் ௫-ம் ௯-வது செய்யுளில் "அவ்வுட னுவ்வு மவ்வு மனம்புத்தி யகங்காரங்கள்" எனக்கூறியது எதிர் நிரனிறைப்பொருள்பற்றியெனக் கொள்க. அவ்வாறு கொள்ளின் அகரம் அகங்காரத்தையும், உகரம் புத்தியினையும், மகரம் மனத்தினையுஞ் செலுத்துமென மேற்கூறிய பொருளே சித்தித்தல் காண்க. இவ்வாறன்றிச் சித்தியார் வாக்கை முறையாகவைத்து அகரம் மனத்தினையும், உகரம் புத்தியினையும், மகரம் அகங்காரத்தினையும் செலுத்துமெனக்கொண்டு அதற்கேற்றவாறு இவ்வெண்பாவைக் கொண்டு கூட்டி யுரைப்பாருமுளர்.

பகாதிவற்றை நாடிற் பிரணவமாம் எனவும், உளவடிவாம் என்பதிலுள்ள ஆம் என்பதைப் போதம் என்பதனோடுகூட்டிக் கடற்றிரையே போன்று போதம் ஆம் எனவுங் கூட்டுக.

அந்தக்கரணங்களைச் செலுத்தும் அக்கரங்களையே இச்செய்யுளிற் கூறவேண்டியதாயினும் அந்தக்கரணங்களோடு உயிர் உடனிற்கும் ஒப்புமை பற்றியும், பிரணவத்தைக் குறிக்கும் அக்கரங்களின் ஒப்புமைபற்றியும் புருடனைச்செலுத்தும் அக்கரமும் உடன் கூறினர்.

அந்தக்கரணங்களோடும் புருடனோடும் அக்கரங்கள் உடனின்று செலுத்துதல்பற்றி அக்கரங்கள் செலுத்துமெனக்கூறாது அகாரம் அகங்காரம், உகாரம் புத்தி, மகாரம் மனம், விந்து சித்தம், நாதம் உளம் என அக்கரங்களே அந்தக்காணங்கள் என்னும்படி அபேதமாகக் கூறப்பட்டன.

சித்தியார் ௧-ம் ௫-ம ௨௬-வது செய்யுளிற் கூறியபடி "திகழ்ந்திடும் வாக்கு நான்கும் நிவிர்த்தாதி கலையைப் பற்றி" அகரமுதலிய பஞ்சகலைவடி

வாய் நின்று அந்தக்கரணங்களை வேறு வேறு செலுத்துதலால் கணந்தோறும் நினைப்பாகிய சகலமும் மறப்பாகிய கேவலமும் அதிநுட்பமாய்க் காற்றிற்சுழலும் ஓலைபோல் மாறிமாறி நிகழுமெனவும், மகாசகலமாகிய சாக்கிரத்தின்கண் கணந்தோறும் அங்ஙனம் உணர்வு உதித்தும் ஒடுங்கியும் வருதல் சமுத்திரத்தின்கண் புதிதுபுதிதாய் அலைதோன்றியும் ஒடுங்கியும் வருமாறு போலுமெனவும் உணர்க.

வாக்கு நான்காவன:- சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்பனவாம். அவற்றுள் சூக்குமைவாக்கு ஒலிமாத்திரையாய் நாபித்தானத்திலிருக்கும்; பைசந்திவாக்கு அக்கரங்களின் நிருவிகற்பத்தோடுகூடிய ஒலியாய் உந்தித்தானத்திலிருக்கும்; மத்திமைவாக்கு அக்கரங்களின் பாகுபட்டோடுகூடிய ஒலியாய் இருதயத்தானத்திலிருக்கும்; வைகரியானது தூலம் சூக்குமம் என்று இருதிறப்பட்டு அவற்றுள் சூக்குமவைகரி அக்கரங்களினாலாகிய சொல்வடிவான ஒலியாய்த் தன் செவிக்குமட்டுங் கேட்கப்படுவதாய்க் கண்டத்தானத்திலிருக்கும்; தூலவைகரி சொல்வடிவான ஒலியாய்த் தனக்கும் பிறர்க்குங் கேட்கப்படுவதாய் வாயிலிருக்கும்.

வாக்கு நான்கும் நிவிர்த்தாதி கலையைப்பற்றி நிற்றல் எவ்வாறெனின், தூலவைகரி நிவிர்த்திகலையினையும், சூக்குமவைகரி பிரதிட்டாகலையினையும், மத்திமை வித்தியாகலையினையும், பைசந்தி சாந்திகலையினையும், சூக்குமை சாந்தியதீதகலையினையும் பற்றிநிற்கும். இதனால் நிவிர்த்திகலை வாய் என்னுந்தானத்திலிருந்து பிறருக்குத் தெரியவொட்டாத சொல்லின் தடையை நிவிர்த்தித்துப் பிறருக்குத் தெரியும்படி சொல்லச் செய்யுமெனவும், பிரதிட்டாகலை கண்டத்தானத்திலிருந்து சொல்லைத் தனக்குக் கேட்கும்படி நிலைக்கச் செய்யுமெனவும், வித்தியாகலை இருதயத்தானத்திலிருந்து சொல்லிற்குரிய எழுத்துக்களைப்பிரித்து அறிவிக்குமெனவும், சாந்திகலை உந்தித்தானத்திலிருந்து எழுத்துக்களை அடக்கித் தோற்றுவிக்குமெனவும், சாந்தியதீதகலை நாபித்தானத்திலிருந்து எழுத்துக்களின் தோற்றத்திற்கு அதீதமான ஒலியைத் தோற்றுவிக்குமெனவும் அறிக.

அகரமுதலிய பஞ்சகலைகளாவன:—அகரம் உகரம் மகரம் விந்து நாதம் என்னும் ஐந்துமாம். இவற்றுள் தூலவைகரி நிவிர்த்திகலையைப்பற்றி அகரவடிவாயும், சூக்குமவைகரி பிரதிட்டாகலையைப்பற்றி உகரவடிவாயும், மத்திமை வித்தியாகலையைப்பற்றி மகரவடிவாயும், பைசந்தி சாந்திகலையைப் பற்றி விந்துவடிவாயும், சூக்குமை சாந்தியதீதகலையைப்பற்றி நாதவடிவாயும் நிற்கும்.

அக்கரங்கள் அந்தக்கரணங்களைச் செலுத்துமுறையாவது:—பிறர்க்குக் கேட்கும்படி சொல்லுதலாகிய தூலவைகரி வாயைத்திறத்தலினாலுண்டாகுமாதலால் வாயைத்திறத்தலாகிய அங்காத்தலால் தோன்றுதல் அகரமாகிப்

பிறருக்குத் தெரிவிப்பேன் என்றவிருத்தி அகங்காரமாகி அகரம் அகங்கார த்தைச் செலுத்திற்றெனவும், பிறர்க்குச் சொல்லுஞ் சொல்லைத் தன்னுள் நிச்சயித்தலாகிய சூக்குமவைகரி கண்டத்தானத்தில் அடங்கி வாயைச் சிறிது அசைத்தலினாலுண்டாகுமாதலால் சிறிது அசைத்தல் உகரமாகி நிச் சயித்த விருத்தி புத்தியாகி உகரம் புத்தியைச் செலுத்திற்று எனவும், சொல் லிற்குரிய அக்கரங்களைப் பகுத்துக்காட்டும் மத்திமை இருதயத்தில் மவுன மாய் இருத்தலால் மவுனம் மகரமாகிப் பகுத்தவிருத்தி மனமாகி மகாரம் மன தைச் செலுத்திற்றெனவும், அக்கரங்களை நிருவிகற்பமாய்க் காட்டும் பைசந்தி உந்தியில் ஒருகுறிவடிவாயிருத்தலால் குறி விந்துவாகி நிருவிகற்ப விருத்தி சித்தமாகி விந்து சித்தத்தைச் செலுத்திற்றெனவும், ஒலிமாத்தி ரையாய் நிற்குஞ்சூக்குமை நாபியில் ஒலிவடிவாயிருத்தலால் ஒலி நாதமாகி உயிர்த்தலாகிய விருத்தி புருடனாகி நாதம் புருடனைச் செலுத்திற்றெனவும் அறிக. ஆகவே, சூக்குமைமுதலியஒலி நிவிர்த்திமுதலிய பஞ்சகலைகளின் பற்றுக்கோட்டால் அகரமுதலிய அக்கரங்களின் வடிவாய் அகங்காரமுத லிய அந்தக்கரணங்களைத் தொழிற்படுத்துமென அறிக.

கடல் அலை உவமை மனமாதியால் என்னும் வெண்பாவில் ஒன்றன் பின் ஒன்றாய் உணர்வு தோன்றுதற்கும், இவ்விடத்துப் புதிது புதிதாய் உணர்வு தோன்றுதற்கும் எடுத்துக் காட்டினார். ஆதலின் கூறியது கூறலின் மையறிக.

அக்கரங்களின் அதிதெய்வம் இவை யென்பதற்குக் காட்டும்.

உதாரணம்.

எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமா,
நண்ணிய விந்துவோடு நாதத்துக்—கண்ணிற்
பகரயன்மா லோடு பரமனதி தேய்வ
மகரவுக ரம்மகரத் தாம்.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், அவ்வக்கரங்களுஞ் சடமாகலின் அவற் றையதிட்டிக்கும் அதி தெய்வங்கள் இவை யென்பதுணர்த்துதனு தலிற்று.

(இ-ள்.) எண்ணிலவோங்காரத்துநண்ணிய விந்துவொடுநாதத் ததிதெய்வங் கண்ணில் ஈசரொடு கூடிய சதா சிவமாம் அகாரவுகர மகாரத் ததிதெய்வங் கண்ணிற் பகரயன் மாலோடு பரமனும் எ-று.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ-ள். எண்ணிலவு—மானதக்காட்சியின்கண் நிலவிய,—ஓங்காரத்து—பிரணவத்தின்கண்ணே,—நண்ணிய—பொருந்திய,—நாதத்து—நாதத்திற்கும்,— விந்துவொடு— விந்துவிற்கும்,—அதிதெய்வம்—அதிதேவதையை,—கண்ணில்—கருதுமிடத்து,—சதாசிவம்—சதாசிவமும்,— ஈசராம்—மகேசனுமாம்,— மகர உகர அகரத்து—மகர உகர அகரங்கட்கு,—(அதிதெய்வம் கண்ணில்)—அதிதேவதையைக் கருதுமிடத்து,— பரமன் மாலோடு பகர் அயனும்—முறையே சுத்தவித்தையின் வைகுவோராகிய உருத்திரனும் மாலும் சொல்லப்படும் அயனுமாம் எ-று.

சிற்றுரை.

எண்ணில வோங்காரம் எண்ணத்தின்கண் நிலவிய ஓங்காரமென வினைத்தொகை. எண்ணம் ஈண்டு மானதக்காட்சி.

ஒடு எண்ணின்கண் வந்தது.

ஈண்டு அயன் மால் பரமனென்றது சுத்தவித்தையின் வைகுவோரை. பரமன் உருத்திரன். அகரவுகரம் மகரத்தா மென்புழி மகரம் இசைப் பொருட்டாய் ஒற்றில்வழி யொற்றாய் வந்தது.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) எண்ணிலவு ஓங்காரத்து நண்ணிய நாதத்து விந்துவொடு அதிதெய்வங் கண்ணில் சதாசிவம் ஈசராம் மகர உகர அகரத்து(அதிதெய்வங் கண்ணில்) பரமன் மாலோடு பகர் அயனும்.

இவ்வுதாரணம் என்ன சொல்விற்றோ வெனின், அந்தக் கரணங்களைச் செலுத்தும் அகர முதலிய அக்கரங்களுஞ் சடமாகலின் அவ்வக்கரங்கள் அந்தக்கரணங்களைச் செலுத்து மென்றல் எவ்வாறு பொருந்தும் என்னும் ஐயத்தை நீக்குதற்கு அக்கரங்களை வாயிலாகக் கொண்டு நிற்கும் அதிதெய்வங்கள் இவையெனக் கூறிய வாறும்.

(பொ-ரை.) மனத்தால் அறியப்படுவதாய் அகத்து விளங்கிய பிரணவத்தின்கண்பொருந்திய அக்கரங்களுக்கு அதிதேவதையைக் கருதுமிடத்து நாதத்திற்குச் சதாசிவமும், விந்துவிற்கு மகேசனும், மகரத்திற்கு உருத்திரனும், உகரத்திற்கு விட்டுணுவும், அகரத்திற்குப் பிரமனுமாகும் எ-று.

(க-ரை.) அகரமுதலிய அக்கரங்கட்குப் பிரமன் முதலியோர் அதிதெய்வங்கள் என்பதாம்.

நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் ஐந்து கலைகளும் முறையே பிரமா, விட்டுணு, உருத்திரர், மகேசுவரர், சதாசிவர் முதலிய ஐவரையும் அதிட்டித்துநின்று சிருட்டி முதலிய ஐந்து தொழில்களையும் செய்யும் என்று கூறுதற் கேற்ப மேலைச் செய்யுளின் உரையில் நிவிர்த்தி முதலிய கலைகள் முறையே அகர முதலிய அக்கரங்களின் வடிவாய் விளங்குமெனவும், இச்செய்யுளில் அகரமுதலிய அக்கரங்களுக்கு முறையே பிரமன் முதலியோர் அதிதெய்வமெனவுங் கூறியவாறு அறிக. ஆகவே அக்கர மென்பது ஒலியின் பேதமே எனவும், ஒலியே வாக்கு எனவும், வாக்காகிய அவ்வொலி நிவிர்த்தி முதலியபஞ்சகலைகளும் பிரமன் முதலிய ஐந்து தெய்வங்களும் இயக்க ஐந்துவகையாக இயங்கி மனம் முதலிய அந்தக்கரணங்களையும் புருடனையும் விடயங்களிற் செலுத்துமெனவுங் கூறியவாறாயிற்று.

எண்ணிலவு ஓங்கார மென்பதில் நிலவு ஓங்காரம் என்பது வினைத்தொகை. அத்தொகையை விரித்துஎண்ணத்தின்கண் நிலவிய ஓங்காரமென உரை செய்யப்பட்டது. எண்ணம் என்பது கருததலைக் குறிக்கு மேலும் இவ்விடத்தில் அந்தக்கரணங்களின் பொதுமையான மானதக்காட்சியை உணர்த்தி நின்றது.

விந்துவொடு என்றதிலுள்ள ஒடுவும், மாலோடு என்றதிலுள்ள ஓடும் எண்ணின்கண்வந்தன. அதாவது விந்துவும் மாலும் என்று எண்ணியவாறும்

இச்செய்யுளில் அயன் மால் பரமன் என்றது சுத்தவித்தையின் வைகும் பிரம விட்டுணு உருத்திரரை. பரமன் என்றது உருத்திரனைக் குறித்து நின்றது. பிரம விட்டுணு உருத்திரராகிய மூவரும் சுத்தமாயாகாரியமாகிய சுத்தவித்தையின்கண் வைகுவோரும், அசுத்தமாயாதத்துவத்தின் வைகுவோரும் என இருதிறப்படுவர். வாக்குச் சுத்தமாயையின் காரியமானதால் வாக்கை இயக்குந் தேவதைகளும் சுத்தமாயாகாரியமாகிய சுத்தவித்தையின் வைகுவோர் என அறிக.

அகர உகரம் மகரத்தாம் என்றதில் உகரத்தோடு மகர ஒற்றுப் பொருந்தியிருக்கின்றது. மகர ஒற்று இன்றியே அகர வுகர மகரத்தாம் என்றிருக்கலாம். அவ்வாறிருப்பின் ஓசை குறையும் வெண்பாத் தளையுந்தட்டும். ஆதலால் ஒற்று வேண்டாதிருக்கவும் இசைப்பொருட்டாய்மகர ஒற்று வந்து உகரம் மகரத்தாம் என நின்றது.

முதலதிகரணம் முற்றிற்று.

இரண்டாம் அதிகரணம்.

ஆன்மா அந்தக்கரணங்களைக் கூடுதற்கு ஏது ஆணவமலத்தால் அறிவு இழந்தமை எனக்கூறும் மேற்கோள்.

இனி இவ்வான்மாச் சகசமலத்தினு லுணர்வின் றென்றது

சிற்றுரை.

எ—து பே—ள் எ—னின். ஆன்மா அந்தக்காணங்களி னொன்றன்றாயின் அவற்றோடு சந்தித்து நிற்றற்கேது வென்னையென அவர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ—ள். வே—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ-ள்) இவ்வான்மா— அந்தக்கரணங்களின் ஒன்றன்றாகச் சாதிக்கப்பட்ட ஆன்மா,—சகசமலத்தினால்— முதல்வனைப்போல அந்தக்கரண முதலியவற்றின் வேறாய சேதனப்பொருளாயினுஞ் செம்பிற் களிம்புபோல வேறு காரணமின்றி மூலமலந்தன்னோடுடனாய் நிற்றலின்,—உணர்வு இன்றென்றது—தன்னியல்பான் உணருமாறின்றிக் கருவிகளைக் கூடிநின்று உணர்வதாயிற்று. எ—று.

சிற்றுரை.

ஆகந்துகமலங்களி னீக்குதற்குச் சகசமலமென விசேடிக்கப்பட்டது. படவே, உயிர் முதல்வனைப்போல் அந்தக்கரண முதலியவற்றின் வேறாய சேதனப்பொருளாயினுஞ் செம்பிற் களிம்புபோல வேறு காரணமின்றி மூலமலந் தன்னோடு உடனாய் நிற்றலிற் றன்னியல்பா னுணருமாறின்றிக் கருவிகளைக் கூடிநின்றுணர்வதாயிற்றென விடுத்தவாறாயிற்று. இதனானே மலத்துளதாமென மேற் பிரமாணத்தாற் பெறுவிக்கப்பட்ட மூலமலத்திற்கு ஈண்டிலக்கணங் கூறினாரென்பது பெறுதும். அறியாமையைச் செய்தலாகிய கேவலத்தினிகழுமியல்பே மலத்திற்குத் தன்னியல்பு: கருவிகளோடு கூடி அவத்தை யுறுவதாகிய விபரீதவுணர்வைச் செய்யுஞ் சகலத்தினிகழுமியல்பே பொதுவியல்பாகலான், மலத்திற்கு இருவகையிலக்கணமும் ஈண்டே பெறப்பட்டன.

இலக்கணவியல் நான்காஞ்சூத்திரம். உ-ம் அதி.

விளக்கம்.

இது சூத்திரத்திலுள்ள சகசமலத்துணராது அமைச்சாசேய்ப்ப அவை சந்தித்தது என்பதைப் பதச்சேதஞ்செய்து மேற்கொண்டதாகும்

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றேவெனின், மேலே அதிகாரணத் திற் கூறியவாறு ஆன்மா அந்தக்கரணங்களுள **ஒன்றன்றாயின்** அவ்வந்தக் காணங்களோடு ஆன்மாச் சந்தித்து நிற்றற்கு ஏதுவென்னையென அவ்வந்தக் கரணான்மவாதிகள் கூறும் வினவை ஆசங்கித்துக்கொண்டு சூத்திரத்தில் இரண்டாங்கூற்றைப் பதச்சேதஞ்செய்து சகசமலமாகிய ஆணவமலம் ஏதுவெனக் கூறியவாறும்.

இவ்வதிகாரணத்தில் ஆன்மாவின் உணர்வு சகசமலத்தால் தடுக்கப் படுமோ படாதோ என்பது ஐயப்பாடு. படாதென்பது பிறர்பக்கம் இவ் வாறு கூறுவோர் அந்தக்கரண ஆன்மவாதிகள் என அறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) அந்தக்கரணங்களில் ஒன்று அன்றெ னச் சாதிக்கப்பட்ட ஆன்மா முதல்வனைப்போல் அந்தக்கரண முதலியவற் றின் வேறாய அறிவுடைப்பொருளாயினும், செம்பினிடத்துக் களிம்பு அநாதியே உடனாய் நிற்றல்போல வேறு காரணமின்றி ஆணவமலம் அநா தியே தன்னோடு உடனாய் நிற்றலின் தன்னியல்பால் உணருமாறின்றிக் கருவிகளைக் கூடிநின்று உணர்வதாயிற்று எ-று.

மேற்கோளில் மலத்தினால் என்று கூறாது சகசமலத்தினாலென்று கூறியது எதற்காகவெனின், ஆணவம் கன்மம் மாயை என்னும் மலங்கள் மூன்றனுள், கன்மமும் மாயையும் ஆன்மாவை இடையே வந்து கூடின வாம். ஆணவம் அநாதியே கூடிநின்றது; இடையே வந்து கூடின மாயை கன்மங்களினால் ஆன்மாவிற்கு உணர்வு உண்டாவதேயன்றி உணர்வு தடைப்படுவதில்லை; ஆதலால் உணர்வைத் தடைசெய்யும் மலம், இடையே வந்து பொருந்திய மாயை கன்மங்களன்று என நீக்குதற்குச் சகசமலமெனக் கூறினர். ஆணவமலத்தினாலென்று கூறலாமே யெனின், இடையே வந்து கூடினதும் அநாதியே கூடினதுமான வேற்றுமையை விளக்குதற் பொருட்டுச் சகசமலம் எனக் கூறியதென்க.

மாயை கன்மங்கள் இடையே வந்து கூடினவாயின் அநாதியன்றெனக் கொள்ளவருமே. வரின், ஆதியென்றாகி ஆதியாகிய மாயை கன்மங்கள் எப்பொழுது தோன்றின என்னுங் கேள்விக்கிடனாகும். அன்றியும் ஆணவ மலத்தின் நீக்கத்தின்பொருட்டுக் கன்மத்துக்கேற்றவாறு மாயையில் இறை வன் செய்யும் பஞ்சகிருத்தியமும் அநாதியன்றெனக் கொள்ளவரும். ஆத லால் இன்னகாலத்திற் றோன்றின வென்பதின்றி ஆணவமலமும் உயி ரும் கூடினவன்றே உள்ளனவாகி அநாதியேயாம் ஆயினும் ஆணவம்

போல மாயை கன்மங்கள் உயிரோடு கலந்து நிற்பதின்றி இறைவனுக்கு உடைமைப் பொருளாய் இறைவனுக்குள் அடங்கியிருந்து ஆணவமல நிவிர்த்தியின்பொருட்டு இறைவன் கூட்ட உயிரைக்கூடும். ஆதலால் இறைவனுள் அடங்கியிருத்தல்பற்றி அநாதி யென்பதற்கும் உயிருக்கு இறைவனால் கூட்டுதல்பற்றி இடையே வந்து கூடின (ஆகந்துகம்) என்பதற்கும் இழுக்கில்லை. மும்மலங்களும் அநாதியே யென்பதனை இந்நூல் உ-ம் சூ-ம் உ-ம் அதிகரணத்தில் நெல்லிற்குமியும் என்ற வெண்பாவில் "வல்லிமலங் கன்மம் அன்றுளவாம்" என்றும், திருவருட்பயன் என்னும் நூலில் "ஏகன் அநேக னிருள்கரும மாயையிரண் டாகவிவை யாறுதி யில்" என்றுங் கூறுவனவற்றால் அறிக.

மாயை கன்மங்கள் இறைவனுக்கு உடைமைப்பொருளா மென்பதை இந்நூல் உ-ம் சூ-ம் ச-ம் அதிகரணத்து எங்குமுளன் என்ற வெண்பாவில் "அவையுடைமை" என்பதனாலும், க-ம் சூ-ம் உ-ம் அதிகரணத்து விதந்துண்டா மென்ற வெண்பாவில் "தாரகமா மத்தன்றாணிற்றல்" என்பதனாலும் அறிக. அவ்விரண்டும் இறைவனுக்கு உடைமையாயிருத்தல் எதுபோலு மெனின், அரசனுக்குள் அடங்கியிருக்கும் மந்திரிமுதலிய உத்தியோக சத்திகளும், அவற்றைத் தொழிற்படுத்தும் சட்டமும் போலுமென்றுணர்க. உத்தியோகசத்தி மாயைக்கும், அதனைத் தொழிற்படுத்துஞ் சட்டம் கன்மத்திற்கும் உவமைகளாம். யாதானும் ஒரு உத்தியோகத்தை அரசனால் தரப் பெற்றுச் சட்டப்படி நடத்துங்காலத்தும் அரசன் ஆணைக்குள் அடங்கியே நடத்தவேண்டுதல்போல மாயையின் காரியமாகிய தனுசரணபுவனபோகங்களும், அவற்றிற்கு விதிக்கப்பட்ட கன்மத்தின் காரியமாகிய இன்பத்துன்பங்களும் இறைவன் ஆணையின்வண்ணமே வருதலால் மாயை கன்மங்கள் மட்டுமன்று அவற்றின் காரியங்களும் இறைவனுக்கு உடைமையாயினவாறு அறிக.

உடைமை என்பதன் பொருள் உடையதாந்தன்மை என்பதாம். எனவே உடையானுக்கு உரிமைப் பொருளாயிருத்தல் உடைமையென்றவாறும். உரிமைப்பொருள் அறிவுடையதும் அறிவில்லாததும் என இருதிறப்படும். அவற்றுள் அறிவுடைப் பொருளாகிய உடைமை அடிமை யென்றும், அறிவில்லாத பொருளாகிய உடைமை உடைமை யென்றும் பகுத்துக் கூறப்படும்.

மேற்கோளில் மலமென்று பொதுவாய்க் கூறாமல் சகசமல மென்று விசேடித்துக் கூறியதனால் உயிர் முதல்வனைப்போல் அந்தக்கரணமுதலியவற்றின் வேறாய அறிவுடைப் பொருளாயினுஞ் செம்பிற்குக் களிம்பு அநாதியாயவாறுபோல வேறு காரணமின்றி அநாதியே மூலமலந் தன்னோடு உடனாய் நிற்றலால் தன்னியல்பால் உணருமாறின்றிக் கருவிகளைக் கூடி நின்று உணர்வதாயிற்று என அந்தக்கரணங்களோடு ஆன்மாச் சந்தித்துநிற்

றற்கு ஏது வென்னை யென்னுங் கேள்விக்கு உத்தரங் கூறியவாறாயிற்று. ஆதலால் சகசமலத்தினால் என்பதற்கு அவ்வாறு உரை செய்யப்பட்டது.

முதல்வனும் உயிரும் அந்தக்கரணங்களின்வேறான சித்துப்பொருளே யாயினும் முதல்வனுக்கு அநாதியே மலமில்லாமையினால் அந்தக் கரணங்களோடு கூடாமல் அறிவு நிகழு மெனவும், உயிருக்கு அநாதியே மலம் இருத்தலினால் கருவிகளோடு கூடிய விடத்து அறிவு நிகழும் எனவும் அதுவுஞ் சிற்றறிவெனவும அறிக.

உயிரோடு கூடியிருக்கின்ற ஆணமலம உயிரைப் பந்திப்பதுபோல இறைவனோடு கூடியிருக்கின்ற மாயாமலம் கன்மமலங்கள் இறைவனைப் பந்திக்காவோ வெனின், பந்திக்கா. ஏதனாலெனின், தன்னின் மேம்பட்ட ஒன்றை அதனிற்றாழ்ந்த தொன்று வெல்ல முடியாது. தன்னிற் றாழ்ந்த தொன்றைத் தான் வெல்லுதல் கூடும். மேம்பட்ட ஒன்றை வெல்லுங்காலத்து நாளடைவில் அதனின் மேம்பட்டே வெற்றியடைதல் கூடும். அங்ஙனமும் மேம்படுதல் இவற்றிற் கென்று மில்லை யாதலின் அதுபற்றிய ஆசங்கையில்லை. இன்னும் மாயை கன்மங்கள் இறைவனிடத்து அடங்கியிருந்தும் அவ்விறைவனைப் பந்திக்கமாட்டாமையைப் பாம்பினிடத்து அடங்கியிருக்கின்ற விடம் அப்பாம்பைக் கொல்லாமையின் வைத்துணர்ந்து கொள்க. உடைமைப் பொருளென்றதனாலும் இக்கருத்து இனிது விளங்கும்.

ஆணவமலம் உயிரினிடத்து அடங்கியிருக்குமாயின் உயிரைப் பந்திக்கமாட்டாது, மேம்பட்டிருக்குமாயின் எக்காலத்தும் மேம்பட்டிருக்கு மென்றாகித் திருவருளோடு கூடிய காலத்தும் உயிரால் நீக்கமுடியாதாகு மெனின், அங்ஙனமன்று; பந்தித்தலினாலும், திருவருளால் நீக்கப்பெறுதலினாலும், அடங்கியதுமின்றி மேம்பட்டது மின்றிச் சமமாய் உயிரின் அறிவு அளவில் கலந்துநிற்குமாதலான் அதுபற்றி வினாவின்றென்பது அறிக.

பிரமாண இயல் முதற் சூத்திரத்தில் மலத்துளதாமென ஆணவமலம் உண்டென்று கூறி அவ்வாணவமலத்திற்கு இம்மேற்கோளினால் இலக்கணங் கூறியவாறாயிற்று

ஆணவமலத்தின் இலக்கணம், சிறப்புப் பொதுவென இருவகைப்படும். அவற்றுள் சிறப்பிலக்கணம், கேவலத்தில் உயிருக்கு அறியாமையைச் செய்வது. பொதுவிலக்கணம், சகலத்தில் கருவிகளோடு கூடினவிடத்து விபரீத வுணர்வைச் செய்வது. சிறப்பியல் பெனினும் தன்னியல் பெனினும் ஒக்கும். கேவலத்தில் கருவிகளின்றித் தனித்து நின்று அறியாமையைச் செய்தலால் அது சிறப்பியல் பெனவும், சகலத்தில் கருவிகளோடு கூடி விபரீத உணர்வைச் செய்தலால் அது பொதுவியல் பெனவுங் கூறியவாறு அறிக.

விபரீத வுணர்வாவது ஒன்றைப் பிறிதொன்றாக அறிதல். கருவிகளோடு கூடிச் சாக்கிரமுதலிய அவத்தை நிகழுங்காலத்துத் தானல்லாத கரு

விகளைத் தானாகக்கொண்டு கண் கண்டதை நான் கண்டேனெனவும், காது கேட்டதை நான் கேட்டேன் எனவும் அறிதல்போல்வன விபரீதம்.

இம்மேற்கோளினாலேயே ஆணவமலத்திற்குப் பொதுச் சிறப்பு என்னும் இருவகை இலக்கணமும் பெறப்பட்ட வாறுகாண்க.

ஆணவமலத்தினால் ஆன்மாவிற்கு உணர்வில்லை யாதற்குக் காட்டும்

ஏது.

அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துக்கோடு நிற்றலான்.

சிற்றுரை.

எ—து வது எ—னின். சகசமலத்தினால் உணர்வின்றி யொழியிற் பின்கருவிகளோடு கூடியவழி அறிவுண்டாமா றியாங்ஙன மெனச் சற்காரிய வாதம் பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) அச் சகசமல மாவது ஞானத்திற்குத் திரோதகமாய் அதனை யில்லையென்னும்படி மறைத்துக்கொண்டு நிற்றலான் இனி இவ்வான்மாச் சகசமலத்தினால் உணர்வின்றென மேற்கோண்டது எ-று.

மலத்தின திலக்கணம் வடமொழி வழக்குப்பற்றிக் கூறுவார் ஞானதிரோதகமாயெனவும், அதனைத் தமிழ்மொழியான் விளக்குவார் மறைத்துக்கொடு நிற்றலா னெனவுங் கூறினாராகலான், அது கூறியது கூறலன்மை யுணர்க. திரோதக மென்னும் வடமொழி மறைத்தலைச் செய்வ தென்னும் பொருட்டாய் வினைமுதன் மேனின்ற வினைப்பெயர்.

இதனானே ஞானாபாவமே அஞ்ஞான மென்பார் மதமும் மறுக்கப்பட்டது; அபாவம் ஒரு காரியத்தைச் செய்ய மாட்டாமையின்.

விளக்கம்.

இந்த ஏது என்ன சொல்லிற்றோ வெனின், சகசமலத்தினால் ஆன்மாவிற்கு உணர்வு இல்லையாய்ப் போகுமாயின் இல்லாத உணர்வு பின் கருவிகளோடு கூடியவிடத்து எவ்வாறுண்டாகும்; முன்னில்லாமல் பின் உண்டாமாயின் உள்ளது தோன்றும் இல்லது தோன்றா தென்னும் சற்காரிய வாதத்திற்கு இழுக்காகுமே என்னும் வினாவை ஆசங்கித்துக்கொண்டு உத்தரங் கூறிச் சகசமலத்தினால் உணர்வின்று என்னும் மேற்கோளை வலியுறுத்திய வாறும்

(இந்தஎதுவின் பொருள்.) அவ்வாணவமலமாவது ஞானத்தின் றொழில் நிகழவொட்டாது செய்வதாய் அந்த ஞானத்தை இல்லை யென்னும்படி மறைத்துக்கொண்டு நிற்றலால், இனி இவ்வான்மாச் சகசமலத்தினுல் உணர் வின்றென மேற்கோள் கூறியது எ-று.

இல்லை யென்று எண்ணும்படி மறைத்தலினுல் அறிவு நிகமாமையே யன்றி அறிவு இல்லாமற் போகவில்லை யென்பதூஉம், நிகழாதிருந்த அறிவு பின் கருவிகளோடு கூடி நிகழ்ந்தது என்பதூஉம், ஆதலால் சற்காரியவாதத்திற்கு முரணில்லை யென்பதூஉங் காண்க.

திரோதகம் மறைப்பு என்பன ஒரு பொருட் சொற்கள். ஆயினும் திரோதகம் வடமொழி. மறைப்புத் தமிழ் மொழி. வடமொழி வழக்குப்பற்றி மலத்திற்கு இலக்கணங் கூறவேண்டி ஞானதிரோதகமா யெனவும், திரோதக மென்ற அதனைத் தமிழ்மொழியாலும் விளக்கவேண்டி மறைத்துக்கொடு நிற்றலான் எனவுங் கூறினர். ஆதலால் கூறியது கூற லென்னுங் குற்றமாகாமை அறிக.

அன்றியும் திரோதகம் என்னும்வடமொழி, மறைத்தலைச் செய்வதென்னும் பொருளைக் குறிக்கும்; குறிக்கவே, திரோதகமென்பது வினைமுதன் மேனின்ற வினைப்பெயர். எவ்வாறெனின், செய்வது என்றதனுல் வினைமுதலைக் குறிக்கும்; மறைத்தல் என்றதனுல் வினைப்பெயரைக் குறிக்கும். ஆகலான் என்க. வினைபபெயர்என்பது தொழிற்பெயர்.

இந்த எதுவினுல் சற்காரியவாதம்பற்றி நிகழும் வினுவிற்கு விடைகூறினது மன்றி ஞானம் இன்மையே அஞ்ஞான மென்பார் மதமும் மறுக்கப்பட்டது. அதாவது ஒளியில்லாமையைத்தான் இருளென்று கூறுவதேயன்றி இருளென்னும் ஒரு பொருளில்லை யென்றும் அதுபோல ஞானமில்லாமைதான் அஞ்ஞானமன்றி அஞ்ஞானமென ஒருபொருளில்லை யென்பர் ஒரு சாரார்; அவர்கொள்கையும் இந்த எதுவினுல் மறுக்கப்பட்டது. எவ்வாறெனின், இல்லாமை ஒரு தொழிலைச் செய்யமாட்டாது ஆதலால்என்க. அதாவதுமறைத்தற் றொழிலைச் செய்கின்றமையால் ஞானமில்லாமையே மறைத்தற்றொழிலைச் செய்யுமென்றல் கூடாது என்ற படியாம். ஒளியின்மை மறைத்தற் றொழிலைச் செய்யாதென்பது ஒக்கும். இருளின்மை விளக்குதற் றொழிலைச் செய்யாதோ எனின், செய்யாது; ஒளியே விளக்குதற் றொழிலைச் செய்யும். ஒளியும் இருளும் தனித்தனிப் பொருளாயின் ஒளியில்லாத காலத்து இருளும்; இருளில்லாத காலத்து ஒளியும் தொழில் செய்வதன் கருத் தென்னை யெனின், அவ்விரண்டும் முற்றிலும் மாறுபட்ட செயலையுடைய பொருள்களாதலால் ஒன்று தொழிற் படுங்கால் மற்றொன்று தொழிற் படாமல்அடங்கியிருந்து தொழிற்பட்டதடங்கியபோது அடங்கி

யது தொழிற்படுவதாயிற்று. இவ்வாறே ஞான அஞ்ஞானங்களிடத்துங் கண்டுகொள்க. அஞ்ஞான மில்லாமையே பேரின்பத்தை விளைவித்தது என்றுகூறும் வாக்கியத்திற்கு அஞ்ஞான மில்லாமை ஏதுவாக ஞானமே இன்பத்தை விளைவித்தது என்பது பொருளாதலால் அதுபற்றிய ஆசங்கையில்லை.

இந்த ஏது ஆன்மாவின் உணர்வு சகசமலத்தால் தடுக்கப்படாதென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

மாயாமலமே மறைத்தற் றொழிலைச் செய்யு மென்பாரை மறுதது
ஆணவமலமேமறைக்கும் என்பதற்குக் காட்டும்
உதாரணம்.

மாயா தனுவிளக்கா மற்றுள்ளங் காணாதே
லாயாதா மொன்றை யதுவதுவாய்—வீயாத
வன்னிதனைத் தன்னுண் மறைத்தொன்றுங் காட்டம்போற்
றன்னைமல மன்றணைத லான்.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், ஆகந்துகமலமே ஞானதிரோதகமாதலையும் வேறுமோர் மலமுண்டென்றல் மிகைபோலுமென ஐக்கவாதசைவர் முதலியோர்மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து ஆகந்துகமலத்தானுஞ் சகசமலத்தானுஞ் செயப்படுங் காரியங்கட்குத் தம்முள் வேற்றுமை பெரிதாமாறுணர்த்து முகத்தான் ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) உள்ளம் மாயாதனுவிளக்கு ஆக் காணாதேல் ஒன்றை ஆயாது — உயிர் (ஆகந்துகமலமெனப்படும்) மாயா காரியமாகிய உடம்பு தனக்குக் காட்டாகக்கொண்டு காணாதாயின் ஒருவிடயத்தையு மறிவதில்லையாம்,—மற்று மலம் தன்னை அன்று அணைதல் — சகசமலம் உயிரை அநாதியே பற்றி நிற்றல்,—அது அது ஆய் வீயாதவன்னிதனைத் தன்னுள் மறைத்து ஒன்று ஆம் காட்டம்போல்—(காட்ட முதலியவற்றுள்) அதுவதுவேயாய் நின்றுந் தனக்குக் கேடில்லாத வன்னியைத் தனக்குண் மறைத்து வைத்து ஒன்றேயாய் நிற்குங்காட்டம்போலும். எ—று.

எனவே, காட்டாய் நின்று விடயங்களை யறியும்வண்ணம் உயிர்க்கறிவை விளக்குதல் மாயையின் செய்தி; அவ்வறிவைத்

தடை செய்துகொண்டு நிற்றல் மலத்தின் செய்தி: இவ்விரண்டும் இங்ஙனம் ஒளியுமிருளும்போல் இகலி நிற்பனவாகலான் அத்தன்மைத்தாய மாயை இத்தன்மைத்தாய மலமாதல் யாண்டையதென மறுத்தவாறாயிற்று.

மற்றென்பது மலமன்றணைத லென்பதனோடியைந்து வினைமாற்றின்கண் வந்தது.

முற்றும்மை சிறப்பும்மைகள் தொக்கன.

ஆமுந் தானுங் கட்டுரைக்கண் வந்த அசை.

வன்னி அது அதுவாதல் காட்டத்துண் மறைந்துழிக் காட்டமேயாயுஞ் சூரியகாந்தத்துண் மறைந்துழி அதுவேயாயும் இவ்வாறே அவ்வவற்றின் மறைந்துழித் தானென்பதொன்றில்லையென்னும்படி நிற்றல். அங்ஙனமாகியும் வியாமை, கடைதன் முதலிய தொழிற்பாடு நிகழ்ந்தவழித் தோன்றுதலாற் பெற்றாம். தன்னுண் மறைத்தல் வன்னியென்பதொன்றில்லை யென்னும்படி பொதிந்துகொண்டு தானே யாதல். ஒன்றாங்காட்டம் ஒன்றே போல் அத்துவிதமாங் காட்ட மென்றவாறு. இவ்வாறு உவமைக்கோதிய அடையுந் தொழிலும் இயைபும் பொருட்கண்ணுங் கூறிக்கொள்க.

மாயை கன்மங்கள்போல ஆதியன்றெனக் காலத்தானும் வேற்றுமை கூறுவார் அன்றணைத லென்றார்.

இங்ஙனங் கூறிப்போந்த மலமாவது ஞானாபாவமென்பாரும், பிராந்திஞான மென்பாரும், தமோகுணமென்பாரும், பஞ்சக்கிலேசத்துள் ஒன்றாகிய அவிச்சையென்பாரும், மாயை கன்மங்களென்பாரும், சிவசத்தியென்பாரும், உயிர்க்குண மென்பாருமாய் அவ்வச்சமயநூல்பற்றி மயங்குவாரு முளர். அம்மலத்திற்குப் பற்றுக்கோடாகிய சூனிய முதலியவற்றின் வேறெனப்பட்ட ஆன்மாவும் இயற்கையாற் சடமென்பாரும், அறிவுமாத்திரையே யெனக் குணிப்பொருளன்றென்பாரும், சுதந்திர வறிவுடைத்தென்பாரும், அவ்வவ்வுடம்பளவிற்றென்பாரும், அணுவளவிற்றென்பாரும், உருவென்பாரும், அருவென்பாரும், உருவருவென்பாருமாய் இன்னும் பலதிறப்படக்கூறி மயங்குவாருமுளர். அவையெல்லாம் பொருந்தாமை ஆகமங்களுட் காண்க. ஈண்டுரைப்பிற் பெருகும்

இச்சகசமலம் ஞானதிரோதகமாய், திரவியமாய், அறியாமைக் குணத்ததாய், செம்பிற் களிம்புபோல உயிரின் குற்றமாய், அநாதிபந்தமாய்ச், சடமுமாய்ப் பலவுமாயின் அழிவெய்துமாகலின் அநாதிபந்தமாதல் பெறப்படாமையின் ஒன்றேயாய், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னும் உயிர்ப்பாகுபாட்டிற் கேதுவாய், உயிர்கடோறுந் தனித்தனி வெவ்வேறாய் மறைத்து நின்று தத்தங்கால வெல்லையி னீங்குவனவாகிய சத்திகள் பலபலவுடைத்தாய், உயிர்கண் மூன்றவத்தைகளும் படுதற்கு மூலகாரணமாய், நித்தமாய். வியாபகமாய், வியாபகவுயிர் அணுத்தன்மைப்படுமாறு செய்தலின் ஆணவமென்னும் பெயர்த்தாய், பசுத்துவம் பசுநீகாரம் மிருத்தியு மூர்ச்சை மலம் அஞ்சனம் அவித்தை ஆவிருதியென்றற் றொடக்கத்துக் காரணக்குறிகளு முடைத்தாய் நிற்பதெனவும், படலம் படர்ந்தகண் ஞாயிற்றின் சந்நிதியினிற்பினும் படலத்தான் அவ்வொளியை யிழந்து இருளினழுந்துமாறுபோல முதல்வன் சந்நிதியினிற்பினுஞ் சோபான முறையின் அறிவிக்க அறியுந்தன்மைத்தாய உயிர் அநாதியே யறிவித்தால் அறியமாட்டாமையின் அம்மாட்டாமையான் அவ்வறிவை இழந்து அறியாமையாய் அழுந்துதலின் அஃதவ்வுயிர்க்குப் பந்தமாயிற்றெனவு முணர்க. அநாதியே மலத்தினீங்குதல் முதல்வன் வினையாய் அநாதிமுத்தத் தன்மையென எண் குணங்களுள் வைத்தெண்ணப்படுவதென்பது சிவாகமங்களுக்கெல்லாம் ஒப்பமுடிந்தாற்போல அநாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின் வினையாய் உயிர்க்குற்றங்களுள் வைத்தெண்ணப்படுவதென்பதூஉம் அவற்றிற்கெல்லாம் ஒப்பமுடிந்தது. ஈண்டுப்படுங் கடாவிடைகளெல்லாம் ஈரிடத்துமொக்கும்.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) உள்ளம் மாயா தனுவிளக்கு ஆக் காணுமேல் ஒன்றை ஆயாது மற்று மலந்தன்னை அன்று அணைதல் அது அது ஆய் வீயாத வன்னிதனைத் தன்னுள் மறைத்து ஒன்று ஆம் காட்டம்போல்.

இவ்வுதாரணம் என்னை சொல்லிற்றோவெனின், இடையேவந்து கூடிய ஆகந்துகமாகிய மாயாமலமே ஞானத்தை மறைக்குமென்றல் கூடும்; அதனின் வேறாகச் சகசமலமென ஓர் மலம் உண்டென்றல் மிகையென்னுங் குற்றமாம் என ஐக்கவாத சைவர் முதலியோர் கூறுவர்; அவர் கூற்றை ஆசங்கித்துக் கொண்டு ஆகந்துக மலமாகிய மாயையினானும் சகசமலமாகிய ஆணவத்தினானும் செய்யப்படுங் காரியங்கட்குத் தம்முள்வேற்றுமை பெரி

தாம் என்பதை உணர்த்தி அதனல் சகசமலமே ஞானத்தை மறைக்கும் என்னும் ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) உயிர் மாயாகாரியமாகிய உடம்பை விளக்காகக் கொண்டு விடயங்களைக் காணும்; உடம்பாகிய விளக்கு இல்லையாயின் ஒருவிடயத்தையும் அறிவதில்லை. விளக்கு இல்லையாயின் என்றதனல் இல்லாத காலமும் உண்டென்பது பெறப்படும். உடம்பு இல்லாத காலத்து அறிவு நிகழவொட்டாமற் செய்வது ஆணவமலம். சகசமலமாகிய அவ்வாணவ மலம் உயிரை அநாதியேபற்றிநிற்கும்; அவ்வாறுபற்றிநிற்றல் எதுபோலுமெனின், விறகு கல் இரும்பு முதலியவற்றில் கடைதற்கு முன் அக்கினி அதுவதுவேயாய்க் கேடின்றி நின்றும் கேடில்லாத அவ்வக்கினியை விறகு முதலியன தமக்குள் மறைத்துவைத்து அவ்வக்கினியோடு ஒன்றேயாய் நிற்பது போலும் எ-று.

(க - ரை.) மாயை விளக்குப் போலும், ஆணவம் இருள்போலும், அவ்வாணவம் உயிரை அநாதியே கூடிநிற்றல் அக்கினியை விறகு அநாதியே கூடி நிற்றல் போலுமாம் என்பதாம்.

இவ்வெண்பாவில் மாயை விளக்குப்போலும் எனவும், சகசமலம் உயிரை அநாதியே பற்றி நிற்றல் அக்கினியை விறகு பற்றி நிற்றல் போலும் எனவும் அத்துணையே கூறப்பட்டிருக்கின்றன. இவ்வாறு கூறியதனல் ஆணவமலம் இருள் போலெனவும் அவ்விருளினலுண்டாகிய அறியாமையை நீக்குதற்கு மாயாகாரிய மாகிய விளக்கு உயிரைக் கூடிற்று எனவும் குறிப்பாகக் கொள்ளக் கிடத்தலினல் அவற்றை விரித்துப் பொழிப்புரையுங் கருத்துரையுஞ் செய்யப்பட்டன.

இதனல் விளக்காய் நின்று விடயங்களை அறியும்வண்ணம் உயிருக்கு அறிவை விளக்குதல் மாயையின் செய்தி; விடயங்களை அறிய வொட்டாமல் அவ்வறிவைத் தடைசெய்துகொண்டு நிற்றல் ஆணவமலத்தின் செய்தி; மாயையும் ஆணவமுமாகிய இவ்விரண்டும் இவ்வாறு ஒளியும் இருளும்போல் மாறுபட்டு நிற்பனவாகலான் ஒளி போன்றதாகிய மாயை இருள்போன்றதாகிய ஆணவமாவது எவ்வாறு கூடுமெனக் கூறி மாயையின் வேருய் ஆணவமலம் உண்டென்றல் மிகை என்பாரை மறுத்தவாருயிற்று.

செய்யுளில் மற்றுஎன்பது மலம் அன்றணைதல் என்பதனேடு பொருந்நி மற்றுமலம் அன்றணைதல் என வினை மாற்றின்கண் வந்தது; அதாவது ஆகந்துகமாகிய மாயையின் காரியமாகிய தனு அறிவைவிளக்கும்; அதற்கு மாருக சகசமலம் அறிவைத் தடைசெய்யும் என்னும் பொருள்படப்பது.

ஆயாதாம் ஒன்றை என்றதில் முற்றும்மையும், அதுவதுவாய் என்றதில் சிறப்பும்மையுந் தொக்கு நின்றன. அவற்றை விரித்து ஒரு விடயத்தையும் எனவும், அதுவதுவேயாய் நின்றும் எனவும் உரைசெய்யப்பட்டது.

ஆயாதாம் என்றதிலுள்ள ஆம் என்பதும் அணைதல் தான் என்பதிலுள்ள தான் என்பதும் உறுதி மொழிக்கண்வந்த அசை.

அக்கினி அதுவதுவாதல் எவ்வாறெனின், விறகினுள் மறைந்து நின்றவிடத்து விறகேயாயும் சூரிய காந்தத்துள் மறைந்துநின்றவிடத்துச் சூரிய காந்தமேயாயும், இவ்வாறே பிறவற்றுள் மறைந்தவிடத்தும் அக்கினியென்பது ஒன்றில்லை என்னும்படி நிற்றலாம். அவ்வாறாயின் அக்கினி உண்டென்பதை எவ்வாறு அறிகின்றோமெனின், கடைதல்முதலிய தொழிற்பாடு நிகழ்ந்தவிடத்துத் தோன்றுதலினால் அறிகின்றோம். விறகு, தன்னுள் அக்கினியை மறைத்தல் எவ்வாறெனின், அக்கினி விறகினுள்ளிருந்தும் இருப்பதாகத்தெரிய வொட்டாது இல்லையென்று சொல்லும்படி அவ்வக்கினியைப் பொதிந்துகொண்டு விறகேயாய் நிற்றலாம். செய்யுளில் ஒன்றாங்காட்டம் என்றது அக்கினியும் விறகுமாகிய இரண்டும் இருந்தும் இரண்டாகப் பிரித்தறியவாராது ஒன்றேபோல் அத்துவிதமாயிருக்குங் காட்டமென்றவாறு. இவ்வாறு உவமைக்கோதிய அடையுந்தொழிலும் இயையும் பொருட்கண்ணுங் கூறிக்கொள்க. அடையாவது அதுவதுவாய் வியாத என்பது. தொழிலாவது மறைத்தலும் கடைதலும். இயைபாவது ஒன்றேபோல் அத்துவிதமாதல். இம்மூன்றனையும் பொருளின்கண் எவ்வாறு கொள்வதெனின், பொருளாவது ஆணவமலமும் உயிருமாம். விறகுபோல ஆணவமலம்; அக்கினிபோல உயிர். விறகுமுதலியவற்றில் அதுவதுவாய் நின்று கேடில்லாதிருக்கும் அக்கினிபோல ஆணவமலத்தில் அதுவாய் நின்று கேடில்லாதிருப்பது உயிர். அக்கினியிருந்தும் அது இருப்பதாகத்தெரியவொட்டாமல் விறகு மறைத்து வைத்தல்போல உயிர் இருந்தும் அது இருப்பதாகத் தெரியவொட்டாமல் ஆணவமலம் மறைத்து நிற்கும். அக்கினி யிருக்கின்றதென்பது கடைந்தபின் வெளிப்படுதலால் தெரிவதுபோல உயிர் இருக்கின்றதென்பது கருவிகளோடு கூடினவிடத்து அறிதலினால் தெரியப்படும். விரகும் அக்கினியும் பொருளால் இரண்டேயாயினும் ஒன்றேயென்னும்படி அத்துவிதமாதல்போல ஆணவமும் உயிரும் பொருளால் இரண்டேயாயினும் ஒன்றேயென்னும்படி அத்துவிதமாய் நிற்கும். கடைதலினால் அக்கினி வெளிப்பட்டுத் தோன்றி விறகைக்கெடுப்பதுபோலக் கருவிகளோடுகூடிச் சகலாவத்தை சுத்தாவத்தைகளை அடைந்து ஆணவமலத்தைக் கெடுக்கும். அக்கினிதனித்து நிற்பதின்றி யாதானும் ஒன்றைப் பற்றி அதுவதுவாய் நிற்பதுபோல உயிர் தனித்து நிற்பதின்றி யாதானும் ஒன்றைப்பற்றி அதுவாய் நிற்கும். இக்கருத்துப்பற்றியே உயிரை "வசித்திடவரும் வியாபி" எனச் சிவஞான சித்தியாரில் வழிநூலாசிரியர்

கூறுவாராயினர். ஒன்றாய் அத்துவிதமாய் நிற்றலைத் தாயுமான சுவாமிகள் "ஆணவத்தோடத்துவிதமானதுபோல்" எனக்கூறியதனாலும் அறிக. இவ்வாறு பொருளின்கண் கூறிக்கொள்க. பொருள் என்பது உவமேயம்.

மாயை கன்மங்கள்போல ஆதியன்றெனக் காலத்தானும் வேற்றுமை கூறவேண்டி அன்றணைதலென்றார். காலத்தானும் என்றதிலுள்ள உம்மை இடத்தானும் என்றதைத்தழுவும். அதாவது மாயை கன்மங்கள் இறைவனுக்கு உடைமைப் பொருளாதலால் அவற்றிற்கு இடம் இறைவன். ஆணவமலத்திற்கு இடம் உயிர். ஆகவே இடத்தால் ஆணவமலத்திற்கும் மாயை கன்மங்களுக்கும் வேற்றுமை உண்டென்பது பெறப்படும். இனி ஆணவமலம் அன்றணைதல் என்றதனால் மாயை கன்மங்கள் உயிரை அநாதியே கூடவில்லையென்றும், இடையே கூடினவென்றும் ஆகிக் காலத்தானும் வேற்றுமை உண்டென்பது பெறப்படும். இவ்வாறு இருக்கும் இடத்தானும் பற்றுங் காலத்தானும் மாயை கன்மங்களுக்கும் ஆணவமலத்திற்கும் வேற்றுமை உண்டென்பது காட்டவேண்டி மலம் அன்றணைதல் என்றாரென அறிக. இன்னும் விளக்குதற் றொழிலாலும் மறைக்குந்தொழிலாலும் வேற்றுமை உண்டெனவும் அவ்வும்மையாலறிக.

இவ்வாறு உயிர் போலத் தனிப்பொருளாய் அவ்வுயிரை அநாதியே கூடி நிற்குமென்று கூறி முடித்த ஆணவமலத்தைப் பிறர் வேறுவேறுவிதமாய்க் கூறுவர். அவை வருமாறு:—ஞானமில்லாமையே அதுவென ஒருசாராரும், மயக்கஞானமே அதுவென ஒருசாராரும் தமோகுணமே ஆணவமலமென ஒருசாராரும், அவிச்சை அகங்காரம் அவா ஆசை கோபம் என்னும் பஞ்சக்கிலேசத்துள் ஒன்றாகிய அவிச்சையே ஆணவமலமெனச் சாங்கியரும், மாயைகன்மங்களே ஆணவமலமென ஐக்கவாதி பாசுபதிமுதலியோரும், சிவசத்தியே ஆணவமலமென ஒருசாராரும் உயிரின் குணமே ஆணவமலமெனப் பாடாணவாதிகளும். அவரவர் சமயநூல்பற்றி மயங்கிக் கூறுவர். அவ்வாணவ மலத்திற்குப் பற்றுக் கோடாயும் சூனிய முதலியவற்றின் வேறாயுமுள்ள ஆன்மாவையும் இயற்கையினால் சடமென வைசேடிகரும், அறிவுமாத்திரையான குணமேயன்றிக் குணிப்பொருள் அன்றெனச்சாங்கியரும், சுதந்திர அறிவுடையது எனப் பாட்டாச்சாரியரும், எந்த எந்த உடம்பைப்பற்றிற்றோ அந்தவந்த உடம்பளவாய் வியாபித்து நிற்பது எனச் சமணரும், அணு அளவுடையதெனப் பாஞ்சராத்திரிகளும், உருவமெனப் பௌராணிகரும், அருவம் எனப் பாதஞ்சலரும், அருவுருவம் எனக் கவுளரும் இன்னும் பலதிறப்படக் கூறி மயங்குவர். அவர் கூறுவனவெல்லாம் பொருந்தாமை ஆகமங்களுட் காண்க. சிவஞானசித்தியார் ௪-ம் சூ-ம் ௧-ம் அதிகரணத்தில் ஆன்மாவைப் பற்றியும், ஷை நூல் ௨-ம் சூ-ம் ௪-ம் அதிகரணத்து ஒழிபில் ஆணவமலத்தைப்பற்றியுங் கூறியிருத்தலால் அவ்விடங்களினுங் காண்க. இவ்விடத்துக் கூறிற் பெருகும்.

இந்தச் சகசமலமாகிய ஆணவமலம் உயிரின் அறிவை மறைப்பதாய், தனிப்பொருளாய், அறியாமையே குணமாக உடையதாய், செம்பிற்குக் களிம்பு குற்றமாவதுபோல உயிருக்குக் குற்றமாய், உயிருக்கு அநாதி பந்தமாய், அறிவில்லாத சடமுமாய்ப் பலவுமாயிருப்பின் நாசமடையுமாதலின் ஒன்றேயாய், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் உயிர்ப்பாகுபாட்டிற்கேதுவாய். உயிர்கள்தோறும் தனித்தனி வேறு வேறு விசமாய் மறைத்துநின்று நீங்கவேண்டிய காலத்தில் நீங்குவனவாகிய சத்திகள் பலப்பலவுடைத்தாய், உயிர்கள் கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்றவத்தைகளையும் அடைதற்கு மூலகாரணமாய், நித்தமாய், வியாபகமாய், வியாபகத் தன்மையுடைய உயிர் அணுத்தன்மையைப் பொருந்தும் வண்ணம் செய்தலினால் ஆணவம் என்னும் பெயருடையதாய், பசுத்துவம் பசுநீகாரம் மிருத்தியு மூர்ச்சை மலம் அஞ்சனம் அவித்தை ஆவிருதி யென்பன முதலான காரணக்குறிகளும் உடையதாய் நிற்பதென அறிக.

பசுத்துவம்—உயிருக்குப் பசுத்துவத்தைச் செய்தல். பசுநீகாரம்—பசுவின் அறிவை மூடல். மிருத்தியு—உயிரைச் சீவிக்கவொட்டாது செய்தல். மூர்ச்சை—மயங்கிக்கிடக்கச்செய்தல். மலம்—அசுத்தமாக்கல். அஞ்சனம்—இருள்போல நிற்றல். அவித்தை—அறியாமையைச் செய்தல். ஆவிருதி—மறைத்தல்.

இன்னும் படலமாகிய மாசுபடர்ந்தகண் சூரியன் சந்நிதியில் நிற்பினும் படலத்தால் சூரியன் ஒளியை யிழந்து இருளின் அழுந்துமாறுபோல இவ்வாணவமலத்தால் பந்திக்கப்பட்ட உயிர் முதல்வன் சந்நிதியில் அநாதியே நிற்பினும் படிமுறையாக அறிவிக்க அறியுந் தன்மையுடையதாய் அநாதியே அறிவித்தால் அறியமாட்டாததாய் அவ்வாறு அறியமாட்டாமையினால் முதல்வனானுண்டாம் அறிவை யிழந்து ஆணவ மலத்தினாலுண்டாம் அறியாமையாய் அழுந்துதலின் அவ்வாணவமலம் உயிருக்குப் பந்தமாயிற்றெனவும் அறிக.

அநாதியே மலத்தின் நீங்குதல் முதல்வனுக்கு இயல்பாயினும் அது முதல்வன் வினையாய் அநாதி முத்தத்தன்மையென எண்குணங்களுள் வைத்தெண்ணப்படுவது சிவாகமங்களுக்கெல்லாம் ஒப்பமுடிந்தாற்போல, அநாதியே மலத்தைப் பற்றுதல் உயிர்க்கு இயல்பாயினும் அது வினையாய் அது உயிர்க்குற்றங்களுள் வைத்தெண்ணப்படுவ தென்பதூஉம் அச்சிவாகமங்களுக்கெல்லாம் ஒப்பமுடிந்தது. உயிரினிடத்துள்ளபற்றுந் தன்மையைத் தான் திருவானைக்காப்புராணத்தில் "வன்மலவேர்" எனக் கூறப்பட்டது. இவ்விடத்து உண்டாம் சங்கை உத்தரங்களெல்லாம் ஈரிடத்தும் ஒக்கும்.

மேற்கூறியபடி சடமாயும் பலவாயுமிருப்பின் அழிவதற்கும், சடமாயும் ஒன்றாயுமிருப்பின் அழியாமைக்குங் காரணம் என்னையெனின், பலவாயிருப்பின் ஏகதேசப்பட்டு இடத்தால் அளவுக்குட்பட்டிருக்கும்.

ஒன்றாயிருப்பின் வியாபகமாயிருக்கும். இடத்தின் அளவுக்குட்பட்டதொன்று காலத்தின் அளவுக்கும் உட்படும். எவ்வாறெனின், ஒரு இடத்திலிருப்பது பிறிதோரிடத்தில் இல்லாமைக்குக் காரணம் வேண்டப்படும். படவே, அந்தக்காரணம் கன்மமென்றாகி அக்கன்மம் செய்யப்படுவதாய்ச் செய்தபொழுதே அழியப்பட்டுப் பின் பக்குவமானபொழுது பலன்றருமாதலால் இடத்தின் அளவுக்குட்பட்டது காலத்துக்குட்படுமாறும் அறிக. இவ்விரண்டுக்கும் உட்பட்டதொன்று தோன்றி யழியும். உட்படாதது வியாபகமாதலால் தோன்றுதலுமில்லை, அழிதலுமில்லை.

நாசமடையுமாயின் அநாதிபந்தமாதல் பெறப்படாதென்பது எவ்வாறெனின், மேற்கூறியபடி நாசமடைவதொன்று ஒருகாலத்திற் றோன்றியதாகவே யிருக்குமாதலால் அநாதிபந்தமாதல் செல்லாமை யறிக. அநாதியென்பது ஆதியில்லாதது. ஆதியென்பது காலத்தால் வரையறுக்கப்படுவது. ஆகவே அநாதியென்பது காலத்தால் வரையறுக்கப்படாதது என்றவாறாம்.

உயிரின் பாகுபாட்டிற்கு ஆணவமலம் காரணமாவது எவ்வாறெனின், ஆணவமலத்தின் சத்தி பலவாதலால் அசுத்த மாயாகாரியம், பிரகிருதிமாயாகாரியங்களைக் கூட்டாமல் சுத்த மாயாகாரியத்தைக் கூட்டி ஆணவமலத்தை நீக்குதற்குரிய மறைப்பினையுடைய உயிரை விஞ்ஞானாகலரென்றும், சுத்த மாயாகாரியம் அசுத்த மாயாகாரியம் இரண்டனையுங் கூட்டி ஆணவமலத்தை நீக்குதற்குரிய மறைப்பினை யுடைய உயிரைப்பிரளயாகலரென்றும், மூன்று மாயாகாரியங்களையுங் கூட்டி ஆணவமலத்தை நீக்குதற்குரிய மறைப்பினை யுடைய உயிரைச் சகல ரென்றும் பிரித்தவாறாம். சுத்த மாயாகாரியம் மயக்கத்தையும் விருப்பு வெறுப்பையும் உண்டுபண்ணாது விசேட அறிவை உண்டுபண்ணுதலினாலும் ஆணவமலம் இருத்தலினாலும் அவ்வுயிரை ஒரு மல முடைய விஞ்ஞானாகலரென்றும், அசுத்த மாயாகாரியம் அராகமுதலிய தத்துவங்களாய் விருப்பு வெறுப்பை உண்டுபண்ணு மாதலானும் ஆணவமலம் இருத்தலினாலும் அவ்வுயிரை ஆணவம் கன்மமென்னும் இருமல முடைய பிரளயாகல ரென்றும், பிரகிருதி மாயாகாரியம் போகம் அனுபவித்தற்குத் துணையாதலானும் போகமெல்லாம் மாயாகாரிய மாதலானும் அவ்வுயிரை ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலமுடைய சகல ரென்றும் பிரித்தமையறிக. விஞ்ஞானாகலருக்கு விஞ்ஞானத்தால் மலம் அறுதலும், பிரளயாகலருக்குப் பிரளயத்தில் மலம் அறுதலும் நிச்சயமானதால் அந்த நிச்சயம் பற்றி விஞ்ஞானத்தால் கலையற்றவர், பிரளயத்தில கலையற்றவர் என்று இறந்தகாலத்தாற் கூறப்படும். ஏனைய வெல்லாம் சிவஞான சித்தியார் எட்டாஞ் சூத்திரம் இரண்டாவது செய்யுளின் விசேட வுரையிற் கூறியிருத்தலால் அவ்விடத்துக் காண்க. விஞ்ஞானாகலருக்கு மாயை கன்மங்களும், பிரளயாகலருக்கு மாயையும் இல்லையாயின் அங்குள்ள போக அனுபவங் கூடாதே

யெனின், மாயையென்பது கருத்துவகையால் பிரகிருதிமாயையைக் குறிக்குமாதலால் அவ்விருவருக்கும் மாயையில்லையென்றும், விஞ்ஞானகலருக் போகானுபவம் ஆணவமலபரிபாகத்தினாலேயே யாதலின் அவருக்குக்கன்மமில்லையென்றுங் கூறியவாறும். ஆகலின் போகானுபவங் கூடுமென்க.

அநாதியே அறிவித்தால் உயிர் அறியாமை எதுபோல வெனின், தந்தையொருவன் மகனுக்குப் பிறந்த அன்றே தன் உரிமையைக் கொடுப்பின் ஏற்று வகிக்கமுடியாமைபோல உயிரும் முதல்வனும் அநாதியே அத்துவிதமாய்க் கலந்து நிற்பினும் அநாதியே முதல்வன் அறிவித்தால் உயிர் அறியாது. தந்தை சிற்றறிவும் சிறு தொழிலும் உடையனாதலால் மகனுக்கு அறிவிக்கமுடியாதென்பது பொருந்தும். இறைவன் முற்றறிவும் எல்லாவல்லபமும் உடையனாதலால் உயிருக்கு அநாதியே அறிவிக்க முடியாதென்பது எவ்வாறு பொருந்துமெனின், இயற்கைக்கு விரோதமாகச் செய்தல் வல்லபத்துக்கு இலக்கண மன்று, முட்டின்றிச் செய்தலே வல்லபத்திற்கு இலக்கணமாம். மலத்தின் சத்தி சிறிது சிறிதாகக் குறையின் அதற்கேற்ப அறிவு சிறிது சிறிதாக வளரும் இயற்கையை அறிதலின் முற்றறிவிற்குக் குறைவில்லை. அதற்கு வேண்டுவன யாவுந் தடையின்றிச் செய்தலால் வல்லபத்திற்குங் குறைவில்லை. ஆதலால் அநாதியே அறிவிக்காமை பொருந்துமென்க.

எண் குணங்களாவன:—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்ப முடைமை என்பனவாம். இவ்வெண்குணங்களும் இறைவனுக்கு இன்றியமையாது வேண்டப்படு மென்பது சிவஞான சித்தியார் ஒன்பதாஞ் சூத்திரம் கஉ-வது செய்யுள் விசேடவுரையிற் கூறியிருத்தலால் அவ்விடத்துக்காண்க. இவ்வெட்டுங் குணமாயிருக்கவும் இயல்பாகவே பாசங்களி னீங்குதலாகிய அநாதியே மலத்தினீங்குதலை முதல்வன்வினை யென்று கூறியது என்னையெனின், குணம் வினையை உடையது ஆதலால் குணம் வினை யென்று கூறப்படும். உதாரணமாக அக்கினியின்குணம் சூடு. சூடு சுடுதற்றொழிலையுடையது. ஆதலால் சூட்டை யுடையது அக்கினி என்றும், சுடுதற்றொழிலுடையது அக்கினி யென்றும் வழங்கி வருகின்றன. சுடுதற் றொழிலுடையது அக்கினி யென்றவிடத்து சுடுதல் அக்கினியின் வினையாயிற்று. ஆனால் அவ்வினை அக்கினி உள்ளவன்றே அநாதியாய் அவ்வக்கினியினிடத்திலுள்ளது. இவ்வாறே அநாதியே மல மில்லாமையாகிய அநாதி முத்தத்தன்மை இறைவனுக்குக் குணம். மலமில்லாமையாகிய குணம் மலத்தில் நீங்குதலாகிய தொழிலை யுடையது. ஆகலால் மலத்தில் நீங்குதலை யுடையவன் இறைவன் என்ற விடத்து நீங்குதல் முதல்வன் வினை யாயிற்று. இவ்வினை அநாதியே யுள்ளது. இவ்வாறே அநாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின்வினை எனப்படும். உயிருக்குமலங் குணமன்று.

மலம் தனிப்பொருளென்பது மேலுங் காட்டப்பட்டது. அவ்வாறுயின் குணத்தையே வினைபோலக் கூறிய முதல்வன் இலக்கணத்தோடு எவ்வாறு பொருந்துமெனின், உயிருக்குக் குணம் அறிவு. குற்றம் பற்றுந்தன்மை. இது, செம்பிற்குக் குணம் பிரகாசமும் குற்றம் களிம்பைப் பற்றுதலும் போலாம். இது அநாதிசெயற்கை. குற்றம் என்பது குணத்திற்கு எதிர்மறையாதலால் இறைவனுடைய எண்குணங்களுக்கு எதிர்மறையான எட்டும் உயிரின் குற்றமென அறிக. அவற்றுள் பற்றுதலாகிய அக்குற்றம் பற்றுதற்றொழிலை யுடையது. ஆதலால் பற்றுந் தன்மையுடையது உயிர் பற்றுதற்றொழிலையுடையது உயிர் என வழங்கப்படும். இவ்வுண்மையைக் குறளில் "பற்றற்றான்" என முதல்வனைக் கூறியதனாலும் அறிக. இனிப்பற்றுதல் என்றதனால் பற்றப்படும் பொருள் உண்டென்பது தானே பெறப்படும். பொருளின்றேல் பற்றுதற் றொழிலுமில்லை. ஆகவே பற்றுதற் றொழிலாகிய குற்றமும் பற்றப்படும் பொருளாகிய மலமும் அநாதியே உள்ளனவாய் அநாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின் வினையாய் உயிரின் குற்றங்களுள் ஒன்றாகவைத் தெண்ணப்படுவதாயிற்று. இது இயல்பாகவே பாசங்களில் நீங்குதலாகிய இறைவன் குணத்திற்கு எதிர்மறையானகுற்றம். குறளில் 'பற்றற்றான்' என்றதும் இயல்பாகவே பாசங்களில் நீங்கி நிற்றலைக் குறித்தவாறென அறிக. ஏனைக் குற்றங்களாவன:—சுதந்தரமில்லாமை, தூயவுடம்பில்லாமை, இயற்கையுணர்வில்லாமை, முற்றும்உணர்தலில்லாமை, பேரருளில்லாமை, முடிவிலாற்றலில்லாமை, வரம்பிலின்பமில்லாமை என்பனவாம்.

இரண்டாம் அதிகரணம் முற்றிற்று.

மூன்றும் அதிகரணம்.

உயிர் அந்தக்கரணங்களைக் கூடினவிடத்து ஐந்தவத்தைப் படும் எனக்கூறும்

மேற்கோள்.

இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சோப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்தையு நிற்கு மென்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், இருளினகப்பட்டகண் விளக்கோடு கூடிய வழி விடயங்களைக் காண்டலேயன்றி வெவ்வே றவத்தைப் படுமாறில்லை. அதுபோல மலத்திலகப்பட்ட உயிர் கருவிகளோடு சந்தித்தவழி ஒருதன்மைத்தா யறிதலே அன்றிவேறு பட்டதை அவஸ்

நன்றி மேலேச் சூத்திரத்தோதிய முறையான் ஐம்புல னறிந்தும் ஒடுக்க மறிந்தும் உண்டிவினையின்றிக் கிடந்தும் உணர்த்த உணர்ந் தும் இங்ஙனம் வெவ்வேறு அவத்தைப்படுமா றியாங்ஙனமென அவர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இறுதிக்கூற் றைக் கண்ணழித்துரைத்துமேற்கோடனுதலிற்று.

இ-ள். வே-டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ-ள். இவ்வான்மா—அந்தக்கரணங்களோடு கூடிய ஆன்மா,- சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதமாயுள்ள—சகச மலத்துணராது அமைச்சரசேய்ப்ப நிற்றலாற் படை கொடுபவனி போதும் வேந்தன் கடைதொறும் விட்டுவிட்டுக் காவலுமிட் டந் தப்புரத்திற் செல்லுமாறுபோலச் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதமாயுள்ள,—பஞ்சாவத்திதனுய் நிற்குமென்றது— அஞ்சவத்தை யுடையவனாய் நிற்பன் எ-று.

சிற்றுரை.

அவத்தை யெனப்படுவன பலவுளவாகலின் அவற்றுள் ஈண்டு ஐந்தவத்தை யெனப்பட்டவை யாவை யென்னும் ஐயநீக்குதற்குக் கிளந்தெடுத்துரைத்தார்.

அவத்திதன் என்னும் வடமொழி ஆடூஉவறிசொல்லாற்கூறி யது அம்மதம் பற்றி.

அமைச் சரசேய்ப்ப நிற்றலாலென்ட்தூஉம் ஈண்டு வருவித்து ரைத்துக் கொள்க. கொள்ளவே "படைகொடு பவனிபோதும்" வேந்தன் "கடைதொறும் விட்டுவிட்டுக் காவலு மிட்டு" அந்தப் புரத்திற் செல்லுமாறுபோல ஆன்மா அங்ஙனம் அஞ்சவத்தைப் படுதல் அமைவுடைத்தென விடுத்தவாறாயிற்று.

விளக்கம்.

இது சூத்திரத்திலுள்ள அமைச்சர சேய்ப்பநின்றஞ்சவத் தைத்தே என்பதைப் பதச் சேதஞ் செய்து மேற் கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்னசொல்லிற்றோ வெனின், இருளில் அகப்பட்ட கண் விளக்கோடு கூடியவிடத்து விடயங்களைக்காண்டலாகிய ஒன்றேயன்றி வேறு வேறு அவத்தைபடுவதில்லை. அதுபோல ஆணவமலத்தில் அகப

பட்ட உயிர் கருவிகளோடு கூடியவிடத்து ஒரு தன்மையாய் அறிதலே பொருத்தமாகும். அவ்வாறன்றி மூன்றாஞ் சூத்திரத்தில் ஓதியவாறு ஐம் புலன்அறிந்தும், ஒடுக்கம்அறிந்தும், உண்டிவினையின்றிக் கிடந்தும், உணர்த்த வுணர்ந்தும், இவ்வாறு வேறு வேறு அவத்தைப் படுமென்றல் எவ்வாறு பொருந்துமென அவ்வந்தக்கரணான்மவாதிகள் கூறும் வினாவை ஆசங்கித்துக்கொண்டு சூத்திரத்தின் மூன்றாங் கூற்றைப் பதச்சேதஞ் செய்து ஐந்தவத்தை அடையுமெனக் கூறியவாறாம்.

இவ்வதிகரணத்தில் ஆன்மாக் கருவிகளோடு கூடிய விடத்து ஐந்தவத் தைப்படுமோ படாதோ என்பது ஐயப்பாடு படாதென்பது பிறர் கூறும் பக்கம் என அறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) அந்தக்கரணங்களோடு கூடிய ஆன்மாச் சகசமலத்தினால் அறிவு தொழிற்படாதிருந்தமையால் அவ்வந்தக்கரணங்க ளுந் தானும் மந்திரியும் அரசனும்போல நிற்றலால். மந்திரி முதலிய படை களுடன் உலாப்போன அரசன் தன் மாளிகைக்குட் செல்லுங்கால் வாயில்தோறும் நிறுத்தவேண்டியவர்களை நிறுத்திக் காவலும் வைத்து அந் தப்புரத்திற் செல்லுமாறுபோல, தத்துவங்களைக் கூடிப் பிரியும் முறையில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதமாயுள்ள அஞ்சவத்தை யுடையவனாய் நிற்பன் எ-று.

பஞ்சாவத்தையை உடையவனாய் நிற்கும் என்று கூறினாற் போதிய தாயிருக்கவும் சாக்கிர முதலாகப் பெயரை எடுத்துக் கூறியதன் கருத் தென்னை யெனின், அவத்தையென வழங்குவது சாக்கிர முதலியவற்றிற்கு மட்டு மன்றிக் கேவலம், சகலம், சுத்தம் முதலிய வற்றிற்கும் வழங்கி வரு கின்றமையால் எந்த அவத்தையோ என்னும் ஐயம் உண்டாகாத வண்ணம் சாக்கிர முதலிய பெயரை எடுத்துக் காட்டிக் கூறினார்.

அவத்திதன் என ஆண்பால் விகுதி சேர்த்துக் கூறியது வடமொழி மதம்பற்றி. தமிழ் மொழி மதம்பற்றியாயின் அவத்தைபுற்று நிற்கும் என்று முடியவேண்டும். வடமொழியில் ஆன்மாவை உயர்திணை ஆண்பாலாகக்கூறு தல் வழக்கு.

இரண்டாம் அதிகரணத்திற்குரிய அமைச்சரசேய்ப்ப நிற்றலால் என் பதையும் இவ்வதிகரணத்தில் வருவித்துரைக்க. எதற்காக வெனின், ஐந் தவத்தை யடைதற்குக் காரணம் அமைச்சர சேய்ப்ப நிற்றலாதலால் என்க. உரையும் அவ்வாறு செய்யப்பட்டது.

அரச உவமானத்தை உரைத்துக் கொண்டதனால், சிவஞான சித்தியார் ௪-ம் சூ-ம் ௩௨-வது செய்யுளில் "படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போ தில்லிற், கடைதொறும் விட்டு விட்டுக் காவலு மிட்டுப் பின்னர், ***அந்தப்புரத்தினில் தனியே. அடைதரும்" எனக்கூறியபடி அமைச்சர்,

பரிசனங்களோடு உலாப் போந்த அரசன் மீள அரண்மனையுட் புகுங்கால் எந்த எந்த வாயிலில் எவரெவரை நிறுத்தவேண்டுமோ அவ்வவரை நிறுத்திப் பிறர் பிரவேசியாவண்ணம் காவலும் வைத்து அந்தப்புரத்திற்குத் தனியே செல்லுமாறுபோல, ஆன்மாவாகிய அரசனும் அமைச்சர்போன்ற அந்தக்கரணங்களையும் இந்திரிய முதலிய பரிசனங்களையும் துணையாகக்கொண்டு விடயங்களாகியவீதியில் உலாவி மீளுங்காலத்து ஒவ்வொருதத்துவங்களை ஒவ்வொருதானத்தில் நிறுத்திப் பிராணனைக் காவலாகவைத்து உள்ளேசெல்லும் முறையில் தத்துவங்களின் கூடுதல் குறைதலுக் கேற்ப ஐந்தவத்தை யடைதல் பொருந்து மென்று பொருந்தாதென்பார்க்கு விடை கூறியவாறுமாயிற்று.

ஆன்மா வேறு வேறவத்தை யடைதற்குக் காட்டும்

ஏது.

அதுதான் மலசொருபத்தின் மறைந்து அருப சொருபியாய் நிற்றலான்.

சிற்றுரை.

எ—து ஏது எ—னின், அரசன்போல் உயிர் அங்ஙனை மஞ்சவத்தைப்படுமாயின் வியாபகத்திற் கிழுக்காய் முடியும்போலு மென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) அவ்வுயிர் தான் மலவடிவின் மறைப்புண்டவழி அருவுடம்பாகிய தத்துவ சொரூபியாய் நிற்றலான் அத்தத்துவங்கள் தொழிற்படுமவத்தை வேறுபாடு பற்றி இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந்துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனுய் நிற்குமென மேற்கொண்டது. எ—று.

"சீவனே வியாபி யவத்தையி லிழிந்து திரும்புதல் குற்றமாங் கருவி, சேருதல் பிரித லில்லையா முறையிற் செயப்படுங் கருவியே தெரியுங்—தாவிலா வறிவு தங்கின விடமே தகுமுயிர்க் கிருப்பிடம்" என்றதூஉம் இப்பொருள்பற்றியென்க.

தத்துவ வன்னரூபனுதல் வீடு பெற்றுழியும் உண்டுபோலுமென்ற ஆசங்கை நிகழாமைப் பொருட்டு, மல சொரூபத்தின் மறைந்தென மேற்கூறிப் போந்ததனை வழிமொழிந்துகொண்டு அரூப சொரூபியாய் நிற்றலானென்று ஏதுக் கூறினர்.

மறைந்தவழி யென்றது மறைந்தெனத் திரிந்து நின்றது.

விளக்கம்.

இந்த ஏது என்ன சொல்லிற்றோ வெனின், மேற்கூறியவாறு அரசன் போல் உயிர் அஞ்சவத்தைப்படுமாயின் அரசன் ஒவ்வொரு வாயிலாக விட்டுச் செல்லுங்காலத்து விட்ட இடங்களில் இல்லாததுபோல உயிரும் விட்டதானங்களில் இல்லை யென்றாகி உயிரின் வியாபகத்திற்குக் குறையுண்டாகுமே என்னும் வினாவை ஆசங்கித்துக்கொண்டு குறையாகாது என விடை கூறி ஐந்தவத்தை யடையுமென்னும் மேற்கோளை வலியுறுத்திற்று.

(இந்த ஏதுவின் பொருள்.) அவ்வுயிர்தான் மலவடிவின் மறைப்புண்டவிடத்து அருவுடம்பாகிய தத்துவ சொரூபியாய் நிற்றலான் அத்தத்துவங்கள் தொழிற்படும் அவத்தை வேறுபாடுபற்றி இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனாய் நிற்குமென மேற்கோள் கூறியது. எ - று.

தத்துவங்களெல்லாம் சூக்குமதேகமும் காரணதேகமுமாயிருக்கும். தாத்துவிகம் தூலதேகமாயிருக்கும். சூக்குமதேகம் அருவுடம்பு; தூலதேகம் உருவுடம்பு. ஆதலால் அரூபசொரூபியாய் என்றதற்கு அருவுடம்பாகிய தத்துவ சொரூபியாய் என உரை செய்யப்பட்டது.

தத்துவ சொரூபியாய் நிற்றலால் உயிர் அஞ்சவத்தையடையும்; அடையினும் வியாபகத்திற்கு இழுக்கில்லை யென்னும் இக்கருத்துப்பற்றியே "சீவனேவியாபி *** அறிவு தங்கினவிடமே தருமுயிர்க் கிருப்பிடம்" என உலகுடைநாயனார் கூறியதூஉம் என்க. அச்செய்யுளின் கருத்து, சீவன் வியாபியாயின் அவத்தையிற் போக்குவரவு புரிதல் குற்றமாம் எனின், குற்றமாகாதென விளக்கினதாம். எவ்வாறெனின், கருவியோடு கூடுதலாகிய சாக்கிரமும், கருவியைப் பிரிதலாகிய சொப்பனம் சுழுத்தி துரியங்களும், கருவியில்லாத துரியாதீதமுமாகிய அவத்தைகள் கருவிகள் கூடிப் பிரிந்து இல்லையாகின்ற முறைமையில் உண்டாவனவாம் அந்த அந்த அவத்தையில் நிற்குங் கருவிகளோடு கூடியும், பிறிதொன்றைக் கூடாமலும் இருக்கின்ற அறிவு இருக்கின்ற இடமே உயிர் இருக்கின்ற இடமாதலால் கருவிகளோடு வியாபித்தல் உண்டென்றாகி வியாபகத்திற்குக் குறைவில்லை யென்றவாறாயிற்று. உயிர் வியாபகப பொருளாயினும் இறைவனைப்போல் சருவவியாபகமின்றிச் சார்ந்த பொருள் அளவில் வியாபித்து நிற்குமாதலால் அவ்வுண்மையை விளக்குதற்குத் தாவிலா அறிவு என்றும், குணத்தின் நிறைவே குணியென்பதை விளக்குதற்கு அறிவு தங்கின விடமே உயிர்க்கிருப்பிடம் என்று கூறினார். தாவுதல் - எங்கும் வியாபித்தல்

ஆகவே இந்த ஏதுவினால் ஒவ்வொரு அவத்தையோடும் பொருந்துதலினால் வியாபகமாதலும் ஒரு அவத்தையைப் பொருந்தும் பொழுது பிறி

தொரு அவத்தையைப் பொருந்தாமையினால் ஏகதேச வியாபகமாதலும் உயிருக்கு உண்டெனப்பட்டு வியாபகத்திற்குக் குறைவில்லாமையை விளக்கியவாறு அறிக.

அரூப சொரூபியாய் நிற்றலால் என்றலே ஐந்தவத்தைப்படுமென்பதை விளக்குதற்குப் போதியதாயிருக்கவும் மல சொரூபத்தின் மறைந்து என்று இரண்டாம் அதிகரணத்திற் கூறி முடித்ததையுங் கூறுவானேனெனின், அவ்வாறு கூறின் அரூப சொரூபமாகிய தத்துவ சொரூபியாய் நிற்றல் என்றும் உளதெனப்பட்டு முத்திபெற்ற விடத்தும் தத்துவ வடிவம் உண்டோ? உண்டாயின் விடுதலையைக்குறிக்கும் முத்திக்குப்பொருள் எவ்வாறு சித்திக்கும்? என்னும் ஐயம் நிகழுமன்றே. அந்த ஐயம் நிகழாத வண்ணம் மல சொருபத்தினால் மறைந்தவிடத்துத் தத்துவ வடிவமுண்டு. மலம் நீங்கிய விடத்துத் தத்துவவடிவம் இல்லையென உணர்த்தும் பொருட்டு மலசொரூபத்தின் மறைந்து என மேற்கூறி முடித்ததனை அநுவதித்துக்கொண்டு அரூப சொரூபியாய் நிற்றலால் எனக் கூறினார்.

மல சொரூபத்தில் மறைந்தவழி என்றிருக்கவேண்டுவது மறைந்து எனத்திரிந்து நின்றது.

இந்த அதிகரணத்து மேற்கோள் ஐந்தவத்தையுடையதாய் உயிர் நிற்குமென்று கூறியிருத்தலால் அவ்வாறு அவத்தைப்படுதற்கு ஏதுவென்னையென்னும் வினாவிற்கு விடையாக இந்த ஏதுவிற்குப் பொருள்கூறாமல் உயிரின் வியாபகத்திற்குக் குறைவில்லையெனப்பொருள் கூறியதன் கருத்தென்னையெனின், ஐந்தவத்தைப்படுதற்கு ஏது மலசொரூபத்தின் மறைந்து நிற்றலேயாம். அது இரண்டாம் அதிகரணத்திற் கூறி முடித்தாய் விட்டது. இவ்விடத்துங் கூறில் கூறியது கூறலென்னுங் குற்றத்திற்கு இடனாம். அன்றியும் அவத்தைப்படுதற்குக் கூறிய ஏதுவாயிருப்பின் மல சொரூபத்தின் மறைந்து நிற்றலால் என்றுமட்டுங் கூறியிருக்கவேண்டும். அரூப சொரூபியாய் நிற்றலாலெனக் கூறியிருக்கவேண்டாம். இனி உண்மைதான் யாதெனின், கூறுதும். ஒவ்வொரு அதிகரணமும் ஒன்றற்கொன்று ஏதுவும் பயனுமாய் ஒருபொருள் பற்றிவருமென்று முதற் சூத்திரத்திற் கூறப்பட்டிருக்கின்றது. அவ்விதி ஒவ்வொரு சூத்திரத்திற்கும் உரியது. அவ்வாறே இச்சூத்திரத்திலும் ஆன்மா அந்தக்கரணங்களில் ஒன்றன்று என்னும் முதலதிகரணம் ஏதுவாய் அதனால் சகசமலத்தால் உணர்வில்லையாதல் என்னும் இரண்டாம் அதிகரணம் பயனாயிற்று. சகசமலத்தால் உணர்வில்லையாதல் என்னும் இரண்டாம் அதிகரணம் ஏதுவாய் அதனால் ஐந்தவத்தைப்படுதலாகிய மூன்றாம் அதிகரணம் பயனாயிற்று. இம்முறைமைக்கேற்ப இம்மூன்றாம் அதிகரணத்து மேற்கோளுக்கு அவத்தைப்படுதலைப் பொருளாகக் கொள்ளாமல் வேறு வேறு அவத்தைப்படுதலைப் பொருளாகக் கொள்ளல்வேண்டும். அவ்வாறு கொள்ளுங்கால் வேறு

வேறு அவத்தைப்படுதற்கு தத்துவ சொரூபமாகிய அரூப சொரூபியாய் நிற்றல் ஏதுவாகி வேறு வேறு அவத்தைப்படுதலினல் வியாபகத்திற்குக் குறைவுண்டாகாதோ என்னும் ஐயத்தை நீக்கும். ஆதலால் அவ்வாறு பொருள் கூறப்பட்டதென அறிக.

இந்த ஏது உயிர் ஐந்தவத்தைப் படாதென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

உயிர் ஐந்தவத்தைப்படும் என்பதற்குக்காட்டும்

உதாரணம்.

ஒன்றணையா மூலத் துயிரணையு நாபியினிற்
சென்றணையுஞ் சித்த மிதயத்தின்—மன்றவே
யையைந்தா நன்னுதலிற் கண்டத்தின் வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், தத்துவங்கள் தொழிற்படுதற்கண் நிகழும் அவத்தை வேறுபாடு தெரித்துணர்த்தி அஃதேதுவாதலை வலியுறுத்துதனுதலிற்று.

நல்நுதலில் வாக்காதி மெய்யாதி மன்ற ஏய் ஐயைந்தாம் கண்டத்தின் (வாக்காதி மெய்யாதி)விட்டு அகன்று வேறு (ஐயைந்தாம்) இதயத்திற் சித்தஞ் சென்றணையும் நாபியினில் உயிர் அணையும் அணையா மூலத்து ஒன்று என வினையும்.

(இ-ள்.) சாக்கிரத்தானமெனப்படும் இலாடத்திற் புறவிந்திரியம் பத்தினையுந் தேற்றமாகப் பொருந்திய இருபத்தைந்து கருவி தொழிற்படும்; சொப்பனத் தானமெனப்படுங் கண்டத்தின் அப்பத்தினையும்விட்டு நீங்கி வேருய இருபத்தைந்து கருவி தொழிற்படும்; சுழுத்தித்தானமெனப்படும் இருதயத்தின் அவற்றுள் இருபத்திரண்டு கருவிகளைவிட்டு நீங்கி முன்னர்க் கூறப்படும் இரண்டு கருவிகளோடுகூடிய சித்தந்தொழிற்படும்; துரியத்தான மெனப்படும் உந்தியிற் சித்தத்தையும் விட்டு நீங்கி முன்னர்க் கூறபடும் புருடதத்துவத்தோடு பிராணவாயு கூடித் தொழிற்படும். இக்கருவிகளொன்றும் அணையாத அதீதத்தான மெனப்படும் மூலாதாரத்தில் புருடனென்றே நிலைபெறும் எ—று.

எனவே, இலாடத்தானமுதலிய ஐந்தினு நிற்குங் கருவிகள் முறையே முப்பத்தைந்தும் இருபத்தைந்தும் மூன்றும் இரண்டும் ஒன்று மென்பது போந்தவாறுணர்க.

மன்ற வென்பது தேற்றப் பொருட்டாகிய இடைச்சொல். வய்தல் பொருந்துதல்; வினைத்தொகை.

வாக்காதி மெய்யாதியை யென இரண்டாவது விரித்துரைக்க. அஃதீரிடத்துஞ் சென்றியையும்.

வருகின்ற சூத்திரத்தின் மெய் வாய் கண்மூக்கு எனச் செய்யுட்கேற்ப மெய்யை முற்கூறுதலின் அம்முறைபற்றி ஈண்டுச் செவியாதி யென்னது மெய்யாதி யென்றார். அவற்றோடு கூடிய இருபத்தைந்தாவன அவ்விந்திரியம் பத்துக்கும் விடயமாகிய வசனாதி சத்தாதி பத்தும் அவற்றினுக்கு உட்கருவியாகிய அந்தக் கரணங்க ணான்கும் அவற்றோடுகூடி அவத்தையுறுவதாகிய புருடனொன்றும், அஃதவத்தையுறுதற்குரிய மதுகைக்கேதுவாய் அகங் காரத்தாற் செலுத்தப்படும் பிராணாதி வாயுக்கள் பத்துமென இவை. ஈண்டுச் சத்தாதியென்றது வசனாதிபோலும் விடயங்களை யெனக்கொள்க. எனவே பூதங்களின் கூறாய் அவற்றுடனின்று தோழிக்குத் தேருறுப்புப்போல இந்திரியங்களின் றொழிற்பாட்டுக்கு மதுகையை விளைத்து நிற்பனவாய புறக்கருவி யறுபதில் ஈண்டுக் கூறிப்போந்த விடயங்கள் பத்தும் வாயுக்கள் பத்தும் ஒழித்தொழிந்த புறக்கருவிகள் நாற்பதும் அவற்றையுடைய பூதங்களைந்தும் அவற்றிற்கு வலியாயுடனிற்பனவாய சூக்கும பூதமெனப்படுந் தன்மாத்திரைகளைந்து மென்னும் ஐம்பது கருவிகளுங் கீழ்நோக்கிய சாக்கிரத் தானத்தில் தமது சத்திமடங்கி வினைக்கீடாகத் தொழிற்படாதொழியுமெனவும், அவை யொழிந்தவழி அவத்தைக் கேதுவாய் நின்ற ஏனைப்பொறி முதலிய முப்பத்து நான்கும் அவற்றோடு கூடிய புருடதத்துவமும் இருவகைப் பூதங்களானும் புறக்கருவிகளானுந் தரப்படும் மதுகையின்மையின் ஆண்டுப் பொறிகளின் றொழிற்பாடு மெத்தென நிகழுமெனவுங் கொள்க. கலாதிகளுஞ் சுத்ததத்துவமும் அவத்தைக் கேதுவாகாமையான் உடனெண்ணாராயினர். ஏனையவும் விரிந்த நூல்களுட் கூறியவாறுபற்றி உணர்ந்துகொள்க

இலக்கணவியல்நான்காஞ்சூத்திரம். ௫-ம் அதி.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றேவெனின், தத்துவங்கள் கூடிப் பிரிந்து தொழிற்படுதலால் உண்டாகும் அவத்தை வேறுபாட்டை விளக்கிக் காட்டி வேறு வேறு அவத்தையடைதற்குத் தத்துவ சொரூபியாய் நிற்றல் ஏதுவாதலை வலியுறுத்தியவாறும்.

பொழிப்புரை உரை ஆசிரியர் கூறினமையின் கருத்துமட்டுங் கூறுதும்.

(க-ரை.) சாக்கிரம் முதலாகக்கூறும் ஐந்தவத்தைக்கும் உரிய இலாட முதலான தானங்களில் நிற்குங் கருவிகள் முறையே முப்பத்தைந்தும் இருபத்தைந்தும் மூன்றும் இரண்டும் ஒன்றுமாம் என்பதாம்.

பொழிப்புரையில் புறவிந்திரியம்பத்தென்றது ஞானேந்திரியம் ஐந்துங் கன்மேந்திரியம் ஐந்துமாம். அந்தக்கரணங்களை அக இந்திரியமென்று கூறும் வழக்குப்பற்றி இவற்றைப் புறவிந்திரியம் என்றபடியாம். இதனை "வாயாதி சோத்தி ராதி புறத்துவாழ் கருவி யாகு—மோயாத மனாதி காயத் துணருமுட் கருவி யாகும்" எனச் சிவஞானசித்தியார் ௨-ம் சூ-ம் ௬௫-வது செய்யுளில் வழிநூலாசிரியர் கூறுமாற்றானும் அறிக.

சாக்கிரத்தானமாகிய இலாடத்தில் நிற்குங்கருவி ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, சத்தாதி விடயம் ஐந்து, வசனாதி ஐந்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று, பிராணவாயு பத்து ஆக முப்பத்தைந்துமாம்.

சொப்பனத்தானமாகிய கண்டத்தில் நிற்குங்கருவி சத்தாதிவிடயம் ஐந்து, வசனாதி ஐந்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று, பிராணாதி வாயு பத்து ஆக இருபத்தைந்துமாம்.

சுழுத்தித் தானமாகிய இருதயத்தில் நிற்குங் கருவி பிராணன், சித்தம், புருடன் என்னும் மூன்றுமாம்.

துரியத்தானமாகிய நாபியில் நிற்குங் கருவி பிராணன் புருடன் என்னும் இரண்டுமாம்.

துரியாதீதத் தானமாகிய மூலாதாரத்தில் நிற்குங் கருவி புருடன் ஒன்றேயாம்.

அவத்தைகளில் கருவி நிற்கும் முறையை, "சாக்கிரமா னுதலினிலிந் திரியம் பத்துஞ் சத்தாதி வசனாதி வாயு பத்து, நீக்கமிலந் தக்கரணம் புருடனோடுநின்றதுமுப் பானைந்து நிலவுங் கண்டத், தாக்கியசொப் பனமதனில் வாயுப் பத்து மடுத்தனசத் தாதிவச னாதி யாக, நோக்குகர ணம்புருட னுடனே கூட னுவல்வரிரு பத்தைந்தா நுண்ணி யோரே." "சுழுத்தியிதயந்தன்

ணிற்பிராணன் சித்தஞ்சொல்லரிய புருடனுடன்' மூன்றதாகும்--வழுத்தியநாபியிற்றுரியம் பிராணனோடு மன்னுபுருடனுங்கூட வயங்கா நிற்கு—மழுத்திடு மூலந்தன்னிற் றுரியாதீதமதனிடையே புருடனொன்றியமரு ஞானம்-பழுத்திடுபக் குவர்றிவ ரவத்தை யைந்திற் பாங்குபெறக் கருவிநிற்கும் பரிசு தானே.'' என்னுந் தாயுமான சுவாமிகள் திருவாக்காலும் அறிக.

செய்யுளில் மன்றவென்றது தேற்றப்பொருளைக் குறித்த இடைச் சொல். ''மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்'' என்பது தொல்காப்பியம் சொல்லதிகாரம் இடையியல் சூ-ம் கஎ.

ஏய் ஐயைந்து என்பது ஏய்ந்த இருபத்தைந்து என்னும் பொருளைக் குறித்து நிற்றலால் வினைத்தொகை. ஆதலால் மன்றவேய் ஐயைந்து என்றதற்குத் தேற்றமாகப் பொருந்திய இருபத்தைந்து என உரை செய்யப்பட்டது.

வாக்காதி மெய்யாதி என்றவிடத்து இறுதியில் இரண்டாம்வேற்றுமை ஐ உருபை விரித்துரைக்க. வாக்காதி மெய்யாதி என்பன கண்டத்தின் ன்றதனோடும் சென்று பொருந்தும். ஆதலால் புறவிந்திரியம் பத்தினையும் ன முன்னரும் அப்பத்தினையும் எனப் பின்னரும் உரை செய்யப்பட்டது.

வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்னும் கன்மேந்திரியங்களுள் வாக்கு முதன்மை. செவி, மெய், கண், நா, நாசி என்னும் ஞானேந்திரியங்களுள் செவி முதன்மை. ஆதலால் வாக்காதியென்று கூறியதற்கேற்பச் செவியாதி யென்று கூறல் வேண்டும். அவ்வாறின்றி மெய்யாதி எனக் கூறினர். கூறியதன் கருத்தென்னை யெனின், அடுத்த ஐந்தாஞ் சூத்திரத்தில் செய்யுள் யோனைக்கேற்ப மெய்வாய் கண் மூக்கு என மெய்யை முதலாவது கூறியிருத்தலால் அம் முறைபற்றி இச் செய்யுளில் செவியாதி என்னாது மெய்யாதி எனக் கூறினர் என்க. வாக்காதி செவியாதி எனவே கூற வேண்டுமென்பதை ''வாக்கொடு பாதம் பாணி பாயுவோ டுபத்த மைந்து'' எனவும் ''நற்செவி துவக்குக் கண்ணு நாசி'' எனவும் சிவஞான சித்தியார் உ-ம் சூ-ம் சுஉ, சுக—வது செய்யுட்களில் வழி நூலாசிரியர் கூறு மாற்றாலறிக.

அந்தப் பத்து இந்திரியங்களோடு கூடிய இருபத்தைந்தும் இவையென்பது மேற்கூறப்பட்டிருத்தல் காண்க.

இவ்விடத்தில் சத்தாதி யென்றது வசனாதி போன்ற விடயங்களையெனக் கொள்க. எனவே, சத்தாதி தன்மாத்திரை வேறு சத்தாதி விடயம் வேறு என்பதாம். பெயர் ஒற்றுமையால் இரண்டும் ஒன்றேயென எண்ணக் கூடாது. தன்மாத்திரை பூதங்களின் தோற்றத்திற்குக் காரணமாயுள்ளது. விடயம் பூதங்களின் குணமாயுள்ளது. இத்தன்மாத்திரை அசுப்பூதம் எனவும், சூக்குமபூத மெனவுங் கூறப்படும். பூதங்களின் தோற்றத்திற்குக் காரணந் தன்மாத்திரை யென்பதை ''சாற்றிய பஞ்சதன்மாத் திரைகளிற்

சத்த முன்னுத் தோற்றும் வான் வளிதீ நீர்மண்'' எனச் சிவஞான சித்தியார் உ-ம் ஞ-ம் சுரு-வது செய்யுளில் வழி நூலாசிரியர் கூறு மாற்ருலறிக.

சாக்கிரத்தில் முப்பத்தைந்து கருவி தொழிற்படு மென்றதனுல் பூதங்களின் கூற்றயும், அப்பூதங்களோடு உடனின்று தேரின் உருளைக்குவலியைச் செய்கின்ற அச்சாணிபோல இந்திரியங்களின் தொழிற்பாட்டிற்கு வலியை உண்டுபண்ணிநிற்பனவாயுமுள்ள புறக்கருவி அறுபதில் இவ்விடத்து முப்பத்தைந்து என்றதனுட் கூறிய விடயங்கள் பத்தும் வாயுக்கள் பத்தும் ஆக இருபதும் நீங்கிய ஏனைய புறக்கருவிகள் நாற்பதும் அப்புறக்கருவிகளையுடைய பூதங்கள் ஐந்தும் அப்பூதங்களுக்கு வலிமையாய் அவற்றுடன் நிற்பனவாய சூக்குமபூதமெனப்படும் தன்மாத்திரைகள் ஐந்தும் ஆக ஐம்பது கருவிகளும் கீழ் நோக்கிய சாக்கிரத்தானத்தில் தமது சத்தி மடங்கி வினைக்கீடாகத் தொழிற்படா தொழியும் என அறிக.

அந்த ஐம்பது கருவிகளும் தொழில் செய்யாமற் கிடந்த விடத்து மேற் கூறியவாறு அவத்தைக் கேதுவாய்நின்ற ஏனைய ஞானேந்திரிய முதலிய முப்பத்துநான்கு கருவிகளும் அவற்ருேடு கூடிய புருடதத்துவமும் ஆகமுப்பத்தைந்தும் தூல சூக்குமம் என்னும் இருவகைப் பூதங்களாலும் புறக்கருவிகள் நாற்பத்துநான்கும் தரப்படுகின்ற வலிமை இல்லாமையால் இலாடத்தானமாகிய கீழ் நோக்கிய சாக்கிரத்தில் இந்திரியங்களின்தொழிற்பாடு மெதுவாக நிகழுமெனக் கொள்க.

ஐம்பது கருவியில்லாமல் முப்பத்தைந்துகருவி தொழிற்படுமென்றதனுல் மொத்தம் கருவி எண்பத்தைந்து என்ருகித்தொண்ணூற்ருறு கருவியினுள் பதினெரு கருவியை விலக்கிய வாறும். அப்பதினென்ருவன:—வித்தியாதத்துவம் ஏழனுள் புருடன் நீங்கிய கலாதிதத்தும் ஆறும் சிவதத்துவம் ஐந்துமாம். அப்பதினென்றும் அவத்தைக் கேதுவாகாமையான் அவத்தைக்குரிய எண்பத்தைந்தனேடு வைத்து எண்ணுராயினர். அப் பதினென்றும் அவத்தைக் கேதுவாகாதது என்னை யெனின், கலாதிகளுடன் கூடின உயிரே புருடதத்துவமாதலாலும் அவத்தைக் கேதுவாயிருப்பது புருடதத்துவமும், புருடதத்துவமாவதற்கு ஏதுவாயிருப்பது கலாதிகளாதலாலும் கலாதிதத்துவம் அவத்தைக் கேதுவாதலில்லை. சிவதத்துவம் கலாதிதத்துவங்களோடுகூடிய புருடன் தொழிற்படுதற்கு ஏதுவாயிருப்பதேயன்றித் தொழிலுக்கு ஏதுவாயிருப்பதில்லை யாதலால் சிவதத்துவமும் அவத்தைக்கேதுவா-வில்லை யென அறிக.

கீழ்நோக்கிய சாக்கிரத்தானத்தில் முப்பத்தைந்து கருவிதொழிற்படும் என்றதனுல் எல்லாக்கருவியுந் தொழிற்படும் சாக்கிரம் ஒன்றுண்டென்பது பெறப்படும். படவே கீழ்நோக்கிய சாக்கிரம், மேல்நோக்கிய சாக்கிரம், இவ்விரண்டும் நோக்காதசாக்கிரம் எனச்சாக்கிரம் முத்திறப்படும். அவற்றுள்,

சிவஞானபோதச்சிற்றுரைவிளக்கம்.

கீழ்நோக்கிய சாக்கிரமாவது சொப்பனமுதலிய அவத்தைக்குரியது. அதாவது புறத்தொழிலை விட்டு நித்திரைக்குச் செல்ல வெண்ணிப் படுத்திருக்குங் காலத்து நித்திரைவருதற்கு முன் உளதாகிய சாக்கிரம். இச் சாக்கிரத்தில் தொழிற்பாட்டிற்குரியனவாய் மேற்கூறிய ஐம்பது கருவிக ளும் தமது சத்தி மடங்கிக் கிடக்க நித்திரை வரும்வரையும் முப்பத்தைந்து கருவிகளுந் தொழிற்படும். படினும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களின் தொழில் புறத்துவிடயங்களை அனுபவிக்குங்காலத்து நிகழ்வதுபோலன்றி மெதுவாய் நிகழும். ஏனைய இருபத்தைந்து கருவிகளின் தொழிலில் வேற் மையிடையாது. இந்தச் சாக்கிரம் இலாடத்தானத்திலிருந்து கண்டமுதலா கக் கீழ்நோக்குதற் குரியதாய் நிற்றலால் கீழ்நோக்கிய சாக்கிர மெனப்பட் டது. இச்சாக்கிர முதலியவற்றைக் கீழாலவத்தை யென்பர்.

மேல்நோக்கிய சாக்கிரமாவது இருதயம், கண்டம், நாக்கின் அடி, இலாடம் பிரமரந்திரம் என்னும் ஐந்தனுள் இருதயத்தானத்தில் யோக சாதனமாய் மேல் நோக்குதற்குரியதாய் நிகழ்வது. இவ்வைந்தனையும் மே லாலவத்தை யென்பர்.

இரண்டும் நோக்காத சாக்கிரமாவது புறத்துவிடயங்களை அனுபவித் தற்குரியதாய் இலாடத்தில் நிகழ்வது. இதில் எல்லாக்கருவியுந் தொழிற்படும். கீழ்நோக்கிய சாக்கிரத்திற்கும் இச்சாக்கிரத்திற்குந் தானம் ஒன்றே. இதிலும் ஐந்தவத்தையுண்டு. இவற்றை மத்தியாலவத்தை யென் பர். அரசன் அத்தாணி மண்டபத்தைப் பிரதானமாகவைத்துக்கொண்டே உலாப்போதலும் பின் அம்மண்டபத்திற்கு வந்தே உட்புகுதலும்போல உயிர் இலாடத்தானத்தில் நின்றே விடயங்களிற் செல்லுதலும் அத்தானத் தில் நின்றே உள்ளே புகுதலுஞ் செய்யுமாதலால் கீழாலவத்தை மத்தியா லவத்தை இரண்டுக்குந் தானம் ஒன்றாயிற்று. சாக்கிரத்தும் ஐந்தவத்தை யுண்டு என்பதை இலாடத்தே என்னும் வெண்பாவாலும் சிவஞான சித்தி யார் ௪-ம் சூ-ம். ௩௪-வது செய்யுளில் "இருவகைச் சாக்கிராதி" எனவும், ௯௫-வதுசெய்யுளில் "அறிதரு முதலவத்தை யடைதரு மிடத்தே யைந்துஞ் செறிதரும்" எனவுங் கூறப்பட்டிருத்தலினாலும் அவற்றின் உரையாலும் அறிந்துகொள்க.

புறக்கருவி அறுபது இவை என்பதும் அவை பூதங்களின் காரிய மென்பதும் சித்தியார் ௨-ம். சூ-ம். ௯௫-வது செய்யுளிற் கூறியிருத்தலால் அவ்விடத்துக்காண்க.

நித்திரைக்குச் செல்லுங்காலத்து நிகழுஞ் சாக்கிரமே கீழ் நோக்கிய சாக்கிர மென்பதைச் சிவஞானசித்தியாரில் படைகொடு பவனிபோது மென்ற செய்யுளில் 'இல்லிற்புகும்போது' என்று கூறியதனாலும் அறிக.

சாக்கிரமுதலிய ஐந்தும் சாக்கிரத்தானத்திலும் நிகழும் என விளக்கி உயிர் வேறு வேறு அவத்தைப்படுமென்பதை உறுதிப்படுத்தும் உதாரணம்.

இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ள
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து—மிலாடத்தே
யவ்வவ விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
யவ்வவற்றி னீங்கலது வாங்கு.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், அங்ஙனம் அதீதத்தை யெய்திய புருடன் மீளப் பிரேரகவவத்தையாகிய உணர்த்துமுறைமைச் சாக்கிரத்தைத் தலைப்படுமாறு அநுவாதமுகத்தான் விளக்கி அவ்விடத்தினும் முறைமையிற் செலுத்தும் பிரேரகக் கருவிகளைந்தின் றொழிற்பாடுபற்றி ஐந்தவத்தை நிகழுமென்பதூஉம் அவை இவையென்பதூஉஞ் சுத்தாவத்தையும் இவைபோலுண்டென்பதூஉங் கூறி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்.) இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்—(இலாடத்தானத்தினீங்கி ஆண்டாண்டவத்தைப்பட்டுக் கீழ்ப்போந்து மூலாதாரத்தினெய்தியபின் மறித்தும் அவ்வாறே ஆண்டாண்டவத்தைப்பட்டு மேற்சென்று) இலாடத்தானத்தின் (உணர்த்து முறைமைச்) சாக்கிரத்தைத் தலைப்பட்ட புருடன்,—இலாடத்தே ஐந்து அவத்தை எய்தும்—ஆண்டுஞ் சாக்கிரச் சாக்கிரமுதலிய ஐந்தவத்தையுறும்,—இலாடத்தே அவ்வவவிந்திரியத்து அத்துறைகள் கண்டு—(அவையாவன) அவ்விலாடத்தானத்தின்கண்ணே அவ்வப் பொறிகளான் அவ்வவ்விடயங்களை யுணர்ந்து,— அதுவே— அப்போதப்போதே,— அவ்வவற்றின் நீங்கல்—அவ்வவ் விடயங்களினீங்குதலாம்,—அது ஆங்கு—(இனி முன்னர்க்கூறப்படுஞ் சுத்தாவத்தையும்) இவைபோல ஐவகைப்படும் எ-று.

மேற்செல்வழி ஆண்டாண்டுப்படுமவத்தைகளுங் கீழ்ச்செல்வழிப்போலன்றி விசேடமின்மையின் வகுத்தோதாது இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ளமென அநுவாதமுகத்தாற் கூறியொழிந்தார்.

இழியுங்காலும் ஏறுங்காலுங் கண்டத்தானத்திற் கனாக்காண்டலுண்டென்பது முறையே ஞானாமிர்தத்தினும் போற்றிப் பஃறொடையினுங் காண்க.

அவ்வவ்விந்திரியம் ஆண்டாண்டு விடயித்தற்குரிய இந்திரியம்.

அவ்வவ்விடயம் ஆண்டாண்டுப் புலனாதற்குரிய விடயம்.

கண்டு நீங்கலென வியையும்.

அது அவ்வக்காலம். ஈண்டும் அடுக்கிக் கூறிக்கொள்க.

கண்ணுருபு தொகுத்து ஏகாரம் விரித்தார்.

கண்டதென ஒரு மொழியாக வைத்துரைப்பாருமுளர். குற்றிய லுகரத்தின்முன் உடம்படுமெய்பெறுதற்கு ஒத்திலாமையா னும் பொருட்சிறப்பின்மையானும் அஃதுரையன்மையறிக.

அப்போதப்போதே நீங்கலாவது விடயங்களைக் கண்டகண்ட பொழுதே அவற்றை அயர்த்துவிடுதல். "ஒன்றன்பாலும் வருபயன் மாறி மாறி வந்திடும்" என வழிநூலாசிரியர் கூறியதும் இவ்வியல்பு நோக்கி யென்க. "கரணந் தன்னிற் செயறொறுங் கண்டு கொண்ணீ" "உந்திடுங் கரணந் தன்னிற் செயறொறு முணர்ந்து கொள்ளே" என்பனவுமது. இந்நுட்பமுணர்ந்து கோடற்குத் தூலாருந்ததி நியாயம்பற்றிக் கைப்பொருளை விழ்த்தித் தெளிதன்முதலிய தூலத்துள் வைத்துக்காட்டுப.

இனி அரூப சொரூபியாய் நிற்புழிப்படும் ஐந்தவத்தையி னியல்புகூறுதற் கெடுத்துக்கொண்ட இவ்வதிகாரணத்தின் அதனோடியைபில்லாத சுத்தத்தின்கட்படும் ஐந்தவத்தை கூறுதற்கு ஓரியைபில்லையாயினும் அவத்தையெனப்படுவன ஈண்டோதியன மாத்திரையே போலுமென மயங்கைமைப்பொருட்டு வேறுமைந் தவத்தையுள அவை முன்னர்க்கூறப்படுமென்னுந் துணையே கூறுவார் அதுவாங்கு என்றொழிந்தார். இக்கருத்தேபற்றி "பிறிவிலா ஞானத்தோரும் பிறப்பற வருளாலாங்கே—குறியொடுமைந்தவத்தை கூடுவர் வீடு கூட" என்றொழிந்தார் வழிநூலாசிரியரும்.

இவ்விரண்டு வெண்பாக்களானுங் கூறிப்போந்த முத்திறத் தைந்தவத்தைகட்கு முறையே மூலமாய கேவலஞ் சகலஞ் சுத்த மென்ற மூன்றனுள்வைத்துத் தன்னுண்மையெனப்படுங் கேவலத் தினியல்பு சகசமலத்துணரா தென்பதனானே பெற்றாம். ஏனைச் சகலத்தினியல்பு வருகின்ற சூத்திரத்தினுஞ் சுத்தத்தினியல்பு அப்பாலைச் சூத்திரத்தினும் பெறுதும்.

இலக்கணவியல் நான்காஞ்சூத்திரம். 3--ம் அதி.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோ வெனின், மேலே உதாரணத்திற் கூறியவாறு கீழாலவத்தையில் துரியாதீதத்தைப் பொருந்திய புருடன் அந்த அவத்தையினின்றும் நீங்கி எல்லாக் கருவிகளுந் தொழிற்படுகின்ற உணர்த்துமுறைமைச் சாக்கிரத்தைக் கூடும் முறையை அநுவாத முகத்தால் விளக்கி, அந்த உணர்த்துமுறைமைச் சாக்கிரத்தினும் முறைப்படி செலுத்துங் கருவிகளாகிய சிவதத்துவம் ஐந்தின் றொழிற்பாடுபற்றி ஐந்தவத்தை நிகழுமெனவும், அந்த அவத்தைகள் இவை யெனவும், அவைகள் போலச் சுத்தத்திலும் ஐந்தவத்தை உண்டெனவுங் கூறி ஐந்தவத்தைப்படு மென்பதை வலியுறுத்தியவாறும்.

அநுவாத முகத்தால் விளக்கியதும் உணர்த்து முறைமைச் சாக்கிர மென்பதும் உரையின் கீழ் விளக்கப்படும்.

(பொ-ரை.) இலாடத்தானத்தில் நின்றும் நீங்கிக் கண்டம் இருதயம் நாபி மூலாதாரமாகிய் தானங்களில் அவத்தைப்பட்டுக் கீழ்நோக்கிச்சென்ற பின் மீண்டும் மூலாதாரத்தில் நின்றும் நீங்கி மேல் நோக்கி ஒவ்வொரு தானத்தினும் அந்த அந்தத் தானத்திற்குரிய அவத்தையை அடைந்து இலாடத்தானத்தில் உணர்த்துமுறைமையிலே உடைய சாக்கிரத்தைக் கூடிய உயிர் அவ்வுணர்த்தும் முறைமைச் சாக்கிரத்தும், சாக்கிரம் சொப் பனம் சுழுத்தி துரியம் துரியாதீதமாகிய ஐந்தவத்தையை அடையும். அந்த அவத்தைகளாவன:—உணர்த்தும் முறைமைச் சாக்கிரமாகிய அந்த இலாடத் தானத்தில் அந்த அந்த இந்திரியங்களினால் அந்தந்த விடயங்களை உணர்ந்து உணர்ந்த அப்பொழுது அப்பொழுதே அந்த அந்த விடயங்களில் நின்று நீங்குதலாம். இனி முன்னர்க்கூறப்படும் சுத்தாவத்தையினும் இவ்வாறே சாக்கிரம் முதலாக ஐந்தவத்தைப்படும் எ-று.

(க-ரை.) உயிர் இலாடததானமாகிய புருவநடுல் நின்றும் நீங்கிக் கீழ் நோக்கி மூலாதாரத்தை யடைந்தவாறே மேல்நோக்கி இலாடத்தையடைந்து விடயங்களை அனுபவிக்குங்காலத்து அவ்விடத்தினும் ஐந்தவத்தைப்படும். இவ்வாறே சுத்தத்தினும் ஐந்தவத்தைப்படும் என்பதாம்.

அனுவாதமுகத்தால் விளக்கியது எவ்வாறெனின், மூலாதாரத்தில் நின்றும் நீங்கி மேற்செல்லுங்கால் ஒவ்வொரு தானங்களிற்படும் அவத்தை களும் கீழ்ச்செல்லுங்காலத்துப்பட்டதுபோலன்றி விசேடமில்லை. அந் தந்தத் தானத்தில் மீண்டும் அந்தந்த அவத்தையை அடைந்தே மேற்செல் லும். ஆதலால் அந்த அவத்தைகளைச் செய்யுளில் வகுத்தோதாது இலாடத் தேசாக்கிரத்தை யெய்திய வுள்ளம் எனக்கூறினமையால் கீழுள்ள ஏனைய அவத்தைகளை அனுவாதத்தாற் கூறிய வாறாயிற்று. அதாவது நாபியில்

துரியமும் இயத்தில் சுழுத்தியும் கண்டத்தில் சொப்பனமும் அடைந்து இலாடத்தில் வந்து சாக்கிரத்தை யடையும் என்று கூறியபடியாம்.

உணர்த்தும் முறைமைச் சாக்கிரமென்றதன் கருத்தென்னையெனின், கீழ் நோக்கிச் செல்லுங்காலத்தும் இலாடத்தில் சாக்கிர அவத்தை நிகழும். மேல்நோக்கி மீளுங்காலத்தும் இலாடத்தில் சாக்கிர அவத்தை நிகழும். ஆயினும் கீழ்நோக்கியசாக்கிரம் விடயங்களை உணர்த்தாது. மேல்நோக்கி மீளுங் காலத்து உண்டாம் சாக்கிரம் விடயங்களை உணர்த்தும். ஆதலால் இதனை உணர்த்தும் முறைமைச் சாக்கிர மென்றும் பிரேரக அவத்தை யென்றும் உரையாசிரியர் கூறினர். பிரேரகமென்பது செலுத்துதல். இதனால் கீழ்நோக்கியசாக்கிரம் நித்திரைக்குச் செல்லுங்காலத்தில் நிகழும் எனவும் மீளுங்காலத்து உண்டாம் சாக்கிரம் நித்திரை நீங்கியபொழுது நிகழுமென வும் பெறப்பட்டு இவ்விரண்டு சாக்கிரத்திற்குந் தானம் ஒன்றேயென மேற் கூறியது வலியுறுத்தப்பட்டவாறு காண்க.

கீழ்ச்சென்ற உயிர் விடய அனுபவத்தின் பொருட்டுமேல்வந்து இலாடத்தில் சாக்கிரத்தை யடைதலால் இச்சாக்கிரத்தையே மேல்நோக்கியசாக்கிர மென்று கூறலாகாதோவெனின், ஆகாது; ஏனெனின், சாக்கிர முதலிய அவத்தைகள் முறையேமேல் நோக்குங்காலத்து நிகழாமையினாலென்க. ஆகவே, மேல் நோக்கியசாக்கிரம் என்பது மேற்கூறியபடி இருதயத்தில் யோக முறையில் நிகழ்வதேயாம். இதனைச் சித்தியார் ௪-ம் சூ-ம் ௩௪-வது "இருவகைச் சாக்கி ராதி" யென்ற செய்யுளில் "யோகிற் றருவது" என்றதனால் அறிக.

கீழ்நோக்கி 'இறங்குங் காலத்துக் கண்டத்தானத்தில் கனாக் காண்டலுண்டென்பதை ஞானாமிர்தம் ஒன்பதாவது அகவலிலும், மேல் நோக்கி ஏறுங்காலத்துக் கண்டத்தானத்தில் கனாக்காண்டலுண்டென்பதைப் போற்றிப் பஃறொடை ௯௨-வது அடியினும் காண்க

அவ்வவ இந்திரிய மென்றது அந்தந்த இடத்தில் விடயங்களை அறியக்கூடிய இந்திரியத்தை.

அத்துறைகள் என்றது அவ்வவ்விடயத்தைக் குறித்து நின்றது. அவ்வவ்விடய மென்றது அந்தந்த இந்திரியங்களால் அறிதற்குரிய விடயம்

அத்துறைகள் கண்டு என்பது அவ்வவற்றினீங்கல் என்பதனோடு கூடி முடிதலால் கண்டு நீங்கலென இயையும்.

கண்டதுவே என்பதிலுள்ள அது என்பது அவ்வக்காலத்தைக்குறித்து நின்றது. உரையும் அவ்வாறு செய்யப்பட்டது. அது என்பது அக்காலம் என்பதையே குறிக்குமாயினும் அவ்வவ இந்திரியம் அவ்வவ்விடயம் என மேல் அடுக்கிக் கூறியதற்கேற்ப அது என்றதற்கு அவ்வக்காலம் என அடுக்கிக் கூறப்பட்டது.

அதுவே என்பது அவ்வக்காலத்தைக் குறித்து அப்போதப்போதே எனினும் அப்போதப்போதின்கண்ணே யென்பது பொருள். அப்பொருளைத்தரும் கண்ணுருபை விரியாது தொகுத்து ஏகாரத்தை விரித்தார்.

கண்டது என்பதை கண்டு அதுவெனப்பிரியாது ஒருமொழியாகவைத்துரைப்பாரும் உளர். கண்டது என்பதின் இறுதியிலுள்ள உகரம் குற்றியலுகரம். உயிர் முன் உயிர்வரின் உடம்படுமெய் பெறுமென்பதுவிதி. குற்றியலுகரத்தின்முன் உயிர்வரின் உடம்படுமெய் பெறுமென்பதற்கு விதிகிடையாது. "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" என்பது விதி. இச்செய்யுளில் கண்டது என்பதன் முன் ஏகார உயிர்வந்து உடம்படுமெய் பெற்றுக் கண்டதுவே என வந்திருக்கின்றமையால் அவ்வுரை பொருந்தாது; கண்டதே என்றிருப்பின் ஒருமொழியாகக் கூறலாம். அன்றியும் அத்துறைகள் கண்டு அதுவே அவ்வவற்றினீங்கல் என்பதுபோல அத்துறைகள் கண்டதுவே அவ்வவற்றி னீங்கல்என்பது பொருளிஞலும் சிறப்பில்லை. ஆதலாலும் கண்டது என ஒருமொழியாகக்கொண்டு கூறும் உரை பொருந்தாது என அறிக.

அப்போதப்போதே நீங்கலாவது விடயங்களைக் கண்ட கண்ட பொழுதே அயர்த்துவிடுதல். இக்கருத்துப்பற்றியே "ஒன்றின்பாலும் வருபயன் மாறி மாறி வந்திடும்" எனச் சிவஞானசித்தியார் ௨-ம் சூ-ம் ௯௭-வது செய்யுளில் வழிநூலாசிரியர் கூறினர். இன்னும் அந்நூல் ௪-ம் சூ-ம் ௩௫-வது செய்யுளில் "கரணந் தன்னிற் செயற்றுறுங் கண்டு கொண்ணீ" எனவும், ௩௬-வது செய்யுளில் "உந்திடுங் கரணந் தன்னிற் செயற்றுறு முணர்ந்து கொள்ளே" எனவும் கூறியன இக்கருத்துப்பற்றியேயாம்.

கண்ட கண்டபொழுதே அயர்த்துவிடுதலினால் சாக்கிர முதலான ஐந்தவத்தை நிகழும் என்னும் இந்நுட்பத்தை அறிந்துகொள்ளுதற்குத் தூலாருந்ததி நியாயம் பற்றிக் கைப்பொருளை வீழ்த்தித் தெளிதல் முதலிய தூலத்துள் வைத்துக்காட்டுவர்.

தூலாருந்ததி நியாயமாவது:— தூலமாகிய பெரிய நட்சத்திரத்தைக் காட்டிச் சூக்குமமாகிய அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டல். இவ்வாறே கைப்பொருளை வீழ்த்தித் தெளிதலாகிய தூலத்தில் ஐந்தவத்தை உண்டென்பது காட்டிச் சாக்கிரத்தில் சாக்கிரமுதலிய ஐந்தவத்தையுண்டென்று உணர்த்துதல் தூலாருந்ததி நியாயமென அறிக.

கைப்பொருளை வீழ்த்தித் தெளிதலில் ஐந்தவத்தை நிகழ்வது எவ்வாறெனின், தன்கையிலிருந்த ஒரு பொருள் தன்னை யறியாது விழப் பின்னர் அது விழுந்ததென உணர்ந்து பிராணவாயு இயக்கமின்றி மூர்ச்சித்தல் துரியாதீதம். அம் மூர்ச்சை தெளிந்து சற்றே பிராணவாயு இயங்குதல் துரியம். எவ்விடத்து விழுந்ததோ என எண்ணுதல் சுழுத்தி. விழுந்தவிடம் இதுவோ

துரியமும் இயத்தில் சுழுத்தியும் கண்டத்தில் சொப்பனமும் அடைந்து இலாடத்தில் வந்து சாக்கிரத்தை யடையும் என்று கூறியபடியாம்.

உணர்த்தும் முறைமைச் சாக்கிரமென்றதன் கருத்தென்னையெனின், கீழ் நோக்கிச் செல்லுங்காலத்தும் இலாடத்தில் சாக்கிர அவத்தை நிகழும். மேல்நோக்கி மீளுங்காலத்தும் இலாடத்தில் சாக்கிர அவத்தை நிகழும். ஆயினும் கீழ்நோக்கியசாக்கிரம் விடயங்களை உணர்த்தாது. மேல்நோக்கி மீளுங் காலத்து உண்டாம் சாக்கிரம் விடயங்களை உணர்த்தும். ஆதலால் இதனை உணர்த்தும் முறைமைச் சாக்கிர மென்றும் பிரேரக அவத்தை யென்றும் உரையாசிரியர் கூறினர். பிரேரகமென்பது செலுத்துதல். இதனால் கீழ்நோக்கியசாக்கிரம் நித்திரைக்குச் செல்லுங்காலத்தில் நிகழும் எனவும் மீளுங்காலத்து உண்டாம் சாக்கிரம் நித்திரை நீங்கியபொழுது நிகழுமென வும் பெறப்பட்டு இவ்விரண்டு சாக்கிரத்திற்குந் தானம் ஒன்றேயென மேற் கூறியது வலியுறுத்தப்பட்டவாறு காண்க.

கீழ்ச்சென்ற உயிர் விடய அனுபவத்தின் பொருட்டுமேல்வந்து இலா டத்தில் சாக்கிரத்தை யடைதலால் இச்சாக்கிரத்தையே மேல்நோக்கியசாக் கிர மென்று கூறலாகாதோவெனின், ஆகாது; ஏனெனின், சாக்கிர முத லிய அவத்தைகள் முறையேமேல் நோக்குங்காலத்து நிகழாமையினலென்க. ஆகவே, மேல் நோக்கியசாக்கிரம் என்பது மேற்கூறியபடி இருதயத்தில் யோக முறையில் நிகழ்வதேயாம். இதனைச் சித்தியார் ௬-ம் சூ-ம் ௩௬-வது "இருவகைச் சாக்கி ராதி" யென்ற செய்யுளில் "யோகிற் றருவது" என்றத னால் அறிக.

கீழ்நோக்கி 'இறங்குங் காலத்துக் கண்டத்தானத்தில் கனாக் காண்ட லுண்டென்பதை ஞானமிர்தம் ஒன்பதாவது அகவலிலும், மேல் நோக்கி ஏறுங்காலத்துக் கண்டத்தானத்தில் கனாக்காண்ட லுண்டென்பதைப் போற்றிப் பஃறொடை ௩௨-வது அடியினும் காண்க

அவ்வவ இந்திரிய மென்றது அந்தந்த இடத்தில் விடயங்களை அறி யக்கூடிய இந்திரியத்தை.

அத்துறைகள் என்றது அவ்வவ்விடயத்தைக் குறித்து நின்றது. அவ் வவ்விடய மென்றது அந்தந்த இந்திரியங்களால் அறிதற்குரிய விடயம்

அத்துறைகள் கண்டு என்பது அவ்வவற்றினீங்கல் என்பதனோடு கூடி முடிதலால் கண்டு நீங்கலென இயையும்.

கண்டதுவே என்பதிலுள்ள அது என்பது அவ்வக்காலத்தைக்குறித்து நின்றது. உரையும் அவ்வாறு செய்யப்பட்டது. அது என்பது அக்காலம் என்பதையே குறிக்குமாயினும் அவ்வவ இந்திரியம் அவ்வவ்விடயம் என மேல் அடுக்கிக் கூறியதற்கேற்ப அது என்றதற்கு அவ்வக்காலம் என அடுக்கிக் கூறப்பட்டது.

அதுவே என்பது அவ்வக்காலத்தைக் குறித்து அப்போதப்போதே எனினும் அப்போதப்போதின்கண்ணே யென்பது பொருள். அப்பொருளைத்தரும் கண்ணுருபை விரியாது தொகுத்து ஏகாரத்தை விரித்தார்.

கண்டது என்பதை கண்டு அதுவெனப்பிரியாது ஒருமொழியாகவைத்துரைப்பாரும் உளர். கண்டது என்பதின் இறுதியிலுள்ள உகரம் குற்றியலுகரம். உயிர் முன் உயிர்வரின் உடம்படுமெய் பெறுமென்பதுவிதி. குற்றியலுகரத்தின்முன் உயிர்வரின் உடம்படுமெய் பெறுமென்பதற்கு விதிகிடையாது. "உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" என்பது விதி. இச்செய்யுளில் கண்டது என்பதன் முன் ஏகார உயிர்வந்து உடம்படுமெய் பெற்றுக் கண்டதுவே என வந்திருக்கின்றமையால் அவ்வுரை பொருந்தாது; கண்டதே என்றிருப்பின் ஒருமொழியாகக் கூறலாம். அன்றியும் அத்துறைகள் கண்டு அதுவே அவ்வவற்றினீங்கல் என்பதுபோல அத்துறைகள் கண்டதுவே அவ்வவற்றினீங்கல்என்பது பொருளினும் சிறப்பில்லை. ஆதலாலும் கண்டது என ஒருமொழியாகக்கொண்டு கூறும் உரை பொருந்தாது என அறிக.

அப்போதப்போதே நீங்கலாவது விடயங்களைக் கண்ட கண்ட பொழுதே அயர்த்துவிடுதல். இக்கருத்துப்பற்றியே "ஒன்றின்பாலும் வருபயன் மாறி மாறி வந்திடும்" எனச் சிவஞானசித்தியார் உ-ம் சூ-ம் கூஅ-வது செய்யுளில் வழிநூலாசிரியர் கூறினர். இன்னும் அந்நூல் ச-ம் சூ-ம் ௩௫-வது செய்யுளில் "கரணந் தன்னிற் செயலுறுங் கண்டு கொண்ணீ" எனவும், ௩௬-வது செய்யுளில் "உந்திடுங் கரணந் தன்னிற் செயலுறு முணர்ந்து கொள்ளே" எனவும் கூறியன இக்கருத்துப்பற்றியேயாம்.

கண்ட கண்டபொழுதே அயர்த்துவிடுதலினால் சாக்கிர முதலான ஐந்தவத்தை நிகழும் என்னும் இந்நுட்பத்தை அறிந்துகொள்ளுதற்குத் தூலாருந்ததி நியாயம் பற்றிக் கைப்பொருளை வீழ்த்தித் தெளிதல் முதலிய தூலத்துள் வைத்துக்காட்டுவர்.

தூலாருந்ததி நியாயமாவது:— தூலமாகிய பெரிய நட்சத்திரத்தைக் காட்டிச் சூக்குமமாகிய அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டல். இவ்வாறே கைப்பொருளை வீழ்த்தித் தெளிதலாகிய தூலத்தில் ஐந்தவத்தை உண்டென்பது காட்டிச் சாக்கிரத்தில் சாக்கிரமுதலிய ஐந்தவத்தையுண்டென்று உணர்த்துதல் தூலாருந்ததி நியாயமென அறிக.

கைப்பொருளை வீழ்த்தித் தெளிதலில் ஐந்தவத்தை நிகழ்வது எவ்வாறெனின், தன்கையிலிருந்த ஒரு பொருள் தன்னை யறியாது விழப்பின்னர் அது விழுந்ததென உணர்ந்து பிராணவாயு இயக்கமின்றி மூர்ச்சித்தல் துரியாதீதம். அம்மூர்ச்சை தெளிந்து சற்றே பிராணவாயு இயங்குதல் துரியம் எவ்விடத்து விழுந்ததோ என எண்ணுதல் சுழுத்தி விழுந்தவிடம் இதுவோ

அதுவோ என எண்ணுதல் சொப்பனம். விழுந்த இடத்தை நிச்சயித்தலும் கண்டெடுத்தலும் சாக்கிரம். இவ்வாறே சுகதுக்கங்களைக் கேட்ட மாத்திரையால் திடுக்கிட்டுப் பிராணவாயு சீவியாமல் மூர்ச்சித்து மயங்கி நிற்றல் துரியாதீதம். சுகதுக்கந் தோன்றாது பெருமூச் செறிந்து நிற்றல் துரியம். சுகதுக்கத்தில் மூழ்கி நிற்றல் சுழுத்தி. சுகதுக்கம் வந்தவரலாற்றை நாடி மனோவியாபாரஞ் செய்து நிற்றல் சொப்பனம். சுகதுக்கங்களை அனுபவித்தல் சாக்கிரம். இதனை, "விரும்பு மரும்பொருளை வீழ்த்து மயங்க—லிரிந்தவனிலன் பெறுகை—வருந்தறிவு—தோன்று தலையம் விழுந்த விடந் தோன்றுதலென்—றுன்ற வைந்துஞ் சாக்கிரத்தி னும்" என்னும் அபியுத்தர் வாக்கானும் உணர்க.

இவ்வதிகரணம் தத்துவ சொரூபியாய் நிற்றலினால் உண்டாம் ஐந்தவத்தையின் இயல்பு கூறுதற் கெழுந்தது. அவ்வாறெழுந்த இவ்வதிகரணத்தில் சுத்தத்தின்கண் ஐந்தவத்தை உண்டென்று கூறுதற்கு இயைபில்லை. எதனாலெனின், இவ்விடத்துக் கூறப்படும் ஐந்தவத்தை தத்துவங்களினால் உண்டாவது. சுத்தத்தின்கண் நிகழும் ஐந்தவத்தை தத்துவங்களின் நீக்கத்தால் உண்டாவது. அவ்வாறாகவும் தத்துவங்களால் உண்டாகும் அதனோடு இயைபில்லாத சுத்தாவத்தையை இவ்வதிகரணத்திற்கூறியதன் கருத்தென்னையெனின், அவத்தையெனப்படுவன இவ்விடத்துக் கூறியன மாத்திரையேயன்றி வேறில்லை போலுமென மயங்காதிருத்தற் பொருட்டு வேறும் ஐந்தவத்தை யுள அவை முன்னர்க் கூறப்படும் என்னும் அவ்வளவே கூறவெண்ணி அது வாங்கு எனச் செய்யுளிற் கூறிச் சென்றார் என அறிக. இச்செய்யுளின் கருத்துப்பற்றியே சித்தியார் ச-ம் சூ-ம் ருடு-வது செய்யுளில் "பிறிவிலா ஞானத்தோரும் பிறப்பற வருளா லாங்கே, குறியொடு மைந்தவத்தை கூடுவர் வீடு கூட" என வழிநூலாசிரியருங் கூறிவிட்டனர்.

இவ்வதிகரணத்துள்ள இரண்டு வெண்பாக்களாலும் கீழ்நோக்கிய ஐந்தவத்தை, மேல்நோக்கிய ஐந்தவத்தை, மத்தியில் நிகழும் ஐந்தவத்தையென அவத்தைகளைக் கூறி முடித்தார். அவற்றுள் மேல் நோக்கிய ஐந்தவத்தை சகலத்திற் சுத்தம், மத்தியில் நிகழும் ஐநதவத்தை சகலத்திற் சகலம், கீழ் நோக்கிய ஐந்தவத்தை சகலத்திற் கேவலம் எனபபடும். படவே, மூலமாகிய கேவலம், சகலம், சுத்தமென மூன்று அவத்தை வேறுண்டென்பது விளங்கும். அம் மூன்றனுள் உயிர் கருவிகளோடு கூடாமல் தனித்து நிற்பதாகிய தன்னுண்மை யெனப்படுங் கேவலத்தின் இயல்பு இச்சூத்திரத்தில் சகசமலத் துணராது எனக் கூறியதனால் பெறப்பட்டது. ஏனைச் சகலத்தின் இயல்பு வருகின்ற ஐந்தாம் சூத்திரத்தாலும், சுத்தத்தின் இயல்பு ஆறாஞ் சூத்திரத்தாலுங் கூறப்படும்.

இச்சூத்திரத்திலேயே கேவலமும் சகலமும் கூறிவிட்டதாகக் கொள்ளலாகாதோ வெனின், ஆகாது; எதனாலெனின், கேவலமென்பது கருவிகளோடு கூடாதநிலை. சகலம் என்பது கருவிகளோடு கூடிய நிலை. கருவிக

ளோடு கூடுங்காலத்து ஐந்தவத்தை நிகழும். கருவிகளோடு கூடாத நிலையில் ஆணவமலத்தோடு கூடியிருக்கும். அதனைச் சகசமலத்துணராது எனக்கூறி அவ்வுணராமையினால் அடையும் ஐந்தவத்தையை மட்டும் இச் சூத்திரத்திற் கூறினதேயன்றி உணரும் முறை கூறவில்லை. உணரும் முறைதான்சகலம். அது "தாம்தம் உணர்வின் றமியருள்" என வருகின்ற சூத்திரத்திற்றான் கூறப் படுகின்றது. ஆதலால்இச்சூத்திரத்தில் கேவலத்தினியல்பும், அடுத்த சூத்திரத்தில் சகலத்தினியல்புங் கூறப்பட்டனவென அறிக.

சுத்தம் என்றது அச்சுத்தமாகிய கருவிகளில்லாமை. அது ஆறாஞ் சூத்திரத்தில் "உணருரு வசத்து" என்றதனாற் கூறப்படுகின்றது.

இந் நான்காஞ் சூத்திரத்தினாலும். அதிகரணங்களினாலுங் கூறிமுடித்த தொகைப்பொருள்:- மூன்றாஞ் சூத்திரத்தில் உண்டென்று சாதிக்கப்பட்ட உயிர், அந்தக்கரணங்களில் ஒன்றன்று; ஆயினும்சகசமலத்தோடுகூடலால் உண்டாம் அறியாமையை நீக்குதற் பொருட்டு அந்தக்கரணங்களைக் கூடிற்று; கூடின விடத்து ஐந்தவத்தையை யடைந்தது. இவ்வாறு ஐந்தவத்தையடைதலே உயிருக்குப் பொதுவிலக்கணம் எனச் சூத்திரத்தாற் கூறப்பட்டது. படவே, அந்தக்கரணம் நீங்கிய ஏனைய வெல்லாம் உயிரல்ல வென்பது ஒக்கும். சிந்தையைச் சீவனென்றும் சீவனைச் சிந்தை யென்றும் கூறுதலால் அந்தக்கரணமே உயிரென அந்தக்கரணான்மவாதிகள் கூற, முதலதிகரணத்தால் அவரைமறுத்து இந்திரியங்களை நோக்க அந்தக்கரணம் அறிவுடையதாயினும் உயிரை நோக்கவும் அவ்வந்தக்கரணமாகிய தன்னை நோக்கவும் அறிவுடையதாகாமல் உயிருக்குக் கருவியாயிருத்தலால் அந்தக்கரணம் உயிரன்றெனச் சாதிக்கப்பட்டது; படவே, உயிர் அந்தக்கரணங்களில் ஒன்று அன்றாயின் அவற்றொடுகூடுதற்கு ஏது என்னையென்று அவ்வந்தக்கரணான்மவாதிகள் வினவ, இரண்டாம் அதிகரணத்தால் சகசமலத்தோடு கூடி உணர்வு நிகழாதிருந்தமையால் உணர்வு நிகழ்தற்பொருட்டு அந்தக்கரணங்களைக் கூடிற்று என விடை கூறப்பட்டது; படவே, அந்தக் கரணங்களைக் கூடின விடத்து இருள் நீங்கப்பெற்றகண், பொருளை ஒரேவிதமாயறிதல் போல ஒருவிதமாய் அவத்தைப்படாமல் வேறு வேறு விதமாய் அவத்தைப் படுமென்றல் பொருந்தாதென அவ்வந்தக்கரணான்மவாதிகள் கூற, மூன்றாம் அதிகரணத்தால் அவரை மறுத்துக் கருவிகள் கூடிப் பிரிந்து இல்லையாகின்ற முறையில் சாக்கிரமுதலாக வேறு வேறு அவத்தை நிகழுமெனச் சாதிக்கப் பட்டது.

மூன்றம் அதிகாரணம் முற்றிற்று.

நான்காம் சூத்திரம் முற்றிற்று.

ஐந்தாஞ் சூத்திரம்.

பாச இலக்கணம்.

இரண்டாஞ் சூத்திரத்தால் உண்டென்று சாதிக்கப்பட்ட பாசத்திற்கு இலக்கணம் இவ்வைந்தாஞ் சூத்திரத்தாற் கூறுகின்றார்.

விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

கருத்துரை.

எ-து சூ-ம் எ-னின், இவ்வான்மாக்களிடத்துத் தமது முதலுபகார முணர்த்துத லுதலிற்று.

சிற்றுரை.

எ-து க-ரை எ-னின், சூத்திரக்கருத்துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்.) ஐந்தவத்தைப்படும் வழிக் கருவியும் உயிரும் அமைச்சும் அரசுமேய்ப்பதிற்பின் அவையே யமையுமாகலான் முதல்வனால் ஆண்டைக்காகற்பாலதொரு பயனில்லைபோலு மென்னுங் கடாவை யாசங்கித்து ஆண்டும் இன்றியமையாது வேண்டப்படுவதாய முதல்வனுடைய உதவியை அறிவிக்குமுகத்தானே இரண்டாஞ் சூத்திரத்திேனாதிய துணைக்காரண முதற்காரணங்கள திலக்கண முணர்த்துதல் இவ்வஞ்சாஞ் சூத்திரத்தின் கருத்து. எ-று.

இதனானே சூத்திரவியைபும் இனிது விளங்கும்.

மாயை கன்மங்கள் திரோதானசத்திக்குக் கருவியாய் அதனுளடங்குதலிற் றமது முதலுபகாரமெனப்படுந் திரோதானசத்தியதிலக்கணங் கூறவே அவற்றதிலக்கணமுங் கூறியவாறுதலறிக.

விளக்கம்.

இக்கருத்துரை என்ன சொல்லிற்றோவெனின், சூத்திரக்கருத்து இது வென்று சொல்லிற்று.

(இக்கருத்துரையின் பொருள்.) நான்காஞ் சூத்திரத்திற் கூறியவாறு உயிர் ஐந்தவத்தையடையுமிடத்து அந்தக்கரணமும் தானும் அமைச்சரும்

அரசனும்போல நிற்பின், அவத்தையடைதற்கு அந்தக்கரணங்களே போது மாதலால் அவ்விடத்து முதல்வனால் ஆகவேண்டியபயன் ஒன்றுமில்லையோ என்னும் ஐயம் நிகழுமன்றே? அந்நிகழ்ச்சிபற்றி ஐந்தவத்தைப்படுமிடத்தும் முதல்வனுடைய உபகாரம் இல்லாமல் முடியாதென அவ்வுபகாரத்தை அறிவிக்கின்ற முறையில் இரண்டாஞ்சூத்திரத்திற்கூறப்பட்ட துணைக்காரணமாகிய சிற்சத்திவழியாய்வருங் கன்மம் முதற்காரணமாகிய மாயைகளின் இலக்கணங்கூறுதல் இவ்வைந்தாஞ்சூத்திரத்தின் கருத்து எ—று.

நான்காஞ்சூத்திரத்தில் உயிர் ஐந்தவத்தைப்படுமெனக்கூறி இச்சூத்திரத்தில் ஐந்தவத்தைப்படுமிடத்தும் முதல்வனுடைய உபகாரம் வேண்டப்படுமெனக் கூறுதலால் சூத்திர இயைபு பெறப்பட்டது.

இச்சூத்திரத்தில் பாசத்தைக் குறித்த வாக்கியம் யாதெனின், அருள் என்பதேயாம். அவ்வருள் திரோதான சத்தியைக்குறித்துநிற்கும் என்பது சூத்திரத்துரையின் விளக்கப்படும். திரோதானசத்தியென்பது மறைத்தலைச் செய்யுஞ்சத்தி. இதனை ககஅ-ம் பக்கத்திற்காண்க. அது தன் மறைத்தற்றொழிலைச் செய்வதற்கு மாயை கன்மங்கள் கருவியாய் வேண்டப்படும். படவே, அத்திரோதான சத்தியினுள் மாயை கன்மங்கள் அடங்குமென்றாகித் திரோதான சத்தியின் இலக்கணங் கூறியதனால் மாயை கன்மங்களின் இலக்கணமுங் கூறியவாறாயிற்று. இத்திரோதான சத்தியே ஆதி சத்தியாம்.

ஆணவமலத்தின் இலக்கணம், பாச இலக்கணங்கூறும் இச்சூத்திரத்திற் கூறவேண்டுவதாயினும் மாயை கன்மங்கள்போல இடையே வந்து கூடாமல் உயிருடன் சகசமாய்க் கூடியுள்ளதாதலால் அந்தச் சம்பந்தம்பற்றி உயிரின் இலக்கணங் கூறிய நான்காஞ் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்திற் கூறப்பட்டது.

சிற்றுரை.

இச்சூத்திரத்தின் பிண்டப் பொழிப்பு.

விளம்பிய வுள்ளத்து மெய் வாய் கண் மூக்கு—மேலைச் சூத்திரங்களின் அங்ஙனங் கூறிப்போந்த உயிரானே மெய்வாய் கண் மூக்குச் (செவி) யென்பன,—அளந்தறிந்து—(தத்தம் விடயங்களை இஃதின்னதென்று) அளவிட்டறிந்தும் (அங்ஙனமறியுந் தம்மையுந் தம்மையதிட்டித்து நின்று செலுத்தும் அவ்வுயிரையும்),—அறியா—அறியமாட்டா:—ஆங்கவைபோல—அவ்விந்திரியங்கள்போல்,—தாம்—உயிர்களும்,—தம்முணர்வின்—தமதறிவிற்கு வியஞ்சகமாகிய,—தமி—முதல்வனது,—அருள்—சிற்சத்தியான்,—(அளந்தறிந்

தறியா)—மேற்கூறிப்போந்த (இருவகை யஞ்சவத்தையினின்று வினைப்பயன்களை யறிந்து அநுபவிக்குந் தம்மையுந் தம்மைச்செலுத்தி நிற்குந் திருவருளையும் அறியமாட்டா,)—அவையே—உயிர்கள் (அவ்வாறுணர்தல்),—காந்தங் கண்டபசாசத்து—காந்தத்தைக் கண்ட இரும்பு அதன் சந்நிதிமாத்திரையின் வலித்துக்கொள்ளப் படுமாறுபோலக் (கரணந்தானன்றிச் சங்கற்பத்தான் அதிட்டிக்கு முதல்வன் சந்நிதிமாத்திரையினும்; ஆகலான், அதுபற்றி முதல்வன் விகாரியாதலின்று) எ—று.

ஆகலான் அதுபற்றி முதல்வன் விகாரியாதலின் றென்பது குறிப்பெச்சம்.

செவி யென்பது சொல்லெச்சம்.

"ஐம்பொறிகளைக் கூறியது உபலக்கணமாகலின் ஏனைக்கருவிகளும் அவ்வாறுதல் கொள்ளப்படும். அற்றாகலினன்றே" "பொறி புலன் கரண மெல்லாம் புருடனு லறிந்து" என்றார் வழிநூலாசிரியரும்.

விடயங்களை யறிவுழி முதல்வன் உடனின்று செலுத்துவனாயின், அவ்விடயங்களோடொப்ப முதல்வனையும் அறிதல் வேண்டுமென்பாரை நோக்கி, அளந்தறிந்தென் றொழியாது அறியாவென்றார்.

ஆங்கவை ஒருசொன்னீர்மைத்து. தம்முணர்வின் றமியென்றது தமது முதலென்னும் பொருள்பட வந்த ஆறும் வேற்றுமைத் தொகை.

ஈண்டு அருளென்றது ஏற்புழிக் கோடலால் திரோதான சத்தியின்மேனின்றது. அருளாலெனவிரித்து அளந்தறிந்தறியாவென, உவமைக்கோதிய வினையைப் பொருளினுங் கூட்டியுரைக்க.

விளக்கம்.

(இச்சூத்திரத்தின் பொழிப்புரை.) மூன்றாஞ் சூத்திரம் நான்காஞ் சூத்திரங்களினால் கருவிகளின் வேறாயும் கருவிகளோடு கூடி அவத்தைப் படுமெனவுங் கூறி முடிக்கப்பெற்ற உயிரினால், மெய் வாய் கண், மூக்குச் செவி யென்று கூறப்படும் இந்திரியங்கள் தத்தமக்குரிய விடயங்களை இது இன்னது என்று அளவிட்டறியும். அறிந்தும் விடயங்களை யறியுந் தம் ... ம் தம்மை இடமாகக்கொண்டு நின்று விடயங்களில் தம்மைச் செலுத்,

கின்ற அவ்வுயிரையும் அறியமாட்டாவாம். அவ்வாறு அறியமாட்டாத அவ் விந்திரியங்கள்போல,உயிர்களுந் தமது அறிவிற்குத் துணையாகிய முதல்வனு டைய சிற்சத்தியால் மேலைச்சூத்திரத்திற் கூறி முடித்தவாறு கீழாலவத் தையிற்படும் அஞ்சவத்தை புருவநடுவிற்படும் அஞ்சவத்தைகளில் நின்று வினைப்பயன்களை யறிந்து அனுபவிக்கும்; அநுபவிப்பினும் அனுபவிக்குந் தம்மையும் தம்மை விடயங்களிற் செலுத்துகின்ற திருவருளையும் அறியமாட் டாவாம். இந்திரியங்களைச் செலுத்தும் உயிர் அவ்விந்திரியங்களால் அறியப்ப டும் விடயங்களால் வேற்றுமைப்படுமாறுபோல, உயிரைச்செலுத்தும் முதல் வன்றிருவருளும் அவ்வுயிரால் அறியப்படும் விடயங்களால் வேற்றுமைப்படு மோவெனின், படாது. எதனலெனின், இரும்பு காந்தத்தின் சந்நிதிமாத்தி ரையில் இழுத்துக்கொள்ளப்படுமாறுபோல, கரணத்தாலன்றிச் சங்கற்பமாத் திரத்தால் உயிரை அதிட்டித்து நிற்கும் முதல்வன்சந்நிதிமாத்திரையால் அவ்வுயிர்கள் செலுத்தப்படுதலினலென்க எ-று.

அதிட்டித்தலென்பது கர்த்தா ஒன்றினிடமாக நிற்றல். அது சரீரத் தோடு கூடி நிற்றலும் சங்கற்பமாத்திரையாக நிற்றலும் என இருவகைப் படும். சரீரத்தோடு கூடி நிற்பின் அதிட்டிக்கப்பட்ட பொருள் அசைவு காலத்துத் தானும் அசையவரும். சங்கற்பமாத்திரையாக நிற்பின் அப்பொ ருள் அசையினும்தான் அசைவதில்லை இதனை ஒருதாரணத்தால் விளக்குதும். ஓரரசன் ஒருகாரியத்தைத் தான் நேரேசெய்யின் விகாரியாவான்; மந்திரி முதலாயினரைச் சங்கற்பமாத்திரையால் அதிட்டித்து அவரைக்கொண்டு செய்விப்பானாயின் அவர் அடையும் விகாரத்தைத் தான் அடையான். இவ் வாறே உயிர்களிடத்து முதல்வன் சங்கற்பமாத்திரையில் கர்த்தாவாயிருக் கின்றான். ஆதலால் உயிர்கள் அடையும் வேறுபாடு முதல்வனை யடையாது. தக்க செல்வாக்கு உடையவன் தான் சங்கற்பமாத்திரையில் கர்த்தாவாக இருந்துசெலுத்துதல் கூடும். தக்க செல்வாக்கில்லாதவனுக்கு அது கூடாது. முதல்வன் அளவில்லாத ஆற்றலுடைய வியாபகனாதலால் சங்கற்பமாத்தி ரையால் எவற்றையும் செலுத்துதல் கூடுமென்பதாயிற்று. இரண்டாஞ் சூத் திரத்தில் சங்கற்பமாத்திரையாற் செய்வதற்கு உடலையும் உயிரையுந் திருட் டாந்தங்கூறி இவ்விடத்தில் அச்செயலாற் கட்டுப்படாமைக்கு அரசனையும் மந்திரியையுந் திருட்டாந்தங் கூறியதென அறிக.

ஆகலான் அதுபற்றி முதல்வன் விகாரியாதல் இன்று என்பது சூத்தி ரத்தில் இல்லை. காந்தங் கண்டபசாசத்து என்றதனல் காந்தம்போல முதல் வன் விகாரியாத லில்லை என்பது குறிப்பாகக் கொள்ளும்படிஎஞ்சிநின்றது.

செவியென்பது சூத்திரத்தில் இல்லை. மெய் வாய் கண் மூக்குக்கு இன மாகிய அவ்வொருசொல் எஞ்சிநின்றமையால் அது சொல்லெச்சமாய் வரு விக்கப்பட்டது.

மெய் வாய் கண் மூக்குச் செவியெனக்கூறியது உபலக்கணமாதலால் ஏனைக் கருவிகளும் அவ்வாறே உயிரினால் தத்தம் விடயங்களை அறிந்தும் தம்மையும் உயிரையும் அறியமாட்டாவென்று கொள்ளப்படும். இக்கருத்துப் பற்றியல்லவா, "பொறி புலன் கரண மெல்லாம் புருடனை லறிந்தான் மாவை–யறிதரா" எனச் சிவஞான சித்தியார் ௩-ம் சூ-ம் க-வது பாட்டில் வழிநூலாசிரியர் கூறுவாராயினர்.

உயிர் விடயங்களை அறியுமிடத்து முதல்வன் உயிருடன் நின்று விடயங்களை அறியும்படி செய்வனுயின் அறியும்படி செய்கின்ற அதனால் விடயமும் முதல்வனும் உயிருக்கு வேருதல் பெறப்படும். படவே, விடயங்களை அறிவதுபோல் முதல்வனையுமறிதல் வேண்டுமென்று கொள்ளவரும்; அவ்வாறு கொள்ளக்கூடாதென்பதை உணர்த்தவேண்டி அளந்தறிந்து என்பதோடு நில்லாமல் அறியா வென்றுகூறினர். ஆகவே அறிவிக்கும் உபகாரமுணர்த்தும் இச்சூத்திரத்தில் முதல்வனையும் அறியவேண்டும் என்பாரை மறுத்தற்பொருட்டு அறியா என்பதும் உடன் கூறினர் என்க.

ஆங்கவை யென்பது ஆங்கு அவையென்னும் இரண்டு சொற்கள் சேர்ந்த தொடர்மொழியன்று. ஒருமொழியேயாம். ஆதலால் அவ்விந்திரியங்கள் என உரைசெய்யப்பட்டது.

தம்முணர்வின்றமியென்றது தமது அறிவிற்குத் துணையாகிய முதல் என்னும் பொருள்பட நின்றமையால் ஆரும் வேற்றுமைத்தொகை. அவ்வுருபை விரித்துத் தமது என உரைசெய்யப்பட்டது.

அருட்சத்தி என்பது, பராசத்தி திரோதானசத்தி இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி என ஐவகைப்படும். அவற்றுள், பராசத்தியாவது பொதுவாக உயிர்களுக்குக் கிருபை செய்யவேண்டுமென நிற்பது. திரோதான சத்தியாவது மலம் பக்குவமாதற்பொருட்டுப் பஞ்சகிருத்தியஞ் செய்யவேண்டுமென நிற்பது. இந்நிலை கன்மத்திற்கேற்றவாறு உயிர்களைச் செலுத்தவும் போகங்களைத் தோற்றுவிக்கவும் எண்ணியது என்றாகி அவற்றிற்கு வேண்டுவனவற்றைச் சிறப்பாக அறியாமலும் அறிவிக்காமலும் நிற்றலால் திரோதானமென்றவாறாயிற்று. இச்சாசத்தியாவது சிறப்பாக உயிர்களுக்குக் கிருபை செய்யவேண்டுமெனநிற்பது. அதாவது பக்குவமான உயிரை வலிந்து கிருபைசெய்ய எண்ணுவது. ஞானசத்தியாவது செய்யவேண்டுவனவற்றை யறிவது. கிரியாசத்தியாவது செய்யவேண்டுவனவற்றைச் செய்வது. இவ்வைந்து சத்திகளும் இறைவனுக்குப் பிரிப்பில்லாத சத்திகளேயாம். அவற்றுள் பராசத்தி ஒன்றே சொரூபம். ஏனைய எல்லாம் அப்பராசத்தியின் வியாபார பேதமான தடத்தம். இது எதுபோல எனின், சுடுதற் சத்தி ஒன்றே அக்கினியினிடத்தில் சொரூபமாயிருந்து அச்சத்தியின் வியாபார பேதத்தால் நீறுசெய்தல், பாகஞ்செய்தல், சுவறச்செய்தல் முதலியன தடத்தமாயினாற் போலாம்.

ஆகவே, இவ்வைந்து சத்தியும் அருட்சத்தியென்றே கொள்ளப்படு மாதலால் இச்சூத்திரத்தில் அருளென்றது வினைப்பயன்களை அநுபவிக்கச் செய்யுமென்பதற்கேற்ப ஏற்புழிக்கோடல் என்னும் உத்தியால் திரோதான சத்தியைக் குறித்துநின்றது.

அருளென்பதை அருளால் எனவிரித்து உவமையாகிய இந்திரியத்திற்கு ஒதிய அளந்தறிந்தறியா என்னும் வினையைப் பொருளாகிய உயிர்களினுங் கூட்டி உரைக்க. அவ்வாறே அருளென்பதற்குச் சிற்சத்தியால் எனவும் அருளென்பதன்பின் அளந்தறிந்தறியா என்பதை வருவித்தும் உரை செய்யப்பட்டது.

சிற்றுரை.

இதனுள், விளம்பியவுள்ளத்து மெய் வாய் கண் மூக்கு அளந்தறிந்தறியாவென்றது ஓரதிகாரணம்; ஆங்கவைபோலத் தாந்தமுணர்வின்றமியருள் காந்தங்கண்ட பசாசத்தவையே யென்றது ஓரதிகாரணம்; ஆக இரண்டதிகாரணத்தது இச்சூத்திரம் என்றுணர்க.

விளக்கம்.

வெ - டை.

முதலதிகரணம்.

கருவிகளே விடயங்களை அறியுமென்பாரை மறுத்து
ஆன்மாவால் கருவிகள் அறியுமெனக்கூறும்

மேற்கோள்.

ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவா லுணருமேன்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், தாமரையிலையி னீர்போற் புருடன் பற்றற்றுநிற்பப் புருடன் சந்நிதியிற் புத்திதத்துவமே ஐம்பொறி வழியான் விடயங்களை அறியுமெனவமையும், அவ்வாறன்றிக் கருவிகளோடு கூடிப் புருடனே அவத்தைப்படுமென மேற்கூறிய தமையுமாறென்னையெனச் சாங்கிய நூலார் மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ—ள். வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ-ள். ஈண்டு—இவ்விரண்டதிகரணங்களுள் வைத்து இம்முதலதிகாணத்து,-ஐயுணர்வுகள்-உணர்விற்கேதுவாகிய ஐம்பொறிகள்,—ஆன்மாவால் உணருமென்றது—உயிரால் விடயங்களை அறியும் எ-று.

சிற்றுரை.

உணர்விற் கேதுவாகியபொறிகளை உணர்வென்றுபசரித்தார்.

விளக்கம்.

இம்மேற்கோள் சூத்திரத்ில்உள்ளவிளம்பிய வுள்ளத்து மெய் வாய் கண்மூக்களந்தறிந்தறியா என்பதைப் பதச்சேதஞ்செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோவெனின், நீரானது தாமரையிலையோடு கூடினகாலத்து அந்த இலையில் பற்றின்றி நிற்குமாறுபோல, உயிரும் இந்திரியங்களோடு கூடினும் அந்த இந்திரியங்களில் பற்றின்றி நிற்கும். நிற்க, உயிரின் சந்நிதியில் புத்தி தத்துவமே ஐம்பொறிவழியாக விடயங்களை அறியுமென்றல் பொருந்தும். அவ்வாறன்றி அந்தக்கரணங்களாகிய கருவிகளோடுகூடி உயிரே ஐந்தவத்தைப்படுமென நான்காஞ் சூத்திரத்திற் கூறியது எவ்வாறு பொருந்துமெனச் சாங்கியநூலார் கூறுவர். அவர் கூற்றை ஆசங்கித்துக்கொண்டு சூத்திரத்தின் முதற்கூற்றைப் பதச்சேதஞ்செய்து உயிர் சும்மா இருப்ப அதன் சந்நிதியில் புத்தி தத்துவம் இந்திரியங்களால் விடயங்களை யறியுமென்றல் பொருந்தாதெனவும் உயிரே புத்தியைக் கருவியாகக்கொண்டு இந்திரியங்களின் வழியாக விடயங்களை அறியுமெனவுங் கூறியவாறும்.

இவ்வதிகரணத்தில் விடயங்களை இந்திரியங்கள் உயிரால் உணருமோ, புத்தி தத்துவத்தால் உணருமோ என்பது ஐயப்பாடு. புத்தி தத்துவத்தால் உணருமென்பது பிறர்கூறும் பக்கம் என அறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) இச்சூத்திரத்திலுள்ள இரண்டதிகரணங்களுள் இம்முதலதிகரணத்தில் உயிரின் உணர்வு நிகழ்தற்கு ஏதுவாகிய ஐம்பொறிகள் உயிரால் விடயங்களை அறியும் எ-று.

உயிர் அறிவுடைப் பொருளாயினும் தனித்து நின்று ஒன்றனையும் அறியாது; யாதானும் ஒன்றனைப்பற்றி நின்றே அறியும். இது எதுபோல எனின், கண் ஒளி யுடைப்பொருளாயினும் தானே காணுமாறின்றிச் சூரியன் முதலிய பிற வொளிகளின் துணையைக்கொண்டே காணுமாறு போலாம்.

ஆகவே விடயங்களை உயிர் இந்திரியங்களால் அறிதலின் அவை ஏது வாகும். ஏதுவாகிய இந்திரியங்களை இம்மேற்கோளில் ஐயுணர்வுகள் என்றது உபசாரம். இது அரசசத்தி தொழிற்படுதற்கு ஏதுவாகிய அதிகாரியை அரசன் என உபசரித்துக் கூறுவதுபோல என அறிக.

இந்திரியங்கள் ஆன்மாவால் விடயங்களைக் காணும் என்பதற்குக் காட்டும்

ஏது.

அவற்றினுன் ஆன்மா வோற்றித்துக் காணினல்லது அவை யோன்றையும் விடயியாவாகலான்.

சிற்றுரை.

எ-து ஏ-து எ-னின், அதற்குப் பிரமாணமென்னை யென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) அவ்வைம்பொறிகளோடும் உயிர் ஒற்றுமைப்பட்டு நின்று அறிந்தாலன்றி அவை ஒரு விடயத்தையும் விடயிக்கமாட்டாவாகலான் ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவானுணருமென மேற்கொண்டது எ-று.

ஆன் உடனிகழ்ச்சிப்பொருட்கண் வந்தது.

உம்மை இழிவு சிறப்பு, முற்றுமாம்.

எதிர்மறை முகத்தாற் கூறினர், இன்றியமையாமை விளக்குதற்கு.

விளக்கம்.

இந்த ஏது என்ன சொல்லிற்றேவெனின், மேற்கோளில் இந்திரியங்கள் உயிரினல் விடயங்களை உணருமென்று கூறியதற்குப் பிரமாணம் யாதென்பர் சாங்கியர். அவரை நோக்கிப் பிரமாணங்காட்டி மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) மெய் வாய் கண் மூக்குச் செவியெனச் சூத்திரத்திற் கூறிய அந்த ஐம்பொறிகளோடும் உயிர் ஒற்றுமைப்பட்டு நின்று அறிந்தால் அல்லது அவ்விந்திரியங்கள் ஒரு விடயத்தையும் அறியமாட்டாவாம். ஆதலால் இவ்வதிகரணத்தில் ஐயுணர்வுகள் ஆன்மாவானுணருமென மேற்கோள் கூறியது எ-று.

அவற்றினுன் என்பதிலுள்ள ஆன் உருபு கருவிப்பொருளில் வந்ததன்று; உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. ஆதலால் அவ்வைம் பொறிகளோடும் என உரைசெய்யப்பட்டது உடனிகழ்ச்சியாவது ஒன்று நிகழுங்

காலத்துப் பிறிதொன்றும் உடனுக நிகழ்தல். உதாரணமாக, தூங்குகையான் ஒங்குநடைய என்றவிடத்து நடத்தலாகிய காலின் தொழில் கைக்கும் யானைக்கும் ஒருங்குளதாதலறிக. தூங்குகையென்பது துதிக்கை.

ஒன்றையும் என்றதிலுள்ள உம்மை ஒன்றையாவது என்னும் பொருளைக் குறித்து இழிவு சிறப்பும், எல்லாப்பொருளையுங் குறித்து முற்றுமாம்.

காணினல்லது என எதிர்மறைமுகத்தாற் கூறியது, ஆன்மாவையின்றி இந்திரியங்களுக்கு விடயங்களை யறிய முடியாது என்பதை விளக்குதற் பொருட்டு.

இந்த ஏது புத்திதத்துவத்தால் இந்திரியங்கள் விடயங்களை உணருமென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

இந்திரியங்கள் ஆன்மாவால் விடயங்களைக்காணும் என்பதற்குக் காட்டும் உதாரணம்.

ஐம்பொறியை யாண்டடங் கரசா யுளநிற்ப
வைம்பொறிக ளுள்ள மறியாவா--மைம்பொறியிற்
காணுதேற் காணுது காணுமுளங் காணுதேற்
காணுகண் கேளா செவி.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், உயிர் அங்ஙனம் ஒற்றுமைப்பட்டு நின்று செலுத்துதலும் அவை உயிரை யின்றி யமையாமையும் எற்றாற் பெறுது மென்பாரை நோக்கி ஏதுவை வலியுறுத்துத லுதலிற்று.

(இ—ள்.) அரசு ஆய்—அரசன் அத்தாணிமண்டபத்தின்வைகித் தன்கீழ்க் கருமஞ் செய்வாரை அவரவர்க்குரிய காரியங்களிற் செலுத்தி ஆளுமாறுபோல,—உளம் ஐம்பொறியை ஆண்டு அங்கு நிற்ப—உயிர் ஐம்பொறிகளை (அவ்வவற்றிற் குரிய விடயங்களிற் செலுத்தி) யாண்டு இலாடத் தானத்தி னிற்றலான்,—ஐம் பொறிகள் உள்ளம் அறியாவாம்—(அரசனுமேலவப்பட்டோர் ஏவிய கரும மாத்திரையி னன்றி அதிகத்திற் செல்லமாட்டாமை போல) அவ்வைம்பொறிகள் உயிரை அறிய மாட்டாவாயின (அற்றேல் ஐம்பொறிகள் உயிரானன்றியறிதல் அமையாதாயினும் உயிர் ஐம் பொறிகளானன்றியும் அறிதலமையும் போலுமெனின்),—ஐம்பொறியில் காணுதேல் காணுது காணும் உளம் காணுதேல் காணு கண் கேளா செவி—(ஒரு கருமஞ் செய்தற்கண் அரசரும் அமைச்சர்

முதலாயினரும் தம்முள் இன்றி யமையாதவாறுபோல) ஒன்றனே விடயித்தற்கண் உயிரும் ஐம்பொறிகளுந் தம்முள் இன்றியமை யா எ-று.

அன்னவாதல் உயிர் ஐம்பொறியி னீங்கிச் சொப்பனத்தானத் தினெய்திய வழிக் கண்டு கொள்க.

நிற்ப வென்னுஞ் செயவெனெச்சம் "மழை பெய்யக் குள நிறைந்தது" என்புழிப்போல நிற்றலானெனக் காரணப்பொருட் டாய் நின்றது. இவ்வாறுரையாக்கால் இஃதேதுவின் பொருள் வலி யுறுப்பதாய உதாரணமாதற் கேலாமை யறிக.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) அரசு ஆய் உளம் ஐம்பொறியை ஆண்டு அங்கு நிற்ப ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம். (மற்றவை மாறுதலில்லை.)

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றே வெனின், மேற்கூறியவாறு உயிர் இந்திரியங்களோடு ஒற்றுமைப்பட்டுநின்று அவ்விந்திரியங்களை விட யங்களிற்செலுத்துதலும், அவ்விந்திரியங்கள் உயிரையின்றி விடயங்களை யறிய முடியாமையும் எதனல் விளங்குகின்றன என்பர் அச்சாங்கியர். அவரைநோக்கி விளங்கும் முறை கூறி, அவற்றினன் ஆன்மா ஒற்றித்துக் காணினல்லது அவையொன்றையும் விடயியா வாகலான் என்னும் ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) அரசன் வீற்றிருப்பதற்குரிய மண்டபத்தில் அரசன் இருந்து தன் ஆணையின்கீழ் அடங்கி அதிகாரஞ் செய்பவரை அவரவர்க் குரிய அதிகாரங்களை நடாத்தும்படி செய்து உலகத்தை ஆளும் முறைமை போல, உயிர் சாக்கிரத்தில் இருத்தற்குரிய இலாடத்தானமாகிய புருவ நடுவில் நின்று ஐந்து இந்திரியங்களும் அந்த அந்த இந்திரியங்களுக்குரிய விடயங்களை அறியும்படி செய்யும். அரசனல் ஏவப்பட்ட அதிகாரிகள் அர சன் ஏவிய கருமத்தைமட்டும் செய்தலேயன்றி அதிகமாய்ச்செய்ய முடியாத வாறுபோல, உயிரினல் ஏவப்பட்ட அந்த ஐம்பொறிகள் ஏவியவாறு விட யங்களை யறிதலேயன்றி உயிரை அறியமாட்டாவாயின. அவ்வாருயின் ஐம் பொறிகள் உயிரையின்றி விடயங்களை அறிய முடியாதாயினும் உயிர் ஐம் பொறிகளின்றியும் விடயங்களை அறிதல் கூடுமோ எனின், கூடாது. எது போலஎனின், அரசரையின்றி அமைச்சர் ஒரு காரியத்தையுஞ் செய்யமுடி யாமையும், அமைச்சரையின்றி அரசர் ஒரு காரியத்தையும் செய்ய முடியா மையும்போலாம். ஆகவே, உயிரையின்றி ஐம்பொறிகள் விடயங்களை அறிய மாட்டா ஐம்பொறியை யின்றி உயிர் விடயங்களை அறியமாட்டாது எ-று.

(க-ரை.) அரசனும் அமைச்சர் முதலாயினரும்போல, உயிரும் இந்திரியங்களுமாதலால் உயிரையின்றி இந்திரியங்கள் விடயங்களை அறியமுடியா என்பதாம்.

நான்காஞ் சூத்திரத்தில் அந்தக்கரணங்களை அமைச்சர் போலெனக் கூறி இவ்விடத்தில் ஐம்பொறிகளை அமைச்சரென்று கூறியது முரணாகாது. ஏதனுலெனின், அந்தக்கரணங்களும் இந்திரியங்களுங் கருவியாமென்பதில் வேற்றுமை யின்மையாதலினு லெனக.

ஐம்பொறிகளை யின்றி உயிர் விடயங்களை அறியமாட்டா தென்பதை ஐம்பொறிகளில்லாத சொப்பனத்தானத்தை உயிர் அடைந்த பொழுது அவ்விடத்தில் உயிர்இருந்தும் விடயங்களை யறியாமையில் வைத்துக் கண்டு கொள்க.

நிற்ப என்பது செய என்னும் வாய்பாட்டு வினை எச்சமாயினும் நிற்றலால் என்னும் காரணப் பொருளைக் குறித்து நின்றது. எதுபோல எனின், "மழை பெய்யக் குளம் நிறைந்தது" என்றவிடத்து பெய்ய என்பது பெய்தலால் என்னும் பொருளைக் குறித்து நின்றவாறுபோலாம். இவ்வாறன்றி நிற்ப என்பதை வினையெச்ச மாகக்கொண்டு இலாடத் தானத்தில் உயிர் நிற்ப என்னும் எச்சம்ஐம்பொறிகள் அறியாவாயின என்னும்வினைகொண்டு முடிந்ததாகக் கொள்ளின், உயிரின் சந்நிதியில் இந்திரியங்கள் தொழிற் செய்யும் என்ருகி, அதனை மறுத்துரைத்த மேற்கோளைச் சாதித்த ஏதுவில் ஆன்மாக்காணினல்லது இந்திரியங்கள் அறியா என்றதை வலியுறுத்தும் உதாரணமாகாது, ஆதலால் அவ்வுரை பொருந்தாது.

அரசு ஆய் என்பதிலுள்ள ஆய் என்பது போல என்னும் பொருளைக் குறித்து நின்றது. இது "ஆள்வாரிலி மாடாவேனே" என்பதில் மாடாவேனே என்பதுமாடு போல்வனே என்னும் பொருள் குறித்து நின்றவாறு போலாம்.

முதலதிகரணம் முற்றிற்று.

இரண்டாம் அதிகரணம்.

உயிர் முதல்வன் உபகாரமின்றி அறியும் என்பாரை மறுத்து
முதல்வனாலேயே அறியுமெனக் கூறும்
மேற்கோள்.

இனி இதுவுந் தமது முதலாலே யுணருமென்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், கருவி சடமாகலிற் சித்தாகிய உயிரா னன்றி அமையாவாயினுஞ் சித்தாகிய உயிர் முதல்வனது உபகாரத்தை அவாய்நிற்பதன்று. அவாவுமாயின் முதல்வனும் அவ்வாறே பிறி தொன்ற னுபகாரத்தை அவாவு மெனப்பட்டு மேலும் வரம் பின்றியோடும் என ஈசுர அவிகாரவாதி முதலியோர் கூறுங் கடாவையாசங்கித்துச் சூத்திரத்தின் பிற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ - ள். வெ - டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ—ள்.) இதுவும்—இவ்வான்மாக்களும்,—தமது முதலாலே—இறைவனாலே,—உணரு மென்றது—அறிவிக்க அறியும் எ-று.

சிற்றுரை.

தமது முதலென்பது யானெம்மூர் புகுவன் நீநும்மூர்புகுவை என்புழிப்போல வேறுமுடிபு கோடலிற்பால் வழுவன்மை யுணர்க.

உம்மை இறந்ததுதழீஇய வெச்சம்.

இம்முறைமை தமக்கொரு முதலுடைய வற்றிற்கே யன்றி ஏனைப்பொருட் கின்மையின்வரம்பின்றி யோடுமாறில்லை யென்பார், தமது முதலென்று உடம்பொடு புணர்த்தோதினார். தம் முணர் வின்றமி யென்றது மது.

தத்துவங்களு முயிருந் தமக்கொரு முதலுடையன வாதலும் முதல்வனுக்கு அஃதின்மையும் மேற்கூறிப்போந்த சூத்திரங்களாற் பெறப்பட்டன வென்பது கருத்து.

விளக்கம்.

இம்மேற்கோள் சூத்திரத்தில் உள்ள ஆங்கவைபோலத் தாந்தம் உணர் வின் றமியருள் காந்தங் கண்ட பாசத் தவையே என்பதைப் பதச்சேதஞ் செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றேவெனின், அந்தக்கரணங்கள் சடமாதலால் சித்தாகிய உயிரையின்றி விடயங்களை அறியாவாயினும், உயிர் அறிவுடைப் பொருளாதலால் முதல்வனுடைய உபகாரத்தை விரும்பு மென்று சூத்திரத்திற் கூறியது பொருந்தாது. உயிர் முதல்வன் உபகா ரத்தை விரும்புமாயின் சித்துப்பொருளாகிய அம்முதல்வனும் அவ்வாறே பிறிதொன்ற னுபகாரத்தை விரும்புவன் எனக் கொள்ளவரும். வரவே, மேலும் அவ்வாறே எல்லையின்றி யோடுவதாகிய குற்றத்திற் கிடனாகும் என ஈசுர அவிகாரவாதி முதலியோர் கூறுவர். அவர் கூற்றை ஆசங்கித் துக்கொண்டு சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைப் பதச்சேதஞ்செய்து உயிர் முதல்வன் உபகாரத்தையின்றி யறியாதெனவும் அதனால் வரம்பின்றி ஓடுத லாகிய குற்றம் உண்டாகாதெனவுங் கூறியவாறும்.

இவ்வதிகரணத்தில் உயிர்கள் முதல்வனால் உணருமோ தாமே உணரு மோ என்பது ஐயப்பாடு. தாமே உணருமென்பது பிறர்கூறும் பக்கம் என அறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) இவ்வான்மாவும் இறைவனாலே அறி விக்க அறியும் எ-று.

இது வென்பது ஒன்றன்பால். தமது என்பது பலவின்பால். ஆதலால் இதுவும் தமது எனக்கூறியது பால் வழுவாகாதோ எனின், ஆகாது. என தனாலெனின், இதுவென்பதும் தமது என்பதும் ஒரு முடிபல்ல; வேறுவேறு முடிபாய் நின்றன. எவ்வாறெனின், இது வென்றது அறியும் என்றது கொண்டு முடிந்தது. தமது என்றது முதல் என்றது கொண்டு முடிந்தது. இவ்வாறு முடிதல் எதுபோல எனின், "யான் எம்மூர் புகுவன் நீநும்மூர் புகுவை" என்ற விடத்து, யான் என்பது புகுவன் என்பதுகொண்டும், எம் என்பது ஊர் என்பதுகொண்டும், நீ என்பது புகுவை என்பதுகொண்டும், நும் என்பது ஊர் என்பதுகொண்டும் முடிந்தவாறுபோலாம். ஆதலால் பால் வழுவில்லை யென்றறிக.

இதுவும் என்றதிலுள்ள உம்மை முதலதிகரணத்திற் கூறிய இந்திரி யங்களை யன்றி இவ்வான்மாவும் என்னும் பொருளைத் தந்து நிற்றலால் இறந்ததுதழுவிய எச்சமாயிற்று.

முதலாலே உணரும் என்றலே போதியதா யிருக்கவும் தமது என் னும் அடைசேர்த்துக் கூறிய கருத்தென்னையெனின், அறிவிக்க அறிந்

லாகிய இம்முறைமை தமக்கொரு முதலையுடைய பொருட்கே யன்றித் தானே முதலாயிருக்கும் பொருளுக்குக் கிடையாது. ஆதலால் வரம்பின்றி யோடுதலாகிய குற்றமில்லை யென்பதை உணர்த்தவேண்டித் தமக்கொரு முதல்வனையுடையது என்னும் பொருளைத் தமது என்னும் வாக்கியத்திற் புணர்த்தித் தமது முதலாலே உணருமெனக் கூறினர். இது உடம்பொடு புணர்த்தல்; சூத்திரத்தில் தமியென்னாது தம்முணர்வின் தமி என்றதும் அறிவிக்க அறியுந்தன்மை தமக்கொரு முதலையுடைய பொருட்கேயன்றி எனைப் பொருட்கில்லை யென்பதைத் தம்முணர்வின் என்பதனால் விளக்கிய உடம்பொடு புணர்த்தலென அறிக.

தத்துவங்கள் உயிரை முதலாக உடையன என்பது மூன்றாஞ் சூத்திரத்தானும், உயிர்இறைவனை முதலாக உடையதுஎன்பது ஆணையிற்போக்கு வரவு புரிய என்னும் இரண்டாஞ் சூத்திரத்தானும் முதல்வனுக்கு வேறு முதல் இல்லை யென்பது அந்தம் ஆதி யென்னும் முதற் சூத்திரத்தானும் பெறப்பட்டமையின் இவ்விடத்து அவற்றை விரித்துக் கூறவில்லை. ஆயினும் அச்சூத்திரங்களினால் இவ்விடத்தும் கூறினதாகவே கருத்து. இக்கருத்துக் கொள்ளவில்லையாயின் வரம்பின்றியோடு மாறில்லை யெனவிடை கூறியதாக மாட்டாது. ஆகவே தமது என்னும் வாக்கியத்தால் அப்பொருள் கொண்டு விடை கூறியவாறு அறிக.

உயிர் முதல்வனாலேயே உணரும் என்பதற்குக் காட்டும்

எ து.

இவ்வான்மாத் தன்னாலே யுணருமிந்திரியங்களைப் போலத் தானுந்தன்னை யுணராது நிற்றலான்.

சிற்றுரை.

எ—து ஏது எ—னின், உயிர் ஐம்பொறியிற் சடமன்மையால் அவற்றை யெடுத்துக் காட்டி மேற்கோடல் ஈண்டைக் கமையாதென்பாரை நோக்கி அதனைச் சாதித்தனுதலிற்று.

இ—ள். வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ—ள்.) இவ்வான்மா—இவ்வுயிர்கள்,—தன்னாலே உணரும்—தம்மாலே விடயிக்கும்,—இந்திரியங்களைப் போல—பொறிகளைப் போல,—தானும்—சடமும் சேதனமுமாய வேறுபாடு பற்றித் தம் முளொவ்வாவாயினும் இவ்வுயிர்களும்,—தன்னை—தம்மையும்,—(தன்ஐ—தம்முடைய முதல்வனையும்),—உணராதுநிற்றலான்—அறி

யாதுநிற்குமாகலான் இதுவும் தமது முதலாலேயுணருமென மேற்கொண்டது எ-று.

சிற்றுரை.

சடமுஞ் சேதனமுமாய வேறுபாடுபெற்றித் தம்முள் ஒவ்வாவாயினும் தம்மையுந் தமது முதலேயும் அறியமாட்டாமைக்கண் ஐம்பொறியும் உயிரும் தம்முள் ஒக்குமாகலின், அதுபற்றி அங்ஙன மேற்கோட லமையு மென்பது கருத்து.

விளக்கம்.

இந்த ஏது என்ன சொல்லிற்றோ எனின், உயிர் ஐம்பொறிபோலச் சடமல்லாமையால் உயிரையின்றி யறியமாட்டாத ஐம்பொறிகளை எடுத்துக்காட்டி, உயிரும் முதலாலே உணருமென மேற்கோள் கூறியது பொருந்தாது என்பாரை நோக்கிப் பொருந்துமெனக்காட்டி மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) இந்திரியங்கள் சடமும் உயிர் சித்துமாகிய வேறுபாடுபற்றி இந்திரியங்களைப்போல் உயிரைக் கூறமுடியாதாயினும் உயிர்களால் விடயங்களை அறியும் இந்திரியங்கள் தம்மையும் உயிரையும் அறியாதவாறுபோல, முதல்வனுல் விடயங்களை அறியும் உயிரும் தன்னையும் முதல்வனையும் அறியாது நிற்குமாகலால் அறியாது நிற்கும் அவ்வொப்புமைபற்றி இதுவுந் தமது முதலாலே உணருமென மேற்கோள் கூறியது பொருந்தும் எ-று

தன்னை என்பதை இரட்டுற மொழிந்துகொண்டு தன்னையும் தமது முதல்வனையும் என உரை செய்யப்பட்டது.

இந்த ஏது உயிர்தானே உணருமென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

உயிர் முதல்வனுலேயே உணரும் என்பதை வலியுறுத்தும்
உதாரணம்.

மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகஞ் சேட்டித்த
தென்னு மறையி னியன்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணு வுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்கா
ணெண்ணுன் சிவனசத்தை யின்று.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், தன்னுலுணரும் இந்திரியங்களை ஈண்டைக்கு உவமை கூறின் அவ்விந்திரியங்கட்கு வரும் பயன் அவற்

றின லொற்றித்துக் காணும் உயிர்க்காயவாறுபோல உயிர்க்கு வரும் இன்பத்துன்பப் பயனும் உயிரா னெற்றித்துக்காணும் முதல்வனுக் காதல்வேண்டுமென்பாரை நோக்கி அங்ஙனமாகாமை கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ—ள். மன்னு சிவன் சந்நிதியின் உலகஞ் சேட்டித்தது என்னும் மறையின் இயல் மறந்தாய்—(ஈண்டுக்கூறிய கருதலளவையே யன்றி) நிலைபெற்ற முதல்வனது சந்நிதியிற் பிரபஞ்சம் செயற்படுகின்ற தென்றோதும் வேதப்பொருளையும் அறியாது பிணங்குகின்ற பேதாய்,—உளம் சொன்ன சிவன் கண்ணு வினையால் கண்டு அறிந்து நிற்குங்காண்—உயிராவது (தமக்கெனவோர் காரணமின்றித் தன் பொருட்டே அறிவனவாய அவ்விந்திரியங்கள்போலன்றி அவ்வேதத்துள்) எடுத்தோதப்படும் முதல்வன் தனக்குக் காட்டாகிநிற்பத் தான் செய்த வினைக்கீடாக ஒன்றனை யறிந்து நிற்கும்; (அவ்வேறுபாடு) அறிவாயாக,—இன்று (ஆகலாற்) சிவன் அசத்தை எண்ணான்—(அங்ஙனங் காட்டாகி நிற்பினும் தனது சந்நிதியின் அசத்தெல்லாஞ்) சூனியமாகலான் மங்கல வடிவினனாய முதல்வன் (அவ்வுயிர்போல்) அவற்றை அநுபவியான் எ—று.

இதனுட் சிவனென்றது மன்னுசிவ னென்புழிப் பேரின்பத்திற்குக் காரணமென்னும் பொருட்டாய்த் தனது சந்நிதிக்கண் உலகத்தைச் சேட்டிப்பித்தற்குரிய இயைபுணர நின்றது. சொன்ன சிவனென்புழி முற்றுணர்வினனென்னும் பொருட்டாய்க் காட்டாதற்குரிய இயைபுணர நின்றது. எண்ணான் சிவனென்புழித் தூய தன்மையனென்னும் பொருட்டாய் அசத்தை யெண்ணாமைக்குரிய இயைபுணர நின்றது. ஆகலாற் கூறியது கூறலன்மை யுணர்க. அஃது அம்முப்பொருளுடைத்தென்பது சோம சம்பு பத்ததி வியாக்கியான முதலிவற்றுட் காண்க. சிவதத்துவ விவேகத்துள் மூவகைப்படுத்தோதிய பொருளும் இவையே யாமாறு கண்டு கொள்க.

ஈண்டு உலகமென்றது உயிர்களை.

மறையினியலும் பொருளை மறையினியலென்றுபசரித்தார்.

இறந்ததுதழீஇய எச்ச உம்மை விகாரத்தாற் றொக்கது.

மறந்தா யென்பது விளியுருபேற்றபெயர்.

ஈண்டுச் சந்நிதி என்றது அவிகாரவாதிகள் கூறும் அபிமுக மாத்திரை யன்றென்பார் சொன்னசிவன் கண்ணென்றார். சிவ சத்தி அவ்வக் காரியங்களின் உன்முகமாதலாகிய சங்கற்பமே ஈண்டுச் சந்நிதி யெனப்படுமென்பதாம்.

காந்தங்கண்ட பசாசத் தவையே யென்றது ஒருபுடை யுவமையாதல்பற்றியே பிறிதன்றென்பது கருத்து.

வினையாலென்றது ஐம்பொறிபோலன்றி உணர்தற்பயன் உயிர்க்கேயாதற்கேதுக் காட்டியவாறு.

கண்டறிதல் ஒருபொருட் பன்மொழி.

எண்ணல் ஈண்டனுபவித்தன் மேற்று.

இன்றென்பது சாதியொருமை.

அவனெதிர் என்பது அவாய்நிலையாய் வந்தது.

ஆகலானென்பது சொல்லெச்சம். இன்றாதல் யாவையுஞ் சூனி யஞ் சத்தெதிர் என்புழிப் பெறப்படும். இக்கருத்தே பற்றி "மா யைமருவிடான் சிவனவன்கண்—ணுறைதரா தசேதனத்தால்" என்றார் வழிநூலாசிரியரும். "உன்னுதரத் தேகிடந்த கீடமுறு வதெல்லா—முன்னுடைய தென்னுய்நீ யுற்றனையோ—மன்னுயிர் க—ளெவ்வகையே காணிங் கழிவதுவு மாவதுவுஞ்—செவ்வகையே நின்றசிவன் பால்" என்றதும் இவ்வியல்பு நோக்கி.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) மன்னு சிவன் சந்நிதியின் உலகம் சேட்டித்தது என்னும் மறையின் இயல் மறந்தாய் உளம் சொன்னசிவன் கண்ணு வினை யால் கண்டு அறிந்து நிற்குங்காண் இன்று (ஆகலாற்) சிவன் அசத்தை எண்ணான்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், உயிரினால் அறியும் இந்திரியங்களை உயிர் முதல்வனால் அறியுமென்பதற்கு உவமையாகக்கூறின், இந்திரியங்கள் அறிதலால் உண்டாம்பயன் அந்த இந்திரியங்களோடு உட னின்று அறியும் உயிர்க்கேயன்றி இந்திரியங்களுக் கில்லாதவாறுபோல, முதல்வனால் உயிர் அறிதலால் உண்டாம் இன்பத்துன்பப் பயனும் உயிரோடு உடனின்று அறியும் அம்முதல்வனுக்கே யன்றி உயிருக்கில்லையாதல் வேண்டும் என்பர் ஈசுர அவிகாரவாதிகள். அவரை நோக்கி இந்திரியங்களை அறியும் பயன் உயிருக்கு ஆனவாறுபோல உயிர் அறியும் பயன் முதல்வனுக்கு

ஆகாது எனக்கூறி இந்திரியங்கள் உயிரால் உணர்தல்போல் உயிர் முதல்வனால் உணருமென மேற் கூறியதை வலியுறுத்திய வாறும்.

(பொ-ரை.) உயிர் முதல்வனால் அறியும் என்பதற்கு இவ்வதிகரணத்தில் இந்திரியங்கள் உயிரால் அறிவதை எடுத்துக்காட்டிய அநுமானப்பிரமாணமேயன்றி நிலைபெற்ற முதல்வனுடைய சந்நிதியில் உயிர்கள் தத்தந் தொழிலைச் செய்யும் எனக் கூறுவதாகிய ஆகமப் பிரமாணத்தையும் அறியாது பிணங்குகின்ற பேதாய்! இந்திரியங்கள் தமக்கெனவோர் காரண மின்றி உயிரின் பொருட்டே அறியும், அவ்வாறன்றி வேதத்துள் எடுத்துக் கூறப்படும் முதல்வன் உயிருக்குத் துணையாகி நிற்ப உயிர்தான் செய்தவினைக்கீடாக ஒன்றனையறிந்து நிற்கும்; இந்திரியங்கள உயிரின்பொருட்டு அறிதலும உயிர்தன்பொருட்டு அறிதலுமாகிய அவ்வேறுபாடு அறிவாயாக. முதல்வன் துணையாகநிற்பதால் முதல்வனும் உயிர்போல இன்பத்துன்பங்களை அனுபவிப்பானோ எனின், துணையாகநிற்பினும் தன் சந்நிதியில் அசத்தாகிய உலகமெல்லாஞ் சூனியமாதலால் அசத்தென்னும் அமங்கலமில்லாத மங்கலவடிவினனாகிய அம்முதல்வன் அசத்தாகிய அமங்கலத்தைச் சுட்டி அறிந்து அநுபவிக்கும் உயிர்போல அநுபவியான் எ-று.

(க-ரை.) உயிரின் பொருட்டு இந்திரியங்கள் அறிதலால் அறிதற்பயன் உயிர்க்காயிற்று. அவ்வாறு முதல்வன் பொருட்டாக உயிர் அறியாமல் தன்பொருட்டு அறிதலால் அறிதற்பயனை முதல்வன் அநுபவியான் என்பதாம்.

இவ்வுதாரணத்தில் மன்னு சிவன் சொன்னசிவன் எண்ணுஞ் சிவன் எனக் கூறியது ஒருசிவனையேயாம். அவ்வாறு ஒரு சிவனையே மும்முறை கூறியதால் கூறியது கூறலென்னுங் குற்றமாகாதோ எனின், ஆகாது. எதனாலெனின்,

மன்னுசிவன் என்றவிடத்து நிலைபெற்ற சிவன் என்பதுபொருள். எனவே, நிலைபெறாது இறந்து பிறத்தலால் இன்பமும் துன்பமும் அடையும் உயிர்கள்போலன்றி என்றும் இன்பவடிவினன் என்றாகி அவனை யடைதலினாலேயே எவர்க்கும் நிலைத்த இன்பம் உண்டாகுமாதலால் பேரின்பத்திற்குக் காரணம் என்னும் பொருளென்பதூஉம், நிலைபேறின்றிய உலகங்கள் தொழிற்படுதற்கு நிலைபேறுடைய பொருளின் துணை வேண்டுதல் பற்றி நிலை பெற்றிருக்கும் தனது சந்நிதியில் நிலைபேறிலதாய உலகம் தொழிற்படுமாறு செய்தற்குரிய சம்பந்தம் உண்டென்பதூஉம் உணர நிற்றலானும்,

சொன்னசிவன் என்றவிடத்து வேதத்துட் புகழ்ந்து சொன்ன சிவன் என்பது பொருள். எனவே, தன்னின் மேம்பட்ட தொன்றைப் புகழ்தலேயன்றித் தன்னோடொத்ததையாவது கீழ்ப்பட்டதையாவது புகழ்தல் எவ்விடத்துமில்லை. மேம்பட்டதாவது தன்னையும் அடக்கிநிற்றலாம். வேதத்தைச்

செய்தவன் முதல்வன் ஆதலால் வேதம்முதல்வனுள் அடங்குவதென்றாகும். ஆகவே விதிவிலக்குகளையும் அவற்றின் பயன்களையும் வரையறுத்துக்கூறும் வேதத்தைச் செய்வதற்குரிய முற்றுணர்வினன் என்னும் பொருளென்பதூஉம், சிற்றறிவுடைய உயிர்ஒன்றையறிதற்கு முற்றுணர்வுடைய பொருளின் துணைவேண்டுமாதலால் உயிருக்குத் துணையாய் நிற்றற்குரிய சம்பந்தம் உண்டென்பதூஉம் உணர நிற்றலானும்,

எண்ணான் சிவன் என்றவிடத்து அசத்தாகிய உலகத்தை எண்ணான் என்பது பொருள். எனவே, அசத்தெல்லாம் மாயையின் காரியம். அவை சிவ சந்நிதியில் முனைத்துத் தோன்றாவாம். தோன்றாமைக்குக் காரணம் முனைத்துத் தோன்றுதலால் பக்குவப்படவேண்டிய ஆணவமல மில்லாமையும் அவ்வாணவமல மில்லாமையால் எவற்றையும் வேறாய்நின்று சுட்டியறிதலின்றி உடனாய் நின்று ஒருசேர அறிதலுமேயாம். ஆணவமலம் அசுத்தம் எனப்படும். படவே, ஆணவமலமில்லாத தூய (பரிசுத்தத்) தன்மையன் என்னும் பொருளென்பதூஉம், அசத்துமுனைத்துத் தோன்றாமையால் அவ்வசத்தை எண்ணாமைக்குரிய சம்பந்தம் உண்டென்பதூஉம் உணர நிற்றலானும் என்க.

இவ்வாறு சிவன் என்பது பேரின்பகாரணன், முற்றுணர்வினன், தூயதன்மையன் என்னும் முப்பொருளுடையதென்பதைச் சோம சம்புபத்ததிவியாக்கியான முதலியவற்றுட் காண்க. சிவ தத்துவ விவேகத்துள் பாயிரத்தில் சிவபெருமானுக்கு வணக்கம் மூவகைப்படுத்தோதிய பொருளும் இவையேயாமாறு கண்டுகொள்க. அவை வருமாறு:-

“உலகெ லாந்தன தொருசிறு கூற்றினு ளமைய, வலகி லாற்றலா னிறைந்தவ னெனவரு னூலோர், குலவி யேத்துவோ னெவனவ னுமையொரு கூற்றி, னலர்க றைக்களச் சிவபிரா னடியிணை போற்றி.” இது முற்றுணர்வினன் என்னும் பொருளது.

“செவியுற வாங்கி மோகத் திண்படை சிலையிற் பூட்டுங், கவிகைவேண் மடியச் சற்றே கறுத்தியோ குறையும் பெம்மான், குவிதழை நிறையப் பூத்த சோழிணர்ப் பதுமச் செங்கே, பூவிர்தரு விழித்தீக் கென்றன் வினையிலக் காகு மாலோ.” இது இருவினையின்கேடே பேரின்பமாதலால் பேரின்பகாரணன் என்னும் பொருளது.

“திருமாலிந் திரன்பிரம னுபமனியன் றபனனந்தி செவ்வேளாதி, தருமமுதா குரவருக்குந் தனதருளா லாசிரியத் தலைமை நல்கி, வருமெவர்க்கு முதற்குருவாய் மெய்ஞ்ஞான முத்திரைக்கைம் மலரும் வாய்ந்த, வுருவழகுங் குறுநகையுங் காட்டியருட் குருஞ்சிவனை யுளத்தில் வைப்பாம்.” இது அநாதியே மலமில்லாமையினால் முதற்குரு வாதலின், தூயதன்மையன் என்னும் பொருளது.

இவ்வெண்பாவில் உலகம் என்றது உயிர்களை, மற்று அசை.

மறையினியலும் பொருளை மறந்தாய் என்று கூறவேண்டியதை மறையினியல் மறந்தாயென்றுபசரித்தார்.

மறைனியல் என்றதில் உம்மை விரித்து வேதப்பொருளையும் என உரை செய்யப்பட்டது. அவ்வும்மை மேற்கூறிய அநுமானப பிரமாணத்தைத் தழுவி நிற்றலால் இறந்தது தழீஇய எச்சம்.

மறந்தாய் என்பது மறத்தலையுடையானைக் குறித்து நின்ற விளிஉருபு எற்ற பெயர். விளியாவது முன்னிலைப்படுத்தி அழைத்தல்.

இவ்வுதாரணத்தில் சந்நிதி என்றது அவிகாரவாதிகள் கூறும் நேர்முக மாத்திரை யன்றெனக்கூற வேண்டிச் சொன்ன என்னும் அடைகொடுத்துச் சொன்ன சிவன் கண்ணுவென்றூர். சொன்ன என்னும் அடையினுல் வேதத்தைச் சொன்னவன் என்ருகிச் சும்மா இருக்கும் சிவன் சந்நிதி என்பாரை மறுத்தவாருயிற்று. சந்நிதி என்பதன் பொருள்தான் என்னை யெனின், சிவனுடைய வல்லபமாகிய சிவசத்தி உயிர்களின் பொருட்டுச் செய்ய வேண்டுவதாகிய அவ்வக்காரியங்களின் நோக்குதலாகிய சங்கற்பமே யாம்.

சந்நிதி யென்பதற்குச் சத்தி சங்கற்பமே பொருளாயின் இச்சூத்திரத்திற் கூறிய காந்தங் கண்ட பசாசத்தவையே என்னும் உவமையால் காந்தத்திற்குச் சங்கற்பம் இன்ருகவும் காந்தத்தின் நேர்முகமாத்திரையால் இரும்பு அசைதல்போல என்பதனேடு முரணுமே யெனின், முரணுது. எவ்வாறெனின், சந்நிதி மாத்திரையிற் ருெழிற்படுதற்கு மட்டும் உவமையேயன்றிச் சங்கற்பமாதற்கு உவமையன்று; அன்றியும் முதல்வன் எங்கும் வியாபகனுதலால் எங்கும் எக்காலமும் அவன் சந்நிதியேயாகும். ஆதலால் முதல்வன் சந்நிதியை அடைந்தபொழுது என்பதற்கு முதல்வன் சத்தியின் சங்கற்பமாகிய திருவருள்நோக்கத்தையடைந்த பொழுதென்பதே பொருளாகும் என்க. எங்கும் அவன் சந்நிதியேயென்னும் இக்கருத்துப் பற்றியே திருநாவுக்கரசு சுவாமிகள், "காண்பார்யார் கண்ணுதலாய்காட்டாக்காலே" என அருளிச் செய்தார்.

உயிர் முதல்வனுல் அறியுமென்று கூருது வினைக்கீடாக முதல்வனுல் அறியும் என்று கூறிய கருத்து என்னை எனின், ஐம்பொறிகள் உயிரால் அறிதல்போல, உயிர் முதல்வனுல் அறிந்தாலும் ஐம் பொறிகள் சடமாதலால் வினைசெய்தலில்லை. ஆதலால் பொறிகள் வினைக்கீடாக அறிவதில்லை; உயிர் சித்தாதலால் தன் வினைக்கீடாக அறிகின்றது. ஆகவே உணர்தற் பயன் ஐம்பொறிகளுக்கு இல்லையாகவும உயிருக்கு உண்டென்பதற்கு ஏதுக் காட்டவேண்டி வினைக்கீடாக அறியும் என்றூரென்க.

கண்டறிந்து என்பதில் காணுதலும் அறிதலும் ஒருபொருளைக்குறித்த சொல்லாதலால் அவ்விரண்டும் ஒரு பொருட் பன்மொழி.

எண்ணுன் சிவன் என்றதில் எண்ணுதல் இவ்விடத்தில் அநுபவத்தைக் குறித்து நின்றது. ஆதலால் எண்ணுன் என்பதற்கு அநுபவியான் என உரைசெய்யப்பட்டது.

அசத்தெல்லாம் என்னும் பன்மை இன்று என்னும் ஒருமைகொள்ளாதேயெனின், அது எல்லாம் என்னுஞ் சாதியை அடக்கிய ஒருமையாதலால் கொள்ளும் என்க.

இன்று என்பது அவனெதிர் என்னும் சொல்லை அவாவி நின்றமையால், அச்சொல் அவாய் நிலையால்வந்தது. அவனெதிர் என்பதற்குத் தனது சந்நிதி என உரைசெய்யப்பட்டது.

இன்று என்பதில் ஆகலால் என்னுஞ்சொல் எச்சமாய் நிற்றலால் அது வருவித் துரைசெய்யப்பட்டது.

இன்றுதல் எவ்விடத்துப் பெறுதுமெனின், வருகின்ற ஏழாம் சூத்திரத்தில் யாவையுஞ் சூனியம் சத்தெதிர் என்றவிடத்துப் பெறுதும். இக்கருத்தேபற்றிச் சிவஞானசித்தியார், ⅠⅩ-ம் சூ-ம் சுஉ-வது செய்யுளில் "மாயை மருவிடான் சிவன் அவன்கண்-உரை தராது அசேதனத்தால்" என்றார் வழி நூலாசிரியரும். இவ்வியல்பு நோக்கியே திருக்களிற்றுப் படியாசிரியரும் அஎ-வது செய்யுளில் "உன்னுடைய உதரத்திற் கிடந்த கீடம் உறுவ தெல்லாம் நீ பொருந்தாதவாறு போல உயிர்கள் பொருந்துவதெல்லாம் சிவன் பொருந்தான்" எனக் கூறியருளினர்.

உயிர் முதல்வனோடு நின்று உணரும் முறைமையை விளக்கி
மேற்கோளை வலியுறுத்தும்

உதாரணம்.

வெய்யோ னொளியி லொடுங்கி விளங்காது
வெய்யோனை யாகாத மீன்போல—மெய்யவனிற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனைக்
கண்டேனய் மன்னுதலைக் காண்.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், உயிர் அங்ஙன முணர்த்த வுணருங்கால் முதல்வனின் வேறுநின் றுணருமோ ஒன்றாய்நின் றுணருமோ வென்பாரை நோக்கி அவ்விரண்டியல்பு மின்றிநின் றுணருமா றுணர்த்தி அதனை வலியுறுத்துதலுதலிற்று.

(இ-ள்.) வெய்யோன் ஒளியில் ஒடுங்கி—ஞாயிற்றி னொளியி னடங்கி,—விளங்காது—(அதனின்வேறாய்) விளங்கித் தோன்று தலின்றி,—வெய்யோன் ஆகாதமீன்போல—அதுவா யொழிதலு மில்லாத நாண்மீன்கள் (அஞ்ஞாயிற்றானே ஒளியுடைய வாமாறு) போல,—கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும்ஐம்புலனை மெய் அவனில் கண்டு—கண்டும் கேட்டும்உண்டும் உயிர்த்துந் தீண் டியும் அறியப்படும் ஐவகை விடயங்களையும் (உயிர்) மெய்ப்பொரு ளாகிய முதல்வனால் உணர்ந்து,—உடனாய் மன்னுதலைக் காண்— (வேறாதலும் ஒன்றாதலுமின்றி அவ்விரண்டற்கும் பொதுவாய் அட ங்கி) உடனாய்நிலைபெறுதலை அறிவாயாக எ-று.

உவமையடை பொருளினும், பொருள்வினை உவமையினுஞ் சென்றியையும்.

ஐ சாரியை.

நாண்மீன் முதலியவற்றின் ஒளியெல்லாம் ஞாயிற்றானுய ஒளியே என்பது வேதநூற் றுணிபாகலான் அஃதீண்டைக் குவ மையாயிற்று.

உயிரென்னும் எழுவாய் மேலைவெண்பாவினின்றும் வருவித் துரைக்கப்பட்டது.

விளக்கம்.

இவ்வெண்பாவில் ஐம்புலனை மெய்யவனில் கண்டு எனக் கூட்டுக.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோ எனின், மேற்கூறியவாறு முதல்வன் உணர்த்த உயிர் உணருங்கால் அவ்வுயிர் முதல்வனின் வேறாய் நின்றுணருமோ முதல்வனோடு ஒன்றாய் நின்றுணருமோ என்னும் ஐயம் நிகழுமன்றோ? அந்த ஐயத்தை நிவிர்த்தித்தற்பொருட்டு ஒன்றும் வேறு மாகிய அவ்விரண்டியல்பும் இன்றி நின்றுணரும் முறைமையை உணர்த்தி முதல்வன் உணர்த்த உயிர் உணரும் என்பதை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) நட்சத்திரங்கள் ஒளியுடையனவாய் விளங்கித் தோன்றுங் கால் சூரியன் ஒளியின் வேறாய் விளங்கித் தோன்றாமலும் சூரியனே ஆகா மலும் அச்சூரியன் ஒளியில் அடங்கி விளங்கித் தோன்றுமாறுபோல, உயிர் கண்டும் கேட்டும் உண்டும் மூகந்தும் தீண்டியும் அறியப்படும் ஐவகை விட யங்களை மெய்ப்பொருளாகிய முதல்வனால் உணர்ந்து, உணருங்கால் முதல் வனின் வேறாதலும் ஒன்றாதலுமின்றி அவ்விரண்டிற்கும் பொதுவாய் முதல்வனில் அடங்கி அம்முதல்வனோடு உடனாய் நிலைபெற்றிருக்கும் என்பதை அறிவாயாக எ-று.

(க-ரை.) நட்சத்திரங்கள் சூரியன் ஒளியோடு ஒன்றாதலும் வேறாதலும் இன்றி அடங்கிநின்று பிரகாசிக்குமாறுபோல, உயிர் முதல்வனோடு ஒன்றாதலும் வேறாதலுமின்றி அடங்கி உடனாய் நின்று அறியுமென்பதாம்.

இவ்வுதாரணத்தில் சூரியனைப்போல முதல்வனையும் நட்சத்திரத்தைப் போல உயிரையும் கூறி உவமையாகிய நட்சத்திரத்திற்கு அடங்கி விளங்காது ஆகாது என்னும் அடைகொடுத்து உவமேயப் பொருளாகிய உயிருக்கு அவ்வடை கொடாமையால் உவமைக்கோதிய அவ்வடை பொருளாகிய உயிருக்கும் சென்று பொருந்தும். உணர்ந்து என்னும் வினைஉயிருக்குக்கூறி அவ்வாறே நட்சத்திரம் விளங்கும் என்றுகூறாமையால் பொருளாகிய உயிருக்கோதிய வினை உவமையாகிய நட்சத்திரத்திற்கும் சென்று பொருந்தும். ஆதலால் அவ்வாறே உரையில் வருவித்து உரைக்கப்பட்டமை அறிக.

வெய்யோனை என்பதில் உள்ள ஐகாரம் சாரியை. இந்தச் சாரியை இல்லாதவிடத்து வெண்பாத் தளைதட்டுமாதலால் சேர்க்கப்பட்டது.

அனுமானப் பிரமாணங் கூறும் இவ்விடத்தில் பிரத்தியட்சமாக அறியப்படுவதையே உவமையாகக் கூறவேண்டுவது. ஆயினும் நட்சத்திரம் சந்திரன் முதலியவற்றிற்கு இயற்கைஒளி கிடையாது என்பதும் அவற்றின் ஒளியெல்லாம் சூரியன்ஒளியால் உண்டாகிய ஒளியேயாம் என்பதும் வேத நூற்றுணிபாதலான் அத்துணிபுபற்றி அந்நட்சத்திரம் இவ்விடத்து உவமையாயிற்று.

இவ்வெண்பாவில் அறியும் என்னும் பயனிலைக்குரிய உயிர் என்னும் எழுவாய் இல்லையாயினும் மேலைவெண்பாவில் நின்றும் வருவிக்கப்பட்டது. மேலை வெண்பாவில் உளம் என்றது உயிரை.

உயிர்க்கு உணர்த்தும் வேறுபாட்டால் முதல்வன் விகாரியாகான் என்பதற்குக் காட்டும்

உதாரணம்.

அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே
யருளு மவனன்றி யில்லை—யருளின்
றவனன்றே யில்லை யருட்கண்ணார் கண்ணுக்
கிரவிபோ னிற்குமர னேய்ந்து.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், அங்ஙனமாயினும் உயிர்கட்குப் பல் வேறுவகைப்பட வுணர்வு நிகழ்தலின் அஃதுணர்த்துதல் வேறு பாட்டானுய தெனல் வேண்டும். வேண்டவே, நிருவிகாரி யென்

ஞுஞ் சுருதியோடு மூரணி முதல்வன் விகாரியாவான் செல்லு மென்பாரை நோக்கி விகாரியாகாமை யுணர்த்தி அதனை வலியுறுத் துதனுதலிற்று.

(இ—ள்.) அருள் ஈசற்கு அன்றே உண்டாம்—(உயிர்கட்குப் பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதற்கணுளதாகிய) இரக்கம் முதல்வனுக்கு அநாதியேயுள்ளது,—அது சத்தி—அவ்வி ரக்கம் (வேறு பொருளன்று முதல்வனுக்கு உளதாகிய) சத்தியே யாம்,—அருளும் அவன் அன்றி யில்லை அவன் அருளின்று இல்லை— (இரக்கமும் அவனும் குணமும் குணியுமாகலின்) அவ்வருளும் முதல்வனை யின்றி யமையாது முதல்வனும் அதனையின்றி யமையா னுய்,—அருட் கண்ணுர் கண்ணுக்கு இரவிபோல் ஏய்ந்து நிற்கும் அரன்—ஞானக்கண்ணுடையா ருணர்விற்கு ஞாயிறு (தன்னொளி யோடு தாதான்மியமாயியைந்து நிற்குமாறு)போல (அவ்வருளோடு தாதான்மியமா) யியைந்து நிற்பன் முதல்வன்; (ஆகலாற்றன்வயத் தனுகிய அம்முதல்வன் விகாரமின்றி நின்றே தனது சத்தி சங்கற் பமாத்திரையான் அனைத்துஞ் செய்தல் கூடும்) எ-று.

ஆகலாற் றன்வயத்தனுகிய அம்முதல்வன் விகாரமின்றி நின் றேதனது சத்திசங்கற்பமாத்திரையான் அனைத்துஞ் செய்தல்கூடு மென்பது குறிப்பெச்சம்.

உம்மை எதிரது தழீஇயது.

இன்றி யென்னும் வினையெச்சக் குறிப்பினிகாஞ் செய்யுளாக லின் உகரமாய்த் திரிந்தது.

அன்றே அசை.

இவ்வியல்பு சித்தாந்த நெறியுணர்ந்தாற்கன்றி விளங்காதென் பார் அருட்கண்ணுர் கண்ணுக்கென்றூர்.

சத்தியதுண்மையும் அதனியல்பும் நீக்கமின்றி நிற்குமன்றே யென்பதனுள் வகுத்துரைத்தமையின் ஆண்டுக் காண்க.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) அருள் ஈசற்கு அன்றே உண்டாம் அது சத்தி அரு ளும் அவன் அன்றி இல்லை அவன் அருள் இன்று இல்லை அருட்கண்ணுர் கண்ணுக்கு இரவிபோல் ஏய்ந்துநிற்கும் அரன்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், மேற் கூறியவாறு முதல்வனோடு உடனாய் நின்று முதல்வன் அறிவிக்க உயிர் அறியுமாயினும் உயிர்கட்குப்பல வேறுவகைப்பட அறிவுநிகழக் காண்கின்றமையால், அவ்வாறு நிகழ்தல் முதல்வன் உணர்த்தும் வேறுபாட்டால் ஆயின வென்று கூறவேண்டும்; கூறவே முதல்வன் நிர்விகாரியென்னுஞ் சுருதியோடு மாறுபட்டு விகாரியெனக் கூறவரும் என்பார் ஈசுரஅவிகாரவாதிகள். அவரை நோக்கி விகாரியாகான் என்பதை அறிவித்து உயிர் முதல்வன் அறிவிக்க அறியும் என்பதனை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) உயிர்கட்கு அனாதியே கூடியிருந்த ஆணவமலத்தின் தடையால் உண்டாகிய பசுத்தன்மையை நீக்கிப் பிரிப்பின்றி நிற்கும் சிவமாந்தன்மையை விளக்கவேண்டுமென்ற இரக்கம் முதல்வனுக்கு அநாதியேயுள்ளது. அந்த இரக்கம் முதல்வனைவிட வேறு பொருளன்று. முதல்வனுக்குளதாகிய சத்தி (வல்லமை) யேயாம்; இரக்கம் குணமும் முதல்வன் குணியுமாதலால் அந்த இரக்கமும் முதல்வனை யின்றித் தனித்து நில்லாது; முதல்வனும் அந்தஇரக்கத்தையின்றித் தனித்து நில்லாதவனாகின்றான். இவ்வாறு நிற்றல் எதுபோல எனின், சூரியன் தன் ஒளியோடு பிரிப்பின்றி நிற்றல் போலாம். மாசில்லாதகண்ணுக்கு ஒளியோடு பிரிப்பின்றி நிற்கும் சூரியன் விளங்கித் தோன்றுமாறுபோல, ஆணவமல மில்லாத அருட்கண்ணை யுடையார் கண்ணுக்கு அருளோடு பிரிப்பின்றி நிற்கும் முதல்வன் விளங்கித் தோன்றுவன். ஆதலால் தன்வயத்தனாகிய அம்முதல்வன் விகாரமின்றி நின்றே தனது சத்திசங்கற்பமாத்திரையினால் அனைத்துஞ் செய்தல்கூடும் எ-று.

(க-ரை.) சூரியன் ஒளியோடு பிரிப்பின்றி நின்று கண்ணுக்குப் பல வேறு வகைப்படக் காணுந்தொழில் நிகழும்படி செய்தாலும் விகாரத்தை அடையாதவாறுபோல், முதல்வன் அருளோடு பிரிப்பின்றி நின்று உயிருக்குப் பலவேறு வகைப்பட அறிவுநிகழும்படி செய்யினும் விகாரத்தை அடையான் என்பதாம்.

ஆகலாற் றன்வயத்தனாகிய அம்முதல்வன் விகாரமின்றிநின்றே தனது சத்தி சங்கற்ப மாத்திரையான் அனைத்தும் செய்தல் கூடுமென்பது செய்யுளில் இல்லை ஆயினும் இரவிபோல் எய்ந்து நிற்கும் அரன் என்றதனால் குறிப்பாக எஞ்சிநின்றமையால் குறிப்பெச்சமாக உரையிற் கொள்ளப்பட்டது. எவ்வாறெனின், கண்ணுக்கு ஒளி விளங்குவதற்குச் சூரியன் ஒளியின் துணை வேண்டுவதுபோலச் சூரியனுக்கு ஒளி விளங்குவதற்குப் பிறிதொன்றின் துணைவேண்டாம். அதுபோல உயிர் அறிவதற்கு முதல்வன் அறிவிக்க வேண்டுவதுபோல முதல்வன் அறிதற்குப் பிறிதொன்று அறிவிக்க வேண்டாமையால் தன்வயத்தனாகிய முதல்வன் எனவும், கண் வேற் வேறு விதமாய் அறிந்து விகாரப்படுவதுபோலச் சூரியன் விகாரப்படான். அதுபோல, உயிர் வேறுவேறு விதமாய் அறிந்து விகாரப்படினும் அறிவிக்கும் முதல்

வன் விகாரப்படான் ஆதலால் விகாரமின்றி நின்றே எனவும், சூரியன் விகாரமின்றி நிற்பினும் சூரியன் ஒளியின் துணையால் கண் வேறு வேறு விதமாய் அறிதல்போல, முதல்வன் விகாரமின்றி நிற்பினும் அவன் அருள் அறிவித்தலால் உயிர் வேறு வேறுவிதமாய் அறியுமாதலால் தனது சத்தி சங்கற்பமாத்திரையான் அனைத்துஞ் செய்தல் கூடு மெனவும் வருவித்து உரைக்கப்பட்டவாறும்.

அருளும் என்றதில் உள்ள உம்மை அவனும் அருளையின்றி இல்லை யென்று முன்னர்க்கூறும் பொருளைத் தழுவி நிற்றலால் எதிரதுதழுவியது. அவன் என்றதில் உம்மை வருவிக்கப்பட்டது.

அருளின்றியென வினையெச்சக் குறிப்பாகக் கூறவேண்டியதைச் செய்யுளாதலின் இகரத்தை உகரமாய்த் திரித்துஅருளின்று எனக்கூறினர்; "அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந்—தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே." என்பது இலக்கணமாகலான்.

இன்றி என்பது காலங்காட்டாமையின் வினையெச்சக் குறிப்பு. அவ் வெச்சம் இல்லையென்னுங் குறிப்புவினை கொண்டுமுடிந்தது.

அவன் அன்றே என்பதிலுள்ள அன்றே என்பது அசை. அருளும் முதல்வனும் பிரிப்பின்றி நிற்கும் இயல்பு சித்தாந்தநெறி உணர்ந்தார்க்கன்றி ஏனையோருக்கு விளங்காது. எவ்வாறெனின், சித்தாந்தமல்லாத பிற நெறி யில் நிற்போரெல்லாம் அவ்வருளைப் பெற்றுடையாரையே தெய்வமாகக் கொண்டுவழிபடுபவர். அத்தெய்வங்கள் எல்லாம் உயிர் வருக்கமாதலின் உற் பத்தி நாசங்களை யுடையனவாகும். ஆண் தன்மையும்பெண் தன்மையும் ஆன இருதன்மைகளை யுடைய ஒரு வடிவம் என்றும் உற்பத்தியாதலில்லை. ஆத லால் சித்தாந்தமல்லாத பிற நெறியில் நிற்பார்வணங்குந் தெய்வங்களெல் லாம் சத்திவேறு கடவுள்வேறு ஆக இருவடிவங்களாகவே காணப் படுகின் றன. சித்தாந்த சைவர்கள் வணங்குந்தெய்வம் அதிகாரமூர்த்திகளாகப் பல இருப்பினும் தலைமையான மகாலிங்கம் சத்தியுஞ் சிவமுமான ஒருவடிவமாக வேஇருக்கின்றது. பீடம் சத்தி. லிங்கம் சிவம். இதுவன்றி அதிகார மூர்த்தி களுள்ளும் பாதி உமையும் பாதிசிவமுமான ஒரு வடிவம் இருக்கின்றது. இதனை அர்த்தநாரீசுவர வடிவமென்பர். ஆகவே சத்தியும் சிவமும் பிரியாது கலந்து நிற்கும் நிலையை அறிதற் குரியார் சித்தாந்த சைவரேயாவரென்பது நன்கு விளங்குமாறுகாண்க.

சித்தாந்த சைவர் அறிவதும், சூரியனையும் ஒளியையும் அவ்வொளியி னால் அறிவது போலச் சிவசத்தியினாலேயே அச்சத்தியையும் அதனோடு பிரிப்பின்றி நிற்கும் சிவனையும் அறிவர். இக்கருத்துப்பற்றியே, "அவனரு ளாலே அவன்றாள் வணங்கி" என அருளிச் செய்தனர் மணிவாசகப்பெரு மான். ஆதலால் சிவமும் சத்தியும் பிரிப்பின்றி நிற்கும்நிலை சித்தாந்த

சைவருக்கே விளங்குமெனவும் ஏனையோருக்கு விளங்காதெனவும் கூறவேண்டிச் செய்யுளில் அருட் கண்ணார் கண்ணுக்கு என்றார்.

சத்தி உண்டெனவும் அதன் இயல்பும் இரண்டாஞ் சூத்திரம் நான்காம் அதிகரணத்தில் "நீக்கமின்றி நிற்குமன்றே" என்னும் மேற்கோளில் வகுத்துக் கூறினமையால் இவ்விடத்துக் கூறவில்லை. ஆதலால் அவ்விடத்துக் காண்க.

இந்த ஐந்தாஞ் சூத்திரத்தினாலும் அதிகரணங்களினாலும் கூறி முடித்த தொகைப்பொருள்:-நான்காஞ் சூத்திரத்திற் கூறியவாறு உயிர் அந்தக்கரணங்களுடனே கூடி ஐந்தவத்தைப்படுமாயின் ஐந்தவத்தைப் படுவதற்கு முதல்வன் உபகாரம் வேண்டாம் என்பாரைமறுத்து இந்திரியங்கள் உயிரால் விடயங்களை யறிந்தும் அவ்விந்திரியங்கள் தம்மையும் உயிரையும் அறியாதவாறுபோல, உயிர் முதல்வனுடைய திரோதான சத்தியால் ஐந்தவத்தைப் பட்டும் அவ்வுயிர் தன்னையும் முதல்வனையும் அறியாதெனவும், முதல்வனால் அவ்வாறு அறிதல் காந்தத்தின்முன் இரும்பு தொழிற்படுதல்போலு மாதலின் அதுபற்றி முதல்வன் விகாரியாதல் இல்லை யெனவும், சூத்திரத்தாற் கூறப்பட்டன. படவே, தாமரை யிலையிலுள்ள நீர்போலப் புருடன் பற்றின்றி நிற்க அப்புருடன் சந்நிதியில் புத்திதத்துவமே ஐந்தவத்தைப் படுமன்றிப் புருடன் ஐந்தவத்தைப் படுவனென மேலைச்சூத்திரத்திற் கூறியது பொருந்தாதெனச் சாங்கியர் கூற, முதலதிகரணத்தால் அவரைமறுத்து இந்திரியங்கள் விடயங்களை யுணர்தல் ஆன்மாவினாலேயேயன்றிப் புத்திதத்துவத்தினாலன்றெனக் கூறப்பட்டது. படவே, புத்திதத்துவம் சடமாதலால் இந்திரியங்கள் அப்புத்தியைக்கொண்டு விடயங்களை அறியமுடியாதென்பதும் உயிரைக் கொண்டே அறியும் என்பதும் ஒக்கும். அதுபோலச் சித்தாகிய உயிரும் முதல்வனைக்கொண்டு அறியும் என்பது பொருந்தாது. பொருந்துமாயின் உயிராகிய சித்துக்கு முதல்வன் வேண்டுவதுபோல முதல்வனாகிய சித்துக்கும் பிறிதொன்று வேண்டுமெனப்பட்டு மேலும்அவ்வாறே வரம்பின்றி ஓடுமென ஈசுவர அவிகாரவாதிகள் கூற, இரண்டாம் அதிகரணத்தால் அவரைமறுத்துத் தமக்கு ஒருமுதலுடைய பொருளுக்குப் பிறபொருளின் துணை வேண்டுமேயன்றித் தமக்குஒருமுதலில்லாத பொருளுக்குப் பிறபொருளின் துணை வேண்டாமாதலாலும், உயிர் தமக்கு முதலையுடையது என்பது மேல் இரண்டாஞ் சூத்திரத்தாலும் முதல்வன் தனக்குவேறு முதல் இல்லாதவன் என்பது முதற் சூத்திரத்தாலும்பெறப் பட்டமையாலும், உயிர்முதல்வனால் அறியும்; அதனால் வரம்பின்றி ஓடுதலாகிய குற்றமில்லை; உயிர் அறியுங் காலத்து முதல்வனோடு உடனாய் அடங்கிநின்று அறியும்; அறியும் வேறுபாட்டால் முதல்வன் விகாரப்படான் எனச்சாதிக்கப்பட்டது.

இரண்டாம் அதிகரணம் முற்றிற்று.

ஐந்தாஞ் சூத்திரம் முற்றிற்று.

ஆ ரு ஞ் சூ த் தி ர ம்.

பதி இலக்கணம்.

முதற் சூத்திரத்தால் உண்டென்று சாதிக்கப்பட்ட பதிக்கு இலக்கணம் இவ்வாருஞ் சூத்திரத்தாற் கூறுகின்ருர்.

உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே

கருத்துரை.

எ-து சூ-ம் எ-னின், சத்தும் அசத்தும் வரைசெய் துணர்த்துத னுதலிற்று.

சிற்றுரை.

எ-து க-ரை எ-னின், சூத்திரக் கருத்துணர்த்துத னுத லிற்று.

(இ-ள்.) மேலேந்து சூத்திரத்தானுங் கூறிப்போந்த பொருள் களுள் யாது சத்து யாது அசத்தென்னும் ஐயநீக்குதற்குச் சத்தி னியல்பும் அசத்தினியல்பும் இவையென அவ்விரண்டும் இலக்கணத் தாற் றம்முண் மயங்காதவாறு வரைந்துவைத் துணர்த்தி உண்மை யதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யு முகத்தானே இலக்கண வோத்துட் கூறுதற்கு எஞ்சிநின்ற பதிப்பொருளதிலக்கணங் கூறு தல் இவ்வாருஞ் சூத்திரத்தின் கருத்து எ-று.

இதனானே சூத்திர வியைபும் இனிதுவிளங்கும்.

விளக்கம்.

இக்கருத்துரை என்ன சொல்லிற்றோவெனின், சூத்திரக்கருத்துஇது வென்று சொல்லிற்று.

(இக்கருத்துரையின் பொருள்.) மேல் ஐந்து சூத்திரங்களினுலும் கூறி முடித்த பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களுள், என்றும் ஒரு தன்மை யாயுள்ள சத்துப்பொருள் யாது அவ்வாறன்றி மாறுபடுந் தன்மையுள்ள அசத் துப்பொருள் யாது என்னும் ஐயம் நிகழுமன்றே? அந்தஐயத்தை நீக்குதற் குச் சத்தும் அசத்துமாகிய அவ்விரண்டும் இலக்கணத்தால் தம்முள் மயங் காதவண்ணம் வரையறுத்துச் சத்தின் இலக்கணம் இது அசத்தின் இலக் கணம் இது என உணர்த்தி, அவ்வாறு உணர்த்துதலால் உண்மையதிகாரத்

திற்குத் தோற்றுவாய் செய்து, அவ்வாறுதோற்றுவாய் செய்யும் முறையில் இலக்கண இயலுட் கூறவேண்டியதாக எஞ்சி நின்றபதிப்பொருளுக்கு இல க்கணங் கூறுதல் இவ்வாறுஞ் சூத்திரத்தின் கருத்து எ-று.

உண்மையதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்தது எவ்வாறெனின், வருகின்ற ஏழாஞ் சூத்திரமுதல் ஆறுசூத்திரமும் முப்பொருள்களின் சிறப் பிலக்கணங் கூறும் உண்மை அதிகாரம். இவ்வாறுஞ் சூத்திரத்திற் கூறும் பதி இலக்கணமும் சிறப்பிலக்கணமாகும். ஆதலால் இச்சூத்திரம் தோற் றுவாயாயிற்று.

பொது அதிகாரத்துள் அடங்கிய இவ்வாறுஞ் சூத்திரத்தில் சிறப்பதி காரத்திற் கூறவேண்டிய சிறப்பிலக்கணங் கூறுவது எவ்வாறு பொருந்தும் எனின், கூறுதும். திருக்குறள் வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரத் தின் இறுதியில் "அதன் நன்கலம் நன்மக்கட்பேறு" என்று கூறிப் புதல்வ ரைப் பெறுதல் என்னும்அடுத்த அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்தார். நன்மக்கள் என மக்களின் சிறப்பைக் கூறினுரேனும் நன்மக்களின் செய லைக்கூறவில்லை. அதனை அடுத்த அதிகாரத்திற்றுன் கூறினர். அவ்வாறே இந்நூலில் பொது அதிகாரத்து இறுதியில் பதியின் சித்துச்சத்தாகிய சிறப் பிலக்கணங்கூறிச் சிறப்பிலக்கணங் கூறும்அடுத்த அதிகாரத்திற்குத் தோற் றுவாய் செய்தார். பதியின் சிறப்பிலக்கணம் சித்துச் சத்தெனக் கூறினுரே னும் சித்துச் சத்தாய்நின்று செய்யும் செயல் கூறவில்லை. இரண்டாஞ் சூத் திரத்தில் உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்கும் பொது இயல்பும், அவ்வாறு நின்று உயிர்கள் இறத்தல்பிறத்தல்களை அடையும்வண் ணம் பஞ்ச கிருத்தியஞ் செய்வன் எனச் செயலுங்கூறினுர். இவ்வாறுஞ்சூத் திரத்தில் சித்துச்சத்தாய் நின்று செய்யுஞ் செயல் கூறாமையினுல் சிறப்பி லக்கணம் முற்றுங்கூறியதாயில்லை. ஆதலால் தோற்றுவாயாயிற்று. சித்துச் சத்தாய் நின்று உயிர்களுக்குச் செய்யும் உபகாரத்தை எட்டாஞ்சூத்திரத்தி லும் பதினொராஞ் சூத்திரத்திலுங் கூறுகின்றுர். அவ்வுபகாரம் யாதெ னில், முறையே சாதனகாலத்தில் ஞானகுருவை ஆவேசித்து நின்று அநுக்கிரகித்தலும், முத்திக்காலத்தில் அத்துவிதமாய் நின்றுசிவானந்தத்தை அநுபவிக்கச் செய்தலுமாம். ஆதலால் இவ்வாறுஞ்சூத்திரத்தில் பதிக்குச் சிறப்பிலக்கணங் கூறியது பொருந்துமென அறிக.

ஐந்தாஞ் சூத்திரத்தால் பாச இலக்கணங் கூறி இச்சூத்திரத்தில் எஞ்சி நின்றபதி இலக்கணங் கூறுதலால் சூத்திர இயைபு பெறப்பட்டது. அன் றியும் ஐந்தாஞ் சூத்திரத்திற் கூறப்பட்ட முதல்வன் அறியப்படும் பொரு ளோ அறியப்படாத பொருளோஎன்னும் ஐயத்தை இச்சூத்திரத்தால் நீக் குதலினுலும் சூத்திர இயைபு பெறப்பட்டவாறு காண்க.

இலக்கணவியல் ஆறுஞ்சூத்திரம்.

சிற்றுரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு.

உணருரு வெனின்—(தம்முணர்வின் றமியாகிய முதற்பொருள்) அளவைகளானறியப்படும் இயல்பிற்றெனின்,—அசத்து—(அங்ஙன மறியப்படும் பிரபஞ்சம்போல் அழிபொருளாகிய) அசத்தாம்,—உணராது (எனின்)—(எவ்வாற்றானும்) அறியப்படாதஇயல்பிற்றெனின்,—இன்மையின்—(அங்ஙனமறியப்படாத முயற்கோடு போலச்) சூனியப் பொருளாம்: ஆகலான்,—இருதிற னல்லது—இவ்விரு பகுதியுமன்றி (ஒருவாற்றானறியப் படாமையும் ஒருவாற்றானறியப் படுதலுமாகிய),—இரண்டுவகையின் சிவசத்தாமென—இரண்டு வகையானும் சிவசத்தாமென,—இசைக்கு மன்னுலகே—கூறுவர் மெய்யுணர்வினிலை பெற்றுயர்ந்தோர் எ-று.

உணருரு வெனின் அசத்தென மாறுக. எனினென்பது முன்னருஞ் சென்றியைந்தது.

முற்றும்மைகள் தொக்கன.

அல்லதென்பது வினையெச்சக் குறிப்பு முற்று. அன்றியா மென இயையும்.

ஒருவாற்றானறியப்படாமை பாசஞான பசுஞானங்களான் அறியப்படாமை. ஒருவாற்றா னறியப்படுதல் சிவஞான மொன்றானே அறியப்படுதல். பாசஞான பசுஞானங்களான் அறியப்படாமையிற் சிவமாதலும், பதிஞானத்தா னறியப்படுதலிற் சத்தாதலும் பெறப்படு மென்பார், "இரண்டு வகையிற் சிவசத்தாமென விசைக்கும்" என்றார். சிவசத் தென்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு. சடமாகிய சத்தினீக்குதற்குச் சிவ சிவசத்து என்றார். சிவசத்தென்பது சித்துச்சத்தென்னும பொருட்டு.

எழுவாய் மேலைச் சூத்திரத்தி னின்றும் வருவித்துரைக்கப் பட்டது.

இருதிறனுமன்றி இரண்டுவகையானுஞ் சித்தாதலுஞ் சத்தாதலு முடையனாய் நிற்றல் முதல்வனுக் கிலக்கண மென இலக்கணமும் இதனுட் போந்தவாறுணர்க.

முதல்வனுக்குப் பொதுவியல்பு மேற் புனருற்பவ முணர்த்து முகத்தாற் கூறிப்போந்தமையின் இது சொரூப லக்கண மெனப் படுஞ் சிறப்பிலக்கண மெனக்கொள்க

அற்றாகலினன்றே இதனை இலக்கணவோத்துண் முதற்கட் கூறாது உண்மையைச் சாரவைத்து இறுதிக்கட் கூறியதூஉமென்க. இன்னும் முதல்வனுக்குளவாகிய சிறப்பியல்புக் குணங்களெல்லாம் இவ்விரண்டனுளடங்கும். அஃதறிந் தடக்கிக்கொள்க. "தன்னாலே தனையறிந்தாற்—றன்னையுந் தானே காணும்" எ-ம், உன்னரிய திருவருளை யொழியமல முளதென் றுணர்வரிதா மத னுண்மை தெரிவரிதா முனக்கே எ-ம், "மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை—யாயவா ருயிரின் மேவு மருளெனி லொளியாய் நிற்கும்" எ-ம், ஓதியவாற்றால் ஏனைப் பசுபாசங்களுஞ் சிறப்பியல்பு பற்றியுணர்தல் சிவஞானத்தானன்றி அமையாதாயி னும் "தீபமெனத் தெரிந்தாங்—கொருவியான் மாவி னுண்மை யுணர்ந்தவர் தமையு ணர்ந்தோர்—தருமிது பசுஞானம்" எ-ம், இவைகீழ் நாட லாலே—காதலின னன்பிரம மென்னு ஞானங் கருதுபசு ஞானம்" எ-ம், பொதுவியல்புபற்றி யோதுதலானும், யானிதனையறிந்தேன் அறிகின்றிலே னென்றறியும் பாச உணர் விற்கு அவற்றது பொதுவியல்பு விடயமாதல் கண்கூடாகப் பெறப்படுதலானும், அவை ஒருவாற்றா னுணருருவாதலு முடைமை யிற் சிவசத்தாவான் செல்லாமையறிக. சற்காரியவாதங் கூறுஞ் சைவசித்தாந்தத்தில் அசத்தென்பது சத்துக்கு மறுதலை யன்மை யான் அப்பசுபாசங்கள் அங்ஙனமறியப்படும் பொதுவியல்புபற்றி அசத்தெனப்படுமாயினும் சிறப்பியல்புபற்றி அசத்தாதல் செல் லாமையிற் சிறப்பியல்பு நோக்கும்வழி அவை சத்தாதற் கிழுக்கின் மையு மறிக. இங்ஙனஞ் செவ்வனே யிறுக்க அறியாதார் அபா வத்தினியல்பாவது பாவத்திற்கு மறுதலைப் பொருள் போலுமென நையாயிகர் முதலியோர் மதம்பற்றி மயங்கி எல்லாப் பொருளுஞ் சத்தென்னுஞ் சித்தாந்தத்தோடு முரணுமைப் பொருட்டு ஈண்டுச் சத்து அசத்தெனப்பட்டன சித்து அசித்தென்னும் பொருளவா மெனவும், சுத்தம் அசுத்தமென்னும் பொருளவா மெனவும் உரைத்திடர்ப்படுவர். காரியப் பிரபஞ்சம் ஏனைப்பசுபாசங்கள் போலன்றி இருவகை யியல்பானுங் காட்சிப் புலனாய் இத்துணைப் பொழுது நிற்குமென நம்மனோரால் அறியவாராது நிலைபெறுவது

போலத் தோன்றி விரையக்கெட்டு மறைந்துபோதற் சிறப்புடைமைபற்றி அதுவே ஈண்டு 'உணருருவசத்து' என்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அசத்தெனவே அசித்தென்பதுந் தானே போதரும்.

விளக்கம்.

(இச்சூத்திரத்தின் பொழிப்புரை.) ஐந்தாஞ்சூத்திரத்திற் கூறிய தம்முணர்வின்றமியாகிய முதற்பொருள் பிரமாணங்களால் அறியப்படுமோ படாதோ என்னும் ஐயம் நிகழுமன்றே? பிரமாணங்களால் அறியப்படுந் தன்மையுடையது எனின், அதனால் அறியப்படும் பிரபஞ்சம் அழியப்படுவதுபோல் அழிபொருளாகிய அசத்தாகும். இனி எவ்வாற்றானும் அறியப்படாத தன்மையுடையது எனின், அவ்வாறு அறியப்படாத முயற்கோடு சூனியமாதல் போலச் சூனியமாகும். ஆதலால் அறியப்படுதல் அறியப்படாமையாகிய இவ்விரு பகுதியுமன்றி ஒருவகையால் அறியப்படாமையும் ஒருவகையால் அறியப்படுதலுமாகிய இருவகை இயல்பினை உடைய சிவசத்து முதற்பொருளாகுமென உண்மையறிவில் நிலைபெற்ற உயர்ந்தோர் கூறுவர் எ-று.

உணருரு அசத்தெனின் என்பதை உணருருவெனின் அசத்து என மாறுக. எனின் என்பது உணருருவென்பதனோடு சேர்ந்ததுமன்றி உணராதென்பதனோடுஞ் சென்று பொருந்தும். ஆதலால் அறியப்படாத இயல்பிற்றெனின் என்று உரை செய்யப்பட்டது.

இருதிறன் இரண்டுவகை என்றவைகளில் முற்றும்மைகள் விகாரத்தால் தொக்குநின்றன. அவற்றை விரித்து இருபகுதியும் எனவும் இரண்டு வகையானும் எனவும் உரை செய்யப்பட்டது. இனைத்தென அறிந்த பொருளின்மேல் வந்த உம்மையாதலால் முற்றும்மையாயிற்று.

இருதிறன் அல்லது என்பதில் உள்ள அல்லது என்னுங்குறிப்பு வினைமுற்று அன்றியெனக் குறிப்பு வினையெச்சப்பொருளில் வந்தமையால் வினையெச்சக்குறிப்பு முற்று.

அன்றியென்னும் அவ்வினையெச்சம் சிவசத்தாம் என்பதிலுள்ள ஆம் என்னும் வினைகொண்டு முடிந்தது.

சிவசத்தாகிய முதல்வன் ஒருவாற்றான் அறியப்படாமையாவது, பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் அறியப்படாமை. ஒருவாற்றான் அறியப்படுதலாவது, சிவஞானமொன்றானே அறியப்படுதல். பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என்னும் மூவகை ஞானங்களினியல்பு முன்னர் ஒன்பதாஞ் சூத்திரத்துட் கூறப்படும். பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும்

சிவஞானபோதச்சிற்றுரைவிளக்கம்.

அறியப்படுவது சடப்பொருளே யாதலால் அவ்விரண்டினாலும் அறியப்படாதபொருள் சிவமாதலும், பதிஞானத்தால் அறியப்படும் பொருள் ஏனைய பாசஞான பசுஞானங்களால் அறியப்படும் பொருள்போல் அநித்தமாகாமையால் சத்தாதலும் பெறப்படுமெனக் கூறவேண்டி இரண்டு வகையிற் சிவசத்தாமென இசைக்கு மென்றார். இன்னும் பாசஞான பசுஞானங்களால் அறியப்படாத என்றதனால் அறியப்படாமைபற்றிச் சூனியமோ என்னும் ஐயம் நிகழாமைப் பொருட்டுச் சிவமெனவும், பதிஞானத்தால் அறியப்படும் என்றதனால் அறியப்படுதல்பற்றி அழிகின்ற பொருளாமோ என்னும் ஐயம் நிகழாமைப் பொருட்டுச் சத்து எனவுங் கூறவேண்டி இரண்டுவகையிற் சிவசத்தாமென இசைக்கு மென்றார் என்றலும் ஒன்று. சிவசத்து என்பது சிவமாகிய சத்தென்னும் பொருளைக்குறித்து நிற்றலால் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. சிவமென்னும் பெயர்ச்சொல்லும் சத்து என்னும் பெயர்ச்சொல்லும் ஒட்டி (சேர்ந்து) ஆகிய என்னும் பண்புச்சொல் தொக்கு நிற்றலால் இருபெயரொட்டுப் பண்புத் தொகையாயிற்று. இது தமிழ் இலக்கணப்படி சிவச்சத்து என்றிருத்தல் வேண்டும். அவ்வாறன்றி சிவசத்து என்றது வடநூல் முடிபு. வடமொழியில் ஒற்று இரட்டிக்காது. சிவசத்து என்பது சிவமாகிய சத்து என்னும் பொருளைக் குறிப்பதாயின் சத்து என்றே கூறினால் போதாதோ எனின், போதாது. எதனாலெனின், பதி பசு பாசம் என்னும் மூன்றும் நித்தப்பொருள்களாதலின் மூன்றும் சத்தேயாம். அம்மூன்றனுள் பதியும் பசுவும் சித்துப் பொருள். பாசம் சடப்பொருள். பசு தனித்து நிற்பதில்லை. பாசத்தையேனும் பதியையேனும் சார்ந்தே நிறகும். ஆகவே, பாசம் சடசத்தெனவும் பதி சிவசத்தெனவும் பசு சிற்சடசத்தெனவும் பெயர் பெறும். பெறினும் மூன்று சத்தும் சடசத்து சிவசத்து என்னும் இரண்டனுள் அடங்கும். அவ்விரண்டனுள், சட்சத்தில் நின்றும் நீக்குதற்குச் சிவசத் தென்று கூறினர். சிவஎன்னும் சொல்லில் சிகரம் எவற்றையுந் தன்னுளடக்கிக் கடந்து நிற்றலையும் வகரம் எவற்றுடனுங் கலந்து நிற்றலையுங் குறிக்கும். குறிக்கவே கடந்தும் கலந்தும் நிற்பதுவியாபகம் எனப்படும். வியாபகம் சடமாகிய ஆகாயத்திற்கும் மலத்திற்கும் இருத்தலால் அந்த வியாபகத்தைப்போலன்றி அறிவுடைய தாதலின் சிவம் என்பது சித்து என்னும் பொருளைக் குறிக்கும். குறிக்கவே, சிவசத்து என்பது சித்துச் சத்து என்பதாம். உயிரும் சித்துச் சத்தெனப் படுமாயினும் தனித்து நிற்கமாட்டாத குறையுடையது; ஆதலின், அதற்குச் சிறப்பாகச் செல்லாது. செல்லாதாகவே, குறையே துன்பத்திற் கேதுவாதலின் குறையில்லாத இச்சித்துச் சத்தே இன்பப் பொருளாகும். ஆகவே, பாசத்திற்குச் சத்துத்தன்மை மட்டும் உண்டெனவும், பசுவுக்குச் சித்துச் சத்துத்தன்மை பொதுவாக உண்டெனவும், பதிக்குச் சித்துச் சத்து ஆனந்தம் மூன்றும் சிறப்பாக உண்டெனவும் உணர்ந்துகொள்க.

தம்முணர்வின் றமியாகிய முதல்வன் என்னும் எழுவாய் மேலைச் சூத்திரத்தில் நின்றும் வருவிக்கப்பட்டது.

இலக்கணவியல் ஆறுசூத்திரம்.

இச்சூத்திரத்தில் சத்தின் இலக்கணமும் அசத்தின் இலக்கணமுங் கூறியதோடு அறியப்படுதல் இன்றி என்றதனால் பாசஞான பசுஞானங்கட்கு அறியப்படான் எனப்பட்டுச் சித்தாதலும், அறியப்படாமை இன்றி என்றதனால் பதிஞானத்திற்கு அறியப்படுவான் எனப்பட்டுச் சத்தாதலும் உடையனாய் நிற்றல் முதல்வனுக்கு இலக்கணமென முதல்வன் இலக்கணமுங்கூறி முடித்தவாறு அறிக.

முதல்வனுக்குப் பொதுவிலக்கணம் மேல் இரண்டாஞ் சூத்திரத்தில் புதுச்சிருட்டி கூறு முகத்தாற்கூறி முடித்தமையால் இச்சூத்திரத்திற்கூறிய இலக்கணம் சிறப்பிலக்கணம் எனக்கொள்க. உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்றல் பொதுவிலக்கணமும் சித்துச் சத்தாய் நிற்றல் சிறப்பிலக்கணமுமாம். இது சிறப்பிலக்கண மாதலால் இச்சூத்திரத்தை இலக்கண வியலுள் முதலாவதாகக் கூறாமல் சிறப்பிலக்கணம் கூறும் உண்மைஅதிகாரத்தைச் சாரவைத்து இலக்கணவியலுள் இறுதிக்கண் கூறியதாமென்க. இன்னும் முதல்வனுக் குளவாகிய சிறப்பியல்புக் குணங்களெல்லாம் சித்துச் சத்து என்னும் இவ்விரண்டனுள் அடங்கும். அஃதறிந்தடக்கிக்கொள்க.

முதல்வனுக்குரிய சிறப்பியல்புக் குணங்களாவன:—தன் வயத்தனாதல் முதலிய எட்டுமாம். இவ்வெண் குணங்களும் சத்துச்சித்து ஆனந்தம் என்னும் மூன்றனுள் அடங்குமேனும் ஆனந்தமும் சித்தை யின்றி யில்லாமையால் எல்லாக் குணங்களும் சத்து சித்து என்னும் இரண்டனுள் அடங்கும். எவ்வாறெனின், எக்காலத்தும் ஒரு தன்மையாயிருக்கும் சத்துக்குத்தான் தன்வயமாந்தன்மை கூடும். ஆதலால் தன்வயம் சத்தில் அடங்கிற்று. தூயவுடம்பே சித்தெனப்படும். அந்தச்சித்தின் பேதமே இயற்கையா யுணர்தல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருள், முடிவிலாற்றல், வரம்பிலின்பம் என ஆறவகையாயினவாம். ஆதலால் எழு சித்தில் அடங்கும். "ஈறிலாப் பதங்கள்யாவையுங் கடந்த இன்பமே" என்னும் மணிவாசகப்பெருமான் திருவாசகத்தால் இன்பம் சித்திலடங்கு மென்பதை யறிக. இத்திருவாக்கில் கடந்த என்பது பாசஞான பசுஞானங்களைக் கடந்த சித்தென்றாகி கடந்த இன்பமே என்றதனால் சித்தாகிய இன்பமே என்றருளியவாறும்.

முதல்வன் சிவஞானத்தால் அறியப்படுவன் எனின், பசுபாசங்கள் சிவஞானத்தால் அறியப்படா திருத்தல்வேண்டும். சிவப்பிரகாசம் அ-ம் சூ-ம் -வது செய்யுளில் பதிஞானத்தால் பதியைத் தரிசித்தால் உயிராகிய தன்னையுங் காணும் என்பதனால் பசுவும், ஷை நூல் உ-ம் சூத்திரம் கஅ-வது செய்யுளில் திருவருளைக்கொண் டன்றி ஆணவமலம் உண்டென்று அறிதல் கூடாது எனவும், ஷை நூல் எ-ம்சூத்திரம் உ-வது செய்யுளில் இருவித மாயையும் இருவினையும் உயிர் அருளைக்கூடிய விடத்து ஒளியாய் நிற்கும்

எனவும் ஓதியவாற்ருல் பாசமும் சிவஞானத்தால் சிறப்பியல்புபற்றி உணர்தல் கூடுமென்பது பெறப்படுதலால், முதல்வன்போல் பசு பாசங்களும் சித்துச்சத்தாதல் கூடுமோஎனின், கூடாது; எவ்வாறெனின், சிவஞான சித்தியார் சு-ம் சூ-ம் உ-வதுசெய்யுளில் கண்ணுக்கு விளக்குத் துணையாவது போல ஆன்மாவிற்குக் கருவி துணையெனத்தெரிந்து கருவியை நீக்கி ஆன்மாவை உணர்தலும், கூ-ம் சூ-ம் உ-வது செய்யுளில் கருவிகள் தன்கீழ் அடங்கியன வென்றறிந்து அவற்றை நீக்கின விடத்துத் தன்னைப்பிரமமென்று உணர்தலும் பசுஞான மென்பது பெறப்படுதலாலும், அவ்வாறு உணரப்பட்ட பாசத்தின் இயல்பும் பசுவின் இயல்பும் பொதுவியல்பே யாதலாலும், பசுவும் பாசமும் சிறப்பியல்பு பற்றிச் சிவஞானத்தால் உணரப்படுவதோடு பொது வியல்புபற்றிப் பசுஞானத்தாலும் உணரப்படு மென்றவாருயிற்று. அன்றியும் யான் இதனையறிந்தேன் அறிகின்றிலேன் என்றவிடத்து அறிதலும் அறியாமையும் கருவிகளின் வாயிலாக நிகழ்வனவாகும்; கருவிகள்பாசமாதலால் அவைவாயிலாக நிகழும் ஞானம் பாசஞானம். இதனை என்றதனல் பாசத்தையும், அறிந்தேன் அறிகின்றிலேன் என்றதனல் பசுவையும் பொது வியல்புபற்றிப் பாசஞானத்தால் அறிதல் கூடுமென்பது பெறப்பட்டது. படவே, சிவஞானத்தால் பசுபாசங்களின் சிறப்பியல்பும் பசுஞான பாசஞானங்களால் அவற்றின் பொது வியல்பும் உணரப்படு மென்ருகிச் சிவஞான மொன்ருலன்றிப் பசுபாச ஞானங்களால் உணரப்படாத முதல்வன்போல் சித்துச்சத்தாதல் கூடாமையறிக. பசு பாசங்களின் பொதுவியல்பு சிறப்பியல்பு கஅ-பக்கத்திற் காண்க.

பொதுவியல்புபற்றிப் பசுஞான பாசஞானங்களால் பசுவும் பாசமும் உணரப்படுமாயின், அவை ஒருவாற்ருன் உணருருவெனப்பட்டு, உணருருவெனின் அசத்து என்று சூத்திரத்திற் கூறியவாறு பசுபாசங்களும் அசத்தாகாதோ எனின், ஆகாது; எதனுலெனின், உள்ளது காரியப்படும் என்று கூறும் சைவசித்தாந்தத்தில் அசத்தென்பது சத்துக்கு மறுதலையான இன்மையன்று. ஆகவே, அப்பசுபசுபாசங்கள் பசுஞான பாசஞானங்களால் அறியப்படும் பொதுவியல்புபற்றி அசத்தெனப்படுமாயினும், சிவஞானத்தால் அறியப்படும் சிறப்பியல்புபற்றி அசத்தாதல் செல்லாமையால் என்க. எனவே, சிறப்பியல்புபற்றி அவை சத்தாதற்கு இழுக்கின்மை அறிக. சத்து என்பது முக்காலத்தும் ஒரு தன்மையாயுள்ளது; அசத்து என்பது முக்காலத்தும் ஒரு தன்மையாயில்லாதது. இவ்வள்வே சத்து அசத்து என்பதற்குச் சைவசித்தாந்தத்திற் கூறப்படும் பொருள அசத்திற்குப் பொருள் இதுவே என்பதை "யான் இப்பொழுது அசத்தனுயிருக்கின்றேன்" எனக்கூறும் உலகவசனத்தாலும் அறிக.

பாசஞான பசுஞானங்களால் அறியப்படும் பசுபாசங்களும் ஒருவாற்ருன் உணருரு வெனபபடுதலால் அசத்தாகாதோ என்னுங் கேள்விக்குப்

இலக்கணவியல் ஆறுஞ்சூத்திரம்.

பொதுவியல்புபற்றி அசத்தாயினும் சிறப்பியல்புபற்றிச் சத்தாதற்கு இழுக்கில்லையென விடைகூற அறியாதார், அபாவத்தின் தன்மையாவது பாவத்திற்கு மறுதலைப்பொருள் என்னும் நையாயிகர் முதலியோர் மதம்பற்றி மயங்கிச் சைவசித்தாந்தச் சார்புடையார் போன்று எல்லாப்பொருளுஞ் சத்தென்னுஞ் சித்தாந்தத்தோடு முரணுநிருக்கும்பொருட்டு இச்சூத்திரத்தில் சத்து அசத்து எனக்கூறியதற்குப் பொருள் சித்து அசித்து எனவும், சுத்தம் அசுத்தம் எனவும் கூறி யிடர்ப்படுவர். பாவம் என்பது உண்மை. அபாவம் என்பது இன்மை. இவ்வாறு கொள்வோர் நையாயிகர். அவர் கருத்தின்படி சத்து அசத்திற்குப் பொருள்கூறின் சத்து உள்ளது அசத்து இல்லாதது என்றாகிச் சித்தாந்தத்தோடு முரணுமாதலால் சத்து அசத்து என்பதைச் சித்து அசித்து எனவும் சுத்தம் அசுத்தம் எனவும் மாற்றிக்கொண்டு சித்து அறிவுடையது அசித்து அறிவில்லாதது எனவும், சுத்தம் சுசியாயிருப்பது அசுத்தம் சுசியில்லாதிருப்பது எனவும் கூறுவர். ஒரு வாக்கியத்தைப் பிறிதொரு வாக்கியமாக மாற்றிப் பொருளுரைத்தல் பொருந்தாதாகும்.

அசத்து என்பதற்கு மேற்கூறியதே பொருளாயின் இச்சூத்திரத்தில் உணருருவெனின் அசத்து என்பதற்கு அழிபொருளாகிய அசத்தாம் என உரைத்ததன் கருத்தென்னையெனின், பசுபாசங்கள் பொதுவியல்பால் அசத்தும் சிறப்பியல்பால் சத்துமாதல்போல அன்றிக் காரியப்பிரபஞ்சம் பொதுவியல்பு சிறப்பியல்பு இரண்டானும் கண்ணால் காண்பதற்கு விடயமாய் இத்துணைப்பொழுது நிற்குமென நம்மனோரால் அறியமுடியாது நிலைபெறுவதுபோலத் தோன்றி விரைவிற் கெட்டு மறைந்துபோகுஞ் சிறப்புடையது ஆதலால், அந்தக் காரியப்பிரபஞ்சமே இச்சூத்திரத்தில் உணருரு அசத்து என்றெடுத்துக் கொள்ளப்பட்டது என்றறிக. அசத்தென்று கூறியதனாலேயே அறிவில்லாத சடமென்பதுந் தானே விளங்கும். ஆதலின் அசித்து என மாற்றவேண்டாமை யறிக.

காரியப்பிரபஞ்சம் பொதுவியல்பு சிறப்பியல்பு இரண்டானும் கண்ணாற் காண்பதற்கு விடயமாவது எவ்வாறெனின், ஒருவனை மனிதன் எனக் காணுதல் பொதுவியல்பு. பிராமணன் முதலிய சாதியைக்காணுதல் சிறப்பியல்பு. இவ்வாறே எல்லாப் பொருளிடத்துங் காண்க.

சிற்றுரை.

இதனுள், உணருருவசத்தெனி னுணராதின்மையி னென்றது ஓரதிகரணம்; இருதிறனல்லது சிவசத் தாமென இரண்டு வகையி னிசைக்குமன் னுலகேயென்றது ஓரதிகரணம். ஆக இரண் டதிகரணத்தது இச்சூத்திர மென்றுணர்க.

விளக்கம்.

வெ—டை.

முதலதிகரணம்.

சுட்டறிவினால் அறியப்படும் பொருள் அசத்தெனக்கூறும்

மேற்கோள்.

ஈண்டு அறிவினு லறியப்பட்ட சுட்டு அசத்தென்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், மேலைச் சூத்திரத்தின் அளந்தறிந் தறியா வென்றதனை உடம்படாது பிரபஞ்சம்போல முதல்வனும் அளவைகளான் அளந்தறி பொருளேயாமென நையாயிகர் முதலி யோர் கூறுங் கடாவையும், எல்லாப் பொருளுஞ் சத்தாகலின் அளந்தறி பொருளுஞ் சத்தேயாமெனச் சாங்கியர்கூறுங் கடாவை வையு மாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோடனுதலிற்று.

(இ—ள்.) சுட்டறிவினால் அறியப்பட்ட சுட்டுப்பொருளெல் லாம் அசத்து எ—று.

சுட்டு ஆகுபெயர்.

சிவஞானத்தா லறியப்படுதலை நீக்குதற்கு அறிவினாலென விசேடித்தார்.

ஈண்டு அறிவென்றது ஒன்றை முந்தி அதுவதுவாகச் சுட் டிக் காணும் அளவை அறிவினையென்பது "அறிவினாலறிந்த யாவும் அசத்தாதலறிதி" என்ற புடைநூலாசிரியர் மீள அங்ஙனந் தெரித்தோதியவாறு பற்றி யுணர்ந்துகொள்க.

விளக்கம்.

இது சூத்திரத்திலுள்ள உணருருவசத்தெனின் உணராதின்மையின் என்ற முதற்கூற்றைப் பதச்சேதஞ்செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோவெனின், ஐந்தாஞ் சூத்திரத் தில் தம்மையும் தம்மை விடயங்களிற் செலுத்தி நிற்கும் முதல்வனையும் உயிர்கள் அறியமாட்டா வென்று கூறியதனை உடம்படாது பிரபஞ்சம் அறி யப்படுவதுபோல முதல்வனும் அறியப்படும் பொருளேயாமென நையாயிகர்

முதலியோரும், அங்ஙனமாயின் பிரபஞ்சம்போல முதல்வன் அசத்தாவனோ வென்னும் ஐயம் நிகழாதவண்ணம் எல்லாப் பொருளுஞ் சத்தாதலால் சுட்டி அறியப்படும் பொருளுஞ் சத்தேயாமெனச் சாங்கியருங் கூறுவர். அவ்விருவர் கூற்றையும் ஆசங்கித்துக்கொண்டு சூத்திரத்தின் முதற்கூற்றைப் பதச்சேதஞ்செய்து சுட்டறிவினால் முதல்வன் அறியப்படான் என்பதைக் குறிப்பாக உணரவைத்து அச்சுட்டறிவினால் அறியப்பட்ட பொருள் அசத்து எனக் கூறியவாறும்.

இவ்வதிகரணத்தில் முதல்வன் சுட்டி அறியப்படும் பொருளோ சுட்டி அறியப்படாத பொருளோ என்பதும், சுட்டறிவினால் அறியப்படும் பொருள் சத்தோ அசத்தோ என்பதும் ஐயப்பாடுகள். முதல்வன் சுட்டி அறியப்படும் பொருளென்பதும், சுட்டறிவினால் அறியப்படும்பொருள் சத்தென்பதும் பிறர்பக்கம். இவ்வாறு கூறுவோர் நையாயிகரும் சாங்கியரும் என அறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) இம்முதலதிகரணத்தில் மனத்தால் கருதி அறிவதாகிய சுட்டறிவினால் அறியப்பட்ட சுட்டுப்பொருளெல்லாம் அசத்து எ-று.

சுட்டு என்பது சுட்டுப்பொருளைக் குறித்தமையால் ஆகுபெயர்

அறியப்பட்ட என்றதனாலேயே அறிவினால் அறியப்பட்ட என்பது தானே விளங்குவதாயிருக்கவும், அறிவினாலென்று விசேடித்தது எதற்காக எனின், சிவஞானத்தாலும் அறிதல் கூடுமாதலால் அதனை நீக்குதற்கு அறிவினாலென விசேடித்தார். அறிவென்றது சுட்டியறியும் அறிவைக் குறிக்கும். எதனாலெனின், சிவஞானத்தைச் சிவஞானம், பதிஞானம், பரஞானம், ஞானம், மெய்யுணர்வு, தத்துவஞானம், அநுபவஅறிவு என்று கூறுதலேயன்றி அறிவு என்று கூறுதலில்லை. கருவிகளோடு கூடியறியும் அறிவைத்தான் அறிவென்று கூறப்படும் ஆதலாலென்க. இக்கருத்துப் பற்றியே, கருவிகளில் நீங்கிநின்று மெய்ப்பொருளை அறிதலை, துறவறவியலுள் ஞானப்பகுதியில் மெய்யுணர்தலென்றும், கருவிகளோடுகூடி நின்று உலகப்பொருளை அறிதலை, பொருட்பாலுள் அரசியற்பகுதியில் அறிவுடைமையென்றும் திருக்குறளாசிரியர் வகுத்தருளியதுங் காண்க.

இவ்வாறன்றிச் சுட்டு அசத்து என்றதனால் சுட்டறிவினால் என்று பொருள்கொள்ளக் கூடாதோ எனின், கூடாது. எதனாலெனின், சிவஞானத்தால் முதல்வன் அறியப்படுங் காலத்து முதற்கண் சுட்டியறியப்பட்டுப் பின்னர்ச் சுட்டிறந்தறியப்படுவன். இதனை "உணர்ந்தார்க் குணர்வரியோன் தில்லைச்சிற்றம்பலத்தொருத்தன்" என்ற திருக்கோவையாரானும் உணர்க. ஆகவே சுட்டுப்பொருளாய் அசத்தாதல் சிவஞானத்தால் அறியப்பட்ட

தற்குங் கூடுமாதலால் அறிவு என்றதுகொண்டே சுட்டறிவென்று உரைக்க வேண்டுமென்க.

அறிவினல் என்றது மேற்கூறியவாறு ஒன்றை முந்தி அதுவதுவாகச் சுட்டிக்காணும் கருவிகளோடு கூடிய அளவையறிவினை யென்பது சிவப்பிரகாசம் ௩-ம் சூத்திரம் ௪-வது செய்யுளில் "அறிவினல் அறிந்தயாவும் அசத்தாதல் அறிதி" என்ற புடைநூலாசிரியர், அறிவினல் அறிந்த என்பதற்குப் பொருளை விளக்க எண்ணி மீள அச்செய்யுளிலேயே "அறிவுதானொன்றை முந்தியதுவதுவாகக்காணும்" என்று ஓதியவாறு பற்றியும் உணர்ந்துகொள்க.

சுட்டியறியப்படும் பொருள் அசத்தென்பதற்குக் காட்டும்

ஏது.

அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

சிற்றுரை.

ஏ—து ஏது ஏ—னின், உள்ளதென்னுமுணர்விற்கு விடயமாய் உபலத்தியைப் பயப்பிக்கும் பிரபஞ்சத்தை இல்லையென்னுமுணர்விற்கு விடயமாய் அநுபலத்தியைப் பயப்பிக்கும் இல்பொருளோடொப்ப அசத்தென்றல் அமையுமாறியாங்ஙனமெனவும், சத்தாகிய பிரபஞ்சத்தைச் சுட்டப்படுதன்மாத்திரையான் அசத்தென்றல் சற்காரியவாதத்திற் கிழுக்காம்போலுமெனவும், முறையே அவ்விருவர் மதம்பற்றிக் கூறுவாரை நோக்கிமேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) அச்சுட்டுப் பொருள்கடாம் இராசதகுண மிகுதிப்பாட்டான் உள்ளதென்னும் உணர்விற்கு விடயமாய் உபலத்தியைப் பயப்பித்துநின்றுதானே தாமதகுணமிகுதிப்பாட்டான் இல்லையென்னுமுணர்விற்கு விடயமாய் அநுபலத்தியைப் பயப்பித்து நிற்றலான் 'ஈண்டறிவினலறியப்பட்ட சுட்டு அசத்'தென மேற்கொண்டது எ—று.

ஈண்டுப் பிரகாசம் அப்பிரகாசமென்பன உபலத்தி அநுபலத்தியென்னும் பொருளவாய் அவை நிகழ்தற் கிடனுகிய பொருள் மேனின்றன.

இது நையாயிகரை நோக்கி மேற்கோளைச்சாதித்தவாறு. இனி, இதனை இரட்டுறமொழிந்துகொண்டு அவைதாங் காரியவவத்தையிற்றலயாய் விளங்கி நின்றே காட்சிப்புலனுய்ச் சடிதியின் மறை

ந்து சூக்கும்மாய்க் காரணவவத்தையின் விளங்காது நிற்கும் இவ் வேற்றுமை யுடைமையான், அங்ஙனம்புலனாகாத காரணப்பொருள் களை நோக்கிக் காரியப் பிரபஞ்சம் அசத்தாதல் சாலுமாகலின் 'ஈண் டறிவினா லறியப்பட்ட சுட்டு அசத்து'என மேற்கொண்ட தென்ற வாறு எனவும் உரைத்துக்கொள்க.

விளக்கம்.

இந்தஏது என்ன சொல்லிற்றோ வெனின், சுட்டியறியப்படும் பொரு ளாகிய பிரபஞ்சம் உள்ள தென்று உணரும் உணர்விற்கு உணரப்படும் பொருளாயிருந்து உள்ளதென்று உணரும் அறிவை உண்டுபண்ணும். அப்பி ரபஞ்சத்தை இல்லையென்னும் உணர்விற்கு விடயமாய் இல்லை யென்றுண ரும் அறிவை உண்டுபண்ணும் இல்பொருளோடு ஒப்ப அசத்தென்று மேற் கோளில் கூறியது எவ்வாறு பொருந்துமென நையாயிகர் மதம்பற்றியும், சத்தாய் உள்ள பிரபஞ்சத்தைச் சுட்டிஅறியப்படுதன்மாத்திரையால் அசத் தென்று கூறினால் உள்ளது காரியப்படும் என்னுஞ் சற்காரியவாதத்தில் பிர பஞ்சமும் சத்தேயாம் என்பதற்கு இழுக்காமெனச் சாங்கியர்மதம் பற்றியும் நிகழும் வினாவை ஆசங்கித்துக்கொண்டு முறையே அவ்விருவரையு மறுத்து மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த ஏதுவின்பொருள்.) மேற்கோளிற் கூறிய அச்சுட்டுப் பொருள்க ளாகிய பிரபஞ்சம் இராசதகுண மேம்பாட்டால் சிருட்டித் தொழிலைச் செய்யும் பிரமாவினால் சிருட்டிக்கப்பட்டபொழுது உள்ள தென்று உண ரும் உணர்விற்கு விடயமாய்க் காணப்பட்டு உள்ளதென்று உணரும் உணர் வை (உபலத்தியை) உண்டுபண்ணும்; அப்பிரபஞ்சந்தானே தாமதகுண மேம்பட்டால் அழிக்குந் தொழிலைச் செய்யும் உருத்திரனால் அழிக்கப்பட்ட பொழுது இல்லையென்று உணரும் உணர்விற்கு விடயமாய்க் காணப்படா மல் இல்லையென்று அறியும் அறிவை (அநுபலத்தியை) உண்டு பண்ணும்; ஆகவே, உள்ளதென்று உணரும் பிரபஞ்சம் இல்லை யென்று உணரவும் படு மாதலால் ஈண்டு அறிவினா லறியப்பட்ட சுட்டு அசத்து எனமேற்கோளிற் கூறியவாறும் எ-று.

பிரமா விட்டுணு உருத்திரர் என்னும் மூவரும் இராசதம் சாத்துவிகம் தாமதம் என்னும் முக்குணம் உடையவர். இவ்விடத்தில் உருத்திரர் என் றது மகாருத்திராகிய பரமசிவனையன்று; குணிருத்திரரை எனக. திருவாச கம் சென்னிப்பத்தில் "மூவராலும் அறியொணா முதலாய ஆனந்தமூர்த்தி யான்" என்று மணிவாசகப்பெருமான் அருளிச்செய்தமையாலும் மகா ருத்திரர் வேறு குணிருத்திரர் வேறு என்பது நன்கு விளங்கும். முக்குணங் களுள் சாத்துவிகம் சாந்தத்தையும், ராசதம் பிரவிருத்தியையும், தாமதம்

அறிவின் அழிவையுஞ் செய்யும். இம் முக்குணங்களுள் ஒரு குணம் மேற்பட்டபொழுது மற்றையிரண்டு குணங்களும் அடங்கியிருக்கும். ஆதலால், பிரவிருத்தியாகிய சிருட்டியைச் செய்யுங்கால் இராசதகுணம்மேற்பட்டிருத்தல்பற்றிப் பிரமாவை இராசதகுணமூர்த்தி யென்றும், சாந்தமாகிய காத்தலைச் செய்யுங்கால் சாத்துவிககுணம் மேற்பட்டிருத்தல்பற்றி விட்டுணுவைச் சாத்துவிககுணமூர்த்தி யென்றும், அழித்தலைச் செய்யுங்கால் தாமதகுணம் மேற்பட்டிருத்தல்பற்றி உருத்திரரைத் தாமதகுணமூர்த்தி யென்றும் நூல்கள் கூறும். நையாயிகருக்கு மூர்த்திபேதம் இல்லையாதலால் காணப்படும் நிலையை இராசதகுண மிகுதிப்பாட்டால் எனவும், காணப்படாத நிலையைத் தாமதகுண மிகுதிப்பாட்டால் எனவும், உரையாசிரியர் கூறியவாறென அறிக.

இந்த ஏதுவில் பிரகாசம் என்றது உண்டு என்று உணரும் உணர்வினையும், அப்பிகாசம் என்றது இல்லையென்று உணரும் உணர்வினையும் குறித்து, உண்டு இல்லை என்னும் உணர்வு தொழிற்படுதற்கு முன்னிலையாகிய விடயத்தின்மேல் நின்றன. ஆதலால் பிரகாசமாயென்பதற்கு உண்டு என்னும் உணர்விற்கு விடயமாயென்றும், அப்பிரகாசமா யென்பதற்கு இல்லை என்னும் உணர்விற்கு விடயமா யென்றும் உரை செய்யப்பட்டது.

ஏதுவிற்குக் கூறிய இந்த உரை உள்பொருளாகிய பிரபஞ்சத்தை இல்பொருளோடொப்ப அசத்தென்றல் எவ்வாறு பொருந்தும் என்னும் முதற் சங்கைக்குரிய நையாயிகரை நோக்கிச் சமாதானங்கூறி மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

இனி உள்ளதாகிய பிரபஞ்சத்தைச் சுட்டப்படுதல் மாத்திரையால் அசத்தென்றல் பொருந்ாதென்னும் சாங்கியர் கூறும் இரண்டாவது சங்கைக்கு இந்த ஏதுவை இரட்டுறமொழிந்துகொண்டு கூறும் பொருள் வருமாறு:—

அச்சுட்டுப் பொருள்கள் தாம் காரியப்பொருளாய் விளங்கும் அவத்தையில் தூலமாய் விளங்கி நின்றே காணப்படும் பொருளாயிருந்து, அவ்வாறே என்றும் இராமல் சடுதியில் மறைந்து சூக்குமமாய்க் காரணப்பொருளாய் விளங்கும் அவத்தையில் விளங்காதாகும். இவ்வாறு விளங்குதல் விளங்காமை ஆகிய வேற்றுமை உடைமையால் காரண அவத்தையில் சுட்டப்படாமை நோக்கிக் காரிய அவத்தையில் சுட்டப்படும் பிரபஞ்சம் அசத்தாதல் கூடும்; ஆதலின், ஈண்டு அறிவினு லறியப்பட்ட சுட்டு அசத்து என மேற்கோள் கூறியதாக. உரைத்துக் கொள்க.

இந்த இரண்டாவது உரைக்குப் பிரகாசம என்பதற்கு விளக்கமும் அப்பிரகாசம் என்பதற்கு விளக்கம் இல்லாமையும் பொருளாம்.

காரிய அவத்தை காரண அவத்தைகள் எதுபோலவெனின், கடம் தோன்றும் அவத்தை காரியஅவத்தை; கடம்தோன்றாமல் மண்ணில் ஒடுங்கி

மண்மாத்திரம் தோன்றும் அவத்தை காரண அவத்தை. இவ்வாறே பிரபஞ்சம்தோன்றும் அவத்தை காரிய அவத்தை; பிரபஞ்சம் தோன்ருமல் மாயையிலொடுங்கி மாயை மாத்திரம் தோன்றும் அவத்தை காரண அவத்தை. காரியம் சுட்டப்படுவதாய் நிலையில்லாத அசத்தாகும். காரணம் சுட்டப்படாததாய் நிலையுடைய சத்தாகும். காரணத்தையின்றிக் காரியம் இல்லாமையால் எல்லாப்பொருளும் சத்தென்று சைவசித்தாந்தம் கூறும்; இவ்வளவேயன்றிக் காரியப் பொருள்கள் அசத் தென்பதைச் சைவசித்தாந்தம் மறுக்காது.

இந்த எது பிரபஞ்சம் அழியப்படுதல் பற்றி அசத்தாகு மாதலால் அதுபோல முதல்வன் சுட்டியறியப்படான் என நையாயிகரையும், காரணத்தில் சுட்டி யறியப்படாமையும், காரியத்தில் சுட்டியறியப்படுதலுமாகிய வேற்றுமைபற்றிச் சுட்டறிவினல் அறியப்பட்ட பொருள் அசத்தெனச் சாங்கியரையும் மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

சுட்டியறியப்படும் பொருள்கள் அசத்தென நையாயிகருக்குக் காட்டும்
உதாரணம்.

அசத்தறியாய் கேணீ யறிவறிந்த வெல்லா
மசத்தாகு மெய்கண்டா ணுயின்—

சிற்றுரை.

எ—து உ—ம எ—னின், ஒருசாரன அங்ஙனமாயினும் உபலத்திப் பட்டனவெல்லாம் அவ்வாறு அசத்தாமென்றற்குப் பிரமாணமென்னை என்னு நையாயிகரைநோக்கி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

(இ—ள்.) அசத்து அறியாய் நீ கேள்—அசத்தினியல்பை யறியாத மடவோனே (யாமிறுக்கு மிறையை) நீ (மனம்பற்றிக்) கேட்பாயாக,—மெய் கண்டான் ஆயின் அறிவுஅறிந்த எல்லாம் அசத்து ஆகும்—சத்தினியல்பை அறிந்தோன் ஆராய்ந்தாஞயின் அறிவினலறியப்பட்டன வெல்லாம் அசத்தேயாம் எ-று.

அறியாய் என்பது விளியுருபேற்ற பெயர்.

அசத்தினியல்பை அறிந்தாயாயின் இவ்வாறு பிணங்குவாயல்லை யென்பார் அசத்தறியாய் என்றும், "எந்தை தாட்பால்வணங்கித் தலைநின்று கேட்க" என்பார் கேணீ என்றும், உபலத் திக்கு விடயமானவை எல்லாம் அநுபத்திக்கு விடயமாதல் ஒருதலையென்

பார் அறிவறிந்த வெல்லாம் அசத்தாகு மென்றும், சத்தினியல் புணர்ந்தார்க் கன்றி அசத்தினியல் புணர வாராதென்பார் மெய்கண்டானென்றும், ஆய்தற் கருமை நோக்கி ஆயினென்றுங் கூறினர்.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) அசத்து அறியாய் நீ கேள் மெய்கண்டான் ஆயின் அறிவு அறிந்த எல்லாம் அசத்து ஆகும்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோ வெனின், சுட்டுப் பொருள்களுள் சில பொருள்கள் மேற் கூறியவாறு அசத்தாயினும் உள்ளதெனக் காணப்படும் பொருள்களெல்லாம் அவ்வாறு அசத்தா மென்று கூறுதற்குப் பிரமாணம் என்னை என்பர் நையாயிகர். அவரை நோக்கிச் சுட்டுப் பொருள்கள்யாவும் அசத்தே எனக்கூறி அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலால் என்னும் ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) அசத்தினியல்பு இது வென்று அறியும் அறிவில்லாதவனே! யாம்கூறும் சமாதானத்தை நீ மனம்பற்றிக் கேட்பாயாக. சத்தினியல்பை அறிந்தோன் ஆராய்ந்தானாயின் சுட்டறிவினாலறியப்பட்டன வெல்லாம் அசத்தேயாம் எ-று.

அசத்தறியாய் என்றதில் அறியாய் என்றது அறியாதவனே என அழைக்கப்படும் வினையாலணையும் பெயராய் நின்றமையால் விளியுருபேற்ற பெயர். ஆய் என்பது விளியுருபு.

இச் செய்யுளிலுள்ள பதசாரம் வருமாறு:—அசத்தின் இயல்பை அறிந்தாயாயின் சுட்டியறியப்படும் பொருள்களுள் சிலபொருள்கள் அழியும் சில பொருள்கள் அழியாவென்று பிணங்கமாட்டாய்; அசத்தினியல்பை அறியாமையினாற்றான் இவ்வாறு பிணங்குகின்றாயென்பதை உணர்த்த வேண்டி அசத்தறியாய் என்றும், அவ்வுண்மையை அறிய விரும்புகின்றவன் திருஞானசம்பந்த சுவாமிகள் "ஆட்பா லவற் கருளும்" என்ற திருப்பாசுரத்தில் அருளியவண்ணம் எந்தையாகிய சிவபெருமான் திருவருளே தாரகமாக நின்று அறியவேண்டும் என்பதை உணர்த்தவேண்டிக் கேள் நீ என்றும், அவ்வாறு அறியின் உள்ளதென்று உணரும் உணர்விற்கு விடயமானவை யெல்லாம் இல்லையென்று உணரும் உணர்விற்கு விடயமாகும்; ஆதலால் காணப்படுவன வெல்லாம் அழிதல் துணிபெனக் கூறவேண்டி அறிவறிந்தவெல்லாம் அசத்தாகும் என்றும், சத்தினியல்பு உணர்ந்தவர்க்குத்தான் அசத்தின் இயல்பு உணரமுடியும் சத்தின் இயல்பு உணராதார்க்கு அசத்தின் இயல்பு உணரமுடியாதெனக் கூறவேண்டி மெய்கண்டான் என்றும், சத்தின் அசத்தின் இயல்பு ஆராய்தல் அருமையெனக் கூற வேண்டி ஆயின் என்றுங் கூறியவாறு காண்க.

சுட்டியறியப்படும் பொருள்கள் அசத்தெனச் சாங்கியருக்குக் காட்டும் உதாரணம்.

—அசத்தலாய்

நீரி லெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு
மோரினவை யின்றுமா றேப்பு.

சிற்றுரை.

எ—து உ-ம் எ—னின், இரட்டுற மொழிந்து கொண்டு சாங்கியனை நோக்கி உரைத்தபொருளை வலியுறுத்துதனுதலிற்று.

(இ—ள்.) அசத்து அலாய்—அசற்காரிய வாதியல்லாத அறிவுடையோனே,—அவை இன்று ஆம் ஆறு ஒப்பு ஓரின்—அங்ஙனம் தோன்றிமறைவனவாய பிரபஞ்சம் அசத்தாமாற்றிற்கு உவமையாராயின்,—நிகழ் நீரிலெழுத்தும் கனவும் பேய்த்தேரும்—நிகழா நின்ற நீர்மேலெழுத்தும் கனவிற் காட்சியும் பேய்த்தேருமாம் எ—று.

எனவே, அப்போதுள்ளனவாய நீர்மேலெழுத்து முதலியனவற்றை அங்ஙனே சடுதியின் மறைந்துபோதற் சிறப்புப்பற்றி அசத்தெனல் எல்லார்க்கும் ஒப்பமுடிந்தமையின், அவ்வியல்புடைய பிரபஞ்சத்தையும் அவைபோல் அசத்தென்றல் அமையுமென்றவாறுயிற்று.

அசற்காரிய வாதியை அசத்தென் றுபசரித்தார்.

நீரிலெழுத்து முதலியன பொய்யென்பாரை மறுத்தற்கு நிகழென்றடை கொடுத்தார். அஃது யாண்டுஞ் சென்றியையும்.

குவ்வுருபு விகாரத்தாற் றொக்கது.

இன்றென்னும் ஒருமை அப்பண்பின்மே னின்றது.

நீரிலெழுத்துத் தோன்றிய பொழுதே மறைந்து போதற்கும், கனாப்பொருள் முடிவு பெறுதலின்றி இடையே மறைந்து போதற்கும், அருஞ்சுரத்தின் முதுவேனிலின் நண்பகற் கடுமை பற்றித் தோற்றி ஞாயிற்றின்கிரணம் முகிற்படலத்தின் மறைந்த வழித் தானுமறைந்து போவதாகிய பேய்த்தேர் ஒருகாரணங் காட்டி மறைந்து போதற்கும் உவமையாயின. இவ்வெண்பாவை 'இலயித்த தன்னில்' என்பதுபோல இங்ஙனம் இருதொடராக வைத்துரைத்து மேற்கோளே தூக்களையும் இரட்டுற மொழிந்துகொண்டு

இரண்டதிகரணப் பொருள் கோடல் ஆசிரியர் கருத்தென்பது, வழிநூலாசிரியர் "அசத்தாஞ் சுட்டி உணர்பொரு ளான வெல்லாம்" எ-ம், "உலகினை யசத்து மென்பர்" எ-ம், வேறு கூறிய வாற்றானுமுணர்க. இஃதறியாது இவ்வெண்பாவை ஒருதொடராக வைத்துரைப்பார்க்கு அசத்தறியாய் அசத்தலாய் என்றதனால் ஒருபயன் படாமையும், ஆயின் ஓரின் என்று இருகாற் கூறுதலும் அசத்தாகும் இன்றுமென்று இருகாற் கூறுதலும் கூறியது கூற லென்னும் வழுவாதலுமறிக.

இனி, ஒருவாற்றானு முணரப்படாத பொருள் சூனியமென்பது எல்லாச் சமயத்தார்க்கும் ஒப்ப முடிந்தமையின் ஆண்டதிகரணத்திற்குரிய ஐயப்பாடு முதலியன நிகழாமையான் அதனை வேறெடுத் துரைத்து மேற்கொள்ள வேண்டா வாயினும், மந்தவுணர்வுடையார்க்கு அதன்கண் ஐயநிகழாமைப் பொருட்டு வழிநூலாசிரியர் "உணராத பொருள் சத்தென்னி லொருபய னில்லை போலும்" என விடுத்தொழிந்தா ரென்றுணர்க.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) அசத்து அலாய் அவை இன்றும் ஆறு ஒப்பு ஓரின் நிகழ் நீரிலெழுத்தும் கனவும் பேய்த்தேரும்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ வெனின், ஈண்டு அறிவினலறியப்பட்ட சுட்டு அசத்து என்னும் மேற்கோளையும், அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய்நிற்றலால் என்னும் ஏதுவையும் இரட்டுறமொழிந்து கொண்டு எல்லாப்பொருளும் சத்தென்னும்சாங்கியரை நோக்கிக்காரியப் பிரபஞ்சம் அசத்தென்று உரைத்தபொருளை வலியுறுத்திய வாறும்.

(பொ-ரை.) அசற்காரிய வாதியல்லாத சற்காரிய வாதியாகிய அறிவுடையோனே! எதுவில் இரண்டாவது பொருளாய்க் கூறியபடி தோன்றி மறைவதாய பிரபஞ்சம் அசத்தாம் என்பதற்கு உவமை ஆராயுமிடத்தில், நிகழாநின்ற நீர்மே லெழுத்தும் கனவிற் கண்டதும் கானல்நீருமாம் எ-று.

அசத்தென்பதற்கு இவை உவமையென்று கூறியதனால் நீரின்கண் எழுதும் போதும், கனக்காணும் போதும், கானலுள்ளபோதும் உள்ளன வாய, எழுத்து முதலியனவற்றை அப்பொழுதே சடுதியில் மறைந்துபோகும் உண்மைபற்றி அசத்தென்றல் எல்லார்க்கும் ஒப்பமுடிந்தமையால், அவ்வாறு சடுதியில் மறைந்துபோகும் இயல்புடைய பிரபஞ்சத்தையும் அவ்வுவமைப் பொருள்கள்போல அசத்தென்றல் கூடுமென்றவா றாயிற்று.

அசற்காரியவாதி யல்லாதாய் என்று கூறவேண்டியதை அசத்தலாய் என்று உபசரித்தார்.

நீரிலெழுத்துக் கனுக்காட்சி கானல் நீர் ஆகிய இவை பொய் யென் பாரை மறுத்தற்கு நிகழ் என்னும் அடைகொடுத்து நிகழ்கனவு என்றார். நிகழ் என்னும் அந்த அடை, கானல் நீரினும் சென்று பொருந்தும். ஆதலால் நிகழ் நீரிலெழுத்து, நிகழ்கனவின் காட்சி, நிகழ் கானல் நீர் என உரைத்துக் கொள்க.

இன்றாம் ஆறு என்பதில் குவ்வுருபு தொகை. அதனை விரித்து அசத் தாமாற்றிற்கு என உரைசெய்யப்பட்டது. அவையென்னும் பன்மை இன்று என்னும் ஒருமைகொண்டு முடியாது. இன்று என்னும் ஒருமை இன்மைப் பண்பாகிய அசத்தின்மேல் நின்றது. ஆதலால் அவை இன்றாம் என்பதற்கு பிரபஞ்சம் அசத்தாமென உரைசெய்யப்பட்டது.

பிரபஞ்சம் அசத்தென்பதற்கு மூன்று உவமை கூறியதன் கருத்தென் னையெனின், நீரின்கண் எழுதும் எழுத்து எழுதும்போதே அழிதல்போல பிரபஞ்சம் தோன்றும் பொழுதே மறைந்துபோகு மென்பதற்கு உவமையா யிற்று. நிலைத்திருப்பினும் கனுவின்கண் காண்பவை விழித்தலினாலே அல்லது சுழுத்தி வருதலினாலே முடிவு பெறுதலின்றி இடையே மறைந்து போதல்போல, பிரபஞ்சம் என்றும் நிலைத் திருத்தல் போலத் தோன்றி இடையே மறைந்து போகுமென்பதற்கு உவமையாயிற்று. இடையே மறைதலும் ஒருகாரணங் காட்டி மறையும் என்பதற்குக் கானல் நீர் உவமை யாயிற்று. எவ்வாறெனின், கொடுமையான பாலைநிலத்தில் முதுவேனிற் காலமாகிய சித்திரை வைகாசிமாதங்களில் நடுப்பகலில் கிரணத்தின் கடுமை யினால் கானல் தோன்றும்; அந்த நடுப்பகலிலேயே சூரியகிரணம் மேகக் கூட்டத்துள் மறைந்தவிடத்து அந்தக்கானலும் மறைந்துபோகும்; மேகத் துள் மறைந்த காரணத்தால் கானல் மறைந்துபோதல்போல, பிரபஞ்சமும் நோய் முதலிய யாதானுமொரு காரணங்காட்டி மறையும் என்க. ஆதலால் மூன்று உவமைகள் கூறப்பட்டன.

இவ்வெண்பாவை இந்நூல் முதற்சூத்திரத்து " இலயித்த தன்னில் " என்னும் வெண்பாவைப்போல் இரு தொடராகவைத்து மேற்கோள் ஏதுக் களையும் இரட்டுறமொழிந்துகொண்டு நையாயிகர் சாங்கியர்என்னும் இருவ ரையும் மறுக்கும் இரண்டதிகரணப் பொருள் கொள்ளுதலே நூலாசிரியர் கருத்தாம். இதுவே ஆசிரியர் கருத்தென்பதை வழிநூலாசிரியர் சிவஞான சித்தியார் ௬-ம் சூ-ம் ௨-வது செய்யுளில் " சுட்டி யுணர்பொரு ளானவெல் லாம் அசத்தாம் " எனவும், ௩-வது செய்யுளில் "உலகினையசத்துமென் பர்" எனவும் கூறிச் சுட்டி உணரப்படுவன வெல்லாம் அசத்து என்று நையாயிகரையும், உலகம் நிலைபேறின்றி அழிதலால் அசத்து எனச் சாங்கி யரையும் மறுத்தவாற்றானும் அறிக

இவ்வுண்மை அறியாமல் இவ்வெண்பாவை ஒரு தொடராக வைத்து உரைத்தால் அசத்தறியா யென்று அழைத்துவிட்டு அசத்தலாய் என்று பின்னர்க் கூறியதால் ஒரு பயனுமில்லை. இரு தொடராக வைத்தால் அசத்தறியாய் என்றது அசற்காரிய வாதியையும், அசத்தலாய் என்றது அசற்காரிய வாதியல்லாதானையுங் குறிக்கும். அன்றியும், முதலாவது தொடரில் ஆயின் என்றும் இரண்டாவது தொடரில் ஓரின் என்றும் ஒரேபொருளைத்தரும் சொல்லைக்கூறி யிருத்தலாலும், அவ்வாறே முதற்றொடரில் அசத்தாகு மென்றும் இரண்டாவது தொடரில் இன்றாகு மென்றும் கூறியிருத்தலாலும், இவ்வாறு இருகாற் கூறுதல் கூறியதுகூறல் என்னுங் குற்றமாகும்; இரு தொடராக உரைக்கின் அக்குற்றமில்லை.

இதுவரையும் உணருருவெனின் அசத்து என்பதற்குரிய அதிகரணப பொருள் கூறப்பட்டது.

இனி உணராதெனின் இன்மை என்பதன் பொருள் ஒருவாற்றானும் உணரப்படாதபொருள் சூனியம் என்பதேயாம். அது எல்லாச் சமயத்தார்க்குஞ் சம்மதமாதலால் அதுபற்றிய ஆசங்கையில்லை. ஆசங்கை யின்மையால் பிறர் கூறும் பக்ஷமும் மறுத்துரைக்குஞ் சித்தாந்தமுமில்லை. ஆதலால் இந் நூலில் உணராதெனின்; இன்மை என்றதனை வேறு ஓரதிகரணமாக வைத்தேனும், அல்லது இந்த அதிகரணத்திற் புகுத்தியேனும் உரைக்கவில்லை. ஆயினும் மந்த உணர்வுடையார்க்கு உணராதபொருள் சூனியமோ அன்றோ வென்னும் ஐயம் நிகழுமாகலின் அவர்க்கு அவ்வையம் நிகழா திருத்தற் பொருட்டு வழிநூலாசிரியர் சிவஞானசித்தியார் சூ-ம் சூ-ம் சு-வது செய்யுளில் "உணராத பொருள் சத்தென்னில் ஒருபயனில்லைபோலும்" என விடைகூறி முடித்தாரென்றுணர்க.

முதலதிகரணம் முற்றிற்று.

இரண்டாம் அதிகரணம்.

முதல்வன்இயல்பு வாக்கு மனதீத கோசரமெனக் கூறும்

மேற்கோள்.

இனி இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்குமனதீதகோசரமாய் நின்றவதுவே சத்தாயுள்ள சிவமேன்றுணரற் பாற்று.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின்; மேல் உணர் பொருளியல்பும் உணராத பொருளியல்புங் கூறுமுகத்தான் அசத்தி னியல்பை வரை

செய துணர்த்தியவழி இரண்டும் இவ்வாருகலான் இவற்றின் வேருய முதல்வனநியல்பாவது மாயாவாதி கூறும் அநிர்வசனம் போலு மென்னுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் பிற் கூற் றைக் கண்ணழித் துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ—ள். வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ—ள்.) இவ்விரண்டு தன்மையு மின்றி—உணருருவாந் தன் மையும் உணராதாந் தன்மையுமின்றி,—வாக்கு—பாசஞானத்திற் கும்,—மனம்—பசுஞானத்திற்கும்,— அதீதம்—அவ் விரண்டன் விருத்திகளைக் கடந்து அதீதமாய் நின்று,—கோசரமாய்—ஒற்று மைப்பட்டு நின்றுணரும் அநுபவஞான மாத்திரைக்கே விளங்கிக் கோசரிப்பதாய்,—நின்ற—நிற்கின்ற,—அதுவே—அவ்வாறு நிற்கின்ற பொருள் இதுவென அளவைகளானறிய வாராமைபற்றி அதுவே யென மகாவாக்கியத்தாற் கூறப்படும் பதிப்பொருளே,—சத்தா யுள்ள சிவமென்று—சத்தாகிய சிவமாமென்று,—உணரற் பாற்று— உணரும்பான்மை யுடைத்து எ-று.

சிற்றுரை.

வாக்கெனப்படு நாதமுடிவான பாசஞானத்தை வாக்கென் றும், அவற்றின் வேருய பசுஞானத்தை மனமென்றும் உபசார வழக்காற் கூறினர்.

வாக்கு மனுதீத கோசரமாய் நின்றவென்றது அவ்விரண்டின் விருத்திகளைக் கடந்துஅதீதமாயும், ஒற்றுமைப்பட்டு நின்றுணரும் அநுபவ ஞானமாத்திரைக்கே விளங்கிக் கோசரிப்பதாயும் நின்ற வென்றவாறு.

அவ்வாறு நின்றபொருள் இதுவென அளவைகளான் அறிய வாராமைபற்றி அதுவேயென மகாவாக்கியத்திற் கூறியதனை அநு வதித்துச் சத்தாகிய சிவமாதலைச் செவியறிவுறுத்தார்.

வாக்குமனுதீதம்என்றது தமிழ்நூல் முடிபு: மரம் அடி மராடி என மரீஇயினுற்போல, மனம் அதீதம் மனுதீதமென மரீஇயிற்று அதீத கோசரமென்பது வடநூல் முடிபு.

வாக்குமனாதீதப் பொருளாகலின் உணருருவாந் தன்மையும், கோசரப் பொருளாகலின் உணராதாந் தன்மையும் இல்லை யென்பது பெறப்படுதலின் இவ்விரண்டுதன்மையுமின்றி என்றார். உணரற்பாற்று என்றார் உணர்தல் அருமைநோக்கி.

விளக்கம்.

இது சூத்திரத்திலுள்ள இருதிறனல்லது சிவசத்தாமென இரண்டுவகையின் இசைக்குமன்னுலகே என்னும் இரண்டாங் கூற்றைப் பதச்சேதஞ் செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோ வெனின், முதலதிகரணத்தால் உணரப்படும் பொருளினியல்பு அசத்தெனவும், உணரப்படாதபொருளினியல்பு சூனியமெனவுங் கூறு முறையில் அசத்தினியல்பு இது வென வரையறுத்து உணர்த்தினமையின், உணரப்படும்பொருளும் உணரப்படாத பொருளும் ஆகிய இரண்டும் முறையே அசத்தும் சூனியமுமாதலால் அவ்விரண்டின் வேறாகிய முதல்வனதியல்பு உணரப்படு மென்றாவது உணரப்படாதென்றாவது உறுதியாய்ச் சொல்லக்கூடாத அநிர்வசனம்போலும் என்பர் மாயாவாதிகள். அவர் கூற்றை யாசங்கித்துக்கொண்டு சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைப் பதச்சேதஞ் செய்து முதல்வன் சிவஞானத்தாலறியப்படும் சித்துச் சத்தாவன் எனக்கூறியவாறும்.

இவ்வதிகரணத்தில் முதல்வன் இயல்பு உறுதியாய்ச் சொல்லப்படுவதோ உறுதியாய்ச் சொல்லப்படாத அநிருவசனமோ என்பது ஐயப்பாடு. அநிருவசனம் என்பது பிறர்பக்கம் என அறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) உணரப்படும் பொருள் போல் அசத்தாந் தன்மையும், உணரப்படாதபொருள்போல் சூனியமாந் தன்மையுமின்றி முதல்வனின் வேறாய் நின்றுணரும் பாசஞானத்திற்கும் பசு ஞானத்திற்கும் எட்டாததாய், அவ்விரண்டு ஞானங்களின் விருத்தியைக் கடந்துநின்று முதல்வனோ டொற்றுமைப்பட்டு நின்றுணரும் அநுபவஞான மாத்திரைக்கே எட்டுவதாய் நிற்கின்ற அம்முதற் பொருள் இது வென்று பிரமாணங்களினலறியப் படாமைபற்றி அதுவேயென மகாவாக்கியத்தாற் கூறப்படும். அப்பதிப் பொருள் சத்தாகிய சிவமே என்று உணருந் தன்மையுடையது எ—று.

பாசஞான பசுஞானங் களுக்கு எட்டாததாய்ப் பதிஞானத்திற்கு எட்டுவதாய் உள்ளபதிப் பொருள் அநிர்வசனமன்று சிவமே என்பதாம்.

அதுவே என்பதிலுள்ள ஏகாரத்தைச் சிவம் என்பதனோடுகூட்டி அது சிவமேயென உரைக்கப்பட்டது.

இலக்கணவியல் ஆறாஞ்சூத்திரம். ௨-ம் அதி.

வாக்கு என்பது நாதத்தையும் அது உபலக்கணத்தால் பிருதிவி முதலிய ஏனைய தத்துவங்களையுங் குறிக்கும். தத்துவங்களின் வாயிலாக ஆன்மாவிற்கு நிகழும் ஞானம் பாசஞானம் எனப்படும். ஆதலால் வாக்கு என்பதற்குப் பாசஞானமென உரைசெய்யப்பட்டது. பிருதிவிமுதல்நாதம்வரையுள்ளன வெல்லாம் பாசஞானம் என்பதைச் சிவஞான சித்தியார் ௯-ம் சூ-ம் ௨-வது செய்யுளில் "நாதமுடிவான வெல்லாம் பாசஞானம்" என வழிநூலாசிரியர் அருளுமாற்றானும் அறிக.

இனி மனமென்பது தத்துவங்களுள் ஒன்றாயினும் ஆன்மாவிற்குநெருங்கிய துணையாய் அரசனுக்கு மந்திரியைப்போல விளங்கும். யாதானுமொன்றைப்பற்றி நின்றறியும் ஆன்மா தத்துவங்களை நீக்கினவிடத்துப் பதியைச் சாராமல் தத்துவங்களைக் கடந்து நிற்றலால் நானே முதல்வன் என உணரும். உணரும் காலத்து உணர்வதற்குக்கருவியாய் நிற்பது மனமேயாம். ஆயினும் மனம் கருவியாகக் காணப்படாமல் சூக்குமமாய் அடங்கி ஆன்மாவாகவே நிற்கும். அந்நிலையும் ஒருகணப் பொழுதில் மாறிவிடும். மாறும்பொழுது எல்லாத்தத்துவங்களுடனுங் கூடும். மனமும் ஆன்மாவும் வேற்றுமை யின்றி நிற்குமென்பதைச் சித்தியார் ௪-ம் சூ-ம் ௨௮-வது செய்யுளில் "சிந்தையைச் சீவனென்றும் சீவனைச்சிந்தை யென்றும்" கூறுமாற்றானறிக. ஆகவே மனதைக் கருவியாகக் கொண்டு யானே முதல்வனென உணர்தல் பசுஞானம் ஆதலால் மனம் என்பதற்குப் பசுஞானமென உரைசெய்யப்பட்டது. தத்துவங்களைக் கடந்து நிற்றலால் தன்னை முதல்வனென ஆன்மா உணரு மென்பதையும் அவ்வாறு உணர்தல் பசுஞானம் என்பதையும் "இவைகீழ் நாடலாலே காதலினால் நான்பிரமம் என்னும்ஞானம் கருதுபசுஞானம்" எனச் சித்தியார் ௯-ம் சூ-ம் ௨-வது செய்யுளிற் கூறிய வாற்றானறிக.

இவ்வாறு தத்துவங்களெல்லாவற்றையுங் குறிப்பதற்குத் தலைமை பற்றி வாக்கு என்றும், சீவனைக் குறிப்பதற்கு ஒற்றுமைபற்றி மனமென்றும் உபசார வழக்காற் கூறினார்.

வாக்கு மனாதீத கோசரமாய் என்றதில் அதீதம் எட்டாமையினையும் கோசரம் எட்டுதலையுங் குறித்து முன்னோடு பின் முரணாதோ எனின், முரணாது. எதனாலெனின், வாக்கு மனம் என்னும் இரண்டன் விருத்திகளைக் கடந்து என்பதற்கு வாக்கு மனாதீதஎன்றும், அவ்விரண்டின் வேறாய் ஒற்றுமைப்பட்டு நின்றுணரும் அநுபவஞான மாத்திரைக்கே விளங்கி எட்டும் என்பதற்குக் கோசர மென்றும் கூறியதனாலென்க.

அவ்வாறு பாசஞான பசுஞானங்களுக்கு எட்டாததாயும் பதிஞானத்திற்கு எட்டுவதாயும் நின்ற பொருள் இது வெனப் பிரத்தியட்சம் அனுமானம் ஆகமம் என்னும் பிரமாணங்களினால் அறிய முடியாதாகும். அறியப்

படுவதொன்றை இது வெனச் சுட்டிக்கூறலும் அறியப்படாத தொன்றை அதுவெனச் சுட்டிக் கூறலும் உலகவழக்கு. இதுவெனச் சுட்டுங்கால் பொருள் சிறப்புவகையாய் விளங்கும். அது வெனச் சுட்டுங்கால் பொருள் பாகுபாடு தோன்றுமல் பொதுவகையாய் விளங்கும். அவ்வாறு பாசஞான பசுஞானங்களால் அறியப்படாமையினல் இல் பொருளின்றி உள்பொரு ளாயினும் பதிஞானத்தாலன்றிச் சிறப்பாக அறியப்படாமையின் அப்பதிப் பொருளை அது எனப் பொதுப்பட மகாவாக்கியங் கூறும். அம்மகாவாக்கி யத்தை அநுவதித்து, அதுவென்று பொதுவாகக் கூறியபொருள் சத்தாகிய சிவமே என்று சிறப்பாக உணர்ந்துகொள்ளும் வண்ணம் அதுவே சிவம் என ஆ:றி வுறுத்தினர்.

வாக்குமனுதீதம் என்றது தமிழ்நூல்முடிபு, வடநூல் முடிபாயின் வாங்மனேதீதம் என்றிருத்தல் வேண்டும். தமிழ்நூலின்படி மரம் அடிஎன்பது மராடி எனமரிஇயினற்போல மனம்அதீதம் என்பது மனுதீதமென மருவி கின்றது.

அதீதகோசர மென்பது வடநூல் முடிபு. தமிழ்நூல் முடிபாயின் அதீ தக்கோசரம் என்றிருத்தல் வேண்டும்.

வாக்கு மனுதீதப் பொருளாதலின் உணரப்படும் பொருளாதலில்லை; கோசரப் பொருளாதலின் உணரப்படாத பொருளாதலில்லை; ஆதலால் இவ் விரண்டு வகையும் இன்றி என்றுகூறினர்.

இச்சிவப்பொருள் சொல்லளவையின் அறியவாரா தென்பதும்; உணர் வால் அறிதலும் அருமை யென்பதும் உணர்த்தவேண்டிச் சொல்லற் பாற் றென்றும் உணர்க என்றுங் கூருது உணரற்பாற்றென்முர்.

முதல்வன் இயல்பு வாச்கு மனுதீத கோசரம் என்பதற்குக் காட்டும்

ஏ து.

பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவே தின்மையானும் அப்பிரகாசத்தினுக்குப் பிரகாசமின்மையானும்.

சிற்றுரை.

எ—து ஏது எ—னின், இவ்விரண்டு வகையும் இல்லாதபொருள் அநிர் வசனமாய் நிற்பதென்னுது வாக்குமனுதீத கோசரமாய்நிற்ப தென்றற்குப் பிரமாண மென்னை யென்பாரை நோக்கி மேற்கோ ளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) வாக்கு மனங்களாலோதி யுணரப்படுவதாய நிருவச னப் பொருட்கு முன்னர்க் கூறப்படும் சாதனங்களினின்று அறி யற் பாலதாக வேண்டாமையானும் ஒருவாற்றானும் அறியப்படாத

இலக்கணவியல் ஆறுஞ்சூத்திரம் உ-ம் அதி.

அநிர்வசனப் பொருட்குச் சாதனத்தினின்றும் அறியப்படுமாறின்மையானும் 'இனி இவ் விரண்டுதன்மையு மின்றி வாக்கு மனாதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமென் றுணரற்பாற்' றென மேற்கொண்டது எ-று.

பிரகாசம் அப்பிரகாச மென்பன உபசாரவழக்கு.

விளக்கம்.

இந்த எது என்ன சொல்லிற்றோவெனின், உணரப்படுதலும் உணரப்படாமையும் ஆகிய இவ்விரண்டு வகையும் இல்லாதபொருள் உறுதியாய் இத்தன்மையுடையது என்று சொல்லக்கூடாத அநிருவசனமாய் நிற்பது என்று கூறாமல் வாக்குமனாதீத கோசரமாய் நிற்பது என்று மேற்கோளிற் கூறியதற்குப் பிரமாணம் என்னையென்பர் அம்மாயாவாதிகள். அவரை நோக்கிப் பிரமாணம் கூறி மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த எதுவின் பொருள்.) உறுதியாய் இத்தன்மையுடையதென்று வாக்கால் ஓதப்படுவதாயும் மனத்தால் உணரப்படுவதாயுமுள்ள பொருளுக்கு முன்னர்ச் சாதன இயலிற் கூறப்படும் சாதனங்களைக்கொண்டு அறியப்படுதல் வேண்டாம். இத்தன்மைத்தென்று அறியப்படாத பொருள் உறுதியாய்ச் சொல்லக்கூடாத அநிர்வசனப் பொருளாதலால் அப்பொருளுக்குச் சாதன இயலிற் கூறப்படுஞ் சாதனத்தைக்கொண்டு அறியப்படுந் தன்மையில்லை. ஆதலால் 'இனி இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்குமனாதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவம் என்று உணரற்பாற்'றென மேற்கோள் கூறியது எ-று.

கண்ட பொருளுக்குச் சாதனத்தாற் காட்டவேண்டுவது இன்மையானும், காணப்படாத பொருள் சாதனத்தாற் காணப்படுமாறு இன்மையானும், காணப்படுதல் காணப்படாமையாகிய இவ்விரண்டு தன்மையு மின்றி நின்ற அது சத்தாயுள்ள சிவமே என்று உணரற்பாற்று என்பதாம்.

விளங்கித்தோன்றும் பொருளைப் பிரகாசம் எனவும், விளங்கித்தோன்றாத சூனியத்தை அப்பிரகாசம் எனவும் உபசார வழக்காற் கூறினர்.

இந்த எது முதல்வன் இயல்பு அநிருவசனம் என்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

முதல்வன் சிவஞானத்திற்குக் கோசரப்படும் பொருள் என்பதற்குக் காட்டும் உதாரணம்.

எண்ணிய சத்தன் றசத்தன்று மென்றலென்
கண்ணி யுளதென்றன் மெய்கண்டா—னெண்ணி
யறிய விரண்டா மசத்தாதல் சத்தா
மறிவறியா மெய்சிவன்றா ளாம்.

சிற்றுரை.

எ—து ஊ-ம் எ-னின், பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் அவிச்சைவயத்தான் ஞாதாவெனவும் ஞேயமெனவும் பகுக்கப் பட்டு முன்னர்க் கூறப்படுஞ் சாதனங்களினின் றறியவும்படும். அவிச்சை நீங்கியவழி அப்பகுப்பின்மையாற் சத்தென்றுதல் அசத்தென்றுதல் ஒருவாற்றானும் ஞேயமாமாறின்றிக் கேவல ஞானமாத்திரையேயாய் நிற்பதொன்றாகலான் அது கோசரமா மென்றல் பொருந்ாதென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்.) எண்ணிய சத்து அன்று அசத்து அன்று என்றால் உளது என்றல் என் கண்ணி—(பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் விவகாரத்திற்) கருதப்பட்ட சத்து மன்று அசத்து மன்றென்னின், அங்ஙனம் ஒரு பொருள் உண்டென்றல் யாது பிரமாணங் கருதியோ (அதனைக் கூறுவாயாக. பிரமாணமுண்டெனின் அதற்கு அது பிரமேய மெனப்பட்டு ஞேயமாவான் செல்லுமென றஞ்சிப் பிரமாணமில்லை யென்பையாயின்),—மெய்கண்டான் எண்ணி அறிய இரண்டு அசத்து ஆம்—சத்தினியல்பை யுணர்ந்தோன் ஆராய்ந்தறியிற் (காட்சி முதலிய பிரமாணங்கட்கு விடயமாவதூஉம் ஒருவாற்றானும் பிரமாணமல்லாத சூனியமுமாகிய) இரண்டும் (மேற்கூறியவாற்றான்) அசத்தேயாம்,—ஆதல் சத்து ஆம் அறிவு அறியாமெய் சிவன் தாள் ஆம்—ஆதலாற் (சாந்தோக்கிய முதலியவற்றுட்) சத்தென்றோதப்படும் சுட்டறிவினாலறியப் படாத மெய்ப்பொருள் (சைவ உபநிடதங்களினுஞ் சைவாகமங்களினும் அந்நியமின்றி நின்றுணரும் அநுபவமாத்திரையிற் கோசரிப்பதென்றோதப்படும்) சிவனருளாவதன்றி நீ கூறுஞ் சூனிய மன்று எ-று.

ஆம் அசை.

அறிய வென்னும் செயவெனெச்சம், "மழைபெய்யக் குள நிறையும்" என்புழிப்போலச் செய்யின் என்னும் எச்சப்பொருட் டாய் நின்றது.

முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

அசத்தாமென மாறுக.

சத்தாகிய மெய்யென வியையும். "அடியளந்தான்றாஅயது" என்றாற்போல அறிவறியா மெய்யென்றது வாளா பெயராய் நின்றது.

சிவன்றாளெனச் சிவசத்தியின்மேல் வைத்து உயர்த்துக் கூறி யது உபசாரவழக்கு "இறைவனூர் கமலபாதம்" என்பதுமது.

இதனாற்போந்த பொருள் சத்துமன்றி அசத்துமன்றி ஒரு பொருள் உண்டெனின் அதற்குப் பிரமாணமென்னை? பிரமாணா தீதமாகிய சூனியமெனிற் சூனியமும் அழி பொருளுமாகிய இரண் டும் அசத்தேயென்பது மேற்காட்டினமையாற் பிரமப்பொருள் அசத்தெனப்பட்டுச் சத்தென்னுஞ் சுருதிகளோடு முரணுமாக லின் அவற்றுட் சத்தென்றோதப்படும் பரப்பிரமப்பொருளாவது உண்மை ஞானத்திற் கோசரிப்பதென யாங்கூறுஞ் சிவமேயன்றி நீ கூறுஞ் சூனியமன்றென மாயாவாதியை மறுத்துக் கோசர மென்றதனை வலியுறுத்தியவாறு மெனக.

எண்ணியறிய விரண்டாம் அசத்தென்பதற்குப் பிறரெல்லாம் வருகின்ற வெண்பாவிற் கூறும் பொருள்படக் கூறியதுகூறலாதல் மேலும் ஒரியை பின்றியுரைப்ப.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) எண்ணிய சத்து அன்று அசத்து அன்று என் றால் உளது என்றல் என்கண்ணி மெய்கண்டான் எண்ணிஅறிய இரண்டு அசத்து ஆம் ஆதல் சத்துஆம் அறிவு அறியாமெய் சிவன்தாள்ஆம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் அஞ்ஞானத்தோடு கூடியதால் அறிபவனாகிய சீவ னெனவும் அறியப்படுவதாகிய பிரமப்பொருளெனவும் பகுக்கப்படும். பகுக் கப்பட்ட அப்பொருள்களுள் சீவனாகிய பொருள், முன்னர் ஏழாம் சூத்திரம் முதல் மூன்று சூத்திரங்களினாற் கூறப்படும் சாதனங்களினின்று சாதித்துப்

பிரமப்பொருளை யறியவுங்கூடும், அறியுங்கால் அஞ்ஞானம் நீங்க, பிரமம் சீவன் என்ற பகுப்பு நீங்கிவிடும். அப்பகுப்பில்லாமையினால் அந்நிலையில் பிரமப்பொருள் சத்தென்றாவது அசத்தென்றாவது ஒருவாற்றானும் அறியப் படுமாறின்றி அநிருவசனமாய்த் தனித்தஞானமாத்திரையேயாய்நிற்கும்.ஆத லால் சாதனங்களினாலறியப்படுதல் கொண்டு பிரமப்பொருள் கோசரமா மென எதுவிற் கூறியது பொருந்தாதென்பர் அம்மாயாவாதிகள். அவரை நோக்கி மறுத்துப் பிரமப்பொருள் கோசரமாமென்பதனை வலியுறுத்திய வாறும்.

(பொ-ரை.) விவகாரத்திற்றான் சத்து அசத்து எனத்தோன்றுவன அன்றி முத்திநிலையில் பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் சத்தும் அன்று அசத்தும் அன்று எனின், அவ்விரண்டுமின்றிய ஒரு பொருள் உண்டென்று கூறுதல் எந்தப் பிரமாணத்தைக்கொண்டு என வினவுமிடத்து, பிரமாணம் உண்டென்று கூறின் அந்தப் பிரமாணத்தினால் அளக்கப்படும் பொருளாய் அறியப்படுவதாகும். படவே, அசத்தென்று கூறவரும். அதற்கு அஞ்சிச் சத்தும் அன்று அசத்தும் அன்று என்பதற்குப் பிரமாணம் இல்லையென்று கூறுவையாயின், பிரமாணங்களாலறியப்படாதது சூனியமாய் அசத்தே யாகும். இவ்வாறு பிரத்தியட்ச முதலிய பிரமாணங்களால் அறியப்படுவ தும் பிரமாணங்களாலறியப்படாததுமாகிய இரண்டும் மேலையதிகரணத்திற் கூறியவாற்றான் உண்மையின் இயல்பை உணர்ந்தவன் ஆராய்ந்தறியுமிடத்து அசத்தேயாம். ஆதலால் சாந்தோக்கிய முதலிய உபநிடதங்களுள் சத் தென்று கூறப்படுவதாயும், சுட்டறிவாகிய பிரமாணங்களினாலறியப்படாத தாயும் உள்ள மெய்ப்பொருள், சைவ உபநிடதங்களினும் சைவாகமங்களி னும் அந்நியமின்றி நின்றுணரும் அநுபவஞானத்திற்கு எட்டுவதென்று கூறப்படும் சிவனருளாவதேயன்றி நீ கூறுஞ் சூனியமன்று எ-று.

(க—ரை.) ஒருவாற்றானும் அறியப்படாத பொருள் உண்டென்றல் பொருந்தாது. ஆதலின், பிரமப்பொருள் அநுபவஅறிவிற்கு அறியப்படும் என்பதாம்.

அசத்தன்றாம் என்பதிலுள்ள ஆம் அசை.

அறியவென்பது செய என்னும் வாய்பாட்டு எச்சம். "மழைபெய் யக் குளம் நிறையும்" என்றவிடத்து பெய்ய என்பது பெய்யின் என்பதைக் குறித்து நின்றாற்போல அறிய என்பது செய்யின் என்னும் வாய்பாட்டு எச்சமாய் அறியின் என்பதைக் குறித்து நின்றது. அறியின் என்னும் எச் சம் அசத்தாம் என்பது கொண்டு முடிந்தது.

இரண்டு என்பதில் முற்றும்மை விகாரத்தாற் றொக்குநின்றது. அத னைவிரித்து இரண்டும் என உரைசெய்யப்பட்டது.

இரண்டாமசத்து என்பதில் உள்ள ஆம் அசத்து என்பதை அசத்தாம் எனமாறுக.

சத்தாம் அறிவறியா மெய்யென்பதில் மெய்யென்பது சத்தாம் என்பத ஞேடு கூடிச் சத்தாம் அறிவறியா மெய்யெனப் பொருந்தும். சத்தும் மெய் யும் ஒரு பொருட்சொல்லாதலால் கூறியது கூறலாகாதோவெனின், ஆகா து. எதனுலெனின், மெய் என்பது பொருளை உணர்த்தி நிற்றலான் என்க.

அறிவறியா மெய்யென்பது திருக்குறள் மடியின்மை கO-வது பாட் டில் அடியளந்தான் என்பது போல வாளா பெயராய் நின்றது. அதாவது அடியளந்தான் என்பது விட்டுணு என்னும் பெயராக நின்றதே யன்றி அடியினுல் அளந்த என்னுந் தொழிலை யுணர்த்தி நிற்கவில்லை. தொழிலை யுணர்த்தி நின்றதாயின் அக்குறளிலேயே தாயது எனப் பின்னர்க் கூற வேண்டாம். அவ்வாறே அறிவறியாமெய் யென்பது மெய்ப்பொருளை உண ர்த்தும் பெயராய் நின்றதேயன்றிச் சுட்டறி விஞலறியப் பட்டாமையை உணர்த்தி நிற்கவில்லை. எதனுலெனின், இரண்டும் அசத்தாம் என மேலே கூறியது கொண்டே மெய்ப்பொருள் சுட்டறிவிஞலறியப்படாமையைக் கூறிவிட்டபடியால் மீண்டுங் கூறில் கூறியதுகூறலென்னுங் குற்றமாகு மாதலால் என்க.

சிவன் அருளைச் சிவன்தாளெனக் கூறினர். அருளைத் தாள் என்றது உபசாரம். சிவஞானசித்தியார் பாயிரத்தில் "இறைவனர் கமலபாதம்" என்ற தும் இறைவனர் திருவருள் என்பதுபற்றிய உபசாரம்.

இவ்வெண்பாவினுற் கூறி முடித்த பொருள், பிரமப்பொருள் சத்து மன்று அசத்துமன்று என்று கூறின் அவ்வாறு ஒருபொருள் உண்டென்ப தற்குப் பிரமாணம் யாதென வினவுமிடத்து, பிரமாணத்தால் அளக்கப்ப டாத சூனியமே என்றுகூறின், சூனியமும் அழிகின்ற பொருளுமாகிய இரண்டும் அசத்தே யென்பது முதலதிகரணத்தாற் சாதித்தமையால், பிர மப் பொருள் அசத்தென்ருகிச் சத்தென்னும் சுருதிகளோடு முரணும். ஆத லால் சுருதிகளில் சத்தென்று ஓதப்படும் பரப்பிரமப்பொருள் சிவஞானமா கிய உண்மை ஞானத்திற்கு எட்டப்படுமென யாம் கூறும் சிவமேயன்றி நீ கூறுஞ் சூனியமன்றென மாயாவாதியை மறுத்துக் கோசரம் என மேற்கோ ளிற் கூறியதனை வலியுறுத்திய வாறும்.

எண்ணியறிய இரண்டு அசத்தாம் என்பதில் இரண்டு என்பதற்குப் பிறரெல்லாம் அடுத்துவரும் வெண்பாவிற் கூறும்பொருள்பட வேறு என்று கூறுவர். அவ்வாறு கூறின் அறியில் வேறு என இரண்டிடத்தும் கூறுவ தால் கூறியதுகூறலென்னும் குற்றமாதலோடு, பிரமாணம் இல்லையாயி னென்பதனேடு அறியின் வேறு என்பது பொருந்தாமையும் அறிக.

முதல்வன் வாக்குமனாதீதப் பொருள் என்பதற்குக் காட்டும் உதாரணம்.

உணர்ப வசத்தாத லொன்றுணரா தொன்றை
யுணருநீ தானுணரா யாயி—னுணருமுனிற்
றுனிரண்டா மெய்கண்டான் றன்னா லுணர்தலாற்
றுனிரண்டாய்க் காணான் றமி.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், பிரகாசித்த பொருளையும் வேறோராற் றான் அறிதுமென வேட்கை சென்றுழி அவ்வாற்றாற் புதுவதாய்ப் பிரகாசிக்க வேண்டுதலிற் பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவதில்லை யென்றல் யாண்டுஞ் செல்லாமையின் வாக்கு மனாதீதமென்றல் பொருந்தா தென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ—ள்.) உணர்ப அசத்து—நின்னாலறிவனவாய கருவிகளெல்லாம் மேற் கூறியவாற்றான் அசத்தாம், (அசத்தெனவே அசித்தாதலும் பெறப்படும்),—ஆதல் ஒன்று ஒன்றை உணராது — ஆகலான் அவற்றுள் ஒரு கருவியும் ஒன்றாகிய முதற்பொருளை அறியமாட்டாது,—உணரும் நீதான் உணராய்—அவற்றானறிந்து வருகின்ற நீதானும் அதனையறியமாட்டாய்,—ஆயின்—நீயேஆய்ந் தறிவாயாயின்,—உணரும் உனின் இரண்டு ஆம் — (அவ்வா றுணரப்படும் பொருள்கள்போல்) உணர்கின்ற நின்னின் வேறாம்,—மெய்கண்டான் தன்னால் உணர்தலால் இரண்டாய்க் காணான் தமி—உயிர்க்கு அறிவு விளங்கும் உண்மை அறிந்தோன் தன்னறிவு அச்சிவனருளின் அடங்கி அதுவாய் நின்று அதனானே அதனையறியு மாதலான் ஏனைப் பொருள்களை அறியுமாறுபோல வேறாய் நின்றறிவானல்லன் அத்தனி முதற்பொருளை எ—று.

உணர்பவென்பது அகரவீற்றஃறிணைப் பன்மைப் பெயர்ச்சொல்.

ஒன்றுமென்னும் முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

உனினென்னும் இன்னுருபு நீக்கப்பொருட்கண் வந்தது. ஒற்றிரட்டாமை புறநடையாற் கொள்க.

தான் அசை.

இதனாற் போந்தது சத்தாகிய சிவம் பாசஞானத்தா னாதல் பசுஞானத்தா னாதல் அறியப்படாது, அறியப்படிற் குடமுதலா யினபோல உயிரின்வேறாய் அவிச்சையான்வருஞ் சுகதுக்கங்களைப் பயப்பதன்றி அவிச்சையி னீங்கிய நிரதிசயவின்பத்தினைப் பய வாதாகலான் அவ்வுண்மை உணர்ந்தோன் ஏனையபோல அசத்தாத லின்றித் தனியாய் நின்ற அம் முதற்பொருளை அதனோடொற்றித்து நின்றே காண்பனென நையாயிகர் முதலியோரை மறுத்து வாக்கு மனாதீதமாய் நின்றேகோசரமாமென வலியுறுத்தியவாறுமென்க.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றேவெனின், முன் பிரத்தியட்சத் தால் அறிந்தபொருளையும் பின் அநுமானத்தால் அறியவேண்டுமென விருப் பம் நிகழ்ந்த விடத்து அவ்வழியாலும் புதிதாய் அப்பொருள் அறியப்படும். இதனை தருக்கசங்கிரக உரை அனுமானப் பிரமாணத்தில் "பெறுதியுள்ள வழியும் அனுமிப்பேன் என்னும் வேட்கையான் அனுமிதியுணர்வு நிகழக் காண்டலின்" என்பதனானும் அறிக. ஆதலால் அறிந்த பொருளை அறிய வேண்டுவதில்லை யென்னும் பொருள்பட ஏதுவில் பிரகாசத்தினுக்குப் பிர காசிக்க வேண்டுவதில்லையெனக் கூறியது எவ்விடத்துஞ் செல்லாமையால் மேற்கோளில் வாக்குமனா தீதமென்று கூறியது பொருந்தாதென்பர் நையா யிகர். அவரை நோக்கி மறுத்து வாக்கு மனாதீத மென்றதனை வலியுறுத்திய வாறும்.

(பொ-ரை.) நின்னுடைய ஏவலால் விடயங்களை அறிவனவாய கருவிக ளெல்லாம் நான்காஞ்சூத்திரத்திற் கூறியவாறு அசத்தாம். அசத்தென்றதனா லேயே அறிவில்லாதவை என்பதும் பெறப்படும். ஆதலால் அவற்றுள் ஒரு கருவியும் ஒன்றாகிய முதற் பொருளை அறியமாட்டாது. அக்கருவிகளால் விடயங்களை அறிந்து வருகின்ற நீதானும் அம்முதற்பொருளை அறியமாட் டாய். நீயே ஆய்ந்து அறிவையாயின் கருவிகளால் அறியப்படும் பொருள் அறிகின்ற உனக்கு வேறாதல்போல, முதற்பொருளும் உனக்குவேறாம். பொருளின்றன்மையால் முதல்வன் வேறு உயிர்வேறு ஆயினும் முதல்வன் உயிர்க்குயிராய் நின்று அறிவிப்பனாதலால் உயிர்க்கு அறிவுவிளங்கும் உண் மையை அறிந்தோன் தன்னறிவு அச்சிவனருளிலடங்கி அவ்வருளாய் நின்று அவ்வருளினாலே அச்சிவத்தை அறிவன். ஆதலால் ஏனைய பொருள்களை வேறாய் நின்று அறியுமாறுபோல அத்தனி முதற்பொருளை வேறாய் நின்று அறியமாட்டான் எ-று.

(க-ரை.) வாக்கினாலும் மனத்தினாலும் அறியப்படும்பொருள் அசத் தாதலால் முதற்பொருள் அவ்விரண்டிற்கும் அதீதமாய் நின்றே அதனரு ளால் அறியப்படும் என்பதாம்.

உணர்ப என்றது கூறுப காட்டுப என்றாற்போல உணர்வர் என்னும் உயர்திணைப் பன்மையைக் குறித்து நிற்கவில்லை. உணர்வனஎன்னும் அஃ

றிணைப் பன்மையைக் குறித்துநின்றது. உணர்ப என்றதன் இறுதியில் பகர ஒற்றின்மேல் அகரம் ஏறி நின்றமையால் உணர்ப என்பது அகரத்தைஇறுதியாக உடையஅஃறிணைப் பன்மைப் பெயர்ச்சொல்லாயிற்று. இதுசென்ற என்பது சென்றன என்பதைக் குறித்தல் போலாம்.

ஒன்றுணராது என்றதில் எஞ்சாப் பொருளைக் குறிக்கும் முற்றும்மை விகாரத்தாற் றொக்குநின்றது. அந்தஉம்மைவிரித்து ஒருகருவியும் உணராது என உரைசெய்யப்பட்டது.

உணரும் உனின் என்றதிலுள்ள இன்னுருபு உன் என்பதை நீக்குதலால் நீக்கப்பொருட்கண் வந்தது. உன்னின் என்று னகரவொற்று இரட்டிக்காமை விதியல்லவாயினும் புற நடையாற் கொள்க. விதிக்குப் புறமாய் நடத்தலினாலும் விதிக்குப்புறமாய் அடுத்தலினாலும் புறநடை எனப் பட்டது.

உணரும் உனின் என்பதன் பின்னுள்ள தான் என்பதும் உணர்தலால் என்பதின் பின்னுள்ள தான் என்பதும் அசை.

இவ்வுதாரணத்தாற் கூறிமுடித்த பொருள். அறிந்த பொருளைப் பின்னர் வேறு வழியாய் அறிதலுங் கூடுமாதலால் பாசஞானத்தினாலும் பசுஞானத்தினாலும் அறிந்த முதற் பொருளையே பின்னர்ச் சாதன இயலிற் கூறிய படி பதிஞானத்தாலறியுமல்லது வேறில்லை. ஆதலால், பாசஞான பசுஞானங்கட்கு எட்டாதது என்றல் பொருந்தாது என்ற நையாயிகரை மறுத்துச் சத்தாகிய சிவம் பாசஞானத்தினாலாவது பசுஞானத்தினாலாவது அறியப்படாது; அறியப்படின் அவ்விரண்டு ஞானங்களினாலறியப்படும் குடம் முதலாயின உயிரின் வேறாதல்போல முதற் பொருளும் உயிரின் வேறும்; வேறுமவ்வ அஞ்ஞானத்தாலுண்டாகும் சுகதுக்கங்களை உண்டு பண்ணுவதன்றி அஞ்ஞானத்தினின்றும் நீங்கிய நிலைத்த அற்புத இன்பத்தை உண்டு பண்ணாது. ஆதலால் அவ்வுண்மை உணர்ந்தோன் ஒன்றையொன்று பற்றி நிற்கும் ஏனை உலகப்பொருள்கள்போல அசத்தாதலின்றி ஒன்றையும் பற்றாது தனியாய்நின்ற அம்முதற்பொருளைப் பதிஞானத்தால் அப்பொருளோடு கலந்து நின்று காண்பன் எனக்கூறி வாக்குமனாதீதமாய் நின்றே பதிஞானத்திற்குக் கோசரமாம் என்பதனை வலியுறுத்தியவாறும்.

முதல்வன் பாவனைக்கு எட்டப்படான் என்பதற்குக் காட்டும்
உதாரணம்.

பாவகமேற் றானசத்தாம் பாவனா தீதமேனிற்
பாவகமா மன்றேன்னிற் பாழதுவாம்—பாவகத்தைப்
பாவித்த றானென்னிற் பாவகமாந் தன்னருளாற்
பாவிப் பதுபரமில் பாழ்.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், தானே கோசரமானலன்றித் தன்ன லறிதல் கூடாமையிற் றன்னலே தன்னையுணருமென்பது தன்னைப் பற்றுதலென்னும் வழுவாமாதலின் அவ்வாறன்றி வாக்கு மன தீதப்பொருள் யோகநூலிற் கூறும் தியானபாவனைகளிற் கோ சரமா மென்றலே அமைவுடைத்தென யோகமதம்பற்றிக் கூறு வாரை நோக்கித் தன்னலன்றிக் கோசர மாகாமையை வலியுறுத் துதனுதலிற்று.

(இ-ள்.) பாவகமேல் தான் அசத்து ஆம்—(நீ கூறும் பாவனை ஏனைப்பாவகங்கள்போல மனமுதலியவற்றோடு கூடி நின்று பாவிக் கும்) பாவகமெனின், (அறிவினலறியப்பட்ட சுட்டாதலான்) அப்பொருள் அசத்தாம்,—பாவநாதீதமெனின் பாவகம் ஆம்— கருவிகளை நீங்கி நின்று பாவிப்பதாகலின் அப்பாவனையைக் கடந்த தெனிற் கருவிகணீங்கியவழி ஒன்றுமறியுமாறின்றிக் கேவலமா மாகலான் அது பாவகமாத்திரையேயன்றிப் பயன்படுமாறில்லை,— அன்று என்னின் அது பாழ் ஆம்—இவ்விருதிறனுமன்றி அநிரு வசனமாகப் பாவிக்கப்படுவதெனின் அது சூனியப்பொருளாம்,— பாவகத்தைப் பாவித்தல் என்னின் பாவகம் ஆம்—அவ்வாறன்றிப் பாவனைக் கெய்தாத பொருளை எய்தியதாக வைத்துப் பாவகஞ் செய்தலெனின்அதுபோலிப்பாவனை(யாதலாற்பாவநாதீதம்போலப் பாவனை மாத்திரையேயன்றிப் பயன்படுமாறில்லை. அற்றேல், ஒரு வாற்றானும் பாவனைக் கெய்தாத பொருள் பாழாமெனின்),—தன் அருளால்பாவிப்பது பரம்—(அப்பாவகங்களை யொழித்துத்)தனது திருவருளாற் பாவிக்கப்படுவதாம் பரம்பொருள்,—பாழ் இல்— (ஆகலான் நீ கூறும் பாவனைக் கெய்தாமைபற்றிப்) பாழாதலில்லை எ-று.

தான் அசை.

பாவகத்தைப் பாவித்தலென்பது "கறைமிட றணியலும் அணிந்தன்று" என்றதுபோலக் கொள்க.

மேலை வெண்பாவில் தன்னென்றது தனது சத்தியே யாத லால் தன்னைப் பற்றுதலென்னுங் குற்றமாதல் யாண்டையதென விடுப்பார் தன்னருளாற் பாவிப்பதென்றார். தன்னருளை யறியு மாறும் அதனாற் பாவிக்குமாறும் ஒன்பதாஞ் சூத்திரத்துட் கூறப் படும்.

யோக நூலார் கூறும் பாவனையாவது இந்நான்கனுள் ஒன்றாகற்பாலதன்றி வேறின்மையின் நான்கினையுங்கூறி மறுத்தார்.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றேவெனின், மேலை வெண்பாவில் தன்னாலுணர்தலால் என்றதனால் முதல்வன்தன்னால் தான் அறியப்பட்டாலன்றி உயிர் தான் அம்முதல்வனை அறிதல்கூடாமையால் தன்னாலேதனையுணருமென்னும் அக்கூற்றுத் தன்னைப்பற்றுதலென்னுங் குற்றத்திற்கிடனும். ஆதலால் அவனாலே அவனை யுணருமென்பதின்றிப் பாசஞான பசுஞானங்களுக்கு எட்டாத முதற்பொருள் யோகநூலிற் கூறும் தியான பாவனைகளுக்கு எட்டுமென்று கூறுதலே பொருத்தமென்று யோகமதம் பற்றிப் பாதஞ்சலர் கூறுவர். அவரை நோக்கி மறுத்து முதல்வன் தன்னாலன்றி எட்டான் என மேலை வெண்பாவிற் கூறியதை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) தியானபாவனை யென்று நீ கூறும் பாவனை உலகப் பொருள்களைப் பாவிக்கும் ஏனைப்பாவகங்கள்போல மனமுதலிய கருவிகளோடு கூடிநின்று பாவிக்கும் பாவகமெனின், அக்கருவிகளாலறியும் அறிவு சுட்டறிவும் அச்சுட்டறிவினாலறியப்பட்ட பொருள் சுட்டுப்பொருளுமாதலான் அப்பாவனையாலறியும் பொருள் அசத்தாம். அப்பாவனை கருவிகளை நீங்கி நின்று பாவிப்பதாதலின் கருவிகளோடு கூடிச்செய்யும் பாவனையைக் கடந்ததென்று சொல்லில், கருவிகள் நீங்கியவிடத்து ஒன்றும் அறியுமாறின்றித் துரியாதீதமாகிய கேவல அவத்தையுண்டாமாதலால் பாவிப்பதென்ற அது பாவகமாத்திரையே யன்றிப் பயன்படுமாறில்லை. கருவிகளோடு கூடுதல் கூடாமையாகிய இவ்விரு திறனுமின்றி வரையறுத்துச் சொல்லக்கூடாத விதமாய்ப் பாவிக்கப்படுவதெனின், அவ்வாறு பாவிக்கப்படுவது சூனியபொருளாம். அவ்வாறாயின் பாவனைக்கெய்தாத பொருளை எய்தியதாகவைத்துப பாவகம் செய்தலெனின், அவ்வாறு பாவிப்பது போலிப்பாவனை யாதலால் பாவனாதீதம்போலப் பாவனை மாத்திரையேயன்றிப் பயன்படுமாறில்லை. இவ்விடத்துக்கூறிய நான்கு உபாயங்களினாலும் முதற்பொருள் பாவிக்கப்படாதது என்றதனால் ஒருவாற்றானும் பாவனைக்கெய்தாதது பாழாகுமென்று கூறின், மேற்கூறிய பாவகங்களை யொழித்து முதல்வனது திருவருளால் அம் முதற்பொருள் பாவிக்கப்படுவதாகுமாதலால் நீ கூறியபாவனைக் கெட்டாமைபற்றி முதற்பொருள் பாழாதலில்லை எ-று.

(க-ரை.) முதற்பொருள் கருவிகளோடு கூடிச்செய்யும் பாவனைக்கு அதீதமாய்த் திருவருளாற் பாவிக்கப்படுவது ஆதலால் பாழாதலில்லை என்பதாம்.

பாவித்தல் தான் என்பதிலுள்ள தான் என்பது அசை.

இலக்கணவியல் ஆறுஞ்சூத்திரம். ௨-ம் அதி.

பாவகத்தைப் பாவித்தல் என்பதில் பாவகமென்பதும் பாவித்தல் என்பதும் ஒரு பொருட் சொற்களே ஆயினும் பாவகம் என்பது பாவித்தலையும், பாவித்தலென்பது அப்பாவித்தலைச் செய்தலையுங் குறித்து நின்றது. எது போல எனின், புறநானூறு என்னும் நூலில் கடவுள் வாழ்த்தில் "கறை மிடறணியலும் அணிந்தன்று" என்றவிடத்து அணியலும் என்பது அழகு செய்தலையும் என்பதையும் அணிந்தன்று என்பது செய்தது என்பதையுங் குறித்து நின்றவாறுபோலாம். ஆகலால், பாவகத்தைப் பாவித்தல் என்பதற்குப் பாவகஞ்செய்தல் என உரை செய்யப்பட்டது.

மேலை வெண்பாவில் தன்னாலுணர்தலால் என்று கூறியதால் தன்னைப் பற்றுதலென்னுங் குற்றமாகாதா எனக் கேட்டதற்கு அவ்வெண்பாவில் தன் என்பதற்குத் தனது சத்தி என்பதே பொருளாய் அவனருளால் அவனையறிதலென்பது கருத்தாதலால் தன்னைப் பற்றுதலென்னுங் குற்றமில்லையென்று விடை கூறவேண்டி இவ்வெண்பாவில் தன்னருளால் பாவிப்பதென்றார்.

அவனருளால் பாவிப்பதற்கு அவனருளை யறியவேண்டும். அவனருளை யறியுமாறும் அவ்வருளால் முதல்வனைப் பாவிக்குமாறும் ஒன்பதாம் சூத்திரத்து முதலதிகரணத்துட் கூறப்படுமாதலால் அவ்விடத்துக் காண்க.

பாவனை நான்கு வகைப்படும். அவையாவன:—கருவிகளோடு கூடி நின்று பாவித்தல், கருவிகளை நீங்கி நின்று பாவித்தல், இவ்விருதிறனுமின்றிப் பாவித்தல், எட்டாதபொருளை எட்டியதாகப் பாவித்தல் என்பனவாம். யோகநூலார் கூறும்பாவனை இந்நான்கனுள் ஒன்றாகற்பாலதன்றி வேறல்லாமையால் இவ்வெண்பாவில் அந் நான்குபாவனையுங்கூறி மறுத்தார். இவ்வெண்பாப்பொருளையே சித்தியார் ௬-ம் சூ-ம் ௭-வது செய்யுளில் வழிநூலாசிரியரும், சிவப்பிரகாசம் ௪0-ம் சூ-ம் ௭-வது செய்யுளில் புடைநூலாசிரியரும் அருளிச்செய்தனர்.

முதல்வன் அவனருளாலன்றிக் காணப்படான் என்பதற்குக் காட்டும்

உதாரணம்.

அறிய விரண்டல்ல னுங்கறிவு தன்னு
லறியப் படானறிவி னுள்ளா—னறிவுக்குக்
காட்டாகி நின்றானைக் கண்ணறியா மெய்யென்னக்
காட்டா தறிவறிந்து கண்டு.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின். மேற் கூறிப்போந்த பாவனைகட் கெய்தாத பொருளைத் தன்னருளாற் பாவித்தல் வேண்டாம் உயிர்பசுத்

ணவம் நீங்கிய காலத்துச் சிவனைப்போல முற்றுமுணர்தல் முதலிய எண்குணங்களு முடையதென்று ஆகமங்களுட் கூறுதலின் ஆண்டான்மஞானம் சிவஞானத்தோ டொப்பதன்றிப் பசுஞானம் எனப் படாமையான் அவ்வறிவான் அறியப்படும் கோசரப் பொருளென் றலை அமைவுடைத் தென்னுஞ் சிவசமவாதிகளை நோக்கித்தன்னருளாலன்றிக் கோசரமாகாமையை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) அறிய இரண்டு அல்லன்—(சிவாகமங்களின் அத்துவிதங் கூறுதலின் உயிர்) தன்னறிவானறிதற்குத் தன்னின்வேறல்லனாகலானும்,—அறிவின் உள்ளான் அந்த அறிவுதன்னால் அறியப் படான்—(சமமாதலின்றித் தூல சூக்கும முறையாற்)றன் னறிவுக் குள்ளுமாய் நிற்றலின் அவ்விடத்துத் தன்னறிவினாலறிய வாரானாகலானும்,—அறிவுக்குக் காட்டு ஆகி நின்றானை—தன்னறிவுக்கு வியஞ்சகமாய் நின்றறிவிக்கும் உயிர்க்கு முயிராய முதல்வனை,—அறிவுகண்டு அறிந்து காட்டாது—ஆன்மஞானமானது தான் கண் டறிந்து (தன்குணியாகிய உயிர்க்குக் கோசரமாமாறு) காட்டமாட் டாது,—மெய்யறியாக் கண்என்ன—(தன்னின் வேறின்றித் தனக்கு லிற்றலிற் றன்னாற் காணப்படாது தனக்குக் காட்டாகி நின்ற) உயிரை அறியமாட்டாத கண்ணொளிபோல் எ-று.

காட்டு முதனிலைத் தொழிற்பெயர்.

அறிவுக்குக் காட்டாகி நின்றானென்னும் பெயரடையானும் ஓரேதுக் கூறியவாறு.

கண்டறிதல் "குளிந்தாழ்ந்தகண்" என்றாற்போல ஒருபொருட்பன்மொழியாய்ச் சிறப்பின்கண் வந்தது. மெய்யறியாக் கண் என்ன என இயைத்துரைக்க. கண் முதலியவற்றை நோக்கி உயிர் சத்துச் சித்தாமென்றவதனை மெய்யென்றார். கண் ஆகுபெயர்.

கண்ணறியா மெய்யென்பதற்குக் கண்ணையறியாத உடம்பு போலென்று உரைப்பாருமுளர். உடம்பிற்கு அறியுந்தன்மை யின்மையானும், உடம்பிற்குக் கண் காட்டாதலும் இன்மையானும் அஃதீண் டுவமையாதற் கேலாமையின் அது போலியுரை யென் றொழிக.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) அறிய இரண்டு அல்லன் அறிவினுள்ளான் ஆங்கு அறிவு தன்னால் அறியப்படான் அறிவுக்குக் காட்டு ஆகி நின்றானை அறிவு கண்டு அறிந்து காட்டாது மெய்யறியாக் கண் என்ன.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், உயிர் பசுத்துவமாகிய ஆணவமலத்தில் நின்றும் நீங்கியகாலத்துச் சிவனை யடைதலால் சிவனைப் போல முற்றுணர்தல்முதலிய எண்குணங்களும் உடையதென ஆகமங்களுட் கூறப்படுதலின், ஆணவமலம் நீங்கிய அவ்விடத்து ஆன்மஞானம் சிவஞானத் தோடொப்பதன்றிப் பசுஞான மெனப்படாமையால், முதற்பொருள் அந்த ஆன்மஞானத்தாலறியப்படும் கோசரப் பொருளென்றலே பொருத்தமன்றி அவனருளாற் பாவிக்கப்படுவதென மேலை வெண்பாவிற் கூறியது பொருந் தாதென்பர் சிவசமவாதிகள். அவரை நோக்கிமறுத்து அவனருளாலன்றி அம்முதல்வன் அறியப்படானென மேற்கூறியதை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) சிவாகமங்களில் உயிரும் முதல்வனும் அத்துவிதம் என்று கூறுதலால் உயிர் தன்னறிவால் முதல்வனை யறிதற்கு முதல்வன் உயிரின் வேறல்லன். அத்துவிதமாய்க் கலந்திருத்தலால் உயிரும் முதல்வனும் சம மோஎனின், சமமாதலில்லை. வேறு எவ்வாறு நிற்குமெனின், உயிர் தூல மாய் வெளிப்பட்டு நிற்கும். முதல்வன் சூக்குமமாய் வெளிப்படாமல் உயி ரின் அறிவுக்குள்ளாகநிற்பன். ஆதலால் மலம் நீங்கியவிடத்து உயிரின் அறிவால் முதல்வன் அறியவாரான். இவ்வாறு வேறல்லாமையானும், தூல சூக்கும முறையானும், உயிரின் அறிவிற்குத் துணையாய் நின்று அறிவிக் கின்ற உயிர்க் குயிராகிய முதல்வனை ஆன்மஞானமானது தான்கண்டறிந்து அந்த ஞானத்தைக் குணமாகவுடைய குணிப்பொருளாகிய ஆன்மாவிற்கு எட் டும் வண்ணம் காட்டமாட்டாது. எதுபோல எனின், உயிரானது கண் ணொளியின் வேறின்றி அதற்குள்ளாக நின்று அது பொருளை யறிதற்குத் துணையாய் நிற்கின்றது; அவ்வாறுநிற்கின்ற உயிரைக் கண்ணொளி காண மாட்டாத வாறு போலாம் எ-று.

(க-ரை.) உயிரின்வேறான பொருளை உயிரின் அறிவு அறிதல் கூடும். முதல்வன் உயிரோடு கலந்து நிற்றலால் கண்ணொளியோடு கலந்து நிற் கின்ற உயிரைக் கண்ணொளியறியாதவாறுபோல அம் முதல்வனை உயிரின் அறிவு அறியாது என்பதாம்.

கண்ணொளி கண்ணின் வேறான பொருளையெல்லாம் அறியும். கண் ணின் உள்ளாய் நிற்கும் உயிரை அறியாது. கண்ணொளியும் உயிரும்

கலந்து நிற்கின்ற நிலை அத்துவிதம். கண்ணொளி முற்பட்டு விளங்குவதால் தூலம். உயிர் உட்பட்டு விளங்குவதால் சூக்குமம். அன்றியும் கண்ணொளி தானே அறியும் தன்மையில்லாமையால் தூலம். கண்ணொளியை நோக்க உயிர்தானே அறியுந்தன்மை யுடைமையால் சூக்குமம். இவ்வாறே உயிர் தானே அறியும் தன்மை இல்லாமையால் தூலம். முதல்வன் தானே அறியும் தன்மை உடைமையால் சூக்குமம். தூலமாயிருப்பதொன்று அதனினுந் தூலமான பொருளை யறியுமேயன்றிச் சூக்குமமான பொருளை யறியாது. ஆதலால் ஆன்மஞானத்தால் முதல்வனை யறியமுடியாதெனக்கூறி அவனருளால் அவனை யறியவேண்டுமென மேற்கூறியதை வலியுறுத்திய வாறு அறிக.

காட்டாகி நின்றானை என்பதிலுள்ள காட்டு என்பது காட்டுதல் என்னும் பொருளைக்குறித்து தல்விகுதியில்லாது நிற்றலால் முதல் நிலைத் தொழிற் பெயர். காட்டுதல் என்பது வியஞ்சகம்.

அறிவுக்குக் காட்டாகி நின்றான் எனக் கூறியதனால் நின்றான் என்னும் வினையாலணையும் பெயருக்கு அறிவுக்குக் காட்டாகி யென்பது அடை. அவ்வடையாலும் ஓர் ஏதுக் கூறியவாறும். அதாவது தானே அறியுந்தன்மை யின்மையால் அறிவுக்குக் காட்டாகி நின்றானை என்பதாம்.

இந்த ஏதுவை உரையில் விரிக்கவில்லையாயினும் விரித்துக்கொள்க. ஆகவே, வேறல்லனுதலானும், உள்ளாய் நிற்றலினாலும், தானே அறியுமாறில்லாமையானும, உயிர் அறிவால் தனித்து முதல்வனை யறிதல்கூடாதென்பதாம்

அறிந்து கண்டு என்பது கண்டறிதல் எனக் கூட்டப்பட்டது. கண்டு என்றதும் அறிதல் என்றதும் ஒரு பொருளைத்தரும் சொற்கள். இது நாலடியார் தூய் தன்மையில் "குழிந்தாழ்ந்தகண்" என்றவிடத்து ஆழ்ந்த என்னும் பொருளைத்தரும் குழிந்து என்னும் சொல் மீமிசையாய் நின்றது போலாம். ஆகவே, கண்டறிதல் என்பது காணுதல் என்னும் ஒரு பொருளைக் குறிக்கும் பன்மொழியாய்ச் சிறப்பின்கண் வந்தது.

கண்ணறியா மெய்யென்ன என்பதை மெய்யறியாக்கண் என்ன என உரைக்கப்பட்டது. மெய்யென்பது இவ்விடத்தில் உயிரைக் குறித்து நின்றது. எதனாலெனின், கண் முதலிய இந்திரியங்களை நோக்க அவ்விந்திரியங்கள்போல் தோன்றி யழியுந்தன்மை இல்லாமையால் உயிர் சத்தாம். அவ்விந்திரியங்கள்போல் அறிவில்லாத சடமல்லாமையால் உயிர் சித்தாம். ஆதலால் சத்துச்சித்தாகிய உயிரினை மெய்யென்று கூறப்படுமாதலாலென்க: மெய்ப்பொருளாகிய உயிர்க்கு இடமாதல்பற்றி உடம்மை மெய்யென்பது உபசாரம்.

கண் என்பது கண்ணொளியைக் குறித்து நிற்றலால் ஆகுபெயர்.

கண் அறியா மெய் என்ன என்பதற்குக் கண்ணை யறியாத உடம்புபோலென்று கூறுவாருமுளர். உடம்பிற்கு அறியுந்தன்மை இல்லாமையானும், உடம்பிற்குக் கண் துணையாய் நின்று காட்டுதலில்லாமையானும் அவ்வுரை உயிரையும் முதல்வனையுங் குறித்தற்கு உவமையாகாமையால் பொருந்தாது.

ஆன்ம ஞானத்தால் அறியப்படாத முதல்வன் அவனருளாலும் அறியப்படுமாறில்லையென்பாரை மறுத்து அவனருளால் அறியப்படுமென்பதை வலியுறுத்தும்

உதாரணம்.

அதுவென்னு மோன்றன் றதுவன்றி வேறே
யதுவேன் றறியறிவு முண்டே—யதுவேன்
றறிய விரண்டல்ல ஞங்கறிவு ணிற்ற
லறியுமறி வேசிவமு மாம்.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், அத்தன்மையனாகிய முதல்வனைத் தலைப்பட்ட உயிர் அம்முதல்வனோடு ஒன்றாய்ப் போவதேயாகலின் ஆண்டங்ஙனமறிவதூஉம் அறியப்படுவதூஉமாதல் யாங்ஙனமென்னும் சிவாத்துவித சைவர் சுத்த சைவரை நோக்கி ஒன்றாய வழியும் அறிவதும் அறியப்படுவது முண்டென்பதுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) அது என்னும் ஒன்று அன்று—(சத்தாகிய சிவம் ஞேயப்பொருளாய் விசிட்டமாய் நிற்பதென்பது உமக்கும் ஒக்குமாகலான் அச்சிவம் இன்னதென் றறியவாராது அநிருவசனமாய்நிற்பதொரு நிருவிசேடப்பொருளெனக் கொண்ட மாயாவாதத்தைப் போல) அதுவென்று அநிருவசனமாய்க் கூறப்படுவதொரு சூனியமன்று, (ஆகலான்),—அது அன்றி வேறு அது என்று அறி அறிவும் ஆங்கு உண்டே—அந்த ஞேயமாத்திரையே யன்றி அதனின் வேறாக வாக்கு மனாதீதமாய் நிற்பதொரு பொருளென்றறிகின்ற ஞாதாவும் ஆண்டுள்ளதேயாம், (அற்றேல், ஒன்றாதல் பெறப்படாதாலெனின்),—அது என்று அறிய இரண்டு அல்லன் அறிவுள் நிற்றல் அறியும் அறிவு சிவமும் ஆம்—(உலகத்துப் பொருள்போல்) அதுவென்று சுட்டியறியுமாறு முதல்வன் தன்னின் வேறல்லனாய் (அப்பணைந்த உப்புப்போலத்) தன்னறிவின்கண் விரவி வேற்றுமை தோற்றாது நிற்றலான் அறிவிறந்தறிகின்ற அவ்வுயிர் சிவமேயாம் எ-று.

உம்மை சிவமாயும் சிவமாகாமை விளக்கி நின்றது.

அதுவென்னு மொன்றன்றாகலானென ஏதுப் பொருள்படக் கொண்டுரைக்க.

அறிவுமென்ற உம்மை இறந்ததுதழீஇயது.

அல்லனென்பது முற்றெச்சம். வேறு முடிபுகோடலிற்பால் வழுவாசாமை யுணர்க.

உண்டே என்னும் ஏகாரம் தேற்றம்; ஏனையிரண்டும் அசை நிலை. நிற்றல் நிற்றலானென்றவாறு.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) அது என்னும் ஒன்று அன்று அது அன்றி வேறு அது என்று அறி அறிவும் ஆங்கு உண்டே அது என்று அறிய இரண்டு அல்லன் அறிவுள் நிற்றல் அறியும் அறிவு சிவமும் ஆம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், ஆன்மஞானத்தா லறியப்படாத தன்மையனாகிய முதல்வனைக் கூடப்பெற்ற உயிர் அம்முதல் வனோடு ஒன்றாய்ப் போவதேயாகும். ஆதலால் அம்முத்தி நிலையில் அவ னருளால் உயிர் அறியும் என்பதும் முதல்வன் அறியப்படுவன் என்பதும் கூடுமென்று இவ்வதிகரணத்து இரண்டாவது வெண்பாவிற் கூறியது எவ் வாறு பொருந்துமெனச் சிவாத்துவித சைவர், சுத்த சைவர் கூறுவர். அவரை நோக்கி மறுத்து முதல்வனுடன்கூடி உயிர் ஒன்றானவிடத்தும் உயிர் அறிவ தும் முதல்வன் அறியப்படுதலும் உண்டென்பது உணர்த்தி அவனருளா லறியப்படுவன் என்பதனை வலியுறுத்தியவாறாம்.

(பொ-ரை.) சத்தாகிய சிவம் அறியப்படும் பொருளாய், பசுபாசங்களா கிய விசேடணத்தை யுடையதாய், விசிட்டமாய், (அதாவதுபசுபதியாய்) நிற் பது என்பது சிவாத்துவித சைவர் சுத்தசைவர் ஆகிய உமக்கும்ஒக்கும். ஆத லால் அச்சிவம் இன்ன தன்மை உடையதென்று உறுதியாய்க் கூற முடி யாத அநிர்வசனமாய் நிற்பதாகிய ஒரு சாதாரணப்பொருள் எனக்கொண்ட மாயாவாதத்தைப்போல, அது வென்று உறுதியாகச் சொல்லக் கூடாத தொரு சூனியமன்று. ஆதலால் அருளாலறியப்படும் அச்சிவப்பொருள் மாத் திரமே அன்றி, அப்பொருளின் வேறாக வாக்குமனாதீதமாய்நிற்பது அம் முதற்பொருளென்று அறிகின்ற உயிரும் அம்முத்திநிலையில் உள்ளதேயாம். அவ்வாறு முதல்வனும் உயிரும் முத்தியில் உண்டென்றால் ஒன்றாதல் பெறப்படாதேயெனின், பெறப்படும்; எவ்வாறெனின், உலகத்துப்பொருள் அது வென்று சுட்டியறியப்படுமாறு உயிரின் வேறாய் நிற்பதுபோல முதல் வன் உயிரின் வேறல்லனாய் தண்ணீரைச்சார்ந்த உப்பு அத்தண்ணீராகக்

கலந்து விளங்குவதுபோல, முதல்வனைச் சார்ந்த உயிரின் அறிவின்கண் முதல்வன் கலந்து வேற்றுமை தோன்றாது நிற்றலால், சுட்டியறியும் அறிவிறந்து அவனருளாலறிகின்ற அவ்வுயிர் சிவமேயாதலின் ஒன்றாதல் பெறப்படும் எ-று.

(க-ரை.) முத்தி நிலையில் உயிர் முதல்வனோடு கலந்து முதல்வனாய் நின்று அவனருளால் அவனையறியும் என்பதாம்.

முதல்வனாய் நின்று அவனருளால் முதல்வனை யறிதல் எதுபோல எனின், சூரியனை யறியவிரும்பியகண் சூரியனொளியை ஊடுருவிச் சென்று அச்சூரியனாகவே நின்று அதனொளியால் அதனை அறிவதுபோலாம்.

இவ்வுண்மை யறியாதஏகான்ம வாதிகள், துவம்பதலட்சியார்த்தமாகிய சித்தே தற்பதலட்சியார்த்தமாகிய சிவம் என்பர். வாச்சியார்த்தம் தடத்தமும் லட்சியார்த்தம் சொரூபமுமாம். தடத்தநிலையில் உயிரும் சிவமும் அந்நியமாயிருக்கும். சொரூபநிலையில் அவ்விரண்டும் அநன்னியமாயிருக்கும். அது பற்றி உயிர் சிவமென்று ஆகமங்கள் கூறும். இவ்வளவேயன்றி உயிரில்லையென்பது கருத்தன்று. இன்றேல், இன்ப அநுபவமும் இல்லையாய் முடியும். அதுவேஎமது கொள்கையென்பரேல், அநுபவிப்பவனும் அநுபவமும் இல்லையாகவே அநுபவிக்கப்படும் பொருளும் இல்லையெனப்பட்டுச் சூனியவாதமாம். ஆதலால் முத்தியில் உயிர் இல்லையென்ற அவர்கருத்துப்பொருந்தாது.

சிவமுமாம் என்றதிலுள்ள உம்மை எதிர்மறையாய்க் கலப்பினால் உயிர் சிவமாய் நின்றும் பொருளின் தன்மையால் சிவமாகாமையை விளக்கி நின்றது.

அது வென்னும் ஒன்றன்று என்பதனோடு ஆகலான் என்னுஞ் சொல்லைச் சேர்த்து எதுப் பொருள்படக் கொண்டு உரை செய்யப்பட்டது.

அறி அறிவும் என்றதிலுள்ள உம்மை அது என்று மேலே கூறிய முதல்வனையுந் தழுவி முதல்வனே யன்றி உயிரும் உண்டென்று விளக்கி நின்றமையால் இறந்தது தழுவியது.

இரண்டல்லன் என்பது வாக்கியத்தால் முற்றாயும் அல்லனாய் என்னும் பொருளில் எச்சமாயும் நிற்றலால் முற்றெச்சம். அந்த எச்சம் நிற்றலால் என்பது கொண்டு முடிந்தது.

அது என்று அறிய இரண்டு அல்லன் என்றதில் அது என்பது அஃறிணை ஒன்றன்பால் அல்லன் என்பது உயர்திணை ஆண்பால். ஆகலால் பால் வழுவாகாதோ வெனின், ஆகாது; எதனாலெனின், அது என்பது உலகத்துப் பொருளையும் அல்லன் என்பது முதல்வனையுங் குறித்து வேறு முடிபு கொண்டு நிற்றலால் என்க.

உண்டே என்பதிலுள்ள ஏகாரம் உயிர் உண்டென்று உறுதிசெய்தமையின் தேற்றம். வேறே என்றதிலுள்ள ஏகாரமும் அறிவே என்றதிலுள்ள ஏகாரமும் அசைநிலை.

அறிவுன் நிற்றலென்பது நிற்றலால் என்னும் பொருள் குறித்து நின்றது.

சிற்றுரை.

இவ்வெண்பாக்களைந்தும் முறையே வாக்கு மனாதீதமென்றல் பொருந்தும் கோசரமாமென்றல் பொருந்தாதென்னும் மாயாவாதிகளையும், கோசரமாமென்றல் பொருந்தும் வாக்கு மனாதீதமென்றல் பொருந்தாதென்னும் நையாயிகர் முதலியோரையும், பாவனைக்குக் கோசரமாமென்னும் பாதஞ் சலரையும், ஆன்மஞானத்திற்கே கோசரமாமென்னும் சமவாத சைவரையும், முத்தியிற் சிவமேயன்றி உயிரென வேறின்மையின் உயிர்க்குக் கோசரமாமாறியாண்டையதென்னுஞ் சிவாத்துவித சைவர் முதலியோரையும் மறுத்து வாக்கு மனாதீதகோசரமாய் நிற்கும் இயல்பு வலியுறுத்தி ஒருபொருள் மேல் வந்தவாறு காண்க.

இவ்வாறு நாலாஞ் சூத்திர முதலிய மூன்றினும் மேற்பிரமாணத்தாற் கூறிப் போந்த பசுபாசபதிகட்கு இலக்கணங் கூறுமுகத்தான் முறையே கேவலஞ் சகலஞ் சுத்தமென்னும் மூன்றவத்தையுங் காட்டப்பட்டன. இம்மூன்றனுட் கேவலம் மருட்கேவலமும், சகல கேவலமும், பிரளய கேவலமும், விஞ்ஞான கேவலமும், அருட்கேவலமுமென ஐவகைப்படும். அவற்றுள், மருட் கேவலமாவது அனாதி கேவலம். சகல கேவலமாவது சங்கரித்த பின்னர்ப் புனருற்பவத்திற் கேதுவாய்ப் படுங்கேவலம். ஆண்டுச் சூக்கும ஐந்தொழிலுண்டென மிருகேந்திரத்துட் கூறுதலின் அனாதிகேவலத்தோடு இதனிடைவேற்றுமையாமாறு கண்டு கொள்க. பிரளய கேவலமாவது மாயையோடு இயைபின்றி ஆண்டுப்படுங் கேவலம். விஞ்ஞான கேவலமாவது மாயைகன்மங்க ளென்னும இரண்டனோடும் இயைபின்றி ஆண்டுப்படுங்கேவலம். அருட்கேவலமாவது தத்துவசுத்திப் பின்னர்ப்படுங் கேவலம், அது துகளறு போதத்திற் காண்க. இனிச் சகலமுஞ் சகலத்திற்கேவலம், சகலத்திற்சகலம், சகலத்திற்சுத்தமென மூவகைப்பட்டு ஒரோவொன்று ஐந்து வகைப்படும். அவற்றுட் சகலத்திற்கேவல மைந்தும் "ஒன்றணையாமூலத்து" என்றதனுட்காண்க. சகலத்திற்சகல மைந்தும்

"இலாடத்தேசாக்கிரத்தை" என்றதனுட் காண்க. சகலத்திற் சுத்தமைந்தும் "யோகிற்றருவதோர் சமாதி" என வழிநூலாசிரியர் தொகுத்தோதியது சித்தாந்த சாராவலி யோகபாதத்தின் வகுத்துக் கூறுதலான் ஆண்டுக்காண்க. இனிச் சுத்தமும் சிவன் முத்தி அதிகாரமுத்தி போகமுத்தி இலயமுத்தி பரமுத்தி என்றைவகைப் பட்டுச் சாக்கிரமுதலிய பெயர்பெறும்; அவற்றை முன்னர் வகுத்தோதுட.

விளக்கம்.

இவ்விரண்டாம் அதிகரணத்திற் கூறிய வெண்பாக்கள் ஐந்தில் முதல் வெண்பாவால் முதல்வன் பாச பசு ஞானங்கட்கு எட்டப்படான் என்றல் பொருந்தும பதி ஞானத்திற்கு எட்டுவன் என்றல் பொருந்தாது என்னும் மாயாவாதிகளையும், இரண்டாவது வெண்பாவால் முதல்வன் பதி ஞானத்திற்கு எட்டப்படுவன் என்றல் பொருந்தும் பாசஞான பசுஞானங்கட்கு எட்டப்படான் என்றல் பொருந்தா தென்னும் நையாயிகர் முதலியோரையும், மூன்றாவது வெண்பாவால் முதல்வன் பதிஞானத்திற்கு எட்டப்படுவன் என்று கூற வேண்டாம் பாவனைக்கு எட்டப்படுவன் என்னும் பாதஞ்சலரையும், நான்காவது வெண்பாவால் முதல்வன் ஆன்மஞானத்திற்கே எட்டப் படுவன் என்னும் சிவசமவாத சைவரையும், ஐந்தாவது வெண்பாவால் முத்தியிற் சிவமேயன்றி உயிரென வேறின்மையின் உயிர்க்கு முதல்வன் அறியப்படுவ னென்றல் எவ்வாறு கூடும் என்னும் சிவாத்துவிதசைவர் முதலியோரையும் மறுத்து மேற்கோளிற் கூறியவாறு முதல்வன்வாக்குமனோதீத கோசரமாய் நிற்கும் இயல்பினை வலியுறுத்தி ஐந்து வெண்பாக்களும் ஒருபொருள்மேல் வந்தவாறு காண்க.

இவ்வாறு நாலாஞ்சூத்திரம்முதல் மூன்று சூத்திரங்களினாலும் பிரமாண இயல் முதற்சூத்திரமுதல் மூன்று சூத்திரங்களினால் உண்டென்று கூறி முடித்த பசுபாச பதிகட்கு இலக்கணங் கூறும் முறையில், நான்காஞ் சூத்திரத்தால் சகசமலத் துணராது கிடக்குங் கேவல அவத்தையும், ஐந்தாஞ் சூத்திரத்தால் கருவிகளோடுகூடி விடயங்களை யறியுஞ்சகல அவத்தையும், இவ்வாறாஞ் சூத்திரத்தால் பாசஞான பசுஞானங்களைக் கடந்து பதிஞானத்தாற் சிவனையறியுஞ் சுத்தாவத்தையுங் காட்டப்பட்டன.

கேவல சகல சுத்தமென்ற இம் மூன்றனுள், கேவலம் மருட்கேவலமும் சகலகேவலமும் பிரளயகேவலமும் விஞ்ஞானகேவலமும் அருட்கேவலமுமென ஐவகைப்படும், அவற்றுள்:—

மருட்கேவலமாவது, அறிவை மறைத்து மயக்கத்தைச் செய்யும் ஆணவமலத்தோடு அணுதியே கூடி அறிவின்றிக் கிடக்கும் அனாதி கேவலம்.

சகல கேவலமாவது, அனாதிகேவலத்தில் நின்றும் நீங்கிச் சரீரம்பெற்றுச் சங்கரிக்கப்பட்ட பின்னர், புதுச்சிருட்டிக்கு ஏதுவாய் ஒடுங்கியிருக்கும் பொழுது அவ்விடத்தில் மும்மலங்களோடுங் கூடிப்படும் சகலருக்குரிய கேவலம். அவ்வாறு ஒடுங்கியிருக்கும் காலத்துச் சூக்கும ஐந்தொழில் உண்டென மிருகேந்திரம் என்னும் உபாகமத்தில் ௪-வது பிரகரணம் ௪௰-வது சுலோகத்துட் கூறுதலால், சூக்கும ஐந்தொழிலும் இல்லாத ஆணவமலம் ஒன்றோடு கூடிய அனாதிகேவலத்திற்கும் சூக்கும ஐந்தொழிற்படுவதோடு மும்மலங்களுடன் கூடிய இந்தச் சகலகேவலத்திற்கும் வேற்றுமை உண்டென்பது கண்டுகொள்க.

சூக்கும ஐந்தொழிலாவது, சர்வசங்காரத்தில் மலபரிபாக தாரதம்மியத்திற்குத் தக்கபடி அறிவிக்கத்தக்கவர்களை அறிவித்தல் அநுக்கிரகம். மறைக்கத்தக்கவர்களை மறைத்தல் திரோபவம். ஆன்மாக்களின் சஞ்சிதகன்மங்களைப் பக்குவப்படுத்தல் சங்காரம். மாயாகாரியங்களை வெளிப்படத்தகுந்தவைகளாகச்செய்தல் திதி. தோன்றுதற்குரிய சித்துப்பொருள் சடப்பொருள்களைப் பார்த்துக்கொண்டிருத்தல் சிருட்டி.

பிரளய கேவலமாவது, அனாதிகேவலத்தினின்றும் நீங்கிச் சரீரம் பெற்றுச் சங்கரிக்கப்பட்ட பின்னர் புதுச்சிருட்டிக்கேதுவாய் ஒடுங்கியிருக்கும்பொழுது அவ்விடத்தில் மாயையோடு பொருந்தாது ஆணவங் கன்மம் என்னும் இரண்டனோடுங்கூடிப்படும் பிரளயாகலருக்குரிய கேவலம்.

விஞ்ஞான கேவலமாவது, அனாதிகேவலத்தினின்று நீங்கிச் சரீரம் பெற்றுச்சங்கரிக்கப்பட்ட பின்னர்ப் புதுச்சிருட்டிக்கேதுவாய் ஒடுங்கியிருக்கும்பொழுது அவ்விடத்தில் மாயை கன்மங்களென்னும் இரண்டனோடும் பொருந்தாது ஆணவத்தோடு கூடிப்படும் விஞ்ஞானகலருக்குரிய கேவலம்.

ஆணவமலத்தோடு கூடிய அனாதி கேவலத்திற்கும் ஆணவமலத்தோடு கூடிய விஞ்ஞான கேவலத்திற்கும் வேற்றுமை யென்னையெனின், அனாதி கேவலத்தினின்று சகலராய்த் தோன்றுதலும் விஞ்ஞான கேவலத்தினின்று விஞ்ஞானகலராய்த் தோன்றுதலும் வேற்றுமையாம் என்க. அனாதியே விஞ்ஞானகலராதல் அனாதி கேவலத்துள் நின்று தானே உண்டாதல் வேண்டும்; ஆகலான் அவ்விரண்டற்கும் வேற்றுமையின்றுபோலுமெனின், அங்ஙனமன்று; ஆணவமல மறைப்பின் வேறுபாட்டால் அனாதியே விஞ்ஞானகலருக்குரிய கேவலம் அனாதியே பிரளயாகலருக் குரிய கேவலம் அனாதியே சகலருக்குரிய கேவலமென மூன்று உண்டெனப்பட்டு அம்மூன்றும் தோன்றுதற்கு உரியது அனாதிமருட்கேவலம். இவ்விடத்துக்கூறிய விஞ்ஞானகேவலம், சகலராய் நின்று பக்குவப்பட்டுச் சங்கரிக்கப்பட்டவர்க்குப் பின்னர் உண்டாகும்கேவலம். ஆதலால் அனாதியே ஆணவமல மறைப்பின் வேற்றுமையால் உண்டாகும் விஞ்ஞானகேவலத்திற்கும், இடையே

மாயாமலகன்மமலங்கள் நீங்கப்பெற்றதா லுண்டாகும் விஞ்ஞானகேவலத்திற்கும் வேற்றுமையுளதாமாறறிக. அனுதிவிஞ்ஞானகேவலர் சிருட்டியாற் பக்குவப்படாதவர். ஆதிவிஞ்ஞானகேவலர் சிருட்டியாற் பக்குவப்பட்டவர்.

அருட் கேவலமாவது தத்துவங்களெல்லாம் நீங்கிய பின்னர் அருளோடுகூடிப்படுங்கேவலம். இந்நிலையில் பாசஞான பசுஞானங்களின்றி அருளாய் நிற்றலால் அருட்கேவலமெனப்பட்டது. அருளாலுண்டாகுங் கேவலம் அருட்கேவலம். இதனைத்துகளறுபோதத்தில் "பகலிழந்தவான்போற் பரவுமல நீயா—இகலறவே நின்று யிழந்தா—யகலறிவு—வாடாத முத்தியினில் வாய்ந்தவருட்கேவலநீ—நாடாத கேவலமுன்னாள்" என்றதனாலறிக. இச்செய்யுளின் கருத்து, சூரியன் நீங்கிய ஆகாயம் இருளோடு கூடி இருளாயே யிருந்தவாறுபோல (அருணீங்கிய நீ) ஆணவமலத்தோடு கூடி அதுவாயேயிருந்தாய். அம்மலம் நீங்க இப்பொழுது அருளோடு கூடி அருளாயேயிருக்கின்றாய். இந்நிலை தன்செயலற்றிருத்தலின் அருட்கேவலமெனப்படும். இது எதுபோல எனின், முன்னர் அறிவு தொழிற்படாத கேவலம் போலாம் எ-று. இக்கருத்துப்பற்றியே, "ஆணவத்தோ டத்துவித மானதுபோல் மெய்ஞ்ஞானத் தாணுவினோ டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ" என்றனர் தாயுமானசுவாமிகளும்.

இனிச் சகலமும் சகலத்திற் கேவலம் சகலத்திற் சகலம் சகலத்திற் சுத்தமென மூவகைப்பட்டு, ஒவ்வொன்றும் சாக்கிரஞ் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதமென ஐவகைப்படும். அவற்றுள், சகலத்திற் கேவலமாவது இந்நூல் நான்காஞ் சூத்திரத்தில் "ஒன்றணையா மூலத்து" என்ற வெண்பாவிற் கூறியவாறு புருவநடுமுதல் மூலாதாரம்வரை கீழ்நோக்கிச் செல்லும் அவத்தை ஐந்துமாம்.

சகலத்திற் சகலமாவது இந்நூல் நான்காஞ்சூத்திரத்தில் "இலாடத்தே சாக்கிரத்தை" என்ற வெண்பாவிற் கூறியவாறு சாக்கிரத்தானமாகிய புருவநடுவிலடையும் அவத்தை ஐந்துமாம்.

சகலத்திற் சுத்தமாவது சிவஞானசித்தியார் சு-ம் சூ-ம் ௩௪-வது செய்யுளில் "யோகிற்றருவதோர் சமாதி" எனக் கூறியவாற்றானும், சித்தாந்த சாராவலியிற் கூறியவாற்றானும், இருதயம் கண்டம் நாக்கின்அடி புருவநடு பிரமரந்திரம் என்னும் ஐந்துதானங்களிறபடும் அவத்தை ஐந்துமாம்.

இனிச் சுத்தமும் சீவன்முத்தி அதிகாரமுத்தி போகமுத்தி லயமுத்தி பரமுத்தி என ஐவகைப்பட்டு முறையே நின்மலசாக்கிரம் நின்மலசொப்பனம் நின்மலசுழுத்தி நின்மலதுரியம் நின்மலதுரியாதீத மெனப் பெயர் பெறும். அவற்றை முன்னர் எழாஞ் சூத்திரம் முதல் வகுத்தோதுவர். எவ்வாறெனின்:—

சிவன் முத்தியாவது சிவத்தன்மை விடுபடுதல். இது ஏழாஞ் சூத்திரத்தில் அதிகாரம் உண்டெனப்பதனால் ஆரம்பிக்கப்பட்டுப் பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் முற்றுப் பெறுகின்றது.

அதிகாரமுத்தியாவது அதிகாரசிவத்தை அடைந்து உடற்பற்றை விடுதல். சகலவர்க்கத் தான்மாக்களுக்கு அதிகாரசிவம் குருவேயாகும். இது எட்டாஞ் சூத்திரத்தில் "தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்டு" என்பதனாற் கூறப்படுகின்றது.

போகமுத்தியாவது போகசிவத்தை அடைந்து உலகப்பற்றை விடுதல். சகலவர்க்கத்தான்மாக்களுக்குப் போகசிவம் பதியேயாகும். அப்பதியைப் பதிஞானத்தாலடைந்து உலகத்துள்ள போகத்தை விடுதலே போகமுத்தியாம். இது ஒன்பதாஞ்சூத்திரத்தில் "பதியை—ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி***பாச மொருவ" என்பதனாற் கூறப்படுகின்றது.

லயமுத்தியாவது லய சிவத்தையடைந்து மலமாயா கன்மங்களை விடுதல். சகலவர்க்கத் தான்மாக்களுக்கு லயசிவம் தற்போதம் அடங்கின விடத்தில் ஏகனாய்ப் பிரகாசிப்பதேயாம். இது பத்தாஞ் சூத்திரத்தில் "ஏகனாகி இறைபணி நிற்க மலமாயை தன்னொடு வல்வினையின்றே" என்பதனாற் கூறப்படுகின்றது.

பரமுத்தியாவது பரசிவத்தை அடைந்து பாசப்பற்றை விடுதல். இது பதினொராஞ் சூத்திரத்தில் "அயரா அன்பின் அரன்கழல் செலுமே" என்பதனாற் கூறப்படுகின்றது. பத்தாஞ் சூத்திரத்திற்கும் பதினொராஞ் சூத்திரத்திற்கும் வேறுபாடு என்னையெனின், பாசநீக்கம்வேறு பாசப்பற்று நீக்கம் வேறு. பற்று ஆன்மாவினிடத்தில் என்றும் உள்ளது. அப்பற்று பாசம்நீங்கினும் இருக்கும். அப்பற்றால் மீண்டும் விட்டபாசத்தைப்பற்றாத வண்ணம் இறைவன்றிருவடியை இடையறாது பற்றவேண்டும் என்பது தோன்ற "அயரா அன்பின் அரன்கழல் செலுமே" என்றார். ஆகவே பத்தாஞ் சூத்திரம் பாசநீக்கமும், பதினொராஞ் சூத்திரம் பாசப்பற்று நீக்கமுமாகிய வேறுபாடு உடையன என்பது கண்டுகொள்க. பாசப்பற்று நீக்கத்தில் சிவனைப்பற்றி நிற்றலின், அது சிவப்பேறு எனப்படும்.

இவ்வாறுஞ் சூத்திரத்தினும் அதிகரணங்களினும் கூறி முடித்த தொகைப்பொருள்:—ஐந்தாஞ் சூத்திரத்திற் கூறப்பட்ட தமது அறிவிற்குத் துணையாகிய முதற்பொருள் அளவைகளால் அறியப்படும் பொருளோ அறியப்படாத பொருளோ என்னும் ஐயம் நிகழாதவண்ணம் அறியப்படும்பொருளாயின் அசத்தாம்; அறியபபடாத பொருளாயின் சூனியமாம்; ஆதலால் அறியப்படுதல் அறியப்படாமையாகிய இருபகுதியுமின்றிப் பாசபசுஞானங்களால் அறியப்படாமையும் பதிஞானத்தால் அறியப்படுவது மாகிய சித்தும் சத்தாமெனச் சூத்திரத்தால் முதல்வனுக்கு இலக்கணம் கூறப்பட்டது. பட

வே, பிரபஞ்சம்போல முதற்பொருளும் அளவைகளா லறியப்படுமென நையாயிகரும், எல்லாப்பொருளுஞ் சத்தேயாதலால் அளவைகளாலறியப்படும் பொருளுஞ் சத்தேயாமெனச் சாங்கியருங்கூற, முதலதிகரணத்தால் அவரை மறுத்து அளவைகளால் சுட்டியறியப்படும் சுட்டுப்பொருள் யாவும் அசத்தெனக் கூறப்பட்டது. படவே, முதல்வன் இயல்பு அறியப்படுவதென்றாவது அறியப்படாதது என்றாவது கூறமுடியாத அநிர்வசனம் என்று மாயாவாதிகூற, இரண்டாம் அதிகரணத்து மேற்கோள் ஏதுக்களால் அவரை மறுத்துச் சிவம் வாக்குமனாதீத கோசரம் என்று கூறப்பட்டது. படவே, அதீத மென்றல் பொருந்தும் கோசரமென்றல் பொருந்தாதென அம்மாயாவாதி கூற, முதல் வெண்பாவால் அவரைமறுத்து உண்மை ஞானத்திற்குக் கோசரமெனக் கூறப்பட்டது. படவே, கோசரமென்றல்பொருந்தும் அதீதமென்றல் பொருந்தாதென நையாயிகர்கூற, இரண்டாவது வெண்பாவால் அவரைமறுத்து வாக்குமனாதீதமாய் நின்றே கோசரமாமெனக் கூறப்பட்டது. படவே, பாவனைக்குக் கோசரமெனப் பாதஞ்சலர் கூற, மூன்றாவது வெண்பாவால் அவரை மறுத்துக் கருவிகளோடு கூடிய பாவனைக்குக் கோசரமாகாதெனவும் திருவருளோடு கூடிய பாவனைக்குக் கோசரமாமெனவுங் கூறப்பட்டது. படவே, ஆன்மஞானத்திற்குக் கோசரமாமெனச் சிவசமவாதிகள் கூற, நான்காவது வெண்பாவால் அவரை மறுத்து முதல்வனும் ஆன்மாவும் அத்துவிதமாய் நிற்றலால் அவன் அருளாலன்றி ஆன்மஞானத்திற்குக் கோசரமாகான் எனக் கூறப்பட்டது. படவே, முத்தியில் உயிர் முதல்வனோடு ஒன்றாய்ப்போதலேயன்றி வேறு நில்லாமையால் அவனருளாலறிவதென்பதும் கூடாதெனச் சிவாத்துவிதசைவர் முதலியோர் கூற, ஐந்தாவது வெண்பாவால் அவரை மறுத்து முத்தியிலும் உயிருண்டு அவ்வுயிர் சிவனோடு கலந்து நிற்றலால் சிவனேயாய் நின்று அவனருளால் அவனை யறிதல் கூடுமெனக் கூறப்பட்டது.

இரண்டாம் அதிகரணம் முற்றிற்று.

ஆறுஞ்சூத்திரம் முற்றிற்று.

இலக்கணவியல்முற்றிற்று.

முதலாவது பொதுவதிகாரம் முற்றிற்று.

இரண்டாவது உண்மை அதிகாரம்.

சாதனவியல்.

ஏழாஞ் சூத்திரம்.

மேல் ஆறு சூத்திரங்களினாலுங் கூறிமுடித்த முப்பொருள்களுள், பயன் பெறுதற்பொருட்டுச் சாதித்தற்குரிய அதிகாரியின் இயல்பும், சாதனமும், சாதிக்கும் முறையும் ஆகிய மூன்றும் சாதன இயலில் மூன்று சூத்திரங்களாற் கூறத் தொடங்கிச் சாதித்தற்குரிய அதிகாரியின் இயல்பு முதற்கண் இந்த ஏழாஞ் சூத்திரத்தாற் கூறுகின்றார்.

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா.

கருத்துரை.

எ-து சூ-ம் எ-னின் மேலதற்கோர் புறனடை யுணர்த்துதனுதலிற்று.

சிற்றுரை.

எ—து க—ரை எ—னின், சூத்திரக் கருத்துணர்த்துத னுதலிற்று,

(இ-ள்) தூலாருந்ததிநியாயம்பற்றி மேலே ஆறுசூத்திரங்களினுஞ் சிவாகமங்களிற் கூறப்படும் முப்பொருள்களது பொதுவியல்பு பிரமாண முகத்தானும் இலக்கணமுகத்தானும் ஆராய்ச்சி செய்துணர்த்திய ஆசிரியர், அம்முப்பொருள்களது சிறப்பியல்பெனப்படும் உண்மை சாதனமுகத்தானும் பயன்முகத்தானும் ஆராய்ச்சிசெய் துணர்த்துவான் புகுந்து முதற்கண் மூன்று சூத்திரங்களான் அவற்றையறிந்து அதனானாய பயன்பெறுதற் கேதுவாகிய சாதனங்கூறிய தொடங்கினார். அவற்றுள் இச்சூத்திரம் உணருருவசத்தெனவும், இருதிறனல்லது சிவசத்தெனவும் மேலைச் சூத்திரத்தான் வரைசெய் துணர்த்தியவழி அங்ஙன மறியும் பொருள் அவ்விரண்டனுள் ஒன்றோ வேறோ என்னும் ஐயப்பாட்டின்கண் அவ்விரண்டனுள் ஒன்றாகற்பால தென்பார்மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்துக்குப் புறனாகவெடுத்து ஒழிபாகிய சதசத்தினியல்பு வரைசெய்துணர்த்து முகத்

சாதனவியல்ஏழாஞ்சூத்திரம்.

தானை சாதித்துப் பயன் பெறுதற்குரிய அதிகாரியினியல்பாவது இதுவென்பதுணர்த்துதனுதலிற்று எ-று.

அதிகாரமும் ஒத்தும் வேறுயவழியும் இயைபுணர்ந்துகோடற் பொருட்டுக் கருத்துரை அவ்வாறு செய்தாரென்பது. இப்புற னடையை வடநூலார் வாக்கியசேடமென்ப. இதனுட் கூறப் படும் மூன்றதிகரணமும் மூன்று புறனடைபோலுமென மலையா மைப்பொருட்டு ஓர் புறனடை என்றார். முன்னையவிரண்டும் இறுதி அதிகரணத்தைச் சாதித்தற் கேதுவாய் ஒரு பொருண் மேல் வந்தனவேயாம் என்பது கருத்து.

ஒன்றனையறிந்தவழி அதனானாய பயன்பெறுதற்குரிய முயற்சி செய்யலுறுவார்க்கு அதனைச் சாதிக்குமாற்றல் தமக்குண்டென்ப தூஉம், சாதித்ததனால் வரும்பயன் இது வென்பதூஉம், அதனைப் பயப்பித்தற்குரிய சாதனமாவது இது வென்பதூஉம், அது வரு வாயு முணர்ந்தாலன்றி அதன்கண் மனவெழுச்சி செல்லாமையின் ஈண்டோதப்படும் சாதனஞ்செய்து பயன்பெறுதற்குரிமையுடைய அதிகாரியினியல் புணர்த்துவதாய இச்சூத்திரம் முதற்கண் வைக் கப்பட்டது.

விளக்கம்.

இக்கருத்துரை என்ன சொல்லிற்றோவெனின், சூத்திரக்கருத்து இதுவென்று சொல்லிற்று.

(இக்கருத்துரையின் பொருள்.) வானத்திலுள்ள தூலயான நட்சத்திரத் தைக் காட்டிச் சூக்குமமான அருந்ததி நட்சத்திரத்தைக்காட்டுவதுபோல, மேல் ஆறுசூத்திரங்களினாலும் பிரமாணம் இலக்கணம் என்னும் இரண்டின் வழியாய்ச் சிவாகமங்களிற் கூறப்படும் முபபொருள்களினது பொதுவியல்பு எனப்படும் தூலத்தை ஆராய்ச்சி செய்துணர்த்திய ஆசிரியர் அம் முப் பொருள்களது சிறப்பியல்பு எனப்படும் சூக்குமமாகிய உண்மையைச் சாத னம் பயன் என்னும் இரண்டின் வழியானும் ஆராய்ச்சிசெய் துணர்த்த எண்ணி, முதற்கண் மூன்று சூத்திரங்களினால் அம் முப்பொருள்களை அறி ந்து அவற்றுள் பதிப்பொருளாலுண்டாம் பயன்பெறுதற்கு ஏதுவாகிய சாதனஇயல்கூறத்தொடங்கினார். அம்மூன்று சூத்திரங்களுள் இந்த எழாஞ் சூத்திரம் என்னசொல்லிற்றோ வெனின், ஆறாஞ்சூத்திரத்தில் உணருரு அசத்தெனவும் இருதிறனல்லது சிவசத்தெனவும் வரைசெய்துணர்த்திய விடத்து, அவ்வாறு அசத்தெனவும் சிவசத்தெனவும் அறியும்பொருள் அசத் துச் சிவசத்து என்னும் அவ்விரண்டனுள் ஒன்றோ வேறோ என்னும்

ஐயம் நிகழுமன்றே? அவ்வையப்பாட்டின்கண் அவ்விரண்டனுள் ஒன்றே அறியுமென்பார் மதம்பற்றி நிகழும் வினாவை ஆசங்கித்து அவ்வாறாஞ் சூத்திரத்துக்குப் புறனாக எடுத்து அசத்துச் சிவசத்து என்னும் இரண்டனையும் அறிவது அவ்விரண்டின் வேறான உயிராகிய சதசத்து என அதனியல்பு வரைசெய்து உணர்த்தி, அவ்வாறுணர்த்து முறைமையில் சாதித்துப் பயன் பெறுதற்குரிய அதிகாரியினியல்பு இதுவென உணர்த்துதல் இவ் வேழாஞ்சூத்திரத்தின் கருத்து எ-று.

உயிரினியல்பு உணர்த்தும் முறையில் அதிகாரியினியல்பு உணர்த்துதல் எவ்வாறெனின், சத்தைச்சார்ந்து சத்தையும் அசத்தைச்சார்ந்து அசத்தையும் அறிதல் உயிரினியல்பு. ஆதலால் உயிர் சதசத்தெனப்பட்டது. இதனால் சத்தை அடைதற்கு அதிகாரம் உடையது உயிரெனப்பட்டு அதிகாரி இயல்பு உணர்த்தியவாறு அறிக. சத்தை அடைதற்குரிய உரிமை தனக்கு உண்டென்னும் அறிவுடைமையே சாதன வகையில் உயிருக்குச் சிறப்பிலக்கணம்.

ஆறாஞ்சூத்திரம் பொதுவதிகாரம்; இவ்வேழாஞ் சூத்திரம் உண்மை அதிகாரம். ஆறாஞ்சூத்திரம் இலக்கணஇயல்; இந்த ஏழாஞ்சூத்திரம் சாதன இயல். இவ்வாறு அதிகாரத்தாலும் இயலாலும் இருசூத்திரங்களும் வேறாய விடத்தும் இரண்டற்கு முள்ள சம்பந்தம் உணர்ந்து கொள்ளுதற் பொருட்டு இவ்வேழாஞ்சூத்திரத்திற்கு, மேலதற்கோர்புறநடை உணர்த்துதனுதலிற்று எனக் கருத்துரை செய்தார்.

சம்பந்தமாவது சத்து அசத்தை அறியாது அசத்துச் சத்தை அறியாது என ஆறாஞ்சூத்திரமும், அவ்வாறாயின் அவ்விரண்டனையும் அறிவதுயாது என்னுஞ் சந்தேகத்தினை நீக்கி உயிரே அவ்விரண்டினையும் அறியும் என ஏழாஞ் சூத்திரமும் கூறுதலாம்.

இவ்வாறு கூறும் புறனடையை வடநூலார் வாக்கிய சேட மென்பர். அதாவது முற்கூறியதன் சேடம்.

கருத்துரையில் மேலதற்குப் புறனடை யுணர்த்துதனுதலிற்று என்றாலேபோதியதாகவும், ஓர்புறனடையுணர்த்துதனுதலிற்று என்று கூறிய தன்கருத்தென்னையெனின், இச்சூத்திரத்துட்கூறப்படும் மூன்றதிகரணமும் மூன்றுபுறனடைபோலு மெனமலையாமைப் பொருட்டு என்க. முன்னைய இரண்டதிகரணமும் மூன்றாம் அதிகரணத்தைச் சாதித்தற்கு ஏதுவாய் ஒரு பொருள்மேல் வந்தனவேயாம் என்பது கருத்து. எவ்வாறெனின், சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது; அசத்தினுக்கு உணர்வின்று; ஆதலால், இருதிறனறிவுளது இரண்டலா ஆன்மா என்றவாறாம்.

சாதனவியல்ஏழாஞ்சூத்திரம்.

ஒன்றனை யறிந்தவிடத்து அறியப்பட்ட அதனாலுண்டாம் பயனைப் பெற எண்ணி அதற்கான முயற்சி செய்ய விரும்புவோர்க்கு அம்முயற்சியைச் செய்யும் தகுதி தமக்கு உண்டென்பதூஉம், செய்ததனால் வரும்பயன் இதுஎன்பதூஉம், பயன் பெறுதற்குரிய முயற்சியாவது இது வென்பதூஉம், அம்முயற்சி வரும்வழியும் உணர்ந்தாலன்றி அப்பயனைப் பெறவேண்டு மென்ற மனவெழுச்சி உண்டாகாது ஆதலால், சாதனஞ் செய்து பயன் பெறுதற்கு உரிமையுடைய அதிகாரியி னியல்பு உணர்த்துவதாகிய இச்சூத்திரம் இவ்வியலில் முதற்கண் வைக்கப்பட்டது.

சிற்றுரை.

இதன்பிண்டப் பொழிப்பு.

சத்தெதிர்—(மேலைச் சூத்திரத்திற் கூறிப்போந்த இரண்டனுள், வாக்குமனாதீதமாகிய) சிவசத்தின் சந்நிதியின்,–யாவையும்–(உணருருவாகிய) அசத்தெல்லாம்,— சூனியமாகலின்— பாழாகலின்,—சத்தே—சத்தாகிய சிவம்,–அறியாது—(அசத்தாகியபிரபஞ்சத்தை) அறிதல் செய்யாது,—அசத்து—அசத்தாகிய பிரபஞ்சம்,—இலது (ஆதலின்)—அறிவில்லாத சடமாதலிற் (சத்தாகிய சிவத்தை,—அறியாது—அறிதல் செய்யாது: (ஆதலாற் பாரிசேடஅளவையான்,— இருதிறன் அறிவுளது—இருதிறன் அறிவுளதொன்றுண்டென்பது பெறப்படுதலின் (அதுவே) சத்தாதற் றன்மையும் அசத்தாதற் றன்மையுமாகிய,—இரண்டலா—இரண்டுமன்றிச் சதசத்தாயுள்ள,—ஆன்மா—உயிராம் எ—று.

இரண்டனுள் ஒன்றனைப் பிரிக்கின்றமையிற் சத்தே என்னு மேகாரம் பிரிநிலைக்கண் வந்தது. அசத்திலதாகலி னென்றுரைக்க. அசத்துச் சத்தை யறியாமைக்கும் சத்தெதிர் சூனியமாதலே ஏதுவாதலமையு மாயினும், அசத்தெனப்பட்ட கருவிகள் முத்திநிலையிற் சிவகரணமாய் ஆன்ம சந்நிதியை யொட்டி முதல்வன் சந்நிதியினிற்கப்பெறு மென்பாரை நோக்கி வேறு மோரேதுக் கூறினார். இக்கருத்தேபற்றி, "சத்தின்முனிலாமை யானும் தனைக்கொடொன் றுணர்தலானும்"எனவிரண்டேதுவும் உடன் கூறினார் வழிநூலாசிரியரும். ஏற்புழிக்கோடலான் அறிதலென்றது ஈண்டனுபவ வறிவின்மேற்று. இனைத்தென வறிந்தபொருட்கு வினைப்படுதொகுதிக்கண்வேண்டப்படு முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

விளக்கம்.

(இச்சூத்திரத்தின் பொழிப்புரை.) மேலைச் சூத்திரத்திற் கூறிமுடித்த சிவசத்து அசத்து என்னும் இரண்டனுள், வாக்கு மனாதீதமாகிய சிவசத்தின் சந்நிதியில் பாசஞான பசுஞானங்களால் உணரப்படும் பொருளாகிய அசத்தெல்லாம் பாழாதலால், சத்தாகியசிவம் அசத்தாகிய பிரபஞ்சத்தை அறிதல் செய்யாது; அசத்தாகிய பிரபஞ்சம் அறிவில்லாத சடமாதலால் சத்தாகிய சிவத்தை அறிதல் செய்யாது; ஆதலால், பாரிசேட அளவையால் சத்து அசத்து ஆகிய இரண்டனையும் அறியும் அறிவை உடையது ஒன்று உண்டென்பது பெறப்படுதலின், அந்த அறிவுடைப் பொருளே சத்தாதற் றன்மையும் அசத்தாதற் றன்மையுமாகிய இரண்டுமின்றி அவ்விரண்டனையும் அறியும் உரிமையால் சதசத்தாயுள்ள உயிராம் எ-று.

சிவமும் பிரபஞ்சமும் ஆகிய இரண்டும் ஒன்றனையொன்று அறியாதெனவிலக்கவே மேல் ஆறு சூத்திரங்களாற் கூறி முடித்த முப்பொருள்களுள் எஞ்சிய உயிர்ப்பொருளே அவ்விரண்டனையும் அறியும் என்று கூறுதல் பாரிசேட அளவையாகும். சத்து அசத்து ஆகிய இரண்டனையம் அறியும் உரிமைபற்றி உயிர் சதசத்தெனப்பட்டதேயன்றிச் சத்தும் அசத்தும் ஆகிய மாறுபட்ட இரண்டு தன்மையை உடையது என்பதன்று. ஆயின் உயிருக்குத் தனித்த இலக்கணம் யாதெனின், சார்ந்தபொருளின் தன்மையாய் நிற்றலேயாம். சாரப்படும்பொருள் சத்து அசத்து என்னும் இரண்டுமேயாம் ஆதலால், சத்தொடு கூடிச் சத்தாயும் அசத்தொடுகூடி அசத்தாயும் நிற்றல் பற்றிச் சதசத்தெனப்பட்டமை அறிக.

இவ்வுண்மையறியாத ஏகான்மவாதிகள், "அஞ்ஞான தசையில் ஜீவத்துவத்தோடிருத்தலின் ஜீவனுளனென்று சத்ரூபனாயும், அஞ்ஞானம் நீங்கிய முத்தி தசையில் ஜீவத்துவம் நீங்கிச் சிவமாதலின் ஜீவனிலனென்று அசத்ரூபனாயுமிருத்தலால் சதசத்ரூபனா"மென்பர். ஜீவத்துவத்திற் கேதுவான மலம் நீங்கிச் சிவத்துவத்திற் கேதுவான சிவத்தை யுணர்ந்து அதுவாய் நிற்றலால் முத்தியில் உயிர் சிவமாயிற்று என்ற உண்மை உணர்ந்திருப்பரேல் அவ்வாறு கூறார். சிவமே கருவிகளோடுகூடிச் சீவனாயிற்று; கருவிகள் நீங்கியவிடத்துச் சிவமாயிருந்தது என்பரேல், "பிரபஞ்சம் சிவமிரண்டனையும் உணர்பவன் எவனோ" எனக்கூறிய சூத்திரக்கருத்தோடு முரணும். அன்றியும் கருவிகளை எதற்காகக் கூடிற்று; இனி நீங்கினும் முன்னர்க் கூடியவாறே கூடுமே; கூடுமாயின் நீங்குதற்காகச் செய்யுஞ் செயல்பயனிலதாயன்றோ முடியும் என்பனவாதிய கேள்விகட்கு என் சொல்வர். இனி முத்தியில் உயிரில்லையாயின் ௩௨௭-ம் பக்கத்திற் கூறியவாறு சூனியவாதமுமாம்.

இன்னும் "சூரியனைச் சார்தற்கும் சூரியனால் விளக்கக்கூடாத விஷயங்களை விளக்குதற்கும் யோக்கியமான சூரியச் சாயையினைப்போலச் சிவத்

தினைச்சார்தற்கும் சிவத்தின்ற் சுட்டியறியப்படாத விஷயங்களையறிதற்கும் யோக்கியமான சுட்டுணர்வாகிய ஜீவனைச் சிற்பிரதிபிம்பனென்றும் சிற்சாயையென்றுஞ் சுருதியாதிகள் கூறுகின்றன'' என்று வாளாகூறுவர். சூரியனைச்சார்வது கண்ணொளியேயன்றிச் சூரியச்சாயையன்று என்பதும், விளக்குதல் அறிவித்தற்கு உவமையாகுமேயன்றி அறிதற்கு உவமையாகாது என்பதும், சூரியச்சாயைபோலப் பிரமத்தின்சாயையே ஜீவனாயின் ''அவ்வாத்மா ஜடசித்துக்களின் வேறும்'' என்று கூறிய சூத்திரக்கருத்தோடு முரணுமென்பதும் நோக்காது கூறும் அக்கூற்றுப் பொருந்தாதென விடுக்க.

சத்து அசத்து என்னும் இரண்டனுள் சூத்திரத்தில் சத்தே என்பதிலுள்ள ஏகாரம் அசத்தைப் பிரிக்கின்றமையின் பிரிநிலைக்கண் வந்தது.

அசத்தில்து என்றவாக்கியத்துடன் ஆகலின் என்னும் சொல் வருவித்து அசத்திலதாகலின் என்றுரைக்க. அசத்து இலதாகலின் என்பதற்கு அசத்து இல்லையாகலான் என உரைசெய்யாது அசத்துக்கு அறிவில்லையாகலான் என உரைசெய்த கருத்தென்னையெனின், ஆசிரியருக்கதுவே கருத்தாகலின் அவ்வாறு உரைசெய்யப்பட்டதென்க. அதுவே ஆசிரியர் கருத்தென்பதை இரண்டாம் அதிகரணத்து மேற்கோளில் 'அசத்தினுக்கு உணர்வின்று' எனக் கூறியவாற்றானறிக.

சத்து அசத்தை அறியாதென்பதற்கேயன்றி அசத்துச் சத்தையறிதல் செய்யாது என்பதற்கும் சத்தெதிர்யாவையும் சூனியமென்றலே ஏதுவாதல் கூடும். அதாவது சத்தின்முன் அசத்தெல்லாம் சூனியமாதலால் சத்து அசத்தை அறியாது அசத்துச் சத்தை அறியாது என்று முடித்துக்கொள்ளலாம். இவ்வாறு பொருள்கொள்ளக் கிடக்கவும் அசத்திலதாகலின் என்று வேறுமோரேதுக் கூறிய கருத்தென்னையெனின், அசத்தெனப்பட்ட கருவிகள் முத்திநிலையில் சிவகரணமாய் ஆன்மசந்நிதியிற் கலந்துமுதல்வன் சந்நிதியில் நிற்கப்பெறுமென்பாரை நோக்கி, அவ்விடத்தும் ஆன்மாவிற்குச் சிவகரணமாய் நிற்றலேயன்றிச் சிவனை அக்கரணம் அறிவதில்லையென்பதை அறிவித்தற்கு இலதாகலின் என்ற வேறு மோரேதுவுங் கூறினர். இக்கருத்தேபற்றிச் சிவஞானசித்தியார் ஏழாஞ்சூத்திரம் க-வது செய்யுளில் ''சத்தின்முன் இலாமை யானும் தனைக்கொடு ஒன்று உணர்தலானும்'' என இரண்டேதுவும் உடன் கூறினர் வழிநூலாசிரியரும். தனைக்கொடு ஒன்று உணர்தல் என்றதனாலேயே தான் உணர்தலில்லை யென்பது பெறப்பட்டவாறுகாண்க.

சத்தே அறியாது என்றவிடத்தும் இருதிறன் அறிவுளது என்றவிடத்தும் அறிதல் என்றது சாதன இயலுக்கேற்ப எற்புமிக்கோடல் என்னும் உத்தியால் அநுபவ அறிவைக்குறித்து நின்றது. ஆகவே, சத்து அறியாது என்பதற்கு, ஒருசேர அறியும் என்பதனோடும் உயிர்க்கு அறிவித்தற்பொ

ருட்டு அறியும் என்பதனோடும் உயிரின் அநுபவத்தின் பொருட்டு அறியும் என்பதனோடும் முரணாதவாறு தன் அநுபவத்தின் பொருட்டு அறியாது என்று கொள்க. இனி உயிரின் அறிவு பலவேறு வகைப்படு மாயினும் அவையெல்லாம் ஆராய்ச்சி அறிவு அநுபவ அறிவு என்னும் இருவகையி னுள் அடங்கும். அவற்றுள், ஆராய்ச்சி அறிவாவது ஒருபொருளைக் கருவிகளா லறிவது. அநுபவ அறிவாவது ஒருபொருளை நேரே அறிவது. ஆகவே, இருதிறன் அறிவுளது என்றதற்குச் சத்து அசத்து இரண்டனையும் அநுபவ மாக அறியும் அறிவுடையது என்றுகொள்க.

“இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு வினைப்படு தொகுதி யின் உம்மைவேண்டும்” என்பது தொல்காப்பியம் சொல்லதிகாரம் கிளவி யாக்கம் சூத்திரம் ௩௩. இதன் கருத்து, உறுப்புச்சொல்லும் முதற்சொல் லும் தொழிலைப்பொருந்தி வருங்கால் முற்றும்மை வேண்டு மென்பதாம். அவ்வாறே இச்சூத்திரத்தில் இரண்டலா வென்றவிடத்தில் இரண்டு என் பது அல்லாததாய் என்னும் வினையைப் பொருந்தியிருப்பதால் முற்றும்மை வேண்டும். அவ்வும்மை தொக்குநின்றது. அதனை விரித்து இரண்டுமின்றிச் சதசத்தாயுள்ள என உரைசெய்யப் பட்டது.

சிற்றுரை.

இதனுள் யாவையுஞ் சூனியஞ் சத்தெதிராகலிற் சத்தேயறியா தென்றது ஓரதிகரணம்; அசத்திலதறியா தென்றது ஓரதிகரணம்; இருதிறன் அறிவுளதிரண்டலா ஆன்மாவென்றது ஓரதிக ரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திர மென்றுணர்க.

விளக்கம்.

வெ - டை.

முதலதிகரணம்.

பிரபஞ்சம் சிவனாலறியப் படாதெனக் கூறும்
மேற்கோள்.

ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியா தென்றது.

சிற்றுரை.

எ—து மேற்கோள் எ—னின். “தந்திடுஞ் சிவனவன்றன் சந்நிதி தன்னி னின்றே” எ-ம். “கூடுமொளிவளர் குடிலை மாயை மேவி” எ-ம், “தாரகமா மத்தன்று ணிற்றல்” எ-ம், “விமலனுக்கோர் சத்தியாய்”

எ-ம். "உலகமே யுருவ மாக"எ-ம், "அத்துவா மூர்த்தி யாகி"எ-ம், "இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி***நின்றவாறே"எ-ம், கூறப்படும் இயல்புடைய பிரபஞ்சத்தைச் சத்தெதிர் சூனியமென்றல் அவ சித்தாந்தமாய் முடியும் போலு மெனவும், "மண்டிய வுணர்வு யிர்க்காய் மன்னிநின் றறியும்" எனவுங் கூறும் சிவாத்துவிதசைவர் மதம்பற்றி நிகழுங் கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் முதற் கூற்றிற் போந்த ஏதுவைக் கண்ணழித்துரைத்து மேற்கோட லுதலிற்று.

(இ-ள்.) சுட்டுணர்வின்றி நின்றறியும் சிவசத்தின் முன்னர்ச் சுட்டி யறியப்படும் அசத்தாய பிரபஞ்சம் விளங்கித்தோன்றாது எ - று.

ஈண்டுச் சூனியம் என்றது விளங்காமைப் பொருட்டென்பார் பிரகாசியாதென்றார். இக்கருத்தேபற்றி "முனைத்திடா தசத்துச் சத்தின் முன்" என்றார் வழிநூலாசிரியரும். முனைத்திடாமை யாவது இதுகுடம் இஃது ஆடையென நம்மனோராற் சுட்டியறியப் படுமாறுபோல முதல்வனாற்சுட்டி யறியப்படுவதாய் வேறு நில்லாமையாம். ஆகவே, ஈண்டுச் சத்தெதிர் யாவையுஞ் சூனியமென் றது கொண்டு அவசித்தாந்தமாதல் யாண்டையதென மறுத்துச் சத்தறியாவென்றதனை வலியுறுத்தியவாறு காண்க.

விளக்கம்.

இம்மேற்கோள் சூத்திரத்திலுள்ள யாவையுஞ் சூனியம் சத்தெதிராக லிற் சத்தேயறியாது என்பதைப் பதச் சேதஞ்செய்து மேற் கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்னசொல்லிற்றோ வெனின், "சிவசத்தியின் சங்கற்பமாகிய சந்நிதியினாலேயே மாயைதன்காரியங்களைத் தோற்றுவிக்கும்" எனச் சித்தியார் க-ம் சூ-ம் கக-வது செய்யுளினும், "சிவபெருமான் சுத்தமாயையினைப் பொருந்தி"எனச்சிவப்பிரகாசம் க-ம் சூ-ம் உ-வது செய்யுளினும், "மாயைதனக் காதாரமாகிய சிவசத்தியில் நிற்கும்" என இந்நூல் க-ம் சூ-ம் உ-வது அதிகரணத்து உ-வது வெண்பாவினும், "மாயை இறைவனுக்கோர் சத்தி" எனச்சித்தியார் உ-ம் சூ-ம் இக-வது செய்யுளினும் கூறுதலால் பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாகிய மாயை முதல்வனுக்குப் பரிக்கிரக சத்தியென்பதும் அவன் திருவருளிலிருக்குமென்பதும் பெறப்பட்டன. "உலகமே உருவ மாக" எனச்சித்தியார் இ-ம் சூ-ம் எ-வது செய்யுளினும், "அத்துவா மூர்த்தி யாகி" எனச் சித்தியார் க-ம் சூ-ம் இகு-வது செய்யுளினும், இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி***நின்றவாறே எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகத்திலும் கூறுதலால், பிரபஞ்சம் முதல்வனுக்குத்

திருமேனி என்பது பெறப்பட்டது. இவ்வாறு முதல்வனுக்குப பிரபஞ்சம் திருமேனியாகவும் மாயை சத்தியாகவும் விளங்குமென்றதற்கு மாறாக இவ் விடத்தில் சத்தெதிர்யாவையுஞ் சூனியமென்று கூறல் அவசித்தாந்தமாய் முடியும். அன்றியும் சிவப்பிரகாசம் ௫-ம் சூ-ம் ௩-வது செய்யுளில் பூர்வபக் கக்கருத்தாக "மண்டிய உணர்வு யிர்க்காய் மன்னிநின் றறியும்"என்றதனால் உயிருக்காக இறைவன் அவ்வுயிரோடுபொருந்தி உலகத்தை அறிவன் எனப் பட்டு உலகம் இறைவன்முன் சூனியமென்றல் பொருந்தாதாகும். இவ்வாறு கூறுவோர் சிவாத்துவித சைவர். அவர்கூற்றை ஆசங்கித்துக்கொண்டு சூத் திரத்தின் முதற் கூற்றிற் கூறிய ஏதுவைப் பதச்சேதஞ்செய்து சத்தெதிர் யாவையுஞ் சூனிய மாதலின் சத்து அசத்தை அறியாது என்பதை வலியுறுத் தியவாறும்.

இவ்வதிகரணத்தில் பிரபஞ்சம் சிவனால் அறியப்படுமோ படாதோ என்பது ஐயப்பாடு. அறியப்படும் என்பது பிறர்பக்கம் என அறிக.

அவசித்தாந்தமாவது சித்தாந்தமல்லாதவற்றைக்கூறிச் சித்தாந்தமென் றல்.

ஏதுவை மேற்கோளாகக் கூறல் குற்றமாகாதோ வெனின், வேறு ஏதுக் கூறப்படுமாயின் குற்றமாகாது. அதாவது இம்மலை தீயுடைத்து, புகை உடைமையால் என்ற அனுமானத்தில் புகை ஏது. இந்த ஏதுவை மேற்கோ ளாகக்கொண்டு புகையுடைத்துத் தீயுடைமையால் என்பது குற்றம்; ஏதனு லெனின், தீயுள்ள இரும்பினிடத்துப் புகை யில்லாமையாலென்க. இனி இம்மலை புகையுடைத்து, வன்னியோடு ஈரவிறகின் கூட்டத்தால் என்று கூறின் குற்றமாகாது. இவ்வாறே உயிர் சத்தையும் அசத்தையும் அறியும் என்பதற்குச் சத்தெதிர் யாவையும் சூனியமென்றது ஏதுவாயிற்று. இந்த ஏதுவையே இவ்வதிகரணத்தில் மேற்கோளாகக் கொண்டுமெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலால் என்னும் வேறு ஏதுக் கூறுவதால் குற்ற மாகாமை யறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) ஒவ்வொன்றாகச் சுட்டியறிதலின்றி எவற்றுடனுங் கலந்து நின்று ஒரு சேர அறியும் சிவசத்தின் முன்னர்ச் சுட்டி யறிபப்படும் அசத்தாகிய பிரபஞ்சம் விளங்கித் தோன்றாது எ-று.

இச்சூத்திரத்தில் சூனிய மென்றது இல்லாமையைக் குறிக்கவில்லை. விளங்காமையைக் குறித்து நின்றது. அவ்வாறு குறித்து நின்றதென் பதை அறிவிக்கவேண்டியே சூத்திரத்தில் சூனியம் என்று கூறிய தைப் பதச்சேதஞ்செய்து பிரகாசியாது என இம்மேற்கோளிற் கூறினர். இக்கருத்தே பற்றிச் சிவஞான சித்தியார் ௭-ம் சூ-ம் ௧-வது செய்யுளில் "முனைத்திடாது அசத்துச் சத்தின்முன் இருள் இரவிமுன்போல்" என் றார் வழிநூலாசிரியரும். முனைத்திடாமை யாவது இது குடம் இது ஆடை யென நம்மனோரால் சுட்டியறியப் படுமாறு குடமும் ஆடையும் நம்மில்வேறா

தல் போலப் பிரபஞ்சம் முதல்வனல் சுட்டியறியப்படுமொழு வேறு நில்லாமையாம். ஆகவே, இச்சூத்திரத்தில் சத்தெதிர் யாவையும் சூனியமென்றது வேறுநில்லாமை பற்றியேயன்றிப் பொருளில்லாமை பற்றியன்று ஆதலால், பிரபஞ்சம் திருமேனி யென்றும் மர்யைதிருவருளில் நிற்குமென்றும் சத்தி என்றும் கூறியவற்றேடு மாறுபட்டு அவசித்தாந்த மாதலில்லை யென மறுத்துச் சத்தெதிர் யாவையும் சூனியமாதலால் உலகத்தைச் சத்தாகிய சிவம் அறியாது எனச்சூத்திரத்திற் கூறியதனை வலியுறுத்தியவாறு காண்க.

பிரபஞ்சம் சிவனுலறியப் படாமைக்குக் காட்டும்

ஏ து.

மெய்யினிடத்துப் போய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

சிற்றுரை.

எ—து எது எ—னின், முற்றுணர்வுடைய சிவத்துக்கு அசத்தைவிடயிப்பதாய சுட்டுணர்வும் உண்டென்றூற்படும் இழுக்கென்னை யென்பாரை நோக்கிமேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) தன்னியல்பாகிய இயற்கை யுணர்வின் முன்னர்ப் பொது வியல்பாகிய செயற்கைச் சுட்டுணர்வு பிரகாசித்து நில்லாமையான் ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப்பிரகாசியா தெனமேற்கொண்டது எ-று.

பிரகாசித்து நிற்றலின்மையாவது இயற்கை யுணர்வோடொப்பஒருங்குநில்லாமை. எக்காலத்தும் நிலைபெறுவதாய தன்னியல்பே மெய்யெனவும் இடையே தோன்றிமறைவதாய பொது வியல்பே பொய்யெனவும் கூறப்படுவன வாகலான் அவை ஈண்டைக்கேற்புடைய அறிவின் மேனின்றன. இஃதறியாதா ருரைப்பன வெல்லாம் மேற்கோளைச் சாதித்தற்குரிய எதுவாதல் செல்லாது கூறியதுகூறலாய் முடியுமென் றொழிக.

விளக்கம்.

இந்த எது என்னசொல்லிற்றே வெனின், எல்லாப் பொருளோடுங் கலந்து நின்று எல்லாப்பொருளையும் ஒருசேர அறியும் முற்றுணர் வுடைய சிவத்திற்கு அசத்தாகிய பிரபஞ்சத்தைச் சுட்டியறிவதாகிய சுட்டுணர்வும் உண்டு; அதனுற் பிரபஞ்சம் சுட்டியறியவும் படும் என்று கூறினல் உண்டாகும் குற்றமென்னை யென்பர் சிவாத்துவிதசைவர். அவரைநோக்கி முதல்வனுக்குச் சுட்டுணர்வு இல்லை; ஆதனல் பிரபஞ்சம் அவனுற் சுட்டியறியப்

படமாட்டாது எனக்கூறிச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது என்னும் மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த எதுவின்பொருள்.) முதல்வனுக்கு இயல்பாகவே உள்ள சிறப்புக் குணங்களுள் ஒன்றாகிய இயற்கை யுணர்வின் முன்னர்க் கருவிகளோடு கூடுதலா லுண்டாகும் பொதுவியல்பாகிய செயற்கைச் சுட்டுணர்வு பிரகாசித்து நில்லாமையால், ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாதென மேற்கோள் கூறியது எ-று.

செயற்கைச் சுட்டுணர்வு பிரகாசித்து நில்லாமையாவது, இயற்கை யுணர்வோடு ஒப்ப ஒன்றாய் நில்லாமை. இயற்கை யுணர்வென்பது கருவிகளின் துணையின்றித் தானாக அறியும் அறிவு. செயற்கை யுணர்வென்பது கருவிகளின் துணையால் அறியும் அறிவு. இந்தச்செயற்கை உணர்வானது இயற்கையா யுணரமுடியாத பொருளுக்கே வேண்டப்படும். இயற்கை யுணர்வுடைய பொருளுக்குச் செயற்கை யுணர்வு வேண்டப்படமாட்டாது. இயற்கை யுணர்வு எக்காலத்தும் நிலைபெற்றிருக்கும் தன்னியல்பாகும். செயற்கை யுணர்வு சேர்ந்தபொழுது உண்டாவதாலும் சுதந்தரமாயில்லாமையாலும் தோன்றிமறைவதான பொது இயல்பாம். ஆகவே, நிலைபெற்ற தன்னியல்பு மெய்யெனவும் தோன்றிமறைவதான பொதுவியல்பு பொய்யெனவும்படும். பொய்யென்பது நிலையாமையைக் குறித்து நின்றது. இந்த எதுவில் மெய் பொய்யென்பன, இந்த அதிகரணத்திற்கேற்ப மெய்யறிவு பொய்யறிவு என்னும் பொருளைக் குறித்து நின்றன. நிற்கவே, மெய்யறிவின் முன்னர் அதனோடொப்பப் பொய்யறிவும் விளங்கி நிற்கமாட்டாது ஆகலால் மெய்ப்பொருளின் முன்னர் பொய்ப்பொருள் பிரகாசிக்க மாட்டாதென்று முடித்துக் கொள்ளல்வேண்டும். இவ்வாறன்றி மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலால் என்றதற்கு மெய்ப்பொருளிடத்துப் பொய்ப்பொருள் அப்பிரகாசமாய் நிற்றலால் என்று உரைகூறின், மேற்கோளைச் சாதிக்கும் எதுவாகாமல் மேற்கோளையே எதுவாகக்கூறியதாய்க் கூறியதுகூறலென்னுங் குற்றமாகும். ஆதலால் அவ்வுரை பொருந்தாது.

இந்த எது, பிரபஞ்சம் சிவனால் அறியப்படும் என்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

பிரபஞ்சம் சிவனாலறியப்படாமைக்கும் அதுகொண்டு சிவனுக்கு இழுக்கில்லை யென்பதற்கும் காட்டும்

உதாரணம்.

அன்னியமில் லாமை யரற்கோன் றுணர்வின்று
மன்னியமில் லானசத்தைக் காண்குவனே—லன்னியமாக்
காணு னவன்முன் கதிர்முன் னிருள்போல
மாணு வசத்தின்மை மற்று.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின, சுட்டுணர்வின்மையான் முதல்வன் அசத்தை அறியானெனின் முற்றுணர்வுடைமைக் கிழுக்காமென் பாரை நோக்கி இழுக்கின்மை கூறி ஏதுவை வலியுறுத்துதனுத லிற்று.

(இ-ள்.) அன்னியம் இல்லாமை அரற்கு ஒன்று உணர்வு இன்று ஆம்—(தன்னுள் வியாப்பியமான பசு பாசங்களோடு) வேற்றுமை யின்றி உடனாய் நிற்றலையுடைய முதல்வனுக்குச் சுட்டியறியக் கிடப்பதொன்றில்லை (ஆகலான்),—அன்னியம் இல்லான் அசத்தைக் காண்குவனேல் அன்னியமாக் காணான்—அத்தன்மையனாகிய முதல்வன் அசத்தை அறியலுறுவனாயின் (அறிந்தாங்கறிவனன்றி நம்மனோர்போல) வேறாகச்சுட்டி அறிவானல்லன்,—கதிர் முன் இருள்போல அவன்முன் மாணா அசத்து இன்மை—ஞாயிற்றின்முன் இருட்டுப்போல அம்முதல்வன் எதிர் நன்மையில்லாத பிரபஞ்சம் விளங்கி நில்லாதாகலான் எ-று.

எனவே, அசத்தைவிடயிப்பதாகிய ஏகதேச உணர்வு முற்றுணர்வைத் தடுப்பதாகலான் அஃதில்லாமை முற்றுணர்விற்கு மேம்பாடாவதன்றி இழுக்காகாதென ஐயமகற்றி ஏதுவை வலியுறுத்தவாறு காண்க.

மாணாமை வியாபக உணர்விற்கு விடயமாகாமை. இன்மை ஈண்டு விளங்காமை குறித்து நின்றது. மற்று அசை. மற்றாக் காண்குவனேலென மேலே கூட்டி. வினைமாற்றின்கண் வந்ததெனினும் அமையும். உணர்வுங் கதிரும் ஆகுபெயர். கதிர்முன்னிருள் ஈண்டு முனையாமை மாத்திரைக்கு ஒரு புடை உவமையாயிற்றென்பது வழிநூலாசிரியர் "முனைத்திடா தசத்துச் சத்தின் முன்னிருளிரவிமுன்போல்" என்றவாற்றானறிக.

விளக்கம்.

இவ்வெண்பாவில் அவன்முன் மாணா அசத்து இன்மை எனக்கூட்டுக.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், ஏதுவின்படி முதல்வனுக்குச் சுட்டியறியும் அறிவு இல்லாமையால் அம்முதல்வன் அசத்தாகிய பிரபஞ்சத்தை அறியான் என்று கூறின், முற்றுணர்வு உடையவன் முதல்வன் என்பதற்குக் குற்றமாகுமென்பர் சிவாத்துவித சைவர். அவரைநோக்

இப் பிரபஞ்சத்தைச் சுட்டியறியாததுகொண்டு முற்றுணர்விற்குக் குற்ற மில்லை யெனக்கூறி மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான் என்னும் ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) தன்னுள் அடங்கியிருப்பதான பசுபாசங்களோடு வேற்று மையின்றி உடனாய் நிற்றலையுடைய முதல்வனுக்குச் சுட்டியறியும்படி வேறாய்க் கிடப்பதொன்றில்லை. ஆதலால் எல்லாப் பொருளோடுங்கலந்து உடனாய் நிற்குந் தன்மையனாகிய அம்முதல்வன் அசத்தாகிய பிரபஞ்சத்தை அறியவேண்டின் உடனாய் நின்று எல்லாப்பொருளையும் ஒருசேர அறிவ னேயன்றி நம்மனோர்போல வேறாய் நின்று ஒவ்வொன்றாய்ச் சுட்டி யறிய மாட்டான். எதனாலெனின், சூரியன் முன் இருள் முனைத்துத் தோன்றாத வாறுபோல அம்முதல்வன் சந்நிதியில் நன்மையில்லாத பிரபஞ்சம் விளங்கி நில்லாது ஆதலால் எ-று.

(க-ரை.) சூரியன்முன் இருள் விளங்கித் தோன்றாதவாறுபோல முதல் வன் சந்நிதியில் பிரபஞ்சம் விளங்கித் தோன்றாது ஆதலால் பிரபஞ்சத்தை முதல்வன் சுட்டி யறியான் என்பதாம்.

இவ்வாறு கூறியதனால் சுட்டியறியும் ஏகதேச அறிவு ஒருசேர அறி யும் முற்றுணர்வைத் தடுப்பது ஆதலால், அச்சுட்டுணர்வு இல்லாமை முற் றுணர்விற்கு மேம்பாடாவதன்றிக் குறையாகாது என மேல் நிகழ்ந்த ஐயத் தை அகற்றி ஏதுவை வலியுறுத்தியவாறு அறிக.

யாணு என்றது மாணுமை யென்க. மாணுமையாவது மாட்சி இல்லா மை. அது இவ்விடத்தில் உலகம் வியாபக உணர்வாகிய பேரறிவிற்கு அறியப்படும் மாட்சி இல்லாமையைக் குறித்து நின்றது. ஆதலால் மாணு அசத்து என்பதற்கு நன்மையில்லாத பிரபஞ்சமென உரைசெய்யப் பட்டது.

இறைவனால் பிரபஞ்சம் அறியப்படாதாயின் பிரபஞ்சத்திற்கு இறை வன் உபகாரம் வேண்டுவதில்லையோ வெனின், அது நிலைத்தற்கு இறைவ னுடைய ஆணையின் உபகாரம் வேண்டப்படும். படினும் தனக்குள் அடங் கிய பிரபஞ்சத்தைச் சுட்டி அறியாது ஒரு சேரஅறிவன். இது எதுபோல வெனின், ஒரு அரசன் தன் ஆணைக்குள்ளிருக்கும் பூமியைப் பிரித்து அறி யாது ஒரு சேர அறிவதுபோலென்க. இன்னும் அரசன் குடிகளோடு கலந்து நின்று தொழில்செய்தலேயன்றிக் குடிகள் பூமியோடுகலந்துநின்று தொழில் செய்வதுபோல பூமியோடு கலந்து நின்றுதொழில் செய்வதில்லை. அவ்வா றே இறைவன் உயிர்களோடு கலந்து நின்று பிரபஞ்சத்தை அறிவித்தல் அறிதலாகிய தொழில்களைச் செய்தலேயன்றி அதனோடு கலந்து அறிதற் றொழிலைச் செய்வதில்லை. அரசன் பூமியோடு கலந்துதொழில் செய்யா தொருபதினும் பூமி அரசன் உடைமையாறுயாபோல, இறைவன் பிரபஞ

சத்தைச் சுட்டி அறியா திருப்பினும் பிரபஞ்சம் இறைவன் உடைமையேயாம். ஆகவே பிரபஞ்சத்தை இறைவன்சுட்டி அறியான்என்பதற்கு இறைவன் பிரபஞ்சத்துடன் கூடித் தொழில் செய்வதில்லை யென்பது பொருளே யன்றிப் பிரபஞ்சம் நிலைத்தற்கு இறைவன் உபகாரம்வேண்டப் படுவதில்லை யென்பது பொருளன்றென அறிக.

மானா அசத்து என்றதன்பின்னாக நின்றஇன்மை இவ்விடத்து விளங் காமையைக் குறித்து நின்றது

இறுதியில் நின்ற மற்றுஎன்பது அசை.

மற்று என்பதை அசையாக்காமல் காண்குவனேல் என்னும் மேலே யுள்ள வாக்கியத்தின் மேலாகவைத்து மற்றுக் காண்குவனெனக் கூட்டி வினைமாற்றின்கண் வந்ததென்று கூறினும் பொருந்தும். வினைமாற்றாவது, உணர்வின்றாம் என்பதற்கு மாறாகக் காண்குவன் என்னும் பொருள் பயப்பது.

உணர்வு என்பது உணர்வால் உணரப்படுவதையும் கதிர் என்பது கதிரையுடைய சூரியனையுங் குறித்து நிற்றலால் உணர்வுங்கதிரும் ஆகுபெயர். கதிர்முன் இருள்போல அவன் முன் அசத்து இன்மை என்பது செய்யுள். இதற்குச் சூரியன்முன் இருள் இல்லாததுபோல முதல்வன் சந்நிதியில்பிரபஞ்சம் இல்லாமையால் என்று உரைசெய்யாமல், பிரபஞ்சம் விளங்கி நில்லாதாகலான் என உரைசெய்வானேனெனின், கதிர்முன் இருள் என்ற உவமை இவ்விடத்தில் முனையாமை மாத்திரையைக் குறித்த ஒருபுடை உவமையேயன்றி முனையாமையையும் இன்மையையும் குறித்த முற்றுவமையன்று. முற்றுவமையன்றென்பதை வழிநூலாசிரியர் சித்தியார் எ-ம்சூ-ம் க-வது செய்யுளில் "முனைத்திடா தசத்துச் சத்தின் முன்னிரு ளிரவி முன் போல்" என்ற வாற்றானறிக. இந்நூலில் இன்மை என்பதற்குப்பொருள் முனைத்திடாமையே யென்றும், அதற்குமட்டுமே இருள் உவமை என்றும் அறிவித்தற்கே வழிநூலாசிரியர் அவ்வாறு கூறியருளினாரென அறிக.

இனிச் சூரியன் மறைந்தபொழுது இருள்வேறிடத்தில் நின்று வாராமையால் சூரியன்முன் இருள் இருந்தும் முனைத்துத் தோன்றவில்லை யென முற்றுவமையாகக் கொண்டு அவ்வாறே முதல்வன் சந்நிதியில் பிரபஞ்சம் இருந்தும் முனைத்துத் தோன்றவில்லை யென்று கொண்டால் என்னையெனின், சூரியன் மறைந்தபொழுது விளங்குவதால் சூரியன் உள்ளபொழுதும் இருள் உண்டென்று அனுமானமாக அறிவதேயன்றிச் சூரியன் உள்ள பொழுதே பிரத்தியட்சமாக இருள் உண்டென்று அறியப்படுவதில்லை. பிரபஞ்சம் முதல்வன் எங்கும் பிரகாசமாய் விளங்கிக்கொண் டிருப்பவும் பிரத்தியக்ஷமாய் உண்டென்று காணப்படுகின்றது. அனுமானமாய்க் காணப்

படுவதற்குப் பிரத்தியக்ஷம் உவமையாகலாமேயன்றிப் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுவதற்கு அனுமானம் உவமையாகாது. ஆதலால் கதிர்முன்இருள் என்பதை முற்றுவமையாகக் கொள்ளாமல் ஒரு புடைஉவமையாகக் கொள்ளுதலே பொருத்தமெனஅறிக.

முதலதிகரணம் முற்றிற்று.

இரண்டாம் அதிகரணம்.

அசத்தாகிய சரணத்திற்கு அறிவில்லை யெனக்கூறும்

மேற்கோள்.

இனி அசத்தினுக்கு உணர்வின்று என்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், சத்து அசத்தை அறியாதாயினும் அசத்தெனப்பட்ட தனுகரண புவனபோகங்களுள் ஒன்றாய கரணம் விளக்குப்போல் விகாரமின்றி நிற்கும் ஆன்ம சந்நிதியிற் பெத்த நிலைக்கண் அசத்தாய விடயங்களை அறிந்தாற்போல முத்தி நிலையிற் சிவகரணமாய் நின்று சிவத்தை அறியுமென்றலும் கண்ணாடியினிழல்போல ஆன்மசந்நிதியின் அதன்கண் அறிவுண்டாமென்றலும் அமை வுடைத்துப்போலுமெனச் சிவசங்கிராந்தவாதி மதம்பற்றி நிகழுங் கடாவையாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங்கூற்றிற் போந்த ஏதுவைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

(இ-ள்.) வெ-டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ-ள்.) அசத்தினுக்கு—தத்துவப் பிரபஞ்சத்திற்கு,—உணர்வு—அறிவானது,—இன்றென்றது—இல்லை எ—று.

சிற்றுரை.

சூத்திரத்தின் இலதென்றது அறிவிலதெனும் பொருட்டென்பார் உணர்வின்றென உரைத்தார். ஈண்டு அசத்தென்றது தத்துவப்பிரபஞ்சத்தை; ஏனைப் பிரபஞ்சத்திற்கு அறிவின்மை சாதிக்க வேண்டாமையின்.

விளக்கம்.

இம்மேற்கோள் அசத்திலசறியா என்றசூத்திரக்கூற்றைப் பதச்சேதஞ் செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோவெனின், முதல் அதிகரணத் திற் கூறியவாறு சத்தாகிய சிவம் அசத்தாகிய பிரபஞ்சத்தை அறியாதாயி னும், அசத்தென்று கூறப்படும் தனுகரணபுவன போகங்களுள் ஒன்றாகிய கரணம், ஏனைய தனு புவன போகங்கள்போல் சடமல்லாமையால், விளக் கின் சந்நிதியில் கண்ணொளி பொருளை அறிவதுபோல, பெத்தநிலையில் விகாரமில்லாது நிற்கும் ஆன்ம சந்நிதியில் நின்று அசத்தாகிய விடயங்களை அறியும். அதுபோல முத்திநிலையிலும் அக்கரணமே சிவகரணமாய் ஆன்ம சந்நிதியில் நின்று சிவத்தை அறியும். ஆன்ம சந்நிதியில் சடமாகிய கரணத் திற்கு அறிவு உண்டாதல் எதுபோலுமெனின், கண்ணாடியின் சந்நிதியில் அதன் நிழலுக்குப் பிரகாசம் உண்டாவதுபோலும். இவ்வாறு கூறுவோர் சிவசங்கிராந்தவாதிகள். அவர் கூற்றை ஆசங்கித்துக்கொண்டு சூத்திரத் தின் இரண்டாங்கூறாகிய ஏதுவைப் பதச்சேதஞ் செய்து கரணத்திற்கு உணர்வின்று என்பதை வலியுறுத்தியவாறாம்.

இவ்வதிகரணத்தில் கரணத்திற்கு அறிவு உண்டோ இல்லையோ என் பது ஐயப்பாடு. உண்டு என்பது பிறர்பக்கம் என அறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) அசத்தாகிய தத்துவப் பிரபஞ்சத்திற்கு அறிவு இல்லை எ-று.

சூத்திரத்தில் அசத்திலது என்று கூறியதற்குப் பொருள் அசத்து இல்லையெனக் கொள்ளாமல் அசத்திற்கு அறிவு இல்லையென்று கொள்ளல் வேண்டுமென்பதை அறிவித்தற்பொருட்டு அக்கூற்றைப் பதச்சேதஞ் செய்து உரைத்த இம்மேற்கோளில் அசத்தினுக்கு உணர்வின்றென உரைத் தார். கண்ணாடியின் ஒளி நிழல்போலத் தோன்றினதேயன்றி ஒளியின் வேறாய் நிழலென வொன்றின்மையின் உயிரின் சந்நிதியில் கரணம் அறியும் என்பதற்குக் கூறிய அவ்வுவமை பொருந்தாமை யறிக.

இச்சூத்திரத்தில் அசத்தென்றது தனுகரணபுவன போகங்களையாயி னும் இவ்வதிகரணத்தில் அசத்தென்றது கரணமாகிய தத்துவப் பிரபஞ்சத் தையேயாம். சூத்திரத்துக்கு மாறாக ஒன்றைமட்டும் இவ்விடத்துக் கூற லாமோவெனின், கரணம் நீங்கிய ஏனைப்பிரபஞ்சத்திற்கு அறிவில்லை யென்பது சாதிக்கவேண்டாமையின் சாதிக்கவேண்டிய ஒன்றைக் கூறலாம் என்க.

கரணத்திற்கு அறிவில்லை யென்பதற்குக் காட்டும்

ஏ து.

அதுதா னிரூபிக்கில் இன்றாகலான்.

சிற்றுரை.

எ—து எது எ—னின், பதிஞான பசுஞானங்களோடொப்பப் பாசஞானம் ஒன்றெனவைத் தெண்ணப்படு முரிமையுடையவதனை அறிவுடைத்தன்றென்றல் பொருந்தாதென்பாரை நோக்கி மேற் கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்) அவ்வறிவாவது தூலமாய் நோக்கும்வழி அவ்வசத் திற்கு உள்ளதுபோலத் தோன்றினும் ஐயந் திரிபின்றி மாசறு காட்சியான் ஆராயும் வழி அதன்கண் இல்லதாகலான் 'இனி அசத் தினுக்கு உணர்வின்'றென மேற்கொண்டது எ-று.

எனவே, பாசம் வாயிலாக உயிரின்கண் ணிகழு ஞானமே பாசஞானமென்று உபசரித்துக் கூறப்படுமெதனைப் பாசத்திற்குள தாகிய ஞானமெனக் காண்டல் நிரூபியாத வழிப்படும் மடமையே பிறித்தில்லை யென்றவாறாயிற்று.

விளக்கம்.

இந்த எது என்ன சொல்லிற்றேவெனின், பதிஞானம் பசுஞானம் பாசஞானம் எனவழங்கும் முறைப்படி பதிஞான பசுஞானங்களோடு ஒப் பப் பாசஞானமும் ஒன்றெனவைத்து எண்ணப்படும் உரிமையுடைமை யால், அப்பாசத்தை அறிவுடையதன்று எனக் கூறுதல் பொருந்தாதென்பர் சிவசங்கிராந்தவாதிகள். அவரை நோக்கிப் பாசத்திற்கு அறிவில்லையென்க் கூறி மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த எதுவின் பொருள்) அப்பாச அறிவு என்பது பிண்டமான மேற்பார்வையால் நோக்குமிடத்து அசத்தாகிய அக்கருவிகட்கு உள்ளது போலத் தோன்றினும், சந்தேக விபரீதமின்றிக் குற்றமற்ற காட்சியால் ஆராயுமிடத்து அக்கருவிகளின்கண் அறிவு இல்லையென்பது விளங்கும். ஆதலால் இனி அசத்தினுக்கு உணர்வின்றென மேற்கோள் கூறியது எ-று.

காட்சியாவது நிருவிகற்பக்காட்சி, ஐயக்காட்சி, விபரீதக்காட்சி, சவி கற்பக்காட்சி யென நான்குவகைப்படும். அவற்றுள் ஒரு பொருளைப் பிண்டமாகக் காண்டல் நிருவிகற்பக்காட்சி. அதுவோ இதுவோ என ஐயுற்றுக் காண்டல் ஐயக்காட்சி ஒன்றைப் பிறிதொன்றாகக் காண்டல் விபரீதக்காட்சி. உள்ளவாறு விளங்கக்காண்டல் சவிகற்பக்காட்சி. சவிகற்ப மென்பது விகற்பத்தோடு கூடியது. விகற்பம் பொருளின் உண்மைத் தன்மை. இச்சவிகற்பக்காட்சியே குற்றமற்ற காட்சியாம். இக்குற்றமற்ற காட்சியாலாராயுமிடத்துக் கருவிகட்கு அறிவில்லையென்று கூறியதனால்

கருவிகளாகிய இந்திரியம் அந்தக்கரணங்களின் வழியால் உயிரினிடத்து உண்டாகின்ற ஞானத்தைக் கண்கண்டது மனம் நினைத்தது என அக்கருவிகளின் மேலேற்றிப் பாசஞானமென உபசரித்துக் கூறப்படும் அவ்வளவேயன்றிப் பாசத்திற்கு உளதாகிய ஞானமெனக் காண்டல், ஆராயாத விடத்து உண்டாகும் அறியாமையேயன்றிப் பிறிதில்லையென்று கூறியவாறாயிற்று.

கண் ஒரு பொருளைக் காணுங்கால் காணுந்தொழில் நிகழ்கின்றது என மட்டுங் காண்டல் நிருவிகற்பக்காட்சி. கண் கண்டதோ உயிர் கண்டதோ எனக் காண்டல் ஐயக்காட்சி. கண்ணே கண்டதெனக் காண்டல் விபரீதக்காட்சி. கண்ணின் வழியாய் உயிர் கண்டதெனக் காண்டல் குற்றமற்ற சவிகற்பக் காட்சி. இவ்வாறே ஒவ்வொன்றினிடத்துங் கண்டுகொள்க.

இந்த ஏது, கரணத்திற்கு அறிவு உண்டு என்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

சரணத்திற்கு அறிவில்லையென்பதற்குக் காட்டும்

உதாரணம்.

பேய்த்தேர்நீ ரென்றுவரும் பேதைக்கு மற்றணைந்த
பேய்த்தே ரசத்தாகும் பேற்றிமையின்—வாய்த்ததனைக்
கண்டுணர்வா ரில்வழியிற் காணு மசத்தின்மை
கண்டுணர்வா ரில்லதேனக் காண்.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், அதனை உவமை முகத்தான் வலியுறுத்ததனுதலிற்று.

(இ—ள்.) பேய்த்தேர் நீர் என்றுவரும் பேதைக்கு மற்று அணைந்த பேய்த்தேர் அசத்து ஆகும் பெற்றிமையின்—(பாலைநிலத்தின்கட் காணப்படுவதாய) பேய்த்தேரை நீரென்று கருதி (அதனையுண்ண) வருகின்ற (நீர்வேட்கையுடைய) மடவோனுக்கு (அதனையடுத்தவழித்) தன்னாலணையப்பட்ட அப்பேய்த்தேர் (நீராதலின்றிப்) பொய்யாந் தன்மைபோல,—வாய்த்து—(குரவன் அறிவுறுக்கும் உபதேசமொழி)கிடைத்து,—அதனைக்கண்டு உணர்வார் இல்வழியின் அசத்து இன்மைகாணும்—அவ்வசத்தினியல்பை ஆராய்ந்தறிவாரின்றி அறியமாட்டாதார் உள்வழிஅவர்க்கு (அதன் கண்ணறிவுள்ளதாய் மதிக்கப்படுஞ்) சத்தாந்தன்மையே காணப்படும்.—கண்டு உணர்வார் இல்லது எனக் காண்—(அவ்வுபதேச

மொழி கிடைத்து அதனியல்பை) யாராய்ந்தறிய வல்லார்க்கு (அவ் வசத்து) அறிவில்லதே யாமென்று அறிவாயாக எ-று.

மற்று- வினைமாற்று. மை பகுதிப்பொருள் விகுதி. இன் உவம உருபு. வாய்த்தென்பது வாய்ப்பவென்பதன்றிரிபு. வாய்த்தல் நேர் படுதல். ஆண்டைக் கேற்புடைய வினைமுதல் அவாய் நிலையான் வந்தது. அசத்தின்மையாவது சத்தாந்தன்மை. நான்கனுருபு விகா ரத்தாற்றொக்கது. அறிவென்பது அதிகாரத்தான் வந்தது.

விளக்கம்.

(இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ எனின், அசத்தினுக்கு உணர் வின்று என மேற்கோளிற் கூறியதனை உவமையினால் வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) தண்ணீரும் மரஞ்செடி முதலியனவும் இல்லாத பாலைநிலத்தின் கண்ணே காணப்படுகின்ற பேய்த்தேரென்று கூறப்படுவதாகிய கானலை நீ ரென்று எண்ணி அந்நீரை உண்ணவருகின்ற நீர் விருப்பமுடைய அறிவில் லாதவனுக்கு, தண்ணீரென்று கருதி அக்கானலையடுத்தவிடத்துத் தன்னா லணையப்பட்ட அக்கானல் தண்ணீராதலின்றிப் பொய்யாகுந் தன்மைபோல, ஆசிரியன் உபதேசிக்கும்படியான உபதேசமொழி கிடைத்து அவ்வசத்தின் தன்மையை ஆராய்ந்தறிவாரில்லாதவிடத்து உண்மையினை யறியுந்தன்மை இல்லாத அவர்க்கு அசத்தாகிய கருவியினிடத்து அறிவுள்ளதாய் மதிக்கப் படுஞ் சத்தாந்தன்மையே காணப்படும். அவ்வுபதேசமொழி கிடைத்து அசத்தின் தன்மையை ஆராய்ந்தறியவல்லார்க்கு அவ்வசத்தாகிய கருவி அறிவில்லாததேயாகும் என அறிவாயாக எ-று.

(க-ரை.) அறியாதவனுக்குக் கானலானது நீராய்த் தோன்றினும் நெருங் கிப்பார்த்தவிடத்து நீரென்பது இல்லாதவாறுபோல, ஆராய்ந்தறியாதவிட த்துக் கருவி அறிவுடையதுபோலத் தோன்றினும் அறிந்தவிடத்து அக் கருவி அறிவில்லாததேயாம் என்பதாம்.

மற்று என்பது நீரென்று தோன்றி அதற்கு மாறாக நீரில்லையென்று தோன்றும் என்றபொருள் பயப்பதால் வினைமாற்றின்கண் வந்தது.

பெற்றிமையின் என்பதிலுள்ள மையென்பது பெற்றியென்னும் பகு திப்பொருளையே குறித்து நிற்றலால் பகுதிப்பொருள் விகுதி.

பெற்றிமையின் என்பதிலுள்ள இன் என்பது போல என்னும் உவமை குறித்து நிற்றலால் உவமஉருபு. வாய்த்து என்றது இறந்தகாலச்சொல். கண்டுணர்வார் என முன்வருகின்றதற் கேற்ப வாய்ப்ப என எதிர்காலச் சொல்லாற் கூறவேண்டுவதை எதுகைநயம்பற்றி வாய்த்து எனத் திரித்துக் கூறினர். வாய்த்தலாவது உபதேசமொழி நேர்படுதல். யார் உபதேசமொழி

என்னும். அவாநிகழுமாதலின், அந்த அவாய் நிலையால் அவ்வுபதேசத்தைச் செய்யும் குரவன் என்பது வருவித்து, குரவன் அறிவுறுக்கும் உபதேச மொழிகிடைத்து என உரைசெய்யப்பட்டது.

அசத்தின்மை என்பது அசத்து இல்லையென்னும் பொருளைக் குறிக்காது அறிவுள்ளதாய்க் காணப்படுஞ் சத்தாந் தன்மையைக் குறித்து நின்றது.

கண்டுணர்வார் என்பதில் நான்காம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. அதனைவிரித்து ஆராய்ந்தறியவல்லார்க்கு என உரைசெய்யப்பட்டது.

இல்லதெனக் காண் என்பது இவ்வதிகாரம் உண்மை அதிகாரமானதால் அறிவு இல்லை யென்னுங் கருத்தில் நின்றது. பொருளில்லையென்னுங் கருத்தில் நிற்கவில்லை. ஆதலால் அறிவு என்பது அதிகாரத்தால் வருவித்து அறிவில்லதேயாமென உரை செய்யப்பட்டது. அசத்திலது என்னும் சூத்திரக்கருத்தைப் பதச்சேதஞ்செய்து மேற்கோள் கூறுங்கால் அசத்தினுக்கு உணர்வு இன்று எனக்கூறியதும் உண்மை அதிகாரம்பற்றியே யாம். பதிபசுபாசமென்னும் முப்பொருளும் சிறப்பாக உண்டென்று கூறுவதே உண்மையதிகாரமென நூலாரம்பத்திற் கூறியிருக்கின்றமை அறிக.

இரண்டாம் அதிகரணம் முற்றிற்று.

மூன்றும் அதிகரணம்.

சத்து அசத்து இரண்டனையும் அறியும் பொருள் உயிரெனக்கூறும் மேற்கோள்.

இனி இருதிற னறிவுள திரண்டலா வான்மாவென்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், சிவசத்தின் தன்மையே உயிர்க்குத் தன்மை யாவதன்றி வேறில்லையாகலிற் சத்தே அசத்தை அறியுமென்னுஞ் சிவாத்துவித சைவரையும், உயிர்க்குத் தன்மையென்பதொன்றின்மையின் அசத்தே சத்தை அறியுமென்னுஞ் சிவசங்கிராந்தவாத சைவரையும் மறுத்துச் சத்துமசத்துந் தம்முள் அறியுமாறில்லையென மேற்சாதித்தவழி இரண்டும் இவ்வாறாயின் இவற்றை அறியும் பொருள் வேறென்னை யென்பாரை நோக்கிப் பாரிசேட அளவையான் அவ்விரண்டின் வேறாய் உயிர்க்குத் தன்மை உண்டென்பது விளக்கிச் சதசத்தினியல்பை வரைசெய்துணர்த்துதனுதலிற்று.

இ-ள். வெ-டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ-ள். இருதிறன்—சத்து அசத்தென்னும் இரண்டினியல்பை,—அறிவுளது—அறியும் பொருள்,—இரண்டலா—சத்தும் அசத்தும் அல்லாத,—ஆன்மா—சதசத்தாகிய உயிராம் எ-று.

சிற்றுரை.

ஈண்டு இரண்டலாவான்மா இருதிறனறிவுளதென்றது சத்தெதிர் நில்லாத அசத்தும் சத்தந் தம்முள் ஒன்றுனென்றறியப் படாமையான் இருதிறனறிவுளது இரண்டலாவான்மாவேயாம்; தம்முள் ஒன்றுனென்று அநுபவிக்கப்படாத ஞாயிற்றையும் விடயத்தையும் அநுபவிக்கும் கண்போலுமென அனுமானங் கூறிக் காண்க. அவை உயிரானும் அறியப்படாதவழிப் பயப்பாடின்றிச் சூனியமாய் முடியுமாகலான் உயிரறிதற் றன்மைத்து என்பது தெற்றென உணர்க.

விளக்கம்.

இம்மேற்கோள் இருதிறனறிவுளதிரண்டலாவான்மா என்னுஞ் சூத்திரத்தின் மூன்றுங் கூற்றைப் பதச்சேதஞ் செய்யாமல் மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோ எனின், முதலதிகரணத்தால் "மண்டிய உணர்வுயிர்க்காய் மன்னி நின்றறியும்" என்றபடி சிவமாகிய சத்தின் தன்மையே உயிர்க்குத் தன்மையாவதன்றி உயிர்க்குத் தனித்தன்மை இல்லையாதலால் சத்தாகிய சிவமே அசத்தாகிய பிரபஞ்சத்தை அறியும் எனக்கூறும் சிவாத்துவித சைவரை மறுத்துச் சத்து அசத்தை அறியாதெனவும், இரண்டாம் அதிகரணத்தால் ஆன்ம சந்நிதியில் கரணம் அறிதற்றொழிலைச் செய்யுமாதலின் உயிருக்குத் தன்மை யொன்றில்லை ஆதலால் அசத்தாகிய கரணமே சத்தாகிய சிவத்தை அறியும் என்னும் சிவசங்கிராந்தவாத சைவரை மறுத்து அசத்துச் சத்தை அறியாதெனவுங் கூறியவிடத்து, இவ்வாறு சத்து அசத்தையும் அசத்துச் சத்தையும் அறியாதாயின் இவ்விரண்டனையும் அறியும் பொருள்வேறென்னை யென்பாரை நோக்கிப் பாரிசேட அளவையால் சத்து அசத்துச் சதசத்து என்னும் மூன்றனுள், சத்து அசத்து என்னும் இரண்டனையும் விலக்கவே, அவ்விரண்டின் வேறாய்ச் சதசத்தாகிய உயிரே அவ்விரண்டனையும் அறியும் எனவும், அவ்விரண்டின் தன்மையின் வேறாய் உயிர்க்குத் தனித்தன்மை உண்டெனவும் விளக்கிச் சூத்திரத்தின் மூன்றுங் கூற்றைப் பதச்சேதஞ்செய்யாது எடுத்துக்கொண்டு சதசத்தாகிய உயிரின் இயல்பை வரைசெய்து உணர்த்தியவாறும். சூத்திரக்

கூற்றைப் பதச்சேதஞ் செய்யாமல் மேற்கோள் கூறியதன் கருத்தென்னை யெனின், பின்னர்ப் பொழிப்புரை ஆசிரியர் தாமே அருளிச்செய்கின்றா ராதலின் என்க.

இவ்வதிகரணத்தில் சத்து அசத்து இரண்டனையும் அறியும் பொருள் அவ்விரண்டின் வேறாய் உண்டோ இல்லையோ என்பது ஐயப்பாடு. இல்லை யென்பது பிறர்பக்கம் என அறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) சத்து அசத்து என்னும் இரண்டின் இயல்பை அறியும் அறிவுடைய பொருள் சத்தும் அசத்தும் அல்லாத சதசத்தாகிய உயிராம் எ-று.

இவ்வதிகரணத்திற் கூறிய மேற்கோளுக்கு முன்னைய இரண்டதிகர ணத்தின் மேற்கோளும் ஏதுவாதலால் இவ்விடத்தில் வேறு ஏதுக்கூறாமல் மேற்கோளுக்குப் பொழிப்புரையும் அப்பொழிப்புரையை விளக்குந் திருட் டாந்தமும் நூலாசிரியர் அருளிச்செய்கின்றார். ஆதலால் ஏனைய அதிகர ணங்கள்போல் இவ்வதிகரணத்திற்கும் ஏது திருட்டாந்தமாகிய அனுமா னத்தை முன்னைய இரண்டதிகரணங்களைக்கொண்டு கூறி முடித்துக் கொள்க. எவ்வாறெனின், இரண்டலாவான்மா இருதிறனறிவுளது என் பது மேற்கோள். சத்தெதிர் நில்லாத அசத்தும் சத்தும் தம்முள் ஒன்று ஒன்றை அறியப்படாமையால் என்பது ஏது. சூரியனைப் பொருள்கள் அநுபவியா; பொருள்களைச் சூரியன் அநுபவியான்; இவ்வாறு ஒன்று ஒன்றை அநுபவிக்கப்படாத சூரியனையும் பொருள்களையும் அநுபவிக்குங் கண்போ லென்பது திருட்டாந்தம். ஆதலால் இருதிறனறிவுளது இரண் டலா ஆன்மாவேயாம். இவ்வாறு அனுமானத்தை முடித்துக்கொள்க.

இருதிறனறிவுளது இரண்டலா ஆன்மாவென்னும் சூத்திரக்கூற்றை அனுமானத்திற்கு எடுத்துக்கொள்ளுங்கால் இரண்டலாவான்மா இருதிற னறிவுளது என்று மாறிக் கூறுவானேனெனின், பக்கத்தை முன்னரும் துணிபொருளைப் பின்னருங்கூறுதல் முறைமையாதலால் ஆன்மாவாகிய பக்கத்தை முன்னரும் இருதிறனறிவுளது என்னுந் துணிபொருளைப் பின் னருங் கூறியதென அறிக. ஆகவே இவ்வனுமானத்தில் ஆன்மா பக்கம், கண் சபக்கம், ஆன்மாவின் இருதிறனறிவு துணிபொருள். சத்தும் அசத் தும் ஒன்றையொன்று அறியாமை ஏது. கண்ணொளி திருட்டாந்தம் என அறிக. பக்கம் என்பது துணிபொருளிருக்கும் இடம். சபக்கம் என்பது திருட்டாந்தம் இருக்கும் இடம்.

சத்து அசத்தாகிய அவ்விரண்டும் உயிராலும் அறியப்படாதவிடத்துப் பயன்படும் பொருளாயில்லாமல் சூனியமாய் முடியும். ஆதலால் அவ்விரண் டும் உயிரால் அறியுந் தன்மையை உடையன என்பதைத் தெளிவாயறிக.

உயிரின் தன்மை வேறு வேறு கூறுவாரை மறுத்து
இம்மேற்கோளுக்கு நூலாசிரியர் அருளிய
பொழிப்புரை.

இவ்விரண்டினையும் அறிவதாய், உபதேசியாய், நின்ற அவ்வறிவு இரண்டன்பாலுமுளதாய் உள்ளவதுவே அவ்வான்மாவாமென்றது.

சிற்றுரை.

எ—து பொ—ரை எ—னின், இருதிறனறிவென்னுந் தொகைச்சொல் விரியுங் காற்படும் பொருள்வேறுபாடு விளக்கு முகத்தான் உயிருக்குத் தன்னியல்பு வேறு வேறு கூறுஞ் சமயங்களெல்லாம் மறுக்கப்படுமா றுணர்த்துதனுதலிற்று.

(இ—ள்.) இவ்விரண்டினையும் அறிவதாய்—மேற்கூறிப்போந்த சத்தையும் அசத்தையும் அறியுந் தன்மைத்தாய்,—உபதேசியாய்—அறிவிக்க அறியுந் தன்மைத்தாய்,—அவ்விரண்டன்பாலும் நின்ற அறிவு உளதாய்—அவ்விரண்டின்கண்ணும் நிலைபெற்ற அநுபவ அறிவு உள்ளதாய்,—உள்ள அதுவே அவ்வான்மாவாமென்றது—இவ்வாறுள்ள பொருள்யாது அதுவே சத்தும் அசத்துமல்லாத சதசத்தாகிய உயிரென்றவாறும். இருதிறனறிவுளதிரண்டலாவீரன்மாவென மேற்கொண்டது எ—று.

ஆய் என்னும் வினையெச்சம் மூன்றும் உள்ளவென்னும் பெயரெச்ச வினைக்குறிப்போடு முடிந்தன.

இருதிறனறிவென்னுந் தொகைச்சொல் ஈண்டு மூன்று பொருளின் மயங்கிற்றென்னுங் கருத்தான் இவ்வாறு மொழிந்தார். அவற்றுள் இருதிறனையு மறியுமறிவென்னும் இரண்டாம் வேற்றுமைத் தொகைப்பொருள்பற்றி இவ்விரண்டினையுமறிவதாய் எனவும், இருதிறனல் விளங்கிய வறிவென்னும் மூன்றும் வேற்றுமைத் தொகைப்பொருள்பற்றி உபதேசியாய் எனவும், இருதிறனினுமுள்ள வறிவென்னும் ஏழாம் வேற்றுமைத் தொகைப்பொருள் பற்றி நின்றவறிவு இரண்டன்பாலு முளதாய் எனவும் உரைக்கப்பட்டன

இவ்விரண்டினையு மறிவதாயுள்ளவது வென்பதனல் இரண்டும் இவ்வாறாயின் இவற்றை அறியும்பொருள் வேறென்னையென்னுங் கடாவுக்கு விடைகூறி அவ்விருவர் மதங்களையும் அவற்றோடு ஒருதன்மைபவான சமயங்களையும் மறுத்தவாறு.

சாதனவியல்ஏழாஞ்சூத்திரம். ௩-ம் அதி.

உபதேசியாயுள்ளவது என்றதனால் உயிர் அறிவிக்க வேண்டாது தானே அறியும் இயல்பிற்றென்னும் சமவாத சைவர் ஈசுர அவிகாரவாதசைவர் ஐக்கியவாதசைவர் மதங்களையும் அவற்றோடொருதன்மையவான சமயங்களையும் மறுத்தவாறு.

இரண்டன்பாலுமுளதாயுள்ள வது வென்பதனால் ஆன்மாவினறிவு சத்தோடு கூடுமாறில்லையென்னும் பாடாணவாதசைவர், பேதவாதசைவர் மதங்களையும், சத்தோடுகூடியவழி ஒன்றாய்ப் போதலேயன்றி அதன்பாலுளதாமாறில்லையென்னுஞ் சுத்தசைவர் மதத்தையும், அவற்றோடொருதன்மையவான சமயங்களையும் மறுத்தவாறு.

இவ்விரண்டனையு மறிவதா யெனவே அவ்வறியுந் தன்மை இவ்விரண்டின்தன்மைபோலன்றி "இருளொளியலாக்கண்"டன்மை போலவேறாயதோர் தன்மை யென்பதூஉம், உபதேசியாய் எனவே அஃதாகாயத்தின் குணமாய ஓசையினியல்புபோலத் தன்னை விளக்குவதாகிய வியஞ்சகமுள்வழி விளங்குவதோர் தன்மை யென்பதூஉம், இரண்டன்பாலு முளதாயெனவே அத்தன்மை படிகம்போலச் சார்ந்ததன் வண்ணமாய் அழுந்துந் தன்மை யென்பதூஉம் பெறப்பட்டன

விளக்கம்.

இப்பொழிப்புரை, இருதிறனறிவுளதிரண்டலாவான்மா என்னும்மேற்கோளுக்கு நூலாசிரியர் அருளியதாகும். இதனை ஏனைய அதிகரணங்களோடொப்ப ஏதுவென்று கூறாமல் பொழிப்புரை யென்பானேன் எனின். ஏதுவிற்கு உரிய ஆனுருபு இறுதியில் விரியாமல் என்றது என முடிந்திருத்தலால் என்க. மேற்கோளிலுண்டாகும் ஐயத்தை நீக்குதற்கு ஏதுக் கூறுதல் போல இம்மேற்கோளிலுள்ள ஐயத்தை நீக்குதற்கு இப்பொழிப்புரை அருளினர்.

இப்பொழிப்புரை என்ன சொல்லிற்றோவெனின், மேற்கோளிலுள்ள இருதிறனறிவு என்பது வேற்றுமை உருபு அடங்கியிருக்கும் தொகைச் சொல்; ஆதலால்' அவ்வுருபு விரியுங்கால் உண்டாகும் பொருள்வேறுபாடு கூறி அவ்வாறு கூறும் முறையில் உயிர்க்குச் சிறப்பிலக்கணம் வேறு வேறு கூறும் சமயங்களை யெல்லாம் மறுக்கும் முறைமை கூறியவாறாம்.

(இப்பொழிப்புரையின் பொருள்.) மேல் இரண்டதிகரணங்களாற் கூறி முடித்த சத்தாகிய சிவத்தையும் அசத்தாகிய பிரபஞ்சத்தையும் அறியுந் தன்மையுடையதாய், அவ்வாறு அறிவதும் தானே அறிதலின்றி அறிவிக்க அறியுந் தன்மையுடையதாய், சத்து அசத்து ஆகிய அவ்விரண்டின்

கண்ணும் அதுவதுவாய் நின்றழுந்தும் நிலைபெற்ற அநுபவ அறிவு உடையதாய் உள்ள பொருள்யாது? அதுவே சத்தும் அசத்தும் அல்லாத சதசத்தாகிய உயிராம். ஆதலின் இருதிறனறிவுளதிரண்டலாவான்மா என மேற்கோள் கூறப்பட்டது. எ-று.

அறிவதாய் உபதேசியாய் உளதாய் என்ற மூன்று வாக்கியங்களிலுமுள்ள ஆய் என்னும் வினையெச்சம் மூன்றும், உள்ள என்னும் பெயரெச்ச வினைக்குறிப்போடு முடிந்தன. உள்ள என்னும் பெயரெச்சம் அதுவென்னும் சுட்டுப் பெயர்கொண்டு முடிந்தது. காலங்காட்டாமையின் உள்ள என்பது வினைக்குறிப்பு.

இவ்வாறு மூன்று வினையெச்சமாகக் கூறிய கருத்தென்னையெனின், இருதிறன் அறிவு என்னுந் தொகைச்சொல் இவ்வதிகரணத்தில் மூன்று உருபுகள் விரித்து பொருள் தரும் வகையில் நின்றது என்னுங் கருத்தால் என்க.

அம்மூன்று உருபுகளுள் இரண்டாம் வேற்றுமை ஐயுருபைவிரித்து இருதிறனையும் அறியும் அறிவு என்னும் பொருள்பற்றி இவ்விரண்டினையும் அறியும் அறிவதாய் எனவும், மூன்றாம் வேற்றுமை ஆலுருபை விரித்து இருதிறனால் விளங்கிய அறிவென்னும் பொருள்பற்றி உபதேசியாய் எனவும், ஏழாம் வேற்றுமை இல் உருபைவிரித்து இருதிறனிலுமுள்ள அறிவென்னும் பொருள்பற்றி நின்ற அவ்வறிவு இரண்டன்பாலும் உளதாயெனவும் உரைக்கப்பட்டன.

இவ்வாறு உருபுகளைவிரித்துப் பொருள் கூறியதால் உயிர்க்குச் சிறப்பிலக்கணம் வேறு வேறு கூறுவாரை மறுத்தவாறுமாயிற்று. எவ்வாறெனின்,

இரண்டாம் வேற்றுமை உருபைவிரித்து இவ்விரண்டனையும் அறிவதாயுள்ள அது என்றதனால், சத்து அசத்தை அறியாது அசத்துச் சத்தை அறியாது இரண்டும் இவ்வாறு ஒன்றனையொன்று அறியாதாயின் இவ்விரண்டினையும் அறியும் பொருள் வேறென்னையென்னும் வினவிற்கு உயிரே அறியுமென விடைகூறி, உயிருக்காகச் சத்து அசத்தை அறியும் எனவும் உயிரின் சந்நிதியில் அசத்துச் சத்தை அறியுமெனவுங் கூறும் அவ்விருவர் மதங்களையும் அவ்விருமதங்களோடு ஒருதன்மையவான சமயங்களையும் மறுத்தவாறும்.

மூன்றாம் வேற்றுமை உருபைவிரித்து உபதேசியாயுள்ள அது என்றதனால், உயிர் அறிவிக்க அறியுந்தன்மை இன்றித் தானே அறியுந்தன்மையுடையதென்னும் சிவசமவாதசைவர் ஈசுரஅவிகார வாதசைவர் ஐக்கியவாதசைவர் மதங்களையும் அம்மதங்களோடு ஒருதன்மையவான சமயங்களையும் மறுத்தவாறும்.

சாதனவியல்ஏழாஞ்சூத்திரம். ௩-ம் அதி.

ஏழாம் வேற்றுமை உருபைவிரித்து இரண்டன்பாலு முளதாயுள்ள அது என்றதனுல் முத்தியினும் மலம் நீங்காது ஆதலால் ஆன்மாவின் அறிவு சிவத்தோடு கூடாமல் முத்தியில் மலத்தில் அடங்கிக் கற்போற் கிடக்கும் என்னும் பாடாணவாதசைவர் மதத்தையும், மலம் நீங்குதலே முத்தியன்றிச் சிவபெருமான் திருவடியை அடைய வேண்டுவதில்லையென் னும் பேதவாதசைவர் மதத்தையும், சத்தாகிய சிவபெருமானேடு கூடிய விடத்து உயிர் ஒன்ருய்ப்போதலேயன்றிச் சிவத்தின்பால்நின்று சிவானந் தத்தை அநுபவிக்குமாறில்லை என்னும் சுத்தசைவர் மதத்தையும் அம்மதங்க ளோடு ஒருதன்மையவான சமயங்களையும் மறுத்தவாருூம்.

இவ்வாறு மறுத்ததனுல் ஆன்மாவின் சிறப்பிலக்கணமும் உணர்த்திய வாருூம். எவ்வாறெனின், இவ்விரண்டினையும் அறிவதாய் என்று கூறிய தனுல் ஆன்மாவின் அறிவு சத்துப்போல் ஒருசேர அறியுந்தன்மையும் அசத்துப்போல் அறியாத தன்மையுமின்றி, இருளின்றன்மையும் ஒளி யின் றன்மையுமல்லாத கண்ணின் தன்மைபோல ஏகதேசமாய் அறியும் வேருயதோர் தன்மையது என்பதூஉம், உபதேசியாய் என்றதனுல் அந்த ஏகதேச அறிவும் ஆகாயத்தின் குணமாகிய ஓசை துணையுள்ள விடத்து விளங்குவதுபோலப் பெத்தத்தில் கருவியையும் முத்தியில் திருவருளையும் துணையாகக்கொண்டு விளங்குந் தன்மையது என்பதூஉம், இரண்டன்பா லும் உளதாயென்றதனுல் துணையைக்கொண்டு விளங்கும் ஏகதேச அறி வும் சார்ந்த பொருளின் வண்ணமாய் விளங்கும் படிகம்போல் அசத்தொடு சார்ந்தவிடத்து அசத்தாயும் சத்தொடு சார்ந்தவிடத்துச் சத்தாயும் இவ் வாறு சார்ந்ததன் வண்ணமாய் அழுந்துந்தன்மையது என்பதூஉம் பெறப் பட்டன.

இப்பொழிப்புரை சத்து அசத்து இரண்டனையும் அறியும் பொருள் வேறில்லையென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

சத்து அசத்து இரண்டினையும் அறிவது ஆன்மா என்பதற்கும் அவ்விரண் டினையும் அறியும் முறையில் தன்னை அறியு மென்பதற்கும் காட்டும்

உதாரணம்.

அருவுருவந் தானறித லாயிழையா யான்மா
வருவுருவ மன்ருகு முண்மை—யருவுருவாய்த்
தோன்றியுட னில்லாது தோன்ருது நில்லாது
தோன்றன் மலர்மணம்போற் ருேக்கு.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், அம்மூன்றனுள் முன்னையதனை வலி யுறுத்தி இரண்டலாமையை விளக்குதனுதலிற்று.

(இ-ள்.) ஆய் இழை ஆய் ஆன்மா அருவுருவம் அறிதல் அருவுருவம் அன்று ஆகும்—நுணுகிய நூல்களை ஆராய்வதாகிய உயிரே சத்து அசத்து என்னும் இரண்டினையும் அறிவதாகலான் அஃதவ்விரண்டுமின்றி அவற்றின் வேறாம். (அற்றேல், அவ்விரண்டனையும் அறியும் உயிர்க்குத் தன்னுண்மை யறியப்படுமோ படாதோ வெனக் கடாயினர்க்குப் படுமெனிற்றன்னோடுளப்பட மூன்றனையும் அறிவதென்னாது அவ்விரண்டனையுமறிவதாய் என்றல் பொருந்தாது; படாதெனின் அறியப்படாத பொருள் சூனியமெனப்பட்டு வழுவாமாலெனின்),—உண்மை அருவுருவாய்த் தோன்றி உடனில்லாது தோன்றாது நில்லாது மலர்மணம்போல் தொக்குத் தோன்றல்—அவ்வான்மாவின் உண்மைத் தன்மை அவ்விரண்டும்போல விளங்கித் தோன்றி அவற்றோடொப்ப நிற்பதுமன்றாய் விளங்காது சூனியமாய் நிற்பதுமன்றாய் மலரின்கண் வாசம் (அவ்விருவகையுமின்றி அதன்கண் ணடங்கித் தோன்றுமாறு) போலச் (சத்திலும் அசத்திலும் சார்ந்ததன்வண்ணமாய்) அடங்கித்தோன்றுவதோரியல்பாம்; (ஆகலான், அஃதவைபோலத் தனித்தறியப்படுவதொன்றன்றி அவ்விரண்டினையும் மறியுமுகத்தான் அறியப்படுவதாம்.) எ-று.

ஆகலான் அஃதவைபோலத் தனித்தறியப்படுவதொன்றன்றி அவ்விரண்டினையு மறியுமுகத்தான் அறியப்படுவதா மென்பது குறிப்பெச்சம்.

சுட்டுணர்விற்கு விடயமாகாமைபற்றிச் சத்தை அருவென்றும் அதற்கு விடயமாதல்பற்றி அசத்தை உருவென்றும் கூறினர்; உணர்வுருவசத்தென்புழி உருவென்றதூம் அது நோக்கி. செவ்வெண்டொகை விகாரத்தாற்றொக்கது. தான் அசை. அறிதலானன்றாகுமென வியையும். இழை நூலாகலான் ஈண்டுச் சாத்திரத்தை உணர்த்திற்று. ஆய்தல் நுணுகுதல். "ஒய்தலாய்தனிழத்தல் சாஅ—யாவையி னுங்கு முள்ளத னுணுக்கம்." என்றார் தொல்காப்பியனாரும். ஆயிழையா யெனப் பொருளினுணுக்கம் நான்மேலேற்றப்பட்டது. இரண்டாவது விரித்துரைக்க.

உயிர்க்கு அறியுந்தன்மை யுண்டாகலானன்றே வேதாகமமுதலிய நூல்களுளவாயினவென அதனை வலியுறுத்துவார் ஆயிழையாயன்பாவென அதனை உடம்பொடு புணர்த்தோதினர். இக்கருத்தேபற்றி, "பலகலை யுலகி னிலவுத லானும்" என்றார் புடை

நூலாசிரியரும். இவ்வாறன்றி ஆயிழையாயென மகடூஉ முன்னிலை யாக்குவார்க்கு இவ்வுதாரணம் மேலதனை வலியுறுத்துதற் கெழுந்ததன்றாய்க் கூறியது கூறலென்னும் வழுவாய் முடியுமென் றொழிக.

தேற்றேகாரம் விகாரத்தாற் றொக்கது. அருவுருவா யென்புழி ஆக்கச்சொல் உவமைப்பொருள்குறித்து நின்றது: "ஆள்வாரிலி மாடாவேனோ" என்றாற்போல. தொக்குத் தோன்றன் மலர் மணம்போலெனக் கூட்டுக.

விளக்கம்.

கொண்டுகூட்டு. ஆய் இழை ஆய் ஆன்மா அருவுருவம் அறிதல் அருவுருவம் அன்று ஆகும் உண்மை அருவுருவாய்த் தோன்றி உடனில்லாது தோன்றாது நில்லாது மலர்மணம்போல் தொக்குத் தோன்றல்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோவெனின், மேற்கூறிய பொழிப்புரையில் இரண்டினையும் அறிவதாய் உபதேசியாய் இரண்டன்பாலுமுளதாய் எனக்கூறிய மூன்றனுள் இரண்டினையும் அறிவதாய் என்பதனை வலியுறுத்தி உயிர் சத்துமன்று அசத்துமன்றென விளக்கியவாறாம்.

(பொ-ரை.) நுணுகிய நூல்களை ஆராய்வதாகிய உயிரே சத்து அசத்து என்னும் இரண்டினையும் அறிவதாம். ஆதலால் அவ்வுயிர் அவ்விரண்டுமன்றி அவ்விரண்டின்வேறாம். அவ்வாறாயின் அவ்விரண்டினையும் அறியும் உயிர்க்குத் தன்னுண்மை அறியப்படுமோ படாதோ என வினவினார்க்கு அறியப்படுமென விடைகூறின், தன்னோடுகூட மூன்றனையும் அறிவதென்று கூறாமல் இரண்டினையு மறிவதாயென்று கூறியது பொருந்தாது; அறியப்படாது என விடைகூறின், அறியப்படாதபொருள் சூனியமெனப்பட்டுக் குற்றமாம். இனி முடிபுதான் யாதெனின், அவ்வான்மாவின் உண்மைத் தன்மையானது சத்து அசத்தாகிய அவ்விரண்டும்போல விளங்கித் தோன்றி அவ்விரண்டனோடு சமமாய்நிற்பது மன்று விளங்காது சூனியமாய் நிற்பதுமன்று: சத்தைச்சார்ந்தபொழுது சத்தாயும் அசத்தைச் சார்ந்தபொழுது அசத்தாயும் இவ்வாறு சார்ந்தபொருளின் வண்ணமாய் அடங்கித் தோன்றுவதோரியல்பாம். எதுபோல எனின், மலரின்கண் உள்ளவாசம் அம்மலர்போல விளங்கித்தோன்றுதலுமன்று; விளங்காது சூனியமாய் நிற்பதுமன்று; இவ்விருவகையுமன்றி அம்மலரின்கண் அடங்கித்தோன்றுவது போலாம். ஆதலால் அவ்வுயிர் சத்தும் அசத்தும்போலத் தனித்தறியப்படுவதன்றி அவ்விரண்டனையும் அறியும்வழியால் அறியப்படுவதாம் எ-று.

(க-ரை.) உயிர் சத்து அசத்து இரண்டனையும் அறிந்து அவ்விரண்டினையும் அறியும்வழியால் தன்னையும் அறியும் என்பதாம்.

ஆதலால் அவ்வுயிர் சத்தும் அசத்தும்போலத் தனித்தறியப்படுவதன்றி அவ்விரண்டனையு மறியும்வழியால் அறியப்படுவதாம் என்பது செய்யுளி லில்லை. மலர்மணம்போல் என்ற உவமையால் மலரின்கண் உள்ளமணம், மலர்போலத் தனித்தறியப்படாவிடினும், மலரை அறியும்வழியால் அறியப் படுமாறுபோலக் குறிப்பாகக் கொள்ளும்படி எஞ்சிநின்றமையால் குறிப் பெச்சம். அதாவது அசத்தாகிய பிரபஞ்சத்தையும் சத்தாகிய சிவத்தையும் அறிகின்றதால் அறிகின்ற தான் ஒன்று உண்டென்றும், அறியப்பட்ட அவ் விரண்டின் வேறென்றும் அறிதலாம்.

அருவுருவந் தானறிதல் என்பதில் அருவென்பது சத்தையும் உருவென் பது அசத்தையுங் குறித்துநின்றன. சத்துச் சுட்டியறியும் அறிவிற்குப் பொருளாக அறியப்படாமையால் அதனை அருவென்றும், அசத்துச் சுட் டியறியும் அறிவிற்குப்பொருளாக அறியப்படுவதால் அவ்வசத்தை உரு வென்றும் கூறினரென அறிக. ஆறுஞ்சூத்திரத்தில் உணருரு அசத்து என்றவிடத்து உருவென்றதும் சுட்டியுணரப்படுதல் நோக்கியேயாம்.

எண்ணும்மைபெறாது அரு உரு என்ற செவ்வெண்ணால் பெறப்பட்ட இரண்டென்னுந் தொகை விகாரத்தாற் றொக்குநின்றது. அதனை விரித்து இரண்டினையும் என உரைசெய்யப்பட்டது.

அருவுருவந்தான் என்பதிலுள்ள தான் என்பது அசை.

அருவுருவந்தானறிதல் என்றதனோடு ஆல் உருபை விரித்து அருவுரு வந்தானறிதலால் அருவுருவமன்றாகும் எனமுடியும்.

ஆயிழையாய் என்பதிலுள்ள இழை, நூலெனப்பட்டு இவ்விடத்தில் சாத்திரத்தைக் குறித்து நின்றது. இவ்வாறு புத்திசேனன், திங்கட்பெயரி னேன் எனச் சிந்தாமணியுட் கூறப்பட்டவாறறிக.

ஆய்தல் என்பது தல் விகுதி குறைந்து ஆய் என நின்றது. ஆய்தல் நுணுகுதல். ஆதலால் இழை என்பதன் மேல்நின்ற ஆய் என்பது நுணுகிய என்றும், அடுக்கநின்ற ஆய் என்பது ஆராய்வது என்றும் உரை செய்யப்பட்டன. ஆய்தல் என்பதன்பொருள் நுணுகுதல் என்பதை தொல் காப்பியம் சொல்லதிகாரம் உரியியல் சூத்திரம் ௩௨ ''ஓய்தலாய்தனிழத் தல் சா அ—யாவயினான்குமுள்ள தநுணுக்கம்'' எனக் கூறுமாற்றானறிக.

நுணுகுதலாயிருப்பது பொருளாகுமன்றி நூலாகாது. அவ்வாறாகவும் நுணுகியநூல் என்னும் பொருள்பட ஆயிழை என்று கூறிய கருத்தென்னை யெனின், பொருளினுணுக்கம் அதனையுடைய நூல் மேலேற்றிக் கூறப் பட்டது என்க. இது இவன் நுணுகியவன் என்றபொழுது நுணுகிய அறிவை உடையவன் என்று கொள்ளுவதுபோலாம்.

இழை என்பதில் இரண்டாம் வேற்றுமை ஐயுருபு தொக்குநின்றது. அதனை விரித்து நூல்களை யென உரைசெய்யப்பட்டது.

சாதனவியல்ஏழாஞ்சூத்திரம். ௩-ம் அதி.

ஆன்மாவை, ஆயிழையாய் ஆன்மாவெனக் கூறுவானேன் எனின், வேதாகம முதலிய நூல்கள் முற்றறிவுடைய இறைவனுக்கு வேண்டாம். அறிவில்லாத சடப்பொருளுக்கு அறியுந்தன்மை இன்மையால் அதற்கும் வேண்டாம். இனிப் பாரிசேட அளவையால் முப்பொருள்களுள் எஞ்சிய உயிருக்கே அவை வேண்டப்படும். படவே, வேதாகமங்களின் வழியாக அறியப்படும் பொருள் சத்து அசத்து என்னும் இரண்டுமேயாம். ஆகவே, உயிர்க்கு இரண்டினையும் அறியுந்தன்மை உண்டென்பதை வேதாகமங்களை அறியுந்தன்மை உண்டென்பதனால் வலியுறுத்த எண்ணி ஆயிழையாய் என்னும் வாக்கியத்தில் இரண்டனையும் அறியும் என்னும் அப்பொருளைப் புணர்த்திக் கூறினர் என்க. இது உடம்பொடு புணர்த்தல். இக்கருத்தே பற்றிச் சங்கற்ப நிராகரணத்துள் நிமித்தகாரணபரிணமவாதிமத நிராகரணத்தில் உயிர்க்கு அறியுந்தன்மை உண்டென்று உணர்த்துவதற்காக "பலகலையுலகினிலவுதலாலும்" என்றார் புடைநூலாசிரியரும்.

இனி ஆயிழையாய் என்பதற்கு இவ்வாறன்றிப் பெண்ணே என முன்னிலைப்பொருள் கொள்ளின், இவ்வுதாரணம் மேற்கூறிய இரண்டினையு மறிவதாய் என்பதனை வலியுறுத்துதற்கு எழுந்ததன்றாகும். எவ்வாறெனின், நூல்களையறியும் என்றதனாலேயே அறியுந்தன்மை உயிருக்கு உண்டென்றாகி நூலை அறிவதுபோல அதன் வழியாகச் சத்து அசத்து இரண்டினையும் அறியும் என்பதை வலியுறுத்தும். பெண்ணே என முன்னிலையாக்கின் அப்பொருள் தாராது: அன்றியும் பொழிப்புரையில் இரண்டினையும் அறிவதாய் என்றுகூறி இவ்வுதாரணத்தும் அருவுருவந் தானறிதலால் அருவுருவமன்றாகும் என்று கூறின், மேற்கூறியதனையே கூறியதாயிற் றன்றி அதற்கு உதாரணம் கூறியதாகாது. மலர்மண உவமை தன்னை யறிதற்கேயன்றி இரண்டினையு மறிதற்கன்று. நூல்களை அறிதல் தான் இரண்டினையும் அறிதற்கு உவமையாகும். ஆதலால் பெண்ணே யென்னும் அவ்வுரை பொருந்தாது. ஆன்மா வென்பதில் ஏகாரம் தொக்குநின்றது. அதனை விரித்து உயிரே என உரைசெய்யப்பட்டது. அந்த ஏகாரம், இரண்டனையும் அறிவது உயிரோ வேறோ என்னும் ஐயத்தை நீக்கலின் தேற்றம்.

அருவுருவாய் என்றவிடத்து ஆய் என்னும் ஆக்கச்சொல் உவமைப் பொருள் குறித்து நின்றது. இது திருவாசகம் மூத்ததிருப்பதிகத்தில் "ஆள்வாரிலி மாடாவேனோ" என்றவிடத்து ஆவேனோ என்பது போல் வேனோ என உவமை குறித்து நின்றாற்போலாம். ஆதலால் அருவுருவாய் என்பதற்கு அவ்விரண்டும் போல என உரை செய்யப்பட்டது.

தோன்றல் மலர் மணம்போற் றெருக்கு என்பதைத் தொக்குத் தோன்றல் மலர் மணம் போல் எனக் கூட்டுக.

சத்து அசத்து இரண்டினும் அறிவது ஆன்மா என்பதற்குக் காட்டும் உதாரணம்.

மயக்கம துற்று மருந்திற் றெளிந்தும்
பெயர்த்துணர்நீ சத்தாகாய் பேசி—லசத்துமலை
நீயறிந்து செய்வினைக ணீயன்றி வேறசத்துத்
தானறிந்து துய்யாமை தான்.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், அங்ஙனம் அறியும் உயிர் சிவசத்தோ டொப்பச் சித்தாகுமென்பாரை நோக்கி உபதேசியாய் என்றதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ—ள்) மயக்கமது உற்றும் மருந்தின் தெளிந்தும்— (நின்னறிவை விளக்குதற்குரிய வியஞ்சகமில்வழி ஒருவிடயத்தை இன்னதென் றறியமாட்டாது) மயக்கத்தையுற்றும் (பசிநோய்க்கு அன்னம்போல) அம்மயக்கநோய்க்கு மருந்தாய வியஞ்சகமுள்வழி அம்மயக்கநீங்கி (அதனை இன்னதென்று) நிச்சயித்தும்,—பெயர்த்து உணர்நீ பேசில் சத்து ஆகாய்—இங்ஙனம் மாறிமாறி உணர்ந்து வருகின்ற நீ சொல்லுமிடத்துச் சிவசத்தோடொப்ப அறியுஞ் சத்தியுடையாயல்லை. (அற்றேல், அசத்தனுவேன் போலுமெனின்),—நீ அறிந்து செய்வினைகள் நீ அன்றி வேறு அசத்து தான் அறிந்துதுய்யாமை அசத்தும் அலை—(வியஞ்சகமுள்வழியும்) நீமுன்னறிந்து செய்தவினைகளை இப்பொழுது நீயேயறிந்தனுபவிக்க வல்லையன்றி நின்னின்வேறாய் அசத்தாகிய பாசம் அறிந்தனுபவிக்க மாட்டாமையான் (அதனோடொப்ப) அசத்தனுவாயுமல்லை,—வேறு—(சத்தகுணமுடைய ஆகாயம்போல வியஞ்சகமுள்வழி அறியுமாற்றலுடைமையும் அஃதில்வழி அவ்வாற்ற லின்மையுமாகிய இரண்டுமுடைய நீ அவ்விரண்டற்கும்) வேறாய்ச் சிதசித்தாந்தன்மையுடையை எ-று.

மருந்திற் றெளிந்தெனவே மயங்குதல் அஃதில்வழி என்பது பெற்றாம். வியஞ்சகமில்வழித் தலைப்படுவதூஉம் அஃதுள் வழி நீங்கி நிற்பதூஉமாகிய மயக்கம் உண்டி இல்வழித் தலைப்படுவதூஉம் அஃதுள்வழி நீங்கி நிற்பதூஉமாகிய இயல்புடைய பசியோடொத்தலின் அதனைப் பசிநோயாகவும், தீர்த்தலொப்புமைபற்றி வியஞ்சகத்தைப் பசிதீர்க்கு மருந்தாகவும் உருவகஞ்செய்தார். இஃது

ஏகதேசஉருவகம். மருந்தெனப் பொதுப்பட உருவகஞ்செய்தா ராயினும் மறித்து மறித்து வேண்டப்படுமாறு ஈண்டைக்கேற் புடையது பசிநோய் தீர்க்குமருந்தேயாகலின் அவ்வாறு உரைக் கப்பட்டது. அது பகுதிப்பொருள் விகுதி. உம்மை எண்ணின்கண் வந்தது. அசத்துமென்னு மும்மை இறந்தது தழீஇயிற்று. தானென்பது முன்னையது எழுவாயுருபுபட நின்றது. பின்னையது அசைநிலை. துவ்வாமை துய்யாமை என மரீஇயிற்று.

சத்தியுடைய பொருள் சத்தம், அஃதில்பொருள் அசத்த மாகலின், அவ்வடமொழிகள் ஈண்டம்முக் கெட்டுக் குற்றியலுகர வீறாய் நின்றன: "நாகணையான்" "பெற்றோன் றுயர்த்தபெருமான்" "பேதுசெய்து" "வாதுசெயத் திருவுள்ளமே" என்புழிப்போல.

அசித்துமலை யென்பது பாடமாயின், மேற்சத்தாகாய் என் றதனை இசையெச்சமாகக்கொண்டு சத்தாந்தன்மையே யுடையா யல்லை; அதன்மேலுஞ் சித்தாமா றியாங்ஙன மென்றுரைத்து இயைத்துக்கொள்க. இவ்வாறன்றி ஈண்டுச் சத்தாகாய் அசத்து மலை என்பவற்றை மேல்அருவுருவமன்றாகு மென்றதன் பொருள் படக்கொண் டுரைப்பாருமுளர். அவர் ஆண்டே அமைந்து கிடந்த பொருளை மறித்துங் கூறவேண்டாமையும் பெயர்த்துணர் நீ என வும் அறிந்துதுய்யாமை யெனவும் அறிவுடைமை அறிவின்மை பற்றிக் கூறும் பொருள் அவையாதல் செல்லாமையும் நோக்கிலர்.

விளக்கம்.

கொண்டுகூட்டு, மயக்கமது உற்றும் மருந்தின் தெளிந்தும் பெயர்த்து உணர்நீ பேசில் சத்து ஆகாய் நீ அறிந்து செய்வினைகள் நீ அன்றி வேறு அசத்து தான் அறிந்து துய்யாமை அசத்தும் அலை வேறு.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், சத்து அசத்து இரண் டினையும் அதுவதுவாய் நின்று அறியுமுறையில் தன்னையும் அறிகின்ற உயிர், அறியுந் தன்மையால் சிவசத்தாகிய இறைவனோடு சமமான அறி வுடைப் பொருளென்பாரை நோக்கி அறிவுடைய பொருளாயினும் இறை வன்போலத் தானாக அறியுந் தன்மை உயிருக்கில்லையெனக்கூறிப் பொழிப் புரையில் உபதேசியாய் என்று கூறியதனை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) உன்னுடைய அறிவை விளக்குதற்குரிய துணையில்லாத விடத்து ஒரு பொருளை இன்னதென்று அறியமாட்டாமல் மயக்கத்தைப் பொருந்துவாய். பசிநோய் தீர்தற்கு அன்னம் மருந்தாதல்போல அம்

மயக்கநோய் தீர்தற்குக் கருவியாகிய துணை மருந்தாகும். துணையுள்ளவிடத்து அம்மயக்கம் நீங்கி அப்பொருளை இன்னதென்று நிச்சயிப்பாய். இவ்வாறு துணையில்லாத விடத்து மயங்கியும் துணையுள்ளவிடத்து மயங்காமல் நிச்சயித்தும் மாறிமாறி அறிந்து வருகின்ற நீ, சொல்லுமிடத்து என்றும் ஒரு படித்தாய்த் துணையின்றி இயல்பாக அறியும் இறைவன்போல அறியுஞ் சத்தியை உடையாயல்லை. அவ்வாறாயின், யான் அசத்தனுவேனே எனின், துணையுள்ளவிடத்தும்நீ முன்னறிந்து செய்த வினைகள் பலனுக்கு வருங்கால் அவ்வினைப்பயன்களை இப்பொழுது நீயே அறிந்து அநுபவிக்கும் வல்லமை உடையாய்; அன்றி நின்னின் வேறாயுள்ள அறிவில்லாத பாசம் அறிந்தனுபவிக்க மாட்டாது. ஆதலால், நீ அசத்தனுமாகாய். ஆகவே, ஆகாயத்திலுள்ள குணமாகிய ஓசை துணையுள்ள விடத்து விளங்கித் துணையில்லாதவிடத்து விளங்காதவாறுபோல, உன்னிடத்திலுள்ள குணமாகிய அறியுந்தன்மை துணையுள்ளவிடத்து அறியும் ஆற்றல் இருப்பதாகவும் துணையில்லாதவிடத்து அறியும் ஆற்றல் இல்லாததாகவும் காணப்படுமாதலால், அறிதல் அறியாமையாகிய இரண்டும் உடையநீ துணையின்றி அறியுஞ் சத்தும் துணையுள்ளவிடத்தும் அறியாத அசத்தும் ஆகிய அவ்விரண்டற்கும் வேறாய்ச் சித்து அசித்து என்னும் இரண்டு தன்மையையுடைய பொருளாவாய் எ-று.

(க-ரை.) கருவிகளோடு கூடியவிடத்து மயங்காமலும் கூடாதவிடத்து மயங்கியும் அறிகின்ற நீ என்றும் ஒருபடித்தாய் அறியும் இறைவன்போலச் சத்துமன்றி என்றும் அறியமாட்டாத பாசம்போல அசத்துமன்றி அறிவு அறியாமை என்னும் இரண்டு தன்மையுமுடைய பொருளாவாய் என்பதாம்.

இவ்வுதாரணம் துணையைக்கொண்டே உயிர் அறியும் எனக் கூறினமையால் உபதேசியாய் என்பதனை வலியுறுத்தியவாறு அறிக.

செய்யுளில் மருந்திற்றெளிந்து எனக் கூறியதனால் அம்மருந்து இல்லாதவிடத்து மயங்குதலுண்டென்பது பெறப்பட்டது. ஆதலால் மயக்கமதற்று என்பது துணையில்லாதவிடத்து மயக்கத்தை உற்று என உரை செய்யப்பட்டது. துணையில்லாத விடத்துக் கூடுவதூஉம் துணையுள்ள விடத்து நீங்கி நிற்பதூஉமாகிய மயக்கம் உண்டியில்லாத விடத்துக்கூடுவதூஉம் உண்டியுள்ள விடத்து நீங்குவதூஉமாகிய இயல்புடைய பசியோடு ஒத்தலின் அம்மயக்கத்தைப் பசிநோயாகவும், உண்டி பசியைத் தீர்ப்பது போல் வியஞ்சகம் மயக்கத்தைத் தீர்க்கும் ஒப்புமைபற்றித் அதனைப் பசிநோய் தீர்க்கும் மருந்தாகவும் உருவகஞ் செய்தார்; இவ்வுருவகத்தில் மயக்கத்தை நோயென்று உருவகஞ்செய்யாது வியஞ்சகத்தை மட்டும் மருந்தென்று உருவகஞ்செய்தமையால் இது ஏகதேச உருவகம். உருவகமாவது உவமானத்தை உவமேயமாகக் கூறுதல். இச்செய்யுளில் மருந்துபோல் வியஞ்சகம் என்று கூறாது வியஞ்சகத்தையே மருந்தாகக் கூறியதால் உருவக

மாயிற்று. வியஞ்சகம் துணை. இன்னமருந்தென்று விளக்கமாய் உருவகஞ் செய்யாமல் பொதுப்பட மருந்தென்றுமட்டும் உருவகஞ் செய்திருக்கப் பசி நோய்க்கு மருந்தாகிய அன்னம்போல் என்று உரைசெய்த கருத்தென்னை யெனின், கருவியாகிய துணையில்லாத விடத்து மயங்கியும் துணையுள்ள விடத்து மயங்காமலும் இவ்வாறு மாறிமாறி உயிர் அறிவு அறியாமை என் னும் இரண்டனோடு பொருந்துமெனக்கூறும் இவ்விடத்திற்கு ஏற்புடையது பசிநோய் தீர்க்கும் மருந்தேயாகலின், அவ்வாறு உரைசெய்யப்பட்டதுஎன்க. அன்றியும் வாதபித்தசிலேட்டும சம்பந்தமான சுரம் முதலிய நோயெல்லாம் அபத்தியத்தினாலும் கன்மத்தினாலும் வருதலேயன்றி மருந்தில்லாமையினால் வருதலில்லை. பசிநோயானது உண்டியாகிய மருந்தில்லாமையால்வரும். சுரம் முதலிய நோய்கள் மருந்தினால் தீர்ந்து ஒழியின் பின்னர் மருந்து வேண்டுவ தில்லை. பசிநோய்உண்டியாகிய மருந்தால் தீரினும் அம்மட்டில் அமையாது மீட்டும் உண்டாதலின் உண்டியும் மீட்டு வேண்டப்படும். ஆதலால் கருவிக ளோடுகூடிய சாக்கிரத்தில் மயக்கமின்றியும் கருவிகளோடு கூடாத கேவல மாகிய துரியாதீதத்தில் மயக்கமடைந்தும் மீண்டுங் கருவிகளோடுகூடி மயக் கமின்றியும் இவ்வாறு மாறிமாறி வருதற்குப் பசிநோய் உவமையே பொருத் தமாதலறிக.

மயக்கமது என்பதிலுள்ள அது என்னும் விகுதி மயக்கம் என்னும் பகு திப் பொருளையே குறித்து நிற்றலால் பகுதிப்பொருள் விகுதி.

மயக்கமதுற்றும் என்றதில் உள்ள உம்மை உற்றும் தெளிந்தும் என்ற எண்ணின்கண் வந்தது.

அசத்தும் அலை என்றதிலுள்ள உம்மை சத்தாகாய் என்ற மேற்கூறிய தனைத்தழுவி நிற்றலால் இறந்தது தழுவியது.

தானறிந்து துய்யாமைதான் என்றதில் முன்னுள்ள தான் என்பது அசத்தாகிய எழுவாயைக் குறித்த உருபாய்நின்றது. பின்னுள்ள தானென் பது அசை.

துவ்வாமை என்று கூறற்பாலது துய்யாமை எனமருவிநின்றது.

சத்தாகாய் என்பதற்குச் சத்தியை யுடையாயல்லை என உரை செய்த கருத்தென்னை யெனின், சத்தியையுடைய பொருள் சத்தம், சத்தியில்லாத பொருள் அசத்தம், ஆதலால் சத்தம் அசத்தம் என்னும் அவ்வடமொழிகள் தமிழில் அம் கெட்டு, குற்றியலுகர ஈறாய் சத்து அசத்து என நின்றமை யால் அவ்வாறு உரைசெய்யப் பட்டது. சத்தம் அசத்தம் என்பன சத்து அசத்துஎனவருதல் எதுபோலஎனின், நாகம் அணையான் என்பது நாகணை யான் எனவும், பெற்றம் ஒன்றுயர்த்த பெருமான் என்பது பெற்றொன் றுயர்த்த பெருமான் எனவும், பேதம்செய்து என்பது பேதுசெய்து எனவும், திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரத்தில் வாதம் செய்யத் திருவுள்ளமே என்பது வாது செயத்திருவுள்ளமே எனவும் வருமாறு போலாம்.

அசத்தும் அலவென்பது அசித்தும் அலயென்று பாடமாயின், மேற்சத்தாகாய் என்றதற்குச் சத்தாந்தன்மையே உடையாயல்லே யென்று பொருள் கூறிச் சத்தாகாய் என்றதனை இசையெச்சமாகக்கொண்டு அதன்மேலும் சித்தாமாறு யாங்ஙனமென்று உரைத்துச் சித்துமன்று அசித்துமன்று என உரைத்துக் கொள்க. கொள்ளவே, சித்துஅசித்தாவை என்பதாம். இசையெச்சமாவது ஒழிந்தசொற்கொண்டு பொருளுணரநிற்பது. இவ்விடத்தில் சத்தாகாய் என்றது சித்தாகாய் என்னும் ஒழிந்தசொற்கொண்டு பொருளுணர நின்றது. இவ்வாறன்றிச் சத்தாகாய் அசத்துமலே என்பவற்றை மேலைச் செய்யுளில் அருவுருவம் அன்றாகும் என்றதன் பொருள்படக்கொண்டு சத்துமல்லே அசத்துமல்லே யென்றுரைப்பாரு முளர். அவர் அச்செய்யுளிலேயே அமைந்துகிடந்த பொருளை மீட்டுங்கூற வேண்டாமென்பதை அறிந்திலர். அன்றியும் பெயர்த்துணர்நீ எனவும் அறிந்து துய்யாமை எனவும் இச்செய்யுளிலுள்ள வாக்கியங்கள் அறிவுடைமை அறிவின்மைபற்றிக் கூறுதலால் அப்பொருளுக் கேற்பச் சிவசத்துப்போல் அறிதலும் அசத்துப்போல் அறிவில்லாமையும் என்று கொள்ளாமல் சத்துமல்லே அசத்துமல்லே என்று கூறுதல் பொருந்தாமையும் நோக்கிலர்.

சத்து அசத்து இரண்டன்பாலும் அதுவதுவாய் நின்று ஆன்மா
அறியும் என்பதற்குச் சாட்டும்
உதாரணம்.

மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தாத
லஞ்ஞான முள்ள மணைதல்காண்—மெய்ஞ்ஞானந்
தானே யுளதன்றே தண்கடனீ ருப்புப்போற்
றானே யுளமுளவாத் தான்.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், அம்மயக்கம் அவ்வுயிரோ டியைபுடைய முதல்வனுக்கு முண்டுபோலுமெனவும் அதுதான் உயிர்க்கு எக்காலத்து வந்ததெனவும் நிகழுங் கடாவை விடுக்கு முகத்தான் இரண்டன்பாலு முளதாமாறு வலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்.) அஞ்ஞானம்—மேற்கூறிப்போந்த மயக்கமாவது,—மெய்ஞ்ஞானம் தன்னில் அசத்து ஆதல் விளையாது—(ஒருபெற்றித்தாய அறிவெனப்படுஞ்) சிவத்தினெதிர் (கதிர்முன் னிருள்போல,) நிலையுதலிலதாகலின் ஆண்டுளதா தலின்றி,—மெய்ஞ்ஞானந்தானே உளது அன்றே—அச்சிவம் ஒன்றுள்ளது அன்றே,—தான் ஏய் உளம் உளவா—தான் பொருந்துதற்குரிமையுடைய உயிர்கள் உள்

ளனவாக,—உள்ளம் அணைதல்—அவ்வுயிர்களைப்பற்றி நிற்றல்,—தண்கடல்நீர் உப்புப்போல்காண்—தண்ணிய கடலின்கண் உளதாதலின்றி அக்கடலிடத்துளதாகிய நீரைப்பற்றிநிற்கும் உப்புப்போலென்றறிவாயாக எ-று.

விளையாதென்னும் வினையெச்சமறை அணைதலென்னுந் தொழிற் பெயரோடுமுடிந்தது. தானே என்பது கட்டுரைக்கண் வந்தது. தானே யுளமுளவாத்தா னென்புழித் தானென்பது முன்னையது எழுவாய் பின்னையது அசைநிலை. ஏயுளமென்னும் வினைத்தொகை "அறிவறிந்த மக்கட்பேறு"போல நின்றது. ஏய்தற்குரிமையாவது மேற்காட்டினும். தண்கடனீருப்புப்போலென்றதனால் முப்பொருள்களும் வியாபக வியாப்பியங்களாய் நிற்குமாறும் பெறப்பட்டது. இரண்டன்கண்ணும் உயிர்க்கு இயைபுடைமை கூறவே, இரண்டன்பாலு முளதாதலை வலியுறுத்தவாறுகாண்க.

ஈண்டிருதிறனையுமறியு மறிவுளதெனவே இருதிறனாகிய சத்து அசத்து எனப்பட்டனவெல்லாம் பிரமேயம்; அவற்றை அறியும் சதசத்தாகிய உயிர் பிரமாதா; அவ்வுயிரினறிவாகிய சிற்சத்தி பிரமாணம்; அவ்வறிவு நிகழ்ச்சி பிரமிதி என்பதூஉம், இருதிறனால் விளங்கும் அறிவுளதெனவே அவ்விரண்டனுள் அசத்தானறிவு விளங்கும்வழித் தனக்கு வேறாய்நின்று விளக்குவனவாய காட்சியனுமான முறையெனப்படும் அசத்தாகிய பாசஞான மூன்றும் சத்தானறிவு விளங்கும்வழி அந்நிய மின்றித் தனக்காதாரமாய் உடனின்று விளக்குஞ் சிவஞானமுந் தனக்கு வியஞ்சகங்களாகலான் அதுபற்றி அவையும் பிரமாணமென்று உபசரித்துக் கூறப்படுமென்பதூஉம், இருதிறனினும் அறிவுளதெனவே ஈரிடத்துங் கேடின்றி அசத்தான் விளங்கி அசத்தை அறிவுழி அசத்தின்பாலும் சத்தான் விளங்கிச் சத்தை யறிவுழிச் சத்தின்பாலும் அது அதுவாயழுந்து மென்பதூஉம் பெறுதும். இவ்வாறன்றி வியஞ்சகங்களையே பிரமாணமென்னும் தார்க்கிகர் முதலியோர் மதங்கள் பொருந்தாமையும், அவ்வியஞ்சகங்களா னிகழும் பிரமிதி வேறுபாடும் அவற்றதியல்புகளும் ஈண்டுவிரிப்பிற் பெருகும்; பௌட்கரம் முதலிய சிவாகமங்களுட் கண்டுகொள்க.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) அஞ்ஞானம் மெய்ஞ்ஞானந் தன்னில் அசத்து ஆதல் விளையாது மெஞ்ஞானந்தானே உளது அன்றே தான் ஏய் உளம் உளவா உள்ளம் அணைதல் தண்கடல்நீர் உப்புப்போல் காண்.

இவ்வுதாரணம் என்சொல்லிற்றோ வெனின், மேலை வெண்பாவில் உயிருக்கு உண்டென்றுகூறிய அம்மயக்கம் அவ்வுயிரோடு சம்பந்தமுடைய முதல்வனுக்கு உண்டாகாதோ எனவும், அம்மயக்கந்தான் உயிர்க்கு எக்காலத்து வந்ததெனவும் ஆசங்கை நிகழுமன்றே? அதற்கு உத்தரமாக இறைவனுக்கு மயக்கமில்லையெனவும், உயிருக்கு அம்மயக்கம் அனாதி யெனவும் கூறு முறையில், பொழிப்புரையில் உயிர் இரண்டன்பாலு மூளதாய் என்று கூறியதனை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) மேலை வெண்பாவில் உயிக்குஉண்டென்று கூறிய மயக்கமானது, வேறுவேறாகவும் விட்டுவிட்டும் அறியாது எவற்றையும் ஒருதன்மையாகவும் நீங்காமலும் அறிகின்ற அறிவுருவாகிய இறைவன் சந்நிதியில் நிற்பதில்லை. எதுபோல எனின், சூரியன்முன் இருள்நில்லாதவாறு போலாம். ஆதலால், அம்மயக்கம் அவ்விறைவனிடத்து உளதாகாமல் வாலறிவனாகிய அவ்விறைவன் உள்ள அன்றே உள்ளனவாய் அம்மயக்கம் பொருந்துதற்கு உரிமையுடையனவாய் உள்ள உயிர்களைப் பற்றி நிற்கும். இவ்வாறு இறைவனைப் பற்றாமல் உயிரைப்பற்றிநிற்றல் எதுபோல எனின், குளிர்ச்சி பொருந்திய நீர்க்கு இடங்கொடுத்திருக்கும் ஆகாயத்தின்கண் (அதாவது கடலின்கண்) உப்புஉளதாகாமல் அக்கடலினிடத்து உளதாகிய நீரை அவ்வுப்புப்பற்றி நிற்பதுபோலும் என்று அறிவாயாக எ-று.

(க-ரை.) உப்பானது நீர்க்கு இடங்கொடுத்திருக்கும் ஆகாயத்தைப் பற்றாது நீரைப்பற்றி நிற்பதுபோல, அஞ்ஞானமாகிய மயக்கம் மெஞ்ஞானமே வடிவாகிய இறைவனைப் பற்றாது உயிரை அனாதியே பற்றிநிற்கும் என்பதாம்.

விளையாது என்பது விளையும் என்பதன் எதிர்மறைச் சொல்லாய் வினையெச்சமாய் நின்றது. அவ்வெச்சம் அணைதலென்னுந் தொழிற் பெயரோடு முடிந்தது.

மெஞ்ஞானந்தானே என்பதிலுள்ள தானே என்பது மெஞ்ஞானமே என்னும் உறுதிமொழிக்கண் வந்தது. தான் எய்உளம் உளவாத்தான் என்றவிடத்து முதலாவதாயுள்ள தான் என்பது அஞ்ஞானமாகிய எழுவாயைக் குறித்து நின்றது; பின்னுள்ளதான் என்பது அசை.

எய் உளம் என்னும் முக்காலத்துக்குரிய வினைத்தொகை எயும் உளம் என எதிர்காலத்தால் விரிக்கப்பட்டு எய்தற்கு உரிமையுடைய உளம் என்னும் பொருளில் நின்றது. இது, திருக்குறள் புதல்வரைப் பெறுதல் அதிகாரத்தில் "அறிவறிந்த மக்கட்பேறு" என்பது, அறியவேண்டுவன அறிதற்குரிய மக்கள் என்னும் பொருள் குறித்தவாறுபோலாம். எய்தல் பொருந்துதல். அஞ்ஞானம் உயிரைப் பொருந்துதற்கு உரிமையாவது உயிரினிடத்துள்ள பற்றுந்தன்மையேயாம் என்பது சூ-ம் சூத்திரத்து உ-ம் அதிகரணத்து இறுதியிற் காட்டப்பட்டிருக்கின்றது

தண்கடல் நீர் உப்புப்போல் என்றதனல் கடல் போலப் பதிபூரண வியாபகமாயும், நீர்போலப் பசு ஏகதேசவியாபகம் என்னும் வியாப்பியமாயும், உப்புப்போலப் பாசம் நீரளவில் வியாபகமான வியாத்தியாயும் நிற்குமாறும் பெறப்பட்டது. கடல்என்பது நீர்தங்கும் இடமாகிய வெளியாம். இவ்வுண்மை யறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே உரைத்து இடர்ப் படுவர்.

நீருக்குக் கடலாகிய ஆகாயத்தினிடத்தும் உப்பினிடத்தும் சம்பந்தம் உளதாமாறுபோல, மெஞ்ஞானந்தானே உளதன்றே தான் எய் உளம் உள வாக என்றதனல், உயிருக்குப் பதியினிடத்தும் பாசத்தினிடத்தும் சம்பந்த முளதாதல் பெறப்பட்டது. படவே, சத்து அசத்தாகிய இரண்டன்பாலும் உயிர் உளதாதலே இவ்வெண்பாவால் வலியுறுத்தியவாறு அறிக.

இவ்வதிகரணத்தில் சத்து அசத்தாகிய இருதிறனையும் அறியும் அறிவு உயிர்க்கு உளதென்று கூறியதனல், இருதிறனகிய சத்து அசத்து எனப் பட்டனவெல்லாம் அறியப்படும் பொருள் எனவும், அவ்விருபொருள்களையும் அறியும் உயிர் சத்தொடுகூடிச் சத்தாயும் அசத்தொடுகூடி அசத்தாயும் நின்று அறிவதால் சதசத்தாகிய அவ்வுயிர் அறியும்பொருள் எனவும், அவ்வுயிரின் அறிவாகிய ஞானசத்தியே அறிதற்குக் கருவியெனவும், அவ்வறிவின் வியாபாரமே அறிதல் எனவும் விளங்குமாறு அறிக.

இனிச்சத்து அசத்தாகிய இருதிறனல் விளங்கும் அறிவு உயிர்க்குஉளதென்று கூறியதனல் சத்து அசத்தாகிய அவ்விரண்டனுள் அசத்தாலறிவு விளங்குமிடத்து வேருய் நின்று விளக்குவனவாகிய பிரத்தியட்சம் அனுமானம் ஆகமம் எனப்படும் பாசஞானம் மூன்றும் ஆன்ம அறிவிற்குத்துணைகளாம். சத்தாலறிவு விளங்குமிடத்து வேறின்றித் தனக்கு ஆதாரமாய்த் தன்னேடு உடனின்று விளக்கும் சிவஞானம் ஆன்ம அறிவிற்குத்துணையாம். ஆகவே, பிரத்தியட்சம் அனுமானம் ஆகமம் என்னும் பாசஞானத்தைத் துணையாகக் கொண்டு பாசத்தையும் சிவஞானத்தைத் துணையாகக்கொண்டு சிவத்தையும் உயிர் அறியுமென்பதூஉம், பாசஞானம் உயிர்க்கு வேருயும் சிவஞானம் உயிரோடு உடனுயும் நிற்குமென்பதுஉம், இவ்வாறு பாசஞானமும் சிவஞானமும் உயிர்க்கு அறிவு விளங்குதற்குத் துணையாதலால் அது பற்றிப் பாசஞான சிவஞானங்களும் கருவிகளென்று உபசரித்துக் கூறப்படு மென்பதூஉம் விளங்குமாறு அறிக.

இனிச் சத்து அசத்தாகிய இருதிறனிலுமுள்ள அறிவு உயிர்க்கு உளதென்று கூறியதனல், சத்து அசத்தாகிய இரண்டனையும் அறிகின்றது பற்றித் தான் உண்டென்று அறியும் உயிர் இரண்டிடத்துங் கேடின்றி, அசத்தால் விளங்கி அசத்தை அறியுமிடத்து அசத்தின்பாலும் சத்தால் விளங்கிச் சத்தை அறியுமிடத்துச் சத்தின்பாலும் அதுவதுவாய் அழுந்து மென்பது விளங்குமாறு அறிக.

இவ்வாறன்றிப் பிரத்தியட்ச முதலிய துணைகளையே பிரமாணமாகக் (அதாவது கருவியாக) கொள்வர் தார்க்கிகர் முதலியோர். கருவியாயிருப்பது என்றுங் கருவியாயிருக்கவேண்டுமேயன்றி அறியப்படும் பொருளாதல் கூடாது. பிரத்தியட்சம் முதலிய மூன்றும் இது பிரத்தியட்சம் இது அனுமானம் இது ஆகமம் என அறியவும் படுதலின் அவை உபசாரத்தாற் கருவியெனப்படுமேயன்றி உண்மையிற் கருவியாகாது. ஆன்ம அறிவு என்றுங் கருவியாயிருக்குமேயன்றி அறியப்படும் பொருளாதலில்லை. ஆகவே, பொருள்களை அளக்குங் கருவி உண்மையில் ஆன்ம அறிவேயாம். அவ்வான்ம அறிவிற்குத் துணையாதல்பற்றிப் பிரத்தியட்சம் முதலியனவும் உபசாரத்தாற் கருவியெனப்படும். ஆதலால் தார்க்கிகர் முதலியோர் மதங்கள் பொருந்தாமையும், பிரத்தியட்சம் முதலிய அந்தத் துணைகளால் நிகழும் அறிதல் வேறுபாடும், அத்துணைகளினியல்புகளும் இவ்விடத்து விரிக்கிற் பெருகும்; பௌட்கரம் முதலிய சிவாகமங்களுட் கண்டுகொள்க.

இவ்வேழாஞ் சூத்திரத்தினாலும் அதிகரணங்களினாலுங் கூறிமுடித்த தொகைப்பொருள்:—ஆறாஞ் சூத்திரத்தில் உணருரு அசத்தெனவும் இருதிறனல்லது சிவசத்தெனவும் வரைசெய்துணர்த்தியவிடத்து அவ்வாறு அசத்தெனவும் சிவசத்தெனவும் அறியும் பொருள் அவ்விரண்டனுள் ஒன்றோ அவ்விரண்டின் வேறோ என்னும் ஐயம் நிகழாதவண்ணம் சத்தாகிய சிவத்தின் முன்னர் அசத்தாகிய பிரபஞ்சம் முனைத்துத் தோன்றாது ஆதலால், அசத்தைச் சத்து அறியாது என்பதும், அசத்தாகிய பிரபஞ்சம் அறிவில்லாத சடமாதலால் அசத்துச் சத்தை அறியாதென்பதும், ஆதலால் சத்து அசத்து என்னும் அவ்விரண்டின் வேறாகிய உயிரே அவ்விரண்டினையும் அறியும் என்பதும் சூத்திரத்தாற் கூறப்பட்டன. படவே, இறைவனுக்குத் திருமேனியாகக் கூறப்படும் பிரபஞ்சத்தை இறைவன் முன்னர் முனைத்து நில்லாது என்றல் பொருந்ாதெனவும், உயிரின்பொருட்டுப் பிரபஞ்சத்தை இறைவன் அறிவன் எனவும் சிவாத்துவிதசைவர் கூற, முதலதிகரணத்தால் அவரை மறுத்துத் தானாகவே அறியும் இயற்கையுணர்வின் முன்னர்ச் செயற்கைச் சுட்டுணர்வு விளங்கித் தோன்றாது ஆதலால், இறைவன் முன்னர்ப் பிரபஞ்சம் விளங்கித் தோன்றாதென்பதும், பிரபஞ்சத்தை அறியாமை முதல்வன் முற்றறிவிற்குக் குறையாகாதென்பதும், அறியவேண்டுமாயினும் உடன்நின்று அறிவன் என்பதும் கூறப்பட்டன. படவே, சத்து அசத்தை அறியாதாயினும் அசத்தாகிய கரணம் ஆன்மாவின் சந்நிதியில் விளக்கின் சந்நிதியில் கண்போல் நின்று பெத்தத்தில் அசத்தை அறிதல்போல முத்தியிற் சிவகரணமாய்நின்று சிவத்தை அறியுமாதலால் அசத்துச் சத்தை அறியாதென்றல் பொருந்தாதெனச் சிவசங்கிராந்தவாதி கூற, இரண்டாம் அதிகரணத்தால் அவரைமறுத்துக் கரணத்தின்கண் உள்ளதுபோலத் தோன்றும் அறிவு ஆராயுமிடத்து அதன்கண் இல்லாமையால் தத்துவப்பிரபஞ்சத்திற்கு அறிவில்லையென்பதும், அவ்வசத்துக்கு அறிவு உண்டென்று கூறுதல் கான

வில் நீருண்டென்று கூறுதல்போலென்பதும், ஆதலால் அசத்துச் சத்தை அறியாதென்பதுங் கூறப்பட்டன. படவே, இவ்வாறு சத்தும் அசத்தும் தம்முள் ஒன்றனையொன்று அறியுமாறில்லையாயின் அவ்விரண்டனையும் அறியும் பொருள்தான் யாதென்பாரை நோக்கி மூன்றும் அதிகரணத்தால் அவ்விரண்டினையும் அறிவதாயும் அவ்விரண்டினாலும் அறிவதாயும் அவ்விரண்டின்கண்ணும் அதுவதுவாய் நின்று அறிவதாயும் உள்ளது அவ்விரண்டுமல்லாத உயிரே எனவும், அவ்வுயிர் இரண்டனையும் அறியும் என்பதற்கு நூலை அறிதலையும், இரண்டினாலும் அறியும் என்பதற்குக் கருவியினால் விடயத்தை அறிதலையும், இரண்டன் கண்ணும் அதுவாய் நின்றறியுமென்பதற்கு நீரான்து அனுதியே உப்பையும் ஆகாயத்தையும் பற்றி நிற்றல் போல் இறைவன் உள்ள அன்றே உயிரும் உள்ளதாய் அவ்வுயிரைப்பற்றி நிற்கும் அஞ்ஞானமும் உண்டு என்பதையும் எடுத்துக்கூறி வலியுறுத்தியவாறும்.

மூன்றம் அதிகரணம் முற்றிற்று.

ஏழாஞ்சூத்திரம் முற்றிற்று

எட்டாஞ்சூத்திரம்.

ஏழாஞ் சூத்திரத்தால் அதிகாரியினியல்பு கூறி, அவ்வதிகாரி செய்யவேண்டிய சாதனமும், அந்தச்சாதனம் வரும் வழியும். சாதித்ததனாற் பெறப்படும் பயனும் இவையென இவ்வெட்டாஞ் சூத்திரத்தாற் கூறுகின்றார்.

ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே.

கருத்துரை.

எ-து சூ-ம் எ-னின், ஞானத்தினை யுணரு முறைமையினை யுணர்த்துத னுதலிற்று.

சிற்றுரை.

எ-து க-ரை எ-னின், சூத்திரக் கருத்துணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) அவ்வான்மாவின் அறிவாவது மேலிருதிற னென்றதனுள் அசத்தான் விளங்கி அசத்தின் பாலுளதாய் அசத்தினையறிந்து நின்றவாறும் சத்தான் விளங்கிச் சத்தின்பாலுளதாய்ச் சத்

தினையறிந்து நிற்குமாறும் தரிசிக்குமுறைமையினை யுணர்த்துமுகத் தாற்சாதித்தற்குரிய அதிகாரம் தனக்குண்டென மேலைச்சூத்திரத் தானறிந்த ஆன்மாவுக்குச் சாதித்தனாற் பெறப்படும் பயனும் அதற்குச் சிறந்த சாதனமாவதும் அதுவருவாயும் இவை யென்ப துணர்த்துதல் இவ்வெட்டாஞ் சூத்திரத்தின் கருத்து எ—று.

இதனானே சூத்திரவியைபும் இனிது விளங்கும்.

விளக்கம்.

கருத்துரை என்னசொல்லிற்றோ வெனின் சூத்திரக் கருத்து இது வென்று சொல்லிற்று.

(இக்கருத்துரையின் பொருள்.) சத்தொடுகூடிச் சத்தையும் அசத்தொடு கூடி அசத்தையும் அறியும் உரிமையால் சத்தும் அசத்தும் அல்லாமல் சதசத்தாய் விளங்கு மென்று மேலைச் சூத்திரத்திற் கூறிய ஆன்மாவின் அறிவாவது, அச்சூத்திரத்தில் இருதிறன் என்று கூறிய சத்து அசத்தென்னும் இரண்டனுள், மூன்றும் வேற்றுமைப்பொருள் பற்றி அசத்தால் விளங்கி, ஏழாம் வேற்றுமைப்பொருள் பற்றி அசத்தின் பாலுளதாய், இரண்டாம் வேற்றுமைப் பொருள் பற்றி அசத்தினை அறிந்துநின்றவாறும், அவ்வாறே அம்மூன்று வேற்றுமைப் பொருள்பற்றிச் சத்தால் விளங்கிச் சத்தின் பாலுளதாய்ச் சத்தினையறிந்து நிற்குமாறும் தரிசிக்கும் முறையினை அறிவித்து, அவ்வாறு அறிவிக்கும் முறையில், ஏழாஞ்சூத்திரத்தால் சாதித்தற் குரிய அதிகாரம் தனக்குண்டென அறிந்த ஆன்மாவிற்குச் சாதித்தனாலுண்டாம் பயனும் அப்பயனுக்குச் சிறந்தசாதனமும் அச்சாதனம் வரும் வழியும் இவையென அறிவித்தல் இவ்வெட்டாஞ் சூத்திரத்தின் கருத்து எ-று.

ஏழாஞ் சூத்திரத்தில் சாதித்தற்குரிய அதிகாரம் ஆன்மாவிற்கு உண்டெனக்கூறி இச்சூத்திரத்தில் சாதித்தனாற் பெறப்படும்பயனும்சாதனமும் அச்சாதனம் வரும்வழியுங் கூறுகின்றமையால் சூத்திர இயைபு பெறப் பட்டது.

சிற்றுரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு.

தவத்தினில்—(உயிர்) தான்முன்னே செய்துகொள்ளப்பட்ட புண்ணிய விசேடத்தால்,—தம்முதல்—தனக்கு அந்தரியாமியாய் இதுகாறும் உள்நின்று உணர்த்திவந்த பரம்பொருளே (இப்பொழுது).—குருவுமாய்—குருவடிவமுங் கொண்டெழுந்தருளி வந்து சிவதீக்கை செய்து (மன்னவகுமாரனாகியநீ),—ஐம்புல—ஐம்பொறிகளாகிய,—வேடரின்—வேடருட்பட்டு,—வளர்ந்து—வளர்ந்து,—

சாதனவியல்எட்டாஞ்சூத்திரம்.

அயர்ந்தனையென—நின்பெருந்தகைமையை யறியாது மயங்கி இடர்ப்பட்டாய் நின் பெருந்தகைமையாவது,—உணர்த்த—இவ் வியல்பிற்றென்றறிவுறுப்ப,—விட்டு—அறிந்தமாத்திரையே அவ் வேடரைவிட்டு நீங்கி,—அந்நியமின்மையின்—அன்னியமின்றி அநந்நியமாந் தன்மையின் நிலைபெற்று,—அரன்கழல் செலுமே—அம்முதல்வன் றிருவடிகளை யணையும் எ—று.

உயிரென்பது மேலைச்சூத்திரத்தி னின்றும் வருவித்துரைக் கப்பட்டது. தவத்தினிற் குருவுமாய் வளர்ந்தயர்ந்தனை யென உணர்த்தவிட்டுச் செல்லுமென இயையும். புலன் ஆகுபெயர். வள ர்ந்தயர்ந்தனை யென்பது "ஈந்து புகழ்பெற்றான்"என்புழிப் போலக் காரண காரியப்பொருட்டாய் நின்றது. தம்முதலென்றது வேறு முடிபாகலிற் பால்வழுவின்மை யுணர்க. குருவுமென்ற உம்மை உயிர்க்குயிராய் உண்ணின் றுணர்த்தியதூஉமன்றியென இறந்தது தழீஇயிற்று; சிறப்புமாம். அந்நியமின்மை அத்துவிதம். அஃதா வது சேறலைப் பயப்பித்ததாய் ஆண்டுளதாகிய வினைபு. அரனென் றது சுட்டுப்பெயர்படநின்றது.

வெண்கொற்றக் குடையும் நவமணிமுடியுஞ் சிங்காதனமும் மன்னவர்க்கே உரிய சிறப்படையாளமாம்; அதுபோலப் பிரபஞ்ச மெல்லாவற்றிற்கும் மூலகாரணமா மியல்பாகிய ஒருபெரு வெண் கொற்றக் குடையும், எவற்றையும் ஒருங்கே ஒரியல்பானறியும் பேரறிவாகிய ஒருபெருஞ்சுடர் முடியும், அங்கங்கே உயிர்க்குயி ராய் நின்று எவற்றினையுஞ் செலுத்து மியல்பாகிய ஒரு பெருஞ் சிங்காதனமும், பிறரொருவற் கின்றித் தனக்கே உரிமையாகச் சிறந்மைபற்றிப் பசுக்களுக்குப் பாசங்களை யரித்தலான் அரனென் னும் திருப்பெயருடைய முதல்வனை மன்னவனாகவும், அம்முதல்வ னது பேரானந்தப் பெருஞ்செல்வ முழுதுந் தனதேயாகக் கொண் டநுபவிக்குஞ் சுதந்தரமுடைமையும் சித்தெனப்படுஞ் சாதியொரு மையும்பற்றி ஆன்மாவை மன்னவகுமாரனாகவும், அவ்வான்மாவை அறிவுப் பெருஞ்செல்வமுழுதையும் ஆறலைத்துக்கொண்டு சிறுமை யுறுத்துதலும் விதிவிலக்கை யிழப்பித்து இழிதொழிலி னிற்பித் தலுமாகிய இயல்புபற்றி ஐம்பொறிகளை வேடராகவும் உருவகஞ் செய்தார். இஃதேகதேச உருவகம். ஐம்புல வேடரினயர்ந்தனை வளர்ந்தெனவெனவே ஐம்புல வேடரின் வளர்ந்தயர்தலும் அறு வாதமுகத்தாற்பெற்றாம்.

விளக்கம்.

(இச்சூத்திரத்தின் பொழிப்புரை.) உயிரானது தான் முன் சென்மங்களிற் செய்யப்பட்ட புண்ணிய விசேடத்தின் பலனாக இதுவரையும் தனக்கு அந்தரியாமியாய் உள்நின்று சரியை கிரியா யோக மார்க்கங்களை உணர்த்தி வந்த பரம்பொருளே, இப்பொழுது ஞானமார்க்கத்தை அநுக்கிரகித்தருளும்பொருட்டுக் குருவடிவங் கொண்டெழுந்தருளிவந்து சிவதீக்கைசெய்து, தன்னைப்பார்த்து அரசகுமாரனாகிய நீ ஐம்பொறிகளாகிய வேடருக்குட்பட்டு வளர்ந்து நின்பெருமைகளை அறியாது மயங்கித்துன்பப்பட்டாய்; நின்பெருந் தன்மையாவது இத்தன்மைத்து என்று அறிவிக்கவும், அவ்வுண்மையை அறிந்து அறிந்த அப்பொழுதே அவ்வேடரைவிட்டு நீங்கி முதல்வனாகிய அரசனோடு அந்நியமின்றி அநன்னியமாய்ப் பிரிக்க முடியாத தன்மையில் நிலைபெற்று அம்முதல்வன் திருவடிகளை யணையும் எ-று.

உயிர் என்னும் எழுவாய் இச்சூத்திரத்திலில்லை; மேலைச் சூத்திரத்தில் நின்றும் வருவித்துரைக்கப்பட்டது.

சவத்தினில் தம்முதல் குருவுமாய் ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனையென உணர்த்த விட்டு அரன் கழல்செலுமே எனச் சூத்திரத்தை இயைத்துக் கொள்க.

ஐம்புலமென்றது ஐம்புலனையுமறிகின்ற ஐம்பொறியைக் குறித்து நிற்றலால் ஆகுபெயர்.

ஐம்புலமாவது, சத்தம் பரிசம் ரூபம் இரதம் கந்தமென்னும் ஐந்து விடயங்களுமாம். ஐம்பொறியாவது, காது உடல் கண் வாய் நாசி யென்னும் ஐந்து இந்திரியங்களுமாம்.

ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை யென்பது வளர்ந்தமையால் அயர்ந்தனை யெனப்பட்டு, வளர்தல் காரணமும் அயர்தல் காரியமுமாய் நின்றது. இது "ஈந்துபுகழ் பெற்றான்" என்று கூறுமிடத்து ஈந்தமையால் புகழ்பெற்றான் என்று கொள்ளுமாறு போலாம்.

தம்முதல் என்றவிடத்துத் தம் என்பது பலர்பால். வளர்ந்து அயர்ந்தனை என்றது முன்னிலை ஒருமை. பலர்பாலும் ஒருமைப்பாலுங் கூடி வழுவாகாதோ எனின், ஆகாது. எதனாலெனின், எல்லா உயிர்க்கும் பொதுவாக முதல் என்பது தோன்றத் தம்முதல் என்பது ஒரு முடிபும், வளர்ந்து அயர்ந்தனை என்பது முன்னிலையைக் குறித்த மற்றொரு முடிபும் ஆக வெவ்வேறு முடிபாதலால் என்க.

குருவுமாய் என்றதிலுள்ள உம்மை இதுவரையும் உயிர்க்குயிராய் உள்நின்று உணர்த்தினதைத் தழுவி நிற்றலால் இறந்தது தழுவியது. இன்னும்

சாதனவியல்எட்டாஞ்சூத்திரம்.

அவ்வும்மை முதல்வன் வடிவுகொள்ளுதற்குரிய கருணையின் பெருமையை விளக்கலால் சிறப்புமாம். உள் நின்று உணர்த்தியது என்றதனால் விஞ்ஞானகலருக்கு உணர்த்துவதுபோலன்று; சரியை கிரியா யோகங்களை உணர்த்துங் குருவினால் அறிவிக்கப்படுவதை அறிந்துகொள்ளும்படி உள் நின்றுபகரித்தலே உள் நின்றுணர்த்தியது எனக் கூறப்பட்டது.

அன்னியமின்மை என்பது பிரிக்கமுடியாத அத்துவிதம். அதாவது, ஐம்பொறிகளை விட்ட இடத்து அரன் திருவடிகளை அடைதற்கு ஏதுவாய் நின்ற பிரிக்கமுடியாத சம்பந்த விசேடமாம். திருவடியோடு உயிர் என்றும் பிரிப்பின்றி நிற்றலால் ஐம்பொறிகளை விட்டவிடத்துத் திருவடியையடையும் என்றபடியாம். அடைதலென்றதனால் பிரிந்து நின்று அடைந்ததென்பது பொருளன்று. உயிரானது அரன் திருவடியோடு பிரிப்பின்றி என்றும் நிற்பினும். அவ்வாறு நிற்கின்றேமென்பதை ஐம்பொறியின் கூட்டத்தால் மறக்கும்; பின்னர் ஆசிரியன் உபதேசத்தால் ஐம்பொறியின் கூட்டம் நீங்கினவிடத்துத் திருவடியோடு பிரிப்பின்றி நிற்றலை அறியும்; அவ்வாறு அறிதலே திருவடியை அடைதலென்பதற்குப் பொருளாம். திருவடியென்பது திருவருளாகிய சிற்சத்தியேயாம்.

முதல் குருவாய் வந்து உணர்த்த அரன்கழல்செலும் என்றதனால், முதல் வேறு அரன் வேறு அன்று. அரன் என்பது தம்முதலைக் குறித்த சுட்டுப்பெயராய் நின்றது.

முதல்வனை மன்னவனாகவும் ஆன்மாவை மன்னவ குமாரனாகவும் ஐம்பொறிகளை வேடராகவும் உருவகஞ்செய்த கருத்தென்னையெனின், வெண்கொற்றக் குடையும் நவமணி முடியும் சிங்காதனமும் மன்னவர்க்கே உரிய சிறப்படையாளமாம். சிறப்படையாளமென்றதனால் ஏனையோர்க்கு உரித்தன்று. அவ்வடையாளங்களுள், குடை எவர்க்கும் மேலாய் யாவரையுந் தனக்குள்ளடக்குந் திறத்தையும், மணிமுடி எவற்றையும் அறியுந் திறத்தையும், சிங்காதனம் எவற்றையும் நடத்துந்திறத்தையும் குறிக்கும். அதுபோல, பிரபஞ்சம் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாம் இயல்பாகிய ஒருபெரு வெண்கொற்றக் குடையும், எவற்றையும் ஒருசேர ஓரியல்பாலறியும் பேரறிவாகிய ஒரு பெருஞ்சுடர்முடியும், உயிராகிய சிங்கத்தை ஆதனமாகக் கொண்டு அங்கங்கே உயிர்க்குயிராய் நின்று எல்லா உயிரையும் நடாத்தும் இயல்பாகிய ஒருபெருஞ் சிங்காதனமும் ஆகிய இம்மூன்றடையாளங்களும் பிறரொருவற்கு மின்றித் தனக்கே உரிமையாகச் சிறந்தமைபற்றிப் பசுக்களுக்குப் பாசங்களை அரித்தலால் அரன் என்னுந்திருப் பெயருடைய முதல்வனை மன்னவனாகவும், மன்னவன் செல்வம் முழுதும்தன்னதாக அநுபவிக்குஞ் சுதந்திரமும் அரசத்தன்மையாகிய சாதியும் மன்னவகுமாரனுக்கு உண்டாமாறுபோல, உயிருக்கு அம்முதல்வனது பேரானந்தப் பெருஞ் செல்வம் முழுதும் தன்னதாகக் கொண்டநுபவிக்கும் சுதந்திரமும் முதல்வன் சித்தத்

தன்மை யுடையனாதல் போல சித்துத்தன்மையாயிருக்குஞ் சாதியொற்றுமையும் இருத்தல்பற்றி உயிரை மன்னவகுமாரனாகவும், இறைவனை அடைதற்கு வழியாகிய தனுகரண புவனபோகங்களில் உயிர் செல்லுங்கால் ஐம்பொறிகளாகிய வேடர் அவ்வுயிர் அடைதற்குரிய அறிவுப்பெருஞ் செல்வமுழுதையும் வழிப்பறி செய்துகொண்டு அவ்வுயிரைச் சிரமப்படுத்துதலும் விதிவிலக்கைக்கடந்து இழிந்த செயல்களில் பிரவேசிக்கும்படி செய்தலும் ஆகிய இயல்புபற்றி அவ்வைம்பொறிகளை வேடராகவும் உருவகஞ்செய்தார். சூத்திரத்தில் ஐம்பொறிகளைமட்டும் வேடராக உருவகஞ்செய்து முதல்வனை மன்னவனாகவும் ஆன்மாவை மன்னவகுமாரனாகவும் உருவகஞ் செய்யாமையால் இவ்வுருவகம் ஏகதேச உருவகம்.

மன்னவகுமாரன் மன்னவனுக்குரிய செல்வங்களை அநுபவிக்குஞ் சுதந்திரமும் மன்னவசாதியும் உடையனாயினும் மன்னவன் ஏவல் வழி நின்றே அநுபவிப்பன். அதுபோல, உயிரும் முதல்வன் அருள்வழி நின்றே சிவானந்தத்தை அநுபவிக்கு மென்றறிக.

ஐம்புலவேடரின் அயர்ந்து வளர்ந்தாலன்றி வளர்ந்தனையெனக் கூற முடியாது. ஆகவே, வளர்ந்தனையென்ற அநுவாதத்தால் ஐம்புலவேடரின் அயர்ந்து வளர்தல் பெறப்பட்டது.

சிற்றுரை.

இதனுள், தவத்தினிலுணர்த்த வென்றது ஓரதிகரணம்; தம் முதல் குருவுமாயென்றது ஓரதிகரணம்; ஐம்புலவேடரினயர்ந்தனை வளர்ந்தெனவென்றது ஓரதிகரணம்; விட்டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே என்றது ஓரதிகரணம்; ஆக நான்கு அதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

விளக்கம்.

வெ - டை.

முதலதிகரணம்.

தவத்தால் ஞானமுண்டாமெனக் கூறும்

மேற்கோள்.

ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய்தவத்தான் ஞானம் நிகழுமென்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், மேற்கூறிப்போந்த சாதகராற் செய்யப்படுஞ் சாதனமும் அதுவருவாயும் வேறுவேறாகக் கூறுஞ் சமயத்தாரை நோக்கிச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ—ள். வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ—ள்.) ஈண்டு—இந்நான்கதிகரணங்களுள் வைத்து இம்முதலதிகரணத்து,—இவ்வான்மாக்களுக்கு—மேற்கூறிப்போந்த வியல்புடைய ஆன்மாக்களுக்கு,—முற்செய்தவத்தான்—படிமுறையானன்றி இவ்வொருபிறவியிற் செய்ததவத்தான் அமையாது முற்பிறவிகளிலே செய்துவந்த தவமாகிய சரியைகிரியாயோக விசேடத்தால்,—ஞானம்—குரவனுணர்த்தியவாறு சிவஞானங் கண்ணுகக் கொண்டறிவதாகிய சாதன அறிவானது,—நிகழுமென்றது—ஐயந்திரியின்றி விளங்கும் எ-று.

சிற்றுரை.

மேற்கூறிப்போந்த இயல்புடைய ஆன்மாக்களுக்கென்பார் இவ்வான்மாக்களுக்கென்றார். படிமுறையானன்றி இவ்வொரு பிறவியிற் செய்த தவந்தானே அமையா தென்பதுணர்த்துதற்கு முற்செய்தவமென விசேடித்தார். ஈண்டு ஞானமென்றது குரவனுணர்த்தியவாறு சிவஞானங் கண்ணுகக்கொண்டு அறிவதாகிய சாதனவறிவின்மேற்று. நிகழ்தல் ஐயந்திரிபின்றி விளங்குதல்.

விளக்கம்.

இம்மேற்கோள் சூத்திரத்திலுள்ள தவத்தினில் உணர்த்த என்னும் முதற்கூற்றைப் பதச்சேதஞ்செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோவெனின், ஏழாஞ் சூத்திரத்தாற் கூறிமுடித்த அதிகாரியினாற் செய்யப்படுஞ் சாதனமும், அச்சாதனம் வரும் வழியும், ஒவ்வொரு சமயத்தாரும் வேறு வேறாகக் கூறுவாரதலால், அவ்வாறு கூறுவாரை நோக்கிச் சூத்திரத்தின் முதற்கூற்றைப் பதச்சேதஞ் செய்து ஞானமேசிறந்த சாதனமென்றும் அது முற்செய் தவத்தால் வருமென்றுங் கூறியவாறும்

இவ்வதிகரணத்தில் முத்திக்குச்சாதனம் சரியையாதிகளோஞானமோ என்பது ஐயப்பாடு. சரியையாதிகள் என்பது பிறர்பக்கம்.

(இம்மேற்கோளின் பொருள்.) இச்சூத்திரத்திற் கூறப்படும் நான்கதிகரணங்களுள் இம்முதலதிகரணத்தில், எழாஞ் சூத்திரத்திற் கூறிமுடித்தபடி சத்து அசத்து இரண்டினையும் அறியும் இயல்புடைய ஆன்மாக்களுக்கு, இவ்வொரு பிறவியிற்செய்த தவத்தாலாகாது முற்பிறவிகளிலே ஒன்றன்பின் னொன்றாகிய படிமுறைபாற் செய்துவந்த தவமாகிய சரியைகிரியா யோக விசேடத்தால், குரவன் உணர்த்திபவண்ணம் சிவஞானங் கண்ணைக் கொண்டு அறிவதாகிய சாதன அறிவானது ஐயந்திரிபின்றி விளங்கும் எ-று.

எழாஞ் சூத்திரத்திற் கூறிமுடித்த இயல்புடைய ஆன்மாக்களென்று கூறவேண்டி இவ்வான்மாக்களுக்கு என்றார். மேலைச்சூத்திரத்திலுள்ளதை அகரச்சுட்டாலன்றி இகரச்சுட்டால் சுட்டலாமோவெனில்; இரு சூத்திரமும் சாதனவியலானதால் சுட்டலாமென்க.

சரியை முற்றியபின் கிரியையும், கிரியை முற்றியபின் யோகமும், இவ்வாறு ஒன்றன்பின் னொன்றாய் முற்பிறவிகளிற் செய்துவந்த தவத்தால் ஞானம் நிகழுமன்றி, இவ்வொரு பிறவியிற் செய்ததவத்தால் ஞானம் நிகழாதென்பதை அறிவிக்கவேண்டித் தவத்தால் என்றுகூறாமல் முற்செய் என்னும் விசேடணத்தைத் தவத்தோடு கூட்டி முற்செய் தவத்தாலெனத் தவத்தை விசேடித்தார்.

இம்மேற்கோளில் ஞானமென்றது அநுபவஞானத்தையன்று; ஆசிரியன் அறிவித்தவண்ணம் சிவஞானங் கண்ணைக்கொண்டு அறிவதாகிய சாதன அறிவையேயாம். சரியை கிரியை யோகம் ஞானம் என்ற சாதனம் நான்கனுள் ஒன்றாகிய ஞானம் சாதனஞானம். அந்த ஞானத்தாலுண்டாவது அநுபவஞானம். ஞானம் நிகழுமென்றதில் நிகழ்தலாவது அந்தச் சாதன அறிவு ஆசிரியன் அறிவித்தவாறே சந்தேகமின்றியும் மாறுபாடின்றியும் விளங்குதல்.

தவத்தால் ஞானம் நிகழுமென்பதற்குக் காட்டும்

ஏது.

மேற் சரியை கிரியாயோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோக்ஷத்தைக் கோடாவாகலான்.

சிற்றுரை.

ஏ—து வ—து எ—னின், தவங்களை சாதனமாதலமையும்ஞானமெற்றுக்கென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ—ள் வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ-ள்.) மேல்—முற்பிறவிகளில்,—சரியை கிரியா யோகங்களைச் செய்துழி—சரியை கிரியா யோகங்களாகிய தவங்களைச் செய்த

முற்றுப்பெற்றவிடத்து அத்தவங்கடாம்,—நன்னெறியாகிய—வீடு பேறெய்தற்குச் சன்மார்க்கமாகிய,—ஞானத்தை—மேற்கூறிய ஞானத்தை,—காட்டியல்லது— பயப்பித்தன்றி,—மோக்ஷத்தை—முத்தியை,—கொடாவாகலான்—கொடுப்பனவல்லவாகலான், 'ஈண் டிவ்வான்மாக்களுக்கு முற்செய்தவத்தான் ஞானம் நிகழு'மென மேற்கொண்டது எ-று.

சிற்றுரை.

ஈண்டுத்தவமெனப்பட்டன பிறவல்லவென்பார் சரியை கிரியா யோகங்களையெனக் கிளந்துரைத்தார். கிரியாயோகங்களென்னும் உம்மைத்தொகை வடநூன்முடிபு. கிரியா யோகமிரண்டற்கும் தீக்கை ஒன்றென்பது தோன்ற அவ்விரண்டனையுந் தொகுத் தோதிச் சரியையைத்தமிழுக்குரிய வீற்றான் வேறு வைத்தார். ஆளுடையபிள்ளையார் முதலாயினோர்க்குத் தவமின்றியும் ஞானம் நிகழ்ந்தவாறென்னை யென்னுங் கடாவை விடுத்தற்கு மேற்செய் துழியென ஈண்டும் வலியுறுத்தார். மேலாகிய வுண்மைச்சரியை கிரியா யோகங்களை எனினும் அமையும். காட்டிக்கொடுக்கு மெனற்பாலதனை எதிர்மறைமுகத்தாற் கூறினார், ஞானத்தை இன்றியமையாமை யுணர்த்துதற்கு. சரியை கிரியாயோகங்களைச் செய்துழி என்றது உபலக்கணமாகலின் தீக்கை பெற்றுழி அது வும் ஞானத்தைக் காட்டியல்லது மோக்ஷத்தைக் கொடாதெனக் கொள்க. அவையெல்லாம் ஞானத்தைக் காட்டியல்லது மோக்ஷத் தைக் கொடாமையை வலியுறுத்துவார் நன்னெறியாகியவென ஞானத்தை விசேடித்தார். நன்மையெனப்படுவன வெல்லாவற்றி னுஞ் சிறந்த நன்மையாவது வீடுபேறென்பது. அதனைத் தலைப் படுதற்கேதுவாய்ச் சிறந்த நெறியாகலின் ஞானம் நன்னெறியெனப் பட்டது. வீட்டிற்கு நெறியென அவ்வச்சமயத்தாராற் கூறப்படு வன வனைத்துந் தன்கண்ணே வந்து கூட நின்ற பெருநெறியாக லானும் அது நன்னெறி யெனப்பட்டது. நன்னெறி சன்மார்க்க மென்பன ஒரு பொருட்கிளவி.

விளக்கம்.

இந்த ஏது என்ன சொல்லிற்றேவெனின், சரியை கிரியை யோகங்க ளாகிய தவங்களே முத்திக்குச் சாதனமென்றல் பொருந்தும்; அவ்வாறாகவும் மேற்கோளில் முத்திக்குச் சாதனமாக ஞானம் நிகழுமென்று கூறியது

எதற்கு என்பாரை நோக்கி ஞானத்தையின்றி முத்தி சித்தியாதெனக் கூறி முற்செய் தவத்தால் ஞானம் நிகழுமென்னும் மேற்கோளை வலியுறுத்திய வாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) முற்பிறவிகளில் சரியை கிரியாயோகங்களாகிய தவங்களைச்செய்து முற்றுப்பெற்றவிடத்து, அத்தவங்கள் தாம் முத்திக்கு நேர்நெறியாகிய சன்மார்க்கமென்னும் ஞானத்தை யுண்டுபண்ணி அந்த ஞானங் காரணமாக முத்திபைத் தருமேயன்றி, அத்தவங்களே நேராக முத்தியைத் தாராவாம். ஆதலால் ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தால் ஞானம் நிகழுமென மேற்கோள் கூறியது எ-று.

சூத்திரத்தினும் மேற்கோளினும் தவம் என்பது, உண்டி சுருங்குதல் முதலியவற்றால் சரீரத்தை வாட்டுதல் துன்பத்தைச் சகித்தல் முதலிய பிறதவங்களல்லவென அறிவிக்கவேண்டி ஏதுவில் சரியை கிரியா யோகங் களை என்று பெயர் சொல்லிச் சிறப்பித்துக் கூறினர்.

கிரியாயோகம் என்பது ஞானயோகங் கிரியா யோகமென்ற இருவகையுள் ஒன்றன்று. கிரியையும் யோகமுமென்னும் பொருளில் வடமொழிப்படி கிரியாயோகம் என நின்றது. அப்பொருளைத் தரும் உம்மை வடநூல் முடிபுப்படி தொக்கு நின்றது. சரியைக்குச் சமயதீக்கையும் கிரியையோகம் இரண்டற்கும் விசேடதீக்கையும் உரித்தாதலின், அவ்வுரிமைப்படி கிரியை யோகம் இரண்டனையும் வடமொழிப்படி கிரியாயோகமென ஒரு தொடராகக்கூறி, சரியாவென்னும் வடமொழியைத் தமிழுக்குரிய ஐகாரத்தை இறுதியில்வைத்துச் சரியையென வேறு வைத்தார்.

தவத்தால் ஞானம நிகழுமாயின் திருஞானசம்பந்த சுவாமிகள் முதலியோருக்குத் தவமின்றியும் ஞானம் நிகழ்ந்தவாறு என்னையென்னும் ஆசங்கை நிகழுமன்றே? அதற்கு உத்தரமாக முற்பிறவியில் தவஞ்செய்துள்ளார் என்பது தோன்ற முற்செய் தவத்தால் என்று மேற்கோளிலும், மேல்சரியை கிரியா யோகங்களைச் செய்துழி என ஏதுவிலுங்கூறித் தவத்தினாலேயே ஞானம் நிகழுமென்பதை வலியுறுத்தினர்.

சரியை கிரியாயோகம் என்பன, உபாயச்சரியை கிரியாயோகம் உண்மைச் சரியைக் கிரியாயோக மென இருதிறப்படுமாதலின் ஏதுவில் மேல் என்பதற்கு மேலாகிய உண்மைச்சரியை கிரியாயோகம் என்று கூறினும் பொருந்தும். அவ்வாறாயினும் மேற்கோளில் முற்செய் தவமென்றிருத்தலால் முற்பிறவியிற் செய்துள்ளாரென்று கூறியதற்கு இழுக்கில்லை.

உபாயமாவது உலகப்பொருளை நோக்கிச் செய்வது.

உண்மையாவது முத்திகாரணமாகச் செய்வது.

ஞானத்தையின்றி மோக்ஷம் சித்தியாது என வலியுறுத்தவேண்டி ஞானத்தைக் காட்டி மோக்ஷத்தைக் கொடுக்கும் என்று உடன்பாட்டு முகத்தாற் கூறாது ஞானத்தைக் காட்டி அல்லது மோக்ஷத்தைக் கொடா என எதிர்மறை முகத்தாற் கூறினர். சரியை கிரியாயோகங்களைச் செய்துழி என்று ஏதுவிற் கூறியது உபலக்கண மாதலால் சரியை கிரியாயோகங்கள் மட்டுமன்று தீக்ஷைபெற்றுழியும் அதுவும் ஞானத்தைக் காட்டியல்லது மோக்ஷத்தைக் கொடாதெனக் கொள்க. சரியை முதலிய அவையெல்லாம் ஞானத்தைக் காட்ட அந்தஞானம் மோக்ஷத்தைக் கொடுக்குமன்றிச் சரியை முதலியவையே நேரேமோக்ஷத்தைக் கொடாவென்பதை வலியுறுத்தவேண்டிச் சரியை கிரியாயோகங்களை விசேடணமின்றிக் கூறி ஞானத்தை நன்னெறியாகிய என்னும் விசேடணத்துடன் கூறினர். நன்னெறி யென்பது நன்மைக்கு ஏதுவாகிய நெறியென விரியும். நன்மைபலவேறு வகைப்படும். அவற்றுளெல்லாம் மேலான நன்மையாவது முத்தியேயாம். அந்தமுத்தியைச் சேருதற்கு ஞானமே ஏதுவாயும் மேலான நெறியாயும் கருதப்படும். ஆதலால் ஞானம் நன்னெறி யெனப்பட்டது. முத்திக்கு நெறியாக ஒவ்வொரு சமயத்தாராலும் கூறப்படுவன அனைத்தும் ஞானத்தின் கண்ணே வந்து கூடும். சரியை கிரியாயோகங்களில் ஏனைய சமயிகள் மாறுபடுவர். ஞானத்தை எல்லாச் சமயிகளும் ஒப்புக்கொள்ளுவர். ஆகவே எல்லாச் சமயத்தாரும் கூறும் வீட்டு நெறியும் ஞானமாகிய தன்கண்ணே வந்து கூட நின்றபெரு நெறி ஆதலானும் அந்தஞானம் நன்னெறி யெனப்பட்டது. நன்னெறி யென்பதும் சன்மார்க்கமென்பதும் ஒரு பொருட்சொற்கள். சன்மார்க்க மென்பது சத்தியமார்க்கமாம். சத்தியமார்க்க மென்பது ஞானத்திற்கு மேற்பட்ட மார்க்கம் இல்லாமையைக் குறித்து நின்றது; நிற்கவே, நன்னெறியாகிய ஞானம் என்றதனால் மேலான நெறியாகிய ஞானம் என்றாகிச் சரியை கிரியாயோகங்கள் கீழான நெறியென்பதும் அந்நெறிகள் மேலானநெறியைக் காட்டாமல் முத்தியையடையச்செய்யா என்பதும் தானே விளங்கும். உதாரணமாக, இரதவீதிகள்போல ஞானம்; புறவீதிகள்போலச் சரியையாதிகள்; முத்திபோல ஆலயம். ஆலயத்திற்குச் செல்லும் ஒருவன் புறவீதிகளில் எந்தவீதி வழியாகச் செல்லினும் இரத வீதிக்குட்சென்று ஆலயத்துட் செல்லக் கூடுமேயன்றி இரதவீதிக்குட்செல்லாது ஆலயத்துட் செல்லமுடியாது; அதுபோலச் சரியை கிரியாயோகங்களைச் செய்து ஞானத்திற் சென்று அதன்வழியாய் முத்தியை யடையவேண்டுமென அறிக.

ஞானமும் உபாயம் உண்மை என்று இருவகைப்படும். ஆகவே, சரியை கிரியையோகம் ஞானம் என்னும் நான்கும் முத்திகாரணமாகச் செய்யும்உண்மைச் சிவ புண்ணிய மெனவும், உலகப்பொருள் காரணமாகச் செய்யும் உபாயச் சிவபுண்ணிய மெனவும் இருதிறப்பட்டு அவ்விருதிறத்தாலும் ஒவ்வொன்றும் நான்கு நான்காகச் சிவ புண்ணியம் எட்டுவகைப்படு மென்ற

வாறுயிற்று. அந்த எட்டும் சரியையிற் சரியை கிரியையோகம் ஞானம், கிரியையிற் சரியை கிரியை யோகம் ஞானம், யோகத்திற் சரியை கிரியை யோகம் ஞானம், ஞானத்திற் சரியை கிரியை யோகம் ஞானமென ஒவ்வொன்றும் நான்கு நான்காக முப்பத்திரண்டாய் விரியும், அவற்றுள்,

சரியையிற் சரியையாவது:—திருக்கோவில் அலகிடல் மெழுகல் முதலியன. அலகிடலாவது குப்பையை அப்புறப்படுத்தல்.

சரியையிற் கிரியையாவது:—பரிவார மூர்த்திகளில் ஒரு மூர்த்தியை வழிபடுதல்.

சரியையில் யோகமாவது:—நெஞ்சின்கண் சிவபெருமான் உருவத் திருமேனியைத் தியானஞ் செய்தல்.

சரியையில் ஞானமாவது:—அத்தியான பாவனையின் உறைப்பினுல் ஓர் அநுபவ உணர்வு நிகழ்தல்.

கிரியையிற் சரியையாவது:—சிவபூசைக்கு வேண்டப்படுவன வெல்லாஞ் சேகரித்தல்.

கிரியையிற் கிரியையாவது:—பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தியாகிய ஐவகைச் சுத்தியுஞ் செய்து சிவலிங்கவடிவிற் செய்யும் பூசனை: பூதசுத்தி என்பது பூசிப்பவனுகிய தன்னைச் சுத்தி செய்தல் பூதம்—ஆன்மா; அதனை "பூதம்யாவையினுள்ளலர் போதென" என்பதனுனுமுணர்க. (பெரியபுராணம் திருமலைச் சருக்கம் செ ௫௫.)

கிரியையில் யோகமாவது:—அகத்தே பூசை, ஓமம், தியானம் என்ற மூன்றற்கும் முறையே இருதயம், நாபி, புருவநடு என்னும் மூவிடங்களை வகுத்துக் கொண்டு செய்யும் அந்தரியாக பூசை.

கிரியையில் ஞானமாவது:—அவ்வந்தரியாக பூசையின் உறைப்பால் ஓர் அநுபவ உணர்வு நிகழ்தல்.

யோகத்திற் சரியையாவது:—இயம், நியமம், ஆசனம், பிராணுயாமம் என்னும் நான்கினையும் பழகுதல்.

யோகத்திற் கிரியையாவது:—பிரத்தியாகாரம் தாரணை என்னும் இரண்டனையும் பழகுதல்.

யோகத்தில் யோகமாவது:—தியானஞ் செய்தல்.

யோகத்தில் ஞானமாவது:—சமாதி கூடுதல்.

இந்த அட்டாங்க யோகங்களின் இலக்கணங்களைச் சிவஞான சித்தியார் அ-ம் சூ-ம் உக-வது செய்யுள் உரையிற் கூறியிருக்கின்றமையால் அவ்விடத்துக் காண்க.

சாதனவியல்எட்டாஞ்சூத்திரம். க-ம் அதி.

இந்தயோகமும் சாலம்பம், நிராலம்பம், எனஇருவகைப்படும். அவற்றுள்,—சாலம்பயோகமாவது—சிவலிங்காதி வடிவத்தைப் பற்றிச் செய்வது. நிராலம்ப யோகமாவது—அகண்டாகார சோதியைப் பற்றிச்செய்வது. சாலம்பமென்பது ஆலம்பத்தோடு கூடியது. ஆலம்பமாவது ஆதாரம்; ஆகவே, சாலம்பம் ஆதாரத்தோடு கூடிய தெனவும், நிராலம்பம் ஆதாரமில்லாத தெனவும் அறிக.

ஞானத்திற் சரியையாவது:—ஞானசாத்திரப் பொருளைக் குருவினிடத்துக் கேட்டல்.

ஞானத்திற் கிரியையாவது:—அப்பொருளை எது திருட்டாந்தங்களுடன் சிந்தித்தல்.

ஞானத்தில் யோகமாவது:—அப்பொருளை ஐயவிபரீத மின்றித் தெளிதல்.

ஞானத்தில் ஞானமாவது:—சிவபெருமானோடு அபேதமாய்க் கலந்து நிட்டை கூடுதல்.

இவற்றுள் ஞானத்தில் ஞானம் நீங்கிய உண்மைச் சிவபுண்ணியத்துக்குப் பயன் சாலோக சாமீப சாரூபமென்னும் பதமுத்தியும், ஞானத்தில் ஞானத்துக்குப் பயன் சாயுச்சியமாகிய பரமுத்தியுமாம். உபாயச்சிவபுண்ணியத்திற்குப் பயன் இப்புவனமுதல் சுத்தமாயாபுவனம் வரையுள்ள புவனங்களில் போகங்கள் அநுபவித்தல்.

சாலோகமாவது:—புவனபதிகளின் உலகங்களை யடைந்து ஒருவர் மனையில் பணிசெய்யும் அகத்தொண்டர்க்கு உள்ள உரிமைபோல அவ்வுலகத்துள் எவ்விடத்துந் தடையின்றிச் சஞ்சரித்து அங்குள்ள போகங்களை அநுபவித்து வாழ்தல்.

சாமீபமாவது:—புத்திரர்க் குளதாகிய உரிமைபோல அப்புவன பதிகளுக்கு நெருங்கினவரா யிருந்து அவர்போகங்களை யநுபவித்து வாழ்தல்.

சாரூபமாவது:—தோழற்குரிய உரிமைபோல அப்புவன பதிகளோடொத்த வடிவமும் ஒத்த ஆபரணமும் ஒத்த போகஅநுபவமும் பெற்று வாழ்தல்.

சாயுச்சியமாவது:—சரியையில் ஞானமுதல் யோகத்தில் ஞானம் ஈறாகிய ஞானங்கட்குப் பயனாகிய சாயுச்சியமும், ஞானத்தில் ஞானத்திற்குப் பயனாகிய சாயுச்சியமு மென இருதிறப்படும், அவற்றுள், சரியைமுதல் யோகம் ஈறாகிய மூன்றிலு முள்ள ஞானத்திற்குப் பயனாகிய சாயுச்சியமாவது புவனபதிகளால் அதிட்டிக்கப்பட்டு அப்புவனபதிகள் செய்யும் அதிகாரங்களை அவர்போலவே செய்துகொண்டு வாழ்தல். முடிபாகிய ஞானத்

திற்குப்பயனெனப்படும் சாயுச்சியமாவது சிவபெருமான் றிருவடியில் இரண்டறக் கலந்து சிவானந்தத்தை அநுபவித்தல்.

இந்த ஏது பரமுத்திக்குச் சாதனம் சரியையாதிகள் என்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

சரியையாதிகளால் ஞானம் நிகழுமென்பதற்குக் காட்டும்
உதாரணம்.

தவஞ்செய்தா ரென்றுந் தவலோகஞ் சார்ந்து
பவஞ்செய்து பற்றறுப்பா ராகத்—தவஞ்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றார்சூழ் சொல்லுமாங் கண்டு.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், மேற்சரியைகிரியா யோகங்களைச் செய்தார் அவற்றான் ஞானத்தைக்காணும் முறைமை எவ்வாறென்பாரைநோக்கி அஃதாமாறுணர்த்தி ஏதுவைவலியுறுத்து தனுதலிற்று.

(இ—ள்.) தவஞ்செய்தார்—சரியை முதலியவற்றைச் செய்தோர்கள்,—தவலோகம் என்றும் சார்ந்து—(அவ்வத் தவப்பயன்களைப் பயப்பிக்குஞ்) சாலோகாதிபதங்களை ஒரு தலையாகநண்ணி (ஆண்டுளவாகிய இன்பங்களை அநுபவித்து),—பற்றுப் பவஞ் செய்து அறுப்பார் ஆக—(முன்னுடம் பிறக்கு நாள் அடுத்தவினை காட்டுங் கதி நிமித்தம்பற்றி எழுந்த அவாவினை (மீள நிலத்தின் கட்) பிறந்தநுபவித்து நீக்கிக் கோடற் பொருட்டு,—தவஞ்செய்த நற் சார்பில் வந்து உதித்து ஞானத்தை நண்ணுதலை—(மீளத்) தவஞ் செய்தற்குரிய உயர்ந்த குலத்தின்கண்வந்து தோன்றித் (தவக்குறையான் அவ்விடயப் பற்று முறுகாவண்ணம் அறுத்துத்) தத்துவ ஞானத்தைத் தலைப்படுவாராதலை,—கற்றார் சூழ் கண்டு சொல்லும்—வீட்டு நூல்களைக் கற்றாரது சூழ்ச்சி அந்நூற்கருத் துணர்ந்து சொல்லும் எ-று.

தவந்தானாகப் பிறிதொன்று தானாக இவ்வுலகத்து உடம்பொடு நின்றீட்டிய வினையெல்லாம் அவ்வுலகத்திற் செலுத்தித் தத்தம் போகங்களைப் பயந்தே விடுமாகலான் அவற்றை ஒருஞான்றும் பிறழமாட்டா ரென்பார் என்றுந் தவலோகஞ் சார்ந்தென்றார். ஆகவென்னும் செயவெனெச்சம் " உண்ணவந்தான் "

என்புழிப் போலத் தற்பொருட்டாய் நின்றது. பற்றுதற் பொருட்டு வந்துதித்தெனவே ஆண்டுப்பற்றுச் செல்லாதவழி அவ்வுலகத்து நின்றாங்கே ஞானத்தை நண்ணுவரென்பதூஉம் பெறுதும். கற்றாரது சொல்லுதற் றொழில் சூழ்ச்சிமேலேற்றப் பட்டது. ஆம் அசை. நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலென்ற அருத்தாபத்தியான் இழிகுலத்தோர் தத்துவஞானத்திற் குரியரல்லரென்பது பெறப்பட்டது.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோ வெனின், எதுவிற் கூறியபடி முற்பிறவிகளில் சரியை கிரியா யோகங்களைச் செய்தவர் அவற்றால் ஞானத்தை அடையும் முறைமை எவ்வாறு என்பாரை நோக்கி அவற்றால் ஞானத்தை அடையும் முறைமையினை யுணர்த்தி எதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) சரியை கிரியா யோகமாகிய தவங்களைச் செய்தவர் சரியையின் பலனை அநுபவிப்பதற்குச் சாலோகபதத்தையும், கிரியையின் பலனை அநுபவிப்பதற்குச் சாமீபபதத்தையும், யோகத்தின் பலனை அநுபவிப்பதற்குச் சாரூபபதத்தையும் உறுதியாய்ப் பொருந்தி, அப்பதங்களில் உளவாகிய இன்பங்களை அநுபவித்து, அநுபவிக்கவேண்டிய காலம் கழிந்தபின் அப்பதங்களைவிட்டுப் பிரிந்து, முன் மண்ணுலகத்தைவிட்டு உடம்பு இறக்கும் சமயம் சுவர்க்க நரக அநுபவத்திற்குப் பின் இம் மண்ணுலகத்தைப் பொருந்துதற் குரியதாய்த் தான்செய்த வினையினால தன்மனத்தின்கண் பற்றி எழுந்த அவாவினை, மீண்டும் இம்மண்ணுலகத்தின்கண் பிறந்து அநுபவித்து நீக்கிக்கொள்ளுதற்பொருட்டு, இவ்வுலகத்தில் தவஞ்செய்தற்குரிய உயர்ந்தகுலத்தில் வந்துபிறந்து தவக்குறையை நிறைவேற்றுவதால் முன்வினையாலுண்டாகிய விடயப்பற்று வளராவண்ணம் அறுத்துத் தத்துவஞானத்தை அடைவர். இவ்வாறு தத்துவஞானத்தை அடைவர் என்று வீட்டுநூல்களைக் கற்றவருடைய நுண்ணறிவு அந்நூற்கருத்துணர்ந்து சொல்லும்எ-று.

(க-ரை.) சரியை முதலியவற்றைச் செய்தவர்கள் இறக்குங்கால் மனைவி முதலியோரிடத்துப் பற்றுவைப்பின் சரியையாதியின் பயனாகச் சாலோகாதி பதங்களை அடைந்து அவ்விடத்துள வாகிய இன்பங்களை அநுபவித்துப் பின்னர் முன் பற்றுவைத்த வினைப்பயன்களை அநுபவித்தற் பொருட்டுப் பூமியில் உயர்ந்த குலத்திற் பிறந்து வினைபபயனை அநுபவிக்கும்பொழுதே முன்செய்த சரியை யாதியைச் செய்து அவற்றால் ஆசையை அறுத்து உண்மை ஞானத்தைப் பொருந்துவர். முன்னிறக்கும் பொழுது இவ்வுலகப் பற்று இல்லாதிருப்பின் சாலோகாதி பதங்களி லிருந்தவாறே ஞானத்தைப் பொருந்துவர் என்பதாம்.

சாலோகாதி பதங்களை அடைவதற்குமுன் செய்யுஞ் சாரியையாதிகள் கடவுட் பற்றுக் கேதுவாய் நிற்கும்; நிற்பினும் கடவுள் உண்மையை அறியாமையினால் சாலோகாதி பதங்களைப் பொருந்தும்படி செய்யும்; அப்பதங்களை அடைந்தபின்னர்த் திரும்பப்பூமியிற் பிறந்து செய்யுஞ் சரியையாதிகள் விடயப்பற்று அறுதற் கேதுவாய் நிற்கும். அதனால் விடயப்பற்று நீங்கி உண்மை ஞானம் உண்டாகும். முன்னர்ச் செய்யுங்கால் ஒவ்வொன்றையும் காலநீட்டிப்புடன் அரிதிற்செய்வன், பின்னர்ச் செய்யுங்கால் ஞான நாட்டத்தால் காலநீட்டிப்பும் அருமையுமின்றிச் செய்வன். இது எதுபோலவெனின், ஒருமாணுக்கன் ஒருபாடத்தைத் தொடங்கும் பொழுது அப்பாடத்தை நீண்டநாள் அரிதிற் படித்து வரப் பண்ணிச் சில நாட்கழிந்து பின்னர் அப்பாடத்தைத் தொடங்கும்பொழுது எளிதில் விரைந்து படிப்பதுபோல என அறிக.

தவவினையாயினும் தவமல்லாத பிறவினையாயினும் இவ்வுலகத்தில் உடம்பொடு கூடி நின்று செய்தவினைகளெல்லாம் அவ்வினைப்பயனை அநுபவிப்பதற்குரிய அந்த உலகத்திற் செலுத்தி அந்தவினைக்கு உரிய போகங்களை அநுபவிக்கும்படி செய்தேவிடுமாதலால் அவ்வாறு அநுபவிப்பனவற்றை வினை செய்தவர் எக்காலத்தும் அநுபவிக்காமல் தப்பித்துக் கொள்ள மாட்டாரென்று கூறவேண்டிச் செய்யுளில் என்றுந் தவலோகஞ் சார்ந்து என்றார்.

பற்றறுப்பாராக என்பதில் ஆக என்பது செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அந்த எச்சம் உண்ணவந்தான் என்றவிடத்து உண்ணுதற் பொருட்டு வந்தான் என்று கொள்வதுபோலப் பற்றறுத்தற்பொருட்டு என்னும் பொருளில் நின்று நற் சார்பில் வந்துதித்து என்னும் வினைகொண்டு முடிந்தது.

பற்றறுத்தற் பொருட்டு வந்துதித்து என்றதனால் முன் உடம்பு இறக்குங்கால் மண்ணுலகத்து விடயங்களிற் பற்றுச்செல்ல வில்லையாயின் அவ்வுலகத்தில்நின்றவாறே இவ்வுலகத்துக்கு வாராமல் ஞானத்தை அடைவரென்பதும் அறிக.

கற்றவருடைய சொல்லுதற் கொருமுழிலைக்கற்றவர் அறிவின்மேலேற்றிச் சூழ்சொல்லுமெனக் கூறப்பட்டது.

சொல்லுமாம் என்றதிலுள்ள ஆம் என்பது அசை.

இழிகுலத்தோர் தத்துவஞானத்திற்கு உரியரல்லரென்று பெறப்பட்டாலன்றி நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதல் என்பது சம்பவியாது ஆதலால் இழிகுலத்தோர் தத்துவ ஞானத்திற்கு உரியரல்லரென்பது பெறப்பட்டது. இவ்வாறு அறிவது அருத்தாபத்திப் பிரமாணம்.

இழிகுலத்தோர் ஞானத்திற்கு உரியரல்லராயின், திருநாளைப்போவார் நாயனார் முதலியோருக்கு ஞானம் உதித்தவாறு என்னையெனின், கூறு

தும், ஞானத்திற்கு முதற்காரணம் சரியை கிரியை யோகங்களின் முற்றுத லும், துணைக்காரணம் நற்குலமுமாம். நற்குலத்து உதித்தும் சரியையா திகளை அநுட்டிக்கவில்லை யாயின் ஞானத்திற்கு உரியராகார். தாழ்ந்தகுல த்தினராயினும் சரியையாதிகளை அநுட்டிப்பரேல் ஞானத்திற்கு உரியரா வர். நற்குலத்தோருள் முற்சென்மத் தொடர்புடையார் மட்டுமன்று தொடர் பில்லாரும் ஆரம்பமாகச் சரியையாதிகளை அநுட்டிப்பர். தாழ்ந்த குலத்தின ருள் முற்சென்மத்தொடர்புடையார் மட்டும் அநுட்டிப்பரேயன்றித் தொட ர்பிலார் ஆரம்பமாக அநுட்டியார். இவ்வுண்மையினைத் தீக்கை முதலியன உயர்ந்த குலத்தினருக்கே விதித்திருக்கின்றமைபற்றியும் அறிக. அம்முறை பற்றித் தாழ்ந்தகுலத்தோர் தத்துவ ஞானத்திற்கு உரியரல்லரென்று கூறிய வாறும்.

சரியை முதலியதவத்தாலன்றி வேள்விமுதலிய தவத்தால் ஞானம்
உண்டாகா தென்பதற்குக் காட்டும்
உதாரணம்.

பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு
மிசைத்து வருவினையி லின்ப—மிசைத்த
விருவினை யொப்பி லிறப்பி றவத்தான்
மருவுவனு ஞானத்தை வந்து.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், சரியை முதலியதவங்களே தத்துவ ஞானத்தைக் காட்டுமென யாப்புறுத் தோதிய தென்னை வேதத் துட் கூறிய வேள்விமுதலாயினவும் தத்துவஞானத்தைக் காட்டு மென்றல் அமையுமெனப் பாட்டாசாரியன் மதம்பற்றிக் கூறுவாரை நோக்கி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

(இ—ள்.) இசைத்து வருவினையில் இன்பம்—(ஒருநல்வினை செய்வான் றொடங்கி அறநூலை யாய்வாரது உணர்வின்கண் விட யமாய் வரும் பொழுதே தம்மாற் பெறப்படுங் காமியப்பயன்களை உடன்) கூறிக்கொண்டே வருகின்றன வாயவேள்வி முதலியஅறங் களின் பயனாகிய இன்பம்,—பசித்து உண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்—முன்னர்ப் பசித்துண்டு பின்னும் பசிப்பானுக்கு அவ்வு ண்டியான் வருமின்பத்தை யொக்கும் ஆகலான்,—இசைத்த இரு வினை இறப்பு இல் தவத்தான் ஒப்பில்—(ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்தமுறுத்துதற்கட் பொன்விலங்கும் இருப்பு விலங் கும்போலத் தம்முட்) சமப்படுத்துணரப் படுவனவாகிய அறம்பாவ

மீண்டும் (தம்மைப்போல் அநுபவமாத்திரையாற் கெடுதலின்றி) மேன் மேன் முறுகிவளர்வனவாய சரியைமுதலிய தவங்களானே நோரக ஒத்தால்,—வந்து ஞானத்தை மருவுவன்—அத்தவ முதிர்ச்சியுடைமையான் முன்னர்க்கூறப்படு ஞானகுருவைத் தேடிவந்து ஞானத்தைத் தலைப்படுவன் எ-று.

வேள்வி முதலாயின வெல்லாம் அழிதன்மாலையவாய காமியங்களைப் பயப்பனவன்றித் தத்துவஞானத்தைப் பயவா வென்றற்கு அவற்றை விதித்த நூல்களே சான்றென்பார் இசைத்து வருவினை யென்றும், அவை ஞானத்தைப் பயவாமை மாத்திரையேயன்றித் தீவினைபோல அது நிகழவொட்டாது தடைசெய்து நிற்றலுமுடைமையின் அவற்றது கழிவே ஈண்டைக்குக் காரணமாவதென்பார் இசைத்த இருவினை யொப்பிலென்றுங் கூறினர். ஒப்பிலென்னும் வினையெச்சம் மருவுவன் என்னும் பிறவினை முதல்வினை கொண்டது. தேற்றேகாரம் விகாரத்தாற் றொக்கது. ஆம் அசை. வருதல் இடவழுவமைதி. பசிப்பானென்றது ஆகுபெயர். இசைத்து வருவினையென நூலின் றொழில் வினைமேலேற்றப்பட்டது. மிசைத்த இருவினை யொப்பிலெனப்பாடமோதி, இருவினைகளுள் மிக்க விருவினையாகிய பிரமக்கொலை பரிமேத வேள்விபோல்வன தம்முள் ஒருங்கேபயன் றருவனவாய் ஒத்தகாலத்தென்றுரைப்பாருமுளர். அஃது ஈண்டைக்குப் பயன் படாமையும் சித்தாந்தத்திற் கேலாமையு மறிக.

இசைத்து வருவினையி லின்பம் பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு மெனவே, இறப்பிறவத்தான் மருவப்படு ஞானம் பசித்துண்டு பின்னும் பசித்தலில்லாத கடவுளர்க்கு அமிழ்த வுண்டியானாய பயனை யொக்குமென்பதூஉம் பெறப்பட்டது. படவே, அவ்வமிழ்த உண்டி நரை திரை மூப்பின்றி நிலைபெறுதலாகிய பெரும்பயனைத் தருதல்மாத்திரையேயன்றிப் பசிதீர்தலாகிய அவாந்தரப் பயனையுந் தருமாறுபோல இறப்பிறவமும் தத்துவ ஞானத்தைப் பயத்தன் மாத்திரையேயன்றித் தத்தம் பத முத்தியாகிய அவாந்தரப்பயனைப் பயத்தலும் அமைவுடைத்தாமாறு கண்டுகொள்க.

விளக்கம்.

கொண்டுகூட்டு. இசைத்து வருவினையில் இன்பம் பசித்து உண்டு பின்னும் பசிப்பானையொக்கும் இசைத்த இருவினை இறப்பு இல் தவத்தால் ஒப்பில்வந்து ஞானத்தை மருவுவன்.

இவ்வுதாரணம் என்னசொல்விற்றோவெனின், மேலே வெண்பாவில் சரியைமுதலிய தவங்களே உண்மை ஞானத்தையுண்டுபண்ணுமென வற்புறுத்திக்கூறியது யாதுகாரணத்தால்? வேதத்துட்கூறிய வேள்விமுதலாயினவுந் தவங்களேயாதலின் அந்த வேள்விமுதலியவையே உண்மைஞானத்தை உண்டுபண்ணுமென்றல் பொருந்தும் என்பர் பாட்டாசாரியம் என்னும் மதத்தினர்: அம் மதம்பற்றிக் கூறுவாரைநோக்கிச் சரியையாதிகளே ஞானத்தைத்தருமன்றி வேள்விமுதலியன ஞானத்தைத் தாராவெனக்கூறி ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ—ரை) ஒருநல்வினை செய்யத் தொடங்கி அறநூலை ஆராயுங்கால் ஆராய்வானுடைய அறிவின்கண்ணே அந்நூலில் வேள்விமுதலிய தவங்கள் அறமெனத் தோன்றும் பொழுதே அவற்றால் உண்டாகும் சுவர்க்கமுதலிய காமியப்பயனையும் உடன் கூறிக்கொண்டே வருவனவாய்க் காணப்படும். அவ்வாறு கூறப்படுவனவாய வேள்வி முதலிய அறங்களின் பயனாகிய இன்பம் எதனையொக்கு மெனின், முன்னர்ப்பசியாலுண்டு அவ்வுணவு சீரணமாகப் பின்னும் பசியை யுடையவனுக்குப் பசியை நீக்கும் அவ்வுண்டியால் வரும் இன்பத்தை யொக்கும். ஆதலால், சுவர்க்கமுதலிய காமிய இன்பத்தைத்தரும் அறமும் நரகமுதலிய துன்பத்தைத்தரும் பாவமும் ஒருவனுக்கு ஞானத்தைப் பிரகாசிக்க வொட்டாமற் செய்துபந்தத்தில் அழுத்துதலில் பொன் விலங்கும் இருப்புவிலங்கும் போல் வனவாம். இவ்வாறு விலங்குபோலச் சமப்படுத்தி உணரப்படுவனவாகிய அறம்பாவமிரண்டும் தத்தம்பலனைத தந்தமாத்திரையிற் கெடும். சரியை முதலிய தவங்களோதத்தம்பயனைத் தந்தமாத்திரையிற் கெடாது ஞானத்தைத் தந்து மோக்ஷத்தைத்தரும். ஆதலால் மேன்மேல் முறுகிவளர்வனவாய சரியைமுதலிய தவங்களால் மேற் கூறிய அறம்பாவமிரண்டும் நேராகஒத்தால் அச்சரியை முதலிய தவத்தின் முதிர்ச்சியால் முன் இரண்டா மதிகரணத்திற் கூறப்படும் ஞான குருவைத் தேடியடைந்து ஞானத்தை அடைவன் எ-று.

(க-ரை.) பசியைநீக்கும் உணவினாலுண்டாகிய இன்பம் நிலைத்தலின்றி மீளப் பசி உண்டாகுங்கால் கெடுதல்போல, வேள்விமுதலிய தவத்தாலுண்டாகிய சுவர்க்க இன்பம் நிலைத்தலின்றி மீளப்பூமியிலோ நரகத்திலோ வருங்கால் கெடும். ஆதலால் கெடுதலில்லாத சரியைமுதலிய தவங்களால் இருவினையொப்புவந்தால் ஞான குருவை யடைந்து ஞானத்தைக் கூடுவன் என்பதாம்.

வேள்விமுதலிய தவங்களெல்லாம் அழியுந்தன்மையினை யுடையகாமியப்பயன்களைத் தருவனவன்றித் தத்துவ ஞானத்தைத் தரமாட்டா என்பதற்கு அவ்வேள்வி முதலியவற்றை விதித்த நூல்களே சாட்சியென்று கூற வேண்டிச் செய்யுளில் இசைத்து வருவினை யென்றும், அவ்வேள் முதலியன ஞானத்தை உண்டுபண்ணுமைமட்டு மன்று தீவினைபோல

ஞானத்தை விளங்கவொட்டாது தடைசெய்து நிற்றலும் உடையனவாம் ஆதலால் ஞானத்தைத் தடைசெய்தற்குரிய வேள்விமுதலிய நல்வினையும் ஏனைய தீவினையும் நீங்குதலே ஞானத்திற்குக் காரணம் என்று கூறவேண்டிச் செய்யுளில் இசைத்த இருவினையொப்பிலென்றும் கூறினர். ஆதலால் இஃசத்து வருவினை என்றதற்குக் காமியப்பயன்களை உடன் கூறிக்கொண்டே வரும் வேள்வியென்றும், இசைத்த இருவினையொப்பிலென்றதற்குச் சமப்படுத்துணரப்படுவனவாகிய அறம்பாவ மிரணடும் ஒத்தால் என்றும் உரைசெய்யப்பட்டது.

நல்வினை தீவினை இரண்டும் பசு நல்வினை பசுத் தீவினை, பதி நல்வினை பதித் தீவினையென ஒவ்வொன்றும் இருதிறப்படும். அவற்றுள், பசு நல்வினையாவது பசுவை நோக்கிச்செய்யும் நல்வினையென்றும் பசுத்தன்மை கெடாத நல்வினையென்றும், பசுத் தீவினையாவது பசுவைநோக்கிச் செய்யும் தீவினையென்றும் பசுத்துவங்கெடாத தீவினையென்றும், பதி நல்வினையாவது பதியை நோக்கிச் செய்யும் நல்வினையென்றும் பதியின் தன்மையை அடையச் செய்யும் நல்வினையென்றும், பதித் தீவினையாவது பதியை நோக்கிச் செய்யுந் தீவினையென்றும் பதியின் தன்மையைக் கெடுக்குந் தீவினையென்றும் விரியும்.

பசுவைநோக்கிச் செய்யும் நல்வினையாவது—பிறவுயிர்களுக்கு நன்மை செய்தல்.

பசுத்தன்மைகெடாத நல்வினையாவது—சுவர்க்காதி பயனை விரும்பி நன்மைசெய்தல்.

பசுவைநோக்கிச் செய்யுந் தீவினையாவது—பிறவுயிர்களுக்குத்துன்பஞ் செய்தல்

பசுத்தன்மைகெடாத தீவினையாவது—காமாதி துர்க்குணங்களை உடையனுதல்.

பதியைநோக்கிச் செய்யும் நல்வினையாவது—சிவாலயத்திற்கும் சிவனடியார்க்கும் தேசிகருக்கும் வேண்டுந் திருப்பணி செய்தல்; இது சரியையிலடங்கும்.

பதியின்தன்மையை அடையச் செய்யும் நல்வினையாவது—ஞானகுருவை வழிபட்டு ஞானசாதனங்களைக் கேட்டு அவற்றை யநுட்டித்தல்; இது கிரியை யோகம் ஞானங்களிலடங்கும்.

பதியைநோக்கிச் செய்யுந் தீவினையாவது—சிவதிரவியம், அடியார் திரவியம், குருத்திரவியங்களை அபகரித்தல், அம்மூவிடத்தும் வேண்டாதன செய்தல்.

சாதனவியல்எட்டாஞ்சூத்திரம். க-ம் அதி.

பதியின் தன்மையைக் கெடுக்குந் தீவினையாவது—பதியுந்தானும் அநன்னியமென்பதை விளங்கவொட்டாது உடம்பைத் தானென்றும் பிறபொருளைத் தன்னுடைமை என்றும் கருதுதல்.

இவ்வாறு நல்வினை தீவினை இரண்டும் பசுவைப் பற்றியும் பதியைப் பற்றியும் நிகழுமெனக் கூறிய முறைப்படி பாசத்தைப் பற்றியும் நிகழுமென்று கொள்ளல் வேண்டும். அவற்றுள்.

பாசநல்வினையாவது—மனைவிமக்கள் முதலியோர்க்கு நன்மை செய்தல்.

பாசத்தீவினையாவது—மனைவிமக்கள் முதலியோர்க்குத் தீமை செய்தல்.

இனி இருவினை யொப்பும் பசு இருவினை யொப்புப் பதி இருவினை யொப்பு என இருவகைப்படும். அவற்றுள், பசு இருவினையொப்பாவது பிராமணக் கொலையும் அசுவமேத யாகமும் ஒருகாலத்தில் பலன் தரவருமாயின் நரகம் சுவர்க்கமாகிய மாறுபட்ட இரண்டு இடத்திலுள்ள பலன்களையும் ஒருகாலத்தி லநுபவிக்கச் செய்ய முடியாதாதலின், அவ்விரண்டனையும் திருவருட் சத்தி விலக்கிவிடுமாதலால், அவ்வாறு விலக்கப்படுவதுவே இருவினை யொப்பென்பர் ஒருசாரார். ஒத்தஇருவினைகள் விலக்கப்படினும் ஏனைய இருவினைகள் விலக்கப்படாமையின் அது இருவினை யொப்பாகாது. எல்லா நல்வினையும் எல்லாத்தீவினையும் அநுபவித் தொழிதலே இருவினை யொப்பென்பர் மற்றொரு சாரார். அது கூடுமாறில்லை. கூடினும் கன்மமலமும் அக்கன்மத்துக்குப் பற்றுக்கோடாயுள்ள மாயாமலமும் நீங்குதலேயன்றி ஆணவமலம் நீங்குமாறில்லை. ஆகலால் எல்லா இருவினைகளும் நீங்கப் பெறினும் ஒருமலமுடைய விஞ்ஞான கலராதலேயன்றி மலபரிபாக முடையராதலில்லை. அதனால் அதுவும் இருவினை யொப்பாகாது. இனி இருவினை யொப்புத்தா னென்னையோ எனின், மலபரிபாகக் குறியும் சத்திநிபாதக்குறியும் ஆன்மஅறிவின் கண்ணே விளங்குவதுபோல நல்வினை தீவினை யென்னும் இருவினைகளும் பொன் விலங்கும் இருப்பு விலங்கும் போலப்பிறப்பு இறப்புக்களிற்கட்டுப்படுத்துந் தன்மையில் சமமுடையனவாகுமென ஆன்ம அறிவின் கண் விளங்கி அவ்விருவினைகளையும் ஒப்பநாடி உவர்த்து விடுதலேயாம். இதனால் பிறவுயிர்க்குத் தீமை செய்யக்கூடாதது போல நன்மையுஞ் செய்யவேண்டா மென்பது கருத்தன்று. நரகத்துன்பத்துக்கு அஞ்சித்தீமைசெய்யக் கூடாது என்று எண்ணுவதுபோல, பிறப்புத் துன்பத்திற்கஞ்சிச்சுவர்க்க இன்பத்தைக் கருதி நன்மைசெய்யக் கூடாதென்பது கருத்து. பிறவுயிர்களுக்குச் செய்யவேண்டிய நன்மையைப்பயன் கருதாது தன்கடமையென்று செய்யவேண்டு மென்பதாம்.

இந்த இருவினையொப்பு எவ்வாறு வருமெனின், இச்சை அறிவு செயல்களைக் குணமாக வுடைய உயிர்யாதானுமொன்றை இச்சித்து அந்தஇச்சை நிறைவேறும் உபாயத்தை அறிந்து அவ்வுபாயத்தைச் செய்தலே இயல்பாம். ஆதலால் சுவர்க்காதிபலனை இச்சித்து வேள்வி முதலியவற்றைச் செய்த

வில் விருப்பம் நீங்கவேண்டுமாயின் சிவபெருமான் திருவடி அடைதலில் விருப்பமுடையவனாய் அத்திருவடியை அடையச் செய்தற்குரிய உபாயம் சரியை முதலிய தவங்களென் அறிந்து அத்தவங்களாகிய சிவபுண்ணியத்தைச் செய்யவேண்டும். செய்தலால் இருவினை யொப்பு உண்டாம்.

பதி இருவினை யொப்பாவது, பதித்தீவினை விரும்பப் படாதவாறு போல, பதி நல்வினையும் பசுபோதங்கெடாத சாலோகாதி பதங்கருதி விரும்பப் படாது நீங்கல்.

மலபரிபாகமாவது—மலசத்தி தேய்தல். அதாவது ஆணவமல காரியமான மோக முதலாகக் கூறப்படும் கெட்ட குணங்கள் ஆன்ம அறிவை விட்டு நீங்குதல்.

சத்திநிபாதமாவது—திருவருட் சத்தி பதிதல். அதாவது சிவபெருமான் திருவடியை அடையவேண்டுமென்ற நாட்டத்தால் ஆன்ம அறிவின்கண் சிவசத்திபதிதல். சத்திநிபாத மென்னுஞ் சொல்லுக்குப் பொருள் சத்தியினது வீழ்ச்சியாகும். ஒரு சபையினிடத்தில் ஒரு கல்வந்து வீழ்ந்தால் அக்கல் அங்குள்ளாரை அச்சபையில் நின்றும் அஞ்சி ஓடச்செய்யுமாறுபோல, ஒரு ஆன்மாவிற்குத் திருவடியடைய வேண்டும் என்னும் சத்திநிபாதம் நிகழ்ந்தால் அச்சத்திநிபாதம் அவ்வான்மா மனைவிமக்கள் முதலிய உலகப் பொருளினின்றும் அஞ்சியோடிச் சற்குருவைத் தேடும்படிசெய்யும். இச்சத்திநிபாதமும் மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரமென நான்குவகைப் படும். அவற்றுள், மந்ததரசத்திநிபாத மாவது உலகப்பற்று நான்கிலொரு கூறு விட்டுத்திருவருட்சத்தி ஒருகூறு பதிதல். மந்தசத்திநிபாதமாவது உலகப்பற்று இரண்டு கூறுவிட்டுத் திருவருட்சத்தி இரண்டு கூறுபதிதல். தீவிரசத்திநிபாதமாவது உலகப்பற்று மூன்று கூறுவிட்டுத் திருவருட் சத்தி மூன்று கூறுபதிதல். தீவிரதரசத்திநிபாதமாவது உலகப்பற்று அறவே விட்டுத் திருவருட் சத்தி முற்றும்பதிதல். இதனால் மலபரிபாகமும் நால்வகைப்படு மென்றவாறாயிற்று. கூறு பங்கு.

வேள்விமுதலிய பசுநல்வினைகள் சுவர்க்கமுதலிய காமியப்பயனைத் தருமென்பதற்கு அவ்வறத்தைக் கூறும் நூல்களே சாக்ஷியென்று மேலே கூறியதை "சுவர்க்கம் வேண்டியோன் சோதிட்டோமத்தான்வேட்க" என்னுஞ் சுருதியானும், "தானம் யாகம் தீர்த்தம் ஆச்சிரமம் தவங்கள் சாந்தி விரதம் கன்மயோகங்கள் சரித்தோர்—ஈனமிலாச் சுவர்க்கம் பெற்று இமைப்பளவின் மீள்வர்." என்ற சிவஞான சித்தித்திருவாக்கானும் அறிக.

செய்யுளில் இருவினை யொபபிலென்று கூறியதில் ஒப்பிலென்பது செய்யின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அந்த எச்சம் வினைமுதலாகிய கருத்தாவினையாலும் பிறகருத்தாவினையாலும் முடியும். உதாரணம், மழைபெய்யிற் புகழ் பெறும், மழைபெய்யிற்குளம் நிறையும் என்பனவாம்.

இவ்விடத்தில் ஒத்தலாகிய வினைக்கு வினைமுதல் இருவினையாதலால் அது கொண்டு முடிதற்கு இயைபில்லை. ஆதலால் தவமுதிர்ச்சியுடையான் என்னும் பிறகருத்தாவின் வினையாகிய மருவுவன் என்பதுகொண்டு முடிந்தது.

இறப்பில் தவத்தால் என்றதில் தேற்றத்தைத் தரும் ஏகாரம்தொக்கு நின்றது. அதனை விரித்துத் தவத்தானே என்று உரைசெய்யப்பட்டது.

மருவுவன் ஆம் என்பதிலுள்ள ஆம் என்பது அசை.

சென்று மருவுவன் எனப்படற்கையிற் கூறவேண்டியதை வந்துமருவுவன் என முன்னிலையாகக் கூறியதால் வருதலை இடவழுவமைதியாற் கொள்க. வருதல் முன்னிலைச்சொல் என்பதை தொல்காபியங் கிளவியாக்கம் சூத்திரம் உ0-ல் "தருசொல் வருசொல் லாயிரு கிளவியுந் தன்மை முன்னிலை யாயீ ரிடத்த" என்பதனாலறிக.

பசிப்பானை யொக்குமென்பதில் பசிப்பானை என்றது பசிப்பானுக்கு அவ்வுண்டியால் வரும் இன்பத்தைக் குறித்து நிற்றலால் ஆகுபெயர்.

இசைத்துவருதல் நூலின்றொழில். அத்தொழிலை அறமாகிய வினை மேலேற்றி இசைத்து வருவினை யெனக்கூறப்பட்டது.

இசைத்த இருவினை யொப்பிலென்பதை மிசைத்த இருவினையொப்பிலெனப் பாடமாகக்கொண்டு இருவினைகளுள் மிக்க இருவினையாகிய பிராமணக்கொலை அசுவமேதயாகம் போல்வன தம்முள் ஒருகாலத்துப் பயன்றருவனவாய் ஒத்த காலத்து என்றுரைப்பாரு முளர். மேலான புண்ணிய பாவங்கள் ஒருகாலத்திற் பயன்தருமாறு ஒத்தல் பக்குவமாகும் முறைமையில் உண்டாவதேயன்றி இறப்பில் தவமாகிய சரியையாதியால் உண்டாவதில்லை. ஆதலால் அவ்வுரை இவ்விடத்துப் பயன்படாது. அன்றியும் மேல் இருவினை யொப்பிற் கூறியபடி சித்தாந்தத்துக்கு அப்பொருள் பொருந்தாதெனவும் அறிக.

காமியப்பயனை உடன் கூறிக்கொண்டே வருகின்றனவாய வேள்வி முதலிய தவங்களால் வரும் இன்பம் பசித்துண்டு பின்னும் பசிப்பவனுக்குண்டாகிய இன்பத்தை யொக்கு மென்றதனால் இறப்பில் தவமாகிய சரியையாதியாலுண்டாகும் ஞானம் தேவருக்குப் பசியாலுண்டு பின்னும் பசித்தலில்லாத அமிழ்த உண்டியானாய பயனை யொக்குமென்பதூஉம் பெறப்பட்டது. படவே, அவ்வமிழ்த உண்டி நரைதிரை மூப்பின்றி நிலைபெறுதலாகிய பெரும்பயனைத் தருதலேயன்றிப் பசிதீர்தலாகிய இடைப்பட்ட பயனையுந் தருமாறுபோல, இறப்பில் தவமாகிய சரியையாதிகளும் உண்மை ஞானமாகிய மேலானபயனைத் தருதலேயன்றிச் சாலோகாதி பதமுத்தியாகிய இடைப்பட்ட பயனைத் தருதலும் பொருத்தமாகுமாறு கண்டுகொள்க.

ஏனைய உணவுகள் பசியைநீக்குதலோடு நின்றுவிடும். அமிழ்தமாகிய உணவு பசியை நீக்கிப் பின்னர் நரைமுதலியவற்றையும் நீக்கும். அவ்வாறே வேள்வி முதலியன சுவர்க்காதிபலனைத் தந்துநின்றுவிடும்; சரியையாதிகள் சாலோகாதிபலனைத் தந்து பின்னர் ஞானத்தையும் தரும். ஆதலால்சரியையாதிகளை இறப்பில் தவமென்றார். என்றதனால் வேள்விமுதலியன இறக்குந்தவ மென்றவாறாயிற்று. இக்கருத்துப் பற்றியே சிவஞான சித்தியார் அ-ம் சூ-ம் உகு-வது செய்யுளில்.

"தானமியா கந்தீர்த்த மாச்சிரமந் தவங்கள்
சாந்திவிர தங்கன்ம யோகங்கள் சரித்தோ
ரீனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ
ரீசனியோ கக்கிரியா சரியையினி னின்றோ
ரூனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லா
மொடுங்கும்போ தரன்முனிலா தொழியினுற் பவித்து
ஞானநெறி யடைந்தடைவர் சிவனை யங்கு
நாதனே முன்னிற்கி னணுகுவர்நற் றாளே."

என வழிநூலாசிரியர் அருளிச்செய்வாராயினர்.

முதலதிகரணம் முற்றிற்று.

இரண்டாம் அதிகரணம்.

கடவுளே குருவுமாய் வருவரெனக் கூறும்

மேற்கோள்.

இனி இவ்வான்மாக்களுக்குத் தமது முதற்றனே குருவுமாய் உணர்த்துமென்றது.

எ-து மேல் எ-னின், மேற்கூறியவாற்றான் நிகழுஞானத்தை யுணர்த்துவார் கலைஞானங்களை யுணர்த்துவார்போல நம்மனோரில் ஒருவராதலமையுமெனச் சாங்கியர் நையாயிசர் முதலியோர் மதம் பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

(இ-ள்) மேற்கூறியவாற்றான் சரியைமுதலிய மூன்றும் முற்றிய பின்னர் இம்மூற்றுதலானே மலபரிபாகஞ் சத்திநிபாதம்

நிகழ்ந்து தத்துவஞானத்தின் அவாவுதலையுடைய உயிர்கட்கு இது காறுந் தமக்குமுதலாய் உண்ணின்றுணர்த்திவந்த பரம்பொருளே அப்பருவமறிந்து குருமூர்த்தமா யெழுந்தருளிவந்து அதனை அறிவுறுக்கும் எ-று.

எனவே. ஏனையோர்க்கு அது கூடாதென்றவாறாயிற்று. இக் கருத்தேபற்றி, "அகத்தாறுநோய்க் குள்ளின ரன்றி யதனைச்— சகத்தவருங் காணபரோ தான்." என்றார்புடை நூலாசிரியரும்; ஏகாரம். தேற்றம்.

விளக்கம்.

இம்மேற்கோள் சூத்திரத்திலுள்ள தம் முதல் குருவுமா யென்னும் இரண்டாங்கூற்றைப் பதச்சேதஞ் செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்னசொல்லிற்றோ எனின், முதலதிகரணத்திற் கூறியவாறு சரியை முதலிய தவங்களால் நிகழக்கூடிய ஞானம் ஓர் ஆசிரியன் உணர்த்த நிகழுமேயன்றித் தானே நிகழாது. அவ்வாசிரியன் ஏனைய நூற்பொருள்களை யுணர்த்தும் பசுத்துவமுடைய நம்மனோரில் ஒருவராதல் கூடுமெனச் சாங்கியர் நையாயிகர் முதலியோர் கூறுவர். அவரைநோக்கிச் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைப் பதச்சேதஞ்செய்து பசுத்துவமுடைய நம்மனோர்க்குப் பதியின் தன்மையை விளக்கமுடியாது ஆதலின் கடவுளே குருவுமாய் வருவரெனக் கூறியவாறும்.

இவ்வதிகரணத்தில் ஞானகுருக் கடவுளோ நம்மிலொருவரோ என்பது ஐயப்பாடு. நம்மிலொருவரென்பது பிறர்பக்கம் என அறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) முதலதிகரணத்திற்கூறியவாறு சரியை கிரியை யோகமாகிய மூன்றும் முறைபாய் அநுட்டித்து முற்றப்பெற்ற பின் அம் மூன்றும் முற்றுதலால் மலபரிபாகமும் சத்திநிபாதமும் தோன்றி உண்மை ஞானத்தை அடைய விரும்புகின்ற உயிர்கட்கு அப்பருவத்தை யறிந்து இதுவரையும் தமக்கு உள்நின்று உணர்த்திவந்த முதலாகிய பரம் பொருளே குருவடிவுமாய் எழுந்தருளிவந்து விரும்பிய உண்மை ஞானத் உணர்த்துவர். எ-று.

கடவுள் குருவுமாய்வந்து ஞானத்தை யுணர்த்துவரென்றதனால் கடவு ளல்லாத ஏனைய உயிர்கள் குருவாய்வந்து ஞானத்தை யுணர்த்துமாறில்லை யென்றவாறாயிற்று.

உயிரின் பக்குவத்தை உயிர்க்குயிராகிய கடவுள் அறிந்து உணர்த்துவ ரன்றி ஏனையோர் குருவாக வந்து ஞானத்தை உணர்த்த முடியாதென்னும் இக்கருத்தேபற்றித் திருவருட்பயன் என்னும் நூலில் அருளுரு நிலையென்

னும் அதிகாரத்தில் "அகத்துறு நோய்க்கு உள்ளினரன்றி யதனைச்—சகதசவருங் காண்பரோ தான்." என்றார் புடைநூலாசிரியரும். இதன் கருத்து, அகத்தின்கண் பொருந்திய நோயை அகத்திலுள்ளாரன்றி ஏனையோர் அறியார் என்பதாம்.

முதல் தானே என்பதிலுள்ள ஏகாரம், கடவுள்தான் குருவுமாய்வருவர் என்னும் உறுதியைத் தந்துநிற்றலால் தேற்றம்.

குருவினாலேயே ஞானம் நிகழுமாயின் சவத்தால் ஞானம் நிகழும் என்று மேலையதிகரணத்திற் கூறியதோடு முரணாதோ எனின், முரணாது. என்னையெனின், சவம் இல்லையாயின் குருவருதலுமில்லை; வந்து உணர்த்தினும் ஞானம் நிகழ்தலுமில்லையாதலால் என்க. எனவே, ஞானம் நிகழ்தற்குச் சரியையாதிகள் முதற்காரணமும் குருத் துணைக்காரணமுமாம் என அறிந்துகொள்க. துணைக்காரணம் பலவாதல் கூடுமாதலின், மேல் நற்குலம் துணைக்காரணம் என்றதனோடு முரணாமையறிக.

கடவுளே குருவுமாய் வருவரென்பதற்குச் சாட்டும்

ஏது.

அவன் அந்நியமின்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்.

சிற்றுரை.

ஏ-து ஏ-து எ-னின், மாயா வுருவன் மாயாவுருவினையேயான் எயுமெனின் எம்மனோரிலொருவனாய் முடியும்; ஆகலின் தமது முதல் குருமூர்த்தி ஆதாரமாகத் தரித்து நின்றுணர்த்து மென்றலை அமைவுடைத்தெனப் பொதுவகையான் அதிட்டானபக்கங் கூறுவாரை நோக்கிச் சிறப்புவகையான் ஆவேச பக்கமாமாறுணர்த்தி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. மாயாவொருவன் மாயா உருவினை ஏயான் எனவும் பாடபேதம் உண்டு

(இ-ள்.) அம்முதல்வன் பாலினெய்போல மறைந்து வேறாய் நிற்றலின்றிச் சுத்தான்மசைதன்னியமே தனக்குச் சொரூபமாகக்கொண்டு தயிரினெய்போல ஆண்டுவிளங்கி நிற்றலான் 'இவ்வான்மாக்களுக்குத் தமது முதலானே குருவுமாய் உணர்த்து'மென மேற் கொண்டது எ-று.

பாலினெய்போல வேறாய் மறைந்து நின்று செலுத்தப் படுவனவற்றினும் பொதுவாய்ச் செல்வதாகிய அதிட்டான பக்கங்

கொள்வார்க்கு ஏனைச்சமய குரவருங் குரவராவான் சேரலின் அஃதீண்டைக் கமைவுடைத்தன் றென்பதாம். சைதன்னிய மென்றூர் மாசுதீர்ந்த தென்பதுணர்த்துதற்கு.

விளக்கம்.

இந்த ஏது என்ன சொல்லிற்றூவெனின், சங்கற்பநிராகரணம் சைவவாதி மறுப்பிற் கூறியவாறு அழியாத திருமேனியை உடைய முதல்வன் மாயையின் காரியமாகிய அழிகின்ற வடிவத்தைப் பொருந்தமாட்டான்; பொருந்துவன் எனின், எம்மனோர்போன்றவனுய் முடியும்; ஆதலால் கடவுளே குருமூர்த்தியாயும் வருவரென்றல் பொருந்ாது; கடவுள் குருமூர்த்தியை ஆதாரமாகக்கொண்டு நின்று உணர்த்துவரென்றலே பொருந்துமென்பர் ஒருசாரார். அவர் கடவுள் எங்குந் தங்கிநின்று எவற்றையுஞ் செலுத்துவதாகிய பொதுவான அதிட்டானத்தைக் குருவினிடத்துங் கொள்ளுவர். அவரை மறுத்துக் கடவுள் குருவினிடத்து நிற்றல் எங்குந் தங்கிநிற்கும் பொதவான அதிட்டானமன்றிப் பேய்பிடியுண்டவனிடத்து அப்பேய் விளங்கித்தோன்றும் ஆவேசம் போலச் சிறப்பான அதிட்டானமாய்க் கடவுளே குருவின் ஆன்மாவை ஆவேசித்து நிற்பரென்ற உண்மையை உணர்த்தித் தமது முதல் தானே குருவுமாய் உணர்த்தும் என்ற மேற்கோளை வலியுறுத்தியவாறும். மாயா வொருவன் என்ற பாடபேதப்படிக்கும் அழியாத் திருமேனி யுடையவன் என்பதில் வேற்றுமை இல்லை.

(இந்த ஏதுவின் பொருள்.) தமது முதலாகிய அம்முதல்வன் பாவினிடத்து நெய் விளங்கித் தோன்றுமல் அப்பாலின் வேறுய் மறைந்து நிற்றல் போலக் குருவினிடத்து வேறுய் மறைந்து நிற்றலின்றித் தயிரினிடத்து நெய் அத்தயிராசவே விளங்கித் தோன்றுதல்போல, குருவாகிய சுத்தான்ம சைதன்னியமே தனக்குச் சொரூபமாகக் கொண்டு அவ்வான்மாவினிடத்து விளங்கி நிற்றலால் 'இவ்வான்மாக்களுக்குத் தமது முதல்தானே குருவுமாய் உணர்த்தும்' என மேற்கோள் கூறியது எ-று.

சில ஆகமங்களில் கடவுள் குருமூர்த்தியை ஆதாரமாகக் கொண்டு நின்று உணர்த்துவர் என்று கூறுவதால் குருவாய் நின்று உணர்த்துதல் அதிட்டான பக்கமேயன்றி ஆவேச பக்கமென்றல் பொருந்ாது எனின், கூறுதும்:—

அதிட்டானம், பொதுச் சிறப்பு என இருதிறப்படும். அவற்றுள், ஞானகுருவல்லாத ஏனைய உயிர்களினிடத்து மறைந்து வேறுய் நிற்றல் பொதுவான அதிட்டானம். ஞானகுருவினிடத்து அவர்தமக்கு விளங்கி ஒன்றுயும், பொருளின் தன்மையால் வேறுயும் நிற்றல் சிறப்பான அதிட்டானம். இவ்விருவகை அதிட்டானத்திற்கும் பாலில் நெய் வேறுக மறைந்

திருத்தலே உவமையாம். இவ்வாறு பாலில் நெய்போல வேருய் மறைந்து நின்று செலுத்தப்படும் இருவகை யதிட்டானத்தினுள்ளும், ஞான குருவினிடத்து நிற்கும் அதிட்டானம் அவர்க்கு விளங்கி நிற்றலால் சிறப்பான அதிட்டான மெனப்படும். குருமூர்த்தியை அதிட்டித்து நிற்குமென்ற ஆகமத்தின்படி ஞான குருவினிடத்து நிற்கும் அதிட்டானத்தைப் பொதுவான அதிட்டான மென்று கொள்ளின், ஏனைச் சமயவிசேடங்கட் கதிகாரிகளான குருக்களிடத்தும் பொதுவான அதிட்டானம் இருப்பதால் அக்குருக்களும் ஞானசிரியராதல் கூடும். ஆதலால் அந்த ஆகம வாக்கியங்கொண்டு பொதுவான அதிட்டானங் கொள்ளுதல் சரியை கிரியாயோகங்கள் முற்றிய ஆனமாக்களுக்கு வருங் குருவைபற்றிக் கூறுகின்ற இவ்விடத்திற்குப் பொருந்தாதென்க.

இனி மேலே இச்சிறப்பான அதிட்டானத்தையே ஆவேசபக்கமாகவும் அதற்குப் பேய்பிடியுண்டதை உவமையாகவும் கூறிய கருத் தென்னையெனின், முதல்வன் உயிர்களோடு கலந்து நிற்கும் நிலை ஒன்ருய் நிற்றல் வேருய்நிற்றல் உடனுய் நிற்றலென முத்திறப்படும். இவ்வாறு நிற்றல் பெத்தமுத்தி இரண்டினும் உண்டு. ஆயினும் பெத்தத்தில் உயிர்கள் உணராமையும் முத்தியில் உயிர்கள் உணர்தலுமே வேற்றுமையாம். முத்தராகிய ஞானகுருவினிடத்து ஒன்ருய் நிற்றல் பற்றி ஆவேச பக்கமாகவும் வேருய் நிற்றல்பற்றி அதிட்டான பக்கமாகவும் ஆகமங்கள் கூறுமாதலால், ஒன்ருய்நிற்குங் கலப்புப்பற்றித் தமது முதல்தானே குருவுமாய் வருவரென மேலே ஆவேச பக்கங் கூறியவாறென்க. அதிட்டான பக்கங்கூறும் ஆகமங்களுக்குச் சிறப்பான அதிட்டானமே பொருளென்றும் சிறப்பான அதிட்டானமும் ஆவேசமும் சொல்லளவில் வேருயினும் உண்மையில் வேறன்று என்றும் கூறியபடியாம்.

எதுவில் ஆன்மசொரூபியாய் நிற்றல் என்று கூருமல் சைதன்னியசொரூபியாய் நிற்றலால் என்று கூறிய கருத்தென்னையெனின், ஞானகுருவாகிய அவ்வான்மா மும்மலங்களாகிய மாசுநீங்கப் பெற்றது என்பதை உணர்த்துதற் பொருட்டு என்க.

குருவின் வடிவம் மாயாகாரிய மாயினும் குருவாகிய ஆன்மாமாசுநீங்கிச் சைதன்ய சொரூபமாய் விளங்கலால் அவ்வான்மாவையே திருமேனியாகக்கொண்டு கடவுள் குருவாய் வருமென்பதாம். அவ்வாருயினும் குருவின் ஆன்மாவைக் கடவுள் வடிவாகக் கொண்டதனுல் குருவின்வடிவாகிய மாயாகாரிய வடிவத்தையும் கடவுள் கொண்டதான குற்றம் வாராதோ எனின், சிவப்பிரகாசம் ஏ-ம் சூ-ம் உ-வது செய்யுளில் "மாயைமா மாயை மாயா வருமிருவினையின் வாய்மை—யாயவா ருயிரின் மேவு மருளொளி லொளியாய் நிற்கும்" எனக்கூறியபடி முதல்வனுக்குத் திருமேனியாகிய ஆன்மசைதன்னியம் முதல்வனைச் சார்ந்து அம்முதல்வன் தன்மையை அடைந்த

விடத்து அவ்வுயிர் தங்கும் இடமாகிய அவ்வுடம்பும் முதல்வன் அருள்மய மேயா மென்பது அறியக் கிடத்தலின் மாயாவடிவத்தைப் பொருந்திய குற்றம் வாராதென அறிக.

இந்த எது ஞானகுரு நம்மில் ஒருவரென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

முதல்வன் குருவுமாய்த்தோன்றி
உணர்த்தும் முறைமையைவிளக்கிக் காட்டும்
உதாரணம்.

மெயஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க் ।
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு-
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்.

சிற்றுரை.

எ—து உ-ம் எ—னின், ஒரோரிடங்களிற் குருவாய்வந் துணர்த்துதலின்றியும் ஞானம் நிகழுமா றென்னை யென்பாரை நோக்கி அதனை வரைசெய்துணர்த்தி வலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்.) விஞ்ஞானகலர்க்குத் தானே மெய்ஞ்ஞானம் விளையும்—(அம்முதல்வன் மூவகையான்மாக்களுள்) விஞ்ஞானகலாயினர்க்குத் தன்மையினின்றவாறே தத்துவஞானத்தை விளைவிப்பன்;—அன்றிப் பிரளயாகலருக்குத் தான் குருவாய் முன் உணர்த்தும்—அவ்வாறன்றிப் பிரளயாகலராயினர்க்கு நாற்றோளும் முக்கண்ணுங் கறைமிடறு முதலிய உறுப்பிற்றாய் முத்தொழில் நடாத்தி நின்ற தன்னியற்கை வடிவே குருவடிவாகக் காட்டி முன்னாக நின்று தத்துவஞானத்தை உபதேசித் துணர்த்துவன்,—அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாய்ப் பின் மெய்ஞ்ஞானம் உணர்த்தும்—அவிச்சையையுடைய சகலராயினர்க்கு அவர்வடிவு போலும் வடிவுடைய குருவாகி அவ்வடிவின் பின்னாக மறைந்து நின்று தத்துவஞானத்தை யுணர்த்துவன்,—முன்—அவ்வேறுபாட்டை அறிவாயாக எ-று.

முன்னென்றதனை முன்னைப் பொருளென் றுரைத்து எழுவாயாகக் கோடலு மொன்று. விளையும் என்பது "அரசனெடுத்த வாலயம்" என்புழிப்போல விவ்விகுதி தொக்குநின்றது. இவ்வாறன்றி எளிதி னடைப்படுதனைக்கி "அரிசி தானே அட்டது"

என்றாற்போல எளிதின் விளைவிக்கப்படுதனோக்கி மெய்ஞ்ஞானந் தானே விளையு மென்றாரெனினும் அமையும். "உண்ணின் றறுத்த ருளி" என்றார் புடைநூலாசிரியரும். ஈண்டு அஞ்ஞானம் என்றது அவிச்சையை என்பது சகலர்க்கே அடையாய் ஓதியவாற்றானறிக. அச்சகலரென்றது தவஞ்செய்தாரென மேலெடுத்துக் கொள்ளப் பட்ட சகலரென்றவாறு. அக்குருவென்றது மேற்கோளிற் கூறிப் போந்த குருவென்றவாறு. தானே விளையும் முன்னுணர்த்தும் பின்னுணர்த்தும் எனவே, விஞ்ஞானகலர்க்குத் தன்மையினும் பிரளயாகலர்க்கு முன்னிலையினும் சகலர்க்குப் படர்க்கையினும் நின்றுணர்த்துமென வரைசெய்தவாறு காண்க. இவற்றுண் முன் னைய விரண்டும் நிராதார மெனவும் பின்னையது சாதார மெனவுங் கூறப்படும்.

விளக்கம்.

கொண்டு கூட்டு. விஞ்ஞான கலர்க்குத்தானே மெய்ஞ்ஞானம் விளை யும் அன்றிப் பிரளயாகலருக்குத் தான் குருவாய் முன் உணர்த்தும் அஞ் ஞான அச்சகலர்க்கு அக்குருவாய் பின் மெய்ஞ்ஞானம் உணர்த்தும் முன்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ வெனின், மேற்கோளிற் கூறிய வாறு ஞானம் குருவால் நிகழுமென்பது உண்மையாயின் சிலருக்குக் குரு வந்து உபதேசிக்காமலும் ஞானம் உண்டாகின்றதே, அதன் உண்மை என் னையென்பர் ஒரு சாரார். அவரைநோக்கிக் குருவாய்வந் துணர்த்து முறைமை யினை வரையறுத்துக்கூறி முதல் தானே குருவுமாய் வரும்என்னும் மேற் கோளைவலியுறுத்திய வாறும்.

(பொ-ரை.) மேற்கோளிற் கூறப்பட்ட அம்முதல்வன் குருவாய் வந்து உணர்த்து மிடத்து, விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூவகை யான்மக்களுள், விஞ்ஞானகலராயினார்க்கு அறிவிற்குள் அறிவாய் தன்மையில் நின்றவாறே தத்துவஞானத்தைத் தோற்றுவிப்பன். பிரளயா கலராயினார்கருத் தன்மையில் நின்று உணர்த்தாது நான்குதோளும் மூன்று கண்ணும் காளகண்டமும் முதலிய உறுப்புக்களுடன் முத்தொழில் நடாத் திநின்ற தன் இயற்கை வடிவமே குருவடிவமாகக் காட்டி முன்னிலையாக நின்று தத்துவ ஞானத்தை உபதேசித் துணர்த்துவன். அவிச்சையையுடைய சகலராயினார்க்கு அச்சகலர் வடிவுபோலும் வடிவுடைய குருவடிவில் மறை ந்துநின்று தத்துவஞானத்தை உணர்த்துவன். இவ்வாறு முதல்வன் குரு வுமாய் வந்து உணர்த்தும் அவ்வேறுபாட்டை அறிவயாக எ-று.

(க-ரை.) இறைவன் விஞ்ஞானகலராகிய உயிர்களுக்கு அறிவுக்குள் அறிவாய் நின்றும், பிரளயாகலராகிய உயிர்களுக்கு உருவத்திருமேனி

கொண்டும், சகலராகிய உயிர்களுக்கு அவ்வுயிர்கள் தங்கியிருக்கும் வடிவு போன்ற குருவடிவங் கொண்டும் ஞானத்தை உணர்த்துவன். ஆகலால் எவ்விடத்துங் குருவின்றி ஞானம் நிகழுமாறில்லை என்பதாம்.

இறுதியில் நின்ற முன் என்பதற்கு அறிவாயாக என்று பொருள் கூறப்பட்டது. அவ்வாறன்றி முன்னைப் பொருளாகிய முதல்வன் என்று உரைத்து எழுவாயாகக் கொள்ளுதலும் ஒன்று. அவ்வாறு கொள்ளுங்கால் அம்முதல்வன் என்று உரையில் வருவிக்காமல் முன்னைப் பொருள் விளை விக்கும் முன்னுணர்த்தும் பின்னுணர்த்தும் என்று முடித்துக்கொள்க.

மெய்ஞ்ஞானந் தானே விளையும் என்பதில் விளைவிக்கு மென்ற பொருளையுடைய விவ்விகுதி தொக்கு நின்றது. இது "அரசன் எடுத்த ஆலயம்"என்றவிடத்து அரசன் எடுப்பித்த ஆலயம் என்றுகொள்வதுபோலாம். எடுத்தல் என்பது கட்டுதல்; இதுதன்வினை. எடுப்பித்தலென்பது கட்டுவித்தல்; இது பிறவினை.

தானேவிளையும் என்பதற்குத் தன்மையில் நின்றவாறே விளைவிப்பன் என்று கூறிய இப்பொருளேயன்றி, எளிதாகப் பாகப்படுதலை நோக்கி அரிசி தானே பாகமாயிற்று என்றாற்போல, விஞ்ஞானகலர்க்கு உருவத்திருமேனி கொள்ளாமலும் குருவடிவின் மறையாமலும்உள்நின்றவாறே மெய்ஞ்ஞானம் விளைவிக்கப்படுதல் நோக்கித் தானே விளையும் என்று கூறினர் எனினும் பொருந்தும். இக்கருத்துப்பற்றியே போற்றிப் பஃறொடை வரி கூக-ல் "உண்ணின் றறுத்தருளி"என்றார்புடைநூலாசிரியரும்.

அஞ்ஞான மென்றது ஆணவத்தைக் குறிக்குமாயினும் இச்செய்யுளில் சகலர்க்கே அடையாகக் கூறியதனால் அவிச்சையைக் குறித்ததென அறிக. அவிச்சையாவது மாயாமலத்தின் காரியமான மயக்கம். ஆகவே, இவ்விடத்து அஞ்ஞானம் என்றது மாயாமலம் என்றபடியாம்.

அஞ்ஞான அச்சகல ரென்றதில் அகரச்சுட்டு முதலதிகாரணத்து முதல் வெண்பாவில் தவஞ்செய்தா ரென்று கூறப்பட்ட சகலரைச் சுட்டியவாறாம்.

அக்குருவென்றதில் அகரச்சுட்டு இவ்வதிகரணத்து மேற்கோளிற் கூறிய குருவைச் சுட்டியவாறாம்.

தானே விளையும் முன்னுணர்த்தும் பின்னுணர்த்தும் என்றதனால் குருவின்றியும் ஞானம் நிகழுமென்பாரை மறுத்து, விஞ்ஞானகலர்க்குத் தன்மையினும் பிரளயாகலர்க்கு முன்னிலையினும் சகலர்க்குப் படர்க்கையினும் நின்று உணர்த்துமென வரையறுத்தவாறு அறிக. இவ்வாறு உணர்த்தும் வேறுபாடு மூன்றனுள், விஞ்ஞானகலர்க்குக் கொள்ளும் அறிவுத்திருமேனியும் பிரளயாகலருக்குக் கொள்ளும் உருவத் திருமேனியும் முதல்வ

னுக்குச் சுசந்திரமாதலால் அவ்விரண்டும் நிராதார மெனப்படும். சகலர்க்கு அவர் வடிவுபோன்ற வடிவத்தை ஆசாரமாகக் கொண்டு நிற்றலால் அது சாதார மெனப்படும். நிராதாரமாய் நின்றுணர்த்துவதை நிராதார தீக்கை எனவும், சாதாரமாய் நின்றுணர்த்துவதைச் சாதார தீக்கை எனவுங் கூறப் படும். நிராதாரமென்பது ஆதாரமில்லாதது. சாதாரமேன்பது ஆதாரத்தோடு கூடியது. தீக்ஷையின் முறைகளும் பாகுபாடுகளும் விஞ்ஞானகலர் முத லாக உயிர்களை வகுத்ததன் காரணமும் சிவஞான சித்தியார் எட்டாஞ் சூத் திரம் உ முதல் ௬ வரையுள்ள செய்யுட்களின் விசேட உரையில் விளக் கியிருக்கின்றாம். அவ்விடத்துக் காண்க.

முதல்வன் மூன்றுவகையாய் நின்று உணர்த்து
தற்குக் காரணங் காட்டும்
உதாரணம்.

அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்,
செறியுமா முன்பின் குறைக—ணெறியிற்
குறையுடைய சொற்கோள்ளார் கோள்பவத்தின் வீடேன்
குறைவில்சகன் சூழ்கோள் பவர்க்கு,

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், விஞ்ஞானகலர் முதலிய மூவர்க்கும் ஓரியல்பா னுணர்த்தாது அவ்வாறு தன்மையினும் முன்னிலை யினும் பின்னிலையினுமா யுணர்த்துதல் எற்றுக் கென்பாரை நோக் கிக் காரணங் கூறி அதனை வலியுறுத்துசனுதலிற்று.

(இ-ள்.) உளங்கள் நெறியின் அறிவிக்க அன்றி அறியா— உயிர்களெல்லாந் தமக்குரிய படிவழியின் வைத்து முதல்வனறி விக்க அறியும் இயல்பின வன்றி ஒன்றுபோல் அறிவிக்க வறியுமி யல்பினவல்ல ஆகலான்,—குறைவு இல் சகன் சூழ் கொள்பவர்க்கு— அவ்வறிவாற் குறைபாடில்லாத சகக்கடவுளது உபதேச மொழி யைக்கொண் டுணரு மியல்பினராகிய பிரளயாகலர் சகலர்க்கு,— குறைகள் முன்பின் செறியுமாம்—அவ்வறிவித்தா லறிதலாகிய குறைகள் முன்னிலையினும் பின்னிலையினு நிகழ்வனவாம்,—குறை உடைய சொல் கொள்ளார் கொள்பவத்தின் வீடு (ஆம்) என்— குறைவில் சகனுலாகிய குறையினையுடைய உபதேசமொழிகொண் டுணர வேண்டாத விஞ்ஞானகலர்க்கு முதல்வனற் கொள்ளப் பட்ட தன்னுண்மை மாத்திரையின் வீடுபயக்கு முணர்வுண்டேன் றறிவாயாக எ-று.

குறை இன்றியமையாமைப்பொருள்; அது "வினைக்குறை தீர்ந்தாரிற் றீர்ந்தன்றுலகு" என்பதனுட் பரிமேலழக ருரையானு முணர்க. பவம், சம்பவம், உண்மை என்பன ஒருபொருட் கிளவி. வீடுபயக்கு முணர்வை வீடென்றும், சூழ்ச்சி பயக்கு முபதேச மொழியைச் சூழென்றுங் காரண காரியமாக உபசரிக்கப்பட்டன. கொள்பவர் கொள்ளா ரென்பனவும் அவை. கொள்ளார்க் கென்னு நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது. "ஐந்தவித்தானாற்றல்" என்புழிப் போல. ஆம் வீடெனவுமியையும். வீடாமெனப் பாட மோதுவாரு முளர்.

மேலைவெண்பாவின் முன்னுணர்த்தும் பின்னுணர்த்துந் தானேவிளையுமெனக் கூறியவற்றை ஈண்டு நெறியினறிவிக்கவன்றி யறியா வாகலான் அது முன்செறியும் பின் செறியும் பவத்தினு மெனக்காரணங் காட்டி வலியுறுத்தினர். இதற்குப் பிறரெல்லாம் தத்தமக்குவெண்டியவாறே மேலைவெண்பாவோடு இயைபற உரைத்தார். அல்லதூஉம் அறிவிக்கவன்றி அறியாமை உபதேசி யாயென ஆன்மாவின் றன்னியல்பு கூறும் வழிப் பெறப்பட்டதாத லின், அதனை ஈண்டும் புனருத்தியாகக் கூறவேண்டாமையின் மேலது வலியுறுத்துதற் கேற்புடைய அறிவிக்க அறிதற்கட்படும் விசேட மாத்திரையே ஈண்டெடுத் தோதினா ரென்றுணர்க. படி வழியின் வைத்தறிவிக்க வன்றி அறியாமை "பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற் படிவழி சென்றுசென் றேறி" என்பத னானும் அறிக.

விளக்கம்.

கொண்டு கூட்டு. உளங்கள் நெறியின் அறிவிக்க வன்றி அறியா குறைவு இல் சகன் சூழ் கொள்பவர்க்கு குறைகள் முன்பின் செறியுமாம் குறை உடைய சொல் கொள்ளார் கொள் பவத்தின் வீடு (ஆம்) என்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ வெனின், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் ஆகிய மூவர்க்கும் கடவுள் குருவுமாய் வந்து உணர்த்து மிடத்து ஒன்றுபோல் உணர்த்தாது மேலை வெண்பாவிற் கூறியவாறு விஞ்ஞானகலர்க்குத் தன்மையினும் பிரளயாகலர்க்கு முன்னிலையினும் சகலர்க்குப் பின்னிலையாகிய படர்க்கையினும் நின்று உணர்த்துதற்கு என்னகாரணம் என்பாரை நோக்கிப்படிமுறையானன்றி அறியமாட்டாமையே காரணமெனக்கூறி முதல் குருவுமாய் உணர்த்து மென்ற மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) உயிர்களெல்லாந் தமக்குரிய பக்குவமுறையில்வைத்து முதல்வனறிவிக்க அறியுந் தன்மையையுடையன: அவ்வாறன்றி எல்லா உயிர்களும் ஒன்றுபோல் அறிவித்தால் அறியுந்தன்மையை உடையனவல்ல. ஆதலால், அறிவித்தாலறியக் கூடிய குறைபாடு உடையஅறிவின்றித் தானேயறியும் இயல்புடைய உலககருத்தாவாகிய உருவத் திருமேனிஉடைய கடவுளாலும் குருமூர்த்தியாலும் உபதேசமொழியைக்கொண்டு உணருந் தன்மையாகிய குறையுடைய பிரளயாகலருக்குஞ் சகலருக்கும் அவ்வுபதேச மொழிகள் முன்னிலையினும் பின்னிலையினும் நிகழ்வனவாம். உருவத்திருமேனியுடைய கடவுளாலும் குருவாலும் உபதேசிக்கப்பட்டு அறியவேண்டிய குறையில்லாத விஞ்ஞானகலருக்கு முதல்வன் உண்மைத் திருமேனியாகிய அறிவுருவால் வீட்டைத் தருதற்குரிய அறிவு உண்டாமென்று அறிவாயாக எ-று.

(க-ரை.) உயிர்கள் அவரவர்க்குரிய பக்குவத்திற் கேற்றவாறு அறிவித்தாலறியுந் தன்மையுடையன ஆதலால் விஞ்ஞானகலர்க்கு அறிவுக்குள் அறிவாய் உள் நின்றும், பிரளயாகலருக்கு உருவத் திருமேனி கொண்டு முன்னின்றும், சகலருக்கு அச்சகலர் வடிவுபோன்ற வடிவில் மறைந்து பின்னின்றும் இறைவன் உபதேசிப்பன் என்பதாம்.

முன்பின் குறைகள் என்றவிடத்தும் குறையுடைய சொல் என்றவிடத்தும் குறைவில்சகன் என்றவிடத்தும் குறை யென்பது அறிவித்தாலன்றி அறிவு நிகழாத இன்றியமையாமையை குறித்து நின்றது. இவ்வாறு ஒன்றை இன்றியமையாமை குறையாகும் என்பதைத் திருக்குறள் ஆள்வினை யுடைமை அதிகாரத்தில் உ-வது பாட்டில் "வினைக்குறை தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு" என்பதற்குப் பரிமேலழகர் வினையாகிய குறையைச் செய்யாது விட்டவரை உலகம் விட்டது என உரைகூறி, குறை இன்றியமையாமைப் பொருள் என்று விளக்கிய வாற்றானும் அறிக. அதாவது இன்றியமையாத முயற்சி யென்னுங் குறையை விட்டவரை உலகம் விட்டது என்பதாம்.

பவம், சம்பவம், உண்மை என்பன ஒரு பொருளைத் தரும் சொல்லாதலால் கொள்பவத்தின் என்பதற்குக் கொள்ளப்பட்ட உண்மை மாத்திரையில் என்று உரை செய்யப்பட்டது. இவ்விடத்து உண்மை என்றது அறிவுக்குள் அறிவாய் நின்று அறிவிக்கும் நிராதாரமாகிய சொரூப நிலையினை.

கொள்பவத்தின் வீடு என்றதில் வீடு என்பது வீட்டைத் தருமுணர்வையும், சூழ் கொள்பவர்க்கு என்றதில் சூழ் என்பது சூழ்ச்சியைத் தரும் உபதேச மொழியையும் குறித்து நிற்றலால் உணர்வாகிய காரணம் வீடாகிய காரியமாகவும், உபதேசமாகிய காரணம் சூழ்ச்சியாகிய காரியமாகவும் உபசரிக்கப்பட்டன; சூழ்ச்சி என்பது நுண்ணறிவு. சூழ் கொள்பவர் என்றவிடத்துக் கொண்டவர் என்பதும், சொற்கொள்ளார் என்றவிடத்துக் கொள்

ளார் என்பதும், அவ்வாறே காரணங் காரியமாக உபசரிக்கப்பட்டன. எவ்வாறெனின், பிரளயாகலத்தன்மை சகலத்தன்மை காரணம்; உபதேசங் கொள்ளுதல் காரியம். விஞ்ஞானகலத்தன்மை காரணம்; உபதேசங் கொள்ளாமை காரியம். ஆசலால் பிரளயா கலர் சகலராகிய காரணம் கொள் பவ ரென்னுங் காரியுமாகவும், விஞ்ஞானகலராகிய காரணம் கொள்ளா ரென்னுங் காரியமாகவும் உபசரிக்கப்பட்டமை அறிக.

சொற் கொள்ளாரென்றதில் கொள்ளா ரென்பது கொள்ளார்க்கு என் னும் பொருளில் நிற்றலால் அதில் நான்காம் வேற்றுமையுருபு தொகையா யிருந்தது. இது திருக்குறள் நீத்தார்பெருமையில் "ஐந்தவித்தா னாற்றல்" என்றவிடத்து ஆற்றலுக்கு என்னும்பொருளில் நான்காம் வேற்றுமையுருபு தொகையா யிருக்கின்றதுபோலாம்.

ஆம் என்னும் சொல் வருவித்து வீடு ஆம் என உரைககப்பட்டது. ஆம் வீடு எனவும் பொருந்தும். வீடென்என்பதையே வீடாம் என்று பாடமோது வாருமுளர்.

மேலே வெண்பாவில் தானே விளையும் முன்னுணர்த்தும் பின்னுணர் த்துமெனக் கூறி, இவ்வெண்பாவிலும் பவத்தின் ஆம் முன் செறியும் பின் செறியும் என்றமையால் கூறியது கூறலாகிய குற்றமாகாதோ எனின், ஆகாது; எவ்வாறெனின், மேலே வெண்பாவில் உணர்த்து முறைமை மூவ கைப் படுமெனக் கூறி, அவ்வாறு மூவகையாக உணர்த்துதற்குக காரணம் என்னை என்னும் ஐயத்தை நீக்குதற்கு, நெறியின் அறிவிக்க அன்றி அறி யா ஆகலான் என்னுங் காரணங்காட்டி, ஆசலால் அறிவிகக அறியும் உயிர் களின் அறிவு பவத்தின் ஆம் முன் செறியும் பின் செறியும் என வலியுறுத் தியவாறென் அறிக.

இவ்வாறன்றி இவ்வெண்பாவிற்குப் பிறர் வேறு விதமாக உரை கூறு வர். அதுவருமாறு— உளங்கள் அறிவிக்க அன்றி அறியா—ஆன்மாக்கள் அறிவித்தாலன்றி அறியா ஆகலான்,—நெறியில் முன்பின் குறைகள் செறி யுமாம்—அவ்வான்மாக்களுக்கு அறிவிக்க எழுந்த நூல்களுள் சித்தாந்தமல் லாத ஏனைய நூலகளெல்லாம் அவ்வச்சமய நெறியை முன் கூறியபடி பின் கூறுது மாறுபடுங் குறைகள் நிறைந்திருப்பன ஆதலால்,—குறையுடைய சொற்கொள்ளார்—அக்குறைபாடுடைய நூல்களைக் கொள்ளாது,—குறை வில் சகன் சூழ் கொள்பவர்க்கு—குறைபாடில்லாத முதல்வனது சித்தாந்த நூல்களைக் கொள்பவர்க்கு,—கொள்பவத்தின் வீடு ஆம்—கொண்ட பிறவி யிற்றானே வீடுபேறும் என்பதாம். இவ்வுரை மேலே வெண்பாவோடு சம். பந்த மில்லை. ஆசலால் பொருந்தாது. அன்றியும் அறிவிக்க அன்றி அறி யாமை ஆன்மாவின் தன்னியல்பு கூறிய ஏழாஞ் சூத்திரம் மூன்றும் அதிகர ணத்தில் உபதேசியாய் என்றதனுலேயே பெறபபட்டது. அதனை இவ்வி டத்தும் கூறியது கூறலாகக் கூறவேண்டாமையால், மேலே வெண்பாவில்

தானே விளையும் முன்னுணர்த்தும் பின்னுணர்த்தும் என்று கூறியதனை வலியுறுத்துதற் கேற்றவாறு அவ்வாறு உணர்த்துதற்குக் காரணம் உணருதலின்கண் உண்டாம் வேறுபாடு எனவும் அவ்வேறுபாடுபற்றிப் பவத்தின் ஆம் முன்செறியும்பின் செறியும் எனவும்உணர்வின் விசேட மாத்திரையே இவ்வெண்பாவிற் கூறினு ரென்றுணர்க.

உயிர்கள் தமக்குரிய பக்குவமுறையில்வைத்து அறிவித்தா லன்றி அறியா என்பதைக் கருவூர்த்தேவர் திருவிசைப்பாவில் திருவிடைமருதூர்ப் பதிகம் இ-வது செய்யுளில் "பக்தமும் பிரிவும் தெரி பொருட்பனுவற் படிவழி சென்று சென்றேறி" என்பதனுனும் அறிக.

இவ்வெண்பாவில் குறைவில் சகன் என்றது கனிச்சீராகவின் சீர் சிதையுமாதலால் லகர ஒற்றை நீக்கிக் காய்ச்சீராக்கிக் கொள்க. இது எது போல எனின், "சங்கரறுப்ப தெங்கள்குலம்" என்றது போலாம்.

சகலர்க்குக் கடவுள் குருவாய் வருதலில்லை என்பாரை மறுத்து வருமென்பதற்குக் காட்டும்

உதாரணம்.

இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபா
னல்லா யுளவாமா னீர்னிழல்போ—லில்லா
வருவாகி நின்றுனை யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றுனே லுற்று.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், அம்மூத்திறத்துள் ஈண்டைக் கெடுத்துக்கொண்ட அஞ்ஞான வச்சகலர்க்கு அக்குருவாதல் உபசாரமேயன்றி ஏனையபோலுண்மையாதல் செல்லா தென்பாரை நோக்கி உண்மையாதலை உவமை முகத்தான் வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) நல்லாய்—அறிவால் நன்மையுடைய மாணுக்கனே,—ஏந்து இழைபால் முலைப்பாலுங் கண்ணீரும் இல்லா உள ஆம்—ஏந்திய விழைகளை யுடையாட்குக் (குழவி மாட்டுளதாகிய அருவாகிய அன்பினைப் பிறரறியுமாறு வெளிப்படுத்தும் அவ்வன்பினுருவாகிய) முலைப்பாலுங் கண்ணீரும் (அவள் மாட்டுக் குழவியைக்காணுமுன்) இல்லாவாய்ப் பின்னுளவாம் (அதுபோல);—நீர் நிழல்போல் இல்லா அரு ஆகி நின்றுனை ஆரறிவார் தானே உருவாகி உற்றுத் தோன்றுனேல்,—நீரின்கண் நிழல் போல் (உயிர்கண்மாட்டுப்) புலப்படுத லில்லாது அருவமாய் நின்றமுதல்வனை யார்தாமறிவார்

அவனே குருவடிவாய் வந்து தோன்றிநின்று உணர்த்தானு யின் எ—று.

ஒருவரு மில்லை யென்பதாம். இஃதெடுத்துக்காட்டுவமை. இன்றி யமையாமை யுணர்த்துவார் தோன்றுமேன லாரறிவாரென எதிர்மறைமுகத்தாற் கூறினர். பொருளுக் கோதியதனை உவமை யினுங் கூட்டி ஏற்குமாறுரைக்க.

முலைப்பாலுங் கண்ணீரும் அன்பை விளக்குமென்பது "சுரந்த திருமுலைக்கே துய்ய சிவஞானஞ்—சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்,—சுரந்த—தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த—மனமுடையா ளன்பிருந்த வாறு" என்பதனானும், "அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்—புன்கணீர் பூசறரும்" என் பதனானும் அறிக. அவ்விரண்டும் அன்பின்வடிவே பிறவல்லவென் பது அன்புநிகழ்தற்குரிய காரணமுள்வழி வெளிப்பட்டு அஃதில் வழிவெளிப்படாத ஒற்றுமைநோக்கிக் கண்டுகொள்க. இவ்வொற் றுமை உணர்த்துவார் இல்லாவாயுளவாம் என்றார்.

இல்லா வென்பது முற்றெச்சக் குறிப்பு. ஆல் அசை. நீர், அகத்தியங்கும் உயிர்கட்கு இடங்கொடுத்தல் உண்மையான் நீரின் கண் வெளியுண்டென்பதூஉம், உண்டாகவே, ஆண்டு நீருக்கு நிழ லுண் டென்பதூஉம் பெறப்பட்டன. அந்நிழல், வேறுநில்லாது நீரோடு விரவிநிற்றலின் நீர்போற் புலப்படாதாயிற்று. அதுபோ லச் சிவசைதன்னியமும் யானென்னும் உணர்விற்கு விடயமாய்ப் புலப்படும் ஆன்ம சைதன்னியத்தோடு விரவிப் புலப்படாது நிற்ப தொன்றென்பார் நீர்நிழல்போ லில்லாவருவாகி நின்றானை என்றார்.

விளக்கம்.

(கொண்டு கூட்டு) நல்லாய் எந்து இழைபால் முலைப்பாலும் கண்ணீ ரும் இல்லா உளஆம் நீர் நிழல்போல் இல்லா அரு ஆகி நின்றானை ஆரறி வார் தானே உருவாகி உற்றுத் தோன்றானேல்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோ வெனின், முதல்வன, தன்மை யினும் முன்னிலையினும் பின்னிலையாகிய படர்க்கையினும் நின்று உணர் த்துவன் என்று மேற்கூறிய அம்மூன்று வகையுள், இவ்விடத்தில் எடுத்துக் கொண்ட மாயாமலத்தை யுடைய சகலவர்க்கத்து உயிர்களுக்குக் குருவாய் வருதல் முதல்வன் என்பது உபசாரமேயன்றி விஞ்ஞானகலர் பிரளயா கலர்க்கு முதல்வனே குருவாய் வருதல் போல உண்மை யன்று; எதனாலெ

னின், அறிவுக்குள் அறிவாயும் தனக்கே உரிய திருமேனி கொண்டும் வருதலேயன்றி மாயாகாரியமாகிய சரீரத்துடன் கூடி வரமாட்டாஞதலின் என்க. ஆகவே மாயாகாரியத்தோடு கூடி, முதல்வன் அருளைப்பெற்று, உபதேசிக்கும் ஆற்றலுடன் விளங்கும் உயிரை முதல்வன் குருவாய் வந்தானெனக் கூறுதல் உபசாரமேயாகும் என இவ்வாறு கூறுவாரை நோக்கிச் சகலருக்கு வருங்குருவும் முதல்வனே என்று மேற்கூறியது உண்மையே என்பதை உவமைமுகத்தாற் கூறி வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) அறிவால் நன்மையுடைய மாணக்கனே! தாங்கிய ஆபரணங்களையுடைய பெண் ஒருத்திக்குத் தன்குழந்தையினிடத்து வைத்துள்ள அன்பு பிறருக்கு வெளிப்படையாய்த் தெரியா திருப்பினும் அவ்வன்பின் உருவாய் அவளிடத் துண்டாகும் முலைப்பாலுங் கண்ணீரும் அவ்வன்பைப் பிறரறியுமாறு வெளிப்படுத்தும். அவ்வாறு வெளிப்படுத்தும் அம் முலைப் பாலுங் கண்ணீரும் குழந்தையைக் காணுமுன் இல்லாதனவாய்க் கண்டபின்னர் உளவாகும். அதுபோல, நீரின்கண்ணே உள்ள நிழல் வெளிப்பட்டு வேறுநில்லாது அந்நீருடன் கலந்து நிற்றல்போல உயிர்களிடத்து வெளிப்பட்டு வேறு நில்லாது கலந்து அருவமாய் நின்றமுதல்வன், உயிர்களிடத்திற் பக்குவங் கண்டபொழுது வெளிப்பட்டுக் குருவாய்த் தோன்றுவன்; பக்குவங் காணுமுன் தோன்ற மாட்டான்; அவனே குருவடிவாய் வந்து தோன்றி நின்று உணர்த்தாஞயின் அம்முதல்வனை யார்தாம் அறிவார் எ-று.

(க-ரை.) தாயினிடத்து வெளிப்பட்டு விளங்காத அன்பினை அவ்வன்பினுருவாகிய கண்ணீரினுலும் முலைப்பாலினுலும் உண்டென்று பிறர் அறியுமாறுபோல, உயிர்களிடத்து வெளிப்பட்டு விளங்காத முதல்வனை அம் முதல்வன் குருவாய்த் திருமேனி கொண்டு வந்து உணர்த்துதலால் உண்டென்று அறியக்கூடும் என்பதாம்.

குருவாய் வந்து உணர்த்தாஞயின் யார்தாம் அறிவார் என்றதனுல் அவ்வாறு உணர்த்தாஞயின் ஒருவரு மறிவாரில்லை என்பதாம்.

இச்செய்யுளில் உவமேயமாகிய முதல்வனுக்கு வெளிப்பட்டு விளங்காத தன்மையையும் குருவடிவாகத் தோன்றுவதையும் கூறி, உவமையாகிய அன்பிற்கும் வெளிப்பட்டு விளங்காத தன்மையையும் அது முலைப் பால் கண்ணீர் வடிவாகத் தோன்றுவதையும் எடுத்துக்காட்டினமையால், இது எடுத்துக்காட்டு உவமை என்னும் அலங்காரம்.

முதல்வனை அறியவேண்டுமாயின் அவன் குருவடிவாயத் தோன்ற வேண்டும்; இல்லையாயின் அறிய முடியாது என்பதை வற்புறுத்தவேண்டித் தோன்ருனேல் யாரறிவார் என எதிர்மறை முகத்தாற் கூறிஞர்.

முதல்வனுக்குச் சொல்லிய நீர் நிழல்போல என்றதனை உவமையாகிய அன்பிற்குங் கூட்டி ஏற்குமாறு உரைக்க. ஏற்குமாறு உரைக்க என்றதனால் முற்றும் முதல்வனுக்குக் கூறியதுபோல் கூற வேண்டுமென்பது கருத்து. அதாவது—நீரின்கண் நிழல் அந்நீரின் வேருய் வெளிப்பட்டுத் தோன்ருமல் அந்நீருடன் கலந்து நிற்றல்போல முதல்வன் உயிரின் வேருப்த் தோன்ருமல் அவ்வுயிருடன் கலந்து நிற்பன். அவ்வாறே அன்பும் தாயின் வேருய்த் தோன்ருமல் அத்தாயுடன் கலந்து நிற்கும். நீரினிடத்து நிழல் எப்பொழுது மிருப்பது போல உயிரினிடத்து முதல்வன் எப்பொதும இருப்பன். அவ்வாறே தாயினிடத்து அன்பு எப்பொழுதும் இருக்குமென்பதாம்.

தனத்திலுண்டாகும் பாலும் கண்ணிலுண்டாகும் நீரும் உள்ளத்தின் கணுள்ள அன்பை விளக்குமென்பதைத் திருக்களிற்றுப் படியார் கச-வது செய்யுளில் "அம்மையினுடைய திருமுலைப்பால் உண்டார் திருஞான சம்பந்தப்பிள்ளையார் என்றுசொல்லக்கேட்ட பாண்டிமாதேவியாருக்குத் தனத்திலிருந்து பால்சுரந்து தாம்; என்னே பாண்டிமாதேவியின் அன்பிருந்தவாறு" என்று கூறி யிருத்தலானும், திருக்குறள் அன்புடைமை அதிகாரம் க-வது பாட்டில், "அன்பைப் பிறரறிய வொட்டாது அடைத்து வைத்திருக்குந் தாழுளதோ? அன்புடைய வரிடத்துண்டாகும் கண்ணீரே அவ்வன்பை யாவருமறியும்படி தூற்றும்" என்று கூறியிருத்தலானு மறிக.

முலைப்பாலும் கண்ணீரும் அன்பின் வடிவேயன்றி வேறல்ல வென்பதை அன்பு வெளிப்படுதற்குக் காரணமாகிய குழந்தையைக் கண்டவிடத்துத் தோன்றிக் குழந்தையைக் காணுதவிடத்துத் தோன்ருத ஒற்றுமை நோக்கிக் கண்டுகொள்க.

குழந்தையாகிய காரணத்தைக் காணுதவிடத்து வெளிப்பட்டுத் தோன்ருத காரியமாகிய அன்பு அக்காரணத்தைக் கண்டவிடத்துக் கண்ணீரும் பாலுமாக வெளிப்பட்டுத் தோன்றுதலால் அவை மூன்றுந் தம்முளொற்றுமை யுடையனவென்பதறிக.

இவ்வொற்றுமையையுணர்த்தவேண்டியே அன்பு இல்லையாயின் முலைப்பாலுங் கண்ணீரும் இல்லாவாய், அன்பு உளதாயின் அவ்விரண்டு முளவாம் எனச் செய்யுளிற் கூருது முலைப்பாலுங் கண்ணீரும் இல்லாவாய் உளவாம்என்ருர்.

முன்னுள்ள இல்லாஎன்பது இல்லாதன என்னும் பொருளைக்குறித்து முற்றாயும், இல்லாதன ஆகி என்னும் பொருளைக் குறித்து உளவாம் என்பது கொண்டு முடியவேண்டிய எச்சமாயும், வினைக் குறிப்பாயும் நிற்றலால், முற்றெச்சக் குறிப்பு. பின்னுள்ள இல்லா என்பது அருவாகி நின்ருன் என்பது கொண்டு முடியவேண்டிய எச்சமாய் நின்றது.

உளவாம் ஆல் என்பதிலுள்ள ஆல் அசை.

ஒரு பொருளின் நிழல் அப்பொருளின் வேறாகக் காணப்படுவதாகும். நீரினிடத்துள்ள நிழல் அந்நீரின் வேறாய்க் காணப்படுவதில்லை. ஆதலால் நீருக்கு நிழலுண்டென்றல் எவ்வாறு கூடுமெனின், நீரானது தன்னுள்ளே சஞ்சரித்துக்கொண்டிருக்கும் உயிர்கட்கு இடங்கொடுப்பதாய்க் காணப்படுகின்றது. அதனால் இடங் கொடுக்கும்படியான வெளி உண்டென்று கருதப்படும். வெளி உண்டாகவே, அவ்வெளியில் நீரின் நிழல் உண்டு என அறிக. அந்நிழல் ஏனைப்பொருள்களின் நிழல் வேறு நிற்பதுபோல் நீரின் வேறாய் நிற்பதின்றி அந்நீரோடு கலந்து நிற்றலால் நீர்வெளிப்பட்டு விளங்குவதுபோல் அதன் நிழல் வெளிப்பட்டு விளங்காதாயிற்று.

அவ்வாறே சிவசைதன்னியமும், யான்என்னும் அறிவிற்குப் பொருளாகிய ஆன்மசைதன்னியத்தோடு கலந்து நிற்பதாகும் என்பதை உணர்த்த வேண்டி வேறு உவமை கூறாது நீர் நிழல்போல் இல்லா அருவாகி நின்றனை என்றார்.

இரண்டாம் அதிகரணம் முற்றிற்று.

மூன்றாம் அதிகரணம்.

ஐம்பொறிகள் தத்துவஞானத்தை விளக்காது
மறைக்குமெனக் கூறும்
மேற்கோள்.

இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மையுணரா வென்றது.

சிற்றுரை.

எ-து மே-ள் எ—னின், விடய ஞானத்தை விளக்கும் ஐம்பொறிகளே தத்துவ ஞானத்தை விளக்குதற்கு மமையும். தம்முதல் குருவுமாதல்வேண்டாவெனச் சிவசங்கிராந்தவாதசைவர் மதம் பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் மூன்றாங் கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோடணுதலிற்று. இவ்வாறுரையாக்கால் இனியென்பதனு னுணர்த்தப்படுமேலையதிகாணத்தோடுளதாகிய இயைபு பெறப்படாமை அறிக.

இ—ள் வெ—டை.

சாதனவியல்எட்டாஞ்சூத்திரம். ங-ம் அதி.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ-ள்.) இவ்வான்மாக்கள்—உணர்த்த உணரு மியல்பினை யுடைய உயிர்கள்,— ஐயுணர்வுகளால—ஐம்பொறிகளால்,—மய ங்கி-- மயக்கமுற்று.— தம்மை— தமதுசொரூபத்தை,— உணரா வென்றது— அறியா எ-று.

சிற்றுரை.

உணர்வு ஆகுபெயர்.

விளக்கம்.

இம்மேற்கோள் சூத்திரத்திலுள்ள ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந் தென என்னும் மூன்றாங் கூற்றைப் பதச்சேதஞ்செய்து மேற்கொண்ட தாகும்.

இம்மேற்கோள் என்னசொல்லிற்றோ வெனின், உலகப்பொருள் களை அறியும் அறிவை மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்பொறி களே பசுகரணங்களாய் நின்று விளக்குவதால் அந்த ஐம்பொறிகளே சிவகா ணமாய் நின்று தத்துவ ஞானத்தையும் விளக்குதற்குக் கூடும். ஆதலால் தத் துவ ஞானத்தை விளக்குதற்கு இரண்டாம் அதிகரணத்தின்படி தமது முதல்வன் குருவுமாய் வருதல் வேண்டாம் என்பர் சிவசங்கிராந்தவாதிகள். அவர் கூற்றை ஆசங்கித்துக்கொண்டு சூத்திரத்தின் மூன்றாங் கூற்றைப் பதச்சேதஞ் செய்து ஐம்பொறிகள் தத்துவஞானத்தை விளக்காதெனக் கூறிய வாறும்.

இவ்வாறு இம்மேற்கோளை ஐம்பொறிகளே தத்துவஞானத்தை விளக் கக்கூடும் குருவேண்டாம் என்ற சங்கைக்கு உத்தரமாக்காமல் குருவாய் வந்து உணர்த்தினும் ஐம்பொறிகளால் மயங்கியவிடத்து உணருமோ என் னுஞ் சங்கைக்கு உத்தரமாகக் கூறின், இனி என்னுஞ் சொல்லால் மேலைய திகரணத்தோடு சம்பந்தம் பெறப்படாமையால் அவ்வாறு கூறுதல் பொருந் தாது. முன் சொல்லியதனோடு சம்பந்தமுடைய பிறிதொன்றைச் சொல் லுங்கால் இனி என்று ஆரம்பஞ் செய்யப்படும். மேலையதிகரணத்தில் குரு வாய்வந்து ஞானத்தை உணர்த்தும் எனக்கூறி யிருப்பதால் இதில் குருவாய் வந்து உணர்த்தவேண்டாம் ஐம்பொறிகளே விளக்கும் என்றசங்கை சம்பந் தமுடையதாம். அவ்வாறின்றி இந்தியங்களால் மயங்கியவிடத்து உண ருமோ என்பது உயிரின்றன்மையைக் குறித்த வேறு விஷயமாய் முன் னர் உதாரணத்துள் அடங்குதலின் இவ்விடத்துச் சம்பந்தமாகாமை யறிக.

இவ்வதிகரணத்தில் ஐம்பொறிகள் தத்துவ ஞானத்தை மறைக்குமோ விளக்குமோ என்பது ஐயப்பாடு. விளக்குமென்பது பிறர்பக்கம் என அறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) தானே அறியும் இயல்பின்றிப் பிறி தொன்று அறிவிக்க அறியும் இயல்பினையுடைய உயிர்கள் ஐம்பொறிகளால் மயக்கத்தை அடைந்து அதனால் தமது சொருபத்தை அறியா எ-று.

மேற்கோளில் ஐயுணர்வு என்றது ஐயுணர்வைச் செய்யும் ஐம்பொறி களுக்காதலால் ஆகுபெயர்.

ஐம்பொறிகள் தத்துவஞானத்தை விளக்காது
மறைக்கும் என்பதற்குக் காட்டும்
ஏது.

அவைதாம் பளிங்கிலிட்ட வன்னம்போற் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்.

சிற்றுரை.

ஏ—து ஏது எ—னின், அறிவை விளக்குங் கருவியான்மயக்கம் நிகழுமாறு யாங்ஙன மென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

(இ-ள்.) படிகத்தின் வைத்த பலவேறு வகைப்பட்ட நிறங்கள் அப்படிக ஒளியைக் கீழ்ப்படுத்துத்தத் தம்மியல்பினையே விளக்கி நிற்குமாறுபோல, அவ்வைம்பொறிகடாம் ஆன்ம சொரூபத்தைக் கீழ்ப்படுத்துத் தம்மாற் காட்டப்பட்ட தத்தம்விடயமாத்திரையே அவ்வான்மாவுக்குக் காட்டி நிற்பன வாகலான் 'இனி இவ்வான்மாக் கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மையுணரா' வெனமேற் கொண் டது எ—று.

விடயங்களுள்ளும் அவ்வவ்விடய மாத்திரையே அவ்வவ் விந் திரியங் காட்டவல்லு மென்பார் காட்டிற்றை என ஒன்றறிசொல் லாற் கூறினர்.

விளக்கம்.

இந்த ஏது என்னசொல்லிற்றோ வெனின், ஐம்பொறிகள் ஆன்மா விற்கு அறிவை விளக்குங் கருவியாய் இருக்கவும், அந்த ஐம்பொறிகளால் மயக்கம் நிகழுமென்று மேற்கோள் கூறியது எவ்வாறு கூடு மென்பாரை நோக்கி, ஐம்பொறிகள் அறிவை விளக்குமாயினும், அவ்விளக்கம் விடய விளக்கமேயன்றி ஆன்மாவின் உண்மை விளக்கம் அன்று எனவும், அவ்விட யவிளக்கமும் ஒவ்வொரு இந்திரியத்தால் ஒவ்வொரு விடயம் விளங்குமென வுங் கூறி ஐம்பொறிகளால் மயங்கித் தம்மை யுணராவென்னும் மேற்கோளை வலியுறுத்திய வாறும்.

சாதனவியல்எட்டாஞ்சூத்திரம். ௩-ம் அதி.

(இந்த எதுவின் பொருள்.) படிகத்தினிடத்துப்பதிந்த பலவேறுவகைப் பட்ட நிறங்கள் அப்படிக ஒளியைக்கீழ்ப்படுத்தித் தத்தம் நிறங்களையே காட்டி நிற்குமாறுபோல், ஆன்மாவினிடத்துக் கருவியாய் இருக்கும் ஐம்பொறிகள் அவ்வான்மசொரூபத்தைக் கீழ்ப்படுத்தி எந்த எந்த இந்திரியம் எந்த எந்த விடயத்தை விளக்கக்கூடுமோ அந்த அந்த இந்திரியம் அந்த அந்த விடயத்தையே அவ்வான்மாவுக்குக் காட்டி நிற்பனவாம். ஆகலால் இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மையுணராவென மேற்கோள் கூறியது எ-று.

விடயங்களுள்ளும் எல்லாவிடயங்களையும் எல்லா இந்திரியங்களும் காட்டமாட்டா. ஒவ்வொரு இந்திரியமும் அதற்குரிய ஒவ்வொரு விடயத்தையே காட்டும். அதாவது கண் உருவத்தையே காட்டும்; ஓசை முதலியவற்றைக் காட்டாது. இவ்வாறே பிற இந்திரியங்களுமாம். ஆகலால் ஒரு இந்திரியம் ஒரு விடயத்தையே காட்டுமென்பதை அறிவிக்கவேண்டி எதுவில் காட்டிற்றை என ஒருமை வாசகத்தாற் கூறினர். கூறவே ஒன்று அறிந்தது ஒன்று அறியாதாயும் ஆன்மாவின் இயல்பை மயக்கி விடயக் காட்சிக்கே எதுவாயும் உள்ள ஐம்பொறிகளால் ஆன்மாவினியல்பு விளங்குமாறில்லை யாதலால் ஆன்மசொரூபத்தை யுணர்த்துதற்குக் குருவேண்டுமென மேலையதிகரணத்தை வலியுறுத்தியவாறு அறிக.

இந்த எது, ஐம்பொறிகள் தத்துவஞானத்தை விளக்கும் என்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

ஐம்பொறிகளோடு கூடியவிடத்தும் ஞானத்தை யடைதற்கு உபாயங்கூறி
ஐம்பொறிகள் தத்துவஞானத்தை விளக்காது மறைக்கும்
என்பதை வலியுறுத்தும்
உதாரணம்.

பன்னிறங் காட்டும் படிகம்போ லிந்திரியந்
தன்னிறமே காட்டுந் தகைநினைந்து—பன்னிறத்துப் [டான்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், அங்ஙனங் காட்டிற்றையே காட்டி நிற்குமாயின் அவ்விந்திரியங்கள் உள்வழித் தம் முதல் குருவுமாயுணர்த்தினும் உணர்தல் செல்லாதும்போலுமென்பாரை நோக்கி உணர்தற்குபாயங் கூறி அதனை வலியுறுத்துதலுதலிற்று.

(இ-ள்.) பல் நிறம் காட்டும் படிகம் போல் இந்திரியம் தன்னிறமே காட்டும் தகைநினைந்து—(தன்னுற் சாரப்பட்ட) பன்னிறங்களினியல்பே தன் மாட்டுக் காட்டி நிற்கும் (பொதுவியல்புடைய) படிகம்போலத் (தன்னுற் சாரப்பட்ட) இந்திரியங்களி னியல்பையே (சார்ந்ததன் வண்ணமாய்த்) தன்மாட்டு விளக்கி நிற்குந்தனது பொதுவியல்பை (முன்னர்ச்) சிந்தித்தறிந்து கொண்டு (பின்பு),—பல்நிறத்துப் பொய்ப்புலனை வேறு உணர்ந்து—(அந்நிறங்கள் படிகத்துக்கு வேறென் றறியுமாறுபோலப், பலவகை இயல்புடைய பொதுவியல்பைச் செய்யும் பொறிகளைத் (தன்னின்) வேறெனத் தெளிந்து,—பொய் பொய்யா மெய் கண்டான்—(அவற்றானாய) அப்பொதுவியல்பு பொய்யா யொழியுமாறு (தனது)சிறப்பியல்பை உணர்ந்தானாயின்,—வேறு மெய்ப் பொருட்குத் தைவம் ஆம்—(அவ்வசத்தாகிய பொறிகளுக்கு) வேறாகிய (சிவசத்தின தியல்பு தன்மாட்டு விளங்கச்செய்யு மாகலின்) அச்சிவசத்துக் சுடிமையாம் எ—று.

ஈண்டுப் பொய் மெய்யெனப்பட்டன அப்பொருளவாதல் மேலே காட்டினும். தைவமென்பது தேவனதுடைமை யென்னும் பொருட்டாய வடமொழிப் பகுபதம். இதனானே கருவிகளுள் வழிக் காட்டிற்றைக் காட்டி நிற்றலின் அறிதல் செல்லாது, அவை நீங்கியவழிக் கேவலமாய் முடியுமாதலிற் றன்னுண்மை யறியுமாறு யாங்ஙன மென்னுங் கடாவை யாசங்கித்து அவையுள்வழியே தன்னுண்மை யறிதற் குபாயங் கூறி இதுபற்றி அவை காட்டிற்றைக் காட்டி நிற்றற் கிழுக்கில்லை யென வலியுறுத்த வாறுமென்க. மெய்ப் பொருட்குத் தைவமாமென்றதனல் வருகின்ற அதிகரணத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறு.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்னசொல்விற்றோ வெனின், ஏதுவிற் கூறியவாறு ஐம்பொறிகள் தத்தம் விடயத்தையே ஆன்மாக்களுக்குக் காட்டி நிற்குமாயின், அவ்விந்திரியங்கள் உள்ள விடத்து முதலதிகரணத்திற் கூறியவாறு தமது முதல் குருவாய் வந்துணர்த்தினும் தன்னுண்மை உணர்தல் கூடாது போலும் என்பாரை நோக்கி, அவ்விந்திரியங்கள் உள்ளவிடத்தும் தன்னுண்மையுணர்தற்கு உபாயங் கூறி ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை) பளிங்குக் கல்லினிடத்துப் பொருந்திய பலநிறங்களின் தன்மையையே அப்பளிங்குக்கல் தன்னிடத்துக் காட்டிநிற்கும். நிறங்களின்

தன்மை பளிங்கினிடத்தில் விளங்குவது பளிங்குக்குப் பொதுவியல்பு. இப்பொது வியல்புடைய படிகம்போல ஆன்மாவினிடத்துப் பொருந்திய இந்திரியங்களின் தன்மையையே அவ்வான்மா தன்னிடத்தில் விளக்கிநிற்கும். இவ்வாறு சார்ந்த இந்திரியத்தின் வண்ணமாய் நிற்றல் ஆன்மாவுக்குப் பொதுவியல்பு. இப்பொது வியல்பை முன்னர்ச்சிந்தித்து அறிந்துகொண்டு பின்னர்ப் பளிங்கினிடத்திற் றோன்றிய அந்நிறங்கள் பளிங்குக்கு வேறென்று அறியுமாறுபோல, பலவேறுவகையான தன்மையுடைய அப்பொது வியல்பை யுண்டுபண்ணும் இந்திரியங்களை அவ்வான்மாத் தன்னின்வேறெனத் தெளிந்து அந்த இந்திரியங்களினு லுண்டாகிய அப்பொது இயல்பு பொய்யா யொழியுமாறு தனது சிறப்பியல்பை உணர்ந்தானுயின், அவ்வுணர்ச்சி, பொதுவியல்பை யுண்டுபண்ணும் அசத்தாகிய அந்த இந்திரியங்களுக்குவேறுகிய சிவசத்தினியல்பு தன்னிடத்து விளங்கச் செய்யும். அவ்வாறு விளங்குதலால் ஆன்மா அச்சிவமாகிய சத்துக்கு அடிமையாம் எ-று.

(க-ரை.) படிகத்திற் காணப்படும் நிறங்களின் தன்மையைப் படிகத்திற்கு வேறென்று அறிவதுபோல, ஆன்மாவிற் காணப்படும் இந்திரியங்களின் தன்மையை ஆன்மாவுக்கு வேறென்று அறியின், அவ்வான்மாவினிடத்துச் சிவமாந்தன்மை விளங்கப் பெற்று அதனுல் அவ்வான்மா சிவத்துக்கு அடிமையாகும் என்பதாம்

சிவமாந்தன்மை விளங்கப்பெற்ற சிறப்பியல்பை அடிமையென்று கூறிய கருத்தென்னையெனின், அடிமையாவது அடியவனுந்தன்மை. அதாவது தனக்கென ஒருசெயலுமின்றிக் கருத்தாவின் அருள்வழி அடங்கிநிற்றல். ஆன்மாவானது கருவிகளைக் கழித்தபின்னர்க் கழிக்கப்படாமல் என்றும் உடனுய் நிற்கும் சிவத்துடன் கலந்து நிற்குங்காலத்தும், சிவம் வியாபகமாயும், தான் அச்சிவத்துள் வியாப்பியமாய் அடங்கியும் நின்று சிவனருளால் சிவானந்தத்தை அனுபவிக்குமாதலால் அச்சிறப்பியல்பை அடிமைத்திறமென்று கூறியதென அறிக. இதனைத் திருக்குறள் மெய்யுணர்தல் அதிகாரத்தில் "சார்புணர்ந்து சார்புகெட" என்ற திருக்குறளில் சார்புணர்ந்து என்பது சிவம் என்றும் உடனுய்நிற்கும் என்பதனையும், சார்புகெட என்பது கருவி முதலியன செயற்கையால் வந்தனவென்பதனையும் வலியுறுத்திச் சார்புணர்ந்து என்ற அதனுல் சாரப்படும்பொருளாகிய சிவத்துக்குச் சாரும்பொருளாகிய உயிர் அடிமை என்பதனையும் வலியுறுத்துதலானும் அறிக.

இவ் வுண்மையறியாத ஏகான்மவாதிகள், "பதியாகி யுறைபவனே மாயையெனும் பாசத்தாற் பசுக்களாகி" என்னும் இலிங்கபுராண முதலியவற்றை எடுத்துக்காட்டிச் சிவனே மாயையோடுகூடிச் சீவனுயிற்று; மாயை நீங்கியபின் சிவமாயிருந்தது; இவ்வளவேயன்றி முத்தியினும் சிவத்துக்கு

உயிர் அடிமையென்றல் பொருந்தாதென்பர். இவர்கொள்கையை மேல் ஆண்டாண்டு எடுத்துக்கூறி மறுத்திருக்கின்றமையால் அவற்றை மீட்டுங் கூறாது இலிங்கபுராணக் கருத்தைமட்டும் விளக்குதும். அதுவருமாறு:— பதியாகி யென்றதனால் ஆகி யென்னும் ஆக்கம் பதித்தன்மை முன்னில்லாமையைக் குறித்துநின்றது. குறிக்கவே, பதியைச் சார்ந்ததனால் பதியாகியென்பது விளங்கும். அவ்வாறாயின் இந்நூலில் 'அவனே தானேயாய்' என்றவிடத்தும், 'அவனே தானே யாகிய' என்றவிடத்தும் ஆகி யென்பது ஆக்கங் குறித்ததோ எனின், அன்று. மற்றென்னையோ எனின், நின்ற இயல்பு குறித்தவாறாமென்க. எதனாலெனின், ஆகிய ஆங்கெறி என்பதனானும், ஆய்நிற்கும் என்பதனானும் என்க. அவ்வாறே பதியாகி என்றதற்குஞ் சொல்லலாகாதோ எனின், ஆகாது. எதனாலெனின், உறைபவனே என வருங்காலத்தாற் கூறுதலாலென்க. அன்றியும், நிறைபவனே என்றாவது ஒளிர்பவனே என்றாவது கூறாது உறைபவனே என்றதனால் பதியானவிடத்தும் அடிமையென்பது இனிது விளங்கக் கிடந்தது. இவ்வாறன்றி இன்னும் ஒருபொருளுங் கூறலாம். அதுவருமாறு:—அநாதி பெத்தத்தும் உயிர் பதியோடு பிரிப்பின்றி நிற்றலை உணர்த்தவேண்டிப் பதியாகி யுறைபவன் என்றும், அவ்வாறு பிரிப்பின்றி நின்றும், சார்ந்ததன் வண்ணமாந் தன்மையினையுடைய உயிர்கள் பதியின் தன்மையைப்பெற்று இன்புறாது பசுக்களாய்த் துன்புறுதற்குக் காரணம் உணர்த்தவேண்டி மாயையெனும் பாசத்தாற் பசுக்களாகி யென்றுங் கூறினார் என்பதாம். உறைபவன்என ஒருமை வாசகத்தானும் பசுக்களெனப் பன்மை வாசகத்தானுங் கூறிய கருத்தென்னையெனின், கருவிகளோடு கூடிய பெத்தத்தில் உயிர்கள் வேறுவேறாய் விளங்குமாறுபோல, முத்தியில் வேறுவேறாய் விளங்குமாறில்லை யாதலானும், அநாதிபெத்தத்தும் அவ்வாறேயாதலானும் என்க. ஆகவே, சித்தாந்த சாத்திரங்களும் திருமுறைகளும் ஏனைய புராணங்களும் ஏகான்மவாதத்தைக் கண்டித்து ஒதுக்குமென்பது நன்கு தெளிந்துகொள்க.

இவ்வெண்பாவில் பொய் யென்பது பொதுவியல்பையும் மெய்யென்பது சிறப்பியல்பையுங்குறித்து நின்றன. பொய்மெய்யென்பதற்கு இவ்வாறு பொருள் கூறலாமென்பது மேல் ஏழாஞ் சூத்திரத்து முதலதிகரணத்து ஏதுவில் காட்டப்பட்டிருக்கின்றது.

சைவமென்பது வடமொழிப் பகுபதம். இது தேவனது உடைமை என்னும் பொருளில் சிவத்துக்கு அடிமை என்றதைக் குறித்துநின்றது. அடிமையும் உடைமையும் என உடைமை இருவகைப்படும். அவற்றுள் அடிமை உயிரையும் உடைமை பாசத்தினையுங் குறிக்குமாயினும் இவ்விடத்தில் உயிரை உடைமைப்பொருளில் தேவனது உடைமை யென்றது பொதுவாக இரண்டும் உடைமை யென்பது பற்றியென்க.

இவ்வெண்பாவினுல் கருவிகள் உள்ளவிடத்து அக்கருவிகள் விடயத்தைக் காட்டி நிற்றலின் குருவாய் வந்துணர்த்தினும் உண்மை ஞானத்தை அறிய முடியாது; கருவிகள் நீங்கியவிடத்துக் கேவல அவத்தை வந்து கூடும்; ஆதலால் தன்னுண்மையாகிய உண்மை ஞானத்தை அறிவதெவ்வாறு என்னும் சங்கைக்கு அக்கருவிகள் உள்ளவிடத்தே அவற்றின் இயல்பைப் பொதுவியல் பென்று கண்டுகழிக்கும் உபாயத்தால் சிறப்பியல்பாகிய உண்மையை அறியலாமென்று அறிதற்கு உபாயங்கூறி இவ்வுபாயத்தால் அவ்விந்திரியங்கள் காட்டிற்றைக் காட்டி நிற்றற்கு இழுக்கில்லையென ஏதுவை வறியுறுத்தியவாறு அறிக.

மெய்ப்பொருட்குத் தைவமாம் என்று கூறிய இதனுல் முதல்வனது சீபாதத்தை அணையுமென்ற நான்காம் அதிகாரணத்துக்குத் தோற்றுவாய் செய்தவாருயிற்று.

மூன்றம் அதிகாரணம் முற்றிற்று.

நான்காம் அதிகரணம்.

கருவிகள் நீங்கினவிடத்து உயிர் முதல்வன் திருவடியை
அடையுமெனக் கூறும்
மேற்கோள்.

இனி இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேருவான் காணவே தமதுமுதல் சீபாதத்தை யணையுமேன்றது.

சிற்றுரை.

எ-து மே-ள் எ-னின், பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய் பொய்யா மெய்கண்டார்க்கு அதுமே அமையும்; கருவிகள் நீங்கிய வழிச் செய்யக் கடவதொரு முயற்சி கூடாமையின் ஆண்டுமெய்ப் பொருட்குத் தைவமாதல் பெறப்படாதெனப் பேதவாத சைவர் முதலியோர் கூறுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் நான் காங்கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ—ள், வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ-ள்.) இவ்வான்மா—ஐயுணர்வுகளான் மயங்கித் தன்னையுணராதெனப்பட்ட ஆன்மா,—தன்னை—சித்தாய் வியாபகமாகிய தன்னியல்பை,—இந்திரியத்தின்—சடமாய் ஏகதேசமாகிய இந்திரியத்

தின்.--வேறுவான் காணவே--வேறாக உணரும் வியாபக உணர்விற்கு இந்திரியத்தான் ஆகக்கடவ தொன்றின்மையின் சற்குரவனால் அவ்வாறுணரவே,—தமது முதல் போதத்தை—பிறிது காரணம் வேண்டாது தனக்காதாரமாகிய முதல்வனது திருவடியினை,—அணையும் என்றது—தலைப்படும் எ-று.

சிற்றுரை.

இந்திரியத்தின் வேறாயவழிக் கேவலத்தை யணைதலும் உண்மையின் அதனை நீக்குதற் பொருட்டு வேறாக வென்றொழியாது வேறுவான் காணவென்றார். காண்டலே அதற்கமையுமென்றலின் ஏகாரம் தோற்றத்தின்கண் வந்தது.

விளக்கம்.

இம்மேற்கோள் 'விட்டன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே' என்ற சூத்திரத்தின் நான்காங் கூற்றைப் பதச்சேதஞ்செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்னசொல்லிற்றோ வெனின், மூன்றாம் அதிகரணத்து வெண்பாவிற் கூறியபடி பொதுவியல்பை உண்டுபண்ணும் இந்திரியங்களைத் தன்னின் வேறென அறிந்து அவ்விந்திரியங்களினா லுண்டாகிய பொதுவியல்பு பொய்யாய் ஒழியுமாறு தனது சிறப்பியல்பாகிய மெய்யைக் கண்டவர்க்கு அவ்வாறு காண்டலே போதும்; இந்திரியங்களாகிய கருவிகள் நீங்கின் விடத்து ஒரு செயலும் செய்யமுடியாது. ஆதலால் இந்திரியங்களை வேறென அறிந்து தனது சிறப்பியல்பை அறிந்த விடத்தில் செயலில்லாத அந்த நிலையில் மெய்ப்பொருளுக்கு அடிமையாதல் கூடாது என்பர் பேதவாத சைவர் முதலியோர். அவர் கூற்றை ஆசங்கித்துச் சூத்திரத்தின் நான்காங்கூற்றைப் பதச்சேதஞ் செய்து இந்திரியங்களைத் தன்னின்வேறெனக்கண்டு நீக்கிய விடத்துமெய்ப் பொருளுக்கு அடிமையாதல் கூடும் எனக் கூறியவாறாம்.

இவ்வதிகரணத்தில், இந்திரியங்களில் நின்றும் நீங்கினவிடத்து முதல்வனுக்கு அடிமையாதல் உண்டோஇல்லையோஎன்பது ஐயப்பாடு. இல்லையென்பது பிறர்பக்கம் என அறிக.

(இம் மேற்கோளின் பொருள்.) ஐந்துவித உணர்வைச் செய்யும் இந்திரியங்களால் மயங்கித் தன்னை யுணராதென மூன்றாம் அதிகரணத்துக் கூறப்பட்ட ஆன்மா, அறிவாயும் வியாபகமாயும் உள்ள தனதுசிறப்பியல்பை, அறிவில்லாததும் ஏகதேசமாயுமுள்ள இந்திரியத்திற்கு வேறென உணரின், அவ்வியாபக உணர்விற்கு, வேறெனக் கழித்த இந்திரியத்தால் ஆகக் கூடி

யது ஒன்றுமில்லை. ஆதலால் சற்குருவால் தன்னை இந்திரியங்களின் வேறென உணரவே வேறுகாரணம் வேண்டாது வேறென உணர்ந்த அக்காரணத்தினாலேயே தனக்கு ஆதாரமாகிய முதல்வனது திருவடியை அணையும் எ—று.

இந்திரியத்தின் வேறாகவே முதல்வனது சீபாதத்தை யணையுமென்று கூறியிருந்தாலே போதியதாகவும், வேறுவான் காணவே யென்று கூறியதென்னை யெனின், இந்திரியத்தின் வேறான விடத்துத் தன்னைக்காணுதலில்லாத துரியாதீதமாகிய கேவல அவத்தை வந்து பொருந்து மாதலால், அதனை நீக்குதற் பொருட்டு இந்திரியத்தின் வேறாகத் தன்னைக் காண்டலென்னும் பொருள்தரற்கென்றுணர்க. வேறாகத் தன்னைக்காணும் நிலையில் ஒன்றுங் காணாததுரியாதீதம் பொருந்துமாறில்லை எனஅறிக.

காணவே என்றதிலுள்ள வகாரம் தன்னை வேறாகக் காண்டலே காரணமாய் யாதானு மொன்றைப்பற்றி நிற்றலே இயல்பாக உடைய உயிர் முதல்வனது திருவடியை யணையுமென்ற உறுதியைக் குறித்து நிற்றலால் தேற்றம்.

கருவிகள் நீங்கினவிடத்து முதல்வன் திருவடியை உயிர் அணையும் என்பதற்குக் காட்டும்

ஏது.

ஊசல் கயிறற்றாற் றாய்தரையேயாந் துணையான்.

சிற்றுரை.

எ—து எதுஎ-னின், அவ்வாறு காண்டலே சீபாதத்தை அணைதற்குச்சாலு மென்பது யாங்ஙன மென்பாரை நோக்கிஉவமையின் வைத்துக் காட்டி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) ஒருவன் ஏறியிருந்தாடுதற்கு ஆதாரமான ஊசல் கயிறற்றதாயின் அவனுக்கு உற்றுழி உதவுந்தாய் போல ஆண்டுத்தாரகமாவது நிலனே யன்றிப் பிறிதில்லை யென்னு மொப்புமையான் ‘இனி இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் சீபாதத்தை யணையு’மென மேற்கொண்டது எ-று.

வியாபகப் பொருட்குக் காட்சி விசேடமே நீக்கமாகலின் அறுதல் அதற்கு உவமையாயிற்று.

விளக்கம்.

இந்தவது என்ன சொல்லிற்றோ எனின், மேற்கூறியவாறு தன்னை இந்திரியத்தின் வேறாகக் காண்டலே முதல்வனது திருவடியை அடைதற்குப்போதும் என்பது எவ்வாறு என்பர் பேதவாதசைவர். அவரை நோக்கி உவமையினால் வேறாகக்காண்டலே போதுமெனக் காட்டி மேற்கோளை வலியுறுத்திய வாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) ஒருவன் ஏறியிருந்து ஆடுதற்கு ஆதாரமான ஊசல் கயிறு அற்றபொழுது தன்பமுற்ற விடத்துத் தாங்குந் தாய்போல ஊசலில் இருந்தவனுக்குத் தாரகமாவது தரையேயன்றிப் பிறிதில்லை. அது போல, இந்திரியத்தின் வேறாகத் தன்னைக்காணவே, கண்ட அவ்வான்மாவுக்குத் தாரகமாவது முதல்வன்திருவடியே யன்றிப் பிறிதில்லையாதலால், 'இனி இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் சிபாதத்தை யணையும்' என மேற்கோள் கூறியது எ-று.

ஆன்மா வியாபகப் பொருளாதலால் ஒருபொருளையும் நீக்கமுடியாது. இந்திரியங்களின் பற்று அறுதலாகிய அதனால் தன்னை வேறென்று காணும் காட்சியின் விசேடமே இந்திரியத்தின் நீக்கமாகும். ஆதலால் ஊசல் கயிறறுதல் இந்திரியத்தை வேறாகக்காணும் பற்று அறுதலுக்கு உவமையாயிற்று.

இந்த ஏது இந்திரியங்களில் நின்று நீங்கின விடத்து முதல்வனுக்கு அடிமையாதல் இல்லையென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

கருவிகள் நீங்கினவிடத்து முதல்வன் திருவடியை உயிர் அடையுமென்பதற்கும் கருவிகளிடத்து மீண்டு வாராது என்பதற்குங் காட்டும்

உதாரணம்.

சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளஞ்
சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து—சிறைவிட்
டலைகடலிற் சென்றடங்கு மாறுபோன் மீளா
துலைவிலரன் பாதத்தை யுற்று.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், கருவிகணீங்கினவழி வேறுநில்லாது சிவத்தைத் தலைப்படுமாயின் அவ்வுயிர்க்கும், கருவிகணீங்கிக் கேவலத்தைத் தலைப்பட்ட உயிர்க்குப் போல மீட்சியுண்டு போலுமென்பாரைநோக்கி அஃதின்றாமாறுகூறி மேலதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) சிறை செய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்—(ஒருவன் அணையை உயர்த்துக் கட்டித்) தடைசெய்ய (ஆண்டுத் தடையுண்டு) தேங்கிநின்ற ஆற்றுநீர்போலக் (கருவிகளாகிய பாசஞானந் தனது வியாபகத்தைத் தடைசெய்ய அதன்கண் ஏகதேசமா யடங்கித் தடையுண்டு நின்ற) உயிர்,—சிறைவிட்டு அலைகடலின்சென்று அடங்கும் ஆறுபோல்—அவ்வணை முறிந்து தடைதீர்ந்தவழி (இடையீடின்றிக்) கடலின்கண் (முடுகிச்) சென்று (அந்நீரேயாய்) அதனுளடங்கி மறித்துவாராத ஆற்றுநீர்போல,—சிறைசெய் புலன் உணர்வில் தீர்ந்து—(கருவிகளாகிய) பாசஞானத் தடையினின்று நீங்கியவழி,—உலைவுஇல் அரன்பாதத்தை உற்று மீளாது—தனக்குக் கேடில்லாத சிவபிரானது திருவடியைத் தலைக்கூடி (அத்திருவடி நிறைவேயாய் அதன்க ணடங்கிப் பின்பு) மீளுதல் செய்யாது எ-று.

சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம் என்றது தொகை உவமம். இன் உவம உருபு. தேக்கத்தின் மிகுதி உணர்த்துவார் செழும்புனலென்றார். மல சத்திக்குக் கேடுண்மையின் அதனைத் தலைப்பட்ட உயிர்க்குக் கருவிகளின் மீட்சிகூடும்; சிவசத்திக்கு அஃதின்மையின் அதனைத் தலைப்பட்ட உயிர் அவ்வாறு மீளுதற்கோ ரியைபில்லை என்பார் உலைவிலரன் பாதமென விசேடித்தார். அடங்குமென்னும் உவமவினை பொருளினும், மீளாதென்னும் பொருள்வினை உவமையினுஞ் சென்றியைந்தன.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம் சிறைவிட்டு அலைகடலின் சென்று அடங்கும் ஆறுபோல் சிறைசெய் புலன் உணர்வில்தீர்ந்து உலைவு இல் அரன் பாதத்தை உற்று மீளாது.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோவெனின், எதுவிற்கூறியவாறு கருவிகள் நீங்கினவிடத்து உயிர் அக்கருவிகளின் வேறாய்த்தனித்து நில்லாது சிவத்தைப்பொருந்துமாயின், கருவிகள் நீங்கினவிடத்துத துரியாதீதமாகிய கேவலத்தைப்பொருந்திய உயிர்க்குப் பின்னும் கருவிகளோடு கூடுதலாகிய சாக்கிரம் வருதல்போல, கருவிகள் நீங்கிச் சிவத்தைப் பொருந்திய அவ்வுயிர்க்குப் பின்னுங் கருவிகளோடு கூடுதலாகிய மீளுதல் உண்டு என்பர் பேதவாதசைவர். அவரைநோக்கி உவமை முகத்தால் மீளுதலில்லையெனக் கூறி மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) ஒருவன், ஆற்றினிடத்து அணையை உயாததிக் கட்டி நீரைத்தடைசெய்ய அவ்வணையிற் றடைப்பட்டுத் தேங்கிநின்ற அவ்வாற்று

நீர்போல, கருவிகளினாலுண்டாகிய பாசஞானம், உயிராகிய தனது வியாபகத்தைத் தடைசெய்ய அப்பாச ஞானத்தின்கண் ஏகதேசமாய் அடங்கித் தடைப்பட்டு நின்ற அவ்வுயிர், ஆற்றுநீரைத் தடைசெய்த அந்த அணை முறிந்து தடைதீர்ந்தவிடத்து அவ்வாற்றுநீர் யாதொரு தடையின்றிக் கடலினிடத்து வேகமாய்ச் சென்று அக்கடல்நீரேயாய்க் கடலுள் அடங்கி மீண்டு வாராதவாறுபோல, கருவிகளாலுண்டாகிய பாசஞானத் தடையினின்றும் உயிர்நீங்கியவிடத்து அவ்வுயிர் கேடில்லாத சிவபிரானது திருவடியைப் பொருந்தி அத்திருவடி நிறைவேயாய் அச்சிவபிரான்கண் அடங்கிப்பின்பு கருவிகளிடத்து மீளுதல் செய்யாது எ-று.

(க-ரை.) அணைமுறிந்து கடல்நீரோடு சேர்ந்த ஆற்றுநீர் அக்கடல் நீரேயாய் அக்கடலின்கண் அடங்கித்திரும்ப ஆற்றுக்குவாராதவாறுபோல, கருவிகளாகிய தடையில் நின்று நீங்கிச் சிவபெருமான் திருவடி அடைந்த உயிர் அத்திருவடி நிறைவேயாய் அச்சிவபெருமான்கண் அடங்கித் திரும்பக் கருவிகளைவந்து பொருந்தாது என்பதாம்.

சிறை செய்யநின்ற செழும்புனலின் உள்ளம் என்றதில், புனலுக்கும் உள்ளத்துக்கும்-பொதுத் தர்மமாகிய தடைப்படுதல் தொக்குநிற்றலால் தொகையுவமம் என்னும் அலங்காரம். அதனைவிரித்து தடைப்பட்டுநின்ற ஆற்றுநீர்போலத் தடைப்பட்டுநின்ற உயிர் என உரைசெய்யப்பட்டது.

செழும்புனலின் என்றதிலுள்ள இன், போல என்னும் பொருளில் நிற்றலால் உவமஉருபு.

தடையினால் தேக்கத்தின் மிகுதியை உணர்த்தவேண்டிச் செழும்புனலென்றார்.

அலைகடலிற்சென்று அடங்குமாறுபோல அரன்பாதத்தை யுற்று மீளாது என்றலே போதியதாகவும், உலைவில் என்னும் விசேடணத்தை அரன்பாதத்துக்கேற்றி உலைவில் அரன்பாதமென விசேடித்த கருத்தென்னையெனின், கருவிகளில் நின்றும் நீங்கிக் கேவலத்தைப் பொருந்திய உயிர் மீண்டுங் கருவிகளைக்கூடுதல் தினமும் அநுபவமாகக் கண்டுவரவும், அதற்கு மாறாக ஆற்றுநீர் உவமையால் கருவிகளிடத்து மீளாது என்றல் பொருந்தாது; பொருளின்கண் வந்த சங்கையை உவமைகூறித் தீர்க்கலாம்; உவமையின்கண் வந்த சங்கையைப் பிறிதொரு உவமைகூறி மறுத்தல் தருக்க வழுவாம். ஆதலால், உவமையின்கண் வந்த மீளுமென்னும் சங்கையை நீக்கி மீளாதென்பதற்கு ஏதுக் காட்டவேண்டிப் பொருளினிடத் துள்ள உலைவில் என்னும் விசேடணத்தைக் கூறி விசேடித்தார். விசேடிக்கவே, உலைவில்லாமையால் என்று ஏதுவை விரித்துக்கொண்டு, மலசத்திக்குக் கேடு உண்டு: ஆதலால் அம்மலசத்தியோடுகூடிக் கேவலத்தைப் பொருந்திய உயிர் மலசத்தியின் கேட்டினால் திரும்பக் கருவிகளின் மீளும்; சிவசத்

திக்குக் கேடின்மையால் அச்சிவசத்தியைக் கூடிய உயிர் அவ்வாறு கருவிகளின் மீளுவதற்கு ஓர் சம்பந்தமில்லையென்பது பெறப்படும். இவ்வாறு அறிவிக்கவேண்டி உலேவில் அரன்பாதமென விசேடித்தாரென்க.

திருவருளையே திருவடியென உபசரித்துக் கூறப்படுமாதலின் திருவடி நிறைவேயாய் என உரைசெய்யப்பட்டது. இக்கருத்தேபற்றி "அடியெனுமதுவும் அருளெனுமதுவும் அறிந்திடில் நிர்க்குண நிறைவு" என்றார் தாயுமானசுவாமிகளும்.

நீராகிய உவமைக்குக்கூறிய அடங்கும் என்னும் வினை உயிராகிய பொருளில் அரன்பாதத்தை உற்று என்பதனோடு பொருந்தித் திருவடியைக்கூடி அதன்கண் அடங்கி எனவும், உயிராகிய பொருளுக்குக் கூறிய மீளாது என்னும் வினை உவமையாகிய ஆற்றுநீரில் அடங்கும் என்பதனோடு கூடி அடங்கி மறித்து வாராது எனவும் பொருள்தந்து நின்றன.

திருவடியை அடைந்த உயிர் கருவிகளிடத்து மீளுதல்
குற்றமெனக்கூறி மீளாதென்பதை வலியுறுத்தும்
உதாரணம்.

எவ்வுருவுந் தானேன்னி னெய்துவா ரில்லைதா
ளிவ்வுருவின் வேறே லிறையல்ல—னெவ்வுருவுங்
கண்போ லவயவங்கள் காணுவக் கண்ணில்லார்
கண்பேறே காணக் கழல்.

சிற்றுரை.

எ—து உ--ம் எ—னின். மீளாதென்று விடுத்தல் வேண்டாம், எல்லாஞ் சிவமாகக்கண்டார்க்கு மீண்டாலென் மீளாக்காலென்னென்னும் சிவாத்துவித சைவரை நோக்கி அது விடையாதற்கேலாமை கூறி மறித்தும் மீளாமையை வலியுறுத்துதனுதலிற்று.

(இ—ள்.) எவ்வுருவுந் தான் என்னின் தாள் எய்துவார் இல்லை— உயிருணர்வேயன்றிப் புலனுணர்வுஞ் சிவமேயாமாயின் (விசேடமின்மையாற் புலன்வழியொழுகுஞ் சகல நிலையைக் கைவிட்டுத் திருவடியைத் தலைக்கூட வேண்டாமையின் ஒருவரும்) அதனையெய்துவாரில்லையாய் (முடிந்து "பாசத்தைப் பசுக்கள்விட்டுப் பதியினையடைய முத்தி" என்னும் வேதாகமங்கள் போலியாய்) முடியும்,—இவ்வுருவின் வேறேல் இறையல்லன்—(அதுபற்றி) முதல்வன் புலனுணர்வோடியையின்றி அதனின் வேறாய் நிற்பன் என்னின் (அப்புலனுணர்விற்கு அவனலாதற்பாலதொன்றின்மையின்) அவன்

ஆண்டைக்கிறைவனல்லன் எனப்பட்டு முதன்மைக்கிழுக்காய் முடியும் (மற்றென்னையோ அதனியல்பென்னின்),—எவ்வுருவும்—உயிருணர்வுபோலப் புலனுணர்வுங் கலப்பினாற் சிவமேயாமாயினும் இரண்டுந் தம்முள் ஒப்பனவல்ல,—அவயவங்கள் கண்போல் காணு—(உயிர் ஐம்பொறிகளினும் ஒப்பநிற்பினும்) அவற்றுள் மெய்வாய் மூக்குச் செவி நான்கும் கண்ணிந்திரியம் ஒளியான் அவ்வான்மபோதத்தோடு விரவிச் சேய்மைக் கண்ணதாகிய விடயத்தையும் வியாபித்தறியுமாறுபோல வியாபித்தறியமாட்டாவாய்த் தம்மாட்டு வந்த விடயங்களை நின்றாங்கு நின்றியைந் தறிதற்றன்மையவேயாம்,—அக்கழல் அக்கண் இல்லார் கண்பேறே காண்—அக்கண்ணினது வெற்றிப்பாட்டைக் கண்ணொளி இழந்தாரது கண்பேற்றின்கட் கண்டறிவாயாக எ—று.

கண்ணும் அவயவங்களும் ஆகுபெயர். கண்பேறே யென வழாவது தொகுத்து ஏகாரம் விரித்தார். கழலணிவார்க்குளதாகிய வெற்றிப்பாட்டைக் கழலென்றுபசரித்தார். கழல் காலணி மணி வடம். ஈண்டு வெற்றியாவது ஏனை நான்கிந்திரியங்களையும் நோக்கி மேம்படுதல். 'கண்போ லவயவங்கள் காணு வக்கண்ணில்லார் கண்பேறே காணக் கழ'லென்பது முதல்வன் இரண்டினும் ஒப்ப விரவி நிற்பினும் உயிருணர்வுபோலப் புலனுணர்வு வியாபக விளக்கமாதலின்றி ஏகதேச விளக்கமாம்; உயிருணர்விற்குளதாகிய அம்மேம்பாடு அவ்வியாபக உணர்வை இழந்த பசுத்துவமுடையார் மாட்டறியப் படாதாயினும் அவரது பசுத்துவம் நீங்கிய சிவப்பேற்றின் கண் அறியப்படுமென்பது தோன்ற நின்றமையின் இஃதொட்டென்னு மலங்காரம். சிவமாய வழியும் புலனுணர்வு ஏகதேச விளக்கமாவதன்றி உயிருணர்வுபோல வியாபக விளக்கமாதலில்லை யெனவே, அதன்கண் மீளுதலிழுக் கென்பது பெறப்பட்டது. இதற்குப் பிறவெல்லாம் இயைபின்றி யுரைத்தார்.

விளக்கம்.

(கொண்டு கூட்டு) எல்வுருவுந் தான் என்னின் தாள் எய்துவார் இல்லை இவ்வுருவின் வேறேல் இறையல்லன் எவ்வுருவும் அவயவங்கள் கண்போல் காணு அக்கழல் அக்கண் இல்லார் கண்பேறே காண்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ எனின், சிவபிரான் திருவடியை அடைந்து எல்லாஞ் சிவமாய்க்கண்டவர்க்குக் கருவிகளைப் பொருந்தினதால் என்னகுற்றம் உண்டாகும்; பொருந்தாமையால் என்ன குணம் உண்

டாகும்; இரண்டும் இல்லை; ஆதலால் மேலைவெண்பாவின்படி கருவிகளில் திரும்பாது என்று விடைகூற வேண்டாம் என்பர் சிவாத்துவித சைவர்; அவரைநோக்கிக் கருவிகளைக் கூடுதல் கூடாமையாகிய இரண்டினாலும் குற்றங்குணம் இரண்டுமில்லை யென்றது பொருந்தாதெனக் கூறிக் கருவிகளிற் றிரும்பாதென்று மேலைவெண்பாவிற் கூறியதனை மீண்டும் வலியுறுத்திய வாறும்.

(பொ-ரை.) திருவடி அடைதலால் உயிரின் அறிவு சிவமாதலேயன்றி விடயங்களை அறியும் கருவிகளின் அறிவும் சிவமேயாமாயின் கருவிகளாலாய பாசஞானத்தைவிடத் திருவடி அடையும் பதிஞானத்திற்கு விசேடமில்லை. ஆதலால் கருவிகளின் வழிச் செல்லும் சகலநிலையைக் கைவிட்டுத் திருவடியை அடையவேண்டாம். ஆகவே ஒருவரும் திருவடியை அடைவாரில்லையாய் முடிந்து சிவஞான சித்தியார் பரபக்கம் பாஞ்சராத்திரி மத மறுதலைச்செய்யுள் உகு-ல் "பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினையடைய முத்தி" என்று கூறியதும் இக்கருத்துப்பட வேதாகமங்களிற் கூறியனவும் போலியாய் முடியும். ஆதலால் முதல்வன் கருவிகளின் அறிவோடு பொருந்தாமல் அக்கருவிகளின் வேறாய் நிற்பன் எனின், அக்கருவிகளின் அறிவிற்கு முதல்வனால் ஆகவேண்டிய உபகாரம் ஒன்றுமில்லை யெனப்பட்டு அக்கருவிகளுக்கு இறைவன் அல்லன் என்றாகி முதல்வனுடைய முதன்மைக் கிழுக்காய் முடியும்; இவ்வாறாயின் கருவிகளின் இயல்பு தானென்னை யோ எனின், முதல்வனுடைய கலப்பினால் உயிருணர்வு சிவமாதல் போலக் கருவிகளின் உணர்வும் சிவமேயாயினும் இரண்டுந் தம்முள் ஒப்பனவல்ல; வேறு எவ்வாறெனின், மெய்வாய் கண்மூக்குச் செவியென்னும் ஐம்பொறியினும் உயிர் ஒப்பக்கலந்து நிற்பினும் அவற்றுள் கண் நீங்கிய ஏனைய நான்கும் தம்மிடத்து வந்தவிடயத்தை யறிதலே யன்றித் தூரத்திலுள்ள தத்தம் விடயத்தை உயிரினறிவோடு கலந்து சென்று அறியா. கண்மட்டும் ஒளியுடைய பொருளாதலால் உயிரின் அறிவோடு கலந்து சென்று தூரத்திலுள்ளவிடயத்தை வியாபித்து அறியும். இவ்வாறே முதல்வன் கலப்புப்பெற்ற கருவிகளும் உயிர்போல வியாபித் தறியமாட்டாதனவாய் தத்தம் விடயங்களை ஏகதேசமாய் அறியுந் தன்மையுடையனவேயாம். ஏனைய இந்திரியங்களினின்றும் கண்ணிந்திரியத்திற்கு விடயங்களைச் சென்று அறியும் மேம்பாடு உண்டென்பதை மாசுமிகுதியால் கண்ணொளி இழந்தவரிடத்துக்காண முடியாது. அவ்வொளி இழந்தவர் மாசுநீங்கிக் கண் பெற்றவிடத்துத் தூரத்திலுள்ள பொருளை அறிவதனா லறிந்துகொள்க எ-று.

(க-ரை.) இந்திரியங்களோந்துடனும் உயிர் வியாபித்திருப்பினும் கண் மட்டுஞ் சென்று அறிதலும் ஏனைய நான்கும் இருந்தவிடத்து வந்ததை அறிதலுமாகிய வேற்றுமை காணப்படுமாறு போல, பசுபாசங்களிடத்தில் சிவம் வியாபித்து இருப்பினும் பசுவுக்கு வியாபித் தறிதலும் பாசத்திற்கு ஏகதேச

மாயறிதலுமாகிய வேற்றுமை காணப்படும். ஆதலால் திருவடியை யடைந்து வியாபக அறிவாய் விளங்கும் உயிர் பின்னர்க் கருவிகளோடு கூடி ஏகதேசமாய் அறிதல் குற்றமாகும் என்பதாம்.

கண்போல் அவயவங்கள் என்றவிடத்துக் கண்ணும் அவயவங்களும் உறுப்புகளைக் குறியாமல் உறுப்புக்களுக்கு உள்ளீடாயுள்ள இந்திரியங்களைக் குறித்து நிற்றலால் ஆகுபெயர்.

கண்பேறே என்றவிடத்து ஏழாம் வேற்றுமைக் கண் உருபு தொகையாக வைத்து ஏகாரத்தை விரித்தார். ஆதலால் கண் பேற்றின் கண் என உரை செய்யப்பட்டது.

காணக்கழல் என்பது காண் அக்கழல் எனப்பிரியும். கழல் என்பது காலிலணிந் திருக்கும் வெற்றியைக் குறித்த மணிவடம். ஆதலால் கழல் என்பது மணிவடத்தைக் காலிலணிந் திருப்பவர்க்கு உளதாகிய வெற்றிப் பாட்டைக் குறித்து அக்கழல் என்ற சுட்டால் மேற்கூறிய கண்ணின் வெற்றிப் பாட்டைக் குறித்து நின்றது.

கண்ணுக்கு வெற்றியாவது ஏனைய நான்கு இந்திரியங்களினு மேம்படுதல்; அதாவது சென்று அறிதல்.

'கண்போல் அவயவங்கள் காணு அக்கண்ணில்லார் கண்பேறே காண் அக்கழல்' என்றதனுல் அவ்வுவமைபோல முதல்வன் பசுபாசம் இரண்டினும் ஒப்பக்கலந்து நிற்பினும் உயிருணர்வு வியாபகமாதல்போலப் பாசஉணர்வு வியாபக மாதலின்றி ஏகதேச விளக்கமாம்; உயிருணர்வு வியாபக மாதலாகிய மேம்பாட்டைப் பாசத்தால் வியாபக உணர்வை இழந்த உயிரினிடத்து அறியமுடியாதாயினும் பாசம்நீங்கிச் சிவப்பேறடைந்த உயிரினிடத்து அம்மேம்பாடு அறியப்படும் என்பதாம். இவ்வாறு கருதப்பட்ட பொருளைக் கூறாது அப்பொருளை வெளிப்படுத்தற்கு உரிய உவமானத்தைக் கூறி அவ்வுவமானத்தை யொட்டி உவமேயத்தை அறியும்படி வைத்தல் ஒட்டென்னும் அலங்காரம். இவ்வலங்காரத்தைப் பிறிது மொழிதலென்னும் அலங்காரமாகவும் கூறுவர்.

இவ்வுதாரணத்தால் உயிருங்கருவிகளும் சிவனுல் வியாபிக்கப் பட்டுச் சிவமேயாயினும், கருவிகளினறிவு ஏகதேச விளக்கமாவதன்றி உயிரினறிவு போல வியாபக விளக்கமாதலில்லை; ஆதலால் கருவிகளின் மீளுதல் குற்றமென்பது பெறப்பட்டது. "எங்குந் தான் என்னின் எய்தவேண்டா" என்றுகூறிய சிவஞான சித்தியார் அ-ம் சூ-ம் அ-வது செய்யுளுக்கும் இவ்வாறே உரைத்துக் கொள்க. இவ்வாறன்றிச் சிவன் வியாபியாயிருக்கவும் உயிர் அவனைக் கூடினசென்றது கண்ணினிடத்துள்ள ஒளியானது மாசுபடர்தலால் தடைப் பட்டு மாசுநீங்குதலால் விளங்கியது போலு மெனவும், சிவன் பாச பசுஞானங்களால் அறியப்படாது பதிஞானத்தாலறியப்படுதல் உயிர் எல்லா

இந்திரியங்களினும் வியாபித்திருப்பினும் காணுந்தன்மை ஏனைய இந்திரியங்களுக்கின்றிக் கண்ணுக்கே இருப்பதுபோலு மெனவும் இவ்வெண்பாவிற்கு உரை கூறுவர். அவ்வுரை மேலே வெண்பாவோடு சம்பந்த மில்லாமையறிக.

திருவடியை அடைந்த உயிர் பழையவாசனையால் ஏருவிகளிடத்து
மீளுமாயின் அம்மீட்சியை நீக்குதற் குபாயங் கூறி
மீளாதென்பதை வலியுறுத்தும்

உதாரணம்.

ஐம்பொறியி னல்லையெனு மந்த தரசிவனை
யைம்பொறியை விட்டங் கணைசகல—னைம்பொறியி
னீங்கானீர்ப் பாசிபோ னீங்குமல கன்மம்வரி
னீங்கானை நீங்கு நினைந்து.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், சிறைவிட்டவழி அலைகடலிற் சென்றடங்குதலேயன்றி "ஆற்றுலலைகடற்கேபாய்ந்தநீர் அவ்வாற்றுண் மறித்" தலுமுண்மையின் அதுபோல அரன்பாதத்தை யுற்ற உயிருக்கு ஓரோவழி மீட்சியுமுண் டென்பது பெறப்படுதலான் அவ்வழி மீளாமை செல்லாதென்பாரை நோக்கி அம்மீட்சிக்குக்காரண மிது வென்பதூஉம், அதனை நீக்குதற் குபாயமுங் கூறி வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) ஐம்பொறியின் அல்லையெனும் அந்தரா—ஐம்பொறிகள்போல ஏகதேச விளக்கமுடையாயல்லையென் றறிவுறுக்கப்படுஞ் சித்தாந்த மகாவாக்கியத்தைப் பெற்றுடைய மாணவகனே!—அங்கு ஐம்பொறியை விட்டுச் சிவனை அணை சகலன் ஐம்பொறியி னீங்கான்—(சிறைவிட் டலைகடலிற் சென்றடங்கு மாறுபோலென) மேற்கூறியவாறே ஐம்பொறிகளானுப புலனுணர்விற் றீர்ந்து சிவன்றிருவடியை யுற்றசகலன் அவ்வைம்பொறிகளான் மீளவதனை நீங்குவானல்லன்,—நீர்ப்பாசிபோல் நீங்குமல கன்மம் வரின் நீங்கானை நினைந்து நீங்கும்—(கல்லெறியும் வழி நீங்கிய) நீர்ப்பாசி (அது விடும்வழிப் பரக்குமாறு) போல அவ்வணைதலின்க ணீங்கிய மலகன்ம மாயைகள் (வாதனைவயத்தானிகழு மபர்ச்சிபற்றி) வந்து கூடுமாயின் (அதுபற்றிப் பொறிவழி மீளாமல் அவ்வழியும் தன்னைவிட்டு) நீங்காத முதல்வனை (முன்னர்க் கூறப்படு முபாயங்களினின்று) சிந்தித்து (அவற்றை) நீக்கிக்கொள்ளும் எ-று.

வரின் என்றதனால் வருதல் ஒருதலையன்று; வாசனையுள் வழியேயென்பது பெற்றாம். நீக்கி என்பது பாடமாயின், நீங்கினவாகிய மலகன்மமென்னப் பெயராக வைத்துரைக்க. சித்தாந்தத்தை அந்தமென்றது தலைக்குறை. தாம் அதன் கண்ணதாய்ச் சிறந்த ஒரு வார்த்தை. அங்கு மேற்கூறியபடி. ஐம்பொறியை விட்டணைதற்குரியான் இவனென்பதுணர்ந்துவார் சகலனென்றார். நீங்குமென்னும் மகரஞ் சந்தி நோக்கிக் கெட்டது. நீங்கெனவே பாடங்கொண்டு அணை என வேறுபிரித்து முன்னிலை யேவலாக்கி அதற்கேற்ப நீங்காய் எனப் பாடந்திரித் துரைப்பாருமுளர்.

மேற்கூறிய மீளாமையை வலியுறுத்துவார் 'ஐம்பொறியினல்லையெனு மந்தர சிவனை ஐம்பொறியை விட்டணைக சகல—னைம் பொறியி னீங்கா'னென்றும், ஓரோவழி உளதாமாயின், அதற்குக் காரணம் இஃதென்பார் 'நீர்ப்பாசிபோல் நீங்கு மலகன்மம் வரின்' என்றும். அஃது நீக்குதற்கு பாயங் கூறுவார் 'நீங்கானை நினைந்து நீங்கு' மென்றுங்கூறினார். மலகன்மமெனவே, இனம் பற்றி மாயையுங் கொள்ளப்பட்டது. "மங்கலமென்ப மனைமாட்சி மற்றத—னன்கல னன்மக்கட்பேறு" என்றாற்போல நீங்கானைநீங்கு நினைந்தென்றதனால் வருகின்ற சூத்திரத்திற்குத் தோற்றுவாய் செய்ததூஉமாயிற்று.

இம் மூன்றுதாரணங்களுநம் முறையே திருவடி ஞானத்தைப் பெற்றஉயிர் புலனுணர்வின் மீடலில்லை யெனவும், மீடலிழுக்காமெனவும், ஓரோவழிப் பயிற்சிவயத்தான் மீளவருமாயின் மீளாதவாறு செய்துகொள்ளற்பாற்று எனவுங் கூறித் தாய் தரையேயாமென்னும் ஏகாரப்பொருளை வலியுறுத்தி ஒருபொருண் மேல்வந்தவாறுகாண்க.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) ஐம்பொறியின் அல்லையெனும் அந்தரா அங்கு ஐம்பொறியை விட்டுச் சிவனை அணை சகலன் ஐம்பொறியின் நீங்கான் நீர்ப்பாசிபோல் நீங்குமலகன்மம்வரின் நீங்கானை நினைந்து நீங்கும்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், இவ்வதிகரணத்து முதல்வெண்பாவிற் கூறியபடி தடை நீங்கியவிடத்து ஆற்று நீரானது அலையை உடைய கடலிற் சென்று அக்கடலில் அடங்குமாயினும், திருக்களிற்றுப்படியார் கக-வது செய்யுளிற் கூறியபடி ஆற்றின் வழியாக அலையை உடைய கடலிற்பாய்ந்த நீரானது அந்த ஆற்றின்வழியாக மீளு

தல் கூடும் ஆதலின் கடலிற் சென்ற நீர அக்கடலிலடங்குதலேயன்றி மீளுதலுமுண்டென்பது பெறப்படுதலால் அவ்வாறே அரன்திருவடியை அடைந்த உயிருக்கு அத்திருவடியிலடங்குதலேயன்றி ஒரு சமயத்தில் இந்திரியத்தின் மீளுதலும் உண்டென்பது பெறப்படும். ஆதலால் எப்பொழுதும் மீளாதென்று கூறுதல் பொருந்தாது என்பர் சிவாத்துவித சைவர். அவரைநோக்கி அவ்வாறு மீளுதற்குக் காரணம் பழையவாசனையென்றும், அவ்வாசனையை நீக்குதற்கு உபாயம் திருவடியைச் சிந்தித்தலே என்றுங்கூறி மீளாமையை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) நீ வியாபக அறிவை உடைய பொருளன்றி ஐம்பொறிகள்போல ஏகதேச அறிவையுடைய பொருளாகமாட்டாய் என்று உபதேசிக்கப்படுவதாகிய சித்தாந்த மகாவாக்கியத்தைப் பெற்றிருக்கும் மாணாக்கனே! சிறைவிட்டு அலைகடலிற் சென்றடங்குமாறுபோல் என மேல் இவ்வதிகரணத்து முதல்வெண்பாவிற் கூறியபடியே ஐம்பொறிகளாலுண்டாகிய உலகப்பொருளை அறியும் அறிவைவிட்டுச் சிவபெருமான் திருவடியையடைந்த சகலவர்க்கத்திலுள்ளவன், மீண்டும் ஐம்பொறிகளையடைந்து சிவபெருமான் திருவடியை நீங்கமாட்டான். சிவஞானசித்தியார் அ-ம் சூ-ம் ௩௯-வது செய்யுளிற் கூறியபடி கல் எறியும்பொழுது நீரினிடத்துள்ளபாசி நீங்கிக் கல்லெறியாதபொழுது அப்பாசி பரக்குமாறுபோலத், திருவடியையடைதலால் நீங்கிய ஆணவங் கன்மம் மாயைகள் பழைய வாசனையால் திருவடியை மறந்தவிடத்து வந்து பொருந்துமாயின் அவ்வாசனை பற்றி அம்மலகன்ம மாயைகள் விருத்தியாதற்குரிய இந்திரியங்களைப் பொருந்தாமல் அவ்வாசனைவந்து தாக்கியவிடத்தும் தன்னைவிட்டு நீங்காத முதல்வனை முன்னர் ௯-ம் சூத்திரத்திற் கூறப்படும் பஞ்சாக்கர ஜெபமுதலிய உபாயத்தாற் சிந்தித்து நீக்கிக்கொள்ளுவன் எ-று.

(க—ரை.) கடல் நீரையடைந்த ஆற்றுநீர் மீண்டும் ஆற்றுக்குத் திரும்புங்கால் கடல் நீராகவே திரும்பி மீண்டும் அக்கடலிற் சென்று அடங்குமாறுபோலச் சிவபிரான் திருவடியை அடைந்த உயிர் பழய வாசனையால் மீண்டுங் கருவிகளைக் கூடவரின் திருவடியை மறவாத உபாயத்தால் அக்கருவிகளை விட்டு மீண்டும் திருவடியை யடைந்து அத்திருவடியில் அடங்கும் என்பதாம்.

வரின் என்றதனால் கடல் நீரையடைந்த ஆற்றுநீர் மீண்டும் சிறிதுதூரம் ஆற்றுக்குவந்து கடலிற்சென்றடங்குமாறுபோலச் சிவன் திருவடியை அடைந்த உயிர்கருவிகளிடத்துத் திரும்புதல் உறுதியன்று; வாசனை இருப்பின் திரும்பும்; வாசனை இல்லையாயின் திரும்பாது என்பது பெறப்படும்.

நீங்குமல கன்மம் என்றதை நீங்கியல கன்மமென்று பாடங்கொள்வதும் உண்டு. அவ்வாறு கொண்டால் நீங்கி என்பதை வினையெச்சமுஞ் வினை

யெச்சமாகவுங் கொள்ளாமல் தூங்கிவீங்கிஎன்பன பெயராய் வருவனபோல மலகன்மத்தின் பெயராகக்கொண்டு, நீங்கிமல கன்மமென்றவிடத்து நீங்கி என்பதும் மலகன்மம் என்பதும் பெயராய் நின்று ஒரு பொருளை யுணர்த்து தலால் இருபெயரொட்டுப் பண்புத் தொகையாக்கிச் சாரைப்பாம்பு என்ற இருபெய ரொட்டுப்பண்புத் தொகை, சாரையாகிய பாம்பு என்று விரியு மாறுபோல நீங்கினவாகிய மலகன்மமென விரித்துரைக்க.

அந்தரஎன்றதில் அந்தம் என்றது சித்தாந்தத்தைக் குறித்துச் சித்தம் என்ற முதல் குறைந்து நிற்றலால் தலைக்குறை. சித்தாந்தம் என்றது சித் தம்அந்தம் என்று பிரிக்கப்படும். படவே, முடிந்த முடிபு என்பது பொருள்.

தரம் என்றது அச்சித்தாந்தத்தின்கணுள்ள சிறந்த ஒருவார்த்தையாகிய மகாவாக்கியம். தரஎன்றது அம்மகா வாக்கியத்தைப் பெற்ற மாணாக்கனை முன்னிலைப் படுத்தி அழைத்ததாகும்.

ஐம்பொறியை விட்டங்கு என்றவிடத்து அங்கு என்பது மேல் இவ்வதிகரணத்து முதல் வெண்பாவிற் கூறியபடி என்ற பொருளில் நின்றது.

ஐம்பொறியை 'விட்டங்கணை சகலன் என்றது விஞ்ஞானகலர் பிரளயாகலர் ஆகிய இருவர்க்கும் மாயை கிடையாதாகையால் மாயாகாரிய மாகிய இந்திரியங்களுங் கிடையா; சகலருக்கே மாயையும் மாயாகாரியங்களு முளவாம்; ஆதலால் ஐம்பொறியை விட்டுத் திருவடியை அடைதற் குரியார் சகலரே என்பது உணர்த்தவேண்டியேயாம். ஆதலால் அணை உயிர் என்று பொதுப்படக் கூறாமல் அணைசகலன் என்று சிறப்பாக எடுத்துக் கூறினார்.

நீங்கும் நினைந்து என்பது சந்திநோக்கி மகர ஒற்றுக் கெட்டு நீங்கு நினைந்து எனநின்றது. இவ்வாறன்றி நீங்கு என்றே பாடமாகக் கொண்டு நீங்கு என்பதையும் மேற்கூறிய அணைஎன்பதையும் முன்னிலை ஏவலாக்கி, அணைசகலன் ஐம்பொறியி னீங்கான் என்பதை ஒருதொடராகக் கொள்ளாமல் அணை என்பதை வேறுபிரித்துச் சகலன் ஐம்பொறியினீங்கான் என்பதைச் சகலன் ஐம்பொறியி னீங்காய் எனப்பாடத்தை வேறுபடுத்தி, ஐம்பொறியைவிட்டுத் திருவடியைக் கூடு; கூடிய சகலனாகிய நீ மீண்டு ஐம்பொறிகளால் திருவடியை நீங்காய்; நீங்கும்படியாக ஐம்பொறிகள் வரின் நீங்கானை நினைந்து ஐம்பொறியில் நீங்கு என்று உரைப்பாரு முளர்.

மேல் முதல்வெண்பாவில் திருவடியை அடைந்த உயிர் கருவிகளிடத் திமீளா தென்று கூறியதை வலியுறுத்தவேண்டி இவ்வெண்பாவில் ஐம்பொறியின் அல்லை யெனும் அந்தரா சிவனை ஐம்பொறியை விட்டு அங்கு அணைசகலன் ஐம்பொறியின் நீங்கான் என்று கூறி, கடலிற் சென்ற நீர் மீளுதல்போல ஒரு சமயம் கருவிகளில் மீளுமாயின் அம்மீட்சிக்குக் கா[illegible]

பழையவாசனை என்பது உணர்த்தவேண்டி நீர்ப்பாசிபோல் நீங்குமலகன்மம் வரின் என்றும், அக்காரணத்தை நீக்குதற்கு உபாயந் திருவடியைச் சிந்தித்தல் என்பது கூறவேண்டி நீங்காவே நினைந்து நீங்குமென்றும் கூறினர். மலகன்மமென்று கூறியதனால் பாசத்தின் இனம்பற்றி மாயையுங்கொள்ளப் பட்டது.

திருக்குறள் வாழ்க்கைத் துணைநலம், ௬0-வது பாட்டில் "நன்கலன் நன்மக்கட்பேறு" என்று மனைவியாகிய துணையின் மாண்பிற்கு அணிகலன் கூறிப் புதல்வரைப் பெறுதலென்னும் அடுத்த அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்ததுபோல, இச்சூத்திரத்து இறுதியாகிய இவ்வெண்பாவிலும் நீங்காவே நினைந்து நீங்கும் என்றதனால் நீங்காதவனாகிய முதல்வனை நினைந்து பாசத்தில் நின்றும் நீங்கும் முறையைத் தொகுத்துக் கூறியதூஉமன்றி அதனை வகுத்துக் கூறும் ௯-ம் சூத்திரத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறுமாயிற்று.

இவ்வதிகரணத்திற் கூறிய மூன்று உதாரணங்களும் ஒருபொருள் மேல் வந்தனவாம். எவ்வாறெனின், முதல் உதாரணத்தால் திருவடி ஞானத்தைப் பெற்ற உயிர் கருவிகளாலாகிய பாசஞானத்தில் மீளுதலில்லையெனவும், இரண்டாவது உதாரணத்தால் பாசஞானத்தின் மீளுதல் குற்றமாமெனவும், மூன்றாவது உதாரணத்தால் ஏகதேசத்தில் பழைய வாசனையால் பாசஞானத்தின் மீளவருமாயின் மீளாதவாறு செய்துகொள்ளவேண்டுமெனவுங் கூறித் தாய் தரையேயாம் என்ற ஏதுவில் தரையே என்பதிலுள்ள தேற்றேகாரத்தால் ஊசல் கயிறு அற்றால் தன்மாட்டிருந்தார்க்குத் தாரகமாதலின்றி தரையே தாரகமாயினாற்போல பாசஞானத்தினின்றும் நீங்கிய உயிருக்குத் தாரகம் பதியின் திருவடியே என்னும்பொருளை வலியுறுத்தி இந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் சீபாதத்தை யணையும் என்ற மேற்கோளாகிய ஒருபொருள் மேல் வந்தவாறு காண்க.

இச்சூத்திரத்தாலும் அதிகரணங்களாலும் கூறிமுடித்த தொகைப் பொருள்:—எழாஞ் சூத்திரத்தில் சத்து அசத்தாகிய இரண்டனையும் சார்ந்து அவ்விரண்டனையும் அறியும் அறிவை உடையது ஆன்மாவென்று கூறிமுடித்தமையின் அவ்விரண்டனையும் அறியும் முறை எவ்வாறு என்ற வினாவிற்கு, ஐம்புலனாகிய வேடரைச்சார்ந்து தன்னையும் தலைவனையும் அறியாது மயங்குதல் அசத்தைச்சார்ந்து அறிதலென்பதும், தலைவனே குருவாய் வந்து உபதேசிக்க அவ்வுபதேசத்தால் ஐம்புலனைவிட்டு அம்முதல்வன் திருவடியை அடைதல் சத்தைச்சார்ந்து அறிதலென்பதும் சூத்திரத்தாற் கூறப்பட்டன; படவே, அவ்வுபதேச அறிவு எதனாலுண்டாகுமென்பாருக்கு முதலதிகரணத்தால் சரியை கிரியை யோகங்களாகிய தவங்களே அவ்வுபதேச அறிவை உண்டுபண்ணுமென்பதும், வேள்வி முதலாயின சுவர்க்காதி பதங்களைத்தந்து கெடுமென்பதும் கூறப்பட்டன. படவே அவ்வுபதேசத்

தைச் செய்யும் குரு நம்மிலொருவரேயன்றி முதல்வன் அல்லன் எனச் சாங்கியர் நையாயிகர் முதலியோர் கூற, இரண்டாம் அதிகரணத்தால் அவரை மறுத்து முதல்வனே குருவாய் வந்துணர்த்துவன் என்பதும், அவ்வாறு உணர்த்துதலும் எல்லா உயிர்களுக்கும் ஒருதன்மைத்தன்றி விஞ்ஞானகலருக்கு அறிவுக்குளறிவாய் நின்றும் பிரளயாகலருக்கு உருவத்திருமேனி கொண்டும் சகலருக்கு அச்சகலர்வடிவுபோன்ற குருவடிவங்கொண்டும் உணர்த்துவன் என்பதும், அவ்வாறு உணர்த்துதற்கு மலசத்தியின் மறைப்பு வேறுபாட்டால் ஒருமலமும் இருமலமும் மும்மலமும் உடைமையே காரணமென்பதும், சகலனுக்கு முதல்வனே குருவாய் வருதல் உபசாரமன்று உண்மையே யென்பதும் கூறப்பட்டன. படவே, உலகப்பொருளை விளக்கும் ஐம்பொறிகளே முதல்வனையறியும் உணர்வையும் விளக்கும், அவ்வுணர்வை விளக்குதற்குக் குருவேண்டாம் எனச் சிவசங்கிராந்தவாதசைவர் கூற, மூன்றும் அதிகரணத்தால் அவரைமறுத்து ஐம்பொறிகள் மயக்கத்தைச் செய்யுமேயன்றி முதல்வனை யறியுமுணர்வை விளக்காவென்பதும், அவ்வைம்பொறிகள் நீங்கினவிடத்துக் கேவல அவத்தை கூடுமாதலால் அப்பொறிகள் உள்ளவிடத்தே அப்பொறியுணர்வைப் பொய்யாகக் காணவேண்டுமென்பதுங் கூறப்பட்டன. படவே, பொறியுணர்வைப் பொய்யாகக் காண்டலேபோதும் அதன்மேல் செய்யவேண்டிய தொன்றுமில்லையெனப் பேதவாதசைவர் முதலியோர் கூற, நான்காம் அதிகரணத்தால் அவரை மறுத்துப் பொறியுணர்வைப் பொய்யென்று கண்டவிடத்து முதல்வன் திருவடியை அடையுமென்பதும், மீண்டும் அப்பொறியைப் பொருந்தாது என்பதும், பொருந்துதல் குற்றமாமென்பதும், பழையவாசனையால் பொறிகள் பொருந்தவருமாயின் அம்முதல்வன் திருவடியை நினைந்து அவற்றைவிட்டு நீங்கவேண்டுமென்பதுங் கூறப்பட்டன.

நான்காம் அதிகரணம் முற்றிற்று.

எட்டாஞ்சூத்திரம் முற்றிற்று.

ஒன்பதாஞ்சூத்திரம்.

எட்டாஞ் சூத்திரத்தால் சாதனஅறிவு குருவால் வருமெனக் கூறி
அச்சாதனத்தை யனுட்டிக்குமுறை
இவ்வொன்பதாஞ் சூத்திரத்தாற் கூறுகின்றார்

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.

கருத்துரை.

எ-து சூ-ம் எ-னின் ஆன்மசுத்தி பண்ணுமாறுணர்த்துதனுதலிற்று

சிற்றுரை.

எ—து க—ரை எ—னின், சூத்திரக்கருத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தம்முதல் குருவுமாய் உணர்த்தக்கேட்டு அதனைச் சிந்தனைசெய் துணருமாறுணர்த்து முகத்தான் ஐம்புலவேடரின் வளர்ந்த வாலாமை நீக்கி உயிர் தன்னைத் தூய்மைப்படுத்துமாறுணர்த்துதல் இவ்வொன்பதாஞ் சூத்திரத்தின் கருத்து எ-று.

சூத்திர இயைபும் இதனானே இனிது விளங்கும்.

சிவப்பிரகாசத்துத் தான்பணியை நீத்தலென் றோதப்படும் ஆன்மசுத்தியாவது இறைபணி நிற்கவென வருகின்ற சூத்திரத்திற் பெறற்பாலதாகலானும்; அழுக்கு நீக்கமே அறுவைக்குச் சுத்தியாமாறுபோலப் பாச க்ஷயமே உயிர்க்குச் சுத்தியாவதன்றி வேறன்மையானும், பாச க்ஷயம் பண்ணுமுன்னர்ச் சுத்தியாதல் கூடாமையானும், வருகின்ற சூத்திரத்தின் கருத்தாய் நின்ற ஆன்ம சுத்திபண்ணுமாற்றைப் பதியைநாடி எனவுந் தண்ணிழலாம்பதி யெனவுஞ் சிவதரிசனம் பண்ணுமாறே உணர்த்துதற் கெழுந்த இச்சூத்திரத்தின் கருத்தாக வைத்துரைத்த தென்னையோவென மலையற்க; சிவதரிசனத்தினிகழ்வது ஆன்மசுத்தியென்னும் உடனிகழ்ச்சி யுணர்த்துதற்கும் தம்முள் வேறுபாடு சிறுபான்மை யுடையனவாய இவ்விருசூத்திரமும் ஒருபொருள் மேலனவென் பதுணர்த்துதற்கும் இவ்வாறுரைத்தாராதலின். அஃதங்ஙனமாக 'ஆன்மாத்தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் சீபாதத்தையணையு' மென்றலின், அக்காட்சியே அதற்கமையும் சுத்தி யெற்றுக்கெனின், அஃதொக்கும்; நிருவிகற்பமாய்க் காண்டலும், இரட்டுறக் காண்டலும், தெளியக் காண்டலுமெனக் காட்சி மூவகைப்படும். இம் மூன்றும் அதிபரிபக்குவமுடையார்க்குக் கேட்டமாத்திரையே ஒருங்கு நிகழுமாயினும் ஏனையோர்க்குக் கேட்டல் சிந்தித்தல் தெளிதலென்னுஞ் சோபான முறையினன்றி நிகழாமையின், அவரைநோக்கிச் சிவரூபத்தினிகழும் ஆன்மதரிசனத்தின் பின்னாகச் சிவதரிசனத்தி னிகழும் ஆன்மசுத்தியும் ஒருதலையான் வேண்டப்படுமென்றுணர்ந்துகொள்

ளுக. ''நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கு நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி--யாசையொடு மங்குமிங்குமாகியபல மருவோரரும்பாச மறுக்கும்வகை யருளின்வழி யுரைப்பாம்.'' என வழிநூலாசிரியரும் இக்கருத்தேபற்றி ஓதினர்.

விளக்கம்.

இக்கருத்துரை என்னசொல்லிற்றோவெனின், சூத்திரக்கருத்து இதுவென்று சொல்லிற்று.

(இக்கருத்துரையின் பொருள்.) எட்டாஞ்சூத்திரத்திற் கூறியவாறு தமது முதல் குருவுமாய்வந்து உபதேசிக்கக் கேட்ட உயிர், அவ்வுபதேசத்தைச் சிந்திக்கு முறைகூறிச் சிந்தித்தலினால் ஐம்புலமாகிய வேடருடன் கூடி வளர்ந்த அசுத்தத்தை நீக்கித் தன்னைப்பரிசுத்தபடுத்து முறையையுணர்த்துதல் இவ்வொன்பதாஞ் சூத்திரத்தின் கருத்து எ-று.

மேலைச்சூத்திரத்தில் குருவால் ஞானம் நிகழும் எனக் கேட்டல்கூறி இச்சூத்திரத்தில் அந்த ஞானத்தைச் சிந்திக்கு முறைகூறுகின்றதனால் சூத்திரத்தின் சம்பந்தம் விளங்கியவாறு அறிக.

சிவப்பிரகாசம் அ-ம் சூ-ம் க-வது செய்யுளில் ஆன்மசுத்தியாவது ''தான்பணியை நீத்தல்'' என்று கூறப்பட்டிருக்கின்றது. அவ்வான்மசுத்தி இந்நூலில் பத்தாஞ் சூத்திரத்தில் ''இறைபணி நிற்க'' என்று கூறுவதனால் பெறப்படுகின்றது. அன்றியும், ஆடைக்கு அழுக்கு நீக்கமே சுத்தியாமாறுபோல உயிர்க்குப் பாசநீக்கமே சுத்தியாவதன்றி வேறன்று ஆதலானும், பாசநீக்கத்தைச் செய்யும் முன்னர் ஆன்மசுத்தி உண்டாகாது ஆகலானும், வருகின்ற கO-ம் சூத்திரத்திற்குப் பாசக்ஷயம் பண்ணுமாறுணர்த்துதல் கருத்துரையாகக் கூறியிருப்பதாலும், பாசக்ஷயத்திலுண்டாகின்ற ஆன்மசுத்தி வருகின்ற கO-ம் சூத்திரத்தின் கருத்தாகவே முடிகின்றது. இச்சூத்திரத்தில் பதியைநாடி எனவும், தண்ணிழலாம் பதியெனவுங் கூறியன சிவதரிசனம் பண்ணுமுறைமையை உணர்த்தியதாம். சிவதரிசனம் பண்ணுமுறையை உணர்த்திய இச்சூத்திரத்திற்குப் பத்தாஞ்சூத்திரத்திற் கூறப்படும் ஆன்மசுத்தியைக் கருத்துரையாகக் கூறியது எவ்வாறு பொருந்துமென மலையவேண்டாம்; சிவதரிசனத்தில் உடனாக நிகழ்வது ஆன்ம சுத்தியாதலால் அவ்வுடனிகழ்ச்சியை உணர்த்துவதற்கும், பதியை நாடுக வெனக்கூறும் இச்சூத்திரத்திற்கும் ஏகனாய் நிற்க இறைபணி நிற்க எனக்கூறும் பத்தாஞ்சூத்திரத்திற்கும் தம்முள் சிறுபான்மை வேறுபாடு இருப்பினும் இச்சூத்திரத்தில் பாசம் ஒருவ என்றும் பத்தாஞ் சூத்திரத்தில் மலமாயை தன்னொடு வல்வினையின்றே யென்றும் கூறுதலால் பாசநீக்கமாகிய ஒரு பொருளில் இரு சூத்திரமும் ஒற்றுமையுடையன என்பது

உணர்த்துதற்கும், இச்சூத்திரத்திற்கு ஆன்மசுத்தியைக் கருத்துரையாகவும் பத்தாஞ்சூத்திரத்திற்குப் பாசநீக்கத்தைக் கருத்துரையாகவும் கூறினரென அறிக.

பத்தாஞ்சூத்திரக் கருத்தை இச்சூத்திரத்தின் கருத்தாகக் கூறியதைப் பற்றி எடுத்துக் காட்டிய சமாதானம் அவ்வாறாகட்டும்; எட்டாஞ் சூத்திரம் நான்காம் அதிகரணத்து மேற்கோளில் "ஆன்மாத் தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் சீபாதத்தை யணையும்" என்று கூறப் பட்டிருத்தலால், இந்திரியத்தின் வேறாகத் தன்னைக்காண்டலாகிய அக்கா ட்சியே உயிருக்குச் சுத்தியாகும்; அதன்மேலும் இச்சூத்திரத்திற் கூறப் படும் ஆன்ம சுத்தி எதற்காகவேண்டு மெனின், இந்திரியத்தின் வேறாகக் காண்டலே போதும்; ஆயினும் பகுத்துணர் வின்றி நிரு விகற்பமாய்க் காண்டலும், அதுவோ இதுவோ எனச்சந்தேகமாய்க்காண்டலும், பகுத துணர்வோடு தெளியக் காண்டலுமெனக் காட்சி மூவகைப்படும். ஒன்றை மற்றொன்றாகக் காணும் விபரீதக் காட்சியும் ஒன்றாகவைத்துக் காட்சி நான் கெனவுங் கூறப்படும். விபரீதத்தினும் நிருவிகற்பத்தினும் உண்மை வெளி ப்படாமையால் விபரீதத்தை நிருவிகற்பத்தினுள் அடக்கி மேற்கூறியவாறு காட்சி மூன்றெனக் கூறினுங் குற்றமில்லை. இந்திரியத்தின் வேறாகத் தன் னைக்காணும் முறையில் அதிதீவிரதர பக்குவமுடையாருக்கு அம்மூவகைக் காட்சியும் ஆசிரியன் உபதேசத்தைக் கேட்டமாத்திரத்தே நிகழும். அதா வது விரைவாய் மூன்றுகாட்சியும் ஒன்றன்பின் ஒன்றாய் நிகழு மென்றபடி யாம். மந்ததரம், மந்தம், தீவிரம் ஆகியபக்குவ முடைய ஏனையோருக்கு உப தேசத்தைக் கேட்டமாத்திரத்தே அம்மூன்று காட்சியும் நிகழாவாம். அவ ருக்குக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்னும் படிமுறையான சாதனத் தால் நிகழும். எவ்வாறெனின், கேட்டலினால் நிருவிகற்பக் காட்சியும், சிந் தித்தலினால் சந்தேகக் காட்சியும், தெளிதலினால் தெளிவுக்காட்சியும் நிகழும் என அறிக. ஆதலால் அதிதீவிரதரபக்குவருக்கு எட்டாஞ் சூத்திரத்திற் கூறியதேபோதுமாயினும், அதிதீவிரதர மல்லாத ஏனைய பக்குவ முடையா ருக்கு எட்டாஞ் சூத்திரத்திற் கூறியவாறு சிவரூபத்தில் நிகழும் ஆன்மதரி சனமும் அதன் பின்னாக இச்சூத்திரத்திற் கூறியவாறு சிவதரிசனத்தில் நிக ழும் ஆன்ம சுத்தியும் உறுதியாய் வேண்டப்படுமாதலின் எட்டாஞ் சூத்திரத் தின் பின்னாக இவ்வொன்பதாஞ் சூத்திரம் கூறப்பட்டது. அதிதீவிரதர முடையாருக்குக் கேட்டலொன்றே மூவகைக் காட்சியையும் தரும்; ஏனை யோருக்குக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் மூன்றும் முறையே மூவகைக் காட்சியையும் தரும் என்னும் இக்கருத்தே பற்றிச் சிவஞான சித்தியார் அ-ம் சூ-ம் ந-வது "பாசிபடு குட்டம்" என்ற செய்யுளில் 'சிவபெருமானி டத்து நீங்காத அன்புடையவர் அச்சிவமாயே நிற்பர்; பழைய வாசனையால் சிவத்தினிடத்துங் கருவிகளினிடத்தும் நிலைபெறாமல் அலைபவர்க்கு அவ் வாசனையை நீக்கும் உபாயத்தை மூன்னர் கூ-ம் சூத்திரத்திற் கூறுவாம்' என் றவழி நூலாசிரியர் அருளுவாராயினர்.

தத்துவங்களின் வேறெனத் தன்னைக்கண்டும் தன் உண்மை நிலையை அறியாமை நிருவிகற்பக் காட்சி. தன் உண்மை நிலை அருளோடு பிரிப்பின்றி நிற்றலென அறிந்தும் அவ்வருளி லடங்காமல் அருளினுங் கருவியினும் மாறிமாறிப் போக்குவரத்தாய் நிற்றல் ஐயக்காட்சி. அருளில் அடங்கி அடிமையாய் நிற்றல் தெளிவுக்காட்சி. இம்மூவகைக் காட்சியும் தத்துவரூபம் முதல் சிவயோகம் ஈறாகிய பத்துக்காரியங்களும் அக்காரியங்களின் உடனிகழ்ச்சியும் அவைபற்றிய ஏனையவும் `தசகாரிய விளக்கம் என்னும் நூலில் விரிவாகக் கூறியிருக்கின்றோம். ஆதலால் அவ்விடத்துக் காண்க.

சிற்றுரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு.

ஊனக்கண்—குறையுணர்வாகிய பசுவறிவானும்,— பாசம்— பாசவறிவானும்,— உணரா—உணரப்படாத,— பதியை,—முதல்வனை,—ஞானக்கண்ணினில்—அவனது திருவடி ஞானத்தால்,— சிந்தை—தன்னறிவின்கண்ணே,—நாடி—ஆராய்ந்தறிக. (அத்திருவடி ஞானத்தான்),—பாசம்—நிலமுதனாதமீறாகிய பாசக்கூட்டம்,— உராத்துனை—நின்றுழிநில்லாது பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய,— தேர்த்தென— பேய்த்தேரினியல்பிற்றாய்க் கழிவதென்றறிந்து,— ஒருவ— நீங்கவே,— பதி—அப்பதி ஞானம் (பிறவித் துயராகிய வெப்பத்துக்கு),—தண்ணிழலாம்—குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும்: (அவ்வாறு) பாசத்தை யொருவி ஞானத்தைப் பெற்று ஞேயத்தைக் கண்டகாட்சி சலியாமைப்பொருட்டு அப்பொருள்பயக்கும்),—அஞ்செழுத்தே—திருவஞ்செழுத்து,— விதி—அவ்விதிப்படி யறிந்து,—எண்ணும்—கணிக்கப்படும் எ-று.

ஊனமென்பது அப்பொருட்டாதல் "ஊனமேற் கிரியை வித்தை" என்பதனானறிக. "நன்று மன்னிது நாடாய் கூறி" என்றாற்போல நாடி என்பது இகரவீற்று முன்னிலை ஏவல். உராத்துனை ஏழாம் வேற்றுமைத்தொகை. உராவென்பது முதனிலைத் தொழிற்பெயர்; "பறவாக்குழவி" "பாயாவேங்கை" என்றாற்போல, ஒருவரானுராப் படாத வேகத்தையுடைய தேரெனச் செயப்படுபொருட்கண் வந்த பெயரெச்ச மறையாகக் கொண்டுரைத்து, "திருத்தார் நன்றென்றேன் றியேன்" என்றாற்போல உராவென்பது குறுக்கல் விகாரமென்பாரு முளர். பின்வந்தபதி ஆகுபெயர்.

விளக்கம்.

(இச்சூத்திரத்தின் பொழிப்புரை.) துணையின்றி அறிய முடியாத குறையினையுடைய பசுஅறிவானும் துணையாகியகருவிகரணங்களினால் உண்டாகிய ஏகதேசமாகிய பாச அறிவானும் பதியை அறியமுடியாது. அவ்விரு அறிவாலும் அறியப்படாத முதல்வனை அம்முதல்வனுடைய திருவடி ஞானத்தால் உயிராகிய தன்னறிவின் கண்ணே ஆராய்ந்தறிக. அவன் திருவடிஞானத்தால் அவனை யறிக என்னும் இக்கருத்தேபற்றி "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என அருளிச் செய்தார் மணிவாசகப் பெருமான். அடியென்பதும் அருளென்பதும் ஒரு பொருளென்பது மேலே காட்டினும். அத்திருவடி ஞானததால் முதல்வனையறிவதோடு, நிலமுதல் நாதமீறாகிய பாசக்கூட்டத்தைக் கானல், நீர் போலத் தோன்றிப் பொய்யாய்க்கழியுமாறு போலக் கழிவதென்று அறிந்து அப்பாசக்கூட்டத்தினின்றும் நீங்கவே, அத்திருவடி ஞானமாகிய பதிஞானம் பிறவித்துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். அவ்வாறு பாசத்தில் நின்றும் நீங்கித் திருவடிஞானத்தைப் பெற்று அத்திருவடிஞானத்தால் முதல்வனைக் கண்டகாட்சி சலியாது நிலைத்தற்பொருட்டுப் பாசத்தில் நீங்கி முதல்வனை யடைதலாகிய பொருளைத்தருகின்ற திரு அஞ்செழுத்தை அறிந்து அப்பஞ்சாக்கரம் விதிப்படி செபிக்கப்படும் எ-று.

ஊனம் என்றது குறையென்னும் பொருளைக்குறித்து நிற்றலால் ஊனக்கண் என்பதற்கு குறையுணர்வு என உரைசெய்யப் பட்டது. ஊனம் என்பது குறையென்னும் பொருளில் வருமென்பதைச் சிவஞானசித்தியார் க-வது சூத்திரம் சுங-வது செய்யுளில் "ஊனமேற் கிரியை வித்தை" என்பதனால் அறிக. கிரியை ஊனமேல் என்பதற்கு கிரியை குறைந்து என்பது பொருள்.

சிந்தை நாடிஎன்றவிடத்தில் நாடிஎன்றது வினையெச்சமாகாது நாடுக என்னும் பொருளில் இகரத்தை இறுதியாக உடைய முன்னிலை ஏவலாய் நின்றது. இதனை அகநானூறில் "நன்று மன்னிதுநீ நாடாய் கூறி" என்றவிடத்து, கூறி என்பது கூறுகஎன்னும் பொருளில் நின்றவாறு பற்றி அறிக.

உராத்துனை என்றதில் உரா என்பது உலாவல் என்னுங் கருத்தில் பரந்து திரிதலையும், துனை என்பது "கதழ்வுக் துனைவும் விரைவின்பொருள" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தின்படி வேகத்தையும் உணர்த்தி, கண் என்னும் ஏழாம் வேற்றுமை உருபுவிரிந்து பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய என்னும் பொருளில் நிற்றலால் உராத்துனையென்பது ஏழாம் வேற்றுமைத் தொகைச்சொல்.

உலாவல் என்னும் பொருளைத் தருகின்ற உராவல் என்னுஞ் சொல்லில் அல்விகுதி குறைந்து உரா என்னும் பகுதி மாத்திரம் நின்று உலாவல் என்னும் பொருளைத்தந்து பெயர்ச்சொல்லாய் நிற்றலால் உராவென்பது முதல்நிலைத்தொழிற் பெயர்ச்சொல். உலாவலும் திரிதலும் ஒருபொருள்

உராத்துனைத்தேர் என்பதற்குப் பரந்துதிரிதற்கண் வேகமுடைய தேர் என்று கூறிய இப்பொருளேயன்றி ஒருவரால் ஊரப்படாத வேகமுடைய தேர் என்று கூறுவாருமுளர். அவ்வாறு கூறும் முறையில், ஊர் பகுதி. ஆ எதிர்மறை விகுதி. ஊரா என்னும் எதிர்மறை எச்சமாய் நின்று செயப்படுபொருளாகிய தேரைக் கொண்டுமுடியும். எவ்வாறெனின், பறவாக் குளவி பாயாவேங்கை என்றவிடத்து அவ்விரண்டினுமுள்ள எதிர்மறையானது எச்சமாய் நின்று குளவியாகிய மலைப்பச்சையினையும் வேங்கை மரத்தினையுங் கொண்டுமுடிந்தாற் போலாம். தேர் ஊரப்படும் பொருளாய் இருக்கின்றமையால் செயப்படுபொருளாயிற்று. ஊர் என்னும் பகுதி உர் எனக் குறுகிநிற்றலால் குறுக்கல் விகாரம். இது "திருத்தார் நன்றென் றேன்றியேன்" என்றவிடத்துத் தீயேன் என்பது தியேன் எனக் குறுகி நின்றவாறு போலாம் என்பர்.

தண்ணிழலாம்பதி என்றவிடத்துப் பதி என்றது பதிஞானத்தைக் குறித்து நிற்றலால் ஆகுபெயர்.

சிற்றுரை.

இதனுள், ஊனக்கண்பாசம் உணராப்பதியை ஞானக்கண்ணினிற் சிந்தை நாடிஎனறது ஓரதிகரணம்; உராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவத் தண்ணிழலாம் பதி என்றது ஓரதிகரணம்; விதி எண்ணுமஞ் செழுத்தே என்றது ஓரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திர மென்றுணர்க.

விளக்கம்.

இ—ள், வெ—டை.

முதலதிகரணம்.

பதிஞானத்தால் பதியைக் காணவேண்டுமெனக் கூறும
மேற்கோள்.

ஈண்டு அம்முதலை ஞானக்கண்ணாலே காண்கவேன்றது.

சிற்றுரை.

எ-து மே-ள் எ-னின், மேலைச் சூத்திரத்து ஓதியவாற்ருன் முதல்வன் பாசவறிவால் நாடப்படுவனல்லனுயினும் பசுவறிவால் நாடப்படுவ னென்றற்கு இழுக்கென்னை யெனச் சிவசமவாதசைவர் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட ளுதலிற்று.

இ-ள். வெ-டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ-ள். ஈண்டு—இம்மூன்றதிகரணங்களுள் வைத்து இம் முதலதிகாரணத்து,—அம்முதலை—பாசஞான பசுஞானங்களா லுணரப்படாத முதல்வனை,—ஞானக்கண்ணாலே—சிவஞானத்தினுலே,—காண்க—அறிக எ-று.

சிற்றுரை.

ஏகாரம் தேற்றம்.

விளக்கம்.

இம்மேற்கோள் சூத்திரத்திலுள்ள ஊனக்கண்பாசம் உணராப்பதியை ஞானக் கண்ணினிற் சிந்தைநாடி என்னும் முதற்கூற்றைப பதச்சேதஞ் செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்னசொல்லிற்றோ வெனின், எட்டாஞ் சூத்திரத்தில் ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை எனக்கூறியதனுல் பாசஞானத்தால் முதல்வன் அறியப்படமாட்டான் ஆயினும், பதிஞானத்தால் அம்முதல்வனை ஆராய்ந்து அறிக என்று இச்சூத்திரத்திற் கூறுவானேன்? பசுஞானத்தால் அறியப்படுவன் என்று கூறினுல் வருங்குற்றம் என்னை யென்பர் சிவசமவாத சைவர். அவர் கூற்றை ஆசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைப் பதச்சேதஞ் செய்து பசுஞானத்தால் முதல்வனை அறிய முடியாதெனவும் பதிஞானத்தினுலேயே அறிய முடியுமெனவுங் கூறியவாறும்.

இவ்வதிகரணத்தில் முதல்வன் பசுஞானத்தாற் காணப்படுவனே பதிஞானத்தாற் காணப்படுவனே என்பது ஐயப்பாடு. பசுஞானத்தாற் காணப்படுவன் என்பது பிறர்பக்கம் என அறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) இச்சூத்திரத்திற் கூறப்படும் மூன்றதிகரணங்களுள் இம்முதலதிகரணத்தில் பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் அறியப்படாத முதல்வனைப் பதிஞானத்தினுலே அறிக எ-று.

ஞானக்கண்ணாலே என்றதிலுள்ள ஏகாரம் பதிஞானத்தாலன்றிக் காணமுடியாது என்பதை உறுதிப் படுத்தினமையால் தேற்றம்.

பதிஞானத்தாலேதான் முதல்வன் அறியப்படுவேன்
என்பதற்குக் காட்டும்

ஏது.

அவன்வாக்கு மனாதீத கோசரமாய் நிற்றலான்.

சிற்றுரை

ஏ-து ஏது எ-னின், ஏனை ஞானங்களா னறியப்படாது சிவ ஞானத்தா னறியப்படு மென்றற்குப் பிரமாணம் என்னை யென் பாரைநோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) வாக்குமனாதீத கோசரமாய் நின்ற அதுவே என்புழி உரைத்தாம்.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ—ள். வாக்கு—நாதமுடிவான பாசஞானமும்,—மனம்—பசு ஞானமுமாகிய,—அதீதம்—அவ்விரண்டன் விருத்திகளைக் கடந்து அதீதமாய் நின்று,—கோசரமாய் நிற்றலான்—ஒற்றுமைப் பட் டுணரும் பதிஞான மாத்திரைக்கே விளங்கிக்கோசரிப்ப தாகலான் 'ஈண்டம் முதலை ஞானக்கண்ணாலே காண்க' என்றது வென மேற் கொண்டது எ-று.

சிற்றுரை.

ஆண்டுப் பொதுவகையாற் பெறப்பட்டதனை ஈண்டேதுவாக வைத்து வாக்குமனாதீதமாயுங் கோசரமாதல் பிறிதொன்ருற்பெற ப்படாதென்னும் அருத்தாபத்தியான் ஞானக்கண்ணாலே காணப் படுமென்பது தாமேபோதரு மெனு மேற்கோளைச் சாதித்தார்.

விளக்கம்.

இந்தஏது என்னசொல்லிற்றே எனின், முதல்வன் பாசஞானத்தா லும் பசுஞானத்தாலும் அறியப்படாமல் பதிஞானத்தால் அறியப் படுவேன் என்பதற்குப் பிரமாணம் என்னையென்பாரை நோக்கிப் பிரமாணங் கூறி ஞானக் கண்ணாலே காண்க என்ற மேற்கோளை வலியுறுத்திய வாறும்.

இந்த ஏதுவிற்கு உரையாசிரியர் கூறிய உரை.

இந்நூல் ஆருஞ்சூத்திரம் இரண்டாம் அதிகரணத்து மேற்கோளில் வாக்குமனாதீத கோசரமாய் நின்ற அதுவே என்றவிடத்துக் கூறியிருக்கின் றமையால் அப்பொருளையே இவ்விடத்துங் கொள்க என்பதாம்.

சாதனவியல் ஒன்பதாஞ்சூத்திரம். க-ம் அதி.

இதற்குச் சுப்பிரமணியதேசிகர் கூறிய உரை.

முதல்வன், பிருதிவிமுதல் நாதசத்துவ முடிவான பாசத்தாலுண்டாகும் ஞானத்தின் விருத்தியையும், தற்போத முனைப்பாகிய பசுஞானத்தின் விருத்தியையுங் கடந்த அதீதமாய் நின்று, அம்முதல்வனோடு பிரிப்பின்றி நின்றுணரும் பதிஞான மாத்திரைக்கே விளங்கி யறியப்படுவன் ஆதலால், 'ஈண்டு அம்முதலை ஞானக்கண்ணாலே காண்க' என மேற்கோள் கூறியது எ-று.

இந்நூல் ஆறாஞ்சூத்திரம் இரண்டாவது அதிகரணத்தில் வாக்குமனாதீத கோசரமாய் நிற்றலை மேற்கோளாகக் கூறி இவ்விடத்தில் அம்மேற்கோளை ஏதுவாகக் கூறிய கருத்தென்னை யெனின், ஆறாஞ்சூத்திரத்தில் வாக்கிற்கும் மனதிற்கும் எட்டமாட்டான்: எட்டாமையால் சூனியமுமன்று எட்டுவன் எனப் பொதுவாகக் கூறினாரே யன்றிப் பதிஞானத்திற்கு எட்டுவன் எனச் சிறப்பாகக் கூறவில்லை. அவ்வாறு பொதுவாகக் கூறியதனை இவ்விடத்தில் ஏதுவாக வைத்து வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாமலிருந்தும் எட்டுதல் ஞானக்கண்ணிற்கன்றிப் பிறிதொன்றாற் பெறப்படாது என்னும் அருத்தாபத்திப் பிரமாணத்தால் ஞானக்கண்ணாலே காணப்படுவன் என்னுஞ் சிறப்புத்தானே சித்திக்குமென மேற்கோளை வலியுறுத்தினாரென அறிக.

மேற்கோள் ஏதுவாய்வருதல் குற்றமாகாதோஎனின், ஒருமேற்கோள் ஏதுவாய் நின்று பிறிதொரு மேற்கோளைச் சாதிக்குமாயின் குற்றமாகாது. உதாரணமாக—இவன் பிராமணன், பிராமணத் தன்மையால் என்று கூறி, இவன் யாகஞ் செய்பவன், பிராமணனாதலால் என்றவிடத்து மேற்கோள் ஏதுவாய் வந்தவாறு அறிக.

பாசஞானமாவது—பாசமாகிய கருவிகளால் ஆன்மாவினிடத்தில் நிகழும் ஞானம்.

பசுஞானமாவது—தற்போதமுனைப்பால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம்.

பதி ஞானமாவது— பதியின் அருளால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம்.

இந்த ஏது, முதல்வன் பசுஞானத்தாற் காணப்படுவன் என்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

பதிஞானத்தாலேதான் முதல்வன் காணப்படுவன் என்பதற்குக் காட்டும்

உதாரணம்.

நாடியோ வென்போ நரம்புசீக் கோழையோ
தேடி யெனையறியேன் றேர்ந்தவகை—நாடியரன்
றன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணா
ரென்னா மெனவறிவா ரின்று.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், கோசரமாதல் பிறிதொன்றாற் பெறப்படாதென்றதென்னை? பசுத்துவம் நீங்கியவழிச் சுட்டிறந்தறிவதாகிய உயிருணர்வு திருவடிஞானத்தோடொப்பதாகலின், அதன் கட்கோசரமாதல் அமைவுடைத்துப் போலுமென்பாரை நோக்கி அவ்வுணர்வு விளங்குமாறுணர்த்து முகத்தான் அவரை மறுத்து எதுப்பொருளை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ தேடி எனை அறியேன் தேர்ந்தவகை நாடி—நாடிமுதலியவற்றுள் (யான்யார்) என்னைத் தேடியும் அறிகின்றிலே (னென்று) இவ்வாறு தேர்கின்ற தேர்ச்சி அறிவின் கண்ணே, (இதனைத் தெளிவிப்பதோரறிவு வேறுண்டென) ஆராய்ந்து நோக்கி,—அரன்தன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணார்—(அவ்வாறு நாடுங்கால் விளங்கித் தோன்றுவதாய) முல்வனது திருவடிஞானத்தால் முதல்வனையு முணர்ந்து (முதல்வனின் வியாப்பியமாய் நின்று அங்ஙனமறியும் பொருளாகிய) தம்மையு முணர்தலைச் செய்யாதார்,—என் என அறிவார் இன்று—மற்றெவ் வியல்பினரென்று தம்மை அறிய வல்லுநர் இம் முத்திக்காலத்து எ-று.

நாடிஎன்றது இடைபிங்கலை முதலியவற்றை. நரம்பெனவே அடங்குமேனும் தலைமைபற்றி வேறுகூறினர். சீ புண்ணீர். கோழை ஐ. ஒகாரம் தெரிநிலை. என்றென்பது சொல்லெச்சம். வகை ஆகுபெயர். ஒற்றுமைபற்றி அரனது ஞானத்தை அரனென் றுபசரித்தார். உம்மை எதிரது தழீஇயிற்று. எவனென்னும் வினாவினைக் குறிப்புப் பெயர் ஈண்டாகு பெயராய் என்னெனமரீஇயிற்று. ஆம் அசை. நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ வென்ற உபலக்

கணத்தால் ஏனைத்தத்துவ தாத்துவிகங்களினும் அவ்வாறு தெரிதல் கொள்ளப்படும். இது தம்மையறியுமா றுணர்த்து முகத்தானே தலைவனை யறிந்தபின் அறியப்படுவதாகிய தம்மறிவு கொண்டு தலைவனை யறியுமாறு யாண்டைய தெனமறுத்து வலியுறுத்த வாறு காண்க.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றேவெனின், பதிஞானத்திற்குப் பதி எட்டுமேயன்றிப் பிறிதொன்றுக்கும் எட்டாது என்று கூறவானேன், சுட்டியறிவதாகிய பசுத்தன்மை நீங்கியவிடத்துச் சுட்டிறந்தறிவதாகிய ஆன்ம அறிவு பதிஞானத்தோடு ஒப்பதாகும். ஆதலால், அந்த ஆன்ம அறிவினிடத்துப் பதி விளங்கித் தோன்றுமென்றலே பொருத்தமென்பர் அச்சிவசமவாத சைவர். அவரைநோக்கிச் சுட்டிறந்தறியும் அறிவு பதிஞானத்தாலன்றி உண்டாகாதெனக்கூறிப் பதிஞானத்தாலன்றி அறியமுடியாதென்னும ஏதுப்பொருளை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை) காணப்படும் சரீரத்துள் யான் யார்? நாடியோ நரம்போ சீ யோ கோழையோ இந்திரியங்களோ அந்தக்கரணங்களோ என்று என்னைத் தேடுங்காலத்துத் தேடியும் அறிகின்றிலேன். இவ்வாறு அறிகின்றிலே னென்று தேர்கின்ற தேர்ச்சியறிவின்கண்ணே யான் என்பதனை அறிவிப்பதோர் அறிவுப்பொருள் அத்தேர்ச்சியறிவின் வேறாய் உண்டென ஆராய்ந்து நோக்கின், அவ்வாறு நோக்குங்கால் முதல்வனது திருவருள் விளங்கித் தோன்றும். அத்திருவருளாகிய திருவடிஞானத்தால் முதல்வனையும் அறிந்து முதல்வனை விட்டு நீங்காமல் நின்று அம்முதல்வனை அறியும் பொருளாகிய தம்மையும் அறியும். இவ்வாறு முதல்வனுடைய அருளால் முதல்வனையும் முதல்வனை விட்டு நீங்காத தம்மையும் அறிதலைச் செய்யாதார் கருவி கரணங்களெல்லாம் விடுபட்ட முத்திக்காலத்தில் தனித்து நில்லாத தம்மை வேறு எத்தன்மையுடையராக அறியவல்லார் எ-று:

(க-ரை.) முதல்வன் அருளால் அம்முதல்வனையும் தன்னையும் அறிய வேண்டிய உயிர், அவ்வாறு அறிதலைச் செய்யாமல் தன்னறிவால் முதல்வனை யறிதல் எங்ஙனங் கூடும் என்பதாம்.

நாடி என்றது இடைபிங்கலை சுழுமுனைகளை. நரம்பு என்று கூறியதனாலேயே நாடியும் அடங்குமேனும் நாடி தலைமையாதல்பற்றி நரம்பின் வேறாக நாடியையுங் கூறினார். சீ என்பது புண்ணீர்; அதாவது இரத்தம். கோழை யென்றது ஐ; அதாவது சிலேட்டுமம்.

நாடியோ என்போ சேழையோ என்றவற்றிலுள்ள ஓகாரம் நாடி முதலிய அவற்றை ஆராய்கின்ற தெரிநிலையைக் குறித்து நின்றது.

தேடி எனையறியேன் என்றவிடத்து என்று என்பது சொல்லெச்சமாய் வருவித்து உரை செய்யப்பட்டது.

சேர்ந்தவகை என்றவிடத்து வகை என்பது வருக்கின்ற அறிவைக் குறித்து நிற்றலால் ஆகுபெயர்.

அரன் திருவடி ஞானத்தாலே என்று கூறவேண்டுவதை ஞானத்திற்கும் அரனுக்கும் உள்ள ஒற்றுமைபற்றி அரன் றன்னாலே என்று உபசரித்துக் கூறினர்.

தன்னையுங் கண்டு என்ற விடத்துள்ள உம்மை அடுத்து வருகின்ற தமையும் என்பதைத் தழுவி நிற்றலால் எதிரது தழுவியது. தன்னையென்பது தலைவனை. தமை என்பது உயிரை.

எவன் என்னும் வினாவினைக் குறிப்புப் பெயர்ச்சொல் இவ்விடத்தில் ஆகுபெயராய் எவ்விபல்பினரென்னும் பொருளைக்குறித்து என் என மருவி நின்றது.

என் ஆம் என்றதிலுள்ள ஆம் என்பது அசை.

நாடியோ என்போ நரம்பு சீக் கோழையோ என்ற உபலக்கணத்தால் எனைய அந்தக்கரண முதலிய சூக்குமசரீர தத்துவங்களினும் பிராணவாயு சத்தாதி விடயங்கள் முதலிய தூலசரீர தத்துவங்களினும் இவற்றுள் யான் யார் என்று தெரிதல் கொள்ளப்படும்.

இவ்வெண்பா, நாடி முதலியவற்றுள் யான் யாரென்று தம்மையறியுமாறுணர்த்தி அவ்வாறுணர்த்து முறையில் ஒவ்வொன்றாய் ஆராய்ந்து கழித்தவிடத்துத் தலைவன் அருள் விளங்கித்தோன்ற அவ்வருளால் தலைவனையறிந்து பின் தம்மை யறிவர் எனக் கூறினமையால், தலைவனையறிந்தபின் அறியப்படுவதாகிய தம்முடைய அறிவைக்கொண்டு தலைவனையறிதல் எவ்வாறு கூடுமெனை ஆன்ம அறிவிற்குப் பதி விளங்கித் தோன்றுமென்ற சிவசமவாதசைவரை மறுத்துப் பதிஞானத்திற்குப் பதிவிளங்கித் தோன்றுமென்ற எதுவின்பொருளை வலியுறுத்தியவாறு அறிக.

பதிஞானத்தாலன்றி ஆன்ம அறிவிற்குப் பதியைக்காணுந் தன்மை
இல்லையென்பதற்குக் காட்டும்

உதாரணம்.

காட்டிய கண்ணே தனைக்காணு கண்ணுக்குக்
காட்டாய வுள்ளத்தைக் கண்காணு—காட்டிய
வுள்ளந் தனைக்காணு துள்ளத்தின் கண்ணுய
கள்வன்ரு னுள்ளத்திற் காண்.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், எதிர்முகத்து ஒரு பொருளைக் கண்ட கண்ணை மறித்து நோக்கியவழி வெளிப் புறத்துப் பொருளையுங் காணவல்லும்; அதுபோல அங்ஙனந் தேர்ந்தறிதலைச் செய்த உயிரே தெளிந்தறிதலையுஞ் செய்யவல்லுமென அமையுமென்பாரை நோக்கி அதனது மாட்டாமையை விளக்கி அரன் தன்னாலே காண்டலை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) காட்டிய கண் தனைக்காணு— (உயிராற்) காட்டப்பட்டு ஒரு விடயத்தைக் காண்கின்ற கண்ணானது தன்னியல்பைக் காணமாட்டாது,—கண்ணுக்குக் காட்டு ஆய உள்ளத்தைக் கண்காணு—தனக்கு (அவ்விடயத்தைக்) காண்பித்து முதலாய் நிற்கும் உயிரையும் அது காணமாட்டாது,—காட்டிய உள்ளம் தனைக்காணுது— (அதுபோல முதல்வனால் மறைந்து நின்) றுணர்த்தப்பட்டு ஒன்றனைத்தேர்ந்துணர்கின்ற உயிர் (அவ்வாறே) தன்னியல்பையும் அறியமாட்டாது; (தன்னையுணர்த்தி நிற்கும் முதல்வனையு மறியமாட்டாது),—உள்ளத்தின் கண் ஆய கள்வன்தான்—அத்தேர்ச்சியறிவின் கண்ணும் உடனாய் நிற்குங் கள்வன் அம்முதல்வனாகலானே,—உள்ளத்திற்காண்—(அவனை) அவ்வறிவின்கண் வைத்து நாடித்தெளிவாயாக எ-று.

இது சொற்பொருட் பின்வருநிலை. ஏகாரம் அசைநிலை. "முறைகாக்கு முட்டாச்செயின்" என்றாற்போல காணுதென்னும் துவ்வீறு விகாரத்தாற் றொக்கது. பின் வந்த உள்ளம் ஈண்டுத் தேர்ச்சியறிவின் மேற்று. உள்ளத்தின் கண்ணுமென்னுஞ் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. தோன்றாது நிற்றல்பற்றிக் கள்வனென்றார். கள்வனென்றது கண்ணுக்கு உயிர்மறைந்து நின்றே காட்டுவதாகலான் அது தன்னையும் உயிரையும் அறியமாட்டாதாயிற்று; அதுபோல முதல்வன் இதுகாறும் மறைந்து நின்றேயுணர்த்துதலின் உயிர் தன்னையு முதல்வனையும் அறியமாட்டாதாயிற்று என்பது படநின்ற குறிப்பு மொழி. உள்ளத்திற் காணவல்லார்க்கு அக்கள்ளந் தீர்தலின் தம்மையும் முதல்வனையுங் காண்டல் கூடுமென்பதாம். "கள்ளரோ டில்ல முடையார் கலந்திடின்—வெள்ள வெளியாமென் றுந்தீபற"என்றதும் இக்கருத்து நோக்கி. கண்ணுக்குக் காட்டாய உள்ளத்தைக் கண்காணுவென உவமைக்

கோதியவாறு பொருளினும் வருவித்துரைத்துக் கொள்க. இஃதெடுத்துக் காட்டுவமை.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், கண்ணனது எதிர்முகமாக நோக்கும்போது எதிர்முகத்துள்ள பொருளைக் காணும். அப்பொழுது முதுகுப்புறத்தினுள்ள பொருளைக் காணமாட்டாது. அக்கண்ணே திரும்பிப்பார்க்குமிடத்தில் முதுகுப்புறத்துள்ள பொருளையும் காணக்கூடும். அதுபோல, நாடி முதலியவற்றுள் யான்யார் என்று தேர்ந்து அறிந்த உயிரே தம்மையுந் தலைவனையும் இவ்வியல்பினரென்று தெளிந்து அறியவுங் கூடும். ஆதலால் பதிஞானத்தால் அன்றித் தன்னையுந் தலைவனையுந் தெளிந்தறிதல் கூடாதென்று மேலை வெண்பாவிற் கூறியது பொருந்தாதென்பர் சிவசமவாதசைவர். அவரை நோக்கித் தன்னையுந் தலைவனையும் தானே அறியமாட்டாத உயிரின் தன்மையை விளக்கி அரன் திருவடிஞானத்தாலே தன்னையும் தலைவனையும் காணவேண்டுமென்று மேலை வெண்பாவிற் கூறியதை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) கண்ணனது ஒருபொருளைக் காணுங்கால் தானே காணமாட்டாது. உயிரால் காட்டப்பட்டுக் காணும். அவ்வாறு பொருளைக் காண்கின்ற கண்ணனது அக்கண்ணினியல்பை அறியமாட்டாது. அம்மட்டோ பொருளைக் காண்பித்துக் கண்ணைக் கருவியாகக்கொண்டு கருத்தாவாய் நிற்கும் உயிரையும் காணமாட்டாது. அதுபோல, நாடி முதலியவற்றுள் யான் யார் என்று தேர்ந்தறிகின்ற உயிர், தானே அவ்வாறு தேர்ந்தறியமாட்டாது. முதல்வன் மறைந்து நின்று அறிவிக்க அறியும். அவ்வாறு முதல்வனால் அறிகின்ற உயிர், கண்போலவே தன்னியல்பையும் அறியமாட்டாது; தனக்கு அறிவித்து நிற்கும் முதல்வனையும் அறியமாட்டாது. அவ்வாறாயினும் கண் சடமாதலால் எக்காலத்தும் அறியமாட்டாது. உயிர் கண்போலச் சடமன்றி அறிவுப் பொருளாதலால் யான் யார் என்று தேர்கின்ற அத்தேர்ச்சி அறிவினிடத்தும் முதல்வன் உடனாய்நின்று அவ்வாறு தேரும்படி செய்து மறைந்து கள்வனாய் நிற்றலாலே அம்முதல்வனை அவன் அருளால் உன்னிடத்திலுண்டாகுந் தெளிந்த அறிவால் நாடித்தெளிவாயாக எ-று.

(க-ரை.) எதிர்முகமாகக் காணப்படும் பொருளும் முதுகுப்புறமாகக் காணப்படும் பொருளும் புறப்பொருளாதலால் கண் காணும். அக்கண்ணே உள்ளே இருக்கின்ற கண்ணொளியையும் உயிரையும் காணமாட்டாது. அதுபோல உயிரானது தன்னையும் முதல்வனையும் அறியமாட்டாது. ஆயினும் கண்போல் உயிர் சடமன்றி அறிவுப் பொருளாதலால் அவன் அருளால் தன்னையும் தலைவனையும் அறிதல் கூடும் என்பதாம்.

காட்டிய என முன்னர் வந்த சொல்லும் பொருளுமே பின்னரும் வருதலால் இது சொற்பொருட் பின்வருநிலை யென்னும் அலங்காரம்.

காட்டிய கண்ணே என்றதிலுள்ள ஏகாரம் அசைநிலை.

தனைக்காணு என்றவிடத்தும் கண்காணு என்றவிடத்தும் காணுது என ஒருமைப்பொருளை உணர்த்தும் துகரம் இறுதியில் தொக்குநின்றது. இவ்வாறு துகரம் இறுதியிற்றொக்குவருமென்பதைத் திருக்குறள் செங்கோன்மை எ - வது பாட்டில் "முறைகாக்கு முட்டாச் செயின்" என்றவிடத்து முட்டாது செயின் என்பது முட்டாச் செயின் என நின்றவாறு பற்றி அறிக.

காட்டாய உள்ளம் காட்டிய உள்ளம் என்றவற்றின் பின்னுக உள்ளத்தின் கண் என்றவிடத்து உள்ளம் என்றது இச்செய்யுளில் நாடி முதலியவற்றுள் யான் யார் என்று தேர்கின்ற தேர்ச்சியறிவைக் குறித்து நின்றது.

உள்ளத்தின்கண் என்ற அவ்விடத்துச் சிறப்பும்மை விகாரத்தாற்றொக்குநிற்றலால் அதனை விரித்துத் தேர்ச்சியறிவின்கண்ணும் என உரை செய்யப்பட்டது.

முதல்வன் அத்தேர்ச்சி யறிவின்கண்ணும் கலந்து நின்றும் உயிருக்குத் தோன்ருமையால் அம்முதல்வனைக் கள்வன் என்ருர். எனவே உயிரானது கண்ணுக்குத் தோன்ருமல் மறைந்துநின்று அக்கண்ணுக்குப் பொருளைக் காட்டுதலால் அக்கண், தன்னையும் உயிரையும் அறியமாட்டாதாயிற்று. அதுபோல முதல்வன், இதுவரையும் உயிருக்குத் தோன்ருமல் மறைந்து நின்றே அவ்வுயிருக்கு அறிவித்தலின் அவ்வுயிர், தன்னையும் முதல்வனையும் அறியமாட்டாதாயிற்று என்று பொருள்கொள்ளும்படியாகக் கள்வன் என்றசொல் நின்றமையால் கள்வன் என்றது குறிப்புமொழி என அறிக. குறிப்பு மொழியாவது:— குறிப்பினுல் பொருளுணர்த்தும் மொழியாம். ஆயினும் கண்ணுக்கு உள்நோக்குந் தன்மை இல்லை. உயிருக்கு உள் நோக்குந் தன்மை இருத்தலால் உள்நோக்கி அறியவல்லார்க்கு, தோன்ருது மறைந்து நிற்கும் கள்ளம் தீர்ந்து தம்மையும் முதல்வனையும் காண்டல் கூடுமென்பதாம். இக்கருத்துப்பற்றியே திருவுந்தியார் ஆசிரியரும உ௯ - வது செய்யுளில், கள்வன் வீட்டுக்குடையவனை வசியம்பண்ணித் தன்வசமாக்கிக்கொண்டால் எல்லாப்பொருளும் அறிப்படுமோறுபோல், இறைவன் உயிரைப் பக்குவப்படுத்தித் தன்னருள்வழி நிற்கச்செய்து சஞ்சிதவினைகளைச் சோதித்துத் திருவடி தருவன் என அருளினர்.

இவ்வெண்பாவில் கண் உவமை. உயிர் உவமேயம். கண்ணுக்குக் காட்டாய உள்ளத்தைக் கண்காணுதெனக் கண்ணுகிய உவமைக்கோதிய அதனை, உயிராகிய பொருளினும் காட்டிய உள்ளந்தனைக் காணு என்றத

ளேடுகூட்டித் தேர்ந்தறிகின்ற உயிர் தன்னையுங் காணாது காட்டாய முதல் வினையுங் காணாது என உரைத்துக்கொள்க. அவ்வாறே உரை செய்யப் பட்டது.

இச்செய்யுளில் காட்டக்கண்டு கண்ட தன்னையும் காட்டிய முதலையும் உணராத தன்மையை உவமேயமாகிய உயிரினிடத்தும் உவமையாகிய கண்ணினிடத்தும் எடுத்துக்காட்டி இருத்தலால் இது எடுத்துக்காட்டு உவமை யென்னும் அலங்காரம்.

முதலதிகரணம் முற்றிற்று.

இரண்டாம் அதிகரணம்.

பதிஞானத்தைப் பெறுதற்குபாயம் இதுவெனக்கூறும்

மேற்கோள்.

இனி அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்றுகாண உளதாய் நிற்பது ஞானசொரூபமென் றுணரற்பாற்று.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், அம்முதலை ஞானக்கண்ணாலே காண்க வென்றுணர்த்தியவழி அந்த ஞானக்கண்ணைப் பெறுமாறு யாங்ஙனமென நிகழும் அவாய் நிலையை நீக்குதற்பொருட்டு மேலதற்கோர் புறனடையாய் எழுந்த இச்சூத்திரத்தின் இரண் டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ—ள். வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ-ள். அசத்தாயுள்ள—நிலையுதலுடைய தற்சொரூபத்தைக் காட்டாது மறைத்து நிற்கு நிலையுதலிலவாயுள்ள,—வன்னபேதங் களை—பிரபஞ்சங்களை,—அசத்தென்று—இவை நிலையுதலுடைய வல்லவென்று,—காண—விவேகித்தறியின்,—உளதாய் நிற்பது— அங்ஙனம் நிராலம்பமாய் விளங்கித்தோன்றுவது,—ஞானசொரூப மென்றுணரற்பாற்று—பதிஞானத்தி னியல்பென் றறியற்பால தாம் எ-று.

சாதனவியல்ஒன்பதாஞ்சூத்திரம். உ-ம் அதி.

சிற்றுரை.

பாசமொருவத் தண்ணிழலாம்பதி என்புழிப் பாசமென்றது காரியப்பிரபஞ்சத்தை என்பார் அசத்தாயுள்ளவென்றும், சொற் பல்காமைப் பொருட்டு எதுப்பொருளை உருவகமுகத்தான் உடம் பொடுபுணர்த்துக் காட்டுவார் பிரபஞ்சத்தை யென்னாது வன்ன பேதங்களை யென்றும், வியாபகப்பொருளுக்கு ஒருவுதலாவது உணர்ச்சி விசேடமேயாமென்பார் அசத்தென்றொழிய வென் ஞது காணவென்றும், தண்ணிழலாய் நிற்றல் புதிதன்றென்பார் உளதாய் நிற்பதென்றும், பதி என்றது ஆகுபெயராற் பதிஞானத் தின்மேனின்றதென்பார் ஞானசொரூபம் என்றும், இஃது அநு பவத்தினன்றிச் சொல்லளவையின் அறியவாராதென்பார் உண ரற்பாற்றென்று முரைத்தார். இஃதேகதேச உருவகம்.

விளக்கட்..

இம்மேற்கோள் சூத்திரத்திலுள்ள உராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத் தண்ணிழலாம் பதி என்ற இரண்டாங்கூற்றைப் பதச்சேதஞ் செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்னசொல்லிற்றோ எனின், முதலதிகரணத்து மேற்கோளில் அம்முதலே ஞானக் கண்ணலே காண்க என்று உணர்த்திய விடத்து அந்த ஞானக்கண்ணைப் பெறுமுறை எவ்வாறு என்னும் அவா நிகழுமாதலால் அந்த அவாய் நிலையை நிரப்புதற்பொருட்டு, முதலதிகர ணத்துக்கு ஓர் புறனடையாக இச்சூத்திரத்துக்கூறிய இரண்டாங் கூற் றைப் பதச்சேதஞ்செய்து பிரபஞ்சத்தை அசத்தென்று அறிதலால் ஞானக் கண்ணைப் பெறலாம் எனக் கூறியவாறும.

ஏனைய மேற்கோள்களெல்லாம் முன்னைய மேற்கோளிலுண்டாகிய சந்தேகத்தை நீக்குதற்பொருட்டு எழுந்ததாகக்கூறி, இம்மேற்கோள் மட் டும் மேற்கூறிய மேற்கோளிலுள்ள அவாய் நிலையாகிய குறையை நிரப்புதற் பொருட்டு எழுந்ததாகக் கூறிய கருத்தென்னையெனின், கூறுதும். ஞானக் கண்ணலே காண்க என்றவிடத்துப் பசுஞான பாசஞானங்களினல் ஏன் காணக்கூடாது என்னுஞ் சங்கை நிகழலாம். அச்சங்கை அம்முதலதி காணத்து ஏதுவினல் தீர்க்கப்பட்டது. ஆயினும் ஞானக்கண் பெறும் முறை அவ்வதிகரணத்திற் கூருமையால் அம்மட்டில் அவ்வதிகரணம் முற்றுப்பெறவில்லை. முற்றுப்பெருமல் நின்ற அக்குறையை இம்மேற் கோளினல் நீக்கி நிரப்பினுராதலின் அவ்வாறு கூறப்பட்டது என்க.

இவ்வதிகரணத்தில் அசத்தை அசத்தென்று கண்டவிடத்து ஞான சொரூபம் தோன்றுமோ தோன்ருதோ என்பது ஐயப்பாடு. தோன்ரு தென்பது பிறர்பக்கம். தோன்றுமென்பது சித்தாந்தத் துணிபு.

(இம்மேற்கோளின் பொருள்.) நிலேத்திருக்கின்ற பதிஞானமாகிய தன்னுடைய சொரூபத்தைக் காட்டாமல் மறைத்து நிற்கின்ற நிலையில் லாத பிரபஞ்சங்களை இவை நிலேத்திருக்கும் பொருளல்லவென்று விவே கித்து அறியின் அவ்வாறு அறிந்தவிடத்து ஒன்றினும் பற்றில்லாததாய் விளங்கித் தோன்றுவது பதிஞானத்தின் இயல்பு என அறிந்து கொள்க எ-று.

உராத்துனேத் தேர்த்தெனப் பாசமொருவத் தண்ணிழலாம்பதி என்ற இரண்டாங் கூற்றுக்கு அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞான சொருபமென்று உணரற்பாற்று எனக் கண் ணழிவுசெய்த கருத்தென்னையெனின், உராத்துனேத் தேர்த்தென என்பது திருட்டாந்தமாயினமையால் அதனை வன்னபேதங்கள் என்றதில் அடக்கி ஞர். பாசமொருவத் தண்ணிழலாம்பதி என்றதைப் பதச்சேதஞ் செய்து கூறுமிடத்துப் பாசமென்றது காரணப்பிரபஞ்சமாகிய ஆணவ கன்ம மாயைகளையும் குறிக்குமாதலின் அப்பாசங்கள் தோன்றியழியப்படாமை யால் சத்தாகுமாதலால், இச்சூத்திரத்திற் பாசமென்றது தோன்றியழியும் தனுகரணபுவனபோகம் என்னும் காரியப்பிரபஞ்சமென்பதை அறிவிக்க வேண்டி மேற்கோளில் அசத்தாயுள்ள என்று கூறினர். அவ்வாருயினும் அசத்தாயுள்ள பிரபஞ்சங்களையென்று கூருமல் அசத்தாயுள்ள வன்ன பேதங்களையென்று கூறியதென்னையெனின், படிகத்தில் வன்னபேதங்கள் அசத்தாதலால் என எதுவை விரித்து அவ்வன்னபேதம் போன்ற பிரபஞ் சங்கள் அசத்து என்று கூறின் விரியுமாதலின் விரியாதிருத்தற்பொருட்டு எதுப்பொருளேத் தரும் வன்னபேதங்களேப் பிரபஞ்சத்துக்கு உருவகமாக்கி அவ்வாறு ஆக்குமுகத்தால் எதுப்பொருளை வன்னபேதம் என்னும் உடம் பொடுபுணர்த்திக் காட்டவேண்டி அசத்தாயுள்ள பிரபஞ்சங்களை யென்னுது அசத்தாயுள்ள வன்னபேதங்களை யென்று கூறினர். கூறவே, வன்ன பேதம் என்பது உருவகத்தால் பிரபஞ்சத்தையும் உடம்பொடுபுணர்த்தலால் எதுப்பொருளையுங் குறித்து நின்றவாறு அறிக. அதன்மேல் ஒருவ என் னுஞ் சூத்திரக்கூற்றுக்கு அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்று நீங்க என்றுகூருமல் காண என்று கூறியதென்னையெனின், நீங்கும் பொருள் ஆன்மாவாதலாலும், ஆன்மா வியாபகப் பொருளாதலாலும், வியாபகப்பொருளுக்கு நீங்குதலாவது அறிதலேயன்றி வேறில்லாமையா லும், இப்பிரபஞ்சங்கள் நாமுமல்ல நம்முடையனவுமல்ல என அறியும் அறிவின் விசேடமேயன்றிப் பொருளைவிட்டு ஆன்மா நீங்குதலில்லை என்பதை யறிவிக்கவேண்டி அசத்து என்று காண எனக்கூறினர். அதன் மேல் தண்ணிழலாம் என்ற சூத்திரக்கூற்றுக்கு உளதாய் நிற்பது என்று

கூறியதென்னையெனின், ஆன்மாவோடு என்றும் பிரிப்பின்றி நிற்கும் சிவஞானம் என்றுந் தண்ணிழலாகவே யிருக்கும்; இருப்பினும் பிரபஞ்சத்தைத் தானாகவும் தன்னுடையதாகவும் எண்ணினமையால் குளிர்ந்த நிழலாய் விளக்கும் அச்சிவஞானம் விளங்கித் தோன்றுவதில்லை; பிரபஞ்சம் தானுமன்று தன்னுடையதுமன்று என்று அறியவே அச்சிவஞானம் விளங்கித் தோன்றும்; ஆதலால், தண்ணிழலாய் நிற்றல் புதிதன்று என்று முன்னது என்பதை அறிவிக்கவேண்டி உளதாய் நிற்பது எனக்கூறினார். அதன் மேல் பதி என்ற சூத்திரக் கூற்றிற்கு ஞான சொருப மென்று கூறியதென்னையெனின், பதி என்றது ஆகுபெயரினால் பதிஞானத்தைக் குறித்து நின்றதென்பதை அறிவிக்கவேண்டி ஞானசொருபம் என்றார். அதன்மேல் சிவஞானம் தண்ணிழலாய் விளங்கித் தோன்றுதலை அநுபவ அறிவால் அறியலாமேயன்றி ஆராய்ச்சியறிவால் இத்தன்மைத்தென்று அறியமுடியாதென்பதை அறிவிக்கவேண்டி உணரற்பாற்று என்று கூறினார். இவ்வாறு ஏதுப்பொருளை மேற்கோளுடன் சேர்த்துக் கூறினமையால் இவ்வதிகரணத்தில் வேறு ஏது ஆசிரியர் கூறவில்லையென அறிக.

பிரபஞ்சத்தை வன்னமாக உருவகஞ்செய்து ஞானசொருபத்தைப் படிகமாக உருவகஞ் செய்யாமையால் இம்மேற்கோள் ஏகதேச உருவகம்.

சிற்றுரை.

இதனுட் பெறப்படுமேதுப்பொருளை ஏனையவற்றுட்போல் மேற்கோளின் வேறு வைத்துக் காணுமாறு:—

இனி அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞானசொருபமென்றது வேற்றியல்பாகிய வன்னபேதங்களை வேற்றியல்பென்று கண்டு கழிப்பின் உளதாய் நிற்பது படிக சொருபமாந் துணையான் எனவரும்.

(இ—ள்.) படிகசொருபத்தைக்காட்டாது மறைத்து நின்ற வேற்று நிறங்களை இவை நிலையுதலிலவாகிய வேற்று நிறங்களெனக் கண்டுநிற்பின் அவ்வழி நிலையுதலுடைத்தாய் விளங்கிநிற்பது பளிங்கினது சொருபமாமென்னும் ஒப்புமையான் நிலையுதலுடைய தற்சொருபத்தைக்காட்டாது மறைத்து நிற்கும் நிலையுதலிலவாயுள்ள பிரபஞ்சத்தை இவை நிலையுதலுடையன வல்லவென்று விவேகித்தறியின் அங்ஙன நிராலம்பமயமாய் விளங்கித்தோன்றுவது ஞானசொருபமென மேற்கொண்டது எ-று.

வன்னபேதமாவது சித்திரமெனக்கொண்டு சுவர்மேல்வைத்து உரைத்தலுமொன்று. அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்

தென்று காண்டலாவது ஆசிரியன் அறிவுறுத்த உபதேசப்பொருளின் உறைத்துநின்று "அட்டகுண மெட்டுச்சித்தி கோகனதன் முதல் வாழ்வு குலவுபத மெல்லாம்—வெறுத்துநெறி யறுவகையு மேலொடு கீழ் அடங்க" காரணரூபத்தி னில்லாமையால் வெறும் பொய்யென நினைந்திருத்தல்.

விளக்கம்.

இவ்வதிகரணத்தில் ஏது மேற்கோளுடன் கூறப்பட்டிருக்கின்றமையால் அந்த ஏதுப்பொருளை ஏனைய அதிகரணங்களிற் கூறியவாறுபோல மேற்கோளின் வேறாகவைத்துக் காணவேண்டின் கீழ்க்கண்டபடி மேற்கோளும் ஏதுவும் வேறு வேறாகக் கூறவேண்டும்.

மேற்கோள்.

இனி அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்றுகாண உளதாய் நிற்பது ஞானசொரூபமென்றது.

ஏது.

வேற்றியல்பாகிய வன்னபேதங்களை வேற்றியல்பென்று கண்டு கழிப்பின் உளதாய் நிற்பது படிகசொரூபமாந் துணையான்.

இவ்வாறு பிரிக்கப்பட்டபடி மேற்கோளின் பொருள் மேலே கூறிவிட்டமையால் ஏதுவின் பொருள்கூறுதும். படிகத்தின் முன்வைக்கப்பட்ட நீலம் செம்மை முதலிய பொருள்களின் நிறங்கள் படிகத்திற் பதிந்தபொழுது அந்நிறங்கள் படிக ஒளியின் சொரூபத்தைத் தெரியவொட்டாமல் மறைத்து நிற்கும். அந்நிறங்களைப் படிக ஒளியின் வேறான நிலையில்லாதவைகள் எனக்காணின் அவ்வாறு காணுமிடத்து நிலையுடையதாய் விளங்கி நிற்பது படிக ஒளியின் சொரூபமாம். இந்த ஒற்றுமையால், நிலைத்திருக்கின்ற சிவஞானமாகிய தன் சொரூபத்தைக் காட்டாமல் மறைத்து நிற்கும் நிலையில்லாத பிரபஞ்சத்தை நிலையுடையது அன்று என்று விவேகித்து அறியின் அவ்விடத்து நிராலம்பமயமாய் விளங்கித் தோன்றுவது ஞான சொரூபமென மேற்கோள் கூறியது எ—று.

ஆலம்பம் என்பது ஆதாரம். நிராலம்பமென்பது ஆதாரமில்லாதது. ஆதாரமுடையது பற்றுக்கோடுடையதாயிருக்கும். ஆதாரமில்லாதது பற்றுக்கோடில்லாததாயிருக்கும். பற்றுக்கோடில்லாத பொருள் கடவுள் ஒருவரே. ஆகவே நிராலம்ப மயமாய் விளங்கித் தோன்றுவது ஞானசொரூபம் என்றதற்குக் கடவுள் மயமாய் விளங்கித் தோன்றுவது ஞானசொரூபமென்றுகொள்க.

வன்னபேத மென்பதற்கு நிறங்கள் என்று கொள்ளாமல் சித்திரம் எனக்கொண்டு சுவர்மேல் ஏற்றிச் சித்திரவடிவம் நிலையில்லாதது எனக் கண்டவிடத்து நிலையுடையசாய்த் தோன்றுவது சுவரின் வடிவம் என்று உரைத்தலுங்கூடும்.

அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்றுகாணும் முறை எவ்வாறெனின், ஆசிரியன் உபதேசித்த உபதேசப்பொருளின் உறைத்துநின்று சிவஞானசித்தியார் கூ-ம் சூ-ம சு-வது செய்யுளிற் கூறியபடி பைசாச பதத்திற்குரிய அட்டமாசித்திமை நோக்க எண்மடங்கு ஏற்றமாகிய அட்டசித்தியை உடைய பிரமபதம் முதலிய எல்லாப்புவனங்களும் அப்புவனங்களிலுள்ள அநுபவப் பொருள்களும் சக்கினசோறுபோலக் கண்டு அருவருத்துவிடல் என அறிக.

அசத்தை அசத்தென்று கண்டவிடத்துத் தோன்றும்
பதிஞானத்தின் இயல்புகூறி மேற்கோளை வலியுறுத்தும்
உதாரணம்.

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வ—னற்புதம்போ
லானா வறிவா யளவிறந்து தோன்றுனே
வானே முதல்களையின் வந்து.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின். அசத்தை அசத்தென்று கண்டொருவியவழித் தோன்றுவது சூனியமேயன்றிப் பிறிதில்லைப்போலுமென்பாரை நோக்கி ஞான சொரூபத்தி னியல்புகூறி அதனை வலியுறுத்துதலுதலிற்று.

(இ—ள்.) நிர்க்குணன் ஆய்— (அசுத்தப்பிரபஞ்சம்போல) முக்குணரூபமா யளவிட்டறியப்படுவானு மல்லனாய்,— நின்மலன் ஆய்—(முக்குணங்களைக் கடந்த மிச்சிரப் பிரபஞ்சம் போல) மல கன்ம காரியரூபமா யறியப்படுவானுமல்லனாய்,— நித்தியானந்தன் ஆய்—(மலகன்மங்களையுங் கடந்த சுத்தப்பிரபஞ்சம்போல) அநித்தியானந்த ரூபனாய் அயறியப்படுவானு மல்லனாய்,—தற்பரம் ஆய்—(இம்மூன்றனோடும் கூடிப் பொதுவியல்புபற்றி அவ்வாறுணரப்படு முயிர்போலன்றி அதற்குமேலாய்,—நின்ற தனிமுதல்வன்—இவ்வாறு நிற்றலான் (ஒன்றனியல்புபற்றி அறியப்படாத) தனிமுதலாகிய இறைவன்,— வான்முதல் களையின்— ஆகாசம் முதலிய அசத்தை அசத்தென்று கண்டொருவியவழி,—அளவு

இறந்து அற்புதம்போல் வந்து—பயின்றறிந்துவருந் தனது சுட்டறிவினளவினைக் கடத்தலான் (இன்னதென்றறியவாராத) சூனியப் பொருள்போலத்தோன்றி,—ஆனா அறிவுஆய்த் தோன்றானோ—(பின்னர்ச்சுட்டிறந்தறியுந்) தன்னறிவின்கணீங்காது நிலைபெறுவதாய்ச் ("சோதிக்குட் சோதியாய்" விளங்கித்) தோன்றான் கொல்லோ எ—று.

தற்பரம் தனக்குப்பரமென விரியும். தன்னென்றது உயிரை. அற்புதம் ஈண்டுச் சூனியத்தின்மேற்று. முதற்கட் சூனியமாய்த் தோன்றினுஞ் சூனிய மன்றென்பார் அற்புதம்போல் வந்தென்றார். ஆனாமை நீங்காமை. ஓகாரம் எதிர்மறை. ஏகாரம் அசைநிலை. வானே முதலெனவே தோற்றமுறைபற்றி வான்முதலாகிய பூதங்களும், ஒடுக்கமுறைபற்றி வான்முதலாகிய ஏனைத் தத்துவங்களுமடங்கும். நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியானந்தனாய்த் தற்பரமாயென்புழி ஆக்கச் சொல் உண்மை குறித்து நின்றது வடமொழிமதம். அறிவாயென்புழி ஆக்கம் வேறுபாடு குறித்துநின்றது. ஒற்றுமைபற்றி முதல்வனது ஞானத்தை முதல்வனென் றுபசரித்தார்.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) வானே முதல் களையின் அளவு இறந்து அற்புதம் போல் வந்து ஆனா அறிவு ஆய்த் தோன்றானே.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், மேற்கோளிற் கூறியவாறு அசத்தாகிய பிரபஞ்சத்தை அசத்தென்று அறிந்து நீக்கியவிடத்து வெறும் பாழாகிய சூனியம் தோன்றுமேயன்றி ஞான சொரூபந் தோன்றுமாறில்லை யென்பர் மாயாவாதிகள். அவரை நோக்கி ஞானசொரூபத்தின் தன்மை இவ்வாறெனக் கூறி அசத்தென்றுகாண உளதாய் நிற்பது ஞான சொரூபமென்னும் மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) முதல்வன், பிரகிருதி மாயாகாரியமாகிய சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் முக்குணரூபமாய் அளந்தறியப்படும் அசுத்தப் பிரபஞ்சம்போல் அறியப்படாதவனுமாய், மாயாகாரியங்களாகிய முக்குணங்களையுங் கடந்த ஆணவமல காரியமாகிய மோக முதலியனவாகவும் கன்மமல காரியமாகிய சுகதுக்காதி ரூபமாகவும் அளந்தறியப்படும் சுத்தாசுத்தப் பிரபஞ்சம்போல் அறியப்படாதவனுமாய், மலகன்மங்களையுங் கடந்த சிவதத்துவரூபமாய் அளந்தறியப்படும் சுத்தப்பிரபஞ்சம்போல் அநித்தியமாகிய ஆனந்தரூபனாய் அறியப்படாதவனுமாய், சுத்தம் சுத்தாசுத்தம் அசுத்தமென்னும் இம்மூன்று பிரபஞ்சங்களோடும் உயிர் கூடி அவ்வாறு கூடிநிற்றலாகிய

சாதனவியல்ஒன்பதாஞ்சூத்திரம். உ-ம் அதி.

பொது வியல்பினல் குணரூபனுகிய சகலராகவும், மலகன்மங்களோடு கலந்து நிற்கும் பிரளயாகலராகவும், மாயை கன்மங்களில்லாது ஆணவ மலத்தோடுகூடிய விஞ்ஞானகலராகவும் அறியப்படுமாறு போல் அறியப் படாது அவ்வுயிர்கட்கு மேலாய் நிற்பன். இவ்வாறு பிரபஞ்சங்களேயும் உயிர்களேயுங் கடந்து நிற்றலால் பிரபஞ்சங்களின் இயல்புபற்றியாவது உயிர்களின் இயல்புபற்றியாவது அறியப்படாது தனித்து நிற்கும் அம் முதல்வன், ஆகாசம் முதலிய பிரபஞ்சங்களே அசத்தென்று கண்டு அவற் றில் நின்றும் நீங்கியவிடத்து அப்பிரபஞ்சங்களோடு பழகி யறிந்துவந்த உயிராகிய தனது சுட்டறிவைக் கடந்து நிற்றலால், இன்னதென்று சொல்ல முடியாத சூனியப்பொருள்போல முன்னர்த்தோன்றிப் பின்னர்ச்சுட்டிறந் தறியும் தன்னறிவினிடத்தில் நீங்காது நிலைபெறுவதாய்ச் சோதிக்குட் சோதியாய் விளங்கித் தோன்றமாட்டானே? தோன்றுவன் எ-று.

(க-ரை.) பிரபஞ்சங்களேயும் உயிர்களேயுங் கடந்து தனித்துநிற்கும் முதல்வன், பிரபஞ்சங்களே அசத்தென்று கண்டு அப்பிரபஞ்சங்களில் நின் றும் நீங்கிய உயிரின் அறிவாகிய சோதிக்குள் சோதி சொரூபமாய்த் தோன் றுவன் என்பதாம்.

நிர்க்குணன் என்றதற்கு மாயாகாரியமாகிய சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் மூன்றுகுணமும் இல்லாதவனென்பதே பொருளன்றி ஒருகுணமும் இல்லாதவன் என்பது பொருளன்று. ஒருகுணமும் இல் லாதவனுயின் தன்வயத்தன் முதலிய எண்குணங்களுடையான் இறைவன் என்பதனேடு முரணும். அன்றியும், குணமில்லாத குணியுங் இல்லே யெனப்பட்டுச் சூனியவாதமாய் முடியும்; இதனைச் சிவஞானசித்தியார் கூ-ம் சூ-ம் கஉ-வது செய்யுள் விசேட உரையில் விரிவாகக் கூறியிருக்கின்ற மையால் அவ்விடத்துக் காண்க.

பிரபஞ்சங்களினின்றும் நீங்கியவிடத்து முதல்வன் முதலாவது சூனியம்போற் றேன்றிப் பின்னர்ச் சோதிக்குள் சோதியாய்த்தோன் றுவன் என்ற கருத்து என்னையெனின், பிரபஞ்சங்களோடு பழகிய அறிவைக் கடந்தவிடத்துத் தோன்றும் முதல்வன், இதுவரையும் அறிந்து வந்த பொருள்கள் ஒன்றனேடும் உவமித்துக்கூற முடியாது விளங்குவன் ஆதலின், இன்னதென்று அறியமுடியாத சூனியமோ என்று முதலாவது எண்ணக்கூடும்; சூனியமாயின் இன்பந்தருதல் இல்லே; இன்பந்தருதலால் சூனியமன்று; அறிவு ரூபமான சோதியென்று பின்னர் அறியக்கூடுமாத லால் அவ்வாறு கூறினரென அறிக.

தற்பரமென்றது தனக்குப் பரமென விரியும். தன் என்றது உயிரை. ஆதலால் தற்பரமென்றதற்கு உயிர்க்கு மேலாய் என உரைசெய்யப்பட்டது.

அற்புதம் என்றது இதுவரையுங் காணப்படாத அதிசயத்தைக் குறிக்கு மாயினும் இச்செய்யுளில் சூனியத்தைக் குறித்து நின்றது.

முதலாவது சூனியமாய்த்தோன்றினும் சூனியமன்று என்பதை அறிவிக்கவேண்டி அற்புதம்போல் வந்து என்ருர். வருதல் சூனியத்துக்கு இல்லை. பொருளாயிருந்தால்மட்டும் வருதல்கூடும். வருதலென்பது தோன்றுதல். அவ்வாறே உரையுஞ் செய்யப்பட்டது. ஆனு அறிவாய் என்றவிடத்து ஆனு என்பது நீங்காத என்னும் பொருளில் நின்றது.

தோன்ருனே என்பதிலுள்ள ஓகாரம் எதிர்மறையாய் நின்று தோன்றுவன் என்னும் உடன்பாட்டுப் பொருளைத் தந்துநின்றது.

வானே என்றதிலுள்ள ஏகாரம் அசைநிலை. வானே முதல் என்றதனுல் ஆகாயம் முதலாகத் தோன்றும் முறைபற்றிக் கீழுள்ள ஐந்து பூதங்களும், ஆகாயம் முதலாக ஒடுக்கும் முறைபற்றிப் பூதங்களுக்கு மேற்பட்ட முப்பத்தொரு தத்துவங்களும் அடங்கும்.

நிர்க்குணன் ஆய் நின்மலன் ஆய் நித்தியானந்தன் ஆய் தற்பரம் ஆய் என்றவிடத்து ஆய் என்னும் ஆக்கச்சொல் அத்தன்மை முன்னின்றி இப்பொழுது உண்டானதென்பதைக் குறிக்காமல் எப்பொழுதும் உள்ளதென்பதைக்குறித்து நின்றது. ஆய் என்பதற்கு உள்ளது எனப் பொருள்கொள்ளுதல் வடமொழி மதம்.

ஆனு அறிவாய் என்றவிடத்து ஆய் என்னும் ஆக்கம் அற்புதமாகிய சூனியத்தின் வேறு என்பதைக்குறித்து நின்றது.

பிரபஞ்சம் நீங்கியவிடத்துத் தோன்றுவது சூனியமேயன்றி ஞானமில்லை என்பாரை மறுத்து ஞானமே தோன்றுமெனக் கூருமல் முதல்வன் தோன்ருனே என்று கூறினது என்னை எனின், முதல்வன் குணியும் ஞானம் குணமுமாதலால் குணத்துக்கும் குணிக்கும் வேற்றுமை இல்லாமைபற்றி முதல்வனுடைய ஞானந்தோன்றுமென்று கூறவேண்டியதை முதல்வன் தோன்றுவனென்று உபசரித்துக்கூறினரென அறிக.

அசத்தை அசத்தென்று கண்டவிடத்துத் தோன்றுவது பதிஞானமே
யன்றிப் பிறிதில்லையென்பதற்குக் காட்டும்
உதாரணம்.

சுட்டி யுணர்வதனைச் சுட்டி யசத்தென்னச்
சட்ட வினியுளது சத்தேகாண்—சுட்டி
யுணர்ந்தநீ சத்தல்லை யுண்மையைத் தைவம்
புணர்ந்ததனுற் போய்விட்டுப் போம்.

சிற்றுரை.

எ—து உ—ம் எனின், வானே முதல்களைந்தவழி அங்ஙனந் தோன்றுவதும் வேறென்றெனக் கோடும் ஞானசொரூபமென்றற்

குப் பிரமாணமென்னை யென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்.) சுட்டியுணர்வதனைச் சுட்டி அசத்துஎன்ன— (ஏகதேச் உணர்வாற்) சுட்டியுணரப்படுவதாய பிரபஞ்சத்தை (மேற்கூறியவாறே ஒரோ ஒன்றாகச்) சுட்டி அசத்தென்று கண்டுகழித்துக் கொண்டு சென்றவழி,--இனிச் சட்ட வுளது சத்தேகாண்—முடிவின்கட் செம்மையே கோசரமாவது (யாது அஃது அவ்வசத்தின் வேறாகிய) சத்தேயாம் அதனை அறிவாயாக. (அற்றேல், அசத்தின் வேறாய் அங்ஙனந் தோன்றுஞ் சத்தாவது உயிரேயாமென அமையுமெனின்),—சுட்டி உணர்ந்த நீ சத்து அல்லை—(இதுகாறும் அசத்தோடு கூடிச்) சுட்டியறிந்துவந்த நீ (அசத்தின்வேறாய் அங்ஙனந் தோன்றுஞ்) சத்தாவாய் அல்லை. (அற்றேல் இச்சுட்டுணர்வு எனக்குநீங்குவ தின்று போலுமெனின்),—தைவம்(ஆய்) உண்மையைப் புணர்ந்து—(அசத்தின் வயப்பட்டு நின்று சுட்டியறிந்து வந்தநீ அதனை யொழிந்து அங்ஙனந்தோன்றிய) சத்தின் வயத்தினையாய் அதனைப் புணர்ந்தால்,—அதனால் பொய்விட்டுப் போம்—அப்புணர்ச்சியானே சுட்டுணர்வாகிய அப்பொதுவியல்பு நின்னை விட்டு நீங்கும் எ-று.

என்னவென்றது உபசாரவழக்கு. சட்ட வென்பது செப்பமுணர்த்தி நிற்பதோர் ரகர வீற்றிடைச்சொல்; அது சட்டமென இழிவழக்கின் மகரவீறாய் மரீஇயிற்று. அசத்தைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. உண்மை சத்தென்பன ஒரு பொருட் கிளவி. தைவமாயென ஆக்கச்சொல் வருவித்துரைக்க. புணர்ந்தா லென்பது புணர்ந்தெனத் திரிந்தது. உண்மைக்குத் தைவமாதல் புணரினென்ன உருபுமயக்கமாகக் கொண்டுரைப்பினுமமையும். பற்றறக் கழிக்தொழியு மென்பார் விடுமென்னாது விட்டுப் போமென்றார்.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ வெனின், மேலை வெண்பாவிற் கூறியபடி ஆகாயம் முதலாயதத்துவங்களை நீக்கியவிடத்து அற்புதம் போல் தோன்றுவதும் ஞான சொரூபமன்று; வேறுயாதானும் ஒன்று எனக்கொள்வதன்றி ஞான சொரூப மென்பதற்குப் பிரமாணம்யாது என்பாரை நோக்கிப் பிரமாணங்கூறி அசத்தென்றுகாண உள்தாய் நிற்பது ஞானசொரூபம் என்னும் மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) ஒன்றையறியும் பொழுது பிறிதொன்றனை யறியமுடியாத ஏகதேச அறிவால் கருதியறியப்படுவதாய பிரபஞ்சத்தை மேலை வெண்பாவிற் கூறியவாறு ஒவ்வொரு தத்துவமாக அறிந்து அசத்தென்று கண்டு நீக்கிக் கொண்டு சென்றவிடத்து முடிவில் நிறைந்தபொருளாக அறியப்படுவது எதுவோ அது தத்துவங்களாகிய அந்த அசத்தின்வேறான சத்தேயாம் என அறிவாயாக. அசத்தினை நீக்கியவிடத்து அந்தஅசத்தின்வேறாய் நிறைந்தபொருளாய்த் தோன்றுவது சத்தென்பது பொருந்தும்; அந்தச்சத்து முதல்வன் அன்று; உயிரேயாம் என்றால் உண்டாகுங் குற்றமென்னையெனின், இதுவரையும் அசத்தொடு கூடி நிலைத்தலின்றி ஒவ்வொரு பொருளாகச் சுட்டி அறிந்துவந்த உயிராகிய நீ, அவ்வசத்தின் வேறாய் எக்காலத்தும் ஒருதன்மையாய் நிலைத்த அறிவாய் விளங்கும் சத்தாகாய். அவ்வாறாயின் ஒவ்வொன்றாய்ச் சுட்டியறியும் ஏகதேச அறிவு எனக்கு நீங்காமல் எக்காலத்தும் நான் அசத்தொடுகூடி அசத்தனாகவே இருப்பனோ எனின், அசத்தொடு கூடி நின்று அவ்வசத்தைச் சுட்டியறிந்து வந்த நீ அவ்வசத்தை நீக்கியவிடத்து நிறைவான பொருளாய்த் தோன்றும் சத்தின் அடங்கி அந்தச்சத்தினைக் கூடின் அக்கூடுதலானே சுட்டியுணருவதாகிய அப்பொதுவியல்பு உன்னை விட்டு நீங்கும். ஆதலால் நீ அசத்துமாகாய் எ-று.

(க-ரை.) அசத்தை அசத்தென்று கண்டு நீக்கியவிடத்து நிறைந்த பொருளாயத் தோன்றுவது சத்தேயாயினும் அச்சத்துச் சிவமன்று உயிரேயாம் என்று சொன்னால் என்னகுற்றமென்பாரை மறுத்துச் சுட்டியறியும் பொருளாகிய உயிர் சுட்டிறந்து அறியும் நிறைபொருளாகிய சிவமாகாது ஆதலால் அசத்து நீங்கிய விடத்துத் தோன்றுவது சிவமேயென்பதாம்.

அசத்தென்ன என்றவிடத்து என்ன என்றது கண்டுகழித்து நீக்குதலைக் குறித்த உபசாரவழக்கு; இது எதுபோலஎனின், துன்பம் என்ன இன்பம் தோன்றம் என்றால் துன்பம் என்ற சொல்லளவில் இன்பம் தோன்றாது எனவும், துன்பம் என்று நீக்கியவிடத்து இன்பம் தோன்றுமெனவும் கொள்ளுதல் போலாம்.

சட்ட என்பது அகரத்தை இறுதியில் உடையதாய் செம்மையை உணர்த்திநிற்கும் இடைச்சொல். ஆதலால் சட்ட என்பதற்குச் செம்மை என உரை செய்யப்பட்டது. இதனைச் "சட்டநேர்படவந்திலாத" என்னுந் திருவாசகத்தானும் உணர்க. சட்ட் என்னும் இச்சொல் உலகவழக்கில் மகர ஒற்றை இறுதியாகக்கொண்டு சட்டம் என இழிவழக்காக மருவிவழங்கி வருகின்றது.

சத்தேகாண் என்பதிலுள்ள ஏகாரப் அசத்தன்று என அசத்தைப் பிரித்தமையால் பிரிநிலை.

சத்தேகாண் என்று மேலே கூறி உண்மையைப் புணர்ந்து என்று கீழே கூறியதால் சத்துவேறு உண்மைவேறு அன்று. உண்மை என்பதும்

சத்து என்பதும் ஒரு பொருட்சொற்கள். அவற்றுள் முன்னையது தமிழ் மொழி. பின்னையது வடமொழி. ஆதலால் உண்மையைத்சைவம் புணர்ந்து என்பதற்கு அங்ஙனம் தோன்றிய சத்தின் வயத்தினையாய் அதனைப் புணர்ந்தால் என உரைசெய்யப்பட்டது.

சைவம் என்றஇடத்து ஆய் என்னும் ஆக்கச் சொல் வருவித்துத் சைவம் ஆய் என உரைக்கப்பட்டது. சைவம் என்பது சிவத்தின் அடிமை என்பதாம். இது எட்டாஞ்சூத்திரம் மூன்றும் அதிகரணத்தில் சைவமாம் என்றவிடத்தும் கூறப்பட்டிருத்தல் காண்க.

சைவமாய்ப் புணர்ந்தால் என்று இருக்கவேண்டுவது புணர்ந்து எனத் திரிந்து நின்றது.

உண்மையை என்பதில் உள்ள இரண்டாம் வேற்றுமை ஐ உருபை மயக்க விதியின்படி நான்காம் வேற்றுமைக் குவ்வுருபாகக் கொண்டு உண்மைக்குத் சைவமாய்ப் புணர்ந்தால் என்று கூறினும் பொருந்தும்.

பொய்விடும் என்றுவது பொய்போம் என்றுவது கூறினாலே போதியதாகவும் விட்டுப்போம் எனஒரு பொருளைத்தரும் இருமொழிகளைக் கூறிய கருத் தென்னையெனின், ஒருபொருளை விடினும் அப்பொருளின் பற்று அறுதிருத்தல் கூடும்; பற்று அறுமையால் விட்டபொருளை மீளக் கூடவும் நேரும்; ஆதலால், வேண்டாத பொருளாயின் அப்பொருளை விடுதலோடு அப்பொருளின் பற்றும் ஒழியவேண்டும் என்பதை அறிவிக்க வேண்டி விடும் என்றதோடு நில்லாது விட்டுப்போம் என்று கூறினர். விட்டு என்றதிலுள்ள விடுதல் பற்று நீக்கத்தையும், போம் என்றதிலுள்ள போதல்பொருளின் நீக்கத்தையும் குறித்தவாறு அறிக. இக்கருத்தேபற்றித் திருநாவுக்கரசுசுவாமிகள் "அருந்துணையை" என்ற திருத்தாண்டகத்தில் "பொருந்துணைமேல் வரும்பயனைப் போகமாற்றி" என அருளிச்செய்தார். இப்பாசுரத்தில்"போக என்பதற்கும் மாற்றிஎன்பதற்கும் மேற்கூறிய முறைப்படியே பொருளின் நீக்கத்தையும் பற்று நீக்கத்தையும் கொள்க.

அசத்தை அசத்தென்று கண்டு நீக்கிச் சத்தாகிய சிவத்தை
அடைதற்கு உபாயங் கூறும்

உதாரணம்.

கண்டதை யன்றன் றேனவிட்டுக் கண்டசத்தா |
யண்டனை யான்மாவி லாய்ந்துணரப்—பண்டணைந்த
வூனத்தைத் தான்விடுமா றுத்தமனி றேண்கருட
சானத்திற் றீர்விடம்போற் றுன்.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், அசத்தை அசத்தென்று கண்டொழியுமாறும் ஒழிந்தவழி உண்மையைத் தைவம் புணருமாறும் புணர்ந்தவழி அதனாற் போய்விட்டுப் போமாறும் யாங்ஙனமென்பாரை நோக்கி அவற்றைத் தெரித்துணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) கண்டதை அன்று அன்று எனக்கண்டு அசத்து ஆய்விட்டு—சுட்டியுணரப்பட்ட பிரபஞ்சத்தை இது சத்தன்று இது சத்தன்றென ஒரோ ஒன்றாகவைத்து நோக்கி யசத்தென்றொழித்து,—ஆன்மாவில் அண்டனையாய்ந்து—(அவ்வாறு கண்டொழிந்த) தன்னறிவின்கண்ணே (சுட்டுணர்வின்றி நின்ற) கடவுளையாராய்ந்து,— உணர—சோகமெனப்பாவிப்பனாயின்,—உத்தமனின் பண்டு அணைந்த ஊனத்தைத் தான்விடுமாறு—(அப்பாவகத்தான் அத்துவிதமாய் விளங்கித்தோன்று) முதல்வனால் அனாதியாய்க் கூடி நின்ற பொதுவியல்பைத் தான்விட்டு நீங்குமாறு,—ஒண்கருடசானத்தின் தீர்விடம்போல்—ஒள்ளிய கருடதியானத்தில் (விளங்கித் தோன்றும் மந்திரமாதவிக கருடனால் அப்பாவகன்) விடத்தைத் தீர்த்துக் கொள்ளுமாறு போலாம் எ-று.

தான் என்பது முன்னையது எழுவாய், பின்னையது அசை. சானம் பாதச் சிதைவு.

கருடதியானமாவது யாதெனிற் கூறுதும்; ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், ஆத்தியான்மிகம் எனக் கருடன் மூவகைப்படும். பொருடோறும் இவ்வாறு கண்டுகொள்க. அவற்றுள், உலகத்திற் காணப்படும் கருடன் ஆதிபௌதிக கருடன்; அதற்கு அதிதெய்வமாகிய மந்திரம் ஆதிதைவிக கருடன்; அம்மந்திரம் இடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிக கருடன் எனப்படும். அம்மூன்றனுள் ஈண்டுக் கருடனென்றது கருடனுக்கு அதிதெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்தின் அதுபோல் வைத்துத் தியானஞ்செய்து கணிக்கப்படும் மந்திர ரூபமாகிய ஆதிதைவிக கருடனை. அதனைப் பாவித்தலாவது நாடோறும் பயின்று வந்த பயிற்சி விசேடத்தால் அம்மந்திர ரூபமே தானாக அநன்னியபாவனை செய்து தன்னறிவு அதன் வயத்ததாம்படி உறைத்து நிற்றல். அவ்வாறு நின்று அம்மந்திரக்கண் கொண்டு

பார்ப்பவே அஃதவ்விட வேகத்தை மாற்றுதல் ஒரு தலையாகலின் அப்பாவனை ஈண்டைக்குவமையாயிற்று. புள்ளு விலங்கு மரம் முதலியவற்றிற்கெல்லாம் அதிதெய்வமந்திர முளவென்பதூஉம், மந்திரங்களைக் கணிப்போன் படிகம்போல மந்திர சொரூபியாவனென்பதூஉம் சருவஞானோத்தர முதலியவற்றுட் காண்க. இதனானே கருடபாவனை அசத்திய மென்பார்மதம்போலியாயவாறு முணர்க. அல்லதூஉம், பாவனைபோலியாயவழி அது பயன்றருமாறியாண்டைய தென்றொழிக.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், மேலை வெண்பாவிற் கூறியவாறு அசத்தாகிய பிரபஞ்சத்தை அசத்தென்று கண்டு நீக்கும் முறை எவ்வாறு? பிரபஞ்சம் நீங்கிய இடத்துச் சத்தாகிய சிவத்தினை அசற்கு அடிமையாய் அடங்கிக் கூடுவது எவ்வாறு? அச்சிவத்துடன் கூடியவிடத்துப் பொய்யாகிய பிரபஞ்சம் விட்டுப்போதல் எவ்வாறு? என்பாரை நோக்கி அம்மூன்றனையும் விளக்கிக்காட்டி மேற்கோளை வலியுறுத்தியவாறும்

(பொ-ரை.) கருதி அறியப்படுகின்ற பிரபஞ்சத்தை ஒவ்வொரு பொருளாக நோக்கி இது நிலையுடையதன்று இது நிலையுடையதன்று என எல்லாப் பொருளையும் நீக்கின இடத்து அவ்வாறு நீக்கிய தன்னறிவின் கண்ணே வியாபக அறிவாய் விளங்குஞ் சிவத்தை ஆராய்ந்து அச்சிவம் நான் எனப் பாவிக்கவேண்டும்; அவ்வாறு சிவோகம்பாவனை செய்வனாயின் அப்பாவனையால் பாவனாதீதமாகிய முதல்வன் பாவிப்பவனுடைய அறிவில் பிரிப்பின்றி விளங்கித் தோன்றுவன்; அவ்வாறு தோன்றும் முதல்வனால் உயிருடன் அனாதியாய்க்கூடி நின்ற பொதுவியல்பாகிய ஆணவமலப்பற்றை விட்டு அவ்வுயிர் நீங்கும்; அவ்வாறு நீங்குதல் எதுபோல எனின், பாம்பின் விடத்தால் துன்புறுகின்ற ஒருவன் பிரகாசம் பொருந்திய கருடதியானம் செய்து அத்தியானத்தால் தியானிப்பவன் மனதில் தெய்வத்தன்மையுடைய மந்திர கருடன் தோன்ற அம்மந்திர கருடனால் விடத்தை நீக்கிக்கொள்ளுமாறுபோலாம் எ-று

(க-ரை.) பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு பொருளின் நிலையாமையை அறிந்து அப்பிரபஞ்சம் அனைத்தையும் நீக்கிச் சிவம் நான் எனப் பாவிக்கில் அப்பாவனையால் தன்னறிவினிடத்தில் அச்சிவம் விளங்கித் தோன்ற அதனால் அநாதியாய்க்கூடி நின்ற ஆணவமலப்பற்று விட்டு நீங்கும் என்பதாம்.

ஊனத்தைத் தான் விடுமாறு என்றவிடத்துத் தான் என்பது உயிரைக் குறித்து நின்றலால் எழுவாய். இறுதியிலுள்ள தான் என்பது அசை.

சானம் என்றது தியானம் என்ற வடமொழிச் சொல்லின் சிதைவு. இது கைத்த என்பது கைச்ச என வழங்குமாறுபோல் தகரம் சகரமாய்த் திரிந்ததாம். கருடதியானமாவது உலகத்திற் காணப்படுங் கருடனைத் தியானிப்பதன்று. வேறு என்னையெனின், கூறுதும்; ஆதிபௌதிக கருடன், ஆதிதைவிக கருடன், ஆத்தியான்மிக கருடன் எனக்கருடன் மூவகைப்படும். ஒவ்வொரு பொருளினும் இவ்வாறே பௌதிகம், தைவிகம், ஆன்மிகம் என மூன்றும் கண்டுகொள்க. அதாவது ஒவ்வொரு உயிருக்கும் உடல் ஒன்று மந்திரம் ஒன்று அம்மந்திரத்தில் நிற்கும் தெய்வத்தன்மையொன்று ஆகமும்மூன்றுண்டு. அம்மூன்றனுள் உடல் பூதகாரியமாகலால் பௌதிகமெனவும், மந்திரம் தெய்வசம்பந்த முடைமையால் தைவிகமெனவும், தெய்வத்தன்மை சிவசத்தியின் காரியமானதால் ஆன்மிகமெனவும் கூறப்படும். ஆதலால் உலகத்திற் காணப்படும் கருடனாகிய பறவை ஆதிபௌதிக கருடன்; அக்கருடனுடைய உயிரில் அந்தரியாமியாய் இருக்கும் தெய்வசம்பந்தத்தைக் குறிக்கின்ற மந்திரம் ஆதிதைவிக கருடன்: அம்மந்திரத்தின் இடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிக கருடன் எனப்படும். அம்மூன்று கருடனுள் இச்செய்யுளில் கருடன் என்றது தைவிகமாகிய கருட மந்திரத்தை என அறிக. அம்மந்திரத்தைச் சுத்தமனத்தால் பாவித்தலே கருடபாவனை. பாவிப்பது எவ்வாறெனின், நாள்தோறும் பழகிவந்த பழக்க விசேடத்தால் அம்மந்திரரூபமே சாதக மந்திரம் எனவும் தான் எனவும் பேதமின்றித் தன்னறிவு அம்மந்திரத்தின் வசமாய் உறைத்து நிற்றலாம். அவ்வாறு உறைத்து நின்று அம்மந்திரக் கண்ணால் நோக்கவே, அந்நோக்கம் அவ்விடவேகத்தை மாற்றுதல் துணிபாம். ஆதலால் அக்கருடபாவனை இவ்விடத்துக்கூறிய சிவோகம் பாவனைக்கு உவமையாயிற்று. பறவை, மிருகம், மரம் முதலியவற்றிற்கெல்லாம் மந்திரமும் அதிதெய்வமும் உண்டென்பதூஉம், மந்திரங்களைக் கணிப்பவன் சார்ந்தபொருளின் வண்ணமாகும் படிகம்போல் மந்திர சொரூபியாவன் என்பதூஉம் சருவஞானோத்தர முதலிய ஆகமங்களுட் காண்க.

இவ்வெண்பாவினால் சிவோகம்பாவனையால் பிரபஞ்சம் விட்டுப்போம் எனக் கூறியதூஉமன்றிக் கருடபாவனை அசத்திய மென்பார் மதம் பொருந்தாதெனவுங் கூறியவாறு அறிக. அன்றியும் பாவனை பொய்யாகும்போது அப்பாவனை விடம் நீங்குதலாகிய பயன்றருதல் எவ்வாறு கூடுமெனப் பொய்யென்று கூறும் கூற்றை மறுக்க.

இரண்டாம் அதிகரணம் முற்றிற்று.

மூன்றாம் அதிகரணம்.

பதிஞானத்தைப் பெற்றவிடத்தும் பழையவாசனை தாக்காதிருத்தற்பொருட்டுப் பஞ்சாக்கரஜெபம் செய்யவேண்டுமெனக் கூறும்

மேற்கோள்.

இனி இவ்விடத்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க வென்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், ஆன்மாவைச் சுத்திபண்ணுதற்குப் பாசமொருவியவழித் தண்ணிழலாய்ப் பிரகாசித்த ஞான சொரூபமொன்றே அமையுமாகலின் இவ்விடத்தில் இனிச் செய்யக்கடவதொன்றில்லை யென்பாரை நோக்கிச் சூத்திரத்தின் மூன்றாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

(இ-ள்.) மேற்பாச மொருவி ஆண்டுத் தண்ணிழலாய்ப் பிரகாசித்த ஞானக்கண்ணாற் பதியைச் சிந்தைநாடிய பின்னர் அவ்விடத்துத் திருவஞ்செழுத்தையும் விதிப்படி கணிக்கவென மேற்கொண்டது எ-று.

இறந்தது தழீஇய வெச்ச உம்மை விகாரத்தாற் றொக்கது. அற்றாகலினன்றே "பின்னுமோசை தருமஞ்செழுத்தை விதிப்படியுச்சரிக்க" என்றார் வழிநூலாசிரியரு மென்க. ஈண்டு ஸ்ரீபஞ்சாக்கரம் என்றது முத்தி பஞ்சாக்கரத்தை. திருவஞ்செழுத்தாற் சாதிக்கப்படும் பொருளும் அதுவேயாகலான் வேறுவகுத்துக்கூறவேண்டாமையின், விதிப்படியென மாட்டெறிந்தொழிந்தார்.

இவ்வாறாசிரியர் மாட்டெறிந்ததூஉமுணராதார் சாதித்து நிற்குமுறை வேறே, ஓதுமுறை வேறே எனச் சித்தாந்த வழக்கொடு முரணிக்கூறுவர். நிற்குமுறைமையும் ஓதுமுறைமையுந் தம்முளியைபில்வழி அஃது அதற்குச் சாதனமாமாறு யாண்டையதென்றொழிக. மானதம் மந்தம் உரையெனக் கணிக்குமாறு மூவகைப்படும். அவற்றுட் சுத்தமானத மெனப்படும் அறிவாற் கணித்தலே ஈண்டு உச்சரித்தலென்பார் சூத்திரத்துள் உச்சரிக்க வென்றது எண்ணுகவென்றார். வடமொழிச் சூத்திரத்துத் தியானிக்க வென்றதும் அது. இன்னும் இதன்கட்படு மியல்பெல்

லாம், உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிப்பாட்டு, நெஞ்சுவிடுதூது முதலியவற்றுட் காண்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

விளக்கம்.

இம்மேற்கோள் சூத்திரத்துள்ள விதி எண்ணுமஞ்செழுத்தே என்ற மூன்றாங் கூற்றைப் பதச்சேதஞ்செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோவெனின், இச்சூத்திரத்திற்குச் செய்த கருத்துரையின்படி ஆன்மாவைச் சுத்தி பண்ணுதற்கு இரண்டாம் அதிகரணத்திற் கூறியவாறு பாசத்தை நீக்கியவிடத்துக் குளிர்ந்த நிழலாய் விளங்கித்தோன்றும் ஞானசொருபமொன்றே போதுமாதலால் ஞானம் பிரகாசித்து விட்டால் அதன்மேல் ஆன்மசுத்தியின் பொருட்டுச் செய்யவேண்டுவது ஒன்றுமில்லையென்பாரை நோக்கிச் சூத்திரத்தின் மூன்றாங்கூற்றைப் பதச்சேதஞ்செய்து ஞானம்பிரகாசித்தாலும் அதன்மேல் பஞ்சாக்கர மந்திரத்தையும் உச்சரிக்கவேண்டுமெனக் கூறியவாறும்.

இவ்வதிகரணத்தில் ஞானம் பிரகாசித்த பின்னர்ச் செய்யவேண்டுவதுண்டோ இல்லையோ என்பது ஐயப்பாடு. இல்லையென்பது பிறர்பக்கம் என அறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) மேல் இரண்டாம் அதிகரணத்திற் கூறியவாறு பிரபஞ்சயாகிய பாசத்தை நீக்கி, நீக்கினவிடத்துக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டுத் தோன்றும் ஞானக்கண்ணால், உயிராகிய தன்னறிவின் கண்ணே சிவபெருமானை யாராய்ந்து அறிந்த பின்னர், ஞானக்கண்ணால் பதியை அறிந்த அவ்விடத்தும் வாசனாமலம் நீங்குதற்பொருட்டுத் திரு அஞ்செழுத்தையும் விதிப்படி கணிக்கவேண்டும் எ—று.

ஞானம் பிரகாசித்த விடத்தும் பஞ்சாக்கரத்தை உச்சரிக்க என இரண்டாம் அதிகரணப்பொருளைத் தழுவி நிற்கும் இறந்தது தழுவிய உம்மை இம்மேற்கோளில் பஞ்சாக்கரத்தை என்றவிடத்துத் தொக்கு நின்றது. அந்த உம்மை விரித்துத் திரு அஞ்செழுத்தையும் என உரை செய்யப்பட்டது. அந்த உம்மை இறந்தது தழுவியதோடு உச்சரிக்க என்பது கொண்டு முடியவேண்டிய எச்சமாய் நிற்றலால் இறந்தது தழுவிய எச்ச உம்மையாம். இவ்வாறு இம்மேற்கோளில் இறந்தது தழுவிய எச்ச உம்மை விரித்து உரைக்கவேண்டுமென்பது பற்றியே, சிவஞானசித்தியார் சூ-ம் சூ-ம் க-வது செய்யுளில் "பின்னுமோசைதரு மஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க" என்றவிடத்துப் பின்னும் என உம்மையை விரித்தார் வழிநூலாசிரியரும்.

பஞ்சாக்கரமாவது தூலபஞ்சாக்கரம் சூக்குமபஞ்சாக்கரம் அதிசூக்கும பஞ்சாக்கரமென மூத்திறப்படும்; அவற்றுள், தூலபஞ்சாக்கரம் நகரத்தை

முதலாக உடையது. சூக்குமபஞ்சாக்கரம் சிகரத்தை முதலாக உடையது. அதிசூக்குமபஞ்சாக்கரம் நகரமகரங்களிரண்டுமின்றி ஏனைய மூன்றெழுத்தும் முன்னும் பின்னுமாய் மாறுதலால் ஐந்து எழுத்து ஆகிச் சிகரத்தை முதலாக உடையது. அதிசூக்குமபஞ்சாக்கரம் காரணபஞ்சாக்கரமெனவும், முத்திபஞ்சாக்கர மெனவும் கூறப்படும். இம்மூவகைப் பஞ்சாக்கரத்துள் இம்மேற்கோளில் 'ஸ்ரீபஞ்சாக்கரத்தை' என்று கூறியது முத்திபஞ்சாக்கரத்தை என அறிக.

இம் முத்திபஞ்சாச்கரத்தை உச்சரிக்கு முறையை வகுத்துக் கூறாமல் விதிப்படி உச்சரிக்க என்றுகூறிய கருத்தென்னையெனின், பாசத்தை நீக்கி ஞானக்கண்ணாற் சிவனை நாடுவதே முத்தி பஞ்சாக்கரத்தின் பொருளாதலால் அவ்வாறு நிற்றலை இரண்டாம் அதிகரணத்திற் கூறிவிட்டமையின், நிற்கும் அந்த முறையே ஓது முறையும் என அறிவிக்கவேண்டி இவ்விடத்தில் வகுத்துக் கூறாமல் விதிப்படி என இரண்டாம் அதிகரணப் பொருளையே இவ்வதிகரணத்திற்கும் மாட்டிவிட்டன ரென அறிக.

இவ்வாறு ஆசிரியர் இரண்டாம் அதிகரணத்திற் கூறிய விதியை மூன்றாம் அதிகரணத்திற்கு மாட்டி விட்டதையும், முத்தி பஞ்சாக்கரத்தின் பொருளையும் உணராதார், இரண்டாம் அதிகரணத்திற் கூறிய சாதித்து நிற்குமுறை வேறெனவும், இவ்வதிகரணத்திற் கூறிய ஓது முறை வேறெனவும் சித்தாந்த வழக்கத்திற்கு மாறுபட்டுக் கூறுவர். சித்தாந்தத்தில் நிற்குமுறையும் ஓதுமுறையும் ஒன்றற் கொன்று சம்பந்தமுடைய தாகவே இருக்கும். சம்பந்தம் இல்லாதவிடத்து நிற்கு முறைமை நிலைப்பதற்கு ஓதுமுறைமை சாதனமாவது எவ்வாறு கூடுமென வேறென்பாரை மறுத்து விடுக. நிற்கு முறையாவது, உயிர் பாசத்தை நீக்கி ஞானக்கண்ணால் பதியை நாடுதல். ஓது முறையாவது, பாசஎழுத்தை நீக்கி அருளெழுத் தொடும்பதி எழுத்தொடும் உயிரெழுத்து நிற்றல். இதனைத் திருவருட்பயன் ஐந்தெழுத்தருள் நிலை ஒன்பதாவது பாட்டில் "ஆசினவா நாப்ப ணடையா தருளினல் வாசியிடை நிற்கைவழக்கு" என்று புடைநூலாசிரியர் அருளிய வாற்றாலறிக. இன்னும் இதன் உண்மையெல்லாம் ஞான குருவினிடத்துக் கேட்க.

சூத்திரத்துள் உச்சரிக்க என்று கூறாது எண்ணுக என்று கூறிய கருத் தென்னையெனின், மந்திரங்களை உச்சரித்தல் மானதம், மந்தம், உரையென மூவகைப்படும். அவற்றுள் மானதமாவது மனத்தாற் பாவித்தல். மந்தமாவது சூக்கும வைகரிவாக்கால் தன் செவிக்குமட்டும் கேட்கும்படி உச்சரித்தல். உரையாவது தூலவைகரிவாக்கால் தனக்கும் பிறருக்கும் கேட்கும்படி உச்சரித்தல். இம்மூன்றனுள், தூலவைகரி வாக்கால் உச்சரிக்குங் காலத்து மனங்கலவா திருத்தலும் கூடும். இக்கருத்துப் பற்றியே "நான் மறக்கினுஞ் சொல்லும் நா நமச்சிவாயவே" என்றருளிச் செய்தார் சுந்தரமூர்த்திசுவாமிகளும். சூக்கும வைகரிவாக்கால் உச்சரிக்குங்காலத்து மனமும்

கலந்தே உச்சரிக்கப்படும். மானதமாய்ப் பாவிக்குங்காலத்து வாக்கின் கலப்பின்றிமனம் தனித்து அறிவுருபமாய் நின்று பாவிக்கப்படும். வாக்கின் கலப்பில்லாமையால் இப்பாவனை சுத்தமானதம் எனப்படும். இந்தச் சுத்தமானதமாகிய அறிவாற் கணித்தலே இவ்வதிகரணத்தில் உச்சரித்தல் என்பதன் பொருளென அறிவிக்கவேண்டிச் சூத்திரத்துள் உச்சரிக்க என்று கூருமல் எண்ணுக என்ருர். எண்ணுதல் மனத்தின்ருெழில். வடமொழிச் சிவஞானபோதம் ஒன்பதாம் சூத்திரத்தில் தியானிக்க என்று கூறியதும் சுத்தமானதமெனப்படும் அறிவாற் கணித்தலையேயாம். இன்னும் இம்முத்திபஞ்சாக்கரத்தின்கண் உண்டாம் இயல்பெல்லாம் உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிப்பாட்டு, நெஞ்சுவிடுதூது முதலிய நூல்களுட் காண்க. இவ்விடத்துவிரிக்கிற் பெருகும்.

பதிஞானத்தைப் பெற்றவிடத்தும் வாசனையை நீக்குதற்பொருட்டுப் பஞ்சாக்கர ஜெபம் செய்யவேண்டு மென்பதற்குக் காட்டும்

ஏ து.

இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்புதின்ற புழுப்போல் நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின் அது நீக்குதற்கேனக் கோள்க.

சிற்றுரை.

எ-து எது எ-னின், அந்தரங்க வழிபாடாகலின் அசிந்திதனுய் நின்றபதியைச் சிந்திதனுகக் கண்டு வழிபடு மாற்றைச் சாரவைத்தோதற் பாலதாகிய இதனைச் சித்த சாதனமாய் ஈண்டு விதித்தல் எற்றுக் கென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) வேம்புதின்ற புழு அதனை யொருவிக் கரும்பைத்தலைப்பட்டு அதன் சுவை தெரிந்துழியும் பயிற்சிவயத்தான் நோக்கிற்றை நோக்கி நிற்குமாறுபோல அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்று கண்ட உயிர்களுக்கு அதனுன் ஞானசொரூபம் விளங்கி ஞேயங்காட்சிப் பட்டவிடத்தும் அவை பயிற்சிவயத்தாற் பண்டைச் சிற்றுணர்வை நோக்கிநிற்கு மாகலின் அவ்வாதனை நீக்குதற் பொருட்டு ஈண்டைக்கு வேண்டப்படுதலான் இனி ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி இவ்விடத்து உச்சரிக்கவென மேற்கொண்டதெனக் கொள்க எ-று.

இவ்விடத் தென்றதனல் அணைந்தோர் தன்மையைச் சாரவைத்து மேற்கோடற்குரிய ஸ்ரீபஞ்சாக்கரத்தை என வருவித்

துரைத்துக்கொள்க. எனக்கொள்கவென்று உடம்படுப் பித்ததும் அதுபற்றி. இக்கருத்து நோக்கியன்றே புடைநூலாசிரியர் அஞ்செழுத்தருணிலையை ஆன்மலாபத்தின் பின்னாக அணைந்தோர் தன்மையைச் சாரவைத் தோதியதூஉம் என்க. "வானோக்கி வாழும்" "கோனோக்கி வாழும்" என்றாற்போல ஈண்டு நோக்கென்றது மனவெழுச்சி விசேடத்தை. பிரகாசித்த வழி என்பது பிரகாசித்தெனத் திரிந்தது. ஈண்டு ஞானமென்றது அசத்தை அசத்தென்று கண்ட வழி விளங்குவதெனப்பட்ட ஞான சொரூபத்தை; அஞ்ஞான மென்றது அதற்கு மறுதலையாகிய சுட்டுணர்வை யென உணர்க. அது நீக்குதற் கெனக்கொள்க வெனவே, சித்தசாதன மன்றென்பதும் பெறப்பட்டது.

விளக்கம்.

இந்த எது என்னசொல்விற்றோ எனின், மேற்கோளிற் கூறியவாறு முத்திபஞ்சாக்கரத்தை அறிவாற்கணித்தல் அந்தரங்க வழிபாடாகும். முன்னர்ப் பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் அதன் கருத்துரையின்படி சிந்தைக் கெட்டாத சிவனைச் சிந்தைக்கு எட்டியவனாகக் கண்டு வழிபடும் அந்தரங்க வழிபாடே கூறப்படுதலின் அப்பன்னிரண்டாஞ் சூத்திரத்துடன் சேர்த்துக் கூறவேண்டிய இவ்வழிபாட்டை வேறுபிரித்துக் கூறியது முன்னர்ச் சித்திக்கும் பொருளையே சாதிப்பதாகிய சித்தசாதன மென்னுங் குற்றமாம். ஆதலால் ஒரு சூத்திரப் பொருளாகிய இவ்வழிபாட்டை வேறு பிரித்துக் கூறியது எதன்பொருட்டு என்பாரை நோக்கி வாசனாமலம் நீக்குதற்பொருட்டு எனக்கூறி மேற்கோளை வலியுறுத்தியவாறாம்.

(இந்த எதுவின் பொருள்.) வேம்புதின்ற புழு அவ்வேம்பை நீக்கிக் கரும்பைக் கூடி அக்கரும்பின் சுவையை அறிந்து அநுபவித்த விடத்தும், நீண்ட நாட்பழகிய பழக்கவசத்தால் அப்புழு முன்னர் அநுபவித்த வேம்பின் சுவையை நோக்கி அவ்வேம்பினிடத்து மீளுமாறுபோல, இரண்டாமதிகரணத்திற் கூறியவாறு அசத்தாயுள்ள பிரபஞ்ச பேதங்களை அசத்தென்று கண்டு நீக்கிய உயிர்களுக்கு அசத்தை நீக்கிய அதனால் ஞான சொரூபம் விளங்கி முதலதிகரணத்திற் கூறியவாறு அந்தஞானக் கண்ணுக்குப் பதி விளங்கித் தோன்றியவிடத்தும்; அவ்வுயிர்கள் பழக்கவசத்தால் பழைய சிற்றுணர்வாகிய பிரபஞ்ச உணர்வை நோக்கி நிற்கும். ஆதலால் அப்பழக்க வாசனையை நீக்குதற்பொருட்டு இவ்விடத்து இவ்வழிபாடு வேண்டப் படுதலின் இனி ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க என மேற்கோள் கூறியதெனக் கொள்க எ-று.

மேற்கோளில் ஸ்ரீபஞ்சாக்கரத்தை உச்சரிக்க என்று கூறியிருந்தாலே போதும். இவ்விடத்து என்று கூறியது எதற்காக வெனின், இவ்விடத்து என்றதனுல் பஞ்சாக்கரத்தை உச்சரிக்கவேண்டும் இடம் வேறு உண் டென அறியக் கிடக்கும். அதாவது சிவனை அணைந்த சீவன் முத்தர் பிரா ரத்தவினையின் பயனை அநுபவிக்குங் காலத்து அவ்வினைப்பயன் தாக்காதிரு த்தற் பொருட்டு முத்திபஞ்சாக்கரம் உச்சரிக்கப் படுவதாகும் ஆதலால் இப் பஞ்சாக்கர தியானம் அணைந்தோர் தன்மையைச் சாரவைத்து ஓதப்படல் வேண்டும்; அதனைச் சிவோகம்பாவனை கூறும் இவ்விடத்து சிவோகம் பாவனை நிலைத்தற் பொட்டுக் கூறினுராதலின் இவ்விடத்து என்ருர். ஆத லால் மேற்கோளுக்குக் கூறிய உரையில் அணைந்தோர் தன்மையைச் சார வைத்து ஓதவேண்டிய ஸ்ரீபஞ்சாக் கரத்தைச் சிவோகம்பாவனை கூறும் இவ்விடத்து உச்சரிக்க எனவருவித்து உரைத்துக்கொள்க. எதுவில் நீக்கு தற்பொருட்டு என்ருலே போதியதாகவும் எனக் கொள்க என்பதைச் சேர் த்துக் கூறியதும், அணைந்தோர் தன்மையை அடுக்க ஓதவேண்டுமென்பதை அறிவித்தற் பொருட்டேயாம். பிறிதொரு பொருளைத் தன்னுள் அடக்கி நிற்கும் எனக்கொள்க என்னும் உடம்பை அடுப்பித்து கூறியிருத்தலால் இது உடம்படுப்பித்தலாம். அதாவது சிவாநுபவம் நிலைத்தற் பொருட்டு அணைந்தோர் தன்மையை அடுக்கக்கூற வேண்டியதைச் சிவோகம்பாவனை நிலைத்தற் பொருட்டு இவ்விடத்துக் கூறினு ரென்றபடியாம். இப்பஞ்சாக் கரதியானம் சாதனம் நிலைத்தற்கும் அநுபவம் நிலைத்தற்கும் வேண்டப்படும் பொதுவான உபாய மென்னுங் கருத்துப்பற்றியே உமாபதி சிவாசாரியர்திரு வருட்பயன் என்னும் நூலில் ஆன்மலாபமான உயிர் விளக்கமும் ஆன்மலா பத்தின் பயனுகிய இன்புறுநிலையும் கூறியபின்னர் ஐந்தெழுத் தருணிலை கூறி அதன்பின்னர் அணைந்தோர் தன்மை கூறினுரென அறிக.

நோக்கிற்றை நோக்கிநிற்கு மென்றதில் நோக்கு என்பது இவ்விடத் தில் கண்ணுல் பார்க்கப்படும் பார்வையைக் குறிக்காமல் மன எழுச்சி விசே டமாகிய எண்ணத்தைக் குறித்து நின்றது. நோக்குதல் மன எழுச்சியைக் குறிக்கும் என்பதைத் திருக்குறளில் செங்கோன்மை அதிகாரத்தில் உ-வது செய்யுளில் ''வானேக்கி வாழும் உலகெல்லா மன்னவன்—கோனேக்கி வாழுங் குடி'' என்று கூறியவாற்ருனும் அறிக. கோனேக்கிவாழும் வானேக்கிவாழும் என்பதற்கு மழை உளதாதலாலுண்டாகிய மனவெழுச்சி விசேடத்தாலும் செங்கோல் உளதாதலாலுண்டாகிய மனவெழுச்சி விசே டத்தாலும் வாழும் என்பதுபொருள்.

ஞானம் பிரகாசித்தவழியும் யென்றிருக்க வேண்டுவது ஞானம் பிரகா சித்தும் எனத் திரிந்து நின்றது.

இந்தஎதுவில் ஞானம் என்றது இரண்டாம் அதிகாணத்துக் கூறிய வாறு அசத்தாகிய பிரபஞ்சத்தை அசத்தென்று கண்டவிடத்து விளங்குவ

தாகிய ஞானசொருபத்தை எனவும், அஞ்ஞானத்தை என்றது அந்தஞான த்துக்கு மறுதலையாகிய சுட்டுணர்வை எனவுங்கொள்க. சுட்டுணர்வாவது இது இன்னது இது இன்னது என்று ஒவ்வொரு பொருளாகச் சுட்டியறி யும் அறிவு. சுட்டுதல் கருதுதல்.

அகண்டாகாரமாய் ஒன்றுயறியும் ஞானத்தை விட்டுச் சுட்டி யறியும் அஞ்ஞானத்தைக் கூடவரின் அந்த அஞ்ஞானத்தை நீக்குதற் பொருட்டுப் பஞ்சாக்கர தியானமாகிய அந்தரங்கவழிபாடு கொள்க என்றதனல் சித்திப் பதைச் சாதிப்பதாகிய சித்தசாதன மன்றெனமேல் நிகழ்ந்த ஆசங்கையை நீக்கியவாறு அறிக. இதனல், மேலேசித்தித்ததைச் சாதிப்பதும் பின்னர்ச் சித்திக்கப்படுவதைச் சாதிப்பதும் சித்தசாதனமாகுமென உணர்ந்துகொள்க.

இந்தஎது, ஞானம் பிரகாசித்த பின்னர்ச்செய்ய வேண்டுவ தொன்றும் இல்லை யென்பாரைமறுத்து வாசன மலம் நீங்குதற்பொருட்டுப் பஞ்சாக்க ரத்தை உச்சரிக்கவேண்டுமெனக் கூறும் சித்தாந்தத் துணிபாயிற்று.

வாசனையை நீக்குதற்குப் பஞ்சாக்கரத்தை உச்சரித்தல்
சாதனமாகும் என்பதற்குக்காட்டும்

உதாரணம்.

அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை
யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
லண்டனுஞ் சேடனு மங்கு.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், இஃதவவாசனையை நீக்குதற்குச் சாதன மாமாறியாங்ஙன மென்பாரை நோக்கி அஃதாமாறு கூறி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) உள்ளம் அரன் உடைமை அஞ்செழுத்தால் கண்டு— உயிர் சிவனுக்குடைமை யாதலை அஞ்செழுத்தை உச்சரிக்குமுறை யில் வைத்து நோக்கி,—இதயத்தில் அரனை அஞ்செழுத்தால் அர்ச் சித்து—(தன்னுடம்பகத்தே இதயம் உந்தி புருவநடு வென்னுமூன் றனையும் முறையே பூசைத்தானம் ஓமத்தானம் தியானத்தான மாகக் கருதிக்கொண்டு புறம்பே ஞானபூசை செய்யும்முறைப்படி) இதயபங்கயத்தில் (அவ்வஞ்செழுத்தா லமைந்ததிருமேனியில்) அம்முதல்வனைக் (கொல்லாமை ஐம்பொறியடக்கல் பொறைஅருள அறிவு வாய்மை தவம் அன்பு என்னும் அட்ட புட்பங்கொண்டு) அம்மனுவா லர்ச்சனைசெய்து,—அஞ்செழுத்தால் குண்டலியின்

ஓமஞ்செய்து—அத்திருமந்திரத்தானே குண்டலித்தானமான உந்தியில் (ஞானவனலை எழுப்பி அதன்கண் விந்துத்தானத்தமிழ்த மாகிய நெய்யைச் சுழுமுனைநாடி இடைநாடியாகிய சுருக்குச் சுருவங்களா) லோமித்து,—கோதண்டம் சானிக்கில்—விந்துத்தான மாகிய புருவநடுவிற் (சிகர யகர வகரங்கண் மூன்றும் முறையே தற்பதப் பொருளும் துவம்பதப் பொருளும் அசிபதப் பொருளுமா முறைமை நோக்கி அதனாற்) சிவோகம்பாவனை செய்வனாயின்,—அங்கு அண்டன் ஆம்சேடன் ஆம்—அப்பாவனைக்கண் அம்முதல்வன் விளங்கித் தோன்றுவன் (அப்பாவகன் அவனுக்குச் சேட சேடியபாவகத்தால்) அடிமையாவன் எ-று.

ஓமித்தலும் தியானித்தலும் பூசைக்கங்கமெனஅறிக. ஞானசொரூபம் விளங்கிய வழியும் பயிற்சிவயத்தான் ஏகதேசப்பட்டுப் புறத்திற் செல்ல நோக்குவதாய தன்னறிவை அங்ஙனமாகாதவாறு மடக்கி அகத்தே ஒருகுறியின்கணிறுத்தி நிட்டைகூடும்படி அஞ்செழுத்தோது முறையில் வைத்துக்கண்டு சிந்திக்கச் சிந்திக்க அஃது அந்நோக்கத்தைப் பற்றறக் கெடுத்து ஞானசொரூபத்தை இனிது விளக்கிப் பூரண நிலையிற் கொண்டு செலுத்துமாதலின் இஃது ஈண்டைக்குச் சிறந்த சாதனமாயிற்றென்பது.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) உள்ளம் அரன் உடைமை அஞ்செழுத்தால் கண்டு இதயத்தில் அரனை அஞ்செழுத்தால் அர்ச்சித்து அஞ்செழுத்தால் குண்டலியின் ஓமம் செய்து கோதண்டம் சானிக்கில் அங்கு அண்டன் ஆம் சேடன் ஆம்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ எனின், இவ்வதிகரணத்து மேற்கோளிற் கூறிய பஞ்சாக்கர தியானம், ஞானசொரூபம் விளங்கியவிடத்தும் பிரபஞ்சத்தை நோக்கச்செய்யும் பழக்கவாசனையை நீக்குதற்கு எவ்வாறு சாதனமாகுமென்பாரை நோக்கிச் சாதனமாகும் முறைமை கூறி ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) உயிர் சிவனுக்கு உடைமைப் பொருளாதலை முத்திபஞ்சாக்கரத்தை உச்சரிக்கும் முறைமையில் வைத்து அறிந்து புறம்பே ஞானபூசை செய்வதற்குப் பூசைத்தானம் ஓமத்தானம் தியானத்தானம் வகுத்துக்கொண்டு பஞ்சாக்கரத்தினாலேயே அர்ச்சனை முதலியன செய்தல் போல, உடம்பினுள்ளே இதயத்தைப் பூசைத்தானமாகவும் உந்தியை ஓமத்தானமாகவும் புருவநடுவைத் தியானத்தானமாகவும் கருதிக்கொண்டு, பூசைத்தான

மாகிய இதயதாமரையில் மேற்கூறிய முத்தி பஞ்சாக்கரத்தையே திருமேனியாக உடைய சிவபெருமான் வீற்றிருப்பதாகப் பாவித்து அச்சிவபெருமானை யர்ச்சிப்பதற்குப் புறத்தில் அட்டபுட்பங்க ளிருத்தல்போலக் கொல்லாமை, ஐம்பொறி யடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம். அன்பு என்னும் அட்டபுட்பங்கொண்டு அம்முத்திபஞ்சாக்கரத்தால் அர்ச்சித்து, அதன்பின் அம் முத்திபஞ்சாக்கரத் தானே குண்டலினி சத்திவசிக்குந்தானமாகிய உந்தியில் ஞானமாகிய அக்கினியை எழுப்பி விந்துத் தானமாகிய புருவநடுவின்கண் அவ்வக்கினியாலுண்டாகும் அமிழ்தமாகிய நெய்யைச் சுழுமுனை நாடி இடைநாடியாகிய சுருக்குச் சுருவங்களால் அவ்வக்கினியின்கண் பெய்து ஓமம் செய்து, அதன்பின் விந்துத்தானமாகிய புருவநடுவில் சிகர யகர வகரங்கள்மூன்றும் முறையே தற்பதப் பொருளும் துவம்பதப்பொருளும் அசிபதப் பொருளுமான முறையை அறிந்து அம்முறைமையால் சிவம் நான்என்று சிவோகம்பாவனை செய்வனாயின், அப்பாவனையில் பாவிக்கப்படும் அம்முதல்வன் விளங்கித் தோன்றுவன். தோன்றவே அப்பாவனை செய்தவன், முதல்வனை விட்டுத்தனித்து நில்லாத சேட பாவனையாலும் தன்னைச் சேடமாக உடைய சேடியம் முதல்வன் என்றபாவனையாலும் அம்முதல்வனுக்கு அடிமையாவன் எ-று.

(க-ரை.) புறத்தே ஞான பூசைசெய்யும் முறைப்படி அகத்தே இதயம் உந்தி புருவநடு என்னும் மூன்றுதானங்களையும் முறையே பூசைத்தானம் ஓமத்தானம் தியானத்தானங்களாக வகுத்துக்கொண்டு பூசித்து ஓமித்துத் தியானிப்பனாயின் சிவனுக்கு அடிமையாவன் என்பதாம்.

சேடம் என்பது மிச்சப்பொருளைக் குறிக்கும். மிச்சம் என்பது யாதானும் ஒன்றன் மிச்சமாயிருக்குமே யன்றித் தனித்திருப்பதில்லை. தனித்திருப்பின் சேடம் என்று சொல்லப்பட மாட்டாது. ஆதலால் உயிர் சிவனையின்றித் தனித்து நில்லாமையை விளக்குதற்குச் செய்யுளில் சேடன் என்று கூறினர். எல்லா உயிரும் தனித்து நில்லாமையால் சிவனுக்குச் சேடமேயாயினும் அவ்வுயிர்கள் தம்மைச் சேடமென அறிவதில்லை. சிவோகம்பாவனை செய்கின்றவன் தன்னைச் சேடம் எனவும் முதல்வனைச் சேடியம் எனவும் அறிகின்றான்.

சுருக்குச் சுருவம் என்பன நெய்யைப் பெய்யும் துடுப்புகள். ஓமமும் தியானமும் பூசைக்கு அங்கமெனவும் பூசை அங்கியெனவும் அறிக. கோதண்டம் என்றவிடத்து ஏழாம்வேற்றுமைக் கண் உருபுவிரித்துப் புருவநடுவில் என்றும், அண்டனும் என்றவிடத்து நான்காம் வேற்றுமை குவ்வுருபு விரித்து முதல்வனுக்கு எனவும் உரைசெய்யப்பட்டது.

சாந்தோக்கிய உபநிடதத்திலுள்ள தத்தவமசி மகா வாக்கியம் தற்பதம் துவம்பதம் அசிபதம் என மூன்று பதங்களை உடையது. அம்மூன்றனுள்

தற்பதம் இறைவன் தடத்தநிலையாகிய பதித் தன்மையினையும், துவம்பதம் உயிரின் தடத்தநிலையாகிய பசுத்தன்மையினையும், அசிபதம் அவ்விருபொருள்களின் சொரூபநிலையாகிய ஐக்கியத்தையுங்குறிக்கும். "இதனை, வேதாந்த தொம்பத மேவும் பசுவென்ப—நாதாந்த பாசம் விடநின்ற நன்பதி—போதாந்த தற்பதம் போயிரண் டைக்கியஞ்—சாதா ரணஞ்சிவ சாயுச்சிய மாமே" என்னுந் திரு மந்திரத்தாலும் உணர்க. அவ்வாறாயின்," தொம்பதந் தற்பதஞ் சொல் லுமசிபத—நம்பிய முத்துரி யத்துமே னுடவே—யும்பத முப்பத மாகு முயிர்பரன்—செம்பொரு ளான சிவமென லாமே." என்னுந் திருமந்திரத்தால் அசிபதம் சிவம் ஒன்றையே குறிக்கவும் அதற்குமாறாக இருபொருள்களின் கலப்பைக் குறிக்குமென்றல் முரணாதோ எனின், முரணாது. எதனாலெனின், "சிவமாதல் வேதாந்த சித்தாந்த மாகும்" என்னும் திருமந்திரத்தின்படி முத்தியில் உயிர்சிவனைச் சார்ந்து சிவமாதலால் என்க. இதனை "வினாவு நீர் பாலாதல் வேதாந்தத் துண்மையே" என்ற திரு மந்திரமும் வலியுறுத்தும். இவ்வுண்மையறியாத ஏகான்மவாதிகள் நீரேதனித்து பாலாகும் என்றும் அதுபோல உயிரே தனித்துச் சிவமாகும் என்றும் கூறுவர். ஒன்றுமற்றொன்றாதல் உலகத்திற் கண்டிலமாதலானும், உவமேயத்தைத் தெளிவிப்பதற்குக் கூறும் உவமானத்தில்ஐயம் நிகழின் அது உவமானமாகாமையாலும் அவர் கூற்றுப்பொருந்தாதெனவிடுக்க. இம்மகாவாக்கியம் போலவே, சிகரம் பதியையுங் யகரம் பசுவையும் வகரம் அவ்விரண்டின் ஐக்கிய நிலையாகிய அருளையும் குறிக்கும். ஆதலால் இம் முத்திபஞ்சாக்கரம் சித்தாந்த மகாவாக்கியமென அறிக.

அசத்தை அசத்தென்று கண்டு ஞான சொரூபம் விளங்கித்தோன்றி எங்குந் தானாக நிட்டைகூடிய விடத்தும் பழையபழக்கவசத்தால் புறத்தே பிரபஞ்சத்திற் சென்று சுட்டியுணரு மாதலின், அவ்வாறுணரும் தன்னறிவைப் புறத்திற் செல்லவொட்டாது மடக்கி அகத்தே ஒருகுறியின்கண் நிறுத்தி நிட்டை கூடும்படி முத்திபஞ்சாக்கரத்தை உச்சரிக்கும் முறையில் வைத்துக் கண்டு சிந்திக்கச் சிந்திக்க அச்சிந்தனை அப்புற நோக்கத்தைப் பற்றறக்கெடுத்து ஞான சொரூபத்தைச் செவ்வையாக விளக்கிப் பூரணநிலையிற் கொண்டுபோய்விடு மாதலால் இம்முத்திபஞ்சாக்கர தியானம் பழைய பழக்க வாசனையை நீக்குதற்குச் சிறந்தசாதனமாயிற்றென ஆசங்கை நீக்கியவாறு அறிக.

இதயத்திற் பூசித்தலால் இறைவனைக் காண்டல் கூடுமென்பதற்கு உவமை கூறி வாசனையை நீக்குதற்பொருட்டு முத்திபஞ்சாக்கரம் உச்சரிக்க வேண்டு மென்பதை வலியுறுத்தும்

உதாரணம்.

இந்துவிற் பானுவி லிராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணா—முந்தவே
காட்டாக்கிற் றோன்றிக் கனல்சே ரிரும்பென்ன
வாட்டானா மோதஞ் செழுத்து.

சாதனவியல்ஒன்பதாஞ்சூத்திரம். ௯-ம் அதி.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், அங்ஙனம் ஒருகுறியின்கண் வைத்தன்றி முதல்வனைக் காண்டல் செல்லாதவாறும், அவ்வாறு கண்டவழி முதல்வன் தன்மாட்டு விளங்கித் தோன்றுமாறும், தோன்றிய வழித்தான் அம்முதல்வனுக் கடிமையாமாறும், உவமையில்வைத்து ணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ - ள்.) இராகுவை இந்துவில் பானுவில் கண்டாங்கு—(அந்தரத்தியங்கு நவக்கோள்களுள் ஏனையபோலக் காணப்படாத) இராகுகேதுக்களை (உபராகத்திற்) சந்திராதித்தர் மாட்டுக் கண்டாற்போல,—சிந்தையில்காணில்—(முப்பொருள்களுள் யானிதனை யறிந்தேன் அறிகின்றிலேன் என்னும் உணர்விற்கு விடயமாகிய பசுபாசங்களோ டொப்ப வேறுணரப்படாத முவல்வனைத்) தன் னிதய பங்கயத்தின்) அஞ்செழுத்தின் முறையின் வைத்துக்) காணுமாயின்,—உந்தவே காட்டாக்கின் சிவன் தோன்றிக் கண் ஆம்—(கோலைநட்டுக் கயிற்றினாற் சுற்றிக்) கடையவே காட்டத்தினின்று அங்கி தோன்றுமாறுபோல அம்முதல்வன் ஆண்டுத்தோன்றி அறிவுக்கறிவாய் விளங்கிநிற்பன்,—தான் கனல்சேர் இரும்பு என்ன ஆள் ஆம்—(அப்பொழுது தானும் எரிசேர்ந்த இரும்பு போலத் (தனது சுதந்திரத்தைவிட்டு அம்முதல்வனுக்கு) அடிமையாம்,—அஞ்செழுத்து ஓது—(ஆகலான்) அத்திருவஞ்செழுத்தை (விதிப்படி) யோதுவாயாக எ-று.

கேது சாயாக்கிரகமாகலின் வேறு கூறாராயினர். கண் அறிவு. தோன்றியா மென வியையும். உந்துதல் ஈண்டுக் கடைதல்மேற்று. காட்டாக்கி வடமொழிச் சிதைவு. இகரம் விகாரத்தாற் றொக்கது. இன் உவம உருபு. ஈண்டும் ஓதஞ்செழுத் தென்றது வலியுறுத்த வாறு.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) இராகுவை இந்துவில் பானுவில் கண்டாங்குச் சிந்தையில் காணில் உந்தவே காட்டாக்கின் சிவன்தோன்றிக் கண் ஆம் தான் கனல் சேர் இரும்பு என்ன ஆள் ஆம் அஞ்செழுத்து ஓது.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோவெனின், மேலை வெண்பாவிற் கூறியவாறு இதயத்தானமாகிய ஒரு குறியின்கண் முதல்வனைத் திருவஞ்செழுத்தாற் பாவித்தாலன்றிக் காணமுடியாதென்பதையும், அவ்வாறு

பாவித்துக் கண்டவிடத்து முதல்வன் தன்னிடத்தில் விளங்கித்தோன்றும் முறைமை இவ்வாறென்பதையும், முதல்வன் தோன்றியவிடத்துத் தான் அம்முதல்வனுக்கு அடிமையாம் என்பதையும், உவமையில் வைத்தறிவித்து வாசனையை நீக்குதற்கு முத்திபஞ்சாக்கரத்தை அறிவாற் கணித்தல் சாதனமாகுமென்று கூறிய எதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) வானத்தில் உலாவிக்கொண்டிருக்கும் ஆதித்தன் முதலாகிய ஒன்பது கிரகங்களுள் இராகு கேதுக்கள் நீங்கிய ஏனைய எழுகிரகங்களும் நேரே அறியப்படும். இராகு கேதுக்கள்மட்டும் அவ்வாறு அறியப்படமாட்டா. நேரே அறியப்படாத இராகு கேதுக்களைக் கிரகணகாலத்தில் சந்திரனிடத்தும் சூரியனிடத்தும் காண்டல்கூடும். அதுபோல, பதி பசுபாசமென்னும் முப்பொருள்களுள் யான் இதனை அறிந்தேன் அறிகின்றிலேன் என்றவிடத்து யான் அறிந்தேன் அறிகின்றிலேன் என்னும் உணர்விற்குப்பொருள் ஆன்மாவும் இதனை என்னும் உணர்விற்குப்பொருள் பாசமும் ஆதலால் ஆன்மாவின் அறிவிற்கு ஆன்மாவும் பாசமும் வேறாகக் காணப்படும். முதல்வன் பசுபாசங்களைக் கடந்து நிற்பன் ஆதலால் ஆன்ம அறிவிற்கு வேறு காணப்படமாட்டான். வேறு காணப்படாத அம்முதல்வனைத் தன் இதய தாமரையில் முத்திபஞ்சாக்கரத்தைத் தியானிக்குமுறையில்வைத்துக் காணுமாயின் அவ்வாறு காணும் அறிவில் வெளிப்பட்டுத் தோன்றி அறிவுக்கறிவாய் விளங்கி நிற்பன். இதயதாமரையில் வெளிப்பட்டுத் தோன்றுதல் எதுபோல எனின், விறகினிடத்துக் கோலைநட்டுக் கயிற்றினாற் சுற்றிக் கடையவே அவ்விறகில் நின்று அக்கினிதோன்றுமாறுபோலாம். அவ்வாறு முதல்வனைக் கண்டபொழுது அக்கினியைச்சேர்ந்த இரும்பு அக்கினியின் தன்மையாய்க் கறையுங் கடினமுமின்றி விளங்குமாறுபோல முதல்வனைக் கண்டதானும்மலமும் பசுபோதமும்விட்டு அம்முதல்வனுக்கு அடிமையாம். ஆதலால் அத்திருவஞ்செழுத்தை விதிப்படி உச்சரிப்பாயாக எ-று.

(க-ரை.) நேரே அறியப்படாத இராகு கேதுக்கள் கிரகணகாலத்தில் சந்திர சூரியரிடத்தில் விளங்கித் தோன்றுமாறுபோல, முதல்வன் சாதனகாலத்தில் இதயபங்கயத்தில் விளங்கித்தோன்றுவன். அவ்வாறு தோன்றுதல் விறகினிடத்துக் கோலைநட்டுக் கடைந்தவிடத்து அக்கினிதோன்றுமாறுபோலாம். அக்கினியைச்சேர்ந்த இரும்பு அக்கினியாமாறுபோல முதல்வனைச் சார்ந்த ஆன்மாவும் சிவமாய் அம்முதல்வனுக்கு அடிமையாம் என்பதாம்.

பசுயாதானுமொன்றைச்சார்ந்து அதன்வண்ணமாய் அறியப்படுமென்று எழாஞ்சூத்திரத்திற் கூறியதனோடு நேரே அறியப்படுமென்று இவ்விடத்துக் கூறியது முரணுதோ எனின், முரணாது. எவ்வாறெனின், யான் இதனை அறிந்தேன் அறிகின்றிலேன் என்றவிடத்துப் பசுவும் பாசமும் அறியப்படுமென்றதனால் இது என்னும் பாசத்தின் வாயிலாக அதனை உணர்ந்த தன்னை அறிதலேயன்றித் தனித்தறிவில்லையாதலால் என்க.

விறகினிடத்துக் கோலை நட்டுக் கடைந்தவிடத்து அக்கினிதோன்றுவதுபோல இதயபங்கயத்தினிடத்து முத்திபஞ்சாக்கரத்தாற்றியானித்தவிடத்து முதல்வன் தோன்றுவன் என்னும் இக்கருத்தேபற்றி "விறகிற்றீயினன் பாலிற்படு நெய்போல்—மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்—உறவு கோல் நட்டு உணர்வுகயிற்றினால்—முறுகவாங்கிக் கடையமுன் னிற்குமே" எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியவாறும். இப்பாசுரத்தில் விறகிற்றீயினன் என்றதும் பாலில் நெய்போல் என்றதும் முறையேபாசத்தினிடத்தும் பசுவினிடத்தும் நிற்கும் முதல்வன் தடத்தநிலையை உணர்த்துதற் கெனவும், மாமணிச்சோதியான் என்றது முதல்வன் சொரூப நிலையை உணர்த்துதற் கெனவும் அறிக. இந்நூலில் இவ்வெண்பாவில் விறகுபோல் இதயம். கோல்போல் பஞ்சாக்கரம். கடைதல்போல் தியானம் என அறிக. மற்றைய உவமைக்குப் பால்போல் ஆன்மா. ஏனைய இரண்டற்கும் ஒக்கும். இச்சூத்திரம் இரண்டாம் அதிகரணத்து மூன்றுவது வெண்பாவில் ஆன்மாவிலாய்ந்துணர என்றதுஇங்கே சிந்திக்கற்பாலது.

கேதுவும் இராகுவும் சாயையேயன்றித் தனித்த கிரகமன்று; ஆதலால் கிரகணகாலத்தில் தோன்றும் இராகு கேதுக்கள் என்று இரண்டையுங் கூறுமல் இராகுவை மட்டுங்கூறிக் கேதுவை வேறு கூறுராயினர்.

சிவன் கண்ணும் என்றவிடத்துக் கண் என்றது அறிவைக் குறித்து நின்றது. ஆதலால் அறிவுக் கறிவாய் விளங்கிநிற்பன் என உரை செய்யப் பட்டது.

மூன்றுவது அடியிலுள்ள தோன்றி என்பது இரண்டாவது அடியிலுள்ள கண் ஆம் என்பதன் மேலாகக் கூடித்தோன்றிக் கண் ஆம் எனப்பொருந்தும். அவ்வாறே உரைசெய்யப்பட்டது.

உந்தவே என்றதில் உந்துதல் செலுத்துதலைக் குறிக்குமாயினும் இச்செயுளில் கடைதலைக் குறித்து நின்றது.

காஷ்டாக்னி என்று இருக்கவேணடியது காஷ்டமும் அக்னியும் வடமொழி யாதலால் காட்டாக்கியென வடமொழிச் சிதைவாக நின்றது. காட்டாக்கின் என்றவிடத்து காட்டாக்கி இன்என்றே கொள்ள வேண்டுவதால் இகரம் விகாரத்தாற் றொக்குநின்றது. அந்த இன் உவமையைக் குறித்த உருபாம். ஆதலால் காட்டத்து அங்கிபோல என உரைசெய்யப்பட்டது.

மேலை வெண்பாவிலும் அஞ்செழுத்தால் வழிபடும் முறைகூறி இவ்வெண்பாவிலும் ஓது அஞ்செழுத்து என்று மீளவுங் கூறியது வலியுறுத்துதற்காக என அறிக.

இதயதாமரையின் இயல்புகூறிப் பஞ்சாக்கர தியானம் வாசனையை நீக்கும் என்பதை வலியுறுத்தும்

உதாரணம்.

மண்முத ளைமலர் வித்தை கலாரூப
மெண்ணிய வீசர் சாதாசிவமு—நண்ணிற்
கலையுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணு
நிலையதிலா மச்சிவன்றா ணேர்.

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், தத்துவ முப்பத்தாறுக்கும் மேற்பட்ட முதல்வனை இதயப்பங்கயத்திற் கண்டர்ச்சிக்குமாறு யாங்ஙனமென்பாரை நோக்கி அவ்விதய பங்கயத்தினியல்புணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) நண்ணில்—(அவ்விதயபங்கயத்தி னியல்பை அறியப்)புகின்,—மண்முதல் நாளம்—நில முதலிய இருபத்து நான்கு தத்துவமும் (உந்தியினின்றுந் தோன்றி எண் விரலளவைத்தாயுள்ள) நாளவடிவாம்,—வித்தைமலர்—வித்தியா தத்துவங்களேழுஞ் சுத்தவித்தையுமென்னும் எட்டுத் தத்துவமும் எட்டிதழ் வடிவாம்,—எண்ணிய ஈசர் சதாசிவமும் கலாரூபம்—(அத்தத்துவங்களுக்கு மேலாகக்) கருதப்பட்ட ஈசுரன் சதாசிவ மென்னும் இரண்டு தத்துவமும் அறுபத்துநான் கெனப்படுங் கேசர வடிவாம்,—சத்தி கலை உருவாம்—சத்திதத்துவம் அக்கேசரங்களுக்குள்ளாகிய பொகுட்டு வடிவாம்,—நாதம் அதன் கண்ணும்—சிவ தத்துவம் அப்பொகுட்டிற் காணப்படும் ஐம்பத்தொரு வீசவடிவாம்,—அதில் அச்சிவன் தாள்நிலையாம்—(ஆகலான்) அவ்வியல்பிற்றாகிய இதய பங்கயத்தின் (முப்பத்தாறு தத்துவமும் ஆசனமாக உடைய) அச்சிவனது சத்திநிலை பெறும்,—நேர்—(அதனையறிந்து திருவஞ்செழுத்தால்) அர்ச்சிப்பாயாக எ-று.

இதனானே "அண்டபிண்ட மவை சமமாதலால்" புறத்துக் காணப்படும் முப்பத்தாறு தத்துவமும் அகத்தினிற் சூக்குமமாய் உண்டென்பது காட்டி முதல்வனுக்கு இங்நிலையே அங்நிலை யெனத் தெளிவித்தவாறு. வித்தை என்பது இரட்டுற மொழிதலான் அவ்வாறுரைக்கப்பட்டது. சிவஞான சித்தியில் "மூட்டு மோகினி சுத்

தவித்தை மலரெட்டாய்" என்புழி மோகினி என்றதூஉம் ஆகு பெயரான் அதன்காரிய மாயகலாதிகளின் மேனின்றது.

இவ்வாறன்றி நிலமுதலிய முப்பத்தொரு தத்துவ மெனப்படும் எட்டுக் கொத்தும் எண் விரனுளவடிவும், அசுத்த மாயாதத்துவம் நாளத்துக்கும் மலருக்கும் நடுக்கண்ட மாகிய கிரந்திவடிவும் அதற்குமேற் சுத்தவித்தையின் வாமை முதலிய வெட்டும் எட்டிதழ் வடிவுமா மென்றுரைப்பாரும், முப்பத்தொன்றுக்குமேல் அசுத்த மாயை கிரந்தியின் அதச்சதனம் சுத்தமாயை ஊர்த்துவச்சதனம் அதற்குமேல் ஈசுரதத்துவத்தில் அனந்தன் முதலிய வெட்டும் எட்டிதழ் வடிவம் சதாசிவ தத்துவமொன்றுங் கேசரவடிவமெனக் கொண்டு அதற்கியையக்கொண்டு கூட்டி யுரைப்பாரும், கலாரூபமென்றது பஞ்சகலைகளை எனவும் அஃதியாண்டுங் கூட்டியுரைக்கப் படுமெனவுங் கொண்டு, மண்முதனுள மலரென்பதற்கு மண்ணாகிய நிவிர்த்திகலாரூபம்நாளமும், மண்ணை முதலாகவுடைய ஏனை இருபத்துமூன்று தத்துவமாகிய பிரதிட்டாகலாரூபம் மலருமாமெனவும், வித்தை எண்ணிய வீசர் சதாசிவமுங் கலையுருவமாமென்பதற்கு வித்தியா தத்துவமாகிய வித்தியாகலாரூபங் கலையெனப்படுங் கேசரமும் சுத்தவித்தையோடு கூட்டி எண்ணப்பட்ட ஈசுரதத்துவஞ் சதாசிவ தத்துவமாகிய சாந்திகலாரூபங் கலைக்குள்ளுரு வெனப்படும் பொகுட்டுமா மெனவும், நாதமாஞ் சத்தியதன் கண்ணும் என்பதற்குச் சிவதத்துவம் சத்திதத்துவமாகிய சாந்தியதீதகலாரூபம் பொகுட்டின் கண்ணாகிய வீசமாமெனவும் உரைப்பாரு முளர். இவை யெல்லாம்அவ்வவ்வாகம பேதம்பற்றிக் கொள்ளப்படும்.

கலை அறுபத்து நான்காகலான், அறுபத்து நான்காகிய கேசரங்களுக்குத் தொகைபற்றிக் கூறப்படும் ஆகுபெயராயிற்று. ஈசர் ஆகுபெயர். கலையுரு கலைக்குள்ளுருவென உள்ளுருபு விரித்துரைக்க. அதில் என்புழி அன்சாரியை விகாரத்தாற் றொக்கது. இதுநாளமுதலாக மேனோக்கித் தோன்றும் உலகத்துக்கமலம் போலாது கண் முதலாகக் கீழ் நோக்கித் தோன்றியதோர் திப்பிய கமலமெனக் கொள்க. சிவன்றா ளதினிலையாமெனவே சிவன் சத்திக்கு மேலாய் நிற்பனென்பதூஉம் பெறப்படும்.

விளக்கம்.

(சொண்டு கூட்டு.) நண்ணில் மண்முதல் நாளம் வித்தைமலர் எண்ணிய ஈசர் சதாசிவமும் கலாரூபம் சத்தி கலையுருவாம் நாதம் அதன் கண்ணும் அதில் அச்சிவன்தாள் நிலையாம் நேர்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ வெனின், தத்துவம் முப்பத்தாறுக்கும் அப்பாற் பட்ட முதல்வனைத் தத்துவத்தின் காரியமாகிய தாத்துவிகம் எனப்படும் இதயத்தில் வைத்து எவ்வாறு பூசித்தல் கூடும் என்பாரை நோக்கி இதயத்தில் முப்பத்தாறு தத்துவங்களும் தாமரை ரூபமாய் விளங்குமாதலால் முதல்வனை அவ்விதய கமலத்தின் மேல்தத்துவாதீதராகக் கண்டு பூசித்தல் கூடுமென்றுகூறிப் பஞ்சாக்கரதியானம் வாசனையை நீக்கும் என்ற ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை) மேலை வெண்பாவிற் கூறிய இதயதாமரையின் இயல்பு எவ்வாறென அறியுமிடத்தில், பூதம் ஐந்து தன்மாத்திரை ஐந்து ஞானேந்திரியம் ஐந்து கன்மேந்திரியம் ஐந்து அந்தக்கரணம் நான்கு ஆக இருபத்து நான்கு தத்துவமும் உந்தியில் நின்றுந் தோன்றிய எட்டுவிரல் அகல அளவு நீள மாயுள்ள தண்டுவடிவாம். வித்தியா தத்துவம் எழும் சிவதத்துவத்தில் சுத்தவித்தை ஒன்றும் ஆக எட்டுத் தத்துவமும் அத்தண்டின்மேலுள்ள எட்டு இதழ் வடிவாம். சருதப்பட்ட ஈசுரம் சதாசிவம் என்னும் இரண்டு தத்துவமும் அவ்விதழுக்கு உள்ளாகிய அறுபத்து நான்கு பூந்தாது வடிவாம். சத்தி தத்துவம் அப்பூந்தாதுவிற் குள்ளாகிய கொட்டை வடிவாம். சிவதத்துவம் அக் கொட்டையிற் காணப்படும் ஐம்பத்தொரு வீசவடிவாம். ஆதலால் அத்தன்மையாகிய இதய தாமரையில் முப்பத்தாறு தத்துவங்களையும் ஆசனமாகக் கொண்டு அவ்வாசனத்தில் சிவசத்தி நிலைபெற்று வீற்றிருக்கும். அவ்வாறு வீற்றிருத்தலை யறிந்து முத்தி பஞ்சாக்கரத்தால் இதயத்தில் அச்சத்திமாளுகிய சிவபெருமானை அர்ச்சிப்பாயாக எ-று.

(க-ரை.) உந்தியில் நின்று மேல் எட்டுவிரல் அகல அளவு நீளத்திலுள்ள இதயத்தானத்தில் முப்பத்தாறு தத்துவங்களை ஆசனமாகக் கொண்டு சிவசத்தி வீற்றிருக்குமாதலால் அவ்விதயத்தில் அச்சத்தியை யுடைய சிவபெருமானை அர்ச்சிப்பாயாக என்பதாம்.

கோயிற் புராணம் பதஞ்சலிச்சருக்கத்து ௭௦-வது செய்யுளில் "அண்ட பிண்டமவை வசமமாதலால்" எனக்கூறியபடி அண்டத்தில் உள்ளனவெல்லாம் பிண்டத்துள்ளும் உண்டு. ஆதலால் அண்டவடிவாகிய முப்பத்தாறு தத்துவங்களும் பிண்டத்துள் இதயத்தில் சூக்குமமாயும் தாமரை ரூபமாயும் விளங்கும் என்பதை அறிவித்து, முதல்வனுக்கு அண்டத்தில் முப்பத்தாறு தத்துவத்திற்கு மேற்பட்ட அந்நிலையே இதய கமலத்தின் மேலாகக்கண்டு பூசிக்கப்படும் இந்நிலையென இவ்வெண்பாவினுல் தெளிவித்தவாறு அறிக.

செய்யுளில் வித்தை என்றதற்கு இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் வித்தியாதத்துவம் எழும் சுத்தவித்தையும் என்னும் எட்டு எனஉரை செய்யப்பட்டது. வித்தை என்றதற்கு இவ்வாறு கூறவேண்டு மென்னுங் கருத்துப்பற்றியே சிவஞானசித்தியார் ௬-ம் ௫-ம் ௬-வது செய்யுளில் ''மூட்டுமோகினி சுத்தவித்தை மல ரெட்டாய்'' என வழிநூலாசிரியர் அருளிச் செய்தனர். சித்தியாரில் மோகினி என்றது அசுத்தமாயையை உணர்த்தி ஆகுபெயராய் அவ்வசுத்த மாயையின் காரியமாகிய கலாதிதத்துவம் எழினை யுங்குறித்து நின்றது.

இவ்வெண்பாவிற்கு இவ்வாறன்றி வேறுவேறு விதமாக உரைப்பாரு முளர். அவைவருமாறு:—ஆன்மதத்துவம் இருபத்து நான்கு வித்தியாதத்துவம் எழு ஆக முப்பத்தொன்றையும், பூதம் தன்மாத்திரை ஞானேந்திரியம் கன்மேந்திரியம் அந்தக்கரணம் குணம் பிரகிருதி கலாதி என எட்டுக் கொத்தாகக்கொண்டு அந்த எட்டுக்கொத்தும் எண் விரலளவாயுள்ள தண்டு வடிவாகவும், அசுத்தமாயை மலருக்கும் தண்டுக்கும் நடுக்கண்டமாகிய முடிச்சு வடிவமாகவும், அம்முடிச்சுக்குமேல் சுத்தவித்தையின் வசிக்கும் வாமைமுதலிய எட்டுச் சத்திகளும் எட்டுஇதழ்வடிவாகவும் உரைப்பர்சிலர். வேறுசிலர் மேற்கூறிய வாறு முப்பத்தொரு தத்துவத்தையுந்தண்டாகக்கொண்டு அசுத்த மாயையை முடிச்சிலுள்ள கீழ் இதழாகவும் சுத்தமாயையை மேலிதழாகவும் அம்மேலிதழுக்கு மேல்ஈசுரதத்துவத்தில் வசிக்கும் அனந்தர் முதலிய எட்டு மூர்த்தியும் எட்டு இதழ் வடிவாகவும் சதாசிவதத்துவம் பூந்ாதுவடிவமாக வுங் கொண்டு அதற்கேற்றவாறு செய்யுளைக்கொண்டு கூட்டி உரைப்பர். இன்னுஞ் சிலர் செய்யுளில் கலாரூபம் என்றது நிவிர்த்திமுதலிய பஞ்சகலை களை யெனவும் அக்கலாரூபம் மண், வித்தை முதலிய எல்லாவற்றோடுங் கூட்டி உரைக்கப்படுமெனவுங்கொண்டு மண்முதல் நாளமலர் என்றதற்கு மண்ணாகிய நிவிர்த்தி கலாரூபம் தண்டு எனவும் அதேவாக்கியத்தை இரட்டுற மொழிந்துகொண்டு மண்ணை முதலாக உடைய ஏனை ஆன்மதத்துவம் இருபத்துமூன்றும் பிரதிட்டாகலா ரூபமாகிய மலரெனவும், வித்தை எண்ணிய ஈசர் சதாசிவமும் கலையுருவமாம் என்பதற்கு வித்தியாதத்துவமாகிய வித்தியாகலாரூப மென்னும் கலை யெனப்படுகின்ற பூந்தாது எனவும், அப் பூந்தாதுவிற்குள் சுத்தவித்தை ஈசுரன் சதாசிவம் என்னும் மூன்றுதத்துவமும் சாந்திகலா ரூபமாகிய கலையெனப்படுங் கொட்டை எனவுங், நாதமாம் சத்தி அதன் கண்ணும் என்பதற்கு அக்கொட்டையின் கண் சிவதத்துவம் சத்திதத்துவமாகிய சாந்தியதீத கலாரூபமென்னும் கலையெனப்படும் வீசமா மெனவும் உரைப்பர். இவ்வாறு உரைப்பவை யெல்லாம் அந்த அந்த ஆகம பேதம்பற்றிக் கொள்ளப்படும்.

எண்ணிய ஈசர் சதாசிவமுங் கலாரூபம் என்பதற்கு ஈசுரம் சதாசிவம் என்னும் இரண்டுதத்துவமும் அருபத்து நான்கு பூந்தாது எனஉரை செய்த

கருத் தென்னே யெனின், கலை அறுபத்துநான்காதலால் அறுபத்து நான்காகிய பூந்தாதை யுணர்த்துவதற்குக் கலாரூபம் என்பது கலையின் தொகைபற்றிக் கூறப்படும் ஆகுபெயராய் நிற்றலால் என்க.

ஈசர் என்றது ஈசுரர்வசிக்கும் தத்துவத்தைக் குறித்தலால் ஆகுபெயர்.

'கலையுரு என்றவிடத்து உள் என்னும் உருபுவிரித்துக் கலைக்குள்ளுரு வென உரைசெய்யப் பட்டது.

நிலையதில் என்றதில் உள்ள அதில் என்பது, அது இல் என்னும்இரு மொழிகள் சேர்ந்த தொடர்மொழி. இம்மொழியில் அன்சாரியை சேர்ந்து அதனில் எனவருதல் இலக்கணவழக்கு. அவ்வாறன்றி அதில் எனவருதல் இலக்கண வழக்கன்று. இச்செய்யுளில் அன்சாரியை தொக்கு நிற்ப அதில் எனவந்தது. ஆதலால் அதிலென்றவிடத்து அன்சாரியை தொக்குநின்றது என்றூர் உரையாசிரியர்.

இதயத்தில் தோன்றும் இத்தாமரை தண்டு முதலாக மேல்நோக்கித் தோன்றும் உலகத்துத் தாமரைபோலன்றி ஞானேந்திரிய முதலாக இருதயத்தில் கீழ்நோக்கித் தோன்றும் தெய்வீகத் தாமரைஎனக் கொள்க. அதாவது தாத்துவீகமாகிய இடத்தில் தத்துவயாகிய தாமரைக்குள்ளீடாய் சிவம் விளங்கு மாதலால் கீழ்நோக்கிய தாமரை என்றபடியாம்.

சிவன் தாள் அதில் நிலையாம் என்று கூறியதனல் அச்சத்திக்கு மேலாய்ச்சிவன் விளங்குவன் என்பதூஉம் பெறப்படு மாதலால் இதயத்தில் சிவ பெருமானே அர்ச்சிக்க என்றது பொருந்துமாறு அறிக.

இவ்வொன்பதாஞ் சூத்திரத்தாலும் அதிகரணங்களாலுங் கூறி முடித்த தொகைப்பொருள்:—எட்டாஞ் சூத்திரத்திற் கூறியவாறு முதல்வனே குருவாய்வந்து உபதேசித்ததைச் சிந்திக்கு முறையில் ஆன்மாவைச் சுத்திசெய்யு முறை கூறத்தொடங்கிப பாசஞான பசுஞானங்களினல் முதல்வன் அறியப்படான் ஆதலால் அவன் திருவடி ஞானத்தாலே அவனே அறியவேண்டு மென்பதும், பிரபஞ்சத்தைக் கானல் நீர்போல நிலையில்லாதது எனக்கண்டு சுழித்தால் அத்திருவடி ஞானம் விளங்கித்தோன்றுமென்பதும்,அத்திருவடி ஞானத்தால் முதல்வனேக் கண்டவிடத்தும் பழக்க வாசனையால் மீண்டும் பிரபஞ்சத்தைப் பற்றுதிருத்தற்பொருட்டு முத்திபஞ்சாக்கரத்தை அறிவாற் சணிக்கவேண்டுமென்பதும் சூத்திரத்தாற் கூறப்பட்டன. படவே, எட்டாஞ் சூத்திரத்திற் கூறியவாறு பாசஞானத்தால் முதல்வன் அறியப்படானுயினும் பசுஞானத்தால் அறியப்படுவன் என்றூல் என்ன குற்றம் எனச் சிவசமவாத சைவர் கூற, முதல் அதிகரணத்தால் அவரை மறுத்துத் திருவடிஞானத்தாலே முதல்வனே அறியவேண்டுமென்பதும், பசுத்துவமாகிய சீவபோதம் நீங்கியவிடத்தும் அவனருளாலன்றித் தன்னே அறியமுடியாது ஆதலால்

ஆன்ம அறிவிற்குப் பதிஞானமின்றித் தனாத்து முதல்வனைக்காணுந் தன்மை இல்லையென்பதுங் கூறப்பட்டன. படவே, அத்திருவடி ஞானத்தைப் பெறுதற்கு என்ன செய்யவேண்டும் என்னும் ஐயத்தை நீக்குதற்பொருட்டு இரண்டாம் அதிகரணத்தால் நிலையில்லாத பிரபஞ்சத்தை நிலையில்லாதது எனக்காணின் திருவடி ஞானம் விளங்கித் தோன்றுமென்பதும், பிரபஞ்சம்முற்றும் நீங்கியவிடத்துச் சூனியம்போலத் தோன்றினும் அத்தோற்றம் சூனியமன்று ஞானசொரூபமேயென்பதும், பிரபஞ்சம் நீங்கியவிடத்துத் தோன்றுவது உயிரன்றென்பதும், பிரபஞ்சம் நீங்குதற்குச் சிவோகம்பாவனை செய்யவேண்டுமென்பதும் கூறப்பட்டன. படவே, ஆன்மாவைச் சுத்திசெய்வதற்குப் பிரபஞ்சத்தை நீக்கி ஞானக்கண்ணைப் பெறுதலே போதும் அதன்மேலும் ஆன்மசுத்திக்காகச் செய்யவேண்டுவதொன்றுமில்லை என்பாரை நோக்கி மூன்றும் அதிகரணத்தால் ஞானக்கண்ணைப் பெற்றவிடத்தும் பழக்கவாசனையால் விட்ட பிரபஞ்சத்தை மீளப் பற்றுதிருத்தற்பொருட்டு முத்திபஞ்சாக்கரத்தை அறிவால் தியானிக்கவேண்டுமென்பதும், அப்பஞ்சாக்கரத்தால் இதயத்தில் முதல்வனையர்ச்சித்தலால் பழக்கவாசனை நீங்குமென்பதும், இதயத்தில் தியானித்தலால் முதல்வனைக் காண்டல், சந்திர சூரியனிடத்தில் கிரகணகாலத்தில் இராகுகேதுக்களைக் காண்டல்போலென்பதும், அண்டத்திற் காணப்படும் முப்பத்தாறு தத்துவங்களையும் பிண்டத்துள் இதயத்தில் தாமரையாகக்கொண்டு அத்தாமரையின் மேல் சிவபரம்பொருள் வீற்றிருக்குமென்பதுங் கூறப்பட்டன.

மூன்றும் அதிகரணம் முற்றிற்று.

ஒன்பதாஞ்சூத்திரம் முற்றிற்று.

சாதனஇயல் முற்றிற்று.

பயனியல்.

பத்தாஞ்சூத்திரம்.

ஒன்பதாஞ் சூத்திரத்தால் சாதனஞ்செய்யு முறைகூறி இனி அச்சாதனத்தால் உண்டாகும் பயன், பாசத்தை விடுதலும் சிவனை யடைதலும் சிவனையடைந்தபின்னர்த் தேகம் இருக்குமளவும் பிராரத்தவவாசனை தாக்காதிருத்தலும் ஆதலால், அம்மூன்றனையும் மூன்று சூத்திரத்தால் பயனியலெனவைத்துக் கூறத் தொடங்கி, முதலாவது இப்பத்தாஞ் சூத்திரத்தால் பாச நீக்கமாகிய பயனை வகுத்துக் கூறுகின்றார்.

அவனே தானே யாகிய வந்நெறி
யேக ஞகி யிறைபணி நிற்க
மலமாயை தன்ஞெடு வல்வினை யின்றே.

சிவஞானபோதச்சிற்றுரைவிளக்கம்.

கருத்துரை.

௰-து சூ-ம் எ-னின் பாசக்ஷயம் பண்ணுமாறுணர்த்துதனுதலிற்று

சிற்றுரை.

எ-து க-ரை எ-னின். சூத்திரக்கருத் துணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) மேல் ஏழாஞ்சூத்திரமுதலிய மூன்றானும் முறையே சாதிக்கும் பொருளதியல்புஞ் சாதித்துப் பெறப்படும் பொருளதியல்புஞ் சாதிக்குமாறும் உணர்த்தி, இனி அச் சாதனத்தானுய பயனியல்பு வகுத்துக் கூறுவானெடுத்துக்கொண்டார். அப்பயனுவது பாசவீடும் சிவப்பேறுமென இருவகைப்படும். அவ்விரண்டனுட் சுட்டுணர்வினாலாகிய ஏகதேச நோக்கத்தைத் திருவஞ்செழுத்தின துச்சரிப்பாற் பற்றறத்துடைத்தவழிப் பெறப்படுவதாகிய மேலைச்சூத்திரத்தி னெடுத்துக்கொண்ட ஆன்மசுத்திப்பயனாகிய பாசவிடுதலைச் செய்துகொள்ளுமாறு மேற்சிந்தனை செய்தபொருளைத் தெளியுமாறுணர்த்து முகத்தா னுணர்த்துதல் இப் பத்தாஞ் சூத்திரத்தின் கருத்து எ-று.

இதனானே சூத்திர இயைபும் இனிது விளங்கும்.

விளக்கம்.

இக்கருத்துரை என்னசொல்லிற்றோ எனின், சூத்திரக்கருத்து இதுவென்று சொல்லிற்று.

(இக்கருத்துரையின்பொருள்.) மேல் ஏழாஞ் சூத்திரத்தால் சாதிக்கும் அதிகாரி ஆன்மாவெனக் கூறி, எட்டாஞ்சூத்திரத்தால் அவ்வதிகாரி செய்யவேண்டிய சாதனம் பிரபஞ்ச நீக்கமும் பதிஞானஉணர்ச்சியுமெனவும் அச்சாதனம் முதல்வனே குருவாய்வந்துணர்த்த வருமெனவும் அச்சாதனத்தாலுண்டாம் பயன் பாசத்தைவிட்டு முதல்வன் திருவடி யடைதலெனவுங் கூறி, ஒன்பதாஞ் சூத்திரத்தால் சாதிக்குமுறையை வகுத்துக் கூறினமையால், இனி அச்சாதனத்தாலுண்டாம் பயன் பாசத்தைவிட்டு முதல்வன் திருவடியை அடைதலென மேல் எட்டாஞ் சூத்திரத்துத் தொகுத்துக் கூறியதை மூன்று சூத்திரத்தால் வகுத்துக்கூறத் தொடங்கினர். பாசத்தைவிடுதலும் சிவனை அடைதலும் என்னும்பயன் இரண்டனுள் பாசநீக்கம், சுட்டியறியும்அறிவினால் அறியப்படும் பிரபஞ்சப் பற்றை மேல் ஒன்பதாஞ் சூத்திரத்துக் கூறியவாறு முத்திபஞ்சாக்கர உச்சரிப்பாற் கெடுத்தவிடத்து உண்டாகும் ஆன்மசுத்தியின் பயனாதலால், அப்பாசநீக்கத்தைச் செய்துகொள்ளும்

வண்ணம் இச் சூத்திரத்திற் கூறுவதோடு மேல் ஒன்பதாஞ் சூத்திரத்தில் சிந்தனைகூறிய முறைப்படி தெளிதல் கூறுதல் இப்பத்தாஞ் சூத்திரத்தின் கருத்து எ-று.

ஒன்பதாஞ் சூத்திரத்தில் சிந்தனைசெய்யும் முறைகூறி இச்சூத்திரத்தில் தெளியும் முறைகூறுவதனாலும், ஒன்பதாஞ் சூத்திரத்தில் ஆன்மசுத்தி கூறி இச்சூத்திரத்தில் ஆன்மசுத்தியின் பயனாகிய பாசநீக்கம் கூறுவதனாலும் சூத்திர இயைபு பெறப்பட்டது.

சிற்றுரை.

இச் சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு.

அவனே--(ஞானக்கண்ணாற் காணப்பட்ட) அம் முதல்வன் (தானுடனாய் நின்றறியவும் வேறு காணப்படுமாறின்றி யானே யறிந்தேனெனும்படி உயிர்)— தானேயாகிய— தானேயாய் ஒற்றுமைப்பட்டு உயிர்வழிநின்ற,—அந்நெறி— அப் பெத்தநிலை போல் (ஈண்டு உயிர் அம்முதல்வனோடுடனாய் நின்றறியினுந் தானென வேறு காணப்படுமாறின்றி),— ஏகனாகி—அவனோ டொற்றுமைப் பட்டு,— இறைபணிநிற்க— அவ்விறைபணியின் வழுவாது நிற்பின்,—மலமாயை தன்னொடு—மலமாயையென்னும் இரண்டனோடு,— வல்வினை—வலிய கன்மமலமும்,—இன்றே— இல்லையா யொழியும் எ—று.

அவனே தானே யென்னும் ஏகாரமிரண்டனுள் முன்னையது பிரிநிலைக்கண்ணும் பின்னையது தேற்றத்தின்கண்ணும் வந்தன. நெறி உவம உருபு. மலமாயையொடு கூடியவினை யென்றாராகலின் இன்றே யென்றார். உவமைக்கோதியது பொருளினும், பொருளுக் கோதியது உவமையினுஞ் சென்றியைந்தன.

ஈண்டொற்றுமைப்படுதலாவது, குடமுடைந்தவழிக் குடாகாயமும் ஆகாயமும்போல ஒருபொருளா யொற்றுமைப்படுதலோ, அன்றிக் குற்றியை மகனென்பதுபோலத் திரிபுக்காட்சியா னொற்றுமைப்படுதலோ, அன்றி மண்ணை குடமென்பதுபோல ஒன்று திரிந்தொன்று யொற்றுமைப்படுதலோ, அன்றி வெள்ளையுந் தாமரையும்போலக் குணகுணித்தன்மையா னொற்றுமைப்படுதலோ, அன்றித்தீயும் இரும்பும்போல ஒன்றினொன்று விரவுதலா னொற்றுமைப்படுதலோ, அன்றிப்பாலும் நீரும்போல பிரிக்கப்படாத சையோகத்தா னொற்றுமைப்படுதலோ, அன்றிக் கருடனும் பாந்

திரிகனும் போலப் பாவனைமாத்திரையா னொற்றுமைப்படுதலோ, அன்றிக் காய்ந்தவிரும்பினீர்போல ஒன்றினொன்றி லயமா யொற்றுமைப்படுதலோ, அன்றிப் பேயும் பேய்பிடியுண்டவனும் போல ஆவேசத்தா னொற்றுமைப்படுதலோ, அன்றி இந்தனத்தினெரி போல விளங்காமையா னொற்றுமைப்படுதலோ, அன்றி ஞாயிற்றி னொளியின் விளக்கொளிபோலச் சத்திகெட்டு நிற்றலானொற்று மைப்படுதலோ, அன்றித் தலைவனும் தலைவியும் போல இன்ப நுகர்ச்சிமாத்திரையா னொற்றுமைப்படுதலோ, அன்றி நட்டாரிரு வர்போல நட்பு மிகுதியா னொற்றுமைப்படுதலோ, அன்றி ஆவும் ஆமாவும்போல ஒப்புமைமாத்திரையா னொற்றுமைப் படுதலோ என்று அவ்வச் சமயவாதிகண் மதம்பற்றி நிகழும் இன்னோன்ன ஐயப்பாடுகளை யெல்லாம் நீக்குதற்பொருட்டுஅவனேதானே யாகிய வங்கெறி என உவமை எடுத்துக் காட்டியோதினார். ஈண்டுக் கூறிய ஒற்றுமைக்கட்படுமியைபாவ தென்னையெனின் அது வரு கின்ற சூத்திரத்திற்பெறப்படும்.

விளக்கம்.

(இச்சூத்திரத்தின் பொழிப்புரை.) மேல் ஒன்பதாஞ் சூத்திரத்துக் கூறிய வாறு ஞானக்கண்ணால் காணப்படும் அம்முதல்வன் பெத்த நிலையில் உயிரோடு உடனாய்நின்று உயிர் அறியும் வண்ணம் தான் அறிந்தும் அவ்வுயி ருக்கு முதல்வன் இருக்கின்றானென வேறு காணப்படாமல் உயிர் தானே அறிந்ததாக எண்ணும்படி அவ்வுயிரோடு ஒற்றுமைப்பட்டு நின்றவாறுபோல முத்திநிலையில் உயிர் அம்முதல்வனோடு உடனாய்நின்று இன்பத்தையநுப வித்தாலும் அநுபவிக்கின்ற தான் உண்டெனவேறு காணப்படாமல் அம் முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு அம்முதல்வனேயாய் அவன் அருள்வழியா கிய இறைபணியில் வழுவாது நிற்பின், ஆணவமலம் மாயாமலம் என்னும் இரண்டனோடு வலிபகன்மமலமும் இல்லையா யொழியும் எ—று.

அவனே என்பதிலுள்ள ஏகாரம், உயிர் முதல்வனையின்றி அறியாதென உயிரைப்பிரித்தமையின் பிரிநிலை.

தானே என்பதிலுள்ள ஏகாரம், அவ்வாறு முதல்வன் உயிருடன் நின் றும் நிற்கின்றதாய்ச் சிறிதும்தோன்றாது உயிராகவே நிற்றலைக்குறித்தலின் தேற்றம்.

அங்கெறி என்றதிலுள்ள நெறி என்றது, போல என்னும் பொருளில் நிற்றலால் உவம உருபு

மும்மலங்களாகிய பன்மையை இன்றே என்னும் ஒருமைகொண்டு எவ்வாறு முடித்தாரெனின், ஆணவமலத்தினையும் மாயையினையும் வேறு பிரியாது அவ்விரண்டனோடுங்கூடிய வினையெனக்கொண்டு ஒருமை எழுவாயாக்கி முடித்தார் என்க. இவ்வாறு பொய்யாமொழிப் புலவரும் "சிறப்பொடு பூசனை செல்லாது" எனத்திருக்குறளுண் முடித்துப் போதலுங் காண்க.

மலமாயை தம்மொடு என்றுகூறாமல் தன்னொடு என்ற கருத்து என்னையெனின், தன் என்னும் ஒருமை தனித்தனி மலத்தோடும் மாயையோடுங் கூடி மலந்தன்னொடு மாயை தன்னொடு எனக்கொள்ளுமாறு அவ்வாறு கூறினர்.

இச்சூத்திரத்தில் பெத்தநிலை உவமையும் முத்திநிலை உவமேயமுமாம் அவற்றுள், பெத்தநிலையாகிய உவமைக்குக்கூறிய அவனேதானே யாகிய என்பது உவமேயமாகிய ஏகனாகி இறைபணிநிற்க என்பதனோடுங்கூடி அவனேதானேயாய் ஏகனாகி இறைபணி நிற்க எனவும், உவமேயத் திற்கோதிய ஏகனாய் என்பது உவமைக்கோதிய அவனேதானேயாகிய என்பதனோடுங் கூடி அவனே தானேயாய் ஏகனாகிய அந்நெறியெனவும் பொருள் தந்துநின்றன.

ஏகனாகி ஒற்றுமைப் படுதலை எல்லாச் சமயவாதிகளும் ஒப்புக்கொண்டு அவ்வொற்றுமைக்குரிய சம்பந்தத்தைவேறு வேறு கூறுவர், அவர் கூற்றுக்களாவன:—குடம் உடைந்தவிடத்துக் குடத்தில் வளைபட்ட குடாகாயமும் மகா காயமும் ஒரு பொருளாதல் போலப் பாச நீக்கத்தில் உயிருஞ் சிவமும் ஒரு பொருளாய் ஒற்றுமைப்படுத லெனவும், கட்டையைக் கள்வன் என்று விபரீதக் காட்சியால் காணுங்காலத்துக் கட்டையே கள்வனாகத் தோன்றிப் பின் தெளிந்தவிடத்துக் கள்வன் இல்லையாய்க் கட்டையே உளதாயினாற் போலஅஞ்ஞான காலத்தில் சிவமேஉயிராய்த் தோன்றிப் பின் ஞானகாலத்தில்உயிரென்பதில்லையாய்ச் சிவமேஉளதாய் ஒற்றுமைப்படுத லெனவும்,மண்ணேவேற்றுமைப் பட்டுங் குடமாயினாற்போலச் சிவமேபாச சம்பந்தத்தால் வேற்றுமைப் பட்டு உயிராகிப்பாச சம்பந்தத்தை நீக்கிய விடத்துச் சிவமாய் ஒற்றுமைப் படுதலெனவும், வெண்டாமரை என்றவிடத்து வெள்ளையாகிய குணமும் தாமரையாகிய பொருளும் பிரிக்க முடியாதவாறு போலச்சிவமே பொருளாய் உயிர் அப்பொருளின் குணமாய் விளங்கி யொற்றுமைப் படுத லெனவும், தீயுடன் இரும்புகலந்த விடத்து இரும்பின் தன்மை கெட்டு அவ்விரும்பு தீயேயாய்க் காணப்படுமாறு போலச் சிவத்துடன் உயிர் கலந்த விடத்து உயிர்த்தன்மை கெட்டு அவ்வுயிர் சிவமேயாய் ஒற்றுமைப் படுதலெனவும், பாலுடன் நீர் கலந்தவிடத்துப பால்வேறுநீர்வேறாகப் பிரிக்கமுடியாதவாறுபோலச் சிவத்துடன் உயிர் கலந்த விடத்துச் சிவம் வேறு உயிர்வேறு எனப பிரிக்க முடியாத சையோகத்தா லொற்றுமைப் படுதலெனவும், கருட

மந்திரத்தாற் பாவிக்கப்படுகின்ற தைவிகக்கருடனும் பாவிக்கும் மாந்திரிகனும் ஒன்றுமாறுபோல உயிர், சிவம் நானெனப் பாவிக்கும் பாவகமாத்திரையாலொற்றுமைப் படுதலெனவும், அக்கினியினால் காய்ந்த இரும்பினிடத்து நீர் சுவறி ஒற்றுமைப் படுதல் போலச் சிவத்தினிடத்து உயிர் கெட்டு ஒற்றுமைப் படுதலெனவும், பேய்பிடி யுண்டவன் அப்பேயாய் நிற்றல் போல உயிரினிடத்துச் சிவம் ஆவேசித்து நிற்றலால் உயிர் சிவமேயாய் ஒற்றுமைப் படுதலெனவும், விறகினிடத்து அக்கினி இருந்தும் விளங்காமையா லொற்றுமைப்பட்டு நிற்றல்போல மூத்தியில் சிவனும் சீவனும் இருந்தும் சீவன் விளங்கித் தோன்றாமையா லொற்றுமைப் படுதலெனவும், சூரியன் ஒளி முன்னிருக்கும் விளக்கின் ஒளிக்கு விளக்குந் தன்மை கெட்டமையால் சூரியனொளியும் விளக் கொளியும் ஒற்றுமைப் படுதல்போலச் சிவசத்தியின் முன்னர் உயிரின் சத்திக்குச் செயலில்லாமையால் சிவமும் உயிரும் ஒற்றுமைப் படுதலெனவும், நாயகனும் நாயகியும் இன்ப அநுபவ அளவில் ஒற்றுமைப் படுதல்போல சிவானந்த அநுபவ அளவில் சிவனும் உயிரும் ஒற்றுமைப் படுதலெனவும், நண்பர் இருவர் நட்பின் மிகுதியாலொற்றுமைப் படுதல்போலச் சிவனிடத்து உயிர்வைத்திருக்கும் அன்பினாலும் உயிரினிடத்துச் சிவம் வைத்திருக்கும் அருளினாலும் உயிரும் சிவமும் ஒற்றுமைப் படுதலெனவும், ஊர்களிலுள்ள பசுவும் காட்டுப் பசுவும் பசுத்தன்மையின் தோற்றத்தால் ஒற்றுமைப் படுதல்போல உயிர் பாசத்தை நீக்கியவிடத்துப் பாசம் நீங்கியிருக்கும் ஒற்றுமையால் உயிருஞ் சிவமும் ஒற்றுமைப் படுதலெனவுங் கூறுதலாம். இச்சூத்திரத்திற் கூறிய ஒற்றுமை மேற்கூறிய கூற்றுக்களில் ஒன்றும் அன்றென்பதை அறிவித்தற்கு அவ்வுவமைகளொன்றுங் கூறாமல் அவனே தானேயாகிய அந்நெறியெனப் பெத்தநிலையில் முதல்வன் உயிரோடு கலந்திருத்தலை உவமையாக எடுத்துக் காட்டினார். பெத்த நிலையில் முதல்வன் உயிராய் ஒற்றுமைப்பட்டு நிற்றலும் முத்தி நிலையில் உயிர் சிவமாய் ஒற்றுமைபபட்டு நிற்றலும் என்ன சம்பந்தம் எனின் அத்துவிதசம்பந்தமேயாம் உயிருஞ் சிவமும் ஒற்றுமைப் பட்டு நிற்குஞ் சம்பந்தம் அத்துவித சம்பந்தமேயென இச்சூத்திரத்தில் உவமை கூறி விளக்கவில்லையாயினும் வருகின்ற பதினொராஞ் சூத்திரத்திற் கண்ணொளியையும் உயிரையும் அவ்வத்துவித சம்பந்தத்திற்கு உவமையாகக் கூறி அது விளக்கப்படும். அதனாலறிக.

கருடபாவனை தீ இரும்பு முதலிய சில உவமைகள் இந்நூலில் மேலே கூறப்பட்டிருக்கவும் அவ்வுவமைகளையும் இச்சூத்திரத்தில் விலக்கிய கருத்தென்னை யெனின், சாதனஞ் செய்யுங்காலத்தும் சாதனத்தைச் செய்து சிவானந்தத்தை அநுபவிக்குங் காலத்தும் உயிர்வேறு சிவன்வேறு என்னும் வேற்றுமையின்றி நிற்றற்கு அவ்வுவமைகள் இந்நூலிலேமுன்னர்க் கூறப்பட்டன. முத்திகாலத்தில் உயிர் தானென்னும் முனைப்பின்றி நிற்றற்குவேற்றுமையின்றி நிற்றற்குக் கூறிய அவ்வுவமைகளை இச்சூத்திரத்தில் விலக்கி

அவனே தானே யாகிய பெத்தநிலையை உவமையாகக் கூறினரென்க. எனவே, வேற்றுமையும் முனைப்பும் அற்று நிற்றலே சித்தாந்த முத்தி இலக்கணம் என அறிக.

சிற்றுரை.

இதனுள், அவனேதானேயாகிய அந்நெறி ஏகனுகி யென்றது ஓர் அதிகரணம்; இறைபணி நிற்க மலமாயைதன்னொடு வல்வினையின்றே என்றது ஓர் அதிகரணம்; ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரம் என்று உணர்க.

விளக்கம்.

வெ—டை.

முதலதிகரணம்.

சிவனிடத்து ஏகனுகி நிற்கவேண்டுமெனக் கூறும்

மேற்கோள்.

ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத் தேகனுகி நிற்கவேன்றது.

சிற்றுரை.

எ-து மே-ள் எ-னின், ஞானம் பிரகாசித்து முதற்பொருளைக் காண்டல் மாத்திரையே வீடுபேற்றிற் கமையுமெனச் சிவசமவாத சைவர் முதலியோர் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ—ள். வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ—ள். ஈண்டு—இவ்விரண்டதி கரணங்களுள் வைத்து இம்முதலதிகரணத்து,—பரமேசுரன்—ஞானக்கண்ணுற் காணப் பட்ட அம்முதல்வன்,—இவ்வான்மாவாய்—பெத்தநிலையில் உடனுய் நின்றறியவும் வேறு காணப்படுமாறின்றி யானே யறிந்தே னென்னும்படி உயிர் தானேயாய்,—நின்ற முறைமையான்—ஒற்றுமைப்பட்டு

உயிரின் வழிநின்ற முறைமைபோல,—அவனிடத்து ஏகனாகி—ஈண்டுயிர் அம்முதல்வனோடு உடனாய் நின்றறியினும் தானெனவேறு காணப்படுமாறின்றி அவனோடொற்றுமைப் பட்டு,—நிற்சவென்றது—நிற்க எ-று.

விளக்கம்.

இம்மேற்கோள் சூத்திரத்திலுள்ள அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி என்ற முதற்கூற்றைப் பதச்சேதஞ் செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்னசொல்லிற்றோ எனின், மேல் ஒன்பதாஞ் சூத்திரத்திற் கூறியவாறு பிரபஞ்சத்தை அசத்தென்று கண்டவிடத்துத் தோன்றும் ஞானக்கண்ணால் பதியைக்காண்டலே முத்தியாகும் எனச் சிவசமவாத சைவர் முதலியோர் கூறுவர். அவர் கூற்றையாசங்கித்துக் கொண்டு சூத்திரத்தின் முதற்கூற்றைப் பதச்சேதஞ் செய்து பதியைக் காண்டல் முத்தியாகாது பதியோடு ஒற்றுமைப்பட்டு நிற்றலே முத்தியெனக் கூறியவாறும்.

இவ்வதிகரணத்தில் ஞானம் பிரகாசித்த பின்னர் முதல்வனுடன் ஏகனாய் நிற்கவேண்டுமோ வேண்டாமோ என்பது ஐயப்பாடு. வேண்டாம் என்பது பிறர்பக்கம் என அறிக.

(இம்மேற்கோளின் பொருள்.) இச் சூத்திரத்திற் கூறப்படும் இரண்டதிகரணங்களுள் இம்முதலதிகரணத்தில் மேல் ஒன்பதாஞ் சூத்திரத்திற் கூறியவாறு ஞானக் கண்ணாற் காணப்பட்ட அம்முதல்வன் பெத்த நிலையில் உயிரோடு உடனாய் நின்று அறியவும் அம்முதல்வன் உயிரின் வேறாய்க் காணப்படாமல் உயிர் தானே அறிந்தேன் என்று எண்ணும்படி அவ்வுயிரேயாய் ஒற்றுமைப் பட்டு உயிரின் பின்னாக நின்றவாறுபோல, இம்முத்திநிலையில் அம்முதல்வனோடு உடனாய் நின்று உயிர் அறியினும் அவ்வுயிர் முதல்வனின் வேறாகக் காணப்படாமல் அம் முதல்வனோடு ஒற்றுமைப் பட்டு நிற்க எ-று.

சிவனிடத்து ஏகனாய் நிற்கவேண்டு மென்பதற்குக் காட்டும்

ஏது.

அவ்வாறு நிற்கவே யான் எனதென்னுஞ் செருக்கற்று அவனது சீபாதத்தை யணையுமாகலான்.

சிற்றுரை.

எ-து ஏது எ-னின், அஃதெதற்றுக் கென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) அங்ஙன மொற்றுமைப்பட்டு நின்றாலே யானும் எனதும் எனப்பகுத்து நிற்கும் மயக்க வுணர்விற் கேதுவாய மலநீங்கி அம் முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தைப் பெறுமாகலான் அச்செருக் கறுதிக்குக் காரணமாதல் பற்றி 'ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத்து ஏகனாகி நிற்க' வென மேற் கொண்டது எ-று.

அவ்வாறு நில்லாதவழி மலமறாது, அஃதறாதவழிச் சீபாதத்தையணைதல் பெறப்படா தென்பார் நிற்கவே யெனத் தேற்றேகாரத்தாற் கூறினார். யானெனப்படுவது ஞாதிரு எனதெனப்படுவன ஞான ஞேயங்கள். ஆறுவது பண்பின் கிழமையும் உணர்ச்சிக் கிழமையும் பற்றிவந்தது. ஒருமை தனித்தனி சென்றியையும். செருக்கு ஆகுபெயர். அற்றணையு மென்றது "மழைபெய்து குளம் நிறையும்" என்றாற்போலக் காரணகாரியப் பொருள்பற்றி வந்த செயவெனெச்சத் திரிபு.

விளக்கம்.

இந்த ஏது என்னசொல்லிற்றோ எனின், சிவனைக்காண்டலேயன்றி அவனிடத்து ஏகனாகி நிற்கவேண்டியது எதன்பொருட்டு என்பாரை நோக்கி யான் எனது என்னுஞ் செருக்கு அறுதற்பொருட்டு எனக்கூறி ஏகனாகிநிற்க என்ற மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) மேற்கோளிற் கூறியவாறு சிவனிடத்து ஏகனாகி நின்றால்தான் உயிரை யான் எனவும் சிவப்பொருளை எனதெனவும் பகுத்துக்காணும் மயக்க உணர்விற்கு ஏதுவாகிய ஆணவமலம் நீங்கி அச்சிவபெருமானுடைய திருவடியாகிய சிவானந்தத்தைப் பெறும். ஆதலால் அம்மயக்க உணர்விற் கேதுவாகிய மலம் நீங்குதற்குக் காரணமாதல் பற்றி இம்மேற்கோளில் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்றமுறைபோல் இவ்வான்மா அப்பரமேசுரனிடத்து ஏகனாகி நிற்க எனக் கூறியது எ-று.

ஏகனாய் நில்லாதவிடத்து ஆணவமலம் அறாது என்பதும் ஆணவமலம் அறாதவிடத்துச் சிவபெருமான் திருவடியடைதல் கூடாது என்பதும் அறிவிக்கவேண்டி ஏதுவில் நிற்கவே எனத் தேற்றேகாரத்தாற் கூறினார்.

யான் எனப்படுவது அறியும் பொருளாகிய உயிர். எனது எனப்படுவன அவ்வுயிரினுடைய அறிவும், அவ்வறிவால் அறியப்படும் பொருள்களுமாம்.

எனது என்றது என் அது எனப்பிரிக்கப்படும். அது என்பது ஆறும் வேற்றுமை உருபு. அவ்வுருபு உரிமையை உணர்த்தும். உரிமை பலவேறு வகைப்படும். ஆதலால் இந்த எதுவில் எனது என்றதிலுள்ள அது என்னும் உருபு குண உரிமைபற்றி அறிவையும, உணர்ச்சி உரிமைபற்றி உணரப்படும் பொருளையுங் குறித்து நின்றது.

அது என்னும் ஒருமை அறிவும் பொருளுமாகிய பன்மையைக் குறிக்காது. ஆதலால் அறிவுடனும் பொருளுடனும் தனித்தனி கூடிப் பொருந்தும். பொருந்துங்கால் எனது என்பதற்கு என்னுடைய அறிவு எனவும் என்னுடைய பொருள் எனவும் உரைத்துக்கொள்ளல்வேண்டும்.

செருக்கு என்றது செருக்குக்கு எதுவாகிய மலத்தைக்குறித்து நிற்றலால் ஆகுபெயர். செருக்கென்பது மயக்கம். செருக்கு அற்றுச் சீபாதத்தையணையும் என்றது செருக்கு அறுதலால் சீபாதத்தையணையும் என்னும் பொருளைக் குறித்துநிற்றலால் காரணகாரியப் பொருள்பற்றிவந்தது. செருக்கு அறுதல் காரணம்; சீபாதத்தை அணைதல் காரியம். இவ்வாறு கூறுதல் எதுபோல எனின், மழைபெய்தலால் குளம் நிறையும் எனக்கூறவேண்டியதை மழைபெய்து குளம் நிறையும் என்று கூறுதல்போலாம்.

இனி, அற்று என்பது செய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் திரிபு. அதாவது செருக்கு அற என்பது செருக்கு அற்று எனத் திரிந்ததாம். அற என்னும் வினையெச்சம் அணையும் என்னும் வினை கொண்டு முடிந்தது. ஆதலால் அற்று அணையும் என்றது காரணகாரியப் பொருள் பற்றி வந்தசெய என்னும் வாய்பாட்டின் வினையெச்சத்திரிபு ஆயினமையறிக.

இந்த எது, சிவனிடத்து ஏகனாகி நிற்கவேண்டாம் என்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபாயிற்று.

சிவனிடத்து ஏகனாய் நின்றாற்றான் மலம் அறும் என்பதற்குக்காட்டும்

உதாரணம்.

நானவனேன் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாத
ருனேனவோன் றின்றியே தானதுவாய்—நானேனவோன்
றில்லேன்று தானே யெனுமவரைத் தன்னடிவைத்
தில்லேன்று தானு மிறை.

சிற்றுரை.

எ—து உ--ம் எ—னின். அங்஢னம் பகுத்து நின்றுணரு முணர்வை மயக்க உணர்வென்ற தென்னை என்பாரை நோக்கி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

(இ—ள்.) நான் அவன் என்று எண்ணினற்கும நாடும் உளம் உண்டாதல் தான் என ஒன்று இன்றியே தான் அது ஆய்—யானென்றும் அவனென்றும் ஞாதிரு ஞேயங்களைப் பகுத்துணர்ந்து நிற்பார்க்கும் (யானே என நிற்பார்க்குப் போல) அவ்வாறெண்ணுகின்ற உயிருணர்வு முனைத்துத் தோன்றுமாகலான், (அவ்வழித்) தானென்றொருமுதல் காணப்படுமாறின்றித் தான் அவ்வுணர்வேயாய்,—நான் என ஒன்று இல் என்று தானே யெனும் அவரைத் தன் அடி இல் என்று வைத்துத் தான் ஆம் இறை—இனியானென்றொரு முதல்.காணப்படுமாறில்லை யென்றுணர்ந்து முழுவதுந் தானே யெனக் காணுந் தெளிவுடையாரைத் தனது திருவடியியாபகத்துள் அடங்கி நிற்கச் செய்து அவ்வாறே யாவன் முதல்வன் எ-று.

ஆய் ஆம் என இயையும். ஆபாம் என்புழிச்செய்தெனெச்சம் "நள்ளார்க்கு நஞ்சொத்து நட்டார்க் கமிழ்தொக்குமிவன்" என்றாற்போலத் தன்வினையாதலுணர நின்றது. எண்ணினற்குமென இறந்தது தழீஇய வெச்சவும்மை சந்திநோக்கி மகரங்கெட்டு நின்றது. நாடுமுள முண்டாய வழித்தானிலனாதலும் அஃதில்வழித் தானுளனாதலும் யாங்஢னம் பெறுதுமெனிற் காட்டுதும்:—தூலவொளியாகிய கண்ணொளியுஞ் சூக்குமவொளியாகிய விளக்கொளியும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் நிலை உற்றுநோக்கவல்லார்க்குப் பிரித்தறிய வாராமையிற் கண்ணொளியாக் காணுங்கால் காணுந்தன்மையே முனைத்துத் தோன்றுமாகலின் அவ்வழி விளக்கொளியிருந்தும் இல்லைத்தானே, அன்றி விளக்கொளியாக் காணுங்காற் காட்டுந்தன்மையே முனைத்துத் தோன்றுமாகலின் அவ்வழிக் கண்ணொளியிருந்தும் இல்லைத்தானே, இனிக் கண்ணொளியும் விளக்கொளியுமெனப் பகுத்துக் காணப் புகினும் காணுந் தன்மையே முற்பட்டுத் தோன்றுதலின் அவ்வழி விளக்கொளி திரிவுபுலனாக் காட்சிப்படுவதல்லது

தெளிவுபுலனாக் காட்சிப் படுமாறில்லை. அதுபோலத் தூலவறிவாகிய உயிருஞ் சூக்கும வறிவாகிய சிவமும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கு நிலையும் பிரித்தறியவாராமையின் ஆண்டும் இவ்வாறே கண்டுகொள்க.

இக்கருத்துப்பற்றியன்றே "கண்ணொளிவிளக்கின் சோதி கலந்திடுங் கருத்தொன்றன்றே" எ-ம் "காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவுநீத்துண்மை—காண்பார்கணன் முத்தி காணார்கள்—காண்பானும்—காட்டுவதுங் காண்பதுவுந் தண்கடந்தைச் சம்பந்தன்—வாட்டு நெறிவாராதவர்." எ-ம் கூறினார் புடைநூலாசிரியரும். அற்றேல், இவ்விரண்டனுள் யாது திரிவு காட்சி யாது தெளிவு காட்சி எனின், கண்ணொளியோடு கூடிய வழியும் இது விளக்கொளி இது ஞாயிற்றொளி இது திங்களொளியென அவ்வப்பெற்றியவேயாய்க் காணப்படும் விளக்கொளி முதலியவற்றின் காட்சி தெளிவுக் காட்சி யெனவும், அவ் வொளிகளோடு கூடியவழி அவ்வாறொருபெற்றித்தாய்க் காணப்படாத கண்ணொளியை வேறுகாண்டல்திரிவு காட்சி யெனவும், கண்கூடாக விளங்கக் கிடத்தலின் இவ்வாறே பொருளினும் வைத்துணர்ந்து கொள்க. இவ்வாறன்றி, விளக்கொளி முன்னர்க் கண்ணொளி சத்திமடங்கிப் போதலின் அது விளக்கொளியைப்போலக் காட்சிப்புலனாகா தாயிற்றென்னுமோஎனின்; என்னும்: என்னை? கண்ணொளி சத்திமடங்கிற்றாயின் விளக்கொளி காட்சிப்புலனாதல் பிறிதொன்றாற் பெறப்படாமையின். அற்றேல், மின்மினித் துணையாயினும்,தானேவிளங்கும் இயல்பில்லாத கண்ணுக்கு ஒளிக்குணம் உண்டென்பதற்குப் பிரமாணமென்னையெனின்:—அறியாது கடாயினாய்: ஆகாயத்தின் கண்ணதாகிய சத்தகுணம் வியஞ்சகத்தானன்றித் தினைத்துணையானுந் தானென விளங்குமாறின்மையின் அதுபற்றி எதிரொலிவடிவாய அவ்வோசையை ஆகாயத்தின் குணம் அன்று வியஞ்சகப் பொருளின் குணமென்பார்யாரும் இல்லை. அதுபோலக் கண்ணின் கண்ணதாகிய ஒளியும் வியஞ்சகமுள்வழி விளங்கி அல்லுழி விளங்காமைமாத்திரையே பிறிதில்லையாகலான் அதனைக்கண்ணின்குணமன்றென்றல் அறிவிலாதார் கூற்றேயாமெனவும், அக்கண்ணொளியாவது தன்னைவிளக்குதற்குரிய வியஞ்சகப்பொருள் ஏகதேசமாயின் ஏகதேசமாய்விளங்கியும், அது வியாபகமாயின் வியாபகமாய் விளங்கியும் நிற்பதோரியல்பிற்றெனவும் உணர்க. அஃதங்ஙனமாக

"கண்ணொளி விளக்கின் சோதிகலந்திடும்" என்றற்குப் பிரமாணம் என்னை: ஒருவிடயத்தில் வீழ்ந்த பலகண்ணொளிகட்குத் தம்முள் இயைபில்லாதவாறுபோல ஒருவயிற்பட்ட கண்ணொளி விளக்கொளிகட்குத் தம்முள் இயைபில்லை யென்றலே பொருத்தமுடைத்துப்போலுமெனின்,— அஃதறியாதார் கூற்றேயாமென்றொழிக. என்னை? ஒருவிடயத்தின் வீழ்ந்த கண்ணொளிகள் தம்முள் ஒன்றனையொன்று காணமாறுமில்லை காட்டுமாறுமில்லையாகலான் அவை தம்முட் கலத்தற்கு ஓரியைபின்றென்பது ஒக்கும். அவ்வாறன்றிக் கண் விளக்கினைக் காண்டலும் விளக்குக் கண்ணுக்குக் காட்டலுமாகிய இயைபுண்மையானும், இவ்வியைபு தம்முட் பெறப்படாத கண்ணொளி முதலாயின ஈண்டைக்குவமையாதல் செல்லாமையானும், இந்திரியங்கள் தத்தம் விடயத்தோடியைந்தன்றிச் சந்நிதி மாத்திரையான் அவற்றையறிதல் செல்லாதென்பது ஆகமங்களுக்கெல்லாந் துணிபாகலானும், அத்தன்மையவாய கண்ணொளி விளக்கொளிகட்குத் தம்முட் கலப்பில்லையென்றல் காண்டல்விரோதமாகலின். இவ்வாறு உவமைக் கோதியனவெல்லாம் பொருட்கண்ணுமாமாறுணர்ந்து உய்த்துரைத்துக்கொள்க. அற்றேல், ஈண்டெடுத்துக்காட்டியகண்கள் தம்முள் ஒன்றனையொன்று காணுமாறின்மைபோல உயிர்களுந்தம்முள் ஒன்றனையொன்று அறியுமாறில்லைபோலுமெனின்; அறியாது கூறினாய்: கண்கள் தம்முள் ஒன்றுனொன்று காணப்படுமாறில்லை யென்றது, விளக்கும் விடயமும் காணப்படுமாறுபோல வேறியைந்து தனிப்பொருளாய்க் காணப்படுமாறில்லையென்ற துணையேயன்றிப் பிறிதின்மையின், விளக்கொளியைக் கண்காணுங்கால் அதுவதுவாய்நின்று காணும் பெற்றித்தாய்த் தன்னையும் அவ்விளக்கொளி வண்ணமாய்க் காண்டலுண்டென்பது கண்கூடாக அறியக்கிடத்தலின், ஏனைக்கண்களையும் அவ்வாறு காண்டலமையுமாகலான் அதுபோலத் தம்முட்டனித்தியைபில்லாத உயிர்களுஞ் சிவத்தோடியைந்துநின்று தம்மையும் பிறவுயிர்களையும் இவ்வாறுணர்தல் அமைவுடைமையானென்பது. "நாடியரன்—றன்னாலே தன்னையுங்கண்டு தமைக்காணுரென்னுமென வறிவார்" எ-ம், "தன்னாலே தனையறிந்தாற்—றன்னையுந் தானே காணும் தானதுவாகி நின்றே" எ-ம், "அதிலறிவடங்கி—மன்னிட வியாபியாய வான்பயன் றோன்றும்" எ-ம், "என்னையுங்கண்டேன் பிறரையுங்கண்டேனின்னிலையனைத்தையுங்

கண்டேனென்னே— நின்னைக்காணு மாந்தர் தம்மையுங் காணுத் தன்மையோரோ" ௭-ம், பிறவும் இவ்வாறே துரும் அநுபவ முடைய தேசிகர் திருவாக்குக்களானும் இவ்வுண்மையுணர்ந்து கொள்க.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) தன்னடிவைத்தில் லென்று என்பதைத்தன் அடி இல் என்றுவைத்துக் கூட்டுக.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றேவெனின், உயிரையானென்றும் முதல்வனை எனது முதல்வனென்றும் கூறுதல் முறைமையாதலால் யான் எனவும் எனது எனவும் பகுத்து நின்று உணருமுணர்வை மயக்க உணர் வென்று ஏதுவிற் கூறியது எவ்வாறு பொருந்தும் என்பாரை நோக்கிப் பொருந்து முறைமை கூறி ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) முதல்வன் இல்லை; யானேஉளன் என எண்ணுவார்க்கு அவ்வாறு எண்ணுதல் அறியாமையால் முற்பட்டுத் தோன்றும் உயிருணர் வாதல்போல, யான் என்றும் அவன் என்றும் தன்னையும் கடவுட்பொருளை யும் பகுத்தறிந்து நிற்பவர்க்கும் அவ்வாறெண்ணுதல் உயிரின் தற்போதத் தால் முற்பட்டுத் தோன்றுவதேயாம். ஆதலால் அவ்வாறு உயிரினறிவு முற் பட்டுத் தோன்றுங்காலத்து முதல்வன், தான் இருக்கின்றதாகக் காணப்ப டாமல் தற்போதத்தால் முற்பட்டுத் தோன்றும் அவ்வுயிரின் உணர்வேயாய் நிற்பன், இனியான்னென்று ஒருபொருள் தனித்துக் காணப்படுமாறில்லை யென அறிந்து எல்லாப் பொருளும் முதல்வனேயெனக் காணும். தெளிந்த அறிவுடையாரை அம்முதல்வன் தனது திருவடி வியாபகத்துள் அடங்கி நிற்கும்படி செய்து எல்லாப்பொருளுமாய் நிற்பன் ஏ-று.

(க-ரை) முதல்வன் இல்லை யானே உளன் என்னும் அறிவு மயக்கத்தா லுண்டாவதுபோல, தனித்து நில்லாததன்னையும் தன்னின் வேறுநில்லாத முதல்வனையும் பகுத்துக் காணும் அறிவும் மயக்கத்தா லுண்டானமையால் யான் எனது என்று பகுத்து உணரும் உணர்வு மயக்க உணர்வென்று ஏது விற் கூறியது பொருந்தும் என்பதாம்.

தானதுவாய்த் தானும் என்னும் இரண்டுவாக்கியங்களும் இறை என் னும் எழுவாயோடு கூடி இறைதானதுவாய் தானும் எனப்பொருந்தும். தானதுவாய்த் தானும் என்ற வாக்கியங்களின் இறுதியிலுள்ள சொற்கள் ஆய் ஆம் என்பன. அவ்விரண்டனுள், ஆய்என்பது வினைச்சொல்லாய் எச்சமாய்நின்றது. அது செய்து என்னும் வாய்ப்பாட்டுவினையெச்சம்; அவ் வெச்சம், ஆம் என்னும் வினைகொண்டு முடிந்தது. செய்து என்னும் வாய் பாடு ஆய் என்ற எவ்வாறு வருமெனின், தொல்காப்பியம் வினையியல் ௩௧-ம் சூத்திரத்துக்குச்சேனவரையர் உரையில் செய்து என்பதின் இறுதியிலுள்ள

உகரம், இயல்பாயும் இகரமாய்த் திரிந்தும் முதல் எழுத்து நெடிலாயின் அவ்வுகரங் கெட்டு யகரமாயும் வரும்எனவும், இயல்பாய் வருதற்கு நக்கு முதலியவற்றையும், இகரமாய்த் திரிந்து வருதற்கு எஞ்சிமுதலியவற்றையும், நெட்டெழுத்து முதலாயின் யகரம் வரும் என்பதற்கு ஆய்முதலியவற்றையும் எடுத்துக்காட்டியிருக்கின்றமையால் ஆய் என்பது செய்து என்னும் வாய்பாடாதல் அறிக. இனி வினையெல்லாம் மூன்றுகாலத்தையுங் கருத்தாவையும் காட்டும். உதாரணம், செய்துவந்தான், செய்துவருகின்றான், செய்துவருவான் என்பனவாம். முதல்வன் உள்ள அன்றே அம் முதல்வனிடத்து இயல்பாயுள்ள ஆய் ஆம் என்னும் அவ்வினை காலத்தைக் காட்டாது முதல்வன்தன் வினையாதலை மட்டும் உணர்த்திநின்றது; அதாவது ஒருவனிடத்து இயல்பாயுள்ள இரண்டுவினையைக் கூறும்பொழுது ஒருவினையை இறந்தகாலத்தானும் மற்றொரு வினையை எதிர் காலத்தானுங் கூறுதல் வழக்கு. அவ்வாறு கூறுதலால் காலத்தைக் கொள்வாரில்லை. எதுபோல எனின், "நள்ளார்க்கு நஞ்சொத்து நட்டார்க்கு அமிழ்தொக்குமிவன்" என்றவிடத்து ஒத்து என்பது இறந்த காலத்தையும் ஒக்கும் என்பது எதிர் காலத்தையுங் காட்டாமல் ஒருவன்தன் வினை என்பதைமட்டும் உணர்த்தி நின்றவாறுபோல என அறிக. நள்ளார் சிநேகமல்லாதவர், நட்டார் சிநேக முள்ளவர்.

நான் அவன் என்று எண்ணினற்கு என்றவிடத்து எண்ணினற்கும் என இறந்தது தழீஇய எச்ச உம்மையின் மகர ஒற்றுச் சந்தி விதியின்படி நகரம் முன் வந்தமையாற் கெட்டு நின்றது. அவ்வும்மை யானே என நிற்பார்க்கன்றி நான் அவன் என்று எண்ணினற்கும் என இறந்தது தழுவிய எச்சமாய் நின்று நாடும் உளம் உண்டாதல் என்பது கொண்டு முடிந்தது.

உயிரின் அறிவு முனைத்துத் தோன்றியவிடத்து முதல்வன் இல்லையாதலும் உயிரின் அறிவு முனைத்துத் தோன்றாதவிடத்து முதல்வன் விளங்கித் தோன்றலும் எவ்வாறு தெரிந்தது எனின், காட்டுவாம்:—ஒரு துணையைக்கொண்டு பிரகாசிக்கும் தூல ஒளியாகிய கண்ணொளியும் தானே பிரகாசிக்கும் சூக்கும ஒளியாகிய விளக்கொளியும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் நிலையை ஆராய்ந்து அறியப்புகின் அவ்விருஒளிகளும் வேறு வேறு பிரித்தறிய வாராவாம். பிரித்தறிய வாராமையால் காணுந்தன்மை கண்ணுக்கேயன்றி விளக்குக்கு இல்லாமையின் கண்ணொளி தானுளது எனக் காணுமிடத்துக் காணுந்தன்மையே முற்பட்டுத் தோன்றும். அவ்வாறு காணுமிடத்து விளக்கொளி யிருந்தும் இல்லையாயிற்று. அன்றி விளக்கொளி இல்லாத காலத்துக் கண்ணொளி பொருளைக் காணாமையால் விளக்கொளி தானுளது எனக்காணுமிடத்து விளக்கொளியின் காட்டுந் தன்மையே முற்பட்டுத் தோன்றும். அவ்விடத்துக் கண்ணொளி இருந்தும் இல்லையாயிற்று.

இனிக்காணுந் தன்மையால் கண்ணொளியுளது காட்டுந் தன்மையால் விளக்கொளியுளது என அவ்விரு வொளிகளையும் பகுத்துக் காண எண்ணினும் அவ்வாறு காணுதலாகிய கண்ணொளியின் தன்மைதான் முற்பட்டுத் தோன்றுமாதலால் அவ்விடத்துக் காட்டுந்தன்மையுடைய விளக்கொளியை மயக்க அறிவால் உளதென்று காண்டலேயன்றித் தெளிந்த அறிவால் உளதென்று காண்டலில்லை. அதுபோலப் பெத்தத்தில் கருவி கரணங்களையும் முத்தியில் அருளையுந் துணையாகக் கொண்டு அறியுந் தூல அறிவையுடைய உயிரும் உயிருக்கு அறிவித்தற்குத் துணைவேண்டாது தானேயறியும் சூக்கும அறிவையுடைய சிவமும் அத்து விதமாய்க் கலந்து நிற்கும் நிலையும் வேறு வேறு பிரித்தறியவாராமையால் அறிவுடைப்பொருளாகிய உயிர்தானுளது எனக்காணுமிடத்து உயிரின் அறிவே முற்பட்டுத் தோன்றும். அவ்விடத்து அறிவிக்கும் அறிவையுடைய சிவம் இருந்தும் இல்லையாயிற்று. உயிராகிய யான் எக்காலத்தும் இருந்தும் நனவிற்கண்டதைக் கனவிலறிய முடியவில்லை. கனவிற் கண்டதை நனவில் அறியமுடியவில்லை. நனவிலும் பின்னர் வருவதை முன்னர் அறிய முடியவில்லை. முன்னர் அறிந்ததையும் மறவாது அறிய முடியவில்லை. இவ்வாறு ஒரு சேர அறியுந்தன்மை எனக்கில்லாமையால் அறிவிக்கும் பொருளாகிய சிவந் தான் உளது எனக்காணுமிடத்துச் சிவமே முற்பட்டுத் தோன்றும். அவ்விடத்து உயிரிருந்தும் இல்லையாயிற்று. இனி அறியுந் தன்மையால் உயிர் உளது அறிவிக்குந்தன்மையால் சிவம் உளது என இருபொருளையும் பகுத்து அறிய எண்ணினும் அவ்வாறு அறியுந் தன்மையாகிய உயிரின்தன்மைதான் முற்பட்டுத் தோன்றுமாதலால் அவ்விடத்து அறிவிக்குந் தன்மையுடைய சிவத்தைமயக்க அறிவால் அறிதலேயன்றித் தெளிந்த அறிவால் அறிதல் இல்லையெனக் கண்டுகொள்க. ஆதலால் தான் ஒரு முதல் என்ற எண்ணம் எதுவரையிருக்கிறதோ அதுவரை சிவம் விளங்குவதில்லை என அறிக.

யானே உளன் வேறு தலைவன் இல்லையென்று எண்ணுகின்றவர்களுக்கும் யானும் இருக்கின்றேன் எனது தலைவனும் இருக்கின்றான் என்று எண்ணுகின்றவர்களுக்கும் சிவம் வெளிப்பட்டு விளங்குவதில்லை யென்னும் இக்கருத்துப்பற்றி யல்லவா சிவப்பிரகாசம் ௯-ம் சூ-ம் ௭-வது செய்யுளில் கண்ணொளியும் விளக்கொளியும் கலந்து நிற்கும், நிற்பினும் பொருள் ஒன்றன்று. அதுபோல முதல்வனுடைய அருளில் உயிர்கலந்து நிற்க வேண்டுமெனவும், வினா வெண்பா ௧௧-வது செய்யுளில் காண்பவன் காட்டுபவன் காணப்படுபொருள் என்னும் மூன்றனையுங் கொண்டவிடத்தும் முத்தியில்லை விட்ட விடத்தும் முத்தியில்லை. ஆதலால் காண்பவனையும் காணப்படு பொருளையும் காட்டுபவன் அருள்வழியாகக் கொள்வதே முத்தி எனவும் புடைநூலாசிரியர் அருளிச்செய்வாராயினர்.

அவ்வாறாயின் கண்ணொளியை வேறாகக்காண்டலும் விளக்கொளியோடுகலந்து அவ்விளக்கொளியாகக் காண்டலும் ஆகிய காட்சி இரண்டனுள் மயக்கக்காட்சியாது தெளிவுக்காட்சி யாது என ஆராயுமிடத்துக் கண்ணொளியானது எந்த எந்த ஒளியோடு கூடினும் அந்த அந்த ஒளிவடிவாய்க் காணப்படும் தன்மை யுடையதே யன்றித் தனித்துக்காணப்படுவ தில்லையாதலால் அவ்வாறு தனித்துக் காணப்படாத கண்ணொளியை வேறாகத் தனித்துக் காண்டல் மயக்கக்காட்சி எனவும், விளக்கொளி சூரியனொளி சந்திரனொளிகள் கண்ணொளியோடு கூடியவிடத்தும் கண்ணொளியாகக் காணப்படாமல் அந்தஅந்த ஒளிகளாகவே காணப்படுமாதலால் அவ்வாறு தனித்துக்காணப்படும் விளக்கொளி முதலியனவாகக் கண்ணொளியைக் காணுங் காட்சி தெளிவுக்காட்சி எனவும் பிரத்தியட்சமாய் அறியப்படும். இவ்வாறே உயிரைத் தனித்துக்காண்டலும் சிவமேயாய்க் காண்டலு மென்னும் காட்சி இரண்டனுள், மயக்கக்காட்சியாது தெளிவுக்காட்சியாது என ஆராயுமிடத்து உயிரானது யாதானு மொன்றைச்சார்ந்து அதன் வடிவாய் நிற்பதன்றித் தனித்து நிற்பதில்லையாதலால் தனித்து நில்லாத உயிரைத் தனித்து நிற்பதாய்க் காண்டல் மயக்கக் காட்சி யெனவும், சிவம் உயிரோடு கூடியவிடத்துஞ் சிவமாய் விளங்குவதன்றி உயிராய் விளங்காமையால் அச்சிவமாக உயிரைக்காண்டல் தெளிவுக்காட்சி எனவும் அறிந்துகொள்க.

இவ்வாறு கண்ணொளியை விளக்கொளியாகக் காணாது விளக்கொளியின் முன்னர்க்கண்ணொளியின் சத்தி மடங்கிப்போதலால் விளக்கொளியைப்போல அக்கண்ணொளி தெளிவாய் அறியப்படாதாயிற்று என்று சொல்வேமோ எனின், சொல்லமாட்டேம். எதனாலெனின், கண்ணொளியின் சத்தி மடங்கிப்போயிற்றாயின் விளக்கொளியை யறிந்தது எது? விளக்கொளியை அறிந்தமையால் அவ்விளக்கொளியின் முன்னர்க்கண்ணொளியின் சத்தி மடங்கிப் போயிற்று என்றல் பொருந்தாமையாலென்க.

அவ்வாறாயின் கண்ணொளிக்கு மின்மினி அளவுங்கூடத்தானே விளங்குந்தன்மை யில்லாமையால் கண்ணுக்கு ஒளியுண் டென்பதற்குப் பிரமாணம் என்னை எனின், ஆகாயத்திலுள்ள சத்தகுணம், முரசுசடி முதலியவற்றான் யாதானும் ஒரு துணையினா லன்றிச் சிறிதும் விளங்காமையால் துணையினால் தோன்றும் எதிரொலி வடிவாகிய சத்தத்தை ஆகாயத்தின் குணமன்று முரசு முதலியவற்றின் குணமென்பார் யாருமில்லை. அதுபோலக்கண்ணின் குணமாகிய ஒளியும் விளக்கொளி முதலிய. துணையுள்ளவிடத்துவிளங்குதலும்அத்துணையில்லாத விடத்து விளங்காதிருத்தலும் ஆகிய அவ்வளவேயன்றிப் பிறிதில்லாமையால் கண்ணுக்கு ஒளி யில்லையென்றுகூறுதல்பொருந்தாது. அக்கண்ணொளியானது துணையொளி சிறிதாயிற் சிறிதாயும் பெரிதாயிற் பெரிதாயும் விளங்குந்தன்மை யுடையது. இவ்வாறே தனித்து அறியுந்தன்மை உயிரின் அறிவுக்கில்லாமையால் உயி

ருக்கு அறிவு இல்லை என்றல் பொருந்ாதெனவும் அவ்வுயிரி னறிவு சிற்றறிவை யுண்டு பண்ணும் தனுகரண புவன போகங்களுடன் கூடில் சிறிதாயும், பேரறிவை யுண்டுபண்ணும் திருவருளோடு கூடில்பெரிதாயும் விளங்கு மெனவும் அறிக.

அவ்வாறகண்ணுக்கு ஒளியுண்டென்றேவைத்துக்கொள்வோம். சிவப்பிரகாசத்திற் கூறியபடி கண்ணொளியும் விளக்கொளியும் கலந்து நிற்கும் என்றற்குப் பிரமாணம் யாது? ஒருபொருளில் பல கண்ணொளிகள் வீழ்ந்து பார்த்தபோது வீழ்ந்த அக்கண்ணொளிகள் ஒன்றட னொன்று கலப்பதில்லை. அதுபோல ஒரு இடத்தின்கண் பொருந்திய கண்ணொளிக்கும் விளக்கொளிக்கும் தம்முட்கலத்தலில்லை யென்றலே பொருத்தம் எனின், அவ்வாறு கூறுதல் பொருத்தமாகாது. எதனாலெனின். ஒரு பொருளில் வீழ்ந்த பல கண்ணொளிகளுள் ஒருகண்ணொளி பிறிதொரு கண்ணொளியைக்காணுதலுமில்லை; பிறிதொரு கண்ணொளிக்குக் காட்டுதலு மில்லை. ஆதலால் கண்ணொளிகள் ஒன்றட னொன்று கூடுதலில்லை யென்றல் பொருந்தும். அவ்வாறன்றி விளக்கொளியைக் கண்ணொளி காண்டலும் கண்ணொளிக்கு விளக்கொளிகாட்டும் உபகாரத்தைச் செய்தலும் ஆகியசம்பந்தம் இருத்தலானும் இவ்வாறு காணுதலுங் காட்டுதலு மில்லாத கண்ணொளிகளை விளக்கொளி கண்ணொளிகட்கு உவமை கூறுதல் பொருந்தாமையானும் கண்ணொளி விளக்கொளிகட்குத் தம்முட்கலப் பில்லை யென்றல் பொருத்த மாகாமையா லென்க. அன்றியும் கண்முதலிய இந்திரியங்கள் அந்த அந்த இந்திரியங்களுக்குள்ள விஷயங்களை அவ்விடயங்களோடு கலந்து அறிதலேயன்றிக் கலவாமல் விடயங்கள் முன்னே நின்ற அளவில் அறிவதில்லை. முன்னேநின்ற அளவில் அறியுமாயின் முன்னின்ற எல்லாப்பொருளையும் அறிதல்வேண்டும். முன்னின்ற பொருள்கள் பலவற்றுள் ஒன்றனை யறியுங்கால் பிறிதொன்றனை யறிவதில்லை. ஆதலால் இந்திரியங்கள் தத்தம் விடயங்களோடு கூடியே அறியுமென்பது ஆகமங்களுக்கெல்லாம் சம்மத மாகலானும் இந்திரியமாகிய கண்ணொளிக்கும் விடயமாகிய விளக்கொளிக்கும் தம்முட் கலப்பில்லை யென்றல் பிரத்தியட்ச விரோதமாக லானும் இது விளக்கொளியென்று கண்ணொளி காணும் அனுபவம் காணப்படுதலானும் அவ்விரு ஒளிகட்குக் கலப்பில்லை என்றல் பொருந்ாதென அறிக.

இவ்வாறு ஒரு உயிரும் பிறிதொரு உயிரும் கலப்பதில்லை. அதுபோல உயிருஞ்சிவமும் கலத்தலில்லையெனின், உயிருக்கெல்லாம் அறியுந்தன்மையேயன்றி உள்ளீடாய் நின்று அறிவிக்குந்தன்மையில்லை. சிவத்துக்கு உள்ளீடாய் நின்று அறிவிக்கும் தன்மையுண்டு. அன்றியும் உயிர் தனித்து நிற்கும் பொருளுமல்லை. ஆதலால் புறத்தே நின்று ஒரு உயிருக்குப் பிறிதொரு உயிர் அறிவிக்குமேயன்றி உள்ளீடாய் நின்று அறிவிக்கும் தன்மை இல்லாமையானும் தனித்து நில்லாமையானும் உயிரும் உயிரும் கலவாதிருக்

தல் கூடும். உயிருக்கு அறியுந் தன்மை இருத்தலானும் சிவத்துக்கு உள்ளீடாய் நின்று அறிவிக்குந்தன்மை இருத்தலானும் சிவம்தனிப்பொருளாய்க் காணப்படுமாதலானும் உயிருஞ் சிவமுங் கலத்தல் கூடுமாதலால் கலவாதென்றல் பொருந்தாது.

இவையனைத்தும் பொருந்தும் இவ்விடத்து உவமையாக எடுத்துக்காட்டிய கண்ணொளிகள் தம்முள் ஒன்றனை யொன்று காணாசவாறுபோல உயிர்களுந் தம்முள் ஒன்றனையொன்று அறியுமாறில்லையோ எனின், கூறுதும்:— கண்ணொளிகள் ஒன்றனையொன்று காணுமாறில்லை யெனக்கூறியது விளக்கொளியையும் ஏனையபொருள்களையும் வேறாகத் தனித்துக் காண்பது போல ஒரு கண்ணொளியானது பிறிதொரு கண்ணொளியை வேறாய்த் தனித்துக் காண்பதில்லை யென்ற அவ்வளவேயன்றிப் பிறிதில்லை. விளக்கொளியைக் கண் காணுங்கால் அவ்விளக்கொளியே தானாய்க்கலந்து நின்று காணுந் தன்மையைக்கொண்டு கண்ணொளியாகிய தன்னையும் அவ்விளக்கொளி வண்ணமாய்க் காணுதல் கூடும் என்பது பிரத்தியட்சமாக அறியக் கிடத்தலால், ஏனைக் கண்ணொளிகளையும் அக் கண்ணொளிகள் காணும் பொருள் வண்ணமாக் அறிதல் கூடும். அதாவது தான் ஒரு பொருளைக் காணுதலால் தன் கண்ணில் ஒளியுண்டென்றும் அவ்வாறே பிறரிடத்தும் பொருளைக் காணுந்தன்மை இருத்தல்கண்டு அவர்கண்ணில் ஒளி உண்டென்றும் அறிதலாம். அதுபோலத் தனித்து நில்லாத உயிர்களும் சிவத்தோடு கலந்து நின்று தம்மையும் பிற உயிர்களையும் அச்சிவமாக உணர்தல் கூடும். இக்கருத்துப்பற்றியே இந்நூல் க-ம் சூ-ம் க-ம் அதிகரணத்து முதல் வெண்பாவில் "நாடியரன்—றன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணா ரென்னுமென அறிவார்" எனவும், சிவப்பிரகாசம் அ-ம் சூ-ம் உ-வது செய்யுளில் "தன்னாலே தனையறிந்தால்—தன்னையுந் தானே காணும் தான்அதுவாகிநின்றே" எனவும், மேற்படிநூல் க-ம் சூ-ம் ௬-வது செய்யுளில் "அறிவிலறிவடங்கி மன்னிட வியாபியாய வான்பயன் தோன்றும்" எனவும், பட்டினத்துப் பிள்ளையார் அருளிச்செய்த திருவிடை மருதூர் மும்மணிக்கோவை கங-வது செய்யுளில் "என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன் நின்னிலை யனைத்தையுங் கண்டேன் என்னே நின்னைக்காணா மாந்தர் தம்மையுங் காணாத்தன்மையோரே" எனவுங்கூறினர். வேறிடத்தும் இவ்வாறு கூறும் அநுபவமுடைய தேசிகர் திருவாக்குக்களாலுஞ் சிவத்துடன் கூடிச் சிவமாய் நின்று தன்னையும் பிறரையும் அறிதல் கூடுமென்ற இவ்வுண்மையை உணர்ந்து கொள்க.

முதலதிகரணம் முற்றிற்று.

இரண்டாம் அதிகரணம்.

இறைபணி நிற்கவேண்டுமெனக் கூறும்

மேற்கோள்.

இனி இறைபணி வழுவாது நிற்கவென்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின் உடம்பு நிற்குங்காறும் அது கொண்ட வினைப்பயனும் அதனையநுபவித்தற்குத் துணைக்காரணமாய் உடனிற்கும் முயற்சியும் ஒருவாற்றானும் நீக்கலாகாமையின் அவை அவ்வழி ஏகனாகி நிற்றற்குத் தடையாதலைக் கடக்குமாறில்லை போலுமெனச்சுத்த சைவரீறாயினர் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ—ள் வெ - டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ—ள். இறைபணி—அம்முதல்வ னருள்வழி; —வழுவாது நிற்கவென்றது—சலியாம னிலைநிற்க எ—று.

சிற்றுரை.

நிற்றலாவது சலியாது நிலைபெறுத லென்பார் வழுவாது நிற்க வென்றார். ஈண் டிறைபணியென்றது யாதெனின் அஃது ஆசிரியர் தாமே முன்னர்த் தெரித்துரைக்கின்றமையின் இனிது விளங்கும்.

விளக்கம்.

இம்மேற்கோள் இறைபணி நிற்கமலமாயை தன்னொடு வல்வினையின்றே என்னும் சூத்திரத்தில் உள்ள இரண்டாங் கூற்றைப் பதச்சேதஞ் செய்தமேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோ எனின், உடம்பு நிற்கும் அளவும் அவ்வுடம்புக்கு நியமிக்கப்பட்ட வினைப்பயனும், சித்தியார் உ-ம் சூ-ம் கக—வது செய்யுளில் "பிற்செயா ததுபவிப்பதின்று" என்றபடி முயற்சி

யின்றி அநுபவம் நிகழாமையின் அவ்வினைப்பயனை யநுபவிப்பதற்குத் துணைக் காரணமாய் அப்பயனோடு கூடஉடனிற்கும் முயற்சியும், எவ்வழியானும் நீக்குதல் கூடாமையால் அவ்விரண்டும் மேலையதிகாரணத்திற்கூறியவாறு ஏகனாய் நிற்றற்குத் தடையாகும். அத்தடையைக் கடக்கமுடியாது என்பார் சுத்தசைவரும் அவருக்குக் கீழ்ப்பட்டவரும். அவர் கூற்றை ஆசங்கித்துக்கொண்டு சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைப் பதச்சேதஞ் செய்து இறைபணியாகிய அருள்வழி நிற்கில் முன் வினைப்பயனையும் முயற்சியையும் நீக்குதல் கூடுமெனக் கூறியவாறும்.

இவ்வதிகரணத்தில், சிவனிடத்து ஏகனாய் நிற்கவொட்டாது தடை செய்யும் பிராரத்தவினையினையும்முயற்சியினையும் நீக்கக் கூடுமோ கூடாதோ என்பது ஐயப்பாடு. கூடாது என்பது பிறர்பக்கம்.

(இம்மேற்கோளின் பொருள்.) ஏகனாய் நிற்கும் அம்முதல்வன் அருள் வழியிற் சலியாமல் நிலைத்து நிற்க எ-று.

சூத்திரத்தில் நிற்க என்று கூறியிருப்பினும் நிற்றலாவது சலியாது நிலைபெறுத லென்பதை யறிவிக்கவேண்டி மேற்கோளில் வழுவாது நிற்க வென்று கூறினர்.

இம்மேற்கோளில் இறைபணி என்றது யாது எனின், அவன் அருள் வழிநிற்றலாம். அது, ஆசிரியர்தாமே முன்னர் ஏதுவில் அவனருளால் அல்லது ஒன்றையுஞ் செய்யானாகவே என விளக்கிக் கூறுவதனால் இனிது விளங்கும்.

இறைபணி நிற்கவேண்டு மென்பதற்குக் காட்டும்

ஏ து.

அவன் அருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானாகவே அஞ்ஞானகன்மம் பிரவேசியா வாகலான்.

சிற்றுரை.

எ-து ஏது எ-னின், ஏகனாகி நிற்றலேயமையும், இறைபணி நிற்றலெற்றுக் கென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுத லிற்று.

(இ—ள்.) தன் செய்திக்கு முதல்வன் செய்தியை இன்றியமையாத ஆன்மா செய்வனவெல்லாம் அவனருளின் வழிநின்று செய்யுமாயின் மாயேயமுங் கன்மமும் ஏகனாகி நிற்றற்குத் தடையாய் வந்துதாக்கா ஆகலான், அவைதாக்காமைப் பொருட்டுச் செய்யப்படும் உபாயமாதல்பற்றி 'இனி இறைபணி வழுவாது நிற்க'வென மேற்கொண்டது எ-று.

அஞ்ஞான கன்மம் உம்மைத்தொகை. மலமின்றுதல் மேற் பெறப் பட்டமையின் ஈண்டஞ்ஞானம் என்றது மாயையின் காரியமாகிய மயக்கத்தை என்பது பெற்றும். உடம்புநசிக்கும் அளவும் அவை மாய்வன வன்மையின் அறுமென்னுது பிரவேசியா வென்றார்.

விளக்கம்.

இந்சஎது என்னசொல்விற்றே எனின், முதலதிகரணத்திற் கூறியவாறு ஏகனுகி நிற்றலேபோதும் இறை பணி நிற்றல் எதற்காக வேண்டு மென்பாரை நோக்கி, ஏகனுகிநிற்றலால் ஆணவமல மறுதலும் இறைபணி நிற்றலால் மாயாமலம் கன்மமலம் அறுதலும் பயனுதலால், ஏகனுய் நின்று ஆணவமலத்தை நீக்கினுலும் உடம்பு காரணமாக வரும் மாயாமலங் கன்மலம் நீங்குதற்காக இறைபணி நிற்கவேண்டு மெனக் கூறிமேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த எதுவின்பொருள்.) உயிராகிய தான்யாதானு மொன்று செய்ய வேண்டுமாயின் முதல்வன் உடனுய் நின்று செய்யவேண்டும். அவ்வாறு முதல்வன் செயலையின்றித் தனித்துத்தனக்கொரு செயலில்லாத தன்மையுடைய உயிர்செய்வன எல்லாம் அம்முதல்வன் அருள்வழி நின்று நான்செய்கின்றே னென்னும் முனைப்பின்றிச் செய்யுமாயின் மாயாகாரியமாகிய மயக்கத்தாலுண்டாகும் முயற்சியும் அம்முயற்சி வாயிலாக வரும் கன்மமலத்தின் காரியமாகிய இன்பதுன்பப்பயன்களும் ஏகனுகி நிற்றற்குத் தடையாக வந்து தாக்கமாட்டா. ஆதலால், மாயாமல காரியமும் கன்மமலகாரியமுமாகிய அவ்விரண்டுந் தாக்காதிருத்தற் காகச்செய்யவேண்டும் உபாயம் இறைபணி நிற்றல் என்பதுபற்றி 'இனி இறைபணி வழுவாது நிற்க'என மேற்கோள் கூறியவாறும் எ-று.

எதுவில் அஞ்ஞான கன்மம் என்றதில் பிரவேசியா யென்ற புன்மை முடிவுக்கேற்ப அஞ்ஞானமும் கன்மமும் என்றபொருளைக் குறித்து உம்மை தொக்கு நின்றது.

அஞ்ஞானம் என்றது ஆணவமலத்தைக் குறிக்குமாயினும் மேல் முதலதிகரணத்தால் ஆணவமலம் இன்றுதல் பெறப்பட்டமையின் இந்த எதுவில் அஞ்ஞானம் என்றது மாயையின் காரியமாகிய மயக்கம் என்பது பெறப்பட்டது. உடம்பு நசிக்கும் அளவும் முயற்சியும் பயனும் கெடமாட்டா. ஆயினும் தாக்குதலில்லை. ஆதலால் அஞ்ஞானகன்மம் அறுமென்று கூறுது பிரவேசியா என்றார்.

இந்த எது பிராரத்த வினையினையும் முயற்சியினையும் நீக்க முடியாதென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

பயனியல் பத்தாஞ்சூத்திரம். உ-ம் அதி.

இறைபணி நிற்றலால் அஞ்ஞான கன்மம் பிரவேசியா
என்பதற்குக் காட்டும்
உதாரணம்.

நாமல்ல விந்திரிய, நம்வழியி னல்லவழி
நாமல்ல, நாமு மரனுடைமை—யாமேன்னி
லெத்தனுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினை,
முற்செய்வினை யுந்தருவான் முன்

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், உடம்பொடு நிற்பார் நுகர்தற்குவேண் டப்படும் பிராரத்த வினையும் அதுபற்றியேறும் ஆகாமிய வினையும் ஒருதலையா னுண்மையின் இறைபணி நிற்றல்பற்றி அவை பிரவேசியா வென்றல் அமைவுடைத்தன்றுபோலு மென்பாரை நோக்கி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) இந்திரியம் நாம் அல்ல—வினைகளை நுகர்தற்கும் ஈட்டுதற்குங் கருவியாகிய இந்திரியங்கள் (மாயேயமாவன வன்றி) யாமாவன வல்ல,—நம்வழியின் அல்ல—(அவை தொழிற் படுதலும் முதல்வன் வயத்தானன்றி) நம்வயத்தானல்ல,— வழிநாம் அல்ல (நம்வழியின் அல்ல)—(வினை நிகழ்ச்சிக்கு) வாயிலாகிய விடயாதிகளும் (அவ்விந்திரியங்கள்போல மாயேயமாவன வன்றி யாமாவனவல்ல. அவை சேட்டித்தலும் முதல்வன் வயத்தானன்றி நம் வயத்தானல்ல,— நாமும் அரன் உடைமை— (அவற்றோடியைந்து நின்று வினைகளை ஈட்டுதற்கும் நுகர்தற்கும் வினை முதலாகிய யாமும் (ஞானச் செய்திகளை முதல்வன் விளக்கிய வழி விளங்கி அல்லுழி விளங்குமாறின்மையான்) அம்முதல்வன் வயத்தாரவே மல்லஃது சுதந்திரராவே மல்லேம்,—ஆம் என்னில்—என்றிங்ஙனம் பசுபாசங்களதியல்பை உள்ளவாறுணர்ந்து செய்வன வெல்லாம் அவன் அருளின்வழி நின்று செய்யுஞ் செயலாகக்கண்டு கொண்டிருப்பாராயின்,— இறைபணியார்க்கு எத்தனுவின் நின்றும்வினை இல்லை—இவ்வடிமைத் திறமுடையார் எவ்வுடம்பினின்று எவ்வினைகளைச் செய்யினும் அவர்க்கு அவைபந்த மாதலில்லை,—முன்செய் வினையுந் தருவான் முன்—(அவ்வாகாமிய வினையை அவினுபாவ

மாய் உடன் கொண்டு வருவதாகிய) பிராரத்த வினையுந் தன்னைக் கூட்டுவிக்கு முதல்வன் சந்நிதியின் (உடலூழாய்க்கழியும்) எ-று.

நம்வழிபி னல்லவென்பது வழி என்பதனோடுங்கூட்டியுரைத்துக்கொள்ளப்படும். "மகனன்று குற்றி" என்றாற்போல அன்மைச் சொற் றழுவப்படும் பொருண்மேனின்றது; "அன்மைக்கிளவி வேறிடத்தான" என்பதோத்தாகலின். நின்றும் உம்மை சிறப்பு. ஏனையும்மைகள் இறந்தது தழீஇயின. சஞ்சிதவினை தீக்கைசெய்த மாத்திரையே எரிசேர்ந்த வித்துப்போலக் கெட்டொழிதலின் ஈண்டு முற்செய்வினை என்றது ஏற்புழிக் கோடலாற் பிராரத்த வினைமேற்றாயிற்று. தருதல் இடவழுவமைதி. கழியுமென்பது சொல்லெச்சம். உடலூழாய் என்பது அவாய் நிலையான் வந்தது.

விளக்கம்.

இவ்வுசாரணம் என்னசொல்லிற்றோவெனின், உடம்பொடு கூடிநிற்பவர்க்கு அவ்வுடம்பு நிலைத்தற்பொருட்டு மாயாகாரியமாகிய போகங்களை யநுபவிப்பதற்குப் பிராரத்தவினை வேண்டப்படும். ஆதலால் உடம்புநிற்குமளவும் மாயாகாரியங்களைக்கூட்டும் பிராரத்தவினையும் அவ்வினைப்பயனை அநுபவிப்பதற்காகச் செய்யப்படும் ஆகாமியவினையும் உளவாதல் துணிபாம். அவ்வாறாகவும் இறைபணி நிற்றலால் பிராரத்தவினையும் ஆகாமியவினையும் பிரவேசியா என்று எதுவிற்கூறியது பொருத்தமன்று என்பாரை நோக்கிப் பொருத்தமாகும் முறைமைகூறி எதுவை வலியுறுத்தியவாறாம்.

(பொ—ரை.) பிராரத்தவினைப்பயன்களை அநுபவிப்பதற்கும் அவ்வினைப்பயன்களை அனுவிப்பதற்காகச் செய்யும் முயற்சியால் மேலும் வினையைச் சம்பாதிப்பதற்கும் இந்திரியங்களையின்றி முடியாவாம். கருவியாகிய அவ்விந்திரியங்கள் மாயையின் காரியமாவனவன்றி அநுபவிக்கும் யாமல்ல. அவ்விந்திரியங்கள் சடமாதலால் அவை முதல்வனருளால் தொழில்செய்யுமேயன்றி நம்மால் தொழில்செய்யா. பார்க்கவேண்டுமென்ற விருப்பம் இருந்தும் கண்குருடாகவும் இவ்வாறே பிறவற்றினும் வைத்து இந்திரியங்கள் நம்மால் தொழில்செய்யா என்பதை அறிந்துகொள்க. அவ்விந்திரியங்கள் தொழில்செய்தற்கு, முன்னிலையாயுள்ள உலகப்பொருள்கள் வேண்டும். அப்பொருள்களும் அவ்விந்திரியங்கள் போல மாயாகாரியமாவனவன்றி யாமல்ல. அவ்வுலகப் பொருள்களும் முதல்வன் அருளால் விளங்குமன்றி நம்மால் விளங்கா. அவ்விந்திரியங்களோடும் உலகப்பொருள்களோடுங் கூடி நின்று வினைப்பயன்களையநுபவிப்பதற்கும் மேல்வினையைச் சம்பாதிப்பதற்கும் உரிமையுடைய யாமும் முதல்வன் அறியும்படி செய்தாலன்றி

அறியமுடியாமையும் அவன்செய்யும்படி செய்தாலன்றிச் செய்யமுடியாமையும் உடையராய்க் காணப்படுகின்றேமாதலால், அவன் அருள்வழி நிற்குந் தன்மையுடையேமன்றித் தனித்து நிற்குந் தன்மையுடையவரல்லேம். இவ்வாறு உயிரின் இயல்பையும் பாசங்களினியல்பையும் உள்ளவாறு அறிந்து நாம் செய்யும் செயல்கள் எல்லாம் அவன் அருள் செய்யும்படி செய்தலாற் செய்கின்றேமெனக் கண்டுகொண்டிருப்பாராயின் அவ்வாறு நிற்பது அடிமைத்திறமாதலால் இவ்வடிமைத் திறமுடையார் எவ்வுடம்பில் நின்று எம்முயற்சிகளைச் செய்யினும் அம்முயற்சிகள் வரைக் கட்டுப்படுத்துதலில்லை. அம் முயற்சியாகிய ஆகாமியவினையை விட்டுநீங்காமல் அம்முயற்சியை உடன்கொண்டு வருவதாகிய பிராரத்தவினைப்பயனும் தம்மைக் கட்டுப்படுத்தாமல் அவ் வினைப்பயனைக் கூடும்படி செய்த முதல்வன் அருளால் உடம்பின் அநுபவமாய்க் கழியும் எ—று.

(க-ரை.) தனுகரண புவன போகங்கள் மாயாகாரியமாய் முதல்வன் அருளினாலே தோன்றுதலானும், உயிருக்கு அம்முதல்வன் அருளையின்றிச் செயலில்லாமையானும், அவ்வுண்மையை அறிந்து இறைவன் அருள்வழி நிற்பின், பிராரத்தவினையின் பயனாய்வரும் மாயாகாரியமாகிய போகங்களும் அப்போக அனுபவத்தின் வழியாகத் தன்னிடத்து நிகழும் முயற்சியாகிய ஆகாமிய வினையும் உயிராகிய தன்னைத் தாக்காமலொழியும். ஒழியவே வினைப்பயன்களாகிய சுகதுக்கங்கள் உயிரின் அனுபவமாகாமல் உடலின் அநுபவமாய்க் கழியும் என்பதாம்.

உடல் சடமாதலால் அதற்கு அநுபவங் கூடாது. உடலோடு கூடிய உயிருக்குத்தான் அநுபவங்கூடும். அவ்வாறாகவும் பிராரத்த வினையின் பயன் உடலின் அநுபவமாய்க் கழியுமென்றல் எவ்வாறு பொருந்துமெனின், பொருந்துமாறு காட்டுதும்:—உடல் தனித்தும் அநுபவியாது; உயிர் தனித்தும் அநுபவியாது; இரண்டுங் கூடினவிடத்துத்தான் அநுபவம் நிகழும். அவ்விரண்டனுள், உடல் தானே உயிரைக்கூடாது; உயிர் தானே உடலை எடுத்துக்கொள்ளாது; ஆகவே, இறைவன் அருள்கூட்ட உடலுடன் உயிர் கூடும். அவ்வாறு கூடிநின்ற உயிர் தன்செயலை இறைவன் அருட்செயலாக அறிந்தபொழுது அச்செயலாலுண்டாகும் பயன் யான்செய்தேன் என்னும் முனைப்பில்லாமையால் தன்னைத் தாக்குதல் இல்லை. உயிரைச் செய்யும்படி செய்து அது செய்வதற்காகத் தான் செய்தலேயன்றித் தானாகவே செய்யாமையால் அப்பயன் இறைவனையுந் தாக்காது. இவ்வாறு உயிரையும் இறைவனையும் தாக்காதாகவே இறைவன் முன்னிலையில் உடலையே தாக்கும். இது எதுபோல எனின், அரசன் ஆணைவழி நிற்கும் அதிகாரியொருவன் செய்த செயலின் பயன் அவ்வதிகாரியையும் அரசனையுந் தாக்காது அரசன் முன்னிலையில் அவ்வதிகாரத்தைத் தாக்குதல் போலாம்.

நம்வழியின் அல்ல என்பது வழிநாமல்ல என்பதன் பின்னாகவுங் கூட்டி உரைசெய்யப்பட்டது.

நம்வழியின் அல்ல, வழிநாமல்ல என்பவற்றிலுள்ள அல்ல என்னும் அஃறிணையைக்குறிக்கும் அன்மைச்சொல், நம் நாம் என்னும் உயர்திணையைத் தழுவாமல் அல்ல என்று சுருதப்படும் அஃறிணைப் பொருளாகிய இந்திரியங்களின் மேல்நின்றது. இது எதுபோல எனின், "மகன் அன்று குற்றி" என்றவிடத்து அன்று என்பது மகனைத்தழுவாமல் குற்றியைத்தழுவியவாறுபோலாம். இதனைத் தொல்காப்பியம் கிளவி ஆக்கம் உ௫-வது சூத்திரத்தில் "அன்மைக்கிளவி வேறிடத்தான" என்பதனானும் அறிக. இதன் கருத்து அன்மைச்சொல் ஐயத்தின்வேறாய்த்துணிந்த பொருளிடத்தாகும் என்பதாம்.

எத்தனுவில் நின்றும் என்றதிலுள்ள உம்மை கட்டுப்படுத்துதற்குரிய உடம்பில் நின்றும் என்னும் பொருளைக் குறித்தமையால் சிறப்பு

நாமும் என்றதிலுள்ள உம்மை இந்திரியம், வழிஎன்று மேலேகூறிய மாயாகாரியங்களேயன்றி நாமும் என்னும் பொருளைக் குறித்தமையானும், முற்செய்வினையும் என்றதிலுள்ள உம்மை, இல்லைவினையென்று மேலே கூறியதன் பொருளாகிய ஆகாமிய வினையேயன்றிப் பிராரத்த வினையும் என்னும் பொருளைக் குறித்தமையானும், அந்த உம்மைகள் இரண்டும் இறந்ததழுவின.

முற்செய் வினையாவது சஞ்சிதமும் பிராரத்தமுமாம். ஆயினும் மேல் எட்டாஞ்சூத்திரத்திற் கூறியவாறு முதல்வன் குருவாய் வந்து தீக்கைசெய்த அளவிலே அக்கினியைச் சேர்ந்தவித்து மேல் முளையாதவாறு கெட்டொழிதல்போலச் சஞ்சிதவினை பயனுக்கு வாராமல் கெட்டொழியுமாதலால், இச்செய்யுளில் முற்செய்வினை யென்றது எற்புழிக்கோடல் என்னும் உத்தியால் பிராரத்த வினையைக் குறித்து நின்றது. குருவாய் வந்துணர்த்தியெனத் தீக்கை செய்வதைப்பற்றி இந்நூலில் தொகுத்துக் கூறியிருப்பதைச் சிவஞான சித்தியார் எட்டாஞ்சூத்திரத்தில் வழிநூலாசிரியர் வகுத்துக் கூறியவாற்றான் அறிக.

முற்செய்வினை என்றது கனிச்சீராதலால் யகர ஒற்றை நீக்கி வெண்பாத் தளைதட்டாதவாறுகொள்க.

தருவான் என்னும் முன்னிலை, கூட்டுவிக்கும் என்னும் படர்க்கைப் பொருளின் நின்றமையால் இடவழுவமைதி.

தருவான்முன் என்றது கழியும் என்னும் சொல்லையின்றி முடிவுபெறாமையால் கழியும் என்றது சொல்லெச்சமாய் வருவிக்கப்பட்டது. அவ்வாறு வருவிக்கப்பட்ட கழியும் என்னும் சொல் எவ்வாறு கழியும் என்பதை

அவாவிலிற்றலால் அந்த அவாய் நிலைபற்றி உடலூழாய் என்றது வருவிக்கப்பட்டது.

முத்தருக்கு வினைப்பயனைத் தாக்கவொட்டாது
உடலூழாய்க் கழியும்படி செய்தல்
இறைவன் கடமையெனக்கூறி ஏதுவை வலியுறுத்தும்

உதாரணம்.

சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனுதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனுய்ச்—சார்ந்தடியார்
தாந்தானுச் செய்துபிறர் தங்கள்வினை தான்கோடுத்த
லாய்ந்தார்முன் செய்வினையு மாங்கு.

சிற்றுரை.

எ—து உ—ம் எ-னின். இறைபணியார்க்கு உளவாகிய முற்செய்வினை ஏனையோர்க்குப் போலன்றித் தருவான்முன்னுயொழியுமாயின் அங்ஙனம் இருவேறு வகைப்படச் செய்யு முதல்வன் நடுவு நிலைமையின்றிக் கோட்டமுடையனெனப்பட்டு வழுவாம் போலுமென்பாரை நோக்கி வழுவன்மை கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) சார்ந்தாரைக்காத்தல் தலைவர் கடன் ஆதல் சார்ந்தாரைக் காத்தும்—(தம்மாட்டு அடைக்கலமெனச்) சார்ந்தாரை (அவர்க்குவருமேதத்தை நீக்கிக் களைகணுய்நின்று) காப்பது தலைமைக்குண முடையாராயினுர்க்குக் கடைமையாகலான் (முதல்வன் ஏனையோரை யொழித்துத்) தன்னைச்சார்ந்தாரை அங்ஙனம்பாது காப்பானுகியும்,— சலம் இலன் ஆய்—(அது பற்றிக்) கோட்டமுடையனல்லனுய்,—சார்ந்து அடியார் தானுய்ச் செய்து பிறர்தங்கள்வினை கொடுத்தல்—தன்னைச்சார்ந்து தன்னடித் தொழில்செய்வார் தன்போல் ஆகாமியவினைத் தொடக்கிலராகச் செய்து பிறர்க்குவரு மாகாமிய வினையை (அவர்க்குக்) கொடுப்பானுகலான்,— ஆய்ந்து ஆர் முன்செய்வினையும் ஆங்கு—(அவ்விருதிறத்தோர் மாட்டும்) (நுணுகிவந்து கூடுவதாய பிராரத்தவினையும் அவ்வாறே செய்வோர் செய்திக்குத் தக்கபயனுய் இருவேறு வகைப்படச் செய்வன்) எ—று.

இறைபணியார்க்கில்லைவினை முற்செய்வினையுந் தருவான்முன்னென்றதுபற்றி ஏனையோர்க்கு நியதி செய்தூட்டி இறைபணி

யார்க்கு வினையின்றாகச்செய்தல் இறைவனுக்கு நடுவு நிலைமையன்
றென்பாரைநோக்கி, அதனையுடன்பட்டே அமைதிகூறுவாராய்ச்
சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனெனப் பழமொழி எடுத்துக்
காட்டி இஃதவ்வாறு நடுவன்மையுமன்றென வலியுறுத்துவார்
சார்ந்தடியார் தாந்தானாச்செய்து பிறர் தங்கள்வினை தான்கொடுத்த
லென வேறுவமை எடுத்துக்காட்டினார். சார்ந்தடியார் தாந்தானாச்
செய்து பிறர் தங்கள் வினை தான்கொடுத்த லுண்டென்பதூஉம்,
அதுகோட்டமின்று நடுவுநிலைமையே யாமென்பதூஉம் ஏனைச்
சமயத்தார்க்கும் ஒப்பமுடிந்தமையின், அஃதீண்டைக்குவமையா
யிற்று. உம்மைசிறப்பின்கண்வந்தது. சலம் வஞ்சனை; அஃது
ஈண்டுக் கோட்டத்தின்மேனின்றது. சார்ந்தென்னும்வினையெச்சம்
அடியாரென்னும் வினைக்குறிப்பு முற்றுப் பெயர்கொண்டது.
சார்ந்தவென்னும் பெயரெச்சத் தகரம் திரிந்து முடிந்ததெனினு
மமையும். தாமும் பின்வந்த தானும் அசை. ஆதல் கொடுத்தலென்
புழி ஆனுருபு விரித்துரைக்க; தானாச்செய்தென்புழி ஆக்கம்உவம
உருபின் பொருள்குறித்து நின்றது. பிராரத்தவினை அதி சூக்கும
மாய்வருவதாகலின் அதனியல்பறிதல் அரிதென்பார் ஆய்ந்தார்
முன்செய்வினையு மென்றார். உம்மை இறந்தது தழீஇயிற்று. ஆர்
வினைத்தொகை. ஆய்தல் அப்பொருட்டாதல் மேற்காட்டினாம்.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோவெனின், மேலைவெண்பாவிற்
கூறியவாறு இறைபணியில் நிற்பவர்க்கு உளவாகிய முன்வினைப்பயன்களை
அவரநுபவியாதபடி அவ்வினையைக் கூட்டுவிக்கும் முதல்வன் தன்முன்னி
லையில் உடல் அநுபவிக்கும்படி செய்வன் என்றதனால் இறைபணி நில்
லாத ஏனையோருக்கு அவர் முன்செய்த வினைப்பயன்களை அவரநுபவிக்
கும்படி செய்வன் என்பது பெறப்படும். அவ்வாறு இருவேறுவகைப்படச்
செய்வனாயின் முதல்வன் நடுவு நிலைமையின்றி ஒருபக்கஞ் சாரும் அநீதி
யுடையவன் எனப்படுவன். படவே எல்லா உயிர்களிடத்தும் இரக்கம்
உடையவன் முதல்வன் என்பதற்குக் குறைவுண்டாகும். இவ்வாறு கூறு
வாரை நோக்கி அவ்வாறு செய்தல் குற்றமாகாது எனக்கூறி அதனை
வலியுறுத்தியவாறாம்.

(பொ-ரை.) ஒருவன் தன்னிடத்து அடைக்கலம் புகுந்தால் புகுந்த
அவர்க்கு வருந் துன்பங்களை நீக்கி ஆதரவாய் நின்று அவரைக் காப்பது
உயர்ந்தகுண முடையாருக்குக் கடமையாம். ஆதலால் முதல்வனும் தன்
னைச்சார்ந்து அடிமைத் திறம் உடையராய் நில்லாதாரை விலக்கி அவ்வாறு

நிற்பவர்க்கு வரும் துன்பங்களை நீக்கி ஆதரவாய் நின்று அவரைக் காப்பன். அவ்வாறு சாராதாரை விலக்கிச் சார்ந்தாரைக் காத்தல்பற்றி ஒரு பக்கஞ்சாரும் அநீதியில்லாதவனாகி அவ்வாறு செய்தலால் தனக்கு விருப்பு வெறுப்பு ஆகிய ஆகாமிய வினைச்சம்பந்தம இல்லாதவாறுபோலத் தன்னைச் சார்ந்து தன் அடித்தொண்டு செய்வாரைத் தன்போல் ஆகாமிய வினைச்சம்பந்தம் இல்லாதவராகச் செய்து தன்னைச்சாராத பிறர்க்குவரும் ஆகாமிய வினையை அவர்க்குக் கொடுப்பன் ஆதலால், ஆகாமியவினையை விலக்கியுங் கூட்டியும் செய்யுமாறு போலத் தன்னைச்சார்ந்த அடியாருக்குச் சூக்குமமாய்வரும் பிராரத்தவினையை அவரநுபவியாதபடி விலக்கியும் தன்னைச் சாராதாருக்குச் சூக்குமமாய்வரும் பிராரத்த வினையை அவரநுபவிக்கும்படி கூட்டியும் இருவேறுவகைப்படச் செய்வன் எ-று.

(க-ஙா.) அடைக்கலம் புகுந்தவரைக் காத்தல் உத்தமர் கடமையாதலால் முதல்வன் தன்னைச் சார்ந்தவருக்கு ஆகாமிய வினையை இல்லாதவாறு செய்து, அதுபோல் பிராரத்த வினையும் அநுபவியாதவாறு செய்தும், தன்னைச் சாராதவருக்கு ஆகாமிய வினையைக் கூடுமாறு செய்து, அதுபோல் பிராரத்த வினையையும் கூடுமாறு செய்தும், அவ்வாறு செய்தல்பற்றி நடுவு நிலைமை இல்லாதவனாகமாட்டான் என்பதாம்.

மேலை வெண்பாவில் இறைபணியார்க்கில்லை வினை முற்செய்வினையும் தருவான் முன் என்றதுபற்றி இறைபணியில் நில்லாத ஏனையோர்க்கு அவர் செய்தவினையின் பயனைப் பக்குவ முறைப்படி அவரநுபவிக்கச் செய்து இறைபணியில் நிற்பவர்க்கு அவர் செய்த வினைப்பயனை அவரநுபவியாதவாறு விலக்குதல் இறைவனுக்கு நடுவு நிலைமையன்றென்பாரை நோக்கி அவ்வாறு செய்தலே உடன்பட்டே சமாதானங் கூறுங் கருத்துடையராய்ச் சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன் என்னும் பழமொழி எடுத்துக் காட்டி அவ்வாறு செய்தல் கடமையென அறிவித்து, ஆயினும் அப்பழமொழியானது சார்ந்தவர் குற்றமுடையரேனும் காத்தல் கடன் என்னும் பொருளைத் தருமாதலால் நடுவு நிலைமையாகுமா என்பதற்குச் சமாதானமாகாதே என்னும் சந்தேகத்தை நீக்கி நடுவு நிலைமைதான் என்பதை வலியுறுத்தவேண்டிச் சார்ந்தடியார் தாந்தானுச் செய்து பிறர் தங்கள் வினைதான் கொடுத்தல் என ஆகாமியவினையை விலக்குவதையுங் கூட்டுவதையும் வேறு உவமையாக வைத்து எடுத்துக்காட்டி, அதுபோலப் பிராரத்த வினையினையும் இருவேறு வகைப்படச் செய்வன் எனக்கூறினர். சார்ந்த அடியார்க்குத் தன்னைப்போல ஆகாமியவினையைக் கெடுத்துச் சாராத பிறருக்கு ஆகாமியவினையைக் கொடுத்தல் இறைவனிடத்திலுண்டென்பதூஉம், அவ்வாறு செய்தல் அநீதியன்று நடுவு நிலைமையேயாமென்பதூஉம், எல்லாச் சமயத்தார்க்கும் ஒப்ப முடிந்தலையின், அவ்வாகாமிய வினையானது பிரா

ரத்த வினையைப்பற்றிக் கூறும் இவ்விடத்துக்கு உவமையாயிற்று. இதனை "தன்னை யடைந்தார் வினை தீர்ப்பதன்றோ தலையாயவர் தங்கடனாவது தான்" எனவும், "சலமிலன் சங்கரன்சார்ந்தவர்க்கலால்—நலமிலன்" எனவும், வருந்தேவாரங்களானும் உணர்க.

சார்ந்தாரைக்காத்தும் என்றதிலுள்ள உம்மை காத்தலால் உண்டாகிய சலம் இன்மையான சிறப்பைக் குறித்து நிற்றலால் சிறப்பின்கண் வந்தது.

சலம் இலனாய் என்றவிடத்துச் சலம் என்றது வஞ்சனையாதலால் அவ்வஞ்சனை இவ்விடத்து அநீதியின்மேல் நின்றது.

சார்ந்தடியார் என்றது சார்ந்து அடியார் எனப் பிரியும். சார்ந்து என்ற தன் இறுதியிலுள்ள உகரம் சந்தி விதிப்படி கெட்டது. சார்ந்து அடியாரென்ற அவற்றுள், சார்ந்து என்பது வினையெச்சம். அந்த எச்சம் அடியாரென்னும் பெயர்கொண்டுமுடிந்திருக்கின்றது. அவ்வாறு முடிந்த கருத்தென்னையெனின், அடியாரென்றது அடிமைத்தொழில் செய்தவர் செய்கின்றவர் செய்வோர் என்னும் பொருளில் நின்றமையால் வினைக்குறிப்பாயும் முற்றாயும், அடியார் என்ற சொல்லால் பெயராயும் நிற்றலால், அடியாரென்ற அது வினைக்குறிப்பு முற்றுப்பெயராயிற்று. வினைக்குறிப்பு முற்றிருந்தமையால் சார்ந்து என்னும் வினையெச்சம் அடியாரென்றது கொண்டு முடிந்தது. இவ்வாறன்றிச் சார்ந்த அடியார் என்று கொண்டு சார்ந்த என்னும் பெயரெச்சம் அடியாரென்னும் பெயர்கொண்டு முடிந்ததாகக் கூறினும் பொருந்தும். அவ்வாறு கூறுங்கால் சார்ந்த என்றதன் இறுதியிலுள்ள பெயரெச்சத்து அகரம் உகரமாய்த் திரிந்து முன்னர் அகரம்வந்தமையால் அவ்வுகரங் கெட்டதென்று கொள்ளல் வேண்டும்.

தாந்தானு என்றதிலுள்ள தாம் என்பதும் தான் கொடுத்தல் என்றதிலுள்ள தான் என்பதும் அசை.

கடனாதல் என்றவிடத்தும், தான்கொடுத்தல் என்றவிடத்தும் ஆனுருபு விரித்துக் கடனாதலால் தான் கொடுத்தலால் என உரைக்கப்பட்டன.

தானச்செய்து என்றது தானாகச்செய்து என விரியும். தானாக என்றதில் ஆக என்பதுபோல என்னும் உவமப்பொருள் குறித்து நின்றது. ஆதலால் தானாக என்றதற்குத் தன்போல் என உரை செய்யப்பட்டது.

ஆகாமிய வினையாகிய முயற்சி தூலமாய் அறியப்படுதல்போலப் பிராரத்தவினை வகுது கூடுதல் தூலமாய் அறியப்படமாட்டாது. அதி சூக்குமமாய் வந்து கூடும். ஆதலால் அவ்வினையின் இயல்பு அறிதல் அரிதென்பதை அறிவிக்கவேண்டி ஆய்ந்துஆர் முன்செய் வினையும் என்றார்.

561

முன் செய் வினையும் என்றதிலுள்ள உம்மை மேற்கூறிய ஆகாமிய வினையேயன்றிப் பிராரத்த வினையும் என்னும் பொருளைக் குறித்தமையால் இறந்தது தழுவியது.

ஆய்ந்தார் முன் செய்வினையும் என்றதிலுள்ள ஆர் என்பது ஆரும் என விரித்து, கூடுவதாய என பொருள் கொள்ளப்பட்டமையால் ஆர் வினை என்பது வினைத்தொகை. முன் செய் என்றது இடைப்பிறவரல்.

ஆய் என்பது ஆய்தலென்னும் பொருளைக்குறித்து நுணுகி யென்பதை உணர்த்திநின்றது. ஆய்தல் என்பது நுணுகுதல் என்னும் பொருளைத் தரும் என்பது மேல் ஏழாஞ் சூத்திரம் மூன்றும் அதிகாரணத்து முதல் வெண்பாவில் ஆயிழையாய் என்றவிடத்துக் காட்டப்பட்டிருக்கின்றது.

முத்தருக்குப் பிராரத்த வினைப்பயன் தாக்குமாதலால் அதுபற்றி
ஆகாமியம் ஏறும் என்பாரை மறுத்து
பிராரத்தவினை தாக்கினும்
ஆகாமியம் ஏறுது எனக்கூறி மேலை வெண்பாவை வலியுறுத்தும்

உதாரணம்.

இங்குளி வாங்குங் கலம்போல ஞானிபான்
முன்சேய் வினைமாயை மூண்டிடினும்—பின்சேய்வினை
மாயையுட னில்லாது மற்றவன்றன் மெய்ப்பொருளே
யாயவத னுலுணரு மச்சு

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், இறைபணி நிற்பார்க்குப் பிராரத்தவினை தாக்குதலுண்டென்பதற்குத் "தினைத்துணை யேனும் பொறேன் றுய ராக்கையின் றிண்வலையே" என்றற் றொடக்கத்தான் அவர் கூறுந் திருவாக்குகளே சான்றாகலின், அஃதவர்க்குச் செய்வோர் செய்திப்பயனு யொழியுமென்றல் அமையாமையின் அஃதுண்டாகவே அதுபற்றி நிகழும் ஆகாமியமும் பிறவிக்குவித்தாய் நிலை பெறுதலுண்டுபோலு மென்பாரை நோக்கி ஆண்டுப் பிராரத்த வினை தாக்குதற் கேதுக் கூறி அதுபற்றிச் செய்வோர் செய்திப் பயனு யொழிதற்கு இழுக்கில்லை யெனவலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்.) இங்குளி வாங்கும் கலம்போல—(தன்பால் வைத் தெடுக்கப்பட் டொழிந்த) பெருங்காயத்தினின்றும் (அதன்வாசத் தை) வாங்கிக்கொள்ளும்பாசனத்தின்கண் (அவ்வாசம்மங்கிப்போய் மெலிதாய்க் கந்திக்குமாறு) போல,—ஞானிபால் முன்செய்வினை

மாயை மூண்டிடினும்— இறைபணி நிற்குந் தத்துவ ஞானிக்குப் (பயிற்சிவயத்தான் ஒரோவழி நாடு மூள மூண்டாதலும் உண்மையின் அதுபற்றிப்) பிராரத்தவினையும் அதற்கு வாயிலாகிய உடம்பு முதலிய மாயேயமும் (மங்கிப்போய் வாசனைமாத்திரையாய் மெலிதாய் வந்து) மூளுமாயினும்,—பின்செய்வினை மாயையுடன் நில்லாது—(அம் மூட்சிபற்றி ஒரு தலையானிகழ்வ தாகிய) ஆகாமிய வினை (மேலைக்கு வித்தாய் நிலைபெற்று முறுகுதலின்றித் தனக்கு வாயிலாகிய) மாயேயத் தோடு கெட்டொழியும்,—அவன்தான் மெய்ப் பொருளை ஆபவதனால்மற்று அச்சுஉணரும்—(இறைபணி நிற்கும்) அவன் சத்தாயுள்ள சிவமேயாய வாற்றால் (ஒரோவழி அவ்வாசனைபற்றிப் பிறழவரினும் பிறழவொட்டாத) அவ்வச்சினையே நோக்கி நிற்பனாகலான் எ-று.

ஒளி இருளைத் தாக்குமாறுபோல அவ்வுணர்வு அவ்வாகாமியத்தைத் தாக்குமென்பதாம். 'தொல்லையில் வருதல் போலத் தோன்றிரு வினைய துண்டே—லல்லொளி புரையுஞானத் தழலுற வழிந்து போமே' எனப் புடைநூலாசிரிய ரோதியதூஉம் அது. உளி ஐந்தாம் வேற்றுமை யுருபுபட நின்றது. "மந்திர விதியின் மரபுளி வழாஅ—வந்தணர் வேள்வி" என்றாற்போல. முற்றுகரக் கேடு இலேசாற் கொள்க. வாங்குதற்குச் செயப்படு பொருள் அவாய் நிலையான் வந்தது. மூண்டிடினும் எனவே, மூளுதலொரு தலையன் றென்பது பெற்றாம். மாயை ஆகுபெயர். மற்று வினைமாற்றின்கண் வந்தது. தானென்பது அநுவதித்தற்கண் வந்த இடைச்சொல். பிறழவிடாமை பற்றி மெய்ப்பொருளை அச்சாக உருவகஞ் செய்தார்.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ எனின், இறைபணி நிற்கும் முத்தர்க்குப் பிராரத்தவினை தாக்குதலுண்டு என்பதற்குத் திருவாசகம் நீத்தல் விண்ணப்பம் ௩௯-வது செய்யுளில் "தினைத்துணை யேனும் பொறேன் றுய ராக்கையின் றிண்வலையே" என்றது முதலாகக் கூறும் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாக்குக்களே சாட்சியாகும். இத்திருவாக்கின் கருத்து உடம்பாகிய வலிய வலையினால் வருந்துயரைச் சிறிதும் தாங்கமுடியாது என்பதாம். முத்தராகிய மாணிக்கவாசகரே இவ்வாறு கூறுவாராயின் மேலை வெண்பாவிற் கூறியவாறு சார்ந்தாருக்குப் பிராரத்த வினைப்பயனைக் கெடுத்தும் சாராதாருக்கு அவ்வினைப்பயனைக் கொடுத்தும் அவ்வாறு முதல்வன்

இருவேறு வகைப்படச் செய்வன் என்றது எவ்வாறு பொருந்தும்? பொருந்தாமையால் முத்தருக்குப் பிராரத்தவினை உண்டு என்ருகிப் பிராத்தவினையின்பயனை அநுபவிக்கு முறையில் நிகழும் முயற்சியாகிய ஆகாமிய வினையும் மேற்பிறவியை யுண்டுபண்ணுதற்கு வித்தாக நிலைபெறுதலுண்டு என்பாரை நோக்கி, இறைபணியில் நின்றவிடத்தும் பிராரத்தவினை தாக்குதற்குப் பழக்கவாசனையே எது வெனக்கூறி, அப்பழக்கவாசனை பற்றி அடிமைத்திறமாகிய இறைபணி நிற்றலின் பயனுய் ஆகாமியவினை எருது ஒழிதற்குக் குறைவில்லை யெனமேலைவெண்பாவின் கருத்தை வலியுறுத்திய வாறும்.

(பொ-ரை.) மண்பாண்டத்தில் பெருங்காயத்தைவைத்து எடுத்துவிட்டாலும் அப்பெருங்காயத்தின் வாசத்தை மண்பாண்டம் விடுவதில்லை. பெருங்காயம் இருந்த பழக்கத்தாலுண்டாகும் அவ்வாசம் பெருங்காயம் இருந்த பொழுது வீசுவதுபோல் வீசாமல் மங்கிப்போய் மெலிதாகவீசும். அது போல இறைபணியில் நிற்கும் தத்துவஞானிக்கு உடம்போடு கூடி இருந்த பழக்கவாசனையால் அவ்வுடம்புதானல்லவென நீங்கியவிடத்தும் ஒவ்வொரு சமயங்களில் உடம்பைத் தான் என எண்ணும் எண்ணமுண்டாகும். உண்டாகவே, அதுபற்றி அவ்வுடம்பிற்குரிய பிராரத்தவினையின் அநுபவமும் அவ்வநுபவத்துக்கு வழியாகிய தனுகரணபுவன போகமென்னும் மாயாகாரியங்களும் மங்கிப்போய் மெலிதாய் வந்துதாக்கும். தாக்கினும் அத்தாக்குதலுக்கு அவசியம் வேண்டப்படுவதாகிய முயற்சி யென்னும் ஆகாமிய வினை மேலும் பிறவியைத்தருதற்கு வித்தாய் நிலை பெற்றுவளராமல் அம் முயற்சிக்கு வாயிலாகிய உடலோடு கெட்டொழியும். முயற்சியைச் செய்தும் அம்முயற்சி ஆகாமியமாய் எருமைக்குக் காரணமென்னை யெனின், இறை பணிநிற்கும் முத்தன் மெய்ப்பொருளாகிய சிவமேயாய் நிற்பனுதலால் ஏகதேசத்தில் பழக்கவாசனைபற்றிச் சிவமாந்தன்மையில் நின்றுபிறழ வரினும் பிறழவொட்டாது செய்யுஞ்சிவமாகிய அவ்வச்சினையே நோக்கி நிற்பனன்றி உடம்பை நோக்கிநிற்கமாட்டா ஞகலான் உடம்புபற்றிவரும் ஆகாமியவினை எறுதலில்லை எ-று.

(க-ரை.) பெருங்காயம் இருந்த பாண்டத்தில் பெருங்காய மில்லாத பொழுதும் வாசனை மெலிதாக வீசுவதுபோல இறைபணி நிற்கும் முத்தர்க்கு அஞ்ஞான மில்லாதொழிந்தும் பழக்கவசத்தால் உடம்புமுதலியனமெலிதாய் வந்து கூடும். கூடினும் சிவனையே நாடிநிற்றலால் அவ்வுடம்பு முதலியவற்ருலுண்டாகும் முயற்சியாகிய ஆகாமியவினை மேல்வினையாக எருமல் உடம்பு உள்ள அளவும் அம் முயற்சியும் நிகழ்ந்து உடம்புகெடும்போது அம் முயற்சியும் இல்லையாய் ஒழியும் என்பதாம்.

இறைபணி நிற்கும் முத்தருக்கு ஆகாமியவினையை மேல்வினையாக எருமற் கெடுத்தல் எதுபோல எனின், சூரியன் முதலியவற்றின் ஒளி இரு

ளைக் கெடுக்குமாறுபோலாம். எனவே சிவனையே நாடும் அவ்வுணர்வு, வாசனை பற்றி நிகழும் முயற்சியாகிய அவ்வாகாமிய வினையை மேல்வினையாக ஏற வொட்டாமற் கெடுக்கும் என்பதாம். இக்கருத்துப்பற்றியே சிவப்பிரகாசம் ௯௦-ம் சூ-ம் ௯௦-வது செய்யுளில் முன்வந்த வாறுபோலப் பிராரத்தமும் ஆகாமியமும் வரினும் விளக்கின்முன் இருள்போல ஞானக்கினி முன்னர் அவ்விரண்டும் அழிந்துபோம் எனப்புடை நூலாசிரியர் அருளிச்செய்தனர்.

இங்குளி என்பதில் இங்கு என்பது பெருங்காயம். உளி என்பதுஐந்தாம்வேற்றுமை இன் உருபாகநின்றது. ஆதலால் இங்குளி என்பதற்குப் பெருங்காயத்தின் என உரைசெய்யப்பட்டது. உளிஎன்பது இன் உருபாக வருமென்பதைத் திருமுருகாற்றுப்படைத் திருச்சீரலைவாய் அகவலில் பதினெட்டாவது அடியில் ''மந்திர விதியின் மரபுளி'' என்றவிடத்து மரபுளி என்றது மரபின் என்னும் பொருளில் நின்றவாறுபற்றி அறிக.

இங்குளி என்பதில் இங்கு என்றதுவடமொழி. தமிழ்மொழியாயின் இங்கு என்றதிலுள்ள உகரம் குற்றியலுகரமாகும். வடமொழியில் குற்றியலுகரம் இல்லாமையால் அது முற்றுகரமேயாம். அம்முற்றுகரம் உளி என்றசொல் முன் வந்தமையாற் கெட்டது. இவ்வாறு கெடுதல் இலேசாற் கொள்ளப்படும். ''உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும் * * * முற்றுமற் றொரோவழி'' என்ற விதியால் முற்றுகரம் சில இடத்திற் கெடுமென்பது பெறப்படுதலால் அந்த இலேசினால் இங்குளி என்ற இவ்விடத்தில் முற்றுகரக்கேடு கொள்க. இலேசு ஏகதேசம்.

இங்குளி வாங்கும் என்றதில் இதனைவாங்கும் என்று கூறுமையால் வாங்குதலாகிய செயலுக்குச் செயப்படுபொருளாகிய வாசனை அவாய் நிலையால் வருவிக்கப்பட்டது.

மூண்டிடினும் என்றதனால் மூளுதல் உறுதியாயுண்டென்று சொல்லக் கூடாதென்பது விளங்கும். விளங்கவே வாசனையுள்ள விடத்துத் தாக்கும் வாசனை இல்லாதவிடத்துத் தாக்காது என்பதாம்.

மாயை என்ற இரண்டிடத்தும் மாயையின் காரியத்தைக் குறித்து நிற்றலால் மாயை ஆகுபெயர்.

மற்றவன்றான் என்பதிலுள்ள மற்று என்றது பிறழவரினும் பிறழவொட்டாது செய்யும் என்னும்பொருள் தந்து நிற்றலால் வினை மாற்றின்கண் வந்தது.

மற்றவன்றான் என்பதிலுள்ள தான் என்பது மேற்கூறிய இறைபணி நிற்றலை யநுவதித்து இறைபணி நிற்கும் அவன் எனக்கூறுதற்காக நின்ற இடைச் சொல்.

பயனியல் பத்தாஞ்சூத்திரம். உ-ம் அதி.

சக்கரத்தைப் பிறழவொட்டாது நிலத்திருக்கும்படி செய்யும் அச்சுப் போல வினைவயத்தால் ஞானியைப் பிறழவொட்டாது நிலத்திருக்கச் செய்வது மெய்ப்பொருளாதலால் அம்மெய்ப்பொருளை அச்சாக உருவகஞ்செய்தார். மெய்ப்பொருளை அச்சாக உருவகஞ்செய்து தன்னைச் சக்கரமாக உருவகஞ் செய்யாமையால் இஃது ஏகதேசஉருவகம்.

பின்செய்வினை என்றது கனிச்சீராதலால் யகர ஒற்றை நீக்கி வெண்பாத்தளை தட்டாதவாறு காய்ச்சீராகக் கொள்க.

முத்தருக்குப் பிராரத்தவினைதாக்கினும் அவர் மெய்ப்பொருளையே நோக்கி நிற்றலுக்கு உவமைகூறி மேலை வெண்பாவை வலியுறுத்தும்

உதாரணம்.

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர மாச்செலுத்தும் பாகரினு—மெண்ணி
யரனடி யோர்பவ ரைம்புலனிற் சென்று
மவர்திற னீங்கா ரதற்கு.

சிற்றுரை.

எ—து உ—ம் எ-னின், முன்செய்வினை மாயை மூண்டவழியும் அந்நிலையிற் பிறழவொட்டாத அவ்வச்சினையே யுணர்ந்து நிற்றல் யாஙனமென்பாரை நோக்கி -வமை முகத்தான் அதனை வலியுறுத் துதனுதலிற்று.

(இ-ள்.) நண் அனல் வேவாத நற்றவர் தம்மினும் பண் ஆமர மாச்செலுத்தும் பாகரினும்—(அங்கித் தம்பனத்தால்) நண்ணனல் வேவாமைக்கேதுவாகிய நற்றவமுடையார் (அவ்வனலுட் கிடப்பினுந் தந்திறலினீங்காதவாறு) போலவும் பண்ணுதலமைப் பரிமா வூர்தற்குரிய பாகநூல் கற்றுவல்லார் (அப்பரிமாவின் வேகத்துட் படினுந் தந்திறலினீங்காதவாறு) போலவும்,—எண்ணி அரன் அடி ஓர்பவர்—(ஐம்புலன்களில் அகப்படாமைக்கு உபாயம் யாதென்) றெண்ணி முதல்வன் திருவடியாகிய அச்சையுணரவல்லார்,— ஐம்புலனில் சென்றும் அதற்கு அவர் திறல் நீங்கார்— (முன்செய்வினைமாயை மூட்சிபற்றி) ஐவகைப்பட்ட விடயங்களிற் சென்றாராயினும் அதனால் அவர் தந்திறலிற் றீர்ந்து பந்தத் தொடக்குறுவாரல்லர் எ-று.

பொருள்வினை உவமையினுஞ் சென்றியைந்தது. நண்ணனல் நீழ்நீர்போல முன்பின்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத்தொகை. நள்ளனல் நண்ணனலென மரீஇயிற்று; "நீனுலகெலாம்" என்றாற்போல. தம்மால் நண்ணப்படும் அனலென்றுரைப்பினு மமையும். பண்ணுதல் கதிப்பித்தல். இன்னிரண்டும் உவம உருபுகள். உம்மை எண்ணும்மை. சென்றுமென்னு மும்மைசிறப்பு. அதற்கென்பது உருபுமயக்கம்.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ வெனின், மேலவெண்பாவிற் கூறியவாறு இறைபணியில் நிற்பவர்க்கு முன்செய்த பிராரத்தவினையும் அதன்பயனாக வரும் மாயாகாரியங்களாகிய தனுகரண புவன போகங்களும் வந்துதாக்கினவிடத்தும் அதனால் இறைபணியில் நின்றும் பிறழாமல், பிறழவொட்டாது காக்கும் மெய்ப்பொருளாகிய அச்சிவனையே அவர் உணர்ந்து நிற்றல் எவ்வாறு கூடுமென்பாரை நோக்கி உவமையில் வைத்துக் கூடுமெனக் கூறி மேல வெண்பாவின் கருத்தை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) அக்கினியின் நடுவே இருந்தும் அவ்வக்கினியினால் சுடப்பெறாமல் இருக்கும்படி செய்வது அக்கினியின் சூட்டைத் தடுக்கும் சித்தியாகிய அங்கித்தம்பனம். அவ்வங்கித்தம்பனமாகிய நற்றவமுடையார் அக்கினியினுள்ளே கிடப்பினும் தன்னுடைய வலிமையினின்றும் நீங்கார். அதுபோலவும், நடக்குங் கதியின்படி விரைவாக நடக்கக்கூடிய குதிரையை அவ்வாறு நடக்கும்படி செலுத்தி அக்குதிரையின்மேலேறிச் செல்லுங்கால் நடத்தும் முறைமையைக்கூறும் பாகநூல் கற்றுத் தேர்ச்சியடைந்தவர் அக்குதிரையின் வேகமான நடையினால் தன்தைரியத்தை விடார். அதுபோலவும், ஐம்புலன்களில் தான் கட்டுப்படாதிருத்தற்கு உபாயம் யாதென்று ஆராய்ந்து முதல்வன் திருவடியை யுணர்தலே உபாயம் என்று எண்ணித் திருவடியாகிய அச்சை உணரவல்லவராகிய இறைபணியில் நிற்பவர் பிராரத்தவினையின் பயனாக மாயாகாரியங்கள் வந்து தாக்குதலால் சத்தமுதலாகிய ஐவகை விடயங்களில் பிரவேசித்தாராயினும் அந்தப்பிரவேசத்தால் அவர் முத்தியாகிய தம் வெற்றிப்பாட்டில் நின்றும் நீங்கிக்கட்டுப்பட்டுத் தொடக்குறமாட்டார் எ-று.

(க-ரை.) அங்கித்தம்பனமாகிய சித்தியை உடையவர் அக்கினியிற் குளிப்பினும் அவ்வக்கினியாற் சுடப்பெறாதவாறுபோலவும், பாகநூல் கற்றுத்தேர்ச்சி பெற்றவர் குதிரையில் ஏறிச் செல்லுங்கால் அக்குதிரையின் வேகமான நடையினால் மனஞ்சலங்காதவாறுபோலவும், ஐம்புலன்களின் நின்றும் அனாதியே நீங்கிநிற்குந் தன்மையினால் "பொறிவாயில் ஐந்தவித்தான்" எனக் கூறப்படும் இறைவன் திருவடியை உணர்ந்தவர் பிரா

ரத்தவினையால் ஐம்புலன்களைக் கூடினுந் திருவடியில் நின்றும் நீங்கி அவ்வைம்புலன்களிற் கட்டுப்படார் என்பதாம்.

இவ்வெண்பாவில் அரன் அடி ஓர்பவர் உவமேயம். நற்றவரும் பாகரும் உவமை. உவமேயத்துக்குக் கூறிய அவர் திறல் நீங்காரென்னும் வினை, நற்றவர் பாகர் என்னும் உவமையினும் சென்று பொருந்துமாதலால் அவ்வாறு உரைசெய்யப்பட்டது. அனல் நண் என்பது நண் அனல் என நின்றது. இது எதுபோல எனின், நீர்க் கீழ் என்பது கீழ்நீர் என வருமாறு போலாம். இவ்வாறு முன்னே இருக்கவேண்டிய பதம் பின்னாகத் தொக்கு நிற்றல் முன்பின்னாகத் தொக்க நிலை என்று கூறப்படும். நண்ணனல் என்றது அவ்வாறு தொக்கு நின்று அனலினது நண் என்னும் பொருளைக் குறித்துநிற்றலால் முன்பின்னாகத் தொக்க ஆறும்வேற்றுமைத் தொகை. நள் அனலென்றிருக்கவேண்டுவது செய்யுளின் எதுகைநோக்கி நண்ணனல் என மருவி நின்றது. இது எதுபோல எனின், திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரம் சேரியில் திருக்குறுந்தொகையில் நீளுலகெலாம் என்றிருக்க வேண்டுவது "நீணுலகெலாம்" என நின்றாற்போலாம். நள் என்பது நடு. இவ்வாறன்றி நண்ணனல் என இருந்தவாறேகொண்டு தம்மால் நண்ணப்படும் அனல் என்று உரைப்பினும் பொருந்தும். நண்ணப்படுதல் - பொருந்தப்படுதல்.

பண்ணமர என்றவிடத்து பண் என்றது பண்ணுதலைக் குறித்தது. பண்ணுதல் என்றது கதிகளையுடைய குதிரையை வேகமாய் நடக்கும்படி செலுத்துதல்.

நற்றவர் தம்மினும் பாகரினும் என்றவிடத்துள்ள இன் உருபு இரண்டும் போல என்னும் பொருளைக் குறித்தமையால் உவம உருபுகள். அவ்விரண்டிடத்தும்நின்ற உம்மை எண்ணைக்குறித்து நிற்றலால் எண்ணும்மை. ஐம்புலனிற் சென்றும் என்றதிலுள்ள உம்மை செல்லக்கூடாத இழிந்த இடத்திற் சென்றாலும் என்னும் பொருள்குறித்து நிற்றலால் இழிவு சிறப்பு

அசற்கு என்பது அசனால் என்னும் பொருளில் நின்று மூன்றாம் வேற்றுமை ஆல் உருபு நான்காம் வேற்றுமைக் குவ்வுருபாக மயங்கினமையால் உருபு மயக்கம்.

முத்தரைப் பிராரத்தவினை தாக்குங்கால் அவர் மெய்ப்பொருளில்
நிலைத்திருப்பரென்றது பொருந்ாதென்பாரை மறுத்துப்
பொருந்துமெனக் கூறி மேலை வெண்பாவை வலியுறுத்தும்
உதாரணம்.

சதசத்தா மெய்கண்டான் சத்தருளிற் காணி
னிதமித்தல் பாசத்தி லின்றிக்—கதமிக்
கேரிகதிரின் முன்னிருள்போ லேலா வசத்தி
னருகணையார் சத்தணைவா ராங்கு

சிற்றுரை.

எ—து உ—ம் எ—னின், சார்ந்ததன் வண்ணமாய்ச் சதசத்தெனப்படு மியல்புடையார் அரனடியோரினும் ஐம்புலனிற் சென்றுழி அவற்றிற் றொடக்குண்ணுந் திறலுடையராதல் யாங்ஙனமென்பாரை நோக்கிச் சார்ச்சிக்கட்படும் விசேடங்கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) சதசத்து ஆம் மெய்கண்டான் சத்து அருளின் காணின்—(தன்னாற் சாரப்படுவனவாகிய சத்தினும் அசத்தினும் அதுவதுவாதல்பற்றிச்) சதசத்தென்னுந் தன்னுண்மையையுணர்ந்தோன் சத்தாகிய முதல்வன் றிருவருளாலல்லது ஒன்றையுங் காணாய் அவ்வருளின் வழிநின்று காணுமாயின்,— பாசத்தில் இதமித்தல் இன்றி—(அவ்வழிப்)பாசமாகிய அசத்தின் இதஞ்செய்தலின்மையால்,—சத்து அணைவார் கதம்மிக்கு எரிகதிரின் முன் இருள்போல் ஆங்கு ஏலா அசத்தின் அருகு அணையார்—சத்தாகிய முதல்வனைத் தலைப்பட்டு நிற்பார் சீற்றமிக் கெரியாநின்ற சுடரின் முன்னர் அந்தகாரம் போலச் சத்தெதிர் தனது சத்தியேற்கமாட்டாத அசத்தாய ஐம்புலனின் மாட்டெய்தி நிற்பாரல்லர் எ-று.

வேறு முடிபாகலின் ஒருமைப்பன்மை மயக்கமின்மையுணர்க. அருளி னென்னும் இன்னுருபு ஏதுப்பொருட் கண் வந்தது. இதமித்தல் பெயரடியிற் பிறந்த வினைப்பெயர். இதஞ்செய்தல் பற்றுச் செய்தல். இன்றி யென்னுஞ் செய்தெ னெச்சக்குறிப்புக் காரணப் பொருட்டாய் நின்றது. இன்மைக்கேதுக் கூறுவார் கதமிக்கெரிகதிரின் முன்னிருள்போ லேலாவசத்தென்றார். கதமிக் கெரிகதிரென்றது ஒப்புமை பற்றிய உபசாரவழக்கு. "எல்லையில்லவனெரிதுள்ளி னலென வெகுண்டான்" என்பதனானும் ஒப்புமையாதலுணர்க. இதனாற் போந்தது, சத்தும் அசத்துந் தம்முட்சமமல்ல வாகலான் அரனடியோர்பவர் ஐம்புலனிற் சென்றாலும் அதுபற்றி 'அவர்திற னீங்கா' ரென மேலது வலியுறுத்த வாறுமென்க. ஏகனாகி நிற்றலான் மலமின்றுதலும் இறைபணி நிற்றலான் மாயைவினைக ளிலவாதலும் பெறப்பட்டமையின், மலமாயை தன்னொடு வல்வினை யின்றே யென்பதனை வேறோரதிகரணமாக வைத்தோதாராயினர்.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) சதசத்து ஆம் மெய்கண்டான் சத்து அருளின் காணின் பாசத்தில் இதமித்தல் இன்றிச் சத்து அணைவார் கதம் மிக்கு எரி கதிரின் முன் இருள்போல் ஆங்கு எலா அசத்தின் அருகு அணையார்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோ வெனின், உயிரானது சத்தைச் சார்ந்த விடத்துச் சத்தாயும் அசத்தைச் சார்ந்தவிடத்து அசத்தாயும் நிற்றற்கு உரிமை யுடையது ஆதலால் சதசத்தெனப்படுந்தன்மையினையுடைய அவ் வுயிர் இறைவன் திருவடியைப் புணரினும் அத்திருவடியை விட்டு ஐம்புலனிற் சென்ற விடத்து அவ்வைம்புலனாய் நிற்றல் இயல்பு. அவ்வாறாகவும் ஐம்புலனிற் சென்றவிடத்தும் அவ்வைம்புலனிற் கட்டுப்படாமல் இறைவன் திருவடியையே நினைந்திருப்பர் என்று மேலை வெண்பாவிற் கூறியது எவ்வாறு பொருந்து மென்பாரை நோக்கித் திருவடியைச் சார்தலின்கண் உண்டாகும் விசேடத்தால் ஐம்புலனிற் கட்டுப்படாமை கூடு மெனக் கூறி மேலை வெண்பாவின் கருத்தைவலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) சத்தைச் சார்ந்தவிடத்துச் சத்தாயும் அசத்தைச் சார்ந்த விடத்து அசத்தாயும் நிற்றல்பற்றிச் சதசத்தெனப்படுந் தன்மை தனக்கு உண்டென்று அறிந்தவன் சத்தாகிய முதல்வன் திருவருளை அடைந்து அத் திருவருளாலன்றி ஒன்றையுங் காணாதவனாகி அவ்வருளின் ஏவல்வழியில் நின்று ஐம்புலனைக் காணில் அவ்வாறு காணுமிடத்துப் பாசமாகிய அவ் வைம்புலன்களும் அப்புலன்களுக்குரிய இன்பத்தைச் செய்வதில்லை. இன் பத்தைச் செய்யாமைக்கு ஏது சத்தின்முன் அசத்து முனைத்து நில்லாமை யேயாம். முனைத்து நில்லாமை எதுபோல எனின், மிக ஓங்கி எரிகின்ற சுடரின் முன்னர் அந்தகாரமாகிய இருள்முனைத்து நில்லாத வாறுபோலாம். ஐம்புலன்களும் இன்பத்தைச் செய்யாமையால் சத்தாகிய முதல்வனைக் கூடின முத்தர் சத்தின் முன்னர் முனைத்து நிற்கும் வலிமையில்லாத அசத் தாகிய அவ்வைம்புலனிற் கட்டுப்படார் எ-று.

(க-ரை.) முதல்வன் திருவருளைப் பெற்று அவ்வருள்வழி நிற்பவர் முதல்வன்முன் முனைத்து நிற்கமாட்டாத ஐம்புலன்களைக் கூடினும் அப் புலன்கள் இன்பஞ் செய்யாமையால் அப்புலன்களிற் கட்டுப்படார் என் பதாம்.

மெய்கண்டான் என்றது ஒருமை. அருகணையார் என்றது பன்மை. ஒருமையும் பன்மையும் மயங்கிநிற்றல் கூடாதே எனின், மெய்கண்டான் அருளிற் காணின் என்பது ஒருமுடிபும் சத்தணைவார் அசத்தின் அருகணை யார் என்பது வேறொரு முடிபும் ஆதலால் ஒருமைப்பன்மை மயக்கம் இல் லாமை யறிக.

அருளிற் காணின் என்றவிடத்து அருளின் என்றதிலுள்ள இன்னுருபு அருளாலென்னும் பொருளைக் குறித்தமையால் ஏதுப்பொருளின்கண் நின்றது.

இதஞ்செய்த லென்றிருக்கவேண்டுவது இதமித்தல் என நின்றது. இதமித்தல் என்றது இதம் என்னும் பெயரடியாகப் பிறந்ததொழிற் பெயர். இதம் செய்தல் என்பது இன்பமுண்டாகும்படி பற்றுச் செய்தல். ஆதலால் இதமித்தல் இன்றி என்பதற்கு இன்பஞ்செய்தல் இல்லையென உரைசெய்யப் பட்டது.

இதமித்தல் பாசத்தில் இன்றி என்றவிடத்து இன்றி என்றது சத்து அணைவார் என்றதுகொண்டு முடியவேண்டிய எச்சமாய் நிற்றலால் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சக் குறிப்பு. அது, கட்டுப் படாமைக்குக் காரணமாய் இன்மையால் என நிற்றலால் செய்து என்னும் எச்சக்குறிப்பாய்க் காரணப் பொருளில் நின்றது என அறிக.

இன்பஞ் செய்தலில்லை என்பதற்கு ஏதுக்கூறவேண்டிக் கதமிக்கு எரி கதிரின் முன் இருள்போல் எலா அசத்தென்று சத்தின் முன்னர் அசத்து முனைத்து நில்லாமையை ஏதுவாகக் கூறினர்.

கதம்மிக்கு எரிகதிர் என்றதில் கதம் என்றது கோபம். அக்கினிக்குக் கோபம் உண்டென்று கூறிய கருத்தென்னை யெனின், கோபம் வந்தபொழுது மனந்துடிக்கின்றவாறுபோல அக்கினி சுடர்விட்டுத்துடித்துமேலோங்குதலைக் குறித்து நிற்றலால் கதமிக்கு எரிகதிர் என்றது கோபத்தின் ஒப்புமைபற்றிய உபசாரவழக்கு. அக்கினிக்கும் கோபத்திற்கும் ஒப்புமை உண்டென்பது திருக்குறள் வெகுளாமை கூ-வது பாட்டில் "சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி" என்பதனானும், பெரியபுராணம் அமர்நீதி நாயனார் சரிதம் உகூ-வது செய்யுளில் "எல்லையில்லவன் எரிதுள்ளினுலென வெகுண்டான்" என்பதனானும் அறிக. துள்ளுதல் என்பது துடித்தல். சேர்ந்தாரைக் கொல்லி என்பது நெருப்பு.

இவ்வெண்பாவினால் கூறி முடித்த பொருளாவது, பேரறிவாகிய சத்தும் சடமாகிய அசத்தும் சமம் அல்ல ஆதலால் சத்தாகிய அரன் அடியை அறிந்தவர் அசத்தாகிய ஐம்புலனிற் சென்றாலும் சென்றதுபற்றி அரனடியைவிட்டு ஐம்புலனிற் கட்டுப்படார் எனக்கூறி மேலை வெண்பாவில் "அவர் திறல் நீங்கார்" என்றுகூறியதை வலியுறுத்திய வாறும்.

இச்சூத்திரம் ஏகனாகி நிற்றல் ஓரதிகரணமும் இறைபணி நிற்றல் ஓர் அதிகரணமும் மல மாயை கன்மம் இல்லையாதல் ஓர் அதிகரணமுமாக மூன்றதிகரணங்களாக வகுக்கப்பட வேண்டுவதாயினும், ஏகனாகி நிற்றலால் மலம் இன்றாதலும் இறைபணி நிற்றலால் மாயையும் வினையும் இலவாதலும் பெறப்பட்டமையின், மலமாயை தன்னொடு வல்வினை யின்றே என்பதனை வேறு ஓரதிகரணமாக வைத்து இவ்விடத்து ஓதாராயினர். ஆயினும் அதன்கண் சந்தேகம் உண்டாகாமைப் பொருட்டுப் பன்னிரண்டாஞ் சூத்தி

ரத்து முதலதிகரணத்தில் சம்பந்தம்பற்றி வேறுவைத்துக் கூறுகின்றாராத லின் அதிகாரணத்திற் குரிய ஐயப்பாடு முதலியன எல்லாம் அவ்விடத்துக் காண்க.

இச்சூத்திரத்தினாலும் அதிகாரணங்களினாலுங் கூறி முடித்ததொகைப் பொருள்:—ஏழாஞ் சூத்திர முதல் மூன்று சூத்திரங்களினாலும் சாதன இயல் கூறி முடித்து இப்பத்தாஞ் சூத்திரம் முதல் மூன்று சூத்திரங்களி னால் பயனியல் கூறத்தொடங்கிப் பாசநீக்கமும் சிவப்பேறும் என்னும் பயன் இரண்டனுள் பாசநீக்கம் ஆன்மசுத்தியின் பயன் ஆதலால் ஒன்பதாஞ் சூத்திரத்தில் ஆன்ம சுத்தி கூறினமையின் அதன் பயனாகிய பாசநீக்கத்தில் ஆணவங் கன்மம் மாயை என்னும் பாசம் மூன்றனுள் முதல்வனுடன் ஏகனாய் நிற்றலால் ஆணவமல நீக்கமும் அவன் அருள்வழியாகிய இறைபணி நிற்ற லால் மாயை கன்மங்களின் நீக்கமும் உண்டாகுமென இப்பத்தாஞ் சூத்தி ரத்தாற் கூறினார். கூறவே, ஒன்பதாஞ் சூத்திரத்திற் கூறியவாறு ஞானக் கண்ணால் முதல்வனைக் கண்டு ஆன்மசுத்தி பெற்றதேபோதும் அதன்மேற் செய்யவேண்டுவது ஒன்றுமில்லை யெனச் சிவசமவாத சைவர் கூற, முதல திகரணத்தால் அவரைமறுத்து முதல்வனைக் கண்டவிடத்தும் கண்டோம் என்னும் போதம் அறாமையால் அப்போதமாகிய யான் எனதென்னும் மயக்கம் அறுதற் பொருட்டு முதல்வனிடத்து ஏகனாகி நிற்கவேண்டுமெனக் கூறினார். கூறவே, உடம்பு உள்ள அளவும் பிராரத்தவினையும் அது பற்றி உண்டாகும் முயற்சியாகிய ஆகாமிய வினையும் நீங்கா ஆதலால் ஏகனாகிநிற் றல் எவ்வாறு கூடுமெனச் சுத்தசைவரும் அவருக்குக் கீழ்ப்பட்டவருங் கூற இரண்டாம் அதிகரணத்தால் அவரைமறுத்து இறைவன் திருவருளை இன் றித்தனக்குச் செயலில்லையென அறிந்து எச்செயலும் அவன் செயலாகவே காணும் இறைபணியில் நிற்பவர்க்குப் பிராரத்தவினை உயிரைத் தாக்காமல் முதல்வன் சந்நிதியில் உடலுழாகவும் ஆகாமியவினை வறுத்த வித்துப்போல் மேற்பிறவியை உண்பெண்ணுமலும் கழியும் என்றும், இறைபணியில் நிற் பவர்க்கு அவ்வாறு வினையை ஒழித்து ஏனையோருக்கு வினையைக் கூட்டு வித்தலால் இறைவன் நடுவுநிலைமைக்குக் குறைவில்லை யென்றும், இறை பணியில் நிற்பவர்க்கும் ஏகதேசத்தில் பிராரத்தவினை தாக்குதல் பழக்கவாச னைபற்றியே ஆதலின் உண்மையுணரும் ஞானத்தால் அப்பழக்க வாசனை பற்றி ஆகாமியவினை ஏறுமாறில்லை யென்றும், அந்தஞானம் பழக்கவாசனை யால் பிறழாது என்றும், பிறழாமைக்கு ஏது சத்தின் முன் அசத்து, முனை த்து நின்று இன்பஞ் செய்யாமையே என்றும் கூறினார்.

இரண்டாம் அதிகாரணம் முற்றிற்று.

பத்தாஞ்சூத்திரம் முற்றிற்று

பதினோராஞ்சூத்திரம்.

பத்தாஞ் சூத்திரத்தால் பயன் இரண்டனுள் பாசநீக்கமாகிய பயன்கூறி பாசப்பற்று நீக்கத்தின் பொருட்டு இடையறாது சிவபெருமான் திருவடியைப் பற்றுதலாகிய ஏனைச் சிவப்பேறு என்னும் பயனை இப்பதினோராஞ் சூத்திரத்தாற் கூறுகின்றார்.

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன்கழல் செலுமே.

சருத்துரை.

எ-து சூ-ம் எ-னின், பரமேசுரனது சீபாதங்களை யணையுமா றுணர்த்துதனுதலிற்று.

சிற்றுரை.

எ-து க-ரை எ-னின், சூத்திரக்கருத் துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அங்ஙனம் ஏகனாகி யிறைபணி நிற்பார்க்கு அறிவிச்சைசெயல்கள் விடயித்தற் குரியதோரியைபு ஆண்டுப் பெறப்படாமையின் விடயமாவ தொன்றில்லைபோலும் என்னும் வாதிகளை நோக்கி விடயித்தலில்வழி ஆண்டுப் புத்தர் கூறும் ஆலயவிஞ்ஞானம் போலச் சூனியமா மெனப்பட்டுக் குணஞ் சூனியமாகவே குணியுஞ் சூனியமாய் முடியுமாகலான் அஃதேதலாமையின் ஆண்டவை இயைபுபற்றி விடயிக்குமா றுணர்த்து முகத்தானே பயனிரண்டனுள் முடிவா யெஞ்சிநின்ற சிவப்பேறு கூடுதலாய நிட்டையிலியல் புணர்த்துதல் இப்பதினொராஞ் சூத்திரத்தின் கருத்து எ-று.

இதனானே சூத்திர வியைபும் இனிது விளங்கும்.

அற்றேல், ஏகனாகி இறைபணி நின்றார்க்கு இனிச் செய்யக் கடவதொன் றின்மையானும், இருணீக்கமும் ஒளி விளக்கமும் உடனிகழ்ச்சியாயவாறு போலப் பசுத்துவ நீக்கமுஞ் சிவத்துவ விளக்கமும் இடையீடின்றி உடனிகழ்வன வாகலின் வேறோத வேண்டாமையானும், முதனூலுட் சுவானுபூதியாகிய சிவப்பேற்றைப் பத்தாஞ் சூத்திரத்துட் பாசநீக்கத்தோடு ஒருங்குவைத்தே

யோதலானும் அதனை மீண்டு வேறுவைத்தோதல் அமையாது போலுமெனின்;—அறியாது கடாயினாய். ஏகனாகி யிறைபணிநிற்பது துரியநிலைக்கண்ணதாகிய அருணிலையே யாகலின் ஆண்டு மலநீங்கிய துணையானே சுகப்பிரபை மாத்திரையே விளங்குவதன்றி அதீதநிலைக்கண்ணதாகிய சிவத்துவ விளக்கமெனப்படும் பரமசுகம் விளங்காமையின் அது விளங்குதல் அவனருளாலல்லதொன்றையுஞ் செய்யாமை மாத்திரையால் அமையாமையின் அதற்கு வேறு மாண்டுச் செய்யக்கடவதுண் டென்பது தானே போதருதலானும், இருணீக்கத்தின் ஒளி விளக்கம்போலப் பசுத்துவ நீக்கத்தின் அருள் விளக்கமாத்திரையேயன்றி ஆனந்த விளக்கமும் உடனிகழாமையானும், அவ்விரண்டற்கும் வேறுபாடு முன்னர்க் காட்டப்படு மாகலானும், முதனூலிற் பாசக்ஷயம் பண்ணுமாறுணர்த்திய வழிப்பாச நீக்கமாத்திரையே முத்தியெனக் கொண்ட வாதிகளை மறுத்தற் பொருட்டுப் பாசநீக்கம் பெற்றோன் சுவானுபூதியுடையவனாவ னெனப்பதினொராஞ் சூத்திரஞ் செய்தற்குத் தோற்றுவாயாந் துணையே பத்தாஞ் சூத்திரத்திற் செய்து வைத்துச் சுவானுபூதி நிகழ்ச்சிக்கண் ஓதற்பாலன வெல்லாம் பதினொராஞ் சூத்திரத்துட் கூறுதலின் ஒன்பதாஞ் சூத்திரத்தின் எடுத்துக் கொண்ட ஆன்ம சுத்திபண்ணுமாறு பத்தாஞ் சூத்திரத்திற் சென்றியைந்து முற்றுப் பெற்றாற்போலப் பத்தாஞ் சூத்திரத்தின் எடுத்துக்கொண்ட சுவாநுபூதி நிலை பதினொராஞ் சூத்திரத்திற் சென்றியைந்து முற்றுப் பெறுதலான் அதன்கண் மலையாமைப் பொருட்டு ஆசிரியர் சுவாநுபூதிமானாவனென்பதனையும் அரன் கழல் செலுமெனப் பதினொராஞ் சூத்திரத்தானே ஒருங்கு வைத்தோதினா ராகலின் அது மாறன்மையானும், அவ்வாறன்றி மொழி பெயர்த்தல் யாப்பால் நூல்செய்துரைப்பான் புகுந்த ஆசிரியர் வேறுபடச் செய்துரையா ராகலானு மென்பது. இதனானே, முதனூலிற் சுவாநுபூதிமானென வாளாகூறியதனைப் பதினொராஞ் சூத்திரத்துப் பத்திசெய்க வென்றதன் பின்னாகக் கொண்டு கூட்டிவைத் துரைத்தமேல அதன் கருத்தென்பதூஉம் பெறப்பட்டது. அற்றாகலினன்றே, பத்தாஞ் சூத்திரம் பாசக்ஷயம் பண்ணுமாறுணர்த்திற் றெனவும் பதினொராஞ் சூத்திரம் பரமசிவனாசிபாதங்களை யணையுமாறுணர்த்திற் றெனவுங் கருத்துரை செய்ததூஉ மென்க. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப.

விளக்கம்:

இக்கருத்துரை என்னசொல்லிற்றோவெனின், சூத்திரக்கருத்து இது வென்று சொல்லிற்று.

(இக்கருத்துரையின் பொருள்.) மேல் பத்தாஞ் சூத்திரத்திற் கூறிய வாறு அகத்திற் சிவனோடு ஒற்றுமைப்பட்டு ஏகனாகி நிற்றலும் புறத்துப் பிராரத்தவினை தாக்குமிடத்து அவ்வினைதாக்காத வண்ணம் இறைபணி நிற்றலும் செய்வார்க்குத் தனக்கெனச் செயலில்லாமையால் தன்னுடைய அறிவால் அறிதலும் இச்சையால் விரும்புதலும் செயலால் செய்தலும் இல்லையாய்முடியும். முடியவே தன்னுடைய அறிவு இச்சை செயல்கள் தொழிற்படுவதற்கு முன்னிலையான பொருளும் இல்லையாய் முடியும் என்று கூறும் வாதிகளைநோக்கி அறிவு இச்சை செயல்களின் தொழில் இல்லாதவிடத்து அம் முத்திநிலை புத்தர்கூறும் ஆலயவிஞ்ஞானம்போலச் சூனியம் எனப்படும். குணம் சூனியமெனப்படவே உயிராகிய குணியுஞ் சூனியமாய் முடியும். முத்தியில் குணியாகிய உயிர் இல்லையென்றல் ஏலாது. ஆதலால் முத்தியில் முதல்வனுடன் உயிர் கலந்து நிற்குஞ் சம்பந்தத்தால் முதல்வன் அருளுடன் உயிரின் அறிவிச்சை செயல் மூன்றும் கலந்து நின்று தொழிற்படுமெனக்கூறும் முறையில், பாசநீக்கமும் சிவப்பேறும் என்னும் பயன் இரண்டனுள் மேலைச்சூத்திரத்தில் பாசநீக்கம் கூறினமையின் கூறவேண்டியதாய் எஞ்சி நின்ற சிவபெருமான் திருவடியைக் கூடுதலாகிய சிவப்பேறு என்னும் நிட்டையினியல்புகூறுதல் இப்பதினொராஞ் சூத்திரத்தின் கருத்து எ—று.

மேலைச் சூத்திரத்தில் பாசநீக்கமும் தெளிதலும் கூறி இச்சூத்திரத்தில் சிவப்பேறும் நிட்டையுங் கூறுதலால் சூத்திரத்தின் சம்பந்தம் பெறப் பட்டது.

சிவபெருமான் திருவடியைக்கூடுதல் இச்சூத்திரத்தின் கருத்தாயின், மேலைச் சூத்திரத்திற் கூறியவாறு ஏகனாகி இறைபணி நின்றவர் சிவபெருமான் திருவடியை அடைந்தவரேயாவராதலால் அவர்க்கு மேற்செய்ய வேண்டியது ஒன்றும் இல்லாமையானும், இருள் நீங்கும் பொழுதே ஒளி விளங்குமாறுபோல மேலைச் சூத்திரத்திற் கூறியவாறு பாசம் நீங்கிய பொழுதே சிவபெருமான் திருவருள் தடையின்றி விளங்குமாதலால் சிவபெருமான் திருவடி யடைதலைப்பற்றி வேறு கூறவேண்டாமையானும், இச் சூத்திரம் வேண்டுவதில்லை. அன்றியும், முதல்நூலாகிய வடமொழிச் சிவஞான போதத்தில் சுவாநுபூதியாகிய சிவபெருமான் திருவடி அடைதலைப் பத்தாஞ் சூத்திரத்துள் பாசநீக்கத்துடன் ஒன்றாகவைத்தே கூறுதலானும் அதனை இச்சூத்திரத்தில் வேறாகவைத்துக் கூறுதல் பொருந்தாது எனின் கூறுதும்:—

பயனியல் பதினொராஞ்சூத்திரம்.

ஏகனாகி இறைபணி நிற்பது நின்மல துரியநிலையாகிய அருள்விளக்க மேயாம். அத்துரியநிலையில் பாசம் நீங்கிய உதவியால் சிவபெருமான் திருவடியாகிய சுகத்தின் ஒளிமட்டும் விளங்குவதன்றிச் சுகம் விளங்குவதில்லை. சிவபெருமான் திருவடியைக் கூடி இன்புறுதலாகிய அப்பரமசுகம் நின்மலதுரியாதீத நிலையின்கண்ணேதான் விளங்கும். ஆதலால் பரமசுகவிளக்கம் மேலைச் சூத்திரத்து இரண்டாமதிகரணத்து ஏதுவிற் கூறியவாறு அவனருளால் அல்லது ஒன்றையும் செய்யாமையாகிய இறைபணிநிற்றல் மாத்திரையானே விளங்காது என்பது பெறப்பட்டது. படவே, அப்பரம சுகம் விளங்குதற்பொருட்டு இறைபணி நின்றதன்மேலும் செய்யவேண்டியது உண்டென்பது தானே விளங்கும். அச்செயல் திருவடி அடைதலேயாம். ஆதலால் திருவடி அடைதலைக் கூறும் இச்சூத்திரம் வேண்டும் என்க.

திருவடி சுகம் தரும் என்பதை "மாசில்வீணையும் மாலைமதியமும்—வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்—மூசுவண்டறைப் பொய்கையும் போன்றதே— ஈசனெந்தை இணையடி நீழலே." என்னுந் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாக்கானும் அறிக. இப்பாசுரத்தால் நீற்றறையில் வைக்கப்பெற்ற சுவாமிகளுக்குத் திருவடியைக் கூடிய நிட்டையினால் அந்நீற்றறை, தடாகமும் இளவேனிற்காலத்துத் தென்றலும் சந்திரனும் வீணையும் போன்று மிகக்குளிர்ந்தமை பெறப்பட்டவாறு அறிக.

அன்றியும், இருள் நீங்கியவுடன் கண்ணுக்குப் பொருளின் விளக்கம் மட்டும் உண்டாகுமேயன்றிப் பொருளின் அநுபவம் உண்டாகி இன்புறுதலில்லை. அநுபவமுண்டாகி இன்புறுதற்குப் பொருளைக் கண்பற்றல் வேண்டும். இருள் நீக்கமே பற்று முயற்சியை யுண்டுபண்ணாது. உண்டு பண்ணுமாயின் இருளில்லாத விடத்துள்ள பொருளை அவ்விடத்துள்ள எல்லாக் கண்களும் பற்றல்வேண்டும். அவ்வாறு பற்றுவதில்லை. ஆதலால் இருள் நீக்கம் வேறு; பற்றும் முயற்சி வேறு. பற்றுமுயற்சிக்கு இருள் நீக்கம் உதவியாகும். அவ்வுதவியைக்கொண்டு பற்றும் முயற்சியைச் செய்தே பொருளாலாகிய இன்பத்தைக் கண் அநுபவிக்கவேண்டும். அவ்வாறே மேலைச் சூத்திரத்திற் கூறியவாறு பாசநீக்கத்தினால் அருள்விளக்கம் உண்டாதலேயன்றி ஆனந்தவிளக்கம் உண்டாதவில்லை. அருள் விளக்கமாவது முதல்வனையின்றித் தான் தனித்து நிற்பதில்லை யெனவும முதல்வன் செயலையின்றித் தனக்குச் செயலில்லை யெனவுங் காண்டல். அவ்வாறு காணுங்கால் அறிவுஞ் செயலுந் தொழிற்படும். இச்சை தொழிற்படுவதில்லை. ஆனந்த விளக்கமாவது முதல்வன் உடனாய் நின்று அறிவித்தலேயன்றித் தனக்காக அறிந்தும் வரும்பேருபகாரத்தை நினைந்து அவனிடத்து அன்புமிகுதிப்பட அவ்வன்புமிகுதியால் அவனோடு கலந்து அழுந்துதல். அவ்வாறு அழுந்துங்கால் அறிவு இச்சை செயல்

மூன்றுந் தொழிற்படும். இவ்வாறு அருள் விளக்கத்தில் அறிவுசெயல் இரண்டுந் தொழிற்படுதலும் ஆனந்த விளக்கத்தில் அறிவு இச்சை செயல் மூன்றுந் தொழிற்படுதலுமே அவ்விரண்டற்கும் வேறுபாடெனவும், ஆனந்த விளக்கத்திற்கு அருள்விளக்கம் உதவியாமெனவும், அவ்வுதவியைக் கொண்டு முதல்வனைப் பற்றியே ஆனந்த விளக்கம் உண்டாகுமெனவும் இச்சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்திற் கூறப்படும். இதனானும் இச்சூத்திரம் வேண்டுமென்க.

ஆயினும் முதல்நூலாகிய வடமொழிச் சிவஞானபோதத்தில் பத்தாஞ் சூத்திரத்திலேயே சுவாநுபூதி கூறியிருக்க அதற்குமாறாக இத்தமிழ்நூலில் பதினொராஞ் சூத்திரத்தில் சுவாநுபூதியைக் கூறுதல் எவ்வாறு பொருந்துமெனின், முதல்நூல் பத்தாஞ் சூத்திரத்தில் பாசநீக்கம் பண்ணுமாறுணர்த்திப் பாசநீக்கமாத்திரையே முத்தியெனக்கொண்ட வாதிகளை மறுத்தற் பொருட்டுப் பாசநீக்கம் பெற்றோன் பாசப்பற்று நீக்கத்தின் பொருட்டு திருவடி அடைதலாகிய சுவாநுபூதி உடையவனாவனெனத் திருவடி அடைதலைக்கூறும் பதினொராஞ்சூத்திரத்திற்கு ஆரம்பஞ் செய்துகொண்ட அவ்வளவே பத்தாஞ்சூத்திரத்திற் கூறப்பட்டுள்ளது. சுவாநுபூதி உண்டாவதற்குச் செய்யவேண்டுவன எல்லாம் பதினொராஞ் சூத்திரத்திலேயே அம்முதனூலிற் கூறப்பட்டிருக்கின்றன. ஒன்பதாஞ் சூத்திரத்திலெடுத்துக் கொண்ட ஆன்மசுத்திசெய்யும் முறைமை பத்தாஞ் சூத்திரத்திற் சென்று பாசநீக்கங் கூறுதலால் முற்றுப்பெற்றாற்போலப் பத்தாஞ் சூத்திரத்திலெடுத்துக்கொண்ட சுவாநுபூதிநிலை பதினொராஞ் சூத்திரத்திற் சென்று திருவடி அடைதல் கூறுதலால் முற்றுப் பெறுகின்றது. அவ்வாறு ஒரு சூத்திரப்பொருள் அடுத்த சூத்திரத்திற் சென்று முற்றுப்பெறுமோ என மலையாதிருத்தற்பொருட்டு முதல்நூல் பத்தாஞ் சூத்திரத்தில் சுவாநுபூதிமானுவன் என்பதனை ஆசிரியர் இந்நூல் பதினொராஞ் சூத்திரத்தில் அரன்கழல்செலும் என மொழிபெயர்த்துச் சுவாநுபூதி உண்டாவுதற்கு முதனூல் பதினொராஞ் சூத்திரத்திற்கூறிய பத்திசெய்க என்றதனோடு உடன் வைத்து அயரா அன்பினரன்கழல் செலுமென ஓதினார். ஆதலால் மாறாகாமையிற் பொருந்தும் என்க.

அன்றியும் நூல்செய்தற்குரிய விதி தொகுத்துச்செய்தல், விரித்துச் செய்தல், தொகுத்தும் விரித்தும் செய்தல், மொழிபெயர்த்துச் செய்தல் என நான்குவகைப்படும். இதனை "தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்—பெனத்தகு நூல் யாப் பீரிரண் டென்ப." என்னும் நன்னூல் சிறப்புப்பாயிரம் நான்காவது சூத்திரத்தால் அறிக. அந்நால்வகை விதியினுள் மொழிபெயர்த்த லென்னும் விதியின்படி நூல் செய்து உரைக்கப்புகுந்த ஆசிரியர் முதல் நூலாகிய வடமொழிச் சிவஞான போதத்தோடு மாறுபட உரையார் என அறிக. மொழிபெயர்த்துச்செய்தார் என்ற இதனானே முதல்நூலாகிய வடமொழிச் சிவஞானபோதம் பத்தாஞ்சூத்திரத்தில்

பயனியல் பதினொராஞ்சூத்திரம்.

சுவாநுபூதி மான் எனச் சும்மா கூறியதனைப் பதினொராஞ் சூத்திரத்தில் பத்தி செய்க என்றதன் பின்னாகக்கொண்டு கூட்டிவைத்துரைத்தலே வடமொழிப் பத்தாஞ் சூத்திரத்தில் சுவாநுபூதி மான்எனக் கூறியதன்கருத்தென்பதூஉம் பெறப்பட்டது. ஆதலினாற்றான், வடமொழிப் பத்தாஞ் சூத்திரத்தில் சுவாநுபூதிமான் எனவும் பதினொராஞ் சூத்திரத்தில் பத்தி செய்க எனவுங் கூறியிருப்பனவற்றை மொழிபெயர்க்குங்கால் பத்தி செய்க என்றதை அன்பின் எனவும் சுவாநுபூதிமான் என்றதை அரன் கழல் செலும் எனவும், இந்நூல் பதினொராஞ் சூத்திரத்தில் ஒன்றாக வைத்திருக்கின்றனர் என்க. பத்தியினாலன்றிச் சுவாநுபூதி உண்டாக மாட்டாது ஆகலின் அவ்வாறு சேர்த்து மொழிபெயர்த்தாரென அறிக. சுவானுபூதி நிலை பத்தாஞ் சூத்திரத்தில் உண்டாகவில்லை யென்பதுபற்றியே பத்தாஞ் சூத்திரத்திற்குப் பாசக்ஷயம் பண்ணுமாறுணர்த்திற் றெனவும், பதினொராஞ் சூத்திரத்திற்குப் பரமசிவனது ஸ்ரீபாதங்களை அணையுமா றுணர்த்திற் றெனவும் கருத்துரை செய்தார்.

இவ்வாறு கருத்துரை செய்திருக்கவும் இச்சூத்திரம் சீவன்முத்திநிலை கூறியதாகச் சிலர் கூறுவர். பன்னிரண்டாஞ் சூத்திரம் சீவன் முத்திநிலை கூறுதலால் அவர் கருத்துப் பொருந்தாது.

சிற்றுரை.

இச்சூத்திரத்தின் பிண்டப் பொழிப்பு.

காணுங் கண்ணுக்கு—காட்டக்காணுந்தன்மையுடைய கண்,—(காண)—உருவத்தைக் காணும்படி,—காட்டி—அதனோடொருங்கியைந்து நின்றுகாட்டி,—(காணும்)—அவ்வுருவத்தைக் காண்கின்ற,—உளம் போல்—ஆன்மாப் போல,—(காணும்)—அறிவிக்க அறியு மியல்புடைய,—உள்ளத்தை—அவ்வான்மா விடயத்தை,—காண—அறியும்படி,—காட்டி—முதல்வன் அதனோடொருங்கியைந்து நின்று அறிவித்து,—காண்டலின்—அறிந்து வருதலான்,—அயரா அன்பின்—அவ்வத்துவித நிலையை மறவாது கடைப் பிடித்துச் செய்யும் அன்பானே,—அரன்கழல்—அம்முதல்வன் றிருவடியாகிய சிவானந்தாநுபூதியை,—செலுமே—தலைப்படும் எ-று.

காணுமென்னும் உவமை யடை பொருளினும், கண்டென்னும் பொருள்வினை உவமையினுஞ் சென்றியைந்தன. காண வென்பதனை ஈரிடத்துங் கூட்டுக. "வியர்த்து வெகுளார் விழுமியோர்" என்பதுபோலக் கண்டு காட்ட லென்பது மாறிவைத்துரைக்கப்பட்டது. இக்கருத்து நோக்கியன்றே, இதனை விரித்

துக் கூறுவான் புகுந்த வழிநூலாசிரியர் "காட்டிக் கண்டிடுமா போலக் காட்டிக் கண்டிடுவன்" என்றதூஉ மெனக. அயராமைக் குச் செயப்படுபொருள் அதனை யென்றெடுத்துக் கொள்க. அய ராஅன்பென்றது அயராமையானாகிய அன்பென "ஆறு சென்ற வியர்" போலநின்றது. அது "இத்தையாயு மறிவுடையனாயன்பு செய்ய"என வழி நூலாசிரியர் கூறியதனானு முணர்க. உள்ளத்தை என்பது உருபுமயக்கம். அறிவிச்சை செயல்களின் நிகழ்ச்சி யாகிய அயராமையும் அன்பும் செலவும் முறையே காரணகாரி யங்களாய் அவ்வொரு பொருள்மேல் ஒருங்கு நிகழு மென்பார் அயராஅன்பின் அரன்கழல் செலுமே என்றார்.

இஃதென் சொல்லியவாறோ வெனின்:— உயிரை இன்றி யமையாத கண் உருவத்தைக் காணுங்கால் உயிரினதுணர்வு கண் ணொளி யெனத்தானென வேற்றுமையின்றி உடனாய் விரவிநின்று கண்ணுக்குக் காட்டியவதனைக் கண் கண்ட தென்றுங் கண்ணை யதிட்டித்து நின்ற உயிர் கண்டதென்றும் பகுத்தறிய வாராது இரண்டன் காட்சியும் ஒன்றனை யொன்றுவிடாது அத்துவிதமாகி ஒருங்கே நிகழுமாறுபோல, முதல்வனை இன்றியமையாத உயிர் ஒரு விடயத்தை அறியுங்கால் அம்முதல்வனது சிற்சத்தி ஆன்ம சிற்சத்தியெனத் தானென வேறின்றி உடனாய் விரவிநிற்ப முதல் வனும் அவ்வாறு விரவி நின்று ஆன்மாவிற்கு அறிவித்த தொன் றனை அவ்வான்மா அறிந்த தென்றும், அதனையதிட்டித்து நின்ற தலைன் அறிந்தானென்றும் பகுத்தறிய வாராது இருவகை யறிவும் ஒன்றனையொன்று விடாது அத்துவிதமாய் ஒருங்கே நிகழுமாறு செய்துவரும் இவ்வுபகாரம் பெத்தமுத்தி இரண்டினும் ஒரு பெற் றித்தா யுண்மையின், ஏகனாகி இறைபணி நிற்கும் உயிர் முதல் வன் அங்ஙனம் அத்துவிதமாய் உபகரித்து நிற்கும் உரிமையை நோக்குமாயின் நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அப்பொருட் கட் செல்லு மிச்சை அடங்காது மீதூரு மாகலின் அவ்வழி அவ் விச்சையேதானாக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை அநு பவிக்கப்படுமென அறிவிச்சை செயல்கள் மூன்றுங் கண்டு விட யிக்குமாறுணர்த்தி அதீதநிலை இயல்பு கூறியவாறு மெனக. அத் துவிதமாவது பேதப்பொரு ளிரண்டும் தம்முள் அபேதமாதற் குரிய சம்பந்த விசேடம். இக்கருத்தே பற்றி "அறிவொளி போற் பிறிவரு மத்துவிதம்" என்றார் புடைநூலாசிரியரும். அங்

கியும் ஒன்றிற் றங்கிநின்றல்லது தன்றொழி னடத்தா தாகலின், அதுபோல முதல்வனும் உயிரை யதிட்டித்து நின்று எத்தொழிலுஞ் செய்வனென் றுணர்க. உயிர் ஒன்றனை யறிதல் முதல்வன் உடனின் றறிதலையின்றி அறிவித்தல் மாத்திரையான் அமையாதென்பது "தொண்டனே னினையுமா நினையே" "விரும்புமா விரும்பே" "தொடருமா தொடரே" "நுகருமா நுகரே" என்றிவ்வாறு முத்திநிலை பற்றியோதிய திருவாக்குக் களானுமறிக. இவ்வியல்பு நோக்கியன்றே "அறிவானுந் தானே யறிவிப்பான் றானே" என்றோதிய அம்மை "அறிவாயறிகின்றான் றானே" எனவுமோதியதூஉ மென்க. முன்னறிதல் அறிவித்தற் பொருட்டெனவும் பின்னறிவாயறிதல் விடயத்தில் அழுந்துவித்தற் பொருட்டெனவுங் கொள்க. இதனை ஈண்டு வைத்தார் அத்துவித நிலை இனிது விளங்குதற்கு.

இவ்வாறன்றிக் காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற் காணவுள்ளத்தைக் கண்டு காட்டலென்பதற்குக் காட்டும் உபகார முணர்த்தன் மாத்திரையே கருத்தென் றுரைப்பாரு முளர். இதனைக் கண்ணழித் துரைப்புழி அவனும் அவற்றது விடயத்தை யுணருமெனக் காணும் உபகாரமாத்திரையே எடுத்துக்கொண்டுரைத்த ஆசிரியர் கருத்தன்றாகலானும், காணுமுபகாரங் காட்டு முபகாரத்தின் பின்னர்த்தாய் நிகழுமென்பது உணர்ந்து கோடற் பொருட்டு அதுவும் உடன் கூறப்பட்டதன்றி வேறின்மையானும், அவ்வாறன்றென்பார்க்கு ஐந்தாஞ் சூத்திரத்துட் பெறப்பட்டதனை ஈண்டுக் கூறுதல் புனருத்தியாய் முடியு மாகலானும், அவருரைப்பன வெல்லாம் போலியுரையென் றொழிக. அற்றேல், முதனூலிற் பதினொராஞ்சூத்திரத்துட் காட்டுவானென்பதுமாத்திரையேயன்றிக் காண்பானென்பதுகூறிற்றில்லையா லெனின்;— அறியாது வினாயினாய்: ஆண்டுக்காட்டுவானு மென்ற உம்மை காண்பானுமா மென எதிரது தழீஇ நிற்றலின், கூறாமை யாண்டையதென்றொழிக. அவ்வும்மைக்குப் பொருள் காண மாட்டாதார் பாடம் வேறாக ஓதுப.

விளக்கம்.

(இச்சூத்திரத்தின் பொழிப்புரை.) கண்ணானது உருவத்தைக் காண வேண்டுமாயின் உயிர் காட்டினாலன்றிக் காணமாட்டாது. உயிர் காட்டக் காணும் தன்மையுடைய அக்கண் உருவத்தைக் காண்பதற்கும் அக்கண்

ணேடு உயிர்கலந்து நின்று காணவேண்டும். அவ்வாறு கண்ணுக்கு உருவத்தைக் காணும்படி காட்டியும் அக்கண்ணேடு கலந்து நின்று அவ்வுருவத்தைக் கண்டும் வருகின்ற உயிர்போல, அறிவிக்க அறியுந்தன்மை யுடைய உயிருக்குப் பொருளையறியும்படி முதல்வன் அவ்வுயிரோடு கலந்து நின்று அறிவித்தும் அறிந்தும் வருவன். ஆதலால் கலந்து நிற்கும் அவ்வத்துவித நிலையை மறவாது உறுதியாகப்பற்றி அன்பு செய்யவேண்டும். அவ்வன்பினாலேயே அம்முதல்வன் திருவடியாகிய சிவானந்த அநுபூதியை உயிர் கூடும் எ—று.

இச்சூத்திரத்தில், கண் உவமை. உயிர் உவமேயம். உவமையாகிய கண்ணுக்குக் கூறிய காணும் என்னும் அடை, உள்ளத்தை என்னும் உயிருடன் கூட்டிக்காணும் உள்ளத்தை எனவும், உயிராகிய உவமேயத்திற்குக் கூறிய கண்டு என்னுந் தொழில், உவமையாகிய கண்ணுக்குக், காட்டிஎன்பதன் பின்னுகக் கூட்டிக் காட்டிக்காணு மெனவும் உரைக்கப்பட்டன. கண்ணுடன் சேர்க்கப்பட்ட காண என்பது காட்டி என்பதன் முன்னும் பின்னும் கூட்டப்பட்டது.

இவ்வாறு சூத்திரத்தை விரித்துக் கூறுமிடத்து—காணுங் கண்ணுக்குக் காணக்காட்டிக் காணும் உளம்போல், காணும் உள்ளத்தைக் காணக் காட்டிக் காண்டலின் அயரா அன்பின் அரன் கழல் செலுமேஎன விரியும். சூத்திரதில் காட்டும் என்பது காட்டி என்னும் பொருளில் நின்றது.

காட்டிக் கண்டு என்றிருக்க வேண்டியதைக் கண்டு காட்டி என மாற்றிவைத் துரைக்கபபட்டது. இது எதுபோல எனின், நாலடியார் சினமின்மை ௬-வது செய்யுளில் வெகுளார் வியர்த்து விழுமியோ ரென்றிருக்கவேண்டியதை ''வியர்த்து வெகுளார்'' என்று கூறியதுபோலாம்.

இவ்வாறு மாற்றிவைக்கப்பட்ட தென்னுங் கருத்துப்பற்றியே இந்நூலை விரித்துக் கூறப்புகுந்த வழிநூலாசிரியர் சிவஞான சித்தியார் ௧௧—ம் சூ-ம் ௧-வது செய்யுளில் ''காட்டிக் கண்டிடுமாபோலக் காட்டிக் கண்டிடுவன்'' என ஓதினர்.

அயரா அன்பின் என்றவிடத்து எதனை அயராமை என்னும் வினை நிகழுமாதலின் அயராமைக்குச் செயப்படு பொருளாகிய அத்துவித நிலையை வருவித்து அவ்வத்துவித நிலையை மறவாது. என உரை செய்யப்பட்டது.

அயரா அன்பென்றது அயராமையாலாகிய அன்பென விரியும். விரியவே, அயராமை காரணம். அன்பு காரியம். காரணகாரியமாயுள்ள இவ்விரு சொற்களும் ஒரு தொடராய் நின்றது. எதுபோல எனின், ''ஆறுசென்ற வியர்'' என்பதுபோலாம். ஆறு என்பது வழி, வியர் என்பது வெயர்வை. ஆகவே, ஆறு சென்றவியர் என்பதற்கு வழி நடத்தலாலுண்டாகிய வெயர்

வை என்பது பொருளாம். இப்பொருளில் வழி நடத்தல் காரணமும் வெயர்வை காரியமுமாதல் அறிக. அயராமை காரணமும் அன்பு காரியமுமாம் என்பதனை வழிநூலாசிரியர் சிவஞான சித்தியார் கக-ம் சூ-ம் க-வது செய்யுளில் "இத்தை ஆயும் அறிவுடையனாய் அன்பு செய்ய" என்றதனானும் அறிக. ஆயும் அறிவுடைமை என்பது அயராமையைக் குறித்தது. அது காரணம். அன்புசெய்தல் காரியம்.

உள்ளத்திற்கு என்று நான்காம் வேற்றுமை யுருபேற்று நிற்கவேண்டியது; உள்ளத்தையென இரண்டாம் வேற்றுமை உருபேற்று நின்றது. இவ்வாறு நிற்றல் உருபுமயக்கம்.

அறிவின் தொழிலாகிய அயராமையும் இச்சையின் தொழிலாகிய அன்பும் செயலின் தொழிலாகிய அரன்கழல் செல்லுதலும் முறையே காரண காரியங்களாம. எவவாறெனின், அயராமை காரணம் அன்புகாரியம். அவ்வன்பு காரணம் அரன்கழல் செல்லுதல் காரியம். ஆகவே, அயராமையால் அன்பும் அன்பால் அரன்கழல் செல்லுதலும் நிகழும் என்றவாறாயிற்று. இவ்வாறு அரன்கழல் செல்லுதலாகிய அவ்வொரு பொருளின் மேல் அறிவு இச்சை செயல் என்னும் மூன்றின் தொழில்களும் உடனாய் நிகழும் என்று கூறவேண்டி அயரா அன்பின் அரன் கழல் செலுமே என்றார்.

இச்சூத்திரம் என்னசொல்லிற்றோ எனின்:—கண்ணானது உயிரினுடைய அறிவின் கலப்பின்றி உருவத்தைக் காணமாட்டாது; உயிரின் அறிவும் கண்ணொளியுங் கலந்து உருவத்தைக் காணுங்கால் உயிரின் அறிவு தன்னறிவென்றும் கண்ணொளி என்றும் பிரிப்பின்றி நிற்கும்; நிற்க உயிரால் கண்கண்ட அவ்வுருவத்தைக் கண் கண்டதென்றும் கண்ணை இடமாகக் கொண்டு நின்றஉயிர் கண்டதென்றும் பிரித்தறிய வாராது கண்ணினுடைய காணுதற் றொழிலும் உயிரினுடைய காணுதற் றொழிலும் ஒன்றனை யொன்று விடாது அத்துவிதமாகி இரண்டும் ஒன்றாகவே நிகழும். அதுபோல, முதல்வனை யின்றித் தனித்து நில்லாதஉயிர் ஒரு பொருளை அறியுங்கால் முதல்வனுடைய சிற்சத்தியானது உயிரின் அறிவோடு கலந்து முதல்வனாகிய தன்னறிவென்றும் உயிரின் அறிவென்றும் பிரிப்பின்றி உடனாய் நிற்ப முதல்வனும் உயிருடன் அவ்வாறு கலந்து நின்று உயிருக்கு அறிவித்த ஒரு பொருளை அவ்வான்மா அறிந்ததென்றும் அவ்வான்மாவை இடமாகக் கொண்டு நின்ற தான் அறிந்ததென்றும் பிரித்தறிய வாராது உயிரின் அறிவும் முதல்வன் அறிவும் ஒன்றனை யொன்று விடாது அத்துவிதமாகி இரண்டும் ஒன்றாகவே நிகழும். இவ்வாறு கலந்து நின்று காட்டியுங் கண்டும் செய்துவரும் இவ்வுபகாரம் பெத்த முத்தி இரண்டினும் ஒரு தன்மையாய் நிகழும். ஆதலால் மேலைச் சூத்திரத்திற் கூறியவாறு எசனாகி இறைபணி நிற்கும் உயிர், முதல்வன் அத்துவிதமாய்க் கலந்து நின்று

காட்டியுங் கண்டும் உபகரித்து வரும் உரிமையை நோக்குமாயின், நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அம்முதல்வனிடத்துச் செல்லும் இச்சை அடங்காது அதிகப்படும். படவே அவ்விச்சையே பேரின்பமாக விளங்கித்தோன்றும். அவ்வாறு விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை உயிர் அநுபவித்தல் கூடும். கூடவே, அத்துவிதமாய் நிற்கும் உரிமையை நோக்குதலால் அறிவின் தொழிலும் இச்சை அதிகப்படலால் இச்சையின் றொழிலும் பேரானந்தத்தை அநுபவித்தலால் செயலாகிய கிரியாசத்தியின தொழிலும் நிகழுமென்பது பெறப்படும். படவே, அறிவு இச்சை செயல்கள் மூன்றும் முத்திநிலையில் தொழிற்படா தென்ற வாதிகளுக்குத் தொழிற்படு மென்றுகூறி, தொழிற்படினும் தொழிற் பட்டதாகப் பிரித்தறிய முடியாத நின்மல துரியாதீத நிலையின் இயல்பு கூறியவாறும்.

அத்துவிதமாவது பேதப்பொருள் இரண்டும் தம்முள் அபேதமாதற்குரிய சம்பந்தவிசேடம். சம்பந்தமாவது சையோகம், சையுத்த சமவாயம், சையுத்தசமவேத சமவாயம், சமவாயம், சமவேதசமவாயம், விசேடண விசேடியத்தன்மை என அறுவகைப்படும். அவற்றுள், கண்ணினால் குடத்தைக் காணுமிடத்துக் கண்ணிற்குங் குடத்திற்கும் உள்ள சம்பந்தம் சையோகம். கண்ணினால் குட உருவத்தைக் காணுமிடத்துச் சையோகமான குடம் சையுத்தமாய், அக்குடத்துக்கும் குட உருவத்துக்கும் சமவாயசம்பந்த மாதலால் சையுத்த சமவாயம். கண்ணினால் குட உருவத்தின் தன்மையாகிய சாதியைக் காணுமிடத்துக் குடம் சையுத்தமும், அக்குடத்தின் உருவம் சமவாயத்தில் உள்ள சமவேதமும், உருவத்திற்கும் உருவத் தன்மைக்கும் சமவாயமும் ஆதலால் சையுத்த சமவேத சமவாயம். செவிக்கும் சத்தத்துக்கும் உளதாய சம்பந்தம் சமவாயம். ஓசைத்தன்மையைச் செவி உணருங்கால் ஓசை சமவாயத்திலுள்ள சமவேதமும், ஓசைத் தன்மைக்கும் ஓசைக்குஞ் சமவாயமும் ஆதலால் சமவேத சமவாயம். ஒரு இடத்தில் ஒருபொருள் இல்லையென்று அறியுமிடத்து இடத்தை முன்னரும் இன்மையைப் பின்னருமாகவும், இன்மையை முன்னரும் இடத்தைப் பின்னருமாகவும் கூறப்படும். உதாரணம், வீட்டில் குடமில்லை குடமில்லது இவ்வீடு என்பனவாம். முன்னே உள்ளது விசேடணமும் பின்னே உள்ளது விசேடியமுமாம். இரண்டிடத்துங் காணப்படுவது வீடுதான். ஆதலால் வீட்டில் குடமில்லையென்றவிடத்து வீடுவிசேடணமும் குடமின்மை விசேடியமுமாகி விசேடணத்தன்மைச் சம்பந்தமும், குடமில்லது வீடு என்ற விடத்து வீடு விசேடியமும் குடமின்மை விசேடணமுமாகி விசேடியத்தன்மைச் சம்பந்தமுமாம். இவ்வாறுகூறுவர் நையாயிகர். இச்சம்பந்தம் ஆறும் இந்திரியத்திற்கும் விடயத்திற்கும் உள்ள சம்பந்தமேயன்றிப் பிறிதில்லை. ஆதலால் இச்சம்பந்தங்கள் உயிருக்குஞ் சிவனுக்கும் உள்ள இருபொருள்களின் சம்பந்தத்திற்குப் பொருந்தாவாம்.

பயனியல் பதினோராஞ் சூத்திரம்.

இனிப் பொருள்களின் சம்பந்தம் ஐக்கியம், தாதான்மியம், சமவாயம், சையோகம், சொரூபம் என ஐவகைப்படும். அவற்றுள் ஆற்று நீருங் கடல் நீரும் சேர்ந்தாற்போல்வன ஐக்கியம். குணத்திற்குங் குணிக்கும் உளதாய சம்பந்தம் சமவாயம். விரலும் விரலும் சேர்ந்தாற்போல்வன சையோகம். அக்கினிக்குச் சொரூபம் செம்மை சூரியனுக்குஞ் சொரூபம் செம்மை. ஆதலால் அக்கினியுஞ் சூரியனும் சொரூபத்தால் சம்பந்தம் உடையன என்பது போல்வன சொரூபமெனப்படும். இவற்றுள், சிவசீவர்களின் சம்பந்தத்தை ஐக்கியம் என்று கூறலாமோ எனின், ஐக்கியத்தில் ஒருபொருளே யாதலால் ஒன்று என்றே கூறி இருக்கலாம்; அத்துவிதம் என்று உய்த்துணரவைக்கவேண்டாம்: அன்றியும் ஒருபொருளாயின் அநுபவிக்கும் ஆன்மா முத்தியில் இல்லையென்றாகி முத்தியே இல்லையெனப்படும்: ஆதலால் ஐக்கியமென்றல் பொருந்தாது. தாதான்மியத்தின் வேறாக நையாயிகர் கூறும் சமவாயம் என்பதில்லாமையால், சமவாயமே தாதான்மிய மெனப்படும். ஆதலால் குணத்திற்கும் குணிக்கும் உள்ள சமவாய சம்பந்தமே அச் சம்பந்தமென்று கூறலாமோ எனின், முதல்வனைப்போல ஆன்மாவுங் குணிபொருளேயன்றி ஆன்மா முதல்வனுடைய குணமன்று. ஆதலால் அதுவும் பொருந்தாது. விரலும் விரலுஞ் சேர்ந்தாற்போலுள்ள சையோக சம்பந்தமே அச் சம்பந்தம் என்று கூறலாமோ எனின், கூறுபட்ட பொருள்களுக்கேயன்றி வியாபகப் பொருள்கட்குச் சையோகம் இல்லை, அன்றியும் ஒருபக்கங்கூடியும் மற்றொருபக்கங் கூடாத சையோகம் வியாபகப் பொருட்குக்கூடாது: ஆதலால் அதுவும் பொருந்தாது. ஆன்மாவும் சித்சொரூபம் சிவமும் சித்சொரூபம் ஆதலால் சொரூபசம்பந்தமே அத்துவித சம்பந்தமென்று கூறலாமோ எனின், அது நீயாகின்றாய் என்னும் மகாவாக்கியப் பொருளில் ஆகின்றாய் என்னுங் கலத்தலைச் சொரூப சம்பந்தம் வலியுறுத்தாது: அன்றியும் சொரூபத்தினால் சம்பந்தமிருந்தது கொண்டு சிவானந்தத்தை அநுபவித்தலுங் கூடாது: கலந்துநின்றாலே சிவானந்தத்தை அநுபவித்தல் கூடும்: ஆதலால் அதுவும் பொருந்தாது.

இனிச் சிவன் சீவனென்னும் இருபொருள்களின் சம்பந்தத்தை எந்தச் சம்பந்தமாகக் கூறலாமெனின், ஒருபொருள் குணமென்றுங் குணியென்றும் இருதன்மைப் பட்டுநிற்றலும் இருபொருள் பிரிக்கமுடியாத கலப்பினால் ஒருதன்மைப்பட்டு நிற்றலும் எனத் தாதான்மியம் இருவகைப்படும். உதாரணம்—அக்கினி பொருளால் ஒன்றேயாயினும் அக்கினியென்றும் சூடு என்றும் இருதன்மைப்பட்டு நிற்றலும், கண்ணொளியும் ஆன்மாவின் அறிவும் பொருளால் இரண்டேயாயினும் பிரிக்க முடியாமையால் ஒருதன்மைப்பட்டு நிற்றலுமாம். அவ்விருவகைத் தாதான்மியத்துள் குண குணியின் சம்பந்தம் தாதான்மியமெனவும் இருபொருள்களின் சம்பந்தம் அத்துவிதமெனவும் வழங்கப்படும். ஆதலால் முற்றறிவும் முற்றுத்தொழிலுமுடைய சிவமும், சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய ஆன்மாவும், வேறு

வேறு அறிவுந் தொழிலுமுடைய பேதப்பொருள்களாய்ப் பிரிக்கமுடியாது கலந்துநிற்றல்பற்றிப் பேதப்பொருள்கள் இரண்டும் தம்முள் அபேதமாதற்குரிய சம்பந்தவிசேடம் அத்துவிதம் என அறிக. இதுவே ஆசிரியர் கருத்தென்பது இந்நூல் இரண்டாஞ் சூத்திரம் முதலதிகரணத்து எதுவில் "அத்துவிதமென்ற சொல்லே அந்நிய நாத்தியை யுணாத்துமாயிட்டு" என்றதனாலறிக. இக்கருத்தேபற்றிச் சிவப்பிரகாசம் பாயிரம் எ-வது செய்யுளில் "அறிவொளிபோற் பிரிவரும் அத்துவிதம்" என்றார் புடைநூலாசிரியரும்.

இனி அத்துவிதமென்னுஞ் சொல்லில் முன்னின்ற அகரம் அன்மை இன்மை மறுதலையென்னும் மூன்றுபொருளையும் உணர்த்துமேனும் எண்ணுப்பெயர் மேல்வந்த அகரம் இன்மைப்பொருளையேனும் மறுதலைப் பொருளையேனும் உணர்த்துதல் வழக்கின்கண் இல்லாமையால் அன்மைப் பொருளையே உணர்த்தும். இதனை இந்நூல் இரண்டாஞ்சூத்திரம் முதலதிகரணத்தும் சிவஞானசித்தியார் ஆறாஞ்சூத்திரம் ஒன்பதாவது செய்யுளின் விசேட உரையிலும் விரித்துக் கூறியிருக்கின்றாம். ஆதலின் அவ்விடங்களிற் காண்க.

அச்கினியானது சூக்குமமாக எங்கும் இருப்பினும் அது தன் தொழிலைச் செய்யவேண்டின் விறகுமுதலிய யாதானும் ஒன்றில் தங்கிநின்றல்லது சுடுதல்முதலிய தன்தொழிலை நடத்தாது. அதுபோல, முதல்வனும் எங்கும் வியாபகமாக இருப்பினும் தொழில்செய்யுமிடத்து உயிரினிடமாக நின்றே எத்தொழிலையும் செய்வனென்று உணர்க. உயிர் ஒன்றனை யறிய வேண்டுமாயின் முதல்வன் உடனின்று அறிந்தாலன்றி அவன் அறிவித்தல் மாத்திரையானே அறிய முடியாது. ஆகவே, முதல்வன் றொழிலுக்கு உயிரும் உயிரின் றொழிலுக்கு முதல்வனும் வேண்டப்பட்டு இருபொருளும் பிரிக்கமுடியாத அத்துவிதமாய் நிற்குமென்பது பெறப்படும். அறிவித்தல் காட்டும் உபகாரம். அறிதல் காணும் உபகாரம். காட்டும் உபகாரத்தால் இன்னதுசெய்யலாமென்று தோன்றும். காணும் உபகாரத்தால் அவ்வாறு செய்தல்கூடும். முதல்வனுடைய காணும் உபகாரத்தையின்றி உயிர் ஒன்றனையும் காணமுடியாதென்பதைத் திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா கோயில் பதிகம் கக, க0, கூ, எ-வது செய்யுட்களில் "தொண்டனேன் நினையுமா நினையே" "விரும்புமா விரும்பே" "தொடருமா தொடரே" "நுகருமா நுகரே" என்ற இவ்வாறு முத்திநிலைபற்றி ஓதிய திருவாக்குக்களாலும் அறிக. இவ்வத்துவித இயல்புநோக்கியல்லவா காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி உ0-வது செய்யுளில் "அறிவானும் தானே அறிவிப்பான் தானே" என்று ஓதிப் பின்னர் "அறிவாய் அறிகின்றான்றானே" யெனவும் ஓதினர். அச்செய்யுளில் முதலாவது அறிவான் என்று கூறியது உயிருக்கு அறிவித்தற்பொருட்டு அறிவிக்கவேண்டியதைத் தனித்து அறிதல்.

பயனியல் பதினொராஞ்சூத்திரம்.

பின்னர் அறிவாய் அறிகின்ருன் என்றது அறிவித்தபொருளில் உயிர் அழுந்தி அனுபவிக்கும்படி செய்தற்பொருட்டு உயிர்அறிவோடு கூடி நின்று அறிதல் எனக்கொள்க. இவ்விரண்டனுள் தானுய் நிற்கும் நிலை பற்றிச் செய்யுங் காட்டும்உபகாரம் முன்னையதெனவும் உயிரோடுகூடி அது வாய்நிற்கு நிலைபற்றிச் செய்யும் காணும்உபகாரம் பின்னைய தெனவும் அறிக. அத்துவிதநிலை இனிது விளங்குவதற்காகவே காணும் உபகாரத்தை முத்திநிலை கூறும் இச் சூத்திரத்தில் வைத்தார். அதாவது பெத்தத்தி னும் அத்துவிதமாய் நிற்பினும் விளங்காது முத்திநிலையில் நன்குவிளங்கும் என்பதாம்.

இச்சூத்திரத்திற்கு இவ்வாறு காணும் உபகாரம் உணர்த்துதல் என்று கூருமல் 'காணுங் கண்ணுக்குக்காட்டும் உளம்போல் காண உள்ளத்தைக் காட்டிக் காண்டல்' என்பதற்குக் காட்டும் உபகாரம் மட்டுந்தான் கருத் தென்று உரைப்பாருமுளர்; அவ்வாறு கூறுதல் ஆசிரியர் கருத்தன்று. எதனுலெனின், சூத்திரத்தைப் பதச்சேதஞ் செய்து முதலதிகாரணத்து மேற்கோளில் 'அவனும் அவற்றது விடயத்தை உணரும்' எனக் காணும் உபகாரம் மட்டுமே எடுத்துக்கொண்டு உரைத்திருத்தலினுல் என்க. அவ் வாருயின், சூத்திரத்தில் கண்டு என்றுயட்டும் கூருமல் காட்டிக்காண்டல் எனக் காட்டும் உபகாரத்தையும் சேர்த்துக் கூறிய கருத்தென்னை யெனின், காட்டும் உபகாரம் முன்னர் நிகழ்ந்து அதன் பின்னர்க் காணும் உபகாரம் நிகழுமென்பதை அறிந்துகொள்ளுதற் பொருட்டுக் காட்டும் உபகாரமும் உடன் கூறப்பட்டதன்றி வேறன்று. இவ்வாறு கொள்ளவில்லை யானுல் ஐந்தாஞ் சூத்திரத்திற் கூறப்பட்ட காட்டும் உபகாரத்தை இவ்விடத்துங் கூறுதல் கூறியது கூறலாய் முடியும். ஆதலால் இச்சூத்திரத்திற்குக் காட் டும் உபகாரம் உணர்த்துதல் கருத்தென்றல் பொருந்தாது; அவ்வாருயினும், வடமொழிச் சிவஞானபோதம் பதினொரஞ் சூத்திரத்தில் காட்டும் உப கார மாத்திரையேயன்றிக் காணும் உபகாரம் கூறவில்லையே எனின், அந் நூலில் காட்டுவானும் என்றதிலுள்ள உம்மை காண்பானும் என எதிரது தழுவி நிற்றலால் காணும் உபகாரங் கூறவில்லை யென்றல் எவ்வாறு பொருந்தும். அவ்வும்மைக்குப் பொருள்காண மாட்டாதார் பாடம் வேருக ஓதுவர்.

சிற்றுரை.

இதனுள், காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் காண உள்ளத்தைக் காட்டிக் காண்டல் என்றது ஓரதிகரணம்; அதனை அயரா அன்பின் அரன்கழல் செலுமே என்றது ஓர் அதிகரணம்; ஆக இரண்டதிகாரணத்தது இச்சூத்திர மென்றுணர்க.

விளக்கம்.

வெ — டை.

முதல் அதிகரணம்.

முதல்வன் உயிருடன் அத்துவிதமாய் நின்று
காணும் உபகாரத்தைச்
செய்வன் எனக்கூறும்
மேற்கோள்.

ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை யுணருமென்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், முதல்வன் உயிர்க்குக் காட்டும் உபகாரமாத்திரையே யுள்ள தென்னும் வாதிகளை நோக்கி அத்துவித நிலை உணர்த்துதற்கு எடுத்துக்கொண்ட சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

(இ—ள்.) முதல்வனும் உயிர்களா லுணரப்படும் விடயத்தை உடனின் றுணருவன் எ—று.

உம்மை உயிர்களுணர்தலே யன்றியென இறந்தது தழீஇயிற்று. இஃதறியாதார் ஈண்டுணருமென்றது அறிவித்தற் கேதுவாயறியு மென்றுரைப்பாரு முளர். அவ்வா றுரைப்பிற் சித்த சாதனமா மாகலானும், ஈண்டைக்கியைபின்மையானும், அது போலி என்றொழிக. அவையே தானேயாய் எனவும் தாந்த முணர்வின் றமியருளெனவும் மேற்பொதுவகையாற் கூறிப்போந்த அத்துவிதத்தை ஈண்டுக் காணும் உபகாரத்தின் வைத்துணர்த்தி இனிது விளக்கியவாறு.

விளக்கம்.

இம்மேற்கோள் காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் காண உள்ளத்தைக் காட்டிக் காண்டல் என்னுஞ் சூத்திரத்தின் முதற் கூற்றைப் பதச்சேதஞ் செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்னசொல்லிற்றோ எனின், முதல்வனிடத்தில் உயிர்க்கு அறிவித்தலாகிய காட்டும் உபகாரம் மட்டுந்தான் உள்ளது; அன்றி உயிரின் பொருட்டு அறிதலாகிய காணும் உபகாரம் இல்லையென்னும்வாதிகளை நோக்கி அத்துவித நிலையை அறிவித்தற் பொருட்டு எடுத்துக்கொண்டசூத்திரத்தின் முதற்கூற்றைப் பதச்சேதஞ் செய்துகாணும் உபகாரமும் உண்டென்று கூறியவாறாம்.

இவ்வதிகாரணத்தில், முதல்வனிடத்திற் காணும் உபகாரம் உண்டோ, இல்லையோ என்பது ஐயப்பாடு. இல்லையென்பது பிறர்பக்கம்.

(இம்மேற்கோளின் பொருள்.) இவ்விரண் டதிகாரணங்களுள் இம் முதலதிகாரணத்து முதல்வனும் உயிர்களாலுணரப்பட்ட விடயத்தை அவ் வுயிர்களோடு உடனின்று உணருவன் எ-று.

விடயமாவது பெத்தத்தில் உலகப்பொருளும் முத்தியில் சிவமுமாம்.

அவனும் என்றதிலுள்ள உம்மை உயிர்கள் உணர்தலேயன்றி முதல் வனும் உணர்வன் என்னும் பொருளைக் குறித்தமையால் இறந்தது தழு விற்று.

அவ்வும்மையினால் உயிர் உணரும் விடயத்தை உயிரோடு உடனின்று இறைவன் உணர்தல் பெறப்படுவதை அறியாதார் இவ்விடத்தில் உணரும் என்றதற்கு உயிர்க்கு அறிவித்தற் பொருட்டு அறிவிக்க வேண்டுவதை அறியும் என்று உரைப்பர். அவ்வாறு உரைப்பின் அறிவித்தற் பொருட்டு அறிதல் மேல் ஐந்தாஞ் சூத்திரத்துட் கூறப்பட்டிருத்தலால் முன் சித்தித் ததைப் பின்னருஞ் சாதிப்பதாகிய சித்தசாதன மென்னுங் குற்றமாம். அன்றியும் அத்துவித நிலை கூறும் இவ்விடத்திற்கு வேறாய் நிற்றல் பற்றி அறிவதாகிய காட்டும் உபகாரத்தைக் கூறுதல் பொருத்தமும் அன்று; உட னாய் நின்று அறிவதாகிய காணும் உபகாரம் கூறுதலே பொருத்தமாகும். ஆதலால் காட்டும் உபகாரங் கூறுதல்என்ற அவ்வுரை பொருந்தாது.

அத்துவிதநிலை இரண்டாஞ் சூத்திரத்தில அவையே தானேயாய் எனவும், ஐந்தாஞ் சூத்திரத்தில் தாம் தம் உணர்வின் தமி அருள் எனவும் கூறப்பட்டிருப்பினும், உயிரோடு கலந்து நிற்றலை அநுபவத்தில் வைத்து விளக்காமையால் அவ்விரு சூத்திரங்களினும் அத்துவித நிலை பொதுவாகக் கூறப் பட்டதாகும். அவ்வாறு பொதுவாகக் கூறிய அத்துவிதத்தை இச்சூத் திரத்தில் காணும் உபகாரத்தின் வைத்துச் சிறப்பாக உணர்த்தி இனிது விளக்கியவாறு அறிக.

முதல்வன் காணும உபகாரத்தைச் செய்வன்
என்பதற்குக் காட்டும்

ஏது.

இவ்வான்மாக்கள் அவனையின்றி யமைந்து ஒன்றையும் விடயியாவாகலான்.

சிற்றுரை.

எ-து ஏது எ-னின், கண் சடமாகலானும் காண்டற்ப[illegible] உயிர்க்கே யாகலானும் [illegible]

டல் பெறப்படும். கண்போல் உயிர் சடமன்மையானும் உணர்தற் பயன் உயிர்க்கே யாகலானும் அதனை எடுத்துக்காட்டி அவனும் அவற்றது விடயத்தை யுணரு மென்றல் அமையா தென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) விளக்கொளி கண்ணொளியோடு கலந்து கண்ணொளியோடு கூட உருவத்திலுங் கலந்தாலன்றி அஃதவ் வுருவத்தைக் காண்டலின் றாயவாறுபோல, அறிவிக்க அறியும் இயல்பின வாய உயிர்களும் முதல்வன துணர்வு தம்மோடு விரவிநின்று தம்மோடு கூடச்சென்று விடயத்திலும் விரவி நின்றால் அறிவு விளங்கி அதனை அறியும் இயல்பினவன்றித் தனித்தமையவுமாட்டா தனித் தொன்றனை விடயிக்கவு மாட்டாவாகலான், அறிவு விளங்குதன் மாத்திரைக்கே யன்றி விடயத்தைப் பற்றுதற்கண்ணும் முதல்வன் உடனின்றறிதல் ஒருதலையான் வேண்டப் படுதலான் ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை யுணருமென மேற் கொண்டது எ-று.

அவனையின்றி யமையாமையிற் காட்டு முபகாரம் விளங்கினாற்போல அவனையின்றி யொன்றையும் விடயியாமையிற் காணு முபகாரம் இனிது விளங்குமென்பார் அவனையின்றி யமைந்தொன்றையும் விடயியா வாகலானென்றார். அமைந்து விடயியா வென்றதனைக் "கந்தித்துச் சுழலும்" என்றாற்போலக் கொள்க. உம்மை முற்றும்மை.

விடயியா என்றது பெயரடியிற் பிறந்த எதிர்மறைவினை. "எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றை யறிந்தியற்றி யிடாவுயிர்க ளீசன் றானுஞ்—செவ்விதினி னுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப—னிவ்வுயிர்க டோற்றும்போ தவனையின்றித் தோற்றா விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு—மவ்வுயிர்போ லின்றிடவ னாதலானு மானடியை யகன்றுநிற்ப தெங்கே யாமே" என வழிநா சிரியர் இதனை விரித்தோதியவாறு முணர்க. எவ்விடத்து மென்றது பெத்தமுத்தி இரண்டினு மென்பதாம். இதனுள், இறையடியையின்றி யமைந்தொன்றை யறிந்தியற்றி யிடாவுயிர்கள் எனவும், ஈசன்றா னெங்குமாய்ச் செறிந்து நிற்பன் எனவுங் கூறியது விடயத்தின் கட்படு நிகழ்ச்சிக் கெனவும், இவ்வுயிர்கடோற்றும் போதவனையின்றித் தோற்றா எனவும், அவ்வுயிர்போ லின்றிடு

வன் எனவுங்கூறியது உயிரின்கட்படு நிகழ்ச்சிக் கெனவுங்கொள்க. அவ்வாறு கொள்ளாக்கால் இருகாற் கூறுதல் புனருத்தியாய் முடியுமென்றொழிக. இனி விளக்கொளி கலத்தல் ஈரிடத்தும் வேண்டப்படு மென்பதூஉம், "விளக்கொளி கலந்தவற்றை" எ-ம், விளக்கின்சோதி கலந்திடும்" எ-ம், புடைநூலாசிரியர் வகுத்தோதிய வாற்றானுணர்க. அஃதங்ஙனமாக, பாமுத்தியில் உயிர்க்கு விடயமாவது ஒன்றின்மையின் வழிநூலாசிரியர் எவ்விடத்து மென்றது அமையுமா றென்னையெனின்;--அறியாது கூறினாய்; "சுத்தவறு போகத்தைத் துய்த்தலனு" எ-ம், "ஒன்றி நின்றுணரு முண்மை" எ-ம், பிறாண்டும் இவ்வாறே யோதுபவாகலின், பாமுத்தியில் உயிர் சிவானந்தாநுபூதியை விடயித்தலுண் டெனவும், அது முதல்வனையின்றி யாகாமையின் அவனும் ஆண்டவ் வநுபூதியை உடனின்றறிவ னெனவும் உணர்க.

விளக்கம்.

இந்த எது என்னசொல்லிற்றோ எனின், கண் உருவத்தைக் காண்பதற்கு உயிர் அவ்வுருவத்தைக் காணவேண்டுதல் போல உயிர் விடயத்தை அறிவதற்கு முதல்வனும் அவ்விடயத்தை அறிவன் என்று கூறின், கண் அறிவில்லாத சடமாதலானும் கண்டதனாலுண்டாம் பயன் உயிர்க்கேயன்றிக் கண்ணுக்கு இன்மையானும் கண்காணுமிடத்து உயிரும் உடனின்று காண்டல் பெறப்படும். உயிர் கண்போல் சடமன்றி அறிவுடைப் பொருளாதலானும் அறிதலின் பயன் முதல்வனுக்கின்றி உயிர்க்கே யாகலானும் கண்ணுக்காக உயிர் காண்பதனை உவமையாக எடுத்துக்காட்டி அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்று மேற்கோள் கூறியது பொருந்தாதென்பாரை நோக்கிப் பொருந்து மென்று கூறி மேற்கோளை வலியுறுத்திய வாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) விளக்கொளியானது கண்ணொளியோடு கலந்து உருவத்தினுங் கலந்தால் மட்டும் கண் உருவத்தைக் காணும். அவ்வாறு கலவாத விடத்துக் கண் உருவத்தைக் காணமாட்டாது. அதுபோல முதல்வன் அறிவித்தால் அறியுந்தன்மை யுடைய உயிர்களும் முதல்வனுடைய அறிவு உயிராகிய தம்மறிவோடு கலந்து பொருளினுங் கலந்து நின்றால் மட்டும் உயிரின் அறிவுவிளங்கிப் பொருளை அறியும். முதல்வனறிவு உயிரினறிவோடும் பொருளோடுங் கலவாதவிடத்து உயிர்கள் தனித்து ஒன்றை அறியவுமாட்டா தனித்து நின்று ஒருபொருளை அநுபவிக்க மாட்டா. ஆகவே உயிர்கட்கு அறிவு விளங்குதற்கு மட்டுமன்று பொருளைப் பற்றுதற்கும் முதல்வன் உயிருடன் நின்று அறியவேண்டு மென்பது

துணியப்படும். ஆதலால் 'ஈண்டு அவ்னும் அவற்றது விடயத்தை உண ரும்' எனமேற்கோள் கூறியது எ—று.

விளக்கொளியானது கண்ணொளியோடும் உருவத்தோடுங் கலந்தாலன் றிக் கண் உருவத்தைக் காணமாட்டாது என்பது உறுதியாயின், இருளோடு கூடிய கண் ஒளியோடுகூடிய உருவத்தைக்காணும் அநுபவத்தோடு மூன்றுமே யெனின், மூன்றது, எதனுலெனின், கண்ணொளிக்குச் செல்லுந் தன்மை உண்டு ஆதலால் உருவத்தோடு கலந்துள்ள ஒளியுடன் இருளோடு கூடிய கண்ணின் ஒளி சென்று கலந்து உருவத்தை அறியுமாதலால் என்க.

கண்ணொளியும் உயிரின் அறிவும் போல் உயிரும் முதல்வனுங்கலந்து நிற்குமென்றல் பொருந்ாதென்ற வினுவிற்கு அவ்வுவமையில் வைத்து விடைகூருமல் கண்ணொளியையும் விளக்கொளியையும் உவமை எடுத்துக் காட்டி விடைகூறியது எவ்வாறு பொருந்துமெனின், கண்ணொளி உயிரோடுகூடி உயிரின்பொருட்டு அறியுமாதலால் உயிர் முதல்வனுடன் கூடி உயிராகிய தன்பொருட்டு அறிதற்கு உவமையாகாதென்றல் பொருந்துமாயினும், அவ்வுவமையைக் கலந்துநின்று காண்பதற்குமட்டுங் கொண்டு அநுபவிப்பதற்கு வேறு உவமை எடுத்துக் காட்டினுரென அறிக. கண்ணொளியும் விளக்கொளியும் கலந்தவிடத்துக் காணப்பட்டபொருளைக் கண்ணொளி அநுபவிப்பதேயன்றி விளக்கொளி அநுபவிப்பதில்லை. ஆகவே கண்ணொளிக்குக் கருவியாய் இருக்குந்தன்மையும் கருத்தாவாய் இருக்குந்தன்மையும் உண்டு என்றவாருயிற்று. அவ் விருதன்மைகளுள் உயிருடன்கலந்து கருவியாய் இருக்குந்தன்மைபற்றிப் பொருந்ாதென்று வினவியதற்கு விளக்கொளியுடன் கூடிக் கருத்தாவாய் இருக்குந்தன்மைபற்றிப் பொருந்துமெனக் காட்டியவாரும். கருவியாய் இருக்குந்தன்மையில் தனித்துச் செயவில்லை யென்பதனையும் கருத்தாவாய் இருக்குந்தன்மையில் தனக்கு அநுபவம் உண்டென்பதனையும் உணர்த்தினமையறிக.

முதல்வனும் உயிர்கள் அறியும் பொருளை உடனின்று அறிவன் என்ற மேற்கோளை வலியுறுத்துதற்கு இவ்வான்மாக்கள் அவனையின்றி ஒன்றையும் விடயியா ஆகலான் என்று ஏதுக்கூறினுலே போதும்; அவ்வாருகவும், அவனையின்றி அமைந்து ஒன்றையும் விடயியாவாகலான் என அமைதலைச் சேர்த்துக் கூறிய கருத்தென்னையெனின், அமைதலாவது இன்னது செய்யவேண்டுமென்று அறிவு விளங்குதல். அவ்வறிவு விளங்குதலும் அவனையின்றி முடியாதாயின் அறிவிக்கும் காட்டும் உபகாரம முதலவனிடத்தில் உண்டென விளங்கிற்று. அதுபோல அவனையின்றி ஒன்றையும் அநுபவியாமையினுல் முதல்வனிடத்தில் காணும் உபகாரமும் உண்டென்பது இனிது விளங்கும். இவ்விரண்டு உபகாரத்துள காடடும் உபகாரம் மேல் ஐந்தாஞ் சூத்திரத்தால் சாதிக்கப்பட்டுள்ளது. அதனை உவமையாகக் கொண்டு அது

போலக் காணும் உபகாரமும் முதல்வனிடத்தில் உண்டென்பது நன்கு விளங்குமென்று கூறவேண்டி அமைதலைச் சேர்த்து அவனை யின்றி அமைந்தொன்றையும் விடயியாவாகலான் எனக் கூறினர்

அமைந்து விடயியா என்றவிடத்து அமைந்து என்பது வினையெச்சமாயினும் அது வினையெச்சப்பொருளில் நில்லாது அமைந்து விடயியா எனச் செவ்வெண்ணாக நின்றது. ஆதலால் அமைந்து விடயியா என்பதற்கு அமைதலுமில்லை விடயித்தலுமில்லை என உரைசெய்யப்பட்டது. இதனைச் சிவஞானசித்தியார் ௬0-ம் சூ-ம் கூ-வது செய்யுளில் கந்தித்துஞ் சுழல்வித்தும் எனக் கூறவேண்டியதைக் "கந்தித்துச் சுழலும்" எனக் கூறியதுபோலக் கொள்க.

ஒன்றையும் என்றதிலுள்ள உம்மை எஞ்சாமையை உணர்த்தினமையால் முற்றும்மை.

விடயியா என்றது விடயம் என்னும் பெயரும் விடயித்தலாகிய வினையின் எதிர்மறையும் கூடி நிற்றலால் பெயரடியிற் பிறந்த எதிர்மறை வினைச்சொல். அவனல் அமைந்து காணுமென்று உடன்பாட்டுச் சொல்லாற் கூருமல் அவனையின்றி அமையவுமாட்டா காணவுமாட்டா என எதிர்மறைச் சொல்லாற் கூறிய கருத்தென்னையெனின், எதிர்மறையை ஏதுவாய்க் கொண்டுகாட்டும் உபகாரமும் காணும் உபகாரமும் இறைவனிடத்தில் உண்டென நாட்டுதற்கு அவ்வாறு கூறினர். உயிருக்கு அறிவுவிளங்குதலும் பொருளைப் பற்றுதலும் முதல்வனையின்றி நிகழாமை ஏது. இந்த ஏதுவால் முதல்வனிடத்தில் இரண்டு உபகாரங்களும் உண்டு என்பது மேற்கோள். கண்ணொளி விளக்கொளிபோல என்பது உவமை.

இந்த எதிர்மறையை ஏதுவாகவைத்து இரண்டு உபகாரங்களும் முதல்வனிடத்தில் உண்டு என்பதை விரித்துச் சிவஞானசித்தியார் கக-ம் சூ-ம் எ—வது செய்யுளில் வழிநூலாசிரியர் அருளினர்.

அச்செய்யுளில் எவ்விடத்தும் என்றது பெத்த முத்தி இரண்டினும் என்பதாம். இறையடியையின்றி அமைந்து ஒன்றையறிந்து இயற்றியிடா உயிர்கள் எனவும், ஈசன்றான் எங்குமாய்ச் செறிந்து நிற்பன் எனவும் கூறியது பொருளின்கண் முதல்வன் கலந்து நிற்றலை யுணர்த்துதற்கு எனவும், இவ்வுயிர்கள் தோற்றும்போது அவனையின்றித் தோற்ரு எனவும், அவ்வுயிர்போல் நின்றிடுவன் எனவுங் கூறியது உயிரின்கண் கலந்துநிற்றலை உணர்த்துதற்கு எனவும் அறிக. இவ்வாறு கொள்ளாக்கால் முன்கூறியதையே பின்னுங்கூறியதாய் முடியும். உயிருடன் கலந்து நிற்றலால் அறிவு இச்சை செயல்களை விளங்கச்செய்யுங் காட்டும் உபகாரமும் பொருளுடன் கலந்துநிற்றலால் அறிவு இச்சை செயல்களைப் பொருளுடன் கலக்குமாறு செய்யுங்காணும் உபகாரமும் முதல்வனிடத்தில் உண்டு என்பதை அறிக.

இனி உயிருக்கு உவமையாக எடுத்துக்காட்டிய கண்ணொளியிடத்தும் உருவத்தினிடத்தும் விளக்கொளி கலத்தல்வேண்டுமென்பதைச் சிவப்பிரகாசம் ௩-ம் சூ-ம் எ-வது செய்யுளில் ''விளக்கொளி கலந்தவற்றை'' என உருவத்திற் கலத்தலையும், ''கண்ணொளி விளக்கின்சோதி கலந்திடும்'' எனக் கண்ணொளியோடு கலத்தலையும் புடைநூலாசிரியர் பிரித்துக் கூறிய வாற்றாலறிக.

முதல்வனிடத்தில் இரண்டு உபகாரங்களும் உண்டு எனினும், அவ்வுபகாரங்கள் பெத்தநிலையில் மட்டும் உண்டென்று கொள்ளலாமேயன்றிப் பரமுத்தியில் உயிர்க்கு அறியப்படுவதாக ஒன்றும் இல்லாமையால் அங்கும் உண்டென்பது தோன்ற வழிநூலாசிரியர் எவ்விடத்துமென்றது எவ்வாறு பொருந்தும் எனின், உண்மைவிளக்கம் ௰-வது செய்யுளில் "சுத்த அநுபோகத்தைத் துய்த்தல் அணு'' எனவும், சிவப்பிரகாசம் ௯௰-ம் சூ-ம் அ-வது செய்யுளில் ''ஒன்றிநின் றுணரு முண்மை''எனவும், இவ்வாறே பிற இடங்களினும் ஆசிரியர்கள் கூறுவர் ஆதலால் பரமுத்தியில் சிவானந்தத்தை உயிர் அநுபவித்தலுண்டெனவும் அவ்வநுபவம் முதல்வனையின்றி உயிருக்குக் கூடாமையால் முதல்வனும் முத்தியில் அவ்வநுபூதியை உயிரோடு உடனின்று அறிவதாகிய காணும் உபகாரத்தைச் செய்வன் எனவும் அறிக. காட்டும் உபகாரம் அநுபவத்திற்கு முன்னர் நிகழக்கூடியது ஆதலால் அநுபவத்தில் காணும் உபகாரம் ஒன்றுமே நிகழும் என்பதாம்.

இந்த ஏது முதல்வனிடத்தில் காணும் உபகாரம் இல்லை யென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

முதல்வன் காணும் உபகாரத்தைச் செய்வன் என்பதற்குக் காட்டும்

உதாரணம்.

ஐந்தையு மோக்க வுணரா தவற்றுணர்வ
தைந்தும்போ னின்றுணரு மாகலா—னைந்தினையு
மோன்றேன்றுப் பார்த்துணர்வ துள்ளமே யேவ்வுலகு
மோன்றேன்றுப் பார்க்கு முணர்ந்து.

சிற்றுரை.

ஏ-து உ-ம் எ-ஙின். அவனும் அவற்றது விடயத்தை யுடனின்றுணருமாயின் அவற்றோடு அவனிடை யறிதற்கட்படும் வேற்றுமை இல்லைபோலு மென்பாரைநோக்கி வேற்றுமையுங்காட்டி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) உள்ளமே— ஆன்மாவாவது,— அவற்று ஐந்தும் போல்நின்று உணர்வது உணரும் ஆகலான்— சுவை யொளியூ றோசை நாற்றமென்னு மைந்தினும் ஐம்பொறிபோல் அதுவது வாய்ச் செறிந்துநின்று உணர்தற்பாலதனை உணருந்தன்மைத் தாகலான்,—ஐந்தையும் ஒக்க உணராது ஐந்தினையும் ஒன்றுஒன்று ஆப் பார்த்து உணர்வது—அவ்வைம்புலன்களையும் ஒருங்கே யுணா மாட்டாது அவ்வைந்தினையும் ஒரோ வொன்று யறிந் தனுபவிப்ப தாம்,— ஒன்று எவ்வுலகும் ஒன்று உணர்ந்துபார்க்கும்— (அது போலச் சார்ந்ததன் வண்ணமாய்ப் பலதிறப்படுதலின்றி) என்றும் ஒருபெற்றித்தாகிய சிவம் (எல்லாஉயிர்களுடைய) எல்லாவிடயங் களையும் (பொதுவகையான்) ஒருங்கேயுணர்ந்து (அவ்வுயிர்களுட னின்று சிறப்புவகையானு) மறியும் எ-று.

இது சொற்பொருட் பின்வருநிலை. சிவத்தைப் பிரித்தமை யின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. ஒன்றென்பது குறிப்பேது வாய் நின்றபெயர்.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) உள்ளமே அவற்று ஐந்தும்போல் நின்று உணர் வது உணரும் ஆகலான் ஐந்தையும் ஒக்க உணராது ஐந்தினையும் ஒன்று ஒன்று ஆப் பார்த்து உணர்வது ஒன்று எவ்வுலகும் ஒன்று உணர்ந்து பார்க்கும்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ வெனின், மேற்கோளிற் கூறி யவாறு முதல்வனும் உயிர்கள் உணரும் பொருளை அவ்வுயிர்களோடு உடன் நின்று உணருவனுயின், உயிர்கள் அறிவதற்கும் முதல்வன் அறிவதற்கும் வேற்றுமை யில்லையே; வேற்றுமை யில்லாதபோது அவ்வறிவால் உயிர் பந்தமடைதல்போல முதல்வனும் பந்தம் அடைவன் எனப்பட்டுக் குற்ற மாம். ஆதலால் உடன் நின்று உணருவன்என்றது பொருந்தாது என்பாரை நோக்கி உடன்நின்று அறியினும் உயிர் அறிவதற்கும் முதல்வன் அறிவதற் கும் வேற்றுமை உண்டு எனக்காட்டி அவனும் அவற்றது விடயத்தை உண ருமென்ற மேற்கோளை வலியுறுத்திய வாறும்.

(பொ-ரை.) மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐந்து இந்திரி யங்களும் தத்தம் விடயங்களை உணருமிடத்து அந்த அந்த இந்திரியம் அந்த அந்த விடயத்தை அது வதுவாக நின்றுணர்ந்து பிறிதொரு விட யத்தை உணராதவாறுபோல, ஆன்மாவானது இரதம் உருவம் பரிசம் சத்தம் கந்தம் என்னும் ஐந்து விடயங்களை உணருமிடத்து அந்த அந்த

விடயங்களாய் நிறைந்து நின்று உணரக்கூடிய ஒரு விடயத்தையே உணருந்தன்மையுடையது. ஆதலால் அவ்வைந்து விடயங்களையும் ஒரேசமயத்தில் உணராமல் ஒவ்வொரு விடயங்களாய் உணர்ந்து அநுபவிப்பதாகும். அவ்வாறு அநுபவிப்பதனால் சார்ந்தபொருளின் தன்மையே தன்தன்மையாகவுடைய அவ்வான்மா சாரப்படும் பொருள் பலவாதல் பற்றிப் பலதன்மையை அடையும். அவ்வான்மாவோடு உடன் நின்று அறியும் சிவம் அவ்வுயிர்போலப் பல திறப்படுதலின்றி எக்காலத்தும் ஒரு தன்மையாய் எல்லா உயிர்களுடைய எல்லா விடயங்களையும் அவ்வுயிர்களுடன் கலந்து நிற்குந் தன்மை பற்றிப் பொதுவகையாலுணர்ந்து உடனாய் நிற்குந் தன்மைபற்றி அவ்விடயங்களைச் சிறப்பாகவும் அறியும் எ-று.

(க-ரை.) உயிருஞ் சிவமும் உடனாய் நின்று விடயங்களை அறியினும் உயிர் தன்னாற் சாரப்பட்ட ஒவ்வொரு விடயத்தையே பற்றிப் பலவேறு வகைப்பட அறிதலும் சிவம் எல்லா உயிராலுஞ் சாரப்பட்ட எல்லா விடயங்களையும் ஒரு தன்மையாக அறிதலும் வேற்றுமையாம். ஆதலால் உயிர்போலச் சிவம் பந்தம் அடையாது. பந்தம் அடையாதாகவே அவனும்அவற்றது விடயத்தை உணரும் என்றது பொருந்தும் என்பதாம்.

இச்செய்யுளில் ஐந்து என முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னரும் வருதலால் இது சொற்பொருட் பின்வரு நிலை யென்னும் அலங்காரம்.

உள்ளமே என்றதிலுள்ள ஏகாரம் ஒன்று ஒன்றாகப் பார்த்து உணர்வதாந் தன்மை சிவத்துக்கு இல்லை யெனப்பிரித்தமையின் பிரிநிலைக்கண் வந்தது.

இறுதியிலுள்ள ஒன்றுஎன்பது ஒருதன்மையா யிருத்தலால் பந்தமடையாது என்னும் ஏதுப்பொருளைக் குறிப்பாக உணர்த்தி ஒரு பொருளாகிய சிவத்தின் பெயராய் நிற்றலால் குறிப்பேதுவாய் நின்றபெயர்.

முத்தியிலும் முதல்வன உடனின்று உணருவன் எனக்
சாணும் உபசாரத்தை வலியுறுத்தும்
உதாரணம்.

ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினா—னேகமா
யுள்ளத்தின் கண்ணானா னுள்குவா ருள்கிற்றை
யுள்ளத்தாற் காணானே யுற்று.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், ஆன்மா ஐம்பொறியை விடயிப்புழிப் போல முதல்வனை விடயிப்புழியும் முதல்வன் அவ்வாறுடனின்று

தன்னைத்தான் விடயிப்பனெனின் ஆன்மாச்சிரயமென்னுங்குற்றமா மாகலின் அது பெறப்படாமையான் அவனும் அவற்றது விடயத்தை யுணருமென்றல் யாண்டுஞ் செல்லாதென்பாரை நோக்கி ஆண்டும் அவ்வா றுணர்தலுண்டென்பதுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) ஒன்று ஏகம் ஆய் நின்று இணை அடிகள் உணரவே தான் போகம் ஆய் விளைந்த பொற்பினன்—(முதல்வனைச் சார்ந்தவழி அவ்வண்ணமேயாய்) ஒருபெற்றிப்பட்ட ஆன்மா அவனோடொற்றுமைப்பட்டு நின்று அவனதடியிணைகளை யுணரவே தான் (அவ்வான்மாவுக்குப்) பரபோகமாய் மேன்மேல் விளைகின்ற பொலிவினையுடைய னாகலானும்,—உள்ளத்தின்கண் ஏகம் ஆய் ஆனன்— (அங்ஙன முணருங்கால்) அவ்வான்ம ஞானத்தினிடத்து ஏகமாய் விட்டுநீங்காதவ னாகலானும்,— உள்குவார் உள்கிற்றை உள்ளத்தான் உற்றுக் காணானோ—கருதுவார் கருதியபொருளாகிய தன்னை அவரறிவோடு கூடி நின்றறியான் கொல்லோ எ-று.

போகமாய்த்தான் விளைந்த பொற்பினன், ஏகமாயுள்ளத்தின் கண்ணனன் என்னும் பெயரடைகள் ஏதுப்பொருளவாய் நின்றன. யாண்டுஞ் சேறலுணர்த்துதற்கு உள்குவாருள்கிற்றை என்றார்; "வேண்டுவார் வேண்டியதே யீவான்" என்றாற்போல. ஆனுருபு உடனிகழ்ச்சிப் பொருட்கண் வந்தது. ஓகாரம் எதிர்மறை. ஆன்மாக்கள் முதல்வனை விடயிக்குங்கால் அவற்றது விடயமாகிய அவன் தன்னாலும் உடனின் றுணரப்படுவன், உள்குவாருள்கிய பொருளாகலின். மேலை வெண்பாவிற் கூறிப்போந்த ஐம்புலன் போலவென்று அநுமானவளவை காட்டுவார் உள்குவாருள் கிற்றை யுள்ளத்தானுற்றுக் காணானோ வென்றும், உள்குவாருள் கிற்றுதல் ஈரிடத்து மொக்குமென்பார் "ஏகமாய் நின்றே யிணை யடிக ளொன்றுணரப்—போகமாய்த் தான்விளைந்த பொற்பினன்" என விடயித்தற்கட் படுமியல்பும், ஏகமாயுள்ளத்தின்கண் ணனென அறிவு விளங்குதற்கட்படு மியல்பும் எடுத்தோதினர்.

பரபோகமாயென்னது போகமாயென்றதும் ஒப்புமையிணங்குதற்பொருட்டு. சேற்றுநில மிதித்துச் சென்றானுக்கு வன்னிலம் போலப் பரபோகவிளைவு செயற்கைப் பொருளாய் நிற்றலின், ஆக்கமுங் காரணமும் அடுத்துவந்தது. இணையடிகளுணருந் தோ

றும் போகம் மேன்மேல் விளைதல் "புணர்ந்தாற் புணருந் தோறும் பெரும் போகம்பின் னும்புதிதாய்—மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே." என அப்பொருண்மேல் வைத்தோதிய திருவாக்கானுமறிக. தெளிவுபற்றி விளைந்தவென இறந்தகாலத் தாற் கூறினர்.

கண் கண்ணாடியினின்றுந் தன்னை விடயித்தாற்போல முதல் வன் ஆன்மாவுடனின்று தன்னைவிடயித்தல் பொருத்தமுடைமை யின், ஆன்மாச்சிரய மென்னுங் குற்றம் இன்னோரன்னவற்றிற் கெய்தாதென்றுணர்க. கண்ணாடிக்குள்ளாகத் தோன்றுவதுபோ லும் எதிர்விம்பமாவது விம்பமேயன்றி வேறன்றென்பது சிவாகம நூற்றுணிபென்க.

இதனுள் அவனும் அவற்றதுவிடயத்தை யுணருமென உணர் வேபற்றி ஓதினரேனும் "எத்திற ஞான முள்ள தத்திற மிச்சை செய்தி" என்பவாகலின் அவற்றிற்கும் இஃதொக்கும். ஒக்கவே பெத்த முத்தி இரண்டினும் ஆன்மா விடயிக்கப்படும் விடயங்களை முதல்வன் உடனின்று விடயிப்பனென்பதூஉம், பெத்தத்தின் அவனிவனாய் நின்றுவிடயித்தலின் விடயங்கள் அவனுக்கன்றி இவனுக்காயின. முத்தியின் இவனவனாய்நின்று விடயித்தலின் அவனொழிந்த விடயங்களெல்லாம் இவனுக்கின்றி அவனுக்காயின வென்பதூஉம் இனிது விளங்கும். இம்முறைமை நோக்கியன்றே உலகத்துள் ஒன்றனை ஈவாரும் ஏற்பாருஞ் சிவார்ப்பணமெனக் கருதாதவழிக் குற்றமென்று ஆகமங்களோதியதூஉம், "யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே—மாதொரு பாகனார் தாம் வருவர்" என்றதூஉம், அவ்வுண்மை அறிந்தவழி" எத்தனுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினை—முற்செய்வினை யுந்தருவான் முன்" எ-ம். பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் எ-ம், "உடம் புடைய யோகிகடா முற்றசிற் றின்ப—மடங்கத்தம் பேரின்பத் தாக்கி" எ-ம், காணுங் காரணங்க ளெல்லாம்பே ரின்பமெனப்—பேணு மடியார்" எ-ம், எல்லாஞ் சிவமா யிருந்ததே" எ-ம், இவ் வாறோதியதூஉமென்க.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) ஒன்று ஏகம் ஆய் நின்ற இணையடிகள் உணரவே தான் போகம் ஆய் விளைந்த பொற்பினன் உள்ளத்தின்கண் ஏகமாய் ஆனேன் உள்குவார் உள்கிற்றை உள்ளத்தான் உற்றுக் காணானே.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ வெனின்: ஆன்மாவானது பெத்தத்தில் உலகப்பொருள்களை அறியுமிடத்து மேலைவெண்பாவிற் கூறியவாறு முதல்வன் உடனின்று அறிவன் என்றல் பொருந்தும், முத்தியில் முதல்வனை அறியுங்காலத்தும் அவ்வாறே அம்முதல்வன் உடன் நின்று அறிவனாயின் தன்னைத்தான் பற்றுதலென்னுங் குற்றமாம். இக்குற்றமே ஆன்மாச்சிரயம் எனப்படும். ஆதலால் முத்தியில் முதல்வன் உடன் நின்று அறிவன் என்றல் பொருந்தாததாகி மேற்கோளிற் கூறியவாறு அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்றல் எவ்விடத்தும் செல்லமாட்டாது என்று கூறுவாரைநோக்கி முத்தியிலும் முதல்வன் உடன்நின்று உணர்தல் உண்டென்பதுகாட்டி மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(பொ—ரை.) ஆன்மாவானது முத்திநிலையில் முதல்வனைச் சார்ந்தவிடத்து அம்முதல்வன் தன்மையே தன் தன்மையாயும் முதல்வன் பலவேறுவகைப்படாது ஒரு தன்மையாயவாறுபோல ஒரு தன்மையாயும் அவனோடொற்றுமைப்பட்டுநின்று அவன் திருவடிகளை உணரும். உணரவே அவ்வாறு உணரும் ஆன்மாவுக்கு முதல்வன் பரபோகமாய் மேலுமேலும் புதிதுபுதிதாய்த்தோன்றி வளரும் அழகினையுடையவனாவன். அவ்வாறு முதல்வனையுணருங்கால் உணருகின்ற அவ்வான்மாவினுடைய அறிவில் அம்முதல்வன் ஒன்றுபட்டு அவ்வறிவைவிட்டு நீங்கான். இவ்வாறு பரபோகமாய்த்தோன்றுதல் வேறாய்நிற்குந் தன்மைபற்றியெனவும் அறிவில் ஒன்றுபட்டு நிற்றல் ஒன்றாய்நிற்குந் தன்மைபற்றி எனவும் அறிக. ஆதலால் உடனாய்நிற்குந் தன்மைபற்றிக் கருதுவார் கருதியவாறு விளங்கித்தோன்றும் பொருளாகிய முதல்வன் தன்னை அவ்வாறு கருதுகின்றவருடைய அறிவோடு கூடிநின்று அறியமாட்டானோ? அறிவான் எ—று.

(க—ரை.) முதல்வன் உயிருடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பன் ஆதலால் முத்தியில் ஒன்றாய் நிற்றல்பற்றி உயிரின் அறிவோடு கலந்து நின்று வேறாய் நிற்றல்பற்றிச் சிவபோகமாய் விளங்கித்தோன்றி உடனாய் நிற்றல்பற்றி அச்சிவபோகத்தை உயிரின் அறிவோடு உடன்நின்று அறிவன் ஆதலால் அவனும் அவற்றதுவிடயத்தை யுணருமென்றல் எவ்விடத்துஞ் செல்லும் என்பதாம்.

போகமாய்த்தான் விளைந்தபொற்பினன் என்பதிலும், ஏகமாய் உள்ளத்தின்கண் ஆனன் என்பதிலும் உள்ள போகமாய் ஏகமாய் என்பன, பொற்பினன் கண் ஆனன் என்னும் பெயருக்கு அடைமொழிகளாய் நின்று போகமாயும் ஏகமாயும் நிற்றலால் அப்போகத்தை ஏகமாய் நின்று அறிவான் என உணர்த்தினமையின், போகமாயினன் ஏகமாயினன் என்பன பெயர் அடைகளாகவும் ஏதுப்பொருள்களாகவும் நின்றன.

உடன்நின்று உணர்தல் எவ்விடத்துஞ் செல்லும் என்பதை அறிவித்தற்கு உள்குவார் உள்கிற்றை என்றார். உள்குவார் உள்கிற்றை என்று பொதுப்படக் கூறியதனால் பெத்தத்தில் கருதப்படும் உலகப்பொருள்களையும் முத்தியிற் கருதப்படு; சிவப்பொருளையும் அச்சிவம் உடன் நின்று அறியும் என்றவாறாயிற்று. பெத்தமுத்தி இரண்டினுங் முதல்வன் உடன் நின்று அறிவன் என்னும் இக்கருத்துப்பற்றியே திருநாவுக்கரசுசுவாமிகள் திருமறைக்காட்டுத் திருத்தாண்டகத்தில் "வேண்டுவார் வேண்டியதே ஈவான்" என்றும், பொதுவில் "உள்குவார் உள்கிற் றெல்லாம் உடனிருந் தறிதி" என்றும் அருளினர். உள்ளத்தாற் காணுனே உற்று என்றதைப் பிரித்துக் கூட்டுமிடத்து உள்ளத்தான் உற்றுக்காணுனே எனக்கூட்டுக. அவ்வாறே பிரித்து உரைசெய்யப்பட்டது. உள்ளத்தான் என்றதிலுள்ள ஆன் உருபு உயிர் அறியும்பொழுது இறைவனும் உடன்நின்று அறிவன் என்னும் உடன் நிகழ்ச்சிப்பொருளில் நின்றது. ஆதலால் உள்ளத்தான் என்பதற்கு அறிவோடு என உரைசெய்யப்பட்டது. காணுனே என்றதிலுள்ள ஓகாரம் எதிர்மறையாய் நின்று காண்பன் என உடன்பாட்டுப்பொருளை உணர்த்திற்று:

முதல்வன் கருதுவார் கருதிய பொருளாய் விளங்குவனுதலால் முத்தியில் ஆன்மாக்கள் முதல்வனை அறியுங்கால் அவ்விடத்து அவ்வான்மாக்களுக்கு அறியப்படும் பொருளாகிய அம்முதல்வன், தன்னுலும் ஆன்மாக்கள் உடன்நின்று உணரப்படுவன். ஆதலால் காண்பன் என்றதுகொண்டு காணப்படும் பொருள் முதல்வனின் வேறன்று என அறிக.

மேலவெண்பாவில் ஐம்பொறிபோல் ஆன்மா அதுவதுவாய் நின்று உணரும் எனக் கூறப்பட்டது. அந்த ஐம்பொறியும் உயிரின்பொருட்டு உணருமாதலால் அவ்வைம்பொறியை உவமானமாகவைத்துக்கொண்டு அனுமானப் பிரமாணங்கூற எண்ணி இவ்வெண்பாவில் மேற்கோளும் ஏதுவுங் கூறினுர். எவ்வாறெனின், உள்குவார் உள்கிற்றை உள்ளத்தான் உற்றுக் காணுனே என்றது மேற்கோள். ஒன்று ஏகமாய்நின்றே இணையடிகள் உணரப் போகமாய்த் தான்விளைந்தபொற்பினுன் ஏகமாய் உள்ளத்தின்கண் ஆனுன் என்பன ஏது. ஐந்து விடயங்களையும் அவ்வைம்பொறிகள் உயிரறிவோடு கூடிநின்று உயிரின்பொருட்டு உணர்தல்போல என்பது திருட்டாந்தம் என அறிக. ஆகவே இந்திரியங்கள் தத்தம் போகமாகிய விடயங்களை உயிரின் அநுபவத்தின்பொருட்டு அவ்வுயிருடன் நின்று உணர்தல் போல முதல்வன் பரபோகமாய்விளங்குந் தன்னை உயிரின் அநுபவத்தின் பொருட்டு உயிருடன்நின்று உணர்வன் என்க.

இன்னும் முதல்வன் கருதுவார் கருதியவாறு ஆதல் பெத்தமுத்தி இரண்டினும் ஒக்குமென்று கூறவேண்டி ஏகமாய்நின்றே இணையடிகள் ஒன்றுணரப் போகமாய்த் தான்விளைந்த பொற்பினுன் என அறியப்படுதலின்கண்

உண்டாகின்ற இயல்பும், ஏகமாய் உள்ளத்தின்கண் ஆனான் என அறிவு விளங்குதலின்கண் உண்டாகின்ற இயல்பும் இவ்வெண்பாவால் கூறினாரெனவும் அறிக. அதாவது போகமாகவும் போகத்தை அறிகின்றவனாகவும் இறைவன் விளங்குகின்றான் என்றபடியாம்.

முத்திநிலைகூறும் இச்சூத்திரத்தில் பரபோகமா யென்றுகூறாமல் போகமாயென்று பொதுப்படக் கூறியதும் பெத்தத்தில் விடயபோகமாகவும் முத்தியில் சிவபோகமாகவும் விளங்குகின்றான் என அறிந்துகொள்ளுதற் பொருட்டேயாம். பெத்தத்தில் போகமாய் விளங்குகின்றான் என்றது போகத்தினிடத்தும் அவன் நின்று கூட்டுவித்தாலன்றி ஆன்மாக்கள் அநுபவிக்கமுடியாதென்ற கருத்துப்பற்றியேயாம். இவ்வளவேயன்றிஇறைவனே வேறுபட்டுப் போகமாய்த் தோன்றுகின்றான் என்ற கருத்துப்பற்றியன்று.

இறைவன் பரபோகமாய் நிற்றல் புதிதன்று என்றுமுள்ளதே. மேல் புதிது புதிதாய்த் தோன்றுவன் என்றது உயிருக்கு அநுபவமாகும் முறை பற்றியேயன்றிப் பிறிதில்லை. அவ்வாறாயின் போகப்பொற்பினான் என்று கூறாமல் புதிதாய் ஆனது என்று கருதும்படி ஆய் என்னும் ஆக்கச்சொல் சேர்த்துப் போகமாய் என்று கூறியகருத் தென்னையெனின், நிலம் வலிதாய் இருத்தல் இயற்கையேயாயினும் சேற்றுநிலம் மிதித்துச்சென்ற ஒருவனுக்கு வலிய நிலத்தை மிதிக்கும்போது நிலத்தின் வலிமை முன்னின்ற சேற்றுநிலத்தை நோக்கச் செயற்கையேயாம். அதுபோல, இறைவன் பரபோகமாய் என்றும் நிற்பினும் உலகபோகத்தில் நின்ற உயிருக்கு அவ்வுலக போகத்தைவிட்டு இறைவனை உணரும்பொழுது அப்பரபோகந்தோன்றினமையால் தோன்றிய அப்பரபோகம் செயற்கைப் பொருளாயிற்று. தொல்காப்பியம் கிளவியாக்கம் உ0-வது சூத்திரத்தில் "செயற்கைப்பொருளை ஆக்கமொடுகூறல்" எனவும், உக-ல் "ஆக்கந் தானே காரண முதற்றே" எனவுங் கூறியவாறு செயற்கைப்பொருளைக் கூறுமிடத்துக் காரணத்தை முன்னும் ஆக்கத்தைப் பின்னுமாகவைத்துக் கூறல்வேண்டும். அவ்வாறே செயற்கைப் பொருளாகிய பரபோகத்துக்கு உணரப் போகமாய் என உணர்தலாகிய காரணத்தை முன்னும் ஆய் என்னும் ஆக்கத்தைப் பின்னும் வைத்துக் கூறினாரென அறிக.

அவ்வாறாயின் தொல்காப்பியம் கிளவியாக்கம் கக-வது சூத்திரத்தில் சேற்றுநிலம் மிதித்துச் சென்றவன் வன்னில மிதித்தவிடத்து நிலம் வலிதாயிற்று என்று கூறின் ஆயிற்று என்னும் ஆக்கம் மென்னிலம் வன்னிலம் என்ற வேறுபாட்டைக் குறித்ததேயன்றி ஆக்கங்குறித்த தன்று என உரையாசிரியர் சேனாவரையர் கூறிய கருத்தென்னை யெனின், வன்மை நிலத்திற்கு இயற்கையாதலின் அவ்வாறு கூறினர். சேற்றுநிலத்தைநோக்கச் செயற்கைப் பொருளென்று கொண்டால் மேற்கூறிய விதிப்படிதான் கூறல் வேண்டும்.

சிவஞானபோதச்சிற்றுரைவிளக்கம்.

இணையடிகள் உணருந்தோறும் பரபோகம் மேலு மேலும் விளையும் என்பதைத் திருச்சிற்றம்பலக் கோவையார் கூ-வது செய்யுளில் "புணர்ந் தாற் புணருந் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய்—மணந்தாழ் புரிகுழ லாள் அல்குல்போல வளர்கின்றதே" எனப் பரபோகத்தின் மேல்வைத்து ஓதிய திருவாக்கானும் அறிக.

போகமாய்த் தான்விளையும் பொற்பினன் என எதிர்காலத்தால் கூற வேண்டியதை விளைதலின் தெளிவுபற்றி விளைந்த என இறந்தகாலத்தாற் கூறினர். இது திருக்குறள் புதல்வரைப் பெறுதல் க-வது செய்யுளில் அறிவறியும் மக்கள் என்று கூறவேண்டியதைத் துணிவுபற்றி "அறிவறிந்த மக்கள்" எனக் கூறியதுபோலாம்.

கண், கண்ணாடியில் நின்றும் தன்னைக் கண்டாற்போல, முதல்வன், ஆன்மாவுடன் நின்று தன்னைக் காண்டல் பொருத்தமாதலால் இவை போன்றவற்றிற் கெல்லாம் தன்னைப் பற்றுதலென்னுங் குற்றம் இல்லை யென மேல் எழுந்த ஆசங்கையை நீக்கியவாறு அறிக. கண்ணாடிக்குள் ளாகத் தோன்றுங் கண், பிரதிவிம்பமாதலால் அது ஆன்மாவிற் குள்ளாகத் தோன்றும் வியாபக சிவத்திற்கு எவ்வாறு உவமையாகு மெனின், கண் தன்னிடத்துள்ள குணதோஷங்களை அறிவதற்காகக் கண்ணாடியைப்பார்ப் பதேயன்றிப் பிரதி விம்பத்தைப் பார்ப்பதற் கன்று, ஆதலால் கண்ணாடிக் குள்ளாகப் பிரதிவிம்பம்போலத் தோன்றும் கண் விம்பமே யென்பது சிவா கம நூற்றுணிபாதலால் உவமையாகும் என்க.

முதல்வன், தன்னை உயிருடன் நின்று அறிவன் என்னும் இக்கருத்தே பற்றிச் சில ஆகமங்களும் உபநிடதங்களும் முதல்வனும் தன் ஆனந் தத்தை அநுபவிப்பன் என்று கூறும். அவ்விடத்து அநுபவிப்பன் என்ப தற்கு அறிவன் என்பதே கருத்து. அக்கருத்தறியாத ஏகான்மவாதிகள் முதல்வனே தன் ஆனந்தத்தை அநுபவிப்பன் உயிரென்ப தொன்றில்லை யென்பர். அழுந்தி அறிதலே அநுபவித்தல் என்னும் சொற்குப்பொரு ளாகலின் அவ்வியல்பு ஆன்மாவிற்கே யன்றி முதல்வனுக்கு இல்லை யாக லானும், ஆனந்த ரூபமே முதல்வனாகலின் தானே தன்னைப் புதிதாக அநுபவித்தல்வேண்டாமையானும், முதல்வன் செய்யுஞ் செயலெல்லாம் தன்பொருட்டன்றி ஆன்மாவின் பொருட்டே யாதலானும் அவர் கருத்துப் பொருந்தாதென்க.

இவ்வதிகரணத்துள் அவனும் அவற்றது விடயத்தை உணரும் என முதல்வனுடைய அறிவு ஒன்றேபற்றிக் கூறினாரேனும் சிவஞானசித்தி யார் க-ம் சூ-ம் கூஉ-வது செய்யுளில் "எத்திறம் ஞானம் உள்ளது அத்திறம் இச்சை செய்தி" என வழிநூலாசிரியர் கூறியவாறு இச்சை செய்திகட்கும் அது ஒக்கும் ஒக்கவே, பெத்தமுத்தி இரண்டினும் ஆன்மா. அறியும்பொ ருளை முதல்வன் உடன் நின்று அறிவன் என்வும் இச்சிக்கும் பொருளை

உடன் நின்று இச்சிப்பான் எனவும் செய்யுஞ் செயலை உடன் நின்று செய்வன் எனவும் அறிக.

அவ்வாறயின் நன்மை தருதற்கு ஏதுவாக ஆன்மாவின் அறிவு இச்சை செயல்கள் நிகழுங்காலத்து முதல்வனுடைய அறிவு இச்சை செயல்களும் உடன் நிகழ்தல் பொருந்தும். தீமைதருதற்கு ஏதுவாக ஆன்மாவின் அறிவிச்சை செயல்கள் நிகழுங்காலத்து அதிற் செல்லவொட்டாது தடுக்காமல் அதற்கும் உதவிபுரிதல்முதல்வன் கருணைக்கும் ஆற்றலுக்கும் குறையாகாதா எனின், கூறுதும்:— அறிவு இச்சை செயல்கள்மூன்றும் ஆன்மாவின் குணம். குணமாவது இயற்கையாய்ப்பொருள் உள்ளபொழுதே உள்ளதாகும். ஆன்மாவின் குணமாகிய அம்மூன்றும் ஆன்மா உள்ளபொழுதே உள்ளனவாயினும் யாதானுமொரு துணையைக் கொண்டே நிகழுந் தன்மையும் அப்பொழுதே உள்ளது. இது எதுபோல எனின், கண்ணினிடத்து இயல்பாயுள்ள ஒளி சூரியன் முதலியவற்றின் ஒளியின் துணையைக் கொண்டு விளங்குமாறுபோலாம். இனி உயிரினிடத்துள்ள அம் மூன்றும் நிகழ்வதற்கு வேண்டப்படுந் துணையும் புறத்துணை அகத்துணையென இருவகைப்படும். அவற்றுள், புறத்துணையாவது தூலசூக்கும உடம்புமுதலாயின. அகத்துணையாவது முதல்வனுடைய அறிவிச்சை செயல்கள். புறத்துணையாகிய தனுகரணாதிகள் சடமாதலால் தானே உயிரைவந்து கூடமாட்டா. உயிர் அறிவுடைப் பொருளாயினும் அவ்வறிவுக்குத் தானே விளங்குந் தன்மை இல்லாமையால் உயிர் தானும் தனு கரணாதிகளை எடுத்துக் கொள்ளமாட்டாது. ஆதலால் இறைவன் தான் உயிருக்குத் தனுகரணாதிகளைத் தரல் வேண்டும். அந்த இறைவனும் தன்விருப்பப்படி தருவன் எனின் எல்லா உயிர்களுக்கும் ஒரேதன்மையான தனுகரணாதிகளைத் தரல் வேண்டும். அவ்வாறின்றி உயிர்தோறும் வேறு வேறு தனுகரணாதிகள் காணப்படுகின்றமையால் அவ்வாறு தருதற்குக்காரணம் இருத்தல் வேண்டும். அக்காரணம் உயிர்களினிடத்துக் குணமாகவுள்ள இச்சையின் வியாபார பேதமாகிய விருப்பு வெறுப்பேயாம். அவ்விருப்பு வெறுப்பும் அகத்துத் தன்னைப்பற்றி நிகழ்தலும் புறத்துத்தனுகரணாதிகளைப் பற்றி நிகழ்தலும் என இருவகைப்படும். அகத்து நிகழ்தல் மூலகன்மம் எனவும் புறத்து நிகழ்தல் இருவினையாகிய ஆகாமிய மெனவுங் கூறப்படும். சிவஞான சித்தியாரில் "கன்மமு மூலமு காட்டி" என்றதும் அகத்துநிகழும் விருப்பு வெறுப்பையேயாம். அவ்விருப்பு வெறுப்பாவது துன்பத்திற் காற்றாது இன்பத்தை விரும்புதலே யன்றித் துன்ப இன்பங்களைப் பகுத்தறிந்து வெறுத்தலும் விரும்புதலுஞ் செய்தலில்லை. இந்நிலையில் தனுகரணாதிகள் கிடையா. இந்நிலை தான்துன்பத்தைச் செய்யும் ஆணவமலத்துடன் கூடிய கேவல மெனப்படும். இக்கேவலநிலையில் மலத்தின் சேட்டைக்கு ஆற்றாது உயிர் வருந்தும்பொழுதும் இறைவன் உடன் நிற்கின்றான். நின்றும் மலத்தை நீக்கித் திருவடியை அப்பொழுதே கொடுக்கவில்லை. அவ்வாறு கொடுக்கா

ணமைக்குக்காரணம் மலத்தை நீக்கினும் உயிரினிடத்துள்ள பற்றுஅருது. பற்று அருதவிடத்து நீக்கிய மலத்தை மீளப்பற்றக் கூடும் என்பதே யாம். அப்பற்று முற்றும் நீங்கவேண்டுமாயின் இறைவனை இடைவிடாது பற்றல்வேண்டும். அவ்வாறு இறைவனைப் பற்றுந்தன்மை கேவலத்தில் உயிருக்கு இல்லாமையால் அவ்விடத்தில் மலத்தை இறைவன் நீக்கவில்லை. இறைவனைப் பற்றுந் தன்மையையும் அப்பொழுதே உயிருக்கு அவ்விறைவன் கொடுக்கக் கூடாதோ எனின்,. இயல்பாகவே மலத்தைப் பற்ருதிருக்கச்செய்யக் கூடாதோ என்று வினவில் என்னவிடை தரக்கூடுமோ அதே விடையை இதற்குங் கொள்க. ஆகவே மலத்தைப்பற்றுதல் இயற்கையாயினவாறுபோல இறைவனைப் பற்றுதலும் மலப்பற்று அற்ற பொழுது உண்டாதல் இயற்கை யென அறிக. மலப்பற்று அறுதற்கு இறைவன் தனுகரணாதிகளைத் தந்தது மன்றி அத்தனுகரணாதிகளைக் கொண்டு செய்ய வேண்டுவன இவை செய்யவேண்டாதன இவை யென அறிந்து கொள்ளுதற் பொருட்டு வேதாகமங்களையுந் தந்தருளினன். இவ்வாறு தனுகரணாதிகளையும் வேதாகமங்களையும் புறத்துணையாக இறைவன் தந்து அவற்றைப் பொருந்தி அறிவிச்சை செயல்கள் தொழிற் படுதற்கு அவற்றுடன் பிரிப்பின்றி அகத்துணையாகவும் இருக்கின்றான். துணையை உபயோகப் படுத்துஞ் சகுதி உயிருக்குச் சொந்தமாதலின் தீயநெறியில் உபயோகப் படுத்தின் அது உயிரின் குற்றமேயன்றி இறைவன் கருணையின் குற்றமாகாது என அறிக. ஈதுபோலவெனின், பிதா கத்தி, யெழுத்தாணி செய்வித்துப் பிள்ளையிடம் கத்தியால் சட்டத்தை வார்ந்துகொள். எழுத்தாணியால் எழுது என்று சொல்லி அதனை அவனிடங்கொடுத்தபோது அவன் அவ்விரண்டுஞ் செய்யாது கழுத்திற்குத்திக்கொண்டால் அக்குற்றம் பிதாவைச்சாராது அப்பிள்ளையைச் சார்தல்போலாம். உயிரின் குற்றமாகவின்றான் தீய நெறிக்குத் தண்டத்தைத் தந்து தண்டத்துக் காற்ருது வருந்துங்கால் நன்னெறி காட்டித் திருவடியைத் தருகின்ருன். இவ்வாறு செய்தலால் இறைவன் ஆற்றலுக்குக் குறைவில்லாமையும் அறிக. செய்யவேண்டியதைச் செய்து முடிபபது தான் ஆற்றலாகுமன்றிச் செய்யவேண்டாததைச் செய்து முடிப்பது ஆற்றலாக மாட்டாது. துணையை உபயோகப் படுத்துந்தகுதி உயிருக்கு சுதந்திரம் என்னும் இக்கருத்துப் பற்றியே திருக்குறள் கடவுள் வாழ்த்தில் "தனக் குவமை யில்லாதான் ருள் சேர்ந்தாற் கல்லால்—மனக்கவலை மாற்ற லரிது" என்று அருளினர் ஆசிரியர் தேவரும். சேர்ந்தார் என உயிரின் தன்வினையாகக் கூறியது இங்கே கவனிக்கத் தக்கது.

உயிருக்குத் துணையின்றி அறியுந் தன்மையில்லையாயினும் துணையை உபயோகப் படுத்துஞ் சுதந்திரம் உண்டென்பது துணையைக் கொண்டு காணுந் தன்மை கண்ணுக்குச் சுதந்திரமா யிருத்தல்போலாம். இக்கருத்துப்பற்றியே, திருவாசகம் உயிருண்ணிப் பத்து ௬0-வது செய்யுளில்

"நான்பாவிய னுனுனே நல்காயென லாமே" எனவும், திருமந்திரத்தில், "நெறியைப் படைத்தா னெருஞ்சில் படைத்தா— னெறியில் வழுவி னெருஞ்சின்முட்பாயு— நெறியில் வழுவா தியங்க வல்லார்க்கு—நெறியி னெருஞ்சின் முட்பாய கிலாவே" எனவும் ஆசிரியர்கள் அருளிச் செய்வாரா யினர். இன்னும் இதனை ஒரு அரசன் ஆணையைப் பெற்று அதிகாரத்தை நடாத்தும் ஒருவன் சட்டத்திற்கு வழுவாது செய்யின் நன்மை பெறுதலி னும் வழுவின் தண்டம் பெறுதலினும் வைத்தும் அறிந்து கொள்க.

இவ்வாறு பெத்தமுத்தி இரண்டினும் உயிருடன் இறைவன் கலந்து நின்று உயிரின் அறிவிச்சைசெயல்கள் தொழிற்படுவதற்கு தன்னுடைய அறிவிச்சை செயல்களைத் தொழிற்படுத்துவன் என்றது பொருந்தும். அவ்வாறாயின் பெத்தத்தில் வினைப்பயன்களை உயிர் அநுபவிக்கவும் முத்தியில் "முற்செய்வினையுந் தருவரன்முன்" என மேற்பத்தாஞ் சூத் திரம் இரண்டாவது அதிகரணத்து முதல்வெண்பாவிற் கூறியபடி வினைப்பயன்களை இறைவன் என்று கொள்வானென்றல் எவ்வாறு பொருந் துமெனின், பெத்தத்தில் இறைவன் உயிராகநின்று அறிகின்றான். முத்தி யில் உயிர் இறைவனாகநின்று அறிகின்றது. ஆதலால் இறைவன் உயிராக நின்ற பெத்தத்தில் வினைப்பயன்கள் உயிருக்காயின. உயிர் இறைவனாக நின்ற முத்தியில் முதல்வனை அநுபவிக்கும் சிவாநுபவம் நீங்கிய வினைப் பயன்கள் இறைவனுக்காயின என அறிக.

இறைவனே தானாய்நின்றால் தான்செய்யும்வினை தன்னைக் கட்டுப் படுத்தாது என்னும் இம்முறைமைநோக்கி அல்லவா உலகத்துள் ஒன்றனை ஈவாரும் ஏற்பாரும் சிவார்ப்பணமெனக் கருதாமல் தான் கொடுத்ததாகவும் தனக்குத் தந்ததாகவும் கருதியவிடத்துக் குற்றம் உண்டாகுமென ஆகமங் கள் ஓதியதூஉம் என்க.

இன்னுஞ் சிவஞானசித்தியார் உ-ம் சூ-ம் உ௯-வது செய்யுளில் "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே—மாதொரு பாக னார்தாம் வருவர்" என்ற உண்மையை அறிந்தவிடத்து எல்லாஞ் சிவமாகவே தோன்றுமாதலால் அவ்வாறு சிவாநுபவம் வரப்பெற்றவருக்கு வினைப் பயன் தாக்குதலின்றி எல்லாஞ் சிவானந்தமாகவே விளங்கும் என்னுங் கருத்துப் பற்றி இந்நூல் க0—ஆம் சூத்திரம் இரண்டாவது அதிகரணத்தில் "எத்தனுவில் நின்றும் இறைபணியார்க் கில்லைவினை—முற்செய்வினை யுந் தருவான் முன்" எனவும், திருவுந்தியார் ௬௩-வது செய்யுளில் "பெற்ற சிற் றின்பமே பேரின்பமாய்" எனவும், திருக்களிற்றுப்படியார் உ௬-வது செய்யுளில் "உடம்புடைய யோகிகள்தாம் உற்றசிற் றின்பம்—அடங்கத் தம் பேரின்பத் தாக்கி" எனவும், திருவாசகம் பண்டாய நான்மறைப்பதிகம் ௬-வது செய்யுளில் "காணுங் கரணங்க ளெல்லாம் பேரின்பமெனப்— பேணு மடியார்" எனவும், "எல்லாஞ் சிவமா யிருந்ததே" எனவும் அநுபவ முடைய தேசிகர்கள் அருளினரென அறிக.

முதலதிகரணம் முற்றிற்று.

இரண்டாம் அதிகரணம்.

அத்துவித நிலையை மறவாது பத்திசெய்தலால் முதல்வன் திருவடியைக் கூடுதலாகிய நிட்டைகூடுமெனக் கூறும்

மேற்கோள்.

இனிப் பத்தியினுன் மறவாதேத்த அவனது சீபாதத்தை யணையுமென்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், ஏகனுகி நின்றூர்க்கு அவ்வியைபுபற்றி அறிவிச்சை செயல்கண் மூன்றும் ஆண்டுவிடயிக்குமாறு யாங்ஙன மென்பாரை நோக்கி நிட்டையினியல்புணர்த்துதற் கெடுத்துக் கொண்ட இரண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ—ள். சூத்திரத்துரைத்தவாறு பற்றி உரைத்துக்கொள்க.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ—ள். மறவாது—அவ்வத்துவித நிலையை மறவாது கடைப் பிடித்துச் செய்யும்,—பத்தியினுன்—அன்பானே,—ஏத்த—முதல் வனருள்வழி நின்ருல்,—அவனது சீபாதத்தை— அவன்றிருவடி யாகிய சிவானந்தாநுபூதியை,—அணையும்—தலைப்படும் எ-று.

சிற்றுரை.

"இத்தையாயும் அறிவுடையனுய் அன்புசெய்ய"என வழிநூ லாசிரியரும் ஓதுதலின் ஈண்டு மறவாது பத்தியினுலேத்தவெனச் சூத்திரப்பொருட்கேற்ப மாறிவைத்துரைத்துக்கொள்க. ஏத்த வென்றது உபசார வழக்கு. அன்பு பத்தி காதலென்றூற்போல்வன இச்சைமீதூர்தற் பொருளவாகலான், அது பாமுத்தியினு முண் டென்பதுணராதார் பத்தியாவது சீவன் முத்திநிலைக்கே செய்யப் படுவதொரு சாதனம்போலுமென மயங்கித் தத்தமக்கு வேண்டிய வாறே உரைப்ப. பரமுத்தியின்கண் இச்சைநிகழாத வழிச் சிவ

போகம் அநுபவமாதல் செல்லாமையானும், சிவன்முத்திநிலைக்கே கூறுவதொன்றாயிற் "செம்மலர் நோன்றாள்" என்னுஞ் சூத்திரத்து ஒருங்குவைத்து ஓதவமையும் சூத்திரம் வேறு செய்யவேண்டாமையானும், அவ்வுரை போலியென்றொழிக.

விளக்கம்.

இம்மேற்கோள் அதனை அயரா அன்பின் அரன் கழல் செலுமே என்ற சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைப் பதச்சேதஞ் செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்னசொல்லிற்றோ எனின், மேலையதிகரணத்திற் கூறியவாறு முதல்வனோடு பிரிப்பின்றி ஏகமாய் நின்றவர்க்கு ஏகமாய் நிற்கும் அந்தநிலையில் முதல்வன் உபகாரத்தை அறிதலும் அன்பு செய்தலும் திருவடியைக கூடுதலும் ஆகிய தொழில்கள் எவ்வாறு நிகழும்? நிகழாதாயின், மேலையதிகரணத்து இறுதி வெண்பாவில் ஏகமாய் நின்றே இணையடிகளொன்றுணரப் போகமாய்த் தான்விளைந்த பொற்பினன் என்றது எவ்வாறு பொருந்து மென்பாரை நோக்கி நிட்டையின் இயல்பு இதுவென்று கூறுதற்கு எடுத்துக்கொண்ட சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைப் பதச்சேதஞ் செய்து அறிவு இச்சை செயல்களின் தொழிற் பாட்டினாலேயே ஏகனாகி நிற்கும் நிட்டை கூடு மெனக் கூறியவாறாம்.

இவ்வதிகரணத்தில், ஏகனாய் நிற்கும் நிலையில் அறிவு இச்சை செயல்களின் தொழிற்பாடு உண்டோ இல்லையோ என்பது ஐப்பாடு. இல்லையென்பது பிறர்பக்கம்.

இம்மேற்கோளுக்கு உரையாசிரியர் செய்த உரையாவது, சூத்திரத்தில் அயரா அன்பின் அரன்கழல் செலுமே என்றதற்கு உரைத்தவாறு இம்மேற்கோளுக்கும் உரைத்துக் கொள்க என்பதாம்.

இதற்குச் சுப்பிரமணிய தேசிகர் செய்த உரையாவது, உயிரோடு கலந்து நின்று அறிவித்தும் அறிந்தும் வருகின்ற முதல்வனுடைய அத்துவித நிலையை மறவாது உறுதியாகப் பற்றிச்செய்யும் அன்பினால் முதல்வனையின்றித் தனக்குத் தனிச்செயலில்லையென அறிந்து எல்லாம் முதல்வனது செயலேயென அவன் அருள்வழி நின்றால் அம்முதல்வன் திருவடியாகிய சிவானந்த அநுபூதியைக் கூடும் என்பதாம்.

பத்தியினால் மறவாது எத்த என மேற்கோள் கூறியிருப்பினும், சூத்திரத்தில் அயரா அன்பின் என இருத்தலினாலும், சிவஞான சித்தியார் கக-ம் சூ-ம் க-வது செய்யுளில் "இத்தை ஆயும் அறிவுடையனாய் அன்பு

செய்ய" என வழிநூலாசிரியர் ஓதுதலினலும் சூத்திரப் பொருளுக்கேற்ப மறவாது பத்தியினல் ஏத்த என மாற்றிவைத்து உரைத்துக்கொள்க. அவ்வாறே உரைசெய்யப்பட்டது.

அவன் அருள்வழி நிற்றலை ஏத்த என்று கூறியது உபசார வழக்கு. ஏத்துதல் அடிமையின் தொழில். அடிமைக்குத் தனக்கெனச் செயல் கிடையாது. ஆகவே, ஏத்த என்றதனல் அருள்வழி நிற்றல் பெறப்படுமாறு அறிக.

அன்பு பத்திகாதல் என்னுஞ் சொற்கள்இச்சையின் மிகுதிப்பாட்டைக் குறிக்கும். குறிக்கவே, முதல்வனேடு இரண்டறக் கலந்து நிற்கும் பரமுத்தியினும் பத்தி உண்டென்பது பெறப்படும். இவ்வுண்மை அறியாதார் பத்தியாவது சீவன் முத்திநிலைக்கே உரியதொரு சாதன மெனவும் பரமுத்தி நிலைக்குப் பத்தி சாதனமாகா தெனவும் ஆதலால் இச்சூத்திரம் சீவன் முத்திநிலையே கூறிற்று எனவும் கூறுவர். பரமுத்தியின்கண் இச்சை நிகழாதவிடத்துச் சிவபோகம் அநுபவமாதல் இல்லை. இச்சையோ பத்தியின்றி நிகழாது. ஆதலால் பரமுத்தியில் பத்தி உண்டென்பது நன்குவிளங்கும். அன்றியும் சீவன் முத்திநிலைக்கே கூறுவதொன்ருயின் செம்மலர் நோன்ருள் எனக்கூறும் பன்னிரண்டாஞ் சூத்திரம் சீவன் முத்திநிலையே கூறுதலால் அச்சூத்திரத்தில் சேர்த்து வைத்து ஓதியிருக்கலாம். அவ்வாறின்றி இச்சூத்திரத்தை வேறு வைக்கவேண்டாம். ஆதலால் பத்தி யென்பது பரமுத்தியில் இல்லை யென்றல் பொருந்தாது எனவும், பரமுத்தி சீவன் முத்தி இரண்டற்கும் வேண்டப்படுவ தெனவும், இப்பதினெராஞ் சூத்திரம் பரமுத்தி நிலையே கூறிற்று எனவும் அறிந்துகொள்க. இரண்டறக் கலத்தலாகிய பரமுத்தியினும் பத்தி உண்டென்பதை "ஈறிலாப்பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்னுடை அன்பே" என்னுந் திருவாசகமும் வலியுறுத்தும்; எவ்வாறெனின், பரமுத்தியாவது பாசத்தை அறவே விட்டுப் பரமாய் நிற்றல். பரம்பொருளோ தத்துவங் கடந்த இன்பப பொருளாகும். அதனை ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்றும், அப்பொருள் தத்துவங் கடந்து நிற்கினும் உயிரைக்கடந்து நிற்பதில்லை; ஆயினும் தன்னேடு பிரிப்பின்றி நிற்கும் அப்பரம்பொருளை அன்பினலன்றி உயிர் அறிவதில்லை. ஆதலால் அறியும் அநுபவத்தில் அன்பும் பிரிப்பின்றி உண்டென்பது அறிவித்தற்கு என்னுடை அன்பே என்றும் அருளியவாறும்.

பத்திசெய்தலால் திருவடி அடைதல் கூடுமென்பதற்குக் காட்டும்

ஏது.

அவன் அந்நியமின்றிச் செய்வோர் செய்திப்பயன் விளைத்து நிற்றலான்.

சிற்றுரை.

ஏ—து ஏ—து எ—னின், பத்தியினுன் மறவாதேத்தினும் அவனது சிபாதத்தை அணேதல் பாமுத்தியினன்றி முடியாதென்பாரை நோக்கி மேற்கோளேச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) அம்முதல்வன் வேறு நில்லாது செய்வோர் செய்வனவற்றை அறிந்து அவ்வச் செய்திக்குத் தக்கபயனே மிகச்செய்யலாயின் அவ்வப்பொழுதே விளேவித்தும் அல்லுழிக் காலாந்தரத்தில் விளேவித்தும் உடனுய் நிற்பனுதலான் இனிப்பத்தியினுன் மறவாதேத்தவே அம் முதல்வனது சிபாதத்தை அணேயுமென மேற்கொண்டது எ—று.

விளக்கம்.

இந்த எது என்னசொல்லிற்றோ வெனின், பாமுத்தியில் முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தை அடைதல் கூடுமன்றிப் பத்தியினுல் மறவாது எத்துதலால் அது கூடாது என்பாரை நோக்கிக் கூடுமென மேற்கோளே வலியுறுத்தியவாறும்.

(இந்த எதுவின் பொருள்.) முதலதிகாணத்திற் கூறியவாறு உயிர்களால் உணரப்படும் பொருள்களே உடன் நின்று உணரும் முதல்வன் உயிரின் வேறு நில்லாது உயிர் செய்வனவற்றை யறிந்து அச்செயல்கள் இடையீடின்றி நிகழுமாயின் செய்த அப்பொழுதே பயனேக் கூட்டுவித்தும் விட்டு விட்டு நிகழுமாயின் பிற்காலத்திற் பயனேக் கூட்டுவித்தும் உயிர்களோடு உடனுய் நிற்பன். ஆதலால் 'இனிப்பத்தியினுல் மறவாது எத்தவே அம்முதல்வனது சிபாதத்தை அணேயும்' என மேற்கோள் கூறியது எ-று.

அப்பொழுதே பயன்தருவன் என்பதை "குற்றொருவரைக் கூறைகொண்டு கொலேகள் சூழ்ந்த களவெலாம்—செற்றொருவரைச் செய்த தீமைகள் இம்மை யேவருந் திண்ணமே" என்னும் தேவாரத்தானும் அறிக

மறவாமை என்பது இடையீடின்மையைக் குறிக்கும். அதுவே பரமுத்தியுமாம். ஆதலால் பத்தியினுல் மறவாது எத்தவே திருவடி அடைதல் கூடுமெனக் கூறி மேல் நிகழ்ந்த ஆசங்கையை நீக்கியவாறு அறிக.

பாமுத்தியாவது உடம்பு நீங்கியபின் உண்டாகு மென்பர் சிலர்; அது பொருந்தா தெனவும், சாதனம் முற்றுப்பெற்ற பொழுதே உண்டாமெனவும், உடம்பு நீங்கியபின்னர் முன் உண்டான பாமுத்தி நிலேத்தலேயன்றி

உண்டாவதில்லை யெனவும் சிவஞான சித்தியார் பதினொராஞ் சூத்திர ஆரம்பத்தில் விரித்துக் கூறியிருக்கின் றமையால் அவ்விடத்துக் காண்க.

இந்த ஏது, ஏகனாய் நிற்கும் நிலையில் அறிவு இச்சை செயல்களின் தொழிற்பாடு இல்லை யென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

மறவாது பத்திசெய்தலால் அப்பொழுதே திருவடி அடைதல்
கூடுமென்பதற்குக் காட்டும்

உதாரணம்.

அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க்,
கிருட்கண்ணே பாசத்தார்க் கீச—னருட்கண்ணாற்
பாசத்தை நீக்கும்,பகலலர்த்துந் தாமரைபோ
னேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்.

சிற்றுரை.

ஏ—து உ—ம் எ—னின், அரன் கழல் சேறல் உடம்பினீங்கிய பின்னன்றி உடம்புடைய வழியுங் கூடுமாயின் அது ஞாயிற்றி னொளிபோல மருங்குள்ளார்க்குப் புலனாதல்வேண்டு மென்பாரை நோக்கி அது கூடாமையும் கூடுமாறும் உவமை முகத்தானுணர்த்தி ஏதுவை வலியுறுத்துத னுதலிற்று.

(இ—ள். அருக்கன் நேர் நிற்பினுங் காணார்க்கு அல் இருளே— ஞாயிறு (எல்லார்க்கும்) ஒப்பநிற்பினும் அது காட்சி உடையார் கண்ணுக்கன்றி அஃதில்லாதார் கண்ணுக்கு இரவின் கண்ணதாகிய இருளேயாம் (அதுபோல),— ஈசன் பாசத்தார்க்கு இருட் கண்ணே— முதல்வன் (எங்கணும் ஒப்பநிற்பினும்) மலநீங்கிய முத்தர்க்கன்றி அஃதுடையார்க்கு அவன் அம்மலத்தின்கண்ணே யாவன். (சீவன் முத்தரும் ஏனையோர்போல் உடலுடைமையிற் பாசத்தாராகலின் வேற்றுமையின்றாலெனின்),—பகல் (நீக்கி) அலர்த்துந் தாமரைபோல்—(ஏனைத் தாமரைகளோடொப்ப ஒருங்கு நிற்பினும் பக்குவமுடைய) தாமரையைக் (கூம்புதலை) நீக்கி அலர்த்து ஞாயிறுபோல,— நேசத்தில் தன் உணர்ந்தார் நேர் அருட்கண்ணால் பாசத்தை நீக்கி (அலர்த்தும்)— ஏனையோர்போல் உடம்போடு நிற்பினும் பருவம் உடையாராய்ப் பத்தியினாற் றன்னை மறவாதுணர்வார்க்கு முதல்வன் தனது திருவருட் பார்வையால்

பாசத்தை நீக்கி (அறிவை)யலர்த்தும் (ஆகலான் உடம்புள் வழியும் அவர் பாசத்தாரல்லர்) எ—று.

ஆகலான் உடம்புள் வழியும் அவர் பாசத்தா ரல்லரென்பது குறிப்பெச்சம். ஏகாரம் தேற்றம். திணிந்த இருளென்பார் அல் இருள் என்றார். மலத்திற்குக் கண்ணுவது அறியாமை. காணுரும் பகலும் ஆகுபெயர். அருக்கன் எடுத்துக்காட்டுவமை. தன்னை யென்னும் இரண்டன் உருபு விகாரத்தாற் றொக்கது.

ஏழாம்வேற்றுமைப் பொருட்கண்வரு நேரென்பது உருபு மயக்கமாய் நான்காவதுணர்த்திற்று. நீக்குதலும் அலர்த்துதலும் ஏனையிடத்துஞ் சென்றியைதலின், ஈரிடத்துஞ் செயப்படு பொருளேற்பன வருவிக்கப்பட்டன.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) அருக்கன் நேர் நிற்பினும் காணார்க்கு அல் இருளே ஈசன் பாசத்தார்க்கு இருட் கண்ணே பகல் (நீக்கி) அலர்த்துந் தாமரை போல் நேசத்தில் தன் உணர்ந்தார் நேர் அருட்கண்ணால் பாசத்தை நீக்கி (அலர்த்தும்.)

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ வெனின், உடம்பு நீங்கியபின் முதல்வன் திருவடியை அடைதல் கூடுமென்றி உடம்பு உள்ளபொழுதே அடைதல்கூடாது; உடம்பு உள்ளபொழுதும் முதல்வன்திருவடி அடைதல் கூடுமாயின் ஒருவனுக்குத் தோன்றும் சூரியனுடைய ஒளியானது பக்கத்தில் இருப்பவருக்கும் விளங்கித் தோன்றுவதுபோல உடம்புடைய ஏனையோர்க்கும் அந்நிலை விளங்கித்தோன்றல் வேண்டுமென்பாரை நோக்கி அந்நிலை ஏனையோர்க்கு விளங்கித் தோன்றாதெனவும், அயராமை என்னும் அறிவின் தொழிற்பாட்டால் உடம்பு உள்ளபொழுதே திருவடி அடைதல் கூடுமெனவும், சூரியனொளியாகிய உவமையில் வைத்தே காட்டிச் செய்வோர் செய்திக்குத் தக்க பயனைத் தருவனென்று கூறிய ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பொ—ரை.) மாசினால் ஒளி மழுங்கிய கண்ணுக்கும் மாசு இன்மையால் ஒளி மழுங்காத கண்ணுக்கும் சூரியன் சமமாய் நின்றாலும் அச்சூரியன், ஒளிமழுங்காத கண்ணுக்கு விளங்கித்தோன்றுவதுபோல ஒளிமழுங்கிய கண்ணுக்குத் தோன்றுவதில்லை. அம்மட்டோ ஒளிமழுங்கிய கண்ணுக்கு இரவின்கண்ணுள்ள இருளாகவே தோன்றுவன்; அதுபோல உடம்புடைய எல்லாரிடத்தும் சமமாக முதல்வன் கலந்துநிற்பினும் அம்முதல்வன், மலம் நீங்கிய முத்தர்க்கு விளங்கித்தோன்றி மலம் உடைய பெத்தர்க்கு

அம்மலத்தாலுண்டாகும் அறியாமையாகவே தோன்றுவன். அவ்வாறாயினும் மலம் உடைய பெத்தருக்கும் மலம் நீங்கிய சீவன்முத்தர்க்கும் உடம்பு காணப்படுகின்ற ஒற்றுமையினால் சீவன்முத்தரும் ஏனைய பெத்தரைப் போலப் பாசம் உடையாரென்றே சொல்லல்வேண்டுமென்றி வேற்றுமை சொல்லக்கூடாது எனின், மலரும் பக்குவமில்லாத தாமரைகளும் மலரும் பக்குவமுடைய தாமரைகளும் சமமாய் ஓரிடத்து நிற்பினும் சூரியன் பக்குவமுடைய தாமரையைமட்டும் கூம்புதலைநீக்கி விரியச்செய்து பக்குவமில்லாத தாமரைகளை விரியச்செய்யான். அதுபோல முத்தரும் பெத்தரும் உடம்போடு கூடிநிற்பினும் பத்தியினால் இடையீடின்றி முதல்வனை அறியும் பக்குவமுடைய முத்தருக்கு அம்முதல்வன் தனது திருவருட்பார்வையால் பாசத்தைநீக்கி அறிவை வியாபகமாய் விளங்கச் செய்து பக்குவமில்லாத பெத்தருக்குப் பாசநீக்கத்தையும் அறிவுவிளக்கத்தையுஞ் செய்யான். ஆதலால் பெத்தரைப்போல் முத்தருக்கு உடம்பு உள்ளவிடத்தும் அம்முத்தர் பாசம் உடையவராகார் எ-று.

(க—ரை.) சூரியன் ஒளியுடைய கண்ணுக்கு ஒளியாயும் ஒளிமழுங்கிய கண்ணுக்கு இருளாயும் தோன்றுமாறுபோல, முதல்வன் முத்தருக்கு அறிவுருபமாயும் பெத்தருக்கு அறியாமை ரூபமாயும் தோன்றுவன் ஆதலின், உடலுடைமைபற்றிப் பெத்தரைப்போல முத்தர் பாசமுடையராகார் என்பதாம்.

பாசத்தை நீக்கி அறிவை அலர்த்தும் என்றதனால், ஆகலான் உடம்பு உள்வழியும் அவர் பாசத்தாரல்லர் என்னும் பொருள்குறிப்பாக எஞ்சி நின்றது.

அல்லிருளே என்றதிலுள்ள ஏகாரம் இருளென்பதிற் சந்தேகம் இல்லாமையை உணர்த்திநிற்றலின் தேற்றம்.

ஒளி மழுங்கிய கண்ணுக்குச் சூரியன் இருளாய்த் தோன்றுதல், பகற்காலத்து ஒளிவீசப்பெறாத இடத்தும் மேகத்தால் சூரியன் மறைபட்ட காலத்தும் நிகழும் இருள்போலன்றி இரவின்கண் உள்ள நெருங்கிய இருளென அறிவிக்கவேண்டி அல் இருள் என்றார்.

இருட்கண்ணே யாவன் என்பது மலத்தின் கண்ணே யாவன் என்பதாம். இவ்விடத்தில் கண் என்பது அறியாமையைக் குறித்து நின்றது.

காணார் என்பது காணுந்தொழிலில்லாத கண்ணைக்குறித்து நிற்றலால் ஆகுபெயர்.

பகல் என்பது பகற்காலத்தைச் செய்யும் சூரியனைக்குறித்து நிற்றலால் ஆகுபெயர்.

அருக்கனிடத்தும் முதல்வனிடத்தும் ஒப்பநிற்குந்தன்மையும் விளங்குதல் விளங்காமையும் எடுத்துக்காட்டுதலால் அருக்கன் எடுத்துக்காட்டு உவமை.

தன்னுணர்ந்தார் என்றதிலுள்ள தன் என்றதில் தன்னை என்னும் பொருளில் ஐ உருபு தொக்குநின்றது.

தன்னுணர்ந்தார் நேர் என்றதிலுள்ள நேர் என்பது ஏழாம் வேற்றுமைப் பொருளைத்தரும், எவ்வாறெனின், என்நேர் உரைத்தான் என்றவிடத்து என் இடத்திற் சொன்னான் என்று பொருள்படுதல்போல என்க. இனி வேற்றுமை மயக்க விதியின்படி ஏழாம்வேற்றுமை உருபு நான்காம் வேற்றுமைப் பொருளைத்தரும். ஆதலால் தன் உணர்ந்தார் நேர் என்பது தன்னை உணர்ந்தார்க்கு என்னும் பொருளை உணர்த்திற்று.

பாசத்தை நீக்கும் என்றதிலுள்ள நீக்குதல் தாமரையோடுங் கூடி நீக்குதற்குச் செயப்படுபொருளாகிய கூம்புதலையும், பகல் அலர்த்தும் என்றதிலுள்ள அலர்த்துதல் பாசத்தை நீக்கி என்பதனோடுங்கூடி அலர்த்துதற்குச் செயப்படுபொருளாகிய அறிவையும் இன்றிமுடியாமையால் அவ்விரண்டிடத்தும் கூம்புதலும் அறிவும் வருவிக்கப்பட்டன.

பாசத்தை நீக்கி அறிவை விளங்கச்செய்யும் முறைமைகூறிப் பத்தியினால் அப்பொழுதே திருவடி அடைதல் கூடுமென்பதை வலியுறுத்தும்

உதாரணம்.

மன்னு மிருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னு மரனே மலந்துரந்து—தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் றான்.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், நேசத்திற் றன்னுணருஞ் சீவன் முத்தர்க்குப் பாசத்தைநீக்கி அறிவை அலர்த்துதல் பரமுத்தியினன்றி இல்லையென முரணிக்கூறும் வாதிகளைநோக்கிப் பாசத்தை நீக்கி அறிவையலர்த்தும் முறைமை இவ்வாறென்றுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) அன்பின் மன்னும் அரனே மன்னும் இருளை மதி துரந்தவாறு மலந்துரந்து—(உயிரைத்தானுக்கிக்கோடற்க ணுள தாகிய) இச்சைமிகுதியான் (அவ்வுயிரோடும் அநாதியே) நிலைபெறுமுதல்வன் (கண்ணின்க) ணிலைபெறும் இருளைப் பிறைமதி

(நாடோறுஞ் சிறிது சிறிதாகநீக்கி) யோட்டுமாறுபோல் (அவ்வுயிரின்கண்ணதாகிய மலசத்தியை அவ்வப்பருவந்தோறுஞ் சிறிது சிறிதாகச் சோபானமுறையினீக்கிப் பற்றறத்) துரந்து,—காந்தம் இரும்பைத் தன்னின் வலித்து வசம்செய்வான் செய்தல் சலிப்பு இல்—காந்தக்கல் இரும்பைத் தன்கணீர்த்துத் தன்வசமாகச் செய்தல்போல (மலம் அங்ஙனந் துரக்கப்படுந்தோறும் அம்முறையே அச்சத்தி பதிவித்து உயிரைத் தன்கண் வலித்துக்கொண்டு தன் வசமாகச் செய்துவருஞ்) செய்கையின் (அவனுக்கு ஒருஞான்றுஞ்) சலிப்பில்லை,—விகாரி அலன்தான்—(அங்ஙனஞ் சலியாது செய்துவருதல்பற்றி) விகாரியாவானு மல்லன். (காந்தம்போலத் தனது சந்நிதிமாத்திரையிற்செய்யும்) அம்முதல்வன் எ—று.

மதியென்றது ஏற்புழிக்கோடலான் ஈண்டு வளர்பக்கத்திற் றிங்களின் மேற்றாயிற்று. "அந்த வருளுனக்கிங் காதார மாயல்லி—னிந்து வெனவெறித் திட்டு" என்றதும் அது. மலந்துரத்தல் உயிரின் செயலானுவதன்றென்பது படநின்றமையின் ஏகாரம் பிரிநிலைக்கண்வந்தது. வான் பான் பாக்குக்கள் தொழிற்பெயர் விகுதியுமாமென்பது "காப்பாக்கறிந்து" என்பதனானுணர்க. உவம உருபு விரித்துரைக்க. சலித்தல் வேசறுதல். செய்தற்கண்ணென ஏழனுருபு விரித்துரைக்க. மதிதுரந்தவாறு மலந்துரந்தென்ற விதனானே மலம் நீங்குவது பின்னென்பார் மதம் மறுக்கப்பட்டவாறு காண்க. சோபானமுறையி னீக்குதலானன்றே, சத்திநிபாதஞ் சிவபுண்ணிய முதலாயின நால்வேறுவகைப்பட்டதூஉம், அவற்றுள்ளும் ஒரோ ஒன்று நன் நான்காய்ப் பதினாறுவகைப்பட்டதூஉம், அவற்றுள்ளும் ஒரோவொன்று பலவேறுவகைப்பட்டு விரிந்ததூஉமென்க.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) அன்பின் மன்னும் அரனே மன்னும் இருளை மதி துரந்தவாறு மலந்துரந்து காந்தம் இரும்பைத் தன்னின் வலித்து வசஞ்செய்வான் செய்தல் சலிப்பு இல் விகாரியலன் தான்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ வெனின், மேலேவெண்பாவிற் கூறியவாறு நேசத்தினால் தன்னை உணருஞ் சீவன்முத்தருக்குப் பாசத்தை நீக்கி அறிவை விளங்கச்செய்தல் பரமுத்தியில் அன்றி இல்லை: ஆதலால் திருவடி அடைதலும் பரமுத்தியினன்றி இல்லையென முரணிக்கூறுவாரை நோக்கி, அன்புசெய்தலாகிய இச்சையின்றொழிலுக் கேற்பப் பாசத்தை

நீக்கி அறிவை விளங்கச்செய்தல் கூடுமென்க்கூறி இடையீடின்றி அன்பு செய்தலால் உடம்பு உள்ளபொழுதே திருவடி அடைதல் கூடும் என்று மேற்கூறியதை வலியுறுத்திய வாறும்.

(பொ—ரை.) முதல்வன், தன்னைப்போல் உயிரை ஆக்கிக்கொள்ள வேண்டுமென்ற கருணை மிகுதியினால் அநாதியே மலத்துடன்கூடிய உயிரோடு அம்முதல்வனும் அநாதியே நிலைபெற்று விளங்குகின்றான். கண்ணின்கண் நிலைபெற்றிருக்கும் இருளை வளர்ப்க்கத்துச் சந்திரன் நாள்தோறுஞ் சிறிது சிறிதாக நீக்கிப் பூரணையில் அறவே ஒட்டுமாறுபோல, அவ்வுயிரினிடத்துள்ள மலசத்தியைக் கருணாநிதியாகிய அம்முதல்வன் உயிரினிடத்துண்டாகும் பக்குவத்திற்கேற்ப அவ்வப் பருவந்தோறும் சிறிது சிறிதாகப் படிமுறையில் நீக்கி முதிர்ந்தபக்குவத்தில் அறவே நீக்குவன். காந்தக்கல் தனது சந்நிதிமாத்திரையினால் இரும்பைத் தன்னிடத்து இழுத்துத் தன் வசமாகச்செய்துவருஞ் செய்கையில் காந்தத்திற்குச் சலிப்பு இல்லாத வாறுபோலக் கருணையாகிய சத்தியினால் மலத்தைச் சிறிதுசிறிதாக நீக்கி நீங்குந்தோறும் நீங்குந்தோறும் நீக்குகின்ற தனது திருவருட்சத்தியைச் சிறிது சிறிதாகப் பதித்து மலம் அறவே நீங்கியபொழுது தனது சத்தி முழுதும் பதியச்செய்து உயிரைத் தன்கண் இழுத்துத் தன் வசமாகச் செய்து வருஞ் செய்கையினால் முதல்வனுக்கு ஒருபொழுதும் சலிப்பில்லை. அவ்வாறு சலிப்பின்றிச் செய்தலால் முதல்வன் வேறுபடவும்மாட்டான் எ—று.

(க—ரை.) வளர்பக்கத்துச் சந்திரன் ஒவ்வொருகலையால் இருளைச் சிறிது சிறிதாக நீக்கிப் பூரணையில் அறவே நீக்குமாறுபோல முதல்வனும் தனது சத்தியால் உயிரின் மலத்தைச் சிறிது சிறிதாக நீக்கி முடிவில் அறவே நீக்கித் தன் வண்ணமாகச் செய்துகொள்வன் என்பதாம்.

விகாரமாவது வேறுபடுந்தன்மையாம். காந்தம் இரும்பை இழுத்துக் கொள்வதால் இரும்பின் தன்மையாகவேனும் காந்தத்தன்மை இரும்புத் தன்மையாகிய இருதன்மையாகவேனும் வேறுபடுதல் இல்லை. அதுபோல முதல்வன் உயிரை இழுத்துக்கொள்வதால் உயிரின் தன்மையாகவேனும் உயிரின் தன்மை முதல்வன்தன்மையாகிய இருதன்மையாகவேனும் வேறுபடுதலில்லையென அறிக.

இரும்பு காந்தத்தின் வேறாய்நிற்றலால் காந்தம் இரும்பை இழுத்தல் கூடும். உயிரும் முதல்வனும் எக்காலத்தும் பிரிப்பின்றிநிற்கவும் உயிரை முதல்வன் இழுத்துக்கொள்வன் என்றல் எவ்வாறு பொருந்துமெனின், பிரிப்பின்றிநிற்றலை அறியாதிருந்த அறியாமையைநீக்கி அறியச்செய்தலே இழுத்துக்கொள்ளுதல் என்பதற்குப் பொருளென அறிக. இது எதுபோல எனின், மனதைத் தன்வசமாக இழுத்துக்கொண்டான் என்றவிடத்து மனம் புறத்துச்செல்லுதலைநீக்கித் தன் ஆணைவழி நிற்கச்செய்தலைக் குறிக்கு

மாறுபோலாம். ஆணவழிநிற்றல் அடங்கி நிற்றலாகுமாதலால் இரும்பு அடங்கிநிற்கும் காந்தம் உவமையாயினமையும் அறிக.

செய்யுளில் மதியென்று பொதுப்படக் கூறியிருப்பினும் இருளைத் துரந்தவாறு என்பதற்கேற்ப ஏற்புழிக்கோடலென்னும் உத்தியால் வளர் பக்கத்துச் சந்திரனைக் குறித்தது. துகளறுபோதம் ௩௩-வது செய்யுளில் "அந்த அருள் உனக்கு இங்கு ஆதாரமாய் அல்லின்—இந்து வெனஎழுத் திட்டு" என்றவிடத்து அல்லின் இந்து என்றதும் வளர்பக்கத்துச் சந்திரனையேயாம்.

மன்னும் அரனே என்றதிலுள்ள ஏகாரம் மலத்தைநீக்குதல் உயிரின் செயலினாலாவதன்று திருவருட் செயலினாலேயே ஆவதாகும் என்று கருதும் வண்ணம் உயிரின் செயலைப் பிரித்தமையின் பிரிநிலைக்கண் வந்தது.

வான் பான் பாக்கு என்னுஞ்சொற்கள் வினையெச்ச வாய்பாடுகளாகும். அச்சொற்கள் சிறுபான்மை தொழிற்பெயர் விகுதியாகவும் வரும். இதனை நன்னூல் வினையியல் உச-வது சூத்திரவுரையுட்காண்க. இச்செய்யுளில் வசஞ்செய்வான் என்றவிடத்து வான் என்றது தொழிற்பெயர் விகுதியாய் வசஞ்செய்தலென்னும் பொருளைக்குறித்து நின்றது. வான்தொழிற் பெயர் விகுதியாய் வருமென்பதை நீ வருவான் ஏன் என்றவிடத்து நீ வருதல் ஏன் என்று பொருள்கொள்ளுமாற்றானும் அறிக. பாக்கு என்பதைத் திருக்குறள் காதற் சிறபபுரைத்தல் எ—வது செய்யுளில் "கரப்பாக்கறிந்து" எனவும், ஷை நூல் ஒழுக்கமுடைமை கூ-வது செய்யுளில் "படுபாக்கறிந்து" எனவும் வருவனவற்றிற்குக் கரத்தல் அறிந்து எனவும் படுதல் அறிந்து எனவும் பொருள்கொள்ளுமாற்றால் அறிக.

வசஞ்செய்வான் என்றவிடத்து உவம உருபுவிரித்து வசஞ்செய்வான் போல என்றுரைக்க. கலிப்பில் என்றவிடத்துச் சலித்தல் என்பது இளைத் தலைக்குறித்து நின்றது.

செய்தல் என்றவிடத்து ஏழாம் வேற்றுமைக் கண் உருபு விரித்துச் செய்தற் கண் என உரைக்க.

மதி துரந்தவாறு மலந்துரந்து என்ற இத்திருட்டாந்தத்தானே மலம் சிறிது சிறிதாக நீங்கி முடிவில் அறவே நீங்குமென்றாகி மலம் நீங்குதல் உடம்பு நீங்கியபின் பரமுத்தியில் என்பார் மதம் மறுக்கப்பட்டவாறு காண்க.

பக்குவத்துக்கேற்பப் படிமுறையில் மலத்தை நீக்குவன் என்றதனால் படிமுறையாகிய சத்திநிபாதமும் சிவபுண்ணியமும் நால்வேறுவகைப் பட்டு அவை ஒவ்வொன்றும் நான்கு நான்காகப் பதினாறுவகைப்பட்டு அப் பதினாறும் ஒவ்வொன்றும் பல வேறுவகைப்பட்டு விரிந்தனவாமென அறிக.

அவற்றின் விரிவை மேல் எட்டாஞ்சூத்திரத்துட் கூறினும்; அவ்விடத்துக் காண்க.

மலம் அனாதியாயினும் நீக்கப்படுமெனக் கூறி மலம்நீங்குமென
மேற்கூறியதை வலியுறுத்தும்

உதாரணம்.

நசித்தோன்றி னுள்ள நசித்தலா லொன்று,
நசித்திலதே லொன்றுவ தில்லை—நசித்துமல
மப்பணைந்த வுப்பி னுளமணைந்து சேடமாங்
கப்பின்று மீசன் கழல்.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், உயிருக்குக் குணம்போல அனாதியாயுள்ள சகச மலம் அவ்வுயிரின் வேறாய்த்துரக்கற்பால தன்றாகலின் மலநதுரந்தென்றது அமையாதென்னும் பாடாணவாத சைவரைநோக்கி அருத்தாபத்தி அளவையான் அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) நசித்து ஒன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்று நசித்திலதேல் ஒன்று ஆவது இல்லை—(அரன்கழல் செல்லுங்கால் அதனை ஆன்மா கெட்டொன்றுமோ கெடாதொன்றுமோ வெனக் கடாயினார்க்குக்) கெட்டொன்றுமெனின், ஆன்மா கெட்டுப்போகலான் ஒன்றமாட்டாது. கெடாதொன்றுமெனிற் (கெடாதவழி இருபொருளாய் நிற்றலின்) ஒன்றுமாறில்லை. (ஆகலான் அருத்தாபத்தியளவையானே),—அப்பு அணைந்த உப்பின் மலம் நசித்து உளம் ஈசன்கழல் அணைந்து சேடம் ஆம்—உப்புத் தனது கண்டிப்புநீங்கி நீரினொன்றுமாறுபோலத் தனது சகசமலங் கெட்டொழிய ஆன்மா அரன்கழலையொன்றி (அவ்வரன்கழற்குச்) சேடமாம்,—கப்பு இன்று ஆம்—(அங்ஙனஞ் சேடமாகிய ஆன்மாவுக்கு மீளக்) கவர்ச்சியில்லை எ-று.

ஒன்றுதென்னும் துவ்விகுதி விகாரத்தாற் றொக்கது. பின் வந்த நசித்து என்பது செயவெனெச்சத்திரிவு. யாதொன்று யாதொன்றன் பொருட்டேயாய்த் தனக்கெனச் சுதந்திரமின்றி நிற்கும் அஃததற்குச் சேடமென்பதறிக. "அவையுடைமை யாளாநாமங்கு" என ஓதுதலின், எனைப் பசுபாசங்கள் முதல்வனுக்குப் பொதுவகையாற் சேடமாயினும் இதுபோலச் சிறப்புவகையாற் சேடமாதலின்மையின் இதனை வேறெடுத்தோதினர். முத்திநிலை

கூறி முடிந்தமையின் இறுதிக்கட்கப்பின்றுமென அவினுவிருத்தி யுங்கூறினர்.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) நசித்து ஒன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்று நசித்திலதேல் ஒன்று ஆவது இல்லை அப்பு அணைந்த உப்பின் மலம் நசித்து உளம் ஈசன் கழல் அணைந்து சேடம் ஆம் கப்பு இன்று ஆம்.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றேவெனின், உயிரின்குணம் உயிர் உள்ளபொழுதே உள்ளதாய் உயிர் உள்ள அளவுங்கெடாதவாறுபோல மலமும் உயிர் உள்ளபொழுதே உள்ளதாய் அப்பொழுதே உயிரோடுகூடியிருப்பதாம் ஆதலின், குணம் உயிரைவிட்டு நீங்காதவாறுபோல இயல்பாகவே கூடி இருக்கும் அம்மலம் உயிரின்வேருய் நீக்கப்படமாட்டாது. ஆதலால் மேலைவெண்பாவில் மலம் நீக்கப்படுமெனக் கூறியது பொருந்தாதென்பர் பாடாண வாதசைவர். அவரைநோக்கி உயிர் உள்ள அன்றே முதல்வனும் அவ்வுயிரோடு பிரிப்பின்றி நிற்கவும் அப்பொழுது முதல்வனை அறியாமையும் பின்னர் அம்முதல்வனை அறிதலும் உனக்கும் உடன்பாடாதலின், பின்னர் அறிதல் மலநீக்கத்தினலன்றிச் சம்பவியாது ஆதலால் இந்த அருத்தாபத்திப் பிரமாணத்தைக்கொண்டு மலம் அனுதியாயினும் ஆன்மாவின் கிரியாசத்தியால் நீங்குமெனக்கூறி மேலைவெண்பாவில் பாசம் நீங்குமெனக் கூறியதை வலியுறுத்தியவாறும்.

(பொ-ரை.) அரன் திருவடியை ஆன்மாக்கூடி ஒன்றுகுங் காலத்தில் ஆன்மாக்கெட்டு ஒன்றுகுமோ கெடாது ஒன்றுகுமோ எனக் கேட்டவிடத்துக் கெட்டுக்கூடி ஒன்றுகுமென்று கூறின், ஆன்மாக் கெட்டபொழுது கூடும்பொருளே இல்லையாதலின் ஒன்றுதலுமில்லை; கெடாது கூடி ஒன்றுகுமென்றுகூறின் கெடாதவிடத்து அரனும் ஆன்மாவும் வேறு வேறு பொருளாய் நிற்றலின் ஒன்றுவதில்லை. ஆகவே மல நீக்கத்தாலன்றித் திருவடியைக்கூடி ஒன்றுதல் சம்பவியாது என்னும் அருத்தாபத்திப் பிரமாணத்தால் உப்புத் தன்னிடத்துள்ள கண்டிப்பாகிய தூலத்தன்மை நீங்கியவிடத்து நீரோடுகூடி ஒன்றுமாறுபோல ஆன்மாவும் தன்னுடன் இயல்பாகவேகூடி இருந்த ஆணவமலங் கெட்டொழிந்தவிடத்து அரன் திருவடியைக் கூடி ஒன்றுகி அவ்வரன்திருவடிக்கு அடிமையாம். அவ்வாறு அடிமையாகிய ஆன்மாவிற்குத் தனக்கெனச் சுதந்திரமான செயலில்லாமையானும் மலரகிதனுகிய அரன் மலத்தைக் கூட்டானுதலானும் அவ்வான்மா மீள மலத்தைப பற்றுதலில்லை ஏ-று.

(க-ரை.) மல நீக்கத்தாலன்றி இறைவன் திருவடி அடைதல் சம்பவியாமையால் திருவடியடைதல்பற்றி மலம் அனுதியாயினும் நீங்கும் என்பதாம்.

முத்தருக்கு மலம் நீங்கினும் ஏனைப்பெத்தரிடத்து மலம் இருத்தலால் அனாதிக்கு இழுக்கில்லை. இக் கருத்துப்பற்றியே சிவஞானசித்தியார் ககம் சூ-ம், சு-வது செய்யுளில் "நெல்லினுக்குத் தவிடுமிகள் அனாதியாயே நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்தீர்—சொல்லியிடிற்றுகளற்ற அரிசியின்பால் இல்லைத் தொக்கிருந்து மற்றொருநெற் றோன்றிடாவாம்— மெல்லையிவை விடும் அறவே இவைபோல அணுவை மேவுமலம் உடல் கன்மம் அனாதிவிட்டே நீங்கும்—நல்லசிவ முத்தியின்கண் பெத்தான்மா வை நணுகிநிற்கும் ஆதலால் நாசமும் இன் றாமே." என வழிநூலாசிரியர் அருளிச்செய்வாராயினர். இன்னும் இதுபற்றிய ஆசங்கைகட்கெல்லாஞ் சமாதானம் சித்தியார் உரையினும் தசகாரிய விளக்கத்தினும் கூறியிருக்கின் றமையால் அவ்விடங்களிற் காண்க.

நசித்தலால் ஒன்றாது என இருக்கவேண்டியது செய்யுள் விகாரத்தால் ஒன்றா என நிற்றலால் அவ்விடத்தில் துகரவிகுதி தொக்கு நின்றது.

தனிச்சீரிலுள்ள நசித்து என்பது நசிக்க என்னும்பொருளில் நின்றது. நசிக்க என்பது செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அந்த எச்சம் செய்து என்னும் வாய்பாட்டு எச்சமாகத்திரிந்து நசித்து என நின்றது.

ஒரு பொருளைப்பற்றித் தனக்கெனச் சுதந்திரமின்றி நிற்பது சேட மாகும். இது மேல் ஒன்பதாஞ் சூத்திரத்து மூன்றும் அதிகரணத்து முதல் வெண்பாவிலுங் கூறப்பட்டுள்ளது. சேடம் எனினும் அடிமை யெனினும் ஒக்கும். அதாவது, ஆன்மா முதல்வன் திருவடி அடைதற்பொருட்டாகத் தனக்கெனச் சுதந்திரமின்றி அவன் அருள்வழிநின்று திருவடியைஅடைந்து சிவானந்தத்தை அநுபவித்தலால் அவ்வான்மா அம்முதல்வனுக்கு அடிமை என்பதாம். இந்நூல் இரண்டாஞ் சூத்திரம் நாலாவது அதிகரணத்து முதல் வெண்பாவில் "அவை உடைமை ஆளாம் நாம் அங்கு" என ஓதுதலால் திருவடியை அடையாத ஏனைய உயிர்களும் பாசங்களும் முதல்வனுக்கு அடிமையாதல் பெறப்படவும், திருவடியடைந்த உயிரை அடிமை என்றத னால் உண்டாகிய சிறப்பு என்னையெனின், அடிமை, பொதுவெனவும் சிறப்பெனவும் இருதிறப்படும். அவற்றுள், பொதுவான அடிமை முதல் வனை அறிவதில்லை. அறியாமையால் முதல்வன் அருள்வழிநிற்கும் பாசத் துக்கும் அடிமையாகிப் பிறந்து இறந்து உழலும். சிறப்பான அடிமை முதல்வனை அறிந்து முதல்வனுக்கே அடிமையாய்ப பாசத்திற்கு அடிமை யாதலில்லை. அதனாற் பிறந்திறந்து உழலுதலுமில்லை. இனி முதல்வனும் பொதுவான அடிமையைப் பொதுவாகவும் சிறப்பான அடிமையைச் சிறப் பாகவும் அறிகின்றான். இது எதுபோல எனின், ஒரு அரசனுக்குக் குடி கள் எல்லாம் அடிமையேயாயினும், குடிகளை அரசன் நேரே அறியாதபொ ழுது பொதுவாய் அறிந்ததாகவும் நேரே அறிந்தபொழுது சிறப்பாய் அறிந்த தாகவும் கொள்ளப்படுமாறுபோலாம். இக்கருத்தேபற்றித் திருநாவுக்கரசு

சுவாமிகளும் "என்னை எதும் அறிந்திலன் எம்பிரான்—தன்னை நானும் முன் எதும் அறிந்திலன்—என்னைத் தன்னடியானென்று அறிந்தபின்—தன்னை நானும் பிரானென்று அறிந்தேனே." என அருளிச்செய்வாராயினர். இப் பாசுரத்தில் சிறப்பாக அறியாமையையும் அறிதலையுமே கூறியவாறும். ஆத லால் மேல் இரண்டாஞ் சூத்திரத்தால் பொதுவாக அடிமையென்பது பெறப்பட்டதாயினும் சிறப்பாகப் பெறப்படாமையால் சிறப்பாக அடிமை யாதலை வேறாக எடுத்து இச்சூத்திரத்திற் கூறினாரென அறிக.

அவ்வாறாயினும், மேல் ஒன்பதாஞ் சூத்திரத்து மூன்றாம் அதிகர ணத்து முதல் வெண்பாவிலேயே சேடனும் எனச் சிறப்பான அடிமை யைப்பற்றிக் கூறியிருக்கவும் இவ்விடத்துங் கூறிய தென்னையெனின், பொதுவான அடிமையும் பொதுவெனவும் சிறப்பெனவும் இருதிறப்படும். அவற்றுள், பாசத்தோடுகூடிய உயிர்கள் பொதுவான அடிமை. பாசம் நீங்குதற்காகச் சாதனஞ்செய்யும் உயிர்கள் சிறப்பான அடிமை. அவ்வுயிர் கள் பாசத்தோடுகூடிய ஏனைய உயிர்களைநோக்கச் சிறப்பாயினும் பாசம் அறவே நீங்கிச் சிவபெருமான்றிருவடியில் இரண்டறக் கலத்தல் இல்லை. ஆதலால் மேல் ஒன்பதாஞ் சூத்திரத்தில் சாதனஞ்செய்யும் முறைபற்றி அடிமைத்திறங்கூறி இச்சூத்திரத்தில் அநுபவ நிலைபற்றி அடிமைத்திறங் கூறினாரென அறிக.

இவ்வெண்பாவுடனே முத்திநிலைகூறி முடிந்தமையால் மலம் நீங்கு மென்று கூறியதோடு மீளப்பற்றுதல் இல்லையெனப் பற்றாமைக்கு எதுவா கிய திருவடியைவிட்டு நீங்காமையையும் உடன் கூறினார்.

கேவல சகலசுத்தம் என்னும் மூன்றுநிலையை ஆன்மா அடைதலால்
சார்ந்ததன்வண்ணமாம் தன் தன்மையினின்றும் வேறுபடாதெனக் கூறி
மலம்நீக்கப்படும் என்று மேற்கூறியதை வலியுறுத்தும்

உதாரணம்.

பொன்வாண்முன் கோண்மூவிற் புக்கொடுங்கிப் போயகலத்
தன்வாளே யெங்குமாந் தன்மைபோன்—முன்வாண்
மலத்தின் மறைந்துள்ள மற்றுலகை யுண்ணு
மலத்திரித்துச் செல்லும் வரத்து.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-ஙின், நான்காஞ் சூத்திர முதல் இதுவரையிற் கூறிப் போந்த கேவல சகல சுத்தமென்னும் முத்திறத்தவத்தை களினும் ஆன்மாத் தன்னியல்பிற்குக் கேடின்றியே நிற்குமென் பது உவமையின் வைத்துக்காட்டி மேலதனை வலியுறுத்துதனுத லிற்று.

(இ-ள்.) பொன் வாள் முன் கொண் மூவில் புக்கு—ஞாயிறு காலைப்போதில் முகிற்படலத்துண் மறைந்து,—ஒடுங்கி—(அம்மு கிற்படலம் ஒருபுடைநீங்கிய வழித்தன்னொளி ஏகதேசமாய்) ஒடுங் கித்தோன்றி,—போய் அகல எங்கும் தன்வாளே ஆம் தன்மை போல்—(அம்முகிற்படலம் பெருங் காற்றானடியுண்டு முழுவதும்) விட்டொழிந்த வழி எங்கணும் தன்னொளியேயாய்த் தோன்றும் பெற்றிபோல,—உள்ளம் முன் வாள் மலத்துள் மறைந்து—ஆன் மா அநாதியே தன்னறிவு மலத்துண் மறைப்புண்டு (கேவலப் பட்டு),—மற்று (ஒடுங்கி) உலகையுண்ணும்—பின்பு (கருவிகளோடு கூடி ஏகதேசமாய் அறிவுவிளங்கி) ஐம்புலன்களை விடயிக்கும்,— (மற்று) மலத்து இரித்து (எங்குமாம் வாள்) வரத்துச்செல்லும்— பின்பு அம்மலத்தை (முதல்வனருளாற்) பற்றறக்களைந்து (வியா பகமாய் அறிவு) விளங்கி அவனது சீபாதத்தையணைந்து சுத்தப் படும் எ-று.

தன்மை என்றார் கொண் மூவிற் புக்குழியும் கேடின்மையின். ஏகாரம் தேற்றத்தின் கண் வந்தது. பின் வந்த வாள் ஆகுபெயர். வினைமாற்றின் கண்வந்த மற்றென்னுமிடைச்சொல் மலத் திரித் தென்பதனோடு மியைந்தது. சாரியை யுள்வழித் தன்னுருபு நிலை யாதுவந்தது இலைசாற்கொள்க. உவமைவினைகள் பொருளினுஞ் சென்றியைந்தன. அறிவுமறைந்தும் ஒடுங்கியும் மறைப்பு நீங்கி யே எங்குமாய் நிகழ்தல் மாத்திரைக்கே பொன்வா ளுவமையென் பார், உலகையுண்ணும் வரத்துச்செல்லுமென வேற்றுமையும் உடன் கூறினார். மலம் நசித்தலாவது தனது மறைத்தற்சத்தி மடங்கிக் கீழ்ப்படுதல் மாத்திரையே பிறிதன்றென்பதூஉம் உவ மையாற் பெறுதும்.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) பொன் வாள் முன் கொண்மூவில் புக்கு ஒடுங்கிப் போய் அகல எங்கும் தன் வாளே ஆம் தன்மைபோல் உள்ளம் முன் வாள் மலத்துள் மறைந்து மற்று (ஒடுங்கி) உலகை உண்ணும் (மற்று) மலத்து இரித்து (எங்குமாம் வாள்) வரத்துச்செல்லும்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற் றேவெனின், மேல் நான்காஞ் சூத் திரத்தால் மலத்துடன் கூடியுள்ள கேவல அவத்தையும், ஐந்தாஞ் சூத்திரத் தால் கருவிகளோடு கூடியுள்ள சகல அவத்தையும், ஆறாஞ் சூத்திரமுதல் இச் சூத்திரம்வரைகருவிகளையும் மலத்தையும் நீக்குஞ் சுத்த அவத்தையும்

கூறி முடித்தமையால், இவ்வாறு வேறு வேறு அவத்தையை ஆன்மா அடைவதனுல் ஆன்மாவுக்குத் தனித்தன்மை ஒன்று இல்லையெனப்படும். படவே தனித்தன்மையில்லாத ஒருபொருள் உண்டென்றல் பொருந்தாது. ஆதலால் அஞுதியே மலத்துடன் கூடியுள்ள தன்மைதான் ஆன்மாவுக்குத் தனித்தன்மை யெனக்கொண்டு மலம் நீக்கப்படமாட்டாது என்பாரை நோக்கி வேறு வேறு அவத்தையை ஆன்மா அடைந்தாலும் சார்ந்ததன் வண்ணமாகுந் தன் தன்மையில் நின்றும் வேறுபடுதலின்றியே நிற்குமென உவமையின் வைத்துக்காட்டி மலம் நீக்கப்படுமென்று மேற் கூறியதனை வலியுறுத்தியவாறும்.

(பொ—ரை:) சூரியன் காலைப்போதில் மேகக்கூட்டத்துள் மறைந்து ஒளி விளங்காமல் அம்மேகக்கூட்டம் சிறிது நீங்கிய விடத்து அச்சூரியனெளி சிறிது விளங்கித்தோன்றிப் பெருங்காற்ருல் அம் மேகக்கூட்டம் அடியுண்டு முழுவதும் விட்டொழிந்த விடத்து அச்சூரியனெளி எங்குமாய் விளங்கித் தோன்றுமாறுபோலச், சார்ந்த தன்வண்ணமாந் தன்மையுடைய ஆன்மா அஞுதியே தன்னறிவு மலத்தைச்சார்ந்து அறிதற்ரெழிலின்றிக் கேவலப்பட்டு, பின்பு மல நீக்கத்தின்பொருட்டு முதல்வன் அருள், கருவிகளைக்கூட்ட அக்கருவிகளோடுகூடிச் சிறிது அறிவு விளங்கப்பெற்று உலகப்பொருளையறிந்து, பின்பு அம்மலத்தை முதல்வனருளால் அறவேநீக்கிப் பூரணமாய் அறிவு விளங்கப்பெற்று அம்முதல்வனது திருவடியைக்கூடிச் சுத்தப்படும் எ-று.

(க-ரை) சூரியன் மேகத்துடன் கூடினபொழுதும் மேகஞ் சிறிது நீங்கியபொழுதும் மேகம் அறவே நீங்கியபொழுதும் தன் தன்மையிற் கெடாதவாறுபோல ஆன்மாவும் கேவல சகல சுத்தமென்னும் மூன்று அவத்தையைக் கூடியபொழுதும் சார்ந்ததன் வண்ணமாகுந் தன் தன்மையில் நின்றும் வேறுபடாது. ஆதலால் அஞுதியே கூடியுள்ள மலத்தின் நின்றும் நீங்கிச் சுத்தப்படும் என்பதாம்.

ஒரு பொருளின்தன்மை அப்பொருள் கெட்டாற்ருன் கெடும். ஆதலால் சூரியன் ஒளியானது மேகத்துள் மறைந்தவிடத்தும் சூரியன் கெடாமையால் எங்குமாய் விளங்குந் தன்மையுங்கெடாது அடங்கியிருந்ததென்பதை உணர்த்துதற்கு எங்குமானதுபோல் என்று கூருது எங்குமாந் தன்மைபோல் என்று கூறினர்.

தன்வாளே என்றதிலுள்ள ஏகாரம் ஒடுங்கியும் ஏகதேசமாயும் உள்ள ஒளியையின்றி எங்குமான ஒளி வேறன்று என்பதை உணர்த்துதலின் தேற்றம்.

முன் வாள் என்றதிலுள்ள வாள் பிரகாசத்தையுடைய அறிவைக்குறித்தலால் ஆகுபெயர்.

மற்றுலகையுண்ணும் என்றதிலுள்ள மற்று என்பது மலத்துள் மறைந்து கிடந்ததற்கு மாருகக் கருவிகளோடு கூடி உலகை உண்ணும் என்ற பொருள்பயத்தலின் வினைமாற்றின் கண் வந்தது. அவ்வாறே உலகை உண்ணும் என்றதற்கு மாருக மலத்து இரித்துச் செல்லும் என்னும் பொருள் தருதற்கு மேற்கூறிய மற்று என்பது மலத்து இரித்து என்பதனோடும் பொருந்திற்று.

மலத்தை இரித்து என்றிருக்கவேண்டுவது மலத்து இரித்து என நின்றது. மலத்து என்றதில் அத்து என்பது சாரியை. சாரியை உள்ளவிடத்துத் தன்னுருபு நிலையாமை தொல்காப்பியம் எழுத்ததிகாரம் தொகை மரபு கரு-வது சூத்திரத்தில் "மெய்பெற" என்ற இலேசாற்கொள்ளும் விதியாதலின்; மலத்து என்றதில் அத்துச் சாரியை உள்ளதாகலால் மலத்தின் தன்னுருபாகிய ஐகாரங்கெட்டது. ஆதலால் மலத்து என்பதற்கு மலத்தை யென உரை செய்யப்பட்டது.

ஒடுங்கி எனவும் எங்குமாம் எனவும் சூரியனுகிய உவமைக்கு ஓதிய வினைகள் பொருளாகிய ஆன்மாவிலுஞ் சென்று பொருந்தின. ஆதலால் கேவலப்பட்டு எனவும் வியாபகமாய் எனவும் உரை செய்யப்பட்டது. சூரியன் ஒளியானது மேகஞ் சிறிது நீங்கியவிடத்துச் சிறிது பிரகாசித்தலும் முற்றும் நீங்கியவிடத்து எங்குமாய்ப் பிரகாசித்தலுமேயன்றிப் பிறிதொன்றை அடைவதில்லை. ஆதலால் அவ்வுவமையைக்கொண்டு ஆன்மா உலகத்தை அறியுமென்றும் முதல்வனது திருவடியை அடையுமென்றும் கூற முடியாதேயென்னும் ஆசங்கையை நீக்குதற்பொருட்டு, ஆன்மாவின் அறிவு மறைந்தும் ஏகதேசமாய் விரிந்தும் மறைப்புநீங்கி எங்குமாய் விளங்குதல் மட்டுக்குமே சூரியன் உவமையாகுமன்றி முற்றுவமையன்றென்று உணர்த்த வேண்டி, உலகையுண்ணும் எனச் சகலத்தில் ஆன்மாவின் வேற்றுமையும், வரத்துச்செல்லும் அதாவது விளங்கிச்செல்லும் எனச் சுத்தத்தின் ஆன்மாவின் வேற்றுமையும் ஒடுங்கி என்பதனோடும் எங்குமாயென்பதனோடும் உடன் கூறினர். அதாவது உவமைக்கோதிய விசேடத்தின் வேருகிய விசேடங்களை உவமேயத்தில்எடுத்துக்கூறினர் என்றபடியாம்.

மலம் நசித்தல் என்றது மலத்தினுடைய மறைத்தற்சத்தி மடங்கிக் கீழ்ப்படுதன்மாத்திரையே யன்றிப் பொருள் கெடுதலில்லை. எதனுலெனின், மலத்தோடுகூடிய ஆன்மாக்களும் இறைவனோடு அத்துவிதமாய்க் கலந்து நிற்கின்றன; நிற்பினும் உயிரைப்பற்றி நிற்கும் அம் மலசத்தி இறைவனைப் பற்றுதலில்லை; இறைவனைப்பற்ருது சத்தி மடங்கி உயிர்களைப்பற்றிப் பொருள் கெடாதவாறுபோல, இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் முத்தர்களைப் பற்ருது சத்திமடங்கி ஏனைப் பெத்தர்களைப் பற்றிப் பொருள்கெடாது நிற்குமாதலால் என்க. இவ்வாறன்றி முத்தரிடத்தும் மலம் சத்திகெட்டுப் பொருள் இருக்குமெனின், மேலைவெண்பாவில் மலம் நசித்து என்றதனோடு முரணுவதன்றியும் குணம் இல்லாத குணியும்

உண்டெனப்பட்டு வழுவாம். இது மேகம் சூரியனைவிட்டு நீங்கி மறைத்தற் சத்தி மடங்கினும் மேகமண்டலத்தில் பொருள்கெடாது இருத்தலின் வைத்தும் பெறப்படுமாறு அறிக.

இச் சூத்திரத்தினாலும் அதிகரணங்களினாலும் கூறி முடித்த தொகைப்பொருள் :—பாச நீக்கமுஞ் சிவப்பேறும் என்னும் பயன் இரண்டனுள் மேல் பத்தாஞ் சூத்திரத்திற் பாச நீக்கங்கூறிப் பாசம் நீங்கப்பெற்ற தனால் ஆன்மாவானது தன்னோடு முதல்வன் அத்துவிதமாய் நின்று காட்டியுங் கண்டும் வரும் உபகாரத்தை இடைவிடாத அன்பால் நினைந்து அவன் திருவடியாகிய சிவானந்தத்தையடைதலே சிவப்பேறு என இப்பதினொராஞ் சூத்திரத்தாற் கூறப்பட்டது. படவே, முதல்வன் உயிர்களுக்கு அறிவித்தலாகிய காட்டும் உபகாரம் மட்டுமே செய்வன் அன்றி அறிதலாகிய காணும் உபகாரமும் செய்வான் என்றல் பொருந்தாதென்று ஒரு சாரார்கூற, முதலதிகரணத்தால் அவரை மறுத்து அத்துவிதநிலையை இனிது விளக்கிக் காணும் உபகாரத்தையும் செய்வன் என்பதும், முத்தியிலும் காணும் உபகாரத்தைச் செய்தலினால் தன்னைப் பற்றுதலென்னும் குற்றமில்லையென்பதும் கூறப்பட்டன. படவே, பாசம் நீங்கி ஏகனாய் நிற்கும் போது மறவாமையும் அன்புசெய்தலும் திருவடி அடைதலும் எவ்வாறு கூடுமென்று ஒரு சாரார்கூற, இரண்டாம அதிகாணத்தால் அவரை மறுத்து அம்மூன்றும் உடைமையே ஏகனாய்நிற்கும் நிட்டையென்பதும், அந்நிட்டையாகிய திருவடி அடைதல் அயரா அன்பால் அப்பொழுதே கூடுமென்பதும், பாசம்நீங்கித் திருவடி அடைதல் உடம்பு உள்ளபொழுதே கூடும் என்பதும், பாசம் அனாதியாயினும் நீங்குமென்பதும், பாசம் நீங்குதலினாலும் திருவடியை அடைதலினாலும் சார்ந்ததன் வண்ணமாகும் ஆன்மாவின் சிறப்புத் தன்மைக்குக் கேடில்லையென்பதும் கூறப்பட்டன.

இரண்டாம் அதிகாணம் முற்றிற்று.

பதினொராஞ்சூத்திரம் முற்றிற்று.

பன்னிரண்டாஞ் சூத்திரம்.

பதினொராஞ் சூத்திரத்தால் சிவப்பேறு கூறி, அப்பேறு பெற்ற ஞானிகள் உடம்போடு கூடியிருக்கும் அளவும் எவ்வாறு இருப்பர் என்பதை, இப்பன்னிரண்டாஞ் சூத்திரத்தாற் கூறி மேல் ஆசங்கை இன்மையின் நூலை முடிக்கின்றார்.

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

இச்சூத்திரத்திற் கூறுதலினாலும், மேலைச் சூத்திரத்தில் பரமுத்தி கூறி இச்சூத்திரத்தில் சீவன் முத்தி, கூறுதலினாலும் சூத்திரத்தின் சம்பந்தம் பெறப்பட்டது.

சிற்றுரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு.

(அபராவன்பினரான் கழலணைந்த சீவன் முத்தனாவான்) செங்கமல மலர்போல (விரிந்து விளங்கிய முதல்வனது) நோன்றாளை அணைய வொட்டாது (அயர்த்தலைச் செய்விக்கும்) அவ்வியல்பினையுடைய மும்மல வழுக்கை (ஞான நீராற்) கழுவி (அங்ஙனம் அபராவன்பு செய்யு) மெய்ஞ்ஞானிகளோடு கலந்து கூடி மலமயக்க நீங்குதலான் அன்புமிக்குடைய அவரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் முதல்வனெனவே (கண்டு) வழிபட்டு வாழும் எ-று.

எழுவாய் மேலைச் சூத்திரத்தினின்றும் வருவிக்கப் பட்டது. சீவன் முத்தனென்பது எஞ்சுபுழிக் கோடலாற் பெறுதும். நோன்றாள் வினைத்தொகை. நோன்றல் பொறுத்தல் "எடுத்துச் சுமப்பானை" என்றார் புடைநூலாசிரியரும். கழீஇ என்பது குறிப்புருவகம். மாலற நேய மலிந்தவரென்றது அம்மலங்கழீஇ யன்பரொடு மரீஇயினாரென்னும் பொருடந்து சுட்டுப் பெயர் மாத்திரையாய் நின்றது. நேயமலிதல் கூறவே, வழிபாடும் பெறப்படும். தான் அசை.

அம்மலங்கழீஇ என்றதனால் அறிவு வியாபரிக்கு மிடமும் அன்பரொடு மரீஇ என்றதனால் இச்சை வியாபரிக்கு மிடமும், தொழுமென்றதனாற் செயல் வியாபரிக்கு மிடமும் பெறப்பட்டன. படவே, சீவன் முத்தர்க்கு அறிவிச்சை செயல்கள் வேறுவிடயங்களிற் செல்லா வென்பதூஉம் பெறப்பட்டது. இம்மூன்றும் பிரிப்பின்றி ஓரிடத்தொருங்கு நிகழ்வன வாகலின், விடயவேற்றுமையின்மையு முணர்க.

தொழுக வென்னாது தொழு மென்றமையின், இஃதணைந்தோரது தன்மை யென்பது பெற்றாம். அற்றாகலினன்றே இதனைச் சாதன வோத்தின் வையாது ஈண்டுவைத்தா ரென்பது. இனித்தொழு மென்பதனை இரட்டுற மொழிந்து கொண்டு விகுதிப்பொருள்பட நின்ற முன்னிலையேவலாக்கியு முரைத்துக்கொள்க. என்னை? செல்வப்பெருக் குடையார்க்கு உணவாகிய ஆன்பால்

இச்சூத்திரத்திற் கூறுதலினாலும், மேலைச் சூத்திரத்தில் பாமுத்தி கூறி இச்சூத்திரத்தில் சீவன் முத்தி கூறுதலினாலும் சூத்திரத்தின் சம்பந்தம் பெறப்பட்டது.

சிற்றுரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு.

(அபராவன்பினரன் கழலணைந்த சீவன் முத்தனாவான்) செங்கமல மலர்போல (விரிந்து விளங்கிய முதல்வனது) நோன்றாளை அணைய வொட்டாது (அயர்த்தலைச் செய்விக்கும்) அவ்வியல்பினையுடைய மும்மல வழுக்கை (ஞான நீராற்) கழுவி (அங்ஙனம் அயராவன்பு செய்பு) மெய்ஞ்ஞானிகளோடு கலந்து கூடி மலமயக்க நீங்குதலான் அன்புமிக்குடைய அவரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் முதல்வனெனவே (கண்டு) வழிபட்டு வாழும் எ-று.

எழுவாய் மேலைச் சூத்திரத்தினின்றும் வருவிக்கப் பட்டது. சீவன் முத்தனென்பது எற்புழிக் கோடலாற் பெறுதும். நோன்றாள் வினைத்தொகை. நோன்றல் பொறுத்தல் "எடுத்துச் சுமப்பானை" என்றார் புடைநூலாசிரியரும். கழீஇ என்பது குறிப்புருவகம். மாலற நேய மலிந்தவரென்றது அம்மலங்கழீஇ யன்பரொடு மரீஇயினா ரென்னும் பொருடந்து சுட்டுப் பெயர் மாத்திரையாய் நின்றது. நேயமலிதல் கூறவே, வழிபாடும் பெறப்படும். தான் அசை.

அம்மலங்கழீஇ என்றதனால் அறிவு வியாபரிக்கு மிடமும் அன்பரொடு மரீஇ என்றதனால் இச்சை வியாபரிக்கு மிடமும், தொழுமென்றதனாற்செயல் வியாபரிக்கு மிடமும் பெறப்பட்டன. படவே, சீவன் முத்தர்க்கு அறிவிச்சை செயல்கள் ஏனைவிடயங்களிற் செல்லா வென்பதூஉம் பெறப்பட்டது. இம்மூன்றும் பிரிப்பின்றி ஓரிடத்தொருங்கு நிகழ்வன வாகலின், விடயவேற்றுமையின்மையு முணர்க.

தொழுக வென்னாது தொழு மென்றமையின், இஃதணைந்தோரது தன்மை யென்பது பெற்றும். அற்றாகலினன்றே இதனைச் சாதன வோத்தின் வையாது ஈண்டுவைத்தா ரென்பது. இனித்தொழு மென்பதனை இரட்டுற மொழிந்து கொண்டு விகுதிப்பொருள்பட நின்ற முன்னிலைவலாக்கியு முரைத்துக்கொள்க. என்னை? செல்வப்பெருக் குடையார்க்கு உணவாகிய ஆன்பால்

பயனியல்பன்னிரண்டாஞ்சூத்திரம்.

உடம்பு நோயின்றி வளரச்செய்யும் மருந்து மாதல்போல, இவ் வழிபாடு மலவாசனை சிறிதுந் தாக்குதலின்றிச் சிவானந்தம்மேன் மேல் வளரச் செய்யுஞ் சாதனமாதலு முடைமையின். கண்ண ழித்துரை பற்றி விதியாகவைத்துரைத்தலும் அதுபற்றி.

விளக்கம்.

(இச்சூத்திரத்தின் பொழிப்புரை.) மேற்பதினொராஞ் சூத்திரத்திற் கூறியவாறு அயரா அன்பின் அரன் கழலணைந்த முத்தன் வினைப்பயனை அனுபவிக்கப் புறத்துச் செல்லுங்கால், சீவன் முத்தனெனப் படுவன். அச்சீவன் முத்தன் புறத்துச் செல்லுங்கால் செங்கமல மலர்போல விரிந்து விளங்கிய முதல்வனுடைய பொறுக்குந் திருவடியை அணையவொட்டாது அத்திருவடியை மறக்கும்படி மும்மலங்களுஞ் செய்விக்கும். ஆதலால், அவ்வாறு மறக்கும்படி செய்விப்பதை இயல்பாகவுடைய அம்மும்மலங்கள் என்னும் அழுக்கை ஞானம் என்னும் நீரினாற் கழுவி, அவ்வாறுகழுவுத லால் மேலைச் சூத்திரத்திற் கூறியவாறு அயரா அன்புசெய்யும் மெய்ஞ் ஞானிகளோடு கலந்து கூடி, மலத்தினாலுண்டாகும் மயக்கம் நீங்குதலால் இடைவிடாத அன்பினையுடைய அம்மெய்ஞ்ஞானிகளுடைய திருவேட மாகிய விபூதி உருத்திராக்கங்களையும் சிவாலயத்தையும் முதல்வன் எனவே கண்டு வழிபட்டு வாழ்வன் எ-று.

சீவன் முத்தன் என்னும் எழுவாய் மேலைச் சூத்திரத்தில் நின்றும் வருவிக்கப்பட்டது. மேலைச் சூத்திரத்தில் அரன்கழல் செலுமே எனக் கூறப்பட்டதேயன்றிச் சீவன் முத்தன் எனக் கூறப்படவில்லையே யெனின், அரன்கழ லணைந்த நிலை பரமுத்தியேயாயினும் அந்நிலை நின் றார் புறத்துச் செல்லுங்கால் நிற்கும் முறைகூறும் இச்சூத்திரத்திற் கேற்ப எற்புழிக்கோடல் என்னும் உத்தியால் சீவன் முத்தன் எனவருவிக்கப்பட்ட தென அறிக.

நோன்றாள் என்பது நோன்ற நோற்கின்ற நோற்குந்தாள் எனவிரியுமா கவின் வினைத்தொகை. நோன்றல் என்பது பொறுத்தல். அதாவது அடியார் களைத் தாங்குந் திருவடி யென்பாதாம். இக்கருத்துப் பற்றியே திருவருட் பயன் என்னும் நூலில் உயிர் விளக்கம் ௫-வது செய்யுளில் "எடுத்துச் சுமப்பானை" என்றார் புடைநூலாசிரியரும். இதனையே சிவஞான சித்தியார் ௧0-வது சூத்திரம் ௧-வது செய்யுளில் "சிவனும் இவன்செய்தி யெலாம் என்செய்தி யென்றும் இவனுக்குச் செய்தது எனக்குச் செய்தது என்றும் பவமகல வுடனாகி நின்றுகொள்வன்" என வழிநூலாசிரியரும் அருளிச்செய்வா ராயினர்.

கழீஇ என்றது மலத்தை அழுக்காகவும் ஞானத்தை நீராகவும் குறிப்பால் உருவகஞ்செய்யும்படி நின்ற குறிப்புருவகம்.

மாலறநேய மலிந்தவர் என்றது, மலங்கழுவி அன்பரொடு மருவியவரினின்றும் வேருனவரன்று; அவரையே குறித்த சுட்டுப் பெயர் மாத்திரையாய் நின்றது. ஆதலால் அவரது திருவேடத்தை என உரைசெய்யப்பட்டது.

நேயமலிந்தவர் என்றதனல், அம்மெய்ஞ்ஞானிகள் கடவுளிடத்து அன்பு செய்தலேயன்றிக் கடவுளை வழிபடுதல் இல்லையோ எனின்? நேயமலிதலி ஞலேயே வழிபாடும் உண்டென்பது தானே பெறப்படும் என்க.

ஆலயந்தானும் என்றதிலுள்ள தான் என்பது அசை.

இச் சூத்திரத்தால் சீவன் முத்தருடைய அறிவு இச்சை செயல்கள் மூன்றுஞ் செல்லும் இடம் இவை யெனக்கூறியவாருகும். எவ்வாறெனின், அம்மலங் கழீஇ என்றதனல் மலத்தை நீக்குதலிலேயே அறிவு தொழிற்படு மெனவும், அன்பரொடு மரீஇ என்றதனல் அன்பர் கூட்டத்திலேயே இச்சை தொழிற்படு மெனவும், தொழு மென்றதனல் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனென வழிபடுதலிலேயே செயல் நிகழு மெனவும் மூவிடமும் பெறப்பட்டமையறிக. படவே, சீவன் முத்தர்க்கு இம்மூவிடங்களை யின்றி ஏனைய விடயங்களில் அறிவு இச்சை செயல்கள் செல்லாவென்பதூஉம் பெறப்பட்டது. அறிவு இச்சை செயல்கள் மூன்றுந் தொழிற்படும் இடம் மூன்ருதலால் மேலைச் சூத்திரத்திற் கூறியவாறு, ஒரு பொருளைப் பற்றிய முத்தன் வேறுவேறு பொருளைப் பற்றிய வேறுவேறு செயலை உடையவன் ஆவனே எனின், ஆகான். எதனலெனின், மல நீக்கத்தால் அன்பர் கூட்டத்திற் பற்றும்; அப்பற்ருல் அவரையும், அவர் வேடத்தையும், ஆலயத்தையும் வழிபடுந் தொழிலும் பிரிப்பின்றி உடனிகழ்ச்சியாய் நிகழ்வனவாம் ஆதலினலும் மலநீக்கமும் அன்பரும் திருவேடமும் சிவாலயமும் அரனையே குறித்தலினலும் என்க.

தொழுக என்று விதிவாக்கியமாய்க் கூருமல் தொழும் என்று இயல்பாயுள்ள இலக்கணவாக்கியமாய்க் கூறினமையின், இச் சூத்திரம் திருவடியடைந்த சீவன் முத்தரது தன்மையைக் கூறிற்று என்பது பெறப்பட்டது. ஆதலினற்ருன் கருத்துரைக்குப் பொருள் கூறுங்கால் சீவன் முத்திநிலையில் எனக் கூறப்பட்டது. சீவன் முத்தர்தன்மை கூறும் சூத்திர மாத லினற்ருன் இதனைச் சாதன இயலில் வையாது பயனியலாகிய இவ்விடத்தில் வைத்தாரென அறிக.

இனித்தொழும் என்றதனை இரட்டுற மொழிந்துகொண்டு தொழுவன் என்று முன்கூறிய பொருளேயன்றி தொழுக என முன்னிலை ஏவ

லாக்கியும் உரைத்துக் கொள்க. தொழும் என்பது தொழுவன் என்னும் பொருள்படப் படர்க்கை வாக்கியமாய்க் கூறுங்கால் செய்யுமென்னு முற்ரு யும், தொழுக என முன்னிலையேவல் வாக்கியமாய்க் கூறுங்கால் உம் விகு திப்பொருள் படவும் கொள்க. தொழும் என்ற இச்சொல்லை இவ்வாறு இலக்கண வாக்கியமாகவும், விதிவாக்கியமாகவுங் கொள்வானேன் எனின், பசுவின் பாலானது செல்வப்பெருக்கம் உடையார்க்கு உணவாயும் உடம்பு நோயின்றி வளரச்செய்யும் மருந்தாயும் இருத்தல்போலச் சீவன் முத்தரிட த்துநிகழும் இவ்வழிபாடு சிவானந்த அனுபவத்தை மேன்மேல் வளரச் செய் யும் அநுபவமாயும், மலவாசனை யாகிய நோயைத் தீர்க்குஞ் சாதனமாகிய மருந்தாயும் இருத்தலால், அநுபவ வளர்ச்சிபற்றி இலக்கணமாகவும் மல நோய் தீர்த்தல்பற்றி விதியாகவுங் கொள்ளல் வேண்டும் என அறிக. இக் கருத்துப் பற்றியே நூலாசிரியர் கருத்துரையில் வழிபடுமொறு என இலக் கணமாகவும் மேற்கோளில் மலங்களைக் களைக சிவபத்தர்களோடு இணங்குக திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் வழிபடுக எனவிதியாகவும் கூறிப் புறனடை அதிகரணத்தால் அவ்விதியை வலியுறுத்தினர்.

சிற்றுரை.

இதனுள் செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங் கழீஇ என்றது ஓரதிகரணம்; அன்பரொடு மரீஇ யென்றது ஓரதி காரணம்; மாலற நேய மலிந்தவர்வேடமும் ஆலயந்தானும் அரனெ னத் தொழுமே என்றது ஓரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

விளக்கம்.

வெ—டை.

முதலதிகரணம்.

சீவன் முத்தர் முதலாவது செய்ய வேண்டுவது மும்மலங்களைக் களைதல் எனக்கூறும்

மேற்கோள்.

ஈண்டு ஆணவமாயை காம்மியமென்னு மலங்களைக் களைக வேண்டுவது.

சிற்றுரை.

எ—து மேல் எ—னின், சீவன்முத்தர்க்கு ஒருதலையான் முன்னர்ச் செய்யக்கடவ திதுவெனச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோ டணுதலிற்று.

இ—ள் வெ - டை.

சுப்பிரமணியதேசிகர்உரை.

இ—ள். ஈண்டு—இம் மூன்றதிகாரணத்துள் வைத்து இம்முதலதிகாரணத்து,—ஆணவமாயை கான்மிய மென்னுமலங்களை—ஆணவம் மாயை கான்மியம் என்று கூறப்படும் மும்மலங்களை,—களைக என்றது—நீக்குக எ—று.

சிற்றுரை.

கன்மமலமே தன்மூலத்தை நோக்கிக் கான்மிய மெனவும் படும். காமியமெனப் பாடமோதி. ஆகாமியங் காமிய மெனத்தலைக் குறை யென்றுரைப்பாருமுளர்.

விளக்கம்.

இம்மேற்கோள் செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங்கழீஇ என்ற சூத்திரத்தின் முதற்கூற்றைப் பதச்சேதஞ் செய்து மேற்கொண்டதாகும்.

இம் மேற்கோள் என்ன சொல்லிற்றோ வெனின், சீவன்முத்தருடைய அறிவு புறத்துச் செல்லுங்கால் எவ்வாறு தொழிற்பட வேண்டுமென்பாரை நோக்கிச் சூத்திரத்தின் முதற்கூற்றைப் பதச்சேதஞ்செய்து உறுதியாக முதலாவது செய்யவேண்டுவது மலங்களைக் களைதல் எனக் கூறியவாறும்.

இவ்வதிகாரணத்தில், சீவன் முத்தர் மலங்கள் தாக்காதிருத்தற்பொருட்டு அவற்றைக்களைய வேண்டுமோ வேண்டாமோ என்பது ஐயப்பாடு. வேண்டாம் என்பது பிறர்பக்கம்.

(இம்மேற்கோளின் பொருள்.) இச்சூத்திரத்திற் கூறப்படும் மூன்று அதிகரணங்களுள் இம்முதலதிகரணத்தில் ஆணவம் மாயை கான்மியம் என்னும் மும்மலங்களை நீக்குக எ-று.

கான்மியம் என்பது கன்ம மலத்திற்கே மூலகன்மத்தின் சம்பந்தம் நோக்கி வந்தபெயர். கன்ம மலமாவது நல்வினை தீவினை என்னும் இருவி

னைகள். இவ்விருவினைகளும் கேவலத்தில் நின்றும் நீங்கி உடம்பு பெற்ற பின்னர் நிகழ்வனவாம். உடம்பால் இருவினையும் இருவினையால் உடம்பும் மாறி மாறி வரும். கேவலத்தில் நின்றும் நீங்கி உடம்பு பெறுதற்குங் கன்மம்வேண்டும். இன்றேல் பல வேறு வகைப்படச் சிருட்டி நிகழ்தல் கூடாது. அந்தக் கன்மந்தான் மூல கன்மமெனப்படும். அம்மூல கன்மமா, வது ஆன்மாவின் இச்சாசத்தியின் காரியமாகிய விருப்பு வெறுப்பேயாம். அந்த விருப்பு வெறுப்பாகிய மூலகன்மம் உண்டென்று காட்டி அம்மூல கன்மத்தின் சம்பந்தமாய் நிகழும் இருவினைகளும் கான்மியமெனப்படும் என்னும் இக்கருத்துப்பற்றியே, சிவஞான சித்தியார் உ-ம் சூ-ம் ௩௯-வது செய்யுளில் தன்மமோடதன்மமாகி * * * கன்மமும் மூலங்காட்டிக் காமிய மலமாய் நிற்கும்" என்றார் வழிநூலாசிரியரும்.

இனி இம்மேற்கோளில் கான்மியமென்றிருப்பதை காமியமென்று பாடங் கொண்டு சிவஞானசித்தியார் அ-ம் சூ-ம் ௧0-வது செய்யுளில் "இனிச் செய்கன்மம் மூலமலம் ஞானத்தால் இடிப்பன்" என வழிநூலா சிரியர் கூறியவாறு ஆணவம் மாயைகளோடு களையக்கூடியதாய் நின்றது ஆகாமியவினையே யாதலால், ஆகாமியம் என்பதிலுள்ள தலையெழுத்துக் குறைந்து காமியமென நின்றதென்று உரைப்பாருமுளர்.

சீவன்முத்தர் மும்மலங்களைக் களையவேண்டும் என்பதற்குக் காட்டும்

ஏ து.

அவைதாம் ஞானத்தை யுணர்த்தாது அஞ்ஞானத்தை யுணர்த்துமாகலான்.

சிற்றுரை.

எ-து ஏ-து எ-னின், "மலமாயை தன்னொடு வல்வினையின்றே" எனப் பாச நீக்கம் மேலே பெறப்பட்டமையின், மெய்யுணர்ந்து நிட்டைகூடியபின் அவை களையக் கிடதீதல் யாங்ஙனமென்பாரை நோக்கிச் சூத்திரத்தின் உடம்பொடு புணர்த்தோதிய பொருளைத் தெரித்துணர்த்தி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

(இ-ள்.) அம்மலங்கண் மூன்றும் மெய்யுணர்ந்து நிட்டை கூடினார் மாட்டும் யாதானு மோராற்றா னுழைந்து தம் மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாகிய பண்டை விபரீதவுணர்வை மேற் படுத்துவனவாம். ஆகலான் அஃதவர்க் காகாமையின் 'ஈண்டு ஆணவ மாயை கான்மிய மென்னு மலங்களைக் களைக' வென மேற்கொண்டது எ-று.

உணர்த்துதல் உணர்விற் கேதுவாதல். ஈண்டு அஞ்ஞான மென்றது விபரீதவுணர்வை.

விளக்கம்.

இந்த ஏது என்னசொல்லிற்றோ வெனின், மேல் பத்தாஞ் சூத்திரத் திலேயே "மலம் மாயை தன்னொடு வல்வினை யின்றே" எனப் பாச நீக் கம் பெறப்பட்டமையின், அவ்வாறு பாசம் நீங்கிப் பதினொராஞ் சூத்திரத் திற் கூறியவாறு அரன் உபகாரமாகிய மெய்யுணர்ந்து அவன் திருவடி யடைதலாகிய நிட்டை கூடியபின் ஆணவம் மாயை கன்மம் என்னு மும் மலங்களும் களையும் வண்ணம் நிற்கும் என்றல் எவ்வாறு பொருந்தும் என் பாரைநோக்கிச் சூத்திரத்தில் "செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம் மலம்" என்றவிடத்து உடம்பொடு புணர்த்தோதிய அயர்த்தலைச் செய்விக் கும் என்னும் பொருளை விளக்கிக்காட்டி மும்மலங்களைக் களைக என்று கூறிய மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

அம்மலம் என்ற வாக்கியத்தில் அயர்த்தலைச் செய்விக்கும் என்னும் பொருளைப் புணர்த்திக் கூறினமையின் உடம்பொடு புணர்த்தலாகும். இவ்வாறுகொள்ள வில்லையானால் அநாதியே திருவடியைச் சேரவொட் டாது தடுத்தலைக் குறிக்கும். அத்தடை பத்தாஞ் சூத்திரத்தாலேயே ஒழிந் தமையின் அது பொருந்தாது.

(இந்த ஏதுவின்பொருள்.) பத்தாஞ்சூத்திரத்தில் இல்லை எனக்கூறிய ஆணவம் மாயை கன்மம் என்னும் அம்மலங்கள் மூன்றும் பதினொராஞ் சூத்திரத்திற் கூறியவாறு மெய்யுணர்ந்து நிட்டை கூடினாரிடத்தும் யாதா னும் ஒரு வழியால் நுழைந்து தம்மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்திப் பிறவிக்கு வித்தாகிய பழைய விபரீதவுணர்வை மேற்படுத்துவனவாகும். அது மெய் யுணர்ந்து நிட்டைகூடினார்க்கு ஆகாமையின் இவ்வதிகரணத்தில் ஆணவ மாயை கான்மியம் என்னும் மலங்களைக் களைக என மேற்கோள் கூறிய தாம் எ-று.

விபரீத வுணர்வாவது தானல்லாத உடம்பைத் தான் எனவும் தனதல் லாத பொருள்களைத் தனதெனவும் எண்ணுதல்.

அஞ்ஞானமாகிய விபரீத வுணர்விற்கு மும்மலங்களும் ஏதுவாய் நிற் கும். எவ்வாறெனின், ஆணவம் உண்மையை அறியவொட்டாமல் மறைக் கும். மாயை மயக்கத்தை உண்டுபண்ணும். கன்மம் விருப்பு வெறுப்பை உண்டுபண்ணும். ஆகவே அறியாமையோடு கூடிய மயக்கத்தால் உண்டா கும் ஆசையால் உடம்பில் யான் என்னும் புத்தியும் பொருள்களில் என தென்னும் புத்தியும் நிகழும். இவ்வாறு விபரீதமாகிய அஞ்ஞான உணர் விற்கு ஏதுவாயுள்ள மும்மலங்களை, இந்த ஏதுவில் அஞ்ஞானத்தை உணர் த்துமெனக் கூறினர். ஆதலால் உணர்த்து மாகலான் என்றதற்கு உணர் விற்கு ஏதுவாகலான் எனக்கொள்க. ஞானத்தை உணர்த்தாது என்றதற் கும் இவ்வாறே ஞானத்தை யுணர்த்துதற்கு ஏதுவாகாது எனக்கொள்க.

இந்த ஏதுவில் அஞ்ஞானம் என்றது ஆணவ மலத்தைக் குறியாது. ஏதனுலெனின், அவைதாம் என்றதில் ஆணவமலமும் அடங்கி விட்டதனுல் என்க. ஆகவே, அஞ்ஞானம் என்றது விபரீத வுணர்வைக் குறித்தது என அறிக.

இந்த ஏது, சீவன்முத்தர் மலங்களைக் களையவேண்டாம் என்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

சீவன் முத்தர் மும்மலங்களைக் களையவேண்டும் என்பதற்குக் காட்டும்

உதாரணம்.

புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமு
மண்முதன் மாயைகாண் மாயையுங்—கண்ணிய
வஞ்ஞானங் காட்டுமிவ் வாணவமு மிம்மூன்று
மெய்ஞ்ஞானிக் காகா விடு.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், அவை அஞ்ஞானத்திற் கேதுவாய் வந்து நுழையுமாறும் அஃது அவர்க்காகாமையுந் தெரித்துணர்த்தி ஏதுவை வலியுறுத்தத னுதலிற்று.

(இ-ள்.) புண்ணிய பாவம் பொருந்தும் இக் கான்மியமும்—புண்ணிய பாவப்பயனும் புண்ணிய பாவ காரணமாயும் பொருந்துகின்ற இக் கன்ம மலமும்,—மண்முதல் மாயை காண் (இம்) மாயையும்—நிலமுதல் மோகினி யீருகக் காணப்படுகின்ற இம்மாயா மலமும்,—கண்ணிய அஞ்ஞானங் காட்டும் இவ்வாணவமும்—சுட்டியறிவதாகிய விபரீத வுணர்வைப்பயக்கும் இவ்வாணவ மலமும்,—இம்மூன்றும் மெய்ஞ்ஞானிக்கு ஆகா விடு—இம்மலங் கண் மூன்றும் மெய்யுணர்வுடைய உனக்காகாமையான் (அவற்றை) விடுத்தொழிவாயாக எ-று.

எல்லாமலங்களும் பற்றறத் துடைத்து மெய்யுணர்ந்து நிட்டை கூடினார்க்கு உடம்பு நிற்குமளவும் பிராரத்தவினை அவ்வுடம்பைப் பற்றி நிற்றலான அஃது அவர்க்கு ஓரோவழி வாசனையைத் தான் இங்குளிவாங்குங் கலம்போல வந்து தாக்கும்; அவ்வழிப் "பிற்செயாதநுபவிப்பதின்று" ஆகலின் அது சார்பாக விருப்பு வெறுப்புக்கள் உளவாம; அவை உளவாகவே, பரமே பார்த்திருப்பார்க்கு நிலமுதலிய ஏகதேசப்பொருள் காட்சிப்படும்;

படவே, அவற்றைச் சுட்டியறிவதாகிய விபரீத வுணர்வு மேற்
பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்குவித்தாம்; இவ்வா
றிம்மூன்றும் அறிவற்றம் பார்த்து இம்முறையானே வந்து தலைப்
படுமெனக் காட்டிக் கூறுவார் கன்மமாயை யாணவமென் றிம்
முறையின் வைத்து அவ்வக்காரிய நிகழ்ச்சிகளை எடுத்தோதிச்
சுட்டிக்கூறினார். இகரச் சுட்டு இடையினும் வந்தியையும். புண்
ணிய பாவ மென்றது உபசாரம் முன்வந்த மாயை முப்பத்தொரா
மென்னு முறைமைக்கணின்ற தத்துவத்தை யுணர்த்தி விடாத
வாகு பெயராய்த் தன்னை யிரூகவுடைய ஏனைத் தத்துவங்களையுந்
தழீஇயிற்று. காண் மாயை செயப்படு பொருளோடு முடிந்த
வினைத்தொகை.

இவை சிவபோகப் பெருவாழ்வை யிழப்பித்தலின் மெய்ஞ்
ஞானிக் காகாவாயின. மேன் மேன் முறுகுவனவாய இவற்றைத்
தோன்றும் பொழுதே துடையாக்கால் "களைகு நர் கைகொல்
லுங் காழ்த்த விடத்து" என்னு முறைமைத்தாய் முடியுமென்
பது பற்றி விடுஎன ஈண்டும் வலியுறுத்தப்பட்டது. விடுதலாவது,
அவை அம்முறையா னிகழ்ந்தவழி இவ்வஞ்ஞானம் ஏகதேசக்
காட்சியானாய தெனவும், அக்காட்சி விருப்பு வெறுப்புக்களது
தோற்றத்தா னாயதெனவும், அத் தோற்றமும் பிராரத்த வினை
நுகர்ச்சிக்கட்சென்ற தற்போதத்தா லாயதெனவும் அறிந்து, அங்
ஙனஞ் செல்வதாகிய தற்போதம் முளையாதவாறு பரிகரித்துச்
சிவஞானத்துளடங்கிச் "சிவாநுபவஞ் சுவாநுபூதி" யாம்படி
ஞானநிலையில் உறைத்து நிற்றல். மாயை கன்மங்கள் அஞ்ஞானங்
காட்டுதல் ஆணவ மலச்சார்பானாய செயற்கையென்ப துணர்த்து
தற்கு, மூன்றற்கும் பொதுவாக ஏதுவட்கூறிப் போந்த வதனை
ஈண்டாணவ மாத்திரைக்கே சிறந்தெடுத்தோதினார்.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோவெனின், ஏதுவிற்கூறிய ஆணவ
மாயை கான்மியம் என்னு மும்மலங்களும் விபரீத உணர்வை உண்டு பண்
ணுதற்கு ஏதுவாய் வந்து நுழையும் முறையினையும், அவ்வாறு வந்து
நுழைதல் சீவன் முத்தர்க்கு ஆகாதென்பதனையும் விளக்கிக்காட்டி அம்மூன்
றும் அஞ்ஞானத்தை யுணர்த்தும் என்ற ஏதுவை வலியுறுத்தியவாறும்.

(பெர்-ரை.) புண்ணியத்தின் பயனாகிய இன்பமாயும் பாவத்தின் பய
னாகிய துன்பமாயும் புண்ணியத்திற்குக் காரணமாகிய நல்வினையாயும் பாவத்

திற்குக் காரணமாகிய தீவினையாயும் பொருந்துகின்றது விருப்பு வெறுப்பாகிய கன்ம மலமாதலால் இக்கன்ம மலமும், பிருதிவிமுதலாகிய ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் காலமுதல் அசுத்தமாயை வரையுள்ள வித்தியாதத்துவம் ஏழும் ஆகத் தத்துவம் முப்பத்தொன்றாகக் காணப்படுகின்றது மாயா மலமாதலால் இம்மாயா மலமும், இத்தத்துவங்களாலாகிய தனு கரண புவன போகங்களைச் சுட்டி அறிவதாகிய விபரீத உணர்வை உண்டு பண்ணுவது ஆணவ மல மாதலால் இவ்வாணவ மலமும் ஆகிய இம்மலங்கள் மூன்றும் மெய்யுணர்வையுடைய உனக்காகாமையால் அம் மும்மலங்களைவிட்டு நீங்குவாயாக எ-று.

(க—ரை.) பிராரத்தவினை காரணமாக விருப்பு வெறுப்பாகிய கன்ம மலமும் கன்மமலங் காரணமாகத் தத்துவத் தோற்றமாகிய மாயா மலமும், அம் மாயாமலங் காரணமாக விபரீத உணர்வை உண்டுபண்ணும் ஆணவ மலமும் வந்து நுழையுமாதலால் அம் மும்மலங்களையும் விட்டு நீங்குக என்பதாம்.

பத்தாஞ் சூத்திரத்திற் கூறியவாறு எல்லா மலங்களும் பற்றற நீக்கிப் பதினொராஞ் சூத்திரத்திற்கூறியவாறு இறைவன் அத்துவிதமாய் நின்று உபகரித்துவரும் உண்மையுணர்ந்து அவ்விறைவன் திருவடியடைதலாகிய நிட்டைகூடின முத்தர்க்கு ஆகாமிய சஞ்சிதவினைகள் கெட்டொழியுமேயன்றிப் பிராரத்தவினை கெடுவதில்லை. ஆதலால் பிராரத்தவினை உள்ளளவும் உடம்பும் அவ்வுடம்புள்ள அளவும் பிராரத்தவினையும் நிற்கும். அப்பிராரத்த வினையானது மெய்யுணர்ந்து நிட்டைகூடிய முத்தரைப் பற்றுவதில்லையாயினும் அம்முத்தருக்கு ஒவ்வொரு சமயத்தில் உடம்போடு கூடியிருக்கும் பழக்கவாசனையால் வந்து தாக்கும். மலம் நீங்கியும் வாசனையால் பிராரத்தவினை தாக்குதல் எதுபோல வெனின், பெருங்காயம் வைத்துள்ள பாண்டத்தில் பெருங்காயம் இல்லாதபொழுதும் வாசனை தங்கியிருந்து அப்பாண்டத்தைத் தாக்குதல்போலாம்; அவ்வாறு பிராரத்தவினை தாக்கும் பொழுது அவ்வினைப்பயனை அனுபவிக்குங்கால் சிவஞான சித்தியார் உ-ம் சூ-ம் கக-வது செய்யுளிற் கூறியவாறு "பிற்செயா தநுபவிப்பதின்று" ஆதலால் செயல்வழியாகவே அனுபவம் நிகழும். அச் செயலும் விருப்பு வெறுப்புக்களின் வழியாக நிகழும். ஆகவே அனுபவங் காரணமாக உண்டாஞ் செயலின்வழியாக விருப்பு வெறுப்புக்கள் உண்டாகவே, பரமே பார்த்திருக்கும் அம்முத்தர்க்குப் பிரபஞ்சப்பொருள்கள் அறியப்படும். படவே, அப்பிரபஞ்சப் பொருள்களைச் சுட்டியறிவதாகிய விபரீத உணர்வு மேற்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்திப் பிறவிக்கு வித்தாம்: இவ்வாறு விருப்பு வெறுப்புக்களைச் செய்யுங் கன்ம மலமும், பிரபஞ்சப் பொருளைத் தோற்றச்செய்யும் மாயா மலமும், விபரீத உணர்வு மேம்படச்செய்யும் ஆணவ மலமும் ஆகிய மூன்றும் திருவடியைக்கூடிய அறிவு பிராரத்தவினை

காரணமாக அத்திருவடியை மறக்குஞ் சமயம்பார்த்துவந்து கூடும். முன்னர்க்கன்மமலமும் அக்கன்மமலங் காரணமாக மாயாமலமும் அம்மாயாமலங் காரணமாக ஆணவமலமும் வந்துகூடும் என்பதை அறிவிக்கவேண்டிச் செய்யுளில் மேற்கோளிற் கூறியவாறு ஆணவம் மாயை கன்மமென்று கூருமல் கன்மம் மாயை ஆணவம் என்று இம்முறையில் வைத்துக்கூறினர். அவ்வாறு கூறுங்காலத்தும் கன்மத்தின் காரியமாகிய விருப்பு வெறுப்புக்களையும் மாயையின் காரியமாகிய பிரபஞ்சத்தையும் ஆணவத்தின் காரியமாகிய விபரீத உணர்வையும் எடுத்துக்கூறி இக்காரியங்களையுடைய கன்மம் மாயை ஆணவம் எனச் சுட்டிக் கூறினர்.

கன்மத்திற்கும் ஆணவத்திற்கும் இகரச் சுட்டிருத்தலால் அந்த இகரச் சுட்டு நடுநின்ற மாயையோடும் வந்து பொருந்தும். ஆதலால் இம்மாயை என உரை செய்யப்பட்டது.

புண்ணிய பாவத்தின் பயனாகிய இன்ப துன்பங்களையும் புண்ணிய பாவத்தின் காரணமாகிய நல்வினை தீவினைகளையும் புண்ணிய பாவமென்றது உபசாரம்.

இன்ப துன்ப அனுபவமும் நல்வினை தீவினையாகிய செயலும் விருப்பு வெறுப்பைப் பொருந்தியே நிகழுமாதலின் புண்ணியபாவம் பொருந்தும் இக்கான்மிய மெனக் கூறினர். ஆதலினற்றான் உரையாசிரியர் "பிற்செயா தநுபவிப்பதின்று ஆகலின் அது சார்பாக விருப்பு வெறுப்புக்கள் உளவாம்" எனக்கூறினர்.

மாயை காண் மாயை என்றவிடத்து முதலாவதாகக் கூறிய மாயையானது, வித்தியா தத்துவத்துள் ஒன்றாகிய முப்பத்தொராவது தத்துவத்தை உணர்த்தி விடாத ஆகுபெயராய் அம்மாயா தத்துவத்துக்குக் கீழ்ப்பட்ட ஏனைய வித்தியா தத்துவங்கள் ஆறினையும் மண்முதல் என்றதனல் மண்முதலாகிய ஆன்மதத்துவங்களையுந் தழுவிற்று.

விடாத ஆகுபெயராவது புளியைத் தின்றான் என்றவிடத்து புளியாகிய சுவையை விடாது அதனையுடைய காயை அல்லது கனியை உணர்த்துதல். இச்செய்யுளில் மாயை என்றது அதனை விடாது அதன்கீழ்ப் பட்ட ஆறுதத்துவங்களை உணர்த்தினமையால் விடாத ஆகுபெயராயிற்று.

காண்மாயை என்றது காணப்படுகின்ற மாயை என்னும் பொருளைக் குறித்து நிற்றலால் செயப்படு பொருளாகிய மாயையோடு முடிந்த வினைத்தொகை. மாயை தானே காரியப்படாயல் ஒருகருத்தாவால் காரியப்படவேண்டுதலின் செயப்படு பொருளாயிற்று.

இம்மும்மலங்களும் சிவானந்தமாகிய சிவபோகப் பெருவாழ்வை இழக்கும்படி செய்யுமாதலால் மெய்ஞ்ஞானிக்கு ஆகாவாயின.

அக்கினியானது ஒரு இடத்தின் ஏகதேசத்தைப் பற்றினும் அப்பொழுதே அதனைக் கெடுக்காத விடத்து அது இடம் முற்றுங் கெடுக்குமாறுபோல மேன்மேல் முறுகி வளருந் தன்மையினையுடைய இம்மும்மலங்களைத் தோன்றும்பொழுதே துடைக்கவில்லை யாயின் சிவஞானத்தை முற்றுங் கெடுக்கும். அன்றியும் தோன்றும் பொழுதே துடைக்காமல் முறுகி வளர்ந்த பின்னர்த் துடைக்க எண்ணில் அம்மலங்கள் துடைக்குந் தன்னைக் கெடுக்கும். எது போலஎனின், முள்மரத்தை இளம்பருவத்திற் களையாமல் முதிர்ந்த பருவத்திற் களையத்தொடங்கின் களைவார் கையினை அம்முள்மரங்களைவது போலாம். இவ்வுவமையினையே திருக்குறள் பகைத்திறந் தெரிதல் கூ-வது செய்யுளில் "இளைதாக முண்மரங் கொல்க களையுநர் கைகொல்லுங் காழ்த்த விடத்து" என்றார் தேவரும். இவ்வாறு முறுகினல் துடைக்க முடியாது என்பது பற்றியே களைகஎன்று மேற்கோளிற் கூறியதை விடு என இவ்வுதாரணத்தில் மீண்டுங் கூறி வலியுறுத்தப் பட்டது.

விடுதலாவது அம்மும்மலங்களுள் மேற்கூறிய வாறு பிராரத்தங் காரணமாகக் கன்மமுங் கன்மங்காரணமாக மாயையும் மாயைகாரணமாக ஆணவமும் வந்துகூடித் தொழிற்பட்ட விடத்து, ஆணவமலத்தானுகிய விபரீத உணர்வை நோக்கி, இவ்விபரீதமாகிய அஞ்ஞானம் மாயாகாரியம் என்னும் பிரபஞ்ச உணர்வாகிய ஏகதேசக் காட்சியால் உண்டாயிற்று எனவும், அந்த ஏகதேசக் காட்சி விருப்பு வெறுப்புக்களின் தோற்றத்தினல் உண்டாயிற்றெனவும், அந்த விருப்புவெறுப்புக்களின் தோற்றமும் பிராரத்த வினை அனுபவித்தற் பொருட்டுச் சென்ற தற்போதத்தால் உண்டாயிற்றெனவும் அறிந்து, பிராரத்த அனுபவத்தை நோக்கிச் செல்வதாகிய தற்போதம் மூளையாதவாறு கெடுத்து நான் என எழுகின்ற அத்தற்போதமின்றித் தான் சிவஞானத்துள் அடங்கிச் சிவஞான சித்தியார் அ-ம் சூ-ம் கூச-வது செய்யுளிற் கூறியவாறு சிவாநுபவம் சுவாநுபூதியாம்படி ஞான நிலையில் உறைத்து நிற்றலேயாம்.

ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்றும் ஞானத்தை உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்து மென எதுவிற் கூறினரேனும், மாயை கன்மங்கள் அஞ்ஞானத்தை உணர்த்துதல் ஆணவமலத்தோடு கூடிய செயற்கையென்பது அறிவித்தற்கு, அம் மூன்றற்கும் பொதுவாக ஏதுவிற் கூறிய அஞ்ஞானத்தை இவ்வுதாரணத்தில் அஞ்ஞானங் காட்டும் இவ்வாணவமும் என ஆணவ மாத்திரைக்கே சிறப்பாக எடுத்துக் கூறினர்.

முதலதிகரணம் முற்றிற்று.

இரண்டாம் அதிகரணம்.

சீவன்முத்தர் இரண்டாவது செய்யவேண்டுவது களைந்த மலங்கள்
மீளப் பற்றாத வண்ணம் சிவனடியாரோடு
இணங்கவேண்டும் எனக்கூறும்
மேற்கோள்.

இனிச் சிவபத்தர்களோ டிணங்குக வேன்றது.

சிற்றுரை.

எ—து மே—ள் எ—னின், அம்மலங் கழிஇயினார்க்கு அதனை நிலைபெறுத்துவதாய் அதன் பின்னர்ச் செய்யக்கடவதிது எனச் சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற் கோடனுதலிற்று.

இ—ள். வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ—ள். சிவபத்தர்களோடு— அத்துவித நிலையைக் கடைப் பிடித்துச் செய்யும் அன்பானே முதல்வன் அருள்வழி நின்றசீவன் முத்தர்களோடு,—இணங்குகவென்றது—நட்புச் செய்க எ—று.

சிற்றுரை.

ஈண்டுச் சிவபத்தரென்றது பத்தியினான் மறவாதேத்தி முதல் வனது சீபாதத்தை யணைந்த சீவன்முத்தர் மேற்று. இணங்குதல் நட்புச்செய்தல். சிவபத்தர்களோ டிணங்குக எனவே, எதிர்மறை முகத்தான் ஏனையரோடிணங்கற்க வென்பதூஉம் பெறப்பட்டது.

விளக்கம்.

இம்மேற்கோள் அன்பரொடு மரீஇ என்ற சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைப் பதச்சேதஞ் செய்து மேற்கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோ வெனின், முதல் அதிகரணத் திற் கூறியவாறு மும்மலங்களைந்த சீவன் முத்தர்க்குக் களைந்த மலங்கள் மீளப் பற்றாதிருத்தற் பொருட்டுச் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைப் பதச் சேதஞ் செய்து பின்னர்ச் செய்யவேண்டுவது சிவபத்தர்களோடி ணங்குதல் எனக்கூறியவாறும்.

இவ்வதிகாரணத்தில், சீவன் முத்தர் சிவபத்தர்களோடுதான் இணங்க வேண்டுமோ. அல்லாதாரோடு இணங்கக் கூடாதோ என்பது ஐயப்பாடு. அல்லாதாரோடும் இணங்கலாமென்பது பிறர்பக்கம்.

(இம்மேற்கோளின் பொருள்.) பதினொராஞ் சூத்திரத்திற் கூறியவாறு இறைவன் அத்துவிதமாய் நின்று உபகரித்து வருவதை உணர்ந்து மறவாது செய்யும் அன்பினுல் அவ்விறைவன் அருளையின்றித் தனக்குச் செயலில்லை யென அவன் அருள்வழி நின்ற சீவன் முத்தர்களோடு நட்புச் செய்க எ-று.

இம்மேற்கோளில் சிவபத்தர் என்றது, மேல் பதினொராஞ் சூத்திரத்து இரண்டாவது அதிகாரணத்திற் கூறியவாறு பத்தியினுல் மறவாது எத்தி முதல்வனது சீபாதத்தை யணைந்த சீவன் முத்தரைக் குறித்தது. இணங்குதலாவது அவரோடு சிநேகஞ் செய்தல்.

சிவபத்தர்களோடு இணங்குக என்று கூறியது உடம்பாட்டுச்சொல். இதன் எதிர்மறையால் சிவபத்தரல்லாத ஏனையரோடிணங்கக் கூடா தென்பதூஉம் பெறப்பட்டது என அறிக.

சீவன்முத்தர் சிவபத்தர்களோடு இணங்கவேண்டும்
என்பதற்குக்காட்டும்
ஏது.

அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவராகலான்.

சிற்றுரை.

எ—து ஏ—து எ—னின், உறவும் பகையுமொழித்த மெய்ஞ் ஞானிகள் சிலர்மாட்டு நட்பும் சிலர்மாட்டு நட்பின்மையுமுடையராதல் சாலபன் றென்பாரைநோக்கி மேற்கோளைச் சாதித்தனுதவிற்று.

இ—ள் வெ-டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

(இ-ள்) அல்லாதார்—பத்தியினுன் மறவாதேத்தி முதல்வனது சீபாதத்தை யணையாத பாசத்தார்—அஞ்ஞானத்தை—சுட்டியுணர்வதாகிய விபரீத வுணர்வை,—உணர்த்துவ ராகலான்—அறிவிப்பாராகலான், இனிச் சிவபத்தர்களோ டிணங்குகவென மேற்கொண்டது எ-று.

சிற்றுரை.

அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்து மாறு:— "தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி—முனிவி லாததோர் பொருளது கருதலு—மாறு கோடி மாயா சத்திகள்—வேறு வேறுதம் மாயைக டொடங்கின—வாத்த மாணு ரயலவர் கூடி—நாத்திகம் பேசி நாத் தழும் பேறினர்—சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்—பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்—விரத மேபர மாகவேதியருஞ் சரத மாகவே சாத்திரங் காட்டினர்—சமய வாதிக டத்த மதங்க ளே—யமைவ தாக வரற்றி மலைந்தனர்" என்றற் றொடக்கத்துத் திருவாக்குகளானறிக. மும்மலங்கள் அஞ்ஞானத்தை யுணர்த்து தல் இலக்குவாய்த்துழி ஏதுவாதன் மாத்திரையே; சிவபத்தரல் லாதார் அவ்வாறன்றி இலக்குவாயாத வழியும் வாய்க்குமாறு செய் துகொண்டு பலவகை யுபாயங்களானுந் தம்மோடொப்ப விபரீத உணர்வைச் செலுத்தியே விடுவாராகலான் அம்மலங்களினுங் கொடி யவராகிய இவரை அவற்றினுமஞ்சி விட்டொழிதலே அறிவுடை மைக்குச் சால்பென்பதாம்.

விளக்கம்.

இந்த ஏது என்னசொல்லிற்றோ வெனின், உறவும்பகையும் ஒழித்து எல்லா வுயிரையும் ஒப்ப நோக்கும் மெய்ஞ்ஞானிகள் மேற்கோளிற் கூறிய வாறு சிவபத்தர்களோடு சிநேகமும், சிவபத்த ரல்லாதாரோடு சிநேகமில் லாமையும் உடையராதல் பொருத்தமன்று என்பாரை நோக்கிச் சிவபத்த ரல்லாதார் செய்யுங் குறையை எடுத்துக்காட்டிச் சிவபத்தர்களோ டிணங் குக என்று கூறியமேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) பதினொராஞ் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்திற் கூறியவாறு பத்தியினால் மறவாது எத்தி முதல்வன்து சீபாதத்தை யணையாத அஞ்ஞானிகள், எல்லாம் சிவமாய்ப் பார்க்கும் ஞா னத்தைக் கெடுத்து ஒவ்வொன்றையும் இது இது எனச்சுட்டி உணர்வதா கிய விபரீத உணர்வை உண்டுபண்ணுவர்; ஆதலால் இனிச் சிவபத்தர்க ளோடு இணங்குக எனமேற்கோள் கூறியது எ-று.

சிவபத்தர் அல்லாத அஞ்ஞானிகள் அஞ்ஞானமாகிய விபரீத உணர் வை எவ்வாறு உணர்த்துவர் எனின், திருவாசகம் போற்றித்திரு அகவலில் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி— * * * சமயவாதிகள் தத்தம் மதங் களே அமைவதாக அரற்றி மலைந்தனர் என்றது முதலாகக் கூறும் திருவாக்கு களால் தெய்வத்தைப்பற்றி ஆராயப் புகுந்தவிடத்து தெய்வம் இல்லை, என்

பார் சிலரும், தெய்வம் இல்லை விரதமே தெய்வம் என்பார் சிலரும், ஒவ்வொரு மதங்களைப் பற்றிக்கொண்டு அந்த அந்த மதங்களே மேலானதென்பார் சிலருமாக இவ்வாறு விபரீத உணர்வை உண்டுபண்ணுவர் என அறிக.

சிவபத்தரல்லாத அஞ்ஞானிகள் மும்மலங்களினும் மிகக் கொடியராவர். எதனாலெனின், தற்போதம் உண்டாகும் சமயம் வாய்த்தபொழுது தான் மும்மலங்களும் அஞ்ஞானத்தை யுணர்த்துதற்கு ஏதுவாகும்; தற்போதம் உண்டாகாத சமயத்தும் சிவபத்தரல்லாத அஞ்ஞானிகள் தற்போதம் உண்டாகும்படி செய்து கொண்டு பலவகை உபாயங்களினாலுந் தம்மைப்போல விபரீத உணர்வுடையராக அவ்விபரீத உணர்வைப் புகுத்தியேவிடுவர் ஆதலால் என்க. எனவே, அம்மலங்களினுங் கொடியராகிய இவரை அம்மலங்களை விட அதிகமாக அஞ்சி விட்டொழிதலே அறிவுடைய மெஞ்ஞானிகளுக்குப் பொருத்தமாகும் என ஆசங்கை நீக்கியவாறும்

இந்தவேது, சீவன்முத்தர் சிவபத்தரல்லாதாரோடும் இணங்கலாமென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

சீவன்முத்தர் சிவபத்தர்களோடு இணங்கவேண்டும்
என்பதற்குக் காட்டும்
உதாரணம்.

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை—யறப்பித்துப்
பத்த ரினத்தாய்ப் பரனுணர்வி னாலுணரு
மெய்த்தவரை மேவா வினை.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், அஞ்ஞானத்தை யுணர்த்துமவரோடு இணங்காமை மாத்திரையே யமையும்; சிவபத்தர்களோடிணங்குதல் எற்றுக்கென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்) தம்மை மறப்பித்து மலங்களின் வீழ்க்குஞ் சிறப்பு இல்லார் தம்திறத்துச் சேர்வை அற—(முதல்வன் காட்டியுங் கண்டும் உபகரித்து நிற்கும் அத்துவிதநிலையை மறவாது கடைப்பிடிக்குந்) தமது ஞானக்கண்ணை யிழப்பித்துத் (தீயநெறிக்கட் கொண்டு சென்று) மலங்களானய பிறவிக்குழியில் வீழ்வித்துத் துயருறுத்துவாராகிய அன்பிலார் கூற்றிலே (தொன்று தொட்டுப் பயின்று வந்த) சேர்ச்சியறும்படி,—பத்தர் இனத்துப் பித்து ஆய்ப் பரன் உணர்வினால் உணரும் மெய்த்தவரை — (அம்மறவினை மாற்றி

ஞானக்கண்ணை யுதவிப் பிறவிக்குழியினின்று மெடுத்து நன்னெறிக்கட்செலுத்தி வாழ்விக்குஞ்) சிவபத்தராகு கூற்றிலே பேரன்புடையராய் (அவ்வன்பு சார்பாக விளங்குஞ்) சிவஞானக் கண்ணால் அங்கிலே கடைப்பிடித் துணரப்பெற்ற மெய்த்தவராயினரை,—வினைமேவா—(எல்லா வருத்தங்கட்கும் மூலமாய் வந்து சிறப்பில்லார்தங் திறத்துச் சேர்வையைப் பயப்பிக்கும்) பிராரத்த வினைகள் வாதியா எ-று.

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ் சிறப்பில்லாரென மேற்சொல்லிய பொருளையே அநுவதித்து விரித்தோதினர்; அதசனெதிர்மறை முகத்தாற் சிவபத்தாது பெருந்தகைமை யுணர்ந்து கோடற் பயனேக்கி. மலம் ஆகுபெயர். வீழ்க்குமென்றது உருவகங் குறித்துநிற்றலின், அவ்வாறுரைக்கப்பட்டது. எல்லாவற்றினும் அன்பு சிறந்தமையின் அதனைச் சிறப்பென்றார். பித்துப்போறலின் அன்பு பித்தெனப்பட்டது. ஏனைத்தவங்களெல்லாம் மெய்யாதலின்றி மல நடையாய்ப்போதலின், பாலுணர்வினுலுணருந் தவமொன்றே மெய்த்தவமெனப்பட்டது. வினை பால்பகாவஃறிணைப் பெயர்.

சிவபத்தர்மாட் டன்புடையாராய் மனஞ் சொற் செய்கைகளான் அவர் வழிநிற்பார்க்கு உலகிய லுணர்வுமாறிச் சிவாநுபூதியுணர்வே மேம்பட்டு நிகழும்; அது நிகழவே, பௌதிக உடம்பைப் பற்றிவரும் பிராரத்தவினைகள் அவர்க்கு நுகர்ச்சியாதல் செல்லாமையின் வாதிக்கமாட்டா; மாட்டாதொழியவே, அவை பற்றுக்கோடாக நிகழுஞ் சிறப்பிலார்தங் திறத்துச் சேர்வை பற்றறக் கெடுமென்பார் "சேர்வை--யறப்பித்துப்—பத்தரினத்தாய்ப் பாலுணர்வினுலுணரு—மெய்த்தவரை மேவா வினை" என்றார். எனவே, வீட்டுணர்வை நிலைபெறுத்துஞ் சிவபத்தர்களோ டிணங்கினலன்றி வினை பற்றுக்கோடாகத் தொன்றுதொட்டுப் பயின்றுவந்த சிறப்பில்லாரிணக்கம் அருமையின், அவ்விணக்கம் ஒருதலையான் வேண்டுமென வலியுறுத்தவாறாயிற்று.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) தம்மை மறப்பித்து மலங்களின் வீழ்க்கும் சிறப்பு இல்லார் தம் திறத்துச் சேர்வை அறப் பத்தர் இனத்துப்பித்து ஆய்ப்பரன் உணர்வினுல் உணரும் மெய்த்தவரை வினைமேவா.

இவ்வுதாரணம் என்ன சொல்லிற்றோவெனின், சிவபத்தரல்லாத அஞ்ஞானிகள் அஞ்ஞானத்தை யுணர்த்துவராதலால் அவ்வஞ்ஞானிகளுடன் இணங்காமைமட்டுமே போதும்; சிவபத்தரோடு இணங்குதல் எதற்கு என்பாரைநோக்கிப் பிராரத்த வினைப்பயனை அனுபவிப்பதற்காக நிட்டையில் நின்று நீங்கி வெளியேவருங்கால் யாதானு மொன்றனைப் பற்றாமலிருக்க முடியாது; அப்பொழுது சிவபத்தர்களோடு இணங்கவில்லையாயின் சிவபத்தரல்லாதாரோடு இணங்க நேரும்; அல்லாதாரோடு இணங்காதிருத்தற் பொருட்டுச் சிவபத்தரோடு இணங்குதல் அவசியம் எனக்கூறி மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(பொ—ரை.) பதினொராஞ் சூத்திரத்திற் கூறியவாறு, காட்டியுங் கண்டும் உபகரித்து அத்துவிதமாய் நிற்கும் முதல்வன் நிலையை மறவாது பற்றி நிற்கும் சீவன் முத்தரானவர், தமது ஞானக்கண்ணை மறைப்பித்துத் தீயநெறியின்கண் கொண்டுசென்று அத்தீயநெறியால் மலங்களினால் உண்டாகும் பிறவிக்குழியில் விழும்படிசெய்து துன்பத்தை உண்டு பண்ணுபவராகிய சிவபத்தரல்லாதார் கொள்கையில் பண்டைக் காலந்தொட்டுப் பழகிவந்த சேர்க்கை அறும்படி, ஞானக்கண்ணை மறைத்த அம்மறவியைமாற்றி ஞானக் கண்ணை யுதவிப் பிறவிக்குழியில் நின்றும் எடுத்து நன்னெறியின்கண் செலுத்தி வாழ்விக்குஞ் சிவபத்தரது கொள்கையிலே பேரன்புடையராதல் வேண்டும்; அவ்வன்பு சார்பாகவிளங்குஞ் சிவஞானக் கண்ணால் அவ்வத்துவித நிலையை உறுதியாகப்பற்றி உண்மை உணர்ந்த மெய்த்தவராயினாரை, எல்லாத் துன்பங்கட்கும் மூலமாயும் சிவபத்தரல்லாதார் சேர்க்கையை உண்டுபண்ணக் கூடியதாயும் உள்ள பிராரத்த வினைகள் தாக்கமாட்டாவாம் எ-று.

(க-ரை.) சிவபத்த ரல்லாதாரோடு சேராதிருத்தற் பொருட்டுச் சிவபத்தரோடு சிநேகஞ்செய்யவேண்டும். சிநேகஞ் செய்தால், செய்யும் அவரைப் பிராரத்தவினை சிவபத்தரல்லாதாரோடு சேரும்படி செய்யக்கூடியதாயினும் செய்யாது என்பதாம்.

அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவர் என ஏதுவிற்கூறிய பொருளையே இவ்வுதாரணத்தில் அவர் உறவை நீக்கவேண்டும் எனக் கூறுதற் பொருட்டு அநுவாதமாக எடுத்துக்கொண்டு "மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ் சிறப்பிலார்" என விரித்தோதினார். அவ்விரியின் எதிர்மறை முகத்தால் அம்மறவியை மாற்றி ஞானக்கண்ணையுதவிப் பிறவிக்குழியில் நின்றும் எடுத்து நன்னெறிக்கட் செலுத்தி வாழ்விக்குஞ் சிறப்புடையார் சிவபத்தர் எனச் சிவபத்தரது பெருந்தகைமை யுணர்ந்துகொள்ளும் பயன் கருதி அவ்வாறு விரித்துக்கூறினார் என்க.

மலம் என்றது மலங்களினுலாகிய பிறவிக்குழியை உணர்த்தததலால் ஆகுபெயர்.

வீழ்க்கும் என்றது உருவகங்குறித்து நிற்றலால் அவ் வுருவகத்துக் கேற்ப மலங்களினுலாகிய பிறவியைக் குழியாக உருவகஞ்செய்து உரைக் கப்பட்டது.

சிறப்பிலார் என்றதிலுள்ள சிறப்பு என்பது எல்லாவற்றினுஞ் சிறந் தது அன்பு ஆதலின் அந்த அன்பைக்குறித்துச் சிவனிடத்து அன்பில்லார் என்னும் பொருளில் நின்றது. திருக்குறள் அறன்வலியுறுத்தல் க-வது செய்யுளில் "சிறப்பு ஈனும்" எனவும், ஷை நூல் மெய்யுணர்தல், அ-வது செய்யுளில் "சிறப்பு என்னும் செம்பொருள்" எனவும் வீட்டையே சிறப்பு எனக் கூறியிருக்கவும், இவ்விடத்து அன்பைச் சிறப்பென்றல் அத் திருக்குறளின் கருத்தோடு முரணுதோவெனின், முரணுது; எவ்வாறெ னின், அன்பு என்பது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும். அவற்றுள், மந்ததர அன்பாவது உலகப்பற்று முக்கால் பாக மும் கடவுட்பற்று காற்பாகமும் ஆதல். மந்த அன்பாவது உலகப்பற்றுப் பாதியும் கடவுட்பற்றுப் பாதியுமாதல். தீவிர அன்பாவது உலகப்பற்றுக் காற்பாகமும் கடவுட்பற்று முக்காற்பாகமும் ஆதல். தீவிரதர அன்பாவது உலகப்பற்று அறவேயின்றி முழுதுங் கடவுட்பற்றே யாதல். இத்தீவிரதர அன்பையே இச் செய்யுளில் சிறப்பு என்றுர். இத்தீவிர தர அன்புதான் இந்நூல் பதினெராஞ் சூத்திரத்தில் அயரா அன்பு எனப்பட்டது. அயரா அன்புடையார் சிவானந்தாநுபவமாகிய வீட்டையுடையராதலின் 'அயரா அன்பின் அரன் கழல் செலுமே' என அப்பதினெராஞ் சூத்திரத்திற்கூறி னர். இந்நிலையில் அன்புசெய்யும் உயிரும், அன்பும், அன்பு செய்யப்படும் சிவமும், உள்ளனவேனும் பிரிப்பின்றி அத்துவிதமாய்க் கலந்து நிற்கும். இக் கருத்தேபற்றி "அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்—அன்பே சிவ மாவது ஆரும் அறிகிலார். அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்—அன் பே சிவமாய் அமர்ந்திருப்பாரே" எனத் திருமூலநாயனரும், "இன்பமே என்னுடை அன்பே" என மணிவாசகப் பெருமானும் அருளிச்செய்வா ராயினர். ஆகவே அன்பு செய்யப்படும் பொருள்பற்றித் திருக்குறளில் வீட்டைச் சிறப்பு என்றும், அப்பொருளில் நின்றும் பிரிக்கமுடியாத அன்பு பற்றி இந்நூலில் அன்பைச் சிறப்பு என்றுங் கூறினமையால் முரணில் லாமை அறிக. பதினெராஞ் சூத்திரத்தில் இச்சையே பேரானந்தமாய் விளங்கித் தோன்றும் என்றதும் இக்கருத்துப் பற்றியேயாம்.

பித்து என்றது அன்பைக்குறித்து நின்றது. தீவிரதர அன்புடையார் பித்துக் கொண்டவன்போலத் தன்னை மறந்திருத்தலின் அன்பைப் பித்து எனக் கூறினுர்.

தவம், மெய்த்தவம் பொய்த்தவம் என இருவகைப்படும். மெய்த்தவம் சரியை, கிரியை, யோகங்கள். பொய்த்தவம் யாகம் விரத முதலாயின. இவற்றின் விரிவை எட்டாஞ் சூத்திரத்துட் காண்க. இனி மெய்த்தவம் எனப் படும் சரியை யாதிகளும் மலத்துடன் கூடிநின்று செய்யப்படுவனவே யன்றி மலம் அறவே நீங்கிச் செய்யப்படுவன அல்ல. ஆயினும் யாகாதியை நோக்க மெய்த்தவம் எனப்பட்டன. பரன் உணர்வால் உணரும் சிவஞானம் மலம் அறவே நீங்கிய செயலாதலாலும் மேற்செய்யவேண்டிய தில்லாத முடிந்த நிலை யாதலாலும் அச் சிவஞானம் ஒன்றே மெய்த்தவம் எனப்படு மாதலால் அதனை யுடையாரை மெய்த்தவர் என இச்செய்யுளிற் கூறினர்.

இறுதியிலுள்ள வினையென்னும் ஒருமை மேவா என்ற பன்மை கொண்டு எவ்வாறு முடிந்தது எனின், வினை என்பது அஃறிணைப்பெயர்ச் சொல். "தெரிநிலையுடைய அஃறிணை யியற்பெயர் ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே" என்பது தொல்காப்பியம் சொல்லதிகாரம். அதன்படி அஃறிணைப் பெயர்ச்சொல் ஒருமையாய் நின்று வினையோடு பொருந்தியவிடத்து அவ்வினை ஒருமையாயின் ஒருமையாயும் பன்மையாயின் பன்மையாயும் கருதப்படும். உதாரணம் யானைவந்தது யானைவந்தன என்பது போல்வன. ஆகவே வினை யென்னும் ஒருமையானது ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவான பால் பகா அஃறிணைப் பெயராய்நின்று மேவா என்னும் பன்மை வினைகொண்டு முடிந்தது. ஆதலால் வினையென்பதற்கு வினைகள் என உரைசெய்யப்பட்டது.

சிவபத்தரோடு இணங்குதலால் சிவபத்த ரல்லாதாரைச் சேரும்படி செய்யும் பிராரத்தவினை தாக்காதிருப்பது எவ்வாறெனின், சிவபத்தரிடத்து அன்புடையராய் மனம் வாக்குக்காயங்களை அச் சிவபத்தரிடத்திற் செலுத்துவோர்க்கு உலக அனுபவ உணர்வுமாறிச் சிவாநுபூதி யுணர்வு மேம்பட்டு நிகழும்; நிகழவே பூதகாரியமாகிய உடம்பைப் பற்றிவரும் பிராரத்த வினைகளின் அனுபவம் அச்சிவானுபவ உணர் வுடையாருக்கு அனுபவ மாதலில்லை; இல்லையாகவே அப் பிராரத்தவினைகள் சிவாநுபவ உணர் வுடையாரைப் பற்றமாட்டா; பற்றாது ஒழியவே அப் பிராரத்தவினைகள் காரணமாக உண்டாகும் சிவபத்தரல்லாத சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை அறக்கெடும் என்க. இவ்வாறு சிவபத்தர் இணக்கத்தால் அல்லாதார் இணக்கத்துக்குரிய பிராரத்தவினை தாக்காமையை அறிவிக்கவேண்டிச் செய்யுளில் "சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை யறப்பித்துப் பத்தர் இனத்தாய்ப் பரன் உணர்வினால் உணரும் மெய்த்தவரை மேவாவினை" என்றார்.

இவ்வாறு கூறியதனால் வீட்டுணர்வாகிய சிவாநுபவ உணர்வை நிலை பெறச் செய்யும் சிவபத்தர்களோடு இணங்கினாலன்றிப் பிராரத்த வினை

காரணமாகப் பண்டைக்காலந் தொட்டுப் பழகிவந்த சிவபத்தர் அல்லாத சிறப்பில்லாருடைய இணக்கம் அருமையால், அச் சிவபத்தருடைய இணக்கம் அவசியம் வேண்டும் என மேற்கோளை வலியுறுத்தினமை அறிக.

இரண்டாம் அதிகரணம் முற்றிற்று.

மூன்றும் அதிகரணம்.

சீவன் முத்தர் மூன்றுவதாகச் செய்யவேண்டுவது சிவபத்தர் இணக்கம் நிலை பெறுதற் பொருட்டுத் திருவேடத்தையும், சிவாலயத்தையும் சிவனெனக் கண்டு வழிடுதல் எனக் கூறும்

மேற்கோள்.

இனிப் பத்தரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுரனேனக் கண்டு வழிபடுகே வேன்றது.

சிற்றுரை.

எ-து மே-ள் எ-னின், அன்பரொடு மரீஇயினர்க்கு அம்மருவுதலை நிலை பெறுத்துவதாய் அதன்பின்னர்ச் செய்யக்கடவதிது வெனச் சூத்திரத்தின் மூன்றுங் கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ—ள் வெ—டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ-ள். பத்தரது திருவேடத்தையும்—அயரா அன்பினரன் கழலேத்து மெய்யன்பரது திருவேடங்களையும்,—சிவாலயத்தையும்—சிவாலயங்களையும்,—பரமேசுர னெனக் கண்டு—முதல்வனெனவே ஐயுறவின்றித் தெளிந்து,—வழிபடுக வென்றது—வழிபாடு செய்க எ-று.

சிற்றுரை.

காண்டல் ஐயுறவின்றித் தெளிதல். காமக்கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடைசாந்தணிகலன் முதலாயின காமுகரை வசீகரித்து இன்பஞ் செய்யுமாறுபோல மெய்யுணர் வுடையாரைக் காட்சி மாத்திரையின் வசீகரித்து இன்பஞ்செய்தல் பற்றித் திரு

வேடத்தையுஞ் சிவாலயத்தையு மென் றுபசரித்தார். அது "சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங் கொங்கையிற் செங்கு ங்குமம்—போலும் பொடியணி மார்பிலங்கு மென்று புண்ணியர் போற்றிசைப்ப" என்னுந் திருவாக்கானு மறிக. திருவேடத்தி னியல்பு "தூய வெண்ணீறு துதைந்த பொன் மேனியுந் தாழ் வடமு—நாயகன் சேவடி தைவரு சிந்தையு நைந்துருகிப் பாய் வது போலன்பி னீர்பொழிகண்ணும் பதிகச் செஞ்சொன்—மேய செவ்வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே." "சிந்தையிடை யறுவன்புந் திருமேனி தனிலசையுங்—கந்தை மிகையாங் கருத் துங் கையுழவாரப் படையும்—வந்திழி கண்ணீர் மழையும் வடி விற் பொலிதிருநீறு—மந்தமிலாத் திருவேடத் தரசு மெதிர் வந் தணைய." "கண்டகவு ணியக் கன்றுங் கருத்திற் பரவு மெய்க்கா தற்—றொண்டர் திருவேட நேரே தோன்றிய தென்று தொழு தே" என்றற் றொடக்கத்துத் திருவாக்குக் களானுமறிக.

விளக்கம்.

இம்மேற்கோள் மாலற நேய மலிந்தவர் வேடமும் ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே என்ற சூத்திரக் கூற்றைப் பதச்சேதஞ் செய்து மேற் கொண்டதாகும்.

இம்மேற்கோள் என்ன சொல்லிற்றோ வெனின், இரண்டாம் அதி காரணத்திற் கூறியவாறு சிவபத்தர்களோடு இணங்கினவர் அவ்விணக்கத் தை நிலைபெறச் செய்தற் பொருட்டுச் சூத்திரத்தின் மூன்றாங் கூற்றைப் பதச்சேதஞ் செய்து அவ்விணக்கத்தின் பின்னர்த் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவன் எனக் கண்டு வழிபடவேண்டுமெனக் கூறிய வாறும்.

இவ்வதிகாரணத்தில், சீவன் முத்தர்க்கு எல்லாம் சிவமாகத் தோன் றும் ஆதலால் திருவேடத்தையும் சிவாலயத்தையும் வழிபட வேண்டும் என்று பிரித்துக் கூறியது பொருந்துமோ பொருந்தாதோ என்பது ஐயப் பாடு. பொருந்தாதென்பது பிறர்பக்கம்.

(இம்மேற்கோளின் பொருள்.) பதினொராஞ் சூத்திரத்திற் கூறிய வாறு அயரா அன்பின் அரன் கழல் ஏத்தும் மெய்யன்பரது திருவேடங் களையும் சிவாலயங்களையும் சிவன் எனவே சந்தேகமின்றித் தெளிந்து வழி பாடு செய்க எ-று.

பரமேசுரன் எனக்கண்டு என்பதில் காண்டலாவது பரமேசுரனே அல்லவோ என்னும் சந்தேகமின்றி பரமேசுரன் எனவே தெளிதல்.

சிவபத்தரையும் சிவாலயத்தில் திருமேனி கொண் டெழுந்தருளியிருக்கும் மூர்த்திகளையும் சிவன் எனக் கண்டு வழிபடுக என்று கூறாமல் சிவபத்தருடைய திருவேடத்தையும் சிவாலயத்தையும் மட்டும் சிவனெனக் கண்டு வழிபடுக எனக்கூறிய கருத்தென்னை யெனின், காமக்கிழத்தியராகிய விலைமகளிர் வடிவிற் காணப்படும் ஆடை, சாந்து, ஆபரணமுதலாயின காட்சி மாத்திரையில் காமுகரை வசப்படுத்தி அக்காமுகர்க்கு இன்பஞ் செய்யுமாறு போலச், சிவபத்தர் அணிந்திருக்குந் திருவேடமும் சிவபெருமான் எழுந்தருளியிருக்குஞ் சிவாலயமும் காட்சிமாத்திரையில் மெய்யுணர் வுடையாரை வசப்படுத்தி அவர்க்கு இன்பஞ் செய்தல பற்றித் திருவேடத்தையும் சிவாலயத்தையும் என அவ்விரண்டனையும் உபசரித்தார். இதனால் சிவபத்தரையும் சிவபெருமான் விளங்குமிடமாகக் கொண்டருளியிருக்குந் திருவுருவங்களையும் சிவனெனவே கண்டு வழிபடுவ ரென்பது கருத்து.

விலைமகளிர் வடிவிற் காணப்படும் ஆடைமுதலியன போலச் சிவனடியாரிடத்துக் காணப்படும் திருவேடம் என்பதனைத் திருப்பல்லாண்டு அ-வது செய்யுள் "சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணார்" என்னுந் திருவாக்கானும் அறிக.

திருவேடம் சிவனடியார்க்கு இன்பஞ் செய்யு மென்பதனைப் பெரிய புராணத்தில்திருநாவுக்கரசு நாயனார் புராணம் கசо-வது செய்யுளில் கல்லைத் தெப்பமாகக் கொண்டு கரையேறித் திருவதிகைக்குச் செல்லுங்காலத்து வீதியுள் நாவுக்கரசர் புகுந்தாரென்று சொல்லவந்த சேக்கிழார் சுவாமிகள் வெண்ணீறும் தாழ்வடமும் அணிந்திருப்பதை முதலாவதாகச் சிறப்பித்துக் கூறியதனானும், திருஞான சம்பந்த மூர்த்திநாயனார் புராணம் உகூக-உஎо-வது செய்யுட்களில் சீகாழிப் பதிக்குத் திருநாவுக்கரசு சுவாமிகள் எழுந்தருளிய காலத்துத் திருஞானசம்பந்தசுவாமிகளுக்கு அப்பர் சுவாமிகள் திருவேடத்தைத் தரிசிக்க விருப்ப மிருந்து அவ்விருப்பத்தின்படி தொண்டர் திருவேடம் நேரே தோன்றிய தென்று தொழுததாகக் கூறிய வாற்றானும் அறிந்து கொள்க.

சிவாலயம் சிவனடியார்க்கு இன்பஞ் செய்யும் என்பதனைச் சிவாலயத்தின் கோபுரத்தைத் தூரத்தே கண்டமாத்திரத்தே பணிந்தா ரென்ற சரிதங்களாலும் அறிக.

திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவன் எனக் கண்டு
வழிபடல் வேண்டும் என்பதற்குக் காட்டும்

ஏது.

அவன் மற்றிவ்விடங்களிற் பிரகாசமாய் நின்றே அல்லாத விடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்.

பயனியல்பன்னிரண்டாஞ்சூத்திரம்.ரு-ம்அதி.

சிற்றுரை.

எ-து ஏது எ-னின், மெய்யுணர் வுடையார்க்குப் பகுப்பின்றி எங்கணும் பரமேசுரனெனக் காண்டலே பொருந்த முடைமை யானும், நின்ற திருத்தாண்டக முதலியவற்றுள் அவ்வாறோதுத லானும், திருவுருத்திரத்துட் பகுப்பின்றி உயிர்ப்பொருள், உயி ரில் பொருள் எல்லாவற்றையுந் தனித்தனி எடுத்தோதி வழி பாடு கூறுதலானும் ஈண்டிவற்றை மாத்திரையே பிதந்து கொண் டோதிய தென்னையென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித் தனுதலிற்று.

(இ-ள்.) அம்முதல்வன் யாங்கணும் வியாபகமாய் நிற்பினும் இவ்விரண்டிடத்து மாத்திரையே தயிரினெய்போல விளங்கிநிலை பெற்று அல்லுழியெல்லாம் பாலினெய்போல வெளிப் படாது நிற்றலான் 'இனிப்பத்தராது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுர னெனக்கண்டு வழிபடுக'வென மேற்கொண்டது எ-று.

மற்று உரையசை. எப்பொருட் கண்ணு மிறைவன் கலந்துள னென்பது தெளிந்து கோடற் பொருட்டுத் திருஉருத்திரத்தின் அவ்வாறோதப் பட்டதெனக் கொள்க.

விளக்கம்.

இந்த ஏது என்னசொல்லிற்றோ வெனின். மும்மலங்களைந்து முதல் வன் திருவடியடைந்த மெய்யுணர் வுடைய சீவன் முத்தர்க்குப் பரமேசுர னகச் சிலவற்றைப் பிரித்துக் காண்டலின்றி எவ்விடத்தும் பரமேசுரன் எனக் காண்டலே பொருத்தமாகும்; அன்றியும் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த நின்ற திருத்தாண்டகம் முதலிய பொதுத் திருப்பதிகத் தும் எனைத் திருத்தாண்டகத்தும் "இரு நிலனுய்த் தீயாகி நீருமாகி யிய மானனு யெரியுங் காற்றுமாகி- அருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாசமா யட்ட மூர்த்தியாகிப்—பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும் பிறரு ருவுந் தம்முருவுந் தாமேயாகி—நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே" என்பது முதலாகக் கூறுந் திருவாக்குகள் எல் லாம் பரமேசுரன் என ஓதுதலானும். திருவுருத்திரத்துள் ஓர் அறிவுயிர் முதல் ஐயறி வுயிர்வரையிலுள்ள உயிர்ப் பொருளையும் உயிரில்லாத பொரு ளையும் தனித்தனி எடுத்தோதி அப்பொருள்கள் எல்லாவற்றையும் பரமே சுரன் எனக்கண்டு வழிபடுமாறு வழிபாடு கூறுதலானும், இவ்வதிகரணத்து மேற்கோளில் திருவேடத்தையும் சிவாலயத்தையும் மட்டும் பிரித்து எடுத்

துக்கொண்டு கூறிய கருத்து என்னையென்பாரை நோக்கி எல்லா இடங்களினும் பரமேசுரன் நிற்பினும் இவ்விரண்டிடங்களில் மட்டும் விளங்கித்தோன்றுவன் எனக்கூறி மேற்கோளை வலியுறுத்திய வாறும்.

(இந்த ஏதுவின் பொருள்.) பதினொராஞ் சூத்திரத்திற் கூறியவாறு அத்துவிதமாய்க் கலந்துநிற்கும் முதல்வன் எவ்விடத்தும் நிறைந்து நிற்பினும் திருவேடம் சிவாலயம் என்னும் இரண்டிடத்து மட்டும் தயிரினிடத்து விளங்கித் தோன்றும் நெய்போல விளங்கித் தோன்றி ஏனைய இடங்களினெல்லாம் பாலினிடத்து வெளிப்படாது நிற்கும் நெய்போல மறைந்து நிற்றலால் இனிப் பத்சாது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுரன் எனக்கண்டு வழிபடுக என மேற்கோள் கூறியது எ-று.

மற்றிவ்விடங் களில் என்றதில் உள்ள மற்று என்பது உரையினிடத்தும் பொருள்பயவாது அசையாகவந்தது. அது "மற்றென்கிளவி வினைமாற் றசைநிலை" என்னுந் தொல்காப்பிய இடையியல் கச-ம் சூத்திர உரையில் "கட்டுரையிடையும்மற்றே என அசைநிலையாய் வரும்" எனச் சேனாவரையர் கூறுமாற்றா னுணர்க.

திருவுருத்திரத்தில் எவ்விடசதும் வழிபடுக என்றதனோடு இவ்விரண் டிடத்தும் வழிபடுக என இவ்விடத்துக் கூறியது முரணுதோஎனின், முரணாது. எதனாலெனின், எப்பொருள்களினிடத்தும் இறைவன் கலந்து நிற்கின்றான் என்பதை அறிந்துகொள்ளுதற் பொருட்டுத் திருவுருத்திரத்துள் எவ்விடத்தும் வழிபடுக எனவும் சிறப்பாக விளங்கித் தோன்றும் இடம் இதுஎன அறிந்து தொள்ளுதற் பொருட்டு இவ்வதிகாணத்தில் இவ்விரண் டிடங்களினும் வழிபடுக எனவுங் கூறுதலால் என்க.

இந்த ஏது சீவன்முத்தர் திருவேடத்தையும் சிவாலயத்தையும் வழிபடவேண்டு மென்று பிரித்துக் கூறியது பொருந்தா தென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

திருவேடத்தினிடத்து முதல்வன் பிரகாசமாய் நிற்கின்றான்
என்பதற்குக் காட்டும்

உதாரணம்.

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருத்தலாற் —றன்னுணரு
நேசத்தர் தம்பா னிகழுந் ததிநெய்போற்
பாசத்தார்க் கின்றாம் பதி.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், திருவேடத்தின் இறைவன் பிரகாச மாய் நிற்குமாறு யாங்ஙனம் என்பாரை நோக்கி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்.) பதி—அசிந்திதனாய் நின்ற பரம் பொருளே,—தன் உணரவேண்டி—(உலகத்துள்ளார்) தன்னை யறிதற்பொருட்டு,—தனது உருவைத் தான் கொடுத்து—(திருநீறு கண்டிகைமுதலிய திருவேடமாகிய) தனது திருவடிவத்தைத் தன்னன்பர்க்குக் கொடுத்தலானும்,—தன் உணர—(அவ்வன்பர்) தன்னைச் சிவோகம் பாவனையால் அறியச் செய்தலானும்,—தன்னுள் இருத்தலால்—(அங்ஙனம் ஒரு குறியின்கணின் றுணருமவரைத்) தனது வியாபகத்துள்ளாக இருத்துதலானும்,—தன் உணரும் நேசத்தர் தம் பால் ததிநெய்போல் நிகழும்—(குறியு மிறந்து நின்று) தன்னையுள்ளவாறுணருமவர் மாட்டுத் தயிரின் கண்ணதாகிய நெய்போல் விளங்கித்தோன்றும்,—பாசத்தார்க்கு இன்று ஆம்—(அவ்வியல் பில்லாத) பாசக்கட்டுடையார் மாட்டுப் (பாலின்கண்ண தாகிய நெய்போல) விளங்காது நிற்கும் எ-று.

செய்தென்பது சொல்லெச்சம். இருத்தல் அல்லீற்றுப் பிற வினைத் தொழிற்பெயர். கொடுத்துச் செய் திருத்தலானிகழுமென வியையும். தன்னுணரு நேசத்தரெனப் பெயரடையானும் ஓரோ துக்கூறப்பட்டது. தன்னை யென்னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது. உணர்தலை மூவிடத்தோதுதலின் இஃதங்ஙனம் வேறு வேறுரைக்கப்பட்டது. பாசத்தார்க்கென்பது உருபு மயக்கம். இன்மை ஈண்டு விளங்காமை குறித்துநின்றது.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ எனின், ஏதுவிற் கூறியவாறு திருவேடம் சிவாலயம் என்னும் இரண்டனுள், திருவேடத்தில் இறைவன் விளங்கித் தோன்றுமுறை எவ்வாறென்பாரை நோக்கி விளங்கித்தோன்று முறை கூறி ஏதுவை வலியுறுத்திய வாறும்.

(பொ-ரை.) சிந்தனைக்கு எட்டாது நின்ற பரம்பொருள், எட்டாது நின்றதுகொண்டு உலகத்தாருக்கு ஒரு பயனும் இன்மையால் உலகத்துள்ளார் தன்னையறிந்து பயன்பெறுதற்பொருட்டுத் திருநீறுகண்டிகை முதலிய திருவேடமாகிய தனது திருவடிவத்தைத் தன்னுடைய அன்பர்க்குக்

கொடுத்து அவர்களிடமாக நின்று தன்னை அறியும்படி செய்தலானும், அவ்வன்பர் சிவோகம் பாவனையில் தன்னை அறியும்படி செய்தலானும், அவ்வாறு சிவோகம்பாவனையாகிய ஒரு குறியின்கண் நின்று உணர்கின்ற அன்பரை உணர்கின்றேம் என்னும் போதம் இறந்து தனது வியாபகத்துள் அடங்கி நிற்கும்படி செய்தலானும், ஒரு குறியும் இன்றி நின்று தன்னை உள்ளவாறுணர்கின்ற அவ்வன்பரிடத்தில் அவ்விறைவன் தயிரினிடத்து நெய் விளங்கித் தோன்றுவதுபோல விளங்கித்தோன்றுவன்; குறியிறந்து நின்று உள்ளவாறு உணரும் இயல்பில்லாத பாசக்கட்டு உடையாரிடத்தில் பாலின்கண் நெய்விளங்கித் தோன்றாதவாறுபோல விளங்காது நிற்பன் எ-று.

(க-ரை.) இறைவன், சிவோகம் பாவனை முதலிய குறிகளின்றி அறிவுக்குள் அறிவாய் நின்ற உண்மையை அறிந்த சிவபத்தர்களிடத்துத் தயிரின் நெய்போல விளங்கித்தோன்றிச், சிவோகம் பாவனை முதலியன செய்யமுடியாத உலகத்தார் தன்னை அறிந்துகொள்ளுதற் பொருட்டு அச் சிவபத்தருக்குத் திருநீறு கண்டிகை முதலிய தனது வடிவமாகிய திருவேடத்தைக் கொடுத்தலால், உள்ளவாறுணரும் சிவபத்தரிடத்தில் இறைவன் விளங்கித் தோன்றுதல்போல, அவர் அணிந்திருக்கும் தனது வடிவமாகிய திருவேடத்தினிடத்தும் விளங்கித் தோன்றுவன் என்பதாம்.

தன் உணர என்ற இடத்துச் செய்து என்பது சொல் லெச்சமாய்நின்றது. ஆதலால் தன் உணர என்றதற்குத் தன்னைச் சிவோகம் பாவனையால் அறியச் செய்தலானும் என உரைசெய்யப்பட்டது.

தன்னுள் இருத்தலால் என்ற இடத்து இருத்தல் என்றது "நிலம் விண்டிறந்தநாகம்" என்றவிடத்து விள்ளல்போல இருத்துதல் என்னும் பொருள் குறித்து நிற்றலால் அல் இறுதியாகவுடைய பிறவினைத் தொழிற்பெயர்.

தனது உருவைத் தான்கொடுத்துத் தன் உணரச்செய்து தன்னுள் இருத்தலால் ததி நெய்போல் தம்பால் நிகழும்என முடித்துக்கொள்க.

நேசத்தர் என்னும் பெயருக்குத் தன் உணரும் என்ற அடைகொடுத்துத் தன் உணரும் நேசத்தர் எனக் கூறினர்; அந்த அடையானும் தன்னை உணர்தலால் என ஓர் ஏதுக்கூறப்பட்டது.

தன் உணர என்ற இரண்டிடத்தும் தன் உணரும் என்ற இடத்தும் தன் என்பது தன்னையென்னும் பொருள்குறித்து நிற்றலால் அவ்விடங்களில் இரண்டாம் வேற்றுமை ஐ உருபு தொக்கு நின்றது.

தன் உணர என்றது மூவிடத்து வந்திருக்கின்றது. ஆதலால் உலகத்தவர் தன்னை யறிதற்பொருட்டு எனவும், அவ்வன்பர் சிவோகம் பாவ

ணையால் அறியச்செய்துஎனவும, குறியும் இறந்து நின்று உள்ளவாறுணரும் நேசத்தர் எனவும் உணர்தல் அவ்வாறுவேறுவேறு உரைக்கப்பட்டது.

பாசத்தார் இடத்து என்று இருக்கவேண்டிய ஏழாம்வேற்றுமை உருபு பாசத்தார்க்கு என நான்காம் வேற்றுமை உருபாய் மயங்கி நின்றது.

பாசத்தார்க்கு இன்றும் என்றதிலுள்ள இன்று என்பது இவ்வுதாரணத்தில் விளங்காமையைக் குறித்து நின்றது.

சிவாலயத்தினிடத்து முதல்வன் பிரகாசமாய் நிற்கின்றான் என்பதற்குக் காட்டும்

உதாரணம்.

கண்டதோரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே
றுண்டல்போ னின்றங் குளதாமாற்—கண்டவுருத்
தானதுவா யன்றானன் றனதுவாய்த் தோன்றானே
தானதுவாய்க் காணுந் தவர்க்கு.

சிற்றுரை.

ௗ-ம் உ-ம் ௭-னின், சங்கமவடிவிற்குக் கூறிப்போந்த இயல் பில்லாத தாவரவடிவின் மந்திர சாந்நித்திய முள்வழியன்றிப் பிர காசமாய் நிற்றல் பெறப்படாதென்பாரை நோக்கிச் சிவாலயத்தி னிடத்தும் இறைவன் பிரகாசமாய் நிற்றலே வலியுறுத்துத லுத லிற்று.

(இ-ள்.) காட்டத்தில் அங்கி வேறு உண்டல்போல்—விற கிற்றீ (கடைகோலாற் கடைந்துழி) வேறாய்விளங்கும் (அல்லுழி விளங்குவதன்றானாற்) போல,—கண்ட உருத் தான் அது ஆய் அன்று ஆனான்—(உயிர்கட்குப் புத்தி முத்தி யளித்தற்பொருட் டுக்) காணப்பட்ட தாவர வடிவின்கட் (கலப்பினால்) அதுவே தானாய் (அதுவன்றி) வேறு பொருளுமா மியல்புடைய முதல் வன்,—கண்டது ஒரு மந்திரத்தால் நின்று அங்கு உளது ஆம்— (அதுவே தானாகக் காணாதார்க்குத்) தம்மாலறியப் பட்டதொரு மந்திர சாந்நித்திய மில்வழி அவ்வடிவின்கண் விளங்காது நின்று அஃதுள்வழி விளங்கித்தோன்றும் பொருளாம்,—அது தான் ஆய்க் காணுந்தவர்க்கு அது தான் ஆய்த் தோன்றானே — (அவ்வா றன்றி) அவ்வடிவே அவனாகக் காணப்பெறும் உண்மைத் தவ

முடையாருக்கு அப் பெற்றியனேயாய் விளங்கித் தோன்றுன் கொல்லோ எ-று.

காணுதார்க் கென்பது சொல்லெச்சம். மந்திரத்தால் என்னும் பொருளடைக்கேற்ப உவமையினும் வருவித் துரைக்கப்பட்டது. உண்டாதல் ஈண்டுவிளங்குதன் மேற்று. ஆல் அசை. ஆனுனென்பது பெயர். ஓகாரம் எதிர்மறை. பொருண்மை பற்றி உளதெனவும் அன்றெனவுங் கூறினுர். தானதுவா யன்றுனுனென்னும் பெயரடையான் அவரவர் பாவனைக் கேற்ப விளங்குதற் கேதுக் கூறியது. தானதுவாயன்றுதல் சங்கம வடிவிற்கு மொக்குமேனும், தாவரவடிவின்கண் நிகழுங்கடாவை இதனுனன்றி நீக்கலாகாமையின் ஈண்டுக்கூறினுர். இஃதீரிடத்து மொக்கு மென்பது முன்னர்ப் பெறப்படும்.

விளக்கம்.

(கொண்டுகூட்டு.) காட்டத்தின் அங்கி வேறு உண்டல்போல் கண்ட உருத் தான் அது ஆய் அன்று ஆனுன் கண்டது ஒரு மந்திரத்தான் நின்று அங்கு உளது ஆம் அது தான் ஆய்க்காணும் தவர்க்கு அதுதான் ஆய்த் தோன்றுனே

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ எனின், மேலை வெண்பாவிற் கூறியவாறு சிவபத்தரது திருவேடமானது சிவபெருமானை உலகத்தார் அறிதற்பொருட்டுச் சிவபெருமானுலேயே கொடுக்கப்பட்டதனுல் அத்திருவேடத்திற் சிவபெருமான் விளங்கித் தோன்றுவன் என்றல் பொருந்தும்; அத்திருவேடத்தை அணிந்திருக்கும் சிவபத்தர் சிவபெருமானை உள்ளவாறுணரும் இயல்புடையரா யிருத்தல்போலச் சிவாலயத்திலுள்ள சிவலிங்காதி மூர்த்தங்கள் தாவர வடிவமாதலால் அம்மூர்த்திகளுக்கு அவ்வாறுணரும் இயல்பில்லை; அத்தாவர வடிவில் மந்திரங் கிரியை பாவனைகளால் பிறர் செயலுக் கேற்றவாறு சிவபெருமான் விளங்கித் தோன்றுதலேயன்றி மந்திரமுதலிய கிரியைகளில்லாத விடத்து விளங்கித்தோன்றுன். ஆதலால் அம்மூர்த்திகளை உடைய சிவாலயத்தையும் பரமேசுரன் எனக்கண்டு வழிபடுக என மேற்கோளிற்கூறியது எவ்வாறு பொருந்து மென்பாரை நோக்கிச் சிவாயலத்தினிடத்தும் சிவபெருமான் விளங்கித் தோன்றி நிற்கின்றுன் எனக்கூறிப் பிரகாசமாய் நிற்கின்றுன் என்ற எதுவை வலியுறுத்தியவாறும்,

(பொ—ரை.) விறகினிடத்தில் தீ எப்பொழுதும் உண்டு ; ஆயினும் கடைகோலினுல் கடைந்தவிடத்து அந்தத் தீயானது விறகில் நின்றும் வேருய் விளங்கித் தோன்றும் ; கடையாதவிடத்து விளங்கித் தோன்றுவ

இல்லை ; தோன்றுதுகொண்டு விறகில் தீயில்லையென அறிவுடையார் எண்ணார். அதுபோல உயிர்களுக்குப் போகமோட்சங்களைக் கொடுத்தற் பொருட்டுக் காணப்பட்ட தாவர வடிவின்கண் முதல்வன் கலப்பினால் அவ்வடிவமே தானாயும் பொருளின் தன்மையால் அவ்வடிவத்தின் வேறாயும் நிற்கும் இயல்புடையன். இவ்விரு நிலைகளுள் அவ்வடிவத்தையே சிவபெருமானாகக் காணாதார்க்கு அவர் தம்மால் அறியப்பட்டதாகிய ஒரு மந்திரக் கிரியைஉள்ள விடத்து அவ்வடிவத்தில் விளங்கித் தோன்றி மந்திரக்கிரியை யில்லாத விடத்து விளங்காது நிற்பன்; மந்திரத்தால் காணுந் தன்மையின்றி அவ்வடிவமே சிவபெருமானாகக் காணும் உண்மைத் தவமுடையார்க்கு அவ் வடிவமே தானாக விளங்கித் தோன்றமாட்டானோ? தோன்றுவன் எ-று.

(க-ரை.) உலகத்தார்க்கு உபகாரமாக இறைவனால் அமைந்துள்ள தீயானது விறகினிடத்திற் கடையாத விடத்தும் அவ்விறகே தானாயிருப்ப தாய் அறிவுடையார்க்கு விளங்குவதுபோல உயிர்கள் உலக இன்பம், வீட்டின்பங்களை அடைதற்பொருட்டு இறைவன்கொண்ட தாவர வடிவில் மந்திரக் கிரியை யில்லாதவிடத்தும் அத்தாவர வடிவமே தானாக உண்மைத் தவமுடைய சிவபத்தர்க்கு அவ்விறைவன் விளங்கித் தோன்றுவன் என் பதாம்.

தான் அதுவாய்க் காணுந்தவர்க்கு என்றதனால் காணாதார்க்கு என்னுஞ் சொல் எஞ்சிநின்றது. ஆதலால் கண்டதொரு மந்திரத்தால் என்றவிடத் துக் காணாதார்க்கு என்பது வருவித் துரைக்கப்பட்டது.

தாவர வடிவாகிய உவமேயத்தில் மந்திரத்தான் உளதாம் என்று உள தாதற்கு மந்திரத்தை அடைகொடுத்துக் கூறியதற்கேற்பக், காட்டமாகிய உவமையினும் கடைகோலாற் கடைதல் வருவித்துக் கடைந்தவிடத்து வே றாய்விளங்குமென உரைக்கப்பட்டது.

உண்டல்போல் என்றவிடத்து உண்டாதல் என்பது இச்செய்யுளில் விளங்குதலைக் குறித்து நின்றது.

உளதாம ஆல் என்றவிடத்து ஆல் என்பது அசை.

தானதுவாய் அன்றானான் என்றவிடத்து ஆனான் என்பது அவ்வியல் புடைய முதல்வனைக்குறித்த பெயராய் நின்றது. வீங்கினான் வந்தான் என்ற விடத்து வீங்கினான் என்பது பெயராய்நின்றவாறு போலாம்.

தோன்றானோ என்றவிடத்துள்ள ஓகாரம் எதிர்மறையாய் தோன்று வன் என்பதைக் குறித்து நின்றது.

உளது அன்றுஎன்பன வினைபற்றிக் கூறப்பட்டன அல்ல; தன்மை பற்றிக் கூறப்பட்டன; தன்மை—இயல்பு; இங்கே எவ்வியல் பெனின்,

அதுவே தானுதலும் அதுவன்றி வேறு பொருளாதலும், விளங்காது நிற்ற லும் விளங்கித் தோன்றுதலும் ஆகிய இயல்பென்க. ஆதலால் பொருளு மாம் இயல்புடைய முதல்வன் என உரை செய்யப்பட்டது.

ஆனுன் என்னும் பெயருக்குத் தானதுவாய் அன்று என்னும் அடை கொடுத்துத் தானதுவாயன்ருனுன் எனக் கூறினர். அந்த அடையினுல் கலப்பினுல் அதுவாயும் பொருட்டன்மையால் அன்ருயும் விளங்குவன் என அவரவர் பாவனைக் கேற்பவிளங்குதற்கு ஏதுக் கூறியவாறு அறிக.

முதல்வன் அதுவாதலும் அன்ருதலும் மூர்த்தமாகிய தாவரவடிவிற்கு மட்டு மன்று; உயிராகிய சங்கமவடிவிற்கும் ஒக்கும். ஆயினும் சங்கமமாகிய சிவபத்தரைப்பற்றிக் கூறிய மேலைவெண்பாவிற் கூருமல் இவ்வெண்பா விற் கூறியது என்னையெனின், சிவபத்தரிடத்து இறைவன் பிரகாச மாய் நிற்றல் எவ்வாறு கூடும் என்ற ஆசங்கைக்குச் சிவனை உள்ளவாறுஉணர் தலினுல் கூடும்என்று சமாதானங் கூறவேண்டுதலின் என்க. தாவர வடிவின் கண் இறைவன் பிரகாசமாய் நிற்றல் எவ்வாறுகூடும் என்னும ஆசங்கையை அதுவாய் நிற்றல் பற்றிக்கூடும் என்பதனுலன்றி நீக்கலாகாமையின் தானது வாய் அன்ருதலை இச்செய்யுளிற் கூறினரென அறிக. தாவர சங்கமமாகிய ஈரிடத்தும் அதுவாதலும் அன்ருதலும் ஒக்கும் என்பது முன்னர்க் கூறப் படும் ஒழிபு அதிகாணத்தாற் பெறப்படும்.

மேலை வெண்பாவில் சிவபத்தரிடத்து இறைவன் விளங்கித்தோன்று வன் என்பதற்குத் தயிரினிடத்து நெய் விளங்கித் தோன்றுவதை உவமை கூறினர்; கூறவே ஏனைய உயிர்களிடத்துப் பாலின் நெய்போல மறைந்து நிற்பன் என்பது பெறப்பட்டது. இவ்வெண்பாவில் சிவலிங்காதி மூர்த்தங் களில் மறைந்து நிற்பன் என்பதற்கு விறகினிடத்துத் தீமறைந்து நிற் பதை உவமைகூறினர். இவ்வாறு தாவரத்தினிடத்தும் சங்கமத்தினிடத் தும் விளங்குவன் என்னும் இக்கருத்தேபற்றி "விறகிற்றீயினன் பாலிற்படு நெய்போல்-மறைய நின்றுளன் மாமணிச்சோதியான்" என்றருளிச்செய் தனர் அப்பர் சுவாமிகளும். இப்பாசுரத்தின் கருத்து ஒன்பதாஞ் சூத்திரத்து மூன்ரும் அதிகாணத்து இரண்டாவது வெண்பாவிற் கூறியிருக்கின்றமை யால் அவ்விடத்துக் காண்க. அங்கே இதயத்தில் விளங்கித் தோன்றுதற்கு விகிற்றீ உவமை கூறப்பட்டது.

மூன்றம் அதிகாணம் முற்றிற்று.

நான்காவது ஒழிபு அதிகரணம்.

இந்த அதிகரணம் சூத்திரத்திலுள்ள மூன்று அதிகரணப் பொருள்களின் சம்பந்தமான சங்கைக்குச் சமாதானமாக அவ்வதிகரணங்களின் சேடமாகலின் ஒழிபு ஆயிற்று.

திருவேடத்தினிடத்தும் சிவாலயத்தினிடத்தும் வழிபாடு செய்யவேண்டுமென்ற விதியை வலியுறுத்தும்

மேற்கோள்.

இனி இவ்விடங்களின் வழிபடுக வென்றது.

சிற்றுரை.

எ-து மேல் எ-னின், மேற்கூறிப்போந்த மூன்றுஞ் சீவன் முத்தருக்குத் தாமே யுளவா மிலக்கணமாகலின் அநுவாத மாக வைத்துணர்த்தற் பாலன வாகிய இவற்றைக் களைக இணங்குக வழிபடுக வென விதியாக வைத்தோதிய தென்னுக் கென்பாரை நோக்கி அதனை அவற்ற தொழிபாகக் கொண்டு சாதித்தற்கு மேற் கோடனுதலிற்று.

இ-ள். வெ-டை.

சுப்பிரமணியதேசிகர் உரை.

இ-ள். இவ்விடங்களின்—மேற்கூறிய திருவேடங்கள் சிவாலயங்களிடத்தே—வழிபடுக வென்றது—வழிபாடு செய்க எ-று.

சிற்றுரை.

இவ்விடங்க ளென்றது மேற்கூறிய இரண்டினையும். வழிபடுக வென்னும் எடுத்தலோசையான் அநுவதித் துணர்த்துவதே யமையு மென்பாரை நோக்கி விதித்தலை வலியுறுத்தவாறு. இனம் பற்றிக் களைதல் இணங்குதல் கட்கும் இஃதொக்கும்.

விளக்கம்.

இம்மேற்கோள் என்னசொல்லிற்றோ வெனின், மேற்கூறிய மூன்று அதிகரணங்களாலும் கூறி முடித்த மலங்களைக் களைதல் சிவபத்தரோடு

இணங்குதல் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவன் எனக் கண்டு வழிபடுதல் ஆகிய மூன்றும் சீவன் முத்தருக்கு இயல்பாகவே உளவாகிய இலக்கணமாகும். ஆதலால் களைதற்கும் இணங்குதற்கும் வழிபடுதற்கும் காரணங் கூறுதற் பொருட்டுக் களைவர் இணங்குவர் வழிபடுவர் என அநுவாதமாக வைத்துக் கூறப்பட வேண்டிய அம் மூன்றனையும் அவ்வாறு கூறாது களைக, இணங்குக, வழிபடுக, என விதியாகவைத்து ஓதியகருத்து என்னை யென்பாரை நோக்கி அம் மூன்றதிகரணங்களின் சேடமாகக் கொண்டு விதியாகக் கூறியதை வலியுறுத்தற் பொருட்டு மேற்கூறியவாறு விதியாகவே கூறி வலியுறுத்திய வாறும்.

இவ்வதிகரணத்தில், சீவன் முத்தர்க்கு இயல்பாயுள்ள வழிபாடு முதலியவற்றை விதியாக வைத்துக் கூறியது பொருந்துமோ பொருந்தாதோ என்பது ஐயப்பாடு. பொருந்சா தென்பது பிறர்பக்கம்.

(இம்மேற்கோளின் பொருள்.) மூன்றும் அதிகரணத்திற் கூறியவாறு சிவபுத்தா-து திருவேடங்க ளிடத்தும் சிவாலயங்க ளிடத்தும் வழிபாடு செய்க எ-று.

இவ்விடங்க ளென்றது மூன்றும் அதிகரணத்திற் கூறிய திருவேடம், சிவாலயம் இரண்டனையும். வழிபடுவர் என அநுவாதமாகக் கூறுதலே பொருத்தம் என்பாரை நோக்கி வழிபடுக என்னும் உரத்துக் கூறும் எடுத்தல் ஓசையால் அவ்வாறு கூறுதல் பொருந்தாது எனவும் விதியாகக் கூறுதலே பொருத்த மெனவும் விதித்தலே வலியுறுத்தியவாறும். மூன்று மதிகாணத்திலும் இவ்வதிகரணத்திலும் வழிபடுக என்றே கூறி யிருத்தலால் கூறியது கூறலாகாதோ எனின், ஆகாது. எதனாலெனின், படுத்தலோசை எடுத்தலோசை யென்னும் ஓசை வேறுபாட்டால் என்க. படுத்தலோசை விதியையும் எடுத்தலோசை அவ்விதியை வலியுறுத்துதலையுந் தருமாதலால் மூன்றுவது அதிகரணத்தில் வழிபடுக என்றது படுத்த லோசையாய் நின்று விதியையும், இவ்வதிகரணத்தில் வழிபடுக என்றது எடுத்தலோசையாய் நின்று அவ்விதியை வலியுறுத்துதலையும் உணர்த்தினமையால் கூறியது கூறலாகாமை யறிக. படுத்தலோசையாவது மெல்லக் கூறுதல். எடுத்தலோசையாவது உரத்துக் கூறுதல். செய் என்னும் சொல்லை முதலாவது மெல்லக் கூறுங்கால் விகுதியாகும்; மறுத்தவிடத்து உரத்துக் கூறுங்கால் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தியதாகும்.

வழிபடுக என்று மூன்றுமதிகாரணப் பொருளை வலியுறுத்தினமையால் இனம்பற்றி முதலதிகரணம் இரண்டா மதிகரணங்களிற் கூறிய களைதல் இணங்குதல்கட்கும் இவ்வாறு எடுத்தலோசையால் வலியுறுத்துதல் பொருந்தும்.

வழிபாடு செய்யவேண்டும் என்றவிதியை வலியுறுத்திய
மேற்கோளைவலியுறுத்துதற்குக் காட்டும்

ஏது.

நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும்புருடன் அவையாகாவாறு அப்புருடனு மாகலான்.

சிற்றுரை.

எ-து ஏது எ-னின், எய்தியதனை விதித்தல் பயனுடைத் தன்று போலுமென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

(இ-ள்.) நரம்புமுதலிய தாதுக்களின்கண் வேற்றுமையின்றி அதுவது தானாய் வருகின்ற உயிர், நாடியோ என்போ நரம்பு சிக் கோழையோ வென்று இங்ஙனம் பைம்மறியாப் பார்ப்பார்க்கு அந்நரம்பு நாடி முதலியவை யாகாது அவற்றின் வேறுமாயினாற் போல உயிர்க்குயிராகிய அம்முதல்வனும் உயிர்ப் பொருள் உயிரில் பொருளெல்லா வற்றினுங் கலப்பான் அதுவது தானாகியும் பொருண்மையான் அல்லனாகியும் நிற்பனாதலான் அதுவது தானாய்க் காணுங் காட்சிபற்றி யெய்திய வழிபாடு, அல்லனாய் நிற்றலைக் காணுங்கா லெய்தாதாகலின் அவ்வழியு மெய்துவிக்க வேண்டுதலான் இனி இவ்விடங்களின் வழிபடுக வென விதித்தோதியது எ-று.

அவையாகாவாறு அப்புருடனு மெனவே அவ்விடத் தெய்துவித்தல் ஒருதலையான் வேண்டு மென்பது தாற்பரிய மாயிற்று. மேற்கோளின் இவ்விடங்களை யென்னுது இவ்விடங்களி னென வேற்றுமைப் படுத்தோதியதூஉம் இஃதுணர்ந்து கோடற்பொருட்டு. இதனானே எய்தாத தெய்துவிப்பதூஉம், எய்தியதிகந்துபடாமற்காப்பதூஉம், எய்தியதனை யொருமருங்கு மறுப்பதூஉம், என்னும் விதிமூன்றனுள், இஃதெய்திய திகந்து படாமற் காத்த தென்பது போந்தவா றுணர்க. வாறு உவம உருபுபட நின்றது. முதலானவற்றை யென்பது உருபு மயக்கம்.

விளக்கம்.

இந்தஏது என்ன சொல்லிற்றோ எனின், சீவன் முத்தருக்கு இயல்பாகவுள்ள வழிபாடு முதலியவற்றை மீண்டும் செய்யவேண்டு மென விதித்

தல் பயனற்றதாகும் என்பாரை நோக்கிப் பயன் உண்டெனக் கூறி மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(இந்த் வெதுவின் பொருள்.) உயிரானது நரம்பு நாடி என்பு தோல் முதலிய தூல சரீரதத்துவங்களில் கலந்து நிற்றல் பற்றி ஒவ்வொரு தத்துவமுந் தானாய் நிற்கும். அவ்வாறு நிற்கும் உயிர், நாடியோ என்போ நரம்போ சீயோ கோழையோ என்று இவ்வாறு பைம்மறித்துப் பார்த்தாற்போன்று உள்நோக்காகப் பார்ப்பவர்க்கு அந்நரம்பு நாடி முதலியவையாகாமல் அத்தத்துவங்களின் வேறு மாகும். அதுபோல உயிர்க்குயிராகிய முதல்வனும் உயிருடைய பொருள் உயிரில்லாத பொருள் ஆகிய எல்லாவற்றினும் கலந்து நிற்குந் தன்மை பற்றி அப்பொருள்கள் தானாயும், பொருளின் தன்மை பற்றி அவ்வுயிர்ப் பொருள் உயிரில்லாத பொருள்களின் வேறாயும் நிற்பன். கலப்பினால் சடசித்துக்கள் தானாய் நிற்கும் உண்மையை அறிந்த அறிவுபற்றித் திருவேடத்தினிடத்தும் சிவாலயத்தினிடத்தும் சீவன் முத்தருக்கு உண்டாகிய வழிபாடு, பொருளின் தன்மையால் அவையல்லனாகி அவற்றின் வேறாய் நிற்றலை அறியுமிடத்து உண்டாகாது. ஆதலால் வேறாய் நிற்றலை அறியுமிடத்தும் வழிபாடு செய்விக்க வேண்டுதலின் இனி இவ்விடங்களின் வழிபடுக எனவிதியாக வைத்து மேற்கோள் கூறியது எ-று.

மறி யென்பது மறித்தல் என்னும் பொருள்பட நின்றமுதல் நிலைத்தொழிற் பெயர். ஆகவே பைம்மறி என்பது பையைத் திருப்பிப் பார்த்தல். உள்ளே அசுத்தமாய் வெளியே பளபளப்பாயுள்ள பையை வெளியே பார்க்கும்போது இச்சை உண்டாகும். ஆயினும் திருப்பி உள்ளே பார்க்கும்போது இச்சை யுண்டாகாது வெறுப்பு உண்டாகும். அவ்வாறே உடம்பை மேல் நோக்காகப் பார்க்குமிடத்து இச்சையால் அவ்வுடம்பினிடத்து நானென்னும் புத்தியும் உள்நோக்கி அசுத்தமாகிய தத்துவங்களைப் பார்க்குமிடத்து வெறுப்பால் உடம்பு நான் அல்லன் என்னும் புத்தியும் ஒருவனுக்கு உண்டாகும். இக்கருத்துப் பற்றியே நாலடியார் தூய்தன்மை உ-வது செய்யுளில், "தோற் போர்வை மேலுந் தொளைபலவாய்ப் பொய்ம் மறைக்கும்—மீப்போர்வை மாட்சித் துடம்பானால்—மீப்போர்வை—பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்—பைம்மறியாப் பார்க்கப் படும்" என்றனர்.

அவையாகாவாறு அப்புருடனும் என்றதனால் ஆகாது வேறு நிற்றலைக் காணுங் காலத்தும் வழிபாடு செய்யவேண்டுமென விதித்தல் உறுதியாய் வேண்டு மென்பதுதாற்பரியமாதலால் அவ்வாறு உரைசெய்யப் பட்டது. தாற்பரியமாவது அவ்வப் பொருளுணர்ச்சி பற்றிச் சொல்ல விரும்பியகருத்து. மேற்கோளில் இவ்விடங்களை என்று கூறாமல் இவ் விடங்களின் என ஏனையவற்றி னின்றும் வேறுபடுத்திக் கூறியதூஉம் இவ்விடங்களில்

வழிபாடு உறுதியாய் வேண்டுமென்பது உணர்ந்து கொள்ளுதற் பொருட்டு. இவ்விடங்களை வழிபடுக என்று கூறின் ஏனைய வற்றிற் போலப் பொதுவாகுமே யன்றிச் சிறப்பான விதி யாகாது.

விதித்தல் வேண்டுமென்ற இதனானே, முன் பொருந்தாத தொன்றைப் பொருந்தவேண்டு மென்று விதிப்பதூஉம், முன்பொருந்திய தொன்று நீங்காமல் காக்கவேண்டு மென்று விதிப்பதூஉம், பொருந்தியதில் ஒரு பாகத்தை விலக்கவேண்டு மென்று விதிப்பதூஉம் என்னும் விதி மூன்றனுள் இயல்பாகவே வழிபடுதலையுடைய சீவன் முத்தருக்கு விதித்த இவ்விதி, முன் பொருந்தியது நீங்காமல் காக்கும்பயனை உடையதென ஆசங்கை நீக்கியவாறு உணர்க.

பொருந்தியதில் ஒருபாகத்தை விலக்கும் விதியாவது, எல்லாரிடத்தும் பணிதல் வேண்டு மென முன்னர் விதித்து இவ்விதிமனைவி மக்கள் இளையான் சத்துரு இவர்களிடத்திற் செல்லாதென விலக்குவது போல்வன.

அவையாகாவாறு என்றதில் வாறு என்பதுபோல என்னும் உவம உருபாய் நின்றது. அப் புருடன் என்பது முதல்வனைக் குறித்து நின்றது. முதலாவது நின்றபுருடன் உயிரைக் குறித்து நின்றது.

முதலான வற்றை யென்பது முதலானவற்றின்கண் என்னும் பொருள் குறித்து நிற்றலால் உருபுமயக்கம்.

இந்த ஏது, சீவன் முத்தர்க்கு இயல்பாயுள்ள வழிபாடு முதலியவற்றை விதியாகவைத்துக் கூறுதல் பொருந்தா தென்பாரை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபாயிற்று.

திருவேடத்தி னிடத்தும் சிவாலயத்தினிடத்தும்
வழிபாடுசெய்யவேண்டுமென்பதற்குக்காட்டும்
உதாரணம்.

அதுவிது வென்ற ததுவல்லான் கண்டார்க்
கதுவித வென்றதையு மல்லான்—போதுவதனி
லத்துவித மாத லகண்டமுந் தைவமே
யத்துவிதி யன்பிற் றொழு.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், முதல்வனுக்கு அவ்வியல்பு எல்லாப் பொருட்கண்ணு முண்மையின்- அவற்றுள் இவ்விடங்களின்

மாத்திரையே வழிபாடு விதித்த தென்னை யென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்) கண்டார்க்கு—(முதல்வன் உயிர்ப்பொருள் உயிரில் பொரு ளெல்லாவற்றினும் நிற்கும் நிலைமை) யறியப் பெற்றோர்க்கு,—அது இது என்றது (அல்லான்)—(கண் அருக்கன் போல்) அதுவும் இதுவுமெனப் பக்கிசைத் தோதப் பட்ட பேதநிலைமை யனுமல்லனாய்,—அது (என்றது) அல்லான்—(உடலுயிர் போல்) அதுவே யென்றோதப்பட்ட அபேத நிலைமையனு மல்லனாய்,—அது இது என்றதையும் அல்லான்—(குணகுணிபோல்) அதுவாகிய இது வென்று பக்கிசையாமலோதப்பட்ட பேதாபேத நிலைமையனு மல்லனாய்,—பொது வதனில் அத்துவிதம் ஆதல் அகண்டமுந் தைவமே—(அறிவொளிபோல்) அம்மூன்றற்கும் பொதுமையான் அத்துவித நிலைமையனாதலான் எல்லாப் பொருளும் அவன் வடிவேயாமாயினும்,—அத்துவிதி அன்பின் தொழு—(அவற்றுள்ளும்) அன்பு விளையுமிடத்தின் வழிபடு வாயாக அவ்வத்துவித சித்தாந் தத்தைப் பெற்றுடையோய் எ-று.

அதுவிது வென்றது முன்னையது உம்மைத் தொகை; பின்னையது இருபெய ரொட்டுப் பண்புத் தொகை. அல்லா னென்பதனை மேலுங் கூட்டி, என்றதென்பதனை அது வென்றதனோடுங் கூட்டி யுரைக்க. அல்லானென்பது முற்றெச்சக் குறிப்பு. என்றதை ஐயீற்றுடைக் குற்றுகரம். உம்மை இறந்தது தழீஇயிற்று. பொதுவதென்னு மது பகுதிப் பொருள் விகுதி. தைவமென்னுஞ் சொல்லியல்பு மேலே யுரைத்தாம். ஏகாரந் தேற்றம். ஆயினுமென்பது சொல்லெச்சம். அன்பு ஆகுபெயர். ஏழாவது விரித்துரைக்க.

“திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி” யி னன்றி “எங்கு முருக்காண வொண்ணாத பான் முலைப்பால் விம்மி யொழுகுவது போல் வெளிப்பட் டருளுவ” தாகி அடிப்பட்டு வருமன்பு விளையாமையின் ஆண்டுச் செய்யும் வழிபாடே அத்துவிதஞானத்தை நிலை பெறுத்தற் பயத்த தென்பார் “அத்துவிதமாத லகண்டமுந் தைவமே” என அநுவதித்து “அத்துவிதி யன்பிற் றொழு” வென்றார். அத்துவிதி என்னும் அண்மைவிளி பயனுணர நின்ற குறிப்புப் பெயர். இதனானே, விதிக்குப் பயன் கூறியதூஉ மாயிற்று. இனி, அது இது வென்பன அருவுருவாகிய திருமேனி யெனக்

கொண்டு அதற்கியைய வுரைப்பாருமுளர். அவர், அன்பி னென்றதனை ஏதுப்பொருட்கண் வரும் ஐந்தனுருபேற்ற இயற்பெயராக வைத்துரைப்ப.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) கண்டார்க்கு அது இது என்றது (அல்லான்) அது (என்றது) அல்லான் அது இது என்றதையும் அல்லான் பொதுவதனில் அத்துவிதம் ஆதல் அகண்டமும் தைவமே அத்துவிதி அன்பின் தொழு.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ எனின், ஏதுவிற் கூறியவாறு முதல்வனுக்குக் கலப்பால் அதுவது தானாகியும் பொருட்டன்மையால் வேறாயும் நிற்றல் எல்லாப் பொருளிடத்தும் இருக்கவும், அப்பொருள்களுள், திருவேடம் சிவாலயங்கள் என்னு மிவ்விடங்களில் மட்டும் வழிபாடு செய்ய வேண்டுமென விதித்த கருத்து என்னை என்பாரைநோக்கி, அன்பு விளையுமிடம் இவையே யாதலால் இவ்விடங்களில் வழிபாடு விதித்ததெனக் கூறி மேற்கோளை வலியுறுத்தியவாறும்.

(பொ—ரை.) முதல்வன் உயிருடைய பொருள் உயிரில்லாதபொருள் எல்லாவற்றினும் கலந்து நிற்பினும் நிற்கும் நிலைமை பேதமோ அபேதமோ பேதாபேதமோ என ஆராய்ந்து அறிந்தவர்க்கு, பொருளை அறியுமிடத்தில் கண்ணும் சூரியனும் கலந்து நிற்பினும், கண் வேறு சூரியன் வேறு காணப்படுமாறுபோல அதுவும் இதுவும் எனப்பிரித்து ஓதப்படும் பேத நிலைமையுடையவனும் அல்லனாய், உடலும் உயிரும் பிரிக்க முடியாத வாறுபோல எல்லாம் முதல்வனே என்று சொல்லப்படும் அபேத நிலைமையுடையவனும் அல்லனாய், குணமும் குணியும் ஒருவாறு பேதமும் ஒருவாறு அபேதமுமாதல்போல முதல்வனாகிய இப்பொருள் என்று பிரிக்கமுடியாமை பற்றிக் கூறப்படும் பேதாபேத நிலைமையுடையவனும் அல்லனாய், உயிரின் அறிவும் கண்ணொளியும் கலப்பால் அபேதமாயும் பொருளின் தன்மையால் பேதமாயும் உடனாகச்செல்லுந் தன்மையால் பேதா பேதமாயும் நிற்கு மாறுபோல, பேதம் அபேதம் பேதா பேதம் ஆகிய மூன்றற்கும் பொதுவாய் அம்மூன்றுமாகிய அத்துவித நிலைமையுடையவனாய் நிற்பன். ஆதலால் எல்லாப் பொருளும் அவன்வடிவே யாம். ஆயினும், அப்பொருள்கள் எல்லாவற்றினுள்ளும் கண்டமாத்திரத்தே அன்பு உண்டாகும் இடம் எதுவோ அவ்விடத்தில் அவ்வத்துவித சித்தாந்தத்தைப் பெற்றுடைய நீ வழிபடுவாயாக எ-று.

(க-ரை.) முதல்வன் எல்லாப் பொருள்களிடத்தும் பிரிக்கமுடியாமற் கலந்துநிற்பினும் ஒவ்வொரு பொருள்களும் வேறு வேறு பெயராய்த் தோன்றித் திருவேடமும் சிவாலயமும் மட்டுங் கடவுட்பெயரால் தோன்றிக் கண்

டமாத்திரத்தே கடவுளிடத்து அன்பை உண்டுபண்ணும்; ஆதலால் இவ் விடங்களில் வழிபடுவாயாக என்பதாம்.

அது இது எனச் செய்யுளில் இருமுறை கூறப்பட்டுள்ளன. அவற் றுள் முதலாவதாக நின்ற அது இது என்றது அதுவும் இதுவும் என்னும் பொருள்குறித்து நிற்றலால் அவ்விடத்தில் உம்மை தொக்கு நின்றது. இரண்டாவதாக நின்ற அது இது என்றது அதுவாகிய இது என்னும் பொருள் குறித்துநிற்றலால் அவ்விடத்தில் இருபெயரொட்டுப் பண்பு தொக்கு நின்றது.

அது அல்லான் என்றதிலுள்ள அல்லான் என்பதனை மேலேயுள்ள அது இது என்றது என்பதனோடுங் கூட்டி அது இது என்றது அல்லான் எனவும், அது இது என்றது என்பதிலுள்ள என்றது என்பதை அது அல் லான் என்பதில் அது என்றதனோடுங்கூட்டி அது என்றது அல்லான் என வும் உரைசெய்யப்பட்டது.

அல்லான் என்ற குறிப்புவினைமுற்றுக் குறிப்புவினையெச்சமாய் நின் றது. அந்த எச்சம் அத்துவிதமாதல் என்பது கொண்டு முடிந்தது.

என்றதை என்பது என்றது என்னும் பொருள்குறித்தலால் ஐகா ரத்தை யிறுதியில் உடைய குற்றுகரம். அதாவது என்றது என்பது குற் றியலுகரம். அவ்வுகரம் கெட்டு ஐகாரமாய் நின்றதென்க.

என்றதையும் என்றதிலுள்ள உம்மை அது இது என்றதும் அல்லான் என மேற்கூறியதைத் தழுவிநிற்றலால் இறந்தது தழுவிற்று.

பொதுவதனில் என்பது பொதுவினில் என்னும் பொருள் குறித் தமையால் அது என்பது பொது என்னும் பகுதிப் பொருளையே குறித்த பகுதிப் பொருள் விகுதி.

தைவம் என்னுஞ் சொல்லின்பொருள் தேவனது உடைமை என மேல் ஒன்பதாஞ் சூத்திரம் இரண்டாவது அதிகரணத்து இரண்டாவது வெண்பாவில் உரைத்திருக்கின்றது. இவ்விடத்தில் அதனையே அவன் வடிவு என உரைசெய்யப்பட்டது. வடிவம் உடைமையாதலின் வேற்றுமை யின்மையறிக.

அகண்டமுந் தைவமே என்பதிலுள்ள ஏகாரம் அவன் வடிவம் என்ப தில் சந்தேகமில்லாமையைக் குறித்தலால் தேற்றம்.

தைவமே என்றவிடத்து ஆயினும் என்பது சொல்லெச்சமாய் வரு வித்து அவன் வடிவமேயாமாயினும் என உரை செய்யப்பட்டது.

அன்பிற்றொழு என்பதிலுள்ள அன்பு என்பது அன்புவிளையும் இடத் தைக் குறித்தலால் ஆகுபெயர். அந்த ஆகுபெயர்ப் பொருளில் ஏழாவது உருபை விரித்து அன்புவிளையும் இடத்தின் கண் என உரைக்க.

அத்துவிதமாதல் இரண்டாஞ் சூத்திரத்து முதலதிகரணத்து மூன்றா வது வெண்பாவினும் தைவம் என்பது ஒன்பதாஞ் சூத்திரம் இரண்டாவ-

அதிகரணத்தும் கூறப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் இவ்விடத்திற் கூறிய கருத்தென்னையெனின், சிவஞான சித்தியார் கஉ-ம் சூ-ம் சு-வது செய்யுளிற் கூறியபடி பசுவின் உடல்முழுதும் நிரம்பியிருந்துங் காணப் படாத பால், கன்றை நினைந்தயாத்திரத்தில் மடிவின் கண்ணே விம்மி யொழுகு மாறுபோல, எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவன், அன்பர் களின் பொருட்டுத் திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனியில் வெளிப்பட் டருளுவன் ஆதலால அததிருமேனியினிடத்துத்தான் உயிர்கட்கு அன்பு விளையும். அவ்விடத்தன்றி அன்பு விளையாது. ஆதலால் சிவாலயத்திற் செய்யும் வழிபாடே தனக்கு அநுபவமான அத்துவித ஞானத்தை நிலைக் கச்செய்யும் பயனை உடையது என அறிவிக்கவேண்டி அத்துவித மாதல் அகண்டமுந் தைவமே என மேற்கூறியவற்றை அநுவதித்து அத்துவிதி யன்பிற்றொழு என்றார்.

அத்துவிதி என்றது சமீபத்தில் உள்ளவனை அழைக்கும் அழைப்பாக நின்று குறிப்பால் அத்துவித சித்தாந்தமாகிய பயனைப் பெற்றுடையாய் என்னும் பொருளில் நிற்றலால் பயன் உணரநின்ற குறிப்புப் பெயர்.

இவ் வெண்பாவினால் இவ்விடங்களில் வழிபடுக என்றதற்குக்கருத்து அன்பு விளையும் இடம் ஆதலால் எனக் கூறியதோடு விதிக்குப்பயன் அத்து வித சித்தாந்தமான அநுபவத்தை நிலைக்கச் செய்தல் எனக் கூறியதூஉ மாயிற்று.

இவ்வெண்பாவிற்கு இவ்வாறன்றி அது இது என்பவற்றுள் முன்னை யதற்கு அது இது என்று சுட்டப்படும் உடம்பாகிய உருவெனவும் பின் னையதற்கு அது இது என்று சுட்டும் உயிரெனவும் பொதுவதனில் என்ற தற்கு அருவும் உருவும் இன்றி அவ்விரண்டற்கும் பொதுவான அருவுருவா கிய சிவலிங்கத் திருமேனியெனவும் உரைப்பாரும் உளர். அவர் ,அன்பின் என்றதிலுள்ள இன் உருபாகிய ஐந்தாம் வேற்றுமை உருபை ஏதுப்பொ ருள் உருபாகக்கொண்டு அன்பால் என இயற்பெயராக உரைப்பர். மேலே அன்பு ஆகுபெயராக உரைக்கப் பட்டது.

ஞானமே போதும் வழிபாடு வேண்டாமென்பாரை மறுத்து ஞானம் நிலைத்தற்கு வழிபாடு செய்யவேண்டும் எனக் கூறி மேற்கோளை வலியுறுத்தும்

உதாரணம்.

வினையா லசத்து விளைதலான் ஞானம்
வினைதீரி னன்றி விளையா—வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே யதுநிகழு
மானத்தா லன்பிற் றொழு.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின், அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்று கண்டொருவவே ஞான சொரூபமுளதாய் அத்துவிதத்தை யுணர்த்துமாகலான் அதன்பொருட்டு வழிபாடு வேறு விதித்தல் எற்றுக் கென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) வினையால் அசத்து விளைதலான் வினைதீரின் அன்றி ஞானம் விளையா—(உடம்பின் கண்ணதாகிய) பிராரத்த வாசனை (உயிர்க்குத் தாக்குவதாயுள்ள துணையும்) அதனால் (வரும் விருப்பு வெறுப்புக்களும் அவைபற்றிக் காட்சிப்படும் மண் முதன்மாயைகளும் அவைபற்றி நிகழும் விபரீத வுணர்வுமாகிய) அசத்துக்கள் (ஒருவியவழியும் வந்துகூடி) மேம்படுவன வாகலான் (அவ்வளவிற்கெல்லாம் மூலமாகிய) பிராரத்தவாசனை பற்றறக் கழிந்தாலன்றி (அவ்வசத்தைக் கீழ்ப்படுத்து) மெய்யுணர்வு மேம்படுதல் கூடாதாகலின்,—வினை தீர ஞானத்தை நாடித்தொழவே அது நிகழும்—அவ்வாசனை பற்றறக் கழிதற்பொருட்டு அம் மெய்யுணர்வுடையாரை நாடி வழிபடவே (அவ்வினை நீங்கி) மெய்யுணர்வு மேம்பட்டு நிகழும்,—ஆனத்தால் அன்பின்தொழு—ஆகலான் அன்பினால் அவரை வழிபடுவாயாக எ-று.

அசத்தை யொருவியவழி உளதாகிய ஞானசொரூபம் நிலைபெறுதல் அவ்வசத்தினது விளைவிற்கு வேராகிய வினைத்தீர்வின் கண்ணதாகலான், அவ்வினை வேரறுத்து மெய்யுணர்வை நிலைபெறுத்துதற்பொருட்டு அதனை அங்ஙன நிலைபெறுத்தினார் மாட்டுச்செய்யும் வழிபாடு ஒருதலையான் வேண்டப்படுமென்பதாம். அற்றேல், அதன்பொருட்டு ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்க வென்ற வதுவே அதற்கமையுமெனின், அஃதொக்கும்; அவ்வுச்சரிப்பும் இவ் வழிபாட்டையின்றி யமையாதென்க. அற்றாகலினன்றே, ஆண்டஞ்செழுத்தா லெனவும், மண் முதனாள மெனவும் அகத்துவழிபாட்டை உடன் கூறியதூஉமென்பது. விளையாதென்னுந் துவ்விகுதி விகாரத்தாற் றொக்கது. பின் வந்த ஞானம் ஆகுபெயர். ஆனதனா லென்பது ஆனத்தாலென மரீஇ யிற்று.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ எனின், ஒன்பதாஞ் சூத்திரம் இரண்டாவது அதிகரணத்திற் கூறியவாறு நிலைத்தலில்லாத பிரபஞ்ச பேதங்களை நிலையில்லாத அசத்து எனக் கண்டு அப் பிரபஞ்சங்களில் நின்றும் நீங்கவே சிவஞானத்தின் சொரூபம் தோன்றும்; தோன்றவே அந்தச் சிவ ஞானம் அத்துவிதஞானத்தை உணர்த்தும். ஆதலால் அத்துவித ஞானத்தை நிலைக்கச் செய்தற்பொருட்டுச் சாதனமாய்ப்பழகிய ஞானமே போதியதாகவும் அதனின் வேறாகச் சிவாலயத்தையும், சிவனடியாரையும் வழிபட வேண்டுமென்று மேலை வெண்பாவில் விதித்தது எதற்காக என்பாரை நோக்கி-இவ் வழிபாட்டினாலன்றி ஞானம் நிலைபெறாது எனக்கூறி வழிபாடு செய்யவேண்டுமென்ற மேற்கோளை வலியுறுத்திய வாறாம்.

(பொ-ரை.) பிராரத்த வினை காரணமாக உடம்பு நிற்குமாதலால் அவ்வுடம்பைப் பற்றி நிற்கும் பிராரத்த வினையாலுண்டாகும் வாசனையானது உயிரைத்தாக்கும் வரையும் அவ் வாசனையால் விருப்பு வெறுப்புக்கள் உளவாம். அவ் விருப்பு வெறுப்புக்களால் மண் முதல் மாயைவரையுள்ள தத்துவப் பொருள்களின் தோற்றம் உண்டாம். அப்பொருள்களின் தோற்றத்தால் எல்லாம் சிவ சொரூபமாய்ப் பார்க்கும் மெய்யுணர்வு மறைந்து உலகமாய்ப் பார்க்கும் விபரீதவுணர்வு நிகழும். நிகழவே ஞானத்தால் பிரபஞ்சத்தை அசத்தென்று கண்டு நீங்கியவிடத்தும் பிரார்த்த வாசனையால் விருப்பு வெறுப்புக்களும் பிரபஞ்சத் தோற்றமும் விபரீதவுணர்வும் வந்துகூடி மேம்படுவன வாகும். விருப்பு வெறுப்புமுதலிய அவ்வளவிற்கெல்லாம் மூலமாகிய பிராரத்தவாசனை பற்றறக் கழிந்தாலன்றி அப்பிரபஞ்சத்தைத் தோற்றவொட்டாமற் கீழ்ப்படுத்தி எல்லாம் சிவமாய்ப்பார்க்கும் மெய்யுணர்வு மேம்படுதல் கூடாது. ஆதலால் உடம்பு தோற்றம்வரை அப்பிராரத்த வாசனை பற்றறக் கழிதற்பொருட்டு அவ்வாசனை பற்றறக்கழிந்த மெய்யுணர்வுடையாரைத் தேடி அவரை வழிபட்டால் அவ்வழிபாட்டினால் பிராரத்தவாசனை நீங்கி எல்லாம் சிவமாய்ப் பார்க்கும் மெய்யுணர்வு மேம்பட்டுத் தோன்றும். ஆதலால் அம்மெய்யுணர்வுடைய சிவனடியாரை அன்பினால் வழிபடுவாயாக எ-று.

(க—ரை.) ஞானத்தால் மெய்யுணர்வு உண்டான விடத்தும் பிராரத்த வாசனையால் அம்மெய்யுணர்வு கீழ்ப்படு மாதலால் பிராரத்தவாசனை பற்றறக் கழிதற்பொருட்டு மெய்யுணர்வுடைய சிவனடியாரை வழிபடவேண்டும் என்பதாம்.

அசத்தாகிய பிரபஞ்சத்தை அசத்தெனக் கண்டும் சிவனடியாரை வழிபடுவானேன் எனின், அப்பிரபஞ்சத்தில் நின்றும் நீங்கிய விடத்து உளதாகிய ஞானசொரூபம் மீண்டும் அப்பிரபஞ்சத்தைப் பற்றாது நிலைபெற

வேண்டும். அவ்வாறு நிலைபெறுதற்குப் பிரபஞ்சத்தைப் பற்றச் செய்யும் மூலமாகிய பிராரத்தவினை தாக்காதிருத்தல் வேண்டும். ஆகவே அப்பிரா ரத்த வினையாகிய வேரை யறுத்து மெய்யுணர்வை நிலைபெறச் செய்தற் பொருட்டு அத்தன்மை யுடைய சிவனடியாரிடத்து வழிபாடு செய்யின் சார்ந்த பொருளின் தன்மையடைதற் குரிய உயிருக்குப் பிராரத்த வினை நீங்கி மெய்யுணர்வு நிலைபெறும். ஆதலால் பிராரத்தவினை கழிதற் பொரு ட்டுச் சிவனடியாரிடத்து அவசியம் வழிபாடு செய்ய வேண்டும் என்க.

அவ்வாருயின், பிராரத்த வாசனை தாக்கா திருத்தற் பொருட்டு ஒன்ப தாஞ் சூத்திரத்து மூன்றும் அதிகரணத்து மேற்கோளில் ஸ்ரீபஞ்சாக்கரத் தை விதிப்படி உச்சரிக்க என்று கூறியிருத்தலால் அதுவே பிராரத்த வினை யைப் பற்றறக் கழியச்செய்யு மாதலின் பஞ்சாக்கர உச்சரிப்பே போதும் சிவனடியார் வழிபாடு வேண்டாம் எனின், அது பொருந்தும். ஆயினும் அப்பஞ்சாக்கரத்தை உச்சரிப்பதற்கும் பிராரத்தவினை தாக்கா திருத்தல் வேண்டும். தாக்குமாயின் உச்சரிக்க முடியாது. ஆதலால் பிராத்தவினை தாக் காதிருத்தற் பொருட்டு ஒன்பதாஞ் சூத்திரத்திற் கூறியவாறு பஞ்சாக்கர உச்சரிப்பும் இவ்விடத்திற் கூறியவாறு சிவனடியாரை வழிபடுதலும் அவ சியம் வேண்டும் என்க. இக்கருத்துப் பற்றியே அவ்வொன்பதாஞ் சூத்திரத்தில் பஞ்சாக்கரத்தை உச்சரிக்க என்று கூறியதோடு அமையாது உதாரண வெண்பாவில் அஞ்செழுத்தால் உள்ளம் அரன் உடைமை என் றும், மண் முதல் நாளம் என்றும், அகத்து வழிபாட்டையும் உடன் கூறி ஞர். கூறவே, பஞ்சாக்கர உச்சரிப்பு, வழிபாட்டையின்றி முடியாதென் றுணர்க. ஆகவே, வழிபாடு, அகத்துவழிபாடு புறத்து வழிபாடு என இருதி றப்பட்டு, அகத்து வழிபாடு ஒன்பதாஞ் சூத்திரத்திலும் புறத்து வழிபாடு இச்சூத்திரத்திலுங் கூறினர் என அறிக.

அவ்வாருயின் பஞ்சாக்கரத்தைப் பற்றிய அதிகரணத்தை இச்சூத்தி ரத்தின் வையாது ஒன்பாஞ் சூத்திரத்தில் வைத்த கருத் தென்னை யெனின், பாசஞான பசுஞானங்களை நீக்கிப் பதிஞானத்தை யடைய வேண்டும் என்று கூறியதற் கேற்பப் பாச எழுத்தை நீக்கிப் பதி எழுத் தை உச்சரிக்க வேண்டும் என்ற இதைபுபற்றி அவ்விடத்திற் கூறினதே யன்றி வேறில்லை என்க. ஆகவே பிராரத்தவினை தாக்கா திருத்தற் பொரு ட்டுப் பஞ்சாக்கர உச்சரிப்பும் அகத்து வழிபாடும் புறத்து வழிபாடும் அவ சியம் வேண்டும் என்பதாம்.

ஞானம் என்ற ஒருமை, விளையா என்ற பன்மை கொண்டு முடியாது ஆதலால் விளையா என்ற இடத்தில் விளையாது என்னும் ஒருமைப் பொரு ளைத் தரும் துகர விகுதி தொக்கு நின்றது என்க.

ஞானத்தை நாடி என்ற இடத்தில் ஞானம் என்றது ஞானத்தை உடையாரைக் குறித்தலால் ஆகுபெயர்.

ஆனதனுல் என்று இருக்க வேண்டியது ஆனத்தால் என மருவி நின்றது.

வழிபாடு செய்யவில்லையாயின் உண்டாங் குற்றம்
இதுவெனக் கூறி மேற்கோளை வலியுறுத்தும்
உதாரணம்.

தன்னை யறிவித்துத் தான்றனுச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே
தானேதா னுச்செய்துந் தைவமென்றுந் தைவமே
மானே தொழுகை வலி.

சிற்றுரை.

எ-து உ-ம் எ-னின். அங்ஙனம் பயன்பற்றி விதிக்கப் படும் வழிபாடு வேள்வி முதலியன போலப் பயன்வேண்டாமையானு தல் பின்னர்ச் செய்து பெறுது மென்றுதல் ஒரோவழி ஒழியவும் படுங்கொல்லோ வென்பாரை நோக்கி அது செய்யாவழிப்படுங் குற்றமும் செய்தல் கடமை யாமாறும் உணர்த்தி விதித்தலை வலி யுறுத்துத னுதலிற்று.

(இ-ள்.) தன்னை யறிவித்துத் தான் தான் ஆச் செய்தானைப் பின்னை மறத்தல் பிழை அலது—தன்னுண்மையை (அறிய மாட்டாது குருடாய்க் கிடந்த உயிர்க்குப் பலவாற்றானும் அதனைத்) தெரித் துணர்த்தி (எத்தனையு மெளிய அவ்வுயிரை எத்தனையும அரிய) தானும் வண்ணம் செய்தளித்த பெரியதோருதவியை அதன் பின்னர் மறக்குமாயின் (அஃது இதற்குமுன் அறியாமையான் மறந்த குற்றம் போலத்) தீர் திறனுடைய தோர் குற்றமன்றுகலா னும்,—முன்னவன் தானே தானுச் செய்தும் தைவம் என்றுந் தை வமே மான்தொழுகையே வலி—முதல்வன் அங்ஙனம் தான்றனேயா கச் செய்தாலும் (இதுகாறுந் தனக்குச் சுதந்திர மின்றி முதல்வனது உபகாரத்தை யின்றி யமையாதாய்) அடிமை யாகிய உயிர் எக்காலத்தும் அவ்வாறடிமையேயா மாகலானும் (தான்று னுச் செய்தளித்த) அப்பெரியோனை வழிபடுதலே (அவ்வுயிர்க்கு) வலியாவது எ—று.

தமது முதற்றனே குருவாகலிற் றான் றனுச் செய்தானை யென் றும், முன்னைமறந்த குற்றம் அறியாது நிகழ்ந்த தாகலிற் கழுவப் படும்; இஃததுபோற் கழுவப்படுவ தன்றென்பார் பின்னைமறத் தல் பிழையலதென்றுங் கூறினர். பின்னை மறத்தலென்பதனுல்

முன்னை மறத்தல் பெறப்பட்டது. "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை—செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்னுங் கருத்து நோக்கிக் கூறியதுமாம்.

அலது மெனப் பாடமோதி இது பிழையாதலன்றியு மென்றுரைப்பாரு முளர். ஏகாரம் முன்னையது அசைநிலை; பின்னையன தேற்றம். செய்தாலென்பது செய்தெனத் திரிந்தது. உம்மை சிறப்பின்கண் வந்தது. தான்றானாச் செய்தல் எதனை யெதனைப் பற்றினும் அதுவதுவாமுயிர் தன்னையறிந்தவழி எண் குணங்களா னிறைந்து தன் வண்ணமாகச் செய்தல். அங்ஙனஞ் செய்தவழியும் "உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கே யுரித்து" என்பார் தைவ மென்றுந் தைவமே என்றார். தைவமென்னுஞ் சொல்லியல்பு மேலே யுரைத்தாம். மானை யென்னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது. மானென்பது வடசொற்றிரிபு. சுட்டு வருவிக்க. வலிதருவதனை வலியென் றுபசரித்தார்.

இவ்வுதாரணங்கண் மூன்றானும், வழிபாட்டிற்கும் இடத்து நிகழ் பொருண் மாத்திரையே யன்றி இட விசேடமும் பெறல் வேண்டு மென அதனை வலியுறுத்து முகத்தானே, முறையே சிவலிங்கத்தையுஞ் சிவபத்தர்வேடத்தையுஞ் சிவதேசிகர்களையும் அறிந்து வழிபடுமாறு கூறப்பட்டது.

விளக்கம்.

இவ்வுதாரணம் என்னசொல்லிற்றோ எனின், மேலை வெண்பாவிற் கூறியவாறு ஞானம் நிலைத்தலாகிய பயன் பொருட்டு வழிபாடு விதிக்கப்பட்டதாயின், சுவர்க்கமுதலிய பயனைக் குறித்து விதிக்கப்பட்ட வேள்வி முதலியனபோல இவ்வழிபாடும் ஒருபயன் குறித்ததாகும். ஆகவே சுவர்க்க முதலிய பயன் வேண்டாமையினாலாவது, வேண்டுமாயினும் பின்னர்ச்செய்து பெற்றுக் கொள்வோம் என்றாவது வேள்வி முதலியவற்றைச் செய்யாதிருத்தல் கூடுமாதலின் அதுபோல இவ்வழிபாடும் ஒரு சமயத்தில் செய்யாதிருத்தலுங் கூடுமோ என்பாரை நோக்கி இவ்வழிபாடு எப்பொழுதுஞ் செய்யவேண்டு மெனவும், செய்யாத சமயத்தில் உண்டாங் குற்றம் இது வெனவும், செய்யவேண்டுவது கடமையா மெனவும் உணர்த்தி மேற்கோளை வலியுறுத்திய வாறாம்.

(பொ-ரை.) உயிரோடு பிரிப்பின்றி நிற்கும் இறைவன் உண்மையை அறியமாட்டாது ஆணவமலமாகிய இருளால் அறிவு மறைக்கப்பட்டுக் குருடாய்க் கிடந்த உயிர்க்குப் பலவகையான சாதனங்களை யுணர்த்துதலால் அறியாமையாகிய குருட்டை நீக்கி இறைவனை அறியும் படிக்கும், சிற்றறிவும் சிறுதொழிலும் உடைய அவ்வுயிரை முற்றறிவும் முற்றுத்தொழிலும்

உடைய இறைவன் தன்மையைப் பொருந்தும் படிக்கும் செய்து காப்பாற்றிய குருவினுடைய பெரியதோர் உதவியை, முற்றறிவும் முற்றுத்தொழிலும் பெற்ற பின்னர் மறக்குமாயின் அம்மறத்தல் இதற்குமுன் அறியாமையால் மறந்த குற்றம் தீர்க்கப் பட்டவாறுபோல அறிந்த பின் செய்த இக்குற்றம் தீரும் தன்மை உடைய தன்று. அன்றியும், இறைவன், குரு மூர்த்தியாய் வந்து மேற்கூறிய வரறு உயிரைத் தானாகும் வண்ணம் செய்தாலும் இதுவரையும் தனக்குச் சுதந்திரமின்றி முதல்வனுடைய உபகாரத்தையின்றி ஒருசெயலும் செய்ய முடியாததாய் அடிமையா யிருந்த உயிர் எக்காலத்தும் அவ்வாறு அடிமையேயாம். ஆகவே நன்றியை மறந்த குற்றம் தீர்க்க முடியாமையானும், எக்காலத்தும் அடிமையே யாதலானும் இறைவன் தன்மையை அடையச் செய்த அப்பெரியோனை வழிபடுதலே இறைவன் தன்மையைப் பெற்ற அவ்வுயிர்க்குப் பெருமையைத் தருவதாகும் எ-று.

(க-ரை.) இறைவன் தன்மையை அடைந்தபின்னர் அவ்வாறு அடையச்செய்த பெரியாரை வழிபடவில்லையாயின் செய்ந்நன்றி கொன்றவனாகுமாதலானும், உயிர் எக்காலத்தும் அடிமையே யாதலால் வழிபடுதல் கடமையாதலானும் பெரியாரை எக்காலத்தும் வழிபடல் வேண்டும் என்பதாம்.

எட்டாஞ் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்து மேற்கோளிற் கூறியவாறு தமது முதல்வன்தானே குருவாதலால் இச்செய்யுளில் இறைவனாகச் செய்தானையென்று கூறவேண்டியதைத் "தான் தானாச் செய்தானை" யென்றும், ஞானம் தோன்றுதற்குமுன் வழிபடாது மறந்த குற்றம் அறியாது நிகழ்ந்தது ஆதலால் அக்குற்றம் நீக்கப்படும்; ஞானந்தோன்றிய பின்னர் வழி படாத குற்றம் அதுபோல நீக்கப்படமாட்டாது என்று கூறவேண்டி "பின்னைமறத்தல் பிழை அலது" என்றுங் கூறினர். முன்னை மறத்தல் என்பது செய்யுளில் இல்லையாயினும் பின்னை மறத்தல் என்பதனால் பெறப்பட்டது.

இவ்வுதாரணம் பெரியாரை வழிபடவில்லையாயின் நன்றிமறந்த குற்றத்திற் குள்ளாகவேண்டும் எனவும் வழிபடுதல் கடமை எனவுங் கூறியதோடு, திருக்குறள் செய்ந்நன்றியறிதல், க0-வது செய்யுளில் "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்ற கருத்துநோக்கி வழிபாடு செய்யவில்லையாயின் உய்வில்லையெனவுங் கூறியதாகும். உய்தலாவது ஈடேறுதல்.

பிழையலது என்பதை பிழையலதும் எனப் பாடங் கொண்டு இக்குற்றம் பிழையாதலன்றியும் என்று உரைப்பாரு முளர்.

முன்னவனே என்பதில் உள்ள ஏகாரம் அசை நிலை.

தானே என்பதில் உள்ள ஏகாரம் தானோ அன்றோ என்னும் ஐயத்தை நீக்குதலானும், சைவமே என்பதில் உள்ள ஏகாரம் அடிமையோ அன்

ளே என்னும் ஐயத்தை நீக்குதலானும். மானே என்பதிலுள்ள ஏகாரந் தொழுகை என்பதனோடு கூடி வழிபடவேண்டுமோ வேண்டாமோ என்னும் ஐயத்தை நீக்குதலானும் அம்மூன்று ஏகாரங்களும் தேற்றம்.

தானுச் செய்தாலும் என்றிருக்க வேண்டியது தானுச்செய்தும் எனத் திரிந்து நின்றது.

தானுச் செய்தும் என்றதில் உள்ள உம்மை சிறுமையில் நின்றும் நீக்இப் பெருமையுடைய தானுகச்செய்து என்ற சிறப்பைக் குறித்தலால் சிறப்பும்மையாகும்.

தான் தானுச்செய்தல் என்றதற்கு முதல்வன் உயிரைத் தானுகச் செய்தான் என்றது பொருளே யன்றி இறைவன் இறைவனுகச் செய்தல் என்பது பொருளன்று. அப் பொருள் கொள்ளின் உயிரென்பது எக்காலத்துமில்லாதிருக்கவேண்டும். முன்னர் உள்ளதாயின் பின்னர்க்கெடாது. உள்ள பொருள் தூல சூக்குமமான வேற்றுமை யடையுமேயன்றிக் கெடுதலில்லை. ஆதலால், எதனை எதனைப்பற்றினும் அது அதுவாய் நிற்குந் தன்மையுடைய உயிர் இறைவனுகிய தன்னை யறிந்தவிடத்து தனக்குரிய எண் குணங்களும் உயிரினிடத்து நிறைந்து தன் வண்ணமாகச் செய்தலே தான் தானுச்செய்தல் என்பதன் பொருளாம். உயிர்க்கு ஏனையவற்றைப் பற்றி அப்பொருள்களாய் நிற்கும் நிலை தூலம். இறைவனைப் பற்றி அவ்விறைவனுய் நிற்கும் நிலை சூக்குமம். இறைவனைப் பற்றி நிற்றலும் அவன் அருளாலன்றி முடியாது. அவன் அருளால் அவனைப் பற்றி நின்று அவனுக்குரிய எண் குணங்களும் தன்னிடத்தில் விளங்கப் பெற்றாலும், அவனைப்போல் ஏனைய உயிர்களை மலத்தில் நின்றும் நீக்குதற்குரிய பஞ்ச கிருத்தியங்களைச் செய்யமுடியாது. அவ்வாறாயின், எண் குணங்களும் தன்னிடத்தில் பதிந்ததற்குப் பயன் என்னையெனின், எண் குணங்களையுடைய இறைவன் இன்பவடிவினனாய் பிறப்பு இறப்பென்னுந் துன்பமில்லா திருத்தல்போல எண்குணங்கள் பதியப்பெற்ற உயிரும் இன்பவடிவினதாய்ப் பிறப்பு இறப்பு என்னுந் துன்பம் இல்லாதிருக்கும். இன்பவடிவாதலாலும் பிறப்பிறப்பு இல்லாதிருத்தலாலுமாவது எண் குணங்களையடைந்த உயிர் இறைவனுடன் சமமாகாதோ எனின், ஆகாது. எதனாலெனின், இன்பவடிவாதலும், பிறப்பு இறப்பு இல்லாதிருத்தலும் இறைவனுக்கு இயற்கை. உயிருக்குச் செயற்கை. அதவாது இறைவன் அநாதியே முத்தன். உயிர் இடையில் முத்திபெற்றது. ஆயினும் முத்தி பெற்ற பின்னர் எண் குணங்கள் சமமாக நிறைந்திருக்கவும், இறைவனிடத்துள்ள எண் குணங்கள் பஞ்ச கிருத்தியத்தைச் செய்தற்கும் உயிரினிடத்துள்ள எண் குணங்கள் பஞ்ச கிருத்தியத்தைச் செய்யாதிருத்தற்கும் காரணம் என்னையோ எனின், மேற் கூறியவாறு இயற்கை செயற்கையே காரணமாகும். இயற்கை செயற்கையினு லிவ்வாறு வேற்றுமையுண்டாகு

மோ எனின், உண்டாகும். எதுபோல எனின், படிகமானது மாணிக்கத்தைச் சார்ந்தபொழுது மாணிக்கமாகவே விளக்கும். விளங்கினும் படிகத்திற் காணப்படும் மாணிக்கத்தின் தன்மை ஏனைய மாணிக்கத்தைப்போலப் பிறர்க்கு உபகாரப் படாததுபோலாம். அன்றியும் உயிர் எக்காலத்தும் அடிமையே யாதலால் முத்திபெற்ற காலத்தும் அடிமைத் தன்மை நீங்காமையால் இறைவனைப்போல் பஞ்சகிருத்தியஞ் செய்யுமாறில்லை. எக்காலத்தும் அடிமையாயிருத்தல் எதுபோல எனின், குருடன் ஒருவனிடத்தில் கண்ணொளியுடைய பசாசு ஆவேசமாயின் அப்பசாசுக்குரிய எல்லா ஆற்றல்களும் இக் குருடனிடத்தில் விளங்கித் தோன்றும்; தோன்றினும் குருடு நீங்காதவாறுபோலாம். இக்கருத்துப் பற்றியே சிவஞானசித்தியார் பதினொராஞ் சூத்திரம் ௧0-வது செய்யுளில் "உயிர்தானும் சிவாநுபவம் ஒன்றினுக்கே உரித்து" என்றார் வழிநூலாசிரியரும். இவ்வுதாரண வெண்பாவினும் இக்கருத்தை விளக்குதற் பொருட்டே "சைவம் என்றார் சைவமே" என்றார். சைவம் என்னுஞ் சொல்லின்பொருள் தேவனது உடைமை என்பது எட்டாஞ்சூத்திரத்து மூன்றாமதிகரணத்தில் உரைத்திருத்தல் பற்றி அறிக.

மானே என்பதில் உள்ள ஏகாரம் தொழுகை என்பதனோடு கூடினமையால் மான் என நின்ற அவ்விடத்தில் இரண்டாம் வேற்றுமை ஐ உருபு தொக்கு நின்றது. அவ்வுருபை விரித்தால் மானை என்றாகும். வடமொழியிலுள்ள மஹான் என்பது மான் எனத்திரிந்து நிற்றலால் மானை என்றது மஹானைக்குறிக்கும். குறிக்கவே அம்மஹான் யாரென்னும் ஐயத்தை நீக்கி முதலாவது அடியிற் கூறியவாறு தான் தானாச் செய்த மஹான் என அறிவித்தற்பொருட்டு அகரச் சுட்டு வருவித்துக்கொள்க. ஆகவே மானை என்பதற்கு அம்மஹானை என்பது பொருளாம். ஆதலால் மான் என்றதற்கு அப்பெரியோனை என்று உரை செய்யப்பட்டது.

தொழுகை வலியைத்தரும் என்று கூறவேண்டியதைத் தொழுகை வலி என்று உபசரித்தார்.

இவ்வதிகரணத்திற்கூறிய இவ்வுதாரண வெண்பாக்கள் மூன்றினாலும் எல்லா இடங்களினும் எல்லா உயிர்களினும் சிவம் இருப்பினும் பசுவின் உடல்முழுதும் நிறைந்திருக்கும் பாலைக் கறப்பதற்கு மடியாகிய இடவிசேடம் வேண்டுமாறுபோல, அச் சிவம் விளங்கித்தோன்றும் இடவிசேடமும் வழிபாட்டிற்குப் பெறல்வேண்டும் எனக்கூறி, இவ்விடங்களின் வழிபடுக எனக்கூறிய மேற்கோளை வலியுறுத்தியதுடன் அவ்வாறு வலியுறுத்தும் முறைமையில், முதலாவது வெண்பாவால் அன்பு விளையுமிடமாகிய சிவலிங்கத்தையும், இரண்டாவது வெண்பாவால் அன்பே உருவாகிய சிவனடியாரையும் அவர் திருவேடத்தையும், மூன்றாவது வெண்பாவால் அன்

பே சிவமாகிய சிவாநுபவத்தை உண்டுபண்ணிய சிவதேசிகர்களையும் அறிந்து வழிபடல்வேண்டுமென்க் கூறப்பட்டது. சூத்திரக்கருத்து இத்துடன் முடிந்தது.

இந்நூலுக் கதிகாரி இவர் எனக்கூறுஞ் செய்யுள்.

சிவமென்னு மந்ததர, சிந்தைநேர் நோக்கப்
பவமின்றாங் கண்வா சகத்திற்—சிவமுண்டா
மொன்று மிரண்டு மலத்தார்க்கிங் கொண்குருவா
லின்றிந்நூன் மும்மை மலர்க்கு.

சிற்றுரை.

எ-து செ-ள். இங்ஙனம் சிவாகமத்துண் ஞானபாதப் பொருளெல்லாவற்றையும் பொது உண்மையென் றிருவகைப் படுத்துப் பிரமாணவியல் இலக்கணவியல் சாதனவியல் பயனியலென நான் கியலாக வைத்துப் போதிப்பதாகிய இச்சிவஞான போதநூலைக் கோடற்குரிய அதிகாரிகளாவா ரிவரென்பதுணர்த்துதற் கெழுந்தது.

(இ-ள்.) சிவம் என்னும் அந்ததர—(தான்றானுச் செய்தவாற் றாற் சீவ னென்னுமியல்பி னீங்கிச்) சிவமென்றோதப்படும் வேதாந் தத் தெளிவாகிய சித்தாந்தத்தை யுடைய மாணவகனே!—ஒன் றும் இரண்டும் மலத்தார்க்கு—ஒன்று மிரண்டுமாய மலங்களை யுடைய விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்க்கும்,—சிந்தை நேர் நோக்கக் கண் வாசகத்தின் பவம் இன்று ஆம் சிவம் உண்டாம்—(முறையே) அறிவின்கணின்று அருட்பார்வையா னோக்குதலாலும் (தேவகுருவாய் முன்னின்று செய்யுந்) திருநோக்கம் (பரிசம்) வாக்கெனப் படுந் தீக்கையாலும் பிறவிக்கேதுவாய பசுத்துவ நீங்கிச் சிவத்துவம் விளங்கு மாகலான்,—மும்மை மலர்க்கு இங்கு ஒண் குருவால் இன்று இந்நூல்—(அவரின் வேறாகிய) மும்மலம் உடையவர்க்கே (உரித்து) இவ்வுலகத் தனுபவ முடைய தேசிகராற் (போதிக்கப் படும்) இச்சிவஞான போதநூல் எ-று.

அந்தம் வேதாந்தம், அந்ததரம் சித்தாந்த மாகலின், அதனைப் பெற்றானது பெருமை கூறுவார் சிவமென்னு மந்ததர வென்றார். என்னுமென்புழிப் படுசொற்றொக்கு நின்றது. சிந்தை—அறிவு. கண்ணுருபு விரித்துரைக்க. நேர் நோக்குதல் முன்னை மருட்பார்வையை மாற்றி அருட்பார்வையா னோக்குதல். நோக்க நோக்குதலானென்க. கண்வாசகங்களைக் கூறவே இனம்பற்றிப் பரிசமும் உடன் கொள்ளப்படும். பவம் ஆகுபெயர். இந்நூல் அநுபவமுடைய தேசிகனுலன்றி விளங்கா தென்பார் ஒண்குருவாலென்றார்.

போதிக்கப்படுமென்பது அவாய் நிலையான் வந்தது. இன்றிந் நூலென்பது இந்நூ லென்னும் பொருட்டு. இக்காலத் துரைக் கப்படு நூலெனினு ம்மையும். அது 'தானுரைத்தா னின்று' என வருகின்ற வெண்பாவாற் கூறிய வாற்றானு மறிக. மும்மை யென்றது ஈண்டெண்ணின்மேனின்றது, "தெரிமாண் டமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப் போல.

விளக்கம்.

(கொண்டு கூட்டு.) சிவம் என்னும் அந்ததர ஒன்றும் இரண்டும் மலத் தார்க்குச் சிந்தை நேர் நோக்கக் கண் வாசகத்தின் பவம் இன்று ஆம் சிவம் உண்டாம் மும்மை மலர்க்கு இங்கு ஒண்குருவால் இன்று இந்நூல்.

இச்செய்யுள் எதற்காக எழுந்ததெனின், மூசற் சூத்திரம் முதல் இச் சூத்திரத்து மேலே வெண்பாவரையும் சிவாகமத்துள் கூறப்படும் ஞானபா தப் பொருள் எல்லாவற்றையும் பொது அதிகாரம், உண்மை அதிகாரம் என்று இருவகைப்படுத்திப் பொது அதிகாரத்தைப் பிரமாண இயல் இலக் கண இயல் எனவும், உண்மை அதிகாரத்தைச் சாதன இயல் பயன் இயல் எனவும் ஆக நான்கு இயல்களாக வைத்துப் போதிப்பதாகிய இச்சிவஞான போதநூலைக் கொள்ளுதற்குரிய அதிகாரிகள் இத்தன்மையுடையார் என அறிவித்தற்கு எழுந்ததாகும்.

(பொ-ரை.) மேலே வெண்பாவிற் கூறியவாறு இறைவன்தானாகச் செய்த அதனால் சீவன் என்னுந் தன்மையில் நின்றும் நீங்கிச் சிவமென்று ஓதப்படும் வேதாந்தத்தின் தெளிவாகிய சித்தாந்தத்தையுடைய மாணவ கனே! ஆணவ மலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலர்க்கு அவர் அறிவின் கண்நின்று அருட்பார்வையால் நோக்குதலானும், ஆணவம் கன்மம் என்னும் இரு மலங்களையுடைய பிரளயாகலர்க்கு மான் மழுச் சதுர்ப்புஜங்களை யுடைய தேவகுருவாய் அப்பிரளயாகலர் முன்நின்று செய்யுந் திருநோக் கம் பரிசம் வாக்கு எனப்படுந் தீக்கையானும், பிறவிக்கு ஏதுவாகிய பசுத் தன்மை நீங்கிச் சிவமாந் தன்மை விளங்கும். ஆதலால் அவ்விருவர்க்கும இந்நூல் வேண்டுவதின்று. அவ்விருவரின் வேறாகிய ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களை யுடைய சகலருக்கே இவ்வுலகத்தில் அநு பவமுடைய தேசிகரால் உபதேசிக்கப்படும் இச்சிவஞான போதநூல் உரித்து எ-று.

(க-ரை.) வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்த அநுபூதியைப பெற்ற மாணவகனே! இச்சிவஞான போதம் என்னும் நூல் விஞ்ஞான

கலர் பிரளயாகலர்க்கு வேண்டுவதின்று ஆதலால், சகலருக்கே உரியதாகும் என்பதாம்

நோக்கம் முதலிய தீக்கையின் முறைகளைச் சிவஞான சித்தியார் அ-ம் சூ-ம் ந-வது செய்யுளின் உரையிற் கூறியிருக்கின்றமையால் அவ்விடத்திற் காண்க.

இச்செய்யுளில் சிவம் என்னும் அந்ததர என்று மாணவகனை அழைத்த கருத்து என்னை யெனின், அந்தம் என்பது வேதாந்தத்தையும், அந்தரம் என்பது வேதாந்தத்தின் தெளிவாகிய சித்தாந்தத்தையுங் குறிக்கும். சிவஞான சித்தியார் அ-ம் சூ-ம் கசு-வது செய்யுளில் "சித்தாந்தத்தே சிவன் தன் திருக்கடைக் கண்சேர்த்தி" என்றபடி சித்தாந்தமே சிவாநுபூதியைத் தருமாதலால் இச் சிவாநுபூதியைப் பெற்ற மாணக்கன் பெருமை கூறச் எண்ணிச் சிவமென்னும் அந்ததர என்றார்.

சித்தாந்தத்தை யுடைய மாணவகனே என்னுமல் வேதாந்தத் தெளிவாம் சித்தாந்தத்தை யுடைய மாணவகனே என்ற கருத் தென்னை யெனின், சித்தாந்த மானது வேதாந்தத்தின் வேறன்று என்பதற்கு அவ்வாறு கூறினர். வேறன்றாயின் வேதாந்தமே போதியதாகவும் சித்தாந்தமுங் கூறியது மிகையாகாதோ எனின், ஆகாது. எதனாலெனின், வேதாந்த மென்பது வேதத்தின் அந்தமாகிய உபநிடதங்களாம். ஏகான்மவாதமும் மாயா வாதமும் இடுகுறிப் பெயரால் வேதாந்தம் எனவழங்கப்படும். படினும் அவை வேதாந்தமாக மாட்டா. இனி, உபநிடதங்களும் பலவாம். அவற்றுள், சில உபநிடதம் நாராயணனையே பிரமம் எனவும், சில உபநிடதம் பிரமாவையேபிரமம் எனவும், சில உபநிடதம் அக்கினியையே பிரமம் எனவும், இவ்வாறே ஒவ்வொரு தெய்வத்தையும் பிரமமெனப் பல உபநிடதங்களுங் கூறவும், சுவேதா சுவதரம் முதலிய சில உபநிடதங்கள் மட்டும் சிவனையே பிரமம் எனக் கூறும். அரசன் ஆணையைத் தாங்கியுள்ள ஒவ்வொரு அதிகாரிகளையும் அரசன் என உபசரித்துக் கூறும் அவ்வளவே போலச் சிவனுடைய ஆணையைப் பெற்றுள்ள ஒவ்வொரு தேவர்களையும் பிரமம் என உபசரித்து உபநிடதங்கள் கூறினும் அதிகாரிகள் உண்மையில் அரசராகாதவாறுபோல ஏனைய தேவர்கள் உண்மையில் பிரமமாக மாட்டார்கள். அங்ஙனமாயின் அவ்வாறு கூறுவானேன் எனின், தனக்குமேல் முதலில்லை என்று எண்ணுகின்றவர்க்கு ஒவ்வொரு படித்தரமாய் முதல் உண்டென்று காட்டுவதற்கு ஆகுபெயர்ப் பொருளில் அவ்வாறு கூறப்பட்டது. படினும் அவ் வுபநிடதங்களுக் கெல்லாம் சிவம் பிரமம் என்பதிலே தான் கருத்து.

இவ்வாறு ஏனையதேவர்களை ஆகுபெயரால் பிரமம் எனக்கூறும் உபநிட தங்களும், தெளிவாய்ச் சிவபரம் பொருளையே பிரமம் எனக்கூறும் உப நிடதங்களும் வேதாந்தம் என்றே வழங்கப்படுதலால் இவ்வுபநிடதங்களுள் எது மெய் எது பொய் என்னும் ஐயம் உண்டாகும் அல்லவா? அந்த ஐயத் தை நீக்குதற் பொருட்டுச் சிவபரம் பொருளையே பிரமம் எனக்கூறும் தெளிந்த பொருளையுடைய வேதாந்தத்தைத் தனித்து எடுத்து இதுவே முடிந்த பொருளெனக் கூறியது சிவாகமங்களாகிய சித்தாந்தமாதலின் மிகையாகா தென்க. ஆதலால் சித்தாந்தத்தையுடைய மாணவகனை வேதாந் தத் தெளிவாம் சித்தாந்தத்தை யுடைய மாணவகன் என அழைக்கப் பட் டது. இதனால், சித்தாந்தம்போல முப்பொருள் உண்மைகொள்வதேவேதாந் தம் எனவும் முப்பொருள் உண்மைகொள்ளாதது ஏகான்ம வாதம் அல்லது மாயாவாதம் எனவும்•அறிக.

'சிவம் என்னும்' என்ற இடத்தில் படு என்னுஞ் சொல்தொக்கு நின் றது. அதனைவிரித்துச் சிவம் என்று ஓதப்படும் என உரை செய்யப் பட்டது.

சிந்தை யென்பது அறிவைக் குறித்துநின்றது. சிந்தை என்ற இடத் தில் கண் உருபு தொக்கு நின்றது. அவ்வுருபை விரித்து அறிவின் கண் என உரைசெய்யப்பட்டது.

நேர் நோக்க என்பது நேர் நோக்குதலால் என்னும் பொருளைக் குறித்து நின்றது. நேர் நோக்குதலாவது விஞ்ஞானகலரிடத்தில் முன் னுள்ள மருட்பார்வையை மாற்றி அருட்பார்வையால் இறைவன் நோக் குதலாம்.

பிரளயாகலர்க்குரிய கண் வாசகங்களாகிய சட்சுதீட்சை வாசகதீட் சைகளைச் செய்யுளிற் கூறியதனால் இனம்பற்றிப் பரிசதீட்சையும் உடன் கொள்ளப்படும்.

பவம் என்பது பவத்திற்கேதுவாகிய பசுத்துவத்தைக் குறித்தலால் ஆகுபெயர். பவம்—பிறத்தல்.

இந்நூல் அநுபவமுடைய தேசிகராலன்றி விளங்காதென்று கூற வேண்டி ஒண் குருவால் என்றார்.

ஒண் குருவால் இந்நூல் என்னும் சொல் முடிவு பெறுதற்குப் பிறி தொருசொல்லை அவாவி நிற்றலால் அந்த அவாய் நிலைபற்றிப் போதிக்கப் படும் என்பது வருவிக்கப்பட்டது.

இன்று இந்நூல் என்பது இந்நூல் என்னும் பொருளையே குறித்து நின்றது. இக்காலத்து உரைக்கப்படும் இந்நூல் என்று கூறினும் பொருந்தும். இன்று என்பதற்கு இக்காலத்து எனப் பொருள் கொள்ளலாமென்பதை இதனையடுக்க வரும் வெண்பாவில் "தான் உரைத்தான் இன்று" என்பதனானும் அறிக.

மும்மை மலர்க்கு என்றவிடத்து மும்மை என்பது மூன்று தன்மையைக் குறிக்குமேனும் இச்செய்யுளில் மூன்று என்னும் எண்ணைக் குறித்து நின்றது. எதுபோல எனின், "தெரிமாண்டமிழ் மும்மைத்தென்னம் பொருப்பன்" என்றவிடத்து மும்மையென்பது மூன்று என்னும் பொருளைக் குறித்து நின்றவாறு போலாம்.

இச் சூத்திரத்தினாலும் அதிகரணங்களினாலும் கூறிமுடித்த தொகைப் பொருள்:—பதினொராஞ் சூத்திரத்தால் அயரா அன்பின் அரன்கழல் செல்லுமென முத்திநிலைகூறி முடித்து அம்முத்தர் உடம்போடுகூடிச் சீவன் முத்தராய் வாழுங்காலத்து அவருடைய அறிவு இச்சை செயல்கள் புறத்துச்செல்லுங்கால் மலத்தை நீக்குதலில் அறிவும், அன்பரொடு கூடுதலில் இச்சையும், திருவேடத்தையும் சிவாலயத்தையும் வழிபடுதலில் செயலும் செல்லுமென இச்சூத்திரத்தாற் கூறினர். கூறவே, அவற்றுள் முதலாவது செய்ய வேண்டியது இதுவென்பதை யறிவித்தற்கு முதலதிகரணத்தால் விபரீதவுணர்வைச் செய்யும் மும்மலங்களையுங் களைதலே முதலாவது செய்யவேண்டுமெனக் கூறினர். கூறவே, மலநீக்கத்தை நிலைபெறச் செய்வதற்கு இரண்டாவதாகச் செய்யவேண்டியது இது என்பதையறிவித்தற்கு இரண்டா மதிகரணத்தால் மலம் நீங்கப்பெற்ற முத்தர்களோடு இணங்கவேண்டுமெனக் கூறினர். கூறவே முத்தர்களோடு இணங்கிய இணக்கத்தை நிலைபெறச் செய்வதற்கு மூன்றாவதாகச் செய்யவேண்டியது இதுவென அறிவித்தற்கு மூன்றும்திகரணத்தால் சிவபெருமான் வெளிப்பட்டு விளங்கும் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவன் எனவே கண்டு வழிபடவேண்டுமெனக் கூறினர்; . கூறவே மேற்கூறிய மூன்றும் சீவன்முத்தர்க்கு இயல்பாயுள்ளனவாகவும் செய்யவேண்டுமென விதியாகக்கூறியது எதற்காக என்பாரை மறுத் து ஒ ழி பு அதிகரணத்தால் சிவபெருமான் எல்லாப் பொருளிடத்துங் கலப்பால் அதுவாயும் பொருளின் தன்மையால் வேறும் நிற்பன் ஆதலால் வேறாய்நிற்குந் தன்மைபற்றித் திருவேடத்தினிடத்தும் சிவாலயத்தி னிடத்தும் வழிபாடு நிகழாது ஆதலின் வேறாய் நிற்குந் தன்மைபற்றியும் வழிபாடுசெய்ய வேண்டுமெனவும், அவ்வாறே

மலங்களைக் களைதலும் சிவபத்தர்களோடு இணங்குதலும் செய்யவேண்டு மெனவும், இவற்றால் அத்துவித நிலை இனிது விளங்குமெனவும், ஞானத் தினாலேயே அத்துவித நிலை விளங்கினும் ஞானம் நிலைபெறுதற்கு இச் செயல்கள் அவசியம் வேண்டுமெனவும், இவைசெய்தல் கடமையெனவும், செய்யாதவிடத்து நன்றி மறத்தலாகிய குற்றமுண்டாமெனவும் கூறி விதியை வற்புறுத்தி இந்நூலுக்கு அதிகாரி சகல வருக்கத்து உயிர்களே யெனவும், இந்நூற்பொருளை உபதேசித்தற் குரியோர் அநுபவமுடைய தேசிகரே எனவுங் கூறினர்,

நான்காவது ஒழிபு அதிகரணம் முற்றிற்று.

பன்னிரண்டாஞ்சூத்திரம் முற்றிற்று.

பயன் இயல் முற்றிற்று.

இரண்டாவது உண்மையதிகாரம் முற்றிற்று.

பாயிரம்.

எந்தை சனற்குமர னேத்தித் தொழவியல்பாய்
நந்தி யுரைத்தருளு ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் றாரணியோர் தாமுணர
வேதுதிருட் டாந்தத்தா லின்று.

பழைய உரை.

எ-து செ-ள். இந்நூ லாசிரியன் றிருவருட் சிறப்புணர்த்துதற் கெழுந்தது.

(இ-ள்.) எந்தை சனற்குமரன்—எந்தையாகிய சனற்குமார முனிவன் முதலிய முனிவர் கணங்கள்,—ஏத்தித்தொழ—துதித்து வணங்க,—நந்தி—(சீகண்டதேவர்பாற் கேட்டருளிய) நந்தி பெருமான்,—இயல்பாய்—தான் கேட்ட முறையே,—உரைத்தருளும்—உபதேசித்தருளிய,—ஞானநூல்—சிவஞான போதமாகிய வடநூலை, — சிந்தைசெய்து—(பரஞ்சோதிமுனிவர்பாற் கேட்டவாறே) சிந்தித்து, — தாரணியோர் தாமுணர—தமிழ் நாட்டார் அறிந்துய்தற் பொருட்டு,—ஏது திருட்டாந்தத்தால்—(மேற்

கோளோடு கூடிய) ஏதுத் திருட்டாந்தங்களுடன்,—இன்று—இக்காலத்தே,—மெய்கண்டான் ரூனுரைத்தான்—மொழி பெயர்த்துக் கூறி வார்த்திகப் பொழிப்புரை செய்தருளினன் மெய்கண்ட தேவன் எ-று.

விளக்கம்.

(பொ—ரை.) நந்தி பெருமானை எமது தந்தையாகிய சனற்குமார முனிவர் ஞானபாதப் பொருளை உபதேசித் தருளும் வண்ணம் துதித்து வணங்க, ஸ்ரீகண்ட பரமேசுரன் பால் சிவஞானபோத நூலைக் கேட்டருளிய அந்நந்தி பெருமான், அப்பரமேசுவரனிடத்தில் தான் கேட்டவாறே தனக்கு உபதேசித் தருளிய அச்சிவஞான போதமாகிய வடமொழியிலுள்ள நூலைச் சனற்குமார முனிவர்க்கு உபதேசிக்க அச்சனற்குமார முனிவர் சத்தியஞான தரிசனிகளுக்கும் சத்தியஞானதரிசனிகள் பரஞ்சோதி முனிவருக்கும் பரஞ்சோதிமுனிவர் மெய்கண்ட தேவருக்கும் உபதேசிக்க, மெய்கண்டதேவநாயனர் அப்பரஞ்சோதி முனிவரிடங் கேட்டவாறே சிந்தித்துத் * தமிழ்நாட்டார் அந்நூற்பொருளை யறிந்து கதியடைதற் பொருட்டுக் கருத்துரை மேற்கோள் ஏதுதிருட்டாந்தங் களுடன் அவ் வடமொழிச் சிவஞான போதத்தைத் தமிழில்மொழி பெயர்த்து இக்காலத்து அருளிச் செய்தார் என்றவாறு.

எந்தந்தை என்பது எந்தை என மரீஇயிற்று. தொழ என்பது உரைத்தருளும் என்னும் பிறகருத்தாவின் வினைகொண்டது. ஆய்நந்தி வினைத்தொகை. ஆய்தல் ஈண்டுக் கேட்டுச் சிந்தித்துத் தெளிதலை உணர்த்திற்று. தான் தாம் என்பன கட்டுரைச் சுவைக்கண் வந்த அசைகள். ஆல் ஒடுரு பின் பொருட்டு.

மகவெனப் பல்லுயிர்களையும் பேணும் மகாளுய் நாமெல்லாம் நல்வழி பெற்றுய்யும்பொருட்டு ஞானபாதப் பொருளை நிலைபெறுத்தி வைத்தலாற் றந்தையை நிகர்ப்பார் என்பது போதர 'எந்தை' என்றும், குருபத்தியினும் பக்குவமுதிர்ச்சியினுஞ் சிறந்தவர் என்பது போதர 'எத்தித்தொழ' என்றும் கூறினர்.

தாரணி என்றது ஈண்டுத் தமிழ்வழங்கும் நிலத்தை; என்னை? அந்நிலத்தாரேதமிழ்நூல் உணர்தற்குரியராகலின். ஏத்தி என்றும், தொழ என்றும், வாக்கின் தொழிலும் காயத்தின் தொழிலும் கூறவே இனம்பற்றி மனத்தின் ரெழிலாகிய அன்பு செய்தலும் பெறப்பட்டது.

* இதுதொடங்கி முடிகிறவரை ஆக்கியோர் அநுமதி பெற்றுத் திராவிடமா பாடியத்திருந் தெடுத்துச் சேர்க்கப்பட்டது.

பாயிரம்.

சிந்தைசெய்தல் என்பது பரஞ்சோதிமுனிவர்பால் தாம் கேட்ட பொருளை மொழிபெயர்த்துக் கூறுதற்கண் வழுவாது மனத்திலே நினைத்தமைத்தலை உணர்த்திற்று. அல்லதூஉம் நாதனருள் பெறும் நந்தியந்தேவர் சனற்குமார முனிவர்க்கும், சனற்குமாரமுனிவர் சத்தியஞானதரிசனிகளுக்கும், சத்தியஞானதரிசனிகள் பரஞ்சோதிமுனிவர்க்கும், பரஞ்சோதிமுனிவர் தமக்கும் உபதேசித்த முறையைக் கடைப்பிடித்துத் தாமும் அவ்வாறே பின்னையோர்க்கும் பிரயோசனமாமாறுரைக்கத் திருவுளங் கொண்டு என்றலுமாம். அல்லதூஉம் "யான்பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்". என்று கருணைமீக் கூர்ந்து என்றலுமாம். அல்லதூஉம் அநித்தியம் பற்றி விரைந்து செயற்பாலதெனச் சிந்தித்து என்றலுமாம்.

'தாரணியோர் தாமுணர' எனவே, தேவர்முனிவர் முதலியோர் உணருமாறு இந்நூல் முன்னர்த் தேவபாடையிலே உரைக்கப்பட்டிருந்தது என்பதூஉம், இப்போது தமிழ்ப்பாடையிலே உரைக்கப்பட்டது என்பதூஉம், 'ஏது திருட்டாந்தத்தால்' எனவே, பூவுலகோர் இனிதுணருமாறு ஏதுக்களையும் உதாரணங்களையுந் விசேடமாகத் தாமே செய்து சேர்த்துக் கூறினர் என்பதூஉம் பெறப்படும். ஏது திருட்டாந்தங்கள் என்றது வார்த்திகம் எனப்படும் உரைச் செய்யுளினும் வெண்பாவாகிய பாச்செய்யுளினும் அமைந்தவைகளை. ஏது திருட்டாந்தத்தால் எனவே இனம்பற்றிக் கருத்துரையும் மேற்கோளும் கொள்ளப்பட்டன.

இனி, எந்தைபால் இயல்பு ஆய் நந்தி எனக் கொண்டுகூட்டி எமது பரம பிதாவாகிய சீகண்டதேவர்மாட்டுச் சிவாகமப்பொருள்கள் ஒன்றோடொன்று முரணுவனவாக மலைந்து அப்பொருட்டன்மையை வினவிய நந்திபெருமான் எனினும் அமையும். இப்பொருட்கு ஏழாவது வருவிக்க. ஆய்தல் ஈண்டு வினவுதல்.

எனவே அம்மலைவு தீர்தற்பொருட்டுச் சீகண்டதேவரால் நந்திபெருமானுக்குச் சிவஞானபோதம் உபதேசிக்கப்பட்ட தென்பது தானே போதரும்.

'எந்தை சனற்குமா னேத்தித் தொழவியல்பாய் நந்தியுரைத்தருளு ஞானநூல்' என்பதனாற் சிவஞானபோதநூல் உபதேசிக்கப்பட்டுவந்த வரலாறும் அதன் பெருமையும் கூறப்பட்டவாறறிக.

'மெய்கண்டான்' எனவே ஆக்கியோன் பெயரும், 'நந்தியுரைத்தருளும்' எனவே வழியும், 'தாரணியோர்' எனவே தமிழ்வழங்கும் நிலமே இங்

நூல் வழங்கும் நிலம் என எல்லையும், 'ஞானநூல்' எனவே நூற்பெயரும் நுதலிய பொருளும் பயனும், 'எதுதிருட்டாந்தத்தால்' எனவே இலக்கிய இலக்கணங்கற்றுத் தருக்கநூல் பயின்று வல்ல பக்குவரே இந்நூல் கேட்டற்குரியராவரெனக் கேட்போரும் யாப்பும் போந்தவாறுணர்க.

பாயிரம் முற்றிற்று.

சிவஞானபோதச்சிற்றுரைவிளக்கம்

முற்றுப் பெற்றது.

மெய்கண்டதேவநாயனர் திருவடிவாழ்க.

சிவஞானமுனிவர் திருவடிவாழ்க.

உ

சிவமயம்.

செய்யுள் முதற்குறிப்பு அட்டவணை.

முதற்குறிப்பு.	பக்கம்.
அ	
அகாரவுகார	219
அசத்தறியாய்	301
அஞ்செழுத்தா	471
அதுவிது	611
״ துவென்னு	325
அந்தக்கரண	199
அரக்கொடு	98
அரவுதன்	134
அருக்கனேர்	560
அருவுருவந்	359
அருளுண்டா	282
அவனவளது	18
அவனேதானே	483
அவையேதானே	76
அவ்வினையைச்	112
அவ்வுடலி	174
அறிந்துமறிவதே	187
அறியவிரண்டல்ல	321
அறிவிக்க	404
அன்றன்றென	157
அன்னியமில்லாமை	344
இ	
இங்குளி	513
இந்துவிற்	474
இலயித்த	44
இலாடத்தே	253
இல்லாமுலைப்	408

முதற்குறிப்பு.	பக்கம்.
உ	
உணருரு	287
உணர்ப	316
உளதில	150
உள்ளதே	109
ஊ	
ஊனக்கண்	434
எ	
எங்குமுள	142
எண்ணிய	312
எண்ணில	223
எந்தைசனற்	629
எவ்வுருவந்	425
எனதென்ற	163
ஏ	
ஏகமாய்	546
ஐ	
ஐந்தையு	544
ஐம்புல	373
ஐம்பொறியை	268
ஐம்பொறியி	429
ஒ	
ஒன்றணையா	247
ஒன்றலா	68
ஒன்றறிந்த	168
ஒன்றென்ற	93

2

முதற்குறிப்பு.	பக்கம்.
க	
சுட்டுமுறுப்புங்	90
கண்டதை	461
கண்டதொரு	603
கண்டநனவை	126
கண்டறியு	181
கலையாதி	194
கல்லானிழல்	10
கா	
காட்டிய	446
காணுங்கண்ணுக்கு	524
ச	
சதசத்தா	519
சா	
சார்ந்தாரை	509
சி	
சிந்தித்தாய்	215
சிவமென்னு	624
சிறைசெய்ய	422
சு	
சுட்டி யுணர்	458
செ	
செம்மலர்	574
த	
தம்மையுணர்ந்து	13
தவஞ்செய்தா	386
தன்னுணர	600
தன்னையறிவித்து	619
ந	
நசித்தொன்றி	567
நண்ணனல்	517
நா	
நாடியோர்	444
நாமல்ல	505
நானவனென்	492
நி	
நிர்க்குணனாய்	455
நெ	
நெல்லிற்குமியு	114
நோ	
நோக்காது	59
ப	
பசித்துண்டு	389
பண்ணையு	95
பன்னிரங்	415
பா	
பாவகமேற்	318
பு	
புண்ணிய	583
பூ	
பூதாதி	33
பே	
பேய்த்தேர்	351
பொ	
பொன்வாண்	570
ம	
மண்முத	478
மயக்கமதற்று	364
மலர்தலை	2
மறப்பித்து	591
மனமாதி	212
மன்னுசிவன்	274
மன்னுயிருளை	563
மா	
மாயாதனு	232
மெ	
மெய்ஞ்ஞானந்தன்னில்	368
மெய்ஞ்ஞானந்தானே	401
யா	
யாவையுஞ்	334
வி	
வித்துண்டா	52
விளம்பிய	260
வினையா	615
வெ	
வெய்யோனொளியி	280

உ

சிவமயம்.

மெய்கண்டதேவ நாயனார் அருளிய சூத்திரம், கருத்துரை, மேற்கோள், ஏது, திருட்டாந் தங்களில் உள்ள சொற்களின்

அட்டவணை.

அ

அ	48, ௸ 52, 98, 109, 112, ௸ ௸ ௸ 134, ௸ 156, 162, 167, 168, 173, 174, ௸ ௸ 178, 186, 253, 356, ௸ 401, ௸ 425, ௸ 440, 478, 483, 490, 574, 609
அகம்	187
அகங்காரம்	205, 219
அகண்டமும்	611
அகர உயிர்	93
அகரம்	223
அகல	570
அகன்று	247
அகார	219
அக்கரங்கள்	93
அங்கண்	142
அங்கி	603
அங்கு	48, 68, 90, 112, 142: 187. 268, 429, 471, 603
அசத்தாய்	450, 461
அசத்தின்	519
அசத்தினுக்கு	348
அசத்து	287, 296, 301, ௸ 303, 312, ௸ 316, 318, 334, 340, 344, 351, ௸ 364, 368, 450, 458, 615
அசத்தும்	287, 364
அசத்தை	274, 344
அசிந்திதனாய்	575
அச்சு	513
அஞ்சவத்தைத்தே	199
அஞ்செழுத்தாய்	157
அஞ்செழுத்தால்	471, ௸ ௸
அஞ்செழுத்து	474
அஞ்செழுத்தே	434
அஞ்செழுத்தை	168
அஞ்ஞான	401, 503
அஞ்ஞானத்தை	468, 581, 589
அஞ்ஞானம்	368, 583
அடங்கி	174, 187
அடங்கும்	422
அடாது	134
அடி	492. 517
அடிகள்	546
அடியார்	509
அடைவே	109
அணுவாய்	126

அ

அணை 429
அணைதல் 232, 368
அணைத்த 98
அணைந்த 351, 461, 567
அணைந்து 567
அணைப்பார் 112
அணையா 109, 247
அணையார் 519
அணையும் 109, 247, ஷை 419, 490, 524, 556
அணைவார் 519
அண்டனை 461
அண்டன் 471
அண்ணல் 95
அதற்கு 517
அதனை 174, 351
அதனால் 513
அதனின் 68, 212, 611
அதன் 478
அதிதெய்வம் 223
அதில் 478
அது 18, 134, 168, 187, ஷை 194, 199, 232, ஷை 253, 282, 318, 325, ஷை ஷை ஷை 468, 492, 603, ஷை ஷை 609, 611, ஷை ஷை 615
அதுதான் 230, 244, 349
அதுவும் 95
அதுவே 156, 157, 162, 167, 173, 178, 186, 253 306, 356
அத்தன் 52
அத்தின் 194
அத்துவிதம் 86, ஷை 95 ஷை 111
அத்துவிதி 611
அத்துடு 126
அநேகம் 141
அந்தக்கரணங்களாய் 205
அந்தக்கரணம் 199
அந்தர 429, 624
அந்தம் 18, 194
அப்பிரகாசத்தினுக்கு 310
அப்பிரகாசமாய் 208, 298, 343, 598
அப்பு 567
அமர 517
அமைச்சு 199
அமைந்து 539
அயர்ந்தனை 373
அயரா 524
அயன் 223
அரக்கு 98
அரசு 199, 268
அரவு 134
அரற்கு 344
அரன் 282, 373, 422, 444, 471, 505, 517, 524, 574
அரனே 563
அரனை 471
அரு 95, 359, ஷை ஷை 408
அருகு 519
அருக்கன் 560
அருளால் 318, 503
அருளிய 10
அருளில் 519
அருளும் 282
அருள் 260, 282, ஷை
அருட்கண்ணார் 282
அருட்கண்ணால் 560
அருபசொரூபி 244
அர்ச்சித்து 471
அலது 619
அலர் 114

5

அலர்த்தும் 560
அலன் 563
அலா 68, ஷை ஷை ஷை. 334, 353
அலாது 163, ஷை
அலாய் 303
அலை 364, 422
அலையாமல் 194
அல் 560
அல்ல 505, ஷை ஷை
அல்லது 36, 65, 124. 267, 287, 380, 503
அல்லன் 212, 321, 325, 425
அல்லனும் 90
அல்லை 157, ஷை 168, 174, 429, 458
அல்லாத 598
அல்லாதார் 589
அல்லான் 611, ஷை
அவத்திதன் 241
அவரை 492
அவர் 52, 517
அவயவங்கள் 425
அவள் 18
அவற்றது 538
அவற்றினால் 267
அவற்றின் 199
அவற்று 544
அவனது 107, 490, 556
அவனில் 280
அவனும் 538
அவனே 483
அவனை 539
அவன் 18, 90, ஷை ஷை 109, 111, 142, 186, 282, ஷை 344, 398, 442. 489, 492, 503, 513, 558, 598
அவை 18, 48, 68, 107, 142, ஷை 163, 168, 194, 199, 260, 267, 303, 609
அவைதாம் 193, 208, 298, 414, 581
அவையே 76, 260
அவ்வவ 253
அவ்வவற்றின் 253
அவ்வேறும் 215
அழியாது 48
அழிவது 48
அழைக்க 90
அளந்து 260
அளவு 455
அளவை 142
அற 574, 591
அறி 325, 334, 353
அறிதலின் 150, 166, 172
அறிதல் 168, 359
அறிந்த 301
அறிந்தது 167, 168, 187
அறிந்ததையும் 187
அறிந்தாங்கு 186
அறிந்து 112, 186, 260, 274, 321, 364, ஷை
அறிந்தும் 187
அறிய 312, 321, 325
அறியப்படான் 321
அறியப்பட்ட 296
அறியா 260, 268, 312, 321, 404
அறியாது 168, 187, 334, ஷை
அறியாமையின் 167
அறியாய் 301
அறியும் 181, ஷை. 280; 325
அறியேன் 444
அறிவதாய் 356
அறில்து 163, 167

அறிவதே 187
அறிவன் 186
அறிவாய் 455
அறிவார் 408, 444
அறிவிக்க 186, 404
அறிவித்து 619
அறிவினால் 296
அறிவின் 321
அறிவு 301, 312, 321, ௸ 356
அறிவுக்கு 321
அறிவும 187, 325
அறிவுள் 325
அறிவே 325
அறுப்பார் 386
அறையும் 95
அர்புசம் 455
அற்றால் 421
அற்று 490
அனல் 517
அன்னியம் 86, 344, ௸ ௸ 373, 398, 558
அனைத்தும் 157, ௸
அன்பர் 574
அன்பின் 524, 563, 611, 615
அன்றன்று 156, 157, 461
அன்றி 282, 325, 364, 401, 404, 615
அன்று 33, 114, 142, ௸௸ 187, 199, 205, 232, 312, ௸ 318, 325, 359, 603
அன்றும் 168
அன்றே 59, 76, 138, 282, ௸ 368

ஆ

ஆ 44, 90, 344
ஆக 18, 33, 386, 575
ஆகலான் 107, 267, 349, 380, 490, 503, 539, 544, 581, 589, 609
ஆகலின் 156, 162, 167, 173, 178, 186, 334, 468
ஆகவே 503
ஆகா 583, 609
ஆகாத 280
ஆகர்ய 134
ஆகாய் 364
ஆகி 68, 168, 215, 321, 408, ௸ 483, 489
ஆகிய 65, 167, 380' 483
ஆகில் 168
ஆகில்லான் 90
ஆகும் 33, 68, 187, 194, 301, 351, 359
ஆக்காதே 59
ஆக்கினை 107
ஆங்காரம் 215
ஆங்கு 90, 95, 107, 112, 215, 253, 260, 321, 325, 474, 509, 519
ஆணவமும் 583
ஆணவம் 579
ஆணையில் 76, 104
ஆண்டு 268
ஆதல் 68, 95, 312, 316, 368, 509, 611
ஆதி 18, 194, 212, 247, ௸
ஆதியால் 212
ஆதியும் 48
ஆம் 44, 48, 52, ௸ ௸ 59, 90, 93, ௸ 95, 98, 114, 134, 142, 156, 162, 167, 173, 178, 186, 194, ௸ 219, ௸

223, ௸ 232, ௸ ௸ 247, 268, 287, 303, 312, ௸ ௸ ௸ 316, 318, ௸ ௸ ௸ 325, 344, 356, 386, 389, 404, 415, 421, 434, 444, 471, ௸ 474, ௸ 478, ௸ ௸ ௸ 492, 505, 519, 567, ௸ 570, 600, 624

ஆய 446, ௸ 513

ஆயாது 232

ஆயிட்டு 86

ஆயின் 301, 316

ஆயும் 187

ஆய் 76, 83, 90, 168, 181, 215, ௸ ௸ 230, 232, 241, ௸ 268, 306, 359, ௸ ௸ 455, ௸ ௸ ௸ 489, 492, 509, ௸ 546, ௸ ௸ 591, 603, ௸ ௸ 609

ஆய்ந்து 33, 215, 461 509

ஆர் 509

ஆர்தான் 112

ஆலயம் 574

ஆலயத்தையும் 596

ஆல் 93, 408, 603

ஆவ்து 205, 567

ஆள் 142, 474

ஆறு 76, 134, 303, 422, 435, 461, 484, 490, 524, 575

ஆனத்தால் 615

ஆனெ 455

ஆனென் 546, 603

ஆன்ம 151

ஆன்மசுத்தி 435

ஆன்மா 150, 155, 156, ௸ 161, 162, 166, 167, 172, 173, 177. 178, 185, 186, 192, 199, 205, 226, 241, 267, 273, 334, 353, 356, 359, 419, 489

ஆன்மாக்களுக்கு 104, 378, 396, 468

ஆன்மாக்கள் 83, 122, 260, 412, 539

ஆன்மாவால் 265

ஆன்மாவில் 461

இ

இ 18, 83, 93, 104, 122, 167, 181, 205. 226, 241, 260, 273, 306, 356, 378, 396, 412, 419, 425, 468, 489, 539, 583, ௸ ௸ 598, 607, 624

இகழார் 13

இங்கு 513, 624

இசைக்கும் 287

இசைத்த 389

இசைத்து 389

இடங்களில் 598, 607

இடத்து 178. ௸ 260, 340, 343, 489, 598

இட்ட 414

இட்டது 90

இட்டு 107

இணங்குக 588

இணை 10, 546

இதமித்தல் 519

இதயத்தின் 247, 471

இதன் 20

இது 611, ௸

8

இதுவும் 199, 271
இந்திரியங்கள் 167
இந்திரியங்களை 273
இந்திரியத்தின் 419
இந்திரியத்து 253
இந்திரியம் 415, 505
இந்துவில் 474
இயந்திர 150, 192
இயல் 274
இயைந்து 13, 98
இரண்டன் 356
இரண்டாய் 316
இரண்டினையும் 356
இரண்டு 142, 287, 306, 312, 316, 321, 325, 334, 353
இரண்டும் 141, 624
இரவி 282
இராகுவை 474
இரித்து 570
இரு 76, 104, 287, 334, 353, 389
இருக்கு 93
இருத்தலால் 600
இரும்பு 474
இரும்பை 563
இருளே 560
இருளை 563
இருள் 344, 519, 560
இலயித்த 44, ஷை
இலயித்தது 44, 48
இலது 150, 155, 156, 334
இலன் 509
இலாடத்தே 253, ஷை ஷை
இல் 318, 492, ஷை 563
இல்லதற்கு 36
இல்லது 351
இல்லா 408, ஷை
இல்லாமை 344
இல்லார் 10, 425, 591
இல்லான் 344
இல்லை 36, 142, 282, ஷை 425, 505, 567
இல்வழியில் 351
இவற்றை 219
இவ்விடத்து 465
இவ்வேரும் 215
இழை 359, 408
இற 33
இறந்து 555
இறப்பில் 389
இறை 425, 492
இறை பணி 483, 502
இறை பணியார்க்கு 505
இறைவன் 59
இற்று 59
இனத்து 591
இனி 36, 64, 104, 122, 138, 161, 166, 172, 176, 185, 192, 226, 241, 271, 306, 348, 353, 396, 412, 419, 450, 458, 465, 502, 556, 588, 596, 607
இன்பம் 178, ஷை 389
இன்மை 344, 351
இன்மையானும் 310, ஷை.
இன்மையான் 124
இன்மையின் 36, ஷை 150, 177, 178, 287, 373,
இன்றி 36, 65, ஷை 76, 98, 138, 141, 181, 306, 398, 519, 539, 558
இன்றியே 492

இன்று 59, 93, ஷை 98, 151, 226, 274, 282, 303, 344, 348, 349, 444, 567, 600, 624, ஷை
இன்றே 483
இன்றேல் 93

ஈ

ஈசர் 223, 478
ஈர்க்கு 282
ஈசன் 142, 560, 567
ஈண்டு 27, 83, 155, 205, 265, 296, 340, 378, 440, 489, 533, 579
ஈறு 68, ஷை
ஈறும் 32, 33, 124
ஈறே 68

உ

உகரம் 223
உகாரம் 219
உச்சரிக்க 465
உடங்கு 13, 98
உடலின் 109, 174, ஷை ஷை
உடலே 181
உடல் 150, 161, 168, 174, 181
உடனாய் 280
உடன் 359, 513
உடைத்து 18, 27
உடைமை 13, 142, 471, 505
உடைய 13, 404
உணர 59, 306, 450, 461, 546, 600, ஷை
உணரா 412, 434
உணராது 199, 273, 287, 316, 544
உணராய் 316
உணரார் 13, ஷை
உணரும் 265, 271, 273, 316, 81
ஷை, 373, 513, 538, 544, 591, 600
உணர் 163, 287, 364
உணர்தலால் 316
உணர்தலின் 150, 185
உணர்தல் 212, ஷை
உணர்த்த 150, 185, 373
உணர்த்தாது 581
உணர்த்தும் 86, 396, 401, ஷை, 581
உணர்த்துதல் 18, 76, 151, 260, 287, 334, 373, 435, 484, 524, 575
உணர்த்துவர் 589
உணர்ந்த 458
உணர்ந்தார் 560
உணர்ந்து 13, 194, 415, 544
உணர்ப 316
உணர்வதனை 458
உணர்வது 544, ஷை
உணர்வார் 13, 351, ஷை
உணர்வில் 59, 126, 422
உணர்வினால் 591
உணர்வின் 260
உணர்வு 226, 344, 348
உண்டல் 603
உண்டா 52
உண்டாதல் 492
உண்டாம் 282, 624
உண்டி 150, 177, 181, ஷை
உண்டு 33, 181, 280, 389
உண்டே 325
உண்ணும் 570
உண்மை 359
உண்மையின் 86
உண்மையை 458
உதிக்கும் 212

உடுக்க 212
உடுக்கு 386
உத்தமனின் 461
உந்தமே 474
உபகாரம் 260
உபதேசியாய் 186, 386
உப்பின் 567
உப்பு 368
உமியும் 114
உயிர் 109, 247
உயிர்த்தலால் 181
உயிர்த்து 280
உயிர்ப்ப 174
உரா 434
உரிவும் 134
உரு 287, 359, 478, 603
உருக்கி 98
உருவம் 359, ஷை
உருவின் 425
உருவும் 425, ஷை
உருவை 52, 600
உரைத்து 20, 163
உலகம் 18, 274
உலகு 98, ஷை
உலகும் 544
உலகே 287
உலகை 570
உலகில் 422
உளங்கள் 404
உளதாம் 18, 603
உளதாய் 27, 33, 356, 450
உளதாதல் 124
உளது 44, 68, 150, 155, 156, 161, 162, 166, 167, 172, 173, 177, 178, 185, 186, 192, 312, 334, 353, 368, 458
உளத்தின் 59
உளம் 90, ஷை, ஷை, 98, 120, 219, 268, ஷை, 274, 368, 492, 524, 567
உளவா 368
உளவாம் 114, 408
உளான் 142, ஷை
உளி 513
உளோ 93
உள் 109, 600, 150, 192
உள்கிற்றை 546
உள்குவார் 546
உள்ள 18, 205, 241, 306, 356, 450
உள்ளதற்கு 36, 124
உள்ளதன் 32
உள்ளதாம் 109, 181
உள்ளதே 109, 126, 168
உள்ளத்தால் 546
உள்ளத்தில் 446
உள்ளத்தின் 446, 546
உள்ளத்து 260
உள்ளத்தை 446, 529
உள்ளமே 544
உள்ளம் 90, 134, 181, 212, 215, 232, 253, 268, 368, 422, 446, 471, 567, 570
உள்ளல் 168
உள்ளான் 321
உறுப்பும் 90
உற்பத்தி 27, 36
உற்பவம் 76
உற்று 280, 408, 422, 546
உற்றும் 364
உனது 163
உனில் 316
உன் 163
உன்னில் 163

ஊ

ஊசல் 421
ஊட்டும் 112
ஊன 437
ஊனத்தை 461
ஊன் 181

எ

எங்கும் 95, 142, ஷை, 570
எண் 223
எண்ணான் 274
எண்ணி 312, 517
எண்ணிய 312, 478
எண்ணினர்க்கும் 492
எண்ணும் 95, 434
எதிர் 334
எது 187
எமை 13
எம்மை 13
எய்திய 253
எய்தும் 253
எய்துவார் 425
எரி 519
எல்லாம் 301
எவற்றினையும் 156
எவற்று 142
எவனும் 142
எவ் 425, ஷை, 505, 544
எழுத்தும் 303
என 156, 157, 162, 287, 351, 373, 434, 444, 461, 468, 492, ஷை, 574, 596
எனது 150, 161, 163, ஷை, ஷை, 490
எனின் 287, 318
எனும் 18, 429, 492
எனை 444
என் 90, 162, ஷை, ஷை, ஷை, 163, 312, 404, 444
என்ன 33, 321, 458, 474
என்னாது 95, 163
என்பது 18, 134
என்பன் 98
என்போ 444
என்மனார் 18
என்ற 86, ஷை, 90, 93, 142, 163
என்றல் 312
என்றலின் 150, ஷை, 155, 164
என்னில் 86, 142
என்றது 27, 36, 64, 83, 93, 104, 122, 138, 155, 156, 161, 162, 166, 167, 172, 173, 177, 178, 185, 186, 192, 205, 226, 241, 265, 271, 296, 340, 348, 353, 356, 378, 396, 412, 419, 440, 465, 489, 502, 538, 556, 579, 588, 596, 607, 614
என்றதையும் 611
எனாஅல் 162, 312
என்று 27, 86, 95, 156, 186, 306, 325, ஷை, 351, 450, ஷை, 492, ஷை, ஷை
என்றும் 33, 163, ஷை, 173, ஷை, 386, 619
என்னின் 48, 318, ஷை, 425, 505
என்னும் 93, 187, 274, 325, 490, 579, 624

ஏ

ஏகம் 86, ஷை, 141, 546, ஷை
ஏகன் 483, 489
ஏத்த 556

எந்து 408
எய் 247, 368
எய்ந்து 282
எய்ப்ப 199
எலா 519

ஐ

ஐந்தவத்தை 253
ஐந்திணனும் 167
ஐந்தினையும் 544
ஐந்தும் 544
ஐந்தையும் 544
ஐம்பயனும் 167
ஐம்புல 373
ஐம்புலனில் 517
ஐம்புலனை 280
ஐம்பொறிகள் 174, 268
ஐம்புலன் 150, 166, 167
ஐம்பொறியில் 268
ஐம்பொறியின் 429, ஷை
ஐம்பொறியை 268, 429
ஐயுணர்வுகளால் 412
ஐயுணர்வுகள் 265
ஐயைந்து 247

ஒ

ஒக்க 544
ஒக்கும் 389
ஒடு 98, 223, 483, 574
ஒடுக்கம் 150, 172
ஒடுங்க 181
ஒடுங்காத 178
ஒடுங்காது 181
ஒடுங்கி 18, 280, 570
ஒடுங்கின 36, 178
ஒட்டா 574
ஒட்டி 90
ஒண் 461, 624
ஒத்து 212
ஒப்பில் 389
ஒப்பு 303
ஒரு 90, 107, 603
ஒருத்தி 27
ஒருவ 434
ஒருவன் 27
ஒளி 142
ஒளியில் 280
ஒற்றித்து 267
ஒன்றா 567
ஒன்றால் 68
ஒன்றில் 68
ஒன்றின் 187, 567
ஒன்று 27, 68, ஷை, ஷை, ஷை, 93, ஷை, ஷை, 95, 142, 157, 167, ஷை, 168, ஷை, ஷை, ஷை, 174, 199, 205, 232, 247, 316, 325, 344, 492, ஷை, 546, 567
ஒன்றும் 624
ஒன்றே 93, ஷை
ஒன்றை 212, 232, 316
ஒன்றையும் 267, 503, 539
ஒன்றொன்றா 544, ஷை
ஒன்றொன்றில் 33

ஓ

ஓங்காரத்து 223
ஓசையும் 95
ஓடு 93, 223
ஓதாரோ 33
ஓது 474
ஓமம் 471
ஓர் 168, 334
ஓர்பவர் 517
ஓரின் 303

க

கடலில் 422
கடல் 368
கடற்றிரையே 219
கடற்றிரையை 212
கடன் 509
கட்டு 59
கட்டும் 90
கண் 126, 260, 268, 321, 425, ஷை, ஷை, 434, 446, ஷை, 474, 478, 546, 624
கண்ட 59, ஷை, 126, 260, 474, 603
கண்டது 603
கண்டதை 461
கண்டத்தின் 247
கண்டவனின் 59
கண்டார்க்கு 611
கண்டாம் 173
கண்டிலம் 173
கண்டு 59, 168, 181, ஷை, 253, 274, 280, ஷை, 321, 351, ஷை, 386, 444, 461, 471, 524, 575, 596
கண்டும் 33
கண்ணா 274
கண்ணாலே 440
கண்ணி 312
கண்ணிய 583
கண்ணில் 223
கண்ணினில் 434
கண்ணீரும் 408
கண்ணே 446, 560
கண்படில் 150, 177
கண்ணுக்கு 282, 446, 524
கதம் 519
கதிரின் 519
கதிர் 344
கந்தங்களை 167
கப்பு 567
கமலத்து 114
கயிறு 421
கரணமும் 90
கருட 461
கருவில் 126
கலம் 513
கலா 478
கலை 194, 478
கல் 98
கல்லால் 10
கழல் 373, 425, 524, 567
கழீஇ 574
களிம்பும் 114
களைக 579
களையின் 455
கள்வன் 446
கற்றார் 380
கனல் 474
கனவு 59, 126, 173
கனவும் 134, 303
கன்மம் 114, 429, 503

கா

காட்டத்தில் 603
காட்டம் 232
காட்டலால் 157
காட்டலின் 524
காட்டாக்கின் 474
காட்டாது 321
காட்டி 380, 414
காட்டிய 446, ஷை
காட்டிற்றை 414
காட்டு 181, 321, 416
காட்டும் 415, ஷை 524, 583
காண 450, 524
காணவே 419

காணா 268, 425, 446, ஷை
காணாது 268, 446
காணாதே 181
காணாதேல் 232, 268, ஷை
காணார் 444
காணாரோ 546
காணான் 316, 344
காணாற்கு 560
காணலில் 194, 267, 474, 519
காணும் 268, 351; 524, 603
காண்க 440
காண் 93, ஷை 163, 274, 280, 351, 368, 425, 446, 458, 583
காண்குவனேல் 344
காத்தல் 509
காத்தும் 509
காந்தம் 112, 260, 563
காப்பான் 106
காரணனாய் 18
காலத்தின் 59
கால் 162, 163
கான்மியமும் 583
காண்மியம் 579

கி

கிடத்தலின் 32
கிடப்ப 174
கிரமத்து 93
கிரியா 380

கு

குடாகாய 134
குண்டலியில் 471
குருவாய் 401, ஷை
குருவுமாய் 373, 396
குருவால் 624
குளிர்ந்து 52
குறை 404
குறைகள் 404
குறைவில் 404

கூ

கூட்டானேன் 52
கூத்தாட்டு 134

கெ

கெட்டு 126

கே

கேட்டு 280
கேளா 268
கேளாம் 13
கேள் 301

கை

கை 162, 163

கொ

கொடா 380
கொடு 230
கொடுத்தல் 509
கொடுத்து 53, 600
கொண்டு 90, 174
கொண்மூவில் 571
கொள் 404
கொள்க 20, 468
கொள்பவர்க்கு 404
கொள்ளார் 404

கோ

கோசரமாய் 306, 442
கோதண்டம் 471
கோழையோ 444

ச

சகச 199, 226
சகலர்க்கு 401
சகலன் 429
சகன் 404
சங்கார 18
சங்காரத்தின் 36, 65

சங்காரமே 64
சட்ட 458
சதசத்து 519
சதாசிவம் 223
சதாசிவமும் 478
சத்த 167
சத்தி 282, 478
சத்தின் 340
சத்து 287, 306, 312, டை 334, 364, 458, 519 டை
சத்தும் 287
சத்தே 334, 458
சந்தித்தது 199
சந்நிதியில் 274
சரியை 380
சர்வவியாபியாய் 141
சலம் 509
சலிப்பு 563

சா

சாக்கிரத்தை 253
சாக்கிரம் 241
சார் 157
சார்பில் 386
சார்ந்தாரை 509, டை
சார்ந்து 386, 509
சானத்தில் 461
சானிக்கில் 471

சி

சித்தங்களில் 205
சித்தம் 215, 219, 247
சிந்திதன் 575
சிந்தித்து 215
சிந்தை 434, 624
சிந்தையில் 474
சிவ 287, 588, 596
சிவமும் 325
சிவம் 306, 624, டை
சிவனே 429
சிவன் 274, டை டை 312, 474, 478
சிறப்பு 591
சிறை 422, டை டை

சீ

சீ 444
சீபாதங்களை 524
சீபாதத்தை 419, 490, 556
சீவனம் 178
சீவியா 478

சு

சுட்டப்பட்ட 27
சுட்டி 458, டை ஷ்
சுட்டு 296
சுட்டுணர்வு 65; டை
சுட்டுவது 86
சுதந்திரம் 65
சுவையும் 95
சுழுத்தி 241

சூ

சூனியம் 334
சூழ் 386, 404

செ

செம் 574
செம்பினில் 114
செயல் 109
செய் 114, 364, 422
செய்த 386
செய்தல் 563
செய்தார் 386
செய்தானே 619
செய்தி 109, 558
செய்து 287, 386, 471, 509
செய்தும் 619
செய்துழி 380
செய்பவர் 109

செய்ய 422
செய்யான் 503
செய்யே 109
செய்வன் 109
செய்வதனில் 112
செய்வான் 563
செய்வினை 36
செய்வோர் 36, 558
செருக்கு 490
செலுத்தும் 517
செலுமே 373, 524
செல்லும் 570
செவி 126, 268
செவ்வியின் 174
செழும் 422
செறியும் 404
சென்று 109, 112, 126, 174, 247, 422
சென்றும் 517

சே

சேடம் 567
சேடன் 471
சேட்டித்தது 274
சேரல் 574
சேர் 474
சேர்த்தி 98
சேர்வை 591

சை

சைதன்னிய 398
ஸ்ரீ 465
க்ஷயம் 484

சொ

சொப்பனம் 241
சொரூபத்தின் 244
சொரூபம் 450
சொரூபியாய் 244, 398
சொல் 404
சொல்லானே 86
சொல்லில் 114
சொல்லும் 386
சொல்லே 86
சொன்ன 274

சோ

சோகம் 114

ஞா

ஞான 230, 434, 440, 450
ஞானத்தினை 373
ஞானத்தை 194, 380, 386, 389, 581, 615
ஞானம் 368, டி 378, 401, டி 468, 615
ஞானி 513
ஞானிக்கி 583

த

தகை 415
தங்கள் 509
தண் 368, 434
தநி 600
தமது 260, 271, 396, 419
தமி 260, 316
தமியேன் 98
தமை 13, 444
தம் 260, 373, 591, 600
தம்மில் 13
தம்மினும் 517
தம்மை 13, டி 412, 591
தருவான் 505
தரையே 421
தர்ப்பணம் 157
தலைவர் 509
தள்ள 126
தவத்தால் 378, 389
தவத்தினில் 373
தவம் 386, டி

தவணை 591
தவர்க்கு 603
தவலோகம் 386
தற்பரமும் 157
தற்பரம் 455
தனது 600
தனி 157, 455
தனித்தனி 168
தனு 194, 232
தனுவில் 505
தனுவின் 150, 192
தனை 232, 446, ஷை
தன் 13, 134, 318, 415, 483, 492, 560, 570, 600, ஷை ஷை
தன்னாலே 273, 444
தன்னால் 316, 321
தன்னின் 44, 368, 563
தன்னுள் 232
தன்னை 232, 273, 419, 619
தன்னையும் 444
தன்மை 570
தன்மையும் 306

தா

தாக்காது 59
தாமரை 560
தாம் 112, 174, 260, 509
தாய் 421
தாரகம் 52
தாள் 52, 95, 312, 425, 478, 574
தானா 509, 619 ஷை
தானும் 273, 574
தானே 76, 83, 98, 215, 368, 396, 401, 408, 483, 492, 619
தான் 52, 126, ஷை 187, 194, ஷை 232, 316, ஷை ஷை 318, ஷை 359, 364, ஷை 368, ஷை 401, 425, 446, 461, ஷை 474, 492, ஷைஷை 509, 513, 546, 563, 600, 603, ஷை ஷை 609, 619

தி

திதி 27, 33
திதியில் 18
திதியும் 48
திதியே 18
திரு 596
திரோதகம் 230
திறத்து 591
திறல் 517
திறன் 287, 334, 353
தின்ற 468

தீ

தீபமே 194
தீர 615
தீரின் 615
தீர் 461
தீர்ந்து 422

து

துணிந்து 215
துணை 33
துணையான் 421
துய்யாமை 364
துரந்த 563
துரந்து 563
துரியம் 241
துரியாதீதம் 241
துறைகள் 253
துனை 434
துன்பம் 178, ஷை

தெ

தெளிந்தும் 364
தெளியாது. 215

தே

தேடி 444
தேர்த்து 434
தேர்ந்த 444

தை

தைவமே 611, 619
தைவம் 415, 458, 619

தொ

தொக்கு 359
தொழுவே 615
தொழுகை 619
தொழு 611, 615
தொழுமே 574
தொழும்பு 68
தொன்மையே 114

தோ

தோல் 134
தோற்ற 109, 126
தோற்றம் 36
தோற்றமும் 32, 124
தோற்றிய 18
தோன்றல் 359
தோன்றாது 359
தோன்றானேல் 408
தோன்றானே 455, 603
தோன்றி 33; 359, 474

ந

நகரியை 107
நசித்தலால் 567
நசித்திலதேன் 567
நசித்து 567, ஷை
நண்ணிய 223
[illegible] 517
நண்ணரில் 181, 478
நண்ணுதலை 386
நம் 505
நரம்பு 444, 609
நல் 247, 386
நல்லாய் 408
நல்லார் 10
நற்றவர் 517
நனவின்கண்
நனவு 59
நனவை 126
நன்னெறி 380

நா

நாசம் 27
நாடி 434, 444, 609, 615
நாடியோ 444
நாடில் 194, 219
நாடும் 492
நாதத்து 223
நாதம் 219, 478
நாத்தியை 82
நாபியினில் 247
நாமும் [illegible]5
நாம் 142, 505, ஷை
நாளம் 478
நான் 492, ஷை

நி

நிகழும் 378, 600, 615
நிகழ் 114, 303
நித்தியானந்தன் 455
நிரூபிக்கில் 349
நிர்குணன் 455
நிலவு 223
நிலை 478
நில்லாது 359, ஷை, 513
நிலையா 194
நிழல் 10, 408, 434

நிறத்து 415
நிறமே 415
நிறம் 415
நிற்க 483, 489, 502
நிற்கவே 490
நிற்கும் 76, 83, 138, 241, 274, 282, 468
நிற்ப 268
நிற்பது 156, 162, 173, 178, 186, 450
நிற்பினும் 560
நிற்றலான் 65, 141, 193, 208, 230, 244, 273, 298, 343, 398, 414, 442 558, 598
நிற்றல் 52, 325
நிற்றி 163
நினைந்து 415, 429
நின்மலன் 455
நின்ற 65, 68, 306, 356, 422, 455, 489, 575
நின்றனை 321, 408
நின்று 59, 98, 157, ஷை, 174, 199, 544, 603
நின்றும் 505
நின்றுளது 157
நின்றே 208, 298, 546, 598

நீ

நீ 93, 157, ஷை, 163, 168, 174, 301, 316, 364, ஷை, ஷை, 458
நீக்கம் 76, 138
நீக்குதற்கு 468
நீக்கும் 560
நீங்கல் 253
நீங்கார் 517
நீங்கானை 429
நீங்கான் 429
நீங்கு 429
நீங்கும் 429
நீரில் 303
நீர் 351, 408, 429, 368

நு

நுகராரேல் 112
நுகலில் 247
நுதலிற்று 18, 76, 151, 260, 287, 334, 373, 435, 484, 524, 575

நூ

நூல் 624

நெ

நெய் 600
நெல்லிற்கு 144
நெறி 483
நெறியில் 404

நே

நேசத்தர் 600
நேசத்தில் 560
நேயம் 574
நேர் 478, 560, ஷை, 624

நொ

நொடித்து 59

நோ

நோக்க 624
நோக்காது 59
நோக்கி 59, 468
நோக்கிற்றை 468
நோன் 574

ப

பகர் 223
பகல் 560
பகாது 219
பசாசத்து 260
பசீசம் 112
பசித்து 389
பசிப்பானை 389

20

பசு 93
பஞ்ச 241
பஞ்சாக்கரத்தை 465
படர்ந்து 126
படிகம் 415
பண் 517
பண்டு 461
பண்ணும் 435, 484
பண்ணையும் 95
பணபும் 134
பதி 93, 162, 434, 600
பதியை 434, 575
பத்தரது 596
பத்தர் 591
பத்தர்களோடு 588
பத்தியினால் 556
பந்தித்து 215
பயன் 109, 588
பரகாயம் 134
பரமன் 223
பரமேசுரனது 524
பரமேசுரன் 489, 596
பரம் 318
பரவில் 134
பரன் 591
பரிசம் 167
பல 68
பலவும் 83
பல 415, ஷை
பவத்தின் 404
பவம் 386, 624
பழம் 95
பளிங்கில் 414
பற்று 836

பா

பாகரினும் 517
பாச 484
பாசத்தார்க்கு 560, 600
பாசத்தில் 519
பாசத்து 93
பாசத்தை 560
பாசம் 434, ஷை
பாசி 429
பாடிகாவல் 107
பாதத்தை 422
பார்க்கும் 544
பார்த்து 544
பாலும் 356
பாலே 33
பால் 408, 513, 600
பாவகத்தை 318
பாவகம் 318, ஷை
பாவகமேல் 318
பாவம் 583
பாவனாதீத 318
பாவித்தல் 318
பாவிப்பது 318
பாழ் 318, ஷை
பாற்று 306, 450
பானுவில் 474

பி

பித்து 591
பிரகாசத்தினுக்கு 310
பிரகாசமாய் 208, 298, 598
பிரகாசம் 151, 310
பிரகாசிக்க 310
பிரகாசித்தும் 468
பிரகாசியாது 340
பிரகிருதிக்கு 178
பிரணவம் 219
பிரபஞ்சம் 27, 65
பிரவேசியா 503
பிரளயாகலருக்கு 401
பிராணின் 112

பிரிப்பு 98
பிழை 619
பிறந்து 122
பிறர் 509
பின் 401, 404
பின்செய் 513
பின்னும் 389
பின்னை 619

பு

புகுதல் 98
புக்கு 570
புணராமை 13
புணர்ந்தசனுல் 458
புண்ணிய 583
புதிதன்று 114
புத்தி 205, 219
புந்தி 215
புரிய 76
புருடன் 609
புருடனும் 609
புலவர் 18
புலனின் 212
புலனை 415
புலன் 168 422
புலன்கள் 212
புழு 52, 468
புறனடை 334
புறன் 13
புனர் 76
புனலின் 422
புனைவரே 10

பூ

பூதாதி 33

பெ

பெயர் 193
பெயர்த்து 364
பெற்றிமையின் 33, 351
பெற்று 193

பே

பேசில் 364
பேதங்களை 450
பேதாய் 33
பேதைக்கு 351
பேய்த்தேரும் 303
பேய்த்தேர் 351, ஷை
பேராமல் 112
பேர் 90
பேறே 425

பொ

பொது 611
பொய் 343, 415, ஷை 458
பொய்யா 415
பொருந்தும் 583
பொல்லார் 10
பொழிப்பு 20
பொற்பினுன் 546
பொன் 142
பொன்வாள் 114, 571

போ

போகம் 546
போக்கு 76
போதம் 219
போது 215
போம் 134, 458
போய் 134, 570
போல 95, 162, 194 260, 273, 280, 344, 513
போல் 52, ஷை, 95, 98, 109, 112, 142, 157, 215, 232, 282, 359, 368, 408, 414, 415, 422, 425, 429, 455, 461 468, 519, 524, 544, 560, 570, 600, 603

போன்று 219

ம

மகரத்து 223
மகாரம் 219
மணம் 359
மண் 52, 194, 478, 583
மதி 563
மந்திரத்தால் 603
மயக்கமது 364
மயங்கி 412
மரீஇ 574
மருந்தில் 364
மருவுவன் 389
மல 244, 429, 483
மலங்களின் 591
மலங்கள 574
மலத்தார்க்கு 624
மலத்தால் 44
மலத்தினுல் 226
மலத்தின் 570
மலத்து 18. 199, 570
மலம் 114, 232, 563, 567, 574
மலர் 10, 359, 478, 574
மலர்க்கு 624
மலிந்தவர் 574
மலைவு 10
மறத்தல் 619
மறந்தாய 274
மறந்து 126
மறப்பித்து 591
மறவாது 556
மறைகள் 95
மறைத்து 230, 232
மறைந்து 244, 570
மறையின் 274
மற்று 174, 232, 274, 344, 351, 513, 570, 598
மனம் 126, 212, ஷை, ஷை, 215, 219
மனுநீத 306, 442
மனை 162
மனே 205
மன் 212, 287
மன்ற 247
மன்னரி 168
மன்னு 212, 274
மன்னுதலை 280
மன்னும் 563, ஷை

மா

மா 517
மாட்டாது 90
மாட்டின் 163
மாணு 344
மாயா 150, 192, 232
மாயை 157, 194, 483, 513, ஷை, 579, 583
மாயையும் 583
மால் 223, 574
மாறல் 174
மாறி 122
மானே 619

மி

மிக்கு 519

மீ

மீண்டு 174
மீளாது 422
மீன் 280

மு

முதலாலே 271
முதலானவற்றை 609
முதலும் 33
முதலை 440
முதலையே 18

முதல் 18, 64, 68, 260, 373. 396, 419, 455, 478, 583
முதல்வன் 83, 104, 455
மும்மை 624
முலைப்பாலும் 408
முளைத்தவா 53
முறைமையான் 489
முறைமையினை 373
முறசெய் 109, 378, 505
முன் 194, 344, ஷை, 401, ஷை, 404, 505, 519, 570, ஷை
முன்செய் 509, 513
முன்னவனே 619

மூ

மூ 18
மூக்கு 260
மூண்டிடினும் 513
மூலத்து 247
மூலம் 52
மூன்றும் 583

மெ

மெய் 247, 260, 280, 312, 321, 368, ஷை, 401, ஷை, 583, 591
மெய்கண்டான் 187, 301, 312, 316, 415, 519
மெய்ப்பொருட்கு 415
மெய்ப்பொருளே 513
மெ பின் 343

மே

மேலதற்கு 334
மேல் 212, 380
மேவ 591

மோ

மோக்ஷத்தை 380

யா

யாக்கை 163
யார் 408
யாவையும் 334
யானே 98
யான் 490

யோ

யோகங்களை 380

ர

ரசம் 167

ரு

ரூபம் 167, 478

வ

வகை 444
வகையின் 287
வசம் 563
வடிவு 219
வந்து 386, 389, 455
வரத்து 570
வரவு 76
வரின் 429
வரும் 76, 104, 122, 134, 351, 384, 609
வரை 287
வலி 619
வலித்து 563
வல் 483
வல்வி 114
வழி 65, 505
வழிபடுக 596, 607
லழிபடும் 575
வழியின் 505
வழுவாது 502
வளர்ந்து 373
வள்ளல் 109
வள்ளலால் 114
வன்ன 450
வன்னம் 414
வன்னி 232

வா

வாக்கு 247, 306, 442
வாங்கும் 513

வாசகத்தில் 624
வாய் 260
வாய்த்து 351
வாளே 570
வாள் 570
வாயு 44, 68, 563, 609
வாறே 68
வானே 455

வி

விகாரி 563
விஞ்ஞானகலர்க்கு 401
விடம் 461
விடயத்தை 538
விடயியா 267, 539
விடு 583
விடும் 461
விட்டு 156, 157, 187, 247, 373, 422, 429, 458, 461
விண் 126
விதி 434
விதிப்படி 465
வித்தகம் 52
வித்து 52
வித்தை 478
விந்து 219, 223
விழும் 126
விளக்கு 232
விளங்காது 280
விளம்பிய 260
விளைக்கும் 109
விளைதலால் 615
விளைத்து 558
விளைக்க 546
விளையா 615
விளையாடி 174
விளையாது 368
விளையும் 401
வினை 104, 109, 150, 177, 181, ஷை 389, 483, 505, 509, 513, ஷை 591, 615, ஷை
வினைகள் 364
வினைஞர் 112
வினைமையில் 18
வினையால் 52, 274, 615
வினையில் 76, 389
வினையினால் 126
வினையும் 505, 509
வினையை 112, ஷை-ஷை

வீ

வீடு 404
வீயாத 232
வீழ்க்கும் 591

வெ

வெய்யோனை 280
வெய்யோன் 280
வெவ்வேறு 193, 215

வே

வேடத்தையும் 596
வேடமும் 574
வேடரின் 373
வேட்டுவன் 52
வேண்டி 600
வேண்டு 52
வேண்டும் 44
வேண்டுவது 310
வேம்பு 468
வேவாத 517
வேறும் 163
வேறுவான் 419
வேறு 134, 174, 181, 194, 247, 364, 415, ஷை 603
வேறே 325
வேறேல் 425

வை

வைத்து 492

இருமுறைவந்த தொடர்மொழி
அவைதாம் பிரகாசமாய் நின்றே
அப்பிரகாசமாய் நிற்றலால் 208, 298

இருதிறனறிவுள் இரண்டலா
வான்மா 334, 353

உரையில் இருமுறைவந்த
தொடர்மொழி
யானிதனை அறிந்தேன்
அறிகின்றிலேன் 290, 475

இந்நூலில் வந்துள்ள மதங்களின்

அட்டவணை.

அநேகாந்தவாதி. (ஆருகதர்)

இல்லதும் உள்ளதுமாய உலகம் தோன்றும், அதாவது உடம்பெடுத்ததற்கு முன் சீவன் உண்டோ இல்லையோ என்று வினவிய போது, உண்டாம்! இல்லையாம்! உண்டும் இல்லையும் ஆம் என்று விடை இறுத்தல் 47

அநேக முடிபுகளை உடையது 99

அநேகேசுரவாதி.

உலகத்துக்கு கர்த்தாவாகிய சங்காரக் கடவுளர் பலர் உண்டு 65

மூத்திபெற்ற உயிர் சிவனோடு சமமாதலின் பல ஈசுரர் உண்டு 73

அந்தக்கரண ஆன்மவாதி.

சீவனைச் சிந்தை என்றும் சிந்தையைச் சீவனென்றும் கூறுதலின் மனமுதலிய அந்தக்கரணங்களே ஆன்மா 206

அந்தரணங்கள் ஆன்மா அன்றாயின், அவ்வந்தக்கரணங்களோடு ஆன்மா சந்தித்து நிற்றற்கு ஏது என்னை 227

ஆணவமலத்தில் அகப்பட்ட உயிர், கருவிகளோடு கூடிய விடத்து ஒரு தன்மையாய் அறியாது ஐந்தவத்தைப் படுதற்குக் காரணம் என்னை 243

ஆவேசவாதி.

சிவன் ஆவேசித்தலால் தனக்கு எல்லாம் செய்தல் கூடும் 13

இந்திரியான்மவாதி.

நான் கேட்டேன், நான் கண்டேன் என்று வழங்குவதால் இந்திரியங்களே ஆன்மா 167

இரணியகருப்பவாதி.

சிருட்டி கர்த்தாவாகிய பிரமாவே உலகிற்கு முதற் கடவுள் 41

ஈசுர அவிகாரவாதசைவர்.

உயிர், முதல்வன் உபகாரத்தை விரும்புமாயின் முதல்வனும் பிறிதொன்றன் உபகாரத்தை விரும்புவன் 272

இந்திரியங்கள் உயிரால் அறிதலால் உண்டாம் பயன் உயிர்க்கேயன்றி இந்திரியங்களுக்கு இல்லாதவாறுபோல, உயிர் முதல்வனால் அறிதலால் உண்டாம் பயனும் உயிர்க்கின்றி முதல்வனுக்கேயாதல் வேண்டும் 276

உயிர்க்குப் பல வேறுவகைப்பட அறிவு நிகழக் காண்கின்றமையான் அது முதல்வன் உணர்த்தும் வேறுபாட்டால் நிகழுமாதலின் நிர்விகாரி என்றதனோடு முரணும் 284

உயிர், இறைவன் அறிவிக்க அறியும் தன்மையின்றித் தானே அறியும் தன்மை யுடையது 358

உலகாயதவாதி.

சரீரத்தின் வேறாய் தான் ஒரு பொருள் இல்லை 15

பிரபஞ்சம் முத்தொழில் உடையது என்றல் பொருந்தாது 28

பிரத்தியட்சப் பிரமாணத்தாலன்றி, அநுமானப் பிரமாணத்தால் பிரபஞ்சம் முத்தொழில் உடையது என்றல் பொருந்தாது 32

உடலே உயிர் அவ்வுடலாகிய உயிர்க்கு உலகம் அநுபவிக்கப்படும் பொருள் 165

உற்பத்திவாதி.

ஆன்மாவிற்கு உற்பத்தி உண்டு 73

ஏகான்மவாதி.

உயிரும் முதல்வனும், பொன்னும் ஆபரணமும்போல் அபேதம் 84

அத்துவிதம் என்னும் சொல், இரண்டாவதாகிய பசுபாசப் பொருள்கள் இல்லை, பிரமப்பொருள் ஒன்றே உள்ளது என்றுணர்த்தும் 88

மகாகாயமே குடத்தில் அடங்கியபொழுது குடாகாயம் எனப்பட்டாற்போல, பிரமமே உடம்பிற் கட்டுப்பட்டபொழுது சீவனாயிற்று 136

உணர்த்த உணர்தலின் என்றது அஞ்ஞானமே ஆன்மா என்பாரை மறுத்தற்கு எழுந்தது 191

துவமபத லட்சியார்த்தமாகிய சித்தே தற்பத லட்சியார்த்தமாகிய சிவம் 327

அஞ்ஞான தசையில் ஜீவத்துவத்தோடிருத்தலின் ஜீவன் உளனென்று சத்ரூபனாயும், அஞ்ஞானம் நீங்கிய முத்தி தசையில் ஜீவத்துவம் நீங்கிச் சிவமாதலின் ஜீவன் இலனென்று அசத்ரூபனாயும் இருத்தலால் ஜீவன் சதசத்து 338

சிவனே மாயையோடு கூடி ஜீவனாயிற்று; மாயை நீங்கிய பின் சிவமாய் இருந்தது; இவ்வளவேயன்றி முத்தியினும் சிவத்துக்கு உயிர் அடிமை என்றல் பொருந்தாது 417

முதல்வனே தன் ஆனந்தத்தை அநுபவிப்பன் உயிரென்பது ஒன்றில்லை 552

ஐக்யவாதசைவர்.

மாயாமலமே ஞானத்தை மறைக்கும்; அதனின் வேறாகச் சகசமலமென ஓர் மலம் உண்டென்றல் மிகை 234

மாயை கன்மங்களே ஆணவமலம் 237

உயிர் அறிவிக்க அறியும் தன்மையின்றித் தானே அறியும் தன்மை யுடையது 358

கவுளர்.

உயிர் அருவம் .237

கிரீடாபிரமவாதி.

குடம் உடைந்தவிடத்துக் குடாகாயம் மகாகாயத்தோடு கூடுமாறுபோல, உடம்பு நீங்கிய விடத்து உயிர் பிரமத்தோடு கூடுமாதலால் இறந்த உயிர் மீளப் பிறப்பதில்லை 123

சமுகான்மவாதி. (சவுத்திராந்திகர்)

உடம்பு, இந்திரியம், சூக்குமதேகம், பிராணவாயு ஆகிய இவற்றுள் ஒன்று குறைந்த விடத்தும் அறிவு நிகழாமையானும், அவை எல்லாங் கூடிய இடத்து அறிவு நிகழ்தலானும, அவை யனைத்தும் கூடிய சமுதாயமே உயிர் 192

சித்தமும் சித்தப்பகுதியுமாகிய அகச்சமுதாயம் மாயாகாரியம் என்பது எமக்கு உடன்பாடில்லாமையால் சமுதாயம் என்றது கொண்டு அதனின்வேறாய் ஆன்மா உண்டென்றல் பொருந்தாது 194

சமணர்.

உயிர், எந்த எந்த உடம்பைப் பற்றிற்றோ அந்த அந்த உடம்பளவாய் வியாபித்து நிற்கும் 237

சாங்கியர்.

உயிர்குணிப் பொருளன்று குணமே (அதாவது அறிவே) 15

உலகம், அதற்கு முதற் காரணமாகிய மாயையினின்றும் தானே தோன்றியழியும்; ஆதலின் உலகத்தைத்தோற்றுவிப்பதற்கு ஒரு கர்த்தா வேண்டாம் 40

எது எதனிடத்தில் ஒடுங்கும் அது அதனிடத்தினின்றும் உற்பத்தியாம்; ஆதலின் மாயையில் ஒடுங்கிய உலகத்தை மாயையே மீளத் தோற்றுவிக்கும் இதற்கோர் இறைவன் வேண்டாம் 54

மூலப்பிரகிருதியிற்றோன்றும் புத்தி தத்துவத்துக்கே தோன்றி அழிதல் கூடும்; உயிர்க்குத் தோன்றி அழிதல் கூடாது 126

அவிச்சையே ஆணவமலம் 237

உயிர் அறிவு மாத்திரையான குணமே யன்றிக் குணிப்பொருளன்று 237

இந்திரியங்கள் உயிரால் விடயங்களை உணரும் என்றற்குப் பிரமாணம் யாது 267

எல்லாப் பொருளும் சத்தாதலால் சுட்டி அறியப்படும் பொருளும் சத்தேயாம் 297

உள்ளது காரியப்படும் என்னும் சற்காரியவாதத்தில் பிரபஞ்சமும் சத்தேயாதலின், சத்தாயுள்ள பிரபஞ்சத்தைச் சுட்டி அறியப்படுதல் மாத்திரையால் அசத்தென்றல் இழுக்கு 299,300,301,304

ஞானாசிரியன் ஏனைய நூற்பொருள்களை உணர்த்தும் பசுத்துவமுடைய நம்மனோரில் ஒருவராதல் கூடும் 397

சிவசங்கிராந்தவாதசைவர்.

முத்தியில் உயிர் சிவத்துடன் ஒன்றாய்ப் போதலேயன்றி அடிமையாதலில்லை 73

விளக்கின் சந்நிதியில் கண்ணொளி பொருளை யறிவதுபோல, பெத்த நிலையில் ஆன்ம சந்நிதியில் கரணங்கள் விடயங்களை அறியும், அதுபோல முத்தி நிலையிலும் அக்கரணமே சிவகரணமாய் ஆன்ம சந்நிதியில் நின்று சிவத்தை அறியும். கண்ணாடியின் சந்நிதியில் அதன் நிழலுக்குப் பிரகாசம் உண்டாவதுபோல ஆன்ம சந்நிதியில் சடமாகிய கரணத்துக்கு அறிவு உண்டாகும் 349

பாசஞானமென வழங்குதலால் அப்பாசத்தை அறிவுடையதன்று என்றல் பொருந்தாது 350

ஐம்பொறிகளே சிவகரணமாய்நின்று சத்தூலஞானத்தை விளக்கும் ஆதலின், முதல்வன் குருவுமாய் வருதல் வேண்டாம் 413

சிவாத்துவிதசைவர்.

பசுபாசங்கள் தனித்த பொருளன்று; சிற்சத்தியின் பரிணாமமே; பதிபசு பாசங்களுக்குத் தம்முள் வேற்றுமை, குணகுணிகட்குளதாகிய வேற்றுமைபோல உட்பேதமேயன்றிப் புறப்பேதம் இன்று 16

குடாகாயம் மகாகாயத்தின் வேறாகாதவாறுபோல் உடலிற் கட்டுப்பட்டிருக்கும் உயிர்சிவத்தின் வேறாகாமையால் உயிரின்பொருட்டு உண்டாகும் தோற்றக்கேடுகள் சிவத்திற்கேயாம் 125

முதல்வனைக் கூடப்பெற்ற உயிர் அம்முதல்வனோடு ஒன்றாகுமாதலால் முத்திநிலையில் அவன் அருளால் உயிர் அறியும் என்பதும் முதல்வன் அறியப்படுவன் என்பதும் கூடாது 326

உயிர்க்காக இறைவன் அவ்வுயிரோடுபொருந்தி உலகத்தை அறிவன் ஆதலால், இறைவன் முன் உலகம் சூனியம் என்றல் பொருந்தாது 342

முற்றுணர்வுடைய சிவத்திற்குப் பிரபஞ்சத்தைச் சுட்டி அறிவதாகிய சுட்டுணர்வும்உண்டு; அதனால் இறைவனால் பிரபஞ்சம் சுட்டி அறியவும்படும் 343

பிரபஞ்சத்தை முதல்வன் சுட்டி அறியானாயின் முற்றுணர்வுடையவன் முதல்வன் என்றல் பொருந்தாது 345

எல்லாம் சிவமாய்க் கண்டவர்க்குக் கருவிகளைப் பொருந்தின

நால் என்ன குற்றம் உண்டாகும்; பொருந்தாமையால் என்ன குணம் உண்டாகும்; இரண்டுமில்லை 427

கடலிற்சென்ற நீர் மீளுதலும் உண்டென்பது பெறப்படுதலால் அவ்வாறே அரன் திருவடியடைந்த உயிர்க்கு இந்திரியத்தில் மீளுதலுமுண்டு 431

சிவசமவாதசைவர்.

முத்திபெற்ற உயிர் சிவனோடு சமமாதலின் முத்தியில் உயிர் அடிமையாதலில்லை: ஐந்தொழில் செய்யும் 73

ஆணவமலம் நீங்கியவிடத்து ஆன்ம ஞானம் சிவஞானத்தோடு ஒப்பதன்றிப் பசுஞானம் எனப்படாமையால், முதல்வன் அந்த ஆன்ம ஞானத்தால் அறியப்படுவன் என்றலே பொருத்தம் அன்றி அவனருளால் அறியப்படுவன் என்றல் பொருந்தாது 323

உயிர் அறிவிக்க அறியும் தன்மையின்றித்தானே அறியும் தன்மையுடையது 358

பசுஞானத்தால் முதல்வன் அறியப்படுவன் என்றால் வரும் குற்றம் என்னை 441

பசுத்தன்மை நீங்கியவிடத்து ஆன்ம அறிவு பதிஞானத்தோடு ஒப்பதாகும். ஆதலால், அந்த ஆன்ம அறிவினிடத்துப் பதி விளங்கித் தோன்றும் 445

பதிஞானத்தாலன்றித் தன்னையும் தலைவனையும் தெளிந்தறிதல் கூடாதென்றல் பொருந்தாது 448

சித்தான்மவாதி.

சித்தமே ஆன்மா 181

சுத்தசைவர்.

முதல்வனைக் கூடப்பெற்ற உயிர் அம்முதல்வனோடு ஒன்றாய்ப் போதலால் முத்தி நிலையில் அவன் அருளால் உயிர் அறியும் என்பதும் முதல்வன் அறியப்படுவன் என்பதும் கூடாது. 326

சிவபெருமானோடு கூடியவிடத்து உயிர் ஒன்றாய்ப் போதலேயன்றிச் சிவானந்தத்தை அனுபவித்தலில்லை 359

உடம்பு நிற்குமளவும் வினைப்பயன் முயற்சி இன்றி வாராமையின் வினைப்பயனும் முயற்சியும் உடம்பு நிற்குமளவும் எவ்வழியானும் நீக்குதல் கூடாமையால் ஏகனாய் நிற்றற்கு அவ்விரண்டும் தடையாகும்; அத்தடையைக் கடக்கமுடியாது 503

சூனிய ஆன்மவாதி. (மாத்துமிகர்)

இல்லதும் உள்ளதும் அல்லாத உலகந் தோன்றும் 47

இது ஆன்மாவன்று, இது ஆன்மாவன்று என எவற்றையும் கழித்தவிடத்து ஒன்றுங் காணாமையால் சூனியமே ஆன்மா 156

சூக்குமதேகான்மவாதி.

சத்தாதி தன் மாத்திரைகளால் இந்திரியங்களுக்கு அறிதற்றொழில் நிகழுமாதலின் இந்திரியங்களின் வேறாய் அறிந்தேன் என அறிவது சூக்கும தேகமே 172

தூலதேகான்மவாதி.

சூனியத்தை அறியும் அறிவும் உடம்பினிடத்தே நிகழ்கின்றமையானும், நான் நுணுகினேன், நான் பருத்தேன் என உடம்பினையே நானென்றுசொல்லக் காண்கின்றமையானும் தூல உடம்பே ஆன்மா 162

நையாயிகர்.

முதல்வனைவிடச் சத்தி வேறன்று; முதல்வனே 139

அபாவத்தின் தன்மையாவது பாவத்திற்கு மறுதலை; அதாவது இன்மை 295

பிரபஞ்சம் அறியப்படுவதுபோல முதல்வனும் அறியப்படும் பொருளேயாம் 296

உள்ளதென்று உணரப்படும் பிரபஞ்சத்தை இல்லையென்று உணரப்படும் இல்பொருளோடொப்ப அசத்தென்றல் எவ்வாறு பொருந்தும் 299, 300, 301

சுட்டுப்பொருள்களுள் சிலபொருள்கள் அசத்தாயினும் எல்லாப் பொருள்களும் அசத்தென்றற்குப் பிரமாணம் என்னை 302

முதல்வன்வாக்கு மனாதீதப்பொருள் என்றல் பொருந்தாது 317

ஞானாசிரியன் ஏனைய நூற்பொருள்களை உணர்த்தும் பசுத்துவமுடைய நம்மனோரில் ஒருவராதல் கூடும் 397

பரிணமவாதி.

மாயை என்பது ஒன்றில்லை, பிரமமே உலகமாகத்தோன்றும் 57

முதல்வன் புதுச்சிருட்டியைச் செய்யுங்கால் அம்முதல்வனுக்கு முதற்காரணம், துணைக்காரணங்கள் வேண்டப்படுமாயின் சுதந்திரத்திற்கும் அளவிலாற்றற்கும் இழுக்காய் முடியுமாதலின் அவை வேண்டப்படா 105

பாஞ்சராத்திரி.

உயிர் அணு பரிமாணமுடையது 15, 237

நாராயணனே பரம்பொருள் 16

இருபத்தைந்தாம் தத்துவம் வாசுதேவன், அவனிடத்து நின்றும் நால்வகை வியூகங்கள்தோன்றி அவற்றால் சடமும் சித்துமாகிய எல்லாம் படைக்கப்பட்டன 16

உலகத்தைத் தோற்றுவிக்கும் கருத்தா விட்டுணு 41

உலகத்துக்கு முதற்காரணம் மூலப்பகுதி 50

மாயை இறைவனின் வேறன்று 57
உயிரும் முதல்வனும் பேதாபேதம் 84
அத்துவிதம் என்னும் சொல்லிற்குக் கடவுள் ஒன்றே என்பது பொருள் 88

பாசுபதவாதி.

மாயை கன்மங்களே ஆணவமலம் 237

பாடாணவாதி.

உயிரின்குணமே ஆணவமலம் 237
முத்தியினும் மலம்நீங்காது ஆதலால் ஆன்மாவின் அறிவு சிவத்தோடு கூடாமல் மலத்தில் அடங்கிக் கற்போற்கிடக்கும் 359
உயிரின்குணம் உயிர் உள்ள அளவும் கெடாதவாறுபோல இயல்பாகவே உயிருடன் கூடியிருக்கும் ஆணவமலம் உயிரின்வேறாய் நீக்கப்படமாட்டாது 568

பாட்டாசாரியமதம்.

உயிர் சுதந்திர அறிவுடையது 237

பாதஞ்சலர்மதம்.

உயிர் அருவம் 237
பாசஞான பசுஞானங்களுக்கு எட்டாத முதற்பொருள் யோகநூலிற்கூறும் தியானபாவனைகட்கு எட்டும் 320

பிராணான்மவாதி.

சொப்பனம் சுழுத்தி துரியங்களினும் பிராணவாயு இயங்கிக் கொண்டிருத்தலின் அப்பிராணவாயுவே ஐம்புலன்களை அடக்கியும் வெளிப்படுத்திக்கொண்டும் அறியும் ஆன்மா 178

புத்தர்.

உயிர்குணிப் பொருளன்று, குணமே 15
ஒன்றன்சார்பில் பிறிதொன்று தோன்றுதல் உலகத்துக்குஇயல்பாக அமையுமாதலின் அவ்வுலகம் முத்தொழிலை உடைத்தாயினும் ஒருகருத்தாவை உடைத்தாதல் செல்லாது 38
உலகம் உள்பொருளாயின் உள்பொருட்கு உண்டாகவேண்டுவதில்லை யாதலால் ஒடுங்கிய உலகம் மீளத்தோன்றுமென்றல் பொருந்தாது 45
முத்திநிலையில் உயிர்க்கு அறிவு இச்சை செயல்களின் தொழிற்பாடு கிடையாது 526

பேதவாதசைவர்.

மலம்நீங்குதலே முத்தியன்றிச் சிவபெருமான் திருவடியை அடையவேண்டுவதில்லை 359

இந்திரியங்களாகிய கருவிகள் நீங்கினவிடத்து ஒருசெயலும் செய்யமுடியாது ஆதலால் அவ்விந்திரியங்களை வேறென அறிந்து தனது சிற்றியல்பை அறிந்தவிடத்துச் செயலில்லாத அந்தநிலையில் மெய்ப்பொருளுக்கு அடிமையாதல் கூடாது 420

கருவிகள் நீங்கினவிடத்துத் துரியாதீதமாகிய கேவலத்தைப் பொருந்திய உயிருக்குப் பின்னுங் கருவிகளோடு கூடுதலாகிய சாக்கிரம் வருதல்போல, கருவிகள் நீங்கிச் சிவத்தன்மைப் பொருந்திய உயிர்க்குப் பின்னுங் கருவிகளோடு கூடுதலாகிய மீட்சி உண்டு 423

பௌராணிகர்.

உயிர் உருவமுடையது 237

மாயாவாதி.

உயிர்குணிப்பொருளன்று, குணமே 15

மாயை உண்டென்றாவது இல்லையென்றாவது உறுதியாய்ச் சொல்லக்கூடாத அநிர்வசனம் 57

முதல்வனது இயல்பு உணரப்படுமென்றாவது உணரப்படாதென்றாவது உறுதியாய் சொல்லக்கூடாத அநிர்வசனமாம் 308

உணரப்படுதலும் உணரப்படாமையும் ஆகிய இவ்விரண்டு வகையும் இல்லாதபொருள் அநிர்வசனமாய் நிற்பதென்று கூறாமல் வாக்குமனாதீதகோசரமாய் நிற்பது என்றதற்குப் பிரமாணம் என்னை 311

பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் அஞ்ஞானத்தோடு கூடியதால் ஜீவன் எனவும் பிரமம் எனவும் பகுக்கப்படும். பகுக்கப்பட்ட அச்சீவன் சாதனம் சாதித்து பிரமப்பொருளை அறியவுங்கூடும். அறியுங்கால் அஞ்ஞானம் நீங்க பிரமம் ஜீவன்என்றபகுப்பு நீங்கிவிடும். அந்நிலையில் பிரமப்பொருள் சத்தென்றாவது அசத்தென்றாவது அறியப்படுமாறின்றி அநிர்வசனமாய் ஞானமாத்திரையாய் நிற்கும் ஆதலால் சாதனங்களினால் அறியப்படுதல்கொண்டுபிரமப்பொருள்கோசரமென்றல் பொருந்தாது 313, 314

அசத்தாகிய பிரபஞ்சத்தை அசத்தென்று அறிந்து நீக்கிய விடத்து வெறும் பாழாகிய சூனியம் தோன்றுமேயன்றி ஞானசொரூபம் தோன்றுமாறில்லை 456

மாத்துவர்.

உயிரும் இறைவனும் பேதமே 84, 88

மீமாஞ்சகர்.

பிரபஞ்சம் முத்தொழில் உடையது என்றல் பொருந்தாது 28

முதல்வனைவிடச் சத்திவேறு 139

முதற்காரணவாதம்.

மாயை என்பது ஒன்றில்லை, இறைவனே உலகத்திற்கு முதற்காரணமாகவும் நிற்பன், சிலந்தியாகிய சித்திலிருந்து நூலாகிய சட

ரும், மனிதனுகிய சித்திலிருந்து உரோமம நகமுதலிய சடமும் தோன்றுமாறுபோல, கடவுளாகிய சித்தப்பொருளிலிருந்து உலக மாகிய சடப்பொருள் தோன்றும் 55

யோகாசாரன் (புத்தர்.)

விஞ்ஞானமே ஆன்மா 191

விஞ்ஞானன்மவாதி.

பிரமமே உயிரென்று கூறுதல் பொருந்தும் 185

வைசேடிகர்.

ஆன்மா சடப்பொருள் 237

சற்காரியவாதம் (சைவசித்தாந்தம்).

உள்ளது காரியப்படுமென்று சொல்லுதல் 46

காரியம் ஒடுங்குங்கால் அதன் முதற்காரணத்தில் ஒடுங்கும் 49

இலயித்தது என்றதினுலேயே நாசமாகாமல் ஒடுங்கியதென்றுமி ஒடுங்கியஉலகம் மீளத்தோன்றும் 51

நிலத்தின்கண் உள்ள வித்தில்நின்று முளைதோன்றுமாறுபோல ஒடுங்கிய அவத்தையில்உள்ள மாயையினின்று உலகம்தோன்றும் 54,57

இருவினை, ஆதிஎன்றுகூறின் முன்பு இல்லாதது பின்னர் தோன்றுமெனப்பட்டு வழுவாம் 116

தூலஉடல் புதிதாய்த்தோன்றினும் அவ்வாறு தோன்றுதற்குச் சூக்குமதேகம் உள்ளதாய் இருத்தல்பற்றி இல்லது தோன்றுதலில்லை 132

உயிர்க்கு மாறிப்பிறத்தல் உண்டு 162

சகசமலத்தினுல் ஆன்மாவிற்கு உணர்வு இல்லையாய்ப்போகுமா யின் இல்லாத உணர்வுபின் உண்டாதல்கூடாது. ஆதலால் அம்மலம் ஞானத்தின்றெழில் நிகழவொட்டாது மறைத்துக்கொண்டு நிற்கும் 230, 231

மேற்கோள் விளக்க அட்டவணை.

அகநானூறு.

நன்றுமன்னிது 439

இரௌரவம்.

பொருள்மூன்று 8

இருபா இருபது.

நீயோசெய்யாய் 89

இலிங்கபுராணம்.

பதியாகியுறைபவனே 417

உலகுடைநாயனர்.

சிவஞேவியாபி 245

காரைக்கால் அம்மையார்.

அறிவானுந்தானே 536

கோயிற்புராணம்.

அண்டபிண்டமவை 480

சங்கற்ப நிராகரணம்,

பலகலைஉலகில் 363

சர்வஞானோத்தரம்.

- பொருள்நான்கு 7
- யானே எல்லாமாய் 100

சாந்தோக்கியம்.

- சத்தென்று கூறப்படுவது 314

சிவஞான சித்தியார்.

- பயில்வித்தெல்லாம் 36
- உயிரவை ஒடுக்கி 55
- உலகவன் உருவில் 55, 106
- உம்பர்பிரான் 71
- உலகெலாமாகி 80
- உல்கமே உருவமாக 82, 341
- இருஞ்சுவர்க்கம் 106
- மேலைக்கு வித்துமாகி 111
- பூசனாசரீரம் 131
- சூக்குமவடிவேதென்னில் 131
- ஆலமாமுருவினுக்கு 131
- மாறிய உருவமெல்லாம் 131
- விதிப்படி சூக்குமத்தே 131
- மனுதிதருமுடல் 131
- காலமுற்றுநீக்கிட 131
- வேறொருகுறியாமாரம் 132
- மதிக்கெழுகலைகள் 132
- நேசவிந்திரியங்கட்கு 172
- உண்டியும் வினையுமின்றி 178
- அறிந்திடாதுடல் 184
- சிந்தையைச் சிவனென்று 206,309
- கருவியாமனமும் 209, 211
- இவன்றானும் புத்தியும் 211
- அவ்வுடனுவ்வும் 221
- நிகழ்ந்திடும்வாக்கு 221
- வசித்திடவரும்வியாபி 236
- படைகொடுபவனி 252, 243
- வாக்கொடுபோதம் 250
- நற்செவிதுவக்கு 250
- சாற்றியபஞ்சதன்மாத் 250
- இருவகைச்சாக்கிராதி 252, 256
- அறிதருமுதலவத்தை 253
- ஒன்றின்பாலும் வருபயன் 257
- கரணம்தன்னில் 257
- உந்திடுங்கரணந்தன்னில் 257
- பொறிபுலன் 264
- மாயை மருவிடான் சிவன் 280
- தீபமெனத்தெரிந்து 294
- காதலினால் நான்பிரமம் 309, 294
- அறிவினால் அறிந்தயாவும் 298
- சுட்டிஉணர்பொருள் 305
- உலகினை அசத்துமென்பர் 305
- உணராதபொருள்சத்து 306
- நாதமுடிவானவெல்லாம் 309
- இறைவனார் கமலபாதம் 315
- தங்கிடும் சிவன் 341
- விமலனுக்கோர்சத்தி 341
- அத்துவாமூர்த்தியாகி 341
- முனைத்திடாது அசத்து 347, 342
- தானம்யாகம் 394, 396
- எங்குந்தான் என்னின் 428
- பாசிபடுகுட்டம் 437
- ஊனமேற்கிரியை 439
- அட்டகுணம் எட்டுச்சித்தி 455
- பின்னும் ஓசைதரும் 466
- மூட்டுமோகினி 481
- பிற்செயாதனுபவிப்பதின்று 502, 585
- காட்டிக்கண்டிடும் 532
- இத்தைநூயும் 557, 533
- கத்தித்துச் சுழலும் 543
- எவ்விடத்தும் இறைஅடியை 543
- எத்திறம்ஞானம் 552
- கன்மமும் மூலங்காட்டி 581, 553
- யாதொருதெய்வம் 555
- சிவனும் இவன்செய்திஎலாம் 577
- இனிச்செய்கன்மம் 581
- சிவானுபவம் சுவானுபூதி 587
- திருக்கோயிலுள்ளிருக்கும் 615

உயிர்தானும் சிவானுபவம் 623
சித்தாந்தத்தேசிவன் 626

சிவப்பிரகாசம்.

புறச்சமயத் 103
காசோற்பத்தி 120
தன்னாலே தனையறிந்தால் 293
உன்னரிய திருவருளை 293
மாயைமாமாயை 293, 400
கூடுமொளிவளர்குடிலை 341
மணடியஉணர்வுயிர்க்காய் 342, 354
தான்பணியைநீத்தல் 436
கண்ணொளிவிளக்கின்சோதி 498
தன்னாலே தனையறிந்தால் 501
அதிலறிவடங்கி 501
தொல்லையில் வருதல்போல 516
அறிவொளிபோல் 536

சிவதத்துவ விவேகம்.

உலகெலாம்தன 278
செவியுறவாங்கி 278
திருமாலிந்திரன் 278

சிந்தாமணி.

புத்திசேனன் 362
பேதுசெய்து 367

சிவஞானசுவாமிகள்.

செம்புறுகளிம்பென 120

சுவாயம்புவம்.

பொருள்கள்எழு 7

ஞானாமிர்தம்.

ஆணவமுதலன்று (உஉ-வது அகவல்) 120
ஒன்பதாவது அகவல் 212, 256

தருக்கச்சங்கிரகம்.

குடத்தைக்கண்டயானே 170
பெறுதியுள்ளவழியும் 317

தாயுமானசுவாமிகள்.

ஆணவத்தோடத்துவிதம் 237
சாக்கிரமாறுதலில் 249
சுழுத்தியிதயம் 249
அடியெனுமதுவும் 425

திருக்குறள்.

பிறவிப்பெருங்கடல் 13
அருங்கேடன் 63
ஐந்தவித்தான் 137, 407
ஆக்கம்எவனோ 146
விண்ணின்று 146
உறங்குவதுபோலும் 180
எண்ணியஎண்ணியாங் 187
பற்றற்றான் 241
அதன்நன்கலம் 288, 433
மெய்யுணர்தல், அறிவுடைமை 297
அடியளந்தான் 315
அறிவறிந்த 370, 552
அன்பிற்கும் உண்டோ 411
சார்புணர்ந்து 417
முறைகாக்கும் 449
வானோக்கி 470
பொறிவாயில் 518
சினம் என்னும் 522
தனக்குவமை 554
இளைதாக 587
சிறப்புஈனும் 594
சிறப்பு 594
என்னன்றிகொன்றார்க்கும் 621

திருமந்திரம்.

மரத்தைமறைத்தது 43
வேதாந்ததொம்பதம் 474
தொம்பதம் தற்பதம் 474
சிவமாதல்வேதாந்தசித்தாந்தம் 474
வினாவுநீர் பாலாதல் 474
நெறியைப்படைத்தான 555
அன்புசிவம் 594

திருவருட்பயன்.

ஏகன் அநேகன் 120, 228

அகத்துறுநோய்க்கு 398
ஆசினவாநாப்பண் 467
அதிகாரமுறைமை 470
எடுத்துச்சுமப்பானை 577

திருவாசகம்.

இத்தைமெய்யென 196
ஆள்வாரிலி 270,363
அவனருளாலே 285,439
ஈறிலாப்பதங்கள் 293,558.594
மூவராலும் அறியொணு 299
சட்டகோர்பட 460
நான்பாவியன் 555
தெய்வம் என்பதோர் 590

திருவானைக்காப் புராணம்.

வன்மலவேர் (ஞானவுபதேசப் படலம் 19) 238

திருக்களிற்றுப்படியார்.

உன்னுதரத்தே 280
சுரந்ததிருமுலைக்கே 411
ஆற்றலலைகடற்கே 430
உடம்புடைய யோகிகள் 555

திருக்கோவையார்.

உணர்ந்தார்க்கு 297, 552

திருவிசைப்பா.

பந்தமும் பிரிவும் 408
தொண்டனேன் 536
விரும்புமா 536
தொடருமாதொடரே 536

திருவுந்தியார்.

கள்ளரோடில்லம் 447
பெற்றசிற்றின்பமே 555

திருமுருகாற்றுப்படை.

மந்திரவிதியின் 516

திருப்பல்லாண்டு.

சேலுங்கயலும் 598

திருவுருத்திரம்.

ஓர்அறிஉயிர் 599

திருவள்ளுவமாலை.

சங்கறுப்பதெங்கள்குலம் 408

துகளறுபோதம்.

மன்னுமகாரம் 221
அந்தஅருள்உனக்கு 566

தேவாரம்.

வேண்டுவார்வேண்டுவதே 58,111, 550
நொடித்தான்மலை 63
ஈறாய்முதல் 80
அன்றினார்புரம் 170
காண்பாரார் 279
ஆட்பாலவற் 302
இருநிலனாய் 341, 599
வாதுசெய (ஆலவாய்.2) 367
நாகணையான் (கோயில் 9) 367
பெற்றொருன் (கோயில் 11) 367
அருந்துணையை 461
நான்மறக்கினும் 467
விறகிற்றீயினன் 477, 606.
தன்னையடைந்தார் 512
சலமிலன் 512
நீணுலகெலாம் 519
மாசில்வீணையும் 527
உள்குவார்உள்கிற் 550
என்னைஏதும் 570

தொல்காப்பியம்.

ஏனைஎச்சம் 12
செய்யுட்களோசை 50
செயப்படுபொருளை 51
சில்வகைஎழுத்தின் 207
மன்றவென்கிளவி 250
இனைத்தென அறிந்த 340
ஒய்தல் ஆய்தல் 362
வினையியல் 31ஞ்சூத்திரஉரை 496
அன்மைக்கிளவி 508
செயற்கைப்பொருளை 551

ஆக்கம்தானே 551
தெரிநிலையுடைய 595
மற்றென்கிளவி 600

நன்னூல்.

ரவ்விற்கம்முதல் 193
உயிர்வரினுக்குறள் 257
அன்றிஇன்றிஎன் 285
தொகுத்தல்விரித்தல் 528

நாலடியார்.

சூழ்ந்தாழ்ந்தகண் 324
வியர்த்துவெகுளார் 532
தோற்போர்வை 610

நூற்பெயர் விளங்காத மேற்கோள்.

விரும்பும் அருட்பொருளை 258
எல்லாம் சிவமாய் இருந்ததே 525
தெரிமாண்டமிழ்மும்மை 625
திருத்தார்நன்றென்றேன்றியேன் 440

பட்டினத்துப்பிள்ளையார்.

என்னையுங்கண்டேன் 501

பரிமேலழகர் உரை.

உலகிற்குமுதல் ஆதிபகவன் 26
குறை இன்றியமையாமைப் பொருள் 406

பகவத்கீதை.

யானே உலகெல்லாமாயினேன் 101

பராக்கியை.

பொருள்கள் ஐந்து 7

புறநானூறு.

கறைமிடறணியலும் 321

பெரியபுராணம்.

எல்லை இல்லவன் 522
தூயவெண்ணீறு 597
சிந்தையிடையறு அன்பும் 597
கண்டகவுணியக்கன்றும் 597

போற்றிப்பஃறொடை.

32வது அடி 256
61வது அடி 403

பௌட்கரம்.

பொருள்கள் ஆறு 7

மிருகேந்திரம்.

பொருள்கள்மூன்று 8

வாதுளாகமம்.

உலகம் அவனுருவில் 55, 106

வினாவெண்பா.

காண்பானும் காட்டுவதும் 498

வேதம்.

ஒன்று என்பதன்பொருள் 94
சுவர்க்கம் வேண்டினேன் 394

முன்னோர்மொழி அட்டவணை.

கண்டு கேட்டு (திருக்குறள் 111-ம் அதி) 280
முன்னுடம்பு இறக்குங்கால் (பரிமேலழகர் உரை அவாவறுத்தல் செ-1) 127, 386

வழக்ச்சொற்கள் அட்டவணை.

அரசன் எடுத்தஆலயம் 403
அரிசிதானேபாகமாயிற்று 403
இராகுவினதுதலை 163
இவனும் இவளும் சிற்றிலிழைத்தும் சிறுபறையறைந்தும்விளையாடுப 171
ஈந்துபுகழ்பெற்றான் 376
உண்ணவந்தான் 388
குடத்தைக்கண்டயானே அதனைத் தீண்டினேன் 170
சார்ந்தாரைக்காத்தல் தலைவர் கடன் 509
நள்ளார்க்கு நஞ்சொத்து நட்டார்க்கு அமிழ்தொக்குமிவன் 493
மழைபெய்யக்குளம்நிறைந்தது 492, 270, 314
யான் எம்மூர்புகுவன் நீநும்மூர் புகுவை 272
யான் இப்பொழுது அசத்தனாயிருக்கின்றேன் 294
யான் இதனை அறிந்தேன் அறிகின்றிலேன் 294, 475
வேம்புதின்றபுழு 468

அலங்கார அட்டவணை.

உவமை.

அகரமும் ஏனைஅக்கரங்களும் 95, 145
அப்பணைந்த உப்பு 567
அரக்கும் கற்பொடியும் 99
அரசன் 108, 202, 243, 267, 269, 346, 377, 507, 555
அரவுதோலுரித்தல் 136
ஆலயமும் இரதவீதிமுதலியனவும் 383
இருளும் வெளியும் 83
உடலும் உயிரும் 91, 612
உயிரின் அறிவும் கண்ணொளியும் 612
கடலும் அலையும் 219, 215
கடலும் நீரும் உப்பும் 368
கண்ணாடிநிழல் 349
கண்ணும் அருக்கனும் 612
கண்ணும் ஒளியும் 266
கனலும் இரும்பும் 474
கனாக்காட்சி 304
காட்டமும் அக்கினியும் 474, 603
காந்தமும் இரும்பும் 112,260,563
காலமும் கனவும் 61
கானல்நீர் 304
குடாகாயமகாகாயம் 136
குணமுங்குணியும் 612
சூரியனும் இருளும் 344, 519
சூரியனும் ஒளியும் 145
சூரியனுந்தாமரையும் 117
சூரியனும் நட்சத்திரமும் 280
சொல்லும் பொருளும் 83
நாடலை 11
நிலமும் முளையும் 54
நீரிலெழுத்து 304
நீர்நிழல் 408
நீர்ப்பாசி 429
பசித்துண்டபின்னும்பசிப்பவன் 389
பசியும் உணவும் 366
பண்ணும் ஓசையும் 97
பழமும் இரசமும் 97
பாலிலும் தயிரிலும் நெய் 398,600
பால்உணவும் மருந்துமாதல் 579
புருடன் நனஉடலை நீக்கிக்கனஉடலைச் சேரல் 136

பெருங்காயம் இருசுபாண்டம் 513, 583
பொன்னும் பணியும் 83
மலரும் மணமும் 359
மாணுக்கனும் பாடமும் 388
யோகிகள்வேறுடலைப்புகுதல் 136
வளர்பக்கத்துச்சந்திரனும் இருளும் 565
விளைநிலமும் உழவுத்தொழிலும் 110
விறகும் அக்கினியும் 235
வேட்டைவாழியும்புழுவும் 58

உருவகம் 366, 378 517
எடுத்துக்காட்டுஉவமை 117, 410, 460, 563
ஒட்டு 428
சொற்பொருட்பின்வருநிலை 71, 114, 449, 546
தொகைஉவமம் 147, 424

இலக்கண அட்டவணை.

அ

அத்துவிதி-பயனுணர நின்ற குறிப்புப்பெயர் 612
அருளிய-வினையெச்சம் 12
அல்லது-வினையெச்சக்குறிப்பு முற்று 289
அல்லான்-முற்றெச்சக்குறிப்பு 612
அறியாய்-விளியுருபேற்றபெயர் 302

ஆ

ஆங்கவை-ஒருசொல் 264
ஆமங்கு-பெயரெச்சமுடிபு 52
ஆருவது-பண்பின்கிழமையும் உணர்ச்சிக்கிழமையும் 491
ஆனுன்-பெயர் 605
ஆன்-உடனிகழ்ச்சி 267

இ

இதமித்தல்-பெயரடியிற்பிறந்த வினைப்பெயர் 520
இடவழுவமைதி 395, 508
இரண்டல்லன்-முற்றெச்சம் 327
இருத்தல-பிறவினைத்தொழிற் பெயர் 602
இலயித்த-பெயரெச்சம் 51
இல்லா-முற்றெச்சக்குறிப்பு 411
இல்லார்-பண்படியிற்பிறந்தவினைப்பெயர் 12
இவ்அவ்-பன்மைசுட்டுப்பெயர் 218
இன்-உவமஉருபு 63
இன்றி-எச்சக்குறிப்பு, சாரணம் 101, 285, 520

உ

உணர்ப-அஃறிணைப்பன்மை பெயர்ச்சொல் 318
உபலக்கணம் 130, 264, 309, 383, 446
உருபும்பொருளும் உடன்றொக்கன 204
உர்-குறுக்கல்விகாரம் 440
உளதுஅன்று-தன்மைபற்றிவந்தன 605
உறுப்பு-ஆகுபெயர் 92

ஊ

ஊரா-எதிர்மறையெச்சம் 440

எ

எவனென்னும் வினவினைக்குறிப்புச்சொல் 146, 446
என்றதை-ஐயீற்றுடைக்குற்றுகரம் 612

ஏ

ஏகாரம்-ஏழாம்வேற்றுமை 111, 257, 428

ஒ

ஒடுக்கம்-ஆகுபெயர் 173

ஒடுங்கி-பெயர் 24
ஒடுங்கின-பெயரெச்சம் 42
ஒட்டி-பெயர் 92
ஒட்டி-வினையெச்சம் 92
ஒப்பில் என்னும் வினையெச்சம், மருவுவன் என்பதுகொண்டு முடிந்தது 394
ஒற்றுஇல்வழிஒற்றுவந்தது 225

ஓ

ஓகாரம்-தெரிநிலை 445
ஓதாரோ-எதிர்மறை 35

க

கண்டும்உம்மை-சிறப்பு 36

கா

காண்மாயை-செயப்படுபொருளோடு முடிந்தவினைத்தொகை 584

கூ

கூட்டானே-எதிர்மறை 59

ச

சங்காரங்-ஆகுபெயர் 42, 65
சங்காரம்-இடப்பெயர் 42
சந்தித்தது-வினையெச்சமுற்று 203

சா

சார்ந்து என்னும் வினையெச்சம் அடியாரென்னும் வினைக்குறிப்பு முற்றுப்பெயர்கொண்டது 510

செ

செயப்படுபொருளைச் செய்தது போலக் கூறியது 51
செவ்வெண் 180,214,362,543

த

தன்-இடப்பெயர் 51

தி

திதி-செயப்படுபொருட்பெயர் 24
திதியாகும்-வினைமுற்று 35
திதியும்ஆதியும்-ஆகுபெயர் 51

நா

நாடி-முன்னிலைஏவல் 434

நி

நிலஒங்காரம்-வினைத்தொகை 225
நிற்பது-தொழிற்பெயர் 180
நின்று-காரணப்பொருட்டாய வினையெச்சம் 204

நே

நேர்-எழாம்வேற்றுமை 560

பா

பால்வழுவாகாமை 272, 327, 374

பூ

பூதாதி-அன்மொழித்தொகை 35

பொ

பொன்-ஆகுபெயர் 147

போ

போகமாயினான்-ஏகமாயினான்பெயரடையும்எதுப்பொருளும் 549

ம

மறந்தாய்-விளியுருபேற்றபெயர் 279
மற்று-வினைமாற்று 235, 347, 352 516, 573
மற்று-உரையசை 600

மீ

மீண்டு-எச்சத்திரிபு 176

மு

முதனிலைத்தொழிற்பெயர் 51,137 324,362,440,610
முன்பின்னாகத்தொக்கநிலை 519

வா

வான்பான்பாக்கு - தொழிற்பெயர்விகுதி 566

வி

விடயியார்- பெயரடியிற்பிறந்த எதிர்மறைவினை 543
விரித்தல்விகாரம் 193
விளையாது-வினையெச்சமறை 370
வினை-ஆகுபெயர் 130
வினை - பால்பகாஅஃறிணைப் பெயர் 595

தருக்க அட்டவணை.

அநுமானப்பிரமாணம் 31, 154, 200, 277, 355, 543, 550

அருத்தாபத்திப்பிரமாணம் 92, 183, 385, 443, 568

ஆகமப்பிரமாணம் 277

பாரிசேடப்பிரமாணம் 114, 363

நியாய அட்டவணை.

அநுவாதம் 142, 160, 203, 207, 255, 310, 516, 593, 608

அவ்வளவின்மகிழுச 186, 187, 378

அலாருந்ததி 257, 335

உத்தி அட்டவணை.

இரட்டுறமொழிதல் 16, 80, 85, 101, 274, 300, 304, 481, 578

உடம்பொடு புணர்த்தல் 28, 67, 273, 452, 582

உரையிற்கோடல் 63

ஏற்புழிக்கோடல் 265, 508, 577

மாட்டெறிதல் 200, 467

முடிந்தது முடித்தல் 72

அருஞ்சொற்பொருள் அட்டவணை.

அ

அகம்-உயிர் 127

அகச்சமயம்-பாடாணவாதசைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம், சிவசங்கிராந்வாதசைவம், ஈசுர அவிகாரவாதசைவம், சிவாத்துவிதசைவம் என்ஆறு 16

அகண்டம்-எல்லாம் 611

அகப்புறச்சமயம்-பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம, ஐக்கியவாத சைவம் எனஆறு 16

அக்கி-அக்கினி 603

அங்கு-சங்காரக்கடவுள் 52

அங்கு-அதுபோல 92

அசத்து - முக்காலத்தும் ஒருதன்மையாயிராதது 294

அசத்தின்மை-சத்தாந்தன்மை 351

அசேதனப்பிரபஞ்சம்-பாசமும் உலகமும் 31

அச்சு.மெய்ப்பொருளாகியசிவம் 513

அஞ்சனம்-இருள் 238

அஞ்ஞானம்-மயக்கம் 368, 401, 503

அஞ்ஞானம்-சிற்றுணர்வு 468

அஞ்ஞானம்-விபரீதவுணர்வு 581, 583, 589

அடைவு-முறைமை 109

அணு-சூக்குமஉடம்பு 132

அணடன்-முதல்வன் 461, 471

அதிகரணம்-மேற்கோள், ஐயம், பிறர்கூறும் பக்கம், மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு, உதாரணம்என்னும் ஐந்தின் நிலைக்களம் 26

அதிட்டித்தல்-கர்த்தாஒன்றினிடமாக நிற்றல் 263
அது-அப்போது 253
அது-சுத்தாவத்தை 253
அத்தன்-இறைவன் 52
அத்துவிதம்-இருபொருள்களின் பிரிக்கமுடியாதகலப்பு 87,534,536
அத்துவிதி-அத்துவிதசித்தாந்தத்தைப் பெற்றுடையோய் 611
அநுபலத்தி-இல்லையென்று அறியும் அறிவு 299
அநுபவஅறிவு-திருவருளால் சிறப்பியல்பைஅறிவது 6,340
அநுவாதம்-முன்கூறியதை பிறிதொன்றுகூறுவதற்காகப்பின்னும் எடுத்துக்கூறல் 142,160, 203,207,255,311,516,593,608
அநேகம்-வேறு 141
அந்தக்கரணம்-அகத்தேயிருக்கும்கருவி 207
அந்ததரம்-சித்தாந்தமகாவாக்கியம் 429
அந்ததரம்-வேதாந்தத்தெளிவாகியசைவசித்தாந்தம் 624
அந்தம்-சங்காரக்கடவுள் 22
அபரஞானம்-நூலால்நிகழும் ஞானம் 7
அப்பிரகாசம்-விளக்கமின்மை 300, 343, 598
அப்பிரகாசம்-அசித்து 208
அப்பிரகாசம்-சூனியம் 311
அமைதல்-அறிதல் 539
அயராமை-மறவாமை 524
அயன்-பிரமன் 223
அரசு-அரசன் 199, 268
அரவு-பாம்பு 134
அரு-சத்து 359
அருக்கன்-சூரியன் 560
அருத்தாபத்திப்பிரமாணம்-சம்பவியாமையைக்கொண்டுபொருள் நிர்ணயிப்பது 92,183,388 443, 568
அருவுடம்பு-சூக்மதேகம் 245
அருவுயிர்-பிரளயாகலர், விஞ்ஞானகலர் 66
அருளிய-அருளுதற்பொருட்டு 12
அருள்-திரோதானசத்தி 260
அருள்—இரக்கம்,சிற்சத்தி 282,ஷை
அருள்-திருவடி 315,377
அர்ப்பணம்-ஒப்புவித்தல் 555
அலர்த்துதல்-விரியச்செய்தல் 560
அல்லன-வேறு 212
அல்லிருள்-இரவின்கண்ணுள்ள நெருங்கிய இருள் 560
அவசித்தாந்தம்-சித்தாந்தம்அல்லாதவற்றைச் சித்தாந்தம் என்றல் 342
அவயவப்பகுப்பு-வேறுவேறாதல்30
அவாய்நிலை-ஒருசொல்தன்கருத்தை நிரப்புதற்குப் பிறிதொருசொல்லைஅவாவிநிற்றல் 23, 77,126, 130,280, 353,451,509, 516, 625
அவிச்சை-மயக்கம் 403
அவித்தை-அறியாமை 238
அவினாபாவம்-விட்டுநீங்காமை 43, 54, 142, 505
அவினாவிருத்தி-விட்டுநீங்காமை568
அவை-தொகுதி,கூட்டம் 23,51,68
அவ-அவற்றின் 215
அவ்வவ-அந்தஅந்த. 253
அவ்வளவின்மகிழ்தல்-பெற்றதுகொண்டுபெறவேண்டியதைச் சிந்தியாதுமகிழ்தல் 186,187,378

அறிந்தாங்கு-அறிந்தவாறே 187
அறிவறியாமெய்-மெய்ப்பொருள் 315
அற்புதம்-சூனியம் 455
அற்றம்-சோர்வானசமயம் 584
அனுபவித்தல்-அறிந்தபொருளில் அழுந்துதல் 552
அனுமானப்பிரமாணம்-எதுதிருட்டாந்தங்களால்பொருளைநிர்ணயிப்பது 31,154,200,277 355,543,550
அன்மொழித்தொகை-கூறப்பட்டமொழிகட்குவேறாயமொழிதொகையாயிருத்தல் 35
அன்று-அதற்குரியகாலம் 33
அன்று-அநாதி 76,114
அன்றும்-மாறுபடும் 170
அன்னியநாத்தி-பிரிக்கமுடியாமை 86
அன்னியமின்மை-பிரிக்கமுடியாமை 373, 398, 558

ஆ

ஆக-தற்பொருட்டு 388
ஆகந்துகம்-இடையேவந்துகூடியது 228
ஆகாமியம்-மனவாக்குக்காயங்களால் ஈட்டப்படும்நல்வினைதீவினைகள் 121
ஆக்குதல்-படைத்தல் 63
ஆதி-முதற்கடவுள் 22
ஆதி-பிரமன் 51
ஆதிதைவிகம்-தெய்வமுன்னிலையாகவருவது 121
ஆதிபௌதிகம்-பூதம்முன்னிலையாகவருவது 121
ஆதியான்மிகம்-உயிர்கள்முன்னிலையாகவருவது 121
ஆயாது-அறிவதில்லை 232
ஆயிட்டு-ஆகலான் 89
ஆயிழை-நுணுகியபொருள்களையுடையநூல் 350
ஆய்-போல 576
ஆய்-நுணுகிய 350, 509
ஆய்தல்-ஆராய்தல் 182,302,316,461
ஆய்தல்-நிச்சயித்தல் 218
ஆராய்ச்சி அறிவு-அனுமானபிரமாணத்தால்பொதுவியல்பையறிவது 6
ஆரும்-கூடும் 509
ஆலம்பம்-ஆதாரம் 454
ஆவிருதி-மறைத்தல் 238
ஆவேசம்-தன்னைமறந்துஆவேசிக்கப்படும்பொருளாய்நிற்றல் 399
ஆள்-அடிமை 474
ஆறு-முறைமை 76,134,303,422, 435,461,484,490,524,575
ஆறுசென்றவியர்-வழிநடத்தலால்உண்டாய்வியர்வை(ஆறு வழி) 533
ஆற்றல்-வலிமை 180
ஆனாமை-நீங்காமை 455
ஆன்மசத்தி-தன்செயல்நீத்தல் 436
ஆன்மா-வியாபகம், சித்தசித்து 201
ஆன்மாச்சிரயம்-தன்னைப்பற்றுதல்என்னும்குற்றம் 319,547

இ

இங்கு-பெருங்காயம் 513
இசைத்து-கூறி 389
இசைத்து-சமப்படுத்தி 339
இசையெச்சம்-ஒழிந்த சொற்கொண்டு பொருள்உணரநிற்பது 368
இடைப்பிறவரல்-இடையேபிறசொற்கள்வருதல் 513
இணங்குதல்-நட்புச்செய்தல் 588

இணை-இரண்டு 10,547
இதமித்தல்-பற்றுச்செய்தல் 519
இதம்-பற்று 519
இந்து-சந்திரன் 474
இயந்திரம்-சூத்திரப்பாவை 192
இயற்பெயர்-இயல்பாயுள்ளபெயர் 613
இயல்பாய்-கேட்டமுறைமையே 629
இயற்கையுணர்வு-தானாகஅறியும்அறிவு 344
இயைந்து-கூடி. 13, 98
இரட்டுறமொழிதல்-ஒருசொல்லைஇரண்டுபொருள்படக்கூறல் 16,80,85,100.274 300, 304,481,578
இரண்டு-வேறு 316,325
இரித்து-கலைந்து 570
இருக்கு-வேதம் 93
இருட்கண்-மலத்தால்உண்டாம் அறியாமை 560
இருபெயரொட்டுப்பண்புத்தொகை-இரண்டுபெயர்ச்சொற்கள்சேர்ந்துநிற்பபண்புதொக்குநிற்பது 612
இருமடியாகுபெயர்-ஒருசொல்லின்ஆகுபெயர் பிறிதொரு ஆகுபெயர்ப்பொருளைஉணர்த்திநிற்றல் 171
இருவினை-புண்ணியபாவம் 105
இருவினையொப்பு-சுகதுக்கங்களில் சமபுத்தி 393
இலக்கணவாக்கியம்-இயல்பாயுள்ளதன்மையைஎடுத்துக்கூறும்வாக்கியம் 578
இலாடம்-புருவநடு 253
இலேசாற்கொள்ளுதல்-ஏகதேசவிதியாற்கொள்ளுதல் 516.572
இல்லாஅரு-புலப்படுதலில்லாதஅரு 408
இல்லென்று-அடங்கி நிற்கச்செய்து 492
இல்லை-அமையாமை 142
இவ்-இவற்றின் 215
இழுத்தல்-அறியச்செய்தல் 565
இழை-சாத்திரம் 359
இறப்பில்தவம்-சரியையாதிகள் 389
இன்மை-விளங்காமை 344
இன்றிந்நூல்-இந்நூல் 624
இன்றியமையாமை-இல்லாதுமுடியாமை 6,268,383
இன்று-இன்மைப்பண்பு 95
இன்று சூனியம் 274,287
இன்று-அசத்து 305
இன்று-விளங்காமை 600

ஈ

ஈட்டுதல்-சம்பாதித்தல் 505
ஈண்டிய-கூடிய 2

உ

உடங்கு-ஒருங்கு 13,98
உடம்படுபித்தல்-பிறிதொருபொருளைத்தன்னுள்அடக்கியிருக்கும்வாக்கியத்தைஅடுப்பித்துக்கூறல் 469
உடம்பொடுபுணர்த்தல்-ஒருவாக்கியத்தில் அதற்குரியசெம்பொருளையன்றிக்குறிப்பாற்பிறிதொருபொருளைப்புணர்த்திவைத்தல். (வாக்கியம்-உடம்பு) 28,67,273,452,582
உடனிகழ்ச்சி-ஒன்றுநிகழுங்காலத்துப்பிறிதொன்றும்உடனிகழ்தல் 267,550
உடைமை-உடையதாந்தன்மை 13, 142, 471, 505

உணர்தல்-பாவித்தல் 461
உணர்த்தும்முறைமைத்தானம்-புருவநடு 190
உணர்ப-உணர்வன 316
உணர்வது-அநுபவிப்பது 544
உண்டல்-விளங்குதல் 603
உண்டி-இன்பத்துன்ப அநுபவம் 178
உண்மைச்சிவபுண்ணியம்-முத்திகாரணமாகச்செய்வது 382
உத்தமன்-முதல்வன் 461
உந்துதல்-கடைதல் 474
உபதேசி-அறிவிக்க அறியும்தன்மையுடையது 186, 356
உபராகம-கிரகணம் 475
உபலக்கணம்-ஒன்றுதனக்கினமானபிறவற்றையும் தெரிவித்துநிற்பது 130,264,309,383,446
உபலத்தி-உள்ளதென்று உணரும்உணர்வு 299
உபாயச்சிவபுண்ணியம்-உலகப்பொருளைநோக்கிச்செய்வது 382
உயிர்த்தல்-தொழிற்படுதல் 181
உயிர்ப்ப-உயிர்ப்பன 176
உராவல்-உலாவல் 434
உரு-அசத்து 359
உருஉடம்பு-தூலதேகம் 245
உருஉயிர்-சகலர் 66
உருவகம்-உவமானத்தைஉபமேயமாகக்கூறுதல் 366,378,517
உரையசை-உரையினிடத்துப்பொருள்பயவாதுவரும்அசை 600
உரையிற்கோடல்-மூலத்தில்இல்லாதஇனமானசொல்லைஉரையிற்கொள்ளல் 63
உலகு-உயர்ந்தோர் 287
உலைவு-கேடு 422
உளதாதல்-தோன்றுதல் 125
உளம்-புருடத்துவம் 219
உளம்-மனம், சங்கற்பம் 63
உளி-இன்னுருபு 513
உள்கிற்றை-கருதியவற்றை 546
உள்குவார்-கருதுவார் 546
உள்ளந்தக்கரணம்-கலைமுதலியவித்தியாதத்துவம் 207
உள்ளம்-உயிர் 90,212,215,232,253,260,268,274,368,404,422,446,471.492,524,544, 546,567,571
உள்ளம்-தேர்ச்சியறிவு 446, 546
உள்ளம்-சூக்குமஉடம்பு 137
உள்ளல்-அறியமாட்டா 171
உன்னில்-ஆராயின் 164

ஊ

ஊரா-ஊரப்படாத 434
ஊர்தல்-செலுத்துதல் 517
ஊனக்கண்-பசுஅறிவு 434
ஊனம்-குறை 434
ஊனம்-பொதுவியல்பு 461

எ

எடுத்தலோசை-உரத்துக்கூறுதல் 608
எடுத்துக்காட்டுஉவமை-உவமானம்உவமேயம்இரண்டினும் ஒத்ததருமத்தைஎடுத்துக்காட்டல் 117,410,450,563
எண்ணம்-மானதகாட்சி 225
எண்ணி-ஆராய்ந்து 312
எண்ணுதல்-அநுபவித்தல் 280
எந்தை-எம்தந்தை 629
எவற்று-எவ்விடங்களினும் 146
எவனும்-எத்திறப்பொருளும் 146
என்-எவ்வியல்பினர் 446
என்-என்று 404
என்மனார்-என்றுசொல்லுவோர் 18

என்ன-போல 474

என்ன-என்றுகண்டுசெழித்து 458

ஏ

ஏகம்-ஒற்றுமை 546

ஏத்துதல்-அருள்வழிநிற்றல் 556, 629, 630

ஏந்திழை-தாங்கியஆபரணமுடையாள் 408

ஏய்உளம்-பொருந்துதற்கு உரிமைஉடையஉயிர் 370

ஏய்ந்து-இயைந்து 282

ஏலா-ஏற்கமாட்டா 519

ஏற்புழிக்கோடல்-பலபொருட்குரியஒருசொல்வருமிடத்தில்அவ்விடத்துக்கேற்றவாறுபொருள்கொள்ளுதல் 265, 508, 577

ஐ

ஐந்துகந்தம்-உருவம், வேதனை, ஞானம், குறி, வாசனை 194

ஐந்துகலை-நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்திஅதீதை 19, 222

ஐம்புலன்-சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் 150, 517

ஐம்பொறி.மெய், வாய், கண், மூக்கு, செவி 429

ஐவகைப்பாசம்.ஆணவம், கன்மம், மாயை, திரோதானம், மாயாகாரியம் 118

ஒ

ஒடுக்கம்.நித்திரை, சுழுத்தி 179

ஒடுக்கம்-சொப்பனம் 172

ஒடுங்கி.விளங்காது 570

ஒடுங்கி.ஒடுங்குதற்குநிலைக்களமானகடவுள் 18

ஒட்டு.ஓர் அலங்காரம், அதாவது கருதப்பட்ட பொருளைக்கூறாது அப்பொருளை வெளிப்படுத்தற்குரிய உவமானத்தைக்கூறி அதனைஒட்டி உவமேயத்தைஅறியும்படிவைத்தல் 422

ஒட்டுதல்.பொருந்துதல் 92

ஒண்.பிரகாசம் 461

ஒண்குரு.அநுபவமுடையகுரு 624

ஒருவ.நீங்க 434

ஒன்ற,பொருந்தா 567

ஒன்றின்.ஒருங்கிஆராயின் 188

ஒன்றின்.பொருந்தின் 567

ஒன்று.அத்துவிதம் 236

ஒன்று ஒப்பற்றபரம்பொருள் 68, 314, 544

ஒன்றொன்று.ஒவ்வொருகாலவிசேடம் 35

ஓ

ஓசை.இசை 95

ஓர்பவர்.உணர்பவர் 517

க

கஞ்சுகம்.சட்டை 201

கடல்.நீர்தங்கும்இடமாகியவெளி 371

கட்டு.பந்தம் 59

கட்டும்.பிணிக்கப்படும் 90

கட்டுரை.உறுதிமொழி 233, 369

கண்.கருதியுணர்தல் 2

வண்.சட்சுதீட்சை 624

கண்.துணை 274

கண்ணும்.அறிவாம் 474

கண்டு.படைத்து 62

கண்டு.அநுபூதியில்அறிந்து 2

கண்ணழித்துரை.பதச்சேதம்செய்துகூறும்உரை.(கண்-கணு. அதாவது சொற்களின்சந்தி) 21

கண்ணி.கருதி 312
கண்ணிய.அறிவதாகிய 583
கண்படில்.உறக்கத்தில் 177
கண்படை.உறக்கம் 178
கதம்.கோபம் 519
கப்பு.கவர்ச்சி 567
கழல்.காலில் அணிந்திருக்கும் மணிவடம் 428, 567
கழீஇ கழுவி 574

கா

காட்டம்.விறகு 603
காட்டாக்கி.காஷ்டாக்கினி 474
காட்டிய.காட்டப்பட்டுக் காணகின்ற 446
காட்டிற்றை.காட்டியதை 414
காட்டு.காண்பித்து 446
காட்டு.துணை 182, 321
காண்க.அறிக 440
காமக்கிழத்தியர்.விலைமகளிர் 596
கான்மியம்.மூலகன்மத்தின்சம்பந்தம் 579,580,583

கு

குடாகாயம்.குடகுத்தில் அடங்கியவெளி 136
குண்டலித்தானம் உந்தி 471
குறிப்புமொழி.குறிப்பினால்பொருள்உணர்த்தும்மொழி 449
குறிப்புருவகம் உவமேயத்தை உருவகம்செய்யாது அதன் தொழிலைமட்டும் உருவகஞ்செய்தல் 578,594
குறிப்பெச்சம் பொருள் குறிப்பாகக்கொள்ளும்படி எஞ்சிநிற்பது 15,55,59,100,263, 284,362,562
குறிப்பேது.ஏது குறிப்பாகஅடங்கிக்கிடப்பது 42,49
குறிப்பேதுவாய் நின்றபெயர். ஏதுகுறிப்பாக அடங்கிக்கிடக்கவரும்பெயர் 160, 546
குறுக்கல்விகாரம்.நெடில் குறிலாய்வருதல் 438
குறை.இன்றியமையாமை 404

கே

கேசரம் பூந்தாது 478
கேவலம்.கருவிகளோடுகூடாத நிலை 258

கொ

கொண்மூ.மேகம் 570

கோ

கோட்டம்.அநீதி 509
கோதண்டம்.புருவநடு 471
கோழை.ஐ,சிலேட்டுமம் 445

ச

சகசம்.அனாதியேகூடியது 227
சகலகேவலம்.சகலர்க்குரியகேவலம் 330
சகலம்.கருவிகளோடுகூடியநிலை 258
சகலர்.கலையோடுகூடியவர் 401,429
சகன்.சகக்கடவுள் 404
சங்கமர்.சிவபத்தர் 603
சஞ்சிதம் மாயையிற்கட்டுப்பட்டிருக்கும் இருவினை 121
சதசத்து.உயிர் 519
சத்திநிபாதம்.திருவருட்சத்திபதிதல் 394
சத்து.முக்காலத்தும் ஒருதன்மையாயிருப்பது 294
சட்ட.செப்பம் 458
சந்நிதி.சத்திசங்கற்பம் 279
சமவாயம்.நீக்கமின்றிநிற்றல் 140
சமவேதம்.சமவாயசம்பந்தத்தில் இருப்பது. அதாவது நீக்கமின்றிநிற்பது 79, 140

சவிகற்பம்.விகற்பத்தோடுகூடிது 220, 350
சலம்.வஞ்சனை, அநீதி 509
சலித்தல்.வேசறுதல், இளைத்தல் 563
சன்மார்க்கம்.ஞானநெறி 383
ஜம்.தோன்றுதல் 55

சா

சாதாரம்.ஆதாரத்தோடு கூடியது 404
சாதி.ஒருகூட்டத்துக்குப்பொதுவாயுள்ளதன்மை 35,154,280
சாந்நித்தியம்.கூட்டம் 603
சார்ச்சி.சார்தலின் 520
சானம்.தியானம் 461, 471

சி

சிங்கநோக்கு.முன்னும்பின்னும்நோக்கும்நோக்கு 81
சித்தசாதனம்-சித்தித்ததைச்சாதிப்பது 174, 471
சித்தாந்தமகாவாக்கியம்.ஸ்ரீபஞ்சாக்கரம் 474
சித்தாந்தம்.முடிந்தமுடிபு 432
சிந்தை அறிவு 434, 624
சிந்தை.இதயபங்கயம் 475
சிவஞானபோதம்.ஆகமங்களின்பொருளொற்றுமையை நிர்ணயித்துஉணர்த்துதல் 7
சிவஞானம்.ஆகமஉணர்வு 7
சிவதரிசனம். சிவனருள்விளங்கல் 436
சிவம்.சித்து 292,325,429,474,624
சிவப்பேறு.சிவனையடைதல் 484
சிறப்பு.அன்பு 591
சிறை.தடை 422

சீ

சீப்புண்ணீர்,இரத்தம் 445
சீபாதம்.திருவடி 419,490,524,556
சீவனம்.தொழிற்படுதல் 180

சு

சுட்டறிவு.கருதிஅறியும்அறிவு 297, 458
சுத்தம்.கருவிகளில்லாமை 259
சுருக்குச்சுருவம்.யாகத்திற்குரியநெய்த்துடுப்புக்கள் 473

சூ

சூழ்.உபதேசமொழி 404
சூழ்.சூழ்ச்சி,நுண்ணறிவு 386
சூனியம் உள்ளதுமன்று,இல்லதுமன்று, உள்ளதும் இல்லதும்அன்று எனப்படும்பாழ் 157,334,342

செ

செம்மலர்.செந்தாமரைப்பூ 574
செயர்கையுணர்வு.துணையால் அறியும் அறிவு 344
செய்.விளைநிலம் 109
செய்பவர்.உழவர் 109
செருக்கு.மயக்கம் 490
செல்லும்.அணையும் 571
செவ்விது.வருத்தமின்றி 174
செவ்வெண்.உம்மைபெறுதுபெயர்மாத்திரையாய்நிற்பது 180, 214, 362, 543
செழும்புனல்.தேக்கம்மிகுதிப்பட்டநீர் 422
செறியும்.நிகழும் 404

சே

சேடசேடியபாவகம்.அடிமையும்முதல்வனும்என்றபாவனை 472
சேடம்.தனித்துநில்லாமை,அடிமை 471, 567
சேட்டித்தல் தொழிற்படுதல் 505

சேர்வை.சேர்ச்சி,சேர்க்கை 531
சேதனப்பிரபஞ்சம் உயிர் 31, 70

சை

சைதன்னியம்.மாசுதீர்ந்தது 398

சொ

சொல்லெச்சம்.பொருள்கொள் ளுதற்குரிய இனமானசொல்எஞ்சிநிற்பது 36,130,263 280 446,508,602,605,612
சொற்பொருட்பின் வருநிலை-முன்னர்வந்தசொல்லும்பொருளுமேபின்னரும்வருதல் 71, 114, 449, 546

சோ

சோகம். கூம்புதல் 114

ஞா

ஞாதிரு-உயிர் 491
ஞானக்கண்-திருவடிஞானம் 434, 440
ஞானம்-திருவடி 434
ஞானம்-சாதனஅறிவு 380
ஞானம்-அறிவு 491
ஞானம்-பதிஞானம் 378,434,450, 468,581,615

ஞே

ஞேயம்-அறியப்படும்பொருள் 491

த

ததி-தயிர் 600
தமி-தனித்தமுதல்வன் 260,316
தர்ப்பணம்-கண்ணடி 157
தலை-இடம் 2
தலைவர்-உத்தமர் 509
தவர்-தவமுடையார் 603
தவலோகம்-சாலோகாதிபதம் 386
தவம்-சரியையாதி 373, 378, 386, 595
தற்கிழமை - தன்னேடொற்றுமைஉடையது 165
தற்பரம்-தனக்குஅதீதமாகிய சிவம் 157, 455
தனதுஉரு-திருநீறுகண்டிகை 600
தனி-வேறு 157
தனி-தனித்த 455
தனு-உடல் 150,192,194,232,505
தன்-சிவனருள் 316, 444
தன்-உயிர் 232,273,419,194,260, 461,483,492
தன்-சிவன் 318,600,619
தன்-தலைவன் 13,444,560

தா

தாதாத்மியம்-ஒற்றுமையாய்க் கலந்துநிற்றல் 119,148,535
தாதாத்மியசத்தி-பரை, ஆதி (திரோதானம்) இச்சை,ஞானம், கிரியையென ஐந்து 119,148
தாவரவடிவு-சிவலிங்கம் 603
தாற்பரியம்-சொல்லுவோன்அபிப்பிராயம் 93,163,178,186 189,610
தாள்-அருள் 312,377.425,439, 478, 574
தானுச்செய்து-தன்போலச்செய்து 509,619
தானேயாம்-வேறுநிற்றல் 101

தி

திதி-நிலைத்தல் 27, 33
திதி-விட்டுணு 51
திதி-உள்பொருள் 24
திருவடியடைதல்-பிரிப்பின்றி நிற்றலையறிதல் 377
திரோதானம்-மறைத்தல் 118,261, 264
திறல்-வெற்றி 517

திறம்-கொள்கை 591

து

துணிதல்-அறிதல் 218
துதைந்த-நெருங்கிய 597
துமிய-கெட 2
துய்யாமை-அநுபவிக்கமாட்டாமை 364
தூக்கும்-கெடுக்கும் 514,563
துனை-அதிவேகம் 434

தூ

தூலாருந்ததிநியாயம்-தூலமான பெரிய நட்சத்திரத்தைக்காட்டிச்சூக்குமமான அருந்ததி நட்சத்திரத்தைக்காட்டுதல் 257, 335
தூங்குகை-துதிக்கை 269

தை

தைவம்-தேவனதுஉடைமை 415, 458,611,619
தைவரல்-தடவுதல் 597

தொ

தொகைஉவமம்-உவமானம்உவமேயம்இரண்டினும்பொதுத்தர்மம்தொக்குநிற்றல் 147,424
தொழும்-வழிபடுவேன்,வழிபடுக 574, 611,615,629
தொழும்பு-அடிமை 68
தொன்மை-அநாதி 114

தோ

தோற்றிய-பிறவினை 23
தோற்றுவாய்-ஆரம்பம் 160,288
தோன்றிய-தன்வினை 23

ந

நசித்து கெட்டு 567
நட்டார்-சிநேகர் 493
நண்ணனல்-அனலினருகு 517
நற்சார்பு-உயர்ந்தகுலம் 386
நள்ளார்-சிநேகமில்லாதபகைவர் 493
நன்மை-முத்தி 383
நன்னெறி நன்மைக்குஏதுவாகிய நெறி 383
நன்னெறி.ஞானம் 380

நா

நாடி.அநுமானத்தால்அறிந்து 7,444
நாடி.தேடி 615
நாண்மீன்.நட்சத்திரம் 280
நாதம்.சிவதத்துவம் 219,478
நாத்தி.இன்மை 86
நாளம்.தண்டு 478

நி

நிமித்தம. யாதானும் ஒன்றன் பொருட்டு 77
நிரதிசயகுணம்.மாறுதலையடையாதஅதிசயகுணம் 71
நிராதாரம்.ஆதாரமில்லாதது 404
நிராலம்பம்.ஆதாரமில்லாதது 454
நிரூபித்தல்.ஆராய்தல் 350
நிர்க்குணன்.மாயாகுணமில்லா சிற்குணன் 455
நிறம்.வன்னம் 415
நிறம்.இயல்பு 415
நின்மலன்.மலமில்லாதவன் 455

நீ

நீக்கம்-பிரிவு 76, 138

நு

நுகர்தல்-அநுபவித்தல் 505
நுதல்-இலாடம், புருவநடு 247

நெ

நெறி-போல 483

நே

நேசத்தர்-அன்பர் 600
நேசம்-பத்தி 560

நேயம்-அன்பு 574
நேர்-ஒப்ப 560
நேர்-ஏழாம்வேற்றுமைப்பொருள் 560
நேர்-அருட்பார்வை 624
நேர்-அர்ச்சிப்பாயாக 478

நொ

நொடித்தல்-அழித்தல் 62

நோ

நோக்கிற்றை-நோக்கியதை 468
நோக்கு-மனவெழுச்சிவிசேடம் 470
நோக்கு-அனுக்கிரகம் 624
நோக்குதல்-காத்தல் 62
நோன்றல்-பொறுத்தல் 576
நோன்றாள்-தாங்குந்திருவடி 574

ப

பகுதிப்பொருள்விகுதி-விகுதி வேறுபொருளை உணர்த்தாதுபகுதிப்பொருளையேஉணர்த்திநிற்பது 97,352,367,612
பகிசைத்தல்-பிரிந்திசைத்தல் 612
பங்கஜம்-தாமரை(பங்கம்-சேறு-ஜம-தோன்றுதல்) 55
பசாசம்-இரும்பு 112,260
பசுஞானம்-தற்போதத்தால்நிகழுஞானம் 443
பசுத்துவம்-பசுத்தன்மை 238
பசுநீகாரம்-பசுவின் அறிவை மூடல் 238
பஞ்சக்கிலேசம்-அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, கோபம் 237
படர்தல்-செல்லுதல் 131
படுத்தலோசை-மெல்லக்கூறுதல் 608
பணை-பாலைப்பண்முதலாயின 96
பண்-சுதி 517
பண்ணுதல்-குதிரையை வேகமாய்நடக்கும்படி செலுத்துதல் 519
பண்டு-அநாதி 461
பதி-முதல்வன் 93,434,600
பதி-வீடு 162
பதிஞானம் - பதியால் நிகழும் ஞானம் 443
பரஞானம்:- அருளால் நிகழும் ஞானம் 7
பரமன்-உருத்திரன் 225
பரவுதல்-யாவருக்கும்புலனாமாறுமிக்குப்புகழ்தல் 135
பரானுணர்வு-சிவஞானக்கண் 591
பரிக்கிரகசத்தி-வேண்டிட்போது உபகாரப்படுத்துவதாய் தன்னுள் அடக்கிவைத்திருக்கும் வைப்புச்சத்தி (அதாவதுமாயை) 117,119
பரிணமம்-ஒன்றுபிறிதொன்றாதல் 57,105
பரிமா-குதிரை 517
பவம்-பிறப்பு 386,624
பவர்-உண்மை 404
பளிங்கு-படிகம் 414
பறவாக்குளவி-மலைப்பச்சை 440

பா

பாகர்-யானை,குதிரைகளைச் செலுத்துவோர் 517
பாசஞானம் - கருவிகளால் நிகழும்ஞானம் 443
பாசத்தார்-பாசக்கட்டுஉடையார் 600
பாசவீடு-பாசநீக்கம் 484
பாசனம்-மண்பாண்டம் 513
பாடிகாவல்-பாசறையிற் சிறைவைத்தல் 108
பாயாவேங்கை-வேங்கைமரம் 440

பாரிசேடப் பிரமாணம்-மொத்தத்தொகைகண்டுஅவற்றிற்கழித்தவைபோகஎஞ்சியதைக்காட்டுதல் 114,363

பாவகத்தைப்பாவித்தல்-பாவகஞ்செய்தல் 321

பாழ்-சூனியம் 318

பானு-சூரியன் 474

பி

பிண்டப்பொழிப்புரை - பதச்சேதஞ்செய்யாதுகூறும்பொழிப்புரை 21

பித்து-பேரன்பு 591

பிரகாசம்-உள்ளதென்னும்உணர்விற்குவிடயம் 298,311

பிரகாசம-சித்து 211

பிரகாசம்-விளக்கம் 300,468,598

பிரகிருதி - இயல்பாயிருத்தல், மூலஉடல் 181,182

பிரமாணம் - அறிதற்குக்கருவியாய்இருப்பது (அதாவது அறிவு) 369

பிரமாதா-அறியும்பொருள் (உயிர்) 369

பிரமிதி-அறிதல் 369

பிரமேயம் - அறியப்படும்பொருள் 369

பிரவாகஅநாதி-இடையறாதொழுகும் நீரோட்டத்தில் முன்வந்தநீரிது பின்வந்தநீரிது எனப்பிரித்தறியப்படாமை 120

பிரளயகேவலம்-பிரளயாகலருக்குரியகேவலம் 330

பிரளயாகலர்-பிரளயத்தில்கலையற்றவர் 401

பிராரத்தம்-இன்பத்துன்பஅநுபவம் 121

பிரேரகம்-செலுத்துதல் 256

பிறிதின்கிழமை-தன்னின்வேறாயது 163,165

பின்செய்வினை-ஆகாமியம் 513

பு

புகுந்து-விளங்கித்தோன்றுதல் 100

புக்கு-மறைந்து 570

புத்தி-போகம் 603

புரிதல்-எப்பொழுதும்மேற்கொள்ளல் 81

புரியட்டகஉடம்பு-சத்தம், பரிசம், ரூபம், இரதம், கந்தம், மனம், புத்தி, அகங்காரம் ஆகஎட்டுங்கூடியஉடம்பு 173

புருடன்-உயிர் 609

புருடன்-சிவம் 609

புலவர் - அளவைநூல்உணர்ந்தோர் 22

புறஅந்தக்கரணம்-மனம், புத்தி, சித்தம், அகங்காரம் 207

புறச்சமயம்-தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம். (பாதஞ்சலம்) பாஞ்சராத்திரம் எனஆறு 16

புறப்புறச்சமயம் - உலோகாயதம், பௌத்தத்தின்சார்பாகியமாத்துமிகம், யோகாசாரம், சவுத்திராந்திகம், ஆருகதம் நான்கு, வைபாடிகம்எனஆறு 16

புறநடை-வாக்கியசேடம், விதிக்குப்புறமானநடை 318,336,451

புனைதல்-அடங்கிநிற்றல் 2

பூ

பூட்டுவிற்பொருள்கோள்-வில்லின் நுனியும அடியும் நாணினுல்சம்பந்தமாய் இருத்தல்போல, இறுதியும் முதலும் சம்பந்தப்பட்டுப் பொருள்தருதல் 153

பெ

பெரும்பெயர்-மகாவாக்கியம் 2

பெற்றிமை-சாதி 33 351

பே

பேதை-அறிவில்லாதமடவோன் 33,351

பேய்த்தேர்-கானல்நீர் 303,351,434

53

பை

பைம்மறி-பையைத் திருப்பிப் பார்த்தல் 610

பொ

பொருட்டு-சொட்டை 478
பொய்-செயற்கையுணர்வு 343
பொய்-பொதுவியல்பு 415,458
பொல்லார் - கருவியாற் பொள்ளாதபிள்ளையார் 11
பொற்பு-அழகு 546
பொன்வாள்-சூரியன் 570

போ

போக்கு-இறத்தல் 76
போது.காலம் 218

பௌ

பௌதிகம்.பூதகாரியம் 592

ம

மகாகாயம்.பெருவெளி 136
மகாசகலம்.மத்தியாலவத்தை 221
மலபரிபாகம்.மலசத்திதேய்தல் 394
மலர்.பூ 359,478
மலர்-விரிந்த 2
மலர்.மலமுடையவர் 624
மலர்.திருவடித்தாமரை 10,574
மலம்.அசுத்தம்செய்வது 238,483, 563,570,574
மலிந்தவர்.மிக்குடையவர் 574
மலைவில்லார்.மலைவுஇல்லையாகச்செய்தவர் 10
மறவாமை-இடையீடில்லாமை 559
மனம்.பசுஞானம் 309
மன்றம்.தேற்றம் 247
மன்னுதல்.நிலைபெறுதல் 212,274. 280,287,563

மா

மாட்டின்.நின்றாற்போல 163
மாட்டெறிதல்.ஒன்றற்குச்சொன்னவிதியைப்பிறிதொன்றற்குமாட்டிவிடுதல் 200,467
மாணாமை.மாட்சிஇல்லாமை 346
மாயேயம் மாயையின்காரியம் 505, 514
மால்.மயக்கம் 574
மால்.விட்டுணு 223
மாறுதல்-இறத்தல் 123
மான்.மகான் 619

மி

மிசைத்த.மிக்க 395
மிருத்தியு சிவிக்கவொட்டாமற்செய்வது 238

மீ

மீன்.நட்சத்திரம் 280

மு

முடிந்தது முடித்தல்.முன்முடிந்ததைப்பின்முடித்துக்காட்டல் 72
முதல்நிலைத்தொழிற்பெயர்.விகுதியின்றிப்பகுதிமாத்திரம்நின்றுவிகுதிப்பொருளைத்தருவது 51,137,324,362,440,610
மும்மை மூன்று 624
முன்.காலைப்போது 570
முன், அறிவாயாக 401
முன்.சந்நிதி 505
முன்.அனாதி 570
முன்செய்வினை.பிராரத்தம் 109, 505,509,513
முன்னவன்.முதல்வன் 619

மூ

மூ.மூன்று 18
மூலகன்மம்.விருப்புவெறுப்பு 120, 553,581
மூளுதல்.தாக்குதல் 513
மூர்ச்சை.மயக்கம் 238

மெ

மெய்கண்டான்.உண்மைஉணர்ந்தவன் 187,301,312 316, 415,519
மெய்கண்டான்.மெய்கண்டதேவநாயனார் 629
மெய்.தூலஉடல் 247
மெய்.முதல்வன் 280,312
மெய்.உயிர் 321
மெய்.இயற்கையுணர்வு 343
மெய்.சிறப்பியல்பு 418
மெய்த்தவர்.சிவஞானி 591

மே

மேவா.வாதியா 591

மோ

மோகினி.அசுத்தமாயை 481,583

வ

வகை.கூறுபாடு 444
வசஞ்செய்வான் வசஞ்செய்தல் 563
வரத்து.விளங்கி 571
வரம்பின்றிஓடல்.முடிவில்லாது செல்லல் 272
வரவு.பிறத்தல் 76
வருதல்.தொன்றுதொட்டவ்வாறுதல் 123
வருதல்.தோன்றுதல் 458
வலி.வன்மை 619
வலித்து.இழுத்து 563
வள்ளல்.வேண்டிவார் வேண்டுவனவெல்லாம்தடையின்றிக்கொடுப்பவர் 109
வன்னம்.நிறம் 404
வன்னம்.சித்திரம் 453

வா

வாக்கு.பாசஞானம் 309
வாக்கு.சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி 222
வாசகம்.வாசகதீட்சை 624
வாய்த்தல்.நேர்படுதல் 352
வாறு.போல 611
வாள்.ஒளி 570

வி

விகாரம்.வேறுபடுதல் 563
விஞ்ஞானகலர்.விஞ்ஞானத்தாற்கலையற்றவர் 401
விஞ்ஞானகேவலம்.விஞ்ஞானகலர்க்குரியகேவலம் 307
விடயித்தல் அநுபவித்தல் 539,571
விடாதஆகுபெயர் புளியைத்தின்றான்என்றவிடத்துப் புளியாகிய சுவையைவிடாது அதனையுடையகாயை அல்லது கனியையுணர்த்துதல் 586
விண்.சுவர்க்கம் 126
விதிவாக்கியம்.செய்கஎனவிதிக்கும்வாக்கியம் 578
வித்தகம் சதுரப்பாடு,விசித்திரம் 52
விபரீதம் ஒன்றைமற்றொன்றாக அறிதல் 582
வியஞ்சகம்.துணை 324,364
வியாத்தி.சமநிறைவு 371
வியாபகம.பூரணநிறைவு 371
வியாபரித்தல்தொழிற்படுதல் 576
வியாப்பியம்.ஏகதேசவியாபகம், அடங்கிஇருப்பது 73,97,371
விரித்தல்விகாரம்.விரித்துக்கூறும் எழுத்து அடங்கிஇருப்பது 193
விளம்பிய.கூறிப்போந்த 260
விளைதல்.மேம்படுதல் 615
வினை.வேள்விமுதலியஅறம் 389
வினை.கன்மமலம் 483,615
வினைமாற்று.முன்கூறியதற்கு மாறானபொருள்பயப்பது 235, 347,352,516,573
வினைமை.வினையுடைமை 23

வீ

வீயாத.கேடில்லாத 232
வீழ்க்கும்.வீழும்படிசெய்யும் 591

வெ

வெய்யோன்.சூரியன் 280

வே

வேடம்.விபூதிஉருத்திராக்கம் 574,596
வேட்டுவன்.வேட்டைவாளி (அதாவது ஒருசாதிக்குளவி) 58
வேற்றுமைமயக்கம்.ஒருஉருபு நிற்கவேண்டிய இடத்திலபிறிதொருஉருபுநிற்பது 461,519 533,563,603,611

அரியவிஷயங்களின் அட்டவணை.

அ

அக்கினி ஒன்றில் தங்கிநின்று தன்றொழில் நடாத்தும் 536
அட்டபுட்பம் 473
அண்டத்திலுள்ளது பிண்டத்தில் உண்டு 480
அதிகாரத்தால் பொருள்கொண்டது 353
அதிட்டானம் இருவகைப்படும் 399
அத்துவிதம் 87,534,536
அப்பொழுதேபயன்றருவன் 559
அந்தக்கரணங்கள் ஒவ்வொன்றின் தொழிற்பாடு 208
அந்தக்கரணங்களை அக்கரங்கள்செலுத்துமுறை 222
அருளால் அவனை அறிதல் 285,327
அளவைநூலார்கூறும் பொதுவியல்பு சிறப்பியல்புவேறு, ஆகமத்திற்கூறும்அவைவேறு 17
அறிவுஉணர்வுகளின்வேறுபாடு 297

ஆ

ஆணவமலத்தின் இருவகைஇலக்கணம் 229
ஆணவமலத்தின்காரியம் 117
ஆணவம் மாயைகளின் வேறுபாடு 237
ஆய்ஆம்என்பன முதல்வனிடத்தில் இயல்பாயுள்ளவினை 497
ஆன்மா ஐந்தவத்தைப்படினும் வியாபகத்திற்கிழுக்கில்லை 245
ஆன்மாவிற்குப் போக்குவரத்தால் வியாபகத்திற் கிழுக்கில்லை 133
ஆன்மாவின் சிறப்பியல்பு 336,359
ஆன்மாவின்பொதுவியல்பு 203

இ

இருவினையின்காரியம் 118
இருவினை பதிஇருவினை, பசுஇருவினை, பாசஇருவினை எனவேறுபடும் 392
இருவினையொப்பும் அதுவருவழியும் 393,394
இழிகுலத்தோர் ஞானத்திறகுரியரல்லர் 338
இறைவனும் உயிர்களும்அபேதம் பேதம், பேதாபேதம் என ஒவ்வொன்றே கொள்வதனால் உண்டாங்குற்றம் 85
இறைவனிடத்துள்ள எண்குணம் 71,240,293,622
இறைவன் உயிர்களுக்குவேண்டுவன செய்தற்குச்சங்கற்பமாத்திரமேபோதும் 82
இறைவன் உயிர்களோடு கலந்துநின்றுபுதுச்சிருட்டிசெய்வன் 86
இறைவன் உயிர்களோடு மூவகையாய் நிற்றலின் பயன் 85

உ

உடைமை, அடிமையும் உடைமையுமென இருதிறப்படும் 228, 418
உணர்த்தும்முறைமைச் சாக்கிரம் 256
உத்தேச இலக்கணம் பரீட்சை 82
உயிரினிடத்துள்ள எட்டுக்குற்றம் 241
உயிரின் தூலத்தன்மைசூக்குமத்தன்மை 622
உயிர் அடிமை 145
உயிர்கள், இறைவன் அன்றியே அறிவித்தால் அறியமுடியாமை 240
உயிர்விடயங்களை அறியும்முறை 209

உயிர்சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்என வகுக்கப்பட்டதற்குக்காரணம் 239

உயிர்தானே அறியும் தன்மை இல்லாமையால் தூலம் 324

உயிர் முத்தொழிற்படுமென்ற தன்கருத்து 71

உலகு கடவுளை முதலாகஉடையது என்பதற்கும், உலகிற்கு முதல்கடவுள் என்பதற்கும் வேற்றுமை 25

உளதாகச்சுட்டப்படுதலின்கருத்து 29

எ

எகனுய் நிற்றற்குப் பிறர்கூறும் உவமைகள் 487

எதுவேமேற்கோளாகவருதல் 342

ஐ

ஐவகைச்சங்காரம 19

ஐவகைப்பாசம் 118

ஐவகைமுத்தி 332

ஐவகைவினை 121

ஒ

ஒடுக்கம் கருமமலபரிபாகத்தின்பொருட்டு 46

ஒருபொருட்பன்மொழி 183,280, 324

ஒருபொருளைத்தரும் வடமொழிதென்மொழி 231,461

ஓ

ஓதுமுறை 467

க

கண் உயிரால்காணும் 448

கண் கண்ணுடிக்குள்ளாகதன்னைக்காண்டல் 552

கண்சென்று அறியும் 427

கண்ணுக்கு ஒளிஉண்டு 499

கண்ணுக்குக் கருவியாந்தன்மையும் கருத்தவாந்தன்மையு முண்டு 542

கண்ணொளிகள் தம்முள் ஒன்றனை ஒன்றுகாணும் 501

கண்ணொளி விளக்கொளிகளின்கலப்பு 497,541

கதிநான்கு 129

கருடத்தியானம் 464

கருத்சா, ஏவுதற்கருத்தாவும் இயற்றுதற்கருத்தாவும்என இருதிறம் 68

கருத்தா, சங்கற்பமாத்திரையாய்ச் செய்யுங்கருத்தாவும் கரணத்தால் செய்யுங்கருத்தாவுமென இருதிறம 62

கலாதிதத்துவங்கள் அவத்தைக்கு ஏதுவாகாமை 251

கனிச்சீர் 404,505,517

கன்மம்இடையேவந்துகூடியது 227

கா

காட்சி நால்வகை 380,437,438

காரணம் காரியமாக உபசரித்தது 406,407

காரணம்முதல், துணை, நிமித்தமெனமூவகைப்படும் 50,55,77

காரணம், முதன்மையானதும் இடைப்பட்டதும் என இருவகைப்படும் 67

காரியகாரண அவத்தை 300

காரியத்தைக்காரணமாக உபசரித்தது 130

கு

குடாகாய உவமை குக்குமதேகம்போவதற்கு 136

குடாகாய மகாகாய உவமையின் ஆகமக்கருத்து 137

குடாகாயம்தமிழ்நூல்முடிபு 137

கே

கேவலம் ஐவகைப்படும் 329

கை

கைப்பொருளை வீழ்த்தித்தெளிதலில் ஐந்தவத்தை 257

ச

சகலத்தில், கேவலம் சகலம் சுத்தம்எனமூன்று 331

சஞ்சிதவினை, புத்திதத்துவம்பற்றுக்கோடாக மாயையிற்சட்டுப்பட்டிருக்கும் 106
சாத்தாதிவிடயமவேறுதன்மாத்திரைவேறு 250
சத்திநிபாதம் 394
சத்துஎன்றதன்கருத்து 367
சத்து, சித்துச்சத்து சடசத்து சிற்சடசத்துஎன முத்திறப்படும் 292
சம்பந்தங்களின்வகை 534,535
சரியை முதலிய நான்கின் உட்பிரிவுகள் 384,385

சா

சாக்கிர முதலிய அவத்தைகளில்நிற்குங் கருவிகள் 249
சாக்கிரம், கீழ்நோக்கிய சாக்கிரம் மேல்நோக்கியசாக்கிரம் இரண்டும் நோக்காத சாக்கிரமென முத்திறப்படும் 252
சாயுச்சியம் இருவகை 385
சாலோகாதிமுத்திகள் 385

சி

சித்தாந்தசைவர்சிவனை அறியும்முறை 285
சித்தாந்தமுத்திஇலக்கணம் 489
சிவசத்தத்தின்பொருள் 292
சிவசத்தியின்பேதம் 149,264
சிவசமம்கூறும் ஆகமத்தின் கருத்து 71,622
சிவத்துடன்கூடிச் சிவமாய்நின்றுதன்னையும்பிறரையும்காண்டல்கூடும் 501
சிறப்புவகையால்உணர்வுநிகழ்தல் 202
சிறப்புவினைபொதுவினையோடுமுடிதல் 171

சு

சுத்தம் ஐவகைப்படும் 331

சூ

சூக்குமஉடம்பில்நின்றும்தூலஉடம்பு தோன்றும் 130
சூக்கும ஐந்தொழில் 330
சூக்குமபஞ்சாக்கரம் 160

சே

சேற்றுநிலம் மிதித்துச்சென்றானுக்கு வன்னிலம்செயற்கை 551

சை

சைவஉபநிடதம் 314

ஞா

ஞானத்திற்கு, முதற்காரணம் துணைக்காரணங்கள் 389,398
ஞானமின்மைஅஞ்ஞானமன்று 231

த

தத்துவங்களின்பேதம் 119,120
தத்துவமசிமகாவாக்கியம் 473,474

தா

தாதாத்மியம்இருதிறப்படும் 140

தி

திருவடிசுகந்தரும் 527

தீ

தீமைக்கும் இறைவன்உடனாய் நிற்றல்தகுமோஎன்பதற்குச் சமாதானம் 553

தோ

தோற்றம் ஆணவமலபரிபாகத்தின்பொருட்டு 47

நி

நிட்டை 557
நிலைத்தல் மாயாமலபரிபாகத்தின்பொருட்டு 47
நிற்குமுறை 467

ப

பஞ்சசத்திகளும் அவற்றின் தொழில்களும் 264
பஞ்சாக்கரத்தின்வகை 466
பஞ்சாக்கர உச்சரிப்பின்பாகுபாடு 467
பஞ்சாக்கரதியானம் சாதனம் நிலைத்தற்கும் அனுபவம்நிலைத்தற்கும் வேண்டப்படும் 470
பஞ்சாக்கினிவித்தை 133
பதிக்குச் சிறப்பியல்புபொதுவியல்பு 293
பதிப்பொருளை அதுஎன மகாவாக்கியங்கூறும் 310

பரமுத்தியினும் பத்திஉலகு 558

பா

பாசநீக்கம்வேறு பாசப்பற்று நீக்கம்வேறு 332,461
பாவனை நான்குவகை 321

பி

பிரத்தியட்சமுதலியன பிரமாணமென்றல்உபசாரம் 371
பிரபஞ்சவகை 31
பிரமவிட்டுணுஉருத்திரர் இருதிறப்படுவர் 225
பிரமாணம் பிரமேயமாதல் கூடாது 372

பு

புத்திமுக்குணத்தோடு கூடுதலால் சுகதுக்கமோகம்உண்டாம் 210

பெ

பெத்தமுத்தி இரண்டினும் உயிர்க்கு இறைவனை இன்றிச் செயலில்லை 533,543,552

பே

பேதாபேதத்திற்கும் அபேதத்திற்கும் வேற்றுமை 85

பொ

பொதுவகையால் உணர்வுநிகழ்தல் 202
பொருட்பேதம் 8

ம

மங்கலவாழ்த்தின் இலக்கணம் 13
மலபரிபாகம 394
மலம், சத்திகெட்டுப் பொருள் இருத்தலில்லை 573

மா

மாயை இடையேவந்து கூடியது 227,232
மாயை கன்மங்கள் இறைவனுக்கு உடைமைப்பொருள் 228
மாயையிற்றோன்றிய உலகைச் சத்தியிற்றோன்றியதாகக்கூறல் 55
மாயையின் காரியம் 118,119
மாயையின்பாகுபாடு 119

மு

முக்குணமூர்த்தி 300
முதல்வன் உயிருடனின்று அறியினும் பந்தமடையான் 546
முதல்வன், முன்னர்ச்சூனியம் போற்றோன்றுவன் 457
முதல்வன்தானே அறியுந்தன்மைஉடைமையால்சூக்குமம் 324
முத்தருக்கு மலம்நீங்கும்; நீங்கினும் மலம்அணுகிஎன்பதற்கு இழுக்கில்லை 569
முத்தருடைய வினைப்பயனைமுதல்வன்ஏன்றுகொள்வன் 555
முத்தர்வினை உடலூழாய்க்கழியும் 507
முத்திபெற்றவிடத்தும் உயிர் அடிமை 72,417
முத்தியிலும் முதல்வன்காணும் உபகாரத்தைச்செய்வன் 544
முத்தியில், அறிவு இச்சைசெயல்கள்தொழிற்படும் [illegible]4
முத்தியில் உயிருண்டு [illegible]26
முன், காலமுன் இடமுன் இருவகைப்படும் [illegible]1

மூ

மூன்று ஏதுக்களின்நயம் 30

வ

வடமொழிமத 214,243,292 310, [illegible]2,418,458,464 475
வடமொழிமதனூலைஎடுத்தாண்டஇ[illegible]ங்கள் 4,138,201465, 524,525,531

வா

வாழ்த்துமூவகைப்படும் 11

வி

விதிமூவகைப்படும் 611
விபரீதஉணர்விற்கு மும்மலங்களும் ஏதுவாகும் 582
வினைபக்குவப்படுதலின்கருத்து 107

பிறஉரையை மறுத்த இடங்கள்.
33,53,108, 123,124. 139,158,186, 202, 233,254, 270,306, 344, 363, 368, 407, 429.